www.kalvinews.com

# தேசிய வருவாய் வழி கல்வி உதவித்தொகை திட்டத் திறனறித் தேர்விற்கான கையேடு

பகுதி – II

படிப்பறிவுத் திறன் தேர்வு – சமூக அறிவியல்

# A MANUAL FOR NATIONAL MEANS CUM MERIT SCHOLARSHIP SCHEME (NMMS)

PART - II

SCHOLASTIC APTITUDE TEST (SAT)

## SOCIAL SCIENCE







அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு விலையின்றி வழங்கப்படும் கையேடு

www.kalvinews.com

# தேசிய வருவாய் வழிக் கல்வி உதவித் தொகை திட்டத் திறனறித் தேர்விற்கான கையேடு

பகுதி - II – படிப்பறிவுத்திறன் தேர்வு – சமூக அறிவியல்

# A MANUAL FOR NATIONAL MEANS CUM MERIT SCHOLARSHIP SCHEME (NMMS)

## PART - II - SCHOLASTIC APTITUDE TEST (SAT) - SOCIAL SCIENCE

## நூலாக்கக்குழு

### திட்டமிடல், செயலாக்கம், மேம்பாடு மற்றும் மேலாய்வு

**சு. மோகன்** M.Sc., B.Ed., M.Phil., DISM.,
பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்)
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி, ஆதம்சேரி, இராமநாதபுரம் மாவட்டம்.

### நூல் வடிவமைப்புக் குழு

**ப. இராஜ்குமார்** M.Sc., B.Ed., M.Phil., PGDCA.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
வெளிமுத்தி, சிவகங்கை மாவட்டம்.

**B.S. சரவணன்** M.Sc., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
ஆட்டுக்காரன்பட்டி, தர்மபுரி மாவட்டம்.

**க. செல்வகுமார்** M.Sc., M.Sc., (YHE) M.Ed.,
முதுகலை ஆசிரியர் (கணிதம்)
கண்ணாடி வாப்பா இண்டர்நேஷனல் பள்ளி,
கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம்.

### வல்லுநர் குழு

**G.பிரகாஷ்** MSc., B.Ed., M.Phil.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
அரசு மேல்நிலைப்பள்ளி,
தினைக்குளம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

**ர. கண்ணன்** M.Sc., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
தப்பக்குட்டை, சேலம் மாவட்டம்.

**மு.ச. நபில்புகாரி** M.A.M.A., M.Phil., B.Ed..,
ஆசிரியர் பயிற்றுநர் (புவியியல்)
வட்டார வள மையம், கடலூர்,
கடலூர் மாவட்டம்.

**ப. சக்திவேல்** M.Sc., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
மண்ணுர், சேலம் மாவடடம்.

**இரா. லோகநாதன்** M.Sc., M.Phil., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ந.உ.நி.பள்ளி, அனந்தபுரம், (சைதை),
ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.

**செ. பெரியசாமி** M.Sc., B.Ed., M.Phil.,
பட்டதாரி ஆசிரியர் (புவியியல்)
அ.உ.நி.பள்ளி, ஒட்டப்பட்டி,
கரூர் மாவட்டம்.

**சா. சக்திவேல்** M.Sc., B.Ed., M.Phil.,
பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்)
அரசு மேல்நிலைப்பள்ளி,
வெ.காட்டுப்பாளையம், கடலூர் மாவட்டம்

**ஜெ. மாரையன்** M.A, B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்)
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
மத்திப்பட்டி, கரூர் மாவட்டம்.

**இரா. அசோக்குமார்** M.Sc., B.Ed., M.Com.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
புளியம்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

**கோ.கு. வரதராஜன்** M.Sc., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.ந.நி. பள்ளி,
பெருந்தலையூர், ஈரோடு மாவட்டம்.

**T.C. பூவேந்தன்** M.Sc., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.ந.நி. பள்ளி,
கோடேபாளையம், ஈரோடு மாவட்டம்.

**பெ. பிரபாத்** M.Sc., B.Ed., M.A.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.ந.நி. பள்ளி,
கோமாளியூர், சேலம் மாவட்டம்

### பிழை திருத்தக்குழு

**ந. சசிகலாமோகன்** M.Sc., B.Ed., M.Phil.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
ஆதம்சேரி, இராமநாதபுரம் மாவட்டம்.

**நா.சின்னண்ணன்** M.Sc., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
க.பள்ளிப்பட்டி, சேலம் மாவட்டம்.

**ம. ஆனந்தக்குமார்** M.Sc., B.Ed., M.Phil.,
முதுநிலை ஆசிரியர் (புவியியல்)
அரசு மேல்நிலைப்பள்ளி,
தா. பழூர், அரியலூர் மாவட்டம்.

### அட்டை வடிவமைப்பு

**ச. முகேஷ்** M.Sc., (CS) M.Sc., (Phy) M.Ed., M.Phil.,
தலைமை ஆசிரியர்
ஸ்ரீ பெரி.மெ.மெய்யப்ப செட்டியார் நடுநிலைப் பள்ளி,
விராச்சிலை, புதுக்கோட்டை மாவட்டம்.

www.kalvinews.com

# நூல் நோக்க உரை

**மதிப்பிற்குரிய ஆசிரிய பெருமக்களுக்கும், பேரன்பிற்குரிய மாணவச்செல்வங்களுக்கும் வணக்கம் !**

"**தேசிய வருவாய் வழி மற்றும் கல்வி உதவித் தொகை திட்டத் தேர்விற்கான ( பகுதி – II படிப்பறிவுத்திறன் தேர்வு ) கையேடு**" எனும் தலைப்பிலான இக்கையேட்டினை உங்களுக்காகப் படைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்நூலானது **அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு** தேசிய வருவாய் வழி மற்றும் கல்வி உதவித் தொகை திட்டத் திறனறித் தேர்வின் பகுதி – II ஐ (படிப்பறிவுத் தேர்வினை) எழுதுவதற்கு ஏதுவாக, சமூக அறிவியல் பாடத்தில் 7 ஆம் வகுப்பு மூன்று பருவங்கள் மற்றும் 8 ஆம் வகுப்பில் டிசம்பர் மாதம் வரையிலான பாடப்பகுதிகளில் இருந்து கேட்கப்படும் கேள்விகளுக்கு எளிதாக விடையளிக்கும் வண்ணம் இக்கையேடானது சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதுவரை மனத்திறன் தேர்விற்கென பல புத்தகங்கள் உள்ள நிலையில், படிப்பறிவுத் தேர்விற்கென சிறப்புக் கையேடுகள் ஏதுமற்ற சூழலில், இந்நூலானது சமூக அக்கறையுடன் மாணவர் நலம்சார்ந்த முன்னெடுப்புகளில் பங்கெடுக்கும் ஆசிரிய சமூகத்திலிருந்து எவ்வகை பிரதிபலனையும் எதிர்பாராத 65 ஆசிரியப் பெருமக்களின் தன்னலமற்ற, இரவு பகல் பாராத உழைப்பின் பயனே இப்படைப்பாகும்.

இந்த ஆசிரியப்பெருமக்களின் அயராத உழைப்பில் உருவான இப்புத்தகத்தை பேரன்புசூழ் இவ்வுலகில், பெருங்கருணையுடன் வாழும் நற்கொடையாளர்களின் உதவியுடன் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள எட்டாம் வகுப்பு பயிலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையின்றி வழங்கிட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கையேட்டில் ஒவ்வொரு பாடத்திற்குரிய முக்கிய குறிப்புகளுடன், பயிற்சி வினாக்கள் மற்றும் கடந்த ஆண்டுகளில் NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்களும் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 3 மாதங்கள் முறையாக திட்டமிடப்பட்டு, ஒவ்வொரு படிநிலையிலும் ஆய்வுகள் மேற்கொண்டு, ஒவ்வொரு பாடமும் மீளாய்வு செய்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நுண்ணிய ஆய்வில் மேம்படுத்தப்பட்ட பாடங்கள் வல்லுநர் குழுவின் மூலம் மேலும் செழுமைப்படுத்தப்பட்டு, தவறேதுமின்றி அளிக்க முயற்சித்துள்ளோம்.

## வழிகாட்டு கையேட்டைப் பயன்படுத்துவது எப்படி ?

இக்கையேட்டில் ஒவ்வொரு பாடமும் முக்கியக் குறிப்புகள், பயிற்சி வினாக்கள், விடைப்பகுதி என மூன்று பகுதிகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. வினாத் தொகுப்பிற்கு முன்பாக கொடுக்கப்பட்டுள்ள பாடக்குறிப்புகளை ஆசிரியர் உதவியுடன் முழுமையாக படித்து, உணர்ந்து, தெளியவேண்டும். எந்தவொரு பாடத்தையும் கற்கும்போது, பாடம் சார்ந்த கருத்துருக்கள், திறன்கள் அனைத்தையும் உள்வாங்கி முழுமையாக கற்றல் அடைவு ஏற்பட்ட பின்பே வினாத் தொகுப்பிற்கான விடைத் தேடலை மேற்கொள்ள வேண்டும்.

www.kalvinews.com

அவ்வாறு கண்டறிந்த விடைகளைச் சரிபார்க்க வினாத் தொகுப்பின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள விடைக் குறிப்புடன் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், முக்கியக் குறிப்புகளில் இருந்து தாங்களாகவே பல வினாக்களையும் உருவாக்கி குறிப்பேட்டில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். வினா உருவாக்கம் என்பது ஆகச் சிறந்த நுண்ணறிவுக் கலையாகும். வினா உருவாக்கத் திறனானது NMMS தேர்விற்கு மட்டுமின்றி வருங்காலங்களில் மாணாக்கர்கள் எழுதவுள்ள பல திறனறி, திறனாய்வு, நுழைவு, தகுதி மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு அடித்தளமாய் அமையும். மாணவச் செல்வங்கள் இந்நூலைப் பயன்படுத்தி NMMS தேர்வில் வெற்றி பெற்று கல்வி உதவித்தொகை பெற உளப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

பள்ளியின் உயர்தொடக்க நிலையின் இறுதி வகுப்பில் இத்திறனறித் தேர்வில் பெறும் வெற்றி , திறன்கள் மற்றும் அனுபவங்கள் யாவும் தங்களை அடுத்தடுத்த கல்வித் தளங்களுக்கு உயர்த்தி தங்களது வாழ்வின் திசைவழிப் பயணத்தை தீர்மானிக்க உதவும்.

எனவே, இதன் வழியே ஒரு மாணவனாக வாழ்வில் வெற்றி பெறுவதற்கான முதற்படிநிலையாய் இத்தேர்வும், அதற்கு இந்நூலும் பயன்பட வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்களுடன்...

நூலாக்கக்குழு ஆசிரியர்கள்.

**குறிப்பு :**

இக்கையேட்டின் **PDF** கோப்பு அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. அதனை பதிவிறக்கம் செய்து, தங்களுடைய **Blog/website/ Whatsapp** குழுக்களில் பகிரலாம். ஆனால், மாணவர்கள் படிப்பதற்கு இடையூறு செய்யும் வகையில் தங்களுடைய **Blog / Website / Whatsapp** குழுவின் பெயரைத் தாளின் குறுக்குவசமாக **Watermark -** ஆக பயன்படுத்த வேண்டாம். தனக்கான எவ்வித நிதி சார்பயனும் எதிர்பாராது உருவாக்கப்பட்டுள்ள **இந்நூலை விற்பனை நோக்கோடு அணுகுவது முற்றிலும் தவறானது.**

**இது விளிம்பு நிலை எளிய மாணவர்களின் ஒருங்கிணைந்த, ஒட்டு மொத்த உயர்விற்கான விதையாய்ப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே இந்நூலாக்கக் குழுவின் நோக்கமாகும்.**

இக்கையேடு குறித்த மேலான கருத்துகளைத் தெரிவிக்க....

**சு. மோகன் - 97151 60005**

**ப. ராஜ்குமார் - 99435 10490**

scan QR Code

**nmmsmohan@gmail.com**

www.kalvinews.com

# மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் வாழ்த்துரை

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு

- திருக்குறள் (385)

மேற்கண்ட திருக்குறளின் அடிப்படையில் தமிழக பள்ளிக் கல்வித்துறை, **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் வழிகாட்டுதல்களோடு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

கொடுமையான கொரானா காலத்திலும்கூட மாணாக்கர்களின் கல்வித்தரத்தை முன்னேற்றும் விதமாக பல முயற்சிகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் என்ற முறையில் பல்வேறு புதிய வழிமுறைகளில் செயல்படுத்தி வருகின்றேன்.

தமிழக பள்ளிக்கல்வித்துறையின் செயல்களுக்கு வலுசேர்க்கும் விதமாக பல்வேறு தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் உதவி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, சென்னை வேளச்சேரி லயன்ஸ் கிளப் அமைப்பின் புதுமையான திட்டம் **(Innovative Project)** என்ற திட்டத்தின் மூலம் தேசிய வருவாய் வழிக் கல்வி உதவித்தொகை திட்டத் திறனறித் தேர்வுக்குத் தயாராகும் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான படிப்பறிவுத்திறன் புத்தகத்தை வெளியிடுவதற்கான அனைத்து உதவிகளையும் செய்ய முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது

மேலும், இந்த நூல் உருவாவதற்கு இரவு பகலாக வினா, விடைகளை எழுதித் தொகுத்து வழங்கிய 65 ஆசிரிய பெருமக்களையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

இத்தகைய பணி 8-ஆம் வகுப்பு மாணாக்கர்களோடு நின்றுவிடாமல் 10, 12 - ஆம் வகுப்பு மாணவர்களும் பயன்பெறும் வகையில் பல நுழைவுத்தேர்வு, திறனாய்வுத் தேர்வு புத்தகங்கள் வெளிவர வேண்டும் என்றும், அதற்கான உதவிகளைச் செய்திட தமிழக பள்ளிக்கல்வித்துறை தயாராக இருக்கிறது என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்
தமிழ்நாடு

www.kalvinews.com

# நன்றியுரை

அரசுப் பள்ளி மாணவர்களின் பல்திறன் வளர்ச்சிக்கும் ஆளுமை மேம்பாட்டிற்கும், தயக்கமின்றி போட்டித் தேர்வுகளைச் சந்திக்க ஏதுவாக, தேசிய வருவாய் வழி உதவித் தொகை திட்டத் திறனறித் தேர்விற்கான இக்கையேட்டின் முதல் பிரதியை தமது திருக்கரங்களால் வெளியிட்ட **மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

இந்த அரும்படைப்பானது, புத்தக வடிவம்பெற நிதியுதவி அளித்த சென்னை, வேளச்சேரி லயன்ஸ் கிளப் ஆஃப் மெட்ராஸ் அமைப்பின் புதுமைத் திட்டக் குழு தலைவர் **திரு. பா. ஹரிகிருஷ்ணன்** அவர்களுக்கும், புதுமைத் திட்டக்குழு துணைத் தலைவர் **திரு. பா. செல்வக்குமார்** அவர்களுக்கும், **திரு.பா.வெங்கட்ராமன்**(மேனாள் தலைவர், லயன்ஸ் கிளப் ஆஃப் மெட்ராஸ், வேளச்சேரி) அவர்களுக்கும், இதர பொறுப்பாளர்கள், உறுப்பினர்களுக்கும் மற்றும் **இனிமை அமைப்பிற்கும்** நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்வி மற்றும் மாணவர் நலன்சார் பணிகளில் தொடர்ந்து ஊக்கம் அளித்து, வழிநடத்தி நெறிப்படுத்தும் பள்ளிக்கல்வித்துறை செயலர், ஆணையாளர், இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர் பெருமக்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்புத்தகத்தின் முதல் பதிப்பினை அச்சேற்ற பெருமுயற்சி மேற்கொண்ட ஆசிரிய நண்பர்கள் **திரு. இள. பாபுவேலன்** அவர்களுக்கும், **திரு. சி. முருகேஸ்வரன்** அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்புத்தக உருவாக்கத்தின் திட்டமிடல்களில் எங்களோடு இணைந்து பணியாற்றி, தற்போது எங்களிடமிருந்து மறைந்த அன்பு நண்பர் **தெய்வத்திரு. மு. நகுல்சாமி** ஆசிரியர் அவர்களின் சீரிய பணியை இத்தருணத்தில் நன்றியோடு நினைவு கூறுகிறோம்.

சமவாய்ப்பும், சமூகநீதியும் நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இக்கையேட்டின் அச்சுசார் செலவில் பங்களிப்பு செய்து, தமிழகம் முழுவதிலும் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு விலையின்றி வழங்கக் காத்திருக்கும் அருட்கொடையாளர்களான ஆசிரிய பெருமக்கள், கல்வியாளர்கள், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள், அரசுப் பள்ளிகளின் புரவலர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொண்டுள்ளம் கொண்ட வள்ளல் பெருமக்களுக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**– நூலாக்கக்குழு**

www.kalvinews.com

# பொருளடக்கம்


| வ. எண் | வகுப்பு | பருவம் | பெருங்கூறு | அலகு | பாடத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | VII | I | வரலாறு | 1 | இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள் | 8 |
| 2 | VII | I | வரலாறு | 2 | வட இந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் | 21 |
| 3 | VII | I | வரலாறு | 3 | தென்னிந்தியப் புதிய அரசுகள் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் | 33 |
| 4 | VII | I | வரலாறு | 4 | டெல்லி சுல்தானியம் | 47 |
| 5 | VII | I | புவியியல் | 1 | புவியின் உள்ளமைப்பு | 62 |
| 6 | VII | I | புவியியல் | 2 | நிலத்தோற்றங்கள் | 81 |
| 7 | VII | I | புவியியல் | 3 | மக்கள் தொகையும், குடியிருப்புகளும் | 96 |
| 8 | VII | I | குடிமையியல் | 1 | சமத்துவம் | 110 |
| 9 | VII | I | குடிமையியல் | 2 | அரசியல் கட்சிகள் | 121 |
| 10 | VII | I | பொருளியல் | 1 | உற்பத்தி | 132 |
| 11 | VII | II | வரலாறு | 1 | விஜயநகர், பாமினி அரசுகள் | 142 |
| 12 | VII | II | வரலாறு | 2 | முகலாயப் பேரரசு | 160 |
| 13 | VII | II | வரலாறு | 3 | மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி | 180 |
| 14 | VII | II | புவியியல் | 1 | வளங்கள் | 194 |
| 15 | VII | II | புவியியல் | 2 | சுற்றுலா | 205 |
| 16 | VII, VIII | II | குடிமையியல் | 1 | மாநில அரசுகள், மாநில அரசுகள் எவ்வாறு செயல்படுகிறது? | 220 |
| 17 | VII | II | குடிமையியல் | 2 | ஊடகமும் ஜனநாயகமும் | 235 |
| 18 | VII | III | வரலாறு | 1 | புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும் | 243 |
| 19 | VII | III | வரலாறு | 2 | தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும் | 255 |
| 20 | VII | III | வரலாறு | 3 | தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள் | 271 |
| 21 | VII | III | புவியியல் | 1 | கண்டங்களை ஆராய்தல் (வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா) | 281 |
| 22 | VII | III | புவியியல் | 2 | நிலவரைபடத்தை கற்றறிதல் | 301 |
| 23 | VII | III | புவியியல் | 3 | இயற்கை இடர்கள் – பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்துகொள்ளல் | 308 |
| 24 | VII | III | குடிமையியல் | 1 | பெண்கள் மேம்பாடு | 317 |

www.kalvinews.com

# பொருளடக்கம்


| வ. எண் | வகுப்பு | பருவம் | பெருங்கூறு | அலகு | பாடத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 25 | VII | III | குடிமையியல் | 2 | சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 325 |
| 26 | VII | III | குடிமையியல் | 3 | சாலைப் பாதுகாப்பு | 347 |
| 27 | VIII | | பொருளியல் | 1 | வரி மற்றும் அதன் முக்கியத்துவம் | 355 |
| 28 | VIII | | வரலாறு | 1 | ஐரோப்பியர்களின் வருகை | 366 |
| 29 | VIII | | வரலாறு | 2 | வர்த்தகத்தில் இருந்து பேரரசு வரை | 382 |
| 30 | VIII | | வரலாறு | 3 | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் | 398 |
| 31 | VIII | | வரலாறு | 4 | மக்களின் புரட்சி | 408 |
| 32 | VIII | | வரலாறு | 5 | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 424 |
| 33 | VIII | | வரலாறு | 6 | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 439 |
| 34 | VIII | | வரலாறு | 7 | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் | 448 |
| 35 | VIII | | புவியியல் | 1 | பாறை மற்றும் மண் | 460 |
| 36 | VIII | | புவியியல் | 2 | வானிலை மற்றும் காலநிலை | 472 |
| 37 | VIII | | புவியியல் | 3 | நீரியல் சுழற்சி | 486 |
| 38 | VIII | | புவியியல் | 4 | இடம்பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 496 |
| 39 | VIII | | புவியியல் | 5 | இடர்கள் | 510 |
| 40 | VIII | | புவியியல் | 6 | தொழிலகங்கள் | 526 |
| 41 | VIII | | புவியியல் | 7 | கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) | 540 |
| 42 | VIII | | குடிமையியல் | 2 | குடிமக்களும் குடியுரிமையும் | 597 |
| 43 | VIII | | குடிமையியல் | 3 | சமயச்சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் | 606 |
| 44 | VIII | | குடிமையியல் | 4 | மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் | 615 |
| 45 | VIII | | குடிமையியல் | 5 | சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள் | 633 |
| 46 | VIII | | பொருளியல் | 1 | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் | 645 |


**குறிப்பு :**

**மாநில அரசு மற்றும் மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது? ஆகிய இரண்டு பாடங்கள் ஒரே தலைப்பின்கீழ் இணைத்து எழுதப்பட்டுள்ளது.**

www.kalvinews.com



# 1. இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்

**தொகுப்பு:**
**திரு.த.சங்கர், M.Sc.,B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, அரிசிபாளையம்**
**சேலம் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.இரா.அசோக்குமார், M.Sc., M.Com., B.Ed..**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, புளியம்பட்டி,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

**இந்திய வரலாற்றில்.......**

- கி.பி. (பொ. ஆ) 700 முதல் 1200 வரை - தொடக்க இடைக்கால இந்திய வரலாற்றுக் காலம்.
- கி.பி. (பொ. ஆ) 1200 முதல் 1700 வரை - பின் இடைக்கால இந்திய வரலாற்றுக் காலம்.
- பிற்கால சோழர்களின் காலம் 10 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை ஆகும்.
- ஹசன் நிஜாமி வாழ்ந்த காலம் - 13 ஆம் நூற்றாண்டு.
- வித்தாலா விருப்பாக்சா கோவில்கள் விஜயநகர பேரரசு காலத்தில் கட்டப்பட்டது. 15 ஆம் நூற்றாண்டு.
- கபீர்தாஸ் வாழ்ந்த காலம் - 15 ஆம் நூற்றாண்டு.
- ஜஹாங்கீர் வாழ்ந்த காலம் - 17 ஆம் நூற்றாண்டு.

**சான்றுகள்:**

- கடந்த காலத்தை மறுகட்டுமானம் செய்வதற்கு உதவக்கூடிய ஆவணங்கள் அல்லது பதிவுகளே சான்றுகள் எனப்படும்.
- **சான்றுகள் இரண்டு வகைப்படும்.**
  1. **முதல்நிலைச் சான்றுகள்**: (எ-கா). பொறிப்புகள், (கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள்), நாணயங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள்.
  2. **இரண்டாம் நிலைச் சான்றுகள்:** (எ-கா). இலக்கியங்கள், காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள், பயணக்குறிப்புகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் மற்றும் சுயசரிதைகள்.

**அதிகச் செய்திகளை வழங்கும் சான்றுகள்:**

- கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள், நினைவுச் சின்னங்கள், நாணயங்கள்.

**பொறிப்புகள்:**

- பொறிப்புகள் என்பன பாறைகள், கற்கள், கோயிற்சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது பொறிக்கப்படும் எழுத்துக்களாகும்.

**கல்வெட்டுகள்:**

- பிற்காலச் சோழர்கள் காலத்தில் கொடை வழங்கியவரின் அறச் செயல்கள் அதிகம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் கல்வெட்டுகள் ஆகும்.
- காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் கல்வெட்டுகள், கிராமங்கள் எவ்வாறு நிர்வகிக்கப்பட்டன என்ற விவரங்களைத் தெரிவிக்கின்றன.

www.kalvinews.com

- ராஜபுத்திர அரசர்களின் மனத்துணிச்சலை காட்டும் நூல் பிருதிவிராஜ ராசோ இந்நூலை இயற்றியவர் சந்த்பார்தை ஆவார்.
- **சோழ அரசர்களால் வழங்கப்பட்ட நிலக்கொடைகள்** :

| | |
|---|---|
| வேளாண் வகை | பிராமணரல்லாத உடைமையாளருக்குச் சொந்தமான நிலங்கள் |
| பிரம்மதேயம் | பிராமணர்க்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் |
| சாலபோகம் | கல்வி நிலையங்களைப் பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள் |
| தேவதானம் | கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் |
| பள்ளிச் சந்தம் | சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் |

**செப்புப் பட்டயங்கள்**

- **கொடைகள்** வழங்கப்பட்டதைக் குறிக்கும் **ஆவணங்கள் "செப்புப்பட்டயங்கள்"** எனப்படும்.
- செப்புப்பட்டயங்கள் **சட்டப்பூர்வமான ஆவணங்களுக்கு நிகரான மதிப்பினைக்** கொண்டுள்ளன.
- இவை 13 **ஆம் நூற்றாண்டு முதல்** நடைமுறைக்கு வந்தன.
- இஸ்லாமியப் பாரசீகத்தின் நடைமுறைகளின் காரணமாகவும், செப்புப்பட்டயங்கள் விலை அதிகமாக இருந்ததன் விளைவாகவும் அவற்றுக்கு மாற்றாக குறைந்த செலவிலான **பனை ஓலைகளும், காகிதமும் பயன்பாட்டுக்கு வந்தன**.

**நினைவுச் சின்னங்கள்:**

(எ-கா): கோவில்கள், அரண்மனைகள், மசூதிகள், கல்லறைகள், கோட்டைகள், கோபுரங்கள் மற்றும் ஸ்தூபிகள்.

- இந்தியாவில் புதுவகையான கட்டடக் கலையை (வளைவுகள், ஒடுங்கிய வடிவக் கோபுரங்கள், குவிமாடங்கள்) அறிமுகப்படுத்தியவர்கள் - டெல்லி சுல்தான்கள்.

**கோயில்களும் - அவற்றின் அமைவிடங்களும் - கட்டியவர்களும்:**

- கஜுராஹோ கோவில் - மத்தியப்பிரதேசம்
- தில்வாரா ஆலயம் - அபு குன்று (ராஜஸ்தான்)
- சூரியக் கோயில் - கோனார்க் (ஒடிசா)
- பெரியகோவில் (பிரகதீஸ்வரர் கோவில்) - தஞ்சாவூர் - சோழர்கள்
- கங்கை கொண்ட சோழபுரம் - சோழர்கள்
- ஐராவதீஸ்வரர் கோவில் - தாராசுரம் - சோழர்கள்
- குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதி - டெல்லி - இடைக்காலம்
- மோத்-கி-மசூதி, ஜமா மசூதி, பதேப்பூர் சிக்ரி தர்கா டெல்லி - இடைக்காலம்
- சார்மினார் - ஹைதராபாத்
- ஜெய்ப்பூர் அரண்மனை - இராஜபுத்திரர்கள்
- ஜெய்சால்மர் அரண்மனை - இராஜபுத்திரர்கள்
- ஜோத்பூர் அரண்மனை - இராஜபுத்திரர்கள்
- ஹம்பி - கர்நாடகா.(வித்தாலா விருப்பாக்சா கோவில்கள் - விஜய நகர அரசர்கள்)
- வட இந்தியாவில் உள்ள பாழடைந்த நகரங்கள் - பிரோஷாபாத், துக்ளகாபாத்.

www.kalvinews.com

- ஆக்ரா கோட்டை, சித்தூர் கோட்டை, குவாலியர் கோட்டை, டெல்லி செங்கோட்டை, தௌலதாபாத் (ஔரங்காபாத்), பிரோஷ் ஷா கொத்தளம் (டெல்லி) ஆகிய இடங்களில் உள்ள கோட்டைகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.
- ஜெய்ப்பூர், ஜெய்சால்மர், ஜோத்பூர் ஆகிய இடங்களிலுள்ள அரண்மனைகள் ராஜபுத்திரர்களின் மேன்மைக்கான அடையாளங்களாகும்.
- குதுப்மினார், அலெய் - தர்வாஷா, இல்துமிஷ் மற்றும் பால்பன் ஆகியோரின் கல்லறைகள் சிறப்புமிக்க கட்டடங்களாகும்.

**நாணயங்கள்:**

- அரசர்களுடைய பெயர்கள், பட்டங்கள், அவர்களின் உருவப்படங்கள், நிகழ்வுகள், இடங்களின் பெயர்கள், காலங்கள், அரசவம்சத்தின் பெயர்கள், சின்னங்கள் ஆகியவற்றை நமக்குத் தெரிவிப்பவை நாணயங்கள் ஆகும்.
- அரசர்களின் இராணுவப் படையெடுப்புகள், பிரதேச விரிவாக்கம், வணிகத் தொடர்புகள், சமய நம்பிக்கைகள் போன்றவையும் நாணயங்களில் இடம் பெற்றுள்ளன.
- நாணயங்களில் உள்ள உலோகக்கலவை பேரரசின் பொருளாதாரநிலை குறித்த செய்திகளை வழங்குகின்றன.

**தங்க நாணயங்களை வெளியிட்டவர்கள்:**

- அலாவுதீன் கில்ஜி
- முகமதுகோரி - இலட்சுமியின் வடிவம் பொறிக்கப்பட்டது.

**வெள்ளி நாணயங்களை வெளியிட்டவர்கள்:**

- இல்துமிஷ் - டங்கா.
- ஒரு வெள்ளி டங்கா - 48 ஜிட்டல்கள்
- ஒரு ஜிட்டல் - 3.6 வெள்ளி குன்றிமணிகள்.

**செப்பு நாணயங்களை வெளியிட்டவர்கள் :**

- டெல்லி சுல்தான்கள் - "ஜிட்டல்" என்னும் செப்பு நாணயங்கள்
- முகமதுபின் துக்ளக்.

**இலக்கியங்கள்:**

- சோழர்களின் காலம் "பக்தி இலக்கியங்களின் காலம்" என்று அழைக்கப்படுகிறது.

**சமய இலக்கியங்கள்:**

- கம்பராமாயணம் - கம்பர்.
- பெரியபுராணம் - சேக்கிழார்.
- நாலாயிர திவ்ய பிரபந்தம் - பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பட்டு நாதமுனியால் தொகுக்கப்பட்டது.
- தேவாரம் - அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் இயற்றப்பட்டது.
- திருவாசகம் மாணிக்கவாசகரால் பாடப்பட்டது.
- நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைத் தொகுத்தார்.
- கீதகோவிந்தம் - ஜெயதேவர் (12 ஆம் நூற்றாண்டு).
- இறைநிலை உணர்வு பெற்ற கவிஞர் - கபீர்தாஸ் (15 ஆம் நூற்றாண்டு).

www.kalvinews.com

**சமய சார்பற்ற இலக்கியங்கள்:**

**விஜயநகர பேரரசைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் இலக்கியங்கள்**

- “மதுராவிஜயம்” - கங்காதேவி.
- “அமுக்தமால்யதா” - கிருஷ்ண தேவராயர்.
- இஸ்லாமுக்கு முந்தைய காலம் குறித்து அறிந்து கொள்வதற்கு உள்ள ஒரே சான்று கல்ஹணரின் **“ராஜதரங்கிணி”** மட்டுமே.
- “தபகத்” என்பது அரேபிய சொல். இதன் பொருள் **தலைமுறைகள் அல்லது நூற்றாண்டு** ஆகும்.
- “தஜூக்” என்பது பாரசீகச் சொல். இதன் பொருள் **சுயசரிதை**.
- “தாரிக் / தாகுயூக்” என்பது அரேபியச் சொல். இதன் பொருள் **வரலாறு**.

| வ.எண் | நூலின் பெயர் | எழுதியவர் |
|---|---|---|
| 1. | தபகத்-இ-நஸிரி (முகமது கோரியின் படையெடுப்பு தொடங்கி கி.பி.1260 வரை உள்ள நிகழ்வுகளை குறிக்கிறது). | மின்கஜ்-உஸ்-சிராஜ்.( சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர். |
| 2. | பாபர் நாமா | பாபர் |
| 3. | அயினி அக்பரி | அபுல் பாசல் |
| 4. | அக்பர் நாமா | அபுல் பாசல். |
| 5. | தசுக் - இ - ஜஹாங்கீரி | ஜஹாங்கீர் |
| 6. | தபகத் - இ - அக்பரி | நிஜாமுதீன் அகமத் |
| 7. | தாரிக் - இ - பதானி (3 தொகுதிகளைக் கொண்டது) | பதானி |
| 8. | தாகுயூக் - இ - ஹிந்த் (இந்தியாவின் நிலைகளையும், அறிவு முறையினையும், சமூக விதிகளையும், மதத்தையும் விவரிக்கிறது) | அல் - பரூனி |
| 9. | ரிக்ளா - பயணநூல் | இபன் பதூதா |
| 10. | ஜியா - உத் - பரணி | தாரிக் - இ - பிரோஷாகி (முகமது பின் துக்ளக்கின் வரலாற்று ஆசிரியர்) |
| 11. | தாஜ் -உல் - மா - அசிர்<br>1. இந்நூல் டெல்லி சுல்தானியத்தின் வரலாற்றைக் கூறும் அரசின் இசைவு பெற்ற முதல் நூல் ஆகும்.<br>2. இந்நூல் குத்புதீன் ஐபக் பற்றிய செய்திகளை முன்வைக்கிறது. | ஹசன் நிஜாமி |
| 12 | தாரிக் - இ - பெரிஷ்டா<br>(முகலாய ஆட்சியின் எழுச்சி குறித்து விவரிக்கின்றது) | பெரிஷ்டா |

**வெளிநாட்டுப் பயணிகள்:**

- இபன்பதூதா - மொராக்கோ நாட்டு அறிஞர் (14 - ஆம் நூற்றாண்டு)
- நிகோலோகோண்டி - இத்தாலி நாட்டு அறிஞர். (இவர் 1420 இல் விஜயநகர் வந்தார்)
- மார்க்கோபோலோ - வெனிஸ் நகர அறிஞர். (13 - ஆம் நூற்றாண்டு)
  (இவர் காயல் (தூத்துக்குடி) என்னும் ஊருக்கு இருமுறை வந்துள்ளார்)
- அரேபியாவிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் ஆயிரக்கணக்கில் குதிரைகள் தென்னிந்தியாவில் கடல் வழியாக இறக்குமதி செய்யப்பட்டதாக மார்கோபோலோ குறிப்பிடுகின்றார்.
- கஜினி மாமூதின் ஒரு படையெடுப்பின்போது அவருடன் அல்-பரூனி இந்தியாவிற்கு வந்து 10 ஆண்டுகள் தங்கியிருந்தார்.( 11 - ஆம் நூற்றாண்டு)
- கஜினி மாமூதின் சோமநாதபுரப் படையெடுப்பு குறித்தத் துல்லியமான தகவல்களை அளித்தவர் - அல் - பரூனி.
- ஔரங்கசீப்பின் அவைக்கள வரலாற்று அறிஞராக இருந்தவர் **கா∴பிகான்** ஆவார்.
- முகமது பின் துக்ளக் தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கே இருந்த தேவகிரிக்கு (தௌலதாபாத்) மாற்றி டெல்லியை பொட்டற்காடாக்கினார்.
- அப்துர் ரஸாக் - மத்திய ஆசியா (ஹீரட் நகர்) - 1443 இல் விஜயநகர் வந்தார்.
- டோமிங்கோ பயஸ் - போர்த்துக்கீசியப் பயணி - 1522 இல் விஜயநகர் வந்தார்.

**பயிற்சி வினாக்கள்:**

1. தொடக்க இடைக்கால இந்திய வரலாற்று காலம் என்பது _______.
   1. கி.பி. 700 முதல் 1200 வரை 2. கி.பி. 600 முதல் 1100 வரை
   3. கி.பி. 500 முதல் 1000 வரை 4. கி.பி. 800 முதல் 1300 வரை
2. பின் இடைக்கால இந்திய வரலாற்று காலம் என்பது _____________
   1. கி.பி. 1000 முதல் 1500 வரை 2. கி.பி.1100 முதல் 1600 வரை
   3. கி.பி. 1200 முதல் 1700 வரை 4. கி.பி.1300 முதல் 1800 வரை
3. இடைக்கால இந்திய வரலாற்றை கற்கும் அறிஞர்களுக்கு நல்வாய்ப்பாக கிடைக்கப் பெற்றவை _______.
   1. பணம் 2. சான்றுகள் 3. மனிதர்கள் 4. விலங்குகள்
4. அதிக செய்திகளை வழங்கும் இடைக்கால இந்திய வரலாற்றுச் சான்றுகள் _______.
   1. கல்வெட்டுகள் 2. கட்டடங்கள் 3. இலக்கியங்கள் 4. பயணக்குறிப்புகள்
5. ஔரங்கசீப்பின் அவைக்கள வரலாற்று அறிஞராக இருந்தவர் _______.
   1. கா∴பிகான் 2. நேதாஜி 3. வாஸ்கோடகாமா 4. அக்பர்
6. விசுவாசம் உள்ளவராக இருத்தல், ஆபத்துக்கு அஞ்சாமை ஆகியவை வரலாற்று ஆசிரியரின் கடமைகள் என்று கூறியவர் _______.
   1. ஔரங்கசீப் 2. நேதாஜி 3. கா∴பிகான் 4. ஜஹாங்கீர்
7. கடந்த காலத்தை மறுகட்டுமானம் செய்வதற்கு உதவக்கூடிய பதிவுகளே _______ எனப்படும்.
   1. கடமைகள் 2. சான்றுகள் 3. உரிமைகள் 4. கூற்றுகள்

www.kalvinews.com

8. சான்றுகள் உதவியுடன் நாம் _______, பொருளாதார, சமூக பண்பாட்டு வளர்ச்சி ஆகிய விவரங்களை திறனாய்வு செய்கிறோம்.
   1. அரசியல் 2. சினிமா 3. கல்வி 4. கூற்றுகள்

9. இந்திய வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் _______ வகைப்படும்.
   1. இரண்டு 2. மூன்று 3. நான்கு 4. ஐந்து

10. கீழ்க்கண்டவற்றுள் எது முதல்நிலைச் சான்றுகளுள் ஒன்று அல்ல?
   1. பொறிப்புகள் 2. கல்வெட்டுகள் 3. நாணயங்கள் 4. சுயசரிதைகள்

11. இரண்டாம்நிலைச் சான்றுகளுக்கு எடுத்துக்காட்டு _______.
   1. பொறிப்புகள் 2. இலக்கியங்கள் 3. செப்புப்பட்டயங்கள் 4. நாணயங்கள்

12. பாறைகள், கற்கள், கோவிற்சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றில் கடினமான மேற்பரப்பின் மேல் பொறிக்கப்படும் எழுத்துக்கள் _______ எனப்படும்.
   1. பொறிப்புகள் 2. இலக்கியங்கள் 3. பயணக்குறிப்புகள் 4. நாணயங்கள்

13. சட்டப்பூர்வமான ஆவணங்களாக ஐயப்பாடுகளுக்கு இடமில்லாத மதிப்புகளைக் கொண்டுள்ளவை _______ ஆகும்.
   1. இலக்கியங்கள் 2. பயணக்குறிப்புகள் 3. நாணயங்கள் 4. செப்புப்பட்டயங்கள்

14. செப்புப்பட்டயங்கள் விலை அதிகமாக இருப்பதன் விளைவாக அவற்றுக்கு மாற்றாகப் பயன்பாட்டுக்கு வந்த சான்று _______.
   1. பனையோலை 2. கற்கள் 3. தகடுகள் 4. உலோகங்கள்

15. செப்புப்பட்டயங்கள் நடைமுறைக்கு வந்த ஆண்டு _______.
   1. 11 ஆம் நூற்றாண்டு 2. 12 ஆம் நூற்றாண்டு
   3. 13 ஆம் நூற்றாண்டு 4. 14 ஆம் நூற்றாண்டு

16. பிற்கால சோழர்களின் காலம் _______.
   1. 5 - 10 ஆம் நூற்றாண்டு 2. 10 - 15 ஆம் நூற்றாண்டு
   3. 10 - 13 ஆம் நூற்றாண்டு 4. 15 - 20 ஆம் நூற்றாண்டு

17. பிற்காலச் சோழர்கள் காலத்தில் கொடை வழங்கியவரின் அறச்செயல்கள் அதிகம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் _______.
   1. செப்புப்பட்டயங்கள் 2. கல்வெட்டுகள் 3. பனையோலைகள் 4. நாணயங்கள்

18. உத்திரமேரூர் கல்வெட்டுகள் _______ நிர்வாகம் குறித்த விவரங்களை உள்ளடக்கியது ஆகும்.
   1. அரசவை 2. மாவட்டங்கள் 3. சான்றுகள் 4. கிராமங்கள்

19. தவறான இணையைக் கண்டுபிடி.
   1. வேளாண் வகை - பிராமணரல்லாத உடைமையாளருக்குச் சொந்தமான நிலங்கள்
   2. பிரம்மதேயம் - பிராமணர்க்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள்
   3. சாலபோகம் - கல்வி நிலையங்களைப் பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள்
   4. தேவதானம் - சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள்

www.kalvinews.com

20. சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட நிலங்கள் _______ ஆகும்.
    1. பள்ளிச் சந்தம் 2. தேவதானம் 3. சாலபோகம் 4. பிரம்மதேயம்

21. இந்தியாவில் புதுவகையான கட்டடக்கலையை அறிமுகம் செய்தவர்கள் _______.
    1. அசோகர்கள் 2. சீக்கியர்கள் 3. மராத்தியர்கள் 4. சுல்தான்கள்

22. இந்தியாவில் சுல்தான்கள் அறிமுகம் செய்த புதுவகையான கட்டடக்கலையின் முக்கியக் கூறுகளுள் ஒன்று _______.
    1. குவிமாடங்கள் 2. பயணக்குறிப்புகள் 3. நாணயங்கள் 4. செப்புப்பட்டயங்கள்

23. பொருத்துக.
    i. கஜுராஹோ கோயில் - a. ஒடிசா
    ii. அபு குன்று - b. தமிழ்நாடு
    iii. கோனார்க் கோயில் - c. தில்வாரா
    iv. பிரகதீஸ்வரர் கோயில் - d. மத்தியப்பிரதேசம்
    1. i - d ii - c iii - b iv - a 2. i - a ii - d iii - b iv - c
    3. i - d ii - c iii - a iv - b 4. i - d ii - a iii - b iv - c

24. பொருத்துக.
    i. ஜெய்ப்பூர் அரண்மனை - a. கர்நாடகா
    ii. ஹம்பி - b. பாழடைந்த நகரம்
    iii. பெரியபுராணம் - c. சேக்கிழார்
    iv. துக்ளகாபாத் - d. இராஜபுத்திரர்கள்
    1. i - d ii - a iii - c iv - b 2. i - d ii - a iii - b iv - c
    3. i - d ii - c iii - a iv - b 4. i - a ii - d iii - b iv - c

25. பிற்காலச் சோழர்கள் தமிழ்நாட்டில் கட்டியெழுப்பிய நேர்த்தியான பிரம்மாண்டமான கட்டிடங்களுக்கு அடையாளமாகத் திகழ்வது _______.
    1. கஜுராகோ 2. அபுகுன்று
    3. கங்கைகொண்ட சோழபுரம் 4. விருப்பாக்சா

26. ஹைதராபாத்தில் உள்ள இடைக்காலத்தைச் சேர்ந்த முக்கியமான மசூதி _______.
    1. மோத்-கி-மசூதி 2. சார்மினார்
    3. ஜமா மசூதி 4. குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதி

27. வட இந்தியாவில் உள்ள பாழடைந்த நகரம் _______.
    1. சென்னை 2. மும்பை 3. கேரளா 4. துக்ளகாபாத்

28. தென்னிந்தியாவில் உள்ள _______ இடைக்கால இந்திய வரலாற்றுக்கான சான்றுக் கருவூலமாகும்.
    1. பிரோஷாபாத் 2. ஹம்பி 3. துக்ளகாபாத் 4. டெல்லி

29. _______ இல் உள்ள உலோகக்கலவை பேரரசின் பொருளாதார நிலை குறித்த செய்திகளை வழங்குகின்றன.
    1. கட்டடங்கள் 2. கல்லறைகள் 3. மசூதிகள் 4. நாணயங்கள்

www.kalvinews.com

30. தான் வெளியிட்ட தங்கநாணயத்தில் பெண் தெய்வமான இலட்சுமியின் வடிவத்தைப் பதிப்பித்தவர் _______.

1. முகமது கோரி 2. அக்பர் 3. நேதாஜி 4. வாஸ்கோடகாமா

31. டெல்லி சுல்தான்களின் காலகட்டத்தை அறிந்துகொள்ள _______ என்னும் செப்பு நாணயங்கள் பயன்படுகின்றன.

1. ஜிட்டல் 2. டங்கா 3. தேவாரம் 4. குன்றிமணி

32. தவறான இணையைக் கண்டுபிடி.

1. டெல்லி சுல்தான் - ஜிட்டல்
2. இல்துமிஷ் - டங்கா
3. அலாவுதீன் கில்ஜி - வெள்ளி நாணயங்கள்
4. முகமது பின் துக்ளக் - செப்பு நாணயங்கள்

33. ஒரு ஜிட்டல் என்பது _______ வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டதாகும்.

1. 3.6 2. 3.2 3. 3.4 4. 3.8

34. ஒரு வெள்ளி டங்காவுக்குச் சமமானது _______ ஜிட்டல்கள் ஆகும்.

1. 36 2. 42 3. 56 4. 48

35. கீழ்க்காணும் அரசர்களுள் தங்க நாணயங்களை வெளியிட்டவர் / வெளியிட்டவர்கள் _______.

1. அலாவுதீன் கில்ஜி 2. முகமதுகோரி
3. இல்துமிஷ் 4. முகமதுபின் துக்ளக்.

1. 1 மட்டும் 2. 1 மற்றும் 2 3. 1, 2, மற்றும் 3 4. எதுவுமில்லை

36. "பக்தி இலக்கியங்களின் காலம்" என்று அழைக்கப்படுவது _______ காலமாகும்.

1. முகலாயர்கள் 2. சோழர்கள் 3. சேரர்கள் 4. பாண்டியர்கள்

37. கீழ்க்காண்பவைகளுள் எது சமய இலக்கிய நூல்களுள் ஒன்று?

1. மதுராவிஜயம் 2. அமுக்த மால்யதா 3. ராஜதரங்கிணி 4. திருவாசகம்

38. கீழ்க்காண்பவைகளுள் எது சமயச் சார்பற்ற இலக்கியங்களுள் ஒன்று அல்ல?

1. மதுராவிஜயம் 2. அமுக்தமால்யதா 3. ராஜதரங்கிணி 4. திருவாசகம்

39. பன்னிரு ஆழ்வார்களால் இயற்றப்பட்டு நாதமுனியால் தொகுக்கப்பட்ட பக்தி இலக்கியம் _______.

1. கம்பராமாயணம் 2. பெரியபுராணம்
3. தேவாரம் 4. நாலாயிர திவ்விய பிரபந்தம்

40. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் இயற்றப்பட்டு நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட பக்தி இலக்கியம் _______.

1. தேவாரம் 2. கீதகோவிந்தம் 3. திருவாசகம் 4. பெரியபுராணம்

41. பதினைந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த இறைநிலை உணர்வு பெற்ற கவிஞர் _______.

1. முகமது கோரி 2. அலாவுதீன் 3. கபீர்தாஸ் 4. இல்துமிஷ்

www.kalvinews.com

42. கங்காதேவியால் இயற்றப்பட்ட இலக்கியம் _______.

1. அமுக்த மால்யதா 2. மதுரா விஜயம் 3. திருவாசகம் 4. தேவாரம்

43. இஸ்லாமுக்கு முந்தைய காலத்தைப் பற்றி விளக்கும் ஒரே சான்று கல்ஹணரின் _______ மட்டுமே ஆகும்.

1. ராஜதரங்கிணி 2. பிருதிவிராஜ ராசோ
3. மதுரா விஜயம் 4. அமுக்த மால்யதா

44. பொருத்துக.

i. மின்கஜ் உஸ் சிராஜ் - a. தாரிக்-இ-பெரிஷ்டா
ii. ஹசன் நிஜாமி - b. தாரிக்-இ-பிரோஷாகி
iii. ஜியா-உத்-பரணி - c. தபகத்-இ-நஸிரி
iv. பெரிஷ்டா - d. தாஜ்-உல்-மா-அசிர்

1. i - c ii - d iii - b iv - a 2. i - d ii - c iii - a iv - b
3. i - c ii - a iii - b iv - d 4. i - c ii - d iii - a iv - b

45. தாஜ்-உல்-மா-அசிர் எனும் நூல் _______ பற்றிய பல செய்திகளை முன்வைக்கிறது.

1. குத்புதீன் ஐபக் 2. நஸ்ருதீன் மாமூது
3. இல்துமிஷ் 4. ஹசன் நிஜாமி

46. டெல்லி சுல்தானியத்தின் வரலாற்றைக் கூறும் அரசின் இசைவு பெற்ற நூல் _______.

1. தபகத்-இ-நஸிரி 2. தாஜ்-உல்-மா-அசிர்
3. தாரிக்-இ-பிரோஷாகி 4. அக்பர் நாமா

47. பாபர் எழுதிய நூல் _______.

1. அயினி அக்பரி 2. அக்பர் நாமா
3. பாபர் நாமா 4. தசுக்-இ-ஜாஹாங்கீரி

48. அபுல்பாசல் எழுதிய நூல் _______.

1. பாபர் நாமா 2. தசுக்-இ-ஜாஹாங்கீரி
3. தாரிக்-இ-பதானி 4. அயினி அக்பரி

49. ஜஹாங்கீர் எழுதிய நூல் _______.

1. பாபர் நாமா 2. தசுக்-இ- ஜாஹாங்கீரி
3. தாரிக்-இ-பதானி 4. அக்பர் நாமா

50. நிஜாமுதீன் அகமத் என்பவரால் எழுதப்பட்ட நூல் _______.

1. தபகத்-இ-அக்பரி 2. தபகத்-இ-நஸிரி
3. தாரிக்-இ-பிரோஷாகி 4. தாரிக்-இ-பெரிஷ்டா

51. பதானி எழுதிய நூல் _______.

1. தபகத்-இ-நஸிரி 2. பாபர் நாமா 3. தாரிக்-இ-பதானி 4. தாரிக்-இ-பிரோஷாகி

52. தாரிக்-இ-பதானி என்னும் நூல் _______ தொகுதிகளைக் கொண்டுள்ளது.

1. 2 2. 4 3. 1 4. 3

www.kalvinews.com

53. வெனிஸ் நகரைச் சார்ந்த பயணி _______.

1. பதானி 2. அக்பர் 3. பாபர் 4. மார்கோபோலோ

54. மார்கோ போலோ தமிழகத்தில் _______ என்ற ஊருக்கு இருமுறை வந்துள்ளார்.

1. திருநெல்வேலி 2. காயல் 3. சிவகங்கை 4. மதுரை

55. கஜினி மாமூதின் படையெடுப்பின் போது, அவருடன் தங்கியிருந்தவர் _______.

1. அல்-பரூனி 2. இபன்பதூதா 3. பதானி 4. அக்பர்

56. அல்-பரூனி எழுதிய நூல் _______.

1. அயினி அக்பரி 2. பாபர் நாமா
3. துசிக்-இ-ஜாஹாங்கீரி 4. தாகுயூக்-இ-ஹிந்த்

57. மொராக்கோ நாட்டு அறிஞர் _______.

1. அல்-பரூனி 2. இபன் பதூதா 3. பதானி 4. பாபர்

58. இபன் பதூதாவின் பயண நூல் _______.

1. ரிக்ளா 2. தாகுயூக்-இ-ஹிந்த் 3. மதுரா விஜயம் 4. ராஜதரங்கிணி

59. தலைநகரை டெல்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றியவர் _______.

1. இபன்பதூதா 2. அல்-பரூனி 3. முகமது பின் துக்ளக் 4. அக்பர்

60. 1420- இல் விஜயநகர் வந்த இத்தாலியப் பயணி _______.

1. நிகோலோ கோண்டி 2. இபன் பதூதா
3. அல்-பரூனி 4. பதானி

61. தாஜ்மஹாலைப் போன்று வெள்ளைப் பளிங்கு கற்களால் கட்டப்பட்டுள்ள கோவில் _______.

1. கஜுராஹோ கோவில் 2. தில்வாரா ஆலயம்
3. சூரியக் கோயில் 4. பெரியகோவில்

62. இசைப்படிகள் கொண்ட பிற்காலச் சோழர்களின் கட்டிடக் கலைக்கு அடையாளமாக விளங்கும் கோவில் _______.

1. பெரியகோவில் 2. ஐராவதீஸ்வரர் கோவில்
3. கஜுராஹோ கோவில் 4. சூரியக் கோயில்

63. கல்தேர் அமைந்துள்ள கோவில் _______.

1. ஹம்பி 2. ஐராவதீஸ்வரர் கோவில்
3. கஜுராஹோ கோவில் 4. சூரியக் கோயில்

64. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. குவ்வத் - உல் - இஸ்லாம் | - | a) | முகமது குதுப்ஷா |
| 2. மோத்கி மசூதி | - | b) | ஷாஜஹான் |
| 3. பதேப்பூர் சிக்ரி தர்கா | - | c) | அக்பர் |
| 4. சார்மினார் | - | d) | குத்புதீன் ஐபக் |

1. c, d, b, a 2. d, b, a, c 3. c, d, a, b 4. a, c, b, d

65. இந்தியாவில் இராஜபுத்திரர்களின் மேன்மைகளை விளக்கும் அரண்மனைகள் உள்ள மாநிலம் _______.

1. குஜராத் 2. இராஜஸ்தான் 3. மத்தியப்பிரதேசம் 4. மேற்கு வங்காளம்

66. இந்தியாவில் முதன்முறையாக இந்தோ - இஸ்லாமிய முறையில் கட்டப்பட்ட கல்லறை யாருடையது?

1. இல்துமிஷ் 2. பால்பன் 3. அலாவுதீன் கில்ஜி 4. பாபர்

67. டங்கா என்பது _______.

1. தங்க நாணயம் 2. வெள்ளி நாணயம் 3. செப்பு நாணயம் 4. தகர நாணயம்

68. கபீர்தாஸ் இயற்றிய பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

1. கவிதைகள் 2. குறள்கள் 3. பாடல்கள் 4. தோஹே

69. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் எல்லைக் கட்டுப்பாட்டுப் கோட்டின் அருகில் உள்ள இடங்களைப் பற்றிக் குறிப்பிடும் நூல் _______.

1. ரிக்ளா 2. தாகுயூக்-இ-ஹிந்த் 3. மதுரா விஜயம் 4. ராஜதரங்கிணி

70. அரேபியச் சொல்லில் "வரலாறு" என்பதனைக் குறிக்கும் சொல் _______.

1. தாரிக் 2. தபாத் 3. தஜிக் 4. தாக்

71. யாருடைய நூல் அக்பருடைய வாழ்க்கை வரலாற்றை நம்பத் தகுந்ததாக எடுத்துரைக்கிறது?

1. முகமது கோரி 2. அலாவுதீன் 3. கபீர்தாஸ் 4. நிஜாமுதீன் அகமத்

72. தூத்துக்குடி மாவட்டத்திற்கு இருமுறை வந்த வெனிஸ் நகரப் பயணி _______.

1. பதானி 2. அக்பர் 3. பாபர் 4. மார்கோபோலோ

73. இபன் பதூதா என்ற மொராக்கோ நாட்டுப் பயணி எந்த முகலாயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்?

1. செங்கிஸ்கான் 2. பாபர்
3. முகமது பின் துக்ளக் 4. அக்பர்

74. செங்கிஸ்கானின் அரசவை இருந்த இடம் _______.

1. ஹீரட் - மத்திய ஆசியா 2. துருக்கி
3. அரேபியா 4. சீனா

75. கீழ்க்காண்பவைகளை காலத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்தவும்

1) ஹசன் நிஜாமி வாழ்ந்த காலம்
2) ஜஹாங்கீர் வாழ்ந்த காலம்
3) கபீர்தாஸ் வாழ்ந்த காலம்

1. 1, 2, 3 2. 1, 3, 2 3. 2, 3, 1 4. 2, 1, 3

76. தாரிக் அல்லது தாகுயூக் என்பது _______மொழிச் சொல்.

1. வட 2. அரேபிய 3. பாரசீகம் 4. லத்தீன்

www.kalvinews.com

77. ஆயிரக்கணக்கான குதிரைகள் தென்னிந்தியாவில் கடல் வழியாக இறக்குமதி செய்யப்பட்டதாக கூறும் பயணி _______.

1. மார்க்கோபோலோ
2. ஜஹாங்கீர்
3. இபன் பதுதா
4. அப்துர் ரஸாக்

78. வெளிநாட்டுத் துறைமுகங்களில் இந்திய வணிகர்களின் விறுவிறுப்பான வணிக நடவடிக்கைகள் மற்றும் கடல்களில் இந்தியக் கப்பல்கள் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள உதவியவர் _______.

1. மார்க்கோபோலோ
2. ஜஹாங்கீர்
3. இபன் பதுதா
4. அப்துர் ரஸாக்

79. தன்னுடைய தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கேயிருந்த தேவகிரிக்கு (தௌலதாபாத்) மாற்றி டெல்லியை பொட்டற்காடாக்கியவர் _______.

1. அப்துர் ரஸாக்
2. ஜஹாங்கீர்
3. கஜினி மாமுதின்
4. சுல்தான் முகமது பின்.துக்ளக்

80. விஜயநகரப் பேரரசின் பெரும் சிறப்பைக் கூறிய பயணிகள் _______.

அ) அப்துர் ரஸாக்
ஆ) நிகோலோ கோண்டி
இ) டோமிங்கோ
ஈ) செங்கிஸ்கான்

1. அ மட்டும்
2. அ & ஆ மட்டும்
3. அ, ஆ & இ மட்டும்
4. எவருமில்லை

81. 14 ஆம் நூற்றாண்டை சேர்ந்த மொராக்கோ நாட்டுப் பயணி _______.

1. மார்க்கோபோலோ
2. இபன் பதூதா
3. ஜியா - உத் - பரணி
4. ஹசன் நிஜாமி.

82. கஜினியிலிருந்து புலம்பெயர்ந்த பயணி _______.

1. ஜியா-உத் - பரணி
2. இபன் பதூதா
3. மார்க்கோபோலோ
4. ஹசன் நிஜாமி.

83. சுல்தான் நஸ்ருதின் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர் _______.

1. மின்கஜ் உஸ் சிராஜ்
2. சுல்தான் இல்துமிஷ்
3. குத்புதின் ஐபக்
4. கியாசுதின்

84. வெனிஸ் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற பயணியான ______ இரண்டு முறை காயலுக்கு வருகை தந்தார் (NMMS-2020-21)

(1) வாஸ்கோடகாமா
(2) கிறிஸ்டோபர் கொலம்பஸ்
(3) மார்க்கோபோலோ
(4) பார்த்தலோமியா டயஸ்

85. செப்பு நாணய முறையை அறிமுகப்படுத்தியவர்கள் _______. (NMMS-2016)

(1) பாரசீகர்கள்
(2) அரேபியர்கள்
(3) துருக்கியர்கள்
(4) சுல்தான்கள்

www.kalvinews.com

86. டங்கா என்ற வெள்ளி நாணயம் மற்றும் ஜிட்டல் என்ற செம்பு நாணயத்தினை வெளியிட்டவர் ________. (NMMS 2019-20)

(1) இல்துமிஷ் (2) குதுபுதீன் ஐபெக்

(3) பால்பன் (4) சுல்தானா இரசியா

87. பொருத்துக (NMMS-2020-21)

1) திருவாலங்காடு செப்பேடு - i. முகமது பின் துக்ளக்

2) அன்பில் செப்பேடு - ii. இராஜேந்திர சோழன்

3) செப்பு நாணயங்கள் - iii. இல்துமிஷ்

4) 'டங்கா' வெள்ளி நாணயங்கள் - iv. சுந்தரச் சோழன்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| (1) | ii | iv | i | iii |
| (2) | iv | iii | i | ii |
| (3) | ii | iii | iv | i |
| (4) | i | iii | ii | iv |

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (1) | **16** | (3) | **31** | (1) | **46** | (2) | **61** | (2) | **76** | (2) |
| **2** | (3) | **17** | (2) | **32** | (3) | **47** | (3) | **62** | (2) | **77** | (1) |
| **3** | (2) | **18** | (4) | **33** | (1) | **48** | (4) | **63** | (1) | **78** | (3) |
| **4** | (1) | **19** | (4) | **34** | (4) | **49** | (2) | **64** | (1) | **79** | (4) |
| **5** | (1) | **20** | (1) | **35** | (2) | **50** | (1) | **65** | (2) | **80** | (3) |
| **6** | (3) | **21** | (4) | **36** | (2) | **51** | (3) | **66** | (2) | **81** | (2) |
| **7** | (2) | **22** | (1) | **37** | (4) | **52** | (4) | **67** | (2) | **82** | (4) |
| **8** | (1) | **23** | (3) | **38** | (4) | **53** | (4) | **68** | (4) | **83** | (1) |
| **9** | (1) | **24** | (1) | **39** | (4) | **54** | (2) | **69** | (4) | **84** | (3) |
| **10** | (4) | **25** | (3) | **40** | (1) | **55** | (1) | **70** | (1) | **85** | (4) |
| **11** | (2) | **26** | (2) | **41** | (3) | **56** | (4) | **71** | (4) | **86** | (1) |
| **12** | (1) | **27** | (4) | **42** | (2) | **57** | (2) | **72** | (4) | **87** | (1) |
| **13** | (4) | **28** | (2) | **43** | (1) | **58** | (1) | **73** | (3) | | |
| **14** | (1) | **29** | (4) | **44** | (1) | **59** | (3) | **74** | (1) | | |
| **15** | (3) | **30** | (1) | **45** | (1) | **60** | (1) | **75** | (2) | | |

www.kalvinews.com

வகுப்பு - 7 - பருவம் - 1 - வரலாறு

## 2. வட இந்தியப் புதிய அரசுகளின் தோற்றம்

**தொகுப்பு:**
**திரு.க.பிரகாஷ்,M.Sc.,B.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**அரசு மேல்நிலைப்பள்ளி, தினைக்குளம்,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.செ.பெரியசாமி,M.Sc.,B.Ed.,M.A.,M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப் பள்ளி,**
**கொ.ஒட்டபட்டி, கரூர் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- ராஜபுதனம் என்பது ராஜபுத்திர அரசுகளின் கூட்டமைப்பால் ஆனது. ராஜபுதனத்தில் மிகவும் புகழ்பெற்றது சித்தூர்.
- அனைத்து ராஜபுத்திர இனக்குழுவினரும் ஒருங்கிணையும் மையமாக சித்தூர் விளங்கியது.
- ராஜபுத்திரர்கள் மாளவம், குஜராத், சித்தூர் ஆகிய மூன்று அரசுகளிலும் ஆட்சி செய்தனர்.
- சித்தூரின் ராணா, மாளவத்தை வெற்றி கொண்டதன் நினைவாக ஜெய ஸ்தம்பா எனும் வெற்றித்தூண் சித்தூரில் நிறுவப்பட்டது.
- பிரதிகார அரசின் வீழ்ச்சி வங்காளத்தில் பாலர்களின் எழுச்சிக்கும், வடமேற்கு இந்தியாவில் சௌகான்களின் எழுச்சிக்கும் வித்திட்டது.
- கி.பி. 712 இல் சிந்துவை அரேபியர் கைப்பற்றினர்.
- கன்னோஜை ஆண்ட அரசர்களில் குறிப்பிடத்தக்கவர் யசோவர்மன் (கி.பி.736) ஆவார்.
- ஒன்பதாம் நூற்றாண்டில் ராஜஸ்தான் கன்னோஜ் ஆகிய பகுதிகளில் பிரதிகார அரச வம்சம் வளர்ச்சி பெற்றிருந்தது.
- வட இந்தியாவின் பெரும்பகுதியையும் கன்னோஜையும் கட்டியாண்ட ராஜபுத்திரர்களின் எதிர்ப்பால் இந்தியாவில் இஸ்லாமியர்களின் காலக்கட்டம் கி.பி. (பொ.ஆ) 1200 இல் தான் தொடங்கிற்று.
- “ராஜபுத்” எனும் சொல் ரஜ்புத்ர என்ற சமஸ்கிருத மொழிச்சொல்லிலிருந்து பெறப்பட்டது ஆகும். ராஜபுத் என்பதன் பொருள் அரச வம்சத்தின் வாரிசு அல்லது வழித்தோன்றல் என்பதாகும்.
- கி.பி. 647 இல் ஹர்ஷர் மறைந்தார். ஹர்ஷருக்குப்பின் புதிய பிராந்திய அரசுகள் உதயமாயின.
- ராஜபுத்திரர்களின் முக்கிய மூன்று குலங்கள் சூரியவம்சி, சந்திரவம்சி, அக்னிகுலம் ஆகும்.
- பந்தேல்கண்டின் ராஜபுத்திர இனக்குழு சந்தேலர்கள் ஆவர். ஹரியானா பகுதி ராஜபுத்திர இனக்குழு தோமரர்கள் ஆவர். ஆனால் 12 - ஆம் நூற்றாண்டில் இவர்கள் சௌகான்களால் வெற்றி கொள்ளப்பட்டனர்.
- **ஜேம்ஸ் டாட் எனும் கீழ்த்திசைப் புலமையாளர்** கி.பி. 1829 - இல் முக்கியமான 36 ராஜபுத்திர அரசகுலங்களை பட்டியலிட்டுள்ளார்.

- அவர்களில் சிறப்புத் தகுதி பெற்றவர்கள் **பிரதிகாரர்கள், சௌகான்கள், சோலங்கிகள் (சாளுக்கியர்) மற்றும் பவாரைச் சேர்ந்த பரமாரர்கள்** ஆவார்கள். இந்நான்கு குலமரபினரும் **அக்னி குலத் தோன்றல்கள்** ஆவர்.

**பிரதிகாரர்கள்:**

- கி.பி. ஆறாம் நூற்றாண்டில் ஹரிச்சந்திரா என்பவர் கூர்ஜர அரசவம்சத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- பிரதிகார அரசர்களுள் முதலாவது மற்றும் முக்கியமான அரசர் முதலாம் நாகபட்டர் என்பவராவார்.
- முதலாம் நாகபட்டருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற வத்சராஜா ஒட்டுமொத்த வடஇந்தியாவின் மீது ஆதிக்கம் செலுத்த ஆசைப்பட்டார்.
- கன்னோஜை கைப்பற்ற அவர் மேற்கொண்ட முயற்சி வங்காளப் பகுதியின் பாலவம்ச அரசரான தர்மபாலருடன் பகை ஏற்பட வழிவகுத்தது.
- மாளவத்தின் கூர்ஜரப் பிரதிகாரர்கள், தக்காணத்தைச் சேர்ந்த ராஷ்டிரகூடர்கள், வங்காளத்துப் பாலர்கள் ஆகிய மூவருள் ஒவ்வொருவரும் கன்னோஜின் மீதும் ஆதிக்கத்தை செலுத்த மும்முனைப் போட்டி நடைபெற்றது.
- வத்சராஜாவை தொடர்ந்து ஆட்சி பொறுப்பேற்றவர் இரண்டாம் நாகபட்டர், ராமபத்ரா ஆவர்.
- எட்டாம் நூற்றாண்டில் பரூச், ஜோத்பூர் ஆகிய பகுதிகளை ஆட்சி செய்த முதலாம் நாகப்பட்டர் குவாலியரை விரிவுபடுத்தினார்.
- மேலும் சிந்துவின் மீது அரேபியர் படையெடுப்பை முறியடித்தார்.
- ராமபத்ராவிற்கு பின் அவருடைய மகன் மிகிரபோஜா (அல்லது) போஜா என்பவர் அரியணை ஏறினார்.
- மிகிரபோஜா (அல்லது) போஜா அரியணை ஏறியதும் அரேபியர்களின் அச்சுறுத்தல்களை சமாளித்து ஒரு நூற்றாண்டு காலம் பிரதிகார ஆட்சியை நிலைநிறுத்தினார்.

**பாலர்கள்:**

- பால அரச வம்சத்தை உருவாக்கியவர் கோபாலர். அரச பரம்பரையைச் சேர்ந்தவர் என்ற வரலாற்றுப் பின்னணி அவருக்கில்லை. அவரது திறமையின் காரணமாக மக்கள் அவரை அரசராக தேர்வு செய்தனர்.
- கி.பி. 750 முதல் 770 வரை கோபாலர் ஆட்சி செய்தார்.
- கோபாலரின் மகன் தர்மபாலர் (கி.பி. 770 முதல் 810 வரை). இவர் பால அரசை வடஇந்திய அரசியலில் ஒரு வலிமைமிக்க சக்தியாக உருவாக்கினார்.
- தர்மபாலர் மிகச்சிறந்த பௌத்த மத ஆதரவாளர் ஆவார். இவர் உருவாக்கிய விக்கிரசீலா மடாலயம் பௌத்த கல்விக்கான மிகச்சிறந்த மையமாக விளங்கிற்று.
- தர்மபாலரை தொடர்ந்து அவரது மகன் தேவபாலர் ஆட்சிப்பொறுப்பேற்றார். இவர் பாலர்களின் ஆட்சி அதிகாரத்தை கிழக்கு நோக்கி காமரூபம் (அஸ்ஸாம்) வரை விரிவுபடுத்தினார். இவர் பௌத்தர்களுக்கு ஐந்து கிராமங்களைக் கொடையாக வழங்கினார்.
- தர்மபாலர், தேவபாலர் ஆகியோரின் ஆட்சிக்காலங்கள் வங்காள வரலாற்றின் சிறப்புமிக்க ஒளிரும் அத்தியாயங்கள் என வரலாற்று அறிஞர் ஆர்.சி.மஜூம்தார் கருத்துக் கூறியுள்ளார்.
- முதலாம் மகிபாலர் பாலவம்சத்தின் மிகச்சிறந்த, வலிமைமிக்க அரசர். இவர் இரண்டாம் பால வம்சத்தை தோற்றுவித்தவர்.

www.kalvinews.com

- தென்னிந்திய அரசரான ராஜேந்திர சோழனின் படையெடுப்பின் காரணமாக வாரணாசிக்கு அப்பால் தனது அதிகாரத்தை விரிவுபடுத்த முதலாம் மகிபாலரால் இயலாமல் போயிற்று.
- மகிபாலரின் இறப்பால் பால வம்சம் வீழ்ச்சியுற்று சேனா வம்சத்தின் வருகைக்கு வழிவிட்டது.

**சௌகான்கள்:**

- சௌகான்கள் கி.பி.956 முதல் 1192 வரை இன்றைய ராஜஸ்தானின் கிழக்குப் பகுதிகளைச் சாகம்பரி நகரில் தலைநகரை நிறுவி ஆட்சி புரிந்தவர்களாவர்.
- சௌகான்கள் எனும் ராஜபுத்திர அரச வம்சத்தைத் தோற்றுவித்தவர் சிம்மராஜ் என்பவராவார். இவர் ஆஜ்மீர் நகரைத் தோற்றுவித்தவர் எனவும் அறியப்படுகின்றார்.
- சௌகான்கள் பிரதிகாரர்களுக்கு கட்டுப்பட்ட குறுநில மன்னர்களாய் இருந்தவராவர்.
- சௌகான் வம்சாவளியின் கடைசி அரசனான பிருதிவிராஜ் சௌகானே அந்த வம்சாவளி அரசர்களில் தலைசிறந்தவர் எனக் கருதப்படுகின்றார்.
- அவர் 1191 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தரெய்ன் போரில் முகமது கோரியைத் தோற்கடித்தார். இருந்தபோதிலும் 1192 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் தரெய்ன் போரில் முகமது கோரியால் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.
- பிருதிவிராஜ் சௌகானின் மறைவுக்குப் பின் சில நூற்றாண்டுகள் கழிந்த பின்பு சந்த் பார்தை எனும் கவிஞர் **பிருதிவிராஜ ராசோ** எனும் பெயரில் ஒரு நீண்ட காவியத்தை இயற்றினார்.

**கலை மற்றும் கட்டடக்கலைக்கு ராஜபுத்திரர்களின் பங்களிப்பு:**

- பெரும்பாலும் சமயக் கருத்துகளை மையமாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட பாணியிலான ஓவியக்கலை மரபு ராஜபுத்திர அரசவைகளில் தோற்றம் பெற்றது.
- இப்பாணியிலான ஓவியங்கள் ராஜஸ்தானி என அழைக்கப்படுகின்றன. இவை **பிக்கனேர், ஜோத்பூர், மேவார், ஜெய்சால்மர், புரி** ஆகிய இடங்களில் காணக்கிடைக்கின்றன.
- ராஜபுத்திரர்களின் குடியிருப்புக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குபவை குவாலியர் மான்சிங் அரண்மனை, ஆம்பூர்(ஜெய்ப்பூர்) கோட்டை, உதய்பூரில் ஏரியின் **நடுவே அமைந்துள்ள அரண்மனை** ஆகியவைகளாகும்.
- **கஜுராகோ எனும் இடத்திலுள்ள கோவில்கள், கொனார்க்கிலுள்ள சூரியனார் கோவில், அபுகுன்றின் மீது கட்டப்பட்டுள்ள தில்வாரா சமணக்கோவில், மத்தியப் பிரதேசத்திலுள்ள காந்தர்யா கோவில்** ஆகியன ராஜபுத்திரர்களின் கோவில் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.
- பந்தேல்கண்டிலுள்ள கஜுராகோ வளாகத்தில் மொத்தம் 30 கோவில்கள் அமைந்துள்ளன.
- ஜோத்பூரிலிருந்து 32 மைல் தொலைவில் உள்ள ஓசியான் என்னுமிடத்தில் பதினாறு இந்து மற்றும் சமணக் கோவில்கள் உள்ளன.
- அபுகுன்றின் மேலுள்ள தில்வாரா சமணக்கோவிலில் வெண்மைநிறச் சலவைக் கற்களால் கட்டப்பட்ட கூடம் உள்ளது. அதன் மையத்தில் பதினொரு பொதுமைய வட்டங்களைக் கொண்ட குவிமாடம் உள்ளது.
- **ரக்ஷாபந்தன் (ராக்கி) என்ற பண்பாட்டு மரபானது ராஜபுத்திரர்களுக்கு உரியது. ரக்ஷா எனில் பாதுகாப்பு என்றும் பந்தன் என்றால் கட்டுதல் அல்லது உறவு என்னும் பொருளாகும்.** இது சகோதரத்துவத்தையும், அன்பையும் கொண்டாடும் விழாவாகும்.

www.kalvinews.com

- 1905 ஆம் ஆண்டு வங்கப் பிரிவினையின் போது இவீந்திரநாத் தாகூர் பெருமளவில் மக்கள் பங்கேற்ற ரக்ஷாபந்தன் விழாவைத் தொடங்கினார்.
- இந்து, முஸ்லீம்களுக்கிடையே பிளவை ஏற்படுத்த ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராக ரக்ஷாபந்தன் (ராக்கி) மேற்கொள்ளப்பட்டது.
- கட்டடங்கள் கட்டுவதில் ராஜபுத்திரர்களே தலை சிறந்தவராவர்.
- சித்தோர்கார், ரான்தம்பூர், கும்பல்கார் இவை ராஜஸ்தானில் உள்ள கட்டடங்கள் ஆகும்.
- மாண்டு, குவாலியர், சந்தேரி, அசிர்கார் இவை அனைத்தும் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ளது.

**பாலர்களின் பண்பாட்டுப் பங்களிப்பு:**

- பாலர்கள் மகாயான பௌத்தத்தை பின்பற்றியராவர். பௌத்தக் கோவில்களையும் புகழ்பெற்ற நாளந்தா, விக்கிரமசீலா ஆகிய பல்கலைக்கழகங்களையும் ஆதரித்தனர். திபெத்தில் பௌத்தம் நிறுவப்பட்டது.
- திபெத்திய பௌத்தத்தைச் சீர்திருத்தம் செய்தவர் அதிசா (981-1054) ஆவார். இவர் விக்கிரமசீலா மடாலயத்தின் தலைவராக இருந்தார்.
- சுமத்ரா, ஜாவா சேர்ந்த இந்து-பௌத்த லைலேந்திர அரசுடன் பாலர்கள் சுமூக உறவை பேணினர்.
- பாலர்களின் ஆதரவால் தனித்தன்மை வாய்ந்த புதிய பாணியைக் கொண்ட கலைப்பள்ளி ஒன்று உருவானது. இது பாலர்களின் கலை அல்லது கிழக்கிந்திய கலை என்று அழைக்கப்படுகிறது.
- இவை பெரும்பாலும் செப்புச்சிலைகளிலும், பனை ஓலைகளிலும் வரையப்பட்ட ஓவியங்கள் ஆகும். இவை புத்தரையும் ஏனைய கடவுளர்களையும் புகழ்பாடுவதாய் அமைந்துள்ளன.
- பாலர்களின் செப்புச் சிலைகள் தென்கிழக்கு ஆசியாவில் இந்தியப் பண்பாடு பரவியதில் முக்கியப் பங்கு வகித்தன.

**இஸ்லாமின் தோற்றம்:**

- ஒரு சமய நம்பிக்கையாக இஸ்லாம் அரேபியாவிலுள்ள மெக்காவில் தோன்றியது. இதனைத் தோற்றுவித்தவர் இறைதூதர் முகமது நபிகள் நாயகமாவார்.
- இஸ்லாமைப் பின்பற்றுபவர்கள் முஸ்லீம்கள் என அழைக்கப்படுகின்றனர்.
- ஓர் இஸ்லாமிய அரசு அரசியல் ரீதியாகவும், மத ரீதியாகவும் ஒரே நபரால் ஆளப்பட்டால் அவ்வரசு கலீஃபத் என்றழைக்கப்பட்டது.
- கலீஃபா என்னும் சொல்லுக்கு இறைதூதர் முகமது நபிகளின் பிரதிநிதி என்று பொருளாகும். உமையத்துக்களும் அப்பாசித்துகளும் தொடக்க கால கலீஃபத்துகளாகும்.
- எட்டாம் நூற்றாண்டு இந்தியாவில் சிந்து பகுதியைக் கைப்பற்றிய முஸ்லீம் படைவீரர்களாகவே அரேபியர்கள் முதன்முதலாக அறிமுகமாயினர்.
- கி.பி.712 இல் உமையது அரசின் படைத்தளபதியான முகமது பின் காசிம் சிந்துவின் மீது படையெடுத்தார். சிந்துவின் அரசர் தாகீர், முகமது பின் காசிமால் தோற்கடிக்கப்பட்டார். சிந்துவின் தலைநகர் அரோர் கைப்பற்றப்பட்டது. சிந்துபகுதி வாழ் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட மக்கள் எனும் தகுதி வழங்கப்பட்டது.
- அரேபியர்கள் பூஜ்யத்தின் முக்கியத்துவத்தை இந்தியாவில் இருந்து கற்றுக்கொண்டனர். மேலைநாட்டவரும், அரேபியரும் சதுரங்க விளையாட்டை இந்தியர்களிடமிருந்து கற்றுக் கொண்டதாக கூறப்படுகிறது.

www.kalvinews.com

**கஜினி மாமூது (கி.பி. 997-1030):**

- துருக்கிய ஆளுநர் அல்ப்-டஜின் கஜினியைத் தலைநகராகக் கொண்டு சுதந்திர சுல்தானாக ஆட்சிபுரியத் தொடங்கினார். அவருக்குப் பின் அவரது மருமகன் சபக்டிஜின் வடமேற்கு திசைவழியாக இந்தியாவைக் கைப்பற்ற விரும்பினார். ஆனால் அவரது விருப்பத்தை அவரது மகன் கஜினி மாமூது நிறைவேற்றினார்.
- கஜினி மாமூது இந்தியாவின் மீது சூறையாடலை நோக்கமாகக் கொண்டு பதினேழு முறை படையெடுப்பு நடத்தியாகக் கூறப்படுகிறது.
- ஷாகி அரசு பஞ்சாப் முதல் காபூல் வரை பரவியிருந்தது. ஷாகி அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புகளில் அதன் அரசர் ஜெயபாலர் 1001 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டார். அவருக்குப்பின் வந்த ஆனந்தபாலர் கஜினி மாமூதுக்கு எதிராக போரிட்டார்.
- 1008 ஆம் ஆண்டு பெஷாவருக்கு அருகேயுள்ள வைகிந்த் என்னுமிடத்தில் அவர் தோற்கடிக்கப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் கஜினி மாமூது, தனது ஆட்சி அதிகாரத்தை பஞ்சாப் வரை விரிவுபடுத்தினார்.
- 1011 இல் பஞ்சாபிலுள்ள நாகர்கோட், டெல்லிக்கு அருகேயுள்ள தானேஸ்வர் ஆகிய நகரங்களை சூறையாடினார். 1018 ஆம் ஆண்டில் கஜினி மாமூது, புனித நகரமான மதுராவைக் கொள்ளையடித்தார்.
- கி.பி. 1024 இல் கஜினி மாமூது சோலங்கி அரசர் முதலாம் பீமதேவரைத் தோற்கடித்து, அன்கில்வாட் நகரை சூறையாடினார்.
- கஜினி மாமூது மிகவும் புகழ்பெற்ற சோமநாதபுரம் கோவிலைக் கொள்ளையடித்து அங்கிருந்த கடவுள் சிலையை உடைத்ததாகவும் சொல்லப்படுகிறது. இந்தப் படையெடுப்பே இந்தியாவின் மீதான கஜினியின் இறுதிப் படையெடுப்பாகும்.
- கி.பி. 1030 இல் கஜினி மாமூது மரணமடைந்தார்.

**முகமது கோரி (கி.பி 1149-1206):**

- கோர் பகுதியைச் சேர்ந்த முகமது கோரி கஜினிக்கு கப்பம் கட்டிய குறுநிலத் தலைவராவார். கஜினி இறப்பிற்குப்பின் சுதந்திரமானவரானார். இவர் இந்தியாவைக் கைப்பற்றி தனது பேரரசை விரிவாக்கம் செய்ய விரும்பினார்.
- 1175 இல் முல்தானைக் கைப்பற்றிய கோரி 1186 இல் பஞ்சாப்பைத் தாக்கி அதனைக் கைப்பற்றினார்.
- 1191 இல் முதல் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் சௌகானிடம் தோல்வி அடைந்தார். பின்பு 1192 இல் இரண்டாம் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் சௌகானை வென்று கைது செய்து கொன்றார்.
- இரண்டாம் தரெய்ன் போர் ராஜபுத்திரர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்திய போராகும். இந்தியாவில் ஆஜ்மீரில் முதல் இஸ்லாமிய அரசு உறுதியாக நிறுவப்பட்டது.
- கி.பி.1206 இல் முகமது கோரி இயற்கை எய்தினார். அதனைத் தொடர்ந்து அவருடைய தளபதி குத்புதீன் ஐபக் தன்னை டெல்லியின் முதல் சுல்தான் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்:**

1. ராஜபுதனத்தில் மிகவும் புகழ்பெற்றது _______.
   (1) மாளவம் (2) குஜராத் (3) சித்தூர் (4) கன்னோஜ்

2. சித்தூரின் ராணா மாளவத்தை வெற்றிகொண்டதன் நினைவாக நிறுவப்பட்ட தூண் _______.
   (1) ஜெய ஸ்தம்பா (2) கஜூராகோ (3) குதுப்மினார் (4) சாரணாத்

3. பந்தேல்கண்டின் ராஜபுத்திர இனக்குழு _______.
   (1) தோமரர்கள் (2) சந்தேலர்கள் (3) சௌகான்கள் (4) பரமாரர்கள்

4. ராஜபுத்திர அரசகுலங்களின் எண்ணிக்கை _______.
   (1) 16 (2) 26 (3) 36 (4) 46

5. கூர்ஜர அரச வம்சத்திற்கு அடிக்கல் நாட்டியவர் _______.
   (1) ஹரிச்சந்திரா (2) வத்சராஜா (3) முதலாம் போஜா (4) முதலாம் நாகபட்டர்

6. பிரதிகார அரசர்களுள் முதல் தலைசிறந்த அரசர் _______.
   (1) ஹரிச்சந்திரா (2) ராமபத்ரா (3) மிகிர போஜா (4) முதலாம் நாகபட்டர்

7. பால அரச வம்சத்தை உருவாக்கியவர் _______.
   (1) தர்மபாலர் (2) கோபாலர் (3) தேவபாலர் (4) முதலாம் மகிபாலர்

8. விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர் _______.
   (1) தர்மபாலர் (2) ஜெயபாலர் (3) தேவபாலர் (4) முதலாம் மகிபாலர்

9. பௌத்த கல்விக்கான மிகச்சிறந்த மையம் _______.
   (1) விக்கிரமசீலா (2) நாளந்தா (3) கஜூராகோ (4) தில்வாரா

10. பௌத்தர்களுக்கு ஐந்து கிராமங்களை கொடையாக வழங்கியவர் _______.
    (1) ஜெயபாலர் (2) தர்மபாலர் (3) தேவபாலர் (4) முதலாம் மகிபாலர்

11. தர்மபாலர், தேவபாலர் ஆகியோரின் ஆட்சிக் காலங்கள் வங்காள வரலாற்றின் சிறப்புமிக்க ஒளிரும் அத்தியாயங்கள் என கூறிய அறிஞர் _______.
    (1) அதிசா (2) சந்த் பார்தை (3) ஜேம்ஸ் டாட் (4) ஆர்.சி. மஜூம்தார்

12. பால வம்சத்தின் மிகச்சிறந்த, வலிமைமிக்க அரசர் _______.
    (1) தர்மபாலர் (2) ஜெயபாலர் (3) தேவபாலர் (4) முதலாம் மகிபாலர்

13. யாருடைய படையெடுப்பின் காரணமாக வாரணாசிக்கு அப்பால் தனது அதிகாரத்தை விரிவுபடுத்த முதலாம் மகிபாலரால் இயலாமல் போயிற்று?
    (1) ராஜராஜ சோழன் (2) ராஜேந்திர சோழன்
    (3) குலோத்துங்கன் (4) சிம்மராஜன்

14. சௌகான்கள் எனும் ராஜபுத்திர அரச வம்சத்தை தோற்றுவித்தவர் _______.
    (1) சிம்மராஜ் (2) பிருதிவிராஜ் (3) போஜராஜ் (4) தேவராஜ்

15. சௌகான் வம்சாவளி அரசர்களுள் தலை சிறந்தவர் _______.
    (1) சிம்மராஜ் (2) பிருதிவிராஜ் (3) போஜராஜ் (4) தேவராஜ்

www.kalvinews.com

16. பிருதிவிராஜ ராசோ எனும் நூலை எழுதியவர் _______.
(1) கல்ஹணர் (2) விசாகதத்தர் (3) ராஜசேகரர் (4) சந்த் பார்தை

17. முதல் தரெய்ன் போரில் வெற்றி பெற்றவர் _______ : தோல்வியுற்றவர் _______
(1) பிருதிவிராஜ் சௌகான் : முகமது கோரி (2) முகமது கோரி : பிருதிவிராஜ் சௌகான்
(3) சிம்மராஜ் சௌகான் : முகமது கோரி (4) முகமது கோரி : சிம்மராஜ் சௌகான்

18. இரண்டாம் தரெய்ன் போர் நடைபெற்ற ஆண்டு _______.
(1) 1191 (2) 1192 (3) 1193 (4) 1194

19. பொருத்துக:
(i) சூரியனார் கோவில் - a) மத்தியப்பிரதேசம்
(ii) தில்வாரா சமணக்கோவில் - b) கோனார்க்
(iii) காந்தர்யா கோவில் - c) பந்தேல்கண்ட்
(iv) கஜூராகோ கோவில - d) அபுகுன்று
(1) (i) - b (ii) - a (iii) - c (iv) - d (2) (i) - c (ii) - a (iii) - d (iv) - b
(3) (i) - c (ii) - a (iii) - b (iv) - d (4) (i) - b (ii) - d (iii) - a (iv) - c

20. ரக்ஷாபந்தன் என்ற மரபு யாருக்கு உரியது?
(1) சோழர்கள் (2) பாலர்கள் (3) ராஜபுத்திரர்கள் (4) அரேபியர்கள்

21. வங்கப்பிரிவினையின் போது பெருமளவில் மக்கள் பங்கேற்ற ரக்ஷாபந்தன் விழாவைத் தொடங்கியவர் _______.
(1) ரவீந்திரநாத் தாகூர் (2) மகிபாலர்
(3) பகத்சிங் (4) பாலகங்காதர திலகர்

22. திபெத்திய பௌத்தத்தை சீர்செய்தவர் _______.
(1) அதிசா (2) சந்த் பார்தை (3) ஜேம்ஸ் டாட் (4) ஆர்.சி.மஜூம்தார்

23. ஓர் இஸ்லாமிய அரசு அரசியல்ரீதியாகவும், மதரீதியாகவும் ஒரே நபரால் ஆளப்பட்டால் அவ்வரசு _______ என்றழைக்கப்பட்டது.
(1) உமையத்து (2) கலீஃபத் (3) அப்பாசித்து (4) எதுவுமில்லை

24. கஜினி மாமூது இந்தியாவின் மீது _______ முறை படையெடுப்பு நடத்தியதாகக் கூறப்படுகிறது.
(1) 11 (2) 13 (3) 15 (4) 17

25. கஜினி மாமூதின் இந்திய படையெடுப்பிற்கு முக்கியக் காரணம் _______.
(1) சிலை வழிபாட்டை ஒழிப்பது
(2) செல்வங்களை சூறையாடல்
(3) இந்தியாவில் இஸ்லாமை பரப்புவது
(4) இந்தியாவில் ஒரு முஸ்லீம் அரசை நிறுவுவது

26. மாமூது கஜினியால் தோற்கடிக்கப்பட்ட பஞ்சாபின் ஷாகி வம்ச அரசர் _______.
(1) ஆனந்தபாலர் (2) ஜெயபாலர் (3) மகிபாலர் (4) தருமபாலர்

27. முகமது பின் காசிம் தோற்கடித்த சிந்து மன்னன் _______.
(1) தாகீர் (2) சுல்தான் (3) முகமது கோரி (4) பீமதேவர்

www.kalvinews.com

28. சிந்துவின் தலைநகராக இருந்தது _______

(1) கன்னோஜ் (2) அரோர் (3) தானேஸ்வர் (4) நாகர்கோட்

29. இந்தியர்களிடமிருந்து மேலைநாட்டவரும், அரேபியரும் கற்றுக் கொண்ட விளையாட்டு_______.

(1) கபடி (2) கைப்பந்து (3) சதுரங்கம் (4) ஹாக்கி

30. கஜினி மாமூது புனித நகரமான மதுராவைக் கொள்ளையடித்த ஆண்டு _______.

(1) 1018 (2) 1019 (3) 1020 (4) 1021

31. "டெல்லியின் முதல் சுல்தான்" என தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர் _______.

(1) குத்புதீன் ஐபக் (2) கஜினி மாமூது (3) அல்ப்-டஜின் (4) சபக்டிஜின்

32. இந்தியாவின் மீதான கஜினி மாமூதின் இறுதி படையெடுப்பு _______.

(1) புனிதநகர் மதுராவில் கொள்ளையடிப்பு (2) அன்கில்வாட் நகரை சூறையாடியது
(3) தானேஸ்வர் நகரை சூறையாடியது (4) சோமநாதபுரம் கோவில் கொள்ளையடிப்பு

33. ராஜபுத்திரர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்திய போர் _______.

(1) முதல் தரெய்ன் போர் (2) இரண்டாம் தரெய்ன் போர்
(3) மூன்றாம் தரெய்ன் போர் (4) நான்காம் தரெய்ன் போர்

34. _______ மீது ஆதிக்கம் நிறுவவே மும்முனைப் போராட்டம் நடைபெற்றது.

(1) குஜராத் (2) பந்தேல்கண்ட் (3) கன்னோஜ் (4) அரோர்

35. இந்தியாவில் முதல் இஸ்லாமியப் பேரரசை உருவாக்கியவர் _______.

(1) முகமது கோரி (2) கஜினி மாமூது (3) குத்புதீன் ஐபக் (4) அல்ப்-டஜின்

36. கஜினி எனும் ஒரு சிறிய அரசு அமைந்திருந்த இடம் _______.

(1) மங்கோலியா (2) துருக்கி (3) பாரசீகம் (4) ஆப்கானிஸ்தான்

37. ஆனந்தபாலர், மாமூது கஜினியால் தோற்கடிக்கப்பட்ட இடம் _______.

(1) தரெய்ன் (2) சாகம்பரி (3) வைகிந்த் (4) அரோர்

38. ஆஜ்மீர் நகரத்தை நிர்மாணித்தவர் _______.

(1) குத்புதீன் ஐபக் (2) முகமது கோரி (3) கஜினி மாமூது (4) சிம்மராஜ்

39. இஸ்லாமைத் தோற்றுவித்தவர் _______.

(1) முகமது நபி (2) முகமது அலி (3) கஜினி மாமூது (4) முகமது பின் காசிம்

40. மெக்கா அமைந்துள்ள இடம் _______.

(1) ஆப்கானிஸ்தான் (2) அரேபியா (3) குவைத் (4) துருக்கி

41. சௌகான் வம்சாவளியின் கடைசி அரசன் _______.

(1) சிம்மராஜ் சௌகான் (2) பிருதிவிராஜ் சௌகான்
(3) தேவராஜ் சௌகான் (4) பீமராஜ் சௌகான்

42. மகிபாலரின் இறப்பால் பால வம்சம் வீழ்ச்சியுற்று, _______ வம்சம் உருவானது.

(1) சௌகான் (2) பரமாரர் (3) சேனா (4) சந்தேலர்

www.kalvinews.com

43. மக்களால் அரசராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் _______

(1) கோபாலர் (2) தர்மபாலர் (3) தேவபாலர் (4) முதலாம் மகிபாலர்

44. ரக்ஷாபந்தன் என்பது _______ உறவு தொடர்பான ஒரு விழாவாகும்.

(1) நண்பர்கள் (2) சகோதர (3) சமூகம் (4) சமயம்

45. சிந்துவை அரேபியர்கள் கைப்பற்றிய ஆண்டு _______.

(1) கி.பி.710 (2) கி.பி.711 (3) கி.பி.712 (4) கி.பி.713

46. பாலர்களின் கலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) மேற்கிந்திய கலை (2) கிழக்கிந்திய கலை

(3) தெற்கத்திய கலை (4) வடக்கத்திய கலை

47. பாலர்கள் _______ மதத்தை பின்பற்றியராவர்.

(1) மகாயான பௌத்தம் (2) ஹீனயான பௌத்தம்

(3) இஸ்லாம் (4) கிறிஸ்தவம்

48. அபுகுன்றின் மேலுள்ள சமணக்கோவிலில் உள்ள கூடத்தில் _______ பொதுமைய வட்டங்களைக் கொண்ட குவிமாடம் உள்ளது.

(1) 10 (2) 11 (3) 12 (4) 13

49. வங்கப்பிரிவினை நடைபெற்ற ஆண்டு _______.

(1) 1900 (2) 1903 (3) 1905 (4) 1910

50. ராஜபுத்திர ஓவிய பாணிகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) இந்துஸ்தானி (2) ராஜஸ்தானி (3) மேற்கத்திய கலை (4) தெற்கத்திய கலை

51. இந்தியாவில் இஸ்லாமியர்களின் காலக்கட்டம் எப்போதிலிருந்து தொடங்கியது?

(1) கி.பி 712 **(2) கி.பி 1200** (3) கி.மு1200 (4) கி. மு 712

52. "ராஜ்புத்"என்னும் சொல் _______ லிருந்து பெறப்பட்டது .

(1) "ராஜ்புத்ர" எனும் வடமொழி **(2) "ராஜ்புத்ர" எனும் சமஸ்கிருத மொழி**

(3) "ராஜ்புத்ர" எனும் அரபு மொழி (4) "ராஜ்புத்ர" எனும் ஸ்பானிய மொழி

53. **கூற்று** : (அ) "ஜேம்ஸ் டாட்" என்பவர் கீழ்த்திசைப் புலமையாளர்

**கூற்று** : (ஆ) கி.பி.(பொ. ஆ) 1829 இல் 36 ராஜபுத்திர அரச குலங்களைப் பட்டியலிட்டுள்ளார்.

(1) 'அ 'சரி 'ஆ' தவறு (2) 'அ' மற்றும் 'ஆ' இரண்டும் தவறு

(3) 'அ' தவறு 'ஆ' சரி **(4) 'அ' மற்றும் 'ஆ' இரண்டும் சரி**

54. வட இந்திய பிரதிகார அரசர்களை வரிசைப்படுத்துக

**(1) நாகபட்டர், வத்சராஜா, இரண்டாம் நாகபட்டர்,ராமபத்ரா, மிகிரபோஜா.**

(2) மிகிரபோஜா, இரண்டாம் நாகபட்டர்,ராமபத்ரா, நாகப்பட்டர், வத்சராஜா

(3) இரண்டாம் நாகபட்டர், ராமபத்ரா, மிகிரபோஜா, நாகப்பட்டர், வத்சராஜா

(4) நாகப்பட்டர், மிகிரபோஜா, வத்சராஜா, இரண்டாம் நாகபட்டர், ராமபத்ரா

www.kalvinews.com

55. **கூற்று :**

(அ) பால அரச வம்சத்தின் சிறந்த அரசர்கள், தர்மபாலர், தேவபாலர், முதலாம் மகிபாலர்.

(ஆ) இவர்களின் ஆட்சிகாலம் வங்காள வரலாற்றின் சிறப்பு மிக்க ஒளிரும் அத்தியாயங்கள் நிலவியது .

(1) 'அ' சரி 'ஆ' தவறு (2) 'அ' மற்றும் 'ஆ' இரண்டும் தவறு

(3) 'அ' தவறு 'ஆ' சரி **(4) 'அ' மற்றும் 'ஆ' இரண்டும் சரி**

56. ரக்ஷாபந்தன் விழா வங்காளத்தில் தொடங்கப்பட்ட ஆண்டு _______.

**(1) 1905** (2) 1906 (3) 1907 (4)1908

57. **பொருத்துக.**

i) பிரதிகாரர்கள் - a) ராஜேந்திர சோழன்

ii) பாலர்கள் - b) சிம்மராஜ்

iii) தென்னிந்திய அரசர் - c) கோபாலர்

iv) ஆஜ்மீர் நகரம் தோற்றுவித்தவர் - d) நாகப்பட்டர்

(1) i - b ii - a iii - c iv - d (2) i - d ii - c iii - b iv - a

(3) i - c ii - d iii - b iv - a **(4) i - d ii - c iii - a iv - b**

58. ராஜபுத்திர அரசர்களின் கலை மற்றும் கட்டடக்கலையை _______ என்று அழைக்கப்படுகின்றன.

**(1) ராஜஸ்தானி** (2) பாலர்களின் கலை

(3) கிழக்கு இந்தியக்கலை (4) இந்துஸ்தானி

59. **தவறான இணையைக் கண்டறிக:**

(1) மேவார் - உதய்பூர்

(2) ஜெயசால்மர் - ராஜஸ்தான்

**(3) ஜோத்பூர் - தமிழ் நாடு**

(4) புரி - ஹரியானா

60. **கூற்று (I):** அரேபிய அறிஞர்கள் 0 முதல் 9 வரையிலான எண்களை, இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர்.

**கூற்று (II):** பூஜ்யத்தின் முக்கியத்துவத்தை இந்தியாவிலிருந்து கற்றுக்கொள்ளவில்லை.

(1) I சரி (2) II சரி (3) I மற்றும் II சரி **(4) I சரி II தவறு**

61. கி.பி.1001 ஆம் ஆண்டு கஜினி மாமூதுவால் தோற்கடிக்கப்பட்ட ஷாகி அரசர் _______.

**(1) ஜெயபாலர்** (2) ஆனந்த பாலர் (3) ராஜ்யபாலர் (4) தர்மபாலர்

62. **பொருத்துக:**

i) ஜெயபாலர் - a) 1024

ii) ஆனந்தபாலர் - b) 1001

iii) ராஜ்ய பாலர் - c) 1008

iv) பீமதேவர் - d) 1018

(1) i - b ii - a iii - c iv - d (2) i - d ii - c iii - b iv - a

(3) i - c ii - d iii - b iv - a **(4) i - b ii - c iii - d iv - a**

www.kalvinews.com

63. முதலாம் தரெய்ன் போர் நடைபெற்ற ஆண்டு ______.

**(1) 1191** (2) 1192 (3) 1193 (4) 1194

64. முதலாம் தரெய்ன் போர் யார் - யாருக்கும் இடையில் நடைபெற்றது.

(1) பிருதிவிராஜ் சௌகான் - முகமது கஜினி

**(2) பிருதிவிராஜ் சௌகான் - முகமது கோரி**

(3) முதலாம் போஜா - ஜெயபாலர்

(4) முதலாம் போஜா - சந்திர தேவர்

65. இந்தியாவில் முதல் இஸ்லாமிய அரசு உறுதியாக நிறுவப்பட்ட இடம் ______.

(1) டெல்லி (2) கன்னோஜ் (3) ஜெய்ப்பூர் **(4) ஆஜ்மீர்**

66. ஆஜ்மீர் நகரைத் தோற்றுவித்தவர் ______. (NMMS-2020-2021)

(1) மகிபாலர் (2) சிம்மராஜ்

(3) சந்த் பார்தை (4) பிருதிவிராஜ் சௌகான்

67. பொருத்துக. [NMMS-2016]

(a) தர்மபாலர் - (i) சமஸ்கிருத கல்லூரி

(b) இராஜபோஜ் - (ii) சந்த் பார்தை

(c) பிரித்திவிராஜ் ரசோ - (iii) புவனேஸ்வர்

(d) லிங்கராஜ கோயில் - (iv) நாளந்தா பல்கலைக்கழகம்

(1) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii) (2) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

(3) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii) (4) (a)-(i), (b)-(iv), (c)-(ii), (d)-(iii)

68. இராசபுத்திரர்கள் காலத்தில் கோயிற் கட்டிடக் கலையின் சிறப்பான எடுத்துக் காட்டாக திகழ்வது ______. [NMMS-2016]

(1) தில்வாரா கோயில் (2) கடற்கரை கோயில்

(3) ஆயிரம் தூண் ஆலயம் (4) எலிஃபண்டா குகைக் கோவில்

69. ______ எழுதிய 'இந்திய வரலாறு' என்னும் நூலில் முகமது கஜினியின் பதினேழு படையெடுப்புகளைப் பற்றி குறிப்பிடுகிறார். (NMMS-2018)

(1) பிரம்ம குப்தர் (2) சர் ஹென்றி எலியட்

(3) மானகா (4) பஹலா

www.kalvinews.com

## விடைகள்:

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (3) | **16** | (4) | **31** | (1) | **46** | (2) | **61** | (1) |
| **2** | (1) | **17** | (1) | **32** | (4) | **47** | (1) | **62** | (4) |
| **3** | (2) | **18** | (2) | **33** | (2) | **48** | (2) | **63** | (1) |
| **4** | (3) | **19** | (4) | **34** | (3) | **49** | (3) | **64** | (2) |
| **5** | (1) | **20** | (3) | **35** | (1) | **50** | (2) | **65** | (4) |
| **6** | (4) | **21** | (1) | **36** | (2) | **51** | (2) | **66** | (2) |
| **7** | (2) | **22** | (1) | **37** | (3) | **52** | (2) | **67** | (3) |
| **8** | (1) | **23** | (2) | **38** | (4) | **53** | (4) | **68** | (1) |
| **9** | (1) | **24** | (4) | **39** | (1) | **54** | (1) | **69** | (2) |
| **10** | (3) | **25** | (2) | **40** | (2) | **55** | (4) | | |
| **11** | (4) | **26** | (1) | **41** | (2) | **56** | (1) | | |
| **12** | (4) | **27** | (1) | **42** | (3) | **57** | (4) | | |
| **13** | (2) | **28** | (2) | **43** | (1) | **58** | (1) | | |
| **14** | (1) | **29** | (3) | **44** | (2) | **59** | (3) | | |
| **15** | (2) | **30** | (1) | **45** | (3) | **60** | (4) | | |

www.kalvinews.com



# 3. தென்னிந்தியப் புதிய அரசுகள் பிற்காலச் சோழர்களும் பாண்டியர்களும்

**தொகுப்பு:**
**திரு.க.பிரகாஷ்,M.Sc.,B.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**அரசு மேல்நிலைப்பள்ளி, தினைக்குளம்,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திருமதி.பொ,ஜோஷிபா ரோசிலின் M.A.,B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியை (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணபதிபாளையம்,**
**ஈரோடு மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

### பிற்காலச் சோழர்கள்

- சோழ அரசில் நீர்ப்பாசன அமைப்பு முறை விரிந்து பரந்தது.

### சோழர்கள் ஆட்சியின் புத்தெழுச்சி

- பண்டைய சோழ அரசு காவிரி ஆற்றின் கழிமுகப் பகுதியை மையப்பகுதியாக கொண்டிருந்தது.
- சோழர்களின் தலைநகராக உறையூர் (திருச்சி) ஆகும். கரிகாலன் ஆட்சிக்காலத்தில் இவ்வரசு சிறப்பான இடத்தை வகித்தது.
- 9ஆம் நூற்றாண்டில் காவிரிக்கு வடக்கே ஒரு சிறு பகுதியை விஜயாலயன் சோழ வம்சத்தை மீட்டெழச் செய்தார். அவர் தஞ்சாவூரைக் கைப்பற்றி அதை தனது தலைநகராக ஆக்கினார்.
- பிற்காலத்தில் ராஜேந்திரனும் அவருக்குப் பின்வந்தோரும் கங்கை கொண்ட சோழபுரத்தை தலைநகராகக் கொண்டு சோழப் பேரரசை ஆட்சி செய்தனர்.
- முதலாம் ராஜராஜன் கி.பி. (985-1014) சோழப் பேரரசின் மாபெரும் வல்லமை பெற்ற பேரரசர் ஆவார். இவர் தஞ்சாவூரில் உள்ள புகழ் பெற்ற பிரகதீஸ்வரர் கோவிலை (ராஜராஜேஸ்வரம் கோவில்) கட்டினார். முதலாம் ராஜராஜன் ஆட்சிக்காலத்தில் சோழர்களுக்கும் கீழை சாளுக்கியர்களுக்கும் இடையிலான திருமண உறவு தொடங்கியது.
- முதலாம் ராஜராஜனின் மகளான குந்தவை சாளுக்கிய இளவரசர் விமலாதித்தனை மணந்தார்.
- விமலாதித்தனின் மகனான ராஜராஜ நரேந்திரன், முதலாம் ராஜேந்திரனின் மகளான அம்மங்கா தேவியை மணந்தார்.
- ராஜராஜ நரேந்திரனின் மகனே முதலாம் குலோத்துங்கன் ஆவார்.
- முதலாம் ராஜராஜனின் மகனான முதலாம் ராஜேந்திரன் கி.பி. (1014 - 1044) தன்னை **கங்கைகொண்டான்** என பிரகடனப்படுத்திக் கொண்டார். முதலாம் ராஜேந்திரன் வட இந்தியப் போர்களில் பெற்ற வெற்றியின் நினைவாக கங்கைகொண்ட சோழபுரம் கோவில் எழுப்பப்பட்டது. தெற்கு சுமத்ராவை கைப்பற்ற அவரது கடற்படை துணைபுரிந்தது.
- கடற்பகுதிகளின் மீதான சோழர்களின் கட்டுப்பாடு, கடல் கடந்த வணிகம் செழித்தோங்க உதவியது.

www.kalvinews.com

**சோழப் பேரரசின் சரிவு**

- விஜயாலயன் வழிவந்த சோழ வம்சத்தின் கடைசி அரசனும், வீர ராஜேந்திரனின் மகனுமான அதிராஜேந்திரன் உள்நாட்டுக் கலகம் ஒன்றில் கொல்லப்பட்டார். இதனால் கீழைச் சாளுக்கிய இளவரசரான ராஜேந்திர சாளுக்கியன் சோழ அரியணையைக் கைப்பற்றினார்.
- முதலாம் குலோத்துங்கன் எனும் பெயரில் சாளுக்கிய சோழ வம்சத்தின் ஆட்சியை அவர் தொடங்கி வைத்தார்.
- கி.பி. 1279இல் பாண்டிய அரசன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் - மூன்றாம் ராஜேந்திர சோழனைத் தோற்கடித்த பாண்டிய ஆட்சியை இன்றைய தமிழகத்தில் நிறுவினார். இத்துடன் சோழ வம்சத்தின் ஆட்சி முடிவுற்றது.

**பிற்காலச் சோழர்களின் நிர்வாக முறை:**

- மத்திய அரசின் நிர்வாகம் அரசரின் நேரடிக்கட்டுப்பாட்டில் இருந்தது.
- அரசரின் ஆணைகள் அவருடைய அதிகாரிகளால் பனையோலையில் எழுதப்பட்டன அல்லது கோவில் சுவர்களில் பொறிக்கப்பட்டன.
- அரசர் தனது மூத்த மகனை தனது வாரிசாகத் தெரிவு செய்தார்.
- சோழ அரசரின் மூத்த மகன் யுவராஜன் என அழைக்கப்பட்டான். சோழ பேரரசில் யுவராஜாக்கள் நிர்வாக பயிற்சி பெறுவதற்காக மண்டல ஆளுநர்களாக பணியமர்த்தப்பட்டனர்.
- சோழப் பேரரசு : மண்டலங்கள் - நாடுகள் - கிராமம் (கூற்றம்).
- சோழர்களின் நிர்வாக அமைப்பின் மிகச்சிறிய அலகு கிராமம் ஆகும்.

**உள்ளாட்சி நிர்வாகம்**

- உள்ளாட்சி நிர்வாகமானது ஊரார், சபையோர், நகரத்தார், நாட்டார் எனும் அமைப்புகளின் மூலம் செயல்பட்டது.
- வேளாண்மையின் விரிவாக்கத்தினால், கிராமப்புறங்களில் அதிக எண்ணிக்கையில் விவசாயிகளின் குடியிருப்புகள் உருவாகின. அவை ஊர்கள் என அறியப்பட்டன.
- பிராமணர், கிராமங்களைச் சேர்ந்த சபையோர் பொது மற்றும் நிதி நிர்வாகத்தையும், நீதி வழங்குதலையும் மேற்கொண்டனர்.
- வணிகர்களின் குடியிருப்புகளை நகரத்தார் நிர்வகித்தனர்.
- நாடுகளில் நாட்டார் எனும் அமைப்பு நாடோடு தொடர்புடைய பூசல்களையும், ஏனைய சிக்கல்களையும் தீர்த்து வைத்தது.
- ஊர், சபை, நகரம், நாடு ஆக்யவற்றில் இருந்த மன்றங்கள் மற்றும் பல்வேறு குழுக்கள் மூலம் நீர்ப்பாசனம், சாலைகள், கோவில்கள், தோட்டங்கள், வரிவசூல், மத விழாக்களை நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டன.

**உத்திரமேரூர் கல்வெட்டுகள்**

- சோழப் பேரரசில் இன்றைய காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் பிராமணர்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட ஒரு பிரம்மதேய கிராமம் ஆகும். இக்கிராமத்தில் கிராம சபைக்கான உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது குறித்த கல்வெட்டுகள் உள்ளன.
- ஒவ்வொரு குடும்பிலிருந்தும் (வார்டு) உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். மொத்தம் 30 குடும்புகள் இருந்தன.

www.kalvinews.com

- போட்டியிடும் ஆடவர் 35 - 70 வயது வரம்புக்குள் இருத்தல் வேண்டும்.
- வேதநூல்களிலும், சமய நூல்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பதும், நில உரிமையாளராகவோ, சொந்த வீடு உடையவராகவோ இருத்தல் அடிப்படைத் தகுதியாக இருந்தது.
- உத்திரமேரூர் பொறிப்புகள் கிராம நிர்வாகம் குறித்த விவரங்களை வழங்குகின்றன.

**வருவாய்**

- சோழ அரசின் பொது வருவாய் முக்கியமாக நிலவரி மூலம் பெறப்பட்டது.
- நிலவரியானது **காணிக்கடன்** என அழைக்கப்பட்டது.
- பெரும்பாலும் வரியானது, **மகசூலில் மூன்றில் ஒரு பகுதி தானியமாக** வசூலிக்கப்பட்டது.

**நிலம் சார்ந்த சமூக அமைப்பு**

- சோழ அரசர்கள் வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்களை அரசு அதிகாரிகளுக்கும், பிராமணர்களுக்கும், கோவில்கள் மற்றும் மத நிறுவனங்களுக்கும் கொடையாக வழங்கினர். இவை **தேவதானக் கிராமங்கள்** என்றழைக்கப்பட்டன.
- சோழ அரசில் சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் பள்ளிச்சந்தம் என அழைக்கப்பட்டது. வேளாண் வகை என்னும் நிலங்களின் உடைமையாளர்கள் வேளாளர் என அழைக்கப்பட்டனர்.
- மொத்த விளைச்சலில் வேளாண்வகை நில உடைமையாளர்கள், மேல்வாரத்தை (விளைச்சலின் பெரும்பகுதி) பெற்றனர். உழுகுடிகள் கீழ்வாரத்தை (விளைச்சலின் சிறுபகுதி) பெற்றனர்.
- ‘அடிமை மற்றும் பணி செய் மக்கள்’ என்போர் சமுதாயத்தின் கீழ்நிலையில் இருந்தனர்.
- போர் செய்வோரும், வணிகர்களும் சமுதாயத்தின் இடைநிலையில் இருந்தனர்.

**நீர்ப்பாசனம்**

- சோழர்கள் நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர்.
- கங்கைகொண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட பதினாறு மைல் நீளம் கொண்ட ஏரிக்கரைத் தடுப்பணை மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- நீர்ப்பாசனத்தில் தேவைப்படும் நீரை கொண்டுவருவது வாய்க்கால்கள் எனவும், தேவைக்கு அதிகமான நீரை வெளியேற்றுவது வடிகால் எனவும் அழைக்கப்படும்.
- ஊர்மக்கள் அனைவருக்கும் பொதுவான வாய்க்கால் ‘**ஊர் வாய்க்கால்**’ என்றழைக்கப்பட்டது.

**மதம்**

- சோழர்கள் சைவத்தின் மீது மிகுதியான பற்றுக் கொண்டவராவர். சிவபெருமானின் திருவிளையாடல்கள் சைவ அடியார்களான நாயன்மார்களால் பாடல்களாக இயற்றப்பட்டுள்ளன. இவை நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கப்பட்டு “சைவ திருமறைகள்” என அழைக்கப்படுகின்றன.

**கோவில்கள்**

- சோழர்கள் கட்டிய பிரம்மாண்டமான கோவில்கள் கட்டப்பட்டன.
- தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களிலுள்ள கோவில்கள் சோழர்களின் கலைகளான கட்டடங்கள், சிற்பங்கள், செப்புச்சிலைகள், ஓவியங்கள் மற்றும் படிமவியல் ஆகியவற்றின் களஞ்சியமாக உள்ளன.

www.kalvinews.com

**சோழர்களின் கல்விப்பணி**

- முதலாம் ராஜேந்திரன் எண்ணாயிரம் (விழுப்புரம் மாவட்டம்) எனும் கிராமத்தில் வேதக்கல்லூரி ஒன்றை அமைத்தார். பின்பு வந்த சோழ அரசர்கள் கி.பி. 1048இல் புதுச்சேரிக்கு அருகில் திருபுவனை எனும் ஊரிலும், கி.பி. 1067இல் செங்கல்பட்டு மாவட்டம் திருமுக்கூடலிலும் வேதக் கல்லூரிகளை நிறுவினார்கள்.
- உன்னதமான இலக்கியங்களான "பெரியபுராணமும் கம்பராமாயணமும்" சோழர் காலத்தைச் சேர்ந்தவையாகும்..

**வணிகம்**

- சோழர் அரசில் கடல்சார் வணிகம் செய்தோர் அஞ்சு - வண்ணத்தார் எனவும், உள்நாட்டு வணிகர் செய்தோர் "மணி - கிராமத்தார்" எனவும் அழைக்கப்பட்டனர்.
- "அஞ்சு – வண்ணத்தார்" என்பது மேற்கு ஆசியர்கள், அராபியர்கள், யூதர்கள், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோரை உள்ளடக்கியது. அஞ்சு வண்ணத்தார் ஐநூற்றுவர் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்கள் மேற்கு கரையோர துறைமுக நகரங்களில் குடியிருந்தனர். இந்த அமைப்பு தென்கிழக்காசிய நாடுகளை உள்ளடக்கிய கடல்சார்ந்த வணிக நடவடிக்கைகளை செயல்படுத்தியது.
- மணி - கிராமத்தார் மற்றும் அஞ்சு - வண்ணத்தார் அமைப்புகள் பிற்காலத்தில் ஒன்றிணைக்கப்பட்டு 'ஐநூற்றுவர்' அல்லது 'திசை - ஆயிரத்து ஐநூற்றுவர்' என்றழைக்கப்பட்டன. அவை கர்நாடக மாநிலம் ஐகோலில் இருந்த தலைமை அமைப்புகளின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டன.
- தென்கிழக்காசிய நாடுகளோடு மேற்கொள்ளப்பட்ட கடல் கடந்த வணிகத்தின் மூலம் யானைத் தந்தங்கள், பவளம், சங்குகள், ஒளிபுகும் மற்றும் ஒளிபுகா கண்ணாடிகள், பாக்கு, ஏலம், வர்ணப்பட்டு நூல்களோடு நெய்யப்பட்ட பருத்தி இழைத் துணிகள் ஆகியவை இறக்குமதி செய்தனர்.
- சந்தனம், கருங்காலிக் கட்டைகள், சுவையூட்டும் பொருள்கள், விலையுயர்ந்த ஆபரணக் கற்கள், மிளகு, எண்ணெய், நெல், தானியங்கள், உப்பு ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டன.

**பிற்காலப் பாண்டியர்கள்:**

- 4 ம் நூற்றாண்டின் மூன்று பழமையான அரச வம்சங்களுள் ஒன்று பாண்டியர் வம்சம்.
- கொற்கை முத்துக் குளித்தலோடு தொடர்புடைய துறைமுகம் ஆகும். இது தொடக்க காலத்தில் பாண்டியர்களின் தலைநகராமாக இருந்தது. பிற்காலத்தில் மதுரைக்கு இடம் பெயர்ந்திருக்கலாம்.
- சங்க கால பாண்டியர்களின் கீழ் **மதுரை நகர்** மாபெரும் **பண்பாட்டு மையமாக** திகழ்ந்தது.

**பாண்டிய அரசு மீண்டெழுதல்**

- கி.பி. ஆறாம் நூற்றாண்டில் **கடுங்கோன் எனும் பாண்டிய அரசன் களப்பிரர்களிடமிருந்து** பாண்டியர்களின் பகுதிகளை மீட்டார்.
- அரிகேசரி மாறவர்மன் எனும் வலிமைமிக்க முதல் பாண்டிய அரசர் கி.பி.642இல் அரியணை ஏறினார். இவர் பல்லவ அரசர்கள் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோரின் சமகாலத்தவர் ஆவார். அரிகேசரி மாறவர்மன் சமணர்களை துன்புறுத்திய கூன் பாண்டியனே என அடையாளப்படுத்தப்படுகிறார். சைவத் துறவியான திருஞானசம்பந்தர்

www.kalvinews.com

அரிகேசரியை சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். மதம் மாறிய அரிகேசரி சுமார் 8000 சமணர்களை கழுவேற்றியதாகக் கூறப்படுகிறது.

- அரிகேசரிக்குப் பின் பாண்டியவர் அரச வம்சத்தின் மகத்தான மன்னனான **ஜடில பராந்தக நெடுஞ்சடையன் (முதலாம் வரகுணன்)** 756 - 815 ஆட்சிப் பொறுப்பேற்றார். இவரே **வேள்விக்குடி செப்பேடுகளின் கொடையாளி** ஆவார்.
- முதலாம் பராந்தகனிடம் தோல்வியடைந்த பாண்டிய அரசன்; இரண்டாம் ராஜசிம்மன் 920 - இல் நாட்டைவிட்டு வெளியேறினார்.

**பிற்காலப் பாண்டியர்களின் எழுச்சி**

- 13ஆம் நூற்றாண்டில் பாண்டியர் மட்டுமே எழுச்சி பெற்ற தமிழ் அரச வம்சமாக விளங்கினர்.
- காயல் அவர்களின் முக்கிய துறைமுகமாக இருந்தது.
- பாண்டியர் ஆட்சியின்போது வெனிஸ் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற பயணியான **மார்கோபோலோ இரண்டு முறை (1288, 1293) காயலுக்கு வருகை புரிந்தார்**. காயல் துறைமுகம் அரேபிய, சீனக்கப்பல்களால் நிரம்பியிருந்தது என்று மார்க்கோ போலோ கூறுகிறார். பாண்டிய அரசு செல்வச் செழிப்புமிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும் என புகழாரம் சூட்டுகிறார்.
- மார்க்கோபோலோ தனது பயணக் குறிப்புகளில் சதி (உடன்கட்டை ஏறுதல்) மற்றும் அரசர்களின் பலதார மணத்தையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**சடையவர்மன் சுந்தரபாண்டியன்**

- இரண்டாம் பாண்டிய பேரரசின் புகழ்பெற்ற அரசர் சடையவர்மன் (ஜடாவர்மன்) சுந்தரபாண்டியன் (1251-1268) ஆவார். இவர் ஹொய்சாளர்களை கட்டுக்குள் வைத்திருந்தார். கண்ணனூர் எனும் இடத்தில் நடைபெற்ற போரில் சுந்தரபாண்டியன் மாளவ அரசர் வீரசோமேஸ்வரரைத் தோற்கடித்தார்.
- சுந்தரபாண்டியன் ஆட்சியின் போது அவருடன் விக்கிரம பாண்டியன், வீரபாண்டியன் ஆகியோர் கூட்டு அரசர்களாக ஆட்சி செய்தனர்.
- சுந்தரபாண்டியனுக்குப் பிறகு மாறவர்மன் குலசேகரன் வெற்றிகரமாக 40 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவருக்கு வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் என இரு மகன்கள் இருந்தனர். வீரபாண்டியன் கூட்டு அரசராக நியமிக்கப்பட்டார். இதனால் தந்தை மீது வெறுப்புற்ற சுந்தரபாண்டியன் மாறவர்மன் குலசேகரனைக் கொன்றார். பின்பு சுந்தரபாண்டியன் டெல்லி சென்று அலாவுதீன் கில்ஜியின் பாதுகாப்பில் அடைக்கலமானார். மாலிக்கபூரின் தென்னிந்திய படையெடுப்புக்கு இதுவே காரணம் ஆகும். மதுரையில் டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்பட்ட ஒரு முஸ்லீம் அரசு உருவாக்கப்பட்டது.

**பிற்காலப் பாண்டியர்கள் ஆட்சி அமைப்பும் சமூகமும்:**

- **மதுரை பொதுமக்களால் கூடல் என்றே போற்றப்பட்டு வந்தது**. பாண்டிய மன்னர்கள் பாரம்பரியமாகக் **"கூடல் கோன்" , "கூடல் காவலன்"** என மதிக்கப்பட்டனர். பாண்டியர்கள் அராபிய வணிக, பண்பாட்டு உலகில் அவர்களுக்கு இருந்த தொடர்பின் மூலம் குதிரைகளை இறக்குமதி செய்தனர்.
- பாண்டிய அரசர்கள் **மனு சாஸ்திரத்தின்படி** தான் ஆட்சி செய்வதாகக் கூறினார்.பாண்டியர் ஆட்சியில் மங்கலம் அல்லது **சதுர்வேதி மங்கலம்** எனும் **பிராமணர் குடியிருப்புகளை**

www.kalvinews.com

உருவாக்கினர். நிலத்தின் உண்மையான உடைமையாளர்கள் பூமி புத்திரர் அல்லது வேளாளர் என விவரிக்கப்பட்டுள்ளனர்.

- **பாண்டிய அரசில் சமூக மக்கள் ஒன்றிணைந்த மன்றம் என்பது சித்திர மேழி பெரிய-நாட்டார்** என அழைக்கப்பட்டது. **பிரதம மந்திரி, உத்தர மந்திரி என அழைக்கப்பட்டார்**.
- பாண்டிய அரசில் மாணிக்கவாசகர், குலச்சிறையார், மாரன்காரி ஆகியோர் முக்கியமான வரலாற்று ஆளுமைகளாக இருந்தனர். பாண்டிய அரசில் அரசுச் செயலகம் எழுத்து மண்டபம் என அழைக்கப்பட்டது.
- மாறன், ஆதித்தன், தென்னவன், தமிழ்வேள் என்பது படைத்தளபதிகளின் பட்டங்களாகும்.

**நிர்வாகப் பிரிவுகள்**

- பாண்டிய நாடு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. மண்டலங்கள் வள நாடு என்று அழைக்கப்பட்டன. வள நாடுகள் பல நாடுகளாகவும், கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டன.
- நாடுகளை நிர்வகித்தவர்கள் நாட்டார் ஆவார்.
- நாடுகளும், கூற்றங்களும் மங்கலம், நகரம், ஊர், குடி எனும் குடியிருப்புகளைக் கொண்டிருந்தன.
- திருநெல்வேலி மாவட்டம் மானூர் எனும் ஊரில் உள்ள கல்வெட்டு (கி.பி.800) பாண்டிய பேரரசின் கிராம நிர்வாக தொடர்பான செய்திகளைக் கொண்டுள்ளது.
- பாண்டிய மன்னர்கள் அதிக எண்ணிக்கையில் நீர் ஆதாரங்களை உருவாக்கினர்.
- பாண்டிய அரசர்கள் வேத நடைமுறைகளுக்கு ஆதரவு நல்கினர்.
- வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு பாண்டியர் பேராதரவு நல்கினர்.

**கோவில்கள்**

- இடைக்கால, பிற்காலப் பாண்டியர்கள் புதிய கோவில்கள் எதையும் நிர்மானிக்கவில்லை. ஏற்கனவே இருந்த கோவில்களைப் பராமரித்தனர்.
- பெரிய வடிவிலான அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய ஒற்றைக்கல் தூண்கள் இடைக்காலப் பாண்டியர்களின் தனிச்சிறப்பாகும்.

**வணிகம்**

- காயல் துறைமுகத்தில் **மாலிக் உல் இஸ்லாம் ஜமாலுதீன் எனும் அராபிய வணிகரின் வணிக நிறுவனம்** செயல்பட்டது. பாண்டியர்களுக்கு குதிரைகள் எளிதாக கிடைப்பதற்கான வசதிகளை இந்நிறுவனம் செய்து கொடுத்தது. குதிரை வணிகத்தில் ஈடுபட்டவர்கள் **குதிரைச் செட்டிகள்** என அழைக்கப்பட்டனர்.
- பாண்டியர்களின் முக்கிய வணிகத் துறைமுகமான காயல்பட்டினம் தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது. **வணிக பரிமாற்றங்கள் தங்க நாணயங்கள்** மூலம் நடைபெற்றது. **தங்க நாணயங்கள் காசு, கழஞ்சு, பொன் என பலவாறு அழைக்கப்பட்டன.**
- பாண்டியர் காலத்துக் கடல்சார் குதிரை வணிகம் குறித்து மார்க்கோபோலோ, வாசப் ஆகியோரால் குறிப்பிடப்பட்டது.
- 10,000க்கும் மேற்பட்ட குதிரைகள் காயல் மற்றும் பிற இந்தியத் துறைமுகங்களிலும் இறக்குமதியாயின எனவும் அதில் 1400 குதிரைகள் மாலிக் உல் இஸ்லாம் ஜமாலுதீன் பொறுப்பில் இனப்பெருக்கம் செய்து வளர்த்து வந்த குதிரைகளாகும்.
- காயல் துறைமுக குதிரை வணிகத்தில் ஒரு குதிரையின் விலை சராசரியாக சொக்கத் தங்கத்திலான 200 தினார்கள் என வாசப் எழுதுகிறார்.

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்:**

1. பண்டைய சோழ அரசு எந்த ஆற்றின் கழிமுகப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது?
   (1) தாமிரபரணி (2) யமுனை (3) கங்கை (4) காவிரி

2. பிற்கால சோழ வம்சத்தை மீட்டெழச் செய்தவர் _______.
   (1) விஜயாலயன் (2) ராஜேந்திரன்
   (3) முதலாம் ராஜராஜன் (4) குலோத்துங்கன்

3. சோழபேரரசின் மாபெரும் வலிமை பெற்ற பேரரசர் _______.
   (1) விஜயாலயன் (2) ராஜேந்திரன்
   (3) முதலாம் ராஜராஜன் (4) குலோத்துங்கன்

4. தஞ்சாவூரில் உள்ள புகழ் பெற்ற பிரகதீஸ்வரர் கோவிலை நிர்மானித்தவர் _______.
   (1) மூன்றாம் ராஜேந்திரன் (2) முதலாம் ராஜேந்திரன்
   (3) முதலாம் ராஜராஜன் (4) அதி ராஜேந்திரன்

5. முதலாம் ராஜராஜனின் மகன் _______.
   (1) மூன்றாம் ராஜேந்திரன் (2) முதலாம் ராஜேந்திரன்
   (3) முதலாம் ராஜராஜன் (4) அதி ராஜேந்திரன்

6. கங்கைகொண்ட சோழன் எனும் பட்டத்தை சூட்டிக் கொண்டவர் _______.
   (1) முதலாம் ராஜேந்திரன (2) மூன்றாம் ராஜேந்திரன்
   (3) முதலாம் ராஜராஜன் (4) அதி ராஜேந்திரன்

7. முதலாம் ராஜேந்திரன் வட இந்தியப் போர்களில் பெற்ற வெற்றியின் நினைவாக எழுப்பப்பட்டது _______.
   (1) தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம் (2) தாராசுரம் கோவில்
   (3) மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் (4) கங்கைகொண்ட சோழபுரம்

8. தெற்கு சுமத்ராவை கைப்பற்றியவர் _______.
   (1) முதலாம் ராஜேந்திரன் (2) வீர ராஜேந்திரன்
   (3) முதலாம் ராஜராஜன் (4) அதி ராஜேந்திரன்

9. ஸ்ரீவிஜயத்தை கைப்பற்ற ராஜேந்திர சோழனுக்கு உதவியது எது?
   (1) யானைப்படை (2) காலாட்படை (3) கப்பற்படை (4) குதிரைப்படை

10. விஜயாலயன் வழிவந்த சோழ வம்சத்தின் கடைசி அரசன் _______.
   (1) வீர ராஜேந்திரன் (2) அதிராஜேந்திரன் (3) ராஜராஜன் (4) முதலாம் ராஜேந்திரன்

11. முதலாம் குலோத்துங்கன் எந்த அரச வம்சத்தை சேர்ந்தவர்?
   (1) சாளுக்கிய - சோழன் (2) சாளுக்கிய - பாண்டியன்
   (3) சாளுக்கிய - சேரன் (4) இவற்றுள் எதுவுமில்லை

12. மூன்றாம் ராஜேந்திர சோழனைத் தோற்கடித்த பாண்டிய அரசன் _______.
   (1) ஜடில பராந்தக நெடுஞ்சடையன் (2) அரிகேசரி மாறவர்மன்
   (3) முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியன் (4) கடுங்கோன்

www.kalvinews.com

13. சோழ பேரரசில் யுவராஜாக்கள் எந்த பணிக்கு பணியமர்த்தப்பட்டனர்?
(1) கிராம அதிகாரி (2) அமைச்சர் (3) படைத்தளபதி (4) மண்டல ஆளுநர்

14. சோழர்களின் நிர்வாகத்தில் மிகச்சிறிய அலகு _______.
(1) பேரரசு (2) மண்டலங்கள் (3) நாடுகள் (4) கூற்றம்

15. பிராமணர்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட ஒரு பிரம்மதேய கிராமம் _______.
(1) புதுக்கோட்டை (2) உத்திரமேரூர் (3) செங்கல்பட்டு (4) கீழடி

16. சோழ அரசில் காணிக்கடன் என்பது _______.
(1) நிலவரி (2) வணிகவரி (3) சாலைவரி (4) எதுவுமில்லை

17. தேவைப்படும் நீரை கொண்டு வருவது _______.
(1) வடிகால் (2) வாய்க்கால் (3) கண்மாய் (4) எதுவுமில்லை

18. சைவத் திருமுறையை தொகுத்தவர் _______.
(1) அப்பர் (2) சுந்தரர் (3) திருஞானசம்பந்தர் (4) நம்பியாண்டர் நம்பி

19. சோழர்களின் கட்டடக்கலைக்கான எடுத்துக்காட்டை காணும் இடம் _______.
(1) கண்ணாயிரம் (2) உறையூர் (3) காஞ்சிபுரம் (4) தஞ்சாவூர்

20. சோழர் கால இலக்கியங்கள் _______.
(1) பெரியபுராணம் (2) கம்பராமாயணம் (3) 1 மற்றும் 2 (4) எதுவுமில்லை

21. சோழ அரசில் சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது?
(1) பிரம்மதேயம் (2) பள்ளிச்சந்தம் (3) தேவதானம் (4) வேளாண்நிலம்

22. எண்ணாயிரத்தில் வேதக் கல்லூரியை நிறுவியவர் _______.
(1) முதலாம் ராஜேந்திரன் (2) வீர ராஜேந்திரன்
(3) முதலாம் ராஜராஜன் (4) அதி ராஜேந்திரன்

23. மேற்கு ஆசியர்கள், அரேபியர், யூதர்கள், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழு _______.
(1) அஞ்சு வண்ணத்தார் (2) மணி - கிராமத்தார்
(3) வாணிப செட்டிகள் (4) எதுவுமில்லை

24. _______ அஞ்சு-வண்ணத்தார் என அறியப்பட்டனர்.
(1) குதிரை வணிகர் (2) ஜமீன்தார்
(3) கடல்சார்வணிகர் (4) உள்நாட்டு வணிகர்

25. சோழ அரசில் உள்நாட்டு வணிகர்கள் எவ்வாறு அறியப்பட்டனர்?
(1) மணி - கிராமத்தார் (2) செட்டிகள்
(3) ஆறு - வண்ணத்தார் (4) அஞ்சு - வண்ணத்தார்

26. முத்துக்குளித்தலோடு தொடர்புடைய துறைமுகம் _______.
(1) காயல் (2) கொற்கை (3) உறையூர் (4) சென்னை

www.kalvinews.com

27. பாண்டியர்களின் தலைநகரம் _______.
(1) மதுரை (2) தஞ்சாவூர் (3) திருச்சி (4) இராமநாதபுரம்

28. களப்பிரர் ஆட்சியை முடித்த பாண்டிய அரசர் _______.
(1) சுந்தரபாண்டியன் (2) நெடுஞ்சடையன் (3) அரிகேசரி (4) கடுங்கோன்

29. சமணர்களைத் துன்புறுத்திய கூன் பாண்டியன் என அடையாளப்படுத்தப்பட்ட அரசன் _______.
(1) ஜடில பராந்தக நெடுஞ்சடையன் (2) சுந்தரபாண்டியன்
(3) அரிகேசரி மாறவர்மன் (4) இரண்டாம ராஜசிம்மன்

30. அரிகேசரி மாறவர்மனை சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாற்றியவர் _______.
(1) அப்பர் (2) சுந்தரர் (3) திருஞானசம்பந்தர் (4) நம்பியாண்டர் நம்பி

31. அரிகேசரி மாறவர்மன் சுமார் _______ சமணர்களை கழுவேற்றியதாகக் கூறப்படுகிறது.
(1) 7000 (2) 8000 (3) 700 (4) 800

32. வேள்விக்குடி செப்பேடுகளின் கொடையாளி என அழைக்கப்படுபவர் _______.
(1) ஜடில பராந்தக நெடுஞ்சடையன் (2) சுந்தரபாண்டியன்
(3) அரிகேசரி மாறவர்மன் (4) வீரபாண்டியன்

33. முதலாம் பராந்தகனால் தோற்கடிக்கப்பட்ட பாண்டிய அரசன் _______.
(1) ஜடில பராந்தக நெடுஞ்சடையன் (2) சடைய வர்மன் சுந்தரபாண்டியன்
(3) அரிகேசரி மாறவர்மன் (4) இரண்டாம ராஜசிம்மன்

34. 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவின் கீழ்க்கண்ட எந்தப் பகுதிக்கு மார்க்கோபோலோ இருமுறை சென்றார்?
(1) மதராஸ் (2) கொற்கை (3) உறையூர் (4) காயல்

35. மார்க்கோபோலோ தனது பயணக் குறிப்புகளில் எது பற்றி கூறுகிறார்?
(1) உடைகள் (2) கிராம வாழ்க்கை
(3) ஏறு தழுவுதல் (4) உடன்கட்டை ஏறுதல்

36. பாண்டிய அரசு, செல்வச் செழிப்புமிக்க உலகில் மிக அற்புதமான பகுதியாகும் என புகழாரம் சூட்டியவர் _______.
(1) மார்க்கோபோலோ (2) வாசப் (3) இருவரும் (4) எவருமில்லை

37. எந்த இடத்தில் நடைபெற்ற போரில் சுந்தரபாண்டியன் வீர சோமேஸ்வரரைத் தோற்கடித்தார்.
(1) மதுரை (2) எண்ணாயிரம் (3) கண்ணாயிரம் (4) கண்ணனூர்

38. சுந்தரபாண்டியனின் ஆட்சியின்போது கூட்டு அரசர்களாக இருந்தவர்கள் _______.
(1) விக்கிரமபாண்டியன் - வீரபாண்டியன்
(2) விக்கிரமபாண்டியன் - மாறவர்மன் குலசேகரன்
(3) மாறவர்மன் குலசேகரன் - வீரபாண்டியன்
(4) மாறவர்மன் குலசேகரன்; - வீரபாண்டியன்

39. மாறவர்மன் குலசேகரனுடன் கூட்டு அரசராகப் பணியாற்றியவர் _______.
(1) குலசேகரன் (2) ராமபாண்டியன் (3) வீரபாண்டியன் (4) சுந்தரபாண்டியன்

www.kalvinews.com

40. மாலிக்கபூரின் தென்னிந்திய படையெடுப்புக்கு காரணமாக இருந்தவர் _______.
(1) குலசேகரன் (2) ராமபாண்டியன் (3) வீரபாண்டியன் (4) சுந்தரபாண்டியன்

41. மதுரை பொது மக்களால் எவ்வாறு போற்றப்பட்டு வந்தது?
(1) கூடல் நகரம் (2) கோயில் நகரம் (3) ஏரி நகரம் (4) மலைகள் நகரம்

42. சதுர்வேதிமங்கலம் _______ என அழைக்கப்பட்டது.
(1) வணிகர் குடியிருப்பு (2) ஏழைகளின் குடியிருப்பு
(3) பிராமணர் குடியிருப்பு (4) காவலர்களின் குடியிருப்பு

43. பாண்டிய அரசில் பிரதம மந்திரி எவ்வாறு அழைக்கப்பட்டார்?
(1) பிரதமர் (2) உத்தரமந்திரி (3) மத்தியமந்திரி (4) முதல்வர்

44. பாண்டிய பேரரசின் அரசுச் செயலகம் _______ என அறியப்பட்டது
(1) எழுத்துமண்டபம் (2) மணிமண்டபம் (3) செயல் மண்டபம் (4) எதுவுமில்லை

45. பாண்டிய பேரரசின் கிராம நிர்வாக தொடர்பான செய்திகளைக் கொண்டுள்ள கல்வெட்டு _______.
(1) உத்திரமேரூர், காஞ்சிபுரம் (2) மானூர், திருநெல்வேலி
(3) கீழடி, சிவகங்கை (4) கண்ணனூர், மதுரை

46. புகழ்பெற்ற மீனாட்சியம்மன் கோவில் அமைந்துள்ள ஊர் _______.
(1) காஞ்சிபுரம் (2) இராமநாதபுரம் (3) மதுரை (4) திருச்சி

47. பாண்டிய அரசர்களுக்கு குதிரைகள் எளிதாகக் கிடைக்க வசதிகளை செய்த நிறுவனம் _______.
(1) வாசப் வணிக நிறுவனம் (2) மார்க்கோபோலோ வணிக நிறுவனம்
(3) காதர்பாட்சா வணிக நிறுவனம் (4) ஜலாலுதீன் வணிக நிறுவனம்

48. குதிரை வணிகத்தில் ஈடுபட்டவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(1) தரகர் (2) வியாபாரிகள் (3) குதிரைச்செட்டி (4) வாணிபச்செட்டி

49. காயல்பட்டினம் உள்ள மாவட்டம் _______.
(1) திருநெல்வேலி (2) நாகபட்டினம் (3) இராமநாதபுரம் (4) தூத்துக்குடி

50. காசு, கழஞ்சு, பொன் என்பவை எதனைக் குறிக்கின்றன?
(1) இரும்பு நாணயம் (2) பித்தளை நாணயம் (3) தங்க நாணயம் (4) வெள்ளி நாணயம்

51. கங்கைகொண்ட சோழபுரத்தில் பதினாறு மைல் நீளமுள்ள தடுப்பு அணையை கட்டியவர் _______.
(1) முதலாம் ராஜேந்திரன் (2) மூன்றாம் ராஜேந்திரன்
(3) முதலாம் ராஜராஜன் (4) அதி ராஜேந்திரன்

52. காயல்பட்டினத்தில் நடைபெற்ற குதிரை வணிகம் குறித்து பதிவு செய்தவர் _______.
(1) வாசப் (2) மார்க்கோபோலோ (3) யுவான் சுவாங் (4) எவருமில்லை

53. காயல் துறைமுக குதிரை வணிகத்தில் ஒரு குதிரையின் விலை சராசரியாக _______ என வாசப் எழுதுகிறார்.
(1) 100 தினார் (2) 200 தினார் (3) 300 தினார் (4) 400 தினார்

www.kalvinews.com

54. பின்வருவனவற்றுள் மாலிக்கபூர் எப்பகுதியின் மீது படையெடுத்தார்?

(1) காஞ்சிபுரம் (2) இராமேஸ்வரம் (3) மதுரை (4) திருச்சி

55. சுந்தரபாண்டியன் யாருடைய உதவியை நாடினார்?

(1) அலாவுதீன் கில்ஜி (2) திப்பு சுல்தான் (3) ராணாசிங் (4) எவருமில்லை

56. அதிக எண்ணிக்கையிலான கோவில்களை கட்டியுள்ளவர்கள் _______.

(1) சோழர்கள் (2) சேரர்கள் (3) பாண்டியர்கள் (4) களப்பிரர்கள்

57. சோழர் நிர்வாக முறையில்,வாரிசானவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

(1)அரசர் (2) ஆளுநர் (3) யுவராஜா (4) இவையனைத்தும்

58. சோழர் நாடுகளில் நாடோடு தொடர்புடைய பூசல்களையும் ஏனைய சிக்கல்களையும் தீர்த்து வைத்தது _______.

(1) நீதிமன்றம் (2) நாட்டார் என்னும் அமைப்பு

(3) மன்றங்கள் (4) ஊர்த்தலைவர்

59. சோழர்காலத்தில் வார்டு என்பது _______.

(1) பகுதி (2) பாகம் (3) குடும்பு (4) சபை

60. 'உத்திர மேரூர் கல்வெட்டுகள் 'அமைந்துள்ள மாவட்டம் _______.

(1) மதுரை (2) காஞ்சிபுரம்

(3) சென்னை (4) தஞ்சாவூர

61. 'பணிசெய் மக்கள்' என்போர் _______.

(1) அடிமை (2) சமுதாயத்தின் கீழ்நிலையில் இருந்தவர்

(3) வணிகர் (4) 1 மற்றும் 2

62. நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டவை _______.

(1) திருவாசகம் (2) திருமுறைகள்

(3) பழங்கால இலக்கியங்கள் (4) திருவிளையாடல்

63. முதலாம் ராஜராஜனின் மகளான குந்தவையை மணந்த இளவரசர் _______.

(1) விமலாதித்தன் (2) மாறவர்மன்

(3) முதலாம் வரகுணன் (4) விஜயாலயன்

64. தவறான இணையைத் தேர்வு செய்க.

(1) கடுங்கோன் - 6 ஆம் நூற்றாண்டு

(2) ஜடிலபராந்தக நெடுஞ்சடையன் - முதலாம் வரகுணன்

(3) திருஞானசம்பந்தர் - முதலாம் பராந்தகன்

(4) அதிராஜேந்திரன் - கடைசி அரசர்

65. பொருத்தமற்ற இணையைத் தேர்வு செய்க.

(1) பிரதம மந்திரி - உத்தர மந்திரி

(2) குலச்சிறையார் - தளபதி

(3) மாணிக்கவாசகர் - அமைச்சர்

(4) மாறன் - எயினன்

www.kalvinews.com

66. பின்வருவனவற்றுள் பிற்காலச் சோழர்கள் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க.

அ) உள்ளாட்சித்துறை எனும் தனி அமைப்பைக் கொண்டிருந்தனர்.

ஆ) வலுவான கப்பற் படையைக் கொண்டிருந்தனர்.

இ) பௌத்த மதத்தைப் பின்பற்றினர்.

ஈ) பெரிய கோவில்களைக் கட்டினர்.

(1) அ மற்றும் ஆ (2) இ மற்றும் ஈ (3) அ, இ மற்றும் ஈ (4) இவையனைத்தும்

67. சோழர்களின் கல்வி பணி பற்றிய கீழ்காணும் இவற்றில் எவை சரியானவை?

அ) சோழ அரசர்கள் கல்விப்பணிகளுக்கு பெரும் ஆதரவு நல்கினார்.

ஆ) முதலாம் ராஜராஜ சோழன் எண்ணாயிரம் எனும் கிராமத்தில் வேதக்கல்லூரி ஒன்றை நிறுவினார்.

இ) வேதங்கள், இலக்கணம், உபநிடதங்கள் ஆகியவற்றை சோழர்கள் கற்றனர்

ஈ) 1048, 1067 ஆகிய ஆண்டுகளில் இதே போன்றே கல்லூரிகள் நிறுவப்பட்டன.

(1) அ மற்றும் ஆ (2) இ மற்றும் ஈ

(3) அ,இ மற்றும் ஈ (4) இவையனைத்தும்

68. கூற்று: மேற்கு கடற்கரையோரத் துறைமுக நகரங்களில் அராபியர்கள் குடியிருந்தனர்.

காரணம்: கிழக்கு கடற்கரையில் இருந்த அரசர்கள் அயல்நாட்டு வணிகர்களிடம் ஏராளமான மற்றும் அறிவுப்பூர்வமான கொள்கைகளைப் பின்பற்றினர்.

(1) காரணம் கூற்றை விளக்கவில்லை (2) காரணம் கூற்றை விளக்குகிறது.

(3) கூற்று தவறு, காரணம் சரி (4) கூற்றும் காரணமும் தவறு.

69. கூற்று: சோழ அரசர்கள் கோவில் கட்டுவதை ஆதரித்தனர்.

காரணம்: சோழ அரசர்கள் கீழடி சைவத்தைப் பின்பற்றினர்.

(1) காரணம் கூற்றை விளக்கவில்லை (2) காரணம் கூற்றை விளக்குகிறது.

(3) கூற்று தவறு, காரணம் சரி (4) கூற்றும் காரணமும் தவறு.

70. கூற்று: சோழ அரசர்களின் பேரரசு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

காரணம்: நிர்வாக வசதிகளுக்காக பேரரசு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

(1) காரணம் கூற்றை விளக்கவில்லை (2) காரணம் கூற்றை விளக்குகிறது.

(3) கூற்று தவறு, காரணம் சரி (4) கூற்றும் காரணமும் சரி.

71. கூற்று: கிராமப்புறங்களில் அதிக எண்ணிக்கையில் குடியிருப்புகள் உருவாயின.

காரணம்: வேளாண்மையின் விரிவாக்கத்தினால் கிராமங்களில் அதிக குடியிருப்புகள் உருவாயின.

(1) காரணம் கூற்றை விளக்கவில்லை (2) காரணம் கூற்றை விளக்குகிறது.

(3) கூற்று தவறு, காரணம் சரி (4) கூற்றும் காரணமும் சரி.

72. கூற்று: சோழ அரசு சரியான அளவில் நில அளவைப் பணியை மேற்கொண்டது.

காரணம்: நில வரியை அப்புறப்படுத்துவதற்காக.

(1) காரணம் கூற்றை விளக்கவில்லை (2) காரணம் கூற்றை விளக்குகிறது.

(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்றும் காரணமும் சரி.

www.kalvinews.com

73. கூற்று: இராணுவ ரீதியாக அண்டைநாடுகளைக் காட்டிலும் பாண்டியர்களின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது.

காரணம்: பாண்டியர்களிடம் இருந்த யானைப்படை.

(1) காரணம் கூற்றை விளக்கவில்லை (2) காரணம் கூற்றை விளக்குகிறது.

(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்றும் காரணமும் சரி.

74. பொருத்துக.

1) உத்திரமேரூர் - (அ) கர்நாடகம்

2) விஜயாலயன் - (ஆ) புதுச்சேரி

3) திருபுவனை - (இ) காஞ்சிபுரம்

4) ஐகோல் - (ஈ) தஞ்சாவூர்

(1) 1 - இ 2 - ஈ 3 - ஆ 4 - அ (2) 1 - இ 2 - ஈ 3 - அ 4 - ஆ

(3) 1 - இ 2 - அ 3 - ஈ 4 - ஆ (4) 1 - அ 2 - இ 3 - ஆ 4 - ஈ.

75. பொருத்துக.

1) பெரியபுராணம் - (அ) தூத்துக்குடி

2) காசு, கழஞ்சு, பொன் - (ஆ) கொற்கை

3) முத்துக்குளித்தல் - (இ) இலக்கியம்

4) காயல்பட்டினம் - (ஈ) பொற்காசுகள்

(1) 1 - இ 2 - ஈ 3 - அ 4 - ஆ (2) 1 - ஈ 2 - இ 3 - ஆ 4 - அ

(3) 1 - இ 2 - ஈ 3 - ஆ 4 - அ (4) 1 - அ 2 - ஆ 3 - ஈ 4 - இ

76. கீழ்க்காண்பவற்றுள் எப்பகுதிக்கு மார்க்கோபோலோ 13 ம் நூற்றாண்டின் இறுதியில் சென்றார்?

(1) சோழமண்டலம் (2) பாண்டிய நாடு

(3) கொங்குப்பகுதி (4) மலைநாடு

77. பொருத்துக.

1) மதுரை - (அ) உள்நாட்டு வணிகர்

2) கங்கை கொண்ட சோழபுரம் - (ஆ) கடல்சார் வணிகர்

3) அஞ்சு - வண்ணத்தார் - (இ) சோழர்களின் தலைநகர்

4) மணி - கிராமத்தார் - (ஈ) பாண்டியர்களின் தலைநகர்

(1) 1 - இ 2 - ஈ 3 - அ 4 - ஆ (2) 1 - ஈ 2 - இ 3 - ஆ 4 - அ

(3) 1 - இ 2 - ஈ 3 - ஆ 4 - அ (4) 1 - அ 2 - ஆ 3 - ஈ 4 - இ

78. பின்வருவனவற்றுள் ராஜேந்திர சோழன் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க.

அ) கங்கை கொண்ட சோழன் எனும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்.

ஆ) தெற்கு சுமத்ராவைக் கைப்பற்றினார்.

இ) சோழர்களின் அதிகாரத்தை நிலைநிறுத்தினார்.

ஈ) ஸ்ரீவிஜயத்தை கைப்பற்ற அவரது கப்பற்படை பெரிதும் உதவியது.

(1) அ மற்றும் ஆ (2) இ மற்றும் ஈ

(3) அ,இ மற்றும் ஈ (4) இவையனைத்தும்

www.kalvinews.com

79. கூற்று: யுவராஜாக்கள் மாநிலங்களின் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர்.
காரணம்: நிர்வாகத்தில் பயிற்சி பெறுவதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது,
(1) காரணம் கூற்றை விளக்கவில்லை.
(2) காரணம் கூற்றை விளக்குகிறது.
(3) கூற்று சரி, காரணம் தவறு
(4) கூற்றும் காரணமும் சரி.

80. கீழ்க்காணும் நிர்வாகப் பிரிவுகளை இறங்கு வரிசையின் அடிப்படையில் சரியானதைத் தேர்வு செய்க.
(1) நாடு > மண்டலம் > ஊர் > கூற்றம்
(2) மண்டலம் > நாடு > கூற்றம் > ஊர்
(3) ஊர் > நாடு > கூற்றம் > மண்டலம்
(4) கூற்றம் > நாடு > ஊர் > மண்டலம்

81. பெரிய வடிவிலான அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய ஒற்றைக் கல் தூண்கள் ________ன் தனித் தன்மை வாய்ந்த பணியாகும். (NMMS-2020-21)
(1) இடைக்காலப் பாண்டியர்கள்
(2) முற்காலப் பாண்டியர்கள்
(3) பிற்காலச் சோழர்கள்
(4) முற்காலச் சோழர்கள்

82. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS-2016)
(1) முக்தீஸ்வரர் ஆலயம்
(2) ஐவர் கோயில்
(3) பிரகதீஸ்வரர் கோயில்
(4) திருபுவனேஸ்வரர் கோயில்

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (4) | 16 | (1) | 31 | (2) | 46 | (3) | 61 | (4) | 76 | (2) |
| 2 | (1) | 17 | (2) | 32 | (3) | 47 | (4) | 62 | (2) | 77 | (2) |
| 3 | (3) | 18 | (4) | 33 | (4) | 48 | (3) | 63 | (1) | 78 | (4) |
| 4 | (3) | 19 | (4) | 34 | (4) | 49 | (4) | 64 | (3) | 79 | (2) |
| 5 | (2) | 20 | (3) | 35 | (4) | 50 | (3) | 65 | (2) | 80 | (2) |
| 6 | (1) | 21 | (2) | 36 | (1) | 51 | (1) | 66 | (3) | 81 | (1) |
| 7 | (4) | 22 | (1) | 37 | (4) | 52 | (1) | 67 | (3) | 82 | (1) |
| 8 | (1) | 23 | (1) | 38 | (1) | 53 | (2) | 68 | (2) | | |
| 9 | (3) | 24 | (3) | 39 | (3) | 54 | (3) | 69 | (2) | | |
| 10 | (2) | 25 | (1) | 40 | (4) | 55 | (1) | 70 | (4) | | |
| 11 | (1) | 26 | (2) | 41 | (1) | 56 | (1) | 71 | (4) | | |
| 12 | (3) | 27 | (1) | 42 | (3) | 57 | (3) | 72 | (3) | | |
| 13 | (4) | 28 | (4) | 43 | (2) | 58 | (2) | 73 | (3) | | |
| 14 | (4) | 29 | (3) | 44 | (1) | 59 | (3) | 74 | (1) | | |
| 15 | (2) | 30 | (3) | 45 | (2) | 60 | (2) | 75 | (3) | | |

www.kalvinews.com

வகுப்பு - 7 - பருவம் - 1 - வரலாறு

# 4. டெல்லி சுல்தானியம்

**தொகுப்பு:**

**திரு.ப.சக்திவேல், M.Sc., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, மண்ணூர்,**
**சேலம் மாவட்டம்.**

**மேம்பாடு:**

**திரு.மு.ஆனந்து, B.Sc., M.A., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, அத்தியூர்,**
**ஈரோடு மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

**அடிமை வம்சம் (1206 - 1290)**

- கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சியை நிறுவியவர் **முகமது கோரி**.
- 1206ல் முகமது கோரி இறந்தார்.
- இராணுவப் பணிக்காக விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளைக் குறிக்கும் பாரசீகச் சொல் **பன்டகன்.**
- முகமது கோரி **பன்டகன்** எனும் தனிவகை அடிமைகளைப் பேணினார்.
- மாம்லுக் மரபை நிறுவியவர் **குத்புதீன் ஐபெக்.**
- குத்புதீன் ஐபெக் இந்தியாவிலிருந்த துருக்கியப் பகுதிகளுக்கு அரசராகத் தன்னை அறிவித்துக் கொண்டார்.
- குத்புதீன் ஐபெக் அடிமை வம்ச ஆட்சிக்கான அடிக்கல் நாட்டினார்.
- இவ்வரச மரபு மாம்லுக் அரச மரபு என்றும் அழைக்கப்பட்டது.
- **மாம்லுக்** எனும் அரேபிய வார்த்தைக்கு **அடிமை** என்று பொருள்.
- குத்புதீன் ஐபெக், சம்சுதீன் இல்துமிஷ், கியாசுதீன் பால்பன் ஆகிய மூவரும் அடிமை வம்சத்தைச் சேர்ந்த மாபெரும் சுல்தான்கள் ஆவர்.
- இந்தியாவில் (சுல்தான்) அடிமை வம்சத்தினர் 84 ஆண்டு காலம் ஆட்சி செய்தனர்.

**குத்புதீன் ஐபெக் (1206 -1210)**

- தலைநகரை லாகூரில் இருந்து டெல்லிக்கு மாற்றிய சுல்தானிய அரசர் **குத்புதீன் ஐபெக்.**
- கீழை கங்கைச் சமவெளியைக் (பீகார், வங்காளம்) கைப்பற்றும் பொறுப்பை பக்தியார் கல்ஜி என்பாரிடம் ஒப்படைத்தார்.
- குத்புதீன் ஐபெக் டெல்லியில் **குவ்வத்-உல்-இஸ்லாம் மஸ்ஜித்** எனும் மசூதியைக் கட்டினார்.
- இந்தியாவில் உள்ள பழைமையான மசூதி **குவ்வத்-உல்-இஸ்லாம் மஸ்ஜித்** ஆகும்.
- குதுப்மினார் கோபுரத்தை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியவர் **குத்புதீன் ஐபெக்**
- குதுப்மினார் கோபுரத்தை கட்டி முடித்தவர் **இல்துமிஷ்**
- **போலோ** விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கும்போது குதிரையிலிருந்து கீழே விழுந்து **(1210இல்) குத்புதீன் ஐபெக்** இறந்துபோனார்.

**இல்துமிஷ் (1210 - 1236)**

- குத்புதீன் ஐபக்கின் மகன் **ஆரம் ஷா**

- துருக்கியப் பிரபுக்கள் ஐபக்கின் மருமகனும், படைத்தளபதியுமான இல்துமிஷை சுல்தானாகத் தேர்வு செய்தனர்.
- இல்துமிஷிடம் அடைக்கலம் கோரியவர் குவாரிஜம்-ஷா-ஜலாலுதீன்.
- மங்கோலியர் செங்கிஸ்கான் தலைமையில் இந்தியாவின் எல்லைப் பகுதிகளை அச்சுறுத்தினர்.
- மங்கோலியர்களின் தாக்குதலை எதிர்கொள்வதற்கு இல்துமிஷ் **நாற்பதின்மர்** எனும் குழுவை உருவாக்கினார்.
- சகல்கானி என்றால் **நாற்பதின்மர்** என்று பொருள்.
- இல்துமிஷ் தனது படைகளில் பணியாற்றியவர்களுக்கு **இக்தாக்கள் (நிலங்கள்)** வழங்கினார்.
- **இக்தா** என்பது இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்காகக் கொடுக்கப்பட்ட **நிலமாகும்.**
- இக்தா நிலத்தைப் பெற்றவர் இக்தாதாரர் அல்லது முக்தி எனப்பட்டனர்.
- 26 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த இல்துமிஷ் 1236 ஏப்ரல் மாதம் மறைந்தார்.

**ரஸ்ஸியா (1236 - 1240)**

- இல்துமிஷின் மகள் **ரஸ்ஸியா** ஆவார்.
- சுல்தானியர்களில் முதல் பெண் அரசி **ரஸ்ஸியா** ஆவார்.
- ரஸ்ஸியா திறமை, மனவலிமை மிக்க வீராங்கனை ஆவார்.
- துருக்கிய இனத்தைச் சாராத பிரபுக்களுக்கு ஆதரவாக இருந்ததால், துருக்கியப் பிரபுக்களின் வெறுப்பைச் சம்பாதித்தார்.
- ரஸ்ஸியாவின் உதவியாளர் **ஜலாலுதீன் யாகுத்** ஓர் எத்தியோப்பிய அடிமை.
- துருக்கியப் பிரபுக்களின் சதியால் **1240**இல் ரஸ்ஸியா கொலையுண்டார்.

**கியாசுதீன் பால்பன் (1266 - 1287)**

- நாற்பதின்மர் குழுவை ஒழித்தவர் **கியாசுதீன் பால்பன்** ஆவார்.
- ஒற்றர் துறையை நிறுவியவர் **பால்பன்.**
- பால்பனுக்கு எதிராக கலகம் செய்ததால், வங்காள மாகாண ஆளுநராக இருந்த துக்ரில் கான் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.
- பால்பன் தனது எதிரிகளான மீவாட்டைச் சேர்ந்த மியோக்கள் (வடமேற்கு இந்தியாவைச் சேர்ந்த ராஜபுத்திர முஸ்லீம்கள்) போன்றோரிடம் கருணை இல்லாமல் நடந்து கொண்டார்.
- செங்கிஸ்கான் பேரன் **குலகுகான்** (மங்கோலிய வைஸ்ராய்). இவரிடமிருந்து மங்கோலியர்கள் சட்லஜ் நதியைக் கடந்து படையெடுத்து வரமாட்டார்கள் எனும் உறுதி மொழியை பால்பன் பெற்றார்.
- பால்பன் பாரசீகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞரான **அமீர்குஸ்ரு**வை ஆதரித்தார்.
- பால்பன் 1287 ல் மரணமடைந்தார்.
- 1290 ல் படைத்தளபதியாக பணியாற்றிய மாலிக் ஜலாலுதீன், கில்ஜி அரசப் பிரதிநிதியாகப் (நாயிப்) பொறுப்பேற்றார்.

**கில்ஜி வம்சம் (1290 -1320)**

1. **ஜலாலுதீன் கில்ஜி (1290 -1296)**

- காராவின் ஆளுநரான அலாவுதீன் கில்ஜி, ஜலாலுதீனின் உடன் பிறந்தோரின் மகனாவார்.

www.kalvinews.com

- அலாவுதீன் கில்ஜியின் முக்கிய படையெடுப்பு **தேவகிரி படையெடுப்பு** இதில் யாதவ அரசர் **ராமச்சந்திரனை** தோற்கடித்தார்.
- அலாவுதீன், ஜலாலுதீனை வஞ்சகமாகக் கொன்று 1296 ல் தன்னை டெல்லியின் சுல்தானாக அறிவித்துக் கொண்டார்.

2. **அலாவுதீன் கில்ஜி (1296 -1316)**

- அலாவுதீன் கில்ஜியின் தலைமை தளபதி **மாலிக் கபூர்**.
- **மாலிக் கபூர்** கில்ஜின் ஆணைக்கிணங்க **மதுரை** வரை படையெடுத்தார்.
- தக்கான அரசுகளான தேவகிரி யாதவர்கள், துவாரசமுத்திரத்தின் ஹொய்சாளர்கள், வாரங்கல் காகதியர்கள், மதுரைப் பாண்டியர்கள் ஆகிய அனைவரும் அலாவுதீனின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர்.

**சித்தூர் சூறையாடல் (1303)**

- **சித்தூரில்** ராஜபுத்திர படைகளை அலாவுதீன் படைகள் திணறடித்த நிலையில், தோல்வி அடைந்து விடுவோம் எனும் சூழலில் கோட்டைக்குள் இருந்த ஆடவரும், பெண்டிரும் தங்கள் மரபுப்படி '**ஜவ்ஹர்**' எனும் சடங்கை நடத்தினர்.
- '**ஜவ்ஹர்**' எனும் இம்முறைப்படி ஆண்கள் கோட்டையை விட்டு வெளியேறி போர்க்களத்திலும், பெண்கள் தீக்குள் புகுந்தும் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர்.
- **அலாவுதீன் கில்ஜி** வரிவசூல் பணியை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்.
- கட்டாய உணவு தானிய கொள்முதல் முறையை அறிமுகம் செய்தவர் **அலாவுதீன் கில்ஜி**.
- அலாவுதீன் 1316 ல் மரணமடைந்தார்.

**துக்ளக் வம்சம் (1320 - 1414)**

1. **கியாசுதீன் துக்ளக் (1320 - 1324)**

- துக்ளக் அரசவம்ச ஆட்சிக்கு அடிக்கல் நாட்டியவர் கியாசுதீன் துக்ளக்.
- கியாசுதீன் துக்ளக்கின் மகன் ஜூனாகான், வாரங்கல் அரசர் பிரதாப ருத்ரனை வெற்றி கொண்டு பெருஞ்செல்வத்தைக் கொள்ளை அடித்தார்.
- இச்செல்வத்தினை கொண்டு கியாசுதீன் துக்ளக், டெல்லிக்கு அருகே துக்ளகாபாத் எனும் புதிய நகரை நிர்மாணம் செய்ய அடிக்கல் நாட்டினார்.

2. **முகமது பின் துக்ளக் (1325 - 1351)**

- ஜூனாகான் தனது பெயரை முகமது பின் துக்ளக் என மாற்றி அரியணையில் ஏறினார்.
- இவர் தனது தலைநகரை டெல்லியிலிருந்து, நாட்டின் மையப்பகுதியிலிருந்த தேவகிரிக்கு மாற்றினார். தேவகிரியின் பெயரை தௌலதாபாத் என மாற்றினார்.
- சுல்தானுடன் டெல்லி திரும்பிய மொராக்கோ நாட்டுப்பயணியான இபன் பதூதா டெல்லி நகரானது மக்கள் நெருக்கமின்றி காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.
- நிலவரியை தானியமாக வசூல் செய்த அலாவுதீன் முறையில் திருத்தம் செய்த துக்ளக் நிலவரியை உயர்த்தியோடு, பணமாக வசூல் செய்யும் முறையை அறிமுகப்படுத்தினார்.
- புதிய நாணயங்களை வெளியிட போதுமான வெள்ளி இல்லாததால், செப்பு நாணயங்களை அடையாளப்பணமாக வெளியிட்டார்.
- முகமது நிலவரியை உயர்த்தியதால் **தோஆப்** பகுதியில் விவசாயிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- முகமது 25 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.

www.kalvinews.com

- துக்ளக்கிடம் படைவீரராக பணியாற்றிய பாமினி என்பார் தௌலதாபாத் மற்றும் அதனை சுற்றியள்ள பகுதிகளை சுதந்திர அரசாக அறிவித்தார். இவை பாமினி சுல்தானியம் என்று அழைக்கப்பட்டது.
- 1335 ல் மதுரை தனி சுல்தானியமாக உருவானது.
- 1346 ல் வங்காளம் சுதந்திர அரசானது.
- 1351 மார்ச் 23 ல் துக்ளக் மரணமடைந்தார்.

3. **பிரோஷ் ஷா துக்ளக் (1351 - 1388)**

- துக்ளக்கைத் தொடர்ந்து கியாசுதீனின் இளைய சகோதரரின் மகனான பிரோஷ் அரியணை ஏறினார்.
- துக்ளக் அரச வம்சத்தில் மக்களின் நல்வாழ்க்கையில் அக்கறை கொண்ட, இரக்கமுள்ள அரசர் **பிரோஷ்-ஷா-துக்ளக்** ஆவார்.
- சூபி ஞானிகள், மதத்தலைவர்களின் அறிவுரைகளின் படி நல்லாட்சி புரிந்தார்.
- ஏழை முஸ்லீம்களுக்கு உதவ அறக்கட்டளைகளை நிறுவினார்.
- கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் மசூதிகளை நிறுவினார்.
- விவசாயிகளின் கடன்களை ரத்து செய்தார்.
- நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி வேளாண்மை செழிக்கச் செய்தார்.
- இஸ்லாமிய சட்டங்களால் அங்கீகரிக்கப்படாத வரிகளை ரத்து செய்தார்.
- 1200 புதிய தோட்டங்களை உருவாக்கியதோடு, அலாவுதீன் கில்ஜி காலத்தைச் சேர்ந்த 30 பழைய தோட்டங்களையும் புனரமைத்தார்.
- பிரோஷாபாத், பெரோஷ்பூர், ஜான்பூர், ஹிசார் ஆகிய நகரங்களை நிர்மாணித்தவர் பிரோஷ் ஷா துக்ளக்.
- 1388 ல் தனது 83 ஆவது வயதில் பிரோஷ் இயற்கை எய்தினார்.

**தைமூரின் படையெடுப்பு (1398)**

- 'தாமர்லைன்' என்றழைக்கப்பட்ட தைமூர் டெல்லியை சூறையாடி மாபெரும் மனிதப் படுகொலையை அரங்கேற்றினார்.
- மத்திய ஆசியாவில் சாமர்கண்ட் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி செய்தார்.
- தைமூரின் படையெடுப்பால் டெல்லிக்கு அடுத்து பஞ்சாப் பெரும்பாதிப்புக்கு உள்ளானது.

**சையது அரச வம்சம் (1414 - 1451)**

- டெல்லி சுல்தானியம் பல சுதந்திர அரசுகளாக சிதறுண்டாலும், முகலாயர் படையெடுப்பு வரை 114 ஆண்டுகள் தாக்குப்பிடித்து நின்றது.
- தைமூர் கைப்பற்றிய டெல்லி, மீரட், பஞ்சாப் போன்ற பகுதிகளுக்கு ஆளுநராக கிசிர்கானை நியமித்தார்.
- சையது அரச வம்சத்தை(கி.பி.1414) தோற்றுவித்தவர் **கிசிர்கான்** ஆவார். இவ்வரச வம்சம் 1451 வரை நீடித்தது.
- சையது அரசவம்சத்தின் கடைசி சுல்தான் அலாவுதீன் ஆலம் ஷா ஆவார். இவர் 1451 ல் அரச பதவியைத் துறந்தார்.
- வங்காள ஆளுநர் **துக்ரில்கான்** ஆவார்.
- சிர்ஹிந்தின் ஆளுநர் **பகலூல்லோடி** ஆவார்.
- லோடி வம்சத்தை தோற்றுவித்தவர் **பகலூல்லோடி** ஆவார்.

www.kalvinews.com

லோடி அரச வம்சம்

- **1489**இல் அரியணையேறிய சிக்கந்தர் லோடி தலைநகராக **ஆக்ரா**வை நிறுவினார்.
- 1517 ல் சிக்கந்தர் லோடி மரணமடைந்ததைத் தொடர்ந்து அவரது மகன் இப்ராஹிம் லோடி அரச பதவி ஏற்றார்.
- முதலாம் பானிபட் போர் **கி.பி.1526**-ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- முதலாம் பானிபட் போரில் இப்ராகிம் லோடி **பாபர்** என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்
- முகலாய அரசை நிறுவியவர் **பாபர்** ஆவார்.
- லோடி அரச வம்சத்திற்கும் டெல்லி சுல்தானியத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்த முகலாயப் பேரரசர் **பாபர்** ஆவார்.

**இந்தோ சாராசனிக் கலை வடிவம் (இஸ்லாமியக் கலை, கட்டக்கலை)**

- பாரசீக மற்றும் இந்தியப் பாணியலான கலைவடிவம் **இந்தோ-சாராசானிக்** என அழைக்கப்பட்டது.
- கட்டிடம் பாரசீக பாணியிலும் அலங்கார வேலைப்பாடுகள் இந்திய பாணியிலும் இருக்கும்.
- இவ்வகை பாணி கட்டிடங்கள் குதுப்மினார், அலெய்தர்வாசா, குவ்வத்த-உல்-இஸ்லாம் மசூதி, மோத்தி மசூதி (இல்துமிஷ் பால்பன் கல்லறைகள்) (ஹைதராபாத், பிரஷோபாத் இடங்களில் உள்ள கோட்டைகள்)

**அரசர்கள் (தந்தை - மகன்)**

| | தந்தை | மகன் |
|---|---|---|
| 1. | குத்புதீன் ஐபக் | ஆரம் ஷா |
| 2. | இல்துமிஷ் | ருக்குதீன் பிரோஷா |
| 3. | பால்பன் | கைகுபாத் |
| 4. | கியாசுதீன் | ஜூனா கான் |
| 5. | பகலூல் லோடி | சிக்கந்தர் லோடி |

- அடிமை வம்சம் (1206-1290)
    - குத்புதீன் ஐபக் (1206-1210)
    - இல்துமிஷ் (1210-1236)
    - ரஸ்ஸியா (1236-1240)
    - கியாசுதீன் பால்பன் (1266-1287)
- கில்ஜி அரச வம்சம் (1290-1320)
    - ஜலாலுதீன் கில்ஜி (1290-1296)
    - துக்ளக் அரச வம்சம் (1320-1414)
    - சையது அரச வம்சம் (1414-1451)
    - லோடி அரச வம்சம் (1451-1526)

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்**

1. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சியை நிறுவியவர் யார்?
   (1) இல்துமிஷ் (2) ஜலாலுதீன் (3) குத்புதீன் ஐபக் (4) முகமது கோரி

2. இராணுவப் பணிக்காக விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளைக் குறிக்கும் பாரசீகச் சொல்
   (1) பன்டகன் (2) மாம்லுக் (3) சகல்கானி (4) அடிமைகள்

3. முகமது கோரி _______ எனும் தனிவகை அடிமைகளைப் பேணினார்.
   (1) மாம்லுக் (2) அடிமைகள் (3) பன்டகன் (4) சகல்கானி

4. மாம்லுக் மரபை நிறுவியவர்?
   (1) முகமது கோரி (2) இல்துமிஷ் (3) ஜலாலுதீன் (4) குத்புதீன் ஐபெக்

5. மாம்லுக் எனும் அரேபிய வார்த்தையின் பொருள் யாது?
   (1) வீரர்கள் (2) அடிமை
   (3) படைத்தளபதி (4) மன வலிமைகொண்ட போர்வீரர்

6. எத்தனை ஆண்டு காலம் இந்தியாவில் (சுல்தான்) அடிமை வம்சத்தினர் ஆட்சி செய்தனர்?
   (1) 75 (2) 120 (3) 84 (4) 36

7. தலைநகரை லாகூரில் இருந்து டெல்லிக்கு மாற்றிய சுல்தானிய அரசர் யார்?
   (1) குத்புதீன் ஐபெக் (2) பால்பன் (3) இல்துமிஷ் (4) கியாசுதீன்

8. குத்புதீன் ஐபெக் டெல்லியில் _______ எனும் மசூதியைக் கட்டினார்.
   (1) சேரமான் ஜிம்மா மசூதி (2) குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதி
   (3) தாஜ்-உல்-மசூதி (4) குதுப்மினார்

9. இந்தியாவில் உள்ள பழைமையான மசூதி _______.
   (1) குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதி (2) குதுப்மினார்
   (3) சேரமான் ஜிம்மா மசூதி (4) தாஜ்-உல்-மசூதி

10. குதுப்மினார் கோபுரத்தைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியவர் _______.
    (1) குத்புதீன் ஐபெக் (2) இல்துமிஷ் (3) பால்பன் (4) அலாவுதீன் கில்ஜி

11. குதுப்மினார் கோபுரத்தைக் கட்டி முடித்தவர் _______.
    (1) ஜலாலுதீன் (2) குத்புதீன் ஐபெக் (3) பால்பன் (4) இல்துமிஷ்

12. போலோ விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கும்போது குதிரையிலிருந்து கீழே விழுந்து இறந்த அரசர் _______.
    (1) குத்புதீன் ஐபெக் (2) இல்துமிஷ் (3) அலாவுதீன் கில்ஜி (4) கியாசுதீன் துக்ளக்

13. குத்புதீன் ஐபக்கின் மகன் _______ ஆவார்.
    (1) ஆரம் ஷா (2) பால்பன் (3)ஜலாலுதீன் கில்ஜி (4) கியாசுதீன் துக்ளக்

14. மங்கோலியர்களின் தாக்குதலை எதிர்கொள்வதற்கு இல்துமிஷ் _______ எனும் குழுவை உருவாக்கினார்.
    (1) ஐம்பெருங்குழு (2) எண்பேராயம் (3) பதின்மர்க்குழு (4) நாற்பதின்மர்

www.kalvinews.com

15. சகல்கானி என்றால் _______ என்று பொருள்.
(1) பதின்மர்க்குழு (2) நாற்பதின்மர் (3) ஐம்பெருங்குழு (4) எண்பேராயம்

16. இல்துமிஷ் தனது படைகளில் பணியாற்றியவர்களுக்கு _______ வழங்கினார்.
(1) வீடு (2) இக்தாக்கள் (நிலங்கள்)
(3) பொற்காசுகள் (4) குதிரைகள்

17. _______ என்பது இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிலமாகும்.
(1) சகல்கானி (2) பன்டகன் (3) இக்தா 4) நாற்பதின்மர்

18. இல்துமிஷின் மகள் _______ ஆவார்.
(1) ரஸ்ஸியா (2) ஜான்சிராணி (3) மீராபாய் (4) விக்டோரிய மகாராணி

19. சுல்தானியர்களில் முதல் பெண் அரசி _______ ஆவார்.
(1) விக்டோரிய மகாராணி (2) ஜான்சிராணி
(3) ரஸ்ஸியா (4) மீராபாய்

20. நாற்பதின்மர் குழுவை ஒழித்தவர் _______ ஆவார்.
(1) கியாசுதீன் பால்பன் (2) இல்துமிஷ்
(3) கியாசுதீன் துக்ளக் (4) குத்புதீன் ஐபெக்

21. பால்பன் பாரசீகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞரான _______ஐ ஆதரித்தார்.
(1) அமிர்குஸ்ரு (2) இபன் பதூதா (3) அபுல் பாசல் (4) அல்-பரூனி

22. துக்ளக் அரசவம்சத்தைத் தோற்றுவித்தவர் _______ ஆவர்.
(1) பிரோஷ் ஷா துக்ளக் (2) முகபது பின் துக்ளக்
(3) பால்பன் (4) கியாசுதீன் துக்ளக்

23. காராவின் ஆளுநர் _______ ஆவார்.
(1) அலாவுதீன் கில்ஜி (2) துக்ரில்கான் (3) பகலூல் லோடி (4) ரஸ்ஸியா

24. வங்காள ஆளுநர் _______ ஆவார்.
(1) அலாவுதீன் கில்ஜி (2) துக்ரில்கான் (3) பகலூல் லோடி (4) ரஸ்ஸியா

25. சிர்ஹிந்தின் ஆளுநர் _______ ஆவார்.
(1) அலாவுதீன் கில்ஜி (2) துக்ரில்கான் (3) பகலூல் லோடி (4) ரஸ்ஸியா

26. டெல்லிக்கு அருகே துக்ளகாபாத் நகருக்கான அடிக்கல்லை நாட்டியவர் _______ ஆவார்.
(1) கியாசுதீன் துக்ளக் (2) பால்பன்
(3) பிரோஷ் ஷா துக்ளக் (4) முகமது பின் துக்ளக்

27. கியாசுதீன் துக்ளக்கின் மகன் _______ ஆவார்.
(1) கிசிர்கான் (2) ஜூனாகான் (3) ஜலாலுதீன் (4) துக்ரில்கான்

28. முகமது பின் துக்ளக் அரியணை ஏறிய ஆண்டு _______.
(1) கி.பி.1325 (2) கி.பி.1260 (3) கி.பி.1320 (4) கி.பி.1324

www.kalvinews.com

29. அடிமை வம்ச ஆட்சியை நிறுவியவர் _______ ஆவார்.
(1) அலாவுதீன் கில்ஜி (2) பால்பன் (3) குத்புதீன் ஐபெக் (4) இல்துமிஷ்

30. கில்ஜி அரச வம்சத்தை நிறுவியவர் _______ ஆவார்.
(1) அலாவுதீன் கில்ஜி (2) ஜலாலுதீன் கில்ஜி
(3) இல்துமிஷ் (4) ரஸ்ஸியா

31. துக்ளக் அரச வம்சத்தில் மக்களின் நல்வாழ்க்கையில் அக்கறைக் கொண்ட, இரக்கமுள்ள அரசர் _______ ஆவார்.
(1) கியாசுதீன் துக்ளக் (2) முகமது பின் துக்ளக்
(3) பிரோஷ்-ஷா-துக்ளக் (4) பால்பன்

32. சையது அரசவம்சத்தைத் தோற்றுவித்தவர் _______ ஆவார்.
(1) ஜலாலுதீன் (2) ஜூனாகான் (3) கிசிர்கான் (4) கியாசுதீன்

33. லோடி வம்சத்தைத் தோற்றுவித்தவர் _______ ஆவார்.
(1) பகலூல் லோடி (2) சிக்கந்தர் லோடி (3) இப்ராகிம் லோடி (4) லோடி

34. முதலாம் பானிபட் போர் _______ ஆம் ஆண்டில் நடைபெற்றது.
(1) கி.பி.1451 (2) கி.பி.1526 (3) கி.பி.1517 (4) கி.பி.1388

35. முதலாம் பானிபட் போரில் இப்ராகிம் லோடி _______ என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்.
(1) கியாசுதீன் துக்ளக் (2) குத்புதீன் ஐபக்
(3) கியாசுதீன் பால்பன் (4) பாபர்

36. முகலாய அரசை நிறுவியவர் _______ ஆவார்.
(1) இல்துமிஷ் (2) பிரோஷா துக்ளக்
(3) அலாவுதீன் கில்ஜி (4) பாபர்

37. _______ ஆம் ஆண்டில் மதுரை தனி சுல்தானியமாக உருவானது.
(1) கி.பி.1335 (2) கி.பி.1206 (3) கி.பி.1316 (4) கி.பி.1351

38. 'தாமர்லைன்' என்று அழைக்கப்பட்டவர் _______ ஆவர்.
(1) அலாவுதீன் கில்ஜி (2) குத்புதீன் ஐபக் (3) தைமூர் (4) சிக்கந்தர் லோடி

39. _______ ஆம் ஆண்டில் தைமூர் படையெடுப்பு நிகழ்ந்தது.
(1) கி.பி.1365 (2) கி.பி.1526 (3) கி.பி.1398 (4) கி.பி.1206

40. ரஸ்ஸியாவின் உதவியாளர் _______ ஆவார்.
(1) ஜலாலுதீன் யாகுத் (2) துக்ரில்கான் (3) கியாசுதீன் (4) பகலூல் லோடி

41. பாரசீக மற்றும் இந்தியப் பாணியலான கலைவடிவம் _______ என அழைக்கப்பட்டது.
(1) பாரசீக-சாராசானிக் (2) இந்தோ-சாராசானிக்
(3) சாராசானிக் (4) இக்தார்கள்

42. முகமது-பின்-துக்ளக்கின் உண்மையானப் பெயர் _______ ஆகும்.
(1) கியாசுதீன் (2) அலாவுதீன் (3) ஜூனாகான் (4) துக்ரில்கான்

www.kalvinews.com

43. கீழ்க்கண்டவற்றுள் அடிமை வம்சத்தைச் சேராத சுல்தானிய அரசர் _______.

(1) குத்புதீன் ஐபக் (2) ஜலாலுதீன் கில்ஜி

(3) இல்துமிஷ் (4) கியாசுதீன் பால்பன்

44. கீழைக் கங்கைச் சமவெளியைக் (பீகார், வங்காளம்) கைப்பற்றும் பொறுப்பைப் பக்தியார் கில்ஜியிடம் ஒப்படைத்த அரசர் _______ ஆவர்.

(1) இல்துமிஷ் (2) கியாசுதீன் பால்பன்

(3) குத்புதீன் ஐபக் (4) அலாவுதீன் கில்ஜி

45. துருக்கியப் பிரபுக்கள் குத்புதீன் ஐபக்கின் படைத்தளபதியும், மருமகனுமான _______ என்பாரை சுல்தானாகத் தேர்வு செய்தனர்.

(1) கியாசுதீன் பால்பன் (2) அலாவுதீன் கில்ஜி

(3)முகமது பின் துக்ளக் (4) இல்துமிஷ்

46. அடிமை வம்சத்தைச் சேர்ந்த இல்துமிஷ் _______ ஆண்டுகாலம் ஆட்சிபுரிந்தார்.

(1) 26 (2) 15 (3) 36 (4) 25

47. _______ஆம் ஆண்டு அலாவுதீன் கில்ஜி, சித்தூரை ஆட்சி செய்த ராஜபுத்திரரைத் தோற்கடித்தார்.

(1) கி.பி.1303 (2) கி.பி.1316 (3) கி.பி.1315 (4) கி.பி.1325

48. முகமது பின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியில் இருந்து நாட்டின் மையப்பகுதியில் இருந்த _______க்கு மாற்றினார்.

(1) வாரங்கல் (2) லாகூர் (3) தேவகிரி (4) வங்காளம்

49. தௌலதாபாத் என்பது _______ பகுதியைக் குறிக்கும்.

(1) தேவகிரி (2) வாரங்கல் (3) வங்காளம் (4) லாகூர்.

50. முகமது பின் துக்ளக்குடன் டெல்லி திரும்பிய மொராக்கோ நாட்டுப் பயணி _______ ஆவார்.

(1) மார்கோபோலோ (2) இபன் பதூதா

(3) தாலமி (4) கொலம்பஸ்

51. கீழ்க்கண்ட எந்த வம்சம் டெல்லியை முதன் முதலில் ஆட்சி செய்தது?

(1) லோடி வம்சம் (2) கில்ஜி வம்சம் (3) துக்ளக் வம்சம் (4) அடிமை வம்சம்

52. கீழ்க்கண்டவற்றில் டெல்லி சுல்தானியம் அல்லாதது எது?

(1) அடிமை வம்சம் (2) லோடி வம்சம்

(3) மங்கோலியர் வம்சம் (4) துக்ளக் வம்சம்

53. குத்புதீன் ஐபக் எந்த அரசரின் அடிமை?

(1) முகமது கோரி (2) கஜினி முகமது (3) பாபர் (4) அக்பர்

54. அலாவுதீன் நிலவரியை _______ பெறும் முறையில் வசூல் செய்தார்.

(1) பணம் (2) தானியம் (3) கால்நடைகள் (4) பொன்

55. முகமது பின் துக்ளக் முதலில் அடையாளப் பணமாக எந்த நாணயத்தை வெளியிட்டார்?

(1) தங்கம் (2) வெள்ளி (3) செப்பு (4) இரும்பு

www.kalvinews.com

56. முகமது பின் துக்ளக் சுல்தானாக எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்?

(1) 25 (2) 15 (3) 26 (4) 18

57. முகமது பின் துக்ளக்கிடம் படைவீரராக பணியாற்றியவர் _______.

(1) பிரோஷ் ஷா துக்ளக் (2) பாமினி

(3) துக்ரில்கான் (4) ஜலாலுதீன்

58. ஏழை முஸ்லிம்களுக்கு உதவுவதற்கான அறக்கட்டளைகளை நிறுவியவர்?

(1) முகமது பின் துக்ளக் (2) அலாவுதீன்

(3) பிரோஷ் ஷா துக்ளக் (4) பாமினி

59. தைமூர் தாம் கைப்பற்றிய டெல்லி, மீரட், பஞ்சாப் போன்ற பகுதிகளுக்கு ஆளுநராக _______ என்பாரை நியமித்தார்.

(1) கிசிர்கான் (2) ஜூனாகான் (3) ஜலாலுதீன் (4) பகலூல் லோடி

60. சையது அரச வம்சத்தின் கடைசி சுல்தான் _______ ஆவர்.

(1) அலாவுதீன் கில்ஜி (2) கிசிர்கான்

(3) சிக்கந்தர்லோடி (4) அலாவுதீன் ஆலம் ஷா

61. _______ஆம் ஆண்டில் சிக்கந்தர் லோடி சுல்தானாக பொறுப்பேற்றார்.

(1) கி.பி.1489 (2) கி.பி.1451 (3) கி.பி.1287 (4) கி.பி.1236

62. சிக்கந்தர் லோடி சுல்தானாக இருந்தபோது தலைநகராக _______ஐ நிறுவினார்.

(1) வங்காளம் (2) லாகூர் (3) ஆக்ரா (4) தௌலதாபாத்

63. லோடி அரச வம்சத்திற்கும் டெல்லி சுல்தானியத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்த முகலாயப் பேரரசர் _______ ஆவார்.

(1) அக்பர் (2) பாபர் (3) உமாயூன் (4) ஔரங்கசீப்

64. சரியான இணையைத் தேர்வு செய்க.

(1) ஹொய்சாளர்கள் - தேவகிரி

(2) யாதவர்கள் - துவாரசமுத்திரம்

(3) காகதியர்கள் - வாரங்கல்

(4) பல்லவர்கள் - மதுரை

65. தவறான இணையைத் தேர்வு செய்க.

| | தந்தை | | மகன் |
|---|---|---|---|
| (1) | குத்புதீன் ஐபக் | - | அலாவுதீன் |
| (2) | இல்துமிஷ் | - | ருக்குதீன் பிரோஷ் |
| (3) | பால்பன் | - | கைகுபாத் |
| (4) | பகலூல் லோடி | - | சிக்கந்தர் லோடி |

66. கூற்று: மங்கோலியருடன் பால்பன் சுமூகமான உறவை மேற்கொண்டார்கள்

காரணம்: செங்கிஸ்கானின் பேரனான மங்கோலியர் படையெடுத்து வரமாட்டார்கள், என உறுதி கூறியிருந்தார்.

www.kalvinews.com

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமே.

(2) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

(3) காரணமும் கூற்றும் தவறானவை.

(4) கூற்று தவறு; காரணம் சரி.

67. கூற்று: பதினொன்றாம் நூற்றாண்டில் வட இந்தியாவைக் கொள்ளையடித்த துருக்கிய குதிரைப்படை வீரர்கள் அடுத்த நூற்றாண்டில் கங்கைச் சமவெளியைத் தங்கள் அரசியல் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தனர்.

காரணம்: துணிச்சலும் மூர்க்கக்குணமுமே வெற்றிக்குக் காரணம்.

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமே.

(2) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

(3) காரணமும் கூற்றும் தவறானவை.

(4) கூற்று தவறு: காரணம் சரி.

68. கூற்று: டெல்லி சுல்தானியத்தில் இழந்த பல பகுதிகளை மீட்பதே கியாசுதீன் துக்ளக்கிற்கு பெரும்பணியாக அமைந்தது.

காரணம்: அலாவுதீன் கில்ஜியின் இறப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள்.

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமே.

(2) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

(3) காரணமும் கூற்றும் தவறானவை.

(4) கூற்று தவறு: காரணம் சரி.

69. கூற்று I: செங்கிஸ்கானின் பேரனும், ஈரானின் மங்கோலிய வைஸ்ராயுமான குலகுகான் என்பாரிடமிருந்து “மங்கோலியர்கள் சட்லஜ் நதியைக் கடந்து படையெடுத்து வரமாட்டார்கள்” எனும் உறுதிமொழியைப் பால்பன் பெற்றார்.

கூற்று II: மங்கோலியரின் தாக்குதல்களிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காகப் பால்பன் பல கோட்டைகளைக் கட்டினார்.

(1) கூற்று I மற்றும் II சரி

(2) கூற்று I தவறு ஆனால் II சரி

(3) கூற்று I மற்றும் II தவறு

(4) கூற்று I சரி ஆனால் II தவறு

70. தவறான கூற்றைக் கண்டறியவும்.

(1) 1206இல் கோரி முகமதுவின் மரணத்திற்குப் பின்னர், அவருடைய அடிமையான குத்புதீன் ஐபக், இந்தியாவிலிருந்து துருக்கிய பகுதிகளுக்குத் தன்னை அரசனாக அறிவித்துக் கொண்டார்.

(2) ரஸ்ஸியா, தனது ஆட்சிக்கு எதிராகச் சதி செய்வோரைப் பற்றியும் இடையூறு ஏற்படுத்துவோர் பற்றியும் செய்திகள் சேகரிக்க ஒற்றர்கள் துறையொன்றை நிறுவினார்.

(3) மங்கோலியரின் தாக்குதலிலிருந்து தனது நாட்டைப் பாதுகாக்கப் பால்பன் கோட்டைகளைக் கட்டினார்.

(4) இப்ராகிம் லோடி 1526இல் பாபரால் தோற்கடிக்கப்பட்டார்.

71. தவறான கூற்றைக் கண்டறியவும்.

(1) சுல்தான் கைகுபாத் என்ற பெயரில் நாட்டை ஆண்டவர் ஜலாலுதீன் கில்ஜி ஆவார்.

(2) முகமது பின் துக்ளக் மிகவும் கற்றறிந்த மனிதர். ஆனாலும் அவர் குரூரம் நிறைந்தவர்.

(3) பிரோஷ் ஷா துக்ளக் 1200 புதிய தோட்டங்களை உருவாக்கியுள்ளார்.

www.kalvinews.com

(4) கி.பி.1489இல் பகலூல் லோடியைத் தொடர்ந்து அவரது மகன் இப்ராகிம் லோடி அரசப் பதவியேற்றார்.

72. பொருத்துக.

a. துக்ரில்கான் - i. காராவின் ஆளுநர்
b. அலாவுதீன் - ii. ஜலாலுதீன் யாகுத்
c. பகலூல் லோடி - iii. வங்காள ஆளுநர்
d. ரஸ்ஸியா - iv. சிர்கந்தின் ஆளுநர்

(1) 1 - ii 2 - i 3 - iv 4 - iii (2) 1 - iii 2 - i 3 - iv 4 - ii
(3) 1 - iv 2 - i 3 - ii 4 - iii (4) 1 - iii 2 - iv 3 - i 4 - ii

73. பிரோஷ் ஷா துக்ளக் தனது ஆட்சிக்காலத்தில் _______ புதிய தோட்டங்களை உருவாக்கினார்.

(1) 30 (2) 1000 (3) 1200 (4) 1500

74. இல்துமிஷை சுல்தானாகத் தேர்வு செய்தவர் _______.

(1) மக்கள் (2) ஆளுநர்கள்
(3) இல்துமிஷின் தந்தை (4) துருக்கிய பிரபுக்கள்

75. கூற்று 1: குவாரிஜம்-ஷா-ஜலாலுதீன் -க்கு அடைக்கலம் தர மறுத்தார் இல்துமிஷ்
காரணம்: மங்கோலியரின் ஆபத்தைத் தவிர்க்க

(1) கூற்று மற்றும் காரணம் சரி (2)கூற்று சரி, காரணம் தவறு.
(3) கூற்று மற்றும் காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

76. இக்தாதாரின் மற்றொரு பெயர் __________

(1) வீரர் (2) தளபதி (3)முக்தி (4) தோஆப்

77. ஜலாலுதீன் யாகுத் ஓர் _______ அடிமை.

(1) எத்தியோப்பிய (2) துருக்கிய (3) மனவலிமை (4) இந்திய

78. துருக்கிய பிரபுக்கள் ரஸ்ஸியாவை வெறுக்க காரணம் ____________

(1) பெண்ணரசி என்பதால்
(2) துருக்கியர் அல்லாத பிரபுக்களுக்கு ஆதரவாக இருந்ததால்
(3) மனவலிமை அற்றவர் என்பதால்
(4) நிர்வாகத்திறமை இன்மையால்

79. ஒற்றர் துறையை நிறுவியவர் ___________

(1) பால்பன் (2) ரஸ்ஸியா (3) இல்துமிஷ் (4) ஜூனாகான்

80. செங்கிஸ்கான் பேரன் _______

(1) தைமூர் (2) துக்ரில்கான் (3) குலகுகான் (4) சையது

81. அலாவுதீன் கில்ஜியின் தலைமைத் தளபதி __________

(1) சலீம் (2) ஜலாலுதீன் யாகுத்
(3) கியாசுதீன் (4) மாலிக்கபூர்

www.kalvinews.com

82. போரில் தோற்கும் நிலையில் பெண்கள் தீக்குள் புகுந்து உயிரை மாய்த்துக்கொள்ளும் முறை _______.

(1) சதி (2) ஜவ்ஹர் (3) தலாக் (4) நாயிப்

83. கட்டாய உணவு தானியக் கொள்முதல் முறையை அறிமுகம் செய்தவர் _______.

(1) அலாவுதீன் கில்ஜி (2) ஜலாலுதீன் கில்ஜி

(3) முகமது பின் துக்ளக் (4) பால்பன்

84. கூற்று 1: ஜூனாக்கான் வாராங்கலை வென்று பெரும் செல்வத்தை கொள்ளையடித்தார்.

கூற்று 2: இச்செல்வத்தினைக் கொண்டு துக்ளகாபாத் நகரை நிர்மாணம் செய்தார் ஜூனாகான்.

(1) கூற்று 1 மற்றும் 2 தவறு

(2) கூற்று 1 மற்றும் 2 சரி

(3) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

(4) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

85. _______ ஆம் ஆண்டில் வங்காளம் சுதந்திர அரசானது.

(1) 1303 (2) 1335 (3) 1346 (4) 1351

86. நிலவரியை பணமாக வசூலித்தவர் ___________

(1) முகமது பின் துக்ளக் (2) கியாசுதீன் துக்ளக்

(3) பெரோஷா துக்ளக் (4) இல்துமிஸ்

87. பிரோஷ் ஷா நிர்மாணிக்காத நகரம் ___________

(1) பிரோசாபாத் (2) ஜான்பூர் (3) சித்தூர் (4) ஹிசார்

88. சாமர்கண்ட் பகுதியை ஆட்சி செய்தவர் _____________

(1) தைமூர் (2) செங்கிஸ்கான் (3) துக்ரில்கான் (4) சாமரின்

89. தைமூரின் படையெடுப்பால் டெல்லிக்கு அடுத்து பாதிப்படைந்த பகுதி ____________

(1) பஞ்சாப் (2) சிந்து (3) சித்தூர் (4) ராஜஸ்தான்

90. குத்புதீன் தனது தலைநகரை _________ லிருந்து டெல்லிக்கு மாற்றினார்.

(1) புனே (2) லாகூர் (3) தௌலதாபாத் (4) ஆக்ரா

91. காலத்தின் அடிப்படையில் ஆட்சிபுரிந்தவர்களின் சரியான வரிசை முறை ____________

(1) ரசியா (2) பால்பன் (3) இல்துமிஷ் (4) ஐபெக்

(1) 4, 3, 2, 1 (2) 4, 3, 1, 2 (3) 4, 1, 2, 3 (4) 4, 1, 3, 2

92. இந்தோ சாராசனிக் கலை வடிவத்தின் கட்டட வடிவம் _______ பாணியில் இருக்கும்.

(1) பாரசீக (2) இந்திய (3) துருக்கிய (4) அரேபிய

93. கூற்று 1: மியோக்கள் மீவாட்டை சேர்ந்தவர்கள்.

கூற்று 2: மியோக்கள் வடமேற்கு இந்திய ராஜபுத்திர முஸ்லீம் இனத்தவர்.

(1) கூற்று 1 மற்றும் 2 சரி (2) கூற்று 1 மற்றும் 2 தவறு

(3) கூற்று 1 சரி, 2 தவறு (4) கூற்று 1 தவறு, 2 சரி

www.kalvinews.com

94. பொருந்தாததைத் தேர்வு செய்க.

(1) ஐபெக் (2) இல்துமிஷ் (3) கியாசுதீன் துக்ளக் (4) கியாசுதீன் பால்பன்

95. பொருந்தாததைத் தேர்வு செய்க.

(1) குதுப்மினார் (2) அலெய் தர்வாசா (3) ஜும்மா மசூதி (4) மோத்தி மசூதி

96. பொருத்துக

(i) அடிமை வம்சம் - a. பிரோஷ் ஷா

(ii) கில்ஜி வம்சம் - b. இப்ராஹிம்

(iii) துக்ளக் வம்சம் - c. அலாவுதீன்

(iv) லோடி வம்சம் - d. பால்பன்

(1) i – d ii – c iii – a iv - b

(2) i – a ii – c iii – d iv - b

(3) i – d ii – c iii – b iv - a

(4) i – c ii – d iii – a iv - b

97. கீழ்வருவனவற்றுள் சரியான கூற்று/ கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும் (NMMS-2020-21)

i. இல்துமிஷ் தனது படைகளில் பணியாற்றியோர்க்கு இக்தாக்களை (நிலங்கள்) வழங்கினார்.

ii. 'இக்தா' என்பது இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உயர்பதவிக்காக கொடுக்கப்பட்ட நிலமாகும்

iii. நிலத்தைப் பெற்றவர் இக்தாதார் அல்லது முக்தி என்றழைக்கப்பட்டார்.

iv. இக்தாதார் தனக்கு வழங்கப்பட்ட நிலங்களிலிருந்து வரிவசூல் செய்து கொள்வார்.

(1) i மற்றும் ii மட்டும்

(2) iii மற்றும் iv மட்டும்

(3) ii மட்டும்

(4) i, iii மற்றும் iv மட்டும்

98. தவறான இணையைக் கண்டறியவும் (NMMS-2020-21)

(1) குத்புதீன் ஐபக் - குவ்வத்-உல்-இஸ்லாம்-மஸ்ஜித்

(2) இல்துமிஷ் - குதுப்மினாருக்கு அடிக்கல் நாட்டியவர்

(3) ஔரங்கசீப் - ஆலம்கீர்

(4) முகமது கோரி மற்றும் பிருதிவிராஜ் சௌகான் - தரைன் போர்

99. _______ என்பவரின் மகள் ரசியா சுல்தானா (NMMS 2019-20)

(1) இல்துமிஷ் (2) முகமது கோரி

(3) முகமது கஜினி (4) குத்புதீன் ஐபெக்

100. துக்ளக் ஆட்சியில் வேலைவாய்ப்பு அமைப்பை ஏற்படுத்தியவர் _______. (NMMS-2018)

(1) முகமது பின் துக்ளக் (2) பிரோஷ் துக்ளக்

(3) கியாசுதீன் துக்ளக் (4) நாசிர்-உத்-தீன் முகமது துக்ளக்

www.kalvinews.com

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (4) | **21** | (1) | **41** | (2) | **61** | (1) | **81** | (4) |
| **2** | (1) | **22** | (4) | **42** | (3) | **62** | (3) | **82** | (2) |
| **3** | (3) | **23** | (1) | **43** | (2) | **63** | (2) | **83** | (1) |
| **4** | (4) | **24** | (2) | **44** | (3) | **64** | (3) | **84** | (3) |
| **5** | (2) | **25** | (3) | **45** | (4) | **65** | (1) | **85** | (3) |
| **6** | (3) | **26** | (1) | **46** | (1) | **66** | (1) | **86** | (1) |
| **7** | (1) | **27** | (2) | **47** | (1) | **67** | (2) | **87** | (3) |
| **8** | (2) | **28** | (1) | **48** | (3) | **68** | (1) | **88** | (1) |
| **9** | (1) | **29** | (3) | **49** | (1) | **69** | (1) | **89** | (1) |
| **10** | (1) | **30** | (1) | **50** | (2) | **70** | (2) | **90** | (2) |
| **11** | (4) | **31** | (3) | **51** | (4) | **71** | (4) | **91** | (1) |
| **12** | (1) | **32** | (3) | **52** | (3) | **72** | (2) | **92** | (1) |
| **13** | (1) | **33** | (1) | **53** | (1) | **73** | (3) | **93** | (1) |
| **14** | (4) | **34** | (2) | **54** | (2) | **74** | (4) | **94** | (3) |
| **15** | (2) | **35** | (4) | **55** | (3) | **75** | (1) | **95** | (3) |
| **16** | (2) | **36** | (4) | **56** | (1) | **76** | (3) | **96** | (1) |
| **17** | (3) | **37** | (1) | **57** | (2) | **77** | (1) | **97** | (4) |
| **18** | (1) | **38** | (3) | **58** | (3) | **78** | (2) | **98** | (2) |
| **19** | (3) | **39** | (3) | **59** | (1) | **79** | (1) | **99** | (1) |
| **20** | (1) | **40** | (1) | **60** | (4) | **80** | (3) | **100** | (2) |

www.kalvinews.com

## வகுப்பு - 7 - பருவம் - 1 - புவியியல்

### 1. புவியின் உள்ளமைப்பு

**தொகுப்பு:**
**திரு.கோ.கு.வரதராஜன், M.Sc., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, பெருந்தலையூர்,**
**ஈரோடு மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.செ.பெரியசாமி, M.Sc.,B.Ed.,M.A.,M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி,**
**கொ.ஒட்டப்பட்டி, கரூர் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

**புவியின் உள்ளமைப்பு**

- புவியின் உள்ளமைப்பினை ஓர் ஆப்பிள் பழத்துடன் ஒப்பிடலாம். புவிக்கோளம் மூன்று செறிந்த அடுக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

  **1. புவி மேலோடு 2. கவசம் 3. புவிக்கருவம்**

**புவி மேலோடு (Crust)**

- புவியின் வெளிப்புற அடுக்கு மேலோடு ஆகும். இதன் சராசரி பருமன் 5 முதல் 30 கி.மீ வரை உள்ளது. இதன் பருமன் கண்டப்பகுதிகளில் 35 கிலோமீட்டர்களாகவும், கடற்தளங்களில் 5 கிலோ மீட்டர்களாகவும் உள்ளது.
- கடல் மேலோடுகள் இலகுவான மற்றும் அடர்ந்த பாறைகளின் கலவையாகும். பெரும்பாலும் கடல் மேற்பரப்பானது பசால்ட் பாறையால் ஆனது.
- பூமி ஒரு நீல நிறக் கோள். 71 % பூமியின் பரப்பு நீரால் சூழப்பட்டுள்ளது.
- புவி மேலோடு இரண்டு பிரிவுகளைக் கொண்டது. கண்டங்களின் மேற்பகுதி கரும்பாறைகளால் ஆனது. இப்பகுதி முக்கிய கனிமக் கூறுகளான சிலிக்கா மற்றும் அலுமினிய தாதுக்களால் ஆனது. இப்பகுதியை **சியால்** (SIAL) என்று அழைக்கிறோம். இதன் சராசரி அடர்த்தி 2.7 கிராம் / செமீ$^3$
- மேலோட்டின் கீழ்ப்பகுதி அடர்ந்த பசால்ட் பாறைகளாலான ஓர் தொடர்ச்சியான பிரதேசமாகும்.
- கடல் தரைகளாலான இப்பகுதி சிலிக்கா மற்றும் மெக்னீசியத்தை மூலக்கூறுகளாக கொண்டுள்ளது. எனவே இப்பகுதியை **சிமா** (SIMA) என்று அழைக்கிறோம். இதன் சராசரி அடர்த்தி 3.0 கி / செமீ$^3$ .
- சியாலும் சிமாவும் சேர்ந்து புவியின் மேலோட்டின் கருப்பொருளாக அமைகின்றது.
- சியாலின் அடர்த்தி சிமாவின் அடர்த்தியைவிடக் குறைவானதால், இவை சிமா அடுக்கின் மீது மிதக்கிறது.

**கவசம் (Mantle)**

- புவி மேலோட்டின் கீழடுக்கு **கவசம்** என அழைக்கப்படுகிறது. புவி மேலோடும் கவசமும் **மோஹோரோவிசிக்** என்ற எல்லை மூலம் பிரிக்கப்படுகிறது.
- கவசமானது சுமார் 2900 கி.மீ தடிமன் கொண்டதாக காணப்படுகிறது.
- கவசத்தை இரண்டாக பிரிக்கலாம்.

www.kalvinews.com

(i) **மேல் கவசம்**

மேல் கவசம் 3.4 முதல் 4.4 கி / செ.மீ$^3$ அடர்த்தியுடன் 700 கி.மீ ஆழம் வரை உள்ளது.

(ii) **கீழ்க்கவசம்**

கீழ்க்கவசம் 4.4 முதல் 5.5 கி / செ.மீ$^3$ அடர்த்தியுடன், 700 முதல் 2,900 கி.மீ ஆழம் வரை காணப்படுகிறது.

**புவிக் கருவம் (Core)**

- புவியின் மையப்பகுதி புவிக்கருவம் எனக் குறிப்பிடப்படுகிறது. புவிக்கருவம் **பேரிஸ்பியர்** என்றும் அழைக்கப்படுகிறது.
- வெய்சார்ட் குட்டன்பெர்க் என்ற இடைவெளி புவிக்கருவத்திற்கும் கவசத்திற்கும் இடையே எல்லையாக அமைகின்றது.
- புவிக்கருவம் இரண்டு அடுக்குகளைக் கொண்டுள்ளது.

(i) **வெளிக்கருவம்**

இது திரவ நிலையில் உள்ள இரும்பு குழம்பாலானது. இக்கருவம் 2,900 கி.மீ முதல் 5,150 கி.மீ ஆழம் வரை காணப்படுகிறது.

(ii) **உட்கருவம்**

இது திட நிலையில் உள்ள நிக்கல் (Ni) மற்றும் இரும்பால் (Fe) ஆனது, நைஃப் என்ற உட்கருவம் 5,150 முதல் 6,370 கி.மீ ஆழம் வரை பரந்துள்ளது. இதன் அடர்த்தி 13.0 கிராம் / செ.மீ$^3$ ஆகும்.

- புவியின் கொள்ளளவில் புவி மேலோடு 1%, கவசம் 84%, மீதமுள்ள 15% புவிக்கருவம் உள்ளது. புவியின் ஆரம் 6,371 கி.மீ. ஆகும்.

**புவியின் நகர்வுகள்**

- பாறைக் கோளத்தில் ஏற்படும் உடைப்பு புவித் தட்டுகளை உருவாக்குகின்றது. நிலத் தட்டுகளின் நகர்வுகளே கண்டத்தட்டு நகர்வுகளாகும்.
- அடர்த்தி வேறுபடுவதால் இரண்டு தட்டுகள் மோதிக் கொள்ளும்போது கடல் அகழிகள் உருவாகின்றன.
- தட்டுகள் ஒன்றின் மேல் மற்றொன்று மோதும் போது வளைந்து மடிப்புகளை உருவாக்குகின்றன. இவ்வகையில்தான் இமயமலைச் சிகரங்கள் உருவானது.
- கண்டத்தட்டு நகர்வுகள் புவியின் மேற்பரப்பில் பல்வேறு மாற்றங்களை உருவாக்குகின்றன.
- புவியின் உள்ளிருந்து வெளிப்படும் ஆற்றலானது அக உந்து சக்திகள் எனவும், புவியின் வெளிப்புறத்தில் இருந்து இயங்கும் சக்திகள் புற உந்து சக்திகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- அக உந்து சக்திகள் நிலநடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்பு போன்ற அளவற்ற பேரழிவுகளை புவியின் மேற்பரப்பில் ஏற்படுத்துகின்றன.
- புவி மேலோட்டிற்கும் கவச மேலடுக்கிற்கும் இடையே உள்ள பகுதியே மென்பாறைக்கோளம் ஆகும்.

**நிலநடுக்கம்**

- புவியின் மேலோட்டின், ஒரு பகுதியில் ஏற்படும் திடீர் நகர்வானது, நிலத்தை அதிரவைக்கும் அசைவையும், நடுக்கத்தையும் ஏற்படுத்துவதையே நிலநடுக்கம் என்கிறோம்.
- எந்த ஒரு இடத்தில் நிலநடுக்கத்தை ஏற்படுத்துகின்றனவோ அதனை நிலநடுக்க மையம் என்கிறோம்.

- மையத்திற்கு மேல் புவியோட்டு பகுதியில் அமைந்திருக்கும் புள்ளி நிலநடுக்க மேல் மையப்புள்ளி என அழைக்கப்படுகிறது.
- புவி அதிர்வு அலைகளை பதிவு செய்யும் கருவியை **நில அதிர்வுமானி (சீஸ்மோகிராப்)** என குறிப்பிடுகின்றனர். இதன் ஆற்றல் செறிவின் அளவினை **ரிக்டர்** அளவையைக் கொண்டு கணக்கிடுகின்றனர். ரிக்டர் **அளவை 0 வில் தொடங்கி 9 வரை** உள்ளது.
- புவி அதிர்வானது புவி மேற்பரப்பில் அலைகளை பரவச் செய்கிறது. இதனால் புவியின் மேலோட்டில் பிளவு ஏற்படுகிறது.

**நிலநடுக்கத்தின் விளைவுகள்:**

- நிலநடுக்கங்கள், மலைப்பிரதேசங்களில் நிலச்சரிவுகளை ஏற்படுத்துகின்றன.
- கட்டடங்கள் இடிந்து விழுவது நிலநடுக்கத்தின் முக்கிய விளைவாகும்.

**மூன்று வகையான நில அதிர்வலைகள்:**

1. **P அலைகள் (அல்லது) அழுத்த அலைகள்**
2. **S அலைகள் (அல்லது) முறிவு அலைகள்**
3. **L அலைகள் (அல்லது) மேற்பரப்பு அலைகள்**

- கடலுக்கு அடியில் அல்லது கடற்கரை ஓரங்களில் ஏற்படும் நிலநடுக்கமானது கடல் பேரலைகளை (சுனாமி) ஏற்படுத்துகின்றன.
- சுனாமி என்ற ஜப்பானிய சொற்றொடர் நிலநடுக்கத்தால் கடலில் ஏற்படும் பெரிய அலைகளை குறிப்பிடுகின்றது.
- ஜப்பானிய கடலோரப்பகுதி மற்றும் ஏனைய பசிபிக் கடலோரப் பகுதிகளிலும் சுனாமியின் நிகழ்வு அதிகம் காணப்படுகிறது.
- இந்தியப் பெருங்கடலில் 26 டிசம்பர் 2004 அன்று இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளின் கடலோரப் பகுதிகளில் சுனாமி ஏற்பட்டது.

**நிலநடுக்கத்தின் பரவல்:**

- நிலநடுக்கப் பிரதேசங்கள் பெரும்பாலும் எரிமலைப் பகுதிகளை ஒட்டியே ஏற்படுகின்றன.
- உலகின் நிலநடுக்க பகுதிகளின் பெரும்பகுதி பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ளன.
- உலகில் 68% நிலநடுக்கங்கள் பசிபிக் பெருங்கடல் பகுதியில்தான் ஏற்படுகின்றன.
- மீதமுள்ள 31% நிலநடுக்கங்கள் ஆசியா கண்டத்தில் உள்ள இமயமலைப் பகுதியிலும், வடமேற்கு சீனாவிலிருந்து மத்திய தரைக்கடல் பகுதி வரையிலும் ஏற்படுகின்றன.
- மீதமுள்ள 1% நிலநடுக்கம் வடஆப்பிரிக்காவிலும், செங்கடல் மற்றும் சாக்கடல் பகுதிகளின் பிளவு பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் ஏற்படுகின்றன.
- இந்தியாவின் இமயமலைப் பகுதிகள், கங்கை - பிரம்மபுத்திரா சமவெளிகள் நிலநடுக்க பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.
- 1991 இல் உத்திரகாசியிலும், 1999 இல் சாமோலியிலும் மோசமான நிலநடுக்கங்கள் ஏற்பட்டது.
- தக்காண பீடபூமியில் இரண்டு மிக மோசமான நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

  **(i) 1967 இல் கெய்னா (மஹாராஷ்டிரா)**

  **(ii) 1993 இல் லாத்தூர்**

**எரிமலைகள்**

- புவியின் மேற்பரப்பில் உள்ள பிளவு அல்லது துளை வழியே வெப்பம் மிகுந்த **மாக்மா** என்னும் பாறைக்குழம்பு வெளியேறுவதையே எரிமலை என்கிறோம்.

www.kalvinews.com

- எரிமலையின் வாய் வட்ட வடிவில் காணப்படும்.எரிமலையின் திறப்பு அல்லது வாய்ப்பகுதி துளை (Vent) என அழைக்கப்படுகிறது.
- புவியினுள் உள்ள வாயுக்களுடன் கூடிய பாறைக்குழம்பு **மாக்மா** எனவும், இவை புவி மேற்பரப்பிற்கு வரும்பொழுது **"லாவா"** எனவும் அழைக்கப்படுகிறது. எரிமலையின் திறப்பு **எரிமலை வாய்** என அழைக்கப்படுகிறது.
- கூம்பு வடிவ குன்றின் உச்சி பகுதியில் தோன்றும் பள்ளத்தையே எரிமலைப் பள்ளம் என்கின்றனர்.

**எரிமலை வெடிப்பிற்கான காரணங்கள்:**

- புவியின் உள் ஆழம் அதிகரிக்க, அதிகரிக்க வெப்பமானது **ஒவ்வொரு 32 மீட்டருக்கும் $1^0$ C** வீதம் உயர்ந்து கொண்டே செல்கிறது.
- வெப்பத்துடன் அழுத்தமும் அதிகரிக்கின்றது.
- 15 கி. மீ ஆழத்தில் அழுத்தமானது சதுர செ.மீக்கு 5 டன்கள் என்ற அளவில் உயருகின்றது. இத்தகைய நிலையில் புவியினுள் உள்ள பாறையானது குழம்பு நிலைக்கு மாறுகிறது இதனையே மாக்மா என்கிறோம்.
- எரிமலைகள் பற்றிய அறிவியல்பூர்வமான ஆய்வுகளை **எரிமலை ஆய்வியல் (Volcanology)** என அழைக்கின்றோம். ஆய்வு மேற்கொள்ளும் வல்லுநர்கள் எரிமலை ஆய்வியலாளர்கள் (Volcanologist) என அழைக்கப்படுகின்றனர்.

**எரிமலை வெடிப்புகளின் தன்மைகள்:**

- சில சமயங்களில் எரிமலைக் குழம்பின் வெளியேற்றம் மற்றும் பரவல் மெதுவாக நடைபெறுகின்றது. இதனையே பிளவு வெடிப்பு வகை எரிமலை என்கிறோம். சில சமநிலங்களும், பீடபூமிகளும் இம்முறையில் தோன்றின.
- எடுத்துக்காட்டு: இந்தியாவின் தக்காண பீடபூமி மற்றும் வட அமெரிக்காவின் கொலம்பியா பீடபூமி.
- இந்தோனேசியாவில், கரக்காட்டாவோ தீவிலுள்ள எரிமலை, 27 ஆகஸ்ட் 1883 ம் ஆண்டு வெடித்து மாக்மாவை வெளியேற்றியது.
- லாவாவின் பரவல் மற்றும் வேகம் அதிலுள்ள சிலிகா மற்றும் நீரின் அளவை பொறுத்ததாகும்.
- பேரென் தீவானது அந்தமான் தலைநகரிலிருந்து 138 கி.மீ வடகிழக்கே அமைந்துள்ளது. சுமத்ராவில் இருந்து மியான்மர் வரை உள்ள நெருப்பு வளையத்தினுள் இருக்கும் ஒரு செயல்படும் எரிமலை இதுவே ஆகும். கடைசியாக 2017 ஆம் ஆண்டில் இது எரிமலைக் குழம்பை வெடித்து வெளியேற்றியது.

**எரிமலையின் வகைகள்:**

- எரிமலைகள் மூன்று வகைப்படும்

1. **செயல்படும் எரிமலை** 2. **உறங்கும் எரிமலை** 3. **செயலிழந்த எரிமலை**

1. **செயல்படும் எரிமலை**

- அடிக்கடி வெடித்தும், பாறைக் குழம்பை வெளியேற்றும் எரிமலைகள் செயல்படும் எரிமலைகள் எனப்படும்.
- பசிபிக் கடற்கரையோரமாக உள்ள பெரும்பாலான எரிமலைகள் இவ்வகையைச் சார்ந்தது. சராசரியாக உலகெங்கும் 600 செயல்படும் எரிமலைகள் உள்ளன.

www.kalvinews.com

- அவற்றுள் மத்திய தரைக்கடல் பகுதியிலுள்ள ஸ்ட்ராம்போலி, அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள செயிண்ட் ஹெலன், பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள பினாடுபோ போன்றவையும் அடங்கும்.
- ஹவாய் தீவிலுள்ள மவுனாலோ எரிமலை உலகின் மிகப்பெரிய செயல்படும் எரிமலை ஆகும்.
- ஸ்ட்ராம்போலி எரிமலை மத்திய தரைக்கடலின் கலங்கரை விளக்கம் என அழைக்கப்படுகிறது.

2. **உறங்கும் எரிமலை**

- பல வருடங்களாக எரிமலைக் குழம்பை வெளியேற்றுவதற்கான எந்த ஒரு அறிகுறியும் வெளிப்படுத்தாமல், எப்போது வேண்டுமானாலும் செயல்படலாம் என்ற நிலையில் உள்ள எரிமலைகள் உறங்கும் எரிமலைகள் என அழைக்கப்படுகின்றன.
- இத்தாலியின் வெசுவியஸ், ஜப்பானில் பியூஜியாமா, இந்தோனோஷியாவில் கரக்கடோவா ஆகியவை உறங்கும் எரிமலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

3. **செயலிழந்த எரிமலை**

- வெடிப்பு ஆற்றல் முழுவதையும் இழந்து சுமார் 1000 ஆண்டுகளாக வெடிப்பதை நிறுத்திவிட்ட எரிமலை செயலிழந்த எரிமலை என அழைக்கப்படுகிறது.
- மியான்மரின் போப்பா, ஆப்பிரிக்காவின் கிளிமாஞ்சரோ மற்றும் கென்யா எரிமலைகள் செயலிழந்த எரிமலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**உலக எரிமலை பரவல்:**

- **அதிகமாக வளைந்த அல்லது பிளவுபட்ட பகுதிகளில் தான் எரிமலை வெடிப்பு ஏற்படுகிறது.**
- உலகில் மூன்று முக்கிய எரிமலை நிகழ்வு பகுதிகள் உள்ளன. அவை,

1. **பசிபிக் வளையப் பகுதி**
2. **மத்திய கண்டப் பகுதி**
3. **மத்திய அட்லாண்டிக் பகுதி**

1. **பசிபிக் வளையப் பகுதி**

- இந்த எரிமலைப் பகுதியானது குவிய கடல்தட்டின் எல்லைப் பகுதியில் அமையப்பெற்றுள்ளது. பசிபிக் பெருங்கடலின் கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ளது.
- மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் இப்பகுதியில் அமைந்திருப்பதால் இப்பகுதியை **பசிபிக் நெருப்பு வளையம் (Pacific Ring of Fire)** என்று அழைக்கின்றனர்.

2. **மத்திய கண்டப் பகுதி**

- முக்கிய எரிமலைகளான வெசுவியஸ், எட்னா, ஸ்ட்ராம்போலி, கிளிமாஞ்சாரோ மற்றும் கென்யா எரிமலைகள் மத்திய கண்டப்பகுதியில் அமைந்துள்ளன. இமயமலைப் பகுதியில் ஆச்சரியப்படும் வகையில் எந்த ஒரு செயல்படும் எரிமலையும் இடம்பெறவில்லை.

3. **மத்திய அட்லாண்டிக் பகுதி**

- மத்திய அட்லாண்டிக் மலைத்தொடரில் அமைந்துள்ள ஐஸ்லாந்தில் செயல்படும் எரிமலைகள் அமைந்துள்ளன. செயிண்ட் ஹெலினா மற்றும் அசோர்ஸ் தீவுகள் ஆகியவை இதற்கு வேறு உதாரணங்களாகும்.

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்:**

1. புவியின் உள்ளமைப்பை _______ பழத்துடன் ஒப்பிடலாம்.
   (1) ஆப்பிள் (2) ஆரஞ்சு (3) கொய்யா (4) மாதுளை

2. புவிக்கோளம் _______ அடுக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
   (1) இரண்டு (2) நான்கு (3) மூன்று (4) ஐந்து

3. புவியின் வெளிப்புற அடுக்கு _______.
   (1) கவசம் (2) உட்கருவம் (3) மாக்மா (4) மேலோடு

4. புவி மேலோட்டின் சராசரி பருமன் _______ முதல் _______ வரை உள்ளது.
   (1) 3 முதல் 30 கி.மீ. வரை (2) 5 முதல் 30 கி.மீ. வரை
   (3) 4 முதல் 40 கி.மீ. வரை (4) 5 முதல் 25 கி.மீ. வரை

5. புவி மேலோட்டின் பருமன் கண்டப்பகுதியில் _______ ஆக உள்ளது.
   (1) 35 கி.மீ. (2) 50 கி.மீ. (3) 15 கி.மீ. (4) 45 கி.மீ.

6. புவி மேலோட்டின் பருமன் கடற்தளத்தில் _______ ஆக உள்ளது.
   (1) 3 கி.மீ. (2) 4 கி.மீ. (3) 7 கி.மீ. (4) 5 கி.மீ.

7. கடல் மேலோடுகள் _______ மற்றும் _______ பாறைகளின் கலவையாகும்.
   (1) மென்மையான மற்றும் கடினமான (2) சொரசொரப்பான மற்றும் வழவழப்பான
   (3) இலகுவான மற்றும் அடர்ந்த (4) உயரமான மற்றும் கூர்மையான

8. பெரும்பாலும் கடலின் மேற்பரப்பானது _______ பாறைகளால் ஆனது.
   (1) கடின (2) மென்மையான (3) கரும்பாறை (4) பசால்ட்

9. நீலக்கோள் என அழைக்கப்படுவது எது?
   (1) வியாழன் (2) வெள்ளி (3) புதன் (4) புவி

10. புவியின் பரப்பு _______ நீரால் சூழப்பட்டுள்ளது.
   (1) 65% (2) 70% (3) 71% (4) 40%

11. புவி மேலோடு _______ பிரிவுகளைக் கொண்டுள்ளது.
   (1) 2 (2) 3 (3) 4 (4) 1

12. கண்டங்களின் மேற்பகுதி _______ ஆல் ஆனது.
   (1) நீர் (2) மண் (3) மணல் (4) கருங்கற்பாறை

13. புவி மேலோட்டின் மேல் பகுதி _______ மற்றும் _______ தாதுக்களால் ஆனது.
   (1) சிலிக்கா, அலுமினியம் (2) மைக்கா, துத்தநாகம்
   (3) சிலிக்கா, மெக்னீசியம் (4) தாமிரம், இரும்பு

14. புவி மேலோட்டின் மேல் பகுதி _______ என அழைக்கப்படுகிறது.
   (1) வெளிகவசம் (2) சியால் (3) உட்கவசம் (4) சிமா

15. சியாலின் சராசரி அடர்த்தி _______.
   (1) 3.7 கிராம் / செ. மீ$^3$ (2) 3.3 கிராம் / செ.மீ$^3$ (3) 2.7 கிராம் / செ.மீ$^3$ (4) 2.5 கிராம் / செ.மீ$^3$

www.kalvinews.com

16. புவி மேலோட்டின் கீழ்ப்பகுதி _______ பாறைகளால் ஆனது.

(1) சியால் (2) கரும்பாறை (3) பசால்ட் (4) அடர்ந்த

17. புவி மேலோட்டின் கீழ்ப்பகுதி _______ மற்றும் _______ மூலக்கூறுகளாக கொண்டுள்ளது.

(1) சிலிக்கா, தாமிரம் (2) சிலிக்கா, மெக்னீசியம்

(3) மைக்கா, துத்தநாகம் (4) இரும்பு, அலுமினியம்

18. புவி மேலோட்டின் கீழ்ப்பகுதி _______ என அழைக்கப்படுகிறது.

(1) சிமா (2) சியால் (3) உட்கவசம் (4) கருவம்

19. சிமாவின் சராசரி அடர்த்தி

(1) 4.0 கிராம் / செ. மீ$^3$ (2) 3.0 கிராம் / செ.மீ$^3$ (3) 2.0 கிராம் / செ.மீ$^3$ (4) 3.3 கிராம் / செ.மீ$^3$

20. புவி மேலோட்டின் கருப்பொருளாக இருப்பது _______ மற்றும் _______.

(1) உட்கரு, வெளிக்கரு (2) உட்கவசம், வெளிகவசம்

(3) சியால், சிமா (4) கடல், கண்டம்

21. புவி மேலோட்டின் கீழ் அடுக்கு _______.

(1) கவசம் (2) சியால் (3) சிமா (4) உட்கரு

22. புவி மேலோட்டையும் கவசத்தையும் பிரிக்கும் எல்லை

(1) வெய்சார்ட் (2) உட்கருவம்

(3) மோஹோரோவிசிக் (4) பசால்ட்

23. புவியின் கவசமானது _______ கி. மீ தடிமன் கொண்டது.

(1) 2000 கி.மீ. (2) 3000 கி.மீ. (3) 4000 கி.மீ. (4) 2900 கி.மீ.

24. புவியின் கவசத்தை _______ ஆக பிரிக்கலாம்.

(1) 2 (2) 3 (3) 4 (4) 5

25. புவியின் மேல்கவசத்தின் அடர்த்தி _______ முதல் _______.

(1) 4.4 முதல் 5.4 கி / செ.மீ$^3$ (2) 4.4 முதல் 5.0 கி / செ.மீ$^3$

(3) 3.4 முதல் 4.4 கி / செ.மீ$^3$ (4) 2.4 முதல் 3.4 கி / செ.மீ$^3$

26. புவியின் மேல்கவசத்தின் ஆழம் _______ கி.மீ வரை உள்ளது.

(1) 700 கி.மீ (2) 300 கி.மீ (3) 400 கி.மீ (4) 200 கி.மீ

27. புவியின் கீழ்க் கவசத்தின் அடர்த்தி _______ முதல் _______.

(1) 3.4 முதல் 4.4 கி / செ.மீ$^3$ (2) 4.4 முதல் 5.5 கி / செ.மீ$^3$

(3) 2.4 முதல் 3.4 கி / செ.மீ$^3$ (4) 1.4 முதல் 3.4 கி / செ.மீ$^3$

28. புவியின் கீழ்க் கவசத்தின் ஆழம் _______ முதல் _______ வரை உள்ளது.

(1) 700 முதல் 2900 கி.மீ (2) 900 முதல் 3000 கி.மீ

(3) 600 முதல் 900 கி.மீ (4) 500 முதல் 1500 கி.மீ

29. புவியின் மையப்பகுதி _______ எனப்படுகிறது.

(1) புவிக்கருவம் (2) கவசம் (3) சியால் (4) சிமா

www.kalvinews.com

30. புவிக்கருவம் _______ என்றும் அழைக்கப்படுகிறது.
(1) சியால் (2) சிமா (3) பசால்ட் (4) பேரிஸ்பியர்

31. புவிக்கருவத்திற்கும் கவசத்திற்கும் இடையே எல்லையாக அமைவது _______.
(1) மோஹோரோவிசிக் (2) வெய்சார்ட் குட்டன்பெர்க்
(3) மாக்மா (4) பசால்ட்

32. புவிக் கருவம் _______ அடுக்குகளைக் கொண்டுள்ளது.
(1) 2 (2) 4 (3) 3 (4) 7

33. _______ திரவநிலையில் உள்ள இரும்பு குழம்பாலானது.
(1) உட்கருவம் (2) வெளிக்கருவம் (3) கவசம் (4) மேலோடு

34. வெளிக்கருவம் _______ முதல் _______ ஆழம் வரை காணப்படுகிறது.
(1) 2000 கி.மீ - 3500 கி.மீ (2) 1000 கி.மீ - 1500 கி.மீ
(3) 2900 கி.மீ - 5150 கி.மீ (4) 3500 கி.மீ - 4500 கி.மீ

35. உட்கருவம் திடநிலையில் உள்ள _______ மற்றும் _______ ஆல் ஆனது.
(1) இரும்பு, தாமிரம் (2) செம்பு, அலுமினியம்
(3) மைக்கா, அலுமினியம் (4) நிக்கல், இரும்பு

36. நைஃப் என்ற உட்கருவம் _______ முதல் _______ ஆழம் வரை பரந்துள்ளது.
(1) 5150 - 6370 கி.மீ (2) 5000 - 7000 கி.மீ (3) 4500 - 5000 கி.மீ (4) 3500 - 4000 கி.மீ

37. உட்கருவத்தின் (NIFE) அடர்த்தி _______.
(1) 13.0 கிராம் / செ.மீ$^3$ (2) 12.0 கிராம் / செ.மீ$^3$
(3) 10.0 கிராம் / செ.மீ$^3$ (4) 15.0 கிராம் / செ.மீ$^3$

38. புவியின் கொள்ளளவில் புவி மேலோடு _______ ஆகும்.
(1) 4% (2) 1% (3) 3% (4) 10%

39. புவியின் கொள்ளளவில் கவசம் _______ ஆகும்.
(1) 34% (2) 50% (3) 84% (4) 47%

40. புவியின் கொள்ளளவில் புவிக்கருவம் _______ ஆகும்.
(1) 35% (2) 45% (3) 25% (4) 15%

41. புவியின் ஆரம் _______ ஆகும்.
(1) 7450 கி.மீ (2) 1000 கி.மீ (3) 6371 கி.மீ (4) 4750 கி.மீ

42. பாறைக்கோளத்தில் ஏற்படும் உடைப்பு _______ ஐ உருவாக்குகின்றது.
(1) கற்கோள தட்டுகள் (2) புவித்தட்டுகள் (3) சுனாமி (4) மழை

43. நிலத்தட்டுகளின் நகர்வுகளே _______ நகர்வுகளாகும்.
(1) கண்டத்தட்டு (2) புவித்தட்டு (3) நிலத்தட்டு (4) மடிப்பு

44. அடர்த்தி வேறுபடுவதால் இரண்டு தட்டுகள் மோதிக்கொள்ளும் போது _______ உருவாகின்றன.
(1) மடிப்புகள் (2) பாறைக் குழம்பு (3) சுனாமி (4) கடல் அகழிகள்

www.kalvinews.com

45. தட்டுகள் ஒன்றின் மீது மற்றொன்று மோதும் போது _______ உருவாகின்றன.
(1) கடல் அலை (2) புயல் (3) சுனாமி (4) வளைந்த மடிப்புகள்

46. தட்டுகள் ஒன்றின் மீது மற்றொன்று மோதி உருவான வளைந்த மடிப்புகள் _______.
(1) தக்காண பீடபூமி (2) இமயமலை சிகரம்
(3) காற்றழுத்தம் (4) திபெத் பீடபூமி

47. _______ நகர்வுகள் புவியின் மேற்பரப்பில் பல்வேறு மாற்றங்களை உருவாக்குகின்றன.
(1) மேகம் (2) கடல் அலை (3) கண்டத்தட்டு (4) உட்கருவம்

48. புவியின் உள்ளிருந்து வெளிப்படும் ஆற்றலானது _______ சக்திகள் எனப்படுகிறது.
(1) அக உந்து சக்திகள் (2) புற உந்து சக்திகள்
(3) உந்து சக்திகள் (4) வெப்ப சக்திகள்

49. புவியின் வெளிப்புறத்தில் இருந்து இயங்கும் சக்திகள் _______ என்று அழைக்கப்படுகிறது.
(1) அக உந்து சக்திகள் (2) புற உந்து சக்திகள்
(3) சூரிய சக்தி (4) இயக்க சக்திகள்

50. _______ நிலநடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்பு போன்ற அளவற்ற பேரழிவுகளை புவியின் மேற்பரப்பில் ஏற்படுத்துகின்றன.
(1) புற உந்து சக்திகள் (2) இயக்க சக்திகள்
(3) சூரிய சக்தி (4) அக உந்து சக்திகள்

51. புவி மேலோட்டிற்கும் கவச மேலடுக்கிற்கும் இடையே உள்ள பகுதியே _______ ஆகும்.
(1) சியால் (2) சிமா
(3) மென்பாறைக் கோளம் (4) புவிக்கரு

52. புவியின் மேலோட்டின், ஒரு பகுதியில் ஏற்படும் திடீர் நகர்வானது, நிலத்தை அதிரவைக்கும் அசைவையும், நடுக்கத்தையும் ஏற்படுத்துவதையே _______ என்கிறோம்.
(1) சுனாமி (2) புயல் (3) சீற்றம் (4) நிலநடுக்கம்

53. எந்த ஒரு இடத்தில் நிலநடுக்கத்தை ஏற்படுத்துகின்றனவோ அதனை _______ என்கிறோம்.
(1) வானிலை மையம் (2) ஆய்வுமையம் (3) நிலநடுக்கமையம் (4) புவி மையம்

54. மையத்திற்கு மேல் புவியோட்டு பகுதியில் அமைந்திருக்கும் புள்ளி _______ என அழைக்கப்படுகிறது.
(1) நிலநடுக்க மேல் மையப்புள்ளி (2) ஆதிப்புள்ளி
(3) நிலநடுக்க மையம் (4) ஈர்ப்பு மையம்

55. புவி அதிர்வு அலைகளை பதிவு செய்யும் கருவியை _______ என குறிப்பிடுகின்றனர்.
(1) அழுத்தமானி (2) வெப்பமானி (3) ரிக்டர் (4) நில அதிர்வுமானி

56. நிலநடுக்கத்தின் ஆற்றல் செறிவின் அளவினை _______ மூலம் அளக்கலாம்.
(1) ரிக்டர் அளவுகோல் (2) அழுத்தமானி
(3) வெப்பநிலைமானி (4) நில அதிர்வுமானி

www.kalvinews.com

57. ரிக்டர் அளவை _______ முதல் _______ வரை உள்ளது.
(1) 1, 8 (2) 0, 9 (3) 3, 7 (4) 0, 5

58. புவி அதிர்வானது புவி மேற்பரப்பில் _______ பரவச் செய்கிறது.
(1) வெப்பம் (2) நீராவி (3) அலைகள் (4) எரிமலை குழம்பு

59. _______ ஆல் புவியின் மேலோட்டில் பிளவு ஏற்படுகிறது.
(1) சுனாமி (2) புவி அதிர்வு (3) மழை (4) வெயில்

60. நிலநடுக்கத்தின் முக்கிய விளைவு _______.
(1) வெயில் அதிகரிப்பது (2) மழை அதிகரிப்பது
(3) புயல் (4) கட்டடங்கள் இடிந்து விழுவது

61. நில அதிர்வலைகள் _______ வகைப்படும்.
(1) 4 (2) 3 (3) 5 (4) 2

62. கடலுக்கு அடியில் அல்லது கடற்கரை ஓரங்களில் ஏற்படும் நிலநடுக்கமானது _______ ஐ ஏற்படுத்துகின்றன.
(1) புயல் (2) அலை (3) கடல் பேரலைகள் (4) மழை

63. கடல் பேரலைகளை _______ என்ற ஜப்பானிய சொல் மூலம் குறிப்பிடுகின்றனர்.
(1) புயல் (2) பேரிடர் (3) சூறாவளி (4) சுனாமி

64. _______ மற்றும் _______ ல் சுனாமியின் நிகழ்வு அதிகம் காணப்படுகிறது.
(1) இமயமலை, தக்காண பீடபூமி (2) ஜப்பானிய, பசிபிக் கடலோர பகுதிகள்
(3) அரபிக்கடல், வங்காள விரிகுடா (4) பாலை, வறண்ட நிலங்கள்

65. சுனாமி என்பது _______ சொல்.
(1) ஜப்பானிய (2) அமெரிக்கா (3) இத்தாலி (4) சீனா

66. இந்தியப் பெருங்கடலில் சுனாமி ஏற்பட்ட நாள் _______.
(1) ஜனவரி 25, 2003 (2) டிசம்பர் 26, 2004 (3) ஆகஸ்ட் 15, 2009 (4) ஜூலை 26, 2008

67. உலகின் நிலநடுக்க பகுதிகளின் பெரும்பகுதி _______ பகுதியில் அமைந்துள்ளன.
(1) இந்தியப் பெருங்கடல் (2) அரபிக் கடல்
(3) ஆர்டிக் பெருங்கடல் (4) பசிபிக் பெருங்கடல்

68. உலகில் _______ நிலநடுக்கங்கள் பசிபிக் பெருங்கடலில் தான் ஏற்படுகிறது.
(1) 35% (2) 68% (3) 90% (4) 88%

69. இந்தியாவின் _______ மற்றும் _______ பகுதிகள் நிலநடுக்க பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.
(1) கிழக்கு, மேற்கு தொடர்ச்சி மலை
(2) டெல்லி, மும்பை
(3) தமிழக, கர்நாடக எல்லை
(4) இமயமலை, கங்கை - பிரம்மபுத்திரா சமவெளிகள்

www.kalvinews.com

70. இந்தியாவில் _______ ல் உத்திரகாசியிலும், _______ ல் சாமோலியிலும் மோசமான நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

(1) 1991, 1999 (2) 2000, 2010 (3) 1995, 1998 (4) 2015, 2019

71. தக்காண பீடபூமியில் _______ இல் கெய்னாவிலும், _______ இல் லாத்தூரிலும் மிக மோசமான நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

(1) 1991, 1999 (2) 1947, 1948 (3) 1967, 1993 (4) 1975, 1984

72. புவி மேற்பரப்பில் உள்ள பிளவு அல்லது துளை வழியே வெப்பம் மிகுந்த மாக்மா என்னும் பாறைக் குழம்பு வெளியேறுவதையே _______ என்கிறோம்.

(1) சூறாவளி (2) எரிமலை (3) புயல் (4) சுனாமி

73. எரிமலையின் வாய் _______ வடிவில் காணப்படும்.

(1) வட்ட (2) நீள் வட்ட (3) கூம்பு (4) முக்கோண

74. புவியினுள் உள்ள வாயுக்களுடன் கூடிய பாறைக்குழம்பு _______ எனப்படும்.

(1) பசால்ட் (2) மாக்மா (3) லாவா (4) சுனாமி

75. மாக்மா என்ற பாறைக்குழம்பு புவியின் மேற்பரப்பிற்கு வரும் போது _______ என அழைக்கப்படுகிறது.

(1) கவசம் (2) உட்கருவம் (3) லாவா (4) சிமா

76. புவியிலுள்ள பாறைக்குழம்பு வெளியேறும் பகுதி _______.

(1) மாக்மா (2) லாவா (3) மேலோடு (4) எரிமலை வாய்

77. கூம்பு வடிவ குன்றின் உச்சி பகுதியில் தோன்றும் பள்ளத்தையே _______ என்கின்றனர்.

(1) பேராழி (2) கிணறு
(3) எரிமலைப் பள்ளம் (4) குளம்

78. புவியின் உள் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க வெப்பமானது ஒவ்வொரு _______ மீட்டருக்கும் _______ வீதம் உயர்ந்து கொண்டே செல்கிறது.

(1) 42 மீ, 2° செ (2) 22 மீ, 1° செ (3) 32 மீ, 1° செ (4) 52 மீ, 3° செ

79. புவியின் ஆழம் அதிகரிக்க, அதிகரிக்க வெப்பத்துடன் _______ அதிகரிக்கின்றது.

(1) வேகமும் (2) அழுத்தமும் (3) காற்றும் (4) நீரும்

80. புவியில் 15 கி.மீ ஆழத்தில் அழுத்தமானது சதுர செ.மீக்கு _______ என்ற அளவில் உயருகின்றது.

(1) 3 டன்கள் (2) 4 டன்கள் (3) 1 டன்கள் (4) 5 டன்கள்

81. எரிமலைகள் பற்றிய அறிவியல்பூர்வமான ஆய்வுகளை _______ என அழைக்கின்றோம்.

(1) சீஸ்மோகிராபி (2) கள ஆய்வியல் (3) சமூக ஆய்வியல் (4) எரிமலை ஆய்வியல்

82. எரிமலைக் குழம்பின் வெளியேற்றம் மற்றும் பரவல் மெதுவாக நடைபெறுவதை _______ என்கிறோம்.

(1) மாக்மா (2) லாவா
(3) பேரழிவு (4) பிளவு வெடிப்பு வகை எரிமலை

www.kalvinews.com

83. பிளவு வெடிப்பு வகை எரிமலைக்கு உதாரணம் _______ மற்றும் _______.
(1) தக்காண பீடபூமி, கொலம்பியா பீடபூமி (2) இமயமலை, எவரெஸ்ட்
(3) அந்தமான், நிக்கோபர் தீவு (4) கிளிமாஞ்சாரோ, கென்யா எரிமலைகள்

84. இந்தோனேசியாவில் _______ தீவிலுள்ள எரிமலை 27 ஆகஸ்ட் 1883 ம் ஆண்டு வெடித்து மாக்மாவை வெளியேற்றியது.
(1) சுபத்ரா (2) கரக்காட்டாவோ (3) சும்பாவா (4) பாலி

85. லாவாவின் பரவல் மற்றும் வேகம் அதிலுள்ள _______ மற்றும் _______ அளவை பொறுத்ததாகும்.
(1) சிலிகா, நீர் (2) வெப்பம், காற்று (3) மாக்மா, அழுத்தம் (4) எரிமலை, வெப்பநிலை

86. அந்தமான் தலைநகரிலிருந்து 138 கி.மீ வடகிழக்கே அமைந்துள்ள தீவு _______.
(1) கரக்காட்டாவோ (2) சுபத்ரா (3) பாலி (4) பேரென் தீவு

87. சுமத்ராவில் இருந்து மியான்மர் வரை உள்ள நெருப்பு வளையத்தினுள் இருக்கும் ஒரு செயல்படும் எரிமலை _______.
(1) ஸ்ட்ராம்போலி (2) பினாடுபோ (3) பேரென் தீவு (4) செயிண்ட் ஹெலன்

88. பேரென் தீவானது கடைசியாக _______ஆம் ஆண்டில் எரிமலைக் குழம்பை வெடித்து வெளியேற்றியது.
(1) 2017 (2) 2019 (3) 2009 (4) 2005

89. அடிக்கடி வெடித்தும், பாறைக்குழம்பை வெளியேற்றும் எரிமலைகள் _______ எனப்படும்.
(1) செயலிழந்த எரிமலை (2) உறங்கும் எரிமலை
(3) செயல்படும் எரிமலை (4) பெரிய எரிமலை

90. எரிமலைகள் _______ வகைப்படும்.
(1) 4 (2) 3 (3) 5 (4) 2

91. _______ கடற்கரையோரமாக உள்ள பெரும்பாலான எரிமலைகள் செயல்படும் எரிமலைகள் ஆகும்.
(1) ஆர்டிக் (2) இந்திய (3) அட்லாண்டிக் (4) பசிபிக்

92. உலகெங்கும் _______ செயல்படும் எரிமலைகள் உள்ளன.
(1) 500 (2) 600 (3) 300 (4) 400

93. மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள செயல்படும் எரிமலை _______.
(1) ஸ்ட்ராம்போலி (2) செயிண்ட் ஹெலன்
(3) பினாடுபோ (4) கரக்கடோவா

94. உலகின் மிகப்பெரிய செயல்படும் எரிமலை _______ ஆகும்.
(1) மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள ஸ்ட்ராம்போலி
(2) அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள செயிண்ட் ஹெலன்
(3) பிலப்பைன்ஸ் தீவிலுள்ள பினாடுபோ
(4) ஹவாய் தீவிலுள்ள மவுனாலோ

www.kalvinews.com

95. மத்திய தரைக்கடலின் கலங்கரை விளக்கம் என அழைக்கப்படும் எரிமலை _______.

(1) கிளிமாஞ்சாரோ (2) ஸ்ட்ராம்போலி (3) கரக்கடோவா (4) வெசுவியஸ்

96. பல வருடங்களாக எரிமலைக் குழம்பை வெளியேற்றுவதற்கான எந்த ஒரு அறிகுறியும் வெளிப்படுத்தாமல், எப்போது வேண்டுமானாலும் செயல்படலாம் என்ற நிலையில் உள்ள எரிமலைகள் _______ ஆகும்.

(1) உறங்கும் எரிமலை (2) செயல்படும் எரிமலை

(3) வெடிக்கும் எரிமலை (4) செயலிழந்த எரிமலை

97. இந்தோனேசியாவில் உள்ள கரக்கடோவா _______ எரிமலைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

(1) வெடிக்கும் எரிமலை (2) செயல்படும் எரிமலை

(3) செயலிழந்த எரிமலை (4) உறங்கும் எரிமலை

98. வெடிப்பு ஆற்றல் முழுவதையும் இழந்து சுமார் 1000 ஆண்டுகளாக வெடிப்பதை நிறுத்திவிட்ட எரிமலை _______ என அழைக்கப்படுகிறது.

(1) உறங்கும் எரிமலை (2) செயல்படும் எரிமலை

(3) வெடிக்கும் எரிமலை (4) செயலிழந்த எரிமலை

99. ஆப்பிரிக்காவின் கிளிமாஞ்சரோ ஒரு _______ எரிமலைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

(1) செயல்படும் எரிமலை (2) சீறும் எரிமலை

(3) செயலிழந்த எரிமலை (4) உறங்கும் எரிமலை

100. அதிகமாக வளைந்த அல்லது பிளவுபட்ட பகுதிகளில்தான் _______ ஏற்படுகிறது.

(1) புயல் (2) சுனாமி (3) நிலநடுக்கம் (4) எரிமலை

101. உலகின் முக்கிய எரிமலை நிகழ்வுப் பகுதிகள் _______.

(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஆறு

102. உலகின் முக்கிய நில அதிர்வு பகுதிகளாக விளங்குபவை _______.

(1) பீடபூமி பகுதிகள் (2) கடல் பகுதிகள்

(3) மலைப்பகுதிகள் (4) எரிமலை பிரதேசங்கள்

103. உலகில் மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் _______ பகுதியில் அமைந்துள்ளன.

(1) அரபிக்கடல் (2) ஆர்டிக் பெருங்கடல்

(3) பசிபிக் பெருங்கடல் (4) அட்லாண்டிக் பெருங்கடல்

104. குவிய கடல்தட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள எரிமலைப் பகுதி _______.

(1) பசிபிக் வளையப் பகுதி (2) மத்திய கண்டப் பகுதி

(3) மத்திய அட்லாண்டிக் பகுதி (4) மத்திய ஆர்டிக் பகுதி

105. மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் பசிபிக் வளையப்பகுதியில் அமைந்திருப்பதால் இப்பகுதியை _______ என அழைக்கின்றனர்.

(1) ஆர்டிக் நெருப்பு வளையம் (2) பசிபிக் நெருப்பு வளையம்

(3) அட்லாண்டிக் நெருப்புவளையம் (4) எரிமலை பிரதேசம்

www.kalvinews.com

106. மத்திய கண்டப்பகுதியில் அமைந்துள்ள ஒரு முக்கிய எரிமலை _______.
(1) போப்பா (2) மவுனாலோ
(3) கிளிமாஞ்சாரோ (4) கரக்கடோவா

107. மத்திய அட்லாண்டிக் மலைத் தொடரில் அமைந்துள்ள ஐஸ்லாந்தில் _______ அமைந்துள்ளன.
(1) உறங்கும் எரிமலைகள் (2) வெடிக்கும் எரிமலைகள்
(3) செயலிழந்த எரிமலைகள் (4) செயல்படும் எரிமலைகள்

108. விலகிச் செல்லுகின்ற தட்டுகளின் எல்லை _______.
(1) மத்திய அட்லாண்டிக் பகுதி (2) மத்திய கண்டப் பகுதி
(3) பசிபிக் வளையப் பகுதி (4) இமயமலைப் பகுதி

109. நைஃப் _______ ஆல் உருவாக்கப்பட்டது.
(1) நிக்கல் மற்றும் ஃபெர்ரஸ் (2) சிலிக்கா மற்றும் அலுமினியம்
(3) இரும்பு மற்றும் மெக்னீசியம் (4) சிலிக்கா மற்றும் மெக்னீசியம்

110. நில நடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்பு _______ நுனியின் அருகில் ஏற்படுகின்றது.
(1) பீடபூமிகள் (2) தட்டுக்கள் (3) சமவெளிகள் (4) மலை

111. பாறைக் குழம்பு வெளியேறும் குறுகலான துளையை _______ என்று அழைக்கிறோம்.
(1) எரிமலைக் குழாய் (2) எரிமலைப் பள்ளம்
(3) நிலநடுக்க மையம் (4) எரிமலையின் வாய்

112. மாக்மா புவி மேற்பரப்பிற்கு வரும்பொழுது _______ என அழைக்கப்படுகிறது.
(1) மாக்மா (2) லாவா (3) எரிமலை பள்ளம் (4) சிமா

113. நைஃப் _______ என் அழைக்கப்படுகிறது.
(1) உட்கருவம் (2) வெளிக்கருவம் (3) கவசம் (4) மேலோடு

114. P அலைகள் என்பது _______.
(1) காந்த அலைகள் (2) அழுத்த அலைகள்
(3) முறிவு அலைகள் (4) மேற்பரப்பு அலைகள்

115. S அலைகள் என்பது _______.
(1) அழுத்த அலைகள் (2) காந்த அலைகள்
(3) மேற்பரப்பு அலைகள் (4) முறிவு அலைகள்

116. L அலைகள் என்பது _______.
(1) முறிவு அலைகள் (2) மேற்பரப்பு அலைகள்
(3) பேரலைகள் (4) அழுத்த அலைகள்

117. புவிக்கரு _______ என்றும் அழைக்கப்படுகிறது.
(1) பேரிஸ்பியர் (2) கவசம் (3) மாக்மா (4) லாவா

118. புவிக்கரு _______ தாதுவை அதிகமாகக் கொண்டுள்ளது.
(1) தாமிரம் (2) அலுமினியம் (3) நிக்கல் (4) மைக்கா

www.kalvinews.com

119. **பொருந்தாததைக் கண்டறி**

(1) செயல்படும் எரிமலை (2) செயல்படாத எரிமலை
(3) செயலிழந்த எரிமலை (4) உறங்கும் எரிமலை

120. **பொருந்தாததைக் கண்டறி**

(1) ஸ்ராட்டோஸ்பியர் (2) டிரோபோஸ்பியர் (3) பேரிஸ்பியர் (4) எக்சோஸ்பியர்

121. **எரிமலைக் குழம்பு என அழைக்கப்படுவது ______.**

(1) சியால் (2) கவசம் (3) சிமா (4) லாவா

122. **பொருந்தாததைக் கண்டறி**

(1) மேலோடு (2) மாக்மா (3) கவசம் (4) புவிக்கருவம்

123. **பொருந்தாததைக் கண்டறி**

(1) லாவா (2) எரிமலை வாய் (3) சிலிக்கா (4) எரிமலைப் பள்ளம்

124. **பொருந்தாததைக் கண்டறி**

(1) நிலநடுக்க மையம் (2) நிலநடுக்க மேல் மையப்புள்ளி
(3) எரிமலை வாய் (4) சிஸ்மிக் அலைகள்

125. **பொருந்தாததைக் கண்டறி**

(1) உத்திரகாசி (2) சாமோலி (3) கெய்னா (4) கரக்கடோவா

126. **பொருந்தாததைக் கண்டறி**

(1) ஸ்ட்ராம்போலி (2) ஹெலென் (3) பினாடுபோ (4) பியூஜியாமா

127. **பொருந்தாததைக் கண்டறி**

(1) அழுத்த அலைகள் (2) மின்காந்த அலைகள்
(3) முறிவு அலைகள் (4) மேற்பரப்பு அலைகள்

128. **பொருந்தாததைக் கண்டறி**

(1) வெசுவியஸ் (2) பியூஜியாமா (3) மவுனாலோ (4) கரக்கடோவா

129. **பொருந்தாததைக் கண்டறி**

(1) போப்பா (2) கிளிமாஞ்சாரோ
(3) கென்யா எரிமலைகள் (4) ஸ்ட்ராம்போலி

130. **பொருந்தாததைக் கண்டறி**

(1) பசிபிக் வளையப் பகுதி (2) மத்திய கண்டப் பகுதி
(3) இந்தியப் பெருங்கடல் பகுதி (4) மத்திய அட்லாண்டிக் பகுதி

131. பொருத்துக

| | | |
|---|---|---|
| i. நிலநடுக்கம் | - | a. ஜப்பானிய சொல் |
| ii. சிமா | - | b. ஆப்பிரிக்கா |
| iii. பசிபிக் நெருப்பு வளையம் | - | c. திடீர் அதிர்வு |
| iv. சுனாமி | - | d. சிலிகா மற்றும் மெக்னீசியம் |
| v. கென்யா மலை | - | e. எரிமலைகள் சூழ்ந்த பகுதி |

www.kalvinews.com

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | c | d | e | a | b |
| (2) | b | c | a | e | b |
| (3) | c | d | b | e | a |
| (4) | b | e | a | b | c |

132. பொருத்துக

| | | |
|---|---|---|
| i. கவசம் | - | a. மத்திய தரைக்கடலின் கலங்கரை விளக்கம் |
| ii. ஸ்ட்ராம்போலி | - | b. நீலக்கோள் |
| iii. புவிக்கருவம் | - | c. சீஸ்மோகிராப் |
| iv. புவி | - | d. பேரிஸ்பியர் |
| v. புவி அதிர்வு அலை | - | e. புவி மேலோட்டின் கீழ் அடுக்கு |

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | e | a | d | c | b |
| (2) | d | c | e | a | b |
| (3) | d | a | b | e | c |
| (4) | e | a | d | b | c |

133. **கூற்று:** புவியின் உருவத்தை ஒரு ஆப்பிளோடு கூட ஒப்பிடலாம்.

**காரணம்:** புவியின் உட்பகுதி மேலோடு, மெல்லிய புறத்தோல், புவிக்கருவம் ஆகியவற்றைக் கொண்டது.

(1) கூற்றும், காரணமும் சரி, கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.

(2) கூற்று சரி, காரணம் சரி

(3) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

(4) கூற்றும், காரணமும் தவறானவை

134. **கூற்று:** உலகின் மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் பசிபிக் கடலில் உள்ளது.

**காரணம்:** பசிபிக் கடலின் மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரைப் பகுதியை பசிபிக் நெருப்பு வளையம் என அழைக்கிறோம்.

(1) கூற்றும் காரணமும் சரி, கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.

(2) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை.

(3) கூற்று தவறு, காரணம் சரி

(4) கூற்றும் காரணமும் தவறானவை

135. **கூற்று:** கட்டிடங்கள் இடிந்து விழுவது நிலநடுக்கத்தின் முக்கிய விளைவாகும்.

**காரணம்:** நிலநடுக்கம் புவி மேற்பரப்பில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

(1) கூற்றும் காரணமும் சரி, கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.

(2) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை.

(3) கூற்று தவறு, காரணம் சரி

(4) கூற்றும் காரணமும் தவறானவை

www.kalvinews.com

136. **கூற்று:** இந்தியாவின் இமயமலைப் பகுதிகள், கங்கை பிரம்மபுத்திரா சமவெளிகள் நிலநடுக்கப் பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன.

**காரணம்:** அதிக எண்ணிக்கையிலுள்ள நிலநடுக்கங்கள் பிரம்மபுத்திரா பகுதிகளில் ஏற்படுகின்றன.

(1) கூற்று, காரணம் சரி, ஆனால், கூற்றை காரணம் விளக்கவில்லை

(2) கூற்று, காரணம் சரி, கூற்றை காரணம் விளக்குகிறது

(3) கூற்று தவறு, காரணம் சரி

(4) கூற்றும் காரணமும் தவறு

137. **கூற்று:** சியால், சிமா அடுக்கின் மீது மிதக்கிறது.

**காரணம்:** சியாலின் அடர்த்தி, சிமா அடர்த்தியை விடக் குறைவு.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(2) கூற்று சரி, காரணம் தவறு

(3) கூற்று தவறு, காரணம் சரி

(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

138. **கூற்று:** கண்டப்பகுதிகளின் அடர்த்தி கடல் மேலோட்டின் அடர்த்தியை விட குறைந்தே காணப்படுகிறது.

**காரணம்:** கடல் மேலோடுகள் இலகுவான மற்றும் அடர்ந்த பாறைகளின் கலவையாகும்.

(1) கூற்று சரி, காரணம் தவறு

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(3) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

(4) கூற்று தவறு காரணம் சரி

139. **கூற்று:** எரிமலைக் குழம்பின் வெளியேற்றம் மற்றும் பரவல் மெதுவாக நடைபெறுவதால் பிளவு வெடிப்பு எரிமலைகள் உருவாகின்றன.

**காரணம்:** லாவாவின் பரவல் மற்றும் வேகம் அதிலுள்ள சிலிகா மற்றும் நீரின் அளவைப் பொருத்தது.

(1) கூற்றும் காரணமும் சரி. கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.

(2) கூற்றும் காரணமும் சரி. கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை.

(3) கூற்று தவறு காரணம் சரி

(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

140. **கூற்று:** பலவீனமான புவி மேல் ஓட்டுப் பகுதியில் பாறைக்குழம்பு வெடித்து வெளியேறுகிறது.

**காரணம்:** மாக்மா மிகுதியான அழுத்த நிலையில் எளிதில் தீப்பற்றக் கூடிய வாயுக்களை ஈர்த்துக்கொள்கிறது.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

(2) கூற்று சரி காரணம் தவறு

(3) கூற்றும் காரணமும் சரி. கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.

(4) கூற்றும் காரணமும் சரி. கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை

www.kalvinews.com

141. **கூற்று:** புவித் தட்டுகள் புவி மேற்பரப்பில் அகன்ற பிளவுகளை உருவாக்குகிறது.

**காரணம்:** கண்டத் திட்டுகள் மற்றும் கடற்தட்டுகளும் ஒன்றோடொன்று நெருங்கிச் செல்கிறது.

(1) கூற்றும் காரணமும் சரி. கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.

(2) கூற்றும் காரணமும் சரி. கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை.

(3) கூற்று தவறு காரணம் சரி

(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

142. **கூற்று:** இமயமலை சிகரம் மடிப்பு மலைகளில் ஒன்றாகும்.

**காரணம்:** கண்டத்திட்டு மற்றும் கடற்தட்டு ஒன்றோடொன்று மோதும்போது வளைந்து மடிப்புகளை உருவாக்குகிறது.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(2) கூற்று சரி காரணம் தவறு

(3) கூற்று மற்றும் காரணம் தவறு

(4) கூற்று தவறு காரணம் சரி

143. 'மோஹோரோவிசிக்' என்பது _______ உடன் தொடர்புடையது (NMMS-2020-21)

(1) சியால் (2) சிமா

(3) கவசம் (4) புவிக் கருவம் (Core)

144. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும் (NMMS-2020-21)

(1) பினாடுபோ (2) கரக்கடோவா

(3) செயிண்ட் ஹெலன் (4) ஸ்ட்ராம்போலி

145. இந்தியாவில் உள்ள ஒரே ஒரு செயல்படும் எரிமலை உள்ள இடம் _______. (NMMS 2019-20)

(1) ஹவாய் தீவு (2) பாரன் தீவு

(3) நார்கண்டம் தீவு (4) ஐஸ்லாந்து

146. பூமியில் மிக அதிகப்படியான அழிவுகள் ஏற்படக் காரணமாக அமைவது _______. (NMMS-2018)

(1) P - அலைகள் (2) S - அலைகள்

(3) இரண்டாம் நிலை அலைகள் (4) L - அலைகள்

www.kalvinews.com

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (1) | 26 | (1) | 51 | (3) | 76 | (4) | 101 | (2) | 126 | (4) |
| 2 | (3) | 27 | (2) | 52 | (4) | 77 | (3) | 102 | (4) | 127 | (2) |
| 3 | (4) | 28 | (1) | 53 | (3) | 78 | (3) | 103 | (3) | 128 | (3) |
| 4 | (2) | 29 | (1) | 54 | (1) | 79 | (2) | 104 | (1) | 129 | (4) |
| 5 | (1) | 30 | (4) | 55 | (4) | 80 | (4) | 105 | (2) | 130 | (3) |
| 6 | (4) | 31 | (2) | 56 | (1) | 81 | (4) | 106 | (3) | 131 | (1) |
| 7 | (3) | 32 | (1) | 57 | (2) | 82 | (4) | 107 | (4) | 132 | (4) |
| 8 | (4) | 33 | (2) | 58 | (3) | 83 | (1) | 108 | (1) | 133 | (3) |
| 9 | (4) | 34 | (3) | 59 | (2) | 84 | (2) | 109 | (1) | 134 | (1) |
| 10 | (3) | 35 | (4) | 60 | (4) | 85 | (1) | 110 | (2) | 135 | (1) |
| 11 | (1) | 36 | (1) | 61 | (2) | 86 | (4) | 111 | (4) | 136 | (2) |
| 12 | (4) | 37 | (1) | 62 | (3) | 87 | (3) | 112 | (2) | 137 | (1) |
| 13 | (1) | 38 | (2) | 63 | (4) | 88 | (1) | 113 | (2) | 138 | (2) |
| 14 | (2) | 39 | (3) | 64 | (2) | 89 | (3) | 114 | (2) | 139 | (1) |
| 15 | (3) | 40 | (4) | 65 | (1) | 90 | (2) | 115 | (4) | 140 | (3) |
| 16 | (3) | 41 | (3) | 66 | (2) | 91 | (4) | 116 | (2) | 141 | (3) |
| 17 | (2) | 42 | (2) | 67 | (4) | 92 | (2) | 117 | (1) | 142 | (1) |
| 18 | (1) | 43 | (1) | 68 | (2) | 93 | (1) | 118 | (3) | 143 | (3) |
| 19 | (2) | 44 | (4) | 69 | (4) | 94 | (4) | 119 | (2) | 144 | (2) |
| 20 | (3) | 45 | (4) | 70 | (1) | 95 | (2) | 120 | (3) | 145 | (2) |
| 21 | (1) | 46 | (2) | 71 | (3) | 96 | (1) | 121 | (4) | 146 | (4) |
| 22 | (3) | 47 | (3) | 72 | (2) | 97 | (4) | 122 | (2) | | |
| 23 | (4) | 48 | (1) | 73 | (1) | 98 | (4) | 123 | (3) | | |
| 24 | (1) | 49 | (2) | 74 | (2) | 99 | (3) | 124 | (3) | | |
| 25 | (3) | 50 | (4) | 75 | (3) | 100 | (4) | 125 | (4) | | |

www.kalvinews.com

**வகுப்பு - 7 - பருவம்: 1 - புவியியல்**

## 2. நிலத்தோற்றங்கள்

**தொகுப்பு:**
**திருமதி.பொ.ஜோஷிபா ரோசிலின்,** M.A.,B.Ed.,
**பட்டதாரி ஆசிரியை (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, கணபதிபாளையம்,**
**ஈரோடு மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.செ.பெரியசாமி,** M.Sc.,B.Ed.,M.A.,M.Phil.,
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி,**
**கொ.ஒட்டப்பட்டி, கரூர் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- புவியின் மேற்பரப்பானது மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் மற்றும் பள்ளத்தாக்குகள் போன்ற எண்ணற்ற வகையான நிலத்தோற்றங்களுடன் காணப்படுகிறது.
- நிலத்தோற்றங்கள் அகச் செயல்முறைகளாலும், புறச் செயல்முறைகளாலும் தோற்றுவிக்கப்படுகின்றன.

**அகச்செயல்முறைகள்:**

- புவியின் மேற்பரப்பில் பல இடங்களில் ஏற்படும் உயர் நிலப்பகுதிகள் மற்றும் தாழ்வு நிலப்பகுதிகள் அகச் செயல்முறைகளால் ஏற்படுகின்றன.

**புறச்செயல்முறைகள்:**

- புவிப்பரப்பில் தொடர்ந்து ஏற்படும் அரித்தல் மற்றும் மறுகட்டமைத்தல் ஆகியன புறச் செயல்முறைகளால் ஏற்படுகின்றன.

**நிலத் தோற்றங்கள்:**

- உயர்நிலங்களை அரித்தல் மூலம் தாழ்நிலங்களாகவும், தாழ்நிலங்களை படியவைத்தல் மூலம் உயர்நிலங்களாகவும் மாற்றுவதற்கு நிலங்களை சமப்படுத்துதல் என்று பெயர்.
- அகச்செயல்முறைகள், அகவிசை என்றும், புறச்செயல்முறைகள், புறவிசை என்றும் அழைக்கப்படும்.
- நிலப்பரப்பானது வானிலைச்சிதைவு மற்றும் அரித்தல் ஆகிய இரு செயல்முறைகள் மூலம் தொடர்ந்து தேய்மானத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.
- புவிமேற்பரப்பில் பாறைகள் உடைந்து மற்றும் சிறுசிறு கற்களாகவும், துகள்களாகவும் சிதறுவது வானிலை சிதைவு எனப்படுகிறது.
- நீர், காற்று, பனி மற்றும் கடல்அலைகள் எனப் பலவகைப்பட்ட காரணிகளால் புவியின் நிலத்தோற்றங்கள் அடித்துச்செல்லப்படுவதை அரித்தல் என்கிறோம்.
- நீர், காற்று, பனி மற்றும் கடல் அலைகள் ஆகியவற்றால் கடத்தப்பட்டு இறுதியில் படிய வைக்கப்படுகின்றன.
- அரித்தல் மற்றும் படிய வைத்தல் முறைகளால் புவியின் மேற்பரப்பில் பலதரப்பட்ட நிலத்தோற்றங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

www.kalvinews.com

**ஆறு:**

- ஒரு குறிப்பிட்ட பாதையில் தோன்றுமிடத்திலிருந்து முகத்துவாரம் வரை ஓடுகின்ற நீர் ஆறு என அழைக்கப்படுகிறது.
- ஆறுகள், ஒரு மலையிலிருந்தோ அல்லது குன்றிலிருந்தோ உற்பத்தியாகின்றன.
- **ஆறு தோன்றுமிடம், ஆற்றின் பிறப்பிடம்** என்று அழைக்கப்படும்.
- **ஆறு, ஒரு ஏரியிலோ, கடலிலோ அல்லது ஒரு பேராழியிலோ கலக்கும் இடம் ஆற்று முகத்துவாரம்** எனப்படுகிறது.
- **ஆற்று நீரானது செங்குத்து சரிவைக் கொண்ட மலைப்பிரதேசத்தை அரிப்பதால் அங்கு ஆழமான V-வடிவ பள்ளத்தாக்குகளை** உருவாக்குகிறது.
- ஆற்று நீரானது ஒரு செங்குத்துப்பாறையின் **வன்சரிவின் விளிம்பில்** கீழ்நோக்கி வீழ்வதை **நீர்வீழ்ச்சி** எனலாம்.
- மென்பாறைகள் அரிக்கப்படுவதால் நீர்வீழ்ச்சி தோன்றுகிறது. எ.கா. தமிழ்நாட்டில் சிற்றாற்றின் குறுக்கே உள்ள குற்றால நீர்வீழ்ச்சி.
- நீர்வீழ்ச்சியின் கீழ்ப்பகுதியில் குழிவுறுதல் காரணமாக ஏற்படும் பெரும்பள்ளம் உட்பாய்வு தேக்கம் (Plunge pool) எனப்படுகிறது.
- ஆறு ஒரு சமவெளி பகுதியையோ அல்லது மலையடிவார பகுதியையோ அடையும் போது படியும் படிவுகளை வண்டல் விசிறிகள் என்கிறோம்.
- ஒரு நீரோடை அல்லது ஆறு தன் போக்கில் ஒரு முதன்மை ஆற்றுடன் இணைவது துணையாறு எனப்படும்.
- ஒரு முதன்மை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் ஆறு கிளையாறு எனப்படும்.
- தென் அமெரிக்காவில் உள்ள வெனிசுலா நாட்டில் காணப்படும் ஏஞ்சல் நீர்வீழ்ச்சி உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி ஆகும்.
- வட அமெரிக்காவில் கனடா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எல்லையில் உள்ள **நயாகரா நீர்வீழ்ச்சி** மற்றும் ஆப்பிரிக்காவில் **ஜாம்பியா மற்றும் ஜிம்பாப்வே நாடுகளின் எல்லையில் உள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சி** ஆகியன மற்ற முக்கிய நீர்வீழ்ச்சிகளாகும்.
- ஆறானது சமவெளிப்பகுதியை அடையும்போது ஆறு வளைந்து மற்றும் சுழன்று செல்வதால் தோன்றும் பெரிய வளைவுகள் **ஆற்று வளைவுகள் (Meanders)** எனப்படுகின்றன. எ.கா. தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் சேத்தியாதோப்பு அருகே வெள்ளாற்று பகுதியில் ஆற்று வளைவுகள் காணப்படுகின்றன.
- ஆற்று வளைவுகளின் (Meanders) இரு பக்கங்களிலும் தொடர்ந்து அடித்தல் மற்றும் படிதல் ஏற்படுவதால், ஆற்று வளைவுகளின் கழுத்துப் பகுதிகள் நெருங்கி வருகின்றன. நாளடைவில், ஆற்று வளைவு ஆற்றிலிருந்து துண்டிக்கப்பட்டு, ஒரு ஏரியாக உருவெடுக்கிறது. இது குதிரை குளம்பு ஏரி (Oxbow lake) என அழைக்கப்படுகிறது.
- ஆசியா மைனர் (துருக்கி) என்ற நாட்டில் உள்ள மியாண்டர் ஆற்றின் பெயரின் அடிப்படையில் ஆற்று வளைவு என்ற சொல் ஏற்பட்டது.
- ஆற்றின் வெள்ளப்பெருக்கு நுண்துகள்கள், மண் மற்றும் இதரபொருள்கள் கரையை ஒட்டிய பகுதிகளில் அடுக்குகளாக படிய வைக்கின்றன. இவை வண்டல் படிவுகள் எனப்படுகிறது.
- வண்டல்படிவுகளால் வெள்ளச் சமவெளி உருவாகின்றது. இது லெவீஸ் (Levees - உயர் அணை) என அழைக்கப்படுகிறது.

www.kalvinews.com

- ஆறு கடலை அடையும் போது, ஆற்று நீரின் வேகம் குறைந்து பல பிரிவுகளாக பிரிந்து செல்கிறது. இவை கிளையாறுகள் என்று அழைக்கப்படுகின்றன.
- கிளையாற்றின் முகத்துவாரங்களில் தோற்றுவிக்கப்படும் படிவுகள் டெல்டாக்களை உருவாக்குகின்றன.
- டெல்டாக்கள் உற்பத்திதிறன் மிகுந்த மண்ணாகும். எ.கா. காவிரி டெல்டா, கங்கை டெல்டா மற்றும் மிசிசிபி டெல்டா.

**பனியாறு:**

- பனியாறு என்பது மலைச்சரிவில் ஈர்ப்புவிசை காரணமாக சரிவை நோக்கி மெல்ல நகரும் பெரிய பனிக்குவியல் ஆகும்.
- பனியாறு - மலை அல்லது பள்ளத்தாக்குப் பனியாறுகள் மற்றும் கண்டப் பனியாறுகள் என இரு வகைகளாக பிரிக்கப்படுகின்றன.
- **கண்டப் பனியாறு** - கண்டப் பகுதியில் பெரும்பரப்பில் பரவிக் காணப்படும் அடர்ந்த பனிப்படலம் கண்டப் பனியாறு எனப்படுகிறது. எ.கா. அண்டார்டிகா மற்றும் கிரீன்லாந்து.
- **மலை அல்லது பள்ளத்தாக்கு பனியாறு** - மலையிலிருந்து பள்ளத்தாக்கை நோக்கி நகரும் பனியாறு பள்ளத்தாக்கு பனியாறு எனப்படுகிறது.
- முன்னர் அமைந்துள்ள ஆற்றுப்போக்குகளைப் பின்பற்றி பள்ளத்தாக்கு பனியாறு செல்கின்றன.
- **பள்ளத்தாக்கு பனியாறுகள்** செங்குத்தான பக்கங்களால் சூழப்பட்டுள்ளது. **எ.கா. இமயமலை மற்றும் ஆல்ப்ஸ் மலைப்பகுதி.**
- **மலைச்சரிவில் பனி அரிப்பால் சர்க்குகள் (Cirque) ஏற்படுகின்றன**.
- **சர்க்குகள் என்பது பனியாறுகளால் அரிபடா பாறைகளில் தோன்றும் கை நாற்காலி போன்ற ஒரு நிலத்தோற்றமாகும்**.
- சர்க்குகள் அனைத்துப் பக்கமும் செங்குத்தாகவும் தலைப்பகுதி செங்குத்து சுவர் போன்றும் காணப்படும். இது **ஸ்காட்லாந்தில் கார்ரி சர்க் என்றும், ஜெர்மனியில் கார் சர்க் என்றும்** அழைக்கப்படுகிறது.
- பனி உருகும் போது, சர்க் நீரால் நிரப்பப்பட்டு அழகான ஏரிகளாக மலைப்பகுதிகளில் தோற்றமளிக்கின்றன. இந்த ஏரிகள் டார்ன் ஏரி என்று அழைக்கப்படுகின்றன.
- இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்டோ சர்க்குகள் ஒன்றை நோக்கி ஒன்று நகரும் போது குறுகிய, செங்குத்து மற்றும் சரிவான பக்கங்களுடன் கூடிய முகடுகளாக மாற்றம் அடைகின்றன.
- இம்முகடுகள் அரெட்டுகள் என்ற கத்திமுனைக் குன்றுகளாக உருவெடுக்கின்றன.
- 'U' வடிவ பள்ளத்தாக்கு பனியாற்றின் பக்கவாட்டு மற்றும் செங்குத்து அரிப்பினால் ஆழப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் மூலம் உருவாகின்றன.
- பனியாற்றினால் கடத்தப்படும் பெரிய, சிறிய மணல் மற்றும் வண்டல் ஆகியன படிய வைக்கப்படுகின்றன. இவை **பனியாற்று மொரைன்கள்** எனப்படுகின்றன.

**காற்று:**

- பாலைவனத்தில் அரித்தல் மற்றும் படியவைத்தல் செயல்முறைகளை வேகமாக செயல்படுத்தும் காரணி காற்று ஆகும் .

www.kalvinews.com

- பாறையின் மேற்பகுதியை விட கீழ்ப்பகுதியை காற்று வேகமாக அரிக்கின்ற காரணத்தினால் பாறைகள் மேற்பகுதி அகன்றும் மற்றும் அடிப்பகுதி குறுகலாகவும் காணப்படுகிற பாறைகள் காளான் பாறைகள் எனப்படுகின்றன.
- **காளான் பாறைகள் பாலைவனப்பகுதியில் காணப்படுகின்றன.**
- ஒரு தனித்துவிடப்பட்ட எஞ்சிய குன்று வட்டமான தலைப்பகுதியுடன் நிற்கும் ஒரு தூண் போன்று காட்சி அளிப்பது காற்று அரிப்புத் தனிக்குன்றுகள் என்று அழைக்கப்படுகின்றன. எ.கா. தென் ஆப்பிரிக்காவின் கலஹாரி பாலைவனத்தில் காணப்படும் காற்றரிப்புத் தனிக்குன்றுகள்.
- காற்று வீசும்போது மணலை ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு கடத்தப்படுகிறது. காற்றின் வேகம் குறையும்போது மணலானது உயரம் குறைவான குன்றுகள் போன்று படிகின்றன. இப்படிவுகள், **மணல் குன்றுகள்** என அழைக்கப்படுகின்றன.
- **பிறைச்சந்திர தோற்றமுடன் கூடிய மணல் குன்றுகள் பர்கான்கள்** எனப்படுகின்றன.
- மிக லேசாகவும் மற்றும் எடை குறைவாகவும் இருக்கும் மணல்துகள்கள் நீண்ட தொலைவிற்கு கடத்தப்பட்டு ஒரு பெரும்பரப்பில் படிவது காற்றடி வண்டல் படிவுகள் எனப்படுகிறது.
- காற்றடி வண்டல்படிவுகள் சீனாவில் அதிகமாகக் காணப்படுகின்றன.
- வடக்கு சீனாவில் படிந்துள்ள காற்றடி வண்டல்படிவுகள் கோபி பாலைவனத்தில் இருந்து கடத்தப்பட்டவை ஆகும்.

**கடலலைகள்:**

- நிலத்தின் ஒரு பகுதி கடலை அடுத்தோ அல்லது ஒட்டியோ காணப்படுவது கடற்கரை எனப்படுகிறது.
- **கடல் நீரும், நிலமும் சந்திக்கின்ற இடம் கடலோர எல்லை** எனப்படும்.
- அலைகளின் அரிப்பினாலும், படிதலாலும் கடற்கரை மாற்றத்திற்கு உள்ளாகிறது.
- கடல் அலைகளின் அரிப்பினாலும், மற்றும் படிதலாலும் பலவகைப்பட்ட கடலோர நிலப்பரப்புகள் உருவாகின்றன.
- கடற்கரையை அடுத்துள்ள நிலம், அலைகளின் மோதலாலும், அரிப்பினாலும் கடலை நோக்கி செங்குத்தாக உயர்ந்து காணப்படும் செங்குத்துப் பாறை கடல் ஓங்கல் (Sea cliff)' எனப்படும்.
- கடல் அலைகள் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்துவதால் பாறையில் விரிசல்கள் உருவாகின்றது.
- விரிசல்களால் செங்குத்து பாறையில் குகைகள் போன்று தோன்றும் வெற்றிடங்கள் கடற்குகைகள் (Sea caves)' எனப்படுகின்றன.
- கடல் குகைகளில் உட்குழிவு பெரிதாகும்போது குகையின் மேற்கூரை மட்டும் எஞ்சி நின்று கடல் வளைவுகளை (Sea Arches) தோற்றுவிக்கிறது.
- கடல் அலைகள் மேற்கூரையை அரிப்பதால் எஞ்சி நிற்கும் சுவர் போன்ற தோற்றங்கள் கடல் தூண்கள் (Sea Stacks) எனப்படும்.
- கடல் அலைகளால் மணல் மற்றும் சரளைகள் படிந்துள்ள கடலோரப் பகுதி கடற்கரை (Beach) எனப்படும்.
- கடற்கரைக்கு இணையாக கடலில் நீள்வட்ட வடிவில் படிந்துள்ள மணல் அல்லது சேறு மணல் திட்டுகள் எனப்படும்.

www.kalvinews.com

- கடற்கரையிலிருந்து பகுதியாகவோ அல்லது முற்றிலுமாகவோ பிரிக்கப்பட்ட ஆழம் குறைவான நீர்தேக்கம் காயல்கள் அல்லது உப்பங்கழிகள் (Lagoon) எனப்படும்.
- காயல்கள் (அ) உப்பங்கழிகள் - எ.கா. ஒடிசாவில் உள்ள சிலிக்கா ஏரி மற்றும் கேரளாவில் உள்ள வேம்பநாடு ஏரி.
- **உலகிலேயே மிக நீளமான கடற்கரை அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தின் தெற்கில் காணப்படும் மியாமி கடற்கரை ஆகும்.**
- **உலகிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரை சென்னையில் அமைந்துள்ள மெரினா கடற்கரை** ஆகும்.

**பயிற்சி வினாக்கள்:**

1. மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் மற்றும் பள்ளத்தாக்குகள் போன்ற எண்ணற்ற வகையான நிலத்தோற்றங்களுடன் காணப்படுவது ______.
   1. புவி 2. புவியின் மேற்பரப்பு
   3. புவியின் உட்பரப்பு 4. பாலைவனம்

2. புவியின் மேற்பரப்பில் பல இடங்களில் அகச் செயல்முறைகளால் ஏற்படுபவை ______.
   1. உயர் நிலப்பகுதிகள்
   2. தாழ்வு நிலப்பகுதிகள்
   3. உயர் நிலப்பகுதிகள் மற்றும் தாழ்வு நிலப்பகுதிகள்
   4. வானிலைச் சிதைவு

3. புவிப்பரப்பில் தொடர்ந்து ஏற்படும் அரித்தல் மற்றும் மறுக்கட்டமைத்தல் ஆகியன ஏற்படுவதற்கான காரணம் ______.
   1. அகச் செயல்முறைகள் 2. புறச் செயல்முறைகள்
   3. படிய வைத்தல் 4. கடல் அலைகள்

4. உயர்நிலங்களை அரித்தல் மூலம் தாழ்நிலங்களாகவும், தாழ்நிலங்களை படியவைத்தல் மூலம் உயர்நிலங்களாகவும் மாற்றுவதற்கு ______ என்று பெயர்.
   1. வானிலைச் சிதைவு 2. சமவெளி 3. சமப்படுத்துதல் 4. நிலத்தோற்றங்கள்

5. நிலப்பரப்பானது இதன் மூலம் தொடர்ந்து தேய்மானத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.
   1. வானிலைச் சிதைவு மற்றும் அரித்தல் 2. படிய வைத்தல்
   3. மறுகட்டமைத்தல் 4. அகவிசை, புறவிசை

6. புவிமேற்பரப்பில் பாறைகள் உடைந்து மற்றும் சிறுசிறு கற்களாகவும், துகள்களாகவும் சிதறுவது ______.
   1. அரித்தல் 2. வானிலைச் சிதைவு
   3. கடத்துதல் 4. படிய வைத்தல்

7. நீர், காற்று, பனி மற்றும் கடல் அலைகள் எனப் பலவகைப்பட்ட காரணிகளால் புவியின் நிலத்தோற்றங்கள் அடித்துச் செல்லப்படுவது ______.
   1. மறுகட்டமைத்தல் 2. சமப்படுத்துதல் 3. படிய வைத்தல் 4. அரித்தல்

www.kalvinews.com

8. அரித்தல் மற்றும் படிய வைத்தல் முறைகளால் புவியின் மேற்பரப்பில் தோற்றுவிக்கப்படுபவை _______.

1. மலைகள் 2. பீடபூமிகள் 3. நிலத்தோற்றங்கள் 4. படியவைத்தல்

9. ஒரு குறிப்பிட்ட பாதையில் தோன்றுமிடத்திலிருந்து முகத்துவாரம் வரை ஓடுகின்ற நீர் _______ எனப்படுகிறது.

1. ஏரி 2. ஆறு 3. கடல் 4. அருவி

10. ஆறு தோன்றுமிடம் ஆற்றின் _______.

1. பிறப்பிடம் 2. ஊற்று 3. முகத்துவாரம் 4. மலைமுகடு

11. ஆறு ஒரு ஏரியிலோ, கடலிலோ அல்லது ஒரு பேராழியிலோ கலக்கும் இடம் ஆற்று _______.

1. பிறப்பிடம் 2. முகத்துவாரம் 3. பள்ளத்தாக்கு 4. கடற்கரை

12. ஆற்று நீரானது செங்குத்து சரிவைக் கொண்ட மலைப்பிரதேசத்தை அரிப்பதால் அங்கு ஆழமான _______ பள்ளத்தாக்குகளை உருவாக்குகிறது.

1. 'U' வடிவ 2. 'V' வடிவ 3. 'T' வடிவ 4. மேற்கண்ட மூன்றும்

13. ஆற்று நீரானது ஒரு செங்குத்துப் பாறையின் வன்சரிவின் விளிம்பில் கீழ்நோக்கி வீழ்வது _______.

1. முகத்துவாரம் 2. சிற்றாறு 3. நீர்வீழ்ச்சி 4. பிறப்பிடம்

14. மென்பாறைகள் அரிக்கப்படுவதால் தோன்றுவது _______.

1. நீர்வீழ்ச்சி 2. பள்ளத்தாக்கு 3. டெல்டா 4. துணையாறு

15. நீர்வீழ்ச்சி தோன்றுவதற்கான காரணம் _______.

1. மென்பாறைகள் அரிக்கப்படுதல் 2. கடினமான பாறைகள் அரிக்கப்படுதல்
3. நிலத்தடி நீர்மட்டம் உயர்தல் 4. கீழ்நோக்கி வீழ்வது

16. தமிழ்நாட்டில் சிற்றாற்றின் குறுக்கே உள்ளது _______.

1. ஆகாயகங்கை அருவி 2. ஒகேனக்கல் அருவி
3. கும்பக்கரை அருவி 4. குற்றால நீர்வீழ்ச்சி

17. நீர்வீழ்ச்சியின் கீழ்ப்பகுதியில் குழிவுறுதல் காரணமாக ஏற்படும் பெரும்பள்ளம் _______.

1. டெல்டா 2. ஆற்றுவளைவு 3. உட்பாய்வு தேக்கம் 4. படிவுகள்

18. ஆறு ஒரு சமவெளி பகுதியையோ அல்லது மலையடிவாரப் பகுதியையோ அடையும்போது படியும் படிவுகளை _______ என்கிறோம்.

1 உட்பாய்வு தேக்கம் 2. வண்டல் விசிறிகள்
3. குழிவுறுதல் 4. வன்சரிவு

19. ஒரு நீரோடை அல்லது ஆறு தன் போக்கில் ஒரு முதன்மை ஆற்றுடன் இணைவது _______.

1. துணையாறு 2. கிளையாறு 3. சிற்றாறு 4. முதன்மை ஆறு

20. ஆறு உருவாக்கும் நிலத்தோற்றங்களில் ஒன்று _______.

1. ஆற்றுவளைவு 2. சர்க்குகள் 3. டார்ன் ஏரிகள் 4. பேராழி

www.kalvinews.com

21. உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி _______.
    1. விக்டோரியா நீர்வீழ்ச்சி
    2. நயாகரா நீர்வீழ்ச்சி
    3. ஜோக் நீர்வீழ்ச்சி
    4. ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

22. உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி அமைந்துள்ள நாடு _______.
    1. வெனிசுலா
    2. பிரேசில்
    3. கொலம்பியா
    4. அர்ஜென்டினா

23. நயாகரா நீர்வீழ்ச்சி அமைந்துள்ள கண்டம் _______.
    1. தென்அமெரிக்கா
    2. வடஅமெரிக்கா
    3. அமெரிக்க ஐக்கியநாடுகள்
    4. ஆப்பிரிக்கா

24. கனடா, அமெரிக்க ஐக்கியநாடுகளின் எல்லையில் உள்ள நீர்வீழ்ச்சி _______.
    1. கனடா நீர்வீழ்ச்சி
    2. நயாகரா நீர்வீழ்ச்சி
    3. விக்டோரியா நீர்வீழ்ச்சி
    4. ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

25. ஜாம்பியா மற்றும் ஜிம்பாப்வே நாடுகளின் எல்லையில் உள்ள நீர்வீழ்ச்சி _______.
    1. விக்டோரியா நீர்வீழ்ச்சி
    2. நயாகரா நீர்வீழ்ச்சி
    3. ஏஞ்சல் நீர்வீழ்ச்சி
    4. ஜோக் நீர்வீழ்ச்சி

26. ஆறானது சமவெளிப்பகுதியை அடையும்போது நீரின் அலைதலால் ஆற்றில் தோன்றுபவை _______.
    1. அலைகள்
    2. வளைவுகள்
    3. வண்டல்கள்
    4. படிதல்

27. ஆறு வளைந்து மற்றும் சுழன்று செல்வதால் தோன்றும் பெரிய வளைவுகள் _______.
    1. அரித்தல் மற்றும் படிதல்
    2. குதிரைக் குளம்பு ஏரி
    3. ஆற்று வளைவுகள்
    4. ஏரிகள்

28. ஆற்று வளைவுகளின் இருபக்கங்களிலும் தொடர்ந்து அரித்தல் மற்றும் படிதல் ஏற்பட்டு ஆற்று வளைவின் கழுத்துப் பகுதி சுருங்கி, பின்னர் ஆற்றிலிருந்து துண்டிக்கப்பட்டு உருவாவது _______.
    1. குதிரைக் குளம்பு ஏரி
    2. 'V' வடிவ பள்ளத்தாக்கு
    3. ஆற்று வளைவு
    4. வண்டல் படிவுகள்

29. தமிழ்நாட்டில் ஆற்று வளைவுகள் காணப்படும் இடம் _______.
    1. காஞ்சிபுரத்தில் உள்ள அடையாறு
    2. திருவண்ணாமலையில் உள்ள செய்யாறு
    3. கடலூர் மாவட்டத்திலுள்ள சேத்தியாத்தோப்பு வெள்ளாற்றுப் படுகை
    4. சிவகங்கை மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு

30. 'ஆற்றுவளைவு' என்ற சொல் உருவானதின் அடிப்படை _______.
    1. மியாண்டர் ஆறு
    2. வெள்ளாறு
    3. செய்யாறு
    4. மணிமுத்தாறு

31. 'ஆசியா மைனர்' எனப்படுவது _______.
    1. பிரான்ஸ்
    2. துருக்கி
    3. சீனா
    4. ஜப்பான்

www.kalvinews.com

32. ஆற்றின் வெள்ளப்பெருக்கு நுண்துகள்கள், மண் மற்றும் இதர பொருட்கள் கரையை ஒட்டிய பகுதிகளில் அடுக்குகளாக படிந்துள்ளவை _______.
   1. கடற்கரை   2. குதிரைக்குளம்பு ஏரி
   3. ஆற்றுவளைவு   4. வண்டல் படிவுகள்

33. வண்டல் படிவுகளால் உருவாக்கப்படுபவை _______.
   1. வெள்ளச் சமவெளி   2. லெவீஸ்   3. உயர் அணை   4. இவை அனைத்தும்

34. லெவீஸ் எனப்படுவது _______.
   1. உயர் அணை   2. ஆற்றுச் சமவெளி   3. மியாண்டர்   4. வண்டல் படிவுகள்

35. ஆறு கடலை அடையும் போது, ஆற்று நீரின் வேகம் குறைந்து பல பிரிவுகளாக பிரிந்து செல்வது _______.
   1. துணையாறுகள்   2. கிளையாறுகள்   3. ஆற்று வளைவுகள்   4.வெள்ளச் சமவெளி

36. கிளையாற்றின் முகத்துவாரங்களில் தோற்றுவிக்கப்படும் படிவுகள் உருவாக்குபவை _______.
   1. ஆற்றின் பிறப்பிடம்   2. வண்டல் விசிறிகள்
   3. டெல்டாக்கள்   4. உயர் அணை

37. உற்பத்தித்திறன் மிகுந்த மண் காணப்படுவது _______.
   1. டெல்டாக்கள்   2. முகத்துவாரம்   3. வெள்ளச் சமவெளி   4. கடற்கரை

38. உற்பத்தித்திறன் மிகுந்த மண் காணப்படும் இடம் _______.
   1. காவிரி டெல்டா   2. கங்கை டெல்டா   3. மிசிசிபி டெல்டா   4. இவையனைத்தும்

39. பனியாறு என்பது மலைச்சரிவில் ஈர்ப்பு விசை காரணமாக சரிவை நோக்கி மெல்ல நகரும் பெரிய _______.
   1. பனி மலை   2. பனிக் குவியல்   3. பனிப் பொழிவு   4. பனிப் பிரதேசம்

40. கண்டப்பகுதியில் பெரும்பரப்பில் பரவிக் காணப்படும் அடர்ந்த பனிப்படலம் ______.
   1. கண்டப் பனியாறு   2. பள்ளத்தாக்குப் பனியாறு
   3. மலைப் பனியாறு   4. மலைச் சரிவு

41. கண்டப் பனியாறு காணப்படும் இடங்கள் _______.
   1. அண்டார்டிகா   2. கிரீன்லாந்து   3. வடஅமெரிக்கா   4. (1) மற்றும் (2)

42. மலையிலிருந்து பள்ளத்தாக்கை நோக்கி நகரும் பனியாறு ______.
   1. மலை முகடு   2. கண்டப் பனியாறு
   3. பள்ளத்தாக்குப் பனியாறு   4. மலைச் சரிவு

43. பள்ளத்தாக்கு பனியாறுகள் சூழப்பட்டுள்ள பக்கங்கள் _______.
   1. இணையானவை   2. செங்குத்தானவை   3. உயரமானவை   4. சரிவுகள்

44. பள்ளத்தாக்கு பனியாறுகள் காணப்படும் இடங்கள் _______.
   1. இமயமலை மற்றும் ஆல்ப்ஸ் மலைப்பகுதி   2. ராக்கி மலைத்தொடர்
   3. அட்லஸ் மலைத்தொடர்   4. ஆண்டிஸ் மலைப்பகுதி

www.kalvinews.com

45. மலைச் சரிவில் பனி அரிப்பால் ஏற்படுபவை _______.
1. பனி சரிவு 2. சர்க்குகள் 3. பனியாறு 4. பள்ளத்தாக்குகள்

46. பனியாறுகளால் அரிபடா பாறைகளில் தோன்றும் கை நாற்காலி போன்ற ஒரு நிலத்தோற்றம் _______.
1. டெல்டாக்கள் 2. குன்றுகள் 3. சர்க்குகள் 4. மலைச்சரிவுகள்

47. அனைத்துப் பக்கமும் செங்குத்தாகவும், தலைப்பகுதி செங்குத்து சுவர் போன்றும் காணப்படும் பகுதி _______.
1. சர்க்குகள் 2. மலைச் சிகரங்கள் 3. மலைமுகடுகள் 4.செங்குத்துப் பாறைகள்

48. பனி உருகும் போது சர்க் நீரால் நிரப்பப்பட்டு அழகான ஏரிகளாக தோற்றமளிக்கும் ஏரிகள் _______.
1. வெலிங்டன் ஏரி 2. டார்ன் ஏரி 3. புழல் ஏரி 4. எமரால்டு ஏரி

49. இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட சர்க்குகள் ஒன்றை நோக்கி ஒன்று நகரும் போது மாற்றமடையும் குறுகிய, செங்குத்து மற்றும் சரிவான கத்திமுனைக் குன்றுகள் _______.
1. மலை முகடுகள் 2. டார்ன் ஏரிகள் 3. அரெட்டுகள் 4.இமயமலைத் தொடர்

50. 'U' வடிவபள்ளத்தாக்கு பின்வரும் எந்த பனியாற்றின் விளைவுகளால் ஏற்படுகின்றன?
1. பக்கவாட்டு மற்றும் செங்குத்து அரிப்பு 2. ஆழப்படுத்துதல்
3. அகலப்படுத்துதல் 4. இவையனைத்தும்

51. பனியாற்றினால் கடத்தப்படும் பெரிய, சிறிய மணல் மற்றும் வண்டல் ஆகியவற்றால் படிய வைக்கப்படும் படிவுகள் _______.
1. பனியாறுகள் 2. பனி மலைகள்
3. அரெட்டுகள் 4. பனியாற்று மொரைன்கள்

52. பாலைவனத்தில் அரித்தல் மற்றும் படியவைத்தல் செயல்முறைகளை வேகமாக செயல்படுத்தும் காரணி _______.
1. காற்று 2. நீர் 3. வெப்பம் 4. அலை

53. பாறையின் மேற்பகுதியை விட கீழ்ப்பகுதியை காற்று வேகமாக அரிக்கின்ற காரணத்தினால் பாறைகள் மேற்பகுதி அகன்றும் மற்றும் அடிப்பகுதி குறுகலாகவும் காணப்படுகிற பாறைகள் _______.
1. படிவுப் பாறைகள் 2. உருமாறிய பாறைகள்
3. காளான் பாறைகள் 4. தீப்பாறைகள்

54. பாலைவனப் பகுதியில் காணப்படும் பாறைகள் _______.
1. காளான் பாறைகள் 2. உருமாறிய பாறைகள்
3. படிவுப் பாறைகள் 4. தீப்பாறைகள்

55. காளான் பாறைகள் காணப்படும் இடம் _______.
1. சமவெளிப் பகுதி 2. பாலைவனம் 3. மலைப்பிரதேசம் 4. கடலோரப் பகுதி

www.kalvinews.com

56. ஒரு தனித்து விடப்பட்ட எஞ்சிய குன்று வட்டமான தலைப்பகுதியுடன் நிற்கும் ஒரு தூண் போன்று காட்சியளிப்பது _______.

1. மணல் குன்றுகள்
2. உருமாறிய பாறைகள்
3. காற்றரிப்புத் தனிக் குன்றுகள்
4. காளான் பாறைகள்

57. காற்றரிப்புத் தனிக்குன்றுகள் காணப்படும் இடம் _______.

1. தென் ஆப்பிரிக்காவின் கலஹாரி பாலைவனம்
2. இந்தியாவின் தார் பாலைவனம்
3. வடஆப்பிரிக்காவின் சஹாரா பாலைவனம்
4. எகிப்தில் உள்ள புளூ பாலைவனம்

58. பிறைச்சந்திர தோற்றத்துடன் கூடிய மணல் குன்றுகள் _______.

1. அரெட்டுகள்
2. பர்கான்கள்
3. வட்டவடிவக் குன்றுகள்
4. வண்டல் படிவுகள்

59. பர்கான்கள் என்பவை _______.

1. வட்ட வடிவக் குன்றுகள்
2. கூம்பு வடிவ மணல் குன்றுகள்
3. பிறைச்சந்திர தோற்றமுடைய மணல் குன்றுகள்
4. காளான் பாறைகள்

60. மிக லேசாகவும் மற்றும் எடை குறைவாகவும் இருக்கும் மணல் துகள்கள் நீண்ட தொலைவிற்கு கடத்தப்பட்டு ஒரு பெரும்பரப்பில் படிவது _______.

1. பர்கான்கள்
2. காற்றடி வண்டல் படிவுகள்
3. வண்டல் விசிறிகள்
4. மணல் குன்றுகள்

61. காற்றடி வண்டல் படிவுகள் அதிகமாக காணப்படும் இடம் _______.

1. ஜப்பான்
2. ஆப்பிரிக்கா
3. இந்தியா
4. சீனா

62. வடக்கு சீனாவில் படிந்துள்ள காற்றடி வண்டல் படிவுகள் எந்த பாலைவனத்திலிருந்து கடத்தப்பட்டவை?

1. தார் பாலைவனம்
2. கோபி பாலைவனம்
3. சஹாரா பாலைவனம்
4. கலஹாரிப் பாலைவனம்

63. நிலத்தின் ஒரு பகுதி கடலை அடுத்தோ அல்லது ஒட்டியோ காணப்படுவது _______.

1. காடுகள்
2. கடற்கரை
3. மணல் குன்றுகள்
4. நகரங்கள்

64. கடல்நீரும், நிலமும் சந்திக்கின்ற இடம் _______.

1. கடற்கரை
2. சமவெளி
3. கடலோர எல்லை
4. துறைமுகம்

65. அலைகளின் அரிப்பினாலும், படிதலாலும் மாற்றத்திற்கு உள்ளாவது _______.

1. கடற்கரை
2. துறைமுகம்
3. புவிப்பரப்பு
4. டெல்டாக்கள்

66. கடல் அலைகள் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்துவதால் பாறையில் இது உருவாகும்.

1. படிவுகள்
2. விரிசல்கள்
3. கடற்கரை
4. எரிமலைகள்

www.kalvinews.com

67. கடல் அலைகளின் அரிப்பினாலும் மற்றும் படிதலாலும் உருவாகுபவை _______.

1. கடற்கரை
2. நகரங்கள்
3. கடலோர நிலப்பரப்புகள்
4. கடலோர எல்லை

68. கடற்கரையை அடுத்துள்ள நிலம் அலைகளின் மோதலாலும், அரிப்பினாலும் கடலை நோக்கி செங்குத்தாக உயர்ந்து காணப்படும் பகுதி _______.

1. பாறை கடல் ஓங்கல்
2. செங்குத்துக் குன்றுகள்
3. படிவுகள்
4. கடலோர நிலப்பரப்புகள்

69. விரிசல்களால் செங்குத்துப் பாறையில் தோன்றும் வெற்றிடங்கள் _______.

1. வண்டல் மண்படிவுகள்
2. வெடிப்புகள்
3. பாறைச் சிதைவுகள்
4. கடற்குகைகள்

70. கடற்குகைகளின் உட்குழிவு பெரிதாகும்போது குகையின் மேற்கூரை மட்டும் எஞ்சி நின்று தோற்றுவிப்பது _______.

1. விரிசல்கள்
2. கடல் வளைவுகள்
3. குதிரை குளம்பு ஏரி
4. டெல்டாக்கள்

71. கடல்அலைகள் மேற்கூரையை அரிப்பதால் எஞ்சி நிற்கும் சுவர் போன்ற தோற்றங்கள் _______.

1. கடல் வளைவுகள்
2. விரிசல்கள்
3. கடற்குகைகள்
4. கடல் தூண்கள்

72. கடல் அலைகளால் மணல் மற்றும் சரளைகள் படிந்துள்ள நீள்வட்ட வடிவ மணல் அல்லது சேறு _______.

1. மணல் திட்டுக்கள்
2. கடல் தூண்கள்
3. வண்டல் படிவுகள்
4. கடற்கரை

73. கடற்கரையிலிருந்து பகுதியாகவோ அல்லது முற்றிலுமாக பிரிக்கப்பட்ட ஆழம் குறைவான நீர்தேக்கம் _______.

1. காயல்கள்
2. உப்பங்கழிகள்
3. லகூன்
4. இவையனைத்தும்

74. உலகிலேயே மிக நீளமான கடற்கரை அமைந்துள்ள நாடு _______.

1. இந்தியா
2. ஜப்பான்
3. அமெரிக்கா
4. இங்கிலாந்து

75. உலகிலேயே மிக நீளமான கடற்கரை _______.

1. இந்தியா - சென்னை - மெரினா கடற்கரை
2. அமெரிக்கா - புளோரிடா - மியாமி கடற்கரை
3. இந்தியா - தமிழ்நாடு - மகாபலிபுரம் கடற்கரை
4. இந்தியா - கன்னியாகுமரி - கடற்கரை

76. உலகிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரை _______.

1. அமெரிக்கா - புளோரிடா
2. மகாபலிபுரம் கடற்கரை
3. சென்னை - மெரினா கடற்கரை
4. கோவளம் கடற்கரை

77. முதன்மை புறச் செயல்முறைகள் என்பது _______.

1. ஆறு, பனியாறு
2. காற்று
3. கடல்அலைகள்
4. இவையனைத்தும்

78. வானிலைச்சிதைவு மற்றும் அரித்தல் செயல்கள் மூலம் தொடர்ந்து மறுவடிவமைப்பதால் தோன்றுபவை _______.

1. நிலத் தோற்றங்கள்
2. காலநிலை மாற்றங்கள்
3. வானிலை மாற்றங்கள்
4. பருவகால மாற்றங்கள்

79. ஆறு, பனியாறு, காற்று மற்றும் கடல் அலைகள் ஆகியன ______.

1. அகச் செயல்முறைகள்
2. முதன்மை புறச் செயல்முறைகள்
3. நிலத்தோற்றங்கள்
4. வானிலைச் சிதைவு

80. ஈர்ப்புவிசையின் காரணமாக மலைச்சரிவில் கீழ்நோக்கி மெல்ல நகரும் பெரும் பனிக் குவியல்கள் _______.

1. பனியாறுகள்
2. பனிக் குன்றுகள்
3. பனிச்சரிவு
4. பனிக்கட்டிகள்

81. மொரைன்கள் என்பவை _______.

1. வண்டல் படிவுகள்
2. வண்டல் விசிறிகள்
3. பனியாற்றுப் படிவுகள்
4. பனியாறுகள்

82. பாலைவனத்தில் அரித்தல் மற்றும் படிய வைத்தலை ஏற்படுத்தும் முதன்மைக் காரணி _______.

1. காற்று
2. வெப்பம்
3. அரித்தல்
4. மணல்

83. கடல் அலைகளால் மணல் மற்றும் சரளைகள் படிந்துள்ள கடலோரப் பகுதி _______.

1. மணற்பரப்பு
2. கடற்கரை
3. நகரங்கள்
4. இவையனைத்தும்

84. உயர்நிலங்கள் அரிப்பு செயல்கள் மூலம் தாழ்நிலப்பகுதிகளாகவும், படியவைத்தல் செயல்கள் மூலம் உயர்நிலங்களாகவும் மாறுவது நிலமட்டம் _______.

1. சமமாக்கல்
2. உயரமாக்கல்
3. சிதைவடைதல்
4. உருமாறுதல்

85. புவிமேற்பரப்பில் பாறைகள் உடைவதும் மற்றும் நொறுங்குவதும் _______.

1. பாறை உருமாறுதல்
2. மணல் உருவாக்கம்
3. பாறை சிதைவடைதல்
4. படிவுகள்

86. ஆற்றினால் தோற்றுவிக்கப்படும் பெரிய விசிறி வடிவ படிவுகள் _______.

1. டெல்டாக்கள்
2. மொரைன்கள்
3. முகத்துவாரம்
4. இவையனைத்தும்

87. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. வட அமெரிக்கா | - | a) ஏஞ்சல் |
| ii. அமெரிக்க ஐக்கியநாடுகள் எல்லை | - | b) விக்டோரியா |
| iii. தென் அமெரிக்கா | - | c) கனடா |
| iv. ஜாம்பியா, ஜிம்பாப்வே | - | d) நயாகரா |

1. i - c ii - d iii - a iv - b
2. i - a ii - b iii - d iv - c
3. i - c ii - d iii - b iv - a
4. i - d ii - c iii - a iv - b

www.kalvinews.com

88. பொருத்துக.

i. சேத்தியாத்தோப்பு - a) துருக்கி
ii. குதிரைக் குளம்பு ஏரி - b) உயர் அணை
iii. ஆசியா மைனர் - c) அரித்தல் மற்றும் படிதல்
iv. லெவீஸ் - d) ஆற்று வளைவுகள்

1. i - d ii - c iii - b iv - a
2. i - d ii - c iii - a iv - b
3. i - b ii - c iii - a iv - c
4. i - c ii - a iii - b iv - d

89. பொருத்துக.

i. பள்ளத்தாக்கு பனியாறுகள் - a) சர்க்குகள்
ii. பனி அரிப்பு - b) கார்ரி சர்க்
iii. ஸ்காட்லாந்து - c) கார் சர்க்
iv. ஜெர்மனி - d) இமயமலை, ஆல்ப்ஸ் மலைப்பகுதி

1. i - c ii - b iii - d iv - a
2. i - b ii - d iii - a iv - c
3. i - a ii - c iii - b iv - d
4. i - d ii - a iii - b iv - c

90. பொருத்துக.

i. மொரைன்கள் - a) விரிசல்கள்
ii. பர்கான்கள் - b) உப்பங்கழிகள்
iii. கடல் குகைகள் - c) பனியாற்றுப் படிவுகள்
iv. காயல்கள் - d) மணல் குன்றுகள்

1. i- c ii - d iii - b iv - a
2. i - d ii - c iii - a iv - b
3. i - c ii - d iii - a iv - b
4. i - a ii - b iii - c iv - d

91. பொருத்துக.

i. ஒடிசா - a) வேம்பநாடு ஏரி
ii. கேரளா - b) மியாமி கடற்கரை
iii. அமெரிக்கா - c) மெரினா கடற்கரை
iv. சென்னை - d) சிலிகா ஏரி

1. i - d ii - a iii - b iv - c
2. i - d ii - a iii - c iv - b
3. i - c ii - b iii - d iv - a
4. i - b ii - d iii - a iv - c

92. கூற்று: கடற்கரை மாற்றத்திற்கு உட்பட்டது.

காரணம்: அலைகளின் அரிப்பும், படிதலும் கடலோர நிலப்பரப்புகளில் ஏற்படுகின்றன.

1. காரணம் கூற்றை விளக்கவில்லை.
2. காரணம் கூற்றை விளக்குகிறது.
3. கூற்று தவறு, காரணம் சரி.
4. கூற்றும், காரணமும் தவறு.

93. கூற்று: காற்றினால் மணல் ஒரு பெரும்பரப்பில் படிவது காற்றடி வண்டல் படிவுகள் எனப்படும்.

காரணம்: காற்று மணலை நீண்ட தொலைவிற்கு கடத்திச் செல்கிறது.

1. காரணம் கூற்றை விளக்கவில்லை.
2. காரணம் கூற்றை விளக்குகிறது.
3. கூற்று மற்றும் காரணம் சரி.
4. கூற்றும், காரணமும் தவறு.

www.kalvinews.com

94. கூற்று: கிளையாற்றின் முகத்துவாரங்களில் தோற்றுவிக்கப்படும் படிவுகள் டெல்டாக்கள்.
காரணம்: ஆறு, கடலை அடையும் போது கிளை ஆறுகள் பிரிவதில்லை.
1. காரணம் கூற்றை விளக்குகிறது.
2. கூற்று சரி, காரணம் தவறு.
3. கூற்றும், காரணமும் சரி.
4. கூற்றும், காரணமும் தவறு.

95. பின்வருவனவற்றுள் கடல் அலை அரிப்புடன் தொடர்பற்றது _______.
1. கடல் ஓங்கல்
2. கடல் வளைவுகள்
3. கடல் தூண்
4. கடற்கரை

96. கூற்று: முகத் துவாரப் பகுதியில் ஆறுகளால் டெல்டாக்கள் உருவாகின்றன.
காரணம்: கடல் பகுதியை ஆறு அடையும்போது ஆற்றின் வேகம் குறையும்.
1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.
2. கூற்று சரி, காரணம் தவறு.
3. கூற்று தவறு, காரணம் சரி.
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

97. கூற்று: கடல் வளைவுகள் இறுதியில் கடல் தூண்களாகின்றன.
காரணம்: கடல் தூண்களின் அலைகளின் படிவுகளால் ஏற்படுகின்றன.
1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.
2. கூற்று சரி, காரணம் தவறு.
3. கூற்று தவறு, காரணம் சரி.
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

98. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. கைவிடப்பட்ட மியாண்டர் வளைவுகள் | - | a) பனியாறுகள் |
| ii. நகரும் ஒரு பெரும் பனிக்குவியல் | - | b) பிறை வடிவ மணற் குன்றுகள் |
| iii. பிறை வடிவ மணல் மேடுகள் | - | c) காயல் |
| iv. வேம்பநாடு ஏரி | - | d) குதிரைக் குளம்பு ஏரி |

1. i - d ii - a iii - b iv - c
2. i - d ii - a iii - c iv - b
3. i - c ii - b iii - d iv - a
4. i - b ii - d iii - a iv - c

99. கடல் அலைகளால் உருவாக்கப்பட்ட நிலத்தோற்றம் _______. (NMMS-2020-21)
(1) கடல் ஓங்கல்
(2) கடற் குகைகள்
(3) கடல் வளைவுகள்
(4) மேற்காண் அனைத்தும்

100. பொருத்துக (NMMS-2020-21)

| | | |
|---|---|---|
| a. சர்க்குகள் | - | i. கலஹாரி |
| b. காற்று அரிப்புத் தனிக் குன்றுகள் | - | ii. பழவேற்காடு |
| c. காற்றடி வண்டல் படிவுகள் | - | iii. ஜெர்மனி |
| d. உப்பங்கழிகள் | - | iv. சீனா |

(1) a - ii b - iv c - i d - iii
(2) a - i b - iii c - ii d - iv
(3) a - iii b - i c - iv d - ii
(4) a - iv b - i c - iii d - ii

www.kalvinews.com

101. பீடப் பாறைகள் இப்படியும் அழைக்கப்படுகின்றன. (NMMS-2018)

(1) லோயஸ் (2) பர்கான்கள்

(3) காளான் பாறைகள் (4) இன்சல்பார்க்குகள்

102. பனியாறுகள் இல்லாத கண்டம் _______. (NMMS-2018)

(1) வட அமெரிக்கா (2) தென் அமெரிக்கா

(3) ஆஸ்திரேலியா (4) ஆப்பிரிக்கா

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 26 | (2) | 51 | (4) | 76 | (3) | 101 | (3) |
| 2 | (3) | 27 | (3) | 52 | (1) | 77 | (4) | 102 | (3) |
| 3 | (2) | 28 | (1) | 53 | (3) | 78 | (1) | | |
| 4 | (3) | 29 | (3) | 54 | (1) | 79 | (2) | | |
| 5 | (1) | 30 | (1) | 55 | (2) | 80 | (1) | | |
| 6 | (2) | 31 | (2) | 56 | (3) | 81 | (3) | | |
| 7 | (4) | 32 | (4) | 57 | (1) | 82 | (1) | | |
| 8 | (3) | 33 | (4) | 58 | (2) | 83 | (2) | | |
| 9 | (2) | 34 | (1) | 59 | (3) | 84 | (1) | | |
| 10 | (1) | 35 | (2) | 60 | (2) | 85 | (3) | | |
| 11 | (2) | 36 | (3) | 61 | (4) | 86 | (1) | | |
| 12 | (2) | 37 | (1) | 62 | (2) | 87 | (1) | | |
| 13 | (3) | 38 | (4) | 63 | (2) | 88 | (2) | | |
| 14 | (1) | 39 | (2) | 64 | (3) | 89 | (4) | | |
| 15 | (1) | 40 | (1) | 65 | (1) | 90 | (3) | | |
| 16 | (4) | 41 | (4) | 66 | (2) | 91 | (1) | | |
| 17 | (3) | 42 | (3) | 67 | (3) | 92 | (2) | | |
| 18 | (2) | 43 | (2) | 68 | (1) | 93 | (3) | | |
| 19 | (1) | 44 | (1) | 69 | (4) | 94 | (2) | | |
| 20 | (1) | 45 | (2) | 70 | (2) | 95 | (4) | | |
| 21 | (4) | 46 | (3) | 71 | (4) | 96 | (1) | | |
| 22 | (1) | 47 | (1) | 72 | (1) | 97 | (2) | | |
| 23 | (2) | 48 | (2) | 73 | (4) | 98 | (1) | | |
| 24 | (2) | 49 | (3) | 74 | (3) | 99 | (4) | | |
| 25 | (1) | 50 | (4) | 75 | (2) | 100 | (3) | | |

www.kalvinews.com



## 3. மக்கள்தொகை மற்றும் குடியிருப்புகளும்

**தொகுப்பு:**
**திரு.செ.பெரியசாமி, M.Sc.,B.Ed.,M.A.,M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி,**
**கொ.ஒட்டப்பட்டி, கரூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.பெ.பிரபாத், M.Sc., B.Ed., M.A.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, கோமாளியூர்,**
**சேலம் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- மக்களின் விகிதம், பிறப்பு, இறப்பு, வளர்ச்சி விகிதம், காலம் மற்றும் இடத்திற்கு ஏற்ப அவற்றில் ஏற்படும் மாற்றத்தைப் பற்றிய கற்றல் **மக்கட் புவியியல்.**
- மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதே **இடம்பெயர்தல்** எனப்படும்.

**மனித இனங்கள்**:

- ஒரே பண்புகள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பின்பற்றக்கூடிய மக்கள் குழுக்கள் மனித இனங்கள் எனப்படும்.

**உலகின் முக்கிய மனித இனங்கள்:**

| கூறுகள் | காக்கச இனம் | நீக்ரோ இனம் | மங்கோலிய இனம் | ஆஸ்ட்ரலாய்டு இனம் |
|---|---|---|---|---|
| **இனம்** | ஐரோப்பிய இனத்தவர்கள் | ஆப்பிரிக்கர்கள் | ஆசிய - அமெரிக்க இனத்தவர்கள், | ஆஸ்திரேலியர்கள், |
| **வாழும் பகுதி** | யுரேசியா | ஆப்பிரிக்கா | ஆசியா, ஆர்க்டிக் | ஆஸ்திரேலியா, ஆசியா |
| **தோல் நிறம்** | வெள்ளை | கருமை | வெளிர் மஞ்சள், பழுப்பு | கருமை |
| **கண் நிறம்** | அடர் பழுப்பு | கருமை | - | - |
| **மூக்கு** | குறுகலானது | அகலமானது | தட்டையானது | அகலமானது |
| **முடி** | அலை போன்றது | கருமை, சுருள் | நீளமானது | சுருள் |
| **மற்றவை** | - | தடித்த உதடு | தட்டையான முக அமைப்பு, பெரிய தலை | குறைவான உயரம் |

www.kalvinews.com

**இந்தியாவின் இனங்கள்**

- இந்தியாவை மனித நாகரீகத்தின் தொட்டில் என்றே கூறவேண்டும்.
- சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களின் தோற்றம் என நம்பப்படுகிறது
- இந்தோ-ஆரியர்களின் வருகைக்குப் பிறகு திராவிட மக்கள் இந்தியாவின் தென்பகுதிக்குத் தள்ளப்பட்டார்கள்.
- .இந்தியாவின் தென்பகுதி மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது.
- **திராவிடமொழிகள்:** தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு.

**மதம்**:

- மதம் என்பது ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டதாகும்.
- இது மனிதர்களை மனித சமுதாயத்துடன் சேர்க்கிறது.
- மதம் ஒரு குழுவின் அடையாளமாகவும், கலாச்சாரப் புத்துணர்வுப் புள்ளியின் அடையாளமாகவும் திகழ்கிறது.

| மதங்களின் வகைப்பாடு | மதங்கள் | வழிபாட்டுத்தலம் |
|---|---|---|
| உலகளாவிய மதங்கள் | கிறிஸ்தவம் | தேவாலயம் |
| | இஸ்லாம் | மசூதி |
| | புத்தமதம் | விஹாரம் |
| மனித இனப்பிரிவு மதங்கள் | இந்து | கோவில் |
| | ஜூடோயிசம் | சினகாக் |
| | சமணமதம் | பசாதி |
| | ஜொராஸ்டிரிய மதம் | அகியாரி |
| | ஷிண்டோயிசம் | ஷிண்டோஷிரின்ஸ் |
| நாடோடிகள் (அ) பாரம்பரிய மதங்கள் | அனிமிஸம், ஷாமானிஸம், ஷாமன் | |

**மொழி**:

- சமுதாய அமைப்பில் கலாசாரத்தைப் பரப்பும் பிரதான கருவியாகும்.
- ஒருவர் மற்றொருவருடன் தொடர்பு கொள்வதற்கு எழுத்து வடிவிலோ அல்லது ஒலி வடிவிலோ மொழி பயன்படுத்தப்படுகிறது.
- அரசியல், பொருளாதார, சமூக மற்றும் மத செயல்பாடுகளின் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள மொழி வழிவகுக்கிறது
- **உலகின் முக்கிய மொழிகள்:** தமிழ், இந்தி, சீனம், ஆங்கிலம், ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ், ரஷ்யன், அராபிக், ஜெர்மன்

  **இந்திய மொழிகள்**
- இந்திய அரசியலமைப்பு 22 மொழிகளை அங்கீகரித்துள்ளது.

www.kalvinews.com

| வட இந்திய மொழிகள் | தென்னிந்திய மொழிகள் |
|---|---|
| காஷ்மீரி, உருது, பஞ்சாபி, ஹிந்தி, அசாமி, ராஜஸ்தானி, குஜராத்தி, பெங்காலி, | தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் (திராவிட மொழிகள்) |


| தேதி | நிகழ்வுகள் |
|---|---|
| ஜூலை 11 | உலக மக்கள் தொகை தினம் |
| ஜனவரி 3 - ஆவது ஞாயிறு | உலக மத நல்லிணக்க தினம் |
| பிப்ரவரி 21 | பன்னாட்டு தாய்மொழி தினம் |
| மே 21 | உலக கலாச்சார பன்முகத்தன்மை தினம் |

**குடியிருப்பு**

- குடியிருப்பு மனித வாழ்விடம் ஆகும்.
- தளம் மற்றும் சூழலமைவு என்பது ஒரு குடியிருப்பின் உண்மையான அமைவிடத்தைக் குறிக்கும்.
- விவசாயப் பிரதேசங்களில் வீடுகளின் சுவர்கள் களி மண்ணாலும், கூரைகள் வைக்கோலாலும் வேயப்பட்டிருந்தது.
- வீட்டின் அளவானது அங்குள்ளவர்களின் பொருளாதாரத்தைச் சார்ந்தது.

| குழுமிய குடியிருப்பு | சிதறிய குடியிருப்பு |
|---|---|
| வீடுகள் ஒன்றுக்கொன்று அருகருகே காணப்படும். | வீடுகள் இடைவெளி விட்டு காணப்படும் |
| ஆற்றுச் சமவெளிகளிலும் வளமான சமவெளியை ஒட்டியும் இருக்கும் | அதிக வெப்பப்பகுதிகள், மலைப்பாதை, அடர்ந்த காடு, தீவிர சாகுபடி பிரதேசங்கள், புல்வெளிகளில் காணப்படும் |
| (எ.கா) வடக்கு சமவெளிகள், தீபகற்ப கடற்கரை சமவெளிகள் | (எ.கா) கோசி மலைப்பாதையின் வடக்குப்பகுதி, கங்கைச் சமவெளி, ராஜஸ்தானின் பாலைவனப் பகுதி, இமயமலை மற்றும் நீலகிரியின் மலை அடிவாரம் |

குடியிருப்புகளின் படிநிலை



www.kalvinews.com

**கிராமப்புற குடியிருப்பு அமைப்புக்கு ஏற்ற காரணிகள்**:

- இயற்கையான நிலத்தோற்றம்
- உள்ளூர் தட்பவெப்பநிலை
- மண் வளம் மற்றும் நீர் வளங்கள்
- சமூக அமைப்புகள்
- பொருளாதார நிலை

| கூறுகள் | கிராமப்புறக் குடியிருப்பு | நகர்ப்புறக் குடியிருப்பு |
|---|---|---|
| **விளக்கம்** | நிலத்தோற்றம், தட்பவெட்பம், நீர் நிலைகள் மற்றும் சமூகப் பொருளாதாரக் காரணிகளைப் பொருத்தே அமைகின்றன | நகர்ப்புறத்திற்கான வரையறையானது நாட்டிற்கு நாடு வேறுபடும் |
| **தொழில்** | முதன்மை நிலைத்தொழில் | இரண்டாம், மூன்றாம் நிலைத் தொழில் |
| **உதாரணம்** | வேளாண்மை, மரம் வெட்டுதல், மீன்பிடித்தல், சுரங்கத்தொழில் | தொழிற்சாலை, வாணிபம், வங்கிப்பணிகள் |
| **மக்கள் தொகை** | குறைவு | அதிகம் |
| **மக்கள் அடர்த்தி** | குறைவு | அதிகம் |
| **வகைகள்** | நீள்வடிவக் குடியிருப்பு<br>செவ்வக வடிவக் குடியிருப்பு<br>வட்ட வடிவக் குடியிருப்பு<br>நட்சத்திர வடிவக் குடியிருப்பு | நகரம்<br>மாநகரம்<br>மிகப்பெரிய நகரம்<br>இணைந்த நகரம்<br>செயற்கைக்கோள் நகரம்<br>பொலிவுறு நகரம் |

**கிராமப்புறக் குடியிருப்பின் அமைப்புகள்:**

| | | |
|---|---|---|
| **நீள் வடிவக் குடியிருப்புகள்** | சாலைகள், இருப்புப் பாதைகள், பள்ளத்தாக்கின் சரிவு அருகே கட்டப்பட்ட வீடுகள் | (எ.கா) இமயமலை, ஆல்ப்ஸ் மற்றும் ராக்கிமலைத் தொடர் |
| **செவ்வக வடிவக் குடியிருப்புகள்** | நீளமானதாகவும் அகலம் குறைந்தும் காணப்படும் சமவெளிப் பகுதிகள், மலைகளுக்கிடையே உள்ள பள்ளத்தாக்குகள் | (எ.கா) சட்லஜ் பகுதிகள் |
| **வட்ட வடிவக் குடியிருப்புகள்** | ஒரு மையப்பகுதியைச் சுற்றிக் காணப்படும். | (எ.கா) ஏரிகள் மற்றும் குளங்கள் |
| **நட்சத்திர வடிவக் குடியிருப்புகள்** | சாலைகள் ஒன்று சேரும் இடங்களில் இருந்து, சாலையின் இரு பக்கங்களிலும் எல்லாத் திசைகளிலும் பரவி நட்சத்திர வடிவில் காணப்படும். | (எ.கா) நாமக்கல் நகர்ப்புறக் குடியிருப்புகள் |

www.kalvinews.com

**நகர்ப்புற குடியிருப்புகள்:**

| | | |
|---|---|---|
| **நகரம்** | 5000 அதிகமான மக்கள் இருக்கும் இடம். | உதாரணம்: ஆத்தூர் |
| **மாநகரம்** | ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு அதிகமானோர் உள்ள இடங்கள் பல்வேறு தொழில்கள் உள்ளடங்கி இருக்கும். | உதாரணம்: சேலம் |
| **மிகப்பெரிய நகரம்** | 10 மில்லியனுக்கு மேல் மக்கள் தொகை கொண்ட பெரியநகரம். இது ஒரு தனித்த தலைநகரமாகவும் செயல்படும். | உதாரணம்: கேன்டன், டோக்கியோ, டெல்லி, மும்பை |
| **மீப்பெரு நகர்** | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மிகப்பெரிய நகரங்களின் மக்கள்தொகை 10 மில்லியனுக்கு மேலாகவும், பெரிய நகராக்கப் பரப்பையும் கொண்ட இடத்தைக் குறிக்கும். | உதாரணம்: பாஸ்டனுக்கும் வாஷிங்கடனுக்கும் இடைப்பட்ட பகுதி, டெல்லி, மும்பை, கொல்கத்தா நகர்ப்புறப் பகுதி, குஜராத்தின் காந்திநகர், சூரத், வதோதரா, ராஜ்கோட். |
| **இணைந்த நகரம்** | சில நகரங்களையும், பெரு நகரங்களையும், நகர்ப்புறங்களையும் கொண்ட பிரதேசம். | உதாரணம்: மகாராஷ்டிராவின் மும்பை, ஹரியானாவின் குர்ஹான், பரிதாபாத், உத்திரப்பிரதேசத்தின் நொய்டா |
| **செயற்கைக்கோள் நகரம்** | அதிகளவு மக்கள்தொகையைக் கொண்ட பெருநகரங்களில் நகர்ப்புறங்களுக்கு வெளியே வடிவமைக்கப்படும். வீடுகள் கிராம, நகர்ப்புற எல்லைக்கு வெளியே அமைந்திருக்கும் | - |
| **பொலிவுறு நகரம்** | நகர்ப்புறப் பகுதியில் உள்கட்டமைப்பு வசதி, வீட்டுமனை விற்பனை, தொலைத்தொடர்பு எளிதாக கிடைக்கக்கூடிய சந்தை உள்ள நகரங்கள் | (எ.கா) புவனேஸ்வர், புனே, ஜெய்ப்பூர், சூரத், லூதியானா, கொச்சி, அகமதாபாத், ஜபல்பூர், விசாகப்பட்டினம், சோலாப்பூர், தாவனகெரா |

**நீர் நிலைக் குடியிருப்புகள்:**

- இவ்வகையான குடியிருப்புகள் வறண்ட நிலப்பிரதேசங்களில் நீர் நிலையை ஒட்டிய பகுதிகளில் காணப்படுகிறது.

**வறண்ட நில குடியிருப்புகள்**:

- இவ்வகையான குடியிருப்புகள் அதைச் சுற்றியுள்ள நிலத்தைக் காட்டிலும் சற்று உயரத்தில் அமைந்துள்ள குடியிருப்பாகும்.

www.kalvinews.com

- (எ.கா) கேரளக் கடற்கரையோரம் மற்றும் கிழக்கு கடற்கரை டெல்டா கரையோரப் பகுதிகளில் காணப்படும் குடியிருப்புகள்

**யாத்திரைக் குடியிருப்புகள்:**

- வழிபாட்டுத் தலங்களைச் சுற்றியும் மத முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் இக்குடியிருப்புகள் அமையும். (எ.கா) பழனி
- **தமிழ்நாட்டில் பொலிவுறு நகரங்களாக மாற்றப்பட உள்ள முக்கிய நகரங்கள்**

  1. சென்னை 2. மதுரை 3. திருநெல்வேலி 4. திருச்சிராப்பள்ளி 5. தஞ்சாவூர் 6. திருப்பூர் 7. சேலம் 8. வேலூர் 9. கோயம்புத்தூர் 10. தூத்துக்குடி 11. திண்டுக்கல் 12. ஈரோடு

- **உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றுப்படி ஒரு ஆரோக்கியமான நகரத்திற்கு அவசியம் இருக்க வேண்டியவை**:
- தூய்மையான மற்றும் பாதுகாப்பான சுற்றுச்சூழல்.
- அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல்.
- உள்ளாட்சியில் உள்ளூர் மக்களை ஈடுபடுத்திக் கொள்ளுதல்.
- எளிதாகக் கிடைக்கக்கூடிய ஆரோக்கிய சேவைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**பயிற்சி வினாக்கள்:**

1. மனிதன் மற்றும் அவனின் சுற்றுப்புறத்தை இயற்கைச் சூழலோடு படிப்பது ______.

   1. உயிரியல் 2. நிலத்தோற்ற புவியியல்
   3. பௌதிகம் 4. மனித புவியியல்

2. மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வது ______எனப்படும்.

   1. வளம் பெயர்வு 2. புலம் பெயர்வு 3. இடம் பெயர்தல் 4. காலம் பெயர்வு

3. மங்கோலிய இன மக்கள் ______ இனத்தவர்கள்

   1. ஐரோப்பிய 2. ஆசிய-அமெரிக்க 3. ஆப்பிரிக்க 4. ஆஸ்திரேலியா

4. உலகில் உள்ள முக்கிய மனித இனங்களின் எண்ணிக்கை ______.

   1. 4 2. 5 3. 3 4. 2

5. ஆஸ்ட்ரலாய்டு இனத்தைச் சேர்ந்தவர்கள் ______.

   1. காக்கசாய்டு 2. நீக்ராய்டு
   3. ஆஸ்திரேலியர்கள் 4. மங்கோலாய்டு

6. ஆசியா மற்றும் ஆர்ட்டிக் பிரதேசத்தில் காணப்படும் மனித இனம் ______.

   1. காக்கச இனம் 2. நீக்ரோ இனம் 3. மங்கோலிய இனம் 4. ஆஸ்ட்ரலாய்டு

7. பொருத்துக

   i). ஆஸ்ட்ரலாய்டு - a. பெரிய தலை, பழுப்பு நிறத் தோல்
   ii). காக்கச இனம் - b. தடித்த உதடுகள், நீளமான தலை
   iii). நீக்ரோ இனம் - c. கருப்பு நிறத் தோல், குட்டையானவர்கள்
   iv). மங்கோலிய இனம் - d வெள்ளை நிறத் தோல், அடர் பழுப்பு நிற கண்கள்

   1. i - d ii - a iii - b iv - c 2. i - c ii - d iii - a iv - b
   3. i - c ii - d iii - b iv - a 4. i - a ii - c iii - d iv - b

www.kalvinews.com

8. **கூற்றுகளை ஆராய்க.**

**கூற்று** 1: வட இந்தியாவில் திராவிடர்களின் தோற்றம் பண்டைய சிந்து சமவெளி நாகரிகத்தில் இருந்து தோன்றியது.

**கூற்று** 2: இந்தோ - ஆரியர்களின் வருகைக்குப் பிறகு திராவிடர்கள் இந்தியாவின் தென்பகுதிக்குத் தள்ளப்பட்டார்கள்.

1. கூற்றுகள் இரண்டும் சரி
2. கூற்றுகள் இரண்டும் தவறு
3. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
4. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

9. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i. காக்கசாய்டு | - | a) கருமையான சுருள் முடி, அகலமான மூக்கு |
| ii. நீக்ராய்டு | - | b) அலை போன்ற முடி, குறுகலான மூக்கு |
| iii. மங்கோலாய்டு | - | c) நீளமான முடி மற்றும் தட்டையான மூக்கு |
| iv. ஆஸ்ட்ரலாய்டு | - | d) சுருள்முடி, அகலமான மூக்கு |

1. i - c ii - b iii - a iv - d
2. i - b ii - a iii - c iv - d
3. i - a ii - b iii - c iv - d
4. i - d ii - c iii - b iv - a

10. தென்னிந்தியாவில் பேசப்படும் மொழிகளில் ஒன்று ______.

1. ஹிந்தி 2. குஜராத்தி 3. தெலுங்கு 4. உருது

11. சரியான கூற்றைத் தேர்ந்தெடு:

1. தமிழ்நாட்டை மனித நாகரிகத்தின் தொட்டில் என்றே கூறவேண்டும்.
2. இந்தியாவில் திராவிடர்களின் முதல்நிலைத் தோற்றத்தையே சிந்து சமவெளி நாகரிகம் என்கிறோம்.
3. திராவிடர்கள் வட இந்தியப் பகுதியில் வாழ்ந்து வந்தார்கள்.
4. இந்தோ ஆரியர்களின் வருகைக்குப் பிறகு திராவிட மக்கள் இந்தியாவின் வட கிழக்குப் பகுதிக்கு தள்ளப்பட்டார்கள்.

12. கீழ்க்கண்டவற்றுள் திராவிட மொழி அல்லாத மொழி எது?

1. தமிழ் 2. கன்னடம் 3. மலையாளம் 4. ஹிந்தி

13. பொருந்தாதைக் கண்டறிக.

1. வேளாண்மை 2. மீன் பிடித்தல் 3. வாணிபம் 4. மரம் வெட்டுதல்

14. **கூற்று** : தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் துளு ஆகியவை திராவிட மொழிகள் ஆகும்.

**காரணம்** : பெரும்பாலும் இம்மொழி பேசுபவர்கள் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வாழ்ந்து வந்தார்கள்.

1. கூற்றும் காரணமும் சரி, கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.
2. கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை.
3. கூற்று சரி, காரணம் தவறு.
4. கூற்றும் காரணமும் தவறானவை.

www.kalvinews.com

15. **தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.**

அ. குழுமிய குடியிருப்பை, மையக் குடியிருப்பு எனவும் அழைக்கலாம்.

ஆ. இந்தியாவில் சிதறிய குடியிருப்பை, இமயமலை மற்றும் நீலகிரி மலையடிவாரத்தில் காணமுடியும்.

இ. சிதறிய குடியிருப்பு வெப்பப் பகுதிகளிலும், அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும் காணப்படும்.

ஈ. கிராமப்புறக் குடியிருப்பு ஆறுகள், ஏரிகள் மற்றும் ஊற்றுகள் அருகே காணப்படும்.

1. ஆ, இ, ஈ 2. அ, ஆ, இ 3. அ, ஆ, ஈ 4. எதுவுமில்லை

16. **தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.**

1. நீள் வடிவக் குடியிருப்பு - இமயமலை, ராக்கி மலைத்தொடர்
2. வட்ட வடிவக் குடியிருப்பு - ஏரிகள், குளங்களைச் சுற்றிக் காணப்படும்
3. செவ்வக வடிவக் குடியிருப்பு - சாலைகள் இருப்புப் பாதைகள்
4. நட்சத்திர வடிவக் குடியிருப்பு - நாமக்கல் நகர்புற குடியிருப்புகள்

17. இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை தொழிலில் ஈடுபடுபவர்கள் பொதுவாக எவற்றைச் சார்ந்தவர்கள்?

1. நகர்ப்புற குடியிருப்புகள் 2. கிராமப்புற குடியிருப்புகள்
3. நீர்நிலைக் குடியிருப்புகள் 4. வறண்ட நில குடியிருப்புகள்

18. சமுதாய அமைப்பில் கலாச்சாரத்தைப் பரப்பும் ஒரு பிரதான கருவி _______.

1. சமயம் 2. மொழி 3. இனம் 4. மதம்

19. **கூற்று** 1: மதம் என்பது ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையையும், வழிபாட்டு முறையையும் கொண்டது.

**கூற்று** 2: மதம் ஒரு குழுவின் அடையாளம் அல்ல.

1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு 2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு 4. கூற்று 1, கூற்று 2 சரியாக விளக்குகிறது.

20. **பொருத்துக:**

i. புத்த மதம் - a) கோவில்
ii. இந்துமதம் - b) தேவாலயம்
iii. கிறிஸ்துவ மதம் - c) மசூதி
iv. இஸ்லாம் - d) விஹாரா
v. சமணமதம் - e) பசாதி

1. i - d ii - a iii - b iv - c v - e 2. i - c ii - d iii - e iv - a v - c
3. i - a ii - e iii - b iv - c v - d 4. i - b ii - c iii - a iv - d v - e

21. **சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க.**

1. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு அதிகமானோர் உள்ள இடங்களையே மாநகரம் என்கிறோம்.
2. 5 மில்லியனுக்கு மேல் மக்கள்தொகை கொண்ட பெரிய நகரமே மிகப்பெரிய நகரங்களாகும்.
3. குறைந்தபட்சம் 4 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இருக்கும் இடத்தையே நகரம் என்கிறோம்.

www.kalvinews.com

4. 8 மில்லியனுக்கு மேல் மக்கள்தொகை கொண்ட நகரம் மீப்பெரு நகரம் ஆகும்.

22. இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் _______.

1. 21 2. 18 3. 22 4. 19

23. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க

1. வட்ட வடிவக் குடியிருப்பு
2. நகர்புற குடியிருப்பு
3. செவ்வக வடிவக் குடியிருப்பு
4. நட்சத்திர வடிவக் குடியிருப்பு

24. ஒன்றுக்கொன்று அருகருகே வீடுகள் அமைந்துள்ள குடியிருப்புகள்

1. குழுமிய குடியிருப்பு
2. சிதறிய குடியிருப்புகள்
3. 1 மற்றும் 2
4. எதுவுமில்லை

25. சுற்றியுள்ள நிலத்தைக் காட்டிலும் சற்று உயரத்தில் அமைந்துள்ள குடியிருப்பு

1. செவ்வக வடிவக் குடியிருப்பு
2. நீள்வடிவக் குடியிருப்பு
3. வட்ட வடிவக் குடியிருப்பு
4. வறண்டநில குடியிருப்பு

26. தொலைத்தொடர்பு எளிதாக கிடைக்கக்கூடிய சந்தை உள்ள நகரங்கள்

1. இணைந்த நகரம்
2. பொலிவுறு நகரம்
3. செயற்கைக்கோள் நகரம்
4. மீப்பெருநகரம்

27. வெள்ளத்தால் பாதிக்கப்படாத குடியிருப்புகள்

1. நீர்நிலைக் குடியிருப்பு
2. வறண்ட நில குடியிருப்பு
3. வட்ட வடிவக் குடியிருப்பு
4. நட்சத்திர வடிவக் குடியிருப்பு

28. தமிழ்நாட்டில் பொலிவுறு நகரங்களாக மாற்றப்பட உள்ள நகரங்களின் எண்ணிக்கை

1. 10 2. 7 3. 15 4. 12

**29. தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.**

நகரமயமாதலின் விளைவுகள்

1. விரைவான நகரமயமாக்கலால் குடிசைப் பகுதிகள் அதிக அளவில் உருவாகின்றன.
2. அதிக மக்கள் நெரிச்சல், சுகாதாரமற்ற சுற்றுப்புற சூழலுக்கு வழி வகுக்கிறது.
3. நகர்ப்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குப்பைகளை அகற்றுவது ஒரு சவாலான பணியாக உள்ளது.
4. இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் காற்று மாசடைவது தவிர்க்கப்படுகிறது.

30. பொருந்தாதைக் கண்டறிக.

1. தமிழ் 2. ராஜஸ்தானி 3. மலையாளம் 4. கன்னடம்

**31. பொருத்துக:**

i. குழுமிய குடியிருப்புகள் - a) நீர் நிலையை ஒட்டிய இடங்கள்
ii. சிதறிய குடியிருப்புகள் - b) வடக்கு சமவெளிப் பகுதி
iii. நீர்நிலைக் குடியிருப்புகள் - c) மலைப் பகுதி
iv. வறண்ட (அ) உயர்நிலைக் குடியிருப்புகள் - d) கேரளா கரையோரம்

www.kalvinews.com

1. i - d ii - c iii - a iv - b
2. i - b ii - c iii - a iv - d
3. i - a ii - b iii - c iv - d
4. i - b ii - a iii - c iv - d

32. குடியிருப்பு அமைக்க சிறந்த இடம் எது?

1. நகரம் 2. சிறு சந்தை 3. மாநகரம் 4. கிராமம்

33. _______ குடியிருப்பு, மையக் குடியிருப்பு என அழைக்கப்படுகிறது.

1. தனித்த 2. நடுவில் அமைந்த 3. சிதறிய 4. குழுமிய

34. **கூற்று:** பழனி தமிழ்நாட்டில் யாத்திரைக் குடியிருப்புக்கு உதாரணம் ஆகும்.

**காரணம்**: அங்கு இரும்பு எஃகு தொழிற்சாலை அமைந்துள்ளது.

1. கூற்றும் காரணமும் சரி. கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
2. கூற்றும் காரணமும் சரி. ஆனால், கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை
3. கூற்று தவறு. காரணம் சரி.
4. கூற்று சரி. காரணம் தவறு.

35. **பொருத்துக**

| | | |
|---|---|---|
| அ. நட்சத்திர வடிவக் குடியிருப்புகள் | - | a) தார் பாலைவனம் |
| ஆ. செவ்வக வடிவக் குடியிருப்புகள் | - | b) தென் இந்தியா |
| இ. வட்ட வடிவக் குடியிருப்புகள் | - | c) தீபகற்ப கடற்கரைச் சமவெளி |
| ஈ. சிதறிய குடியிருப்புகள் | - | d) சட்லெஜ் |
| உ. குழுமிய குடியிருப்பு | - | e) ஏரிகள் |

1. அ - b ஆ - d இ - a ஈ - c உ - e
2. அ - d ஆ - b இ - e ஈ - a உ - c
3. அ - b ஆ - d இ - e ஈ - a உ - c
4. அ - c ஆ - d இ - e ஈ - a உ - b

36. **சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.**

1. காக்கச இனம் - ஆசியா
2. மங்கோலிய இனம் - ஆப்பிரிக்கா
3. நீக்ரோஇனம். - ஐரோப்பா
4. ஆஸ்ட்ரலாய்டு - ஆசியா, ஆஸ்திரேலியா

37. உலகளாவிய மதங்களை எத்தனை பிரிவுகளாக வகைப்படுத்தலாம்?

1. 3 2. 5 3. 7 4. 8

38 ஜூடாய்சம் மத மக்களின் வழிபாட்டுத் தலம் _______.

1. பசாதி 2. அகியாரி 3. விஹாரா 4. சினகாக்

39. சாலைகள் ஒன்று சேரும் இடங்களில் இருந்து, சாலையின் இரு பக்கங்களிலும் எல்லாத் திசைகளிலும் பரவிக் காணப்படும் குடியிருப்பு _______ என்று பெயர்.

1. வட்ட வடிவக் குடியிருப்பு
2. நீள் வடிவக் குடியிருப்பு
3. நட்சத்திர வடிவக் குடியிருப்பு
4. செவ்வக வடிவக் குடியிருப்பு

www.kalvinews.com

40. **பொருத்துக.**

i. நகரம் - a) பெரிய நகராக்கப் பரப்பு

ii. மாநகரம் - b) 10 மில்லியனுக்கு மேல் மக்கள்தொகை

iii. மிகப்பெரிய நகரம் - c) 100000 மேல் மக்கள்தொகை

iv. மீப்பெரு நகரம் - d) 5000 மக்கள் தொகை

1. i-c ii-a iii-b iv-d
2. i-b ii-c iii-a iv-d
3. i-d ii-c iii-b iv-a
4. i-b ii-a iii-d iv-c

41. **கூற்று**: தளம் மற்றும் சூழல் அமைவு என்பது ஒரு குடியிருப்பின் உண்மையான அமைவிடத்தை குறிப்பதாகும்.

**காரணம்**: அமைவிடமானது தொழில் அடிப்படையில் அமைகிறது.

1. கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
2. கூற்று சரி, காரணம் தவறு.
3. கூற்று சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
4. கூற்றும் காரணமும் தவறு.

42. **தவறான இணையைக் கண்டறிக.**

இணைந்த நகரம்

1. மும்பை - மகாராஷ்டிரா
2. குர்கான், பரிதாபாத் - ஹரியானா
3. நொய்டா - உத்திர பிரதேசம்
4. சென்னை - தமிழ்நாடு

43. சிதறிய குடியிருப்புகள் காணப்படும் இடம் _______.

1. ஆற்றுச் சமவெளிகள்
2. வடக்குச் சமவெளிகள்
3. தீவிர சாகுபடி பிரதேசங்கள்
4. கடற்கரை சமவெளிகள்

44. அளவின் அடிப்படையில் கீழ்க்காணும் நகர்புற குடியிருப்புகளை வரிசைப்படுத்துக.

அ. நகரம் ஆ. மாநகரம்

இ. மிகப்பெரிய நகரம் ஈ. கிராமம்

1. ஈ, அ, இ, ஆ
2. அ, இ, ஈ, ஆ
3. ஆ, அ, இ, ஈ
4. ஈ, அ, ஆ, இ

45. **தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.**

1. உலக மக்கள் தொகை நாள் - ஜூலை 11
2. பன்னாட்டு தாய்மொழி தினம் - பிப்ரவரி 21
3. உலக மத நல்லிணக்க நாள் - ஜனவரி 3வது வாரம்
4. உலக கலாச்சார பன்முகத்தன்மை தினம் - மே 22

46. வீடுகள் மற்றும் கட்டடங்களுக்கு இடையேயான தொடர்பைக் குறிக்கும் அமைப்புகள்

1. நீர்நிலை குடியிருப்பு
2. வறண்ட நில குடியிருப்பு
3. கிராமப்புற குடியிருப்பு
4. நகர்ப்புற குடியிருப்பு

www.kalvinews.com

47. கிராம, நகர்ப்புற எல்லைக்கு வெளியே அமைந்திருக்கும் நகரங்கள் _______.

1. இணைந்த நகரம்
2. பொலிவுறு நகரம்
3. மீப்பெரு நகரம்
4. செயற்கைக்கோள் நகரம்

48. தொழில் வளர்ச்சி அடைந்த இடம் _______ ஆகும்.

1. மீப்பெரு நகரம்
2. செயற்கைக்கோள் நகரம்
3. மாநகரம்
4. இணைந்த நகரம்

49. பல்வேறு வகையான மரபுவழி கடத்தல் மூலம் மனித உயிரினம் குழுக்களாகப் பிரிக்கப்படுவது _______.

1. மொழி
2. இனம்
3. மதம்
4. சமயம்

51. சிறப்புப் பொருளாதார நகரத்திற்கு உதாரணம் _______.

1. பரோவனி
2. சூரத்
3. பாட்னா
4. வாரணாசி

52. பாஸ்டனுக்கும், வாஷிங்டனுக்கும் இடைப்பட்ட பிரதேசம் நன்கு அறிந்த _______நகரமாகும்.

1. மாநகரம்
2. மிகப்பெரிய நகரம்
3. மீப்பெரு நகரம்
4. செயற்கைக்கோள் நகரம்

53. **கூற்று** (A): உலகில் அநேக மொழிகள் பேசப்படுகின்றன.

**காரணம்** (R): மொழி வேற்றுமை உலகில் அதிக அளவில் காணப்படுகிறது.

1. கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
2. கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
3. கூற்று தவறு, காரணம் சரி.
4. கூற்றும் காரணமும் தவறானவை.

54. குடியிருப்பானது கிராமம் மற்றும் நகரம் என எதன் அடிப்படையில் பிரிக்கப்படுகிறது?

1. மொழி
2. மக்கள் தொகை
3. தொழில்
4. கலாச்சாரம்

55. **சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க**.

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) கூற்றுப் படி,

1. தேவைப்படுகின்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல்.
2. தூய்மையான மற்றும் பாதுகாப்பற்ற சூழல்.
3. உள்ளாட்சியில் வெளியூர் மக்களையும் ஈடுபடுத்திக்கொள்ளல்.
4. எளிதாக கிடைக்கக்கூடிய ஆரோக்கிய சேவைகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

56. தென் ஆப்பிரிக்காவின் எந்த பாலைவனத்தில் புஷ்மென்கள் வாழ்கின்றனர்?

1. சஹாரா
2. தார்
3. கலஹாரி
4. அடகாமா

57. வழிபாட்டுத் தலங்களைச் சுற்றி அமைந்திருக்கும் குடியிருப்பு _______.

1. யாத்திரைக் குடியிருப்பு
2. வறண்ட நில குடியிருப்பு
3. நீர்நிலைக் குடியிருப்பு
4. வழிபாட்டுக் குடியிருப்பு

www.kalvinews.com

58. குஜராத்தில் மீப்பெரு நகரப்பகுதி எது?

அ. காந்திநகர் ஆ. வதோதரா

இ. ராஜ்கோட் ஈ. சூரத்

1. அ மற்றும் இ 2. ஆ மற்றும் இ 3. அ, ஆ, இ 4. அனைத்தும்

59. அகியாரி என்பது எந்த மதத்தின் வழிபாட்டுத் தலம்?

1. ஷிண்டோயிஸம் 2. ஜொராஸ்டிரியம் 3. ஷாமானிஸம் 4. ஜூடோயிஸம்

60. குழுவில் பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடுக்க.

1. அனிமிஸம் 2. ஷாமானிஸம் 3. ஷாமன் 4. ஷிண்டோயிஸம்

61. ஜூடோயிஸம், இந்து மதம் மற்றும் ஷிண்டோயிஸம் ஆகியவற்றை உள்ளடக்கிய குழுவின் பெயர்

1. உலகளாவிய மதங்கள் 2. மனித இனப்பிரிவு மதங்கள்

3. பாரம்பரிய மதங்கள் 4. நாடோடிகள்

62. குழுவில் பொருந்தாதைத் தேர்ந்தெடுக்க.

1. கிறிஸ்தவம் 2. இந்து மதம் 3. இஸ்லாம் 4. புத்தமதம்

63. உலகின் முக்கிய மொழி அல்லாதது எது?

1. ஸ்பானிஷ் 2. தமிழ் 3. சீனமொழி 4. அஸ்ஸாமி

64. பின்வருவனவற்றில் எங்கு சிதறிய குடியிருப்புகள் காணப்படுவதில்லை?

அ. கோசி மலைப்பாதையின் வடக்குப்பகுதி

ஆ. ராஜஸ்தான் பாலைவனம்

இ. தீபகற்ப கடற்கரைச் சமவெளி

ஈ. வடக்குச் சமவெளிகள்

1. அ, இ 2. இ, ஈ 3. அ, ஈ 4. அ, ஆ

65. பின்வருவனவற்றில் கிராமப்புறக் குடியிருப்புக்கு ஏற்ற காரணிகள் எது?

அ. இயற்கையான நிலத்தோற்றம் ஆ. தொழில் அமைப்பு

இ. உள்ளூர் தட்ப வெப்பநிலை ஈ. பொருளாதார நிலை

1. அ, இ 2. அ, ஆ, இ 3. அ, ஈ 4. அ, இ, ஈ

66. கீழ்க்கண்ட எவற்றில் நீள்வடிவக் குடியிருப்பு காணப்படுவதில்லை?

1. நீலகிரி 2. இமயமலை

3. ராக்கி மலைத்தொடர் 4. ஆல்ப்ஸ் மலை

67. பின்வருவனவற்றில் மிகப்பெரிய நகரம் அல்லாதது எது?

1. கேண்டன் 2. டோக்கியோ 3. சூரத் 4. மும்பை

68. பின்வரும் பொலிவுறு நகரங்கள் குழுவில் பொருந்தாதது எது?

1. திண்டுக்கல் 2. ஒசூர் 3. திருப்பூர் 4. தஞ்சாவூர்

www.kalvinews.com

# விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (4) | 16 | (3) | 31 | (2) | 46 | (3) | 61 | (2) |
| 2 | (3) | 17 | (1) | 32 | (4) | 47 | (4) | 62 | (2) |
| 3 | (2) | 18 | (2) | 33 | (4) | 48 | (4) | 63 | (4) |
| 4 | (1) | 19 | (1) | 34 | (4) | 49 | (2) | 64 | (2) |
| 5 | (3) | 20 | (1) | 35 | (3) | 50 | (3) | 65 | (4) |
| 6 | (3) | 21 | (1) | 36 | (4) | 51 | (2) | 66 | (1) |
| 7 | (3) | 22 | (3) | 37 | (1) | 52 | (3) | 67 | (3) |
| 8 | (1) | 23 | (2) | 38 | (4) | 53 | (1) | 68 | (2) |
| 9 | (2) | 24 | (1) | 39 | (3) | 54 | (2) | 69 | |
| 10 | (3) | 25 | (4) | 40 | (3) | 55 | (4) | 70 | |
| 11 | (2) | 26 | (2) | 41 | (2) | 56 | (3) | 71 | |
| 12 | (4) | 27 | (2) | 42 | (4) | 57 | (1) | 72 | |
| 13 | (3) | 28 | (4) | 43 | (3) | 58 | (4) | 73 | |
| 14 | (3) | 29 | (4) | 44 | (4) | 59 | (2) | 74 | |
| 15 | (4) | 30 | (2) | 45 | (4) | 60 | (4) | 75 | |

www.kalvinews.com

## வகுப்பு - 7 - பருவம் - 1 - குடிமையியல்

### 1. சமத்துவம்

**தொகுப்பு:**
**திரு.சா.சக்திவேல்,M.Sc., M.A., B.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்),**
**அரசு மேல்நிலைப்பள்ளி,**
**வெ.காட்டுப்பாளையம்,**
**கடலூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.இரா.வின்சென்ட், M.A., B.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்)**
**நகராட்சி நடுநிலைப்பள்ளி, 13 வது வார்டு**
**தென்காசி,**
**தென்காசி மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- இயற்கையான சமத்துவமின்மையை சரி செய்ய இயலாது.
- ஜாதி, மதம், மொழி, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சமத்துவமின்மையை சரி செய்ய முடியும்.
- மனிதர்கள் தங்களது திறன், வலிமை, எண்ணம் ஆகியவற்றில் வேறுபடுவார்கள் என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று.
- அனைவருக்கும் திறன்கள் மற்றும் திறமைகள் மேம்பட சமமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

**சமத்துவம்: (வரையறை) - பேராசிரியர் லாஸ்கி**

- சமத்துவம் என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும்.
- முதலாவதாக சமூக சிறப்புரிமை இல்லாததும், இரண்டாவதாக போதுமான வாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்படுவதும் ஆகும்

.

**சமத்துவத்தின் முக்கியத்துவம்:**

- சமத்துவம் பல நூற்றாண்டுகளாக மனித சமூகத்தை ஊக்குவித்து வழி நடத்திய ஆற்றல் வாய்ந்த நீதி மற்றும் அரசியல் கோட்பாடாகும்.
- மக்களாட்சிக் கோட்பாடுகளான சுதந்திரம், சமத்துவம் ஆகியவை நீதியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தும்போது மட்டுமே பொருள் உடையதாக இருக்கும்.
- **சமத்துவத்தின் வகைகள்:**

  **சமூக சமத்துவம்:**
- அனைத்து குடிமக்களும் சம தகுதியை அடைய உரிமை கொண்டவர்கள் என்பதே சமூக சமத்துவம் ஆகும்.
- சமூகத்தில் சாதி, சமயக் கொள்கை, நிறம் மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு இருத்தல் கூடாது.

www.kalvinews.com

- அனைவரும் தங்களது ஆளுமை மற்றும் நோக்கங்களை அடைவதற்கு சமமான வாய்ப்புகளை பெற்றிருத்தல் வேண்டும்.

**குடிமை சமத்துவம்:**

- அனைத்து குடிமக்களும் குடியியல் உரிமைகளை அடைதல் வேண்டும் என்பதே குடிமை சமத்துவம் ஆகும்.
- குடி மக்களிடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, பணக்காரர், சாதி மற்றும் சமயக் கொள்கை ஆகியவை காரணமாக பாகுபாடு இருத்தல் கூடாது.
- சமத்துவ உரிமைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதோடு, எந்த உரிமையும் எவருக்கும் மறுக்கப்படுதல் கூடாது.
- **இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடு உள்ளது**.
- இந்தியாவிலும் சட்டத்தின் ஆட்சி கோட்பாடு பின்பற்றப்படுகிறது.
- **சட்டத்தின் ஆட்சி என்ற பதத்தை ஏ.வி. டைசி** என்ற பிரிட்டிஷ் சட்ட வல்லுநர் எடுத்துரைத்தார்.

**அரசியல் சமத்துவம்**

**அரசியல் சமத்துவத்தின் 3 முக்கிய உரிமைகள்:**

- வாக்களிக்கும் உரிமை
- பொது அலுவகத்தில் பங்கு கொள்ளும் உரிமை
- அரசை விமர்சனம் செய்யும் உரிமை
- இந்தியாவில் 18 **வயது பூர்த்தி அடைந்த** அனைவரும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் **வாக்குரிமை** அளிக்கப்பட்டுள்ளது.
- **1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொது தேர்தலிலேயே இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.**
- **சுவிட்சர்லாந்து நாட்டில் 1971 ஆம் ஆண்டில்தான் பெண்களுக்கு வாக்குரிமை** அளிக்கப்பட்டது.
- **இந்தியாவில் 25 வயது பூர்த்தி அடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம்.**
- **நாட்டில் பிரதமரின் வாக்கின் மதிப்பும் ஒரு சாதாரண மனிதனின் வாக்கின் மதிப்பும் பொதுத்தேர்தலில் ஒன்றே என்பது அரசியல் சமத்துவத்தை குறிக்கிறது.**

**பாலின சமத்துவம்:**

- மனித இனங்களில் ஆண், பெண் இருவரும் தமது தனிப்பட்ட திறனை சுதந்திரமாக மேம்படுத்திக் கொள்ளலாம்.
- தங்களது விருப்பங்களை எவ்வித கட்டுப்பாடும் இன்றி ஏற்படுத்திக் கொள்ளலாம்.
- **பாலின சமத்துவம் என்பது ஆண், பெண் இருவரும் வாய்ப்புகள் மற்றும் வளங்களை சமமாக பெறுதல் ஆகும்.**
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்து பல்வேறு முயற்சிகள் பெண்களின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- **ராஜா ராம் மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், தயானந்த சரஸ்வதி, மகாதேவ் கோவிந்தரானடே, தாராபாய் ஷிண்டே, பேகம் ருகேயா சகாவத் உசேன்** ஆகியோர் **பெண்கள் சம அந்தஸ்து பெறுவதற்கு கடினமாக பணியாற்றியவர்களில்** குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

www.kalvinews.com

- பெண்கள் தற்போது எல்லை பாதுகாப்பு படை, இந்திய விமானப்படைகளில் வெற்றிகரமாக பணிபுரிந்து வருகின்றனர். பெண்களை மேம்படுத்தும் விதமாக **உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது**.
- பாலின சமத்துவம் என்பது பெண்கள், ஆண்கள், சிறுவர், சிறுமியர், ஆகியோர் சமமான உரிமைகள், வாய்ப்புகள் பெற வேண்டும் என்று கூறுவதோடு அவர்கள் ஒன்றுபோல நடத்தப்பட வேண்டும் என யூனிசெப் நிறுவனம் கூறுகிறது.
- 2017 ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான 17 குறிக்கோள்களில் பாலின சமத்துவம் என்பது 5 ஆவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனித மாண்பு:**

- **மனித மாண்பு என்பது சுய மரியாதை ஆகும்.**
- இது முக்கியமான மனித உரிமை என்பதோடு, இதிலிருந்தே அனைத்து அடிப்படை உரிமைகளும் தோன்றுகின்றன.
- மாண்பு என்பது கௌரவமான, மேலான, சிறந்த தகுதி ஆகும்.
- ஒவ்வொரு மனிதனும், சமூகத்தின் ஒரு மதிப்புமிக்க உறுப்பினர் என்பதை கருதுதல் வேண்டும்.

**வாய்ப்பு மற்றும் கல்வியில் முக்கியத்துவம்:**

- அனைத்து தனி மனிதர்களும் கல்வியினை பெறுவதற்கு வாய்ப்புகளை கொண்டிருத்தல் வேண்டும்.
- அவர்களது ஆளுமையை மேம்படுத்த வாய்ப்புகள் பெற்றிருத்தல் வேண்டும்.
- சமூகத்தில் நாம் சமமாக நடத்தப்படுவதற்கு நமக்கு சமத்துவம் தேவைப்படுகிறது.
- நாம் சமமாக நடத்தப்பட்டால், மதிப்பையும் மாண்பையும் பெறுவோம்.

**இந்திய அரசியலமைப்பில் சமத்துவம்:**

- உலகில் உள்ள அனைத்து நாடுகளின் அரசியல் அமைப்புகளும் அதன் மக்களுக்கு சமத்துவத்தை உறுதி அளித்துள்ளன.
- இந்திய அரசியலமைப்பு தன் குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள் 14 - 18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.

| சட்டப்பிரிவு | விளக்கம் |
|---|---|
| சட்டப்பிரிவு 14 | சட்டத்தின் முன் அனைவரும் சமம். |
| சட்டபிரிவு 15 | பாகுபாட்டைத் தடை செய்கிறது. |
| சட்டப்பிரிவு 16 | பொது வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்கிறது. |
| சட்டப்பிரிவு 17 | தீண்டாமையை ஒழிக்கிறது. |
| சட்டபிரிவு 18 | பட்டங்கள் அளித்து வேறுபடுத்துதலைத் தடை செய்கிறது. |

- சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு என்பது அரசியலமைப்பு சட்டப்பிரிவு 21 இல் மேலும் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது.

www.kalvinews.com

**சமத்துவத்தை மேம்படுத்தும் வழிகள்:**

1. அனைவரையும் நியாயமாக நடத்துதல்.
2. அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பண்பாட்டினை உருவாக்குதல்.
3. அனைவரும் வாய்ப்பு பெறுவதை உறுதிப்படுத்துதல்.
4. முழு ஆற்றலையும் மேம்படுத்த ஊக்குவித்தல்.
5. சட்டம் மற்றும் கொள்கைகளை வகுத்தல்.
6. கல்வி

- உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடு இந்தியா.
- சமத்துவம் மற்றும் நீதி என்பது மக்களாட்சியின் தூண்கள் ஆகும்.
- மக்கள் சமமாக நடத்தப்படும் போது நீதி எட்டப்படும்.
- சமூகம் நல்ல முறையில் இயங்குவதற்கு சமத்துவம் ஒரு முக்கியமான கோட்பாடாகும்.
- குடியியல் உரிமை என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை குறிக்கிறது.
- சமத்துவம் மற்றும் சுதந்திரம் என்பது மக்களாட்சியின் இரண்டு அடிப்படைக் கோட்பாடுகள் ஆகும்.

**பயிற்சி வினாக்கள்:**

1. கூற்றை ஆராய்க.

   கூற்று 1: இயற்கையான சமத்துவமின்மையை சரிசெய்ய இயலாது.

   கூற்று 2: செயற்கையான சமத்துவமின்மையை சரிசெய்ய இயலாது.

   (1) 1 சரி, 2 தவறு (2) 1 தவறு, 2 சரி

   (3) 1 மற்றும் 2 தவறு (4) 1 மற்றும் 2 சரி

2. சமத்துவம் என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல, வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும் என்பது யாருடைய கருத்து ?

   (1) மாஸ்டஸ்கி (2) யுவான் சுவாங் (3) லாஸ்கி (4) பிளாட்டோ

3. பல நூறு ஆண்டுகளாக மனித சமூகத்தை ஊக்குவித்து வழிநடத்திய சமத்துவமானது, எவ்வகை ஆற்றல் கோட்பாடாகும்?

   (1) நீதி மற்றும் அரசியல் (2) சட்டம் மற்றும் தத்துவம்

   (3) சமயம் மற்றும் சத்தியம் (4) உழைப்பு மற்றும் பொருள்

4. கூற்று 1: சமத்துவம் என்ற கோட்பாடு மனித இனம் அதனுடைய சாதி, நிறம், பால், இனம், அல்லது தேசியம் ஆகியவற்றை பொருட்படுத்தாமல் அனைத்து மனிதர்களும் சமமானவர்கள் என்ற கோட்பாட்டைக் கூறுகிறது.

   கூற்று 2: மக்களாட்சி கோட்பாடுகளான சுதந்திரம், சமத்துவம் ஆகியவை நீதியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் போது மட்டுமே பொருளுடையவையாக இருக்கும்.

   (1) கூற்று 1, 2 சரி

   (2) கூற்று 1 சரி, 2 தவறு

   (3) கூற்று 1 தவறு, 2 சரி

   (4) கூற்று 1, 2 தவறு

www.kalvinews.com

5. அனைத்து குடிமக்களும் சம தகுதியை அடைய உரிமை கொண்டவர்கள் என்பது எவ்வகை சமத்துவம்?

(1) குடிமை சமத்துவம் (2) சமூக சமத்துவம்

(3) அரசியல் சமத்துவம் (4) பாலின சமத்துவம்

6. கூற்றை ஆராய்க.

கூற்று 1: சமூகத்தில் சாதி, சமயக்கொள்கை, நிறம் மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு இருத்தல் கூடாது.

கூற்று 2: மக்கள் அனைவரும் தங்களது ஆளுமை மற்றும் நோக்கங்களை அடைவதற்கு சமமற்ற வாய்ப்புகளை பெற்றிருத்தல் வேண்டும்

(1) 1 சரி, 2 தவறு (2) 1 தவறு, 2 சரி (3) 1 மற்றும் 2 தவறு (4) 1 மற்றும் 2 சரி

7. அனைத்து குடிமக்களும் குடியியல் உரிமைகளை அடைதல் வேண்டும் என்பது எவ்வகை சமத்துவம்?

(1) அரசியல் சமத்துவம் (2) சமூக சமத்துவம்

(3) பாலின சமத்துவம் (4) குடிமை சமத்துவம்

8. சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாட்டை (பதம்) வாதுரைத்த பிரிட்டிஷ் சட்ட வல்லுனர் _______.

(1) A.V. ஸ்மி (2) உட்ஸ் (3) A.V. டைசி (4) A.V. டைலர்

9. கூற்றை ஆராய்க.

கூற்று (i): குடிமக்கள் இடையே உயர்ந்தோர் - தாழ்ந்தோர், ஏழை - பணக்காரர், சாதி மற்றும் சமயக்கொள்கை ஆகியவற்றின் காரணமாக பாகுபாடு இருத்தல் கூடாது.

கூற்று (ii): சமத்துவ உரிமைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதோடு உரிமைகள் சிலருக்கு மறுக்கப்படலாம்.

(1) கூற்று (i), (ii) தவறு (2) கூற்று (i), (ii) சரி

(3) கூற்று (i) தவறு, (ii) சரி (4) கூற்று (i) சரி, (ii) தவறு

10. சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடு பின்பற்றப்படும் நாடுகள் எவை?

(1) சீனா, வடகொரியா (2) வடகொரியா, இங்கிலாந்து

(3) சீனா, இந்தியா (4) இந்தியா, இங்கிலாந்து

11. அரசியல் சமத்துவம் பொருத்து தவறான ஒன்றைத் தேர்ந்தெடு.

(1) வாக்களிக்கும் உரிமை. (2) பொது அலுவலகத்தில் பங்கு கொள்ளும் உரிமை.

(3) அரசை கவிழ்க்கும் உரிமை (4) அரசை விமர்சனம் செய்யும் உரிமை.

12. கூற்று: குடிமக்கள் அனைவரும் அரசியல் வாழ்வில் தீவிரமாக பங்கெடுப்பதற்கு சமமான வாய்ப்பினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

காரணம்: இந்த உரிமைகள் அனைவருக்கும் வாக்குரிமை என்பதன் அடிப்படையில் மக்களுக்கு கிடைக்கிறது

(1) கூற்று சரி காரணம் தவறு

(2) கூற்று தவறு காரணம் சரி

(3) கூற்று சரி காரணம் சரி மற்றும் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமல்ல.

(4) கூற்று சரி, காரணம் சரி மற்றும் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமாகும்.

www.kalvinews.com

13. இந்தியாவில் வாக்களிக்க குறைந்தபட்ச வயது _______.

(1) 19 (2) 18 (3) 17 (4) 25

14. இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்ட முதல் பொதுத் தேர்தல் _______.

(1) 1952 (2) 1960 (3) 1971 (4) 1966

15. சுவிட்சர்லாந்து நாட்டில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு _______.

(1) 1952 (2) 1960 (3) 1971 (4) 1966

16. இந்தியாவில் பொது தேர்தல்களில் எத்தனை வயது பூர்த்தி அடைந்தவர்கள் போட்டியிடலாம்?

(1) 19 (2) 18 (3) 17 (4) 25

17. கூற்றை ஆராய்க.

(i) அரசை விமர்சிக்கலாம் என்ற உரிமை ஒருமுக்கியமான உரிமையாகும்.

(ii) மக்கள் தங்களது மாறுபட்ட கருத்தை எந்தவகையிலும் தெரிவிக்கக் கூடாது.

(1) ii மட்டும் சரி (2) i மட்டும் சரி

(3) i மற்றும் ii இரண்டும் தவறு (4) i மற்றும் ii இரண்டும் சரி

18. லாஸ்கியின் முதலாவது கூற்றுப்படி _______.

(1) போதுமான வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்குதல்.

(2) சமமற்ற வாய்ப்பு வழங்குதல்.

(3) சமூக சிறப்புரிமை உடையது.

(4) சமூக சிறப்புரிமை இல்லாதது.

19. லாஸ்கியின் இரண்டாவது கூற்றுப்படி _______.

(1) போதுமான வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்குதல்.

(2) சமமற்ற வாய்ப்பு வழங்குதல்.

(3) சமூக சிறப்புரிமை உடையது.

(4) சமூக சிறப்புரிமை இல்லாதது.

20. நமது நாட்டின் எவரின் வாக்கு தேர்தலில் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது?

(1) பிரதமர் (2) எவருமில்லை

(3) குடியரசுத் தலைவர் (4) சாதாரண அடித்தட்டு மக்கள்

21. கூற்றை ஆராய்க.

கூற்று (i): நமது நாட்டின் பிரதமரின் வாக்கு தேர்தலில் மிக அதிக மதிப்பு உடையதாக உள்ளது.

கூற்று (ii): மக்கள் அனைவரும் சமமான வாக்கு மதிப்பினை பெற்றுள்ளனர்.

(1) i மற்றும் ii சரி (2) i மற்றும் ii தவறு

(3) i தவறு, ii சரி (4) i சரி, ii தவறு

22. சரியானவற்றை தேர்ந்தெடு.

(i) உரிமைகள், பொறுப்புகள் மற்றும் வாய்ப்புகள் ஆகியவை ஆண், பெண் என்பதை பொறுத்து அமைதல் கூடாது.

(ii) மனித இனங்களில் ஆண், பெண் இருவரும் தனிப்பட்ட திறமையை மேம்படுத்திக் கொள்ளலாம்.

www.kalvinews.com

(iii) ஆண், பெண் இருவரும் தங்களது விருப்பங்களை எவ்வித கட்டுப்பாடுமின்றி ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(iv) ஆண், பெண் இருவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பது அவர்கள் இருவரும் ஒன்றாக ஆகவேண்டும் என்பது இல்லை.

(1) i, ii, iii சரி (2) i, ii, iv சரி (3) i, iii, iv சரி (4) அனைத்தும் சரி

23. பாலியல் சமத்துவம் என்பது ஆண், பெண் இருவரும் ________.

(1) நிலம் மற்றும் பணம் பெறுவது.

(2) வாய்ப்புகள் மற்றும் வளங்களை சமமாக பெறுவது.

(3) உணவு மற்றும் நீர் பெறுவது.

(4) வாகனங்கள் மற்றும் உரிமங்கள் பெறுவது

24. கூற்று: பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கு எடுக்கவும், முக்கிய முடிவுகள் எடுக்கும் உரிமை கொண்டவர்கள் ஆவர்.

காரணம்: பெண்கள் தமது திறன் மற்றும் கடின உழைப்பால் எவ்விதத்திலும் ஆண்களுக்கு குறைவானவர்கள் என்பதை நிரூபிக்கவில்லை

(1) கூற்று சரி காரணம் தவறு (2) கூற்றும் காரணமும் சரி

(3) கூற்றும் காரணமும் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

25. பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் எத்தனை சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது?

(1) 35% (2) 45% (3) 40% (4) 50%

26. பாலின சமத்துவம் என்பது பெண்கள், ஆண்கள், சிறுவர், சிறுமியர் ஆகியோர் சமமான உரிமைகள், வாய்ப்புகள் பெற வேண்டும் என்று கூறுவதோடு அவர்கள் ஒன்று போல் நடத்தப்பட வேண்டும் என கூறும் நிறுவனம் ________.

(1) UNO (2) UNESCO (3) UNICEF (4) UNDP

27. 2017 ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான குறிக்கோள்களின் மொத்த எண்ணிக்கை?

(1) 5 (2) 17 (3) 20 (4) 7

28. 2017 ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான குறிக்கோள்களில், பாலின சமத்துவம் எத்தனையாவதாக உள்ளது?

(1) 5 (2) 17 (3) 20 (4) 7

29. பெண்கள் சம அந்தஸ்து பெற பணியாற்றியவர்களில் பொருந்தாதவர் யார்?

(1) தாராபாய் ஷிண்டே (2) பேகம் ருகேயா சகாவத் உசேன்

(3) தயானந்த சரஸ்வதி (4) பகத்சிங்

30. பெண்கள் சம அந்தஸ்து பெற பணியாற்றியவர்கள் யாவர் ?

(i) ராஜா ராம் மோகன் ராய்

(ii) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

(iii) தயானந்த சரஸ்வதி

(iv) மகாதேவ் கோவிந்த ரானடே

(1) i, ii, iii (2) ii, iii, iv (3) i, iii, iv (4) அனைவரும்

www.kalvinews.com

31. சுயமரியாதை என்பது _______ ஆகும்.

(1) மனித உள்ளம் (2) மனித உடல் (3) மனித மாண்பு (4) மனிதநேயம்

32. அனைத்து அடிப்படை உரிமைகளும் தோன்றுமிடம் _______.

(1) மனித உள்ளம் (2) மனித உடல் (3) மனித மாண்பு (4) மனித நேயம்

33. கூற்றை ஆராய்க.

கூற்று (அ): மாண்பு என்பது கௌரவமான, மேலான, சிறந்த தகுதியாகும்.

கூற்று (ஆ): ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் ஒரு மதிப்புமிக்க உறுப்பினர் என்பதை உணர வேண்டும்.

(1) கூற்று (அ), (ஆ) சரி. (2) கூற்று (அ) சரி (ஆ) தவறு.

(3) கூற்று (அ) தவறு (ஆ) சரி. (4) கூற்று (அ), (ஆ) தவறு.

34. சமூகத்தில் நாம் சமமாக நடத்தப்படுவதற்கு நமக்கு தேவைப்படுவது _______.

(1) செல்வம் (2) நாணயம் (3) சமத்துவம் (4) நல்லறிவு

35. நாம் சமமாக நடத்தப்பட்டால் நாம் பெறுவது _______.

(1) கல்வியும், பொருளும் (2) மதிப்பும், மாண்பும்

(3) பொருளும், உதவியும் (4) செல்வமும், சக்தியும்

36. கூற்றை ஆராய்க.

கூற்று(அ): அனைத்து தனி மனிதர்களும் கல்வியினைப் பெறுவதற்கு வாய்ப்புகளை கொண்டிருக்க வேண்டாம்

கூற்று(ஆ): அனைத்து தனி மனிதர்களின் ஆளுமையை மேம்படுத்தி வாய்ப்புகள் பெற்றிருத்தல் வேண்டும்.

(1) கூற்று (அ) சரி, (ஆ) தவறு (2) கூற்று (அ) தவறு (ஆ) சரி

(3) கூற்று (அ), (ஆ) சரி (4) கூற்று (அ), (ஆ) தவறு

37. உலகில் உள்ள அனைத்து நாடுகளின் _______ அதன் மக்களுக்கு சமத்துவத்தை உறுதி அளித்துள்ளன.

(1) வேலைவாய்ப்பும் (2) சமயங்களும்

(3) பொருளாதாரமும் (4) அரசியல் அமைப்பும்

38. இந்திய அரசியல் அமைப்பு அதன் குடிமக்களுக்கு சமத்துவத்தை அளிக்கும் சட்டப்பிரிவுகள் யாவை?

(1) 14 - 17 (2) 14 - 16 (3) 14 - 18 (4) 14 - 24

39. 2017 ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்காக 17 குறிக்கோள்களில் ஐந்தாவது குறிக்கோள் என்ன?

(1) குடிமை சமத்துவம் (2) சமூக சமத்துவம்

(3) அரசியல் சமத்துவம் (4) பாலின சமத்துவம்

40. சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின் படி சமமான பாதுகாப்பை மேலும் வலிமைப்படுத்தும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு _______.

(1) சட்டப் பிரிவு 21 (2) சட்டப்பிரிவு 20 (3) சட்டப்பிரிவு 19 (4) சட்டபிரிவு 18

www.kalvinews.com

41. பாகுபாட்டைத் தடை செய்யும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு _______.

(1) 14 (2) 15 (3) 16 (4) 17

42. சமத்துவ உரிமைகளுடன் தொடர்புடைய சட்டப்பிரிவு _______.

(1) சட்டப்பிரிவு 23 (2) சட்டப்பிரிவு 32 (3) சட்டப்பிரிவு 17 (4) சட்டப்பிரிவு 30

43. சமத்துவத்தை மேம்படுத்தும் வழிகளில் இல்லாத ஒன்று _______.

(1) ஒரு சிலர் மட்டும் வாய்ப்புகள் பெறுவதை உறுதிப்படுத்துதல்.

(2) சட்டம் மற்றும் கொள்கைகளை வகுத்தல்.

(3) அனைவரையும் நியாயமாக நடத்துதல்.

(4) முழு ஆற்றலையும் மேம்படுத்த ஊக்குவித்தல்.

44. தீண்டாமையை ஒழிக்கும் சட்டப்பிரிவு _______.

(1) 17 (2) 16 (3) 15 (4) 14

45. சட்டபிரிவு - 14 உத்திரவாதம் அளிப்பது _______.

(1) பாகுபாடு தடை

(2) சட்டத்தின் முன் அனைவரும் சமம் இல்லை

(3) தீண்டாமையை ஒழிக்கமல் இருப்பது

(4) சட்டத்தின் முன் அனைவரும் சமம்

46. பொது வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் சட்டப்பிரிவு _______.

(1) 17 (2) 16 (3) 15 (4) 14

47. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.

(i) சமத்துவ மேம்பாடு.

(ii) அனைவரையும் உள்ளடக்கிய ஓர் பண்பாட்டினை உருவாக்குதல்.

(iii) கல்வி, அனைவரும் வாய்ப்புகள் பெறுவதை உறுதிசெய்தல்.

(iv) அனைவரையும் நியாயமாக நடத்தாமல் இருத்தல்.

(1) i, ii, iii, iv (2) i, ii, iv (3) i, ii, iii சரி (4) i, iii, iv

48. உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடு _______.

(1) இந்தியா (2) பாகிஸ்தான் (3) இலங்கை (4) வங்கதேசம்

49. பட்டங்களை அளித்து வேறுபடுத்துதல் தடை செய்யும் சட்டப்பிரிவு _______.

(1) 17 (2) 14 (3) 16 (4) 18

50. மக்களாட்சியில் தூண்களாக கருதப்படுவது _______.

(1) சமத்துவம் மற்றும் நீதி (2) சமத்துவம் மற்றும் சமயம்

(3) சமத்துவம் மற்றும் பாகுபாடு (4) சமத்துவம் மற்றும் சண்டைகள்

51. மக்கள் சமமாக நடத்தப்படும்போது பெறப்படுவது _______.

(1) ஆரோக்கியம் (2) நல்லறிவு (3) நீதி (4) நல்ல கருத்து

52. தேர்தலில் போட்டியிடும் உரிமை _______.

(1) சமத்துவ உரிமை (2) சட்ட உரிமை (3) சாதாரண உரிமை (4) அரசியல் உரிமை

www.kalvinews.com

53. தனி மனித மாண்பினை தக்கவைப்பது _______.

(1) சமத்துவமின்மை (2) பொருமை (3) சமத்துவம் (4) பாலினம்

54. நீதி பெறப்படும் ஓர் நிகழ்வு _______.

(1) மக்கள் சமமாக நடத்தப்படாமல் இருத்தல்

(2) மக்கள் உரிமைகளை பெறுவதனால்

(3) மக்கள் பொறுப்புடன் செயல்படுதல்

(4) மக்கள் சமமாக நடத்தப்படுதல்

55. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(அ) 25 வயது பூர்த்தி அடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம்.

(ஆ) மக்கள் அரசை விமர்சிக்கலாம்.

(இ) மாறுபட்ட கருத்தை பல்வேறு வகைகளில் தெரிவிக்கலாம்.

(1) அ, ஆ, இ சரி (2) அ சரி, ஆ, இ தவறு

(3) அ, ஆ சரி, இ தவறு (4) அ, ஆ, இ தவறு

56. பொது அலுவலகத்தில் பங்குகொள்ளும் உரிமை என்பது _______.

(1) பொது உரிமை (2) பொதுப்பண்பு உரிமை

(3) அரசியல் உரிமை (4) பொது செயல்பாட்டு உரிமை

57. பொருத்துக

| சட்டப்பிரிவு | | விளக்கம் |
|---|---|---|
| (i) சட்டப்பிரிவு 16 | - | a. பட்டங்களை அளித்து வேறுபடுத்துதலை தடை செய்கிறது. |
| (ii) சட்டப்பிரிவு 14 | - | b. வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சமவாய்ப்பு. |
| (iii) சட்டப்பிரிவு 18 | - | c. சட்டத்தின் முன் அனைவரும் சமம். |
| (iv) சட்டப்பிரிவு 15 | - | d. பாகுபாட்டைத் தடை செய்கிறது. |

(1) i - c ii - b iii - d iv - a

(2) i - b ii - c iii - a iv - d

(3) i - c ii - a iii - b iv - d

(4) i - d ii - b iii - c iv - a

58. தவறான இணையைக் கண்டுபிடி.

(1) சட்டப்பிரிவு 15 - பாகுபாட்டை தடை செய்கிறது.

(2) சட்டப்பிரிவு 17 - தீண்டாமை ஒழிப்பு.

(3) சட்டப்பிரிவு 21 - பட்டங்களை தடை செய்கிறது.

(4) சட்டப்பிரிவு 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

59. 2017 ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான பதினேழு குறிக்கோள்களில் ஐந்தாவது குறிக்கோளாக பாலின சமத்துவத்தைக் குறிப்பிட்டுள்ள நிறுவனம் _______.

(1) ஐக்கிய நாடுகள் சபை (2) யூனிசெப்

(3) ஐக்கிய வங்கி (4) ஐக்கிய கழகம்

www.kalvinews.com

60. பெண்களை மேம்படுத்தும் விதமாக உள்ளாட்சி அமைப்புகளில் எவ்வளவு சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது?

(1) 25% (2) 45% (3) 65% (4) இவற்றில் ஏதுமில்லை

61. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS-2020-21)

(1) பிரிவு 14 (2) பிரிவு 16 (3) பிரிவு 28 (4) பிரிவு 18

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (1) | **11** | (3) | **21** | (3) | **31** | (3) | **41** | (2) | **51** | (3) | **61** | (2) |
| **2** | (3) | **12** | (4) | **22** | (4) | **32** | (3) | **42** | (3) | **52** | (4) | | |
| **3** | (1) | **13** | (2) | **23** | (2) | **33** | (1) | **43** | (1) | **53** | (3) | | |
| **4** | (1) | **14** | (1) | **24** | (1) | **34** | (3) | **44** | (1) | **54** | (4) | | |
| **5** | (1) | **15** | (3) | **25** | (4) | **35** | (2) | **45** | (4) | **55** | (1) | | |
| **6** | (1) | **16** | (4) | **26** | (3) | **36** | (1) | **46** | (2) | **56** | (3) | | |
| **7** | (4) | **17** | (2) | **27** | (2) | **37** | (4) | **47** | (3) | **57** | (2) | | |
| **8** | (3) | **18** | (4) | **28** | (1) | **38** | (3) | **48** | (1) | **58** | (3) | | |
| **9** | (4) | **19** | (1) | **29** | (4) | **39** | (4) | **49** | (4) | **59** | (1) | | |
| **10** | (4) | **20** | (2) | **30** | (4) | **40** | (1) | **50** | (1) | **60** | (4) | | |

www.kalvinews.com

## வகுப்பு - 7 - பருவம் - 1 - குடிமையியல்

### 2. அரசியல் கட்சிகள்

**தொகுப்பு:**
**திரு.சா.சக்திவேல்,** M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்),
அரசு மேல்நிலைப்பள்ளி,
வெ.காட்டுப்பாளையம்,
கடலூர் மாவட்டம்.

**மேம்பாடு:**
**திரு.இரா.அசோக்குமார்,** M.Sc.,B.Ed.,M.Com.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
புளியம்பட்டி,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

### முக்கிய குறிப்புகள்

- ஆரம்ப காலங்களில் அரசரே சட்டம் இயற்றுதல், நிர்வாகம், நீதி வழங்குதல் ஆகியவற்றின் தலைமையிடமாக இருந்தார்.
- இந்தியா 1950 ஆம் ஆண்டு மக்களாட்சி நாடானது.

**அரசியல் கட்சிகள்:**

- தன்னார்வத்தோடு ஏற்படுத்தப்பட்ட தனி மனிதர்களின் அமைப்பு ஆகும்.
- இவை அவற்றின் அளவு, அமைப்பு மற்றும் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றன.

**ஓர் அரசியல் கட்சியின் மூன்று அடிப்படை அங்கங்கள்:**

1. தலைவர் 2. செயல் உறுப்பினர்கள் 3. தொண்டர்கள்.

**அரசியல் கட்சிகளின் முக்கியத்துவம்:**

- **அரசியல் கட்சிகள் "மக்களாட்சியின் முதுகெலும்பு" என்று அழைக்கப்படுகின்றன.**
- அரசாங்கத்தை அமைக்கும் காரணி.
- குடிமக்களுக்கும், கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே பாலமாகச் சேவை செய்கின்றன.

**அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் :**

- **வழங்குதல்** : நேர்மையான எதிர்ப்பு, பொறுப்புடைமை, ஸ்திரத்தன்மை வழங்குதல்.
- **பரிந்துரைத்தல்** : தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலகத்திற்குத் தனிநபரைப் பரிந்துரைத்தல்.
- **ஏற்பாடு செய்தல்** : அரசியல் பிரச்சாரம், பேரணி ஆகியவற்றை ஏற்பாடு செய்தல், தேர்தலில் வெற்றி பெற தேர்தல் அறிக்கையை வெளியிடுதல்.
- **ஊக்குவித்தல்** : மக்கள் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களையும், கொள்கைகளையும் முன்வைத்தல்.
- **ஒருங்கிணைத்தல்** : சமுதாயத்தையும், அரசையும் இணைத்தல், தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களை ஒருங்கிணைத்தல்.
- **ஆட்சி அமைத்தல்** : அரசாங்கத்தை ஏற்படுத்திட இயக்குதல், பொதுவான கொள்கையை உருவாக்குதல்.

www.kalvinews.com

**ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவிப்பது எப்படி?**

- இந்தியத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.
- வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள நபர்களுள் குறைந்தபட்சம் 100 நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்க வேண்டும்.
- கட்சி அமைப்பு குறித்த ஆவணத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஒரு கட்சி அங்கீகரிக்கப்படுவது எவ்வாறு?**

- 5 ஆண்டுகளாக அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
- வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 6 % ஓட்டுகளை இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெற்றிருக்க வேண்டும்.

**கட்சிகள் அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்:**

| **தேசியக் கட்சிகள்** | **பிராந்திய / மாநிலக் கட்சிகள்** |
|---|---|
| இந்தியா முழுவதும் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சி தேசியக் கட்சி எனப்படும். | ஒரு மாநிலத்திற்குள் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சி பிராந்திய / மாநிலக் கட்சி எனப்படும். |
| இவை தனக்கென பிரத்தியேகமான சின்னத்தை நாடு முழுவதற்கும் கொண்டிருக்கும். | இவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள், அந்தந்த மாநிலத்திற்கு மட்டுமே பொருந்தும். |
| மக்களவைத் தேர்தலில் (அ) 4 மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் குறைந்தபட்சம் 6 % வாக்குகளைப் பெற்றிருத்தல் வேண்டும். | மாநிலச் சட்டப்பேரவைக்கான தேர்தலில் குறைந்தபட்சம் 6 % வாக்குகளைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் 4 மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். | 25 தொகுதிகளுக்கு ஒரு மக்களவைத் தொகுதி அல்லது சட்டப்பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் 2 தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். |
| இறுதியாக நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் குறைந்தபட்சம் 3 மாநிலங்களில் 2 % தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். | மாநிலச் சட்டமன்ற மொத்த தொகுதிகளில் 3% தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். |
| இது மாநில, தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்களைத் தீர்த்து வைக்கிறது | இது பிராந்திய மற்றும் மாநில நலன்களை வலியுறுத்துகிறது. |

www.kalvinews.com

**சுயேட்சை வேட்பாளர்:**

- சுயேட்சை வேட்பாளர் என்பவர் எந்தக் கட்சியிலும் சேராமல், தானாக மக்களவை அல்லது மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் நபராவார்.

**தேர்தல் ஆணையம்:**

- இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தல்களை நடத்துவதற்கு அதிகாரம் கொண்ட, ஒரு சுதந்திரமான, சட்டப்படியான அரசியலமைப்பு ஆகும். இதன் தலைமையிடம் புதுடெல்லி.
- இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் அங்கீகரிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு மட்டுமே உண்டு.
- இந்தியாவில் அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதும், அதற்கான விதிமுறைகளை வகுப்பதும் இதன் பணிகளாகும்.
- தேர்தலில் அரசியல் கட்சிகளுக்குச் சின்னங்களை ஒதுக்குகிறது.

**கட்சி முறைகளின் 3 வகைகள்:**

| கட்சி முறை | விளக்கம் | நாடுகள் |
|---|---|---|
| **ஒரு கட்சி முறை** | ஒரே கட்சி மட்டுமே ஆட்சி அமைக்கும் உரிமையைக் கொண்டிருக்கும். | சீனா, வடகொரியா, கியூபா |
| **இரு கட்சி முறை** | இரண்டு கட்சிகள் ஆட்சி அமைக்கும் வகையில் இருக்கும். ஒன்று ஆளுங்கட்சி மற்றொன்று எதிர்க்கட்சி. | பிரிட்டன்- தொழிலாளர் கட்சி, பழமைவாதக் கட்சி<br>அமெரிக்க ஐக்கிய நாடுகள்- குடியரசு கட்சி, ஜனநாயகக் கட்சி |
| **பல கட்சி முறை** | அதிகாரத்திற்கான போட்டி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்சிகளுக்கிடையே இருக்கும். | இந்தியா, பிரான்ஸ், ஸ்வீடன், நார்வே |

**இந்தியாவில் கட்சி முறை:**

- இந்தியாவில் கட்சி முறை 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது.
- உலகின் அதிக எண்ணிக்கையிலான கட்சிகள் இந்தியாவில் உள்ளன.
- கட்சிகள் 3 படிநிலைகளைக் கொண்டது.

1) தேசியக் கட்சிகள்
2) மாநிலக் கட்சிகள்
3) பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் (சுயேட்சைகள்)

**அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள்:**

- கட்சிகளுக்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் மட்டுமே, இவை அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் என அழைக்கப்படும்.
- இவற்றிற்குத் தேர்தல் ஆணையம் சின்னம் ஒதுக்கீடு செய்யும்.
- பதிவு செய்யப்பட்ட, ஆனால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் தாங்கள் விரும்பும் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட முடியாது.
- தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்படும் தேர்தல் குழுவில் உள்ள ஏதேனும் ஒரு சின்னத்தைத் தேர்வு செய்தல் வேண்டும்.

www.kalvinews.com

**பெரும்பான்மைக் கட்சி:**

- தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்ற கட்சி.

**சிறிய கட்சி:**

- தேர்தலில் குறைந்த வேட்பாளர்கள் வெற்றி பெற்ற கட்சி.

**எதிர்க்கட்சி:**

- தேர்தலில் பெரும்பான்மை பெற்ற கட்சிக்கு அடுத்ததாக, இரண்டாவது அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கொண்ட கட்சி.
- மக்களாட்சி வெற்றிகரமாக செயல்பட ஆற்றல் வாய்ந்த எதிர்க்கட்சி தேவை.
- எதிர்க்கட்சித் தலைவர் கேபினட் அமைச்சர் அந்தஸ்தைக் கொண்டிருப்பார்.
- பல கட்சி அமைப்பில் சில நேரங்களில் ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையை ஒரு கட்சி பெறுவதில்லை. இது போன்ற நேர்வுகளில், சில கட்சிகள் இணைந்து அரசாங்கத்தை அமைக்கின்றன. இது கூட்டணி அரசாங்கம் என அழைக்கப்படுகிறது.

**தேர்தல் சின்னங்கள்:**

- 1968 ஆம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள் ஆணையின் படி ஒதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் ஒதுக்கப்படாத சின்னங்கள் என்று 2 வகைகள் உள்ளன.

1) ஒதுக்கப்பட்ட சின்னம் என்பது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு மட்டுமானது எனப் பொருள்படும்.
2) ஒதுக்கப்படாத சின்னம் என்பது அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் சின்னமாகும்.

**தேர்தல் சின்னம் அவற்றின் முக்கியத்துவம்:**

- தேர்தல் சின்னங்கள் வாக்காளர்களால் எளிதில் அறிந்து கொள்ளப்பட்டு நினைவில் வைத்துக் கொள்ள உதவுகிறது.
- விலங்குகளின் சின்னம் வழங்குவதைத் தேர்தல் ஆணையம் நிறுத்தியுள்ளது.
- விதிவிலக்காக யானை, சிங்கம் ஆகிய சின்னங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

**பயிற்சி வினாக்கள்:**

1. இந்தியா எப்போது மக்களாட்சி நாடானது?

   (1) 1951 (2) 1950 (3) 1952 (4) 1953

2. கீழ்க்கண்ட நிகழ்வுகளை அவை நடைபெற்ற காலங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்தவும்.

   1. இந்தியா மக்களாட்சி நாடாக மாறியது.
   2. இந்தியா சுதந்திர நாடாக மாறியது.
   3. இந்தியாவில் அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் தேர்தல் சின்னங்களை நெறிப்படுத்துதல் சம்பந்தப்பட்ட ஆணை வெளியிடப்பட்டது.

   (1) 1, 2, 3 (2) 1, 3, 2 (3) 2, 3, 1 (4) 2, 1, 3

3. அரசியல் கட்சியின் கூறுகள் எத்தனை?

   (1) 1 (2) 2 (3) 3 (4) 4

www.kalvinews.com

4. அரசியல் கட்சிகளானது அளவு, அமைப்பு மற்றும் _______ ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றன.

(1) கொள்கை (2) வடிவம் (3) தீர்மானம் (4) அனைத்தும்

5. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க. ஒரு கட்சி அங்கீகரிக்கப்பட வேண்டுமெனில்,

1. பத்து ஆண்டுகளாக அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
2. வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 2 % ஓட்டுக்களை இறுதியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் பெற்றிருத்தல் வேண்டும்.

(1) கூற்று 1, 2 சரி (2) கூற்று 1 சரி, 2 தவறு
(3) கூற்று 1 தவறு, 2 சரி (4) கூற்று 1, 2 தவறு

6. "மக்களாட்சியின் முதுகெலும்பு" என்று அழைக்கப்படுவது _______.

(1) அமைச்சரவை (2) எதிர்க்கட்சிகள் (3) ஆளும் கட்சிகள் (4) அரசியல் கட்சிகள்

7. பின்வருவனவற்றுள் எது ஓர் அரசியல் கட்சியின் அடிப்படை அம்சங்களில் ஒன்று?

(1) தலைவர் (2) செயல் உறுப்பினர்கள்
(3) தொண்டர்கள் (4) இவை மூன்றும்

8. அரசியல் கட்சிகளின் இயல்புகள் குறித்துக் கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானவை எவை?

1. பொதுவான குறிக்கோள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட மதிப்பீடுகள்.
2. தனக்கென கொள்கை மற்றும் திட்டங்கள்.
3. அரசியலமைப்பின் வழியாக மட்டுமல்லாமல், அனைத்து வழியிலும் ஆட்சியைக் கைப்பற்ற முயலுதல்.
4. தன் நலன்களை வலியுறுத்த முயற்சி செய்தல்.

(1) 1, 4 தவறு (2) 3, 4 தவறு (3) 2, 1 தவறு (4) 1, 3 தவறு

9. குடிமக்களுக்கும், கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து செயல்படுவது _______.

(1) நாட்டு நலப்பணித் திட்டங்கள் (2) அரசியல் தலைவர்கள்
(3) அரசியல் கட்சிகள் (4) ஆளும் கட்சி

10. தேர்தலுக்கு முன்பான பரப்புரையில் வேட்பாளர்கள் தங்களது கட்சி ஆட்சிக்கு வந்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் கொள்கைகள் பற்றிய அறிக்கை _______.

(1) கட்சியின் வேட்பாளர் அறிக்கை (2) கட்சியின் செல்வாக்கு அறிக்கை
(3) கட்சியின் தேர்தல் அறிக்கை (4) கட்சி பற்றிய வரலாற்று அறிக்கை

11. பொருத்துக.

a. ஒரு கட்சி முறை - i. அமெரிக்கா
b. இரு கட்சி முறை - ii. புதுடில்லி
c. பல கட்சி முறை - iii. கியூபா
d. இந்தியத் தேர்தல் ஆணையத் தலைமையிடம் - iv. இந்தியா

(1) a - iii b - i c - iv d - ii (2) a - i b - iv c - ii d - iii
(3) a - i b - ii c - iii d - iv (4) a - iii b - iv c - i d - ii

www.kalvinews.com

12. கூற்றுகளை ஆராய்க.

கூற்று: அமெரிக்காவில் இரு கட்சி முறை பின்பற்றப்படுகிறது.

காரணம்: அரசாங்கத்தை ஏற்படுத்தும் உரிமை ஓர் அரசியல் கட்சிக்கு மட்டுமே உண்டு.

(1) கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம்.

(2) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

(3) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

(4) கூற்று காரணம் இரண்டும் தவறு.

13. கூற்றுகளை ஆராய்க.

(i) இந்தியா மக்களாட்சி நாடாக மாறிய ஆண்டு - 1968

(ii) இந்தியாவில் அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் தேர்தல் சின்னங்களை நெறிப்படுத்துதல் தொடர்பான ஆணை வெளியிடப்பட்ட ஆண்டு - 1950.

(1) i சரி, ii சரி (2) i சரி, ii தவறு (3) i தவறு, ii சரி (4) i தவறு, ii தவறு

14. அரசியல் கட்சி என்பது _______.

(1) தன்னார்வம் கொண்ட அரசு குழுக்களின் அமைப்பு

(2) அரசு செயல்படுத்தும் அமைப்பு.

(3) தன்னார்வம் கொண்ட தனி மனிதர்களின் அமைப்பு.

(4) தன்னார்வம் கொண்ட நிறுவன குழுக்களின் அமைப்பு.

15. கூற்று 1: தேர்தல் ஆணையம் தேர்தல்களை நடத்துவதற்கு அதிகாரம் கொண்ட ஒரு கட்டுப்பாடான சட்டப்படியான அரசியலமைப்பு ஆகும்.

கூற்று 2: இதன் தலைமையிடம் புதுடெல்லி.

(1) கூற்று 1, 2 சரி (2) கூற்று 1 சரி 2 தவறு

(3) கூற்று 1, 2 தவறு (4) கூற்று 1 தவறு 2 சரி

16. ஒரு கட்சி தேசியக் கட்சியாக அங்கீகாரம் பெறுவதற்கான நிபந்தனைகள் குறித்த கூற்றுகளை ஆராய்க.

கூற்று (அ): மக்களவைத் தேர்தலில் அல்லது 3 மாநிலங்களுக்கான சட்டமன்றத் தேர்தல்களில், செல்லத்தக்க மொத்த வாக்குகளில் 4 % வாக்குகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கூற்று (ஆ): ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களில் நான்கு மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.

கூற்று (இ): இறுதியாக நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில் குறைந்தபட்சம் 3 மாநிலங்களில் 2 % தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.

(1) கூற்று (அ), (ஆ), (இ) சரி (2) கூற்று (அ), (ஆ) சரி மற்றும் (இ) தவறு

(3) கூற்று (அ), (இ) தவறு மற்றும் (ஆ) சரி (4) கூற்று (அ), (ஆ) தவறு மற்றும் (இ) சரி

17. கூற்று: அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்குத் தேர்தல் ஆணையம் சின்னம் ஒன்று ஒதுக்கும்.

காரணம்: தேசியக் கட்சிகள் மட்டுமே தனக்குரிய சின்னத்தைப் பயன்படுத்தும்.

(1) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம்.

(2) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

(3) கூற்று தவறு, காரணமும் தவறு.

(4) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி.

www.kalvinews.com

18. ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவிக்கத் தேவையான நிபந்தனைகளை ஆராய்க.

(i) இந்தியத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

(ii) எந்த வயதினரானாலும் 100 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(iii) கட்சி அமைப்பு குறித்த எந்த ஆவணத்தையும் கொண்டிருக்க வேண்டியதில்லை.

(1) கூற்று (i), (ii) சரி (iii) தவறு (2) கூற்று (i), (ii) தவறு (iii) சரி

(3) கூற்று (i) சரி (ii), (iii) தவறு (4) கூற்று (i), (iii) சரி (ii) தவறு

19. இந்தியாவில் கட்சிகளின் படிநிலைகள் _______.

(1) 2 (2) 3 (3) 4 (4) 1

20. கூற்று 1: தேர்தல் ஆணையம் விலங்குகளின் சின்னங்களை வழங்குவதை நிறுத்தி உள்ளது.

கூற்று 2: விதிவிலக்காக யானை மற்றும் சிங்கம் ஆகிய சின்னங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

(1) கூற்று 1, 2 தவறு (2) கூற்று 1, 2 சரி

(3) கூற்று 1 சரி 2 தவறு (4) கூற்று 1 தவறு 2 சரி

21. தேர்தல் சின்னங்கள் தொடர்பான ஆணை வெளியிடப்பட்ட ஆண்டு _______.

(1) 1967 (2) 1968 (3) 1969 (4) 1989

22. 1968 ஆம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் ஆணைப்படி எத்தனை வகை சின்னங்கள் உள்ளன?

(1) 3 (2) 4 (3) 2 (4) 5

23. கூற்று 1: தேசியக் கட்சியானது மாநில, தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்களைத் தீர்த்து வைக்கிறது.

கூற்று 2: தேசியக் கட்சி அதிகபட்சம் நான்கு மாநிலங்களில் வலிமை உடையதாக இருக்க வேண்டும்.

(1) 1, 2 சரி

(2) கூற்று 1 சரி, 2 தவறு

(3) கூற்று 1 தவறு, 2 சரி

(4) கூற்று 1, 2 தவறு

24. எந்த ஒரு கட்சியையும் சாராமல் தனியாகத் தேர்தலில் போட்டியிடும் உறுப்பினர் _______.

(1) கேபினட்

(2) எதிர்க்கட்சி உறுப்பினர்

(3) சுயேட்சை

(4) சட்டமன்ற உறுப்பினர்

25. எதிர்க்கட்சித் தலைவர் _______ அந்தஸ்தைக் கொண்டிருப்பார்.

(1) சட்டமன்ற உறுப்பினர்

(2) கட்சியின் தலைவர்

(3) கேபினட் அமைச்சர்

(4) உள்துறை அமைச்சர்

26. கீழே கொடுக்கப்பட்டுள்ள நாடுகளில் ஒரு கட்சி முறை நடைமுறையில் உள்ள நாடு எது?

(1) இந்தியா (2) அமெரிக்கா (3) பிரான்ஸ் (4) சீனா

www.kalvinews.com

27. மாநிலக் கட்சிககளை அங்கீகரிப்பதற்கான நிபந்தனைகள் குறித்த கூற்றுகளை ஆராய்க.

கூற்று (அ) : மாநில சட்டப்பேரவைக்கான தேர்தலில் குறைந்தபட்சம் 6% வாக்குகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கூற்று (ஆ) : 25 தொகுதிகளுக்கு ஒரு மக்களவைத் தொகுதி (அ) சட்டப்பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் 2 தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.

கூற்று (இ) : மாநிலச் சட்டமன்ற மொத்தத் தொகுதிகளில் 3 % வெற்றி பெறவேண்டும்.

(1) கூற்று (அ), (ஆ), சரி (இ) தவறு (2) கூற்று (அ) சரி (ஆ), (இ) தவறு

(3) கூற்று (அ), (ஆ) தவறு (இ) சரி (4) கூற்று (அ), (ஆ), (இ) சரி

28. ஒரு கட்சி தேசியக் கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கு இறுதியாக நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் குறைந்தபட்சம் ______ மாநிலங்களில் ______ தொகுதிகளில் வெற்றி பெற்று இருத்தல் வேண்டும்.

(1) இரண்டு, 2% (2) இரண்டு, 3% (3) மூன்று, 3% (4) மூன்று, 2%

29. ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவிக்கக் குறைந்தபட்சம் வாக்காளர் அட்டை கொண்ட ______ உறுப்பினர்கள் தேவை.

(1) 50 (2) 75 (3) 90 (4) 100

30. ஒரு கட்சி தேசியக் கட்சியாக அங்கீகரிக்கப்பட குறைந்தபட்சம் ______ மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் குறைந்தபட்சம் ______ செல்லத்தக்க வாக்குகளைப் பெற்று இருக்க வேண்டும்.

(1) 2, 3% (2) 4, 3% (3) 5, 6% (4) 4, 6%

31. இரு கட்சி முறை என்பது ______.

(1) இரண்டு கட்சிகள் அரசாங்கத்தை நடத்துவது

(2) இரண்டு உறுப்பினர்கள் ஒரு கட்சியை நடத்துவது

(3) இரண்டு பெரிய அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவது

(4) இவற்றுள் எதுவும் இல்லை

32. கீழே கொடுக்கப்பட்டுள்ள நாடுகளில் எந்த நாட்டில் இரு கட்சி முறை நடைமுறையில் இல்லை?

(1) பிரிட்டன் (2) அமெரிக்கா (3) 1 மற்றும் 2 (4) இந்தியா

33. இந்தியாவில் காணப்படும் கட்சி முறை ______.

(1) ஒரு கட்சி முறை (2) இரு கட்சி முறை

(3) பல கட்சி முறை (4) இவற்றில் எதுவுமில்லை

34. கீழ்க்கண்டவற்றில் ஒரு கட்சி முறை கொண்ட நாடு எது?

(1) சீனா (2) இந்தியா (3) கியூபா (4) 1 மற்றும் 3

35. அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கும் அமைப்பு ______.

(1) தேர்தல் ஆணையம்

(2) குடியரசுத்தலைவர்

(3) உச்சநீதிமன்றம்

(4) ஒரு குழு

www.kalvinews.com

36. அரசியல் கட்சிகள் பொதுவாக எதன் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகின்றன?

(1) சமயக் கொள்கைகள் (2) பொதுநலன்

(3) பொருளாதாரக் கோட்பாடுகள் (4) சாதி

37. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. மக்களாட்சி | - | i. அரசின் கொள்கைகளை விமர்ச்சிப்பது |
| b. தேர்தல் ஆணையம் | - | ii. அரசாங்கத்தை அமைப்பது |
| c. பெரும்பான்மைக் கட்சி | - | iii. மக்களின் ஆட்சி |
| d. எதிர்க்கட்சி | - | iv. சுதந்திரமான நியாயமான தேர்தல் |

1. a - iii b - iv c - ii d - i
2. a - iv b - iii c - ii d - i
3. a - ii b - i c - iv d - iii
4. a - iii b - ii c - iv d - i

38. பின்வரும் கூற்றுகளில் சரியானதைத் தேர்வு செய்க.

(1) நாட்டிலுள்ள ஒவ்வொரு கட்சியும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

(2) தேர்தல் ஆணையம் அனைத்துக் கட்சிகளையும் சமமாக நடத்துகிறது.

(3) தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்குத் தனிச் சின்னத்தை ஒதுக்குகிறது.

(4) இவை அனைத்தும்.

39. கூற்று: பெரும்பான்மைக் கட்சி ஒரு நாட்டின் சட்டங்களை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

காரணம்: தேர்தலில் பிற கட்சிகளைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது ஆகும்.

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

(2) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

(3) காரணம் தவறு, கூற்று சரி.

(4) கூற்று காரணம் இரண்டும் தவறு.

40. இந்தியா முழுவதும் நடைபெறும் தேர்தலில் போட்டியிடும் கட்சி _______.

(1) மாநிலக் கட்சி (2) பிராந்தியக் கட்சி (3) தேசியக் கட்சி (4) பெரும்பான்மைக் கட்சி

41. தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிக்கு அடுத்ததாக அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சி _______.

(1) எதிர்க்கட்சி (2) ஆளும் கட்சி (3) தேசிய கட்சி (4) மாநில கட்சி

42. கூட்டணி அரசாங்கம் என்பது எந்தக் கட்சி முறையில் சாத்தியம்?

(1) ஒரு கட்சி முறை (2) இரு கட்சி முறை

(3) பல கட்சி முறை (4) இவற்றில் எதுவுமில்லை

43. ஒரு கட்சி மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் குறைந்தபட்சம் _______ தொகுதிகளில் வெற்றி பெறவேண்டும்.

(1) 2 % (2) 3 % (3) 4 % (4) 5 %

44. ஒரு கட்சி மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட, மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் _______ வாக்குகளைப் பெற்று இருத்தல் வேண்டும்.

(1) 3 % (2) 4 % (3) 5 % (4) 6 %

www.kalvinews.com

45. பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்படாத கட்சிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
(1) மாநில கட்சி (2) தேசிய கட்சி
(3) சுயேச்சைகள் (4) இவற்றில் எதுவுமில்லை

46. இந்தியாவில் கட்சி முறை எப்போது உருவாக்கப்பட்டது?
(1) பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி (2) பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி
(3) பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி (4) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி

47. இந்தியாவில் பொதுத் தேர்தல் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது?
(1) 4 ஆண்டுகள் (2) 5 ஆண்டுகள் (3) 6 ஆண்டுகள் (4) 7 ஆண்டுகள்

48. ஒரு கட்சியை எளிதாகக் கண்டறிய உதவுவது _______.
(1) கட்சியின் கொள்கைகள் (2) கட்சியின் சின்னங்கள்
(3) கட்சியின் தேர்தல் அறிக்கைகள் (4) கட்சியின் உறுப்பினர்கள்

49. இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தல் சின்னங்களாக அறிவித்துள்ள விலங்குகள் யாவை?
(1) யானை (2) சிங்கம் (3) 1 மற்றும் 2 (4) எதுவுமில்லை

50. இந்தியக் குடியரசு தினம் கொண்டாடப்படும் நாள் _______.
(1) ஜனவரி 26 (2) ஆகஸ்ட் 15 (3) ஜனவரி 10 (4) டிசம்பர் 10

51. இந்தியாவில் தேர்தலை நடத்தும் தன்னாட்சி அமைப்பு _______.
(1) பாராளுமன்றம் (2) தேர்தல் ஆணையம்
(3) நிதி ஆணையம் (4) உச்சநீதி மன்றம்

52. உள்ளாட்சித் தேர்தலை நடத்துவது _______.
(1) மாநிலத் தேர்தல் ஆணையம் (2) தலைமைத் தேர்தல் ஆணையம்
(3) மாவட்டத் தேர்தல் ஆணையம் (4) மாநில அரசு

53. அரசியல் கட்சிகள் ______ மற்றும் _______ இடையே பாலமாகச் செயல்படுகின்றன.
(1) குடிமக்கள், பிரதமர் (2) தொண்டர்கள், கட்சித் தலைவர்
(3) கொள்கை வகுப்பாளர்கள், குடிமக்கள் (4) குடிமக்கள், கட்சித் தலைவர்

54. தவறான கூற்று / கூற்றுகளைத் தேர்ந்தெடு.
அரசியல் கட்சிகள் என்பவை
A) தனக்கென கொள்கைகள் மற்றும் திட்டங்களைக் கொண்டிருக்கின்றன.
B) தேசிய நலன்களை வலியுறுத்த முயற்சி செய்கின்றன.
C) அரசியல் அமைப்பின் வழியாக மட்டுமல்லாமல் ஏதாவது ஒரு வகையில் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்கின்றன.
D) பொதுவான குறிக்கோள்களைக் கொண்ட மக்கள் குழுக்களாக இருக்கின்றன.
(1) A, B (2) C (3) A, B, C (4) எதுவுமில்லை

55. தற்போதைய இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் யார்?
(1) ஸ்ரீ சுஷில் சந்திரா (2) சுனில் அரோரா (3) ராஜேஷ் லக்கானி (4) சத்யபிரதா சாஹூ

56. தற்போதைய தமிழகத் தலைமைத் தேர்தல் ஆணையர் யார்?
(1) ஸ்ரீ சுஷில் சந்திரா (2) சுனில் அரோரா (3) ராஜேஷ் லக்கானி (4) பழனிக்குமார்

www.kalvinews.com

57. அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளில் தவறானவை எது/ எவை?

A) நேர்மையான எதிர்ப்பு, பொறுப்புடைமை, ஸ்திரத்தன்மை வழங்குதல்.

B) அரசாங்கத்தை ஏற்படுத்தி இயக்குதல்.

C) மக்கள் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களையும் கொள்கைகளையும் முன்வைத்தல்.

D) பொதுவான குறிக்கோள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட மதிப்பீடுகளைக் கொண்ட குழுக்களாக இருத்தல்.

(1) A மற்றும் B (2) C தவிர அனைத்தும்
(3) D மட்டும் (4) இவற்றில் எதுவும் இல்லை

58. கூட்டாட்சி அமைப்பினைப் பின்பற்றும் நாடுகளில் எத்தனை வகையான கட்சிகள் காணப்படுகின்றன?

(1) 4 (2) 3 (3) 2 (4) 1

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | (2) | **16** | (3) | **31** | (3) | **46** | (2) |
| **2** | (4) | **17** | (2) | **32** | (4) | **47** | (2) |
| **3** | (3) | **18** | (3) | **33** | (3) | **48** | (2) |
| **4** | (1) | **19** | (2) | **34** | (4) | **49** | (3) |
| **5** | (4) | **20** | (2) | **35** | (1) | **50** | (3) |
| **6** | (4) | **21** | (2) | **36** | (2) | **51** | (2) |
| **7** | (2) | **22** | (3) | **37** | (1) | **52** | (1) |
| **8** | (3) | **23** | (4) | **38** | (4) | **53** | (3) |
| **9** | (4) | **24** | (3) | **39** | (1) | **54** | (2) |
| **10** | (3) | **25** | (3) | **40** | (3) | **55** | (1) |
| **11** | (1) | **26** | (4) | **41** | (1) | **56** | (4) |
| **12** | (3) | **27** | (4) | **42** | (3) | **57** | (3) |
| **13** | (4) | **28** | (4) | **43** | (2) | **58** | (3) |
| **14** | (3) | **29** | (4) | **44** | (4) | | |
| **15** | (1) | **30** | (4) | **45** | (4) | | |

www.kalvinews.com



# 1. உற்பத்தி

தொகுப்பு:
திரு.சா.சக்திவேல்,M.Sc.,M.A.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்),
அரசு மேல்நிலைப்பள்ளி,
வெ.காட்டுப் பாளையம்,
கடலூர் மாவட்டம்.

மேம்பாடு:
திருமதி.சு.சுகுணா,M.A.,M.A.,M.Ed.,M.Phil.
பட்டதாரி ஆசிரியை (சமூக அறிவியல்),
அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
குறிஞ்சிப்பாடி,
கடலூர் மாவட்டம்.

## முக்கிய குறிப்புகள்

- **நுகர்வோரின் பயன்பாட்டிற்காக, மூலப் பொருள்களையும், மூலப் பொருள்கள் அல்லாதனவற்றையும் ஒன்றிணைத்து, ஒரு பொருளை உருவாக்கும் செயலே உற்பத்தி ஆகும்**..
- **உற்பத்தி** என்பது **பயன்பாட்டை** உருவாக்குகிறது.

**பயன்பாட்டின் வகைகள்:**

1. வடிவப் பயன்பாடு 2. இடப்பயன்பாடு 3. காலப் பயன்பாடு

**வடிவப் பயன்பாடு**

- ஒரு பொருளின் வடிவம் மாற்றப்படும்போது அதன் பயன்பாடு மிகுதியாகிறது.
  (எ.கா) பருத்தியிலிருந்து ஆடைகள் உருவாக்கப்படுதல்.

**இடப் பயன்பாடு:**

- ஒரு பொருளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும்போது அதன் பயன்பாடு அதிகமாகிறது.
  எ.கா விளைபொருளான அரிசி தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கும் கொண்டு செல்லுதல்.

**காலப்பயன்பாடு**

- ஒரு பொருளை எதிர்காலத் தேவைக்காக சேமித்து வைக்கும்போது அதன் பயன்பாடு அதிகரிக்கிறது.
  எ.கா உணவுப் பயிர்களான நெல், கோதுமை சேமித்தல்.

**உற்பத்தியின் வகைகள்:**

| முதன்மை நிலை உற்பத்தி | இரண்டாம் நிலை உற்பத்தி | மூன்றாம் நிலை உற்பத்தி |
|---|---|---|
| இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை, **நேரடியாகப் பயன்படுத்திச்** செய்கின்ற செயல்பாடு. | முதன்மை நிலையின் உற்பத்திப் பொருள்களை மூலப்பொருள்களாக பயன்படுத்திப் **புதிய உற்பத்தி பொருள்களை** உருவாக்குவது. | முதன்மை நிலை மற்றும் இரண்டாம் நிலைகளின் உற்பத்தி பொருள்களைச் **சேகரிப்பது, பரிமாற்றம் செய்வது.** |
| வேளாண்மை, காடு வளர்ப்பு, மீன் பிடித்தல், | மாவிலிருந்து ரொட்டி தயாரித்தல், நான்கு சக்கர வாகனங்கள், | வணிகம், வங்கி, காப்பீடு, போக்குவரத்து, செய்தித் |

www.kalvinews.com

| | | |
|---|---|---|
| சுரங்கத் தொழில், எண்ணெய் வளங்களைப் பிரிதெடுத்தல், பருத்தி உற்பத்தி, இரும்புத்தாது வெட்டியெடுத்தல், | ஆடைகள், இரசாயனப் பொருட்கள் தயாரித்தல், பொறியியல் துறை சார்ந்த தொழில்கள், கட்டடப் பணிகள் சார்ந்த தொழில்கள், பருத்தி தொழில், இரும்புத் தொழில், ரொட்டித் தொழிற்சாலை | தொடர்பு, சட்டம், நிருவாகம், கல்வி, உடல் நலப் பாதுகாப்பு |
| முதன்மை நிலை உற்பத்தியில் வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பதால், **வேளாண்மைத் துறை உற்பத்தி** என்றும் அழைக்கப்படுகிறது. | இரண்டாம் நிலை உற்பத்தியில் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால், **தொழில்துறை உற்பத்தி** என்றும் அழைக்கப்படுகிறது.. | சமூகத்தில் **ஆசிரியர்கள், மருத்துவர்கள்** போன்றோர் ஆற்றும் சேவைகள் **மூன்றாம் நிலை உற்பத்தி** என்கிறோம். சேவைக்கு முக்கியத்துவம் தருவதால் **மூன்றாம் நிலை உற்பத்தி, சேவைத்துறை என்றும் அழைக்கப்படுகிறது.** |

- கரும்பு ஓர் பணப்பயிர்.
- நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு வகிப்பவை **மூன்றாம் நிலை அல்லது சேவைத்துறை** உற்பத்தி ஆகும்.
- பொருளாதாரத்தில் **உற்பத்தியும், நுகர்வும்** இரு இன்றியமையாத செயல்களாகும்.
- பொருளாதாரத்தில் **உற்பத்தியாளர், நுகர்வோர்** என இருவரும் இன்றியமையாதவர்களாக உள்ளனர்.
- **உற்பத்தியாளர்கள் நலன்** என்பது பண்டங்கள் மற்றும் பணிகளை விற்கும்போது அவர்கள் பெறும் **வருமானத்துடன்** தொடர்புடையது.
- பொருளாதாரத்தில் **உற்பத்தி** என்னும் சொல், மாற்றத்தக்க மதிப்புடைய பொருள்களையும் சேவைகளையும் உருவாக்குவதைக் குறிக்கிறது.
- இந்தியாவில் **கலப்பு பொருளாதார நிலை** காணப்படுகிறது. அதாவது பொருளாதாரத்தில் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து செயல்படுகிறது.
- **மனிதனின் செயல்பாடுகள்**

  **பொருளை உற்பத்தி செய்தல், நுகர்தல்** எனும் இரு கூறுகளில் உள்ளடங்கியுள்ளன.
- ஒரு பொருளின் உற்பத்திக்கு உதவுகின்ற காரணிகளை **நிலம், உழைப்பு, முதலீடு** என வகைப்படுத்தலாம்.
- **உற்பத்திக்கான காரணிகள்**

1. நிலம்
2. உழைப்பு
3. மூலதனம்
4. தொழில் முனைவோர்

**நிலத்தின் சிறப்பியல்புகள்:**

- இயற்கை மனிதனுக்கு இலவசமாக கொடுத்திருக்கும் கொடை **நிலம்** ஆகும்.
- **நிலத்தின் அளிப்பு** நிலையானது.
- **நிலம் அழிவில்லாதது**

www.kalvinews.com

- நிலம் ஒரு முதன்மை உற்பத்திக் காரணி
- நிலம் இடம் பெயரக்கூடியதன்று.
- நிலம் ஆற்றல் வாய்ந்தது.
- **நிலம்** என்பது பண்டத்திற்கான விருப்பங்களை நிறைவு செய்யும் சக்தியாகும்.
- நிலப்பரப்பு, நீர், காற்று, கனிமவளங்கள், காடுகள், ஆறுகள், ஏரிகள், கடல்கள், மலைகள் தட்பவெப்பநிலை, காலநிலை ஆகிய அனைத்தும் **நிலம்** என்ற சொல்லுக்குள் அடங்குகின்றன
- நிலத்தின் அளவை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியாது.
- குறிப்பிட்ட நிலப்பகுதி அமைந்துள்ள இடத்தில் கிடைக்கும் வளங்களைப் பொறுத்து, நிலத்தின் வடிவம் மாற்றமடைகிறது.

**உழைப்பு**

- உற்பத்திப் பாதையில் உழைப்பு என்பது மனித இடு பொருளாகும்.

**உழைப்பிற்கான ஆல்பிரட் மார்ஷலின் வரையறை:**

ஒரு பணியை ஒருவர் செய்வதால்,அவருக்கு கிடைக்கும் மன நிறைவு மட்டுமின்றி, அதனைச் செய்வதற்காக கைமாறு எதிர்பார்த்து மனிதன் தன் உடல் அல்லது அறிவை முழுமையாகவோ, பகுதியாகவோ பயன்படுத்தி, மேற்கொள்ளும் கடும் முயற்சியே உழைப்பு ஆகும்

**உழைப்பின் சிறப்பியல்புகள்**

- உழைப்பு என்பது ஒரு செயற்படு காரணி.
- உழைப்பை சேமித்து வைக்க இயலாது.
- உழைப்பு ஒரே சீரானதல்ல.
- உழைப்பை உழைப்பாளரிடமிருந்து பிரிக்க இயலாது.
- உழைப்பு இடம் பெயரக்கூடியது.
- '**பொருளியலின் தந்தை**' என்று அழைக்கப்படுபவர் **ஆடம்ஸ்மித்** ஆவர்.
- **ஆடம்ஸ்மித்தின் கோட்பாடு** செல்வத்தை அடிப்படையாகக் கொண்ட **செல்வ இலக்கணம்** ஆகும்.
- **"நன்னெறி கருத்து உணர்வு கொள்கை"**, **"நாடுகளின் செல்வமும் அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும் ஓர் ஆய்வு"** (1776) என்பன ஆடம்ஸ்மித்தின் சிறந்த இரு படைப்பு நூல்கள்
- உற்பத்திக் காரணிகளை **இரண்டாக வகைப்படுத்தலாம்**.

1. **முதல்நிலை உற்பத்திக் காரணிகள் - நிலம், உழைப்பு.**
2. **மூலப்பொருள்களிலிருந்து பெறப்பட்ட உற்பத்திக் காரணிகள் - முதலீடு, அமைப்பு.**

**வேலைப் பகுப்பு முறை:**

- வேலைப் பகுப்பு முறையை ஆடம்ஸ்மித் தனது "நாடுகளின் செல்வமும் அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும்" என்ற நூலின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- ஒரு உற்பத்தியை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினரிடம் ஒப்படைத்தலே வேலை பகுப்பு முறை ஆகும்.

**வேலைப் பகுப்பு முறையின் நன்மைகள்**

1. உழைப்பாளி ஒருவர் ஒரே வேலையை மீண்டும், மீண்டும் செய்வதால் வேலையில் திறமையுடையவர் ஆகிறார்.
2. நவீன இயந்திரங்களை உற்பத்தியில் அதிகமாக ஈடுபடுத்துவதற்கு வழிவகுக்கிறது.

www.kalvinews.com

3. காலமும், மூலப்பொருட்களும் மிகத் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**வேலைப் பகுப்பு முறையின் தீமைகள்**

1. தொழிலாளி ஒரே வேலையை திரும்ப திரும்ப செய்வதால் சுவையற்ற, களிப்பற்ற தன்மையை அடைகிறார். இது மனிதத் தன்மையை அழிக்கிறது.
2. ஒரு பகுதி வேலையை மட்டும் தொழிலாளி மேற்கொள்வதால் அவர் குறுகிய தேர்ச்சியை மட்டுமே பெறுகிறார். வேலை வாய்ப்பின்மை பெருகும்.
3. கைவினைப்பொருட்களின் வளர்ச்சியினைப் பாதிக்கின்றது, ஒரு தொழிலாளி ஒரு பொருளினை முழுவதுமாக உருவாக்கிய மனநிறைவினைப் பெறுவதில்லை.

- வேலைப்பகுப்பு முறையை அறிமுகம் செய்தவர் **ஆடம்ஸ்மித்.**

**மூலதனம்**

- **மூலதனம்** என்பது பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக மனித முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும்.

**மூலதனத்தின் வடிவங்கள்:**

- இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள் போன்றவை **பருமப்பொருள்** மூலதனம்.
- வங்கி வைப்புகள், பங்குகள், பத்திரங்கள் போன்றவை **பண** மூலதனம்.
- கல்வி, பயிற்சி மற்றும் சுகாதாரம் போன்றவை **மனித மூலதனம்.**

**மூலதனத்தின் சிறப்பியல்புகள்:**

- மூதனம் -ஒரு செயலற்ற உற்பத்திக் காரணீ
- மனித முயற்சியால் உருவாக்கப்படுகிறது.
- இது உற்பத்தியில் தவிர்க்க முடியாத காரணியல்ல. இது இன்றியும் உற்பத்தி நடைபெறும்.
- மூலதனம் அதிகம் இயங்கும் தன்மையுடையது.
- இதன் அளிப்பு நெகிழுந்தன்மையுடையது.
- மூலதனம் ஆக்கமுடையது.
- மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்.
- மூலதனத்தை ஈடுபடுத்துவதன் நோக்கம், எதிர்காலத்தில் வருமானம் பெற வேண்டும் என்பதேயாகும்.
    - மூலதனம் என்பது **செல்வத்தை** குறிக்கும்.
    - பருமப்பொருள் மூலதனத்தை **பொருட்சார் மூலதனம்** என்றும் கூறுவர்.
    - பண மூலதனத்தை **பணவியல் வளங்கள்** என்றும் கூறுவர்.
    - மனித மூலதனத்தை **மனிதத் திறன் வளங்கள்** என்றும் கூறுவர்.

**தொழில் முனைவோர் (அல்லது) தொழிலமைப்பு:**

- தற்காலத்தில் **"சமுதாயத்தின் மாற்றம் காணும் முகவர்"** என அழைக்கப்படுவோர் **தொழில் முனைவோர்** ஆவர்.
- பல உற்பத்தி காரணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுபவர் **தொழில் முனைவோர்** ஆவார

**தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள்**.

- இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்.
- உற்பத்தி அலகின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல்.
- புதுமைகளை உருவாக்குதல்.

www.kalvinews.com

- வெகுமதி செலவைத் தீர்மானித்தல்.
- இடர்களை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளல்.
- தொழில் முனைவோரை **தொழில் அமைப்பாளர்** எனவும் அழைக்கப்படுவர்.
- "உடல் (அ) மனதால் பயன்கருதி மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பு" எனக் கூறியவர் **ஆல்பர்ட் மார்ஷல்** ஆவர்.
- "இயற்கையின் கொடை தவிர்த்த வருமானம் அளிக்கக் கூடிய பிற வகைச் செல்வங்களே மூலதனம் ஆகும்" எனக் கூறியவர் **ஆல்பர்ட் மார்ஷல்**.
- செல்வத்தை உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட செல்வம் **மூலதனம்** என்றும் கூறலாம்.
- .நுகர்வோரின் பயன்பாட்டுக்காக மூலப்பொருளையும், மூலப்பொருள் அல்லாதனவற்றையும் ஒன்றிணைத்து, ஒரு பொருளை உருவாக்கும் செயலே **உற்பத்தியாகும்**.
- உற்பத்தி, ஒவ்வொருவரின் தேவைக்கேற்பச் சிறந்த சேவைகளையும் மதிப்பையும் அளிப்பதில் இன்றியமையாத இடத்தைப்பெறுகிறது.

**பயிற்சி வினாக்கள்:**

1. உற்பத்தி என்பது _______ உருவாக்குகிறது.
   (1) பயன்பாட்டை அழித்தல் (2) பயன்பாட்டை உருவாக்குதல்
   (3) மாற்று மதிப்பு (4) மேற்கண்ட எதுவுமில்லை

2. கீழ்க்கண்டவற்றுள் எவை பயன்பாட்டின் வகைகள்?
   (1) வடிவப் பயன்பாடு (2) காலப்பயன்பாடு
   (3) இடப் பயன்பாடு (4) மேற்கண்ட அனைத்தும்

3. ஒரு பொருளின் _______ மாற்றப்படும்போது அதன் பயன்பாடு மிகுதியாகிறது.
   (1) அளவு (2) நிறை (3) வடிவம் (4) விலை

4. ஒரு பொருளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லப்படும்போது, அதன் _______ அதிகமாகிறது.
   (1) எடை (2) பயன்பாடு (3) விலை (4) நிறை

5. ஒரு பொருளை _______ சேமித்து வைக்கும்போது, அதன் பயன்பாடும் அதிகரிக்கின்றது.
   (1) அவசரத் தேவைக்கு (2) உடனடி தேவைக்கு
   (3) எதிர்கால தேவைக்கு (4) பணத் தேவைக்கு

6. உற்பத்தியின் வகைகளை _______ நிலைகளாக பிரிக்கலாம்.
   (1) மூன்று (2) ஐந்து (3) நான்கு (4) ஏழு

7. கரும்பு, வேளாண்மை மூலம் விளைக்கப்படுவதால் இதனை _______ உற்பத்தி என்று கூறுகிறோம்.
   (1) முதன்மை நிலை (2) இரண்டாம் நிலை
   (3) மூன்றாம் நிலை (4) மேற்கண்ட அனைத்தும்

8. தொழிற்சாலைகளை நாம் _______ உற்பத்தி என்கிறோம்.
   (1) முதன்மை நிலை (2) இரண்டாம் நிலை
   (3) மூன்றாம் நிலை (4) மேற்கண்ட அனைத்தும்

www.kalvinews.com

9. தேவைகளை நிறைவேற்றும் சேவைத்துறையை _______ உற்பத்தி என்கிறோம்.
(1) முதன்மை நிலை (2) இரண்டாம் நிலை
(3) மூன்றாம் நிலை (4) மேற்கண்ட அனைத்தும்

10. பொருளாதாரத்தில் _______ இன்றியமையாத செயல்களாகும்.
(1) உற்பத்தி (2) நுகர்வு
(3) உற்பத்தியும், நுகர்வும் (4) எவையுமில்லை

11. பொருளாதாரத்தில் _______, _______ என இருவரும் இன்றியமையாதவர்களாக உள்ளனர்.
(1) உற்பத்தியாளர், நுகர்வோர் (2) உற்பத்தியாளர்கள், வியாபாரிகள்
(3) முதலாளி, தொழிலாளி (4) ஏழை, பணக்காரர்

12. _______ என்பது மூலப்பொருள்களை மாற்றியமைத்து நம் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு முழுமையாக்கும் ஒரு செயலாகும்.
(1) உற்பத்தி (2) நிலம் (3) மூலதனம் (4) உழைப்பு

13. உற்பத்தியாளர்கள் நலன் என்பது பண்டங்கள் மற்றும் பணிகளை விற்கும்போது அவர்கள் பெறும் _______ தொடர்புடையது.
(1) மதிப்புடன் (2) வருமானத்துடன் (3) உழைப்புடன் (4) உற்பத்தியுடன்

14. பொருளாதாரத்தில் _______ என்னும் சொல், மாற்றத்தக்க மதிப்புடைய பொருள்களையும் சேவைகளையும் உருவாக்குவதைக் குறிக்கிறது.
(1) மூலதனம் (2) நிலம் (3) உற்பத்தி (4) பணம்

15. இயற்கையில் கிடைக்கும் பொருட்களை நேரடியாக பயன்படுத்தும் நிலையினை _______ உற்பத்தி என்கிறோம்.
(1) முதன்மை நிலை (2) இரண்டாம் நிலை (3) மூன்றாம் நிலை (4) எவையுமில்லை

16. வேளாண்மைத் துறை உற்பத்தி என்பது _______ உற்பத்தி ஆகும்.
(1) முதன்மை நிலை (2) இரண்டாம் நிலை (3) மூன்றாம் நிலை (4) எவையுமில்லை

17. முதன்மை நிலையின் உற்பத்திப் பொருள்களை, மூலப்பொருள்களாகப் பயன்படுத்தி புதிய உற்பத்திப் பொருள்களை உருவாக்குவது _______ உற்பத்தி ஆகும்.
(1) முதன்மை நிலை (2) இரண்டாம் நிலை (3) மூன்றாம் நிலை (4) எவையுமில்லை

18. பொறியியல் துறை சார்ந்த பணிகள் _______ உற்பத்தியில் அடங்கும்.
(1) முதன்மை நிலை (2) இரண்டாம் நிலை (3) மூன்றாம் நிலை (4) எவையுமில்லை

19. நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு வகிப்பவை _______ உற்பத்தி ஆகும்.
(1) முதன்மை நிலை (2) இரண்டாம் நிலை (3) மூன்றாம் நிலை (4) எவையுமில்லை

20. மூன்றாம் நிலை உற்பத்தி _______ என்றும் அழைக்கப்படுகிறது.
(1) சேவைத் துறை (2) கல்வித் துறை (3) பாதுகாப்புத் துறை (4) விளையாட்டுத் துறை

21. இயற்கை, மனிதனுக்குக் கொடுத்திருக்கும் இடம்பெயராத கொடை _______ ஆகும்.
(1) காற்று (2) நிலம் (3) நீர் (4) ஆறுகள்

www.kalvinews.com

22. _______ என்பது நிலையான அளிப்பினை உடையது.
(1) காடுகள் (2) மலைகள் (3) நிலம் (4) நீர்

23. _______ என்பது பண்டத்திற்கான விருப்பங்களை நிறைவு செய்யும் சக்தியாகும்.
(1) நிலம் (2) காற்று (3) கனிம வளங்கள் (4) நெருப்பு

24. 'பொருளியலின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் _______ ஆவார்.
(1) ஆல்பர்ட் மார்ஷல் (2) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
(3) ஆல்பிரட் நோபல் (4) ஆடம்ஸ்மித்

25. 'நாடுகளின் செல்வம்' என்ற நூலை எழுதியவர் _______ ஆவார்.
(1) ஆடம்ஸ்மித் (2) ஆல்பர்ட் மார்ஷல்
(3) ஆல்பிரட் நோபல் (4) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

26. "நாடுகளின் செல்வம்" என்ற நூலானது _______ ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
(1) 1759 (2) 1767 (3) 1776 (4) 1579

27. "நன்னெறி கருத்து உணர்வுக் கொள்கை" என்ற நூலை எழுதியவர் _______.
(1) ஆடம்ஸ்மித் (2) ஆல்பர்ட் மார்ஷல்
(3) ஆல்பிரட் நோபல் (4) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

28. "நன்னெறி கருத்து உணர்வுக் கொள்கை" என்ற நூலானது _______ ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
(1) 1759 (2) 1767 (3) 1776 (4) 1579

29. வேலைப்பகுப்பு முறையை அறிமுகம் செய்தவர் _______ ஆவார்.
(1) ஆல்பர்ட் மார்ஷல் (2) ஆடம்ஸ்மித்
(3) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (4) ஆல்பிரட் நோபல்

30. _______ என்பது பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக மனித முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும்.
(1) நிலம் (2) காற்று (3) மூலதனம் (4) உற்பத்தி

31. இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள் போன்றவை _______.
(1) பருமப்பொருள் மூலதனம்
(2) பண மூலதனம்
(3) மனித மூலதனம்
(4) மேற்கண்ட அனைத்தும்

32. வங்கி வைப்புகள், பங்குகள், பத்திரங்கள் போன்றவை _______.
(1) மனித மூலதனம் (2) பண மூலதனம்
(3) பருமப்பொருள் மூலதனம் (4) எவையுமில்லை

33. கல்வி, பயிற்சி மற்றும் சுகாதாரம் போன்றவை _______.
(1) மனித மூலதனம் (2) பண மூலதனம்
(2) பருமப்பொருள் மூலதனம் (4) எவையுமில்லை

www.kalvinews.com

34. தற்காலத்தில் "சமுதாயத்தின் மாற்றம் காணும் முகவர்" என அழைக்கப்படுவோர் _______ ஆவர்.
(1) தொழில் முகவர்
(2) தொழில் முனைவோர்
(3) தொழில் தொடர்பாளர்
(4) பரிமாற்றம் செய்பவர்

35. தொழில் முனைவோர் _______ எனவும் அழைக்கப்படுவர்.
(1) தொழில் அமைப்பாளர்
(2) பரிமாற்றம் செய்பவர்
(3) தொடர்பாளர்
(4) முகவர்

36. "உடல் (அ) மனதால் பயன்கருதி மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பு" எனக் கூறியவர் _______.
(1) ஆல்பர்ட் மார்ஷல்
(2) ஆடம்ஸ்மித்
(3) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
(4) ஆல்பிரட் நோபல்

37. "இயற்கையின் கொடை தவிர்த்த வருமானம் அளிக்கக் கூடிய பிற வகைச் செல்வங்களே மூலதனம் ஆகும்" எனக் கூறியவர் _______.
(1) ஆடம்ஸ்மித்
(2) ஆல்பர்ட் மார்ஷல்
(3) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
(4) ஆல்பிரட் நோபல்

38. செல்வத்தை உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட செல்வம் _______ என்றும் கூறலாம்.
(1) உழைப்பு (2) நிலம் (3) மூலதனம் (4) உற்பத்தி

39. பல உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுபவர் _______ ஆவார்.
(1) தொழில் முனைவோர்
(2) பரிமாற்றம் செய்பவர்
(3) தொழில் முகவர்
(4) தொழில் தொடர்பாளர்

40. நிலம், உழைப்பு, மூலதனம் என பல உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுபவர் _______ ஆவார்.
(1) தொழில் முனைவோர்
(2) பரிமாற்றம் செய்பவர்
(3) தொழில் முகவர்
(4) தொழில் தொடர்பாளர்

41. கீழ்க்கண்டவற்றுள் எவை மனித உழைப்பால் உருவாகாதவை ?
(1) வீடு (2) நிலம் (3) கல்வி (4) தொழிற்சாலைகள்

42. கீழ்க்கண்டவற்றுள் எவை மனித உழைப்பால் உருவாக்கப்பட்டவை ?
(1) மலைகள் (2) காடுகள் (3) நீர் (4) பணம்

43. முதன்மை உற்பத்திக் காரணிகள் _______.
(1) நிலம் (2) கல்வி (3) உழைப்பு (4) (1) மற்றும் (3)

44. மூலதனம், தொழிலமைப்பு ஆகியவை _______ உற்பத்திக் காரணிகள் ஆகும்.
(1) முதன்மை நிலை
(2) இரண்டாம் நிலை
(3) மூன்றாம் நிலை
(4) மேற்கண்ட அனைத்தும்

45. சமூகத்தில் ஆசிரியர்கள், மருத்துவர்கள் போன்றோர் ஆற்றும் சேவைகள் _______ உற்பத்தி என்கிறோம்.
(1) முதன்மை நிலை
(2) இரண்டாம் நிலை
(3) மூன்றாம் நிலை
(4) மேற்கண்ட அனைத்தும்

www.kalvinews.com

46. கூற்று I : நுகர்வோரின் பயன்பாட்டுக்காக மூலப்பொருளையும், மூலப்பொருள் அல்லாதனவற்றையும் ஒன்றிணைத்து, ஒரு பொருளை உருவாக்கும் செயலே உற்பத்தியாகும்.

கூற்று II : உற்பத்தி, ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப சிறந்த சேவைகளையும் மதிப்பையும் அளிப்பதில் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது.

(1) கூற்று I மற்றும் II சரி (2) கூற்று I சரி II தவறு

(3) கூற்று I மற்றும் II தவறு (4) கூற்று I தவறு II சரி

47. கூற்று I : தொழில் முனைவோர், " சமுதாய மாற்றம் காணும் முகவர் என அழைக்கப்படுகின்றனர்.

காரணம் : சமுதாய விருப்பமுள்ள உற்பத்தியைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாய நலம் மேம்படவும் காரணமாகின்றனர்.

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) காரணமும் கூற்றும் தவறானவை

(4) கூற்று தவறு; காரணம் சரி

48. கூற்று: இந்தியாவில் கலப்பு பொருளாதார நிலை காணப்படுகிறது.

காரணம்: பொருளாதாரத்தில் பொதுத்துறை நிறுவனங்கள் செயல்படுகின்றன.

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) காரணமும் கூற்றும் தவறானவை

(4) கூற்று தவறு, காரணம் சரி

49. பொருத்துக.

a. முதன்மை உற்பத்தி - i. ஆடம் ஸ்மித்

b. காலப் பயன்பாடு - ii. மீன்பிடித்தல், சுரங்கத்தொழில்

c. நாடுகளின் செல்வம் - iii. தொழில் முனைவோர்

d. மனித மூலதனம் - iv. எதிர்கால சேமிப்பு

(1) a - iii b - i c - ii d - v e - iv (2) a - ii b - iv c - i d - v e - iii

(3) a - iii b - iv c - i d - v e - ii (4) a - iv b - iii c - i d - v e - iv

50. கரும்பு ஒரு _______ ஆகும்.

(1) பணப்பயிர் (2) தோட்டப்பயிர் (3) வாணிபப்பயிர் (4) தோட்டக்கலைப் பயிர்

51. மனிதர்களின் செயல்பாடுகள் _______ என்னும் கூறுகளில் உள்ளடங்கியுள்ளன.

(1) நுகர்தல், உழைப்பு (2) பொருள் உற்பத்தி செய்தல், நுகர்தல்.

(3) பொருள் உற்பத்தி செய்தல், மூலதனம் (4) உழைப்பு, மூலதனம்

52. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டறி.

(1) உற்பத்தி - பயன்பாட்டை உருவாக்குதல்

(2) நிலம் - இடம் பெயரக்கூடியதன்று

(3) மூலதனம் - செல்வம்

(4) உழைப்பு - சேமிக்க முடியும்

www.kalvinews.com

53. கீழ்க்கண்டவற்றுள் சரியான இணையை தேர்வு செய்க.

(1) பருத்தி - இரண்டாம் நிலை உற்பத்தி

(2) இரும்புத் தொழில் - முதன்மைத் துறை.

(3) பாதுகாப்புத் துறை - மூன்றாம் நிலை உற்பத்தி.

(4) உற்பத்தியின் வகைகள் - நான்கு

54. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்றினை / கூற்றுகளை தேர்வு செய்.

கூற்று 1: ஆடம்ஸ்மித்தின் கோட்பாடு செல்வத்தை அடிப்படையாகக் கொண்ட செல்வ இலக்கணம்.

கூற்று 2: உழைப்பு இடம் பெயரக் கூடியது.

கூற்று 3: நிலத்தின் அளவை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியும்.

(1) கூற்று 1, 2 தவறு (2) கூற்று 1, 3 தவறு.

(3) கூற்று 3 மட்டும் தவறு (4) கூற்று 1 மட்டும் தவறு

55. பொருந்தாததைக் கண்டறி.

(1) அலுவலகம் (2) கனிம வளங்கள் (3) தொழிற்சாலைகள் (4) இயந்திரங்கள்

56. தவறான கூற்றினைத் தேர்ந்தெடு.

(1) தொழில் முனைவோர் "சமுதாய மாற்றம் காணும் முகவர்"

(2) புதுமைகளை உருவாக்குபவர்

(3) உற்பத்தி அலகின் இருப்பிடத்தை தீர்மானிப்பதில்லை

(4) இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காண்பவர்

57. 'சமுதாய மாற்றம் காணும் முகவர்' என யார் அழைக்கப்படுகிறார்? (NMMS-2020-21)

(1) தொழில் முனைவோர் (2) முதலீட்டாளர்

(3) நுகர்வோர் (4) உற்பத்தியாளர்

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 11 | (1) | 21 | (2) | 31 | (1) | 41 | (2) | 51 | (2) |
| 2 | (4) | 12 | (1) | 22 | (3) | 32 | (2) | 42 | (4) | 52 | (4) |
| 3 | (3) | 13 | (2) | 23 | (1) | 33 | (1) | 43 | (4) | 53 | (3) |
| 4 | (2) | 14 | (3) | 24 | (4) | 34 | (2) | 44 | (2) | 54 | (3) |
| 5 | (3) | 15 | (1) | 25 | (1) | 35 | (1) | 45 | (3) | 55 | (2) |
| 6 | (1) | 16 | (1) | 26 | (3) | 36 | (1) | 46 | (1) | 56 | (3) |
| 7 | (1) | 17 | (2) | 27 | (1) | 37 | (2) | 47 | (1) | 57 | (1) |
| 8 | (2) | 18 | (2) | 28 | (1) | 38 | (3) | 48 | (2) | | |
| 9 | (3) | 19 | (3) | 29 | (2) | 39 | (1) | 49 | (2) | | |
| 10 | (3) | 20 | (1) | 30 | (3) | 40 | (1) | 50 | (1) | | |

www.kalvinews.com

# வகுப்பு - 7 - பருவம் - 2 - வரலாறு

## 1. விஜயநகர, பாமினி அரசுகள்

**தொகுப்பு:**
**திரு.இரா.வின்சென்ட்,** M.A., B.Ed., M.Phil.,
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**நகராட்சி நடுநிலைப்பள்ளி, 13 வது வார்டு,**
**தென்காசி, தென்காசி மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.ர.கண்ணன்** M.Sc., B.Ed..
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, தப்பக்குட்டை,**
**சேலம் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- முஹமது பின் துக்ளக்கின் அடக்குமுறை நடவடிக்கைகள் புதிய அரசுகள் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது.
- இந்தியாவின் தெற்கே விஜயநகரமும், குல்பர்கா அல்லது பாமினி ஆகியவை மாபெரும் அரசுகளாக எழுச்சி பெற்றன.
- பாமினி அரசு மஹாராஷ்டிரா மாநிலம் முழுவதும் மற்றும் கர்நாடகாவில் சில பகுதிகளிலும் பரவி இருந்தது.
- பாமினி அரசு 180 ஆண்டுகள் பதினெட்டு முடியரசர்களால் ஆளப்பட்டது.
- பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சரிந்து பீஜப்பூர், அகமது நகர், கோல்கொண்டா, பீடார், பீரார் என ஐந்து சுல்தானியங்களாகப் பிரிந்தது.
- விஜயநகர அரசு வலுவான அரசாக 200 ஆண்டுகள் ஆட்சி செய்தது.
- விஜயநகர அரசுக்கு எதிராக தக்காண முஸ்லீம் அரசுகளை ஒருங்கிணைத்து 1565 ல் நிகழ்ந்த தலைக்கோட்டைப் போர் விஜயநகர அரசை வீழ்த்தியது.

**விஜயநகரப் பேரரசு நிறுவப்படுதல்**

- விஜயநகரம் வெற்றியின் நகரம் என அழைக்கப்படுகிறது.
- **சங்கம வம்சத்தை** சேர்ந்த **ஹரிஹரர் - புக்கர்** ஆகிய இரு சகோதரர்களால் **விஜயநகரப் பேரரசு கர்நாடகத்தின் தென் பகுதியில் நிறுவப்பட்டது.**
- **சிருங்கேரி சைவ மடத்தின் தலைவர் வித்யாரண்யர்**.
- ஆன்மீக குருவான வித்யாரண்யருக்கு மதிப்பளிக்கும் விதத்தில் விஜயநகரம், வித்யாநகர் என ஒரு குறிப்பிட்ட காலம்வரை அழைக்கப்பட்டது.
- விஜயநகர அரசானது சங்கம (1336-1485), சாளுவ (1485-1505), துளுவ (1505-1570), ஆரவீடு (1570-1646) என்ற நான்கு அரசு மரபுகளால் ஆளப்பட்டது.
- விஜயநகர அரசர்கள், பாமினி சுல்தான்கள், ஒடிசாவைச் சேர்ந்த அரசர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதற்கு கிருஷ்ணா-துங்கபத்ரா நதிகளுக்கு இடைப்பட்ட செழிப்பான பகுதியும், கிருஷ்ணா-கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட கழிமுகப்பகுதியுமே காரணமாக அமைந்தன.
- விஜயநகர் அரசு உருவாகிய 10 ஆண்டுகளுக்குப் பின்னரே பாமினி அரசு நிறுவப்பட்டது.
- குமார கம்பணாவின் மனைவி **கங்காதேவியால் மதுரா விஜயம்** எனும் நூல் எழுதப்பட்டது.
- மதுரா விஜயம் எனும் நூல் விஜயநகர பேரரசால் மதுரை கைப்பற்றப்பட்டதை விளக்குகிறது.

www.kalvinews.com

**சங்கம வம்சத்தின் முடிவு**

- புக்கர் இயற்கை எய்தியபோது பரந்த ஒரு நிலப்பரப்பைத் தம் மகன் இரண்டாம் ஹரிஹரர் ஆள்வதற்காக விட்டுச்சென்றார்.
- இரண்டாம் ஹரிஹரர் பாமினி அரசிடமிருந்து பெல்காம், கோவா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார்.
- இரண்டாம் ஹரிகரருடைய மகன் முதலாம் தேவராயர், ஒடிசாவைச் சேர்ந்த கஜபதி வம்ச அரசர்களைத் தோற்கடித்தார்.
- ஹரிகரருக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாம் தேவராயர் சங்கம வம்சத்தின் தலைசிறந்த அரசராவார்.
- இரண்டாம் தேவராயர் தம்முடைய படைகளுக்கு நவீனப் போர்முறை பயிற்சி அளிக்க இஸ்லாமிய வீரர்களை பணியமர்த்தினார்.

**சாளுவ வம்சத்தின் தோற்றம்**

- இரண்டாம் தேவராயருக்குப் பின்னர், விஜயநகர பேரரசு ஆபத்தான சூழலுக்கு உள்ளானது.
- சாளுவ நரசிம்மர், சங்கம வம்சத்தின் கடைசி அரசரான இரண்டாம் விருபாக்சி ராயரைக் கொலை செய்துவிட்டு, தம்மையே பேரரசராக அறிவித்துக் கொண்டார்.
- சாளுவ நரசிம்மர் மரணத்துடன் சாளுவ வம்சம் முடிவுக்கு வந்தது.
- சாளுவ வம்சத்தின் முடிவுக்கு பிறகு திறமை மிகுந்த படைத்தளபதியான நரசநாயக்கர் அரியணையைக் கைப்பற்றித் துளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.

**கிருஷ்ணதேவராயர்**

- துளுவ வம்ச அரசர்களுள் மிகவும் போற்றதலுக்கு உரியவர் கிருஷ்ணதேவராயர் ஆவார்.
- கிருஷ்ணதேவராயர் 20 ஆண்டுகள் துளுவ ஆட்சியை ஆட்சிபுரிந்தார்.
- துங்கபத்ரா நதிப்பள்ளத்தாக்குப் பகுதியில் செயல்பட்டு வந்த தலைவர்களை அடக்குவதே முதல் பணியாகக் கொண்டார்.
- கிருஷ்ணதேவராயரின் இரண்டாம் இலக்கு குல்பர்காவை கைப்பற்றுவது.
- பாமினி சுல்தான் முகமது ஷா, அவருடைய அமைச்சரால் பதவி பறிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தார். கிருஷ்ணதேவராயர் அவரை விடுவித்து மீண்டும் அரியணையில் அமர வைத்தார்.
- கிருஷ்ண தேவராயர் ஒடிசாவை சேர்ந்த கஜபதி வம்ச அரசர் பிரதாப ருத்திரனோடு போர் புரிந்தார்.
- கிருஷ்ண தேவராயர் போர்ச்சுகீசிய பீரங்கிப்படை உதவியுடன் கோல்கொண்டா சுல்தானை தோற்கடித்தார். பின் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து ரெய்ச்சூரைக் கைப்பற்றினார்.

**சிறந்த கட்டட வல்லுநர்**

- கிருஷ்ண தேவராயர் மழைநீரை சேமிப்பதற்காகப் பெரிய நீர்ப்பாசன குளங்களையும், நீர்த்தேக்கங்களையும் உருவாக்கினார்.
- **கிருஷ்ண தேவராயர்** தலைநகரான **ஹம்பியில் கிருஷ்ணசாமி கோவில், ஹசாரா ராமசாமி கோவில், விட்டலாசுவாமி கோவில்** போன்ற புகழ்பெற்ற கோவில்களைக் கட்டினார்.
- கிருஷ்ண தேவராயர் போர்களின் மூலம் தாம் பெற்ற செல்வங்களை மிகப்பெரும் தென்னிந்தியக் கோவில்களுக்கு வழங்கி, அதன் மூலம் கோவில்களின் நுழைவாயில்களில்

www.kalvinews.com

கோபுரங்களை நிறுவினார். அவரது பெயருக்குப் புகழை சேர்க்கும் வண்ணம் அவை **ராயகோபுரம்** என அழைக்கப்பட்டன.

- கிருஷ்ண தேவராயர் அரேபியாவிலிருந்தும் ஈரானிலிருந்தும் குதிரைகளை இறக்குமதி செய்தார்.
- போர்ச்சுகீசிய, அராபிய வணிகர்களுடன் கிருஷ்ண தேவராயர் சிறந்த நட்புறவை கொண்டிருந்தார். அதனால் சுங்கவரிகள் மூலம் நாட்டின் வருமானம் அதிகரித்தது.

**இலக்கியம், கலை, கட்டடக்கலையின் புரவலர்:**

- கிருஷ்ண தேவராயர் கலை, இலக்கியத்தை ஆதரித்தார்.
- அவருடைய அவையின் எட்டு இலக்கிய மேதைகள் அஷ்டதிக்கஜங்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- எட்டு இலக்கிய மேதைகளில் மகத்தானவர் அல்லசானி பெத்தண்ணா மற்றும் சிறந்த ஆளுமையாளர் தெனாலிராமகிருஷ்ணன் (தெனாலிராமன்) ஆவார்.

**தலைக்கோட்டைப் போரும் விஜயநகர் பேரரசின் வீழ்ச்சியும்:**

- கிருஷ்ண தேவராயரைத் தொடர்ந்து அவருடைய இளைய சகோதரர் அச்சுதராயர் ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- அச்சுதராயருக்கு பின் சதாசிவராயர் ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- பகர ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்த ராமராயர், விஜயநகரப் பேரரசின் திறமைமிக்கத் தளபதியாவார்.
- சதாசிவராயர் அரசு பதவி ஏற்கும் வயது வந்த பின்னரும் கூட அவரைப் பெயரளவிற்கு அரசராக வைத்துக் கொண்டு ராமராயரே உண்மையான அரசராக ஆட்சி புரிந்தார்.
- தக்காண சுல்தான்களின் கூட்டுப்படைகள் 1565 இல் தலைக்கோட்டை என்னுமிடத்தில் விஜயநகரப் படைகளை எதிர் கொண்டன.
- **ராக்சச தங்கடி (தலைக்கோட்டைப் போர்**) என்றறியப்பட்ட போரில் விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டது.
- **கிழக்கு கர்நாடகத்தில், விஜயநகரம்** இருந்த இடம் தற்போது '**ஹம்பி**' என அழைக்கப்படுகிறது.
- **யுனெஸ்கோ ஹம்பியை பாரம்பரியச் சின்னமாக அறிவித்துள்ளது.**

**ஆரவீடு வம்சம்**

- ராமராயர் போர்க்களத்தில் கொல்லப்பட்டார். ராமராயரின் சகோதரர் திருமலை தேவராயர் விலைமதிக்க முடியா செல்வங்களோடு சந்திரகிரியைச் சென்றடைந்து ஆரவீடு வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கினார்.
- ஆரவீடு வம்சத்தார், பெனுகொண்டாவில் புதிய தலைநகரை உருவாக்கினார்கள்.
- பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களின் சூழ்ச்சிகளால் விஜயநகர அரசு 1646 இல் இறுதியாக வீழ்ச்சியுற்றது.

**விஜயநகர நிர்வாகம்:**

- அரச உரிமையைச் சாளுவ நரசிம்மர் முறைகேடாகக் கைப்பற்றியதால் சங்கம வம்சம் முடிவுற்று சாளுவ வம்ச ஆட்சி தொடங்கியது.
- அரச பதவியேற்றவர் வயதில் சிறியவராக இருந்தால், நிர்வாகப்பணிகளைக் கவனிப்பதற்காகப் பகர ஆளுநரை நியமனம் செய்யும் முறையும் நடைமுறையில் இருந்தது.

www.kalvinews.com

**அரசமைப்பு:**

- பேரரசு மண்டலங்கள் (மாநிலம்), நாடுகள் (மாவட்டங்கள்), ஸ்தலங்கள் (வட்டங்கள்) கிராமங்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தது.
- ஒவ்வொரு மண்டலமும் மண்டலேஸ்வரா என்ற ஆளுநரின் கீழிருந்தது.
- கிராமமே நிர்வாகத்தின் மிகச் சிறிய அலகாக இருந்தது.
- ஒவ்வொரு கிராமத்திலும் கிராமசபை என்ற அமைப்பிருந்தது.
- கிராமம் தொடர்பான விடயங்களைக் கௌடா என்றழைக்கப்பட்ட கிராமத்தலைவர் நிர்வகித்தார்.
- பேரரசின் இராணுவம் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகிய பிரிவுகளைக் கொண்டிருந்தது.
- இராணுவம் நவீனமயமாக்கப்பட்டதால் விஜயநகரப் படைகள் வெடிமருந்து ஆயுதங்களைப் பயன்படுத்தின.

**பொருளாதார நிலை:**

- மிகவும் செல்வச்செழிப்பு மிக்க அரசுகளில் ஒன்றாக விஜயநகரப் பேரரசு திகழ்ந்தது.
- 15ஆம், 16ஆம் நூற்றாண்டுகளில் பேரரசிற்கு வருகை புரிந்த பல அயல்நாட்டுப்பயணிகள், தங்கள் பயணக்குறிப்புகளில் பேரரசின் செல்வம், மேன்மை குறித்துப் புகழாரம் சூட்டியுள்ளனர்.
- விஜயநகரப் பேரரசர்கள் வராகன் என்னும் பெயரில் அதிக எண்ணிக்கையிலான தங்க நாணயங்களை வெளியிட்டனர்.

**0**

**வேளாண்மை**

- நாட்டினை முன்னேற்றம் அடையச் செய்யும் பொருட்டு நிலச்சுவான்தாரர்கள் கோவில்களிலும், நீர்ப்பாசனத்திலும் முதலீடு செய்தனர்.
- போர்ச்சுகீசியக் கட்டுமானக் கலைஞர்களின் உதவியுடன் மிகப்பெரும் ஏரி உருவாக்கப்பட்டதாகப் **பாரசீகப் பயணியான அப்துர் ரஸாக்** குறிப்பிட்டுள்ளார்.

**குடிசைத் தொழில்கள்**

- விஜயநகரின் வேளாண் உற்பத்திக்கு அதனுடைய பலவகையான குடிசைத் தொழில்கள் உதவிபுரிந்தன. அவற்றுள் முக்கியமானவை நெசவுத் தொழில், சுரங்கத் தொழில், உலோகத்தொழில் ஆகியவையாகும்.
- **கில்டுகள் என்றழைக்கப்படும் தொழில்சார் அமைப்புகள்** கைவினை மற்றும் குடிசைத்தொழில்களை முறைப்படுத்தின.
- கைவினைஞர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் தனித்தனியே கில்டுகள் இருந்ததாக அப்துர் ரஸாக் குறிப்பிட்டுள்ளார்.

**வாணிகம்:**

- உள்நாட்டுக் கடற்கரையோர, கடல் கடந்த வாணிகம் செழித்தோங்கியிருந்தது.
- சீனாவிலிருந்து வந்த பட்டு, மலபார் பகுதியைச் சார்ந்த வாசனைப் பொருட்கள், பர்மாவிலிருந்து பெறப்பட்ட ஆபரணங்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு விளங்கியது.
- விஜயநகரமானது பாரசீகம், தென்னாப்பிரிக்கா, போர்ச்சுகல், அரேபியா, சீனா, தென்கிழக்காசிய நாடுகள், இலங்கை ஆகிய நாடுகளுடன் வாணிகம் மேற்கொண்டது.

www.kalvinews.com

**இலக்கியப் பங்களிப்பு:**

- விஜயநகர அரசர்களின் ஆதரவினால் சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் சமயம் மற்றும், சமயம்சாரா நூல்கள் எழுதப்பட்டன.
- கிருஷ்ண தேவராயர் அமுக்தமால்யதா என்னும் காவியத்தைத் தெலுங்கு மொழியில் இயற்றினார்.
- **கிருஷ்ண தேவராயர்** சமஸ்கிருத மொழியில் **ஜாம்பவதி கல்யாணம்** என்னும் **நாடக நூலையும்** எழுதினார்.
- **பாண்டுரங்கமகாத்தியம்** என்னும் நூலைத் **தெனாலி ராமகிருஷ்ணா** எழுதினார்.
- **ஸ்ரீநாதர், பெத்தண்ணா, ஜக்கம்மா, துக்கண்ணா** போன்ற புலவர்கள் சமஸ்கிருத, பிராகிருத மொழிகளில் எழுதப்பட்ட நூல்களைத் தெலுங்கு மொழியில் மொழியாக்கம் செய்தனர்.
- **அமுக்தமால்யதா** தெலுங்கு இலக்கியத்தின் தலைசிறந்த படைப்பாக கருதப்படுகிறது. இது பெரியாழ்வாரின் மகளான கோதை தேவியைப் பற்றியதாகும்.
- '**அமுக்தமால்யதா**' என்பதற்கு தான் அணிந்த பின்னர் கொடுப்பவர் எனப் பொருள்.

**கட்டிடக் கலைக்கு செய்த பங்களிப்பு**

- விஜயநகர அரசர்களின் கோவில்கள் புதிய கட்டுமானப் பாணியை உருவாக்கின. அது விஜயநகரப் பாணி என அழைக்கப்பட்டது.
- பெரிய தூண்களும் அவற்றில் இடம் பெற்றுள்ள சிற்ப, செதுக்கல் வேலைப்பாடுகளும் விஜயநகரப் பாணியின் தனித்த அடையாளமாகத் திகழ்ந்தன
- இத்தூண்களில் செதுக்கப்பட்டுள்ள விலங்குகளில் குதிரைகள் அதிகம் உள்ளது.

**பாமினி அரசு நிறுவப்படுதலும், ஒருங்கிணைக்கப்படுதலும்:**

- 1347 இல் அலாவுதீன் ஹசன் (ஹசன் கங்கு எனவும் அறியப்பட்டார்) தௌலதாபாத் நகரைக் கைப்பற்றி, பாமன்ஷா என்ற பெயரில் தம்மையே சுல்தானாக அறிவித்துக் கொண்டார்.
- இரண்டு ஆண்டுகளில் அலாவுதீன் ஹசன், பாமன் ஷா தமது தலைநகரைக் குல்பர்காவிற்கு மாற்றினார்.
- 1429 ல் தலைநகர் குல்பர்காவிலிருந்து பீடாருக்கு மாற்றப்பட்டது.
- பாமினி வம்சத்தில் பதினெட்டு அரசர்கள் இடம் பெற்றுள்ளனர்.

**அலாவுதீன் ஹசன் பாமன்ஷா (1347-1358):**

- அலாவுதீன் ஹசன் பதினோராண்டுகள் ஆட்சி புரிந்தார்.
- வாரங்கல், ராஜமுந்திரி, கொண்டவீடு ஆகிய அரசுகளிடமிருந்து ஆண்டு தோறும் கப்பம் வசூலிக்க முயற்சி செய்ததால் அடிக்கடி போர்கள் ஏற்பட்டது.
- அலாவுதீன் ஹசன் தமது அரசை நான்கு மாகாணங்களாகப் பிரித்தார். அவை **தராப்** என அழைக்கப்பட்டன.
- ஒவ்வொரு மாநில ஆளுநரும் படைகளுக்குத் தலைமை ஏற்றனர்.
- நிர்வாகம் செய்வதும், வரி வசூல் செய்வதும் அவருடைய பொறுப்பாகும்.

**முதலாம் முகமது ஷா (1358-1375)**

- பாமன்ஷாவைத் தொடர்ந்து முதலாம் முகமது ஷா அரச பதவி ஏற்றார்.
- 1368 ல் வாரங்கல் அரசோடு போரிட்டு கோல்கொண்டா கோட்டை, பச்சை கலந்த நீல வண்ண கற்களால் செய்யப்பட்ட சிம்மாசனம் ஆகியவற்றை இழப்பீடாக பெற்றார்.
- இந்த சிம்மாசனமே பாமினி சுல்தான்களின் அரியணை ஆனது.

- பாரசீக அரசர்களின் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனங்களில் இத்தகைய வண்ணக்கல்லால் ஆன அரியணையும் ஒன்றாகுமென பிர்தௌசி தன்னுடைய ஷா நாமா எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.
- கோல்கொண்டா கோட்டை ஹைதராபாத்திலிருந்து 11 கி.மீ. தொலைவில், ஒரு குன்றின் மீது 120 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. ஒலி தொடர்பான கட்டடக்கலை அம்சங்களுக்கு இக்கோட்டைப் பெயர்பெற்றது.
- **இக்கோட்டையின் மிக உயரமான இடம் பாலஹிசார்** ஆகும். தர்பார் மண்டபத்திலிருந்து குன்றின் கீழே அமைந்துள்ள அரண்மனைக்கு சுரங்கப்பாதை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.
- **முதலாம் முகம்மதுஷா, பாமினி அரசிற்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார்.**
- அவருடைய அரசமைப்பு முறை பாமினி அரசு ஐந்து சுல்தானியங்களாகச் சிதறுண்ட பின்னரும் தொடர்ந்தது.
- **முதலாம் முகமது ஷா, குல்பர்காவில் இரண்டு மசூதிகளைக் கட்டினார்**.
- **மகா மசூதி 1367 இல் கட்டி முடிக்கப்பெற்ற முதல் மசூதி. மகாமசூதி 216அடி×16 அடி என்ற அளவில் கட்டப்பட்டது**.
- குல்பர்கா மசூதி, மேல்விதானத்தோடு கூடிய முற்றத்தைக் கொண்டுள்ளது.

**முதலாம் முகமதுவுக்குப் பின்வந்த அரசர்கள்:**

- முகமதுவைத் தொடர்ந்து அவருடைய மகன் முஜாகித் பதவியேற்றார்.
- விஜயநகருக்கு எதிரான போரை முடித்து குல்பர்கா திரும்பியபோது கொலை செய்யப்பட்டார்.
- தாவூத் என்பாரின் சகோதரனின் மகன் இரண்டாம் முகமது என்ற பெயரில் 1378 இல் அரியணை ஏற்றப்பட்டார்.
- இரண்டாம் முகமது தனது நேரத்தின் பெரும்பகுதியைத் தமது அரசவையைப் பண்பாட்டு, கல்விமையமாக மாற்றுவதில் செலவிட்டார்.
- எண்பத்தைந்து ஆண்டுகள் (1377-1463) இடைவெளிக்குப் பின்னர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அரசராக மூன்றாம் முகமது (1463-1482) திகழ்ந்தார்.
- மூன்றாம் முகமது பத்தொன்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

**பாமினி அரசின் எட்டு அமைச்சர்கள்**

- **வக்கீல்-உஸ்-சல்தானா அல்லது அரசின் பிரதம அல்லது முதலமைச்சர் அரசருக்கு அடுத்த நிலையில் துணையதிகாரியாக செயல்பட்டார்**.
- **பேஷ்வா நாட்டின் பிரதம மந்திரியோடு இணைந்து செயல்பட்டவர்.**
- **வஸிரி-குல் ஏனைய அமைச்சர்களின் பணிகளை மேற்பார்வையிட்டவர்.**
- **அமிர்-இ-ஜூம்லா நிதியமைச்சர்.**
- **நஷீர் - உதவி நிதியமைச்சர்.**
- **வஷிர்- இ-அசாரப்- வெளியுறவுத்துறை அமைச்சர்.**
- **கொத்தவால் - காவல் துறைத் தலைவர் மற்றும் நகர குற்றவியல் நடுவர்.**
- **சதார்-இ-ஜகான் - தலைமை நீதிபதி, சமயம் மற்றும் அறக்கொடைகளின் அமைச்சர்.**

**மகமது கவான்:**

- பிறப்பால் பாரசீகரான மகமது கவான் இஸ்லாமிய கோட்பாடுகளிலும் பாரசீக மொழியிலும், கணிதத்திலும் பெரும்புலமை பெற்றவராயிருந்தார்.

www.kalvinews.com

- மகமது கவான் கவிஞரும் உரைநடை எழுத்தாளருமாவார்.
- பிரதம அமைச்சராகப் பணியாற்றிய மகமது கவான் பாமினியரசின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செய்தார்.
- கவான் தமது இராணுவ நடவடிக்கைகளுக்கும் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்கும் பெயர் பெற்றவராவர்.
- பாரசீக வேதியியல் வல்லுநர்களை அழைத்து வந்து வெடிமருந்து தயாரிப்பதிலும் அவற்றைப் பயன்படுத்துவதிலும் படையினருக்குப் பயிற்சியளித்தார்.
- பெல்காமில் நடைபெற்ற விஜயநகருக்கு எதிரான போரில் அவர் வெடிமருந்தைப் பயன்படுத்தினார்.
- கவான், பாமினி அரசில் ஏற்கனவே இருந்த நான்கு மாகாணங்களை எட்டாக மாற்றினார்.
- ஒவ்வொரு ஆளுநரும் ஒரு கோட்டையை மட்டும் தங்கள் வசம் வைக்க அனுமதிக்கப்பட்டனர்.
- ஊதியத்திற்கு பதில் நிலங்களை வைத்திருந்த உயர் அரசு அதிகாரிகள் தங்கள் செலவுகள் குறித்து சுல்தான்களுக்கு தெரிவிக்க வேண்டி பணிக்கப்பட்டனர்
- கவானால் அறிமுகம் செய்யப்பட்ட நிர்வாக சீர்திருத்தம் அரசின் திறனை மேம்படுத்தியது.
- தக்காண பிரபுக்கள் கவானின் வெற்றிகளால் பொறாமை கொண்டனர்.

**பாமினி அரசின் சரிவு:**

- கவான் தூக்கிலிடப்பட்டதால் பல வெளிநாட்டுப் பிரபுக்கள் தக்காணத்தை விட்டு வெளியேறினர்.
- சுல்தான் மூன்றாம் முகமதுவின் இறப்பிற்குப் பின்னர் முடிசூடிய முகமது அல்லது சிகாபுதீன் முகமது 1518 ஆம் ஆண்டு தாம் இறக்கும்வரை சுல்தானாக ஆட்சி புரிந்தார்.
- சுல்தானியம் படிப்படியாக ஐந்து சுதந்திரமான தக்காண சுல்தானியங்களாகச் சிதைந்தது. அவை **பீடார், பீஜப்பூர், அகமதுநகர், பீரார், கோல்கொண்டா** ஆகியனவாகும்.

**பாமினி சுல்தான்களின் பங்களிப்பு**

**கட்டடக்கலை:**

- கட்டடக்கலைக்குப் பாமினி சுல்தான்கள் ஆற்றிய பங்களிப்பைக் குல்பர்காவில் காணலாம்.
- இங்கு நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளில் அரண்மனைகள், மண்டபங்கள், குடியிருப்புகள், வளைவுகள், குவி மாடங்கள், சுவர்கள், அரண்கள் ஆகியவை காணப்பட்டன.

**கல்வி:**

- பாமினி அரசை நிறுவிய அலாவுதீன் ஹசன் ஷா, அலாவுதீன் கில்ஜியின் படைத் தளபதிகளில் ஒருவரான ஜாபர்கான் என்பவரின் முயற்சியால் முல்தானில் கல்வி கற்றார்.
- பாமினி அரசின் எட்டாவது சுல்தானான சுல்தான் பிரோஸ், மொழியியல் அறிஞரும் கவிஞரும் ஆவார்.
- இவருக்கு பின் வந்த அரசர்கள், குல்பர்கா, பீடார், தௌலதாபாத், காண்டகார் ஆகிய இடங்களில் கல்விக் கூடங்களை நிறுவினர்.
- பீடாரில் அமைந்துள்ள உலக புகழ்பெற்ற மகமது கவானின் மதரசா (கல்வி நிலையம்) 3000 கையெழுத்து பிரதிகளைக் கொண்ட பெரிய நூலகத்தைக் கொண்டிருந்தது.

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்**:

1. பாமினி அரசு _______ மாநிலம் முழுவதும் பரவி இருந்தது.
   1. கர்நாடகா 2. மஹாராஷ்டிரா 3. கேரளா 4. தமிழ்நாடு

2. பாமினி அரசு _______ ஆண்டுகள் பதினெட்டு முடியரசர்களால் ஆளப்பட்டது.
   1. 25 2. 18 3. 100 4. 180

3. விஜயநகர அரசு வலுவான அரசாக _______ ஆண்டுகள் ஆட்சி செய்தது.
   1. 200 2. 150 3. 100 4. 250

4. _______ ல் நிகழ்ந்த தலைக்கோட்டைப் போர் விஜயநகர அரசை வீழ்த்தியது
   1. 1945 2. 1564 3. 1654 4. 1565

5. வெற்றியின் நகரம் என்றழைக்கப்படுவது _______.
   1. அகமது நகர் 2. குல்பர்கா 3. பாமினி 4. விஜயநகரம்

6. வித்யாநகர் என அழைக்கப்பட்ட நகரம் _______.
   1. அகமது நகர் 2. குல்பர்கா 3. பாமினி 4. விஜயநகரம்

7. சிருங்கேரி சைவ மடத்தின் தலைவர் _______.
   1. வித்யாரண்யர் 2. புக்கர்
   3. ஹரிஹரர் 4. கிருஷ்ணதேவராயர்

8. விஜயநகரம் _______ சகோதரர்களால் கர்நாடகத்தின் தென் பகுதியில் நிறுவப்பட்டது.
   1. ஹரிஹரர் - புக்கர் 2. வித்யாரண்யர் - ஹரிஹரர்
   3. கிருஷ்ணதேவராயர் - புக்கர் 4. கிருஷ்ணதேவராயர் - வித்யாரண்யர்

9. பொருத்துக

| | | |
|---|---|---|
| i. சங்கம மரபு | - | a. 1570 - 1646 |
| ii. சாளுவ மரபு | - | b. 1505 - 1570 |
| iii. துளுவ மரபு | - | c. 1336 - 1485 |
| iv. ஆரவீடு மரபு | - | d. 1485 - 1505 |

   1. i - a ii- b iii- d iv - c
   2. i - c ii- d iii- b iv - a
   3. i - c ii- b iii- d iv - a
   4. i - d ii- a iii- b iv - c

10. சங்கம வம்சத்தின் மிகச்சிறந்த ஆட்சியாளர் _______.
   1. புக்கர் 2. தேவராயர்-II 3. ஹரிஹரர் - II 4. கிருஷ்ணதேவராயர்

11. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகரப் பேரரசு _______ சுல்தானியங்களாகப் பிரிந்தது.
   1.இரண்டு 2. மூன்று 3. நான்கு 4.ஐந்து

12. விஜயநகர அரசு உருவாகிய _______ ஆண்டுகளுக்குப் பின்னரே பாமினி அரசு நிறுவப்பட்டது.
   1. 10 2. 15 3. 8 4. 13

www.kalvinews.com

13. குமார கம்பணாவின் மனைவி கங்காதேவியால் எழுதப்பட்ட நூல் _______.
   1. குமாரகாண்டம்
   2. மதுரா விஜயம்
   3. அமுக்தமால்யதா
   4. ஜாம்பவதி கல்யாணம்

14. மதுரா விஜயம் எனும் நூல் _______ கைப்பற்றப்பட்டதை விளக்குகிறது.
   1. விஜயநகரம்
   2. பாமினி
   3. மதுரை
   4. ஹம்பி

15. இரண்டாம் ஹரிஹரர் பாமினி அரசிடமிருந்து _______ ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார்.
   1. பீஜப்பூர், கோவா
   2. பெல்காம், கோவா
   3. பெல்காம், பீஜப்பூர்
   4. பீஜப்பூர், ரெய்ச்சூர்

16. _______ வம்சத்தின் தலைசிறந்த அரசர் இரண்டாம் தேவராயர்.
   1. சாளுவ
   2. துளுவ
   3. ஆரவீடு
   4. சங்கம

17. சங்கம வம்சத்தின் கடைசி அரசர் யார்?
   1. ராமராயர்
   2. திருமலை தேவராயர்
   3. இரண்டாம் தேவராயர்
   4. இரண்டாம் விருபாக்சிராயர்

18. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக:

   கூற்று: இரண்டாம் தேவராயர் சங்கம வம்சத்தின் தலைசிறந்த அரசராவார்.

   காரணம் : இரண்டாம் தேவராயர் தம்முடைய படைகளுக்கு நவீனப் போர் முறை பயிற்சி அளிக்க இஸ்லாமிய வீரர்களை பணியமர்த்தினார்.
   1. கூற்று சரி, காரணம் தவறு
   2. கூற்று தவறு, காரணம் தவறு
   3. கூற்று மற்றும் காரணம் தவறு
   4. கூற்று மற்றும் காரணம் சரி

19. முதலாம் தேவராயர் _______ சேர்ந்த கஜபதி வம்ச அரசர்களை தோற்கடித்தார்.
   1. கர்நாடகா
   2. மஹாராஷ்டிரா
   3. ஒடிசா
   4. குஜராத்

20. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.
   1. முதலாம் தேவராயருக்குப் பின்னர், விஜயநகர பேரரசு ஆபத்தான சூழலுக்கு உள்ளானது.
   2. சாளுவ நரசிம்மர் சங்கம வம்சத்தின் முதல் அரசரான இரண்டாம் விருபாக்சிராயரைக் கொலை செய்துவிட்டு, தம்மையே பேரரசராக அறிவித்துக் கொண்டார்.
   3. நரசநாயக்கர் சங்கம வம்சத்தின் முதல் அரசரான இரண்டாம் விருபாக்சிராயரைக் கொலை செய்துவிட்டு, தம்மையே பேரரசராக அறிவித்துக் கொண்டார்.
   4. நரசநாயக்கர் மரணத்துடன் துளுவ வம்சம் முடிவுக்கு வந்தது

21. இரண்டாம் விருப்பாக்சிராயர் _______ வம்சத்தின் கடைசி அரசர் ஆவார்.
   1. சாளுவ
   2. துளுவ
   3. ஆரவீடு
   4. சங்கம

22. சாளுவ வம்சத்தின் முடிவுக்கு பிறகு நரசநாயக்கர் _______ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.
   1. சாளுவ
   2. துளுவ
   3. ஆரவீடு
   4. சங்கம

23. கிருஷ்ண தேவராயர் _______ ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.
   1. 20
   2. 15
   3. 14
   4. 25

www.kalvinews.com

24. திறமை மிகுந்த படைத் தளபதியான _______ அரியணையைக் கைப்பற்றித் துளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.

1. நரசநாயக்கர்
2. கிருஷ்ணதேவராயர்
3. புக்கர்
4 .ஹரிஹரர்

25. துளுவ வம்ச அரசர்களுள் மிகவும் போற்றதலுக்கு உரியவர் _______

1. கிருஷ்ணதேவராயர்
2. முதலாம் தேவராயர்
3. இரண்டாம் தேவராயர்
4. திருமலை தேவராயர்

26. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.

I. பச்சைக்கலந்த நீலவண்ணத்தைக் கொண்ட விலையுயர்ந்த கற்களால் ஆன அரியணை பாரசீக அரசர்களின் அரசவையை அலங்கரித்தன என பிர்தௌசி தன்னுடய ஷா நாமா எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

II. விஜயநகர, பாமினி அரசர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதற்கு கிருஷ்ணா-துங்கபத்ரா நதிகளுக்கு இடைப்பட்ட செழிப்பான பகுதி மற்றும் கிருஷ்ணா- கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட கழிமுகப் பகுதியே காரணமாக அமைந்தன.

III. முதலாம் முகமது முல்தானில் கல்வி பயின்றார்.

IV. முகமது கவான் மூன்றாம் முகமதுவின் கீழ் தனித்தன்மை மிக்க பிரதம அமைச்சராக பணியாற்றினார்.

1. I மற்றும் II சரி
2. I, II மற்றும் III சரி
3. I, II மற்றும் IV சரி
4. III மற்றும் IV சரி

27. கிருஷ்ண தேவராயர் ஒடிசாவை சேர்ந்த _______ வம்ச அரசர் பிரதாப ருத்திரனோடு போர் புரிந்தார்.

1. சாளுவ
2. துளுவ
3. ஆரவீடு
4. கஜபதி

28. கிருஷ்ண தேவராயர் _______ பீரங்கிப்படை உதவியுடன் கோல்கொண்டா சுல்தானை தோற்கடித்தார் பின் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து ரெய்ச்சூரைக் கைப்பற்றினர்

1. ஆங்கிலேயர்
2. முகலாயர்
3. போர்ச்சுகீசியர்
4. ஐரோப்பியர்

29. _______ ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் துங்கபத்ரா நதிப்பள்ளத்தாக்குப் பகுதியில் சுதந்திரமாகச் செயல்பட்டு வந்த தலைவர்களை அடக்குவதே அவரின் முதற்கட்ட தலையாயப் பணியாக இருந்தது.

1. ஹரிஹரர்
2. கிருஷ்ண தேவராயர்
3. புக்கர்
4. நரசநாயக்கர்

30. பொருந்தாதைக் கண்டுபிடி.

1. இரண்டாம் தேவராயர்
2. கிருஷ்ண தேவராயர்
3. கிருஷ்ணசாமி கோவில்
4. ராமசாமி கோவில்

31. பாமினி சுல்தான் முகமதுஷாவை, மீண்டும் அரியணையில் அமர வைத்தவர் _______.

1. ஹரிஹரர்
2. கிருஷ்ண தேவராயர்
3. புக்கர்
4. நரசநாயக்கர்

www.kalvinews.com

32. _______ போரில் விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டது.

1. பக்சார் போர்
2. தலைக்கோட்டை போர்
3. பாமினி போர்
4. முதல் விஜயநகர போர்

33. சரியான கூற்றை தேர்வு செய்:

1. மழை நீரை சேமிப்பதற்காக நீர்ப்பாசனக் குளங்களையும், நீர்த்தேக்கங்களையும் உருவாக்கியவர் இரண்டாம் தேவராயர்.
2. ராயகோபுரம் என்பது கோட்டைகளின் நுழைவாயில்களில் கோபுரங்களை கட்டுவது ஆகும்.
3. கிருஷ்ண தேவராயர் மேற்கு கடற்கரையிலுள்ள கப்பல்கள் மூலம் அரேபியாவிலிருந்தும், ஈரானிலிருந்தும் குதிரைகளை விஜய நகர துறைமுகத்திற்கு கொண்டுவந்தார்.
4. கிருஷ்ணதேவராயர் தலைநகரான ஒடிசாவில் கிருஷ்ணசாமி கோவில், ஹசாரா ராமசாமி கோவில், விட்டலாசுவாமி கோவில் போன்ற புகழ்பெற்ற கோவில்களைக் கட்டினார்.

34. எட்டு இலக்கிய மேதைகள் _______ என்று அழைக்கப்பட்டனர்.

1. அஷ்டதிக்கஜங்கள் 2. கவிஞர்கள் 3. இலக்கிய மேதைகள் 4. போதகர்கள்

35. எட்டு இலக்கிய மேதைகளில் சிறந்த ஆளுமையாளர் _______.

1. தெனாலிராமன் 2 .ஸ்ரீநாதர் 3. பெத்தண்ணா 4. துக்கண்ணா

36. கிருஷ்ண தேவராயரைத் தொடர்ந்து அவருடைய இளைய சகோதரர் _______ ஆட்சிப் பொறுப்பேற்றார்.

1. ராமராயர்
2. திருமலை தேவராயர்
3. அச்சுதராயர்
4. சதாசிவராயர்

37. திருமலை தேவராயர் விலைமதிக்கமுடியா செல்வங்களோடு சந்திரகிரியில் _______ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கினார்.

1.துளுவ 2. சாளுவ 3. ஆரவீடு 4.சங்கம

38. பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களின் சூழ்ச்சிகளால் விஜயநகர அரசு _______ இல் இறுதியாக வீழ்ச்சியுற்றது.

1. 1625 2. 1660 3.1634 4.1646

39. அரச உரிமையைச் சாளுவ நரசிம்மர் முறைகேடாகக் கைப்பற்றியதால், சங்கம வம்சம் முடிவுற்று _______ வம்ச ஆட்சி தொடங்கியது

1. துளுவ 2. சாளுவ 3. ஆரவீடு 4. சங்கம

40. விஜயநகர அரசமைப்புப் பிரிக்கப்பட்டிருந்த முறை

1. கிராமங்கள், ஸ்தலங்கள் (வட்டங்கள்), நாடுகள் (மாவட்டங்கள்), பேரரசு மண்டலங்கள் (மாநிலம்).
2. நாடுகள் (மாவட்டங்கள்), பேரரசு மண்டலங்கள் (மாநிலம்), ஸ்தலங்கள் (வட்டங்கள்), கிராமங்கள்.
3. பேரரசு மண்டலங்கள் (மாநிலம்), நாடுகள் (மாவட்டங்கள்), ஸ்தலங்கள் (வட்டங்கள்), ஊர்கள்.
4. பேரரசு மண்டலங்கள் (மாநிலம்), நாடுகள் (மாவட்டங்கள்), ஸ்தலங்கள் (வட்டங்கள்), கிராமங்கள்

www.kalvinews.com

41. விஜயநகரப் பேரரசர்கள் வராகன் என்னும் பெயரில் _______ நாணயங்களை வெளியிட்டனர்.

1. தங்கம் 2. வெள்ளி 3. வைரம் 4. செப்பு

42. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.

1. ஒவ்வொரு மண்டலமும் கௌடா என்ற ஆளுநரின் கீழிருந்தது.
2. கிராமமே நிர்வாகத்தின் மிகச் சிறிய அலகாக இருந்தது.
3. ஒவ்வொரு கிராமத்திலும் கிராமசபை என்ற அமைப்பிருந்தது.
4. பேரரசின் இராணுவம் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகிய பிரிவுகளைக் கொண்டிருந்தது.

1. I மற்றும் II சரி 2. I, II மற்றும் III சரி
3. II, III மற்றும் IV சரி 4. III மற்றும் IV சரி

43. கைவினைஞர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் தனித்தனியே கில்டுகள் என்றழைக்கப்படும் தொழில்சார் அமைப்புகள் இருந்ததாக பாரசீகப் பயணியான _______ குறிப்பிட்டுள்ளார்.

1. அப்துர்ஷா 2. அப்துர் ரஸாக்
3. அலாவுதீன் ஹசன் 4. முகம்மது ரஸாக்

44. தவறான இணையைக் கண்டறியவும்:

1. பட்டு - சீனா
2. வாசனைப் பொருட்கள் - அரேபியா
3. விலைமதிப்பற்ற கற்கள் - பர்மா
4. மதுரா விஜயம் - கங்கா தேவி

45. கிருஷ்ண தேவராயர் அமுக்தமால்யதா என்னும் காவியத்தைத் _______ மொழியில் இயற்றினார்.

1. தமிழ் 2. தெலுங்கு 3. சமஸ்கிருதம் 4. பிராகிருதம்

46. கிருஷ்ண தேவராயர் _______ மொழியில் ஜாம்பவதி கல்யாணம் என்னும் நாடக நூலையும் எழுதினார்.

1. தமிழ் 2. தெலுங்கு 3. சமஸ்கிருதம் 4. பிராகிருதம்

47. அலாவுதீன் ஹசன் _______ ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்

1. 11 2. 15 3. 16 4. 18

48. _______ என்னும் நூலைத் தெனாலி ராமகிருஷ்ணா எழுதினார்.

1. அமுக்தமால்யதா 2. பாண்டுரங்க மகாமத்தியம்
3. ஜாம்பவதி கல்யாணம் 4. மதுரா விஜயம்

49. ஸ்ரீநாதர், பெத்தண்ணா, ஜக்கம்மா, துக்கண்ணா போன்ற புலவர்கள் சமஸ்கிருத, பிராகிருத மொழிகளில் எழுதப்பட்ட நூல்களைத் _______ மொழியில் மொழியாக்கம் செய்தனர்.

1. தமிழ் 2. தெலுங்கு 3. சமஸ்கிருதம் 4. பிராகிருதம்

50. விஜயநகர கட்டட தூண்களில் பெரும்பாலும் காணப்படும் விலங்கு எது?

1. யானை 2. குதிரை 3. பசு 4. மான்

www.kalvinews.com

51. அலாவுதீன் ஹசன் தமது அரசை நான்கு மாகாணங்களாகப் பிரித்தார். அவை _______ என அழைக்கப்பட்டன.

1. வட்டங்கள் 2. மண்டலங்கள் 3. தராப் 4. மாவட்டங்கள்

52. பாமினி வம்சத்தில் _______ அரசர்கள் இடம் பெற்றுள்ளனர்.

1. 13 2. 15 3. 18 4. 10

53. 1368 இல் வாரங்கல் அரசோடு போரிட்டு கோல்கொண்டா கோட்டை, பச்சை கலந்த நீல வண்ணக் கற்களால் செய்யப்பட்ட சிம்மாசனம் ஆகியவற்றை இழப்பீடாகப் பெற்றவர் _______.

1. அலாவுதீன் ஹசன் 2. தாவூத்
3. முதலாம் முகமது ஷா 4. முஜாகித்

54. பாமினி அரசிற்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தவர் _______.

1. அலாவுதீன் ஹசன் 2. இரண்டாம் முகமது
3. முதலாம் முகமது ஷா 4. முஜாகித்

55. ஒலி தொடர்பான கட்டடக்கலை அம்சங்களுக்கு பெயர்பெற்ற கோட்டை _______.

1. கோல்கொண்டா கோட்டை 2. கள்ளிக்கோட்டை
3. தலைக்கோட்டை 4. பெனுகொண்டா கோட்டை

56. அமீர்-இ-ஜூம்லா பாமினி அரசின் _______ ஆவார்.

1. நிதியமைச்சர் 2 .பொருளாதார அமைச்சர்
3. கல்வி அமைச்சர் 4. அரச ஆலோசகர்

57. பாமினி அரசின் தலைமை நீதிபதி _______ ஆவார்.

1. அமீர்-இ-ஜூம்லா 2. சதார்-இ-ஜஹான் 3. வஷிர்-இ-ஆசாரப் 4. நஷீர்

58. பாமினி அரசின் உதவி நிதி அமைச்சர் _______ ஆவார்.

1. அமீர்-இ-ஜூம்லா 2. சதார்-இ-ஜஹான் 3. வஷிர்-இ-ஆசாரப் 4. நஷீர்

59. பாமினி அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் _______.

1. அமீர்-இ-ஜூம்லா 2. சதார்-இ-ஜஹான் 3. வஷிர்-இ-அசாரப் 4.நஷீர்

60. பாமினியரசின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செய்த பிரதம அமைச்சர் _______.

1. முஜாகித் 2. தாவூத்
3. முகமது கவான் 4. மகமது கவான்

61. மதுரை சுல்தானிய அரசை முடிவுக்குக்கொண்டு வந்தவர் _______.

1. சாளுவநரசிம்மர் 2. இரண்டாம் தேவராயர்
3. குமார கம்பணா 4. திருமலை தேவராயர்

62. பாமினி அரசில் சிறந்த மொழியறிஞராகவும், கவிஞராகவும் விளங்கியவர் _______.

1. அலாவுதீன் ஹசன் விரா 2. முகம்மது
3. சுல்தான் பெரோஸ் 4. முஜாஹித்

www.kalvinews.com

\63. பொருந்தாததைக் கண்டுபிடி:

1. ஹரிஹரர் - II
2. மகமுது
3. கிருஷ்ணதேவராயர்
4. தேவராயர்

64. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக:

கூற்று: இந்தியாவில் விஜயநகர அரசின் இராணுவம் அச்சுறுத்தக் கூடியதாக இருந்தது.

காரணம்: விஜயநகர இராணுவம் பீரங்கிபடை மற்றும் குதிரைப்படையைக் கொண்டிருந்தது.

1. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
2. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
3. காரணம் மற்றும் கூற்று தவறு
4. காரணம் மற்றும் கூற்று சரி

65. பொருத்துக

i விஜயநகரம் - a. ஒடிசாவின் ஆட்சியாளர்

ii. பிரதாபருத்திரன் - b. அஷ்டதிக்கஜங்கள்

iii. கிருஷ்ணதேவராயர் - c. பாண்டுரங்கமகாமத்தியம்

iv. அப்துர் ரஸாக் - d. வெற்றியின் நகரம்

v. தெனாலிராமகிருஷ்ணா - e. பாரசீக சிற்பக் கலைஞர்

1. i - a ii- b iii- e iv - c v - d
2. i - b ii- e iii- c iv - d v - a
3. i - e ii- c iii- d iv - a v - b
4. i - d ii- a iii- b iv - e v - c

66. ஆரவீடு வம்சத்தின் தலைநகரம் _______.

1. குல்பர்கா
2. பெனுகொண்டா
3. பாமினி
4. விஜயநகரம்

67. விஜயநகர பேரரசர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களுக்கு _______ என்று பெயர்

1. வராகன்
2. ரூபாய்
3. தினார்
4. ரியால்

68. மகமது கவான் வெடி மருந்து தயாரிக்கவும் அதனை பயன்படுத்துவது பற்றி விளங்குவதற்காகவும் _______ வேதியியல் அறிஞர்களை வரச் செய்தார்.

1. ஆங்கிலேய
2. பாரசீக
3. போர்ச்சுகீசிய
4. ஐரோப்பா

69. ஹரிஹரர் - புக்கர் ________ வம்சத்தை சேர்ந்தவர்கள்.

1. சங்கம
2. சாளுவ
3. துளுவ
4. ஆரவீடு

70. கிருஷ்ண தேவராயரின் இரண்டாம் இலக்கு ______.

1. ரெய்ச்சூர்
2. தேவகிரி
3. குல்பர்க்கா
4. பீஜப்பூர்

71. குமார கம்பணாவின் மனைவி ______.

1. வஸிரி
2. ஜான்சிராணி
3. கங்காதேவி
4. மும்தாஜ்

72. விஜயநகரம் _________ நதியின் கரையில் இருந்தது.

1. கோதாவரி
2. யமுனை
3. கிருஷ்ணா
4. துங்கபத்ரா

www.kalvinews.com

73. விஜயநகரம் இருந்த இடம் தற்போது ________ என அழைக்கப்படுகிறது.
1. மும்பை 2. ஹம்பி 3. சென்னை 4. டெல்லி

74. _______ ஹம்பியை பாரம்பரிய சின்னமாக அறிவித்தது.
1. அமெரிக்கா 2. சீனா 3. ஜப்பான் 4. யுனெஸ்கோ

75. _______ என்றழைக்கப்படும் தொழில்சார் அமைப்புகள் கைவினை, குடிசைத்தொழில்களை முறைப்படுத்தின.
1. கில்டுகள் 2. கோல்கொண்டா 3. குல்பர்க்கா 4. சூரத்

76. பிர்தௌசி எழுதிய நூல் _______.
1. மதுரா விஜயம் 2. ஹம்பி 3. அமுக்தமால்யதா 4. ஷா நாமா

77. கொல்கொண்டா கோட்டையின் மிக உயரமான இடம் ________ ஆகும்.
1. எவரெஸ்ட் 2. பாலஹிசார் 3. இமயமலை 4. ஹம்பி

78. கிராமம் தொடர்பான விடயங்களைக் ________ என்றழைக்கப்பட்ட கிராமத்தலைவர் நிர்வகித்தார்.
1. கிராமணி 2. கௌடா 3. ஜமீன்தார் 4. சேர்மேன்

79. 'அமுக்தமால்யதா' என்பது _______ இலக்கியத்தின் தலைசிறந்த படைப்பாக கருதப்படுகிறது.
1. தமிழ் 2. கன்னடம் 3. மலையாளம் 4. தெலுங்கு

80. 'தான் அணிந்த பின்னர் கொடுப்பவர்' என்ற பொருள் கொண்ட வார்த்தை _______.
1. வள்ளல் 2. அரசர் 3. அமுக்தமால்யதா 4. விஜயம்

81. மூன்றாம் முகமது _______ ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.
1. 10 2. 18 3. 20 4. 19

82. 1367 ல் கட்டி முடிக்கப் பெற்ற முதல் மசூதி ________ ஆகும்.
1. ஜும்மா மசூதி 2. மகா மசூதி 3. குல்பர்கா மசூதி 4. பாபர் மசூதி

83. தலைக்கோட்டைப் போர் என்பது ______.
1. ஹம்பி 2. கோல்கொண்டா 3. ராக்சசதங்கடி 4. பாலஹிசார்

84. சாளுவ வம்சத்தை தோற்றுவித்தவர் ________.
1. ஹரிஹரர் 2. புக்கர் 3. அக்பர் 4. சாளுவ நரசிம்மர்

85. துளுவ வம்சத்தை தொடங்கியவர் _______.
1. அக்பர் 2. பாபர் 3. நரசநாயக்கர் 4. சாளுவ நரசிம்மர்

86. கிருஷ்ண தேவராயரின் அவையை அலங்கரித்தவர் ______ என அழைக்கப்பட்டனர்.
1. அஷ்டதிக்கஜங்கள் 2. ஹம்பி 3. கில்டுகள் 4. அமுக்தமால்யதா

87. ஆரவீடு வம்சத்தை தொடங்கியவர் _______.
1. ஹரிஹரர் 2. திருமலை தேவராயர்
3. நரசிம்மர் 4. அக்பர்

www.kalvinews.com

88. பாமினி அரசைத் தோற்றுவித்தவர் _______.

1. முகமது ஷா
2. அக்பர்
3. அலாவுதீன்ஹசன் பாமன்ஷா
4. நரசிம்மநாயக்கர்

89. பாமினி அரசு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு _______.

1. 1447
2. 1347
3. 1314
4. 1351

90. குமார கம்பண்ணாவின் தந்தை _______.

1. முதலாம் புக்கர்
2. முகமது
3. அக்பர்
4. பாபர்

91. அலாவுதீன் ஹசன் பாமன்ஷா கல்வி பயின்ற இடம் _______.

1. ஹம்பி
2. மூல்தான்
3. குல்பர்க்கா
4. பாலஹிசார்

92. முகமது கவானின் மதரசா ________ கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட பெரிய நூலகம் ஆகும்

1. 1000
2. 2000
3. 3000
4. 5000

93. தலைக்கோட்டைப் போர் நடைபெற்ற ஆண்டு _______.

1. 1550
2. 1555
3. 1560
4. 1565

94. பாமினி அரசின் மாகாணங்கள் ________ என்றழைக்கப்பட்டன.

1. மாவட்டம்
2. நகரம்
3. தராப்
4. தலைநகர்

95. _______ சுல்தானிய அரசரின் அடக்குமுறை நடவடிக்கைகள் புதிய சுதந்திர அரசுகள் தோன்ற காரணமாயின.

1. பால்பன்
2. அலாவுதீன் கில்ஜி
3. முகமது பின் துக்ளக்
4. பிரோஸ் துக்ளக்

96. கிருஷ்ண தேவராயரின் அரண்மனைக்கு வருகை புரிந்த பாரசீகக் கலைஞர் _______.

1. வாசுப்
2. மார்க்கோபோலோ
3. இபின்பதுதா
4. அப்துர் ரசாக்

97. அமுக்தமால்யதாவை எழுதியவர் ________

1. கிருஷ்ண தேவராயர்
2. தெனாலி ராமகிருஷ்ணா
3. அல்லசானி பெத்தண்ணா
4. துக்கண்ணா

98. பாமினி அரசின் எட்டாவது சுல்தான் _______ ஆவார்

1. மகமது கவான்
2. முகமது
3. ஜாபர்கான்
4. சுல்தான் பிரோஸ்

99. இஸ்லாமிய வீரர்களை படையில் பணியமர்த்திய விஜயநகர அரசர் _______.

1. முதலாம் தேவராயர்
2. அக்பர்
3. பாபர்
4. கிருஷ்ண தேவராயர்

100. இராயகோபுரங்களை கட்டியவர் _______.

1. மகமதுகவான்
2. சுல்தான் பிரோஸ்
3. கிருஷ்ண தேவராயர்
4. பால்பன்

www.kalvinews.com

101. கிருஷ்ணதேவராயர் சமஸ்கிருதத்தில் எழுதிய புத்தகம் _______ ஆகும்.

1. ஜாம்பாவதி கல்யாணம்
2. அமுக்தமால்யதா
3. மதுரா விஜயம்
4. பொன்னியின் செல்வன்

102. கிருஷ்ண தேவராயருக்குப் பிறகு ஆட்சியில் அமர்ந்த பாமினி சுல்தான் _______.

1. அப்துர் ரசாக்
2. முகமது ஷா
3. பால்பன்
4. அலாவுதீன் கில்ஜி

103. பொருத்துக

i. பீடார் - a மதுரா விஜயம்
ii. கங்காதேவி - b. விஜயநகரம்
iii. கோதைதேவி - c. மதரசா
iv. ஹம்பி - d அமுக்தமால்யதா

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | c | a | d | b |
| (2) | c | a | b | d |
| (3) | d | c | a | b |
| (4) | b | d | a | c |

104. பொருந்தாததைக் கண்டுபிடி

1. முதலாம் முகமது
2. முஜாகித்
3. கவான்
4. சிகாபுதீன் முகமது

105. கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க

கூற்று: பல வெளிநாட்டு பிரபுக்கள் தக்காணத்தை விட்டு வெளியேறினர்.

காரணம்: கவான் தூக்கிலிடப்பட்டார்.

1. காரணம் கூற்றிற்கான சரியான காரணம் அல்ல
2. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
3. காரணம் மற்றும் கூற்று தவறு
4. காரணம் மற்றும் கூற்று சரி

106. பாமினி அரசிற்கு வலுவான அடித்தளத்தை அமைத்து கொடுத்தவர் _______. (NMMS-2020-21)

1. முதலாம் முகமது ஷா
2. முஜாகித்
3. இரண்டாம் முகமது ஷா
4. அலாவுதீன் ஹசன் பாமன் ஷா

107. வராகன் என்னும் தங்க நாணயங்களை வெளியிட்டவர்கள் _______. (NMMS-2020-21)

1. பாமினி சுல்தான்கள்
2. விஜயநகர பேரரசர்கள்
3. பாலர்கள்
4. பிரதிகாரர்கள்

108. கி.பி 1565 இல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில் தோற்கடிக்கப்பட்டவர் _______.

(NMMS 2019-20)

1. ஹரிஹரர்
2. புக்கர்
3. கிருஷ்ண தேவராயர்
4. ராமராயர்

109. 'லக்பாக்ஷா' என அழைக்கப்பட்டவர் _______. (NMMS-2018)

1. குத்புதீன் ஐபெக்
2. இல்துமிஷ்
3. பால்பன்
4. சுல்தானா இரசியா

www.kalvinews.com

110. விட்டலசாமி கோவில் _______ ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது. (NMMS-2018)

1. ஹரிஹரர்
2. இரண்டாம் தேவராயர்
3. முதலாம் தேவராயர்
4. கிருஷ்ண தேவராயர்

111. கிருஷ்ண தேவராயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கோயில் _______. (NMMS-2016)

1. சோமநாதர் கோயில்
2. கைலாசநாதர் கோயில்
3. ராமர் கோயில்
4. ஹசரா ராமசாமி கோயில்

## விடைகள்

| வினா எண் | விடைஎண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 21 | (4) | 41 | (1) | 61 | (3) | 81 | (4) | 101 | (1) |
| 2 | (4) | 22 | (2) | 42 | (3) | 62 | (3) | 82 | (2) | 102 | (2) |
| 3 | (1) | 23 | (1) | 43 | (2) | 63 | (2) | 83 | (3) | 103 | (1) |
| 4 | (4) | 24 | (1) | 44 | (2) | 64 | (2) | 84 | (4) | 104 | (3) |
| 5 | (4) | 25 | (1) | 45 | (2) | 65 | (4) | 85 | (3) | 105 | (2) |
| 6 | (4) | 26 | (3) | 46 | (3) | 66 | (2) | 86 | (1) | 106 | (1) |
| 7 | (1) | 27 | (4) | 47 | (1) | 67 | (1) | 87 | (2) | 107 | (2) |
| 8 | (1) | 28 | (3) | 48 | (2) | 68 | (2) | 88 | (3) | 108 | (4) |
| 9 | (2) | 29 | (2) | 49 | (2) | 69 | (1) | 89 | (2) | 109 | (1) |
| 10 | (2) | 30 | (1) | 50 | (2) | 70 | (3) | 90 | (1) | 110 | (4) |
| 11 | (4) | 31 | (2) | 51 | (3) | 71 | (3) | 91 | (2) | 111 | (4) |
| 12 | (1) | 32 | (2) | 52 | (3) | 72 | (4) | 92 | (3) | | |
| 13 | (2) | 33 | (1) | 53 | (3) | 73 | (2) | 93 | (4) | | |
| 14 | (3) | 34 | (1) | 54 | (3) | 74 | (4) | 94 | (3) | | |
| 15 | (2) | 35 | (3) | 55 | (1) | 75 | (1) | 95 | (3) | | |
| 16 | (4) | 36 | (3) | 56 | (1) | 76 | (4) | 96 | (4) | | |
| 17 | (4) | 37 | (3) | 57 | (2) | 77 | (2) | 97 | (1) | | |
| 18 | (4) | 38 | (4) | 58 | (4) | 78 | (2) | 98 | (4) | | |
| 19 | (3) | 39 | (2) | 59 | (3) | 79 | (4) | 99 | (1) | | |
| 20 | (2) | 40 | (4) | 60 | (4) | 80 | (3) | 100 | (3) | | |

www.kalvinews.com



## 2. முகலாயப் பேரரசு

**தொகுப்பு:**
**திரு.கா.சீனிவாசன்,** M.Sc., B.Ed.,
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி,**
**வீரசெட்டி ஏரி,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.மா.குருசாமி,** B.A., B.Ed.,
**இடைநிலை ஆசிரியர்,**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி,**
**சாக்கலப்பள்ளி,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

**அறிமுகம்**

- சூர் வம்சத்தைச் சேர்ந்த ஷெர்ஷாவின் குறுகிய கால ஆட்சியைத் தவிர்த்து முகலாயர்களின் ஆட்சிக்காலம் பொ.ஆ 1526 முதல் 1707 வரை நடைபெற்றது.
- முகலாயப் பேரரசர்களின் புகழ் ஆசியா, ஐரோப்பா முழுவதிலும் பரவியது.

**பாபர் (1526 - 1530)**

- இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவியவர் **ஜாகிருதீன் முகமது பாபர்.**
- பாபர் 1483 பிப்ரவரி 14 ல் பிறந்தார்.
- பாபர் தந்தை வழியில், **தைமூரின்** கொள்ளுப்பேரன். பாபர் தாய் வழியில் **தாஷ்கண்டைச்** சார்ந்த **யூனுஸ்கானின்** பேரன்.
- பாபர் மங்கோலிய அரசன் **செங்கிஸ்கானின்** பதின்மூன்றாவது தலைமுறை வாரிசு ஆவார்.
- ஜாகிருதீன் என்றால் **நம்பிக்கையைக் காப்பவர்** எனப் பொருள்படும்.

**முகலாயப் பேரரசுக்கான அடித்தளம்**

- 1505 இல் காபூலைக் கைப்பற்றிய பாபர், அதே ஆண்டில் இந்தியாவை நோக்கித் தமது முதல் படையெடுப்பை மேற்கொண்டார்.
- பாபர் 1524 வரையில் பஞ்சாப்பை கடந்து படையெடுப்பு நடத்தவில்லை.
- டெல்லி சுல்தான் இப்ராஹிம் லோடியை பதவியை விட்டு நீக்க தௌலத்கான் லோடியின் மகன் திலாவார்கான் லோடியும், டெல்லி சுல்தானின் மாமனார் ஆலம்கான் ஆகிய இருவரும் பாபரின் உதவியை நாடி காபூல் வந்தனர்.
- 1526-ல் நடைபெற்ற முதல் பானிபட் போரில் பாபர், இப்ராஹிம் லோடியைத் தோற்கடித்து **டெல்லி, ஆக்ராவைக் கைப்பற்றினார்.**

**பாபரின் இராணுவ ஆக்கிரமிப்புகள்:**

**பாபரின் போர்கள்:**

- 1527 இல் ராணா சங்காவுடன் **கன்வா போர்.**
- 1528 இல் சந்தேரி தலைவர்களுடன் **சந்தேரி போர்.**
- 1529 இல் ஆப்கானியத் தலைவர்களுடன் போர்.
- பாபர் 1530 இல் இயற்கை எய்தினார்.
- பாபர் துருக்கிய, பாரசீக மொழிகளில் புலமை பெற்றவர்.

www.kalvinews.com

- பாபரின் சுயசரிதையான **துசுக் - இ - பாபரில்** இந்துஸ்தான் பற்றிய தனது கருத்தைக் கூறியுள்ளார்.

**ஹீமாயூன்** **(1530-1540, 1555-1556)**

- பாபர் தனது மூத்த மகன் ஹுமாயூனை வாரிசாக அறிவித்தார்.
- ஹுமாயூன் சகோதரர்கள் **கம்ரான், ஹிண்டல், அஸ்காரி**.
- ஹுமாயூன் 1539 இல் **சௌசா** என்ற இடத்திலும்,1540 இல் **கன்னோசி** என்ற இடத்திலும், **ஷெர்ஷா சூர்** என்பவரிடம் போரில் தோற்றார்.
- அரியணையில் இருந்து தூக்கி வீசப்பட்ட ஹுமாயூன் ஈரானுக்கு தப்பியோட நேர்ந்தது.
- பாரசீக அரசர், சபாவிட் வம்சத்தைச் சார்ந்த **ஷா-தாமஸ்ப்** என்பவரின் உதவியால் 1555 இல் டெல்லியை மீண்டும் கைப்பற்றினார்.
- ஹீமாயூன் 1556 இல் நூலகத்தின் படிக்கட்டுகளில் இடறி விழுந்து இயற்கை எய்தினார்.

**ஷெர்ஷா (1540-1545)**

- ஷெர்ஷா, **ஹசன் சூரி** பீகார் சசாரம் பகுதியை ஆண்டு வந்த ஹசர் சூரி என்ற ஆப்கானிய பிரபுவின் மகன் ஆவார்.
- ஹுமாயூனை ஆட்சி இழக்கச் செய்த ஷெர்ஷா, ஆக்ராவில் சூர் வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.
- தனது குறுகியகால ஆட்சியில் வங்காளம் முதல் சிந்து வரை (காஷ்மீர் நீங்கலாக) பேரரசை உருவாக்கினார்.
- ஷெர்ஷா **நில வருவாய் முறையையும், நாணயங்களையும்** அறிமுகம் செய்தார்.
- ஷெர்ஷா **நிறுத்தல், முகத்தல் அளவுகளையும்** தர அளவுப்படுத்தினார்.

**அக்பர் (1556-1605):**

- அக்பர் தனது 14-ம் வயதில் அரசரானார்.
- அக்பரின் **பகர** ஆளுநாராக **பைராம்கான்** நியமிக்கப்பட்டார்.
- ஹெமு எனும் தளபதி 1556 இல் டெல்லியையும், ஆக்ராவையும் கைப்பற்றினார்.
- பிறகு 1556-ம் சூர் வம்சத்தைச் சார்ந்த **ஹெமு** என்பவருடன் **இரண்டாம் பானிப்பட்** போரில் அக்பரும் பைராம்கானும் போரிட்டு, ஹெமுவைக் கொன்றனர்.
- பைராம்கானின் மேலாதிக்கத்தை விரும்பாத அக்பர், குஜராத்தில் பைராம்கானை கொல்ல தூண்டி விட்டுக் கொன்றார்.

**பெண் ஆட்சியாளர்கள் மீது படையெடுப்பு:**

- அக்பர் மாளவத்தையும், மத்திய இந்தியாவில் சில பகுதிகளையும் கைப்பற்றினார்.
- மத்திய இந்தியப் பகுதியைச் சார்ந்த **ராணி துர்காவதியை** அக்பர் தோற்கடித்தார்.
- தென்னிந்தியாவில் அகமது நகர் **சந்த் பீவியின்** மீது படையெடுத்தார். ராணியின் வலுவான எதிர்ப்பால், முகலாயப்படை அமைதி உடன்படிக்கை செய்து கொண்டது.

**ஹால்டிகாட் போர்:**

- மேவார் அரசரான ராணா உதய்சிங்கை அக்பர் தோற்கடித்து,1568 இல் சித்தூரையும், 1569 இல் ராந்தம்பூரையும் கைப்பற்றினார்.
- 1576-ல் உதய் சிங்கின் மகனான **ராணா பிரதாப்பை ஹால்டிகாட்** போரில் வெற்றிக்கொண்டார்.

**அரேபியா, தென் கிழக்காசியா மற்றும் சீனாவுடன் வாணிகத் தொடர்பு:**

- குஜராத்தை அக்பர் கைப்பற்றிய நிகழ்வு, குஜராத் கடற்பகுதியில் வாணிபம் மேற்கொண்டிருந்த அரேபியரையும், ஐரோப்பியரையும் தமது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவர உதவியது.
- அக்பர் காலத்தில், தென் கிழக்காசியா மற்றும் சீனாவுடன் வாணிபத் தொடர்பு ஏற்பட்டது.

**வடமேற்குப் படையெடுப்புகள்:**

- அக்பர், இராணுவ நடவடிக்கைகள் மூலம் காந்தகார், காஷ்மீர், காபூல், ஆகியவற்றைப் பேரரசுடன் இணைத்தார்.
- அக்பர் கால ஆட்சியில் முகலாயப் பேரரசானது வடக்கே **காஷ்மீர்**, தெற்கே **கோதாவரி**, மேற்கே **காந்தகார்**, கிழக்கே **வங்காளம்** வரை பரந்து விரிந்திருந்தது.
- 1805 இல் அக்பர் இயற்கை எய்தினார். அவருடைய உடல் ஆக்ராவுக்கு அருகே சிக்கந்தராவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**அக்பரின் கொள்கை:**

- அக்பர் முஸ்லீம்கள் அல்லாதோர் மீது விதிக்கப்பட்டிருந்த **ஜிஸியா வரியையும்**, இந்துப் பயணிகளின் மீதான புனிதப் பயண வரிகளையும் **நீக்கினார்**.
- அக்பர் **ராஜபுத்திர பெண்ணை** திருமணம் செய்தார். தனது மகனுக்கும் ராஜபுத்திர பெண்ணை திருமணம் செய்து வைத்தார். பேரரசின் உயர் பதவிகளில் ராஜபுத்திரர்களை நியமனம் செய்தார்.
- சூபி துறவியான **சலீம் சிஸ்டியும்**, சீக்கிய குருவான **ராம்தாசும்** அக்பரின் அளவில்லா மதிப்பையும், மரியாதையையும் பெற்றிருந்தார்.
- குரு ராம்தாசுக்கு அமிர்தசரஸில் அக்பர் பரிசாக வழங்கிய இடத்தில் தான் பின்னர் **ஹர்மிந்தர் சாகிப் கருவறை** கட்டப்பட்டது.
- பதேப்பூர் சிக்ரியில் அக்பரால் கட்டப்பெற்ற **இபாதத்கானா** என்னும் மண்டபத்தில் அனைத்து மதங்களின் அறிஞர்களும் ஒன்று கூடி உரையாடினர்.

**பண்பாட்டுப் பங்களிப்பு:**

- அக்பர் பெரிதும் கல்வியை ஆதரித்தார்.
- அவருடைய சொந்த நூலகத்தில் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகள் இருந்தன.
- பல்வேறு விதமான நம்பிக்கைகளையும், கருத்துக்களையும் கொண்ட அறிஞர்களையும் ஆதரித்தார்.
- நூலாசிரியர்கள் - **அபுல்பாசல், அப்துல் பெய்சி, அப்துர் ரகீம் கான்-இ-கான்.**
- கதையாசிரியர்கள் - **பீர்பால்**
- திறமையான அதிகாரிகள் - **ராஜா தோடர்மால், ராஜா பகவன்தாஸ், ராஜா மான்சிங்** ஆகியோர் அக்பரின் அவையில் இடம் பெற்றிருந்தனர்.
- பாடலாசிரியரும், இசை மேதையுமான **தான்சேன்** மற்றும் ஓவியர் **தஷ்வந்த்** ஆகியோரும் அக்பரின் அவையை அலங்கரித்தனர்.

**ஜஹாங்கீர் (1605 - 1627)**

- அக்பரின் ராஜபுத்திர மனைவிக்குப் பிறந்த இளவரசர் **சலீம் நூருதீன் முகமது**, "**ஜஹாங்கீர்**" என்ற பெயரில் மகுடம் சூட்டினார்.
- ஜஹாங்கீர் என்றால் "**உலகத்தை கைப்பற்றியவர்**" என்று பொருள்.

www.kalvinews.com

- அரசாட்சியைக் காட்டிலும் கலைகள், ஓவியம், தோட்டங்கள், மலர்கள் ஆகியவற்றின் மீது அவர் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார்.
- ஜஹாங்கீர் ஆட்சியில் **ஜஹாங்கீரின் மனைவி நூர்ஜஹான்** என அறியப்பட்ட **மெகருன்னிசா** உண்மையான அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.
- அக்பர் கால **சமய சகிப்புத்தன்மை** ஜஹாங்கீர் காலத்திலும் பின்பற்றப்பட்டது.
- தமக்கு எதிராக கலகம் செய்த தனது **மகன் குஸ்ருவுக்கு** ஆதரவாக செயல்பட்ட சீக்கியத் தலைவர் குரு **அர்ஜுன் சிங்கை** தூக்கிலிடும்படி ஜஹாங்கீர் உத்தரவிட்டார்.
- இதனால், ஜஹாங்கீர் ஆட்சிக்காலத்தில் முகலாயருக்கும், சீக்கியருக்கும் இடையே நெடுநாள் போர்கள் நடைபெற்றன.
- இதன் காரணமாக, ஆப்கானிஸ்தான், பாரசீகம், மத்திய ஆசியா ஆகிய பகுதிகளுக்கான வணிகப் பாதைகளின் மீதான தங்கள் கட்டுப்பாட்டை முகலாயர்கள் இழக்க நேர்ந்தது.
- காண்டகாரை இழந்தது, வட மேற்கிலிருந்து வரும் படையெடுப்புகளுக்கு இந்தியாவைத் திறந்து வைத்தது.
- ஜஹாங்கீர் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்து அரசர் **முதலாம் ஜேம்ஸின்** பிரநிதியான **தாமஸ்ரோ** டெல்லிக்கு வருகை புரிந்தார்.
- **ஆங்கிலேயரின் முதல் வணிக மையம் ஜஹாங்கீர் அனுமதியுடன், சூரத்தில்** தாமஸ்ரோ நிறுவினார்.

**ஷாஜகான்** **(1627-1658)**

- ஜஹாங்கீருக்குப் பின்னர் இளவரசர் குர்ரம் **ஷாஜகான்** என்ற பட்டப்பெயருடன் ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- ஷாஜகான் என்றால் **உலகத்தின் அரசர்** என்று பொருள்.
- 1632 இல் அகமது நகர் இணைக்கப்பட்டது.
- பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டா கைப்பற்றப்பட்டது.
- ஷாஜகான் சமய சகிப்புத்தன்மை அற்றவராக விளங்கினார்.
- ஷாஜகான் ஆட்சிக்காலத்தில் **முகலாயர்களின் புகழ் உச்சத்தை எட்டியது**.
- 1657 இல் ஷாஜகான் நோய்வாய்ப்பட்டதைத் தொடர்ந்து அவருடைய நான்கு மைந்தர்களுக்குள் வாரிசுரிமைப்போர் வெடித்தது.
- ஷாஜகான் தம் வாழ்நாளின் இறுதி **எட்டு ஆண்டுகளை** ஒரு கைதியாக **ஆக்ரா** கோட்டையிலுள்ள **ஷாபர்ஜ்** அரண்மனையில் கழித்தார்.

**ஔரங்கசீப்** **(1658 - 1707)**

- முகலாய மாமன்னர்களில் **கடைசி திறமையான அரசரான** ஔரங்கசீப் தம் தந்தையைச் சிறைப்படுத்தி தம் சகோதரர்களைக் கொன்று ஆட்சியைத் தொடங்கினார்.
- ஔரங்கசீப் **ஆலம்கீர்** என்றும் பட்டத்தை சூட்டி கொண்டார்.
- **ஆலம்கீர்** என்றால் **உலகை கைப்பற்றியவர்** என்று பொருள்.
- ஔரங்கசீப் ஜஹாங்கீரைப் போல் கலைகளின் மீது ஆர்வம் கொண்டவராக இருந்தார்.
- முஸ்லீம் மதத்தைத் தவிர ஏனைய மதங்களை ஔரங்கசீப் சகித்துக் கொள்ளவில்லை.
- இந்துக்களின் மீது மீண்டும் **ஜிசியா** வரியை ஔரங்கசீப் விதித்தார்.

www.kalvinews.com

- 1658-க்கும் 1681-க்கும் இடைப்பட்ட காலத்தில் வட இந்தியாவிலிருந்த ஔரங்கசீப் **பண்டேலர்கள், சீக்கியர்கள், ஜாட்டுகள், சாத்னாமியர்களின்** கலகங்களை அடக்கினார்.
- வடகிழக்கில் அவர் மேற்கொண்ட விரிவாக்க நடவடிக்கைகள் காமரூபாவைச் (அஸ்ஸாம்) சேர்ந்த ஆகோம் அரசுடன் போர் ஏற்படக் காரணமாக அமைந்தது.
- அவ்வரசானது, பலமுறை தாக்கப்பட்டாலும், முகலாயர்களால், அவ்வரசைக் கட்டுக்குள் கொண்டுவர இயலவில்லை.

**ராஜபுத்திரர் மற்றும் மராத்தியருடன் கொண்டிருந்த உறவு:**

- ஔரங்கசீப்பின் மகன் இளவரசர் அக்பர், ராஜபுத்திரர்களுடன் இணைந்து ஔரங்கசீப்பிற்கு இடையூறு விளைவித்தார்.
- 1674 முதல் மராட்டிய சிவாஜியின் வீரமிக்க எழுச்சியை ஔரங்கசீப்பால் தடுக்க இயலவில்லை.
- ஔரங்கசீப், சிவாஜியின் மகன் **சாம்பாஜியை** சித்ரவதை செய்து கொன்றார்.
- ஔரங்கசீப்பின் ஆட்சிக்காலத்தில், ஆங்கிலேயர்கள் சென்னை, **கொல்கத்தா, மும்பை** ஆகிய இடங்களில் தங்கள் வாணிப மையங்களை வலுவாக நிறுவினார்.
- ஔரங்கசீப் கால ஆட்சியில் **பிரெஞ்சுக்காரர்கள்** வாணிப மையத்தைப் **பாண்டிச்சேரியில்** நிறுவினார்.

**முகலாயர் நிர்வாகம்**

**மைய நிர்வாகம்:**

- முகலாயர் நிர்வாக கட்டமைப்பின் உச்ச உயர்நிலைத் தலைவர் **பேரரசரே** ஆவார்.
- சட்டங்களை இயற்றுவதும், செயல்படுத்துவதும் **பேரரசரே** ஆவார்.
- படைத் தளபதியாகவும், நீதி வழங்குபவராகவும் செயல்படுவது **பேரரசரே** ஆவார்.

**பேரரசருக்கு உதவ நியமிக்கப்பட்ட மிக முக்கிய அதிகாரிகளும் அவர்களின் பணிகளும்:**

| அதிகாரி | பணி |
|---|---|
| வக்கீல் | பிரதம மந்திரி |
| வஜீர் அல்லது திவான் | வருவாய்த் துறை மற்றும் செலவுகள் |
| மீர்பாக்சூர் | இராணுவத்துறை |
| மீர்சமான் | அரண்மனை நிர்வாகம் |
| குவாஜி | தலைமை நீதிபதி |
| சதா-உஸ்-சுதூர் | இஸ்லாமியச் சட்டங்களை (ஷாரியா) நடைமுறைப்படுத்துதல் |

**மாகாண நிர்வாகம்:**

- பேரரசு பல சுபாக்களாகப் (மாகாணங்கள் / மாநிலங்கள்) பிரிக்கப்பட்டிருந்தன.
- ஒவ்வொரு சுபாவும் "**சுபேதார்**" என்னும் அதிகாரியின் கட்டுப்பாட்டில் இருந்தது.
- ஒவ்வொரு சுபாவும் பல சர்க்கார்களாகப் (மாவட்டங்கள்) பிரிக்கப்பட்டிருந்தன.
- ஒவ்வொரு சர்க்காரும் பல பர்கானாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.
- ஒவ்வொரு பர்கானாவும் பல கிராமங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

www.kalvinews.com

**உள்ளாட்சி நிர்வாகம்:**

- நகரங்களும், பெரு நகரங்களும் **கொத்தவால்** எனும் அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டன.
- கொத்தவால்கள் சட்டம் ஒழுங்கைப் பராமரித்தனர்.
- கிராம நிர்வாகம், கிராம பஞ்சாயத்துகளிடம் (முறைப்படுத்தப்படாத கிராம அளவிலான நீதி வழங்கும் அமைப்புகள்) வழங்கப்பட்டிருந்தது.
- பஞ்சாயத்து உறுப்பினர்கள் தீர்ப்புகளை வழங்கினர்.

**படை நிர்வாகம்:**

- முகலாய இராணுவமானது **காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, பீரங்கிப்படை** ஆகிய பிரிவுகளைக் கொண்டிருந்தன.

**மன்சப்தாரி முறை:**

- **மன்சப்தாரி** முறையை **அக்பர்** அறிமுகம் செய்தார்.
- இம்முறையின் கீழ் பிரபுக்கள், ராணுவ அதிகாரிகள், குடிமை பணி அதிகாரிகள் ஆகியோரின் பணிகள் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே பணியாக மாற்றப்பட்டன.
- **மன்சப்** என்றால் **படிநிலை, தகுதி அந்தஸ்து** என்று பொருள். அப்படியான தகுதியைப் பெற்றவர் மன்சப்தார் ஆவார்.
- மன்சப்தார் , சாட் மற்றும் சவார் என்னும் இரு விடயங்களைச் சார்ந்திருந்தார்.
- சாட் என்பது மன்சப்தாரின் தகுதி மற்றும் சவார் என்பது மன்சப்தார் பராமரிக்க வேண்டிய குதிரைகள், குதிரை வீரர்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.
- மன்சப்தாரின் ஊதியம் அவரால் பராமரிக்கப்படும் எண்ணிக்கையை (10 முதல் 10000 வரை) பொறுத்திருந்தது.
- பேரரசர் மன்சப்தார்களுக்கு உயர்ந்த ஊதியம் வழங்கினார்.
- திருட்டைத் தவிர்ப்பதற்காக குதிரைகளுக்கு முத்திரையிடும் முறை பின்பற்றப்பட்டது.
- அக்பருடைய ஆட்சிக் காலத்தில் மன்சப்தார் பதவி பரம்பரை உரிமை சார்ந்ததாக இல்லை. அவருக்குப் பின்னர், அது பரம்பரை உரிமை சார்ந்த பணியாக மாற்றப்பட்டது.

**நிலவருவாய் நிர்வாகம்:**

- அக்பரின் ஆட்சியின்போது நிலவருவாய் சீரமைக்கப்பட்டது.
- அக்பரின் வருவாய்த்துறை அமைச்சரான **ராஜா தோடர்மால்,** ஷெர்ஷா அறிமுகம் செய்த முறையைப் பின்பற்றினார்.
- தோடர்மாலின் ஜப்த் முறை வடக்கு, வடமேற்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- இம்முறையின்படி நிலங்கள் அளவை செய்யப்பட்டு அவற்றின் இயல்புக்கும், வளத்திற்கும் ஏற்றவாறு வகைப்படுத்தப்பட்டன.
- பத்தாண்டு காலத்திற்கு சராசரி விளைச்சலில் **மூன்றில் ஒரு பங்கு** அரசுக்கு வரியாக செலுத்த வேண்டும்.
- ஷாஜகானின் காலத்தில் **ஜப்த்** (அ) **ஜப்தி** எனும் முறை தக்காண மாகாணங்களுக்கும் நீட்டிக்கப்பெற்றது.
- முகலாயப் பேரரசர்கள் பழைய **இக்தா** முறையை **ஜாகீர்** எனப் பெயரிட்டு செயல்படுத்தினர்.
- இந்நிலவுரிமை (ஒப்பந்த காலமுறை) டெல்லி சுல்தான்களின் காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்டதாகும்.

www.kalvinews.com

- இம்முறையின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் நிலவரி வசூல் செய்யும் பொறுப்பும், அப்பகுதியை நிர்வகிக்கும் பொறுப்பும் ராணுவ அல்லது சிவில் அதிகாரி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- பேரரசு அளவிலான வரி வசூல் அதிகாரி **ஜாகீர்தார்** ஆவார்.
- மாவட்ட அளவிலான வரி வசூல் அதிகாரி **அமில் குஜார்** ஆவார்.
- அமில் குஜாருக்கு **பொட்டாதார்**, **கனுங்கோ**, **பட்வாரி**, **முக்காதம்** போன்ற துணைநிலை அதிகாரிகள் உதவி செய்தனர்.

**ஜமீன்தாரி முறை:**

- **நில உரிமையாளர்களிடமிருந்த நில வரியை வசூலிக்கப் பணியமர்த்தப்பட்டவர்களே ஜமீன்தார்கள்** ஆவர்.
- ஜாமீன்தார்கள் சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றையும் பாதுகாத்தனர்.
- அறிஞர்களுக்கும், இறைப்பணியில் ஈடுபட்டுள்ள பெரியோர்க்கும், சமயம் சார்ந்த நிறுவனங்களுக்கும் அரசர் நிலங்களை வழங்கினார்.
- வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் **சுயயூர்கள்** என்றழைக்கப்பட்டன.

**சமயக் கொள்கை:**

- முகலாயப் பேரரசர்கள் இஸ்லாமை பின்பற்றினர்.
- அக்பர் அனைத்து மதங்களிலுள்ள சிறந்த கொள்கைகளை ஒருங்கிணைத்துத் **தீன் - இலாகி** (**தெய்வீக மதம்**) என்னும் ஒரே சமயத்தை உருவாக்க முயன்றார்.
- அக்பருடைய சமயக் கொள்கைகளை ஜஹாங்கீரும், ஷாஜகானும் பின்பற்றினர். ஔரங்கசீப் தம்முடைய முன்னோர்களின் தாராளக் கொள்கையை மறுத்தார்.

**கலை, கட்டடக் கலை:**

- பாபர் **பாரசீக** கட்டட முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்தி **ஆக்ரா**, **ப்யானா**, **டோலாப்பூர்**, **குவாலியர்** மற்றும் **க்யூல்** (அலிகார்) போன்ற பகுதிகளில் கட்டடங்களைக் கட்டினார்.
- ஹுமாயூனின் டெல்லி அரண்மனை "**தீன்-இ-பானா**"
- ஹுமாயூனின் அரண்மனை இடிக்கப்பட்டு **ஷெர்ஷா** அவ்விடத்தில் **புராணகிலாவைக்** கட்டினார்.
- **ஷெர்ஷாவின்** ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட மிக முக்கியமான நினைவுச்சின்னம் **பீகாரில் சசாரம்** என்னுமிடத்தில் அமைந்துள்ள **கல்லறை மாடமாகும்**.
- **திவான்-இ-காஸ்**, **திவான்-இ-ஆம்**, **பஞ்ச் மஹால்** (**பிரமிடு வடிவிலான ஐந்து அடுக்குக் கட்டடம்**), **ரங் மஹால்**, **சலீம் சிஸ்டியின் கல்லறை**, **புலந்தர்வாசா** ஆகியவை அக்பரால் கட்டப்பட்டவை ஆகும்.
- சிக்கந்தராவிலுள்ள **அக்பரின் கல்லறை** கட்டடப் பணிகளை ஜஹாங்கீர் நிறைவு செய்தார்.
- **ஷாஜகான்** காலத்தில் பேரரசர் அமர்வதற்காக விலையுயர்ந்த நவரத்தினக் கற்கள் பதிக்கப்பெற்ற **மயிலாசனம்** தயாரிக்கப்பட்டது. யமுனை நதிக்கரையில், உலகப் புகழ்பெற்ற **தாஜ்மஹால்** எழுப்பப்பட்டது. ஆக்ராவிலுள்ள **முத்து மசூதி** (**மோதி மசூதி**), டெல்லியில் மிகப்பெரிய **ஜும்மா மசூதி** ஆகியவை ஷாஜகானால் கட்டப்பட்டவையாகும்.
- ஔரங்கசீப்பின் மகன் **ஆஜாம் ஷாவால்** ஔரங்கபாத்தில் கட்டப்பட்ட **பிபிகா மக்பாரா** என்னும் **கல்லறை மாடம்** குறிப்பிடத்தக்கதாகும்.
- **லால் குய்லா** என்றழைக்கப்படும் டெல்லியிலுள்ள **செங்கோட்டை** முகலாயப் பேரரசர்களின் வாழ்விடமாகும்.

www.kalvinews.com

- செங்கோட்டை **சிவப்புநிறக் கற்களால்** கட்டப்பட்டு உள்ளதால் இது செங்கோட்டை என்றழைக்கப்படுகிறது.

**பயிற்சி வினாக்கள்**

1. இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவியவர் யார்?
   (1) பாபர் (2) ஹுமாயூன் (3) அக்பர் (4) ஷெர்ஷா
2. முதல் பானிப்பட் போரில் லோடி வம்ச கடைசி மன்னர் _______, காபூல் மன்னன் _______ போரிட்டனர்.
   (1) இப்ராஹிம் லோடி, ஷெர்ஷா (2) திலாவார்கான் லோடி, பாபர்
   (3) இப்ராஹிம் லோடி, பாபர் (4) திலாவார்கான் லோடி, ஹுமாயூன்
3. முதல் பானிப்பட் போர் நடைபெற்ற ஆண்டு _______.
   (1) 1524 (2) 1526 (3) 1528 (4) 1556
4. இரண்டாம் பானிப்பட் போர் நடைபெற்ற ஆண்டு _______.
   (1) 1526 (2) 1528 (3) 1556 (4) 1558
5. பாபரின் மூத்த மகன் _______.
   (1) ஹுமாயூன் (2) அக்பர் (3) ஜஹாங்கீர் (4) ஷாஜகான்
6. கூற்று: ஹுமாயூன் 1555 இல் மீண்டும் டெல்லியைக் கைப்பற்றினார்.
   காரணம்: பாரசீக அரசர், சபாவிட் வம்ச ஷா-தாமஸ்ப் உதவியதால் ஹுமாயூன் டெல்லியைக் கைப்பற்றினார்.
   (1) கூற்று சரி, காரணம் தவறு.
   (2) கூற்று தவறு, காரணம் சரி.
   (3) கூற்றும் காரணமும் சரி, கூற்று காரணத்தை விளக்குகிறது.
   (4) கூற்றும் காரணமும் சரி, கூற்று காரணத்தை விளக்கவில்லை.
7. _______ நில வருவாய் முறையையும், நாணயங்களையும் அறிமுகம் செய்தார்.
   (1) ஷெர்ஷா (2) அக்பர் (3) பாபர் (4) ஷாஜகான்
8. அக்பர் தனது _______ ஆம் வயதில் அரசரானார்.
   (1) 11 (2) 12 (3) 13 (4) 14
9. அக்பரின் பகர ஆளுநர் _______.
   (1) ஜஹாங்கீர் (2) ஷெர்ஷா (3) ஹுமாயூன் (4) பைராம்கான்
10. அக்பருடன் ஹால்டிகாட் போரில் போரிட்டவர் _______.
    (1) ராணா உதய்சிங் (2) ராணா பிரதாப் (3) ஹெமு (4) பைராம்கான்
11. இந்துக்களின் மீதான புனிதப் பயண வரியையும், முஸ்லீம் அல்லாதோர் மீதான ஜிஸியா வரியையும் நீக்கியவர் _______.
    (1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்
12. ஜிஸியா வரியையும், புனிதப்பயண வரியையும் மீண்டும் விதித்தவர் _______.
    (1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

www.kalvinews.com

13. சூபி துறவியான சலீம் சிஸ்டியும், சீக்கிய குருவான ராம்தாசும் _______ ன் அளவில்லா மதிப்பையும், மரியாதையையும் பெற்றிருந்தனர்.

(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

14. சரியான வரிசைப்படி உள்ளனவற்றை கண்டுபிடி

(1) பாபர், அக்பர், ஷாஜகான், ஜஹாங்கீர், ஹுமாயூன்

(2) பாபர், அக்பர், ஹுமாயூன், ஜஹாங்கீர், ஷாஜகான்,

(3) பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜகான்,

(4) பாபர், ஹுமாயூன், அக்பர், ஷாஜகான், ஜஹாங்கீர்

15. சரியான இணையைக் கண்டுபிடி.

(1) பாபர் - இரண்டாம் பானிப்பட் போர்

(2) அக்பர் - தீன் இலாஹி

(3) ஹுமாயூன் - நாணயங்கள் அறிமுகம்

(4) ஷெர்ஷா - தாஜ்மஹால்

16. பதேப்பூர் சிக்ரியில் அக்பரால் கட்டப்பெற்ற _______ என்னும் மண்டபத்தில் அனைத்து மதங்களின் அறிஞர்களும் ஒன்று கூடி உரையாடினர்.

(1) இபாதத்கானா (2) ஜும்மா மசூதி (3) செங்கோட்டை (4) புராணகிலா

17. அக்பரின் அவையில் இடம் பெற்றிருந்த பாடலாசிரியரும், இசை மேதையுமானவர் _______.

(1) பீர்பால் (2) அபுல் பாசல் (3) அபுல் பைசி (4) தான்சேன்

18. சரியானவற்றை கண்டுபிடி:

i. அக்பர் அவையில் கதையாசிரியராக பீர்பால் இருந்தார்.

ii. அக்பர் சீக்கிய மதத் தலைவர் குரு அர்ஜுன் சிங்கை தூக்கிலிடும்படி உத்தரவிட்டார்.

iii. அக்பரின் ஆட்சியில் ராஜா தோடர்மால், ராஜா மான்சிங், ராஜா பகவன் தாஸ் போன்ற திறமையான அதிகாரிகள் இருந்தனர்.

iv. அக்பர் மத்திய இந்தியப் பகுதி ராணி துர்காவதியையும், அகமது நகர் சந்த் பீவியையும் தோற்கடித்தார்.

(1) i, ii, iii, iv சரி (2) i, ii, iv சரி (3) i, iii, சரி (4) ii, iii, iv சரி

19. அக்பரின் ராஜபுத்திர மனைவிக்கு பிறந்த ஜஹாங்கீரின் இயற்பெயர் _______.

(1) குர்ரம் (2) ஜாகிருதீன் (3) சலீம் நூருதீன் (4) ஆலம் கீர்

20. ஜஹாங்கீர் என்றால் _______ என்று பொருள்.

(1) உலகத்தைக் கைப்பற்றியவர் (2) உலகை வென்றவர்

(3) உலகின் அரசன் (4) எதுவுமில்லை

21. ஷாஜகான் என்ற பெயரின் பொருள் _______.

(1) உலகத்தைக் கைப்பற்றியவர்

(2) உலகை வென்றவர்

(3) உலகின் அரசன்

(4) எதுவுமில்லை

www.kalvinews.com

22. ஆலம்கீர் என்ற பட்டப்பெயரின் பொருள் _______.
(1) உலகத்தைக் கைப்பற்றியவர் (2) உலகை வென்றவர்
(3) உலகின் அரசன் (4) எதுவுமில்லை

23. தமக்கு எதிராக கலகம் செய்த தனது மகன் குஸ்ருவுக்கு ஆதரவாக செயல்பட்ட சீக்கியத் தலைவர் குருஅர்ஜுன் சிங்கை தூக்கிலிடும்படி உத்திரவிட்டவர் _______.
(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

24. ஜஹாங்கீர் ஆட்சிக்காலத்தில் _______ நாட்டின் அரசர் முதலாம் ஜேம்ஸின் பிரதிநிதி டெல்லிக்கு வருகை புரிந்தார்.
(1) அமெரிக்கா (2) பிரான்ஸ் (3) டென்மார்க் (4) இங்கிலாந்து

25. ஆங்கிலேயரின் முதல் வணிக மையம் நிறுவப்பட்ட இடம் _______.
(1) டெல்லி (2) கொச்சின் (3) சூரத் (4) மசூலிப்பட்டிணம்

26. ஷாஜகானின் இயற்பெயர் _______.
(1) குர்ரம் (2) ஜாகிருதீன் (3) சலீம் நூருதீன் (4) ஆலம்கீர்

27. _______ ஆட்சிக் காலத்தில் முகலாயர்களின் புகழ் உச்சத்தை எட்டியது.
(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

28. முகலாய மாமன்னர்களில் கடைசி திறமையான அரசர் _______.
(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

29. சரியான இணையைக் கண்டறி.
(1) ஷெர்ஷா - புராணகிலா (2) அக்பர் - செங்கோட்டை
(3) ஜஹாங்கீர் - தாஜ்மஹால் (4) ஷாஜகான் - இபாதத்கானா

30. பொருந்தாததைக் கண்டறி
(1) பாபர் (2) ஹுமாயூன் (3) ஷெர்ஷா (4) அக்பர்

31. சரியான கூற்றுகளைக் காண்க.
i. ஷாஜகான் தம் வாழ்நாளின் இறுதி எட்டு ஆண்டுகளை ஒரு கைதியாக கழித்தார்.
ii. ஷாஜகான் சமய சகிப்புத்தன்மையற்றவராக விளங்கினார்.
iii. ஷாஜகான் ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.
iv. ஷாஜகானின் இயற்பெயர் குர்ரம்.
(1) i, ii, iii, iv சரி (2) i, ii, iii சரி (3) i, ii, iv சரி (4) ii, iii, iv சரி

32. கூற்று: முஸ்லீம் மதத்தைத் தவிர ஏனைய மதங்களை ஔரங்கசீப் சகித்துக் கொள்ளவில்லை.
காரணம்: ஔரங்கசீப் இந்துக்களின் மீது மீண்டும் ஜிஸியா வரியை விதித்தார்.
(1) கூற்று சரி, காரணம் தவறு
(2) கூற்றும் காரணமும் சரி
(3) கூற்றும் காரணமும் சரி, கூற்று காரணத்தை விளக்கவில்லை
(4) கூற்றும் காரணமும் சரி, கூற்றிற்கான சரியான விளக்கம்

www.kalvinews.com

33. தவறான இணையைக் கண்டறி.

| தந்தை | | மகன் |
|---|---|---|
| (1) பாபர் | - | ஹுமாயூன் |
| (2) அக்பர் | - | ஜஹாங்கீர் |
| (3) ஷாஜகான் | - | ஜஹாங்கீர் |
| (4) ஷாஜகான் | - | ஔரங்கசீப் |

34. ஔரங்கசீப் ஆட்சியில் பிரெஞ்சுக்காரர்கள் வணிக மையத்தை _______ ல் நிறுவினார்கள்.

(1) கொச்சின் (2) பாண்டிச்சேரி (3) சூரத் (4) தரங்கம்பாடி

35. மராட்டிய பேரரசர் _______ ன் எழுச்சியை ஔரங்கசீப்பால் தடுக்க இயலவில்லை.

(1) சிவாஜி (2) சாம்பாஜி (3) இளவரசர் அக்பர் (4) சலீம்

36. சரியான கூற்றைக் கண்டுபிடி

(1) ஆலம்கீர் என்றால் உலகின் அரசன் என்று பொருள்.

(2) ஔரங்கசீப் இந்துக்களின் மீதான ஜிஸியா வரியை நீக்கினார்.

(3) ஔரங்கசீப் மகன் இளவரசர் அக்பர் ராஜபுத்திரர்களுடன் இணைந்து இடையூறு விளைவித்தார்.

(4) ஔரங்கசீப் சிவாஜியின் மகன் சாம்பாஜியை அரண்மனைக்கு அழைத்து வாழ்த்தினார்.

37. பொருந்தாததைக் காண்க.

| | | |
|---|---|---|
| (1) 1527 | - | கன்வா போர் |
| (2) 1526 | - | முதல் பானிப்பட் போர். |
| (3) 1556 | - | பக்ஸார் போர். |
| (4) 1528 | - | சந்தேரிப் போர். |

38. முகலாயர்கள் நிர்வாக கட்டமைப்பின் உச்ச உயர்நிலைத் தலைவர் _______.

(1) பேரரசர் (2) சுபேதார் (3) கொத்தவால் (4) மன்சப்தார்

39. அக்பரின் பேரரசில் நிலவரி வசூல் செய்த இராணுவ அல்லது சிவில் அதிகாரி _______ என அழைக்கப்பட்டார்.

(1) சுபேதார் (2) ஜாகீர்தார் (3) கொத்தவால் (4) அமில் குஜார்

40. தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

(1) மன்சப்தாரி முறையை அக்பர் அறிமுகம் செய்தார்.

(2) சாட் என்பது மன்சப்தாரின் தகுதியைக் குறிக்கும்.

(3) ஷாஜகானின் ஜப்தி எனும் முறை நீடிக்கப் பெறவில்லை.

(4) குதிரைகளுக்கு முத்திரையிடும் முறை முகலாயப் பேரரசில் பின்பற்றப்பட்டது.

41. மாவட்ட அளவிலான வரி வசூல் அதிகாரி _______.

(1) ஜாகீர்தார் (2) ஜமீன்தார் (3) அமில் குஜார் (4) சுபேதார்

42. நில உரிமையாளர்களிடமிருந்து நில வரியை வசூலிக்கப் பணியமர்த்தப்பட்டவர்களே _______ ஆவர்.

(1) ஜாகீர்தார் (2) ஜமீன்தார் (3) அமில் குஜார் (4) சுபேதார்

43. பாபர் _______ கட்டடக் கலை முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்தினார்.
(1) பாரசீக (2) ஐரோப்பிய (3) பிரெஞ்சு (4) இத்தாலி

44. பேரரசர் அமர்வதற்கான விலையுயர்ந்த நவரத்தினக் கற்கள் பதிக்கபெற்ற மயிலாசனம் _______ காலத்தில் தயாரிக்கப்பட்டது.
(1) பாபர் (2) அக்பர் (3) ஜஹாங்கீர் (4) ஷாஜகான்

45. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| i. | செங்கோட்டை | - | a. வெள்ளை பளிங்கு கற்கள் |
| ii. | இப்ராஹிம் லோடி | - | b. நம்பிக்கையைக் காப்பவர் |
| iii. | தாஜ்மஹால் | - | c. சிவப்பு பளிங்கு கற்கள் |
| iv. | ஜாகிருதீன் | - | d. டெல்லி கடைசி சுல்தான் |

(1) i - c ii - d iii - a iv - b (2) i - c ii - d iii - b iv - a
(3) i - d ii - c iii - b iv - a (4) i - d ii - b iii - c iv - a

46. ஷெர்ஷா _________ வம்சத்தின் ஆட்சியை தொடங்கினார்.
(1) சூர் (2) சேர (3) சோழ (4) பாண்டிய

47. முகலாயர் ஆட்சி ________ முதல் ________ வரை நடைபெற்றது.
(1) 1500 - 1515 (2) 1526 - 1707 (3) 1526 - 1700 (4) 1900 - 1919

48. முகலாயப் பேரரசர்களின் புகழ் ________, _________ ல் பரவியது.
(1) சீனா, ரஷ்யா (2) அமெரிக்கா, ஜப்பான்
(3) ஆசியா, ஐரோப்பா (4) இத்தாலி, ஜெர்மனி

49. பாபர் பிறந்த ஆண்டு _________.
(1) 1515 (2) 1583 (3) 1500 (4) 1483

50. பாபர் தந்தைவழியில் _________ என்பவரின் கொள்ளுப்பேரன்.
(1) தைமூர் (2) அக்பர் (3) யூனிஸ்கான் (4) செங்கிஸ்கான்

51. பாபர் மங்கோலிய அரசன் செங்கிஸ்கானின் _________ தலைமுறை வாரிசு ஆவார்.
(1) பதினான்காவது (2) பதினைந்தாவது (3) இருபதாவது (4) பதின்மூன்றாவது

52. ஜாகிருதீன் என்பதன் பொருள் ________.
(1) நம்பிக்கையைக் காப்பவர் (2) உலகைக் கைப்பற்றியவர்
(3) உலகின் அரசன் (4) உலகை வென்றவர்

53. பாபர் காபூலைக் கைப்பற்றிய ஆண்டு ________.
(1) 1519 (2) 1505 (3) 1500 (4) 1524

54. பாபர் முதல் பானிப்பட் போரில் இப்ராகிம் லோடியைத் தோற்கடித்து ________ மற்றும் ________ ஐ கைப்பற்றினார்.
(1) டையூ, சூரத் (2) குல்பர்கா, பீஜப்பூர்
(3) டெல்லி, ஆக்ரா (4) தலைக்கோட்டை, ஹம்பி

www.kalvinews.com

55. பாபர் _________, __________ மொழிகளில் புலமை பெற்றவர்.
(1) தமிழ், தெலுங்கு (2) உருது, கன்னடம்
(3) மலையாளம், பெங்காலி (4) துருக்கிய, பாரசீக

56. பாபரின் சுயசரிதையான ________ ல் இந்துஸ்தான் பற்றி தனது கருத்தை கூறியுள்ளார்.
(1) இராவண காவியம் (2) குரான்
(3) துசுக் - இ - பாபரி (4) அமுக்தமால்யதா

57. பாபர் இயற்கை எய்திய ஆண்டு _______.
(1) 1514 (2) 1575 (3) 1600 (4) 1530

58. சௌசா போர் நடைபெற்ற ஆண்டு _______.
(1) 1540 (2) 1530 (3) 1539 (4) 1527

59. பாபர் தனது மூத்தமகனான ________ ஐ வாரிசாக அறிவித்தார்.
(1) ஹுமாயூன் (2) கம்ரான் (3) ஹிண்டல் (4) அஸ்காரி

60. அக்பர் தோற்கடித்த மத்திய இந்தியப் பகுதி ராணி ________.
(1) சந்த்பீவி (2) ராணி துர்காவதி (3) மும்தாஜ் (4) கங்காதேவி

61. அக்பரின் கல்லறை அமைக்கப்பட்ட இடம் _______.
(1) ஹம்பி (2) மாளவம் (3) சிக்கந்தரா (4) பாட்னா

62. அக்பரின் படையை வலுவாக எதிர்த்த ராணி ________.
(1) ராணி துர்காவதி (2) ராணி சந்த் பீவி (3) கங்காதேவி (4) மும்தாஜ்

63. அக்பரின் ஆட்சியில் சிறந்த கதை ஆசிரியராக இருந்தவர் _______.
(1) தான்சேன் (2) தஷ்வந்த் (3) பீர்பால் (4) அபுல்பாசல்

64. அக்பரின் அவையில் இருந்த ஓவியர் _______.
(1) தஷ்வந்த் (2) தான்சேன் (3) பீர்பால் (4) அபுல்பாசல்

65. ஜஹாங்கீரின் மனைவி _______.
(1) மும்தாஜ் (2) நூர்ஜஹான் (3) கங்காதேவி (4) துர்காவதி

66. ஜஹாங்கீருக்குப் பின்னர் இளவரசர் குர்ரம் ______ என்ற பட்டப்பெயருடன் ஆட்சிப் பொறுப்பேற்றார்.
(1) பாபர் (2) அக்பர் (3) ஷாஜகான் (4) ஷெர்ஷா

67. சிவாஜியின் தந்தை _______.
(1) ஷாஜி பான்ஸ்லே (2) ஷெர்ஷா (3) பாபர் (4) அக்பர்

68. ஷாஜகான் தன் வாழ்நாளின் இறுதி எட்டு ஆண்டுகளை கைதியாக கழித்த அரண்மனை _______.
(1) ஹம்பி (2) ஷாபர்ஜ் (3) புராணகிலா (4) செங்கோட்டை

69. தன் தந்தையை சிறைப்படுத்தி, தன் சகோதரர்களை கொன்று ஆட்சியை தொடங்கியவர் _______.
(1) அக்பர் (2) பாபர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

www.kalvinews.com

70. ஔரங்கசீப்பின் மகன் _______.

(1) இளவரசர் அக்பர் (2) பாபர் (3) குர்ரம் (4) ஷெர்ஷா

71. மன்சப்தாரி முறை அறிமுகம் செய்தவர் _______.

(1) ஷெர்ஷா (2) பாபர் (3) அக்பர் (4) ஷாஜகான்

72. அக்பர் அனைத்து மதங்களிலும் உள்ள சிறந்த கொள்கைகளை ஒருங்கிணைத்து _______ என்ற ஒரே மதத்தை உருவாக்க முயன்றார்.

(1) இந்துமதம் (2) புத்தமதம் (3) தீன் இலாஹி (4) இஸ்லாமிய மதம்

73. தீன் இலாஹி என்பதன் பொருள் _______.

(1) உலகை வென்றவர் (2) உயர்ந்த குணம் உடையவர்

(3) தெய்வீக மதம் (4) உலகின் அரசன்

74. புராண கிலாவைக் கட்டியவர் _______.

(1) பாபர் (2) அக்பர் (3) ஔரங்கசீப் (4) ஷெர்ஷா

75. _______ நதிக்கரையில் தாஜ்மஹால் கட்டப்பட்டது.

(1) கிருஷ்ணா (2) கோதாவரி (3) வைகை (4) யமுனை

76. வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் _______ என்றழைக்கப்பட்டன.

(1) தரிசு நிலம் (2) பண்ணை நிலம் (3) சுயயூர்கள் (4) விவசாய நிலம்

77. ஹுமாயூனின் டெல்லி அரண்மனையின் பெயர் _______.

(1) ஷாபர்ஜ் (2) செங்கோட்டை (3) தாஜ்மஹால் (4) தீன்-இ-பானா

78. முகலாயப் பேரரசர்களின் வாழிடமாக இருந்த கோட்டை _______.

(1) திப்புசுல்தான் கோட்டை (2) தாஜ்மஹால்

(3) தீன்-இ-பானா (4) டெல்லி செங்கோட்டை

79. டெல்லி செங்கோட்டையைக் கட்டியவர் _______.

(1) பாபர் (2) ஷாஜகான் (3) ஷெர்ஷா (4) ஔரங்கசீப்

80. டெல்லியில் உள்ள மிகப்பெரிய மசூதி _______.

(1) ஜும்மா மசூதி (2) முத்து மசூதி (3) வெள்ளை மசூதி (4) பாபர் மசூதி

81. லால் குய்லா என அழைக்கப்படுவது _______.

(1) பாபர் மசூதி (2) திப்புசுல்தான் கோட்டை

(3) டெல்லி செங்கோட்டை (4) கோல்கொண்டா கோட்டை

82. டெல்லி செங்கோட்டை _______ கட்டப்பட்டுள்ளது.

(1) பளிங்கு கற்களால் (2) கிரானைட் கற்களால்

(3) சிவப்பு நிற கற்களால் (4) கருங் கற்களால்

83. ஔரங்கசீப்பின் மகன் _______.

(1) ஷெர்ஷா (2) ஹுமாயூன் (3) ஆஜாம் ஷா (4) அக்பர்

www.kalvinews.com

84. ஷெர்ஷாவின் தந்தை _______.

(1) பாபர் (2) அக்பர் (3) ஷாஜகான் (4) ஹசன் சூரி

85. பல கிராமங்களை உள்ளடக்கிய பிரிவே _______ ஆகும்.

(1) மாநிலங்கள் (2) பேரூர் (3) பர்கானா (4) ஊர்

86. ஷெர்ஷா டெல்லியில் ________ அரண்மனையை அழித்தார்.

(1) பாபர்

(2) ஹுமாயூன்

(3) இப்ராகிம் லோடி

(4) ஆலம்கான்

87. அக்பரின் வருவாய்த் துறை அமைச்சர் _______.

(1) பீர்பால்

(2) ராஜா பகவன்தாஸ்

(3) இராஜா தோடர்மால்

(4) இராஜா மான்சிங்

88. ராணா பிரதாப் குதிரையின் பெயர் _______.

(1) கல்யாணி (2) சேத்தக் (3) ராஜா (4) நம்பி

89. ஜப்தி எனும் முறை _______ ஆட்சி காலத்தில் தக்காண மாகாணங்களுக்கும் நீட்டிக்கப் பெற்றது.

(1) அக்பர் (2) பாபர் (3) ஷெர்ஷா (4) ஷாஜகான்

90. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| i. | பாபர் | - | a. அகமது நகர் |
| ii. | துர்க்காவதி | - | b அஷ்ட திக்கஜம் |
| iii. | ராணி சந்த் பீபி | - | c அக்பர் |
| iv. | தீன் - இலாஹி | - | d சந்தேரி |
| v. | இராஜா மான்சிங் | - | e. மத்திய மாகாணம் |

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | d | e | a | c | b |
| (2) | b | c | e | a | d |
| (3) | e | c | d | b | a |
| (4) | d | e | c | b | a |

91. கீழ்க்கண்ட கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க

கூற்று: ஆங்கிலேயர் தங்களது முதல் வணிக மையத்தை சூரத்தில் துவங்கினர்.

காரணம்: ஜஹாங்கீர் ஆங்கிலேயருக்கு வணிக உரிமையை வழங்கினார்.

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.

(2) காரணம் கூற்றிற்கான தவறான விளக்கம்

(3) கூற்று தவறு காரணம் சரி.

(4) கூற்று மற்றும் காரணம் தவறு.

www.kalvinews.com

92. கீழ்க்கண்ட கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க

கூற்று: ஔரங்கசீப் மற்ற மதங்களை வெறுத்ததனால் அவருக்கு அவப்பெயர் ஏற்பட்டது.

காரணம்: ஔரங்கசீப் இந்துக்கள் மீது மீண்டும் ஜிசியா மற்றும் பாதயாத்திரை வரியை விதித்தார்.

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.
(2) கூற்றிற்கான காரணம் சரியான விளக்கமல்ல.
(3) கூற்று சரி காரணம் தவறு
(4) கூற்று மற்றும் காரணம் தவறு

93. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க

I. கம்ரான் ஆப்கானியரின் மகனாவார், ஹசன் சூரி பீகாரில் உள்ள சசாரத்தின் ஆட்சியாளர் ஆவர்.
II. அக்பர் இந்துக்களின் மீதான ஜிசியா மற்றும் பாதயாத்திரை வரியை விதித்தார்.
III. ஔரங்கசீப் தனது மூன்று சகோதரர்களை கொன்றுவிட்டு, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார்.
IV. இளவரசர் அக்பர், சிவாஜியின் மகனான சாம்பாஜியோடு தக்காணத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

(1) I, II மற்றும் III சரி
(2) II, III மற்றும் IV சரி
(3) I, III மற்றும் IV சரி
(4) II, III, IV மற்றும் I சரி

94. கால வரிசைப்படி போர்களை வரிசைப்படுத்துக.

I. கன்வா போர்
II. சௌசா போர்
III. கன்னோசி போர்
IV. சந்தேரி போர்

(1) I, IV, II, III
(2) I, III, IV, II
(3) IV, III, II, I
(4) III, II, I, IV

95. கீழ்க்காணும் நிர்வாகப் பிரிவை இறங்குவரிசையில் அமைத்திடுக.

I. சர்க்கார்
II. பர்கானா
III. சுபா

(1) I, II, III
(2) III, II, I
(3) III, I, II
(4) II, I, III

96. முகலாய நிர்வாகத்தில் பிரதம மந்திரி _______ என அழைக்கப்பட்டார்.

(1) வக்கீல்
(2) கொத்தவால்
(3) சவார்
(4) பேசுவா

97. ஜஹாங்கீர் கொலை செய்த சீக்கிய குரு _______.

(1) குரு ராம்தாஸ்
(2) குரு தேஜ்பகதூர்
(3) குரு கோவிந்த்சிங்
(4) அர்ஜுன் தாஸ்

98. சீக்கியர்களின் ஹர்மிந்தர் சாகிப் கருவறை அமைந்துள்ள இடம் _______.

(1) அமிர்தசரஸ்
(2) ஹம்பி
(3) மாளவம்
(4) பதேபூர் சிக்ரி

99. அக்பரால் கட்டப்பட்ட வழிபாட்டு மண்டபம் _______.

(1) கோல்கொண்டா
(2) இபாதக்கானா
(3) டோலாப்பூர்
(4) தாஜ்மகால்

www.kalvinews.com

100. பொருத்துக

| | தந்தை | | மகன் |
|---|---|---|---|
| I. | அக்பர் | - a | தில்வார் கான் |
| II. | தௌலத்கான் லோடி | - b. | ராணா பிரதாப் |
| III. | ஹசன் சூரி | - c. | ஹுமாயூன் |
| IV. | பாபர் | - d. | ஷெர்ஷா |
| V. | உதய்சிங் | - e | ஜஹாங்கீர் |

| | I | II | III | IV | V |
|---|---|---|---|---|---|
| (1) | b | c | d | a | e |
| (2) | e | d | a | b | c |
| (3) | e | a | d | c | b |
| (4) | b | d | c | a | e |

101. தனது நூலகத்தின் படிக்கட்டுகளில் இடறிவிழுந்து மரணத்தைத் தழுவியவர் ________.

(1) அக்பர் (2) ஷெர்ஷா (3) ஹுமாயூன் (4) பாபர்

102. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| I. | பாபர் | - 1. | சௌசா போர் |
| II. | ஹுமாயூன் | - 2. | ஆகோம் போர் |
| III. | அக்பர் | - 3. | சந்தேரிப் போர் |
| IV. | ஔரங்கசீப் | - 4. | ஹால்டிகாட் போர் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (1) | 2 | 1 | 4 | 3 |
| (2) | 2 | 1 | 3 | 4 |
| (3) | 4 | 3 | 2 | 1 |
| (4) | 3 | 1 | 4 | 2 |

103. கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க

கூற்று: ஆப்கானிஸ்தான் பாரசீகம், மத்திய ஆசியா ஆகிய பகுதிகளுக்கான வணிகப் பாதைகளின் மீதான கட்டுப்பாட்டை முகலாயர்கள் இழந்தனர்.

காரணம்: முகலாயர்களுக்கும் சீக்கியர்களுக்கும் இடையே நெடுநாள் போர்கள் நடைபெற்றன.

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் இல்லை.

(2) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.

(3) கூற்று தவறு காரணம் சரி.

(4) கூற்றும் காரணமும் தவறு.

104. கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க

கூற்று: ஜஹாங்கீர் குரு அர்ஜுன் சிங்கை தூக்கிலிடும் படி உத்தரவிட்டார்.

காரணம்: குரு அர்ஜுன்சிங்கை சமய காரணங்களுக்காக ஜஹாங்கீர் கொல்ல உத்தரவிட்டார்.

(1) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் இல்லை.

(2) காரணம் கூற்றிற்கான தவறான விளக்கம்.

(3) கூற்று தவறு காரணம் சரி.

(4) கூற்றும் காரணமும் தவறு.

www.kalvinews.com

105. பொருந்தாததை தேர்ந்தெடுக்க.

(1) பாபர் (2) ஹுமாயூன் (3) ஷெர்ஷா (4) ஜஹாங்கீர்

106. முகலாய வம்சத்தின் ஆட்சி _______ ஐ தலைநகராகக் கொண்டு துவங்கியது.

(1) ஆக்ரா (2) டெல்லி (3) பர்கானா (4) காபூல்

107. சரியான கூற்றைத் தேர்ந்தெடு

திலாவார்கான் மற்றும் ஆலம்கான் காபூல் வரக் காரணம் _______.

(1) இப்ராகிம் லோடியை பதவியை விட்டு நீக்க பாபரின் உதவியை கேட்பதற்கு.

(2) காபூலின் மீது படையெடுப்பதற்கு.

(3) டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றுவதற்கு.

(4) முதலாம் பானிபட் போரில் பங்கு பெறுவதற்கு.

108. முதலாம் பானிபட் போரில் தோல்வியுற்றவர் _______.

(1) ஹுமாயூன் (2) இப்ராஹிம் லோடி (3) பாபர் (4) அக்பர்

109. கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.

கூற்று: அரியணையில் இருந்து தூக்கிவீசப்பட்ட ஹுமாயூன் ஈரானுக்கு தப்பி ஓடினார்.

காரணம்: 1539 இல் சௌசா என்ற இடத்திலும் 1540 இல் கான்னோசியிலும் ஷெர்ஷாவிடம் ஹுமாயூன் தோற்றார்.

(1) கூற்று, காரணம் இரண்டும் சரி

(2) காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று, காரணம் இரண்டும் தவறு

110. ஹுமாயூனை ஆட்சியிழக்கச் செய்தவர் _______.

(1) அக்பர் (2) ஷெர்ஷா (3) ராணா பிரதாப்சிங் (4) ஔரங்கசீப்

111. ஷெர்ஷா சூர் வம்சத்தின் ஆட்சியை _______ ல் தொடங்கினார்.

(1) டெல்லி (2) ஆக்ரா (3) வங்காளம் (4) மதராஸ்

112. குறுகிய கால ஆட்சியில் வங்காளம் முதல் சிந்து வரை (காஷ்மீர் நீங்கலாக) பேரரசை உருவாக்கியவர் _______.

(1) ஷாஜகான் (2) ஷெர்ஷா (3) ஔரங்கசீப் (4) அக்பர்

113. இரண்டாம் பானிபட் போரில் பங்கு பெற்றவர்கள் _______.

(1) பாபர் மற்றும் இப்ராகிம் லோடி (2) அக்பர் மற்றும் ராணா உதய்சிங்

(3) பைராம்கான் மற்றும் ஹெமு (4) ராணி துர்காவதி மற்றும் அக்பர்

114. முகலாயப் படை _________ என்பவருடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டது.

(1) ராணி சந்த் பீவி (2) துர்க்காதேவி

(3) மெகருன்னிசா (4) சாம்பாஜி

115. ராணா உதய்சிங் _______ ன் அரசர்.

(1) இங்கிலாந்து (2) மேவார் (3) போர்ச்சுகல் (4) ஆப்கானிஸ்தான்

www.kalvinews.com

116. கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.

கூற்று: அக்பரின் தூண்டுதல் காரணமாக பைராம்கான் என்பர் குஜராத்தில் கொல்லப்பட்டார்.

காரணம்: பைராம்கானின் மேலாதிக்கத்தை அக்பரால் சகித்துக்கொள்ள இயலவில்லை.

(1) கூற்றிற்கு காரணம் சரியான விளக்கமல்ல.
(2) கூற்று தவறு, காரணம் சரி.
(3) கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.
(4) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

117. முஸ்லீம் அல்லாதோர் மீது விதிக்கப்பட்ட வரி _______.

(1) நிலவரி (2) சொத்து வரி (3) ஜிசியா (4) வேளாண் வரி

118. அனைத்து மத அறிஞர்களும் ஒன்று கூடி உரையாடும் இபாதத்கானா மண்டபம் உள்ள நகரம் _______.

(1) பதேபூர் சிக்ரி (2) ஆக்ரா (3) அமிர்தசரஸ் (4) குவாலியர்

119. ஷாஜகான் அகமது நகரை இணைத்துக் கொண்ட ஆண்டு _______.

(1) 1632 (2) 1526 (3) 1569 (4) 1657

120. ஷாஜகான் மற்றும் நான்கு மைந்தர்களுடன் ________ ஆம் ஆண்டு வாரிசுரிமைப் போர் வெடித்தது.

(1) 1576 (2) 1657 (3) 1556 (4) 1540

121. வரிசைப்படுத்துக:

I. பாரசீகம், ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய பகுதிகளுக்கான வணிகப்பாதைகளின் கட்டுப்பாட்டை முகலாயர்கள் இழந்தனர்.
II. சீக்கியத் தலைவர் குரு அர்ஜுன்சிங்கை தூக்கிலிடும் படி ஜஹாங்கீர் உத்தரவிட்டார்.
III. காந்தகாரை முகலாயர் இழந்தனர்.
IV. முகலாயருக்கும் சீக்கியருக்கும் நெடுநாள் போர்கள் நடைபெற்றன.

(1) I, III, IV, II (2) II, IV, I, III (3) II, III, I, IV (4) IV, III, I, II

122. முகலாய நிர்வாகத்தின் இராணுவத் துறை அமைச்சர் _______.

(1) வக்கீல் (2) திவான் (3) மீர்சமான் (4) மீர்பாக்ஷி

123. ஷாரியா என்பது _______.

(1) இஸ்லாமிய சட்டங்கள் (2) வருவாய் மற்றும் செலவுகள்
(3) பேரரசு (4) இராணுவம்

124. முகலாய நிர்வாகத்தில் இஸ்லாமிய சட்டங்களை நடைமுறைப்படுத்தியவர் _______.

(1) சுபேதார் (2) சிவாஜி (3) மீர்பாக்ஷி (4) சதா-உஸ்-சுதூர்

125. மேவார் அரசரான ராணா உதய்சிங்கை அக்பர் ______ இல் தோற்கடித்து சித்தூரைக் கைப்பற்றினார். (NMMS-2020-21)

(1) 1576 (2) 1569 (3) 1568 (4) 1556

www.kalvinews.com

126. பின்வரும் நிகழ்வுகளை காலக்கிரமப்படி வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS-2020-21)

i. ஹால்டிகார் போர் ii. கன்னோஜி போர்

iii. இரண்டாம் பானிபட் போர் iv. தரைன் போர்

(1) iv ii iii i (2) iv iii ii i

(3) ii iii iv i (4) iii ii i iv

127. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS-2018)

(1) பாபர் (2) ஹுமாயூன் (3) அக்பர் (4) ஷெர்ஷா

128. தாஜ்மஹாலைக் கட்டிய தலைமைச் சிற்பியின் பெயர் _______. (NMMS-2018)

(1) ஜஹாங்கீர் (2) சர் தாமஸ் ரோ (3) மும்தாஜ் (4) உஸ்தாத் இஷா

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (1) | 21 | (3) | 41 | (3) | 61 | (3) | 81 | (3) | 101 | (3) | 121 | (2) |
| 2 | (3) | 22 | (1) | 42 | (2) | 62 | (2) | 82 | (3) | 102 | (4) | 122 | (4) |
| 3 | (2) | 23 | (2) | 43 | (1) | 63 | (3) | 83 | (3) | 103 | (2) | 123 | (1) |
| 4 | (3) | 24 | (4) | 44 | (4) | 64 | (1) | 84 | (4) | 104 | (1) | 124 | (4) |
| 5 | (1) | 25 | (3) | 45 | (1) | 65 | (2) | 85 | (3) | 105 | (2) | 125 | (3) |
| 6 | (3) | 26 | (1) | 46 | (1) | 66 | (3) | 86 | (2) | 106 | () | 126 | (1) |
| 7 | (1) | 27 | (3) | 47 | (2) | 67 | (1) | 87 | (3) | 107 | () | 127 | (4) |
| 8 | (4) | 28 | (4) | 48 | (3) | 68 | (2) | 88 | (2) | 108 | (2) | 128 | (4) |
| 9 | (4) | 29 | (1) | 49 | (4) | 69 | (4) | 89 | (4) | 109 | (1) | | |
| 10 | (1) | 30 | (3) | 50 | (1) | 70 | (1) | 90 | (1) | 110 | (2) | | |
| 11 | (1) | 31 | (3) | 51 | (4) | 71 | (3) | 91 | (1) | 111 | () | | |
| 12 | (4) | 32 | (3) | 52 | (1) | 72 | (3) | 92 | (1) | 112 | (2) | | |
| 13 | (1) | 33 | (3) | 53 | (2) | 73 | (3) | 93 | (2) | 113 | (3) | | |
| 14 | (3) | 34 | (2) | 54 | (3) | 74 | (4) | 94 | (1) | 114 | (1) | | |
| 15 | (2) | 35 | (1) | 55 | (4) | 75 | (4) | 95 | (3) | 115 | (2) | | |
| 16 | (1) | 36 | (3) | 56 | (3) | 76 | (3) | 96 | (1) | 116 | (3) | | |
| 17 | (4) | 37 | (3) | 57 | (4) | 77 | (4) | 97 | (4) | 117 | (3) | | |
| 18 | (3) | 38 | (1) | 58 | (3) | 78 | (4) | 98 | (1) | 118 | (1) | | |
| 19 | (3) | 39 | (2) | 59 | (1) | 79 | (2) | 99 | (2) | 119 | (1) | | |
| 20 | (1) | 40 | (3) | 60 | (2) | 80 | (1) | 100 | (3) | 120 | (2) | | |

www.kalvinews.com

வகுப்பு - 7 - பருவம் - 2 - வரலாறு

# 3. மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி

**தொகுப்பு:**
**திருமதி.S.D.சசிகலா, M.A., B.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியை (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, கோடேபாளையம்,**
**ஈரோடு மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.ஜெ.மாரையன், M.A., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, மத்திப்பட்டி,**
**கரூர் மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

### மராத்தியர்கள்

- மராத்தியர்களின் அதிகாரம் முகலாயப் பேரரசிற்கு சவாலாக இருந்தது.
- சிவாஜியின் தந்தை ஷாஜி பான்ஸ்லே.
- அகமதுநகர், பீஜப்பூர் சுல்தானிய அரசுகளின் அதிகாரியான ஷாஜி பான்ஸ்லே, முகலாயர்களுக்கு பல இடையூறுகளை செய்தார்.
- சிவாஜியே மராத்தியருக்குப் புகழ் சேர்த்தார்.
- வீரம் செறிந்த போர் வீரராகவும், மிகச் சிறந்த தளபதியாகவும், கொரில்லா போர் முறைக்கு (மறைந்திருந்து தாக்குதல்) தலைவராகவும் இருந்தார்.
- மனஉறுதி மிக்க மலைவாழ் மக்கள் அணியொன்றை உருவாக்கினார். அவர்களின் மூலம் பல கோட்டைகளைக் கைப்பற்றினார்.
- மராத்தியர்களின் வலிமை பெருகிய போது முகலாயப் பேரரசு வலிமை குன்றியது. தக்காணம் முழுவதிலும் மராத்தியர்கள் சௌத், சர்தேஷ்முகி ஆகிய வரிகளை வசூலிக்கும் உரிமையை முகலாயர்கள் அங்கீகரிக்க வேண்டியதாயிற்று.
- பேஷ்வாக்கள் என்றழைக்கப்பட்ட மராத்திய அரசர்களின் பிரதம அமைச்சர்கள் ஷாகுவின் காலம் முதல் உண்மையான அதிகாரம் உடையவர்களாயினர்.

**புவியியல் கூறுகள்**:

- மராத்திய நாட்டின் புவியியல் கூறுகள், மராத்தியர்களிடையே சில தனித்தன்மை வாய்ந்த பண்புகளை வளர்த்திருந்தன. அவை, மராத்திய மக்களை இந்தியாவின் ஏனைய மக்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டின.
- பதினாறாம் நூற்றாண்டில் பீஜப்பூர், அகமதுநகர் சுல்தான்கள் மராத்தியர்களைத் தங்கள் குதிரைப் படையில் பணியமர்த்தினர்.
- இச்சுல்தான்களின் படைகளில் மராத்தியர்களைப் பணியமர்த்திய செயல், இஸ்லாமிய வீரர்களின் அதிகாரத்தைப் பெற வேண்டும் என்ற ஆசையைச் சமன் செய்ய உதவியது.
- பாறைகளும், குன்றுகளும் நிறைந்த மராத்திய நிலப்பகுதி அந்நிய படையெடுப்பாளர்களிடமிருந்து மராத்தியர்களுக்கு பாதுகாப்பளித்தது.
- மறைந்திருந்து தாக்கும் கொரில்லா போர் முறையும் அவர்களுக்கு பெரும் பலமாய் இருந்தது.

www.kalvinews.com

**பக்தி இயக்கமும் மராத்தியரும்:**

- மகாராஷ்டிராவில் பரவிய பக்தி இயக்கம், மராத்திய மக்களிடையே விழிப்புணர்வும் இணக்கமும் ஏற்பட உதவியது.
- மராத்திய சமயத் தலைவர்கள் பல்வேறு சமூகக் குழுக்களிலிருந்து வந்தவர்கள்.
- ஏக்நாத், துக்காராம், ராம்தாஸ் ஆகியோர் பக்தி இயக்க பெரியவர்கள்.
- துக்காராம், ராம்தாஸ் ஆகியோர் சிவாஜியின் வாழ்வின் மீது செல்வாக்கு செலுத்தினர்.

**மராத்தியரின் மொழியும், இலக்கியமும்:**

- மராத்தியர்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதில் மராத்திய மொழியும் இலக்கியமும் உதவி செய்தன.

**சிவாஜி**

- 1627 இல் பூனேவுக்கு அருகில் உள்ள சிவனேரிக் கோட்டையில் சிவாஜி பிறந்தார்.
- தாயார் ஜீஜாபாயின் பாதுகாப்பில் வளர்ந்தார்.
- இராமாயணம் மற்றும் மகாபாரத கதைகளைக் கூறி சிவாஜியை வளர்த்தார்.
- சிவாஜியின் குருவாகவும் பாதுகாவலராகவும் இருந்தவர் தாதாஜி கொண்டதேவ்.
- அவர் குதிரையேற்றம், போர், கலை, அரசு நிர்வாகம் ஆகியவற்றில் சிவாஜிக்கு பயிற்சியளித்தார்.
- 1645 இல் தனது 18 வது வயதில் பூனேக்கு அருகிலிருந்த கோண்டுவானா கோட்டையை கைப்பற்றினார்.
- 1646 இல் தோர்னா கோட்டையை கைப்பற்றினார்.
- தொடர்ந்து ரெய்கார் கோட்டையை கைப்பற்றி புனரமைத்தார்.

**பீஜப்பூர் சுல்தானோடு போரிடுதல்:**

- சிவாஜியின் பாதுகாவலரான தாதாஜி கொண்டதேவ் 1649 இல் இயற்கை எய்தினார்.
- தம் தந்தையாருக்கு சொந்தமான ஜாகீரையும் சிவாஜி பெற்றார்.
- மாவலி காலாட்படை வீரர்களே அவருடைய படையின் வலிமையாகத் திகழ்ந்தனர்.
- அவர்களின் உதவியுடன் சிவாஜி பூனேக்கு அருகிலிருந்த பல கோட்டைகளை கைப்பற்றினார்,
- முகலாயர்களின் புரந்தர் கோட்டையையும் சிவாஜி கைப்பற்றினார்.
- பீஜப்பூர் சுல்தான் கோபமடைந்து சிவாஜியின் தந்தையை சிறையிலிட்டார்.
- தனது இராணுவ நடவடிக்கையை கைவிடுவதாக சிவாஜி உறுதியளித்த பின்னரே ஷாஜி பான்ஸ்லே விடுவிக்கப்பட்டார்.
- ஷாஜி பான்ஸ்லே மரணமடையும்வரை சிவாஜி பீஜப்பூருடன் அமைதியைக் கடைபிடித்தார்.

**மராத்தியர் ஆதிக்கத்தை நிலைநாட்டுதல்:**

- தந்தையின் மறைவுக்குப் பின் மராத்தியத் தலைவர் சந்திர ராவ் மோர் என்பவரிடமிருந்து ஜாவலியை 1656 இல் கைப்பற்றினார்.
- பூனேவை சுற்றியிருந்த சிறிய தலைவர்களை அடக்கி கோட்டைகளை கைப்பற்றினார்.
- கோட்டையிலிருந்த பீஜப்பூர் வீரர்களைத் துரத்தினார். முகலாயப் படையைத் தோற்கடித்தார்.
- 1659 இல் பீஜப்பூரின் தளபதி அப்சல்கானைக் கொன்றார்.
- 1663 இல் ஔரங்கசீப்பின் மாமனாரும் முகலாயத் தளபதி ஷெஸ்டகானை காயப்படுத்தி துரத்தினார்.

www.kalvinews.com

- அரபிக்கடற்கரையில் அமைந்திருந்த முகலாயரின் முக்கியத் துறைமுகமான சூரத் நகரைச் சூறையாட படைகளை அனுப்பி கொள்ளையடித்தார்.

**சிவாஜியும், ஔரங்கசீப்பும்:**

- சிவாஜியை அழிக்கவும் பீஜப்பூரை இணைக்கவும் ராஜபுத்திர தளபதி ராஜா ஜெய்சிங் தலைமையில் முகலாயப் படை அனுப்பப்பட்டது.
- இறுதியில் சிவாஜி அமைதி உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டார்.
- ராஜா ஜெய்சிங்கின் ஆலோசனைப்படி ஔரங்கசீப்பை சந்திக்க ஒப்புக்கொண்டார்.
- அரசவையில் அவமானப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- சிறையிலிருந்து பழக்கூடையில் ஒளிந்து தப்பினார்.
- 1670 இல் சிவாஜி இரண்டாவது முறையாகச் சூரத் நகரை கொள்ளையடித்தார்.
- 1674 இல் சிவாஜி 'சத்ரபதி' என்ற பட்டத்துடன் ரெய்கார் கோட்டையில் முடிசூடினார்.
- சத்ரபதி (சமஸ்கிருத சொல்) - அரசன் / பேரரசன்
- சத்ர - (குடை) பதி (தலைவன் / பிரபு) எனும் சமஸ்கிருதச் சொல். அரசன் அல்லது பேரரசன் என்பதற்கு இணையானது. இச்சொல்லை குறிப்பாக சிவாஜி பயன்படுத்தினார்.
- சிவாஜி தம் இறுதி காலத்தை தன் மகன் சாம்பாஜியுடன் செலவிட்டார்.
- 1680 இல் வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சலினால் இயற்கை எய்தினார்.

## சிவாஜியின் நிருவாகம்

- சிவாஜியை மையமாகக் கொண்டு அவருடைய அரசியல் முறை மூன்று வட்டங்களை கொண்டிருந்தது.
- முதல் வட்டத்தில் மக்கள் துன்புறுத்தப்படுவதை அவர் அனுமதிக்கவில்லை.
- இரண்டாவது வட்டத்தில் அவர் மேலாதிக்கம் செலுத்தினாலும் நேரடி நிருவாகத்தை மேற்கொள்ளவில்லை.
- மூன்றாவது வட்டத்தில் கொள்ளையடிப்பது மட்டுமே சிவாஜியின் நோக்கமாக இருந்தது.
- மக்கள் இரண்டுவிதமான வரிகளை செலுத்தினர்
  - ❖ சௌத் - மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு (1/4) பாதுகாப்புக் கட்டணமாக செலுத்த வேண்டும்.
  - ❖ சர்தேஷ்முகி - பத்தில் ஒரு பங்கு (1/10) அரசருக்கான கட்டணமாக செலுத்த வேண்டும்.
- கிராமங்கள் தேஷ்முக் என்பவர்களால் நிருவகிக்கப்பட்டது.
- 20 முதல் 100 கிராமங்கள் வரை அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன.
- ஒவ்வொரு கிராமத்திலும் பட்டீல் என்ற அதிகாரம் மிக்க கிராமத்தலைவர் இருந்தார்.
- அவருக்கு உதவியாக ஒரு கணக்கரும், குல்கர்னி என்ற ஆவணக் காப்பாளரும் பணியாற்றினர்.

**இராணுவம்:**

- ஆரம்ப காலங்களில் காலாட்படையே அவரது இராணுவத்தின் முதுகெலும்பாக திகழ்ந்தது.
- சிவாஜியின் படையெடுப்புகள் சமவெளிகளை நோக்கி நீட்சி பெற்றபோது குதிரை படை பெருகியது.
- ஒவ்வொரு படைவீரனும் சிவாஜியால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- பணிநிறைவு பெற்ற படைத்தளபதிகளின் பொறுப்பில் கோட்டைகள் விடப்பட்டன.

www.kalvinews.com

**அஷ்டபிரதான்**

- எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவிற்கு அஷ்டப்பிரதான் எனப் பெயரிட்டார்.
- மராத்தியப் பேரரசில் பேஷ்வா என்பவர் நவீனகால பிரதமருக்கு இணையானவர்.
- இவர்கள் சத்ரபதிகளுக்கு துணை அதிகாரிகளாய் இருந்தனர்.
- விளைச்சளில் ஐந்தில் மூன்று பங்கை (3 / 5) விவசாயிகள் எடுத்துக்கொண்டு இரண்டு பங்கை (2 / 5) அரசுக்கு நிலவரியாக செலுத்தினர்.
- நீதித்துறையில் சிவில் வழக்குகள் பஞ்சாயத்து எனப்படும் கிராமக் குழுக்களால் தீர்த்து வைக்கப்பட்டன.
- குற்றவியல் வழக்குகள் சாஸ்திரங்கள் அடிப்படையில் விசாரித்து தீர்ப்பளிக்கப்பட்டன.

**அஷ்டபிரதானின் பொறுப்புகள்.**

| | |
|---|---|
| பந்த்பிரதான் | பிரதம அமைச்சர் |
| அமத்தியா / மஜும்தார் | நிதியமைச்சர் |
| சுர்நாவிஸ் / சச்சீவ் | செயலர் |
| வாக்கிய-நாவிஸ் | உள்துறை அமைச்சர் |
| சர் - இ - நௌபத் / சேனாபதி | தலைமைத் தளபதி |
| சுமந்த் / துபிர் | வெளியுறவுத்துறை அமைச்சர் |
| நியாயதீஷ் | தலைமை நீதிபதி |
| பண்டிட்ராவ் | தலைமை அர்ச்சகர் |

**சாம்பாஜி**

- சிவாஜியின் மறைவிற்குப் பின் அவரது மற்றொரு மனைவியான சோயரபாய் மற்றும் அனாஜி தத்தோ ஆகியோர் சிவாஜியின் இரண்டாவது மகனான ராஜாராமை அரசனாக்க முயற்சி செய்தார்கள்.
- இந்த சூழ்ச்சிக்குப் பிறகு அவரது மகன் சாம்பாஜி ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- ஔரங்கசீப்பிற்கு எதிராக கலகம் செய்த அவரது மகன் அக்பருக்கு, சாம்பாஜி அடைக்கலம் கொடுத்தார்.
- இச்செயலால் ஔரங்கசீப் கோபமடைந்தார்.
- 1681 இல் ஔரங்கசீப் தக்காணத்தை வந்தடைந்தார்.
- 1687 இல் பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் கைப்பற்றினார்.
- சாம்பாஜி தம் குடும்ப அர்ச்சகரும் புகழ்பெற்ற அறிஞரும் கவிஞருமான கவிகலாஷ் என்பவரின் கைப்பாவையாக இருந்தார்.
- ஔரங்கசீப், சாம்பாஜி மற்றும் கவிகலாஷ் ஆகிய இருவரையும் கைது செய்து சித்திரவதைக்கு உள்ளாக்கிக் கொன்றார்.

**ஷாகு மகாராஜா**

- சிவாஜியின் பேரன் ஷாகு 1708 முதல் 1749 வரை ஆட்சி புரிந்தார்.
- ஷாகு என்றால் 'நேர்மையானவர்' என்று பொருள்
- இப்பெயர், சிவாஜியின் குணநலனிலிருந்து வேறுபடுத்திக் காட்ட ஔரங்கசீப்பால் வைக்கப்பட்டது.

www.kalvinews.com

- ஷாகு மகாராஜாவின் ஆட்சியின்போது மராத்தியரின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் அதிகரித்தன.
- மிகவும் மையப்படுத்தப்பட்ட வலுவான அரச கட்டமைப்பு உருவானது.

**பாலாஜி விஸ்வநாத்**

- சாதாரண வருவாய்த்துறை அலுவலராக பணியைத் தொடங்கிய பாலாஜி விஸ்வநாத் 1713இல் பேஷ்வா ஆனார்.
- ஷாகு, பாலாஜி விஸ்வநாத்தின் மூத்த மகனான பாஜிராவை அடுத்த பேஷ்வாவாக பணியமர்த்தினார்.
- 20 வயதில் பாஜிராவ் பேஷ்வா ஆனார்.

**பாஜிராவ்**

- முகலாயர் மற்றும் ஹைதராபாத் நிஜாமுக்கு எதிராக மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையை எடுக்க விரும்பினார்.
- தேஷ்முக்குகளை சார்ந்திருக்காமல் கெய்க்வாட், ஹோல்கார், சிந்தியா ஆகியோருக்கு அதிகாரங்களை வழங்கினார்.

**மராத்திய குடும்பங்கள்**

| | | |
|---|---|---|
| கெய்க்வாட் | - | பரோடா |
| பான்ஸ்லே | - | நாக்பூர் |
| ஹோல்கார் | - | இந்தூர் |
| சிந்தி / சிந்தியா | - | குவாலியர் |
| பேஷ்வா | - | பூனே |

- முகலாயர்களிடமிருந்து மாளவம் மற்றும் குஜராத்தை விடுவித்தார்.
- மகாராஷ்டிரத்தின் அரசன் எனவும் ஏனைய தக்காண பகுதிகளின் தலைவன் எனவும் ஷாகுவை அங்கீகரிக்க வைத்தார்.
- சௌத், சர்தேஷ்முகி ஆகிய வரிகளை வசூலித்தார்.
- படையில் 5000க்கும் குறைவான குதிரை வீரர்களே இருந்தனர்.
- பீரங்கிப் படைப்பிரிவு இல்லை.

**பாலாஜி பாஜிராவ்**

- பாலாஜி பாஜிராவ் பொறுப்பில் இருந்தபோது ஷாகு 1749 இல் இயற்கை எய்தினார்.
- வாரிசுரிமை போட்டியைத் தவிர்த்த பாலாஜி பாஜிராவ், சத்தாரா நகரை நிராகரித்து பூனேவை தலைநகர் ஆக்கினார்.
- விவசாய போர் வீரர்களின் காலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
- ஊதியம் வழங்கப்பட்ட வீரர்கள் கொண்டு வரப்பட்டனர்.
- வீரர்கள் வேளாண் பணிகளுக்கு சென்று வர அனுமதி மறுக்கப்பட்டது.
- மராத்திய அதிகாரிகளின் கீழிருந்த பெரிய பீரங்கிகளை பராமரிப்பது இயக்குவது போன்ற பணிகளுக்கு போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் அமர்த்தப்பட்டனர்.
- 1745 க்கும் 1751 க்கும் இடைப்பட்ட காலத்தில் ரகுஜி பான்ஸ்லேயின் தலைமையில் கொள்ளையடிப்பதை நோக்கமாகக் கொண்ட படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**பேஷ்வாக்களின் கீழ் மராத்தியர் நிர்வாகம்**

- வருவாய்த்துறை நிர்வாகம் காமவிஸ்தார் என்னும் முக்கிய அதிகாரிகளைக் கொண்டிருந்தது.
- வருவாய் வசூலுக்கான ஒப்பந்தங்கள் வருடத்திற்கு ஒருமுறை ஏலம் விடப்பட்டன.
- ஏலத்தில் வெற்றி பெற விரும்புபவர் நேர்மையானவராகவும், சொத்துகள் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- எதிர்பார்க்கப்படும் வசூல் தொகையில் மூன்றில் ஒரு பகுதி முதல் சரிபாதி வரை முதலில் செலுத்திட வேண்டும்.
- செய்தி பரிமாற்றக் கடிதங்கள் அடங்கிய கோப்புகளையும் கணக்கு பதிவேடுகளையும் மதிப்பீடு செய்கையில், ஆவணங்களைப் பராமரிப்பது ஆகியவற்றில் கவனமுடன் இருந்துள்ளனர்.
- பேஷ்வாக்களின் ஆட்சி நவீனமாக இருந்துள்ளது.

**மராத்தியர்களின் வீழ்ச்சி**

- மராத்தியர்களின் ஆட்சி 1761 இல் பானிபட்டில் முடிந்தது.
- ஆட்சி பரப்பை விரிவு செய்யும் மராத்தியர்களின் முயற்சி ஆப்கானிய அரசன் அகமதுஷா அப்தாலியால் தடுக்கப்பட்டது.
- அகமதுஷா அப்தாலி டெல்லியின் மீது படையெடுத்து வருவதற்கு முன்னர் எட்டு முறை படையெடுத்துள்ளார்.
- மூன்றாம் பானிபட் போரை (1761) பீரங்கிப் படைகள் தீர்மானித்தன.

**<u>பயிற்சி வினாக்கள்</u>**

1. அந்நிய படையெடுப்பாளர்களிடமிருந்து மராத்தியருக்கு பாதுகாப்பளித்தது _______.
   (1) காடுகள் (2) பாறைகளும் குன்றுகளும்
   (3) ஆறுகள் (4) நீர்வீழ்ச்சிகள்

2. மராத்தியர்களின் 'கொரில்லா' போர்முறை என்பது _______ தாக்குவது.
   (1) மறைந்திருந்து (2) நேருக்கு நேர் (3) கடல்வழியாக (4) வான்வழியாக

3. மராத்தியர் காலத்தை சேராத பக்தி இயக்க பெரியவர் _______.
   (1) ஏக்நாத் (2) கபீர்தாசர் (3) ராம்தாஸ் (4) துக்காராம்

4. மராத்திய பேரரசர் சிவாஜி கி.பி. _______ இல் பிறந்தார்.
   (1) 1625 (2) 1626 (3) 1627 (4) 162

5. தாதாஜி கொண்டதேவ் _______ ன் பாதுகாவலர்.
   (1) ஷாகு (2) சாம்பாஜி (3) ராஜாராம் (4) சிவாஜி

6. சிவாஜி முதன்முதலாக கைப்பற்றியது _______ கோட்டை.
   (1) தோர்னா (2) கோண்டுவானா (3) ரெய்கார் (4) சிவனேரி

7. 1659 இல் பீஜப்பூரின் தளபதியான _______ சிவாஜி கொன்றார்.
   (1) அப்சல்கானை (2) அகமதுகானை (3) ஆரம்கானை (4) முகமதுஷாவை

8. சிவாஜிக்கு எதிராக அனுப்பப்பட்ட ராஜபுத்திர தளபதி _______.
   (1) ராஜா மான்சிங் (2) ராஜா தோடர்மால் (3) ராஜா ஜெய்சிங் (4) ராஜா விஜய்சிங்

www.kalvinews.com

9. 'சத்ரபதி' என்ற சொல்லின் பொருள் _______.
(1) சிங்கம் (2) அரசன் / பேரரசன்
(3) அழகன் (4) வீரன்

10. சிவாஜி முடிசூட்டிக் கொண்ட ஆண்டு _______.
(1) 1761 (2) 1672 (3) 1673 (4) 1674

11. சிவாஜியின் முடிசூட்டுவிழா _______ கோட்டையில் நடைபெற்றது.
(1) தோர்னா (2) சிவனேரி (3) ரெய்கார் (4) பீஜப்பூர்

12. 20 முதல் 100 கிராமங்கள் _______ என்பவர்களால் நிர்வகிக்கப்பட்டது.
(1) குல்கர்னி (2) பட்டீல் (3) தாகூர் (4) தேஷ்முக்

13. _______ என்பவர் கிராமத்தில் அதிகாரமிக்க கிராமத் தலைவராக இருந்தார்.
(1) குல்கர்னி (2) பட்டீல் (3) தாகூர் (4) தேஷ்முக்

14. சிவாஜியின் காலத்தில் குல்கர்னி என்பவர் _______.
(1) கிராமத்தலைவர் (2) படைவீரர்
(3) ஆவணக் காப்பாளார் (4) கணக்கர்

15. தொடக்க காலத்தில் சிவாஜியின் இராணுவத்தின் முதுகெலும்பாக இருந்தது _______..
(1) யானைப்படை (2) குதிரைப்படை (3) காலாட்படை (4) ஒட்டகப்படை

16. கூற்று: சிவாஜி ஒவ்வொரு படைவீரரையும் நேரடியாகத் தேர்ந்தெடுத்தார்.
காரணம்: தம்முடைய கோட்டைகளின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் சிவாஜி மிக முக்கிய கவனம் செலுத்தினார்.
(1) கூற்று சரி,காரணம் தவறு (2) கூற்று தவறு, காரணம் சரி
(3) கூற்றிற்கான காரணம் சரி (4) கூற்றிற்கான காரணம் தவறு

17. சிவாஜியின் அஷ்டப்பிரதான் என்பது _______ அமைச்சர்கள் கொண்ட குழு ஆகும்.
(1) 6 (2) 7 (3) 8 (4) 9

18. தவறான இணையை கண்டுபிடி.
(1) அமத்தியா - நிதியமைச்சர்
(2) நியாயதிஸ் - தலைமைத் தளபதி
(3) சச்சீவ் - செயலர்
(4) பண்டிட்ராவ் - தலைமை அர்ச்சகர்

19. அரசருக்கு கட்டணமாக செலுத்தப்படும் வரி _______.
(1) சவுத் (2) சர்தேஷ்முகி (3) ஜிசியா (4) கிரஜ்

20. சுமந்த் என்பவர் _______ அமைச்சர்.
(1) பிரதம அமைச்சர் (2) வெளியுறவுத்துறை
(3) உள்துறை (4) நிதி

21. ஔரங்கசீப்புக்கு எதிராக கலகம் செய்த அவரது மகன் _______.
(1) பகதுர்ஷா (2) அசம்ஷா (3) முகமது கம்பக்ஷ் (4) முகமது அக்பர்

www.kalvinews.com

22. சாம்பாஜி _______ ன் மகன் அக்பருக்கு அடைக்கலம் கொடுத்தார்.
(1) பாபர் (2) ஔரங்கசீப் (3) சிவாஜி (4) ஷாஜகான்

23. பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் ஔரங்கசீப் கைப்பற்றிய ஆண்டு _______.
(1) 1684 (2) 1685 (3) 1686 (4) 1687

24. _______ கவிகலாஷ் என்ற தனது குருவின் கட்டுப்பாட்டில் இருந்தார்.
(1) சிவாஜி (2) ஷாஜி (3) சாம்பாஜி (4) ஷாகு

25. சிவாஜியின் பேரன் ஷாகு பதவிக்கு வந்த ஆண்டு _______.
(1) 1706 (2) 1707 (3) 1708 (4) 1709

26. ஷாகுவுக்கு / சிவாஜியின் பேரனுக்கு 'ஷாகு' என பெயர் சூட்டியவர் _______.
(1) சிவாஜி (2) சாம்பாஜி (3) அனாஜி (4) ஔரங்கசீப்

27. 'நேர்மையானவர்' என்ற பொருள் கொண்ட பெயர் _______.
(1) சிவாஜி (2) ஷாஜி (3) சாம்பாஜி (4) ஷாகு

28. கூற்று: ஷாகுவின் ஆட்சியில் வலுவான அரச கட்டமைப்பு உருவானது.
காரணம்: ஷாகுவிடம் பணிபுரிந்தோருக்கு அதிகாரபூர்வமான உரிமைகள் வழங்கப்படவில்லை.
(1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்று தவறு, காரணம் சரி
(3) கூற்று காரணம் இரண்டும் சரி (4) கூற்று காரணம் இரண்டும் தவறு

29. ஷாகு சுமார் _______ ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.
(1) 45 (2) 30 (3) 40 (4) 10

30. ஷாகுவின் ஆட்சிக்காலம் _______ முதல் _______ வரை.
(1) 1707 - 1749 (2) 1707 - 1047 (3) 1708 - 1748 (4) 1708 - 1749

31. ஷாகுவிடம் வருவாய்த்துறை அலுவலராக இருந்து பேஷ்வாவாக ஆனவர் _______.
(1) பாஜிராவ் (2) பாலாஜி விஸ்வநாத்
(3) பாலாஜி பாஜிராவ் (4) ரகுநாத்ராவ்

32. பாஜிராவ் இராணுவத்தில் மாற்றம் செய்தபோது பாரம்பரிய செல்வாக்குமிக்க _______ களுக்கு அதிகாரத்தை குறைத்தார்.
(1) கெய்க்வாட் (2) ஹோல்கர் (3) சிந்தியா (4) தேஷ்முக்

33. மகாராஷ்டிரத்தின் அரசனாக, பேரரசர் ஷாகுவால் அங்கீகரிக்கப்பட்டவர் _______.
(1) பாஜிராவ் (2) பாலாஜி விஸ்வநாத்
(3) பாலாஜி பாஜிராவ் (4) ரகுநாத்ராவ்

34. பொருத்துக.
(a) பேஷ்வா - அ. பரோடா
(b) ஹோல்கர் - ஆ. குவாலியர்
(c) சிந்தியா - இ. இந்தூர்
(d) கெய்க்வாட் - ஈ. நாக்பூர்
(e) பான்ஸ்லே - உ. பூனே

www.kalvinews.com

(1) a - உ b - இ c - அ d - ஆ e - ஈ (2) a - ஈ b - அ c - ஆ d - இ e - உ
(3) a - உ b - இ c - ஆ d - அ e - ஈ (4) a - அ b - ஆ c - உ d - ஈ e - இ

35. பாலாஜி பாஜிராவ் தனது தலைநகரை சத்தாராவிலிருந்து _______ க்கு மாற்றினார்.
(1) குவாலியர் (2) நாக்பூர் (3) பூனே (4) பரோடா

36. விவசாயப் போர் வீரர்களை மாற்றி ஊதியம் பெறும் போர் வீரர்கள் கொண்ட படை _______ காலத்தில் அமைக்கப்பட்டது.
(1) பாஜிராவ் (2) பாலாஜி விஸ்வநாத்
(3) பாலாஜி பாஜிராவ் (4) ரகுநாத்ராவ்

37. மராத்திய படையில் பீரங்கிகளை பராமரிக்க அமர்த்தப்படாத ஐரோப்பியர்கள் _______.
(1) பிரெஞ்சுகாரர்கள் (2) டேனியர்கள் (3) ஆங்கிலேயர்கள் (4) போர்ச்சுகீசியர்கள்

38. 1745 முதல் 1751 வரை மராத்திய தளபதி _______ பான்ஸ்லே தலைமையில் கொள்ளையடிப்பதை நோக்கமாகக் கொண்ட படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
(1) சிவாஜி (2) ஷாஜி (3) சாம்பாஜி (4) ரகுஜி

39. பேஷ்வாக்களின் வருவாய்த்துறை நிர்வகத்தின் முக்கிய அதிகாரி _______.
(1) தேஷ்பான்டே (2) தரக்தார் (3) காமவிஸ்தார் (4) மாம்லட்கர்

40. _______ களின் வீழ்ச்சிக்கு ராணுவரீதியான பங்களிப்பை செய்தவர்கள் பேஷ்வாக்கள்.
(1) சுல்தானியர் (2) மராத்தியர் (3) முகலாயர் (4) ஆங்கிலேயர்

41. மராத்திய பேரரசு _______ ஆண்டு முடிவுக்கு வந்தது.
(1) 1761 (2) 1762 (3) 1671 (4) 1672

42. அகமது ஷா அப்தாலி டெல்லியின் மீது படையெடுத்து வருவதற்கு முன் _______ முறை படையெடுத்து வந்துள்ளார்.
(1) 9 (2) 10 (3) 12 (4) 8

43. மூன்றாம் பானிபட் போர் நடைபெற்ற ஆண்டு _______.
(1) 1671 (2) 1761 (3) 1672 (4) 1762

44. மூன்றாம் பானிபட் போரின் வெற்றியை _______ படைகள் தீர்மானித்தன.
(1) காலாட்படை (2) யானை (3) குதிரை (4) பீரங்கி

45. சிவாஜியின் அரசியல் _______ வட்டத்தில் அவர் மேலாதிக்கம் செலுத்தவில்லை.
(1) முதல் (2) இரண்டாவது (3) மூன்றாவது (4) நான்காவது

46. சரியான வரிசையைத் தேர்ந்தெடு.
(a) ஷாகு
(b) சிவாஜி
(c) ஷாஜி
(d) பான்ஸ்லே சாம்பாஜி
(1) (a), (b), (c), (d) (2) (c), (b), (d), (a) (3) (d), (c), (b), (a) (4) (b), (c), (a), (d)

47. சிவாஜியின் ஆசிரியராகவும் மற்றும் பாதுகாவலராகவும் இருந்தவர்

(1) தாதாஜி கொண்ட தேவ் (2) கவிகலாஷ்

(3) ஜீஜாபாய் (4) ராம்தாஸ்

48. மராத்திய பிரதம மந்திரிகள் _______ என அழைக்கப்பட்டார்கள்

(1) தேஷ்முக் (2) பேஷ்வா (3) பண்டிட்ராவ் (4) பட்டீல்

49. சாம்பாஜியின் தினசரி வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்திய அவருடைய குரு _______.

(1) ஷாகு (2) அனாஜிதத்தா

(3) தாதாஜிகொண்டதேவ் (4) கவிகலாஷ்

50. குஜராத் மற்றும் மாளவத்தை முகலாய ஆதிக்கத்திலிருந்து விடுபட அவர்களுக்குகெதிராக போரை அறிவித்தவர்

(1) பாலாஜி விஸ்வநாத் (2) பாஜிராவ்

(3) பாலாஜி பாஜிராவ் (4) ஷாகு

51. மராத்தியர்களின் குறுகியகாலப் பேரரசு 1761 ஆம் ஆண்டு _______ என்ற இடத்தில் சோகமாய் முடிந்தது.

(1) பானிப்பட் (2) டெல்லி (3) ஆக்ரா (4) மும்பை

52. சிவாஜியைத் தொடர்ந்து _______ உடனான சச்சரவிற்குப் பின்னர் சாம்பாஜி ஆட்சிப் பொறுப்பேற்றார்.

(1) ஷாகு (2) அக்பர் (3) பாபர் (4) அனாஜிதத்தோ

53. அஷ்ட பிரதானில் இடம்பெற்ற பிரதம அமைச்சர்

(1) அக்பர் (2) பாபர் (3) பந்த்பிரதான் (4) சுமந்த்

54. அஷ்டபிரதானில் இடம்பெற்ற நிதியமைச்சர் _______.

(1) பண்டிட்ராவ் (2) துபிர் (3) சுமந்த் (4) அமத்தியா

55. அஷ்டபிரதானின் செயலர் _______.

(1) துபிர் (2) சுமந்த் (3) அமத்தியா (4) சச்சீவ்

56. அஷ்டபிரதானில் இடம்பெற்ற உள்துறை அமைச்சர் _______.

(1) வாக்கிய நாவிஸ் (2) சச்சீவ் (3) துபிர் (4) சுமந்த்

57. அஷ்டபிரதானில் இடம்பெற்ற தலைமை தளபதி _______.

(1) பந்த் பீரதான் (2) சச்சீவ் (3) சர் - இ- நௌபத் (4) துபிர்

58. அஷ்டபிரதானில் இடம்பெற்ற தலைமை நீதிபதி _______.

(1) சுமந்த் (2) சச்சீவ் (3) துபிர் (4) நியாயதிஸ்

59. அஷ்டபிரதானில் இடம் பெற்ற தலைமை அர்ச்சகர்.

(1) பண்டிட்ராவ் (2) அமத்தியா (3) துபிர் (4) சுமந்த்

www.kalvinews.com

60. பொருத்துக

i. ஷாஜி பான்ஸ்லே - 1. சிவாஜியின் தாய்

ii. சாம்பாஜி - 2. பீஜப்பூர் தளபதி

iii. ஷாகு - 3. சிவாயின் தந்தை

iv. ஜீஜாபாய் - 4. சிவாஜியின் மகன்

v. அப்சல்கான் - 5. சிவாஜியின் பேரன்

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 3 | 4 | 5 | 1 | 2 |
| (2) | 3 | 4 | 1 | 2 | 5 |
| (3) | 2 | 3 | 4 | 5 | 1 |
| (4) | 5 | 3 | 2 | 4 | 1 |

61. பொருத்துக

i. அமத்தியா - 1. வெளியுறவுத் துறை அமைச்சர்

ii. வாக்கிய நாவிஸ் - 2. தலைமை தளபதி

iii. சுமந்த் - 3. நிதி அமைச்சர்

iv. சேனாதிபதி - 4. உள்துறை அமைச்சர்

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | 3 | 4 | 1 | 2 |
| (2) | 3 | 1 | 2 | 4 |
| (3) | 4 | 3 | 2 | 1 |
| (4) | 2 | 1 | 3 | 4 |

62. சிவாஜி பின்பற்றிய போர் முறை ________.

(1) துலுக்மா (2) கொரில்லா (3) பீரங்கி முறை (4) நவீன போர் முறை

63. அரபிக் கடலில் அமைந்திருந்த முகலாயர்களின் முக்கிய துறைமுகம் ________.

(1) கராச்சி (2) கொச்சின் (3) கோவா (4) சூரத்

64. கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணத்தைக் காண்க.

கூற்று: பீஜப்பூர் சுல்தான் சிவாஜியின் தந்தையை சிறை வைத்தார்.

காரணம்: சிவாஜியின் இராணுவ நடவடிக்கைகள் பீஜப்பூர் சுல்தானை சினங்கொள்ளச் செய்தன.

(1) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல

(2) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

(3) கூற்று தவறு காரணம் சரி

(4) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

65. பொருந்தாததைக் கண்டுபிடிக்க.

(1) சுர்நாவிஸ் (2) வாக்கிய நாவிஸ் (3) சுமந்த் (4) காமவிஸ்தார்

66. பொருந்தாததைக் கண்டுபிடிக்க.

(1) ரகுஜி (2) சிவாஜி (3) சாம்பாஜி (4) ஷாகு

www.kalvinews.com

67. கீழ்க்கண்ட கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.

கூற்று: மராத்திய போர்வீரர்கள் தங்கள் வசிப்பிடத்திற்குத் தொலைவில் உள்ள கோட்டைகளிலும், நகரங்களிலும் வாழ்ந்தனர்.

காரணம்: மராத்திய வீரர்கள் ஒவ்வோர் ஆண்டும் போர்க்களத்திலிருந்து தங்கள் நிலங்களின் வேளாண் பணிகளுக்காகச் சென்று வருவற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

(1) கூற்றிற்கான காரணம் சரி
(2) கூற்றிற்கான காரணம் தவறு
(3) கூற்று சரி, காரணம் தவறு
(4) கூற்று மற்றும் காரணம் தவறு

68. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.

வாக்கியம் I: செய்திப்பரிமாற்றக் கடிதங்கள் அடங்கிய கோப்புகளையும், கணக்குப் பதிவேடுகளையும், மதிப்பீடு செய்கையில், ஆவணங்களைத் துல்லியமாகப் பராமரிப்பதில் பேஷ்வாக்கள் கவனமுடன் இருந்தனர்.

வாக்கியம் II: இரண்டாம் பானிப்பட் போரில் பீரங்கிப்படை முக்கியத்துவம் பெற்றிருந்தது.

(1) I சரி
(2) II சரி
(3) I மற்றும் II சரி
(4) I மற்றும் II தவறு

69. கால வரிசைப்படி நிகழ்வுகளை வரிசைப்படுத்துக

i. சிவாஜியின் தந்தை இறந்தவுடன் ஜாவலியின் மீது படையெடுத்தார்.

ii. பாலாஜி விஸ்வநாத் பேஷ்வாவாக பொறுப்பேற்றார்.

iii. பாலாஜி பாஜிராவ் அரசப்பதவி ஏற்றார்.

iv. சிவாஜி, தன் பாதுகாவலர் இறந்தவுடன் சுதந்திரமான அரசரானார்.

(1) iv, iii, ii, I
(2) iv, i, ii, iii
(3) i, iv, iii, ii
(4) iii, i, ii, iv

70. கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.

கூற்று: பாஜிராவ் இராணுவ தலைமை தளபதிக்கான அதிகாரங்களை தமதாக்கிக் கொண்டார்.

காரணம்: தேஷ்முக்குகளை சார்ந்திருக்க விரும்பவில்லை.

(1) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை
(2) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே
(3) கூற்று தவறு, காரணம் சரி
(4) கூற்று காரணம் இரண்டுமே தவறு

71. மராத்தியருக்கு புகழ் சேர்த்தவர் _______.

(1) சிவாஜி
(2) ஷாஜி பான்ஸ்லே
(3) ஷாகு
(4) சாம்பாஜி

72. கொரில்லா போர் முறைக்கு தலைவராக இருந்தவர்.

(1) தாதாஜி கொண்ட தேவ்
(2) சிவாஜி
(3) சந்திரராவ் மோர்
(4) ஷாஜி பான்ஸ்லே

73. தக்காணம் முழுவதிலும் மராத்தியர்கள் _______, _______ வரிகளை வசூலித்தனர்.

(1) நிலவரி, வருவாய் வரி
(2) சௌத், சர்தேஷ்முகி
(3) சொத்து வரி, வேளாண் வரி
(4) குடிநீர் வரி, குப்பை வரி.

www.kalvinews.com

74. கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.
கூற்று: பீஜப்பூர், அகமதுநகர் சுல்தான்கள் மராத்தியர்களை தங்கள் குதிரைப்படையில் பணியமர்த்தினர்.
காரணம்: இஸ்லாமிய வீரர்களின் அதிகாரத்தை பெற வேண்டும் என்ற ஆசையை சமன் செய்ய உதவியது.
(1) கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை
(2) கூற்று சரி காரணம் தவறு
(3) கூற்று காரணம் இரண்டும் சரி
(4) கூற்று, காரணம் இரண்டும் தவறு

75. கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.
கூற்று: மராத்திய மக்கள் இந்தியாவின் ஏனைய மக்களிடம் இருந்து வேறுபட்டு இருந்தனர்.
காரணம்: மராத்திய நாட்டின் புவியியல் கூறுகள் மராத்தியர்களிடையே சில தனித்தன்மை வாய்ந்த பண்புகளை வளர்த்திருந்தன.
(1) கூற்று சரி காரணம் தவறு
(2) கூற்று, காரணம் இரண்டும் சரி
(3) கூற்று, காரணம் இரண்டும் தவறு
(4) கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை

76. மராத்தியர்களிடையே ஒற்றுமையை வளர்த்தவை _______.
(1) பண்பாடு (2) பழக்கவழக்கம்
(3) மராத்திய மொழியும் இலக்கியமும் (4) இவற்றில் ஏதும் இல்லை

77. சிவாஜி கோண்டுவானா கோட்டையை கைப்பற்றிய ஆண்டு _______.
(1) 1640 (2) 1645 (3) 1646 (4) 1648

78. சிவாஜி தோர்ணா கோட்டையை கைப்பற்றிய ஆண்டு _______.
(1) 1646 (2) 1645 (3) 1641 (4) 1656

79. சிவாஜி புனரமைத்த கோட்டை _______.
(1) கோண்டுவானா (2) தோர்ணா (3) ரெய்கார் (4) புரந்தர்

80. சிவாஜி ஜாவலியைக் கைப்பற்றிய ஆண்டு _______.
(1) 1761 (2) 1630 (3) 1566 (4) 1656

81. ஜாவலியை _______ என்பவர் ஆட்சி செய்தார்.
(1) சந்திர ராவ் மோர் (2) அப்சல்கான் (3) சாம்பாஜி (4) தாதாஜி கொண்டதேவ்

82. சாஸ்திரங்கள் என்பது _______.
(1) இஸ்லாமிய சட்டங்கள் (2) இந்து சட்ட நூல்கள்
(3) அரசியல் சாசனம் (4) கல்வெட்டுகள்

83. ஔரங்கசீப்பின் மாமனார் _______.
(1) அக்பர் (2) ராஜா ஜெய்சிங் (3) துர்காதாஸ் (4) ஷெஸ்டகான்

84. சிவாஜி இரண்டாவது முறையாக சூரத்தை கைப்பற்றிய ஆண்டு _______.
(1) 687 (2) 1674 (3) 1656 (4) 1670

www.kalvinews.com

85. சிவாஜியின் அரசியல் முறை _______ வட்டங்களைக் கொண்டது

(1) 3 (2) 5 (3) 2 (4) 4

86. சௌத் என்பது _______ ஐ குறிக்கிறது.

(1) பத்தில் ஒரு பங்கு வரி

(2) மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு வரி

(3) மூன்றில் ஒரு பங்கு வரி

(4) இவற்றில் ஏதும் இல்லை

87. சிவாஜியின் அரசியல் முறை _______ வட்டத்தில் எந்த வகையிலும் மக்கள் துன்புறுத்தப்படுவதை அனுமதிக்கவில்லை.

(1) முதல் (2) இரண்டாவது (3) மூன்றாவது (4) நான்காவது

88. மராத்திய மக்கள் சிவாஜி அரசுக்கு செலுத்தும் பாதுகாப்புக் கட்டணம் _______ ஆகும்.

(1) சர்தேஷ்முகி (2) சௌத்

(3) ஆறில் ஒரு பங்கு (4) சுங்கவரி

89. சர்தேஷ்முகி என்பது _______ ஆகும்.

(1) பாதுகாப்புக் கட்டணம் (2) அரசருக்கான கட்டணம்

(3) நிலவரி (4) சொத்துவரி

90. _______ வட்டத்தில் கொள்ளையடிப்பது மட்டுமே சிவாஜியின் நோக்கமாக இருந்தது.

(1) முதல் (2) இரண்டாவது (3) மூன்றாவது (4) நான்காவது

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 16 | (3) | 31 | (2) | 46 | (2) | 61 | (1) | 76 | (3) |
| 2 | (1) | 17 | (3) | 32 | (4) | 47 | (1) | 62 | (2) | 77 | (1) |
| 3 | (2) | 18 | (2) | 33 | (1) | 48 | (2) | 63 | (4) | 78 | (2) |
| 4 | (3) | 19 | (2) | 34 | (3) | 49 | (4) | 64 | (2) | 79 | (2) |
| 5 | (4) | 20 | (2) | 35 | (3) | 50 | (2) | 65 | (4) | 80 | (3) |
| 6 | (2) | 21 | (4) | 36 | (3) | 51 | (1) | 66 | (1) | 81 | (2) |
| 7 | (1) | 22 | (2) | 37 | (2) | 52 | (4) | 67 | (1) | 82 | (1) |
| 8 | (3) | 23 | (4) | 38 | (4) | 53 | (3) | 68 | (1) | 83 | (3) |
| 9 | (2) | 24 | (3) | 39 | (3) | 54 | (4) | 69 | (2) | 84 | (4) |
| 10 | (4) | 25 | (3) | 40 | (3) | 55 | (4) | 70 | (1) | 85 | (1) |
| 11 | (3) | 26 | (4) | 41 | (1) | 56 | (1) | 71 | (1) | 86 | (2) |
| 12 | (4) | 27 | (4) | 42 | (4) | 57 | (3) | 72 | (2) | 87 | (4) |
| 13 | (2) | 28 | (1) | 43 | (2) | 58 | (4) | 73 | (2) | 88 | (4) |
| 14 | (3) | 29 | (3) | 44 | (4) | 59 | (1) | 74 | (3) | 89 | (3) |
| 15 | (3) | 30 | (4) | 45 | (2) | 60 | (1) | 75 | (2) | 90 | (2) |

www.kalvinews.com

## வகுப்பு - 7 - பருவம் - 1 - புவியியல்

### 3. வளங்கள்

தொகுப்பு:
**திரு.செ.பெரியசாமி, M.Sc.,B.Ed.,M.A.,M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி,**
**கொ.ஒட்டப்பட்டி, கரூர் மாவட்டம்.**

மேம்பாடு:
**திரு.மு.ச.நபில் புகாரி,M.Sc.,B.Ed.,M.Phil.,M.A.,**
**ஆசிரியப் பயிற்றுனர் (புவியியல்),**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வட்டார வள மையம், கடலூர் ஒன்றியம்,**
**கடலூர் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- வளம் என்பது மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவை ஆகும்.
- உருவாகும் விதத்தின் அடிப்படையில் வளங்கள் இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

  (1) **உயிரியல் வளங்கள் (Biotic Resources)** - காடுகள், பயிர்கள், பறவைகள், விலங்குகள், மனிதன் உள்ளிட்ட உயிர்க் கோளத்தில் இருந்து பெறப்பட்ட வளங்கள் மற்றும் புதை படிம எரிபொருள்கள் (நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு)

  (2) **உயிரற்ற வளங்கள் (Abiotic Resources)** - உயிரற்ற பொருள்களிலிருந்து பெறப்பட்டவை. (தங்கம், வெள்ளி, இரும்பு, தாமிரம், நிலம், நீர், சூரிய ஒளி, உலோக தாதுக்கள், காற்று.
- **புதுப்பிக்கும் தன்மையின் அடிப்படையில் வளங்களை இருவகைப்படுத்தலாம்.**

  **(1)** புதுப்பிக்க இயலும் வளங்கள் **(Renewable Sources)** - சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், நீராற்றல்

  **(2)** புதுப்பிக்க இயலாத வளங்கள் **(Non-Renewable Sources)** - புதை படிம எரிபொருள்கள் (நிலக்கரி, பெட்ரோலியம்) மற்றும் தாது வளங்கள் (இரும்பு, தாமிரம், பாக்ஸைட், தங்கம், வெள்ளி மற்றும் பிற)

(1) **புதுப்பிக்க இயலும் வளங்கள் (Renewable Sources) :**

**சூரிய ஆற்றல்:**

- சூரிய ஆற்றல் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காது.
- சூரிய கலமானது நேரடியாகச் சூரிய ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றக் கூடியது.
- தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி சூரிய ஒளி மின்சக்தி திட்டம் 4550 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**காற்று ஆற்றல்:**

- காற்று ஆற்றல் என்பது ஒரு தூய்மையான ஆற்றலாகும். உலகில் வளர்ச்சியடைந்த மற்றும் வளரும் நாடுகள் காற்று ஆற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

**இந்தியாவின் முக்கிய காற்றாலைப் பண்ணைகள்**

| வ.எண் | காற்றாலைப் பண்ணைகள் | மாவட்டம் | மாநிலம் | நிறுவப்பட்ட திறன் (மெகாவாட்) |
|---|---|---|---|---|
| 1 | முப்பந்தல் | கன்னியாகுமரி | தமிழ்நாடு | 1500 |
| 2 | ஜெய்சால்மர் | ஜெய்சால்மர் | ராஜஸ்தான் | 1064 |
| 3 | பிரமன்வேல் | துலே | மஹாராஷ்டிரா | 528 |
| 4 | தால்கான் | சங்லி | மஹாராஷ்டிரா | 278 |
| 5 | தாமன்ஜோதி | தாமன்ஜோதி | ஒடிஷா | 99 |

www.kalvinews.com

**நீர் மின் சக்தி:**

- நீர்மின் சக்தியானது, அதிக திசை வேகத்துடன் நகரும் நீர் மற்றும் பெரிய நீர்வீழ்ச்சிகளில் விசையாழிகள் மற்றும் மின் மாற்றிகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.
- சீனாவில் உள்ள த்ரீகார்ஜஸ் அணை நீர்மின்சக்தி திட்டம், உலகின் மிகப்பெரிய நீர் மின்சக்தி திட்டமாகும்.

**இந்தியாவில் நீர் மின் சக்தி உற்பத்தி செய்யப்படும் இடங்கள்:**

| வ.எண் | நீர் மின் சக்தி திட்டம் | மாநிலம் | நிறுவப்பட்ட திறன் (மெகாவாட்) |
|---|---|---|---|
| 1 | தெகிரி அணை | உத்ரகாண்ட் | 2400 |
| 2 | ஸ்ரீசைலம் அணை | ஆந்திரபிரதேசம் | 1670 |
| 3 | நாகர்ஜூனசாகர் அணை | ஆந்திரபிரதேசம் | 960 |
| 4 | சர்தார் சரோவர் அணை | குஜராத் | 1450 |
| 5 | பக்ராநங்கல் அணை | பஞ்சாப் | 1325 |
| 6 | கொய்னா அணை | மஹாராஷ்டிரா | 1960 |
| 7 | மேட்டூர் அணை | தமிழ்நாடு | 120 |
| 8 | இடுக்கி அணை | கேரளா | 780 |

**உலகளவில் நீர் மின் சக்தி உற்பத்தி செய்யப்படும் நாடுகள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நாடு | நதி | நிறுவப்பட்ட திறன் (மெகாவாட்) |
|---|---|---|---|---|
| 1 | த்ரிகார்ஜஸ் அணை | சீனா | யாங்ட்ஸி | 22,500 |
| 2 | இட்டைப்பு அணை | பிரேசில் மற்றும் பராகுவே | பரானா | 14,000 |
| 3 | ஜிலுடு அணை | சீனா | ஜின்ஷா | 13,860 |
| 4 | குரி அணை | வெனிசுலா | கரோணி | 10,235 |
| 5 | துக்குருயி அணை | பிரேசில் | டொகாண்டின்ஸ் | 8,370 |

**(2) புதுப்பிக்க இயலா வளங்கள் (Non-Renewable Sources):**

**(i) உலோக வளங்கள் (ii) அலோக வளங்கள் (iii) புதைபடிம எரிபொருள்கள்**

**உலோக வளங்கள்:**

- இரும்பு, தாமிரம், தங்கம், பாக்சைட், வெள்ளி மற்றும் மாங்கனீசு போன்றவை உலோக வளங்கள் ஆகும்.

**அலோக வளங்கள்:**

- மைக்கா, சுண்ணாம்புக் கல், ஜிப்சம், டோலமைட், பாஸ்பேட் போன்றவை உலோகமல்லாத அல்லது அலோக வளங்கள் ஆகும்.

**இரும்பு:**

- **இரும்பு, மேக்னடைட் மற்றும் ஹேமடைட் தாதுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்றன.**
- எஃகு உற்பத்தியில் மூலப்பொருள் இரும்புத்தாது மற்றும் 98% இரும்புத்தாது பிரித்தெடுக்கப்பட்டு எஃகு தயாரிக்கப்படுகிறது.
- உலகின் மொத்த இரும்பு உற்பத்தியில் 85% இரும்புத்தாது, சீனா, ஆஸ்திரேலியா, பிரேசில், இந்தியா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து பெறப்படுகின்றன.

www.kalvinews.com

- இந்தியாவில் 95% இரும்புத் தாதுக்கள் ஜார்கண்ட், ஒடிசா, மத்தியப் பிரதேசம், சட்டீஸ்கர், கர்நாடகா மற்றும் கோவா போன்ற மாநிலங்களில் கிடைக்கின்றன.
- தமிழகத்தில் கஞ்சமலையில் இரும்புத்தாது கிடைக்கிறது.

**தாமிரம்:**

- தாமிர உற்பத்தியில் நான்கில் மூன்று பங்கு (3/4) மின்சாரக் கம்பி வடங்கள், தொலைத்தொடர்பு கேபிள்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் தயாரிப்பதற்கு பயன்படுகிறது.
- **தாமிர உற்பத்தியில் 'சிலி நாடு' உலக அளவில் முதலிடம் வகிக்கிறது.**
- சீனா, பெரு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் தாமிரம் உற்பத்தி செய்யும் பிற நாடுகளாகும்.

**தங்கம்:**

- ஆபரணங்கள், பல் மருத்துவத்திலும் தங்கம் பயன்படுகின்றன.
- **'சீனா' உலகில் அதிக அளவில் தங்கம் உற்பத்தி செய்யும் நாடாகும்.**
- ஆஸ்திரேலியா (2500 டன்), ரஷ்யா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், தென் ஆப்பிரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகள் தங்கம் உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகளாகும்.
- **உலக அளவில் தங்க இருப்பு அதிகமுள்ள முதன்மையான நாடு - ஆஸ்திரேலியா.**
- **இந்தியாவில் தங்கத்தை அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலம் - கர்நாடகா (கோலார் தங்க வயல்) உலகின் ஆழமான தங்கச் சுரங்கங்களுள் ஒன்றாகும்.**

**பாக்ஸைட்:**

- பாக்ஸைட் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கப்படுவது அலுமினியம். அலுமினியம் எடை குறைந்த, கடினமான மற்றும் விலை குறைந்தது என்பதால், உலக அளவில் கட்டுமானப் பணிக்குப் பிரபலமான ஒன்றாகிவிட்டது. இது, விமானங்கள், கப்பல்கள், ஆட்டோமொபைல்கள், தொடர்வண்டிப் பெட்டிகள் தயாரிப்பில் பயன்படுகிறது.
- அலுமினியத்துடன் சிறிய அளவிலான பிற உலோகங்களைச் சேர்ப்பதன் மூலம் இது தூய அலுமினியத்தை விட உயர்ரக உலோகக் கலவையை (அலாயினை) உருவாக்குகிறது. (எ.கா.) டியூராலுமின்.
- ஆஸ்திரேலியா உலகின் முன்னணி பாக்ஸைட் உற்பத்தி செய்யும் நாடாகும்.
- சீனா, பிரேசில், இந்தியா, கினியா, ஜமைக்கா மற்றும் ரஷ்யா பாக்ஸைட் உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- 1/4 **பங்கு பாக்ஸைட் தாது படிவுகள் கினியாவில் மட்டுமே உள்ளது.**
- இந்தியாவில் ஒடிசா, குஜராத், ஜார்கண்ட், மகாராஷ்டிரா, சட்டீஸ்கர், தமிழ்நாடு மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை பாக்ஸைட் உற்பத்தி செய்யும் மாநிலங்கள் ஆகும்.
- தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலையில் பாக்ஸைட் படிவுகள் அதிக அளவில் உள்ளன.

**வெள்ளி:**

- தங்கத்தைப் போன்று வெள்ளியும் விலைமதிப்புமிக்க ஓர் உலோகம் ஆகும்.
- வெள்ளி, பல் மருத்துவத்திலும் பயன்படுகிறது.
- மூன்றில் இரண்டு பங்கு (2/3) வெள்ளியானது பணம் ஈட்டும் நோக்கத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

www.kalvinews.com

- 'மெக்ஸிகோ' உலகின் முன்னணி வெள்ளி உற்பத்தி செய்யும் நாடாகும்.
- 50 சவீதத்திற்கு மேற்பட்ட வெள்ளியானது தென் அமெரிக்க நாடுகளில் காணப்படுகிறது.

**மாங்கனீசு:**

- மாங்கனீசு என்பது வெண் சாம்பல் நிறத்திலான, கடினமான, பளபளப்புடைய மற்றும் உடையக்கூடிய ஓர் உலோகம் ஆகும்.
- மாங்கனீசின் பொதுவான தாதுக்கள் **பைரோலுசைட் மாங்கனீசு, சைலேமெலேன்** மற்றும் **ரோடோக்ரோஸைட்** ஆகும்.
- மின்சார பேட்டரிகள் தயாரிப்பில் பயன்படுவதோடு, செங்கல், பானை, தரைதள தயாரிப்பில் மற்றும் வண்ணப் பொருள் தயாரிக்கவும் பயன்படுகிறது.
- மாங்கனீசு மூலக்கூறுகள் அழுக்கு நீக்கும் திரவம் மற்றும் சலவைத் தூள் தயாரிப்பிலும் பயன்படுகிறது.
- **தென் ஆப்பிரிக்கா உலகின் முன்னணி மாங்கனீசு உற்பத்தி நாடாகும்**.

**மைக்கா:**

- **மஸ்கோவைட் மற்றும் பயோடைட் ஆகியவை மைக்காவின் தாதுக்கள் ஆகும்**. மின் மற்றும் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் கனிமங்களில் இதுவும் ஒன்று. மசகு (கொழ கொழப்பான) எண்ணெய் மற்றும் அலங்காரச் சுவரொட்டிகள் தயாரிப்பில் பொடி வடிவில் சேர்க்கப்படுகிறது.
- **சீனா, மைக்கா உற்பத்தி செய்வதில் உலக அளவில் முன்னிலை வகிக்கிறது**.
- இந்தியாவில் 95% மைக்காவானது ஆந்திர பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் ஜார்கண்டில் கிடைக்கிறது.

**சுண்ணாம்புக்கல்:**

- மடிந்த கடல் உயிரினங்களின் எலும்புத்துண்டுகள் சிதைவுற்று ஏற்பட்ட படிவினால் உருவானவை **சுண்ணாம்புக்கல்** ஆகும்.
- பவளப்பாறை **ஃபோரோமினிப்பெரா மற்றும் மெல்லுடலிகள்** போன்றவற்றின் மடிவிற்குப் பின்னர் உருவாகும் 10% படிவுப் பாறைகள் சுண்ணாம்புக் கற்களாகும்.
- **போர்ட்லேண்ட் சிமெண்ட் சுண்ணாம்புக் கல்லிலிருந்து தயாரிக்கப்படுகிறது.**
- **உலகின் பாதிக்கு மேற்பட்ட சுண்ணாம்புக்கல் உற்பத்தி சீனாவில் தான் நடைபெறுகிறது**.
- இந்தியாவின் மொத்த உற்பத்தியில் நான்கில் மூன்று பங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.
- தமிழகத்தில் இராமநாதபுரம், திருநெல்வேலி, அரியலூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ளன.

**புதைபடிம எரிபொருள்:**

- இறந்துபோன தாவர மற்றும் விலங்குகளின் எச்சங்களில் இருந்து உருவானவை.
- ஹைட்ரோகார்பன்களில் இருந்து உருவானவை.
- இவை எரிக்கப்படும்பொழுது, வெப்ப ஆற்றலுக்கு சிறந்த ஆதாரங்களாக உள்ளன.
- நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு ஆகியவை புதைபடிம எரிபொருள்கள் ஆகும்.

**நிலக்கரி:** தாவரம் மற்றும் விலங்குகள் இறந்த பின்பு, அதன் எச்சங்கள் சதுப்பு நிலங்களின் அடியில் புதையுண்டன. இறுதியில் அவை பூமிக்கடியில் அதிகப்படியான வெப்பம் மற்றும் அழுத்தத்தின் காரணமாக நிலக்கரியாக இவை மாற்றமடைந்தன.

www.kalvinews.com

- நிலக்கரி திண்ம எரிபொருளாகும்.
- வீட்டு எரிபொருளாகவும், அனல் மின் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கான எரிபொருளாகவும் பயன்படுகிறது.
- நிலக்கரியில் உள்ள கார்பன் அளவைக்கொண்டு 4 வகையாக தரம் பிரிக்கப்பட்டுள்ளன.

  (1) **ஆந்த்ரசைட்** (Anthracite) (2) **பிட்டுமினஸ்** (Bituminous)

  (3) **லிக்னைட்** (Lignite) (4) **பீட்** (Peat)
- **உலகின் முன்னணி நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடு சீனா ஆகும்**. **இதனையடுத்து இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா, இந்தோனேசியா மற்றும் ரஷ்யாவும் நிலக்கரியை உற்பத்தி செய்கின்றன**.
- இந்தியாவில் - மேற்கு வங்கத்தில் உள்ள ராணிகஞ்ச், தமிழகத்தில் நெய்வேலி, ஜார்கண்டில் உள்ள ஜாரியா, தன்பாத் மற்றும் பொக்காரோ ஆகும்.

**பெட்ரோலியம்:**

- பாறைகளின் அடுக்குகளுக்கு இடையேயும் கடல் மற்றும் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள எண்ணெய் வயல்களில் இருந்தும் பெட்ரோலியம் எடுக்கப்படுகிறது.
- **பெட்ரோலியம்** மற்றும் அதன் துணை பொருள்கள் மதிப்புமிக்கதாக உள்ளதால் **"கருப்பு தங்கம்"** என அழைக்கப்படுகிறது.
- பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் முதன்மையான நாடுகள் சவுதி அரேபியா, ஈரான், ஈராக் மற்றும் கத்தார் ஆகும்.
- இந்தியாவில் அஸ்ஸாமில் - திக்பாய், மும்பையில் - டெல்டா பகுதிகள் பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் முன்னணி பகுதிகளாகும்.

**இயற்கை வாயு:**

- பெட்ரோலியப் படிவுகளுடன் காணப்படுகிறது. கச்சா எண்ணெய் மேற்பரப்பிற்கு வரும்போது வெளியேற்றப்படுகிறது.
- உலக அளவில் 50 சதவீதத்திற்கும் அதிகமான இயற்கை வாயு இருப்புகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ரஷ்யா, ஈரான் மற்றும் கத்தாரில் உள்ளது.
- இந்தியாவில் கிருஷ்ணா மற்றும் கோதாவரி டெல்டா, அஸ்ஸாம், குஜராத் மற்றும் மும்பையின் சில கடலோரப் பகுதிகளில் இயற்கை வாயு வளம் அமைந்துள்ளது.

**பயிற்சி வினாக்கள்:**

1. மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவை _______.

   (1) விலங்குகள் (2) வளங்கள் (3) பயிர்கள் (4) பறவைகள்

2. கூற்று: புதை படிம எரிபொருள்கள், உயிரியல் வளங்களுள் அடங்கும்.

   காரணம்: உயிரியல் வளங்கள் என்பவை காடுகள், பயிர்கள், பறவைகள், விலங்குகள், மனிதன் அடங்கிய உயிர்க் கோளத்திலிருந்து பெறப்பட்ட வளங்கள் ஆகும்.

   (1) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது.

   (2) கூற்று மற்றும் காரணம் சரி; ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (3) கூற்று தவறு, காரணம் சரி.

   (4) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

www.kalvinews.com

3. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

   (1) புதுப்பிக்கத்தக்க வளம் - சூரிய ஒளி, காற்று ஆற்றல், நீர் ஆற்றல்

   (2) புதுப்பிக்க இயலாத வளம் - காற்று ஆற்றல்

   (3) உயிரியல் வளம் - தங்கம், வெள்ளி

   (4) உயிரற்ற வளம் - இயற்கை வாயு

4. 'கமுதி' சூரிய ஒளி மின்சக்தி திட்டமானது எங்கு, எப்போது நிறைவேற்றப்பட்டது?

   (1) இராமநாதபுரம் செப்டம்பர் 2016 (2) கடலூர் ஆகஸ்ட் 2016

   (3) சென்னை செப்டம்பர் 2017 (4) பாண்டிச்சேரி ஆகஸ்ட் 2017

5. பொருத்துக:

| காற்றாலைப் பண்ணைகள் | | மாவட்டம் (மாநிலம்) |
|---|---|---|
| i. முப்பந்தல் | - | a) தாமன் ஜோதி (ஒடிசா) |
| ii. பிரமன்வேல் | - | b) சங்கி (மகாராஷ்டிரா) |
| iii. தால் கான் | - | c) கன்னியாகுமரி (தமிழ்நாடு) |
| iv. தாமன் ஜோதி | - | d) துலே (மகாராஷ்டிரா) |

   (1) i - d ii - c iii - b iv - a (2) i - c ii - d iii - a iv - b

   (3) i - b ii - c iii - d iv - a (4) i - c ii - d iii - b iv - a

6. உலகில் அதிக அளவில் நீர் மின்சக்தி உற்பத்தி செய்யும் நாடு _______.

   (1) இந்தியா (2) சீனா

   (3) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (4) கனடா

7. பொருத்துக:

| அணை | | மாநிலம் (மெகாவாட்) |
|---|---|---|
| i. தெகிரி அணை | - | a) தமிழ்நாடு (120 மெகாவாட்) |
| ii. ஸ்ரீ சைலம் அணை | - | b) உத்ரகாண்ட் (2400 மெகாவாட்) |
| iii. மேட்டூர் அணை | - | c) கேரளா (780 மெகாவாட்) |
| iv. இடுக்கி அணை | - | d) ஆந்திரபிரதேசம் (1670 மெகாவாட்) |

   (1) i - d ii - a iii - b iv - c (2) i - b ii - d iii - c iv - a

   (3) i - b ii - d iii - a iv - c (4) i - d ii - a iii - c iv - b

8. பொருத்துக:

| திட்டத்தின் பெயர் | | நாடு (நதி) |
|---|---|---|
| i. துக்குருயி அணை | - | a) பிரேசில் மற்றும் பராகுவே (பரானா) |
| ii. குரி அணை | - | b) சீனா (யாங்ட்ஸி) |
| iii. த்ரிகார்ஜஸ் அணை | - | c) வெனிசுலா (கரோணி) |
| iv. இட்டைப்பு அணை | - | d) பிரேசில் (டொகான்டின்ஸ்) |

   (1) i - d ii - a iii - c iv - b (2) i - d ii - c iii - b iv - a

   (3) i - b ii - c iii - a iv - d (4) i - d ii - c iii - a iv - b

www.kalvinews.com

9. தவறான இணையைக் கண்டறிக.

(1) ஸ்ரீசைலம் அணை - ஆந்திரபிரதேசம்

(2) சர்தார் சரோவர் அணை - குஜராத்

(3) கொய்னா அணை - மகாராஷ்டிரா

(4) ஜிலுடு அணை - உத்ரகாண்ட்

10. மனிதனால் முதலில் அறியப்பட்டு, பயன்படுத்தப்பட்ட உலோகங்களில் ஒன்று _______.

(1) இரும்பு (2) தாமிரம் (3) தங்கம் (4) வெள்ளி

11. புவியின் மேலோட்டில் இரும்பு எத்தனையாவது உலோகமாகக் காணப்படுகிறது?

(1) நான்கு (2) ஐந்து (3) ஒன்று (4) ஒன்று

12. கூற்று 1: புவி மேலோட்டின் பாறைகளில் காணப்படும் மேக்னடைட் மற்றும் ஹேமடைட் தாதுக்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன.

கூற்று 2: எஃகு உற்பத்தியில் மூலப்பொருள் இரும்புத்தாது மற்றும் 98% இரும்புத்தாது பிரித்தெடுக்கப்பட்டு எஃகு தயாரிக்கப்படுகிறது.

(1) கூற்று 1 சரி, 2 தவறு (2) கூற்று 2 சரி, 1 தவறு.

(3) கூற்று 1 மற்றும் 2 சரி (4) கூற்று 1 மற்றும் 2 தவறு.

13. உலகின் மொத்த இரும்பு உற்பத்தியில் 85% எந்த நாடுகளிலிருந்து கிடைக்கின்றன அவற்றை வரிசைப்படுத்துக.

(1) சீனா, ஆஸ்திரேலியா, பிரேசில், இந்தியா, ரஷ்யா

(2) அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, பிரேசில், பிரான்ஸ், இந்தியா

(3) ஜெர்மனி, ரஷ்யா, சீனா, இத்தாலி, டென்மார்க்

(4) ஆஸ்திரேலியா, ஜப்பான், நார்வே, டென்மார்க்

14. தமிழகத்தில் இரும்புத்தாது கிடைக்குமிடம் _______.

(1) ஆனைமலை (2) கஞ்சமலை (3) நீலகிரி (4) பச்சை மலை

15. இந்திய நாட்டின் மொத்த இருப்பில் 95% இரும்பு தாதுக்கள் கிடைக்கும் மாநிலங்களை வரிசைப்படுத்துக.

(1) ஜார்கண்ட், ஒடிசா, மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், கர்நாடகா, கோவா

(2) தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, சட்டீஸ்கர், குஜராத்

(3) ஜம்மு காஷ்மீர், ஹிமாச்சலப் பிரதேசம், உத்திரகாண்ட், உத்திர பிரதேசம், ஹரியானா, பஞ்சாப்

(4) மேற்கு வங்கம், பீகார், ராஜஸ்தான், டெல்லி, அருணாச்சல பிரதேசம், மேகாலயா

16. கூற்று (i): தாமிரம், மனித நுகர்வில் மூன்றாவது இடத்தினைப் பெறுகிறது.

கூற்று (ii): தாமிரமானது, வெப்பம் மற்றும் மின்சாரத்தினை எளிதில் கடத்தக் கூடியது.

கூற்று (iii): தாமிரத்தின் 3/4 பங்கானது மின்சாரக் கம்பி வடங்கள், தொலைத் தொடர்பு கேபிள்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் தயாரிப்பதற்கு பயன்படுகிறது.

கூற்று (iv): தாமிர உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முதலிடம் வகிக்கிறது.

(1) கூற்று (i), (ii), (iii), (iv) சரி (2) கூற்று (i), (ii), (iii), (iv) தவறு

(3) கூற்று (i), (ii), (iii) சரி (iv) தவறு (4) கூற்று (i), (iii), (iv) சரி (ii) தவறு

www.kalvinews.com

17. பல் மருத்துவத்தில் பயன்படும் உலோகங்கள் எவை?

(1) தங்கம், வெள்ளி (2) பாக்ஸைட், அலுமினியம்

(3) இரும்பு, மாங்கனீசு (4) மைக்கா, தாமிரம்

18. உலகில் அதிக அளவில் தங்கம் உற்பத்தி செய்யும் நாடு _______.

(1) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (2) சீனா

(3) ஆஸ்திரேலியா (4) இந்தியா

19. உலகளவில் தங்கம் இருப்பு அதிகம் உள்ள நாடு _______.

(1) ஆஸ்திரேலியா (2500 டன்) (2) இந்தியா (4500 டன்)

(3) கனடா (3500 டன்) (4) சீனா (1500 டன்)

20. 'கோலார் தங்க வயல்' அமைந்த மாநிலம் எது?

(1) மகாராஷ்டிரா (2) கர்நாடகா (3) ஆந்திரா (4) ஒடிசா

21. கூற்று1: அலுமினியமானது, பாக்சைட் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. எடை குறைந்தது, கடினமானது மற்றும் விலை குறைந்தது. எனவே, கட்டுமான பணிக்கு பயன்படுத்தப்படுகிறது.

கூற்று 2: அலுமினியத்துடன் சிறிய அளவிலான பிற உலோகங்களை சேர்ப்பதன் மூலம், தூய அலுமினியத்தை விட உயர்ரக உலோகக் கலவையை (அலாயினை) உருவாக்க இயலவில்லை.

(1) கூற்று 1 சரி 2 தவறு (2) கூற்று 1 தவறு 2 சரி

(3) கூற்று 1, 2 சரி (4) கூற்று 1, 2 தவறு

22. உலகில் பாக்ஸைட் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு _______.

(1) பிரேசில் (2) ரஷ்யா (3) ஆஸ்திரேலியா (4) கினியா

23. தமிழகத்தில் சேர்வராயன் மலையில் பாக்ஸைட் படிவுகள் அதிக அளவில் உள்ளன. இந்த சேர்வராயன் மலை எந்த மாவட்டத்தில் உள்ளது?

(1) நீலகிரி (2) திருச்சி (3) வேலூர் (4) சேலம்

24. உலகில் வெள்ளி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு _______.

(1) மெக்ஸிகோ (2) பெரு (3) சீனா (4) ரஷ்யா

25. _______ வெள்ளியானது, உலகளவில் தென் அமெரிக்க நாடுகளில் காணப்படுகிறது.

(1) 60% (2) 50% (3) 40% (4) 30%

26. கூற்று: மாங்கனீசு, மின்சார பேட்டரிகள் தயாரிக்கவும், செங்கல், பானை மற்றும் தரைத் தளம் தயாரிப்பு மற்றும் வண்ணப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

காரணம்: மாங்கனீசின் பொதுவான தாதுக்கள் பைரோலுஸைட், மாங்கனீசு, சைலேமெலேன் மற்றும் ரோடோக்ரோஸைட் ஆகும். இது நல்ல தரமான எஃகு உற்பத்திக்கு முக்கியமானதாகும்.

(1) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது.

(2) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை.

(3) கூற்று தவறு, காரணம் சரி.

(4) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

www.kalvinews.com

27. உலகில் நிலக்கரி உற்பத்தி செய்வதில் முன்னணி வகிக்கும் நாடு ______.

(1) இந்தியா (2) சீனா (3) ரஷ்யா (4) இத்தாலி

28. தமிழகத்தில் நெய்வேலியில் எந்த வகையான நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகிறது?

(1) ஆந்த்ரசைட் (2) பிட்டுமினஸ் (3) லிக்னைட் (4) பீட்

29. மாங்கனீசு உற்பத்தியில் உலக அளவில் முன்னணி வகிக்கும் நாடு ______.

(1) தென் ஆப்பிரிக்கா (2) ஐரோப்பா

(3) வட அமெரிக்கா (4) தென் அமெரிக்கா

30. சரியான இணையைக் கண்டறிக:

(1) மைக்காவின் தாதுக்கள் - பைரோலுசைட், சைலேமெலேன்

(2) மைக்காவின் தாதுக்கள் - மஸ்கோவைட், பயோடைட்

(3) மாங்கனீசு தாதுக்கள் - ஹேமடைட், மேக்னைடட்

(4) மாங்கனீசு தாதுக்கள் - லிமோனிடைட், சிட்ரைட்

31. பொருந்தாத இணையை கண்டறிக.

(1) மைக்கா உற்பத்தி - சீனா

(2) மாங்கனீசு உற்பத்தி - தென் ஆப்பிரிக்கா

(3) வெள்ளி உற்பத்தி - மெக்ஸிகோ

(4) பாக்சைட் உற்பத்தி - அமெரிக்க ஐக்கிய நாடுகள்

32. இந்தியாவில் 95% மைக்காவானது எந்தெந்த மாநிலங்களில் கிடைக்கிறது?

(1) ஆந்திர பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் ஜார்க்கண்ட்

(2) தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா

(3) ஹிமாச்சலப் பிரதேசம், உத்திர பிரதேசம் மற்றும் ஜார்கண்ட்

(4) ராஜஸ்தான், குஜராத் மற்றும் கர்நாடகா

33. கூற்று 1: பவளப்பாறை, ஃபோராமினிப்பெரா மற்றும் மெல்லுடலிகள் போன்றவற்றின் மடிவிற்குப் பின்னர் உருவாகும் 10% படிவுப் பாறைகள் சுண்ணாம்புக் கற்களாகும்.

கூற்று 2: போர்ட்லேண்ட் சிமெண்ட் சுண்ணாம்புக் கல்லிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

(1) கூற்று 1 மற்றும் 2 சரி (2) கூற்று 1 சரி 2 தவறு.

(3) கூற்று 2 சரி 1 தவறு (4) கூற்று 1 மற்றும் 2 தவறு.

34. உலகில் பாதிக்கு மேற்பட்ட சுண்ணாம்புக்கல் உற்பத்தி செய்யும் நாடு ______.

(1) இந்தியா (2) ரஷ்யா (3) சீனா (4) கனடா

35. 'கருப்பு தங்கம்' என அழைக்கப்படுவது ______.

(1) பெட்ரோலியம் (2) இரும்பு

(3) இயற்கை வாயு (4) நிலக்கரி

36. இந்தியாவில் பெட்ரோலிய உற்பத்தியில் முன்னணி வகிக்கும் மாநிலம் ______.

(1) மும்பை (2) அஸ்ஸாம்

(3) அருணாச்சல பிரதேசம் (4) கர்நாடகா

www.kalvinews.com

37. இயற்கை வாயு இருப்புகள் உள்ள நாடுகளை வரிசைப்படுத்துக.

(1) கனடா, ரஷ்யா, ஈரான் மற்றும் குவைத்

(2) அமெரிக்க ஐக்கிய நாடுகள், ரஷ்யா, ஈரான் மற்றும் கத்தார்

(3) ரஷ்யா, சீனா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா

(4) சீனா, போலந்து, கிரீஸ் மற்றும் குவைத்

38. நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் _______.

(1) அனல் மின்சக்தி (2) அணு சக்தி (3) சூரிய சக்தி (4) நீர் ஆற்றல்

39. கூற்று: இயற்கை வாயுவானது பெட்ரோலியப் படிவுகளுடன் காணப்படுகிறது.

காரணம்:. இயற்கை வாயுவை வீடு மற்றும் தொழிற்சாலைகளில் எரிபொருளாக பயன்படுத்தலாம்

(1) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது.

(2) கூற்று மற்றும் காரணம் சரி; ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(3) கூற்று தவறு, காரணம் சரி.

(4) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

40. சரியான இணையைக் கண்டறிக.

(1) அலோக வளம் - தங்கம்

(2) உலோக வளம் - ஜிப்சம்

(3) புதை படிம எரிபொருள் - பெட்ரோலியம்

(4) சுண்ணாம்புக்கல் - இரும்பு

41. நிலக்கரி உற்பத்தியில் உலகில் முன்னணி வகிக்கும் நாடு _______. (NMMS-2020-21)

(1) அமெரிக்கா (2) ஆஸ்திரேலியா (3) சீனா (4) இந்தோனேசியா

42. ஒரு மனிதனின் அன்றாட உணவு, உடை, இருப்பிடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வளங்கள்?

(1) உயிரியல் வளங்கள் (2) இயற்கை வளங்கள்

(3) உயிரற்ற வளங்கள் (4) உலோக வளங்கள்

43. உலகின் மிகப்பெரிய சூரிய ஆற்றல் திட்டம் இந்தியாவில் எங்கு அமைந்துள்ளது?

(1) கமுதி (2) ஆரல்வாய்மொழி

(3) முப்பந்தல் (4) நெய்வேலி

44. கமுதி சூரிய ஒளி மின்சக்தி திட்டத்தில் நிறுவப்பட்ட திறன் _______ மெகாவாட் ஆகும்.

(1) 1500 (2) 648 (3) 528 (4) 278

45. தாமிர உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு _______.

(1) சீனா (2) சிலி நாடு

(3) வெனிசுலா (4) பிரேசில்

46. பாக்ஸைட் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கப்படுவது _______.

(1) மைக்கா (2) சுண்ணாம்புக்கல்

(3) தாமிரம் (4) அலுமினியம்

www.kalvinews.com

47. புதை படிம எரிபொருள் வளங்கள் அல்லாதது ______.

(1) நிலக்கரி (2) பெட்ரோல் (3) இயற்கை வாயு (4) சுண்ணாம்புக்கல்

48. அழுக்கு நீக்கும் திரவம் மற்றும் சலவைத்தூள் தயாரிப்பிலும் பயன்படும் மூலக்கூறுகளில் ஒன்று ______.

(1) மாங்கனீசு (2) பாக்ஸைட் (3) தாமிரம் (4) மைக்கா

49. சீனாவில் உள்ள த்ரீகார்ஜஸ் அணை நீர் மின் சக்தி திட்டத்தின் கட்டுமானப் பணியானது ______ ஆம் ஆண்டில் தொடங்கி ______ ஆம் ஆண்டில் நிறைவுற்றது.

(1) 1967 - 2001 (2) 1997 - 2013 (3) 1994 - 2012 (4) 1989 - 2012

50. த்ரீகார்ஜஸ் அணை நீர்மின் சக்தி திட்டத்தில் நிறுவப்பட்ட திறன் ______ மெகாவாட் ஆகும்.

(1) 8,370 (2) 14,000 (3) 13,860 (4) 22,500

51. மைக்கா உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு ______.

(1) சீனா (2) இந்தியா (3) சிலி நாடு (4) பிரேசில்

விடைகள்:

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 11 | (1) | 21 | (1) | 31 | (4) | 41 | (3) | 51 | (1) |
| 2 | (1) | 12 | (3) | 22 | (3) | 32 | (1) | 42 | (2) | | |
| 3 | (1) | 13 | (1) | 23 | (4) | 33 | (1) | 43 | (1) | | |
| 4 | (1) | 14 | (2) | 24 | (1) | 34 | (3) | 44 | (2) | | |
| 5 | (4) | 15 | (1) | 25 | (2) | 35 | (1) | 45 | (2) | | |
| 6 | (2) | 16 | (3) | 26 | (1) | 36 | (2) | 46 | (4) | | |
| 7 | (3) | 17 | (1) | 27 | (2) | 37 | (2) | 47 | (4) | | |
| 8 | (2) | 18 | (2) | 28 | (3) | 38 | (1) | 48 | (1) | | |
| 9 | (4) | 19 | (1) | 29 | (1) | 39 | (2) | 49 | (3) | | |
| 10 | (2) | 20 | (2) | 30 | (2) | 40 | (3) | 50 | (4) | | |

www.kalvinews.com



## 2. சுற்றுலா

**தொகுப்பு:**

**திரு.அ.அன்பழகன்**, D.T.Ed., M.A., B.Ed.,
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, முத்தியம்பட்டி,**
**சேலம் மாவட்டம்.**

**மேம்பாடு:**

**திரு.சீ.மாதேஸ்வரன்**, M.Sc.,B.Ed.,B.L.I.Sc.,
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, கீழ்வாணி.**
**ஈரோடு மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- **சுற்றுலாப் பயணி** என்ற சொல் **டூரியன்** என்ற பழமையான **ஆங்கிலச் சொல்**லிலிருந்து தோன்றியது.
- உலகின் அனைத்து நாடுகளுக்கும் வருவாய் ஆதாரமாக விளங்குவது **சுற்றுலா** ஆகும்.
- **சுற்றுலாவின் மூன்று முக்கியக் கூறுகள்** (A3):
  1) ஈர்ப்புத் தலங்கள் (Attraction)
  2) எளிதில் அணுகும் தன்மை (Accessibility)
  3) சேவை வசதிகள் (Amenities)
- ஈர்ப்புத் தலங்கள் (i) இயற்கை ஈர்ப்புத் தலங்கள் (ii) கலாச்சார ஈர்ப்புத் தலங்கள் என இரண்டு வகைப்படும்.
- **இயற்கை ஈர்ப்புத் தலங்கள்:** நிலம் மற்றும் கடல் அமைப்பு, கடற்கரைகள், காலநிலை மற்றும் காடுகள் ஆகிய கூறுகள் அடங்கும்.
- **கலாச்சார ஈர்ப்புத் தலங்கள்:** வரலாற்று நினைவுச் சின்னங்கள், கண்காட்சிகள், பண்டிகைகள்

  **சேவை வசதிகள்**

  தங்கும் விடுதி, சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள், சுற்றுலா மேலாளர்கள், பயண முகவர்கள், கடவுச்சீட்டு, விசா பயணக் காப்பீடு ஆகியன சேவை வசதிகளில் அடங்கும்.
- **சுற்றுலாவின் வகைகள்:**
  - ✓ சமயச் சுற்றுலா
  - ✓ கலாச்சாரச் சுற்றுலா
  - ✓ வரலாற்றுச் சுற்றுலா
  - ✓ சூழல் சுற்றுலா
  - ✓ சாகசச் சுற்றுலா
  - ✓ பொழுதுபோக்குச் சுற்றுலா

**சமயச் சுற்றுலா**

- சுற்றுலா வகைகளில் **சமயச் சுற்றுலா** மிகப்பழமையானது
- சமயச் சுற்றுலாவில் மக்கள் புனித யாத்திரையாக கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள் போன்ற புனித தலங்களுக்கு பயணம் மேற்கொள்கின்றனர்.

  (எ.கா.): இந்துக்கள் - காசி
  கிறித்தவர்கள் - ஜெருசலம்
  முஸ்லீம்கள் - மெக்கா

www.kalvinews.com

- **இந்தியாவின் புகழ்பெற்ற சமயச் சுற்றுலா தலங்கள்**:

✓ தமிழ்நாடு - இராமேஸ்வரம், காஞ்சிபுரம்
✓ உத்திரப் பிரதேசம் - வாரணாசி (காசி), சாரநாத்
✓ ஜம்மு காஷ்மீர் - வைஷ்ணவி தேவி கோவில், லடாக் புத்த மடங்கள்
✓ கோவா - செயின்ட் பிரான்சிஸ் சேவியர் தேவாலயம்
✓ பஞ்சாப் - அமிர்தசரஸ்

- கலாச்சாரச் சுற்றுலாவின் அம்சத்தை குறிப்பது **காஸ்ட்ரோனமி** எனப்படும்

**வரலாற்றுச் சுற்றுலா:**

- **வரலாற்றுச் சுற்றுலாவில்** மக்கள் அருங்காட்சியகங்கள், நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதிகள், கோட்டைகள் போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுகின்றனர்.

  (எ.கா.): கம்போடியாவின் அங்கோர்வாட்
  இந்தியாவின் தாஜ்மஹால்
  எகிப்தின் பிரமிடுகள்

**சூழல் சுற்றுலா**

- இயற்கைச் சூழலில் தாவரங்களும் விலங்குகளும் செழித்து வளரும் இடங்களுக்குச் செல்வது "சூழல் சுற்றுலா" எனப்படுகிறது.

  (ஏ.கா.): அமேசான் மழைக்காடுகள்
  ஆப்பிரிக்க வனப்பயணம்
  இமயமலை சிகரங்களில் மலையேற்றம்

**சாகசச் சுற்றுலா**

- நெடுந்தொலைவில் உள்ள வெளிப்புற செயல்பாடுகளில் கலந்து கொள்வதற்காக பயணப்படுவதே சாகசச் சுற்றுலா எனப்படும்.

  (எ.கா.): ஆஸ்திரேலியாவின் விண்வீழ் விளையாட்டு
  நியூசிலாந்தின் மலைஉச்சிவீழ் இழுவை விளையாட்டு
  பிரம்மபுத்திரா நதியின் கட்டுமர மிதவை பயணம்
  இமயமலை சிகரங்களில் மலையேற்றம்

**பொழுதுபோக்குச் சுற்றுலா**

- மகிழ்ச்சி, மனநிறைவு, பொழுதுபோக்கு, கேளிக்கை, வேடிக்கை விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் தருவது பொழுதுப்போக்குச் சுற்றுலா ஆகும்.

  (எ.கா.): நீர்வீழ்ச்சிகள், மலைவாழிடம், கடற்கரை, கேளிக்கை பூங்காக்கள்

- சொந்த நாட்டிற்குள் செல்லும் சுற்றுலா "உள் வரும் சுற்றுலா" எனவும், வெளிநாடுகளுக்கு செல்லும் சுற்றுலா "வெளிச் செல்லும் சுற்றுலா" எனவும் அழைக்கப்படுகிறது.
- விசா - வெளிநாடு செல்ல விரும்பும் ஒருவரது கடவுச்சீட்டில் குறிக்கப்படும் முத்திரை.

**சுற்றுலாவின் அடிப்படைக் காரணிகள்:**

இதமான வானிலை, கண்கவர் இயற்கை காட்சிகள், வரலாற்று மற்றும் பண்பாட்டு நினைவு சின்னங்கள்.

www.kalvinews.com

**சுற்றுலாவின் புவியியல் காரணிகள்:**

(1) நிலத்தோற்றம்
(2) நீர்நிலைகள்
(3) தாவரங்கள்
(4) காலநிலை
(5) விலங்குகள்
(6) குடியிருப்புக் காரணிகள்
(7) கலாச்சாரம்

- ஆரோக்கிய தீர்வுக்காக உல்லாச பயணிகளைக் கவர்ந்திழுப்பவை **யோகா**, **ஆயுர்வேதம்**, **இயற்கை மருத்துவம்**

**இந்தியாவின் மலைவாழிடங்கள்:**

- இந்தியத் துணைக்கண்டமானது ஏழு முக்கிய மலைத் தொடர்களை தன்னகத்தே கொண்டுள்ளது.
- இமயமலையின் மலைவாழிடங்களில் அதிகமானவை ஜம்மு-காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்திரகாண்ட், சிக்கிம், மேற்கு வங்காளம், அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் மேகாலயா மாநிலங்களில் அமைந்துள்ளன.
- மகாராஷ்டிரா, கர்நாடகம், தமிழ்நாடு, கேரளாவின் மலை வாழிடங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளன.
- ஆந்திரா மற்றும் ஒரிசாவின் மலைவாழிடங்கள் கிழக்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளன.

**இந்தியாவின் அழகிய மலைவாழிடங்கள்:**

- ✓ தமிழ்நாடு - கொடைக்கானல், ஊட்டி
- ✓ உத்திரகாண்ட் - நைனிடால்
- ✓ மேற்கு வங்காளம் - டார்ஜிலிங்
- ✓ ஜம்மு காஷ்மீர் - ஸ்ரீநகர்
- ✓ மேகாலயா - ஷில்லாங்
- ✓ இமாச்சலப் பிரதேசம் - சிம்லா
- ✓ கேரளா - மூணாறு
- ✓ சிக்கிம் - காங்டாக்

**இந்திய நீர்வீழ்ச்சிகள்:**

- ✓ தாழையார் நீர்வீழ்ச்சி - தமிழ்நாடு - திண்டுக்கல் மாவட்டம் - குதிரை வால் போன்று அமைந்துள்ளது.
- ✓ ஜோக் நீர்வீழ்ச்சி - கர்நாடகம் - ஷிமோகா மாவட்டம் - பிரிவு நீர்வீழ்ச்சி (ராஜா ராணி மற்றும் இடி)
- ✓ நோகாளிகாய் நீர்வீழ்ச்சி - மேகாலயா - கிழக்கு காசி மாவட்டம்
- ✓ தலக்கோணம் நீர்வீழ்ச்சி - ஆந்திரா - மருத்துவ குணம் நிறைந்த மூலிகைச் செடி கொடிகளில் இருந்து நீர் விழுவது சிறப்பு அம்சமாகும்.
- ✓ **அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி - கேரளா - திரிச்சூர் மாவட்டம் - இது இந்தியாவின் நயாகரா ஆகும்**

- 7 மலைத்தொடர்களில் மிகப்பெரியது வடக்கில் உள்ள **இமயமலை**
- ITC - நிறுவனங்கள் உள்ளடக்கிய குழுச் சுற்றுலா (Inclusive Tours by charter)

www.kalvinews.com

- IATA - பன்னாட்டு வான்வழிப் போக்குவரத்து சங்கம் (International Air Transport Association)
- IATO - இந்தியப் பயண அமைப்பாளர் சங்கம் (Indian Association of Tour Operators)
- TAAI - இந்தியப் பயண முகவர்கள் சங்கம் (Travel Agents Association of India)
- TTTHA - தமிழ்நாடு சுற்றுலா பயணம் மற்றும் விருந்தோம்பல் சங்கம் (Tamil Nadu Tour Travel and Hospitality Association)
- TTDC - தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (Tamil Nadu Tourism Development Corporation)
- சுற்றுலா பயணிகளைக் கவர்ந்து இழுக்கும் காரணி **சேவை வசதிகள்**
- சுற்றுலா பயணிகளை வெளியேற்றும் காரணி **கௌரவம்**.
- நண்பர்கள், குடும்பங்கள் மற்றும் குழந்தைகளுடன் சுற்றுலா செல்ல மிக அழகான இடம் **கடற்கரை**
- சுற்றுலாவிற்கு மிக அவசியமானது **சுற்றுச்சூழலின் தரம்**
- காட்டு விலங்குகளின் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிலப்பகுதி **வன விலங்குப் பாதுகாப்பு சரணாலயம்** எனப்படும்.

**இந்தியாவிலுள்ள வனவிலங்கு சரணாலயங்கள்:**

| வ. எண் | வனவிலங்கு சரணாலயம் | மாநிலம் | விலங்குகள் |
|---|---|---|---|
| 1. | முதுமலை வனவிலங்கு சரணாலயம் | தமிழ்நாடு | புலி, யானை, மான், காட்டெருமை |
| 2. | காசிரங்கா தேசிய பூங்கா | அசாம் | புல், மான், எருமை |
| 3. | ராந்தம்பர் தேசிய பூங்கா | இராஜஸ்தான் | புலி |
| 4. | கான்ஹா தேசிய பூங்கா | மத்திய பிரதேசம் | சதுப்புநில மான்கள் |
| 5. | சுந்தரவன தேசிய பூங்கா | மேற்கு வங்காளம் | வங்காளப் புலி |
| 6. | கிர் தேசிய பூங்கா | குஜராத் | சிங்கம் |
| 7. | பத்ரா வன சரணாலயம் | கர்நாடகம் | காட்டெருமை, சிறுத்தை, காட்டெருது |
| 8. | பெரியார் தேசிய பூங்கா | கேரளா | யானை, மான் |
| 9. | கார்பெட் தேசிய பூங்கா | உத்திரகான்ட் | புலி |

**இந்தியாவில் பறவைகள் சரணாலயங்கள்:**

| வ. எண் | பறவைகள் சரணாலயம் | மாநிலம் |
|---|---|---|
| 1. | கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் | தமிழ்நாடு |
| 2. | குமரகம் பறவைகள் சரணாலயம் | கேரளா |
| 3. | பரத்பூர் பறவைகள் சரணாலயம் | இராஜஸ்தான் |
| 4. | மயானி பறவைகள் சரணாலயம் | மகாராஷ்டிரா |
| 5. | உப்பளப்பாடு பறவைகள் சரணாலயம் | ஆந்திரப்பிரதேசம் |
| 6. | நல்சரோவர் பறவைகள் சரணாலயம் | குஜராத் |
| 7. | நவாப்கஞ்ச் பறவைகள் சரணாலயம் | உத்திரப்பிரதேசம் |

**கடற்கரைகள்**

- இந்தியாவின் கடற்கரையின் நீளம் 7517 கி.மீ.
- கோவாவின் கடற்கரைகளான கலங்கட், அகூதா ஆகியவை நீர் விளையாட்டுக்குப் புகழ்பெற்றவை.

www.kalvinews.com

| வ. எண் | கடற்கரை | மாநிலம் | புவியியல் காரணிகள் |
|---|---|---|---|
| 1. | தனுஷ்கோடி | தமிழ்நாடு | நீலரத்தின நிறத்தில் காணப்படும் கடல்நீர் |
| 2. | வற்கலை கடற்கரை | கேரளா | சூரியன் மறையும் காட்சியைக் காண ஏதுவான கடல் ஓங்கல் பாறை |
| 3. | தர்கார்லி கடற்கரை | மகாராஷ்டிரா | பவளப் பாறைகள் நிறைந்த கடல், சாகச விளையாட்டுகளுக்கு ஏற்றது. |
| 4. | ஓம் கடற்கரை | கர்நாடகா | இரண்டு அரைவட்டக் குகைகள் இணைந்து 'ஓம்' என்ற எழுத்தின் தலைகீழ் வடிவத்தில் அமையப்பெற்ற கடற்கரை |
| 5. | அகுதா கடற்கரை | கோவா | கடற்கரையின் தென்பக்கத்தில் பெரிய குன்றானது குறிப்பிடத்தக்க அம்சமாகும். |
| 6. | மராரி கடற்கரை | கேரளா | இரண்டு மணல் திட்டுகள் இடையே தொட்டில் போன்ற அமைப்பில் அமைந்துள்ள கடற்கரை |

**தமிழ்நாட்டின் புகழ்பெற்ற சமயச் சுற்றுலா தலங்கள்:**

- தஞ்சைப் பெரியகோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோவில், வேளாங்கன்னி மாதா தேவாலயம், நாகூர் தர்கா.
- கோவில்கள் நிறைந்த புகழ் பெற்ற மாநிலம் **தமிழ்நாடு**
- தமிழ்நாடு மாநிலத்தில் சுமார் 33000 பழங்காலக் கோவில்கள் உள்ளன.

**மலைவாழிடங்கள் மற்றும் புனைபெயர்கள்:**

| வ. எண் | மலைவாழிடங்கள் | புனைபெயர்கள்: |
|---|---|---|
| 1 | ஊட்டி | மலைகளின் ராணி |
| 2 | ஏற்காடு | ஏழைகளின் ஊட்டி (ஏரிக்காடுகள்) |
| 3 | ஏலகிரி | 14 கொண்டை ஊசி வளைவுகள் உடையது |
| 4 | கொடைக்கானல் | மலைகளின் இளவரசி |
| 5 | கோத்தகிரி | பச்சை மலை |
| 6 | வெள்ளியங்கிரி மலை | தெற்கின் கைலாஷ் |
| 7 | கொல்லிமலை | 70 கொண்டை ஊசி வளைவுகளுடன் கூடிய வாகன போக்குவரத்துப் பகுதி |
| 8 | ஆனை மலை | உயர் விளிம்பு |
| 9 | மேக மலை | உயர்ந்த மேகங்கள் குவியும் பகுதி |
| 10 | ஜவ்வாது மலை | இயற்கையின் சொர்க்கம் |

**நீர் வீழ்ச்சிகள் மற்றும் புவியியல் தல அமைவிடம்:**

| வ. எண் | நீர்வீழ்ச்சிகள் | புவியியல் தல அமைவிடம் |
|---|---|---|
| 1 | ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி | தருமபுரி மாவட்டம் |
| 2 | கும்பக்கரை நீர்வீழ்ச்சி | பாம்பார் ஆற்றில் சிற்றருவிகளாக உருவாகி கொடைக்கானல் மலை அடிவாரத்தில் நீர்வீழ்ச்சி விழுகின்றது. இது தேனி மாவட்டத்தில் அமைந்துள்ளது |
| 3 | குரங்கு நீர்வீழ்ச்சி | கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைமலைப் பகுதியில் உள்ளது. |
| 4 | கிளியூர் நீர்வீழ்ச்சி | கிழக்குத் தொடர்ச்சி மலையான சேர்வராயன் குன்றுப் பகுதியில் உள்ளது. |
| 5 | குற்றாலம் | திருநெல்வேலி மாவட்டம். இது மருத்துவம், ஆரோக்கியத்திற்கு பெயர் பெற்றது. |
| 6 | ஆகாய கங்கை | நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலையில் புளியஞ்சோலை என்னுமிடத்தில் உள்ளது. |
| 7 | சுருளி நீர்வீழ்ச்சி | இது நில நீர்வீழ்ச்சி அல்லது மேகமலை வீழ்ச்சி என அழைக்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் அமைந்துள்ளது. |

www.kalvinews.com

- தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 130058 ச.கி.மீ.
- இதில் 17.6% அடர்த்தியான காடுகளைக் கொண்டது.

**வனவிலங்குச் சரணாலயம் மற்றும் மாவட்டம்:**

| வ. எண் | வனவிலங்குச் சரணாலயம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | முதுமலை வனவிலங்கு சரணாலயம் | நீலகிரி |
| 2 | முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம் | திருநெல்வேலி |
| 3 | கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம் | நாகப்பட்டினம் |
| 4 | இந்திராகாந்தி வனவிலங்கு சரணாலயம் | கோயம்புத்தூர் |
| 5 | களக்காடு வனவிலங்கு சரணாலயம் | திருநெல்வேலி |

**பறவைகள் சரணாலயம் மற்றும் மாவட்டம்:**

| வ. எண் | பறவைகள் சரணாலயம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் | சிவகங்கை |
| 2 | காரைவெட்டி பறவைகள் சரணாலயம் | அரியலூர் |
| 3 | வெல்லோட் பறவைகள் சரணாலயம் | ஈரோடு |
| 4 | வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் | காஞ்சிபுரம் |

**தேசிய பூங்காக்கள் மற்றும் மாவட்டம்:**

| வ. எண் | தேசிய பூங்காக்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | கிண்டி தேசிய பூங்கா | சென்னை |
| 2 | மன்னார் வளைகுடா கடல் பூங்கா | இராமநாதபுரம் |
| 3 | இந்திராகாந்தி தேசிய பூங்கா | கோயம்புத்தூர் |
| 4 | முக்கூர்த்தி தேசிய பூங்கா | நீலகிரி |
| 5 | முதுமலை தேசிய பூங்கா | நீலகிரி |

**தமிழ்நாட்டிலுள்ள கடற்கரைகள்:**

| வ. எண் | கடற்கரைகள் | புவியியல் காரணிகள் |
|---|---|---|
| 1 | கோவளம் கடற்கரை, காஞ்சிபுரம் | சிறிய மீன்பிடி கிராமம் |
| 2 | மெரினா கடற்கரை, சென்னை | இரண்டாவது மிக அழகிய நீண்ட கடற்கரை |
| 3 | கன்னியாகுமரி கடற்கரை | பல வண்ண மணல்களை கொண்டது |
| 4 | இராமேஸ்வரம் கடற்கரை | அலையற்ற கடற்கரை |
| 5 | எலியட் கடற்கரை, சென்னை | இரவும் பகலும் மனிதர்களால் நிறைந்த அழகான கடற்கரை |
| 6 | மகாபலிபுரம் கடற்கரை, காஞ்சிபுரம் | கட்டிடக்கலை மற்றும் தொல்பொருள் கடற்கரை |
| 7 | சில்வர் கடற்கரை, கடலூர் | நீர் விளையாட்டு பொழுதுபோக்கிற்கான கடற்கரை |
| 8 | முட்டுக்காடு கடற்கரை, காஞ்சிபுரம் | அமைதியான மற்றும் ஆழமற்ற கடற்கரை |

**சுற்றுலாவின் நேர்மறையான தாக்கம்:**

- ✓ நேரடியான நிதி பங்களிப்பு
- ✓ அரசாங்க நிதிக்குப் பங்களிப்பு
- ✓ சுற்றுச்சூழல் மேலாண்மை & திட்டமிடல்
- ✓ சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அதிகரித்தல்
- ✓ சுற்றுச்சூழல் பாதுகாப்பு

www.kalvinews.com

**சுற்றுலாவின் எதிர்மறை தாக்கம்:**

- ✓ நீர்வளங்கள் சீரழிவு
- ✓ நிலச் சீரழிவு
- ✓ காற்று மற்றும் ஒலி மாசுபாடு
- ✓ திடக்கழிவு மற்றும் குப்பைகள்
- ✓ கழிவுநீர்

**பயிற்சி வினாக்கள்:**

1. கீழ்க்கண்டவற்றில் எந்த ஆங்கிலச் சொல்லிலிருந்து, சுற்றுலாப் பயணி என்ற சொல் தோன்றியது?
   1. டூரியன் 2. டூர் 3. டூரிஸ்ட் 4. டூரிஸ்சம்

2. கிறிஸ்துவர்கள் ஜெருசலேம் செல்வது _______.
   1. சூழல் சுற்றுலா 2. சாகச சுற்றுலா
   3. சமயச் சுற்றுலா 4. பொழுதுபோக்கு சுற்றுலா

3. ஆஸ்திரேலியாவின் விண்வீழ் விளையாட்டுக்கு செல்வது _______.
   1. சூழல் சுற்றுலா 2. சாகசச் சுற்றுலா 3. சமயச் சுற்றுலா 4. வரலாற்றுச் சுற்றுலா

4. கீழ்க்கண்டவற்றுள் எது வரலாற்றுச் சுற்றுலா?
   1. முஸ்லிம்கள் மெக்கா செல்லுதல்
   2. எவரெஸ்ட் சிகரம் ஏறுதல்
   3. இந்தியாவில் உள்ள தாஜ்மஹாலுக்குச் செல்லுதல்
   4. இவற்றில் எதுவும் இல்லை

5. ஒரு நாட்டில் வேலை பார்க்க வழங்கப்படும் விசா _______.
   1. மாணவர் விசா 2. மருத்துவ விசா 3. சுற்றுலா விசா 4. தொழில் விசா

6. கீழ்க்கண்ட எந்த மாநிலத்தில் 'நைனிடால்' உள்ளது?
   1. உத்திரகாண்ட் 2. மேற்கு வங்காளம் 3. மேகாலயா 4. கேரளா

7. கேரளாவில் உள்ள மலைவாழிடம் எது?
   1. ஷில்லாங் 2. ஸ்ரீநகர் 3. மூணாறு 4. ஊட்டி

8. மேகாலயாவில் காசி மாவட்டத்தில் அமைந்துள்ள நீர்வீழ்ச்சி எது?
   1. நோகாளிகாய் 2. தாழையார் 3. ஜோக் 4. அதிரப்பள்ளி

9. இந்தியாவின் நயாகரா என அழைக்கப்படும் நீர்வீழ்ச்சி எது?
   1. தலக்கோணம் 2. அதிரப்பள்ளி 3. ஜோக் 4. தாழையார்

10. காசிரங்கா தேசியப் பூங்கா எங்கு அமைந்துள்ளது?
    1. தமிழ்நாடு 2. இராஜஸ்தான் 3. குஜராத் 4. அசாம்

11. 'வங்காளப் புலி' காணப்படும் தேசிய பூங்கா எது?
    1. சுந்தரவன தேசிய பூங்கா 2. கிர் தேசிய பூங்கா
    3. காசிரங்கா தேசிய பூங்கா 4. கன்ஹா தேசிய பூங்கா

www.kalvinews.com

12. குஜராத்தில் உள்ள கிர் தேசியப் பூங்கா எதற்கு பெயர் பெற்றது?
    1. சிங்கம் 2. யானை 3. மான் 4. புலி

13. பெரியார் தேசியப் பூங்கா எம்மாநிலத்தில் உள்ளது?
    1. கேரளா 2. தமிழ்நாடு 3. கர்நாடகா 4. குஜராத்

14. தமிழ்நாட்டிலுள்ள பறவைகள் சரணாலயம் எது?
    1. குமரகம் 2. பரத்பூர் 3. மயானி 4. கூந்தன்குளம்

15. நல்சரோவர் பறவைகள் சரணாலயம் எங்கு உள்ளது?
    1. ஆந்திரா 2. குஜராத் 3. கேரளா 4. மஹாராஷ்டிரா

16. இந்தியாவின் கடற்கரையின் நீளம் _______.
    1. 7157 கி.மீ. 2. 7715 கி.மீ. 3. 7175 கி.மீ. 4. 7517 கி.மீ.

17. தமிழ்நாட்டிலுள்ள கடற்கரை எது?
    1. வற்கலை 2. ஓம் 3. அகுதா 4. தனுஷ்கோடி

18. இரண்டு மணல் திட்டுகளிடையே தொட்டில் போன்ற அமைப்பில் அமைந்த கடற்கரை எது?
    1. ஓம் 2. அகுதா 3. மராரி 4 தர்கார்லி

19. நீர் விளையாட்டுக்கு புகழ்பெற்ற கோவா கடற்கரை _______.
    1. கல்லங்கட் 2. அகூதா 3. 1 மற்றும் 2 4. இவற்றில் எதுவுமில்லை

20. மலைகளின் ராணி எது?
    1. ஏற்காடு 2. ஊட்டி 3. ஏலகிரி 4. ஜவ்வாது

21. இயற்கையின் சொர்க்கம் என அழைக்கப்படும் மலைவாழிடம் எது?
    1. ஊட்டி 2. கோத்தகிரி 3. ஆனைமலை 4. ஜவ்வாது

22. மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் மலை வாழிடம் எது?
    1. கொடைக்கானல் 2. ஏற்காடு 3. ஊட்டி 4. ஏலகிரி

23. கீழ்க்கண்ட நீர்வீழ்ச்சிகளில் எது கொல்லிமலையில் அமைந்துள்ளது?
    1. குற்றால நீர்வீழ்ச்சி 2. சுருளி நீர்வீழ்ச்சி 3. ஆகாய கங்கை 4. குரங்கு நீர்வீழ்ச்சி

24. கீழ்க்கண்ட எந்த நீர்வீழ்ச்சி மேகமலை நீர்வீழ்ச்சி என அழைக்கப்படுகிறது?
    1. கிளியூர் நீர்வீழ்ச்சி 2. கும்பக்கரை நீர்வீழ்ச்சி
    3. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி 4. சுருளி நீர்வீழ்ச்சி

25. தமிழ்நாடு _______ அடர்த்தியான காடுகளைக் கொண்டுள்ளது.
    1. 17.6% 2. 18.6% 3. 16.7% 4. 71.6%

26. முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம் எங்குள்ளது?
    1. நீலகிரி 2. திருநெல்வேலி 3. கோயம்புத்தூர் 4. நாகப்பட்டினம்

27. நாகப்பட்டினத்தில் _______ வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ளது?
    1. முதுமலை 2. இந்திராகாந்தி 3. களக்காடு 4. கோடியக்கரை

www.kalvinews.com

28. ஈரோடு மாவட்டத்தில் _______ பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது.
1. வெல்லோடு 2. வேட்டங்குடி 3. காரைவெட்டி 4. வேடந்தாங்கல்

29. இந்திராகாந்தி தேசிய பூங்கா _______ ல் உள்ளது.
1. சென்னை 2. இராமநாதபுரம் 3. கோயம்புத்தூர் 4. நீலகிரி

30. நீலகிரி மாவட்டத்தில் _______ தேசிய பூங்கா அமைந்துள்ளது.
1. கிண்டி 2. மன்னார் வளைகுடா
3. முக்கூர்த்தி 4. இவற்றில் எதுவுமில்லை

31. உலகின் இரண்டாவது மிகப்பெரிய கடற்கரை என எந்த கடற்கரை அழைக்கப்படுகிறது?
1. கன்னியாகுமரி 2. கோவளம் 3. மகாபலிபுரம் 4. மெரினா

32. கீழ்க்கண்டவற்றில் எது அலையற்ற கடற்கரை என அழைக்கப்படுகிறது?
1. இராமேஸ்வரம் 2. மெரினா 3. சில்வர் 4. எலியட்

33. கீழ்க்கண்டவற்றில் சுற்றுலாவின் எதிர்மறை தாக்கம் எது?
1. நேரடியான நிதி 2. சுற்றுச்சூழல் மேலாண்மை
3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு 4. திடக்கழிவு மற்றும் குப்பைகள்

34. கீழ்க்கண்டவற்றில் சுற்றுலாவின் நேர்மறை தாக்கம் எது?
1. நிலச் சீரழிவு 2. நீர் வளங்கள் சீரழிவு
3. காற்று மற்றும் ஒலி மாசு 4. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

35. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. வாரணாசி (காசி) | - | a) தமிழ்நாடு |
| ii. வைஷ்ணவி தேவி கோவில் | - | b) பஞ்சாப் |
| iii. அமிர்தசரஸ் | - | c) ஜம்மு காஷ்மீர் |
| iv. காஞ்சிபுரம் | - | d) உத்திரப்பிரதேசம் |

1. i - d ii - c iii - b iv - a 2. i - c ii - d iii - a iv - b
3. i - c ii - a iii - d iv - b 4. i - b ii - a iii - d iv - c

36. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. தாழையார் நீர்வீழ்ச்சி | - | a) ஆந்திரப்பிரதேசம் |
| ii. ஜோக் நீர்வீழ்ச்சி | - | b) தமிழ்நாடு |
| iii. அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி | - | c) கர்நாடகம் |
| iv. தலக்கோணம் நீர்வீழ்ச்சி | | d) கேரளா |

1. i - a ii - b iii - d iv - c 2. i - a ii - d iii - b iv - c
3. i - b ii - a iii - d iv - c 4. i - b ii - c iii - d iv - a

37. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. கூந்தன்குளம் | - | a) குஜராத் |
| ii. குமரகம் | - | b) மகாராஷ்டிரா |
| iii. மயானி | - | c) தமிழ்நாடு |
| iv. நல்சரோவர் | - | d) கேரளா |

www.kalvinews.com

1. i - b ii - c iii - d iv - a
2. i - c ii - d iii - b iv - a
3. i - d ii - b iii - c iv - a
4. i - b ii - d iii - c iv - a

38. பொருத்துக.

i. முதுமலை - a) திருநெல்வேலி
ii. கோடியக்கரை - b) கோயம்புத்தூர்
iii. இந்திராகாந்தி - c) நாகப்பட்டினம்
iv. களக்காடு - d) நீலகிரி

1. i - a ii - b iii - c iv - d
2. i - d ii - c iii - b iv - a
3. i - d ii - b iii - c iv - d
4. i - a ii - c iii - b iv - d

39. பொருத்துக.

i. கிண்டி - a) நீலகிரி
ii. மன்னார் வளைகுடா - b) சென்னை
iii. இந்திராகாந்தி - c) இராமநாதபுரம்
iv. முக்கூர்த்தி - d) கோயம்புத்தூர்

1. i - a ii - d iii - c iv - b
2. i - a ii - c iii - d iv - b
3. i - a ii - c iii - b iv - d
4. i - b ii - c iii - d iv - a

40. பொருத்துக.

i. மெரினா - a) தொல்பொருள்
ii. கன்னியாகுமரி - b) நீர் விளையாட்டு
iii. மகாபலிபுரம் - c) மிக நீண்ட கடற்கரை
iv. சில்வர் - d) பல வண்ண மணல்கள்

1. i - b ii - c iii - d iv - a
2. i - b ii - d iii - c iv - b
3. i - d ii - a iii - b iv - b
4. i - c ii - d iii - a iv - b

41. பொருத்துக.

i. தனுஷ்கோடி - a) மகாராஷ்டிரா
ii. தர்கார்லி - b) கர்நாடகம்
iii. ஓம் - c) கேரளா
iv. மராரி - d) தமிழ்நாடு

1. i - a ii - c iii - d iv - c
2. i - d ii - c iii - b iv - a
3. i - b ii - c iii - a iv - d
4. i - d ii - a iii - b iv - c

42. பொருத்துக.

i. மலைகளின் ராணி - a) கொடைக்கானல்
ii. ஏழைகளின் ஊட்டி - b) ஊட்டி
iii. தெற்கின் கைலாஷ் - c) ஏற்காடு
iv. மலைகளின் இளவரசி - d) வெள்ளியங்கிரி

1. i - b ii - c iii - d iv - a
2. i - a ii - c iii - d iv - b
3. i - b ii - d iii - c iv - a
4. i - d ii - b iii - c iv - a

www.kalvinews.com

43. பொருத்துக.

i. ஒகேனக்கல் - a) தென்காசி

ii. கும்பக்கரை - b) நாமக்கல்

iii. குற்றாலம் - c) தர்மபுரி

iv. ஆகாய கங்கை - d) தேனி

1. i - b ii - c iii - d iv - a
2. i - d ii - c iii - b iv - a
3. i - c ii - d iii - b iv - a
4. i - c ii - d iii - a iv - b

44. சுற்றுலாவின் முக்கியக்கூறுகளான A3 உடன் தொடர்பற்றதைத் தேர்ந்தெடுக்கவும்.
1. ஈர்ப்புத் தலங்கள்
2. எளிதில் அணுகும் தன்மை
3. சேவை வசதிகள்
4. பயண காப்பீடு

45. பின்வரும் சூழல் சுற்றுலாவில் தவறானவற்றைத் தேர்ந்தெடு.
1. அமேசான் மழைக்காடுகள்
2. ஆப்பிரிக்க வனப்பயணம்
3. இமயமலையில் மலையேற்றம்
4. இந்தியாவின் தாஜ்மஹால்

46. சரியான இணையைத் தேர்ந்தெடு.
1. மேற்கு வங்காளம் - டார்ஜிலிங்
2. ஜம்மு காஷ்மீர் - மூணாறு
3. மேகாலயா - ஸ்ரீநகர்
4. கேரளா - ஷில்லாங்

47. சரியான இணையைத் தேர்ந்தெடு.
1. தாழையார் நீர்வீழ்ச்சி - தமிழ்நாடு
2. ஜோக் நீர்வீழ்ச்சி - கர்நாடகம்
3. தலக்கோணம் நீர்வீழ்ச்சி - ஆந்திரா
4. மேற்கண்ட அனைத்தும்

48. தவறான இணையைக் கண்டறிக.
1. கிர் தேசிய பூங்கா - குஜராத்
2. சுந்தரவன தேசிய பூங்கா - மேற்கு வங்காளம்
3. கான்ஹா தேசிய பூங்கா - மத்திய பிரதேசம்
4. மேற்கண்ட எதுவுமில்லை

49. தவறான கூற்றைக் கண்டறிக.
1. தனுஷ்கோடியில் கடல் நீர் நீலரத்தின நிறத்தில் காணப்படும்
2. மராரி கடற்கரை கோவாவில் அமைந்துள்ளது.
3. மகாராஷ்டிராவின் தர்கார்லி கடற்கரை சாகச விளையாட்டுகளுக்கு ஏற்றது.
4. கேரளாவின் வற்கலை கடற்கரை சூரியன் மறையும் காட்சியைக் காண ஏதுவான கடல் ஓங்கல் பாறைகளை கொண்டது.

50. சரியான இணையைத் தேர்ந்தெடு.
1. மலைகளின் இளவரசி - ஊட்டி
2. மலைகளின் ராணி - ஏற்காடு
3. தெற்கின் கைலாஷ் - வெள்ளியங்கிரி
4. ஏழைகளின் ஊட்டி - கோத்தகிரி

www.kalvinews.com

51. வரலாற்றுச் சுற்றுலாவில் பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.
1. கம்போடியாவின் அங்கோர்வாட்
2. பிரம்மபுத்திரா நதியின் கட்டுமர மிதவை பயணம்
3. இந்தியாவின் தாஜ்மஹால்
4. எகிப்தின் பிரமிடுகள்

52. பொருந்தாததைக் கண்டறிக.
1. கொடைக்கானல் 2. ஊட்டி 3. ஷில்லாங் 4. மெரினா

53. பொருந்தாததைக் கண்டறிக.
1. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி 2. குரங்கு நீர்வீழ்ச்சி
3. சுருளி நீர்வீழ்ச்சி 4. அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி

54. பொருந்தாததைக் கண்டறிக.
1. முதுமலை வனவிலங்கு சரணாலயம் 2. முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம்
3. களக்காடு வனவிலங்கு சரணாலயம் 4. பத்ரா வனவிலங்கு சரணாலயம்

55. பொருந்தாததைக் கண்டறிக.
1. வேடந்தாங்கல் 2. காரைவெட்டி 3. குமரகம் 4. வேட்டங்குடி

56. பொருந்தாததைக் கண்டறிக.
1. முக்கூர்த்தி தேசிய பூங்கா 2. காசிரங்கா தேசிய பூங்கா
3. இந்திராகாந்தி தேசிய பூங்கா 4. கிண்டி தேசிய பூங்கா

57. கீழ்க்கண்ட சமயச் சுற்றுலாவில் பொருந்தாததைக் கண்டறிக.
1. காசி 2. ஜெருசலேம் 3. மெக்கா 4. எகிப்தின் பிரமிடுகள்

58 சுற்றுலா வகைகளில் மிகப்பழமையானது _______.
(1) சமயச்சுற்றுலா (2) வரலாற்றுச் சுற்றுலா
(3) சாகசச் சுற்றுலா (4) பொழுதுபோக்குச் சுற்றுலா

59. பின்வருவனவற்றில் இந்தியாவில் இல்லாத கடற்கரை எது?
(1) கோவா (2) கொச்சி (3) கோவளம் (4) மியாமி

60. எந்த மாவட்டத்தில் குற்றாலம் நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது?
(1) தருமபுரி (2) திருநெல்வேலி (3) நாமக்கல் (4) தேனி

61. சுற்றுலாவின் மூன்று கூறுகளையும் ஒன்றாக இணைக்கும் கோட்பாடு _______,
(1) A1 (2) கடற்கரை (3) நீர்வீழ்ச்சி (4) A3

62. காஸ்ட்ரோனமி என்பது சுற்றுலாவின் _______ அம்சத்தைக் குறிக்கின்றது
(1) அமைதி (2) கலாச்சாரம் (3) அணுகுமுறை (4) பொழுதுபோக்கு

63. சுருளி நீர்வீழ்ச்சி _______ என்றும் அழைக்கப்படுகிறது.
(1) ஆகாய கங்கை (2) கிளியூர் (3) குரங்கு (4) மேகமலை

www.kalvinews.com

64. இரண்டாவது அழகிய நீண்ட கடற்கரை ______.

(1) கோவளம் (2) சில்வர் (3) மெரினா (4) எலியட்

65. TAAI என்பதன் விரிவாக்கம் ______.

(1) Travel Agents Association of India
(2) Tamil Nadu Agri Association of Idea
(3) Tamil Nadu Agents Alumina of India
(4) Tamil Nadu Association Audio Instrument

66. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?

(1) அகுதா கடற்கரை - கோவா
(2) குரங்கு அருவி - கோயமுத்தூர்
(3) இயற்கையின் சொர்க்கம் - ஜவ்வாது
(4) டார்ஜிலிங் - உயர் விளிம்பு

67. பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க

கூற்று: சுற்றுலா என்பது மக்களின் சமுதாய வாழ்க்கை முறைக்கு ஓர் இன்றியமையாத செயலாக விளங்குகிறது.

காரணம்: சுற்றுலா நாட்டின் சமூக, கலாச்சார, கல்வி மற்றும் பொருளாதாரத் துறையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

(1) கூற்றும் சரி, காரணமும் சரி
(2) கூற்று, காரணம் சரி ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை
(3) கூற்று தவறு, காரணம் சரி
(4) கூற்று, காரணமும் தவறானவை

68. கூற்றை ஆராய்க.

கூற்று: வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கலங்கட் கடற்கரையில் குவிகிறார்கள்
காரணம்: கலங்கட் கடற்கரையானது இரு மணல் திட்டுகளுக்கு இடையே அமைந்துள்ளது.

(1) கூற்று, காரணம் சரி
(2) கூற்று சரி, காரணம் தவறு
(3) கூற்று தவறு காரணம் சரி
(4) கூற்றும் காரணமும் தவறு

69. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க

(1) கம்போடியா - அங்கோர்வாட்
(2) காசி - வாரணாசி
(3) பிரமிடுகள் - எகிப்து
(4) தாஜ்மஹால் - நேபாளம்

70. தவறான இணையைத் தேர்ந்தெடுக்க

(1) நைனிடால் - உத்திரகாண்ட்
(2) டார்ஜிலிங் - மேற்கு வங்காளம்
(3) மூணாறு - ஆந்திரப்பிரதேசம்
(4) ஸ்ரீநகர் - ஜம்மு காஷ்மீர்

71. கிறித்தவர்கள் மேற்கொள்ளும் புனிதப் பயண தலம் எது?

(1) டெல்லி (2) மெக்கா (3) காசி (4) ஜெருசலம்

72. சுற்றுச்சூழல் சுற்றுலாவிற்கு எடுத்துக்காட்டு ______.

(1) எகிப்து பிரமிடுகள்
(2) முஸ்லீம்களின் மெக்கா பயணம்
(3) ஆப்பிரிக்க வனப்பயணம்
(4) விண்வீழ் விளையாட்டு

www.kalvinews.com

73 தமிழ்நாட்டின் புகழ்பெற்ற சமயச் சுற்றுலா தலங்களில் ஒன்று ______.

(1) காஞ்சிபுரம் (2) அமிர்தசரஸ் (3) வாரணாசி (4) சாரநாத்

74. வைஷ்ணவிதேவி கோவில் அமைந்துள்ள மாநிலம் எது?

(1) தமிழ்நாடு (2) பஞ்சாப் (3) கோவா (4) ஜம்மு காஷ்மீர்

75. டார்ஜிலிங் எந்த மாநிலத்தின் மலைவாழிடம் ஆகும்?

(1) மேற்கு வங்காளம் (2) கேரளா (3) தமிழ்நாடு (4) பீகார்

76. குதிரைவால் போன்ற அமைப்பில் உள்ள நீர்வீழ்ச்சியின் பெயர் எது?

(1) தாழையார் நீர்வீழ்ச்சி (2) ஜோக் நீர்வீழ்ச்சி

(3) தலக்கோணம் நீர்வீழ்ச்சி (4) நோகாளிகாய் நீர்வீழ்ச்சி

77. கொண்டை ஊசி வளைவுகளுடன் கூடிய வாகன போக்குவரத்துப் பகுதி எது?

(1) ஆனைமலை (2) மேகமலை (3) கொல்லிமலை (4) ஏலகிரி

78. உயர்ந்த மேகங்கள் குவியும் பகுதி ______ என அழைக்கப்படுகிறது

(1) ஜவ்வாதுமலை (2) மேகமலை (3) ஆனைமலை (4) கொல்லிமலை

79. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி அமைந்துள்ள மாவட்டம் எது?

(1) சென்னை (2) குற்றாலம் (3) ஊட்டி (4) தருமபுரி

80. இந்திராகாந்தி வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம் எது?

(1) நீலகிரி (2) நாகப்பட்டினம் (3) கோயம்புத்தூர் (4) திருநெல்வேலி

81. கோவளம் கடற்கரை அமைந்துள்ள மாவட்டம் எது?

(1) காஞ்சிபுரம் (2) சென்னை (3) ராமேஸ்வரம் (4) கடலூர்

82. அமைதியான மற்றும் ஆழமற்ற கடற்கரை என அழைக்கப்படுவது எது?

(1) எலியட் கடற்கரை (2) சில்வர் கடற்கரை

(3) முட்டுக்காடு கடற்கரை (4) கன்னியாகுமரி கடற்கரை

83. இந்தியாவின் சுற்றுலாத் தலங்களில் அதிக வருமானம் தரும் மாநிலம் ______.

(1) கேரளா (2) தமிழ்நாடு (3) குஜராத் (4) கர்நாடகா

84. பல்லவர்கால சிற்பங்களைக் கண்டுகளிக்க மக்கள் செல்லும் கடற்கரை ______.

(1) மெரினா (2) மகாபலிபுரம் (3) கோவளம் (4) கன்னியாகுமரி

85. முக்கடல் சந்திப்பை ______ கடற்கரைக்குச் சென்றால் காணலாம்.

(1) கன்னியாகுமரி (2) மெரினா (3) கோவளம் (4) எலியட்

86. பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க

கூற்று 1: கிழக்குத் தொடர்ச்சி மலையில் ஆகாய கங்கை நீர்வீழ்ச்சியும், கிளியூர் நீர்வீழ்ச்சியும் உள்ளன.

கூற்று 2: மேற்குத் தொடர்ச்சி மலையில் மணிமுத்தாறு அருவியும், வெள்ளி அருவியும் உள்ளன.

(1) கூற்று 1 தவறு 2 சரி (2) கூற்று 1 சரி 2 தவறு

(3) கூற்று 1 மற்றும் 2 தவறு (4) 1 மற்றும் 2 சரி

www.kalvinews.com

87. பின்வருவனவற்றுள் சூழல் சுற்றுலாவிற்கு தொடர்புடையது எது? (NMMS-2020-21)

(1) ஜெருசலேம்

2) அங்கோர்வாட்

(3) பிரம்மபுத்ரா நதியின் கட்டுமர மிதவை நதிபயணம்

(4) அமேசான் மழைக்காடுகள்

88. IATA என்பதன் விரிவாக்கம் ________. (NMMS-2020-21)

(1) International Aviation Travel Association

(2) International Air Transportation Association

(3) International Aviation and Tourism Association

(4) International Air Travel Agency

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (1) | **21** | (4) | **41** | (4) | **61** | (4) | **81** | (1) |
| **2** | (3) | **22** | (1) | **42** | (1) | **62** | (2) | **82** | (3) |
| **3** | (2) | **23** | (3) | **43** | (4) | **63** | (4) | **83** | (2) |
| **4** | (3) | **24** | (4) | **44** | (4) | **64** | (3) | **84** | (2) |
| **5** | (4) | **25** | (1) | **45** | (4) | **65** | (1) | **85** | (1) |
| **6** | (1) | **26** | (2) | **46** | (1) | **66** | (4) | **86** | (4) |
| **7** | (3) | **27** | (4) | **47** | (4) | **67** | (1) | **87** | (4) |
| **8** | (1) | **28** | (1) | **48** | (4) | **68** | (2) | **88** | (2) |
| **9** | (2) | **29** | (3) | **49** | (2) | **69** | (4) | | |
| **10** | (4) | **30** | (3) | **50** | (3) | **70** | (3) | | |
| **11** | (1) | **31** | (4) | **51** | (2) | **71** | (4) | | |
| **12** | (1) | **32** | (1) | **52** | (4) | **72** | (3) | | |
| **13** | (1) | **33** | (4) | **53** | (4) | **73** | (1) | | |
| **14** | (4) | **34** | (4) | **54** | (4) | **74** | (4) | | |
| **15** | (2) | **35** | (1) | **55** | (3) | **75** | (1) | | |
| **16** | (4) | **36** | (4) | **56** | (2) | **76** | (1) | | |
| **17** | (4) | **37** | (2) | **57** | (4) | **77** | (3) | | |
| **18** | (3) | **38** | (2) | **58** | (1) | **78** | (2) | | |
| **19** | (3) | **39** | (4) | **59** | (4) | **79** | (4) | | |
| **20** | (2) | **40** | (4) | **60** | (2) | **80** | (3) | | |

www.kalvinews.com



**2, 1. மாநில அரசு, மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது?**

**தொகுப்பு:**
**திரு.நா.சின்னண்ணன், M.Sc.,B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, க.பள்ளிப்பட்டி.**
**சேலம் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.சீ.மாதேஸ்வரன், M.Sc.,B.Ed.,B.L.I.Sc.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, கீழ்வாணி.**
**ஈரோடு மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

**அரசாங்கத்தின் 3 முக்கிய பிரிவுகள்:**

| **பிரிவுகள்** | சட்டமன்றம் | நிர்வாகத் துறை | நீதித்துறை |
|---|---|---|---|
| **பணிகள்** | சட்டத்தை உருவாக்குதல் | நடைமுறைப்படுத்துதல் | நீதியை உறுதி செய்தல் |

- இந்திய நாடு இருவகையான அரசாங்கங்களைக் கொண்டுள்ளது.
- ஒன்று புது டில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் மத்திய அரசு.
- மற்றொன்று அந்தந்த மாநில அரசுகள்.
- இந்தியாவில் 28 மாநிலங்களும் 9 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. யூனியன் பிரதேசங்களில் இந்திய நாட்டின் தலைநகரான புதுடில்லியும் அடங்கும்.
- மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுச் செயல்படுவதையே கூட்டாட்சி முறை என்கிறோம்.
- தேர்தல்களை நடத்துவதும், அவற்றைக் கண்காணிப்பதும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பணிகளாகும்.

**ஆளுநர்**

**தேர்ந்தெடுக்கப்படும் விதம்**

- இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் உறுப்பினராக இருத்தல் கூடாது.
- எந்தவொரு ஆதாயம் தரும் அரசுப் பதவியிலும் இருக்கக்கூடாது.
- ஆளுநர் - சொந்த மாநிலத்தில் நியமிக்கப்படுவது இல்லை.
- இந்தியக் குடியரசுத் தலைவர் ஆளுநரை நியமிப்பார்.
- ஆளுநரை எப்போது வேண்டுமானாலும் குடியரசுத் தலைவர் நீக்கலாம்.

**ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

- மத்திய அரசில் குடியரசுத் தலைவரைப் போன்று மாநில நிர்வாகத்தில் (பெயரளவு) தலைவராக ஆளுநர் செயல்படுகிறார்.
- முக்கியமான தருணங்களில் அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குகிறார்.

www.kalvinews.com

- ஆளுநர் மத்திய அரசின் முகவராகச் செயல்படுகிறார்.
- ஆளுநர் மாநிலத்திலுள்ள அரசுப் பல்கலைக்கழகங்களின் வேந்தராகச் செயல்படுகிறார்.
- மாநிலச் சட்டத்துறையால் இயற்றப்படுகின்ற அனைத்துச் சட்ட முன்வரைவுகளும் (மசோதாக்கள்) ஆளுநரின் ஒப்புதலுக்குப் பின்னரே சட்டம் ஆகின்றன.
- மாநிலத் தலைமை வழக்குரைஞர், மாநிலப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையர், அரசுப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் போன்றோரையும் ஆளுநரே நியமிக்கிறார்.
- சட்டமன்றத்தில் போதிய பிரதிநிதித்துவம் பெறாத போது, ஆங்கிலோ இந்தியன் ஒருவரை நியமனம் செய்யும் அதிகாரம் கொண்டவர் ஆளுநர்.
- சட்ட மேலவைக்கு அறிவியல், இலக்கியம், கலை, சமூக சேவை, கூட்டுறவு இயக்கம் ஆகிய துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய அறிஞர்களைக் கொண்டு $\frac{1}{6}$ பங்கு அளவிற்கு உறுப்பினர்களை நியமிக்கிறார்.
- ஆளுநரின் அறிக்கையின்படி, குடியரசுத்தலைவர் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 356 ஐப் பயன்படுத்தி ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்துகிறார்.
- மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டவும், ஒத்தி வைக்கவும் அதிகாரம் கொண்டுள்ளதோடு சட்டமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தையும் கொண்டுள்ளார்.
- சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறாத போது ஆளுநர் அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கிறார்.
- ஆளுநரின் ஒப்புதலுக்குப் பின்னரே பண மசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டு வர முடியும்.
- மாநில அரசாங்கத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.
- மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி ஆளுநரின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- ஆளுநர் விருப்புரிமை அதிகாரத்தைச் செயல்படுத்தும் போது தன்னிச்சையான முடிவுகளை எடுக்கிறார்.

**முதலமைச்சர்**

- மாநில நிர்வாகத்துறையின் உண்மையான தலைவர் முதலமைச்சரே ஆவார்.
- மாநிலத்தின் உயர் அதிகாரிகளை நியமிப்பவர் முதலமைச்சர் ஆவார்.
- மாநிலத்தின் தலைமை நிர்வாகி மற்றும் அமைச்சரவையின் தலைவர் முதலமைச்சர் ஆவார்.

**முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்படும் விதம்:**

- முதலமைச்சர் மாநிலச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
- உறுப்பினராக இல்லாவிட்டால் 6 மாதத்திற்குள் சட்டமன்றத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- ஆளுநர் சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.
- சட்டமன்றத்தின் பெரும்பான்மை பலம் இல்லாத போது முதலமைச்சர் பதவி விலக நேரிடும்.
- முதலமைச்சரின் பதவிக்காலம் நிலையான ஒன்று அன்று.

**முதலமைச்சரின் பணிகள்:**

- முதலமைச்சர் அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களைத் தேர்வு செய்கிறார்.

www.kalvinews.com

- மாநில முதலமைச்சர் பல்வேறு துறைகளைக் கண்காணித்து ஆலோசனை வழங்குதல், மாநில அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குதல், உயர் அதிகாரிகள் நியமனம் போன்றவற்றில் முக்கியப் பங்கு வகிக்கிறார்.

**மாநிலச் சட்டமன்றம்**

- ஆங்கிலேயர்களால், இந்தியாவில் கட்டப்பட்ட முதல் கோட்டை புனித ஜார்ஜ் கோட்டை ஆகும். இது சென்னையில் உள்ளது.
- இந்தக் கோட்டையில் தான், தமிழகச் சட்டமன்றப் பேரவையும், தலைமைச் செயலகமும் அமைந்துள்ளன.
- சட்டமன்றம் செயல்படும் இடம் அம்மாநிலத்தின் தலைநகரம் ஆகும்.
- மாநிலச் சட்டமன்றத்தில் மேலவை (சட்டமன்ற மேலவை), கீழவை (சட்டமன்றப் பேரவை) என இரு வகைகள் உள்ளன.
- மாநில அரசாங்க அமைப்பில் ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உள்ளனர்.

**சட்டமன்ற மேலவை**

- இந்தியாவில் தற்போது 6 மாநிலங்களில் மட்டுமே ஈரவைச் சட்டமன்றம் (சட்டமன்ற மேலவை, கீழவை) நடைமுறையில் உள்ளது. அவை

| | | |
|---|---|---|
| பீகார் | தெலுங்கானா | கர்நாடகம் |
| மகாராஷ்டிரம் | ஆந்திரப் பிரதேசம் | உத்திரப் பிரதேசம் |

- ஒரு மாநிலச் சட்டமன்ற மேலவையானது 40 உறுப்பினர்களுக்குக் குறையாமலும் அம்மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் $\frac{1}{3}$ பங்கிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.
- இதன் உறுப்பினர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- சட்ட மேலவை உறுப்பினராக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், மாநிலச் சட்டமன்றத்திலும் உறுப்பினராக இருத்தல் கூடாது.
- இதன் உறுப்பினர்களில் $\frac{1}{3}$ பங்கு உறுப்பினர்கள் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓய்வு பெறுவர்.
- இது ஒரு நிலையான அவையாகும்.
- சட்டமன்ற மேலவையின் தலைவர் மற்றும் துணைத் தலைவரை அவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

| **சட்ட மேலவை உறுப்பினர்கள்** | |
|---|---|
| **யாரால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்?** | **எவ்வளவு பங்கு?** |
| மாவட்டப் பஞ்சாயத்து மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் | $\frac{1}{3}$ |
| சட்டமன்ற உறுப்பினர்கள் | $\frac{1}{3}$ |
| மாநில ஆளுநர் | $\frac{1}{6}$ |
| பட்டதாரிகள் | $\frac{1}{12}$ |
| இடைநிலைப் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழக ஆசிரியர்கள் | $\frac{1}{12}$ |

www.kalvinews.com

**சட்டமன்றப் பேரவை (அ) கீழவை**

- தமிழ்நாட்டில் கீழ் அவை மட்டுமே உள்ளது. இதனை ஓரவைச் சட்டமன்றம் என்பர்.
- ஒரு சட்டமன்றத் தொகுதி 1,00,000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கும்.
- அரசியலமைப்பின்படி ஒரு மாநிலச் சட்டமன்றத்தில் 500 உறுப்பினர்களுக்கு மேலாகவும், 60 உறுப்பினர்களுக்குக் குறைவாகவும் இருத்தல் கூடாது.
- அட்டவணைப் பிரிவினர், பழங்குடியினர் ஆகியோருக்கு சட்டமன்றத்தில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
- மாநில அரசாங்கத்தின் சட்டங்களை உருவாக்குபவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் (MLA) என அழைக்கப்படுகிறார்கள்.
- கீழ் அவையில் சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுத்தேர்தல் மூலம் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியில் இருந்தும் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- ஒருவர் ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிடலாம்.
- எந்தக் கட்சியையும் சாராத ஒருவர் தேர்தலில் போட்டியிடலாம். அவ்வாறு போட்டியிடும் வேட்பாளர் சுயேட்சை வேட்பாளர் என அழைக்கப்படுகிறார்.
- எந்தக் கட்சியில் அதிக எண்ணிக்கையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்படுகிறார்களோ, அந்தக் கட்சியின் தலைவரை அழைத்து, மாநில அரசாங்கத்தை அமைக்குமாறு ஆளுநர் அழைப்பு விடுப்பார். அதுவே ஆளும் கட்சியாக மாறுகிறது.
- தமிழ்நாட்டில் 234 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன.
- 118 அல்லது அதற்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சி ஆளுநரால் ஆட்சி அமைக்க அழைக்கப்படுகிறது.
- அடுத்த நிலையில் உள்ள கட்சி எதிர்க்கட்சியாக செயல்படுகிறது.
- சட்டமன்றத்தில் உள்ள கீழவையில்தான் மாநிலத்தின் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி விவாதிப்பார்கள்.
- சட்டமன்றம் ஆண்டுக்கு 2 அல்லது 3 முறை கூடும்.
- மாநிலத்திற்கான சட்டங்களை இயற்றுவது சட்டமன்றத்தின் முக்கியப் பணி.
- சட்டமன்றம் மாநிலப் பட்டியல் மற்றும் மத்தியப் பட்டியலில் உள்ள துறைகள் தொடர்பாகச் சட்டத்தை இயற்றலாம்.
- நெருக்கடி நிலை நடைமுறையில் உள்ள போது, சட்டமன்றம் தனது சட்டம் இயற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்த இயலாது.
- நிதி மசோதாவைச் சட்டமன்றத்தில் மட்டுமே கொண்டு வர இயலும்.
- சட்டமன்றக் கூட்டத்திற்குச் சபாநாயகர் (அவைத்தலைவர்) தலைமை தாங்குகிறார்.
- சபாநாயகர் இல்லாத நேர்வுகளில் துணைச் சபாநாயகர் சட்டமன்றக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார்.
- சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர், மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்ட மேலவை உறுப்பினர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்களில் பங்குகொள்கின்றனர்.

www.kalvinews.com

- சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவையைக் காட்டிலும் அதிக அதிகாரம் கொண்டதாக உள்ளது.

**மசோதா சட்டமாகும் விதம்**

- சட்டப் பேரவையில் மசோதா அறிமுகமாகிறது.
- விவாதங்கள் அதன் மீது நடைபெறுகின்றன.
- தேவைப்பட்டால் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
- பாதிக்கும் மேற்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தால் மசோதா நிறைவேறுகிறது.
- ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமாகிறது.

**நீதித்துறை:**

**உயர் நீதிமன்றம்**:

- மாநில அளவில் மிகப்பெரிய நீதித்துறை அமைப்பாக இருப்பது உயர் நீதிமன்றம்.
- அரசியலமைப்பின் படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் உயர் நீதிமன்றம் இருக்கும்.
- எனினும், ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கு பொதுவான உயர் நீதிமன்றம் இருக்கலாம்.
- உயர் நீதிமன்றத்தைத் தவிர, மாவட்ட அளவிலான நீதிமன்றங்கள் , தீர்ப்பாயங்கள் , குடும்ப நல நீதிமன்றங்கள் உள்ளன.

**உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்:**

- அடிப்படை உரிமைகள் மற்றும் இதர நோக்கங்களை வலியுறுத்த ஆட்கொணர்வு நீதிப்பேராணை, தகுதி முறை வினவும் பேராணை, தடை உறுத்தும் பேராணை, கட்டளையிடும் நீதிப்பேராணை மற்றும் ஆவணங்களைத் தாக்கல் செய்ய வலியுறுத்தும் நீதிப்பேராணை ஆகியவற்றைப் பிறப்பிக்கிறது.
- உயர் நீதிமன்றம் மாநிலத்தில் உள்ள (ராணுவ நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் நீங்கலாக) அனைத்துச் சார்நிலை நீதி மன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது, கண்காணிக்கிறது.
- வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுறு நீதி மன்றமாக விளங்குகிறது.

**உயர் நீதிமன்ற நீதிபதி:**

- இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும்.
- குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியையும், மாநில ஆளுநரையும் கலந்தாலோசித்து உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.
- மாநில உயர் நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் இருப்பர்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும், ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை.
- உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகள் 62 வயது வரை அப்பதவியில் இருப்பர்.
- மாவட்ட நீதிபதிகள் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

www.kalvinews.com

| நிகழ்வு/ பதவி | குறைந்த பட்ச வயது | பதவிக்காலம் |
|---|---|---|
| வாக்களித்தல் | 18 | --- |
| பெண்ணின் திருமணம் | 18 | --- |
| ஆணின் திருமணம் | 21 | --- |
| சட்டப் பேரவை உறுப்பினர் | 25 | 5 |
| முதலமைச்சர் | 25 | 5 |
| சட்ட மேலவை உறுப்பினர் | 30 | 6 |
| ஆளுநர் | 35 | 5 |

**பயிற்சி வினாக்கள்:**

1. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியானது எது?
   (1) முதலமைச்சர் என்பவர் எதிர்க்கட்சித் தலைவர்.
   (2) தமிழ்நாட்டில் ஈரவைச் சட்டமன்றம் செயல்படுகிறது.
   (3) உயர் நீதிமன்றம் மாநில அரசின் உச்சபட்ச நீதியமைப்பு.
   (4) மாநில அரசின் மூன்று முக்கிய நிர்வாகப் பிரிவுகள் கிராமம், நகரம், மாநிலம்.

2. இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை _______.
   (1) 26 (2) 28 (3) 27 (4) 30

3. பொருத்துக.
   i. ஆளுநர் - அ. 9
   ii. முதலமைச்சர் - ஆ. தலைமைச் செயலகம்
   iii. யூனியன் பிரதேசங்கள் - இ. மாநிலத்தின் தலைவர்
   iv. புனித ஜார்ஜ் கோட்டை - ஈ. பெரும்பான்மைக் கட்சித் தலைவர்
   (1) i - அ ii - ஆ iii - இ iv - ஈ (2) i - இ ii - ஈ iii - அ iv - ஆ
   (3) i - ஈ ii - ஆ iii - அ iv - இ (4) i - இ ii - அ iii - ஈ iv - ஆ

4. தவறான இணையைக் கண்டுபிடி.
   (1). சட்டமன்றப் பேரவை - கீழவை
   (2). சட்டமன்ற மேலவை - மேலவை
   (3). ஆளுநர் - மாநில அரசின் தலைவர்
   (4). முதலமைச்சர் - எதிர்க்கட்சித் தலைவர்

5. உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார்?
   (1) ஆளுநர் (2) உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி
   (3) முதலமைச்சர் (4) குடியரசுத்தலைவர்

6. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   (i) சட்டமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிப்பர்.
   (ii) மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக முதலமைச்சர் செயல்படுகிறார்.
   (iii) ஒரு மாநிலத்தின் ஆளுநர், பிரதமரால் நியமிக்கப்படுகிறார்.
   (iv) உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது 62.
   (1) i மற்றும் ii (2) iii மற்றும் iv (3) I மற்றும் iv (4) ii மற்றும் iii

www.kalvinews.com

7. மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்க்கண்டவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்?

(i) குடியரசுத் தலைவர் (ii) துணைக் குடியரசுத் தலைவர்

(iii) ராஜ்ய சபா உறுப்பினர்கள் (iv) சட்ட மேலவை உறுப்பினர்கள்

(1) i, ii மற்றும் iii சரி (2) i மற்றும் iii சரி

(3) i, iii மற்றும் iv சரி (4) i, ii, iii மற்றும் iv சரி

8. ஈரவைச் சட்ட மன்றம் இல்லாத மாநிலம் எது?

(1) கர்நாடகம் (2) பீகார் (3) தெலுங்கானா (4) கேரளா

9. கூற்று: இந்தியா கூட்டாட்சி முறை அரசாங்கத்தைக் கொண்டது.

காரணம்: இந்திய அரசியலமைப்பின் அதிகாரம், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

(1) கூற்று சரி, கூற்றிற்கான விளக்கமும் சரியானது.

(2) கூற்று சரி, கூற்றிற்கான விளக்கம் சரியல்ல.

(3) கூற்று சரி, விளக்கம் தவறு.

(4) கூற்று மற்றும் விளக்கம் தவறு.

10. ஈரவை என்பதற்குச் சரியான விளக்கத்தைத் தேர்ந்தெடு.

(1) இரு முதலமைச்சர்களைக் கொண்ட சட்டமன்றம்.

(2) ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம்.

(3) மேலவை மற்றும் கீழவையைக் கொண்ட சட்டமன்றம்.

(4) கவர்னரைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்ட அவை.

11. மாநிலச் சட்டப்பேரவையின் உறுப்பினராவதற்குக் குறைந்தபட்ச வயது _______.

(1) 18 (2) 21 (3) 25 (4) 30

12. மாநில அரசு என்பது _______.

(1) மாநில அரசின் துறைகள் (2) சட்டமன்றம்

(3) (1) மற்றும் (2) (4) இவற்றில் எதுவுமில்லை

13. மாநில அரசு நிர்வாகத்தின் ஒட்டு மொத்தத் தலைவர் _______.

(1) குடியரசுத் தலைவர் (2) பிரதமர்

(3) முதலமைச்சர் (4) ஆளுநர்

14. முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பவர் _______.

(1) கவர்னர் (2) பிரதமர்

(3) குடியரசுத் தலைவர் (4) தேர்தல் ஆணையர்

15. கீழ்க்காணும் வாக்கியங்களில் தவறானதைத் தேர்ந்தெடு.

(1) சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுடைய பிரதிநிதிகள் அல்லர்.

(2) ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைச் சாராத அனைத்து அரசியல் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்று அழைக்கப்படுவர்.

(3) அரசு செயல்படுவதற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடையவர்கள் ஆவார்கள்.

(4) ச.ம.உ என்பதன் விரிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் (MLA) ஆகும்.

www.kalvinews.com

16. உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஓய்வு பெறும் வயது _______.

(1) 58 (2) 64 (3) 62 (4) 60

17. ஆளுநரின் பதவிக்காலம் _______.

(1) 1 ஆண்டு (2) 5 ஆண்டுகள் (3) 6 ஆண்டுகள் (4) 3 ஆண்டுகள்

18. மாநில அரசுப் பல்கலைக் கழகங்களின் வேந்தராகத் திகழ்பவர் _______. (NMMS-2020-21)

(1) முதல்வர் (2) கல்வியாளர் (3) நீதிபதி (4) ஆளுநர்

19. தேர்தல்களை நடத்துவதும் அவற்றைக் கண்காணிக்கும் பணியைச் செய்வதுமான அமைப்பு?

(1) செயலாட்சிக்குழு (2) தேர்தல் ஆணையம்

(3) சட்டமன்றம் (4) நீதித்துறை

20. ஆங்கிலேயர்களால் இந்தியாவில் கட்டப்பட்ட முதல் கோட்டை _______.

(1) வில்லியம் கோட்டை (2) மும்பை கோட்டை

(3) லூயிஸ் கோட்டை (4) புனித ஜார்ஜ் கோட்டை

21. இந்தியாவில் எத்தனை மாநிலங்களில் சட்டமன்ற மேலவை உள்ளது?

(1) 5 (2) 6 (3) 7 (4) 8

22. சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம் _______.

(1) 3 ஆண்டுகள் (2) 5 ஆண்டுகள் (3) 6 ஆண்டுகள் (4) 7 ஆண்டுகள்

23. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.

(1) மகாராஷ்டிரா (2) தெலுங்கானா (3) தமிழ்நாடு (4) பீகார்

24. மாநிலத்தின் கீழவை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) பிரபுக்கள் அவை (2) சட்டமன்றப் பேரவை

(3) சட்டமன்ற மேலவை (4) பொது அவை

25. யாருடைய ஒப்புதலுடன் மாநில அரசின் வரவு செலவுத் திட்டம் சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்படும்?

(1) முதலமைச்சர் (2) பிரதமர் (3) ஆளுநர் (4) நிதி அமைச்சர்

26. முதலமைச்சர் என்பவர் _______.

(1) பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் (2) எதிர்க்கட்சித் தலைவர்

(3) (1) மற்றும் (2) (4) இவற்றில் எதுவுமில்லை

27. மாநில அரசின் மூன்று முக்கிய நிர்வாகப் பிரிவுகள் _______.

(1) மேயர், ஆளுநர், சட்டமன்ற உறுப்பினர்

(2) ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி

(3) கிராமம், நகரம், மாநிலம்

(4) சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை

28. மாநில அரசின் உச்சபட்ச நீதி அமைப்பு _______.

(1) உச்ச நீதிமன்றம் (2) உயர் நீதிமன்றம் (3) சட்டமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

www.kalvinews.com

29. ச. ம. உ என்பதன் விரிவாக்கம் _______.

(1) சட்டமன்ற உறுப்பினர் (2) சட்டமன்ற உரிமை

(3) சமத்துவ மக்கள் உறுப்பினர் (4) சட்டமன்ற உள்ளாட்சி

30. ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் _______ ஆவார்.

(1) முதலமைச்சர் (2) பிரதமர்

(3) சட்டமன்ற உறுப்பினர் (4) ஆளுநர்

31. சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஆளும் கட்சியைச் சாராதவராக இருப்பின் _______ என்று அழைக்கப்படுவார்.

(1) எதிர்க்கட்சித் தலைவர் (2) எதிர்க்கட்சி உறுப்பினர்

(3) நிர்வாகி (4) மேயர்

32. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?

(1) குடியரசுத் தலைவர் (2) துணைக் குடியரசுத் தலைவர்

(3) பிரதம மந்திரி (4) முதலமைச்சர்

33. கீழ்க்காணும் வாக்கியங்களில் தவறானது எது?

(1) ஆளுநராக இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.

(2) 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

(3) நல்ல மனநலமுடையவராக இருத்தல் வேண்டும்.

(4) இலாபம் தரும் எந்தப் பதவியிலும் இருத்தல் கூடாது.

34. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர் _______.

(1) ஆளுநர் (2) முதலமைச்சர்

(3) சபாநாயகர் (4) உள்துறை அமைச்சர்

35. மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் பெற்றவர் _______.

(1) உள்துறை அமைச்சர் (2) குடியரசுத் தலைவர்

(3) சபாநாயகர் (4) ஆளுநர்

36. மாவட்ட நீதிபதிகள் _______ ஆல் நியமிக்கப்படுகிறார்.

(1) உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி (2) மாவட்ட ஆட்சித் தலைவர்

(3) முதலமைச்சர் (4) ஆளுநர்

37. ஆளுநர் ஒரு மாநிலத்தின் _______ ஆவார்.

(1) செயலாளர் (2) தலைவர் (3) நீதிபதி (4) அங்கம்

38. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. ஆளுநர் | - | i. கீழவை |
| b. முதலமைச்சர் | - | ii. பெயரளவுத் தலைவர் |
| c. சட்டமன்றப் பேரவை | - | iii. மேலவை |
| d. சட்டமன்ற மேலவை | - | iv. உண்மையான தலைவர் |

(1) a - ii b - iv c - i d - iii (2) a - iii b - i c - ii d - iv

(3) a - iii b - ii c - i d - iv (4) a - iv b - iii c - i d - ii

www.kalvinews.com

39. பின்வருவனவற்றில் ஈரவைச் சட்டமன்றம் கொண்ட மாநிலம் எது?

(1) தமிழ்நாடு (2) கேரளா (3) கர்நாடகம் (4) ஒரிசா

40. எந்தச் சட்டப்பிரிவு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்துகிறது?

(1) சட்டம் 354 (2) சட்டம் 256 (3) சட்டம் 357 (4) சட்டம் 356

41. ________ ஒப்புதலுக்குப் பின்னரே பண மசோதா சட்டமன்றத்தில் கொண்டு வர முடியும்.

(1) ஆளுநர் (2) குடியரசுத் தலைவர்

(3) முதலமைச்சர் (4) நீதிபதி

42. கீழ்க்கண்டவற்றில் எது தவறான கூற்று?

(1) மாநில நிர்வாகத் துறையின் உண்மையான தலைவர் முதலமைச்சர்.

(2) மாநில அமைச்சரவையின் தலைவர் முதலமைச்சர்.

(3) முதலமைச்சரின் பதவிக்காலம் 6 ஆண்டுகள்.

(4) உயர் நீதிமன்ற நீதிபதிகள் தவறான நடத்தை, திறமையின்மை காரணமாக நீக்கப்படலாம்.

43. சட்டமன்ற மேலவை உறுப்பினராவதற்குத் தகுதியுள்ள வயது?

(1) 18 (2) 25 (3) 40 (4) 30

44. கீழ்க்கண்டவற்றில் எது தவறான கூற்று?

(1) ஒரு சட்டமன்றத் தொகுதி 1,00,000 அல்லது அதற்கு மேல் மக்கள் தொகையைப் பெற்றிருக்க வேண்டும்.

(2) ஒருவர் ஒரு சட்டமன்றத் தொகுதியில் மட்டுமே போட்டியிட முடியும்.

(3) உயர் நீதிமன்றம், சார்நிலை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஒரு வழக்கில் தலையிடலாம்.

(4) உயர் நீதிமன்றம் ஆட்கொணர்வு நீதிப்பேராணையைப் பிறப்பிக்க முடியும்.

45. பின்வருவனவற்றில் எது சரியாகப் பொருந்தவில்லை?

(1) உயர் நீதிமன்றம் - கட்டளையிடும் நீதிப்பேராணை

(2) பெண் திருமண வயது - 18

(3) தமிழ்நாடு சட்டமன்றம் - 236 உறுப்பினர்

(4) சட்டமன்ற மேலவை - 30 வயது நிரம்பியவர்

46. கீழ்க்கண்டவற்றில் எது சரியான கூற்று?

(1) மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு உச்சநீதிமன்றம்.

(2) தலைமை நீதிபதி 60 வயது வரை பதவியில் இருக்கலாம்.

(3) மாவட்ட நீதிபதிகளைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

(4) உயர் நீதிமன்றம் மாநிலத்தில் உள்ள அனைத்துச் சார்நிலை நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துகிறது.

47. பொருத்துக.

(1) ஈரவைச் சட்டமன்றம் - i. குடியரசுத் தலைவர்

(2) பல்கலைக்கழக வேந்தர் - ii. தமிழ்நாடு

(3) ஓரவைச் சட்டமன்றம் - iii. ஆளுநர்

(4) முதல் குடிமகன் - iv. தெலுங்கானா

www.kalvinews.com

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| (1) | ii | iii | i | iv |
| (2) | iii | iv | i | ii |
| (3) | iv | iii | ii | i |
| (4) | iv | ii | iii | i |

48. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS 2019-20)

உயர் நீதிமன்றத்தின் நீதிபதி பின்வரும் தகுதிகளைக் கட்டாயம் கொண்டிருத்தல் வேண்டும்.

i. இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.

ii. இந்தியாவில் ஓராண்டுக் காலம் நீதித்துறை அலுவலராகப் பணியாற்றி இருக்க வேண்டும்.

iii. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராகக் குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

iv. வயது வரம்பு 35 க்குள் இருத்தல் வேண்டும்.

(1) i & ii (2) ii & iii (3) iii & iv (4) i & iii

49. தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS 2019-20)

ஆளுநரின் அதிகாரம் மற்றும் பணிகள்

(1) ஆளுநர், முதலமைச்சரையும் ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கிறார்.

(2) மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக ஆளுநர் செயல்படுகிறார்.

(3) சட்டமன்றத்திற்கு ஓர் ஆங்கிலோ இந்திய உறுப்பினரை நியமனம் செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்

(4) மாநிலச் சட்ட மேலவைக்கு அறிவியல், இலக்கியம், கலை, சமூக சேவை கூட்டுறவு இயக்கம் ஆகிய துறைகளில் சிறப்பாகப் பங்காற்றிய அறிஞர்களில் 5/6 அளவிற்குப் பிரதிநிதித்துவ அடிப்படையில் நியமிக்கிறார்.

50. பொருத்துக.

a. நிர்வாகம் - i. சட்டங்களை நிலைநாட்டல்.

b. சட்டமன்றம் - ii. சட்டங்களைச் செயல்படுத்துதல்.

c. நீதித்துறை - iii. சட்டங்களை இயற்றுதல்

(1) a - ii b - iii c - i

(2) a - iii b - ii c - i

(3) a - ii b - i c - iii

(4) a - i b - iii c - ii

51. சட்டமன்றக் கீழவை உறுப்பினர்கள் யாரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

(1) மேலவை உறுப்பினர்கள் (2) பாராளுமன்ற உறுப்பினர்கள்

(3) நியமனம் செய்யப்படுபவர் (4) மக்கள்

52. இந்தியாவின் தலைநகரம் _______.

(1) சென்னை (2) மும்பை

(3) புதுடெல்லி (4) கல்கத்தா

www.kalvinews.com

53. தேர்தலில் வாக்களிக்கத் தேவையான குறைந்தபட்ச வயது _______.

(1) 25 (2) 18 (3) 30 (4) 35

54. முதலமைச்சராக எத்தனை வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்?

(1) 21 (2) 23 (3) 25 (4) 30

55. பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமிப்பவர் _______.

(1) ஆளுநர் (2) முதலமைச்சர் (3) பதிவாளர் (4) உயர் நீதிமன்ற நீதிபதி

56. யூனியன் பிரதேசங்களின் தலைவர் யார்?

(1) குடியரசுத் தலைவர் (2) ஆளுநர் (3) பிரதமர் (4) தலைமை நீதிபதி

57. பாராளுமன்ற உறுப்பினர்களை _______ என அழைக்கின்றனர்.

(1) M.L.A. (2) P.M. (3) C.M. (4) M.P.

58. திருமணம் / விவாகரத்துத் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அமைப்பு ஏது?

(1) சட்டமன்றம் (2) உயர் நீதிமன்றம்

(3) குடும்ப நல நீதிமன்றம் (4) உச்ச நீதிமன்றம்

59. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானது எது?

(1) இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் தனித்தனியாக அரசாங்க அமைப்பு இல்லை.

(2) சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.

(3) செங்கோட்டை சென்னையில் உள்ளது.

(4) இந்திய அரசியலமைப்பில் மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்தே செயல்படுகின்றன.

60. மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கும்?

(1) ஆளுநர் (2) முதலமைச்சர் (3) குடியரசுத் தலைவர் (4) பிரதமர்

61. ஆளுநர்: __________ :: சட்டமன்ற உறுப்பினர் : நாடாளுமன்ற உறுப்பினர்

(1) சட்ட மேலவை உறுப்பினர் (2) ஜனாதிபதி

(3) முதலமைச்சர் (4) உயர் நீதிமன்ற நீதிபதி

62. ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் நிலையான அவை

(1) மக்களவை (2) சட்டமன்றப் பேரவை

(3) சட்டமன்ற மேலவை (4) மாநிலங்களவை

63. சட்டமன்றக் கூட்டத்திற்குத் தலைமை ஏற்பவர் யார்?

(1) ஆளுநர் (2) முதலமைச்சர் (3) சபாநாயகர் (4) சட்டத்துறை அமைச்சர்

64. முதலமைச்சர் சட்டமன்ற உறுப்பினராக இல்லாவிட்டால் எத்தனை மாதத்திற்குள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்?

(1) 3 (2) 5 (3) 6 (4) 10

65. கீழ்க்கண்ட குழுவில் பொருந்தாதது எது?

(1) லோக்சபா (2) மாநிலங்களவை

(3) ராஜ்யசபா (4) நாடாளுமன்ற மேலவை

www.kalvinews.com

66. கீழ்க்கண்ட நிகழ்வுகளை வரிசைப்படுத்துக.

i. மசோதாவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ii. மசோதா மீது விவாதங்கள் நடைபெறுகின்றன.

iii. மசோதா நிறைவேறுகிறது.

iv. ஆளுநர் கையொப்பத்துடன் சட்டமாகிறது.

v. சட்டப்பேரவையில் மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.

(1) v, i, ii, iii, iv (2) v, ii, i, iii, iv (3) v, i, ii, iv, iii (4) ii, v, i, ii, iii

67. உயர் நீதிமன்றமானது கீழ்க்கண்ட எதைக் கண்காணிக்க முடியாது?

(1) இராணுவ நீதிமன்றம் (2) சார்நிலை நீதிமன்றம்

(3) மாவட்ட நீதிமன்றம் (4) இவற்றில் எதுவுமில்லை

68. ஆவணங்களைத் தாக்கல் செய்ய வலியுறுத்தும் நீதிப்பேராணை, தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை ஆகியவற்றைப் பிறப்பிக்கத் தகுதியான அமைப்பு

(1) சட்டமன்றம் (2) நாடாளுமன்றம்

(3) உயர் நீதிமன்றம் (4) உச்ச நீதிமன்றம்

69. அமைச்சரவையின் செயல்பாடுகளில் திருப்தி ஏற்படாவிட்டால்

(1) காவல்நிலையத்தில் புகார் செய்யலாம்.

(2) தீர்ப்பாயங்களில் முறையிடலாம்.

(3) தேர்தல் ஆணையத்தில் நிரூபித்துப் பதவி நீக்கம் செய்யலாம்.

(4) சட்டமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இயற்றி நீக்கம் செய்யலாம்.

70. சட்டமேலவையின் உறுப்பினர்களில் ______ பங்கு உறுப்பினர்கள் ______ ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓய்வு பெறுவர்.

(1) $\frac{1}{2}$ , 3 (2) $\frac{1}{3}$ , 2 (3) $\frac{1}{3}$ , 6 (4) $\frac{1}{6}$ , 6

71. இவற்றில் ஆளுநரால் நியமிக்கப்படாத பணியிடம் எது?

(1) அரசுத் தலைமை வழக்குரைஞர்

(2) அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர்

(3) மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையர்

(4) வட்டாட்சியர்

72. கூற்று 1: ஆளுநருக்கு அவசரநிலைச் சட்டத்தைப் பிறப்பிக்கும் அதிகாரம் உண்டு.

கூற்று 2: மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

(1) கூற்று 1 மட்டும் சரி (2) கூற்று 2 மட்டும் சரி

(3) இரண்டும் சரி (4) இரண்டும் தவறு

73. இவற்றில் எது முதலமைச்சரின் கடமை அன்று?

(1) மாநில அரசின் கொள்கைகளை உருவாக்குதல்.

(2) பல்வேறு துறைகளைக் கண்காணித்து ஆலோசனை வழங்குதல்.

(3) மத்திய அரசு மற்றும் மாநில அரசிற்கிடையே உறவைப் பராமரித்தல்.

www.kalvinews.com

(4) மாநில உயர் அதிகாரிகளை நியமிக்க ஆளுநருக்கு ஆலோசனை வழங்குதல்.

74. கீழ்க்கண்டவற்றுள் தவறானதைத் தேர்ந்தெடு.

(a) சட்டமன்ற மேலவையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(b) பன்னிரெண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(c) ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மாநில முதலமைச்சரால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

(d) சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும்..

(1) a மற்றும் b

(2) c மற்றும் d

(3) c மட்டும்

(4) a மற்றும் d

75. அரசியலமைப்புச் சட்டப்படி சட்டமேலவை மற்றும் சட்டப்பேரவையில் இருக்கவேண்டிய குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ______, _______.

(1) 40, 60 (2) 60, 40 (3) 60, மூன்றில் ஒரு பங்கு (4) 40, 500

76. ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையில் 450 உறுப்பினர்கள் இருப்பார்களானால், அம்மாநில சட்டமேலவையில் இருக்க வேண்டிய அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ______.

(1) 225 (2) 226 (3) 150 (4) 450

77. அரசியலமைப்புச் சட்டப்படி, ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையில் இருக்க வேண்டிய அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ______.

(1) 234 (2) 500 (3) 545 (4) 250

78. கீழ்க்கண்டவற்றில் எது தவறான கூற்று?

(1) மாநிலத்தின் சட்டமன்றம், அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் பங்கெடுக்கிறது.

(2) உயர்நீதிமன்றம், வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுறு நீதிமன்றமாக விளங்குகிறது.

(3) சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அமைச்சரவையின் பணியாகும்.

(4) உயர் நீதிமன்றம், அமைச்சரவையின் மீது கட்டுப்பாட்டினைச் செலுத்துகிறது.

79. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

i. அங்கீகரிக்கப்படாத கட்சியின் வேட்பாளர்கள் சுயேட்சை வேட்பாளர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

ii. சட்டமன்ற அனுமதி இல்லாமல் மாநில அரசு வரி விதிக்க இயலாது.

iii. மாநிலத்தின் நிதியைக் கட்டுப்படுத்தும் அமைப்பு உயர் நீதிமன்றம்.

(1) ii சரி மற்றவை தவறு (2) i தவிர அனைத்தும் சரி

(3) அனைத்தும் தவறு (4) iii தவறு i, ii சரி

80. தமிழ்நாட்டின் தற்போதைய ஆளுநர் ______.

(1) திரு.பன்வாரிலால் புரோகித் (2) திரு.R.N.ரவி

(3) திரு.ராம்நாத் கோவிந்த் (4) வெங்கையா நாயுடு

www.kalvinews.com

81. தமிழ்நாட்டின் தற்போதைய முதலமைச்சர் ______.

(1) திரு.மு.க.ஸ்டாலின் (2) திரு.உதயநிதி ஸ்டாலின்

(3) திரு.K.பழனிச்சாமி (4) திரு. ஓ.பன்னீர் செல்வம்

82. சென்னை உயர் நீதிமன்றத்தின் தற்போதைய தலைமை நீதிபதி ______.

(1) திரு.மீனா குமாரி (2) திரு.கிருபாகரன் (3) திரு. H.A. பாப்டே (4) திரு.சஞ்சீப் பானர்ஜி

83. தமிழ்நாட்டின் தற்போதைய சபாநாயகர் ______.

(1) திரு.மு.அப்பாவு (2) திரு.D.ஜெயக்குமர்

(3) திரு.ப.தனபால் (4) திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (3) | 16 | (3) | 31 | (2) | 46 | (4) | 61 | (2) | 76 | (3) |
| 2 | (2) | 17 | (2) | 32 | (1) | 47 | (3) | 62 | (3) | 77 | (2) |
| 3 | (2) | 18 | (4) | 33 | (2) | 48 | (4) | 63 | (3) | 78 | (4) |
| 4 | (4) | 19 | (2) | 34 | (2) | 49 | (4) | 64 | (3) | 79 | (1) |
| 5 | (3) | 20 | (4) | 35 | (4) | 50 | (1) | 65 | (1) | 80 | (2) |
| 6 | (4) | 21 | (2) | 36 | (4) | 51 | (4) | 66 | (2) | 81 | (1) |
| 7 | (3) | 22 | (3) | 37 | (2) | 52 | (3) | 67 | (1) | 82 | (4) |
| 8 | (4) | 23 | (3) | 38 | (1) | 53 | (2) | 68 | (3) | 83 | (1) |
| 9 | (1) | 24 | (2) | 39 | (3) | 54 | (3) | 69 | (4) | | |
| 10 | (3) | 25 | (3) | 40 | (4) | 55 | (1) | 70 | (2) | | |
| 11 | (3) | 26 | (1) | 41 | (1) | 56 | (1) | 71 | (4) | | |
| 12 | (3) | 27 | (4) | 42 | (3) | 57 | (4) | 72 | (1) | | |
| 13 | (4) | 28 | (2) | 43 | (4) | 58 | (3) | 73 | (3) | | |
| 14 | (1) | 29 | (1) | 44 | (2) | 59 | (4) | 74 | (2) | | |
| 15 | (1) | 30 | (3) | 45 | (3) | 60 | (1) | 75 | (1) | | |

www.kalvinews.com

வகுப்பு - 7 - பருவம் - 3 - குடிமையியல்

# 2. ஊடகமும் ஜனநாயகமும்

**தொகுப்பு:**
**திரு.பெ.சந்திரசேகரன், M.A., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, ஒந்தனை,**
**ஈரோடு மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.இரா.அசோக்குமார்,M.Sc.,B.Ed.,M.Com.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, புளியம்பட்டி,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

- **ஜனநாயகத்தின் நான்கு தூண்கள்:**
  (1) சட்டமன்றம்.
  (2) நிர்வாகத்துறை.
  (3) நீதித்துறை.
  (4) ஊடகம்
- இந்தியா பாரம்பரியமிக்க நாட்டுப்புறக் கலைகள் பலவற்றைக் கொண்டது
- ஹறி கதைகள், கூத்து போன்ற கலைகளின் மூலம் சமயக் கதைகள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன.
- ஹறி கதைகள், கூத்து போன்ற சமய ஊடகங்கள் இசை, நடனம், சொற்பொழிவு, கதை சொல்லல், பொம்மலாட்டம் போன்றவற்றின் கூட்டுக்கலைகளாக இருந்தன.
- நவீன ஊடக முறை என்பது சிறு மற்றும் குறு அளவிலான கூட்டங்கள், கருத்தரங்குகள், நாடகங்கள், பொதுக்கூட்டங்கள் மற்றும் கருத்துப்பட்டறைகளாக இருக்கின்றன.

**ஊடகம்**

- ஒவ்வொரு தனிமனிதனும் ஊடகத்தின் வெளிப்பாடு ஆகும்.
- அச்சு, ஒலி, ஒளி என அனைத்து வகையான பரப்பு சாதனங்களையும் உள்ளடக்கியதே ஊடகம்.
- மக்களின் பல்கலைக்கழகமாக கருதப்படுவது அச்சு ஊடகம்.
- ஊடகம் என்பது மீடியம் என்ற ஆங்கில வார்த்தையின் பன்மை ஆகும்.
- ஒரு நபர் மற்ற நபர்களுடனும், நிறுவனங்களுடனும் மற்றும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளக்கூடிய சாதனம் - ஊடகம்.
- ஊடகமானது தகவல்கள், செய்திகள், உணர்வுகள், கருத்துக்கள், எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடியது.
- அச்சு ஊடகம் மக்களுக்கு தகவல் வழங்கக்கூடியது, கல்வியறிவு ஊட்டக்கூடியது, பொதுமக்களின் பாதுகாவலனாகவும் செயல்படுகிறது.
- ஊடகம் என்பது நாட்டின் தொலைதூரப் பகுதியில் வாழும் மக்களுக்கும், பிற பகுதியில் என்ன நடக்கிறது என்பதை அறிய உதவுகிறது.
- மக்களாட்சியில் ஊடகம் முக்கிய பங்கு வகிக்கிறது.

www.kalvinews.com

- ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகம் என்பது தகவல்கள் மற்றும் அறிவை வழங்கும் மிக முக்கிய சாதனம்.

**ஊடகத்தின் முக்கியத்துவம்**

- ஊடகம் நம்மைச் சுற்றியுள்ள பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார செயல்பாடுகளை பிரதிபலிக்கும் கண்ணாடி.
- அனைத்து தொலைக்காட்சி சேனல்களும் தேசிய மற்றும் பன்னாட்டுச் செய்திகளை ஒளிபரப்புகின்றன.
- சமூக, அரசியல் பிரச்சனைகளுக்கெதிராகவும், சமூக அநீதிக்கு எதிராகவும் போராடுகிறது.
- ஊடகம் மக்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உதவுகிறது.
- வெகுஜன ஊடகம் அன்றாட நிகழ்வுகளைப் பற்றி நேர்மையாகவும், நுட்பமாகவும், நடுநிலையாகவும் செய்திகளைத் தருகின்றது.
- நம்பகத்தன்மையான தகவல்களை மக்களிடம் வழங்குவதில் பொறுப்புடன் செயல்படுகிறது.
- பாராளுமன்றம் மற்றும் ஜனநாயகம் ஊடகத்தின் கண்காணிப்பில் இருந்தால் மட்டுமே வலிமை அடையும்.

**தனி மனித தொடர்பு**

- ஒரு நபர் மற்றொரு நபருடன் (தனியாகவோ அல்லது குழுவாகவோ) தொடர்பு கொள்ளப் பயன்படுகிறது.
- (எ - கா): கடிதங்கள், தொலைபேசி, அலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல்.

**வெகுஜன தொடர்பு**

- ஒரு நபரோ அல்லது குழுவோ மற்றொரு நபருடனோ அல்லது குழுவுடனோ தொடர்பு கொள்ளப் பயன்படுகிறது.
- (எ - கா): செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி - வெகுஜன ஊடகம்

**உள்ளூர் ஊடகம்**

- ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் மக்களின் நலனுக்காக செயல்படும் ஊடகம் உள்ளூர் ஊடகம் ஆகும்.
- (எ - கா): தண்டோரா, சுவரொட்டிகள்

**ஊடகத்தின் வகைப்பாடு**

- கேபிள் தொலைக்காட்சி, நேரடி அஞ்சல், கருத்தரங்கு : குறுகிய தொடர்பு ஊடகம்
- திரைப்படம்,தொலைக்காட்சி, வானொலி : தொலைத்தொடர்பு ஊடகம்
- செய்தித்தாள், இதழ்கள், பத்திரிகை, புத்தகம், சுவரொட்டி, அறிக்கை : அச்சு ஊடகம்
- கூகுள் இணையதளங்கள், வலைப்பதிவுகள் : இணைய ஊடகம்
- கீச்சகம், முகநூல், புலனம் / கட்செவி அஞ்சல், படவரி : சமூக ஊடகம்

**ஊடகத்தின் முக்கியத்துவம்**

- மிகவும் சக்தி வாய்ந்த கட்டமைப்பு
- அன்றாட நிகழ்வுகள் அரசின் பலம் மற்றும் பலவீனத்தை ஊடகம் வெளிக்கொணர்கிறது
- ஊடகம் பொருள்களை மக்களிடம் விளம்பரப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது.
- ஊடகம் இந்த உலகை சிறியதாகவும் மக்களுக்கு மிக நெருக்கமாகவும் மாற்றியுள்ளது.
- திரைப்படம் மூலம் சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர்தல்

www.kalvinews.com

- எச்சூழ்நிலையிலும் நடுநிலையான அறிக்கையை மட்டுமே ஊடகம் வழங்குகிறது
- 1956 ஆம் ஆண்டு ஆகாசவானி என்ற பெயரில் வானொலி ஒலிபரப்பை செய்தது. 1936 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**ஊடகம் -- நெறிமுறை மற்றும் பொறுப்பு:**

- நெறிமுறை என்பது வாழ்க்கையைத் தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பாகும்.
- ஊடக நெறிமுறை என்பது நல்ல நடத்தை கூறிய கொள்கைகள் அடங்கிய தொகுப்பாகும்.
- அரசு சிறப்பாக செயல்பட விழிப்பான சுதந்திரமான ஊடகம் அவசியம்.

**ஜனநாயகத்தில் ஊடகத்தின் பங்கு:**

- ஜனநாயகத்தின் முதுகெலும்பு ஊடகம்.
- ஊடகம் மக்களுக்கு அறிவு வலிமையை அளிக்கக்கூடிய உந்துசக்தி.
- வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- அரசின் ஒவ்வொரு செயல்பாட்டையும் மக்களுக்கு தெரியப்படுத்துதல்.
- மக்களால் ஆட்சி செய்யப்படுவது மக்களாட்சி ஆகும்.
- டெமோஸ், க்ராடோஸ் என்பது கிரேக்கச் சொற்கள்.
- டெமோஸ் - மக்கள் ; க்ராடோஸ் - ஆட்சி, அதிகாரம்.
- கிராமப்புற மக்களுக்கு கல்வி அளித்தல்.
- அரசாங்கத்தை கண்காணிக்கும் பணி செய்தல்.
- ஊடகம் இல்லாத ஜனநாயகம் என்பது சக்கரம் இல்லாத வாகனத்திற்குச் சமம்..
- அரசிற்கும் மக்களுக்கும் இணைப்பு பாலமாக ஊடகம் செயல்படுகிறது.

**பொதுவான கருத்துக்கள்:**

- "Aakashvani" (ஆகாசவானி) என்ற ஆங்கில வார்த்தையின் பொருள் - **"வானிலிருந்து வரும் ஒலி"**
- அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் - **ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் -_1453**
- **"டெமோகிரேசி" (Democracy) என்பது - கிரேக்க சொல் - இதன் பொருள் "மக்களாட்சி"**
- மக்களால் ஆட்சி செய்யப்படுவது மக்களாட்சி ஆகும்

## பயிற்சி வினாக்கள்:

1. கீழ்க்கண்டவற்றில் அச்சு ஊடகத்தின் கீழ் வருவது எது?
   (1) வானொலி (2) தொலைக்காட்சி (3) செய்தித்தாள் (4) இணையதளம்
2. கீழ்க்கண்டவற்றில் ஒலிபரப்பு ஊடகம் என்பது _______.
   (1) இதழ்கள் (2) அறிக்கைகள் (3) நாளிதழ் (4) வானொலி
3. உலகினை மக்களின் அருகாமையில் கொண்டு வந்த ஊடகம் _______.
   (1) தட்டச்சு (2) தொலைபேசி (3) தொலைக்காட்சி (4) இவற்றில் ஏதுமில்லை
4. வெகுஜன ஊடகம் என்பது _______.
   (1) வானொலி (2) தொலைக்காட்சி (3) 1 மற்றும் 2 (4) இவற்றில் ஏதுமில்லை
5. ஊடகம் ஏன் சுதந்திரமாக செயல்பட வேண்டும்?
   (1) நிறைய பணம் ஈட்ட (2) நிறுவனத்தை ஊக்கப்படுத்த
   (3) நடுநிலையான தகவலை தருவதற்கு (4) இவற்றில் ஏதுமில்லை

www.kalvinews.com

6. உலகத்தினைச் சிறியதாகவும், மிக அருகாமையிலும் கொண்டு வந்தது _______ ஆகும்.
(1) கல்வி (2) வேளாண்மை (3) ஊடகம் (4) தட்டச்சு

7. ஒவ்வொரு தனிமனிதனும் _______ ஆகும்.
(1) ஊடகத்தின் வெளிப்பாடு (2) அறிவு
(3) ஆற்றல் (4) அச்சு ஊடகம்

8. அச்சு இயந்திரம் _______ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
(1) மார்கோனி (2) ஸ்மித்
(3) ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் (4) பிரொஸ்ட்

9. நமது வாழ்க்கையைத் தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பு _______.
(1) ஊடகம் (2) கல்வி (3) வேளாண்மை (4) நெறிமுறை

10. இந்திய அரசின் வானொலி ஒலிபரப்பு நிறுவனம் _______.
(1) ஆகாசவாணி (2) F.M (எப்எம்) (3) கூகுள் (4) இணையம்

11. சமய கதைகள் மக்களிடம் கொண்டு செல்ல பயன்பட்ட கலை _______.
(1) பொதுக்கூட்டம் (2) நாடகம் (3) கருத்தரங்கு (4) கூத்து

12. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு _______.
(1) 1400 (2) 1450 (3) 1453 (4) 1460

13. நவீன ஊடக முறையை குறிக்கப்படுவது _______ ஆகும்.
(1) கூத்து (2) பொம்மலாட்டம்
(3) சொற்பொழிவு (4) நாடகம்

14. மக்களின் பல்கலைக்கழகமாக கருதப்படுவது _______ ஆகும்.
(1) அச்சு ஊடகம் (2) வானொலி (3) தொலைக்காட்சி (4) கடிதம்

15. ஊடகம் என்பது எந்த ஆங்கில வார்த்தையின் பன்மை?
(1) மீடியா (2) மீடியம் (3) ரேடியோ (4) ரேடியன்

16. தனிமனித தொடர்பு சாதனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு _______.
(1) இணையம் (2) தொலைக்காட்சி
(3) வானொலி (4) மின்னஞ்சல்

17. தொலைக்காட்சி என்பது எந்த வகை ஊடக அமைப்பைச் சார்ந்தது?
(1) தொலைத் தொடர்பு (2) சமூக ஊடகம்
(3) அச்சு (4) குறுகிய தொடர்பு

18. குறுகிய தொடர்பு ஊடகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு _______.
(1) வானொலி (2) அஞ்சல் (3) மின்னஞ்சல் (4) தொலைநகல்

19. திரைப்படம் என்பது எந்த வகை ஊடகத்தைச் சார்ந்தது?
(1) குறுகிய தொடர்பு (2) வெகுஜன தொடர்பு
(3) தனிமனித தொடர்பு (4) தொலைத் தொடர்பு

www.kalvinews.com

20. பத்திரிக்கை எந்த வகை ஊடகத்தை சார்ந்தது?

(1) சமூக ஊடகம் (2) அச்சு ஊடகம்

(3) இணைய ஊடகம் (4) தொலைத்தொடர்பு ஊடகம்

21. இணைய வகை ஊடகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு _______.

(1) வலைப்பதிவு (2) திரைப்படம் (3) செய்தித்தாள் (4) கீச்சகம்

22. சமூக ஊடகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு _______.

(1) செய்தித்தாள் (2) புலனம் (3) கூகுள் (4) அஞ்சல்

23. எந்த ஆண்டு ஆகாசவானி என்ற வானொலி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது?

(1) 1936 (2) 1935 (3) 1937 (4) 1956

24. மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது _______.

(1) ஊடகம் (2) கல்வி (3) விவசாயம் (4) அரசியல்

25. சமூகத்தில் நடைபெறுகிற முக்கிய பிரச்சனைகளைப் பற்றிய கருத்தை தெரிவிக்கும் ஊடகம் _______.

(1) வெகுஜன ஊடகம் (2) அச்சு மற்றும் மின்னணு

(3) தொடர்பு ஊடகம் (4) சமூக ஊடகம்

26. வாழ்க்கையை வாழ தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பு _______.

(1) நெறிமுறை (2) கல்வி (3) ஊடகம் (4) தொலைக்காட்சி

27. ஜனநாயகத்தின் முதுகெலும்பு _______.

(1) இயற்கைவளம் (2) ஊடகம் (3) வாகனங்கள் (4) தாதுவளங்கள்

28. டெமோஸ் என்பது _______ சொல்

(1) லத்தீன் (2) அரேபிய (3) கிரேக்க (4) மீடியா

29. ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் மக்களின் நலனுக்காக செயல்படும் ஊடகம் _______.

(1) வெகுஜனம் (2) உள்ளூர்

(3) தொலைத் தொடர்பு (4) இணையம்

30. படவரி என்பது எந்த ஊடகத்தைச் சார்ந்தது?

(1) தொலைத்தொடர்பு (2) குறுகிய தொடர்பு

(3) அச்சு ஊடகம் (4) சமூக ஊடகம்

31. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (i) குறு அளவிலான ஊடகம் | - | a. | கூகுள் இணையம் |
| (ii) அச்சு ஊடகம் | - | b. | சுவரொட்டிகள் |
| (iii) இணைய ஊடகம் | - | c. | திரைப்படம் |
| (iv) ஒலிபரப்பு ஊடகம் | - | d. | கருத்தரங்கு |

(1) (i) - d (ii) - b (iii) - a (iv) - c (2) (i) - d (ii) - b (iii) - c (iv) - a

(3) (i) - a (ii) - d (iii) - b (iv) - c (4) (i) - c (ii) - b (iii) - d (iv) - a

www.kalvinews.com

32. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

(i) தனிமனித தொடர்பு - a. வலைப்பதிவு

(ii) வெகுஜன தொடர்பு - b. முகநூல்

(iii) சமூக ஊடகம் - c. வானொலி

(iv) இணைய ஊடகம் - d. மின்னஞ்சல்

(1) (i) - c (ii) - b (iii) - d (iv) - a (2) (i) - d (ii) - c (iii) - b (iv) - a

(3) (i) - d (ii) - b (iii) - c (iv) - a (4) (i) - b (ii) - d (iii) - c (iv) - a

33. பொருத்துக

(i) திரைப்படம் - a. நடுநிலைத்தன்மை

(ii) தொலைக்காட்சி - b. சமூகப் பிரச்சனை

(iii) வெகுஜன ஊடகம் - c. வட்டார மக்கள்

(iv) உள்ளூர் ஊடகம் - d. பன்னாட்டுச் செய்தி

(1) (i) - d (ii) - b (iii) - c (iv) - a (2) (i) - c (ii) - b (iii) - d (iv) - a

(3) i) - b (ii) - d (iii) - c (iv) - a (4) (i) - b (ii) - d (iii) - a (iv) - c

34. தவறான ஒன்றைக் கண்டறி.

(1) செய்தித்தாள்கள் (2) அறிக்கைகள்

(3) கீச்சகம் (4) சுவரொட்டிகள்

35. கீழ்காணும் வாக்கியத்தில் சரியானது எது

(அ) ஊடகம் என்பது பொதுவாக ஒருவருக்கொருவர் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது

(ஆ) ஊடகம் மிகவும் சக்தி வாய்ந்த நிறுவனம்

(இ) ஊடகம் மக்களிடம் பொதுக்கருத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது

(ஈ) ஊடகத்திற்கு எந்த பொறுப்பும் கிடையாது

(1) அ, ஆ மற்றும் இ சரி (2) அ, ஆ மற்றும் ஈ சரி

(3) ஆ, இ மற்றும் ஈ சரி (4) அ, ஆ மற்றும் ஈ சரி

36. கூற்று: அச்சு ஊடகம் மக்களின் பல்கலைக்கழகம் எனக் கருதப்படுகிறது

காரணம்: பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதிலும் கல்வி அறிவு ஊட்டுவதிலும் பெரும்பங்கு வகிக்கிறது மற்றும் பொதுமக்களின் பாதுகாவலனாகவும் செயல்படுகிறது

(1) கூற்று சரி, காரணம் சரியான விளக்கம்

(2) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

(3) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(4) கூற்றும் மற்றும் காரணம் இரண்டும் தவறு

37. கூற்று: தொலைபேசி ஒரு ஊடகம் ஆகும்.

காரணம்: ஒன்று ஒரு நபர் மற்றொருவருடன் தனியாகவோ குழுவாகவோ தொடர்பு கொள்ளலாம்

(1) கூற்று தவறு காரணம் சரி (2) கூற்று சரி, காரணம் தவறு

(3) கூற்று, காரணம் இரண்டும் சரி (4) கூற்று, காரணம் இரண்டும் தவறு

www.kalvinews.com

38. கீழே உள்ளவற்றில் தவறானது எது?

(1) கிராஸ் என்பது மக்களை குறிக்கிறது

(2) தொடர்பு கொள்ளும் முறை ஊடகம்

(3) ஊடகம் தேசிய மற்றும் உலக செய்தியை அளிக்கிறது

(4) ஊடகம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது

39. கீழ்க்காணும் நிகழ்வுகளை காலங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்துக.

1. இந்திய அரசு வானொலி நிறுவனம் தனது ஒலிபரப்பைத் தொடங்கியது

2. இந்திய அரசு வானொலி நிறுவனம் தொடங்கப்பட்டது.

3. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது

(1) 1, 2, 3 (2) 2, 3, 1 (3) 3, 1, 2 (4) 3, 2, 1

40. ஆகாசவாணி தனது ஒளிபரப்பைத் தொடங்கிய ஆண்டு ________.

(1) 1973 (2) 1935 (3) 1937 (4) 1956

41. கீழ்க்கண்டவற்றுள் சரியான இணை / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்

(i) வலைப்பதிவு - இணைய வகை ஊடகம்

(ii) திரைப்படம் - தனிமனித தொடர்பு ஊடகம்

(iii) செய்தித்தாள் - வெகுஜன தொடர்பு ஊடகம்

(1) i மற்றும் ii (2) i மற்றும் iii

(3) மேற்கண்ட அனைத்தும் (4) மேற்கண்ட ஏதுமில்லை

42. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) சமூக ஊடகம் - கீச்சகம்

(ii) புத்தகம் - அச்சு ஊடகம்

(iii) கருத்தரங்கு - குறுகிய தொடர்பு ஊடகம்

(1) i மட்டும் (2) ii மற்றும் iii

(3) i, ii மற்றும் iii (4) மேற்கண்ட ஏதுமில்லை

43. கீழே உள்ளவற்றில் தவறானது எது?

(1) “மீடியம்” (Medium) என்பது - ஆங்கில வார்த்தை - இதன் பொருள் “ஊடகம்”

(2) டெமோஸ்” (Demos) என்பது - கிரேக்க சொல் - இதன் பொருள் “மக்கள்”

(3) “க்ராடோஸ்” (Crates) என்பது - கிரேக்க சொல் - இதன் பொருள் “ஆட்சி (அ) அதிகாரம்”

(4) “டெமோகிரேசி” (Democracy) என்பது - கிரேக்க சொல் - இதன் பொருள் “ஜனநாயகம்”

44. கீழ்கண்டவற்றை பொருத்துக.

(i) ஹரி கதைகள் - a. மின்னஞ்சல்

(ii) தனிமனித தொடர்பு - b. கருத்தரங்கம்

(iii) வெகுஜன தொடர்பு - c. சமயக் கதைகள்

(iv) குறுகிய தொடர்பு ஊடகம் - d. தொலைக்காட்சி

(1) (i) - c (ii) - a (iii) - d (iv) - b (2) (i) - a (ii) - c (iii) - b (iv) - d

(3) (i) - c (ii) - b (iii) - a (iv) - d (4) (i) - d (ii) - c (iii) - b (iv) - a

www.kalvinews.com

45. தவறான விடையைத் தேர்ந்தெடு.

(1) ஊடகம் மக்களாட்சியில் தலையிடுவதில்லை.

(2) ஊடகம் தேசிய மற்றும் உலக செய்திகளை அனுப்புவதாகும்.

(3) ஊடகம் என்பது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் மக்களின் நலனுக்காக செயல்படுவதாகும்.

(4) ஊடகம் கிராமப்புற மக்களுக்குக் கல்வி அளிக்கிறது.

46. சமூக ஊடகத்தினை குறிப்பது _______.

(1) வலைப்பதிவுகள் (2) தொலைக்காட்சி

(3) முகநூல் (4) செய்தித்தாள்

47. ஊடகங்களின் முக்கியப் பணி _______.

(1) மக்களிடையே பொதுவான கருத்தினை ஏற்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

(2) பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் வழங்குதல்

(3) பொருள் ஈட்ட வழி செய்தல்

(4) எதிர் கருத்துக்களை விதைத்தல்

48. ஜனநாயகத்தின் கோட்பாடு என்பது _______.

(1) முடியாட்சிக் கோட்பாடு (2) மக்களால் ஆட்சி செய்யப்படுதல்

(3) ஏகாதிபத்தியம் (4) சிலருக்கு முக்கியத்துவம்

49. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படுவது _______.

(1) செயலாட்சிக்குழு (2) நீதித்துறை (3) சட்டமன்றம் (4) ஊடகம்

50. கூற்று: ஜனநாயக அரசின் நான்காவது தூண் ஊடகம் ஆகும்.

காரணம்: ஊடகம் மற்ற மூன்று துறை (சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை) செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது.

(1) கூற்று சரி, காரணம் தவறு

(2) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

(3) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(4) கூற்றும் மற்றும் காரணம் இரண்டும் தவறு

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (3) | 11 | (4) | 21 | (1) | 31 | (1) | 41 | (2) |
| 2 | (4) | 12 | (3) | 22 | (2) | 32 | (2) | 42 | (4) |
| 3 | (3) | 13 | (4) | 23 | (1) | 33 | (4) | 43 | (1) |
| 4 | (3) | 14 | (1) | 24 | (1) | 34 | (3) | 44 | (1) |
| 5 | (3) | 15 | (2) | 25 | (2) | 35 | (1) | 45 | (1) |
| 6 | (3) | 16 | (4) | 26 | (1) | 36 | (3) | 46 | (3) |
| 7 | (1) | 17 | (1) | 27 | (2) | 37 | (3) | 47 | (1) |
| 8 | (3) | 18 | (2) | 28 | (3) | 38 | (1) | 48 | (2) |
| 9 | (4) | 19 | (4) | 29 | (2) | 39 | (4) | 49 | (4) |
| 10 | (1) | 20 | (2) | 30 | (4) | 40 | (4) | 50 | (3) |

www.kalvinews.com

வகுப்பு - 7 - பருவம் - 3 - வரலாறு

## 1. புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும்

**தொகுப்பு:**
**திருமதி.சு.சுகுணா, M.A., M.A., M.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியை (சமூக அறிவியல்),**
**அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,**
**குறிஞ்சிப்பாடி,**
**கடலூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திருமதி.L.சிவசங்கரி M.A.,B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியை (சமூக அறிவியல்),**
**அரசு மேல்நிலைப்பள்ளி,**
**கருங்குழி,**
**கடலூர் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

**தமிழகத்தில் பக்தி இயக்கம் (ஆழ்வார்களும் நாயன்மார்களும்)**

- ஆதிசங்கரர் - **அத்வைத தத்துவம்**
- இராமானுஜர் - **விசிஷ்டாத்வைத தத்துவம்.**
- கடவுளின் மீதான முழு பக்தியே மனிதனை வாழ்வின் இடர்பாடுகளிலிருந்து காத்து முக்தி அருளும் - **பக்தி இயக்கம்.**
- அறிவின் வழிப்பட - **ஞானமார்க்கம்.**
- சடங்குகள், நற்செயல்கள் ஆகியவற்றின் வழிப்பட - **கர்மா மார்க்கம்.**
- இவை இரண்டைக் காட்டிலும் சிறந்தது பக்தி மார்க்கம் - **பகவத் கீதை.**
- பக்தி இயக்கம் அல்லது வழிபாட்டு முறைகளிலான புத்தெழுச்சி தமிழகத்தில் தொடங்கிய காலம் - **கி. பி 7 ஆம் நூற்றாண்டு.**
- பக்தனுக்கும் கடவுளுக்கும் இடையிலான பரஸ்பர பற்றுதலுக்கும் அன்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்தது **பக்தி இயக்கம்.**
- தொடக்க கால இஸ்லாம் சமயத்தின் உலகப்பற்றுதலுக்கு எதிராகத் தோன்றியதே - **சூபி தத்துவமாகும்.**
- தீவிர பக்தி, ஆழமான தியானம் மூலமே கடவுளை உணர முடியும் - **சூபி கோட்பாடு**
- இந்துக்களும் இஸ்லாமியரும் கடவுளை வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் இருப்பது ஒரேயொரு கடவுள் என்று கூறியவர் - **ஹரிதாசர்**
- பக்தி இயக்கத்தை தொடங்கி வைத்தவர்கள் - **ஆழ்வார்களும், நாயன்மார்களும்.**
- வைணவ பக்தி அடியார்கள் - **ஆழ்வார்கள்.**
- சிவனை வழிபடும் சைவர்கள் - **நாயன்மார்கள்.**
- சிவன், விஷ்ணு குறிப்பாக கிருஷ்ணர் குறித்த பாடல்கள் **தமிழிலும்**, தென்னிந்திய மொழிகளான **கன்னடம், தெலுங்கில்** இயற்றப்பட்டது.
- ஆழ்வார்கள் - பன்னிருவர், பக்தி இயக்க வளர்ச்சியில் தங்கள் பங்களிப்பாலேயே தனித்துவம் மிகுந்தவர்கள்.

  1. **நம்மாழ்வார்** 2. **பெரியாழ்வார்**
- நம்மாழ்வார் - 1102 **பத்திகளைக்** கொண்ட **திருவாய்மொழியால்** புகழ்பெற்றார்.

www.kalvinews.com

- நம்மாழ்வாரின் 4000 பாடல்கள் - நாலாயிரம் திவ்யப் பிரபந்தம் என்ற நூலாக தொகுத்தவர் - **நாதமுனி.**
- ஆழ்வார்களில் ஒரே ஒரு பெண்பால் ஆழ்வார் - **ஆண்டாள்.**
- பெரியாழ்வார் தொடக்கத்தில் - **விஷ்ணு சித்தர்** என்று அறியப்பட்டார்.
- தாய் யசோதை இடத்தில் பெரியாழ்வார் (தன்னை) கற்பனை செய்து **குழந்தை கிருஷ்ணனைப்** பற்றி பல பாடல்கள் பாடினார்.
- திருவில்லிப்புத்தூர் கோவில் துளசித் தோட்டத்தில் பெரியாழ்வார் **ஆண்டாளைக்** கண்டெடுத்து தன் குழந்தையாக ஏற்றார் (**ஆண்டாள் - ஆட்சி புரிபவள்**).
- ஆண்டாளின் **இரண்டு கவிதை** நூல்கள்.
- **திருப்பாவை** (கிருஷ்ணனை அடையும் வழி).
- **நாச்சியார்திருமொழி** (பெண்ணின் புனிதப் பாடல்கள்).
- திருவரங்கம் கோவிலிலுள்ள விஷ்ணு அவதாரமான இரங்கநாதனின் மீதான காதலை ஆண்டாள் தனது பாடலில் வெளிப்படுத்தியுள்ளார் (**தமிழ்நாட்டில் வைணவத் திருமண விழாக்களில் இப்பாடல்கள்** பயன்படுத்தப்படுகின்றன).
- வைணவ அடியார்கள் - 12 **ஆழ்வார்கள்.**
- **முதல் 3 ஆழ்வார்கள்**
  - ✓ பொய்கை ஆழ்வார்
  - ✓ பூதத்தாழ்வார்
  - ✓ பேயாழ்வார்
- **மற்றவர்கள்**
  - ✓ திருமழிசையாழ்வார்
  - ✓ பெரியாழ்வார்
  - ✓ தொண்டரடிப்பொடி ஆழ்வார்
  - ✓ திருமங்கை ஆழ்வார்
  - ✓ திருப்பண் ஆழ்வார்
  - ✓ குலசேகர ஆழ்வார்
  - ✓ நம்மாழ்வார்
  - ✓ மதுரகவி ஆழ்வார்
  - ✓ ஆண்டாள்
- சைவ அடியார்கள் - 63 **நாயன்மார்கள்.**

  63 பேரில் **மும்மூர்த்திகள் → ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர்** இம்மூவருக்கும் தென்னிந்தியக் கோவில்களில் சிலைவழிபாடு உண்டு.
- நாயன்மார்களின் பாடல்களை தொகுத்தவர் - **நம்பியாண்டார் நம்பி** (கி.பி 1000)
- நாயன்மார்களின் பாடல் தொகுப்பே - **சைவப் புனித நூல்**களாக திருமறையின் அடிப்படையாக உள்ளது.
- திருமறை → 12 **நூல்களைக்** கொண்டுள்ளது

  11 நூல்களை தொகுத்தவர் - **நம்பி ஆண்டார் நம்பி.**

  12 ஆவது நூலை தொகுத்தவர் - **சேக்கிழார் (பெரியபுராணம்).**

www.kalvinews.com

**ஆதிசங்கரர்**

- **ஆதிசங்கரர்** அல்லது சங்கராச்சாரியார் (ஏறத்தாழ கி.பி 700 - கி.பி 750) அத்வைதம் தத்துவத்தை போதித்தவர் மேலும் ஞானம் பெறுவதன் மூலம் ஜீவாத்மா - பரமாத்வாவுடன் இணையும் என்று போதித்தார்.
- ஆதிசங்கரர் மடங்கள் - **பத்ரிநாத், பூரி, துவாரகா, சிருங்கேரி** இவை **கற்றுக்கொள்வதற்கான** மற்றும் **வழிபாடு செய்வதற்கான** மையங்களாகவும் புனிதத்தலங்களாகவும் விளங்குகின்றன.
- சங்கரர் பக்தி இயக்கத்தின் மீது கவனம் செலுத்தாமல் **வேதமரபுகளை** மீட்டெடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார்.
- **பிரம்ம சூத்திரம்** - எனும் நூலுக்கு சங்கரர் எழுதிய **உரையே** அவர் ஆற்றிய பணிகளில் சாலச் சிறந்தது.
- பிரம்ம சூத்திரம் **வேதாந்தப் பள்ளியின் அடிப்படை** நூலாகும்.
- முதன்மையான உபநிடதங்களுக்கும் சங்கரர் உரை எழுதியுள்ளார்.

**இராமானுஜர்:**

- **இராமானுஜர்** - 11 ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் வைணவத் திருத்தொண்டர், செல்வாக்கு பெற்ற வைணவ சிந்தனையாளர்.
- இராமானுஜரின் **விசிஷ்டாத்வைதம்** (தத்துவம்) சொல்கிறது ஆத்மா பிரமத்துடன் கலந்த பின்னரும் தனக்கான அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது.
- சங்கரர் பிற்காலத்தில் **ஸ்ரீரங்கத்தில்** குடியேறினார்.
- கோவில்களில் நுழைவதற்கான சாதியக் கட்டுப்பாடுகளைக் கண்டனம் செய்தவர் - **இராமானுஜர்.**
- விஷ்ணுவின் மீதும் அவர் இணை லட்சுமியின் மீதும் சங்கரர் கொண்டிருந்த பக்திநெறி - **ஸ்ரீவைஷ்ணவம்.**
- 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் வைணவ சமயம் இந்தியா முழுவதும் பரவியது.
- புகழ்பெற்ற சமஸ்கிருதக் கல்வி மையம் - **காஞ்சிபுரம்.**
- **வடகலை வைணவம்** செழித்தோங்கிய - **காஞ்சிபுரம்.**
- **தென்கலை வைணவம்** செழித்தோங்கியது - **திருவரங்கம்** (ஸ்ரீரங்கம்).
- சமஸ்கிருத வேத நூல்களில் முக்கியம் என கருதியவர்கள் - **வடகலையினர்.**
- தமிழ்மொழி பன்னிரு ஆழ்வாரின் திவ்ய பிரபந்தம் - **தென்கலை.**

**வட இந்தியாவில் பக்தி இயக்கம்:**

- இந்துசமயத் தலைவர்கள் இஸ்லாம் குறித்து இரு அணுகுமுறைகளைக் கொண்டிருந்தனர்.
- **குழு 1:** இஸ்லாமில் எது சிறந்ததோ அதை ஏற்றுக்கொண்டனர்.
- **குழு 2:** இஸ்லாம் மதத்திற்கு சமயம் மாறிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு சில வழிமுறையைக் கையாண்டனர்.
- கபீர், குருநானக் → **முதல் குழுவைச்** சேர்ந்தோராவர்,
- வங்காளத்தில் உருவான சைதன்ய தேவா அல்லது சைதன்ய மகாபிரபுவுடன் தொடர்புடைய இயக்கம் → **இரண்டாவது குழு** ஆதரவு.
- வட இந்தியாவில் பக்திச் சிந்தனையை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியவர் - **இராமாநந்தர்.**

- தெலுங்கு தத்துவஞானியான **வல்லபாச்சாரியார்**, மதுராவுக்கு அருகே **கோவர்தன் குன்றுகளில்** கிருஷ்ணபகவானுக்கு கோவில் அமைத்தார்.
- கவிஞரும், இசைக்கலைஞரும், பார்வைத்திறன் அற்றவருமான **சூர்தாஸ்** கோவர்தன் குன்று கிருஷ்ண பகவான் கோவிலோடும், ஆக்ராவிலுள்ள கோவிலோடும் தொடர்புடையவர்.
- சூர்தாஸின் புகழ்பெற்ற கவிதைத்தொகுப்பு → **சூர்சாகர்.**
- மேவார் பட்டத்து இளவரசர் - மனைவி **மீராபாய்** (அவரின் பஜனை பாடல்கள் மூலம் புகழ்பெற்றவர்).
- **மீராபாய்** - கிருஷ்ணபகவானின் தீவிர பக்தையாவார்.
- மீராபாய் - **ரவிதாஸ்** என்பவரின் **சீடராவார்.**
- சைதன்யதேவர் தனது பரவசமூட்டும் பாடல்கள், களிப்பூட்டும் நடனங்கள் மூலம் **கிருஷ்ண வழிபாட்டை பிரபலமாக்கினார்.**
- **துளசிதாசர்** - இந்திமொழி - ராமனின் கதையை மீண்டும் சொல்லும் **இராமசரிதமானஸ்(நூல்)** - நட்பு, விசுவாசம் - அழுத்தம் கொடுத்தது (இன்றளவும் இரவு விழாக்களில் பாடப்படுகிறது).
- 17 ஆம் நூற்றாண்டில் மகாராஷ்டிராவில் வாழ்ந்த **துக்காராம்** கவிஞர் மற்றும் திருத்தொண்டருமாவார்.
- விஷ்ணுவின் அவதாரமான விதோபா அவர் இயற்றிய ஆன்மீகப் பாடல்கள் (**அபங்கா அல்லது கீர்த்தனைகள்**) மூலம் அறியப்பட்டார்.
- மகாராஷ்டிரா - சோலாப்பூர் (மாவட்டம்) → **பந்தர்பூர்** (அ) பண்டரிபுரத்தில் **விதோபா / பாண்டு ரங்கா** கோவில் உள்ளது.
- வங்காளம் - **சைதன்ய தேவா**
- மகாராஷ்டிரா - **துக்காராம்**

**இந்தியாவில் சூபியிஸம்:**

- சூபியிசத்தை பின்பற்றியோர் **இஸ்லாம் இந்து** இருசமயங்களையும் சேர்ந்தவர்களாக இருந்தனர்.
- **சூபியிசம்: சூபி - சுப்** என்னும் சொல்லில் இருந்து தோன்றியது அதன் பொருள் **கம்பளி**,
- சூபிக்கள் **சொர சொரப்பான** முரட்டுக் கம்பளியால் ஆன உடைகளை அணிந்ததால் சூபிக்கள் எனப்பட்டனர்.
- இடைக்கால இந்தியாவைச் சேர்ந்த சூபிக்கள் 3 **முக்கிய பிரிவாக** பிரிக்கப்பட்டிருந்தனர்.
  1. **சிஸ்டி** 2. **சுரவார்டி** 3. **பிர்தௌசி**
- **மொய்னுதீன் சிஸ்டி** - சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கியவர் ஆவார்
- மொய்னுதீன் சிஸ்டி **ஆஜ்மீரில்** (1236ல்) இயற்கை எய்தினார்.
- நினைவிடம் - ராஜஸ்தான் மாநிலத்தில் ஆஜ்மீரில் **ஷரிப் தர்கர்** என்ற இடத்தில் அமைந்துள்ளது.
- சிஸ்டி அமைப்பைச் சார்ந்த சூபி - **நிஜாமுதீன் அஷலியாவை** டெல்லி அதிகார வர்க்கத்தினர் பலரும் பின்பற்றினர் அவர்களுள் **அமீர் குஸ்ருவும்** ஒருவர்.
- சுரவார்டி அமைப்பைத் தோற்றுவித்தவர் - ஈரானைச் சேர்ந்த சூபியான **அப்துல் - வகித் அபு நஜிப்**
- பிர்தௌசி அமைப்பு சுரவார்டியின் ஒரு கிளைப்பிரிவு அது பீகாரில் மட்டுமே செயல்பட்டது.

www.kalvinews.com

**கபீர்:**

- **கபீர்** - ஓர் இஸ்லாமியர் ஆனால் வாரணாசியைச் சேர்ந்த **இராமாநந்தரின்** செல்வாக்கிற்கு ஆட்பட்டார்.
- இந்து, இஸ்லாம் சமயங்களிடையே ஒத்திசைவை ஏற்படுத்த முயற்சி செய்தார்.
- கபீர் - **கடவுள் ஒருவரே, வடிவமற்றவர்** என நம்பினார்.
- சாதி, சமயம், செல்வம் அடிப்படையிலான பாகுபாடுகளை கண்டனம் செய்தார்.
- பொருளற்ற சடங்கு முறைகளையும் எதிர்த்தார்.
- கபீர் பாடல்கள் **போஜ்புரி** மொழியோடு **உருது மொழி** கலந்து எழுதப்பட்டவையாகும்
- கபீரின் கவிதைத் தொகுப்புகள்:

  1. **கபீரின் கிரந்தவளி** 2. **பைஜக்**

- **குருநானக்:**
- குருநானக் 1469ல் லாகூர் அருகே ஒரு கிராமத்தில் பிறந்தார். பிறகு லாகூர் அருகே **கர்தார்பூரில்** குடியேறினார் அங்கேயே **1539ல்** இயற்கை எய்தினார்.
- குருநானக்கின் **550 வது** பிறந்தநாளைச் சிறப்பிக்கும் வகையில் இந்திய அரசு **நடைபாதை** ஒன்றைக் கட்டிக்கொண்டிருக்கிறது, அந்நடைபாதை குர்தாஸ்பூரிலுள்ள **நானக் கோவில்**, பாகிஸ்தானின் கர்தார்பூரில் உள்ள **குருத்வாரா தர்பார் சாகிப்** இரண்டையும் இணைக்கும் வகையில் அமையவுள்ளது.

**குருநானக்கின் போதனைகள்:**

- கடவுள் வடிவமற்றவர், தன்னைப் பின்பற்றுவோர் அமைதிக்காகவும், வீடுபேற்றிற்காகவும் **தியானம்** செய்யும்படி கூறினார்.
- சீக்கியர்களின் முதல் குரு - **குருநானக்.**
- சீக்கியர்களின் புனித நூல் - **குருகிரந்சாகிப்.**
- **கீர்த்தன்** எனப்படும் பாடல்கள் பாடும் இசைக்குழுக்கள் மூலமாக **குருநானக்கின் போதனைகள் பரப்பப்பட்டன.**
- குருநானக்கின் பக்தர்கள் **தர்மசாலைகளில் (ஓய்வு விடுதி)** ஒன்று கூடினர். தர்மசாலைகளே **குருத்வாராக்கள்** ஆயின.
- குருநானக் **லேனா** என்ற சீடரைத் தனக்குப் பின் குருவாக நியமித்தார்.
- குரு கோவிந் சிங் காலத்தில் **பாகல்** எனப்படும் **திருமுழுக்கு** (குறுவாளால் கிளறி - இனிப்பான நீரைக் கொடுத்தல்) செய்யும் முறை **அறிமுகம் செய்யப்பட்டது.**
- திருமுழுக்கு பெற்றவர்கள் **கால்சா (தூய்மை)** - முறைப்படுத்தப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்ட சகோதரத்துவ அமைப்பின் உறுப்பினராயினர், **சிங் (சிங்கம்)** - பட்டம்,
- கால்சாவின் உறுப்பினர்கள்: **5 தனித்தன்மை**

  1. கேஷ் → வெட்டப்படாத முடி
  2. கன்கா → சிகைக்கோல்
  3. கிர்பான் → குறுவாள்
  4. கடா → இரும்புக் காப்பு
  5. கச்சேரா → உடலின் கீழ்ப்பகுதியில் அணியும் உள்ளாடை

- குரு கோவிந் சிங்கிற்குப் பின்னர் புனித நூலான **குரு கிரந்த் சாகிப்** குருவாகக் கருதப்பட்டது
- **கால்சா அமைப்பு** புனித நூலின் கருத்துக்களைப் பரப்பியது.

www.kalvinews.com

- இஸ்லாமியத் தத்துவக் கூறுகள்

  1. **கடவுள் ஒருமைப்பாடு** 2. **உலக சகோதரத்துவம்**

**சமயங்களின் / பக்தி இயக்கங்களின் தாக்கம் :**

- இந்து சமயத்திற்குப் புத்துயிர் ஊட்டப்பட்டது. அதனால், அது இஸ்லாமின் தாக்குதல்களில் இருந்து காக்கப்பட்டது.
- இஸ்லாமிய தத்துவக் கூறுகளான கடவுள் ஒருமைப்பாடு, உலக சகோதரத்துவம் போன்றவை வளர்க்கப்பட்டு, அமைதியும், இணக்கமும் ஏற்பட்டன.
- இது சாமனிய மக்களின் இயக்கமாக இருந்தது.
- பக்தி இயக்கம் தனது பக்தி இலக்கியங்களை சாமானிய மக்களின் மொழியிலேயே எழுதினர்
- இந்திய மொழிகள் வளர்வதற்கான இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.
- சரிவைச் சந்தித்துக் கொண்டிருந்த சமஸ்கிருத மொழி, இந்து அரசர்களின் ஆதரவால், தக்க வைக்கப்பட்டது.
- பக்தி இயக்க காலப்பகுதியில் உயிர்த் துடிப்புடன் விளங்கிய ஒரே பழைமையான மொழி - **தமிழ்**
- தமிழ் இலக்கியத்தின் பொதுப்பண்பு இடைக் காலத்தில் மாறி விட்டது.
- தமிழ் இலக்கியங்கள் செவ்வியல் காலத்தில், அன்றாட வாழ்க்கையையும், இன்ப துன்பங்களையும் சித்தரித்து வந்தது.
- பக்தி இயக்கக் கோட்பாடுகளின் தாக்கத்தின் விளைவால், இடைக் காலத்தில் சமயங்களுக்கும், சமயக் கோட்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது.
- சாதி முறையும், சமூக ஏற்றத் தாழ்வுகளும் விமர்சனத்திற்கு உள்ளாயின.

**பயிற்சி வினாக்கள்**

1. ஆழ்வார்கள் மொத்தம் எத்தனை பேர் _______.

   (1) 2 (2) 64 (3) 12 (4) 21

2. விஷ்ணு சித்தர் என்று அழைக்கப்பட்டவர் _______.

   (1) பெரியாழ்வார் (2) திருமங்கை ஆழ்வார்
   (3) மதுரகவி ஆழ்வார் (4) ஆண்டாள்

3. கீழ்கண்ட நூல்களில் ஆண்டாளின் கவிதை நூல் _______.

   (1) நாலாயிரத் திவ்ய பிரபந்தம் (2) திருமறை
   (3) இராமசரிதமானஸ் (4) திருப்பாவை

4. மும்மூர்த்திகள் என்றழைக்கப்பட்டவர்கள் யார்?

   (1) ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் (2) ஆதிசங்கரர், அப்பர், இராமானுஜர்
   (3) சுந்தரர், ஆண்டாள், ஆதிசங்கரர் (4) ஆண்டாள், அப்பர், சுந்தரர்

5. பெரியபுராணத்தின் ஆசிரியர் _______.

   (1) நம்பியாண்டார் நம்பி (2) சேக்கிழார்
   (3) சங்கரர் (4) துளசிதாசர்

6. வேதாந்தப் பள்ளியின் அடிப்படை நூல் _______.

   (1) பிரம்ம சூத்திரம் (2) பைஜக் (3) பெரிய புராணம் (4) திருப்பாவை

www.kalvinews.com

7. தெலுங்கு தத்துவஞானி _______.
(1) சூர்தாஸ் (2) துளிசதாசர் (3) கபீர் (4) வல்லபாச்சாரியார்

8. சுரவார்டி அமைப்பைத் தோற்றுவித்தவர் _______.
(1) அமீர் குஸ்ரு (2) துக்காராம்
(3) அப்துல் - வகித் அபு நஜிப் (4) மொய்னுதீன் சிஸ்டி

9. ஆஜ்மீரில் உள்ள ஷரிப் தர்கா அமைந்துள்ள மாநிலம் _______.
(1) மகாராஷ்டிரா (2) ராஜஸ்தான் (3) பீகார் (4) கோவர்தன் குன்று

10. குருநானக்கின் 550 வது பிறந்த நாளைச் சிறப்பிக்கும் வகையில் இந்திய அரசு _______ அமைத்து வருகிறது.
(1) தியான அறை (2) கப்பல் கட்டும் தளம்
(3) விமான நிலையம் (4) நடைபாதை

11. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) ஆதிசங்கரர் - விசிஷ்டாத்வைதம்
(2) பைஜக் - கபீர்
(3) இராமனுஜர் - அத்வைதம்
(4) நம்மாழ்வார் - நாச்சியார் திருமொழி

12. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) துவாரகா - ஆதிசங்கரர் மடம்
(2) ஆண்டாள் - நாயன்மார்கள்
(3) கபீர் - ஆழ்வார்கள்
(4) குருநானக் - விஷ்ணு சித்தர்

13. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) தென்கலை - காஞ்சிபுரம்
(2) மதுரகவி - சிருங்கேரி
(3) நம்மாழ்வார் - 4000 பாடல்கள்
(4) வடகலை - திருவரங்கம்

14. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) கேஷ் - இரும்புக் காப்பு
(2) கன்கா - வெட்டப்படாத முடி
(3) கிர்பான் - குறுவாள்
(4) கடா - சிகைக்கோல்

15. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) சூர்தான் - பார்வை திறனற்றவர்
(2) நாதமுனி - பிரம்ம சூத்திரம்
(3) துக்காராம் - இராமசரித மானஸ்
(4) சுரவார்டி - மகாராஷ்டிரா

www.kalvinews.com

16. தவறான இணையைத் தேர்ந்தெடு.

(1) பாகல் - திருமுழுக்கு (இனிப்பு நீர்)

(2) ரவிதாசின் சீடர் - மீராபாய்

(3) லேனா - கபீரின் சீடர்

(4) துக்காராம் - அபங்கா

17. தவறான இணையைத் தேர்ந்தெடு.

(1) தர்ம சாலை - குருத்துவாரா

(2) கபீர் பாடல்கள் - போஜ்புரி + உருது

(3) பஜனை பாடல்கள் - மீராபாய்

(4) சிவனை வழிபடும் சைவர்கள் - ஆழ்வார்கள்

18. கூற்று (A): ஆதிசங்கரர் - அத்வைத தத்துவம், இராமானுஜர் - விசிஷ்டாத்வைத தத்துவம்

கூற்று (B): கடவுளின் மீதான முழு பக்தியே மனிதனை வாழ்வின் இடர்பாடுகளிலிருந்து காத்து முக்தி அருளும் - சூபி இயக்கம்

(1) (A) மட்டும் சரி (2) (B) மட்டும் சரி

(3) (A) மற்றும் (B) சரி (4) (A) மற்றும் (B) தவறு

19. கூற்று (A): அறிவின் வழிப்பட ஞானமார்க்கம் மேலும் சடங்குகள், நற்செயல்கள் வழிப்படகர்மா மார்க்கம் இவை இரண்டையும் விட சிறந்தது பக்தி மார்க்கம் - பகவத் கீதை

கூற்று (B): இந்துக்களும் இஸ்லாமியரும் கடவுளை வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் இருப்பது ஒரேயொரு கடவுள் மட்டுமே - ஹரிதாசர்

(1) (A) மற்றும் (B) தவறு (2) (A) மற்றும் (B) சரி

(3) (A) மட்டும் சரி (4) (B) மட்டும் சரி

20. கூற்று (A): தொடக்ககால இஸ்லாம் சமயத்தின் உலகப்பற்றுதலுக்கு எதிராகத் தோன்றியதே சூபி தத்துவம்

கூற்று (B): தீவிர உணர்ச்சிவயப்பட்ட பக்தி, ஆழமான தியானம் மூலமே கடவுளை உணர முடியுமென சூபி கோட்பாடு மறுக்கிறது

(1) (A) மற்றும் (B) சரி (2) (B) மட்டும் தவறு

(3) (A) மற்றும் (B) தவறு (4) (B) மட்டும் தவறு

21. பொருத்துக.

(i) ராமானுஜர் - a. இராமாநந்தர்

(ii) கபீர் - b. நட்பு

(iii) இராமசரித மானஸ் - c. பீகார்

(iv) பிர்தௌசி அமைப்பு - d. வைணவச் சிந்தனையாளர்

(1) (i) - a (ii) - b iii) - c iv) - d

(2) (i) - c (ii) - d (iii) - a (iv) - b

(3) (i) - d (ii) - a (iii) - b (iv) - c

(4) (i) - d (ii) - c (iii) - b (iv) - a

www.kalvinews.com

22. பொருத்துக.

(i) சமஸ்கிருத வேத நூல் - (a) தென் கலை

(ii) திவ்ய பிரபந்தம் - (b) 1102 பத்தி

(iii) ஆதிசங்கரர் - (c) வடகலை

(iv) நம்மாழ்வார் - (d) பத்ரிநாத்

(1) (i) - c (ii) - a (iii) - d (iv) - b
(2) (i) - a (ii) - b (iii) - c (iv) - d
(3) (i) - a (ii) - d (iii) - c (iv) - b
(4) (i) - d (ii) - c (iii) - b (iv) - a

23. பொருத்துக.

(i) கோவில் நகரம் - (a) பந்தர்பூர்

(ii) சைதன்யதேவர் - (b) திருவில்லிபுத்தூர்

(iii) பாண்டு ரங்கா - (c) 1469

(iv) குருநானக் - (d) கிருஷ்ணன் வழிபாடு

(1) (i) - a (ii) - d (iii) - b (iv) - c
(2) (i) - b (ii) - d (iii) - a (iv) - c
(3) (i) - a (ii) - b (iii) - c (iv) - d
(4) (i) - c (ii) - d (iii) - a (iv) - b

24. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(1) பொய்கையாழ்வார்
(2) சேக்கிழார்
(3) பூதத்தாழ்வார்
(4) பேயாழ்வார்

25. விஷ்ணுவின் மீதும் அவர் இணையான லட்சுமியின் மீதும் இராமானுஜர் கொண்டிருந்த பக்திநெறி _______.

(1) ஸ்ரீவைஷ்வணவம்
(2) கிரந்தவளி
(3) ஞான மார்க்கம்
(4) இவற்றில் ஏதுமில்லை

26. சீக்கியர்களின் புனித நூல் _______.

(1) பைஜக்
(2) இராமசரிதமானஸ்
(3) உபநிடதங்கள்
(4) குரு கிரந்சாகிப்

27. குருநானக் _______ இல் இயற்கை எய்தினார்

(1) 1500
(2) 1535
(3) 1537
(4) 1539

28. குரு கோவிந் சிங்கிற்க்குப் பின்னர் _______ குருவாகக் கருதப்பட்டது

(1) கிர்பான்
(2) குரு கிரந் சாகிப்
(3) கன்கா
(4) கடா

29. நாயன்மார்கள் மொத்தம் _______.

(1) 50
(2) 60
(3) 63
(4) 64

30. ஆழ்வார்களில் உள்ள ஒரே பெண்பால் ஆழ்வார் _______.

(1) திருமங்கை ஆழ்வார்
(2) ஆண்டாள்
(3) மதுரகவி
(4) பேயாழ்வார்

www.kalvinews.com

31. ஆத்மாவானது பிரம்மத்துடன் கலந்த பின்னரும் தனக்கான அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்கிறது - இத்தத்துவத்தை கூறுவது _______.

(1) விசிஷ்டாத்வைதம் (2) பக்தி இயக்கம்

(3) அத்வைதம் (4) சூபியிஸம்

32. பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பால் தனித்துவம் பெற்ற இரண்டு ஆழ்வார்கள் _______.

(1) பேயாழ்வார், மதுரகவி (2) நம்மாழ்வார், ஆண்டாள்

(3) பூதத்தாழ்வார், ஆண்டாள் (4) திருமங்கை ஆழ்வார், மதுரகவி

33. நம்மாழ்வாரின் பாடல்கள் _______.

(1) 5000 (2) 2000 (3) 4000 (4) 3000

34. நாதமுனி தொகுத்த நூல் _______.

(1) நாச்சியார் திருமொழி (2) திருப்பாவை

(3) பிரம்ம சூத்திரம் (4) நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

35. ஞானத்தை பெறுவதன் வழியாக ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணையும் என்று கூறும் தத்துவம் _______.

(1) சிஸ்டி அமைப்பு (2) அத்வைதம்

(3) சுரவார்டி அமைப்பு (4) விசிஷ்டாத்வைதம்

36. வட இந்தியாவில் பக்திச் சிந்தனையை மக்கள் இயக்கமாக மாற்றியவர் _______.

(1) இராமாநந்தர் (2) மீராபாய் (3) துளசிதாசர் (4) கபீர்

37. மதுரா அருகே கோவர்தன் குன்றில் கிருஷ்ண பகவானுக்கு கோவிலை அமைத்தவர் _______.

(1) சங்கராச்சாரியார் 2) வல்லபாச்சாரியார்

(3) இராமானுஜர் (4) ஆண்டாள்

38. ஆதிசங்கரரின் மற்றொரு பெயர் _______.

(1) இராமானுஜர் (2) துளசிதாசர்

(3) இராமாநந்தர் (4) சங்கராச்சாரியார்

39. மொய்னுதீன் சிஸ்டி இயற்கை எய்திய இடம் _______.

(1) கார்தார்பூர் (1236) (2) லாகூர் (1326) (3) ஆஜ்மீர் (1236) (4) குர்தாஸ்பூர் (1539)

40. பக்தி இயக்க காலப்பகுதியின் உயிர்த் துடிப்புடன் விளங்கிய ஒரே பழைமையான மொழி _______.

(1) சமஸ்கிருதம் (2) உருது (3) தமிழ் (4) கன்னடம்

41. கீழ்கண்ட கூற்றுகளில் தவறான கூற்றை தேர்வு செய்க

கூற்று (A): துளசிதாசர் இந்தியில் எழுதிய இராமசரிதமானஸ் எனும் நூல் நட்பு, விசுவாசம் ஆகிய உணர்வுகளுக்கு அதிகம் அழுத்தம் கொடுத்தது

கூற்று (B): வங்காளத்திற்கு சைதன்ய தேவா எவ்விதமோ அதைப்போன்றே மகாராஷ்டிராவுக்கு துக்காராம் விளங்குகிறார்

கூற்று (C): சூபிக்கள் சொர சொரப்பான முரட்டுக் கம்பளியாலான உடைகளை தவிர்த்தனர்

www.kalvinews.com

(1) கூற்று (A) மட்டும் (2) கூற்று (C) மட்டும்

(3) கூற்று (A), (B) மட்டும் (4) கூற்று (B), (C) மட்டும்

42. பொருத்துக. [NMMS-2016]

(a) துளசிதாஸ் - (i) பிஜகா

(b) மாணிக்கவாசகர் - (ii) ராமசரிதமானஸ்

(c) ராமானுஜர் - (iii) திருவாசகம்

(d) கபீர் - (iv) வைணவம்

(1) (a) - (iii) (b) - (ii) (c) - (iv) (d) - (i) (2) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii)

(3) (a) - (ii) (b) - (iii) (c) - (iv) (d) - (i) (4) (a) - (i) (b) - (iii) (c) - (iv) (d) - (ii)

43. கோவில்களில் நுழைவதற்கான சாதியக் கட்டுப்பாடுகளைக் கண்டனம் செய்தவர் _______.

(1) இராமானுஜர் (2) ஆதிசங்கரர் (3) கபீர் (4) குருநானக்

44. புகழ்பெற்ற சமஸ்கிருதக் கல்வி மையம் _______.

(1) திருவரங்கம் 2) சென்னை 3) காஞ்சிபுரம் 4) மதுரை

45. சூர்தாஸின் புகழ்பெற்ற கவிதைத் தொகுப்பு _______.

1) இராமசரிதமானஸ் 2) சூர்சாகர் 3) அபங்கா 4) சூபியிசம்

46. கடவுள் ஒருவரே என்றும், வடிவமற்றவர் என்றும் நம்பியவர் _______.

1) குருநானக் 2) இராமானுஜர் 3) ஆதிசங்கரர் 4) கபீர்

47. சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுபவர் _______.

1) குருநானக் 2) லேனா 3) சூர்தாஸ் 4) வல்லபாச்சாரியார்

48. சூபி என்ற சொல்லின் பொருள் _______.

1) கவிதை 2) நூல் 3) இயக்கம் 4) கம்பளி

49. பக்தி இயக்கம் அல்லது வழிபாட்டு முறைகளிலான புத்தெழுச்சி தமிழகத்தில் தொடங்கிய காலம் _______.

1) கி.பி.6 ஆம் நூற்றாண்டு 2) கி.பி.7 ஆம் நூற்றாண்டு

3) கி.பி.5 ஆம் நூற்றாண்டு 4) கி.பி.8 ஆம் நூற்றாண்டு

50. சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கியவர் _______.

1) துளசிதாசர் 2) இராமானுஜர் 3) மொய்னுதீன் சிஸ்டி 4) ரவிதாஸ்

www.kalvinews.com

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (3) | **11** | (2) | **21** | (3) | **31** | (1) | **41** | (2) |
| **2** | (1) | **12** | (1) | **22** | (1) | **32** | (2) | **42** | (3) |
| **3** | (4) | **13** | (3) | **23** | (2) | **33** | (3) | **43** | (1) |
| **4** | (1) | **14** | (3) | **24** | (2) | **34** | (4) | **44** | (3) |
| **5** | (2) | **15** | (1) | **25** | (1) | **35** | (2) | **45** | (2) |
| **6** | (1) | **16** | (3) | **26** | (4) | **36** | (1) | **46** | (4) |
| **7** | (4) | **17** | (4) | **27** | (4) | **37** | (2) | **47** | (1) |
| **8** | (3) | **18** | (1) | **28** | (2) | **38** | (4) | **48** | (4) |
| **9** | (2) | **19** | (2) | **29** | (3) | **39** | (3) | **49** | (2) |
| **10** | (4) | **20** | (4) | **30** | (2) | **40** | (3) | **50** | (3) |

www.kalvinews.com



## 2 தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும்

**தொகுப்பு:**
**திருமதி.சு.சுகுணா, M.A., M.A., M.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியை (சமூக அறிவியல்),**
**அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,**
**குறிஞ்சிப்பாடி,**
**கடலூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.பெ.சந்திரசேகரன், M.A., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, ஒந்தனை,**
**ஈரோடு மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- திராவிடக் கட்டடக்கலை நம் மண்ணில் பிறந்ததாகும்.
- தமிழ் திராவிடக் கட்டடக் கலையின் மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த காலத்தில் முந்திய குடைவரைக் கோவில்களே எடுத்துக்காட்டு ஆகும்.
- குடைவரைக் கோவில்கள் என்பதும் குகைக் கோவில்கள் என்பதும் ஒன்றே.
- கி.பி 7-ம் நூற்றாண்டுக்கு முந்தைய நினைவுச் சின்னங்கள் தென்னிந்தியாவில் இல்லை.
- கி.பி 7-ம் நூற்றாண்டுக்கு முன் கோவில்கள் மரத்தால் கட்டப்பட்டிருக்கலாம்.
- தமிழ்நாட்டில் கோவில் கட்டடக் கலையின் பரிணாம வளர்ச்சி ஐந்து கட்டங்களாக நடைபெற்றுள்ளது. அவை:

| | | | |
|---|---|---|---|
| i. பல்லவர் காலம் | - | கி.பி | 600 - 850 |
| ii. முற்காலச் சோழர்கள் | - | கி.பி | 850 - 1100 |
| iii. பிற்காலச் சோழர்கள் | - | கி.பி | 1100 - 1350 |
| iv. விஜயநகர / நாயக்கர் காலம் | - | கி.பி | 1350 - 1600 |
| v. நவீன காலம் | - | கி.பி | 1600 க்கு பின்னர் |

**பல்லவர் காலம்**

- பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக்கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது.
- குடைவரைக் கட்டடக்கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் - பல்லவ அரசர் மகேந்திரவர்மன்.
- மகேந்திரவர்மன் உருவாக்கிய முதல் குடைவரைக் கோவில் - மண்டகப்பட்டு குடைவரைக் கோவில்.
- குடைவரைக் கோவிலின் முன்புறம் இரண்டு தூண்கள் அக்கோவிலைத் தாங்கி நிற்கும்.
- குடைவரைக் கோவில்கள் அனைத்திலும் பின்புறச்சுவற்றில் செதுக்கப்பட்ட ஒரு கருவறையும் அதற்கு முன்பாக ஒரு மண்டபத்தையும் கொண்டுள்ளது. மகாபலிபுரத்திலுள்ள ஏழு கோவில்கள் குடைவரைக் கோவில்களாக அமைக்கப்படாமல் வெட்டி எடுக்கப்பட்ட கற்களைக் கொண்டு கட்டப்பட்டது.

- இதில் இரு கருவறைகள் உள்ளன (சிவன், விஷ்ணு).
- துவாரபாலகர்கள் - வாயிற் காப்போர்.
- குடைவரைக் கோவில்கள் அமைக்கும் முறை கி.பி 700 க்கு பின்னர் மறைந்து பெரியவடிவிலான கட்டுமானக் கோவில்கள் தோன்றியது.
- ஏழு கோவில்கள் என அழைக்கப்படும் மகாபலிபுரம் கடற்கரைக் கோவில்கள் பல்லவ அரசர் இரண்டாம் நரசிம்மவர்மனால் கட்டப்பட்டது.
- மகாபலிபுரம் கடற்கரைக் கோவில்கள் - தென்னிந்தியாவின் மிகப்பழமையான கட்டுமானக் கோவிலாகும்.
- ஒரே பாறையில் ஒரு கோவிலை அமைக்கும் பழைய முறைப்படி இல்லாமல் கட்டுமானக் கோவில்கள் பாறைப் பாளங்களைக் கொண்டு கட்டப்பட்டன.
- காஞ்சி கைலாசநாதர் கோவிலைக் கட்டியவர் - இரண்டாம் நரசிம்மவர்மன் (ராஜசிம்மன்)
- காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோவிலைக் கட்டியவர் - இரண்டாம் நந்திவர்மன்.
- தமிழ் திராவிட கோவில் கட்டடக் கலை மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள பஞ்ச பாண்டவ இரதங்கள் எடுத்துக்காட்டு ஆகும்.
- பஞ்ச பாண்டவ இரதங்கள் :
  - ❖ திரௌபதி இரதம்
  - ❖ தர்மராஜா இரதம்
  - ❖ பீமரதம்
  - ❖ அர்ச்சுன இரதம்
  - ❖ நகுல சகாதேவ இரதம்
- இரதங்களில் குறிப்பாக அர்ச்சுன, பீம, தர்மராஜா இரதங்களின் வெளிப்பக்கச் சுவர்கள் மாடக் குழிகளாலும் பூவணி வேலைப்பாடுகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.
- மாடக்குழிகள் ஆண், பெண் தெய்வங்கள், அரசர்கள் ஆகியோரின் சிற்பங்களையும் புராணக் காட்சிகளைச் சித்தரிக்கும் சிற்பங்களையும் கொண்டுள்ளன.
- மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ள அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி பிரமாண்டமான கலைப் படைப்பாகும்.
- அர்ச்சுனன் தவமிருக்கும் கலைப் படைப்பு பாறை ஏறத்தாழ 100 அடி நீளமும் 45 அடி உயரமும் உடையது ஆகும்.
- 1984-ல் கடற்கரைக் கோவில் வளாகம் உட்பட மாமல்லபுரத்திலுள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் மொத்தமாக உலகப் பாரம்பரிய இடமென யுனெஸ்கோவால் (UNESCO) அங்கீகரிக்கப்பட்டது.

  **UNESCO** – **U**nited **N**ations **E**ducational **S**cientific and **C**ultural **O**rganization (1945)

**பல்லவர் காலத்துப் பாண்டியர் கோவில்கள்**

- முற்காலப் பாண்டியர்கள் பல்லவர்களின் சம காலத்தவராவர்.
- பல்லவர்களைப் போலல்லாமல் பாண்டியர்கள் தங்கள் குடைவரைக் கோவில்களின் கருவறையில் கடவுளர்களின் சிலைகளை நிறுவினர்.
- பாண்டியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குகைக் கோவில்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- பாண்டியப் பேரரசின் குகைக் கோவில்களில் மிக முக்கியமானவைகள்:
    - மலையடிக்குறிச்சி
    - ஆனைமலை
    - திருப்பரங்குன்றம்
    - திருச்சிராப்பள்ளி
- இக்குகைக் கோவில்கள் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய கடவுளர்களுக்கு படைத்தளிக்கப்பட்டுள்ளன.
- பாண்டியர் காலத்துச் சிவன் கோவில்களின் லிங்கங்கள் மற்றும் நந்தியின் உருவமும் தாய்ப்பாறையிலிருந்தே செதுக்கப்பட்டதாகும்.
- கருவறை வாயிலின் இரு புறத்திலும் துவாரபாலகர் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- பாறைக் குடைவரைக் கோவில்களும் கட்டுமானக் கோவில்களும் பாண்டியர் கட்டடக்கலையின் சிறப்புமிக்க அம்சங்களாகும்.
- ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்ட கோவிலுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு கழுகுமலையில் உள்ள முற்றுப்பெறாத வெட்டுவான் கோவிலாகும்.
- கழுகுமலை - ஒற்றைக் கல் கோவிலான வெட்டுவான் கோவில் ஒரு பெரும்பாறையின் நான்கு புறங்களிலிருந்தும் செதுக்கி அமைக்கப்பட்டதாகும்.
- கழுகு மலை கோவிலின் உச்சியில் உமா மகேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா சிற்பங்கள் உள்ளன.
- மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலும் பாண்டியர் கட்டடக்கலைப் பாணிக்கு எடுத்துக்காட்டாகும்.

**சிற்பங்கள்**

- பாறைக் குடைவரைக் கோவில்களில் குகைகளின் சுவர்கள் கடவுளர்களின் புடைப்புச் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.
- கட்டுமானக் கோவில்களைப் பொருத்தமட்டிலும் கருவறையின் சுவர்களில் அலங்கார வேலைப்பாடுகள் காணப்படவில்லை. மாறாக, கருவறை மேலுள்ள கட்டுமானங்களிலும், தூண்களிலும் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.
- திருப்பரங்குன்றம், ஆனைமலை, கழுகுமலை குடைவரைக் கோவில்களில் சிவன், விஷ்ணு, பிரம்மன், பார்வதி, சுப்பிரமணியன், கணபதி, தட்சிணாமூர்த்தி ஆகிய கடவுளர்களின் புடைப்புச் சிற்பங்கள் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளன.
- மதுரை அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சிலைகள் தற்போது மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**ஓவியங்கள்**

- புதுக்கோட்டையிலிருந்து 15 கி.மீ தொலைவிலுள்ள சித்தன்னவாசலிலும், திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டத்தைச் சேர்ந்த திருமலைபுரத்திலும் முற்காலப் பாண்டியர்களின் ஓவியங்கள் உள்ளன.

www.kalvinews.com

- சித்தன்னவாசல் சமணத் துறவிகள் வாழ்ந்த குகை ஆகும். அவர்கள் குகைச்சுவர்களில் சாந்து பூசி, ஈரம் காய்வதற்கு முன்னரே ஓவியங்களைத் தீட்டி உள்ளனர்.
- பல ஓவியங்கள் அழிந்துவிட்டன. எஞ்சியவற்றுள் தாமரைத் தடாக ஓவியம் புகழ்பெற்றது.
- சித்தன்னவாசல் ஓவியம் அஜந்தா ஓவியங்களுடன் சில ஒப்புமைகளைப் பெற்றுள்ளன.
- திருமலைபுரத்தில் கிடைத்துள்ள முற்காலப் பாண்டியர் ஓவியங்கள் சேதமடைந்துள்ளன.

**முற்காலச் சோழர்கள் காலம்**

- கி.பி 850 இல் விஜயாலய சோழன் காலத்தில் முக்கியத்துவம் பெறத்துவங்கிய சோழர்கள் தொடர்ந்து அப்பகுதியில் 400 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தனர்.
- முற்காலச் சோழர்களின் கோவில் கட்டடக்கலைக்கு தமிழ்நாட்டில் திண்டிவனத்திற்கு அருகேயுள்ள தாதாபுரம் கோவிலை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.
- முற்காலச் சோழர்களின் கோவில் கட்டடக்கலை செம்பியன் மகாதேவி பாணியை பின்பற்றி அமைந்ததாகும்.
- கோவில்களில் அதிக எண்ணிக்கையில் தேவகோஷ்டங்கள் (மாடக் குழிகள்) இருந்தால் அதை **செம்பியன் மகாதேவி பாணி** என்பர்.
- செம்பியன் மகாதேவியால் மறுவடிவாக்கம் செய்யப்பட்ட முற்காலக் கோவில்களுக்குத் **திருப்புறம்பியம்** கோவில் ஓர் எடுத்துக்காட்டாகும்.

**பிற்காலச் சோழர்கள் காலம்**

**சோழர்களின் கட்டடக்கலை முதிர்ச்சியைப் பிரதிபலிக்கும் கோயில்கள்**:

- ❖ தஞ்சாவூர் சிவன் ( பிரகதீஸ்வரர் ) கோவில்
- ❖ கங்கைகொண்ட சோழபுரம் சிவன் ( பிரகதீஸ்வரர் ) கோவில்.
- ❖ **தஞ்சாவூர் பெரிய கோவில்:**

- **கி.பி 1009** இல் கட்டிமுடிக்கப்பட்ட தஞ்சாவூர் சிவன் கோவில் ராஜராஜன் காலத்து செல்வப் பெருக்கம் மற்றும் சாதனைகளின் நினைவுச் சின்னம் ஆகும்.
- தஞ்சை பெரியகோவில் விமானம் **216 அடி** உயரம் கொண்டதாகும்.
- விமானம் - கர்ப்பகிரகத்தின் மேலுள்ள கட்டுமானம்.
- உலகத்தில் மனிதனால் கட்டப்பட்ட மிக உயரமான சிகரங்களில் தஞ்சை விமானமும் ஒன்றாகும்.
- தஞ்சாவூர் விமானம் மிகவும் உயரமாக அமைந்திருப்பதால் அதன் சிகரம் - தட்சிணமேரு என்றழைக்கப்படுகிறது.
- தஞ்சாவூரில் உள்ள நந்தியின் சிலை - 16 அடி நீளமும், 13 அடி உயரமும் கொண்ட ஒரே பாறையில் செதுக்கப்பட்டதாகும்.

**கங்கைகொண்ட சோழபுரம்:**

- பாண்டியர்கள் எழுச்சி பெறும்வரை சுமார் 250 ஆண்டுகள் கங்கைகொண்ட சோழபுரமே சோழர்களின் தலைநகரமாக விளங்கியது.
- கங்கைகொண்ட சோழபுரம் கோவிலின் உயரம் - 55 மீட்டராகும்.
- கங்கைகொண்ட சோழபுரம் கோவில் வளாகத்தில் சண்டிகேஸ்வரர், கணேசன், மகிஷாசுரமர்த்தினி சன்னதிகள் உள்ளன.

**தாராசுரம்:**

- கும்பகோணம் அருகேயுள்ள தாராசுரத்தில் பிற்காலச் சோழர்களின் கோவில் உள்ளது. இக்கோவில் **ஐராவதீஸ்வரர்** (இந்திரனின் யானை வழிபட்ட கடவுள்) கடவுளுக்கு படைத்தளிக்கப்பட்டது ஆகும்.
- **தாராசுரம் - ஐராவதீஸ்வரர் கோவிலைக் கட்டியவர் - இரண்டாம் இராஜராஜன்.**
- ஐராவதீஸ்வரர் கோவில் மகாமண்டபம் வடிவத்தில் பெரியது தேர்போல காட்சியளிக்கிறது. மகாமண்டபத்தின் கீழ்பகுதியில் நான்கு சக்கரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- கருவறையிலும், தூண்களிலும் புராண இதிகாசக் கதாபாத்திரங்களின் சிற்றுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**பிற்காலப் பாண்டியர்கள்**

- பிற்காலப் பாண்டியர்களின் கட்டக்கலைக்கு எடுத்துக்காட்டு 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பிள்ளையார்பட்டியிலுள்ள குடைவரைக் கோவிலாகும். பிள்ளையார்பட்டி (தமிழ்நாட்டில் காரைக்குடிக்கு அருகே உள்ளது).
- பிள்ளையார்பட்டி கோவிலின் நுழைவாயிலைப் பார்த்தவண்ணம் அழகான கணேசனின் வடிவம் செதுக்கப்பட்டுள்ளன (**தேசிவிநாயகம் என குகைக் கல்வெட்டில் செதுக்கப்பட்டுள்ளது**). இரண்டு கைகளைக் கொண்டுள்ள கணபதியின் தும்பிக்கை வலதுபுறமாகத் திரும்பியுள்ளது.

**விஜயநகர காலம்**

- விஜயநகர அரசர்களின் ஆட்சிக் காலத்தில் புதிதாக கோவில்களில் மண்டபங்கள் கட்டும் முறை உருவானது. ஆண்டுதோறும் மண்டபத்தில் கடவுள் திருவுருவச்சிலை காட்சிப்படுத்தப்படுகிறது.
- மண்டபத்தின் ஒற்றைக்கல் தூண்களில் குதிரைகள், சிங்கங்கள், கடவுள் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.
- **காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில், வேலூரில் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோவில் கல்யாண மண்டபங்கள்** சிறப்பு வாய்ந்தது. மதுரைக் கோவில் மண்டபம் மிகவும் புகழ் பெற்றது ஆகும்.
- 15 ஆம் நூற்றாண்டு முதல் 17 ஆம் நூற்றாண்டு வரையிலான விஜயநகர / நாயக்க கட்டடக்கலையின் முக்கியக் கூறுகள்: அழகூட்டப்பட்ட மண்டபங்கள், அலங்கரிக்கப்பட்ட தூண்கள், இயற்கை வடிவ அளவிலான சிலைகள் கோபுரங்கள், பிரகாரங்கள், இசைத்தூண்கள், மலர் அலங்கார வேலைப்பாடுகள், கல்லால் ஆன சாளரங்கள் ஆகியனவாகும்.
- கோவில்களோடு சேர்ந்து தெப்பக் குளங்கள் அமைக்கப்பட்டன. கோவிலுக்கான நுழைவு வாயில்கள் நான்கு புறங்களிலும் மிகப்பெரும் கோபுரங்கள் கட்டப்பட்டன.
- சிற்பங்களோடு கூடிய மாடக்குழிகளை அமைக்கும் பழக்கம் நாயக்கர் காலத்திலும் தொடர்ந்தது. பெரிய வடிவங்களிலான புடைப்புச் சிற்பங்களை அமைக்கும் முறை அதிகரித்தது என்பதை திருநெல்வேலி மாவட்டம் திருக்குறுங்குடி அழகியநம்பி கோவில்,

www.kalvinews.com

திருவரங்கம் ரங்கநாதர் கோவில் வளாகத்தில் உள்ள கோபாலகிருஷ்ண கோவிலில் காணமுடியும்.

- ஆழ்வார் திருநகரியில் ஆதிநாதர் கோவில் தெற்குவிழா மண்டபம், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலின் முகப்பில் மேற்கூரையுடன் அமைந்துள்ள புகுமுக மண்டபம் குறிப்பிடத்தகுந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**விஜயநகர, நாயக்க கட்டடக்கலையின் மண்டபக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டு**

- **மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் அமைந்துள்ள 1000 கால் மண்டபம்**.
- புதுமண்டபம், திருக்குறுங்குடி, நாங்குநேரி வானமாமலையார் கோவில் ஆகியவற்றிலுள்ள இரதி மண்டபம் இக்கால மண்டபக் கட்டடக்கலைக்கு சிறந்த உதாரணம் ஆகும்.
- ஒற்றைக்கல்லில் மிகப்பெரிய யாளி, குதிரை வடிவச்சிலைகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் புராண இதிகாசக் காட்சிகள் அரச குடும்ப உறுப்பினர்களின் இயற்கை வடிவ அளவிலான முழுமையான உருவங்கள், சாதாரண மனிதர்களின் வடிவங்கள், விலங்குகள், பூவேலைப்பாடுகள் ஆகியவை செதுக்கப்பட்டன.
- விஜயநகர, நாயக்கர் கட்டடக்கலையின் மற்றொரு சிறப்பம்சம் - இசைத்தூண்களாகும்.
- **விஜயநகர, நாயக்கர் கால கண்ணையும் கருத்தையும் கவரும் கலைப்படைப்புகள் :**

  1 வேலூர் - ஜலகண்டேஸ்வரர் கோவில்
  2. திண்டுக்கல் - தாடிக்கொம்பு கோவில்
  3. திருநெல்வேலி - கிருஷ்ணாபுரம் கோவில்
  4. தஞ்சாவூர் - பெரிய கோவிலுக்குள் உள்ள சுப்ரமணிய சாமி கோவில்.

- **விஜயநகர, நாயக்கர் கால ஓவியங்கள்** :
  - ❖ காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில், மதுரை கூடல் அழகர் கோவில்,
  - ❖ திருவில்லிபுத்தூர்
  - ❖ திருவெள்ளரை
  - ❖ அழகர் கோவில்
  - ❖ திருவண்ணாமலை
  - ❖ திருவரங்கம் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன.

  இதில் இதிகாசக்கதைகள் இராமாயணக் காட்சிகள், அரண்மனைக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

**நவீன காலம் கி.பி 1600 க்குப் பின்னர்**

- மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்களாக இருந்து இராமநாதபுரம் பகுதியை ஆண்டு வந்த சேதுபதிகள் - இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோவிலின் கட்டடக் கலைக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர்.
- **உலகிலேயே மிகவும் நீளமான கோவில் பிரகாரங்கள் - இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோவில் பிரகாரம்** ஆகும்.
- இராமநாத சுவாமி கோவில் மூன்று பிரகாரச் சுற்றுக்களைக் கொண்டுள்ளது.
- கோவிலின் வெளிப் பிரகாரம் ஏறத்தாழ 7 மீ உயரம் கொண்டது.

www.kalvinews.com

- வெளிப்பிரகாரத்தின் கிழக்கு மேற்குப் பிரகாரங்கள் 120 மீ நீளம் உடையதாகும்.
- வடக்கிலும் தெற்கிலும் உள்ள பிரகாரங்கள் 195 மீ நீளமுடையது.
- வெளிப்பிரகாரத்தைத் தாங்கி நிற்கும் 1200 க்கும் மேற்பட்ட தூண்கள் தனிச்சிறப்பு கொண்டனவாகும். பெரும்பாலான தூண்கள் அலங்கார வேலைப்பாடுகள் நிறைந்தவை.
- இராமநாத சுவாமி கோவிலின் மூன்று பிரகாரங்களில் உட்புறம் அமைந்துள்ள பிரகாரமே மிகப் பழமையானதாகும்.
- பாறைகளில் சிற்பங்களைப் படைப்பது பல்லவர்கால சிறப்புக்கூறாக அமைந்தது.
- முற்காலச் சோழர்களின் காலம் பேரழகுமிக்க விமானங்களுக்குப் பெயர் பெற்றதாகும்.
- பிற்காலச் சோழர்கள் காலம் பொலிவுமிக்க கோபுரங்களுக்காகப் புகழ்பெற்றது.
- மண்டபங்கள் - விஜயநகர காலப்பகுதியின் தனிச்சிறப்பாகும்.
- நவீன காலத்தில் பிரகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன.

**பயிற்சி வினாக்கள்:**

1. யாருடைய காலத்தில் கோவில் கட்டிடக் கலை குடைவரைக் கோவில்கள் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்களாக மாற்றத்திற்கு உள்ளானது?
   1. பல்லவர்கள் காலம் 2. நாயக்கர்கள் காலம்
   3. சோழர்கள் காலம் 4. பாண்டியர்கள் காலம்

2. குடைவரைக் கட்டிடக் கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்த பல்லவ அரசர் யார்?
   1. இரண்டாம் நரசிம்மவர்மன் 2. மகேந்திரவர்மன்
   3. இரண்டாம் நந்திவர்மன் 4. ராஜசிம்மன்

3. மகேந்திரவர்மன் உருவாக்கிய முதல் குடைவரைக் கோவில் உள்ள இடம் ________.
   1. மலையடிக்குறிச்சி 2. ஆனைமலை
   3. மண்டகப்பட்டு 4. திருச்சிராப்பள்ளி

4. குடைவரைக் கோவிலின் முன்புறம் அமைந்துள்ள எத்தனை தூண்கள் கோவிலைத் தாங்கி நிற்கும்?
   1. ஏழு 2. ஐந்து 3. நான்கு 4. இரண்டு

5. கோவிலில் துவாரபாலகர்களின் இருப்பிடம் எது?
   1. கருவறை 2. கருவறை வாயில்
   3. விமானம் 4. சுற்றுச்சுவர்

6. கீழ்கண்டவற்றைப் பொருத்துக.
   i. கி.பி.600 - 850 - a) பிற்காலச் சோழர்கள்
   ii. கி.பி.850 - 1100 - b) விஜயநகர காலம்
   iii. கி.பி.1100 - 1350 - c) பல்லவர் காலம்
   iv. கி.பி.1350 - 1600 - d). முற்காலச் சோழர்கள்
   1. i - a ii - b iii - c iv - d 2. i - b ii - a iii - d iv - c
   3. i - c ii - d iii - a iv - b 4. i - d ii - c iii - b iv - a

www.kalvinews.com

7. குடைவரைக் கோவில்கள் அமைக்கும் முறை மறைந்து, பெரிய வடிவ கட்டுமானக் கோவில்கள் கட்டப்பட்ட காலக்கட்டம்?
   1. கி.பி.500  2. கி.பி.600  3. கி.பி.650  4. கி.பி.700

8. ஏழு கோவில்கள் என அழைக்கப்படும் கோவில் எது?
   1. மகாபலிபுரம் - கடற்கரைக் கோவில்
   2. காஞ்சிபுரம் - வைகுண்டப் பெருமாள் கோவில்
   3. தஞ்சாவூர் - பெரிய கோவில்
   4. தாராசுரம் - ஐராவதீஸ்வரர் கோவில்

9. மகாபலிபுரம் கடற்கரைக் கோவிலைக் (ஏழு கோவில்கள்) கட்டியவர் யார்?
   1. இராஜேந்திர சோழன்  2. இராஜராஜ சோழன்
   3. மகேந்திரவர்மன்  4. இரண்டாம் நரசிம்மவர்மன்

10. தென்னிந்தியாவின் மிகப் பழமையான கட்டுமானக் கோவில் ________ ஆகும்.
   1. வெட்டுவான் கோவில்  2. ஏழு கோவில்கள்
   3. கழுகுமலைக் கோவில்  4. மண்டகப்பட்டு கோவில்

11. காஞ்சி கைலாசநாதர் கோவிலைக் கட்டியவர் யார்?
   1. ராஜசிம்மன்  2. விஜயாலய சோழன்
   3. செம்பியன் மகாதேவி  4. இரண்டாம் இராஜராஜன்

12. இரண்டாம் நந்திவர்மன் ________ கோவிலைக் கட்டினார்?
   1. திருப்புறம்பியம் கோவில்
   2. ஐராவதீஸ்வரர் கோவில்
   3. காஞ்சி - வைகுண்ட பெருமாள் கோவில்
   4. காஞ்சி - கைலாசநாதர் கோவில்

13. ________ ஆம் ஆண்டு கடற்கரைக் கோவில் வளாகம் உட்பட மாமல்லபுரம் மொத்தமாக யுனெஸ்கோவால் (UNESCO) உலக பாரம்பரிய இடமாக அங்கீகரிக்கப்பட்டது.
   1. 1980  2. 1984  3. 1999  4. 1985

14. பாண்டியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளில் ________ க்கும் மேற்பட்ட குகைக்கோவில்கள் கண்டறியப்பட்டுள்ளன.
   1. 50  2. 100  3. 25  4. 70

15. கீழ்க்கண்டவற்றுள் எது பாண்டியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதியைச் சேர்ந்த குகைக் கோவில்கள் இல்லை.
   1. மலையடிக்குறிச்சி  2. ஆனைமலை  3. திருப்பரங்குன்றம்  4. திருப்புறம்பியம்

16. ஒற்றைக்கல்லில் செதுக்கப்பட்ட கோவிலுக்கு எடுத்துக்காட்டு ________.
   1. நெல்லையப்பர் கோவில்  2. தஞ்சாவூர் கோவில்
   3. கழுகுமலை வெட்டுவான் கோவில்  4. திருமலைபுரம் கோவில்

www.kalvinews.com

17. வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடு.
   1. திருப்பரங்குன்றம்
   2. கழுகுமலை
   3. ஆனைமலை
   4. தஞ்சாவூர் பெரிய கோவில்

18. சித்தன்னவாசல் ஓவியங்கள் ________ ஓவியங்களுடன் சில ஒப்புமைகளைப் பெற்றுள்ளன.
   1. அஜந்தா
   2. திருமலைபுரம்
   3. பிள்ளையார்பட்டி
   4. திருவில்லிபுத்தூர்

19. தாதாபுரம் கோவில் யாருடைய கோவில் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டு ________.
   1. முற்காலப் பாண்டியர்கள்
   2. முற்காலச் சோழர்கள்
   3. பல்லவர்கள்
   4. நாயக்கர்கள்

20. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. தேவகோஷ்டங்கள் | - | a) இந்திரனின் யானை வழிபட்டது |
| ii. துவாரபாலகர்கள் | - | b) தஞ்சாவூர் சிகரம் |
| iii. ஐராவதீஸ்வரர் | - | c) மாடக்குழிகள் |
| iv. தட்சிண மேரு | - | d) வாயிற்காப்போர் |

   1. i - a   ii - b   iii - c   iv - d
   2. i - b   ii - a   iii - d   iv - c
   3. i - d   ii - c   iii - b   iv - a
   4. i - c   ii - d   iii - a   iv - b

21. தஞ்சாவூர் சிவன் கோவில் கட்டிமுடிக்கப்பட்ட ஆண்டு ________
   1. கி.பி.1010
   2. கி.பி.1050
   3. கி.பி.1009
   4. கி.பி.1100

22. முற்காலச் சோழர்களின் கோவில் கட்டிடக்கலை ________ பாணியைப் பின்பற்றி அமைந்தது.
   1. செம்பியன் மகாதேவி
   2. இராஜராஜ சோழன்
   3. இராஜேந்திர சோழன்
   4. விஜயாலய சோழன்

23. தஞ்சாவூர் பெரிய கோவில் விமானத்தின் உயரம் ________ ஆகும்.
   1. 55 மீட்டர்
   2. 116 அடிகள்
   3. 216 அடிகள்
   4. 100 மீட்டர்

24. சோழ அரசன் இரண்டாம் ராஜராஜன் கட்டிய கோவில் ________ ல் உள்ளது.
   1. தஞ்சாவூர்
   2. தாராசுரம்
   3. கங்கை கொண்ட சோழபுரம்
   4. ஆழ்வார் திருநகரி

25. பிற்காலப் பாண்டியர்களின் பிள்ளையார்பட்டி குடைவரைக் கோவில் ________ ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.
   1. 16
   2. 15
   3. 14
   4. 13

26. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

i. காஞ்சிபுரம் - a) ஆதிநாதர் கோவில்

ii. வேலூர் - b) ரங்கநாதர் கோவில்

iii. திருவரங்கம் - c) வரதராஜ பெருமாள் கோவில்

iv. ஆழ்வார் திருநகரி - d) ஜலகண்டேஸ்வரர் கோவில்

1. i - c ii - d iii - b iv - a
2. i - a ii - b iii - c iv - d
3. i - d ii - a iii - b iv - c
4. i - d ii - c iii - b iv - a

27. கீழ்க்கண்ட எந்த ஊர்களிலுள்ள கோவிலில் விஜயநகர, நாயக்கர் கால ஓவியங்கள் இடம்பெறவில்லை?

1. திருவண்ணாமலை
2. திருவெள்ளரை
3. திருவில்லிபுத்தூர்
4. தாராசுரம்

28. உலகிலேயே மிகவும் நீளமான கோவில் பிரகாரங்கள் இங்கே அமைந்துள்ளது.

1. இராமேஸ்வரம் - இராமநாத சுவாமி கோவில்
2. மதுரை மீனாட்சியம்மன் கோவில்
3. தஞ்சை பெரிய கோவில்
4. திருநெல்வேலி - நெல்லையப்பர் கோவில்

29. தவறான கூற்றினைத் தேர்வு செய்க.

கூற்று (A): திராவிட கட்டிடக்கலை நம்மண்ணில் பிறந்ததாகும்.

கூற்று (B): தமிழ் திராவிட கட்டிடக் கலையின் மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள குடைவரைக் கோவில்களே எடுத்துக்காட்டுகளாகும்.

கூற்று (C): தமிழ்நாட்டில் கோவில் கட்டிடக் கலையின் பரிணாம வளர்ச்சி ஏழு கட்டங்களாக நடைபெற்றுள்ளது.

1. கூற்று (A) மட்டும் தவறு
2. கூற்று (A), (B) மட்டும் தவறு
3. கூற்று (C) மட்டும் தவறு
4. கூற்று (A), (B), (C) மூன்றும் தவறு

30. தவறான கூற்றினைத் தேர்வு செய்க.

கூற்று (A): பல்லவர் காலத்தில் கோவில் கட்டிடக் கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது.

கூற்று (B): அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி கொண்ட கருங்கல் பாறை ஏறத்தாழ 100 அடி உயரமும் 45 அடி நீளமும் கொண்டது.

கூற்று (C): முற்காலப் பாண்டியர்கள் பல்லவர்களின் சமகாலத்தவர்கள் ஆவர்.

1. கூற்று (A) மட்டும் தவறு
2. கூற்று (B) மட்டும் தவறு
3. கூற்று (A), (B), (C) மூன்றும் தவறு
4. கூற்று (B), (C) மட்டும் தவறு

31. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

கூற்று (A): பாண்டியர் காலத்து சிவன் கோவில்களின் லிங்கங்கள் மற்றும் நந்தியின்

www.kalvinews.com

உருவங்கள் தாய்பாறையிலிருந்து செதுக்கப்பட்டதாகும்.

கூற்று (B): பாறை குடைவரைக் கோவில்களும் கட்டுமானக் கோவில்களும் பாண்டியர் கட்டிடக் கலையின் சிறப்புமிக்க அம்சங்களாகும்.

கூற்று (C): கழுகுமலை வெட்டுவான் கோவிலின் உச்சியில் உமா மகேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா ஆகியோர் சிற்பங்கள் உள்ளன.

1. கூற்று (A), (B), (C) மூன்றும் சரியானது
2. கூற்று (A) மட்டும் சரியானது
3. கூற்று (B) மட்டும் சரியானது
4. கூற்று (C) மட்டும் சரியானது

32. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

கூற்று (A): முற்காலப் பாண்டியர்களின் ஓவியங்கள் சித்தன்னவாசல் மற்றும் திருமலைபுரத்தில் உள்ளன.

கூற்று (B): சித்தன்னவாசல் சமணத்துறவிகள் வாழ்ந்த குகைகள் இல்லை.

கூற்று (C): சித்தன்னவாசல் குகை ஓவியங்களில் எஞ்சியவற்றுள் தாமரைத் தடாக ஓவியம் புகழ்பெற்றது ஆகும்.

1. கூற்று (A) மட்டும் சரியானது
2. கூற்று (B) மட்டும் சரியானது
3. கூற்று (A), (B), (C) மூன்றும் சரியானது
4. கூற்று (A), (C) மட்டும் சரியானது

33. சரியான இணையைத் தேர்ந்தெடு.

1. பிற்காலச் சோழர்கள் - தாராசுரம்
2. காஞ்சிபுரம் - ஜலகண்டேஸ்வரர் கோவில்
3. மதுரை - ஆதிநாதர் கோவில்
4. திருநெல்வேலி - வரதராஜ பெருமாள் கோவில்

1. 3, 4  2. 1, 2  3. 1  4. 2, 4

34. தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. பாறைகளில் சிற்பங்கள் - பல்லவர்கள்
2. விமானம் - முற்காலச் சோழர்கள்
3. மண்டபம் - பிற்காலச் சோழர்கள்
4. பிரகாரங்கள் - நவீன காலம்

1. 1 மட்டும் தவறானது
2. 2, 3 இரண்டும் தவறானது
3. 3, 4 இரண்டும் தவறானது
4. 3 மட்டும் தவறானது

35. கூற்று காரணத்தை ஆய்வு செய்க.

கூற்று : தஞ்சை பெரிய கோவிலின் சிகரம் தட்சிணமேரு என்றழைக்கப்படுகிறது.

காரணம்: தஞ்சை பெரிய கோவில் விமானம் 216 அடிகள் உயரம் கொண்டது. (உலகில் மனிதனால் கட்டப்பட்ட உயரமான சிகரங்களில் ஒன்று)

1. கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
2. கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
3. கூற்று சரி காரணம் தவறு
4. கூற்று காரணம் இரண்டும் தவறு.

www.kalvinews.com

36. பின்வரும் கூற்றுகளில் வேறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.

கூற்று (A): மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்களாக இராமநாதபுரம் பகுதியை ஆண்டுவந்த சேதுபதிகள் இராமேஸ்வரம் - இராமநாதசுவாமி கோவிலின் கட்டிடக் கலைக்கு பங்காற்றியுள்ளனர்.

கூற்று (B): இராமநாதசுவாமி கோவில் மூன்று பிரகாரச் சுற்றுகளைக் கொண்டுள்ளது.

கூற்று (C): வெளிப்பிரகாரத்தைத் தாங்கி நிற்கும் 1200க்கும் மேற்பட்ட தூண்கள் தனிச்சிறப்பு வாய்ந்தது ஆகும்.

கூற்று (D): மதுரை கோவிலில் அமைந்துள்ள 1000 கால் மண்டபம் - மண்டபக் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

1. A  2. B  3. C  4. D

37. கூற்று காரணத்தை ஆய்வு செய்க.

கூற்று : கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தைய நினைவுச் சின்னங்கள் தென்னிந்தியாவில் இல்லை.

காரணம்: ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தைய கோவில்கள் மரத்தால் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

1. கூற்று சரி, காரணம் தவறு.
2. கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
3. கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
4. கூற்று காரணம் இரண்டும் தவறு.

38. தஞ்சை பெரிய கோவில் நந்தியின் சிலை _________ அளவு உடையதாகும்.

1. 16 அடி நீளம், 13 அடி உயரம்  2. 15 அடி நீளம், 16 அடி உயரம்
3. 13 அடி நீளம், 16 அடி உயரம்  4. 18 அடி நீளம், 15 அடி உயரம்

39. தஞ்சை பெரிய கோவில் நந்தியின் சிலை _________ பாறைகளைக் கொண்டு செதுக்கப்பட்டதாகும்.

1. 7  2. 5  3. 1  4. 3

40. மகாபலிபுரத்திலுள்ள ஏழு கோவில்கள் என்றழைக்கப்படும் கோவிலில் எத்தனை கருவறைகள் உள்ளன?

1. 1  2. 2  3. 3  4. 4

41. மகாபலிபுரம் கோவில் _________ தெய்வங்களுக்கு படைத்தளிக்கப்பட்டது.

1. சிவன் - விஷ்ணு  2. கணபதி - பார்வதி
3. தட்சிணாமூர்த்தி - பிரம்மன்  4. சுப்ரமணியன் - சிவன்

42. கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோவிலைக் கட்டியவர் _________ ஆவார்.

1. இராஜராஜ சோழன்  2. விஜயாலய சோழன்
3. செம்பியன் மகாதேவி  4. இராஜேந்திர சோழன்

43. கங்கை கொண்ட சோழபுரம் கோவிலின் உயரம் ________ ஆகும்.
 1. 55 மீட்டர் 2. 100 மீட்டர் 3. 216 அடிகள் 4. 75 அடிகள்

44. சோழர்கள் வீழ்ச்சியடைந்து பாண்டியர்கள் எழுச்சி பெறும் வரை சுமார் ________ ஆண்டுகள் கங்கை கொண்ட சோழபுரமே சோழர்களின் தலைநகரமாகும்.
 1. 100 2. 250 3. 150 4. 200

45. தாராசுரம் கோவிலின் ஒட்டுமொத்த வடிவம் ________ போலக் காட்சியளிக்கிறது.
 1. தெப்பக்குளம் 2. மண்டபம் 3. தேர் 4. மாடக்குழி

46. பிள்ளையார்பட்டியிலுள்ள குடைவரைக் கோவில் ________க்காக முக்கியத்துவம் பெற்றுள்ளது.
 1. தூண்கள், மண்டபம் 2. மாடக்குழிகள், கல்வெட்டுகள்
 3. சிற்பங்கள், கல்வெட்டுகள் 4. தெப்பக்குளம், சிற்பங்கள்

47. வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடு.
 1. ஆயிரங்கால் மண்டபம் 2. புது மண்டபம்
 3. திருக்குறுங்குடி 4. கங்கை கொண்ட சோழபுரம்

48. மாமல்லபுரத்தில் உள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் யுனெஸ்கோவால் எப்போது அங்கீகரிக்கப்பட்டது?
 1. 1964 2. 1994 3. 1974 4. 1984

49. முற்காலச் சோழர் கட்டடக் கலையின் சிறப்பு அம்சம் யாது?
 1. புடைப்புச் சிற்பங்கள் 2. விமானங்கள்
 3. பிராகாரங்கள் 4. கோபுரங்கள்

50. அழகிய நம்பி கோயில் எங்கு அமைந்துள்ளது?
 1. திருக்குறுங்குடி 2. மதுரை
 3. திருநெல்வேலி 4. ஸ்ரீவில்லிபுத்தூர்

51. வைகுண்ட பெருமாள் கோவிலை கட்டியவர் யார்?
 1. மகேந்திரவர்மன் 2. நரசிம்மவர்மன்
 3. ராஜசிம்மன் 4. இரண்டாம் நந்திவர்மன்

52. கீழ்க்கண்டவற்றை சரியாக பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. பல்லவர்காலம் | - | a) கி.பி. 600 - 1350 |
| ii. முற்காலச் சோழர்கள் | - | b) கி.பி. 600 - 850 |
| iii. பிற்காலச் சோழர்கள் | - | c) கி.பி. 1500 க்கு முன்னர் |
| iv. நவீன காலம் | - | d) கி.பி. 850 - 1500 |

 1. i - b ii - d iii - a iv - c
 2. i - b ii - d iii - c iv - a
 3. i - b ii - c iii - d iv - a
 4. i - c ii - d iii - b iv - a

www.kalvinews.com

53. துவாரபாலகர்கள் என அழைக்கப்படுபவர் ________.
   1. கடவுள்
   2. அரசவை புலவர்
   3. வாயிற்காப்போன்
   4. பெண் கடவுள்

54. ராஜசிம்மன் என்ற இயற்பெயர் கொண்டவர் ________.
   1. ராஜராஜ சோழன்
   2. ராஜேந்திர சோழன்
   3. மகேந்திரவர்மன்
   4. இரண்டாம் நரசிம்மவர்மன்

55. கீழே உள்ளவற்றில் பல்லவ மன்னர் யார்?
   1. இரண்டாம் நரசிம்மவர்மன்
   2. ராஜேந்திரசோழன்
   3. மகேந்திரவர்மன்
   4. விஜயபாலன்

56. தமிழ் திராவிட கோயில் கட்டடக் கலைக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு ________.
   1. பஞ்ச பாண்டவர் ரதம்
   2. காஞ்சி - கைலாசநாதர் கோயில்
   3. திருப்பரங்குன்றம் கோயில்
   4. ஐராவதீஸ்வரர் கோயில்

57. பின்வருவனவற்றுள் எது பஞ்ச பாண்டவ ரதம்?
   1. கருங்கல் பாறை
   2. மாடக்குழி
   3. அஜந்தா
   4. பீம ரதம்

58. அர்ச்சுனன் தவம் இருக்கும் பாறையின் உயரம் ________.
   1. 100 அடி
   2. 43 அடி
   3 45 அடி
   4. 112 அடி

59. ஆண், பெண் தெய்வங்கள், அரசர்கள் ஆகியோரின் சிறப்புகளை எடுத்துரைப்பது?
   1. பீம ரதம்
   2. கருங்கல் பாறை
   3. அர்ஜுனன் ரதம்
   4. மாடக்குழி

60. பல்லவர்களின் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் ________.
   1. பீமர்
   2. முற்காலப் பாண்டியர்
   3. பிற்காலப் பாண்டியர்
   4. திராவிடர்கள்

61. பாண்டிய பேரரசின் குகைக் கோவில்களில் மிக முக்கியமானதாக கருதாதவை?
   1. மலையடிக்குறிச்சி
   2. ஆனைமலை
   3. தஞ்சாவூர்
   4. திருப்பரங்குன்றம்

62. கருவறை வாயிலின் இருபுறத்திலும் ________ சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
   1. துவாரபாலகர்
   2. விஷ்ணு
   3. சிவன்
   4. பிரம்மா

63. பாண்டியர் காலத்து சிவன் கோவில்களின் லிங்கங்கள் எந்த பாறையில் இருந்து செதுக்கப்பட்டதாகும்?
   1. செங்கல்பாறை
   2. தீப்பாறை
   3. பவளப்பாறை
   4. தாய் பாறை

64. கழுகுமலை கோவிலின் உச்சியில் உள்ள சிற்பம் எது?
   1. நந்திவர்மன்
   2. முருகன்
   3. தட்சிணாமூர்த்தி
   4. ஐராதீஸ்வரர்

65. பாண்டியர் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக திகழ்வது ________.
   1. மதுரை மீனாட்சி அம்மன் கோயில்
   2. தஞ்சை பெரிய கோயில்
   3. ஐராவதீஸ்வரர் கோயில்
   4. குடைவரை கோயில்

www.kalvinews.com

66. சித்தன்னவாசல் சமணத் துறவிகள் வாழ்ந்த இடம் ______.

1. புதர் 2. குகை 3. மண்டபம் 4. கோவில்

67. முற்காலச் சோழர்களின் கோவில் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டு ________.

1. தாதாபுரம் கோயில் 2. தஞ்சை பெரிய கோயில்
3. ஐராவதீஸ்வரர் கோயில் 4. தட்சிணாமூர்த்தி கோயில்

68. கோவில்களில் அதிக எண்ணிக்கையில் தேவகோஷ்டங்கள் இருந்தால் அதை ________ என்பர்.

1. பஞ்சவர்ணம் 2. சிற்பம்
3. செம்பியன் மகாதேவி பாணி 4. கலச கோபுரம்

69. செம்பியன் மகாதேவியால் மறுவடிவாக்கம் செய்யப்பட்ட முற்காலக் கோவில்களுக்கு எடுத்துக்காட்டு ________.

1. திருப்புறம்பியம் கோயில் 2. தஞ்சை பெரிய கோவில்
3. தாதாபுரம் கோவில் 4. தட்சிணாமூர்த்தி கோவில்

70. கர்ப்பகிரகத்தின் மேலுள்ள கட்டுமானம் என்பது எது?

1. கடவுள் சிலை 2. வாயிற்படி 3) தூண். 4. விமானம்

71. உலகத்தில் மனிதனால் கட்டப்பட்ட மிக உயரமான சிகரம் எது?

1. மதுரை மீனாட்சி அம்மன் கோவில் 2. சண்டீஸ்வரர் கோவில்
3. தஞ்சை பெரிய கோவில் 4. தட்சிணாமூர்த்தி கோவில்

72. தட்சிண மேரு என்று அழைக்கப்படுவது எது?

1. ஆதி நாதர் கோயில் 2. வரதராஜர் கோயில்
3. ரங்கநாதர் கோயில் 4. தஞ்சாவூர் விமானம்

73. தஞ்சாவூரில் உள்ள நந்தி சிலையின் நீளம் ________.

1. 13 அடி 2. 16 அடி 3. 15 அடி 4. 18 அடி

74. கங்கைகொண்ட சோழபுரம் கோவிலின் உயரம் ________.

1. 50 மீ 2. 45 மீ 3. 100 மீ 4. 55 மீ

75. கும்பகோணத்தில் பிற்காலச் சோழர்களின் கோயில் அமைந்துள்ள இடம்?

1. தாராசுரம் 2. காஞ்சி 3. ஸ்ரீரங்கம் 4. ஆழி

76. தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலை கட்டியவர் ________.

1. மகேந்திரவர்மன் 2. பல்லவர்கள்
3. சோழர்கள் 4. இரண்டாம் ராஜராஜன்

77. மகா மண்டபத்தின் நான்கு சக்கரங்கள் இடம்பெற்றுள்ள பகுதி?

1. மேல் பகுதி 2. கீழ் பகுதி 3. நடுப்பகுதி 4. உச்சியில்

78. மண்டபத்தின் ஒற்றைக்கால் தூண்களில் இடம்பெற்றுள்ள விலங்கு எது?

1. சிங்கங்கள் 2. புலிகள் 3. யானைகள் 4. மயில்கள்

www.kalvinews.com

79. விஜயநகர, நாயக்கர் கட்டடக் கலையின் சிறப்பம்சம் எது?

1. மண்டபம் 2. கருவறை 3. இசை தூண் 4. விமானம்

80. பின்வருவனவற்றில் எது விஜயநகர, நாயக்கர் கால ஓவியங்களை குறிக்காதது?

1. அழகர் 2. கோவில்
3. திருவண்ணாமலை 4. திருவிடைமருதூர்

81. உலகிலேயே மிகவும் நீளமான கோவில் பிரகாரங்களை கொண்டது?

1. ஆண்டாள் கோவில் 2. அழகர் கோவில்
3. தஞ்சை பெரிய கோவில் 4. இராமேஸ்வரம் இராமநாதசாமி கோவில்

82. இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவில் எத்தனை பிரகார சுற்றுகளைக் கொண்டுள்ளது?

1. இரண்டு 2. ஒன்று 3. மூன்று 4. ஐந்து

83. இராமநாதசாமி கோவில் வெளிப்புறச் சுற்றுச் சுவரின் உயரம் ________.

1. 5 மீ 2. 10 மீ 3. 6 மீ 4. 7 மீ

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (1) | 21 | (3) | 41 | (1) | 61 | (3) | 81 | (4) |
| 2 | (2) | 22 | (1) | 42 | (4) | 62 | (1) | 82 | (3) |
| 3 | (3) | 23 | (3) | 43 | (1) | 63 | (4) | 83 | (4) |
| 4 | (4) | 24 | (2) | 44 | (2) | 64 | (3) | | |
| 5 | (2) | 25 | (4) | 45 | (3) | 65 | (1) | | |
| 6 | (3) | 26 | (1) | 46 | (3) | 66 | (2) | | |
| 7 | (4) | 27 | (4) | 47 | (4) | 67 | (1) | | |
| 8 | (1) | 28 | (1) | 48 | (4) | 68 | (3) | | |
| 9 | (4) | 29 | (3) | 49 | (2) | 69 | (1) | | |
| 10 | (2) | 30 | (2) | 50 | (3) | 70 | (4) | | |
| 11 | (1) | 31 | (1) | 51 | (4) | 71 | (3) | | |
| 12 | (3) | 32 | (4) | 52 | (1) | 72 | (4) | | |
| 13 | (2) | 33 | (3) | 53 | (3) | 73 | (2) | | |
| 14 | (1) | 34 | (4) | 54 | (4) | 74 | (4) | | |
| 15 | (4) | 35 | (2) | 55 | (1) | 75 | (1) | | |
| 16 | (3) | 36 | (4) | 56 | (1) | 76 | (4) | | |
| 17 | (4) | 37 | (3) | 57 | (4) | 77 | (2) | | |
| 18 | (1) | 38 | (2) | 58 | (3) | 78 | (1) | | |
| 19 | (2) | 39 | (4) | 59 | (4) | 79 | (3) | | |
| 20 | (4) | 40 | (2) | 60 | (2) | 80 | (4) | | |

www.kalvinews.com

**வகுப்பு - 7 - பருவம்: 3 - வரலாறு**

## 3. தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள்

**தொகுப்பு:**
**திரு.வீ.மணிகண்டன், M.A., M.A., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, ஊருடையாபட்டி,**
**திருச்சி மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.ர.கண்ணன் M.Sc., B.Ed..**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, தப்பக்குட்டை,**
**சேலம் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- **பிகநிதயா என்பது பௌத்த சமய நூல்.**
- ஆசீவகம் மட்டுமே இடைக்காலத்தின் பிற்பகுதி வரை இருந்தது.
- **நிர்வாணா என்பதன் பொருள் இயற்கை எய்துதல்.**

**சமணம்: சான்றுகள், இலக்கியங்கள்:**

- முதல் சமண பேரவைக் கூட்டம் நடைபெற்ற இடம் பாடலிபுத்திரம்.

**சமணத்தின் ஐம்பெரும் உறுதிமொழிகள்:**

- **அகிம்சை** - எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமல் இருப்பது
- **சத்யா** - உண்மை
- **அசௌர்யா** - திருடாமை
- **அபரிக்கிரா** - ஆசை கொள்ளாமை
- **பிரம்மசரியா** - திருமணம் செய்து கொள்ளாமை
- **சமணத்தில் உள்ள இரு பெரும் பிரிவுகள் சுவேதாம்பரர், திகம்பரர்**

**சமண இலக்கியங்கள் :**

**ஆகம சூத்திரங்கள்:**

- சமணத்தில் இரு பிரிவுகளில் உள்ளோரின் அடிப்படை நூலாக கருதப்படுவது ஆகம சூத்திரம்.
- **அர்த்த - மகதி பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது**
- **ஆகம சூத்திரத்தில் உள்ள நூல்களின் எண்ணிக்கை** - 12
- ஆகம சூத்திரம் மகாவீரரின் நேரடிச் சீடர்களால் தொகுக்கப்பட்டவையாகும்
- தொலைந்து போனதாகக் கருதப்படும் **ஆகம சூத்திர நூல் - 12 வது நூல்**

**ஆகமங்கள் அல்லாத இலக்கியங்கள்**

- ஆகமங்கள் அல்லாத இலக்கியங்கள் என்பன ஆகமங்கள் மேல் எழுதப்பட்ட உரைகள், விளக்கங்கள், தனி நபர்களால் எழுதப்பட்ட துறவிகளாலும் அறிஞர்களாலும் தொகுக்கப்பட்ட நூல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- அந்நூல்கள் பிராகிருதம், சஸ்கிருதம், பண்டைய மராத்தி, ராஜஸ்தானி, குஜராத்தி, இந்தி, கன்னடம், தமிழ், ஜெர்மன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளன.
- அவற்றுள் 41 சூத்திரங்கள், 12 உரைகள், ஒரு மாபெரும் உரை **(மகா பாஷ்யா)** ஆகியன இடம் பெற்றுள்ளன.

www.kalvinews.com

- **துறவிகளுக்கான நடத்தை விதிகளைப் பற்றி கூறுவது சேடாக்கள்**
- **சமணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் - மூலங்கள்**
- ஆகமங்கள் அல்லாத இலக்கியங்கள் - 84
- **கல்பசூத்ரா என்ற நூலின் ஆசிரியர் பத்ரபாகு**
- **பஞ்சதந்திரம்** என்ற நூலில் **சமணத்தின் தாக்கம்** பெருமளவில் காணப்படுகிறது
- சமண தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் நூல் **கல்பசூத்ராவின் ஜைன சரிதா ஆகும்.**
- **சமண சமயத்தை நிறுவியவர் மற்றும் முதல் தீர்த்தங்கரர் பார்சவநாதர்** ஆவார்
- **24 வது மற்றும் கடைசி தீர்த்தங்கரர் மகாவீரர்**
- நிர்வாண நிலையை அடைந்து அதன் பின்னர் இவ்வுலகிற்கும், அடுத்த உலகத்திற்குமிடையே பாதை அமைப்போரே தீர்த்தங்கரர்கள் ஆவர்.
- **சீவக சிந்தாமணி - தமிழ் மொழியில் எழுதப்பட்ட சமண சமயநூல்**
- **சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்கத் தேவர்**
- **திருவள்ளுவர், சமணர் என நம்பப்படுகிறது.**
- **நாலடியார் - சமணத் துறவியால் இயற்றப்பட்ட நூல்**

**தமிழ்நாட்டில் சமணங்கள்:**

- தமிழர்கள் திகம்பரர் பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தனர்.
- களப்பிரர்கள் சமண சமயத்தின் ஆதரவாளர்களாய் இருந்ததாக நம்பப்படுகிறது.

**சித்தன்னவாசல் குகைக்கோவில்:**

- **சித்தன்னவாசல் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது**
- இது நிலத்தில் இருந்து 70 மீட்டர் உயரமுடைய பெரும்பாறை ஒன்றில் அமைந்துள்ளது.
- இதன் ஒரு முனையில் ஏழடிப்பட்டம் எனப்படும் இயற்கையாக அமைந்த ஒரு குகையும், மற்றொரு முனையில் ஒரு குடைவரைக் கோவிலும் உள்ளன.
- குகையின் பின்னே தரையில் 17 சமண படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- **சித்தன்னவாசல் குகைக்கோயிலின் மற்றொரு பெயர் அறிவர் கோவில்**
- சித்தன்னவாசல் - கி.பி 7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்டது. இக்கோவிலின் முன் பகுதியில் அர்த்த மண்டபமும், பின் பகுதியில் கருவறையும் (கர்ப்ப கிரகம்) உள்ளன.
- இக்கோவிலில் காணப்படும் சுவரோவியங்கள் அஜந்தா ஓவியங்களுடன் ஒப்புமை கொண்டுள்ளன.
- **ASI - என்பது மத்திய அரசின் தொல்லியல் துறை**

காஞ்சிபுரத்தில் சமணர்கள்: (திருப்பருத்திக் குன்றம்)

- பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் சமண சமயம் செழித்தோங்கியது.
- கி.பி 7 ம் நூற்றாண்டில் காஞ்சிக்கு வருகை புரிந்த சீனப்பயணி - யுவான்சுவாங்.
- **மகேந்திரவர்மன் தொடக்கத்தில் பின்பற்றிய சமயம் - சமணம்.**

**காஞ்சியில் உள்ள புகழ்பெற்ற இரு சமணக் கோவில்கள் :**

1. திரிலோக்கியநாதஜைன சுவாமி கோவில் (திருப்பருத்திக் குன்றம்)
2. சந்திர பிரபா கோவில்

www.kalvinews.com

- புஷ்பசேனா என்னும் சமண முனிவரின் சீடர் **இருகப்பா**
- **திருப்பருத்திக் குன்றம்** என்னும் ஊர் **காஞ்சிபுரம் மாவட்டத்தில்** உள்ளது
- 2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள சமணர்களின் எண்ணிக்கை 83,359

**கழுகுமலை சமண குடைவரை கோவில்கள்:**

- **கழுகுமலை குகைக்கோயில், பராந்தக நெடுஞ்சடையன்** என்னும் பாண்டிய மன்னனால் உருவாக்கப்பட்டது
- இக்குகைக் கோவில்களில் தீர்த்தங்கரர்களின் உருவங்களைத்தவிர யக்சர்கள்(ஆண் பணியாளர்கள்), யக்சிகள் (பெண் பணியாளர்கள்) ஆகியோரின் உருவங்களும் இடம் பெற்றுள்ளன.

**தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் உள்ள சமணக் கோவில்கள்:**

**வேலூர்:**

- கி.பி. 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணத் துறவிகளின் கற்படுக்கைகள் - வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, லத்தேரி பைரவ மலை
- தலையணைப் பகுதி இல்லாத கற்படுகை வேலூரில் பைரவ மலையில் உள்ளன.

**திருமலை**

- திருமலை சமணக் கோவில் தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், ஆரணி நகரின் அருகே அமைந்துள்ள ஒரு குகை வளாகத்தில் அமைந்துள்ளது.
- 22 **வது தீர்த்தங்கரர் - நேமிநாதர்**
- தமிழ்நாட்டில் உள்ள சமண சிலைகளில் **மிகவும் உயரமான சிலை - நேமிநாதர் சிலை** (16m)

**மதுரை:**

- மதுரையில் **சமணக் கோவிலுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது கீழக் குயில்குடி** கிராமமாகும்.
- இங்குள்ள சிற்பங்கள் கி.பி. 860 முதல் 900 வரை ஆட்சிபுரிந்த பாண்டிய அரசன் பராந்தக வீரநாராயண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

**கல்விக்குச் செய்த பங்களிப்பு:**

- பைரவ மலை என்பது குக்கரப் பள்ளி என்னும் சிறு கிராமத்தின் அருகே அமைந்துள்ளது.
- **சமணர்களின் கல்வி மையம் - பள்ளி**

**பௌத்தம்:**

- புத்தரின் இயற்பெயர் - **சித்தார்த்த சாக்கிய முனி கௌதமர்**
- சித்தார்த்த சாக்கிய முனி கௌதமர் என்பதின் ஆங்கில மொழியாக்க விளக்கம் :

கௌதமர் சாக்கிய இனக்குழுவைச் சேர்ந்தவர் / முழுநிறைவு என்னும் இலக்கை எட்டியவர்.

- புத்தர், மகாவீரரின் சமகாலத்தவர் ஆவார்

**புத்தரின் போதனைகள் - எண்வகை வழிகள்:**

- **நல்ல எண்ணெங்கள், நல்ல குறிக்கோள்கள், அன்பான பேச்சு, நன்னடத்தை, தீது செய்யா வாழ்க்கை, நல்ல முயற்சி, நல்ல அறிவு, நல்ல தியானம்**
- புத்தர் தனது போதனைகளை **பிராகிருத மொழியில்** பரப்புரை செய்தார்.

**புத்தரின் நான்கு பேருண்மைகள்:**

- வாழ்க்கை துயரம், வயோதிகம், நோய், இறுதியில் மரணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- துயரங்கள் ஆசையினாலும் வெறுப்பினாலும் ஏற்படுகின்றன.
- ஆசையைத் துறந்துவிட்டால் துயரங்களை வென்று மகிழ்ச்சியை அடையலாம்
- ஒருவர் எண்வகை வழிகளைப் பின்பற்றினால் உண்மையான மகிழ்ச்சியும், நிறைவும் கைவரப் பெறலாம்.

**பௌத்த இலக்கியங்கள்:**

- திரிபிடகா என்னும் பௌத்தப் பொதுவிதிகள் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளன.
- இவை (**மூன்று கூடைகள்**) என்று அழைக்கப்பட்டன. அவை: வினய பிடகா, சுத்த பிடகா, அபிதம்மா பிடகா
- **திரி பிடகா பாலி மொழியில் எழுதப்பட்டன**.
- **வினய பிடகா:** இதில் பௌத்த துறவிகளுக்கான (பிட்சுக்கள்) இடம் பெற்றுள்ளன.தூய்மையான நடத்தையைப் பெற இவை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.
- **சுத்த பிடகா** : விவாதங்களை சான்றுகளாகக் கொண்டு பௌத்தத்தின் மூலக் கோட்பாடுகளைக் கூறுகின்றது.
- **அபிதம்ம பிடகா** : இது நன்னெறிகல், தத்துவம், நுண்பொருள் கோட்பாடு ஆகியன குறித்து விளக்குகிறது.

**பொதுவிதிகளைப் பற்றிக் கூறுகின்ற பிற பௌத்த நூல்கள்:**

- **ஜாதகங்கள்** : பௌத்த இலக்கியங்களில் காணப்படும் புத்தருடைய வாழ்க்கை தொடர்பான கதைகளைக் கூறும் நூல்.
- **புத்த வம்சா:** கவிதை வடிவில் எழுதப்பட்டுள்ள மரபுவழிக் கதையாகும். கௌதமருக்கு முன்பாக வாழ்ந்ததாக நம்பப்படுகின்ற 24 புத்தர்களின் வாழ்க்கையையும், செயல்பாடுகளையும் பற்றிக் கூறுகிறது.
- **மிலிந்தபங்கா** : மிலிந்தாவின் கேள்விகள் எனப் பொருள்படும். கிரேக்க - பாக்டீரியன் அரசன் **மிலிந்தா** என்பவருக்கும், பௌத்த பிட்சுவான **நாகசேனர்** என்பவருக்கும் இடையே பௌத்தத்தின் சில அம்சங்கள் குறித்த உரையாடல்களைக் கொண்டது. இது **சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது**.
- **இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றுத் தொகுப்புகள்:** மகா வம்சம், தீப வம்சம்
- **மகா வம்சம்** : இலங்கை உட்பட இந்தியத் துணைக் கண்டத்தின் அரச குலங்களை பற்றிக் கூறுகிறது.
- **தீபவம்சம்** : புத்தரின் போதனைகளை விவரிக்கும் நூல்
- **விசுத்திமக்கா** என்னும் நூல் **புத்தகோசாவால்** எழுதப்பட்டது. இவரே **முதல் பௌத்த உரையாசிரியர்**
- **புத்த சரிதா** என்னும் நூல் **அஸ்வகோஷரால் சமஸ்கிருத மொழியில் இதிகாச பாணியில்** எழுதப்பட்டது. இது கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கிறது

**தமிழகத்தில் பௌத்தம்:**

- கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சில நினைவுச் சின்னங்கள் பாண்டிய நாட்டில் உள்ளன. இவை **பஞ்ச பாண்டவ மலை** என அழைக்கப்படுகிறது
- பக்தி இயக்க காலம் முதல் பக்தி இயக்கப் பெரியோர்கள் பௌத்தத்தை எதிர்த்தனர்.

www.kalvinews.com

- தமிழகத்தில் பௌத்தம் சந்தித்த சவால்கள் குறித்த சான்றுகளை **சைவ நாயன்மார்களின் தேவாரப் பாடல்களிலும், வைணவ ஆழ்வார்களின் நாலாயிர திவ்விய பிரபந்தத்திலும்** காணலாம்.
- கி.பி ஏழாம் நூற்றாண்டில், **சீனப் பயணி யுவான் சுவாங்** தென்னிந்தியா வந்தபொழுது பௌத்தமானது மிகவும் சரிவுற்ற நிலையில் இருந்தது.
- **வீர சோழியம்:** 11 ஆம் நூற்றாண்டில் பிற்காலச் சோழர்கள் காலத்தில் பௌத்தர் ஒருவரால் எழுதப்பட்ட நூல்.
- **சூடாமணி விகாரை:** ஸ்ரீவிஜயா அரசரால் நாகப்பட்டணத்தில் கட்டப்பட்டது.
- **கூல வாணிகன் சீத்தலை சாத்தனார்** மணிமேகலை என்ற காப்பியத்தை எழுதியவர். இது தமிழ் பௌத்தத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது

**விகாரைகள்**

- **விகாரா** என்னும் **சமஸ்கிருத** சொல்லுக்கு "**வாழ்விடம்" அல்லது "இல்லம்**" எனப் பொருள்
- தொடக்கத்தில் விகாரைகள் மழைக்காலங்களில் துறவிகளுக்கான தங்குமிடங்களாகப் பயன்பட்டன.
- பின்னர் நன்கொடைகளின் மூலம் கல்வி மையங்களாக மாற்றம் பெற்றன.
- **மணிமேகலை - பௌத்த சமய நூல்.**
- **மத்தவிலாசபிரகாசனம்** என்னும் நூலின் ஆசிரியர் **மகேந்திர வர்மன்**
- **நாளந்தா, தட்சசீலம், விக்ரமசீலா - பௌத்த விகாரைகள்**
- பத்மாசன கோலத்தில் உள்ள புத்தரின் சிலை கண்டெடுக்கப்பட்ட இடம் - **திருநாட்டியட்டாங்குடி (திருவாரூர்)**

**ஆசீவகத் தத்துவம்**

- ஆசீவகர்கள் **வினைப்பயன்(கர்மா), மறு பிறவி, முன் தீர்மானம்** ஆகிய கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.
- **ஆசீவகப் பிரிவின் தலைவர் - கோசலா மன்காலிபுத்தா**
- ஆசீவகர்கள் மிகக் கடுமையான துறவறத்தைக் கடைப்பிடித்தனர்,.
- ஆசீவக சமயமும், அதன் தத்துவங்களும் வேதப் பாடல்களிலும், **பிராமணங்கள், ஆரண்யங்கள்** ஆகியவற்றிலும், பண்டைய சமஸ்கிருதத் தொகுப்புகளிலும், சமண, பௌத்த சமயங்களுக்கு முந்தைய காலப் பகுதியைச் சார்ந்த ஆய்வுகளிலும் காணப்படுகின்றன.
- ஆசீவகத்திற்கென இலக்கியங்கள் ஏதும் இல்லை
- கோசலரின் தத்துவங்கள் பிற மதங்களில் உள்ளன.
- மௌரியப் பேரரசர் அசோகரும், அவருடைய பேரன் தசரதாவும் ஆசீவகர்களை ஆதரித்தனர்
- மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் வட இந்தியாவில் ஆசீவகம் சரிவைச் சந்தித்தது.
- பல்லவர், சோழர், ஹோய்சாளர் ஆகியோரது ஆட்சிக் காலங்களில் கிராம சமூகத்தினர் ஆசீவகர்கள் மீது சிறப்பு வரிகளை விதித்தனர்.
- 14 ஆம் நூற்றாண்டுவரை இன்றைய கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில், பாலாற்றின் பகுதிகளில் (வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள்) ஆசீவகம் செல்வாக்கு பெற்றிருந்தது.
- இறுதியில் ஆசீவகர்கள் வைணவத்தால் ஈர்த்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்:**

1. முதல் சமணப் பேரவைக் கூட்டம் நடைபெற்ற இடம் _______.
   (1) மகாபலிபுரம் (2) காஞ்சிபுரம் (3) பாடலிபுத்திரம் (4) மதுரை

2. அசௌர்யா என்பது _______.
   (1) உண்மை (2) திருடாமை (3) அகிம்சை (4) ஆசைமின்மை

3. ஆகம சூத்திர நூல்களின் எண்ணிக்கை _______.
   (1) 12 (2) 24 (3) 13 (4) 22

4. சமண தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் நூல் _______.
   (1) மத்தவிலாசபிரகாசனம் (2) மணிமேகலை
   (3) சீவகசிந்தாமணி (4) ஜைனசரிதா

5. கல்பசூத்ரா என்ற நூலின் ஆசிரியர் _______.
   (1) பத்ரபாகு (2) புஷ்பசேனா
   (3) திருத்தக்க தேவர் (4) வஜ்ரபோதி

6. அறிவர் கோவில் என அழைக்கப்படுவது _______.
   (1) பைரவ மலை
   (2) சந்திரபிரபா கோவில்
   (3) திரிலோக்கிய நாத ஜைன சுவாமி கோவில்
   (4) சித்தன்ன வாசல் குகை

7. கழுகுமலை சமணர் கோவில் யாரால் உருவாக்கப்பட்டது _______.
   (1) புத்த கோசா (2) பராந்த நெடுஞ்சடையன்
   (3) யுவான் சுவாங் (4) மகேந்திரவர்மன்

8. விசுத்திமக்கா என்ற நூலின் ஆசிரியர் _______.
   (1) புத்த கோசா (2) அசுவ கோசா (3) மிலிந்தா (4) புத்தர்

9. சமணர்களின் கல்வி மையங்கள் _______.
   (1) விகாரைகள் (2) பள்ளி (3) இல்லம் (4) குகைகள்

10. மௌரியப் பேரரசர் அசோகரின் பேரன் _______.
    (1) கனிஷ்கர் (2) ஹர்ஷர் (3) தசரதா (4) பத்ரபாகு

11. மௌரியப் பேரரசர் அசோகர் ஆதரித்த மதம் _______.
    (1) சமணம் (2) பௌத்தம் (3) ஆசீவகம் (4) எதுவுமில்லை

12. ஆசீவகப் பிரிவின் தலைவர் _______.
    (1) கோசலா மன்காலிபுத்தா (2) அசோகர்
    (3) தசரதா (4) வஜ்ரபோதி

13. பௌத்த கல்வி மையங்களுக்குப் பெயர் _______.
    (1) விகாரைகள் (2) பள்ளி (3) கல்லூரி (4) குகைகள்

www.kalvinews.com

14. மத்தவிலாச பிரகாசனம் என்ற நூலின் ஆசிரியர் _______.

(1) கிருஷ்ண தேவராயர் (2) புத்த கோசா

(3) ஹர்ஷர் (4) மகேந்திர வர்மன்

15. முதல் பௌத்த உரையாசிரியர் _______.

(1) புத்தர் (2) மகாவீரர்

(3) புத்தகோசா (4) நாகசேனர்

16 புத்தருடைய வாழ்க்கை தொடர்பான பல்வேறு கதைகளை கூறும் நூல் _______.

(1) புத்த வம்சா (2) மலிந்த பன்கா (3) ஜாதகங்கள் (4) தேவாரம்

17 புத்தர் தனது போதனைகளை பரப்புரை செய்த மொழி _______.

(1) சமஸ்கிருதம் (2) பிராகிருதம் (3) தமிழ் (4) பாலி

18 புத்த சரிதம் என்ற நூலின் ஆசிரியர் _______.

(1) அஸ்வகோஷர் (2) வசுமித்திரர் (3) வஜ்ரபோதி (4) கோசலா

19. சமண சமயம் யாருடைய ஆட்சிக் காலத்தில் செழித்தோங்கியது?

(1) சேரர் (2) சோழர் (3) பாண்டியர் (4) பல்லவர்

20. தவறான இணை எது?

(1) திருப்பருத்திக் குன்றம் - காஞ்சிபுரம்

(2) கழுகு மலை - தூத்துக்குடி

(3) திருமலை - சேலம்

(4) பைரவ மலை - வேலூர்

21. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(1) சீவக சிந்தாமணி (2) திருக்குறள்

(3) நாலடியார் (4) மணிமேகலை

22. சரியான இணை எது?

(1) கல்பசூத்ரா - புத்த கோசா

(2) விசுத்திமக்கா - சீத்தலை சாத்தனார்

(3) மத்தவிலாச பிரகாசனம் - மகேந்திரவர்மன்

(4) சீவக சிந்தாமணி - பத்ரபாகு

23. பொருத்துக:

(i) 22 வது தீர்த்தங்கரர் - a. இருகப்பா

(ii) 24 வது தீர்த்தங்கரர் - b. நேமி நாதர்

(iii) கீழக்குயில்குடி - c. மகாவீரர்

(iv) புஷ்பசேனா - d. மதுரை

(1) i - c ii - a iii - d iv - b

(2) i - b ii - c iii - d iv - a

(3) i - d ii - a iii - c iv - b

(4) i - d ii - c iii - a iv - b

www.kalvinews.com

24. கீழ்க்கண்டவற்றுள் எது சரி?
    (1) ASI என்பது மத்திய அரசு தொல்லியல் துறை
    (2) பொதுவாகத் தமிழர்கள் சுவேதாம்பரர் பிரிவைச் சார்ந்தவர்கள்
    (3) பெரும்பாலான அரசர்கள் பௌத்த மதத்தை சார்ந்தவர்கள்
    (4) திருவள்ளுவர் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்

25. கீழ்க்கண்டவற்றுள் எது தவறு?
    (1) 12 வது ஆகம சூத்திரம் தொலைந்து போனதாக கருதப்படுகிறது
    (2) பிகநிதயா என்பது சமண சமய நூல்
    (3) அர்த்த மகதி பிராகிருத மொழியில் எழுதப்பட்டது
    (4) சமணக் கோவில்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்வது கீழக்குயில்குடி கிராமம்

26. தமிழ்நாட்டிலுள்ள சமண சிலைகளில் மிக உயரமானதாக கருதப்படுவது _______.
    (1) மகாவீரர் சிலை (2) நேமிநாதர் சிலை
    (3) புஷ்பசேனா சிலை (4) இவைகளில் எதுவுமில்லை

27. திருப்பருத்திக் குன்றம் சமண ஜைன கோவில் எந்த மாவட்டத்தில் உள்ளது?
    (1) தூத்துக்குடி (2) திருவண்ணாமலை
    (3) மதுரை (4) காஞ்சிபுரம்

28. பைரவ மலை அமைந்துள்ள மாவட்டம் _______.
    (1) வேலூர் (2) மதுரை (3) தூத்துக்குடி (4) காஞ்சிபுரம்

29 புஷ்பசேனா என்னும் சமண முனிவரின் சீடர் _______.
    (1) இருகப்பா (2) அசோகர்
    (3) நேமிநாதர் (4) பராந்தக நெடுஞ்சடையன்

30. பௌத்த துறவிகளுக்கான விதிமுறைகளைப் பற்றி கூறுவது _______.
    (1) சுத்த பிடகா (2) வினய பிடகா
    (3) அபிதம்ம பிடகா (4) எதுவுமில்லை

31. தாந்ரீகச் சடங்குகளில் திறன் பெற்று விளங்கியவர் _______.
    (1) ஸ்ரீவிஜயா (2) மகேந்திரவர்மன்
    (3) வஜ்ரபோதி (4) அஸ்வகோசர்

32. பௌத்தம் சரிவை சந்தித்துக் கொண்டிருக்கும் சமயமென எடுத்துரைக்கும் நூல் _______.
    (1) தேவாரம் (2) மத்தவிலாச பிரகாசனம்
    (3) சீவக சிந்தாமணி (4) புத்தசரிதா

33. கர்மா, மறுபிறவி மற்றும் முன் தீர்மானம் ஆகிய கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் _______.
    (1) சமணர்கள் (2) பௌத்தர்கள் (3) ஆசீவகர்கள் (4) 1 மற்றும் 2

34. புத்தரின் போதனைகளை எடுத்துரைக்கும் நூல் _______.
    (1) மகாவம்சம் (2) தீபவம்சம் (3) புத்த வம்சா (4) ஜாதகங்கள்

www.kalvinews.com

35. திரிபிடகா என்பதன் பொருள் _______.

(1) மூன்று கூடைகள் (2) மிலிந்தாவின் கேள்விகள்

(3) அகிம்சை (4) பிரம்மச்சரியா

36 கீழ்க்கண்டவற்றுள் எது களப்பிரர்களால் ஆதரிக்கப்பட்டது?

(1) புத்த மதம் (2) சமண மதம் (3) ஆசீவகம் (4) இந்து மதம்

37 ஆகம சூத்திரங்கள் எந்த மொழியில் எழுதப்பட்டன?

(1) பாலி (2) சமஸ்கிருதம் (3) பிராகிருதம் (4) தமிழ்

38 நிர்வாணா என்ற சொல்லின் பொருள் _______.

(1) அகிம்சை (2) திருடாமை

(3) இயற்கை எய்துதல் (4) உண்மை

39 அபரிக்கிரகா என்பதன் பொருள் _______

(1) உண்மை (2) அகிம்சை

(3) ஆசை கொள்ளாமை (4) திருடாமை

40 சமண சமயத்தை நிறுவியவர் _______.

(1) மகாவீரர் (2) பார்சவநாதர் (3) புத்தர் (4) பத்ரபாகு

41. அறிவர் கோவில் அமைந்துள்ள மாவட்டம் _______.

(1) புதுக்கோட்டை (2) மதுரை (3) தூத்துக்குடி (4) காஞ்சிபுரம்

42. சீனப்பயணி யுவான்சுவாங் எந்த நூற்றாண்டு காஞ்சிக்கு வருகை புரிந்தார்?

(1) 6 (2) 5 (3) 3 (4) 7

43. நேமிநாதர் சிலையின் உயரம் _______.

(1) 10 மீ (2) 26 மீ (3) 36 மீ (4) 16 மீ

44. 2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டில் சமணர்களின் எண்ணிக்கை _______.

(1) 38,359 (2) 53,389 (3) 35,839 (4) 83,359

45. மணிமேகலையின் ஆசிரியர் _______.

(1) திருத்தக்க தேவர் (2) சீத்தலை சாத்தனார்

(3) புத்த கோசா (4) மகேந்திர வர்மன்

46. பொருத்துக.

(i) கல்ப சூத்ரா - a. திருத்தக்க தேவர்

(ii) சீவக சிந்தாமணி - b. மதுரை

(iii) மிலிந்தபன்கா - c. பத்ரபாகு

(iv) கீழக் குயில்குடி - d. நாகசேனர்

(1) i - c ii - b iii - d iv - a (2) i - c ii - a iii - d iv - b

(3) i - d ii - c iii - b iv - a (4) i - d ii - c iii - a iv - b

47. கீழ்க்கண்டவற்றுள் எது களப்பிரர்களால் ஆதரிக்கப்பட்டது?

(1) புத்த மதம் (2) சமண மதம் (3) ஆசீவகம் (4) இந்து மதம்

www.kalvinews.com

48. கூற்றை ஆராய்க.

கூற்று: பழைய மதங்களின் குருமார்களிடமிருந்து தான் கற்றுக் கொள்வதற்கு ஏதுமில்லை என கௌதமர் தெரிந்து கொண்டார்.

காரணம்: துறவு வாழ்க்கையை மேற்கொள்வதே முக்தி அடைவதற்கான ஒரே வழி என மதங்கள் அறிவித்தன.

(1) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

(2) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

(4) கூற்று தவறு ஆனால் சரி

49. சரியான கூற்றினைக் / கூற்றுக்களைக் காண்க.

கூற்று (i): கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் வெவ்வேறான 62 சமண சமயப் பள்ளிகள் செழிப்புற்று இருந்தன.

கூற்று (ii): 'பள்ளி' என்பது புத்தமதத்தாரின் கல்வி மையமாகும்.

கூற்று (iii): அரசர்கள் அளித்த ஆதரவினால், இஸ்லாமிய ஆட்சிக்கு முந்தைய இந்தியா, பல விகாரைகளைக் கொண்ட நாடாக விளங்கியது.

கூற்று (iv):. ஆசீவகம் பதினைந்தாம் நூற்றாண்டு வரை தொடர்ந்து செயல்பட்டது.

(1) கூற்று (i) மற்றும் (iii) சரி
(2) கூற்று (i), (ii) மற்றும் (iv) சரி
(3) கூற்று (i) மற்றும் (ii) சரி
(4) கூற்று (i), (iii) மற்றும் (iv) சரி

50. தவறான இணையைக் காண்க.

(1) பார்சவ நாதர் - 22 வது தீர்த்தங்கரர்

(2) மகாபாஷ்யா - இலங்கையைச் சேர்ந்த வரலாற்றுத் தொகுப்பு

(3) விசுத்திமக்கா - புத்தகோசா

(4) புத்தர் - எண்வகை வழிகள்

**விடைகள்**

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (3) | 11 | (3) | 21 | (4) | 31 | (3) | 41 | (1) |
| 2 | (2) | 12 | (1) | 22 | (3) | 32 | (2) | 42 | (4) |
| 3 | (1) | 13 | (1) | 23 | (2) | 33 | (3) | 43 | (4) |
| 4 | (4) | 14 | (4) | 24 | (1) | 34 | (2) | 44 | (4) |
| 5 | (1) | 15 | (3) | 25 | (2) | 35 | (1) | 45 | (2) |
| 6 | (4) | 16 | (3) | 26 | (2) | 36 | (4) | 46 | (2) |
| 7 | (2) | 17 | (2) | 27 | (4) | 37 | (3) | 47 | (2) |
| 8 | (1) | 18 | (1) | 28 | (1) | 38 | (3) | 48 | (1) |
| 9 | (2) | 19 | (4) | 29 | (1) | 39 | (3) | 49 | (1) |
| 10 | (3) | 20 | (3) | 30 | (2) | 40 | (2) | 50 | (1) |

www.kalvinews.com

**வகுப்பு - 7 - பருவம் - 3 - புவியியல்**

**1 - கண்டங்களை ஆராய்தல்**
**வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா**

**தொகுப்பு:**
**திருமதி.K.மங்கை,M.Sc.,B.Ed.,M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியை, (சமூக அறிவியல்),**
**அரசு மேல்நிலைப்பள்ளி,**
**தும்பூர்,**
**விழுப்புரம் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.B.உஷா ஆனந்தி, B.Sc.,B.Ed.,M.A.,M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியை, (சமூக அறிவியல்)**
**அரசு உயர்நிலைப்பள்ளி,**
**கீழ்க்குமாரமங்கலம்,**
**கடலூர் மாவட்டம்.**

**முக்கிய குறிப்புகள்**

## வட அமெரிக்கா

- உலகில் மொத்தம் **ஏழு** கண்டங்கள் உள்ளன.

1. ஆசியா
2. ஆப்பிரிக்கா
3. வட அமெரிக்கா
4. தென் அமெரிக்கா
5. ஐரோப்பா
6. ஆஸ்திரேலியா
7. அண்டார்டிகா

- **புதிய உலகு** என அழைக்கப்படும் கண்டங்கள் **வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா.**

**உலக அளவில் வட அமெரிக்கா:**

- உலகின் மொத்த பால் & பால் பொருட்கள் உற்பத்தியில் 25% உற்பத்தி செய்யும் நாடு - **வட அமெரிக்கா.**
- உலகின் மொத்த மரக்கூழ் & செய்தித்தாள் உற்பத்தியில் 50% உற்பத்தி செய்யும் நாடு **வட அமெரிக்கா**
- உலகின் இரும்பு எஃகு தொழிலில் முக்கிய மையமாக உள்ள கண்டம் - **வட அமெரிக்கா.**
- உலகின் முதல் கோதுமை ஏற்றுமதியாளராக விளங்கும் நாடு - **வட அமெரிக்கா.**
- உலகின் செயற்கை இழை தயாரிப்பில் உலகின் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ள நாடு - **வட அமெரிக்கா**
- உலகின் மிகச்சிறந்த மீன்பிடித் தளம் - **கிராண்ட் பேங்க்** (வட அமெரிக்கா)
- உலகின் மிகப்பெரிய நன்னீர் ஏரி - **சுப்பீரியர் ஏரி** (வட அமெரிக்கா)
- பூமியின் மிகவும் பழமையான மற்றும் இளமையான பாறைகள் காணப்படும் இடம். - **மரணப் பள்ளத்தாக்கு** (வட அமெரிக்கா)
- உலகின் மிகப் பெரிய ரயில்வே நிலையம் - **சிகாகோ ரயில் நிலையம்** (வட அமெரிக்கா)
- உலகின் **சர்க்கரைக் கிண்ணம்** என அழைக்கப்படும் நாடு - **கியூபா** (வட அமெரிக்கா)

www.kalvinews.com

**வட அமெரிக்கா**

- வட அமெரிக்காவை கண்டுபிடித்தவர் - **கிறிஸ்டோபர் கொலம்பஸ்.**
- அமெரிக்கா என பெயரிட்டவர் - **அமெரிக்கோ வெஸ்புகி.**
- **அமைவிடம்**
- அட்சக்கோடுகளின் வரம்பு $7^{0}$ வ முதல் $84^{0}$வ வரை.
- தீர்க்க ரேகைகளின் வரம்பு $53^{0}$ மே முதல் $180^{0}$மே வரை.
- இதன் மொத்த நிலப்பரப்பு 24,79,000 **ச.கி.மீ.** இது உலகின் மொத்த நிலப்பரப்பில் 16.5% ஆகும்.

**எல்லைகள்**

ஆர்டிக் பெருங்கடல்
(வ)

(மே) பசிபிக் பெருங்கடல் — வட அமெரிக்கா — அட்லாண்டிக் பெருங்கடல் (கி)

தென் அமெரிக்கா
(தெ)

**வட அமெரிக்கா கண்டத்தின்** ........

- மிகப்பெரிய நாடு - **கனடா.**
- இரண்டாவது பெரிய நாடு - **அமெரிக்க ஐக்கிய நாடுகள்.**
- மூன்றாவது மிகப்பெரிய நாடு - **மெக்சிகோ.**
- நிலப்பரப்பின் அடிப்படையில் மிகப்பெரிய நாடு - **கனடா**
- அதிக மக்கள் தொகை கொண்ட நகரம் - **மெக்சிக்கோ நகரம்**
- மிகச்சிறிய நாடு - **கிரெனடா.**
- மிகப்பெரிய சிகரம் - **மெக்கன்லீ சிகரம்** (6,194 மீட்டர்)
- மிகப்பெரிய ஏரி - **சுப்பீரியர் ஏரி**
- மிக நீளமான ஆறு - **மிஸிஸிப்பி ஆறு** (6114 கிலோமீட்டர்)
- மிக ஆழமான பகுதி - **மரணப் பள்ளத்தாக்கு** (86 மீட்டர் ஆழம்)
- மிகப்பெரிய இயற்கை வளங்களைக் கொண்ட பகுதி - **கிராண்ட் பேங்க்**
- தொழிற்சாலைகள் அடர்த்தியாக காணப்படும் பகுதி - **வடகிழக்குப் பகுதி**
- வட அமெரிக்காவில் குடியேறியவர்களில் முதன்மையானவர்கள் -**ஐரோப்பியர்கள்.**
- கடும் குளிர் நிலவும் பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்கள் - **எஸ்கிமோக்கள்.**
- பூர்வீக மக்களின் முக்கிய உணவுப் பயிர் - **சோளம்.**
- சிறப்பாக நடைபெறும் தொழில் - **மரம் வெட்டும் தொழில்.**
- முக்கியமான உள்நாட்டு தொழில் - **மீன்பிடித்தொழில்.**
- கோதுமை பெருமளவில் விளைவிக்கப்படும் பகுதி - **ப்ரெய்ரி புல்வெளி நிலங்கள்.**
- இயற்கை அமைப்பு பிரிவுகளின் அடிப்படையில் வடஅமெரிக்கா **நான்கு** முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது

1. ராக்கி மலைகள் - 4,800 கிலோ மீட்டர் நீளம்
2. பெரும் சமவெளிகள்
3. அப்பலேஷியன் உயர் நிலம்

www.kalvinews.com

4. கடற்கரைச் சமவெளி

- வட அமெரிக்க கண்டத்தில் உள்ள ராக்கி மலைத்தொடர் இருவேறு பெயர்களைக் கொண்டுள்ளது
- கிழக்கு - ராக்கி மலைத்தொடர்
- மேற்கு - மேற்கத்திய கார்டில் லெராஸ்.
- வட அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பகுதியாக **அப்பலேஷியன் உயர்நிலப் பகுதிகள்** விளங்குகின்றன. இதற்குக் காரணம் அங்கு **நிலக்கரி**, **இரும்பு**, **தாமிரம்** போன்ற கனிம வளங்கள் நிறைந்து காணப்படுவதே ஆகும்.
- வட அமெரிக்காவின் வட மேற்கு கடற்கரைப் பகுதியில் பனி உறையாமல் இருப்பதற்கு காரணமான நீரோட்டம் - **அலாஸ்காவில் காணப்படும் வெப்ப நீரோட்டம்.**
- வட அமெரிக்காவின் டொரண்டோகான்வெல் மற்றும் கிங்ஸ்டன் பகுதிகளில் தயாரிக்கப்படும் நூல்கள் எளிதில் அறுந்து போகாமல் இருப்பதற்கு காரணம் அங்கு நிலவும் **ஈரப்பதம் மிக்க குளிர்ந்த காலநிலை** ஆகும்.
- வட அமெரிக்கா வருடம் முழுவதும் குளிராக இருப்பதற்கு காரணம் அங்குள்ள **ராக்கி மலைத்தொடர் வடக்கு தெற்காக அமைந்திருப்பதால்** ஆர்டிக் பகுதியில் இருந்து வீசும் கடும் குளிர் காற்றினை அதனால் தடுக்க முடியவில்லை.
- வட அமெரிக்காவில் நூற்றுக்கணக்கான கலாச்சாரங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து புதிய கலாச்சாரத்தை உருவாக்குவதால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் **உருகும் பானை (அ) உருகும் பனி** என்று அழைக்கப்படுகிறது.
- கார்டில் லெராஸ் பல எரிமலைகளை கொண்டுள்ளதால் இது **பசிபிக் நெருப்பு வளையத்தின் ஒரு பகுதி**யாக கருதப்படுகிறது.
- வட அமெரிக்கா கண்டம் மேற்கு கோளத்தில் தீர்க்க ரேகைகளின் அடிப்படையில் அதிகமான பரப்பளவை கொண்டிருப்பதால் **ஏழு நேர மண்டலங்களை** உள்ளடக்கியுள்ளது.
- மத்திய தரைக்கடல் காலநிலை நிலவும் அமெரிக்க மாகாணம் - **கலிபோர்னியா மாகாணம்**
- எதிர் வர்த்தக காற்றுகள் என்று அழைக்கப்படும் காற்றுகள் - **மேற்கத்திய காற்றுகள்** ஆகும். இவை **மேற்கிலிருந்து கிழக்காக** வீசும் நிலையான காற்றுகள் ஆகும்.
- **சியாரர் மாட்ரே** என அழைக்கப்படும் மலைத்தொடர் - **சியாரர் நிவாரா மலைத்தொடர்**
- **பெரிய சேற்று ஆறு** என்று அழைக்கப்படும் ஆறு - **மிஸிஸிப்பி ஆறு** (வட அமெரிக்கா)

**முக்கியமான மரங்களும் அவை காணப்படும் பகுதிகளும்**

- வில்லோ மரங்கள் - தூந்திர காடுகள்
- ராக்கி மலைத்தொடர் - மழைக்காடுகள்
- நெட்டிலிங்கம் - குளிர்ந்த வெப்ப இலையுதிர் காடுகள்
- வால்னட் - மத்திய தரைக்கடல்
- ரப்பர் - வெப்ப மண்டல மழை காடுகள்
- கொக்கோ மரம் - வெப்ப மண்டல மழை காடுகள்

**வேளாண்மை**

- ஐரோப்பிய குடியேற்றங்களால் வட அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர் - **கோதுமை**
- வட அமெரிக்காவில் அதிகமான குளிரை எதிர்கொண்டு குறைவான நீர் தேவையில் வளரக்கூடிய வெப்பமண்டல பயிர்கள் **பார்லி** மற்றும் **ஓட்ஸ்** ஆகும்.

www.kalvinews.com

- மேற்கிந்திய தீவுகளின் முக்கிய பணப்பயிர் - **கரும்பு.**
- மீன்களின் உணவு - **பிளாங்டன்** (கடல் பாசிகள்).
- ரேயான் மற்றும் செயற்கை இழைகள் மரக்கூழிலிருந்து கிடைக்கும் **செல்லுலோஸ்** மூலம் தயாரிக்கப்படுகிறது.
- எஸ்கிமோக்கள் பனிக்கட்டிகளை கொண்டு கட்டும் வீடுகளுக்கு **இ்ஃக்லூ** என்று பெயர்.
- வட அமெரிக்காவில் எல்லாவித காலநிலையிலும் பயன்படுத்தக்கூடிய **அஸ்பால்ட்** மற்றும் **கான்கிரீட்களாலான** சாலைகள் போடப்பட்டுள்ளன
- வட அமெரிக்காவில் உள்ள **யூகான் ஆறு** ஆண்டின் 8 மாதங்களுக்கு **உறைந்த நிலை**யிலேயே காணப்படும்.
- வட அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ் வாய்ந்த கிராண்ட் கேன்யான் பள்ளத்தாக்கை உருவாக்கும் ஆறு - **கொலராடோ ஆறு** (கொலம்பியா பீடபூமி)

| ஆறு | தோன்றும் இடம் | முடியும் இடம் |
|---|---|---|
| மெக்கன்சி ஆறு | கிரேட் ஸ்லேவ் ஏரி | ஆர்டிக் பெருங்கடல் |
| புனித லாரன்ஸ் ஆறு | ஒன்டேரியோ ஏரி | அட்லாண்டிக் பெருங்கடல் |

**வட அமெரிக்காவில் உள்ள சர்வதேச விமான நிலையங்கள்**

- நியூயார்க்
- சிகாகோ
- லாஸ்ஏஞ்சல்ஸ்
- அட்லாண்டா
- டொராண்டோ
- மாண்ட்ரீல்


**இணைப்புகள்**

- இரண்டு மிகப் பெரிய நிலப் பகுதிகளை இணைக்கும் சிறிய நிலப்பகுதி **நிலச்சந்தி** எனப்படும். இரண்டு பெரிய நீர் பரப்புகளை இணைக்கும் சிறிய நீர் பரப்பு **நீர்ச்சந்தி** எனப்படும்
- 
- வட அமெரிக்கா ⟷ பனாமா நிலச்சந்தி ⟷ தென் அமெரிக்கா
- வட அமெரிக்கா ⟷ பேரிங் நீர்ச்சந்தி ⟷ ஆசியா
- அமெரிக்கா ⟷ ரியோ கிராண்டி நதி ⟷ மெக்சிகோ
- அட்லாண்டிக் பெருங்கடல் ⟷ பனாமா கால்வாய். (80 கி.மீ. நீளம்) ⟷ பசிபிக் பெருங்கடல்

- ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களையும் இணைக்கும் கால்வாய் - **பனாமா கால்வாய்**

www.kalvinews.com

**கண்டங்களும் அதன் உயரமான சிகரங்களும்**




## தென் அமெரிக்கா

- தென் அமெரிக்காவையும், வட அமெரிக்காவையும் இணைப்பது - பனாமா நிலச்சந்தி.
- இலத்தின் அமெரிக்கா - மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா. ஸ்பானியர்கள் மற்றும் போர்ச்சுகீசியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றின் காலனியாக ஆட்சி செய்யப்பட்டதால் இப்பெயர் பெறுகிறது.
- **பரவல்** - $12^0$ வ முதல் $55^0$ தெ அட்சக்கோடுகள் மற்றும் $35^0$ மே முதல் $81^0$ மே வரை தீர்க்கரேகை வரை
- அமேசான் ஆற்றின் முகத்துவாரத்தின் வழியாக செல்லும் ரேகை - பூமத்திய ரேகை
- தென் அமெரிக்காவின் வடிவம் - தலைகீழ் முக்கோண வடிவம்
- **இயற்கை அமைப்பு** - உலகின் பழைமையான மற்றும் இளைய பாறைகளால் ஆனது- தென் அமெரிக்கா
- **நிலத் தோற்றங்கள் - ஆண்டிஸ் மலைத் தொடர், ஆற்றுப் படுகை அல்லது மத்திய சமவெளிகள் மற்றும் கிழக்கு உயர் நிலங்கள்**
- உலகின் அடர்த்தியான காடுகளைக் கொண்ட பகுதி - அமேசான் ஆற்றுப்படுகை
- வண்டல் மண் படிவுகளைக் கொண்ட ஆற்றுச் சமவெளிகள் - பரானா,பராகுவே

www.kalvinews.com

- கரிசல் மண் பரப்பைக் கொண்ட ஆற்றுப்படுகை - அமேசான்
- பெட்ரோலிய படிவுகள் காணப்படும் பகுதி - பரானா,பராகுவே ஆற்றுச் சமவெளிகள்
- **அமைந்துள்ள கோளம்** - தெற்கு அரைக்கோளம்
- **மொத்த நிலப்பரப்பு** - 17,840,000 ச.கி.மீ(உலகின் பரப்பில் 15%)
- **மக்கள் தொகை:** 42.91 கோடி (உலகின் 5-வது இடம்)
- **செல்லும் முக்கிய அட்சம்:** பூமத்திய ரேகை, மகரரேகை($23^0$ $^1/_2$ வ)
- **முக்கிய நாடுகள்:** அர்ஜென்டினா, பொலிவியா, பிரேசில், சிலி, கொலம்பியா, ஈக்வடார், கயானா, பராகுவே, பெரு, சூரினாம்(மிக சிறிய நாடு), உருகுவே, வெனிசுலா
- **முக்கிய மலைத்தொடர்:** ஆண்டிஸ் மலைத்தொடர் (6440 கி.மீ நீளமானது) - மடிப்பு மலைகளால் ஆனது.
- கடோபாக்ஸி (5991 மீ) அமைந்துள்ள மலைத்தொடர்-ஆண்டிஸ் மலைத்தொடர்
- **உயரமான சிகரம்:** அகான்காகுவா சிகரம்(அர்ஜென்டினா) (6961 மீ)
- நிரந்தரமாக வசந்த காலம் கொண்ட நகரம்-குவிடோ
- தென் அமெரிக்காவின் கோடை காலம்-நவம்பர் முதல் ஜனவரி வரை
- தென் அமெரிக்காவின் பூமத்தியரேகை பகுதி தினமும் 4 மணி நேரம் மழை பெறுகிறது-
- கடிகார மழை என்பது வெப்பச்சலன மழையாகும்
- **முக்கிய ஆறுகள்:** அமேசான் (6450கி.மீ), பரானா, மெடிரா, பாகோடன்டிஸ், ஒரினாகோ
- **அமேசானின் கிளை ஆறுகள்:** டாபாஜோஸ், ரியோ, நீக்ரோ, மதீரா
- உலகின் மிகப்பெரிய நதி அமைப்பு கொண்டது-அமேசான் ஆறு
- ஆயிரக்கணக்கான கிளை நதிகளை கொண்ட ஆறு- அமேசான் ஆறு
- **சுற்றியுள்ள கடல்களும் பெருங்கடல்களும்** பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், கரீபியன் கடல், தென் பெருங்கடல்
- **உயரமான நீர்வீழ்ச்சி:** ஏஞ்சல் நீர்வீழ்ச்சி (உலகிலேயே உயரமானது)
- **முக்கிய உயர் நிலங்கள்:** கயானா, ப்ரேசிலியன்
- **முக்கிய பாலை வனங்கள்:** அட்டகாமா பாலைவனம், பாடகோனிய பாலைவனம்
- **முக்கிய தாவரங்கள்:** சீமைத்தேக்கு, கருங்காலி, ஈட்டி, கொய்னா, பனை, கியுபிராகோ, பைன், தேவதாரு, ஸ்பூரூஸ்
- **அடர்ந்த இலையுதிர் காடுகளைக் கொண்ட பகுதி** - கிரான்சாக்கோ
- **மோண்டானா என்பது ஆண்டிஸ் மலைச் சரிவுகளில் காணப்படும் காடுகள்**
- **எர்பா மேட் என்னும் மரத்தின் இலைகளைக் கொண்டு டீ (Tea) போன்ற ஒரு பானம் தயாரிக்கப்படுகிறது.**
- செல்வாஸ் (அமேசான் காடுகள்), ஆண்டிஸ் மலைச் சரிவுகள், கிழக்கு உயர் நிலங்கள், கிராண்சாக்கோ ஆகியவை தென் அமெரிக்காவில் உள்ள நான்கு இயற்கை தாவரப் பகுதிகள் ஆகும்.
- **குயினைன் என்பது மலேரியா நோயை குணப்படுத்தும் மருந்து.**
- **முக்கிய வனவிலங்குகள்:** லாமாஸ், அனகோண்டா, எறும்புதின்னி, அகூட்டி, அர்மாடிஸ்லோ, சின்சில்லா, சிலந்தி குரங்கு, ஆந்தை குரங்கு, அணில் குரங்கு,
- **முக்கிய பறவைகள்:** ரியா, ப்ரே, டுகான், மக்கவ், தேன்சிட்டு, பிளமிங்கோ, கிளிகன்,
- 1500 **க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் காணப்படுகின்றன.**

www.kalvinews.com

- காண்டோர் - மிகப் பெரிய பறவை
- பறக்க இயலாத பறவை - தீக்கோழி
- உலகில் மிகப்பெரிய பாம்பாக கருதப்படும் அனகோண்டா தென் அமெரிக்காவில் காணப்படுகிறது.
- **மீன்:** பிரன்ஹா(மாமிச உண்ணி) - இது அமேசான் நதியில் காணப்படுகிறது.
- **பலவகையான மீன்களின் மிகப்பெரிய அருங்காட்சியகம் உள்ள இடம்** - அமேசான்
- **முக்கிய பயிர்கள்:** கோதுமை, உருளைக்கிழங்கு சோளம், காபி, அரிசி, கொக்கோ, வாழை, பருத்தி, பார்லி, கம்பு, ஓட்ஸ்
- **உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடு** - வெனிசுலா
- **கனிம வளங்கள்:** இரும்புத்தாது, மாங்கனீசு, பெட்ரோலியம், தாமிரம், பாக்சைட்
- **முதன்மை மொழிகள்:** போர்ச்சுகீஸ், ஸ்பானிஷ், டச்சு, ஆங்கிலம், பிரெஞ்சு, ஹிந்தி
- **முக்கிய சமயங்கள்:** கிறிஸ்துவம், இஸ்லாம், இந்து
- **முக்கிய துறைமுகம்:** பைட்டா, கலாலோ
- **உலகின் நுரையீரல்:** அமேசான் காடுகள்
- **கோடாலி உடைப்பான்** - கியுபிராகோ (கடினமான மரம்)
- **கியூபிராகோ மரத்திலிருந்து டானின் தயாரிக்கப்படுகிறது.**
- **டானின் தோல் பதனிடப் பயன்படுகிறது.**
- **தென் கண்டம்** - தென் அமெரிக்கா
- **மோண்டானா** - ஊசியிலை மரக் காடுகள்
- **உலகின் காபி பானை** - பிரேசில்
- **தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் அதிகமாக சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாகத் திகழ்கிறது.**
- **தென் அமெரிக்காவின் முக்கியமான தோட்டப் பயிர்கள்: காபி, கொக்கோ**
- பார்லி - **புல் வகையைச் சேர்ந்த ஒரு முக்கிய உணவு**
- **ஓட்ஸ் - கால்நடைகளின் முக்கிய உணவு.**
- **எஸ்டான்சியா - பெரும் மேய்ச்சல் நிலம்**
- **இங்குள்ள க்ரயல்லோ** (Criollo) **என்ற வளர்ப்பு கால்நடைகள் ஆல்ஃபலாஃபா என்னும் புல் வகையை உண்டு வாழ்கின்றன.**
- **அர்ஜென்டினா, உலகின் முக்கிய இறைச்சி ஏற்றுமதியாளராகத் திகழ்கிறது.**
- **உலகில் இயற்கையாகத் தோன்றும் சோடியம் நைட்ரேட் படிவுகள் கிடைக்கும் ஒரே இடமாக தென் அமெரிக்கா உள்ளது. (சோடியம் நைட்ரேட் - வேளாண் தொழிலில் உரம் தயாரிக்கப் பயன்படுகிறது.)**
- **தாமிர சுரங்கம்: உலகின் மிகப்பெரிய தாமிரச் சுரங்கம் பெரு நாட்டில் அமைந்துள்ளது.**
- **தென் அமெரிக்காவின் தொழில்மயமாக்கப்பட்ட நாடு பிரேசில் ஆகும்.**
- **உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து நாடுகள்: பராகுவே, உருகுவே**
- **உலகில் சோளம் உற்பத்தியில், அர்ஜென்டினா முதலிடத்தில் உள்ளது.**
- **மெஸ்டிஜோ** - பூர்வகுடிமக்கள் மற்றும் ஐரோப்பியர்களின் கலப்பினம்
- **முலாடோ** - ஐரோப்பியர்கள் மற்றும் கருப்பர்களின் கலப்பினம்
- **ஸாம்போ** - பூர்வகுடிமக்கள் மற்றும் கருப்பர்களின் கலப்பினம்

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்**

1. "புதிய உலகு" என அழைக்கப்படும் கண்டங்களில் ஒன்று ______.
   (1) ஐரோப்பா (2) ஆசியா
   (3) வடஅமெரிக்கா (4) ஆப்பிரிக்கா

2. 1492ஆம் ஆண்டு வட அமெரிக்காவை ______ என்பவர் கண்டுபிடித்தார்
   (1) கிறிஸ்டோபர் கொலம்பஸ் (2) அமெரிக்கோ வெஸ்புகி
   (3) வாஸ்கோடகாமா (4) ஜோசப் வில்சன்

3. ஆசியா, ஆப்பிரிக்காவிற்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய கண்டம் ______.
   (1) ஆசியா (2) வடஅமெரிக்கா
   (3) ஐரோப்பா (4) ஆப்பிரிக்கா

4. வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைப்பது ______.
   (1) பேரிங் நீர்ச்சந்தி (2) பனாமா நிலச்சந்தி
   (3) மிஸிஸிப்பி (4) மிஸ்ஸௌரி

5. வட அமெரிக்காவை ஆசியாவில் இருந்து பிரிப்பது ______.
   (1) ஜிப்ரால்டர் நீர்சந்தி (2) பாக் நீர் சந்தி
   (3) பேரிங் நீர்ச்சந்தி (4) மலாக்கா நீர் சந்தி

6. கீழ்க்கண்ட வாக்கியங்களில் சரியானது எது?
   i. இரண்டு மிகப் பெரிய நிலப்பகுதிகளை இணைக்கும் சிறிய துண்டு நிலச்சந்தி
   ii. இரண்டு பெரிய நீர் பரப்புகளை இணைக்கும் சிறிய நீர்ப்பரப்பு நீர்ச்சந்தி
   (1) i மட்டும் சரி (2) ii மட்டும் சரி
   (3) i, ii இரண்டும் சரி (4) மேற்கண்ட எதுவுமில்லை

7. வட அமெரிக்கா ______ நேரமண்டலங்களை உள்ளடக்கியுள்ளது
   (1) 6 (2) 8 (3) 7 (4) 9

8. வட அமெரிக்காவில் உள்ள கிரேட் ஏரிகள் ______ முக்கிய ஏரிகளை கொண்டுள்ளது
   (1) 7 (2) 5 (3) 8 (4) 2

9. மெக்ஸிகோவிற்கு தென் பகுதியில் அமைந்துள்ள ______ நாடுகள் கொண்ட பகுதி மத்திய அமெரிக்கா என அழைக்கப்படுகிறது
   (1) 7 (2) 6 (3) 8 (4) 10

10. ______ பயிர் ஐரோப்பிய குடியேற்றங்களில் வட அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது
    (1) சோளம் (2) கம்பு (3) கரும்பு (4) கோதுமை

11. வட அமெரிக்காவின் பூர்வீக மக்களின் முக்கிய உணவுப் பயிர் ______.
    (1) சோளம் (2) கோதுமை (3) கம்பு (4) தினை

12. வட அமெரிக்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் ______ நன்கு விளைகின்றது
    (1) கோதுமை (2) பருத்தி (3) சோளம் (4) கம்பு

www.kalvinews.com

13. இயற்கை அமைப்பு பிரிவுகளில் மிகப்பெரிய பன்முகத் தன்மையை கொண்ட கண்டம் _______.
(1) ஆப்பிரிக்கா (2) அண்டார்டிகா
(3) ஆசியா (4) வட அமெரிக்கா

14. வட அமெரிக்கா கண்டத்தின் மிக ஆழமான பகுதி _______.
(1) மெக்கென்லீ (2) மரணப் பள்ளத்தாக்கு
(3) லாப்ரடார் (4) லாரன்ஷியன்

15. பூமியின் மிகவும் பழமையான மற்றும் இளமையான பாறைகள் கீழ்க்கண்டவற்றில் எங்குள்ளது?
(1) ராக்கி மலைகள் (2) மரண பள்ளத்தாக்கு
(3) ஆண்டிஸ் மலை (4) அகான்காகுவா

16. வட அமெரிக்காவில் ராக்கி மலைப்பகுதி அமைந்துள்ள திசை _______.
(1) வடக்கு (2) கிழக்கு (3) மேற்கு (4) தெற்கு

17. பசிபிக் நெருப்பு வளையத்தின் ஒரு பகுதி மற்றும் பல இயங்கும் எரிமலைகளைக் கொண்டுள்ள பகுதி _______.
(1) வின்சின் மாசிப் (2) கார்டில் லெராஸ்
(3) கிராண்ட் பேங்க் (4) அட்லாண்டா

18. அண்டார்டிகா கண்டத்தின் உயரமான சிகரம் _______.
(1) எவரெஸ்ட் (2) கிளிமஞ்சாரோ
(3) வின்சன்மாசிப் (4) காஸ்கியூஸ்கோ

19. அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் கொலராடோ ஆற்றினால் உருவாக்கப்பட்ட செங்குத்தான பக்கங்களைக் கொண்ட மிக ஆழமான பள்ளத்தாக்கு _______.
(1) கிராண்ட் கேன்யான் (2) கிராண்ட் பேங்க்
(3) மரணப் பள்ளத்தாக்கு (4) செல்வாஸ்

20. "பெரிய சேற்று ஆறு" என அழைக்கப்படுவது _______.
(1) மிஸ்செளரி ஆறு (2) மிஸிஸிப்பி ஆறு
(3) அமேசான் (4) நைல்

21. ஒன்டேரியோ ஏரியில் தன் பயணத்தை துவங்கி வடகிழக்காக பயணித்து அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கும் ஆறு ______
(1) மெக்கன்ஸி ஆறு (2) மிஸிஸிப்பி
(3) மிஸ்செளரி (4) புனித லாரன்ஸ்

22. ________ ஆறு ஆண்டின் எட்டு மாதங்களுக்கு உறைந்த நிலையிலேயே காணப்படுகிறது
(1) யூகான் (2) ரியோ கிரேன்டி
(3) அமேசான் (4) தாபாஜோஸ்

23. பனாமா கால்வாய் வெட்டப்பட்ட ஆண்டு _______.
(1) 1914 (2) 1913 (3) 1926 (4) 1941

www.kalvinews.com

24. பொருத்துக

| கண்டங்கள் | உயரமான சிகரங்கள் |
|---|---|
| i. வட அமெரிக்கா | - a. காஸ்கியூஸ்கோ |
| ii. ஆஸ்திரேலியா | - b. கிளிமஞ்சாரோ |
| iii. ஐரோப்பா | - c அகான்காகுவா |
| iv. ஆப்பிரிக்கா | - d. மெக்கென்லீ |
| | - e. எல்பரஸ் |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | a | b | c | d |
| (2) | d | c | b | e |
| (3) | a | d | b | e |
| (4) | d | a | e | b |

25. பனாமா கால்வாய் இணைக்கும் கடல்கள் _______.
(1) பசிபிக், ஆர்டிக் (2) அட்லாண்டிக், பசிபிக்
(3) இந்தியப்பெருங்கடல், சாக்கடல் (4) ஆர்டிக், லாப்ரடன் கடல்

26. உலகின் மிகப்பெரிய இரயில்வே முனையம் எங்கு உள்ளது?
(1) நியூயார்க் (2) சிக்காகோ (3) கனடா (4) மெக்சிகோ

27. வட மேற்கில் அலாஸ்காவையும், தெற்கில் பனமாவையும் இணைக்கும் சாலை _______.
(1) பான் அமெரிக்கன் நெடுஞ்சாலை (2) நியூயார்க் நெடுஞ்சாலை
(3) சிகாகோ சாலை (4) கனடா நெடுஞ்சாலை

28. "உருகும் பானை" என அழைக்கப்படுவது _______.
(1) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (2) வடஅமெரிக்கா
(3) கனடா (4) கிரீன்லாந்து

29. செயற்கை இழை தயாரிப்பில் உலகின் இரண்டாம் இடத்தை பெற்றுள்ள நாடு _______.
(1) மெக்ஸிகோ (2) ஆஸ்திரேலியா
(3) இந்தியா (4) வடஅமெரிக்கா

30. கனடாவிலுள்ள _______ இல் காகிதத் தொழிற்சாலைகள் அதிக அளவில் காணப்படுகின்றன
(1) உதா (2) நிவடா (3) ஒன்டாரியோ (4) கிகுபெக்

31. உலகின் மிகச்சிறந்த மீன்பிடி தளம் _______.
(1) கிராண்ட் பேங்க் (2) கடோபாக்ஸி (3) ஹம்போல்ட் (4) பெரு

32. வட அமெரிக்காவையும் ஆசியாவையும் _______ பிரிக்கிறது.
(1) பேரிங் நீர் சந்தி (2) பாக் நீர் சந்தி
(3) மலாக்கா நீர் சந்தி (4) ஜிப்ரால்டர் நீர் சந்தி

33. -----------------வட அமெரிக்காவின் நீளமான ஆறுகள் ஆகும்.
(1) மிஸிஸிப்பி மற்றும் மிஸ்ஸௌரி (2) மெக்கென்ஸி ஆறு
(3) புனித லாரன்சு ஆறு (4) கொலரடோ ஆறு

www.kalvinews.com

34. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

கூற்று : வட அமெரிக்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாநிலங்களில் பருத்தி நன்றாக வளருகிறது.

காரணம் : மழையுடன் கூடிய வெப்பமான கோடைகாலம் மற்றும் வளமான மண் ஆகியவை பருத்தி விளைவதற்கான ஏற்ற சூழல்களாக உள்ளன.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.

(2) கூற்று சரி, காரணம் தவறு.

(3) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

35. மரண பள்ளத்தாக்கு கடல் மட்டத்திலிருந்து _______ மீட்டர் ஆழத்தில் உள்ளது.

(1) 86 (2) 76 (3) 96 (4) 66

36. ராக்கி மலைத்தொடரும் கடற்கரை மலைத்தொடரும் மேற்கத்திய _______ என அழைக்கப்படுகின்றன.

(1) லாப்ரடார் (2) லாரன்ஷியன்

(3) அப்பலேஷியன் (4) கார்டில்லெராஸ்

37. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

கூற்று : அப்பலேஷியன் உயர் நிலங்கள் உயரம் குறைந்து காணப்படுகின்றன.

காரணம் : வானிலை சிதைவு காரணமாக மடிப்பு மலைகள் சிதைந்து , மேற்கு உயர் நிலங்களை விட உயரம் குறைந்து காணப்படுகின்றன

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.

(2) கூற்று சரி, காரணம் தவறு.

(3) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

38. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (i) மேற்கத்திய காற்றுகள் | - | a. | வால்வரின் |
| (ii) தூந்திர காடுகள் | - | b. | யூக்கா |
| (iii) டைகா | - | c. | எதிர் வர்த்தக காற்றுகள் |
| (iv) பாலைவன காடுகள் | - | d. | ஸ்புரூஸ் |

(1) (i) - c (ii) - b (iii) - d (iv) - a

(2) (i) - b (ii) - c (iii) - d (iv) - a

(3) (i) - b (ii) - c (iii) - a (iv) - d

(4) (i) - c (ii) - a (iii) - d (iv) - b

39. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

கூற்று (அ) : உலகின் மரக்கட்டை மொத்த உற்பத்தியில் சுமார் 20% வட அமெரிக்காவில் இருந்து வருகிறது.

கூற்று (ஆ) : வட அமெரிக்காவின் பிரெய்ரி புல்வெளி நிலங்களில் கோதுமை பெருமளவில் விளைவிக்கப்படுகிறது.

(1) கூற்று (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரி (2) கூற்று (அ) மற்றும் (ஆ) இரண்டும் தவறு

(3) கூற்று (அ) சரி ஆனால் (ஆ) தவறு (4) கூற்று (அ) தவறானது ஆனால் (ஆ) சரி

www.kalvinews.com

40. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

கூற்று (1): ஐரோப்பா , ஜப்பான் , சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் வட அமெரிக்காவின் முக்கிய வர்த்தக நாடுகளாகும்.

கூற்று (2) : பான் அமெரிக்கன் நெடுஞ்சாலை வட மேற்கில் அலாஸ்காவையும் , தெற்கில் கனடாவையும் இணைக்கிறது.

(1) கூற்று (1) மற்றும் (2) இரண்டும் சரி .

(2) கூற்று (1) மற்றும் (2) இரண்டும் தவறு.

(3) கூற்று (1) சரி ஆனால் (2) தவறு

(4) கூற்று(1) தவறானது ஆனால் (2) சரி.

41. செயற்கை இழைகள் மரக்கூழிலிருந்து கிடைக்கும் ----------------- மூலம் தயாரிக்கப்படுகிறது.

(1) செல்லுலோஸ் (2) ரப்பர் (3) தண்ணீர் (4) பசை

42. பொருத்துக

(i) இரும்புத்தாது - a. மெக்ஸிகோ

(ii) தங்கம் - b. மினசோட்டா

(iii) பெட்ரோலியம் - c. நிவடா

(iv) நிலக்கரி - d. பென்சில்வேனியா

(1) (i) - c (ii) - b (iii) - d (iv) - a

(2) (i) - b (ii) - c (iii) - d (iv) - a

(3) (i) - b (ii) - c (iii) - a (iv) - d

(4) (i) - c (ii) - a (iii) - d (iv) - b

43. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

கூற்று : கனடாவின் நியுபவுண்ட்லாந்து தீவுக்கு அருகில் அமைந்துள்ள கிராண்ட் பேங்க் உலகின் மிகச்சிறந்த மீன்பிடி தளமாகும்.

காரணம் : கல்ப் வெப்ப நீரோட்டமும், லாபரடார் குளிர் நீரோட்டமும் சந்தித்து கொள்வதால் மீன்கள் வளர்வதற்கான ஏற்ற சூழல் கிராண்ட் பேங்கில் உருவாகிறது.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

(3) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

4) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

44. கிரேட் ஏரிகளில் மிகப்பெரிய ஏரியானது _______.

(1) சுப்பீரியர் ஏரி 2) நன்னீர் ஏரி

(3) அதபாஸ்கா ஏரி (4) கிரேட் பேர் ஏரி

45. உலகின் சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படுவது _______.

(1) மெக்ஸிகோ (2) அமெரிக்கா (3) கனடா (4) கியூபா

www.kalvinews.com

46. பொருத்துக

(i) கோதுமை - a. ஹமில்டன் நகரம்

(ii) மிதவெப்ப மண்டல பயிர்கள் - b. பிரெய்ரி புல்வெளி

(iii) லாரன்ஸ் பள்ளத்தாக்கு - c. பார்லி மற்றும் ஓட்ஸ்

(iv) இரும்பு எஃகு தொழிற்சாலை - d. சிட்ரஸ் வகை பழங்கள்

(1) (i) - c (ii) - b (iii) - d (iv) - a

(2) (i) - b (ii) - a (iii) - d (iv) - b

(3) (i) - b (ii) - c (iii) - d (iv) - a

(4) (i) - c (ii) - a (iii) - d (iv) - b

47. பொருத்துக

(i) மெக்கென்லீ சிகரம் - a. பறக்க இயலாத பறவை

(ii) கிராண்ட் கேன்யான் - b. 6194 மீ

(iii) எபோனி - c. கொலரடோ ஆறு

(iv) ரியா - d. பூமத்தியரேகை பகுதி

(1) (i) - c (ii) - b (iii) - d (iv) - a

(2) (i) - b (ii) - a (iii) - d (iv) - b

(3) (i) - b (ii) - c (iii) - d (iv) - a

(4) (i) - c (ii) - a (iii) - d (iv) - b

48. வட அமெரிக்காவின் எல்லைகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

(1) மேற்கில் பசிபிக் பெருங்கடல் (2) கிழக்கில் ஆஸ்திரேலியா

(3) தெற்கில் தென் அமெரிக்கா (4) வடக்கில் ஆர்டிக் பெருங்கடல்

49. வட அமெரிக்காவின் ராக்கி மலைத்தொடரின் நீளம் _______.

(1) 480 கி.மீ (2) 110 கி.மீ (3) 4800 கி.மீ (4) 8848 மீ

50. கஸ்தூரி எருது காணப்படும் வட அமெரிக்க காடுகள் _______.

(1) தூந்திர காடுகள் (2) பாலைவன காடுகள்

(3) குளிர்ந்த மிதவெப்ப இலையுதிர்காடுகள் (4) மழைக்காடுகள்

தென் அமெரிக்கா - வினாக்கள்

51. உலகின் நான்காவது பெரிய கண்டம் _______.

(1) வட அமெரிக்கா (2) தென் அமெரிக்கா

(3) ரஷ்யா (4) சீனா

52. மத்திய அமெரிக்காவுடன் இணைத்து தென் அமெரிக்கா _______ என்று அழைக்கப்படுகிறது.

(1) லத்தீன் அமெரிக்கா (2) நன்னம்பிக்கை முனை

(3) தீவுகள் (4) குன்றுகள்

53. தென் அமெரிக்காவையும், வட அமெரிக்காவையும் இணைப்பது _______.

(1) குமரி முனை (2) சூயஸ்கால்வாய்

(3) பனாமா நிலச்சந்தி (4) சன் ஜார்ஜ் வளைகுடா

www.kalvinews.com

54. அமேசான் ஆற்றின் முகத்துவாரத்தின் வழியாக செல்லும் ரேகை _______.
(1) பூமத்திய ரேகை
(2) அட்சரேகை
(3) தீர்க்கரேகை
(4) கடகரேகை

55. தலைகீழ் முக்கோண வடிவிலான நிலப்பகுதி _______.
(1) வடஅமெரிக்கா
(2) இந்தியா
(3) ஆஸ்திரேலியா
(4) தென் அமெரிக்கா

56. தென் அமெரிக்கா உலகின் மொத்த நிலப்பரப்பின் சதவீதம் _______.
(1) 10%
(2) 15%
(3) 4%
(4) 18%

57. உலகின் பழமையான மற்றும் இளைய பாறைகளால் ஆனப் பகுதி _______.
(1) இந்தியா
(2) வடஅமெரிக்கா
(3) தென் அமெரிக்கா
(4) பாகிஸ்தான்

58. இமயமலையை போன்ற மடிப்பு மலைகளால் ஆன மலைத்தொடர் _______.
(1) பனாமா நிலச்சந்தி
(2) கிரிப்ஸ் மலைத்தொடர்
(3) ஆல்ப்ஸ் மலைத்தொடர்
(4) ஆண்டஸ் மலைத்தொடர்

59. உலகின் மிக நீண்ட மலைத்தொடர் _______.
(1) ஆண்டஸ் மலைத்தொடர்
(2) கிரிப்ஸ் மலைத்தொடர்
(3) சூயஸ்கால்வாய்
(4) இமயமலை

60. ஆண்டிஸ் மலைத்தொடரின் நீளம் _______.
(1) 6410 கி.மீ
(2) 6440 கி.மீ
(3) 5440 கி.மீ
(4) 6450 கி.மீ

61. ஆண்டிஸ் மலைத்தொடரில் மிக உயர்ந்த சிகரம் _______.
(1) அகான்காகுவா
(2) கிரிப்ஸ்
(3) அமேசான்
(4) மிசிசிபி

62. ஆண்டிஸ் மலைத்தொடரில் சீரும் மலைத்தொடரின் பெயர் _______.
(1) அகான்காகுவா
(2) கடோபாக்ஸி
(3) சிலி
(4) டாப்ஸி

63. பின்வரும் ஆண்டிஸ் மலைத்தொடரினைப் பற்றிய கருத்துக்களில் தவறான கூற்று எது?
(1) நிலநடுக்கம், எரிமலை வெடிப்புகள் அடிக்கடி ஏற்படுகின்றன
(2) தாமிரம், தகரம், மரகதம் போன்ற உலோகங்கள் கிடைக்கின்றன
(3) இது உலகின் மிக குறுகிய மலைத்தொடர் ஆகும்
(4) இது மடிப்பு மலைகளில் ஒன்று

64. அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கும் மிகப்பெரிய ஆறு _______.
(1) அமேசான் ஆறு
(2) மிசிசிபி
(3) டாப்ஸி
(4) சிலி

65. அமேசான் ஆற்றுப்படுகையில் காணப்படும் மண் வகை _______.
(1) வண்டல் மண்
(2) செம்மண்
(3) சரளைமண்
(4) கரிசல் மண்

66. கயானா உயர்நிலங்களில் காணப்படும் மிக உயரமான நீர்வீழ்ச்சி எது _______.
(1) ஏஞ்சல்
(2) கிரிப்ஸ்
(3) சிலி
(4) கடோபாக்ஸி

www.kalvinews.com

67. கிழக்கு கடற்கரையிலுள்ள செங்குத்தான பாறைகளை கொண்ட நிலப்பகுதி _______.
(1) பராகுவே (2) டார்ஜிலிங் (3) ப்ரேசிலியன் (4) ஏஞ்சல்

68. தென் அமெரிக்காவில், நிரந்தரமான வசந்த காலத்தை அனுபவிக்கும் நகரம் _______.
(1) பராகுவே (2) ப்ரேசிலியன் (3) ஏஞ்சல் (4) குவிடோ

69. தென் அமெரிக்காவில் கோடைக்காலம் _______.
(1) நவம்பர் முதல் ஜனவரி (2) ஜனவரி முதல் மார்ச்
(3) மே முதல் ஜுலை (4) ஜுலை முதல் செப்டம்பர்

70. தினந்தோறும் 4 மணி நேரம் மழைபெறும் பகுதி _______.
(1) கடகரேகை (2) பூமத்தியரேகை (3) மகரரேகை (4) தீர்க்க ரேகை

71. வெப்பச்சலன மழைக்கு மறுபெயர் _______.
(1) புயல் (2) சூறாவளி (3) திடீர் மழை (4) கடிகார மழை

72. தென் அமெரிக்காவின் மிக நீண்ட ஆறு _______.
(1) ஏஞ்சல் (2) டார்ஜிலிங் (3) அமேசான் ஆறு (4) குவிடோ

73. அமேசான் ஆற்றின் நீளம் _______.
(1) 6350 கி.மீ (2) 6450 கி.மீ (3) 6250 கி.மீ (4) 6425 கி.மீ

74. ஆயிரக்கணக்கான கிளை நதிகளை கொண்ட ஆறு _______.
(1) அமேசான் (2) காவேரி (3) ஏஞ்சல் (4) குவிடோ

75. உலகின் மிகப்பெரிய வடிகால் அமைப்பு _______.
(1) சிலி (2) அமேசான் (3) டார்ஜிலிங் (4) கங்கை

76. இயற்கை தாவர பகுதிகள் _______ என அழைக்கப்படுகிறது
(1) பூந்தோட்டம் (2) ஆறுகள் (3) நதிகள் (4) செல்வாஸ்

77. கீழ்கண்டவற்றில் எது அமேசான் காடுகளின் தவறான கூற்று?
(1) இது உலகின் நுரையீரல் என அழைக்கப்படுகிறது
(2) உலகின் மிகப்பெரிய காடுகளில் இதுவும் ஒன்று
(3) இது கடக ரேகை பகுதியில் காணப்படுகிறது
(4) இங்கு கடினமான மரங்கள் வளர்கின்றன

78. மலேரியாவிற்கு மருந்து தயாரிக்கப்பயன்படும் மரம் _______.
(1) கியூனைன் (2) ஈட்டி (3) கொய்னா (4) பனை

79. _______ மரத்தின் இலைகளை கொண்டு டீ பானத்தை தயாரிக்காலம்.
(1) ஈட்டி (2) கியூனைன் (3) எர்பாமேட் (4) கொய்னா

80. தென் அமெரிக்காவின் அடர்ந்த இலையுதிர் காடுகளை கொண்ட பகுதி _______.
(1) கிரான்சாக்கோ (2) ஏஞ்சல் (3) குவிகுடா (4) பராகுவே

81. இலையுதிர் காடுகளில் காணப்படும் மிக கடினமான மரம் _______.
(1) தேக்கு (2) பைன் (3) கொய்னா (4) கியூபிராகோ

www.kalvinews.com

82. கோடாலி உடைப்பான் என பெயர் கொண்ட மரம் _______.

(1) கொய்னா (2) கியூபிராகோ (3) தேக்கு (4) பைன்

83. கியூபிராகோ மரத்திலிருந்து தயாரிக்கப்படும் டானின் _______ பதனிட பயன்படுகிறது.

(1) உரம் (2) மண் (3) தோல் (4) இலை

84. ஆண்டஸ் மலைச்சரிவுகளில் காணப்படும் காடுகள் _______ என அழைக்கப்படுகிறது.

(1) ஸ்பூருஸ் (2) மோண்டானா (3) ஆல்ப்ஸ் (4) ஊசியிலை

85. பொருத்துக

i. செல்வாஸ் - 1. மோண்டானா

ii. காகிதம், காகித கூழ் - 2. குயினைன் மருந்து

iii. டானின் - 3. இயற்கை தாவர பகுதி

iv. ஈட்டி மரப்பட்டை - 4. தோல் பதனிடுதல்

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | 3 | 2 | 4 | 1 |
| (2) | 3 | 1 | 4 | 2 |
| (3) | 3 | 1 | 2 | 4 |
| (4) | 1 | 4 | 2 | 3 |

86. அமேசான் நதி படுகையில் காணப்படும் மிகப்பெரிய பறவை _______.

(1) கான்டோர் (2) கிளி (3) தேன் (4) சிட்டுக்குருவி

87. உலகின் மிகப்பெரிய பாம்பு இனம் எது _______.

(1) நாகப்பாம்பு (2) சாரைப்பாம்பு (3) மலைப்பாம்பு (4) அனகோண்டா

88. தென் அமெரிக்காவின் சிறப்பு பெற்ற விலங்கு இனம் _______.

(1) புலி (2) காட்டெருமை (3) லாமாஸ் (4) சிங்கம்

89. _______ மீன் கடுமையான மாமிச உண்ணி வகையைச் சார்ந்தது.

(1) ரோகு (2) கட்லா (3) பிரன்ஹா (4) சுறா

90. பொருத்துக

i. பூமத்திய ரேகை - 1. கலைமான்

ii. மிதவெப்ப மண்டல காடுகள் - 2. சிலந்தி, குரங்கு

iii. பாம்பாஸ் புல்வெளி - 3. முதலை மற்றும் கிளி

iv. சவானா புல்வெளி - 4. முள்ளம்பன்றி

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | 3 | 4 | 1 | 2 |
| (2) | 3 | 1 | 4 | 2 |
| (3) | 4 | 1 | 3 | 2 |
| (4) | 3 | 4 | 1 | 2 |

www.kalvinews.com

91. கீழ்கண்டவற்றில் எது தவறான கூற்று?
(1) பாம்பாஸ் புல்வெளி - குட்டையான புற்கள்
(2) சவானா புல்வெளி - மர பாசிகள்
(3) மத்திய தரைக் காடுகள் - கருவேல மரம்
(4) பூமத்திய ரேகை காடுகள் - ரப்பர், சீமைத்தேக்கு

92. அர்ஜென்டினாவின் ________ பகுதியில் கோதுமை அதிக அளவில் பயிரிடப்படுகிறது
(1) பாம்பாஸ் (2) பிராகுவே (3) சிலி (4) மத்திய பகுதி

93. உலகின் முக்கிய கோதுமை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளராக விளங்குவது _______.
(1) ஆந்திரா (2) ஆஸ்திரேலியா (3) வடஅமெரிக்கா (4) அர்ஜென்டினா

94. கரும்பு பயிரை மேற்கிந்திய தீவுகளுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் _______.
(1) சுல்தானியர்கள் (2) டச்சுக்காரர்கள் (3) போர்ச்சுகீசியர்கள் (4) அரேபியர்கள்

95. தென் அமெரிக்காவில் அதிகளவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாகத் திகழ்வது _______.
(1) டென்மார்க் (2) அர்ஜென்டினா (3) பிராகுவே (4) பிரேசில்

96. மழை பெய்யும் கோடை காலமும், வெப்பக் காலநிலையும் ________ உற்பத்திக்கு ஏற்றது
(1) கரும்பு (2) நெல் (3) சோளம் (4) கோதுமை

97. சோளம் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முதன்மை நாடாக விளங்குவது _______.
(1) அர்ஜென்டினா (2) பிரேசில் (3) இந்தியா (4) ரஷ்யா

98. அதிக வெப்பநிலையும், அடிக்கடி மழைபொழிவும் தேவைப்படும் பயிர் வகை _______.
(1) பருத்தி (2) காப்பி மற்றும் கொக்கோ
(3) நெல் (4) கோதுமை

99. காப்பி மற்றும் கொக்கோ _______ மண்ணில் நன்கு விளைகின்றன
(1) செம்மண் (2) வண்டல்மண் (3) சரளை மண் (4) மணல்

100. பிரேசில் _______ உற்பத்தியில் உலகில் முதலிடம் பெறுகிறது
(1) நெல் (2) காபி (3) தேயிலை (4) மரங்கள்

101. கொக்கோ உற்பத்தியில் மூன்றாம் இடத்தை பிடிக்கும் நாடு _______.
(1) ஜெர்மனி (2) இத்தாலி (3) அர்ஜெண்டினா (4) பிரேசில்

102. உலகின் காபி பானை என்ற சிறப்பு பெயர் பெற்ற நாடு _______.
(1) அர்ஜெண்டினா (2) பிரேசில் (3) ஜெர்மனி (4) ரஷ்யா

103. தென் அமெரிக்காவின் முக்கியமான பணப்பயிர் _______.
(1) கோதுமை (2) பருத்தி (3) கம்பு (4) நெல்

104. வெப்ப காலநிலையும், அதிக மழை பொழிவும் தேவைப்படும் பயிர் வகை _______.
(1) கரும்பு (2) சணல் (3) நெல் (4) பருத்தி

105. மித வெப்ப மண்டல காலநிலையில் நன்கு வளரும் பயிர் எது _______.
(1) பார்லி (2) கம்பு (3) சோளம் (4) நெல்

www.kalvinews.com

106. பல்வேறு நாடுகளில் கால்நடைகளின் முக்கியமான உணவாக கருதப்படுவது _______.

(1) கம்பு (2) பார்லி (3) ஓட்ஸ் (4) நெல்

107. அர்ஜென்டினாவில் இறைச்சிக்காக கால்நடைகள் வளர்க்கப் பயன்படும் இடம் _______.

(1) ஈக்வடார் (2) பெரு (3) லானோஸ் (4) பாம்பாஸ்

108. தென் அமெரிக்காவின் _______ பகுதியில் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன

(1) மேடான (2) பள்ளமான (3) குழியான (4) வறண்ட

109. கால்நடைகள் வளரும் பெரும் புல்வெளிப் பகுதி _______ என அழைக்கப்படுகிறது

(1) எஸ்டான்சியாஸ் (2) க்ரயல்லோ (3) பெரு (4) சமவெளி

110. வெப்பமண்டல மீன் வகைகளின் மிகப்பெரிய உற்பத்தியாளராக விளங்குவது _______.

(1) சிலி (2) பிரேசில் (3) அர்ஜென்டினா (4) பெரு

111. மீன்பிடி துறைமுகங்களில் மிகவும் முக்கியமானது _______.

(1) பிரேசில் (2) பைட்டா கலாலோ (3) அர்ஜென்டினா (4) ஸ்பெயின்

112. பல வகையான மீன்களின் மிகப்பெரிய அருங்காட்சியகம் எது _______.

(1) அமேசான் (2) பெரு (3) சிலி (4) அர்ஜென்டினா

113. உலகின் சோடியம் நைட்ரேட் படிவுகள் கிடைக்கும் ஒரே இடம் _______.

(1) தென் அமெரிக்கா (2) வட அமெரிக்கா (3) சீனா (4) ரஷ்யா

114. உலகின் இரும்புதாது ஏற்றுமதியில் _______ சதவீதம் பிரேசில் கொண்டுள்ளது

(1) 10% (2) 25% (3) 5% (4) 15%

115. உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடு _______

(1) பிரேசில் (2) வெனிசுலா (3) ஜெர்மன் (4) அமெரிக்கா

116. தாமிரம் உற்பத்தியில் சிலி - யின் இடம் _______.

(1) முதல் (2) மூன்று (3) இரண்டு (4) 10 வது

117. சிலி நாட்டில் உற்பத்தியாகும் தாமிரத்தின் சதவீதம் _______.

(1) 10% (2) 20% (3) 40% (4) 30%

118. பாக்சைட் உற்பத்தியில் மூன்றாவது இடம் வகிக்கும் நாடு _______.

(1) பிரேசில் (2) வெனிசுலா (3) அர்ஜென்டினா (4) ஜெர்மனி

119. உலகின் முக்கியமான பாக்சைட் சுரங்கம் _______ நதியில் அமைந்துள்ளது

(1) அமேசான் (2) பள்ளத்தாக்கு (3) வெனிசுலா (4) அர்ஜென்டினா

120. அலுமினியம் உற்பத்திக்கு மூலப்பொருளாக விளங்குவது _______.

(1) இரும்பு (2) தாமிரம் (3) வெள்ளி (4) பாக்சைட்

www.kalvinews.com

121. பொருத்துக

i. பிரேசில் - a. கம்பளி ஆடைகள்

ii. சிலி - b. ரசாயன உரம்

iii. பெரு - c. தாமிரம் உருக்குதல்

iv. வெனிசுலா - d. பருத்தி ஆடை

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | d | c | a | b |
| (2) | d | a | c | b |
| (3) | c | d | b | a |
| (4) | b | d | a | c |

122. தென் அமெரிக்காவின் பெரும்பாலான மக்கள் _______ நூற்றாண்டில் வருகை புரிந்தனர்

(1) 10 ஆவது (2) 15 ஆவது (3) 18 ஆவது (4) 11 ஆவது

123. பூர்வகுடி மக்கள் மற்றும் ஐரோப்பியர்களின் கலப்பினம் _______ என அழைக்கப்படுகிறது

(1) மெஸ்டிஜோ (2) முலாடா (3) ஸ்பெயினர் (4) ரியோ

124. ஐரோப்பியர் மற்றும் கருப்பர்களின் கலப்பினம் _______ என அழைக்கப்படுகிறது.

(1) மெஸ்டிஜோ (2) முலாடா (3) ஸ்பைனிஷ் (4) ரியோ

125. தென் அமெரிக்காவின் தற்போதைய மக்கள் தொகை _______.

(1) 42.1 கோடி (2) 42.16 கோடி (3) 42.91 கோடி (4) 42.90 கோடி

126. உலகின் மக்கள் தொகையில் தென் அமெரிக்காவின் இடம் _______.

(1) 2 ஆவது (2) 4 ஆவது (3) 3 ஆவது (4) 5 ஆவது

127. தென் அமெரிக்காவின் பிரதான சமயம் எது _______.

(1) இந்து (2) கிறிஸ்துவம் (3) முஸ்லிம் (4) உருது

128. தென் அமெரிக்காவின் மிகச்சிறிய நாடு _______.

(1) சிலி (2) கொலம்பியா (3) ஈக்வடார் (4) சுரிநாம்

129. தென் அமெரிக்காவின் மிகப்பெரிய ஏரி _______.

(1) மராகாய்போ (2) மெடிரா (3) பரானா (4) அமேசான்

130. தென் அமெரிக்காவின் முக்கிய பாலைவனம் _______.

(1) கிரேட் பேசின் (2) மோஜாவே (3) படகோனியா (4) சொனோரான்

www.kalvinews.com

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (3) | 26 | (2) | 51 | (2) | 76 | (4) | 101 | (4) | 126 | (4) |
| 2 | (1) | 27 | (1) | 52 | (1) | 77 | (3) | 102 | (2) | 127 | (2) |
| 3 | (2) | 28 | (1) | 53 | (3) | 78 | (1) | 103 | (2) | 128 | (4) |
| 4 | (2) | 29 | (4) | 54 | (1) | 79 | (3) | 104 | (4) | 129 | (1) |
| 5 | (3) | 30 | (3) | 55 | (4) | 80 | (1) | 105 | (1) | 130 | (3) |
| 6 | (3) | 31 | (1) | 56 | (2) | 81 | (4) | 106 | (3) | | |
| 7 | (3) | 32 | (1) | 57 | (3) | 82 | (2) | 107 | (4) | | |
| 8 | (2) | 33 | (1) | 58 | (4) | 83 | (3) | 108 | (4) | | |
| 9 | (1) | 34 | (1) | 59 | (1) | 84 | (2) | 109 | (1) | | |
| 10 | (4) | 35 | (1) | 60 | (2) | 85 | (2) | 110 | (4) | | |
| 11 | (1) | 36 | (4) | 61 | (1) | 86 | (1) | 111 | (2) | | |
| 12 | (2) | 37 | (1) | 62 | (2) | 87 | (4) | 112 | (1) | | |
| 13 | (4) | 38 | (4) | 63 | (3) | 88 | (3) | 113 | (1) | | |
| 14 | (2) | 39 | (1) | 64 | (1) | 89 | (3) | 114 | (4) | | |
| 15 | (2) | 40 | (3) | 65 | (4) | 90 | (1) | 115 | (2) | | |
| 16 | (3) | 41 | (1) | 66 | (1) | 91 | (2) | 116 | (3) | | |
| 17 | (2) | 42 | (3) | 67 | (3) | 92 | (1) | 117 | (2) | | |
| 18 | (3) | 43 | (1) | 68 | (4) | 93 | (4) | 118 | (1) | | |
| 19 | (1) | 44 | (1) | 69 | (1) | 94 | (3) | 119 | (1) | | |
| 20 | (2) | 45 | (4) | 70 | (2) | 95 | (4) | 120 | (4) | | |
| 21 | (4) | 46 | (3) | 71 | (4) | 96 | (3) | 121 | (3) | | |
| 22 | (1) | 47 | (3) | 72 | (3) | 97 | (1) | 122 | (2) | | |
| 23 | (1) | 48 | (2) | 73 | (2) | 98 | (2) | 123 | (1) | | |
| 24 | (4) | 49 | (3) | 74 | (1) | 99 | (1) | 124 | (2) | | |
| 25 | (2) | 50 | (3) | 75 | (2) | 100 | (2) | 125 | (3) | | |

www.kalvinews.com

வகுப்பு - 7 - பருவம் - 3 - புவியியல்

## 2. நிலவரைபடத்தை கற்றறிதல்


தொகுப்பு:
திரு.ம.செல்வராஜ், M.Sc., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),
அரசு உயர்நிலைப்பள்ளி,
அரசம்பாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

மேம்பாடு:
முனைவர் திரு.இரா.பிறாங்கிளின் ரிச்சர்ட், Ph.D
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கீழச்செல்வனூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.


### முக்கிய குறிப்புகள்

**அறிமுகம்:**

- நிலவரைபடங்கள் கடந்த காலத்தினைப் பதிவு செய்தலாக இருக்க வேண்டும். இவை கடந்த காலத்தினைப் புரிந்து கொள்ளவும் எதிர்காலத்தினைப் உணரவும் வழிவகை செய்யவேண்டும்.
- நிலவரைபடங்கள் புவியியல் எல்லைகளின் பண்புகளைக் குறித்து தெளிவாகக் காட்டுகிறது. அனைத்து நாடுகள் மற்றும் கண்டங்களின் அளவு மற்றும் வடிவத்தினை புரிந்துகொள்ள உதவுகிறது.

**நிலவரைபடங்கள்:**

- புவியியலாளர்களின் ஒரு முக்கியக் கருவியாக நிலவரைபடம் இருக்கிறது. நிலவரைபடம் என்பது புவியின் முழு பகுதி அல்லது ஒரு பகுதியின் காட்சியினை ஒரு தட்டையான மேற்பரப்பில் கொடுக்கப்பட்டுள்ள அளவையில் வரைவது.
- நிலவரைபடங்கள் சுருட்டியோ அல்லது மடித்தோ கையில் எடுத்துச் செல்வதற்கும், கணினியில் சேமித்து வைப்பதற்கும் எளிமையானது.
- முற்காலத்தில் விலங்குகளின் தோல், பாப்பிரஸ் (Papyrus - ஓலை நாணல்), துணிகள், ஈரநிலம் மற்றும் களிமண் பலகைகள் நிலவரைபடங்கள் தயாரிக்க பயன்படுததப்பட்டன.

**நிலவரைபடங்களின் வகைகள்:**

- **அளவை அடிப்படையில்** : பெரிய அளவை, சிறிய அளவை.
- **கருத்து அடிப்படையில்** : இயற்கை அமைப்பு, கலாச்சார அமைப்பு.

**அளவையின் அடிப்படையிலான நிலவரைபடங்கள்:**

- **பெரிய அளவை:** குறுகிய பரப்பளவிலான இடங்களைப் பற்றி அதிக தகவல்களை தரக்கூடியது.
- **நில அளவைப் படங்கள்:** கிராமம் மற்றும் நகரங்களின் வரைபடமாகும். இது நிலம் மற்றும் வீடு இருப்பிடம் குறித்து விளக்குகின்றன.
- **தல வரைபடம்:** சிறிய பரப்பளவு குறித்து அதிக விவரங்களைத் தருவனவாகும். இது சர்வே ஆப் இந்தியா மூலம் தயாரிக்கப்படுகிறது.

**சிறிய அளவை வரைபடங்கள்:** கண்டங்கள் அல்லது நாடுகள் போன்ற பெரிய அளவிலான பகுதிகளை சிறிய அளவுகளை கொண்டு வரையப்படுவது ஆகும். இவ்வகை வரைபடம் 1 செ.மீ = 1000 கி.மீ ஆகும்.

www.kalvinews.com

**சுவர் வரைபடங்கள்:** அதிக பரப்பளவை காட்டும் சிறிய அளவை படங்களாகும். இது பள்ளி மற்றும் அலுவலகங்களிலும் பயன்படுகிறது.

**நிலவரைபட நூல் (அட்லஸ்):** பல வகையான நிலவரைபடங்களின் தொகுப்பு புத்தகம் ஆகும். புவியியல் கூறுகள் குறித்து அறிந்துகொள்ள உதவுகிறது.

- நிலவரைபடத்தை உருவாக்கும் அறிவியல் கார்ட்டோகிராபி (Cartography) எனப்படும். கார்டே(Carte) என்பது நிலவரைபடம். கிராபிக் (grahphic) என்பது வரைதல். நிலவரைபடத்தை வரைந்து உருவாக்குபவர் கார்டோகிராபர் (Cartographer) ஆவர்.

**நிலவரைபட நூலின் வகைகள்:**

- **பள்ளி நிலவரைபட நூல்:** வீடு மற்றும் நாடுகள் குறித்து போதுமான விவரம் கொண்ட வரைபடங்கள் உள்ளன.
- **மேம்படுத்தப்பட்ட நிலவரைபடநூல்:** கண்டங்களின் சிறிய பகுதி பற்றி அதிக விவரங்கள் தரக்கூடியது.
- **பிராந்திய நிலவரைபட நூல்:** சிறிய பகுதி பற்றி அதிக தகவல்களை தரக்கூடியது. வட்டார திட்டமிடுதலுக்கு உதவுகிறது.
- **தேசிய நிலவரைபட நூல்:** நாடுகள் குறித்த விவரங்களை உள்ளடக்கியது. பெரிய அளவையுடன் இரு நாட்டின் புவியியல் கூறுகள் குறித்தும் விளக்குகிறது.

**கருத்து அடிப்படையிலான நிலவரைபடங்கள்:**

- **இயற்கை அமைப்பு:** நிலத்தோற்றம், மண், வடிகால், வானிலை கூறுகள் மற்றும் தாவரங்கள் போன்ற இயற்கை அமைப்புகளைக் காட்டுகிறது.
- **நிலத்தோற்ற வரைபடம்**: மலைகள், சமவெளிகள், பீடபூமி, நதிகள் மற்றும் பள்ளத்தாக்குகள்.
- **புவியியல் வரைபடம்:** புவியியல் கட்டமைப்புகள், பாறைகள் மற்றும் தாதுக்கள்.
- **காலநிலை வரைபடம்:** வெப்பநிலை, மழையளவு, மேகமூட்டம், காற்று வீசும் திசை, வேகம் மற்றும் ஒப்பு ஈரப்பதம்.
- **மண் வரைபடங்கள்:** வெவ்வேறு வகையான மண் மற்றும் அதன் பண்புகள்.
- **கலாச்சார நிலவரைபடம்:** மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்புகளைக் காட்டுவது.
- **அரசியல் வரைபடம்:** ஒரு நாட்டின் மாநில நிர்வாக பிரிவுகளைக் காட்டுவதாகும். இது திட்டமிடல் மற்றும் நிர்வாகத்தை எளிதாக்க உதவுகிறது.
- **மக்கள் தொகை நிலவரைபடம்:** மக்கள் தொகை பரவல், அடர்த்தி மற்றும் வளர்ச்சி, வேலைவாய்ப்பு அமைப்பு மற்றும் படித்தோர் குறித்துக்காட்டுவது ஆகும்.
- **பொருளாதார வரைபடங்கள்:** தாதுக்கள், தொழிற்சாலை அமைவிடங்கள், பயிர்வகைகள், வாணிப வழிகள், பொருள்களை எடுத்து செல்லும் வழிகள் பற்றி காட்டுகின்றன.
- **போக்குவரத்து வரைபடங்கள்:** சாலைகள், இருப்புப்பாதை, துறைமுகம், இரயில்வே நிலையம், விமான நிலையம் போன்றவற்றைக் காட்டுகின்றன.
- **கருத்து வரைபடங்கள்:** ஒரு குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் வரைவதாகும்.
- **மின்னணு வரைபடங்கள்:** உலகம் முழுவதும் உள்ள புவியியல் பகுதிகள் மற்றும் தலம் குறித்த அதிக தகவல் வழங்கும் வலைதளமாகும்.

**நிலவரைபடத்தின் முக்கிய கூறுகள் :**

- தலைப்பு, திசை, அளவை, குறிப்பு அல்லது சின்னங்களின் விளக்கங்கள் போன்றவை ஆகும்.
- **தலைப்பு:** ஒவ்வொரு நிலவரைபடமும் தலைப்பை விவரிக்க வேண்டும். எ.கா. இந்திய நதிகள்

www.kalvinews.com

- **திசைகள்:** வரைபடங்கள் வடக்கு (N) நோக்கிய நிலையில் வரையப்படுகிறது. முதன்மையான திசைகள் வடக்கு, தெற்கு, கிழக்கு, மற்றும் மேற்கு.
- **அளவை:** நிலவரைபடத்தில் இரண்டு இடங்களுக்கிடையே உள்ள தூரத்திற்கும் நிலத்தில் அதே இரண்டு இடங்களுக்கிடையேயுள்ள தூரத்திற்கும் உள்ள விகிதம் ஆகும். எ.கா. 1செ.மீ = 1 கி.மீ.
- **குறிப்பு:** நிலவரைபபடத்தில் வேறுபட்ட இயற்கை மற்றும் கலாச்சார அம்சங்களைக் காட்ட பயன்படுத்தப்பட்ட சின்னங்கள் மற்றும் குறியீடுகளைக் குறித்து விளக்குவதாகும். நிலவரைபட குறியீடுகள் தேசிய அளவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. இவை மரபுக் குறியீடுகளின் சின்னங்கள் என அழைக்கப்படுகின்றன.

| நிறங்கள் | அமைப்புகள் |
|---|---|
| வெள்ளை | பனி |
| மஞ்சள் | விவசாயம் |
| பச்சை | காடுகள் |
| நீலம் | நீர்நிலைகள் |
| பழுப்பு | மலை, குன்று மற்றும் சம உயரக்கோடு |
| சிவப்பு | குடியிருப்புகள் |
| கருப்பு | இரயில் பாதை |

**முறைக்குறிகளும் குறியீடுகளும்:**

- நிலவரைபடத்தில் புவிக்கூறுகளை, முறைக்குறிகள் மற்றும் குறியீடுகளாக காட்டப்படுகின்றன. இவை கோட்டுக் குறியீடுகள் அல்லது நிறங்கள் மூலம் காட்டப்படுகிறது. இக்குறியீடுகளை இந்திய நில அளவைத் துறையானது தயாரித்துள்ளது. எ.கா. PO - தபால் நிலையம், TO - தந்தி நிலையம்.

**நிலவரைபடத்தின் பயன்கள்:**

- நிலவரைபடங்கள் இராணுவத்தின் திட்டமிடுதலுக்கும், வானிலை முன்னறிவிப்புக்கும் பயன்படுகிறது.
- விமானங்கள் குறிப்பிட்ட இடத்தை சேரவும், கப்பல் கடலில் பாதுகாப்பாக செல்லவும் உதவுகின்றது.
- ஒரு இடத்தை நேரில் பார்க்காமல் அவ்விடம் பற்றிய தகவல்களை அறிய உதவுகிறது.

**நிலவரைபடம் மற்றும் புவி மாதிரிக்கு இடையேயுள்ள வேறுபாடுகள்:**

| நிலவரைபடம் | புவிமாதிரி |
|---|---|
| புவியின் இரு பரிமாண அமைப்பு | புவியின் முப்பரிமாண அமைப்பு |
| சிறிய மற்றும் பெரிய பரப்பளவைக் காட்டுகிறது | புவியின் மாதிரி அமைப்பு |
| அதிக தகவல்களை வழங்குகிறது | வழங்க இயலாது |
| கையில் எடுத்துச்செல்ல ஏதுவானது | கையில் எடுத்துச்செல்ல இயலாது |

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள் :**

1. நில வரைபடத்தை வரைந்து உருவாக்குபவர் _______.

 (1) புவியியலாளர் (2) ஓவியர் (3) கார்டோகிராபர் (4) விஞ்ஞானி

2. கிராபிக் என்பதன் பொருள் _______.

 (1) வரைதல் (2) எழுதுதல் (3) நிலவரைபடம் (4) தொல்லியல்

3. நில வரைபடங்கள் அளவையின் அடிப்படையில் _______ வகைப்படும்.

 (1) மூன்று (2) இரண்டு (3) நான்கு (4) பல

4. சிறிய பரப்பளவு குறித்து அதிக விவரங்கள் தருவது _______.

 (1) அட்லஸ் (2) சுவர் படங்கள்
 (3) நில அளவை படங்கள் (4) தலவரைபடம்

5. கிராமம் மற்றும் நகர்புறங்களின் வரைபடம் _______ ஆகும்.

 (1) கருத்து வரை படம் (2) சிறிய வரைபடம்
 (3) நிலஅளவைப் படம் (4) அட்லஸ்

6. சரியான கூற்றைத் தேர்ந்தெடு:

 (1) புவி மாதிரியினை கையில் எடுத்துச் செல்ல இயலாது
 (2) நிலவரைபடத்தை கையில் எடுத்துச் செல்ல இயலாது
 (3) புவி மாதிரி இரு பரிமாண அமைப்பு.
 (4) நிலவரைபடம் முப்பரிமாண அமைப்பு.

7. வரைபடங்கள் _______ நோக்கிய நிலையில் வரையப்படுகிறது.

 (1) தெற்கு (2) வடக்கு (3) கிழக்கு (4) மேற்கு

8. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. விவசாயம் | - | (a) பழுப்பு |
| 2. சம உயரக்கோடு | - | (b) மஞ்சள் |
| 3. பனி | - | (c) சிவப்பு |
| 4. குடியிருப்பு | - | (d) வெள்ளை |

 (1) 1-(d),2-(a), 3-(b), 4-(c) (2) 1-(b), 2-(c), 3-(d), 4-(a)
 (3) 1-(b), 2-(a), 3-(d), 4-(c) (4) 1-(d), 2-(a), 3-(b), 4-(c)

9. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

 (1) கலாச்சார வரைபடங்கள் மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்புகளை காட்டுவது ஆகும்
 (2) இயற்கை அமைப்பு வரைபடங்கள் மண், நிலத்தோற்றம், வடிகால், தாவரங்கள் போன்றவைகளை காட்டுவது ஆகும் .
 (3) நிலவரைபட நூல் என்பது பல வகையான நிலவரைபடங்களின் தொகுப்பு புத்தகம் ஆகும் .
 (4) சுவர் வரைபடங்கள் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களின் வரைபடமாகும்.

10. கண்டங்கள், நாடுகள், பெருநகரங்கள், மற்றும் சிறிய உள்ளூர் பகுதிகள் உட்பட சில குறிப்பிட்ட விவரங்களைக் காட்டி வரையப்படுவது _______ ஆகும்

 (1) தல வரைபடம் (2) கருத்து வரைபடம் (3) சுவர் வரைபடம் (4) நிலவரைபடம்

www.kalvinews.com

11. ஒரு நாட்டின் மாநில நிர்வாகப் பிரிவுகளைக் காட்டுவது _______ வரைபடமாகும்.
(1) அரசியல் (2) பொருளாதார
(3) கருத்து (4) போக்குவரத்து

12. நிலவரைபடத்தில் பயன்படுத்த வேண்டிய முறைக்குறிகள் மற்றும் குறியீடுகளின் தொகுப்பினைத் _______ துறையானது தயாரித்துள்ளது.
(1) இந்திய தொல்லியல் (2) இந்திய நில அளவை
(3) மாநில நில அளவை (4) இந்திய வானிலை

13. ஒவ்வொரு நிலவரைபடமும் தகவல்களை விவரிக்கும் _______ கொண்டிருக்க வேண்டும்.
(1) திசை (2) அளவை (3) தலைப்பு (4) குறிப்பு

14. நிலவரைபடத்தில் பயன்படுத்தப்படும் பொதுவான சின்னம் மற்றும் குறியீடுகள் _______ அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
(1) மாநில (2) மாவட்ட (3) உள்ளூர் (4) தேசிய

15. கூற்று 1: ஒரு இடத்தின் அதிகப்படியான தகவல்களை நிலவரைபடம் வழங்க இயலாது
கூற்று 2: நிலவரைபடம் சிறிய மற்றும் பெரிய பரப்பளவைக் காட்டுகிறது.
(1) கூற்று 1 சரி, 2 தவறு (2) கூற்று 1 தவறு, 2 சரி
(3) இரண்டும் சரி (4) இரண்டு தவறு

16. கூற்று 1: நிலவரைபடம் என்பது புவியின் இரு பரிமாண அமைப்பு _______.
கூற்று 2: புவி மாதிரி என்பது புவியின் முப்பரிமாண அமைப்பு
(1) கூற்று 2 சரி, 1 தவறு (2) இரண்டும் தவறு
(3) கூற்று 1 சரி, 2 தவறு (4) இரண்டும் சரி

17. வரிசைப்படுத்துக.
(1) தலைப்பு, அளவை, குறிப்பு, திசை (2) திசை, குறிப்பு, அளவை, தலைப்பு
(3) அளவை, தலைப்பு, திசை, குறிப்பு (4) தலைப்பு, திசை, அளவை, குறிப்பு

18. கண்டங்கள் அல்லது நாடுகள் போன்ற பெரிய அளவிலான பகுதிகளை _______ கொண்டு வரையப்படும்.
(1) சிறிய அளவை (2) பெரிய அளவை (3) மீட்டர் அளவை (4) அட்லஸ்

19. குறுகிய பரப்பளவிலான இடங்களைக் குறித்து அதிக விவரங்களை தரும் வரைபடம் _______.
(1) அட்லஸ் (2) பெரிய அளவை வரைபடம்
(3) சிறிய அளவை வரைபடம் (4) சுவர் வரைபடம்

20. நிலவரைபடத்தை உருவாக்கும் அறிவியல் என்பது _______.
(1) பிசியோகிராபி (2) கார்டோகிராபி (3) ஜியோகிராஃபி (4) வானிலையியல்

21. நிலவரைபடங்கள் _______ முன்னறிவிப்பிற்கு பயன்படுகிறது.
(1) வானிலை (2) மழை (3) பனி (4) புயல்

22. நிலவரைபடங்கள் இராணுவத்தின் _______ பணியில் முக்கிய பங்கு வகிக்கிறது
(1) பாதுகாப்பு (2) திட்டமிடல் (3) போர் (4) அனைத்தும்

www.kalvinews.com

23. வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கும் _______ திசைகள் ஆகும்.
(1) கோணங்கள் (2) துணை திசைகள்
(3) தீர்க்கரேகை (4) அடிப்படை

24. நிலவரைபடத்தில் இரண்டு இடங்களுக்கிடையே உள்ள தூரத்திற்கும் நிலத்தில் அதே இரண்டு இடங்களுக்கிடையேயுள்ள தூரத்திற்கும் உள்ள விகிதம் _______ எனப்படும்.
(1) திசை (2) குறிப்பு (3) அளவை (4) தலைப்பு

25. புவியியலாளர்களின் ஒரு முக்கிய கருவியாக _______ அமைகிறது.
(1) காம்பாஸ் (2) சாய்வுமானி (3) தல வரைபடம் (4) நில வரைபடம்

26. தாதுக்கள், தொழிற்சாலை அமைவிடங்கள், வாணிப வழிகள் மற்றும் பொருள்களை எடுத்துச் செல்லும் வழிகளைப் பற்றி _______ நில வரைபடம் விளக்குகிறது.
(1) கருத்து (2) கலாச்சார (3) போக்குவரத்து (4) பொருளாதார

27. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | காலநிலை நில வரைபடம் | - | (a) துறைமுகம் |
| 2. | அரசியல் நில வரைபடம் | - | (b) ஒப்பு ஈரப்பதம் |
| 3. | போக்குவரத்து நில வரைபடம் | - | (c) மலைகள் |
| 4. | நிலத்தோற்ற வரைபடம் | - | (d) மாநிலம் |

(1) 1-(d), 2-(a), 3-(b), 4-(c) (2) 1-(b), 2-(d), 3-(a), 4-(c)
(3) 1-(c), 2-(a), 3-(d), 4-(b) (4) 1-(d), 2-(b), 3-(a), 4-(c)

28. நாடுகள் குறித்து அதிக விவரங்களை உள்ளடக்கிய வகையில் _______ நில வரைபட நூல் தயாரிக்கப்படுகிறது.
(1) பள்ளி (2) தேசிய (3) வட்டார (4) புவியியல்

29. கூற்று 1: முற்காலத்தில் நிலவரைபடம் தயாரிக்க துணிகள், பாப்பிரஸ், ஈரநிலம் மற்றும் களிமண் பயன்படுத்தப்பட்டன.
கூற்று 2: ஒவ்வொரு நிலவரைபடமும் அதன் வடிவமைப்பு, பொருளடக்கம் மற்றும் கட்டமைப்பில் தனித்துவமுடையது.
(1) கூற்று 1 சரி, 2 தவறு (2) கூற்று 2 சரி, 1 தவறு
(3) இரண்டும் சரி (4) இரண்டு தவறு

30. கலாச்சார நில வரைபடங்கள் என்பது _______ அமைப்புகளைக் காட்டுவதாகும்.
(1) மனிதனால் உருவாக்கப்பட்ட (2) நிலத்தோற்றம்
(3) இயற்கையான (4) வானிலை

31. மனிதனால் விரிவாக்கப்பட்ட அமைப்புகளைக் காட்டுவது _______.
(1) மண் நிலவரைபடம் (2) அரசியல் நிலவரைபடம்
(3) கலாச்சார நிலவரைபடம் (4) பள்ளி நிலவரைபடம்

32. நில வரைபடம் தயாரிக்க முதன்முதலில் பயன்படுத்தப்பட்டவை _______.
(1) விலங்குகள் தோல் (2) செப்பேடுகள்
(3) காகிதம் (4) மண்தூள்

www.kalvinews.com

33. ஒரு குறிப்பிட்ட சிறிய பரப்பையுடைய இடத்தைப் பற்றிய அதிக விவரங்களை பெற உதவுபவை ________.

(1) அட்லஸ் (2) உலக உருண்டை

(3) சிறிய அளவை வரைபடம் (4) பெரிய அளவை வரைபடம்

34. 1 செ.மீ = 200 கி.மீ என்பது ஒரு ________.

(1) சிறிய அளவு வரைபடம் (2) பெரிய அளவு வரைபடம்

(3) தல அளவை வரைபடம் (4) அளவை சாராது

35. காடுகளின் பரவலை மட்டும் ஒரு நில வரைபடம் மூலம் அறிந்து கொண்டால் அவ்வரைபடம் ________.

(1) இயற்கை அமைப்பு நில வரைபடம் (2) கருத்து நில வரைபடம்

(3) புவியியல் நில வரைபடம் (4) மண் நில வரைபடம்

36. நில வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரத்தைத் தெளிவாக புரிந்து கொள்ள உதவுவது ________.

(1) தலைப்பு (2) அளவை (3) திசைகள் (4) குறிப்பு

37. வானிலை சூழ்நிலையைக் குறித்து அறிய உதவும் நில வரைபடம் --------------.

(1) புவியியல் (2) காலநிலை (3) மண் (4) கலாச்சாரம்

38. பின்வருவனவற்றுள் பிரதான சாலையைக் குறிக்கும் நிறம் ________.

(1) சிவப்பு (2) பழுப்பு (3) கருப்பு (4) மஞ்சள்

39. நாட்டின் தலைநகரத்தைக் குறிக்கும் குறியீடு ________.

(1) Δ (2) ◉ (3) ▣ (4) 

**விடைகள்:**

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | (3) | **11** | (1) | **21** | (1) | **31** | (3) |
| **2** | (1) | **12** | (2) | **22** | (2) | **32** | (1) |
| **3** | (2) | **13** | (3) | **23** | (4) | **33** | (4) |
| **4** | (4) | **14** | (4) | **24** | (3) | **34** | (1) |
| **5** | (3) | **15** | (2) | **25** | (4) | **35** | (2) |
| **6** | (1) | **16** | (4) | **26** | (4) | **36** | (2) |
| **7** | (2) | **17** | (4) | **27** | (2) | **37** | (2) |
| **8** | (3) | **18** | (1) | **28** | (2) | **38** | (1) |
| **9** | (4) | **19** | (2) | **29** | (3) | **39** | (3) |
| **10** | (4) | **20** | (2) | **30** | (1) | | |

www.kalvinews.com



## 3. இயற்கை இடர்கள் - பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல்

**தொகுப்பு:**
**திரு.இரா.ராஜசேகரன்,**
M.A., B.Ed., M.Com., B.Sc., M.Sc., D.Co-Op., PGDCA.,
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி, கன்னியாம்பட்டி,**
**சேலம் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.அ.அன்பழகன்.,D.T.Ed.,M.A.,B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி,**
**முத்தியம்பட்டி,**
**சேலம் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- இடர் (ஹசார்டு) என்பது புவியிலுள்ள உயிர் மற்றும் உயிரற்ற பொருட்களைப் பாதிக்கக்கூடிய நிகழ்வு.
- ஹசார்டு என்ற சொல் ஹசார்ட் என்ற பிரெஞ்சு சொல்லிலிருந்து தோன்றியது.
- இயற்கை இடர் என்பது இயற்கை நிகழ்வுகளையும், சுற்றுச்சூழல் மேல் ஏற்படும் எதிர்மறை தாக்குதலாகும்.
- இயற்கை இடர்களை புவியியல் மற்றும் உயிரியல் இடர்கள் என இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- பேரிடர் என்பது உயிருக்கும், உடைமைக்கும் அழிவையும் சேதத்தையும் ஏற்படுத்தும் பேராபத்து.
- **<u>பேரிடரின் வகைகள்</u>**

✓ இயற்கை பேரிடர்
✓ மனிதனால் உண்டாகும் பேரிடர்

- **இயற்கைப்பேரிடர்கள்**

| | |
|---|---|
| ✓ நிலநடுக்கம் | எரிமலை வெடிப்புகள் |
| ✓ சுனாமி | சுறாவளி |
| ✓ வெள்ளம் | நிலச்சரிவு |
| ✓ பனிச்சரிவு | இடி, மின்னல் |

- **மனிதனால் ஏற்படும் (உண்டாகும்) பேரிடர்கள்**

| | |
|---|---|
| ✓ நெருப்பு (தீ) | கட்டிடங்கள் இடிந்துபோகுதல் |
| ✓ தொழிற்சாலை விபத்துக்கள் | போக்குவரத்து விபத்து |
| ✓ தீவிரவாதம் | கூட்டநெரிசல் |

- **இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட இடர்கள்**

| | | | |
|---|---|---|---|
| ✓ புழுதிப்புயல் | - | வடஇந்தியா | - 2018 மே2, மே3 |
| ✓ சுனாமி | - | தமிழ்நாடு | - 2004 டிசம்பர் 26 |
| ✓ புயல் (கஜா) | - | தமிழ்நாடு | - 2018 நவம்பர் 10 |

www.kalvinews.com

**பேரிடரின் ஆதாரம், நிகழ்வுகள்**

| வ. எண் | பேரிடரின் வகை | ஆதாரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | இயற்கைப் பேரிடர் | புவி உட்பகுதியில் | நிலநடுக்கம், சுனாமி, எரிமலை வெடிப்பு |
| | | புவி மேற்பரப்பில் | நிலச்சரிவு, பனிச்சரிவு |
| | | வானிலை ஆய்வு, நீர்வளம் | புயல் காற்று, சூறாவளி, பனிமழை வெள்ளப்பெருக்கு |
| | | சுகாதாரம் | தொற்று நோய்கள் |
| 2 | மனிதனால் உருவாகும் பேரிடர் | சமூக தொழில் நுட்பம் | தொழில் நுட்பம் பேரழிவுகள், போக்குவரத்து பேரழிவுகள், கட்டமைப்பு சரிவு மற்றும் உற்பத்தி வீழ்ச்சிகள் |
| | | போர் | தேசிய மற்றும் சர்வதேச அளவில் |

| வ. எண் | பேரிடர் | காரணங்கள் | பாதிப்புகள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | நிலநடுக்கம் | புவித்தட்டுகளின் நகர்வு, நிலச்சரிவு, மேற்பரப்பு பிளவு | கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், அணைகட்டுகள், மின்சாரம் துண்டிப்பு, குடிநீர் குழாய் பாதிப்பு, நிலநடுக்கத்தால் வெள்ளப் பெருக்கு, சுனாமி, தீ, நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது. | அளவிடும் கருவி - நிலநடுக்கமானி (seismometer) சிஸ்மோகிராப் அளவீடு - ரிக்டர் |
| 2 | சுனாமி (ஆழிப்பேரலை) சு - துறைமுகம் னாமி - அலைகள் | கடல் பகுதியில் நிலநடுக்கம், நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு | போக்குவரத்து, மின்சாரம், தகவல் தொடர்பு, தண்ணீர் விநியோகம், வெள்ளப் பெருக்கு | தமிழ்நாட்டை சுனாமி தாக்கியது 2004 டிசம்பர் 26 |
| 3 | வெள்ளப்பெருக்கு | கனமழை, புயல், பனிபாறை உருகுதல், சுனாமி, அணைக்கட்டு உடைதல் போன்றவற்றால் | பொருட்சேதம் (சொத்துக்கள்), உயிரிழப்பு, மக்கள் இடம்பெயர்வு, தொற்று நோய்கள் | 2015 நவம்பர், டிசம்பர் சென்னை வெள்ளப்பெருக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திடீரென ஏற்படும் அதிக அளவிலான நீர் வெளியேறுதல். | (காலரா, மலேரியா) பரவுதல். | |
| 4 | புயல் | உயர் அழுத்தத்தால் சூழப்பட்ட குறைவழுத்தப் பகுதியில் உருவாகும் காற்று. | கனமழை, பலத்த காற்று, சுழல்க்காற்று. | **தமிழ்நாட்டை தாக்கிய புயல்கள்**<br>நிஷா - 2008<br>ஜல் - 2010<br>தானே - 2011<br>வர்தா - 2016<br>ஒக்கி - 2017<br>கஜா - 2018 |
| 5 | நெரிசல் | மக்கள் கூட்டத்தில் திடீரென ஏற்படும் பாதிப்பு. வதந்தி, குழப்பம், ஆர்வம் ஆகியவற்றால் ஏற்படுவது. | காயம், மூச்சுத்திணறல், உயிரிழப்பு, | வரிசையை பின்பற்றினால் நெரிசலை தவிர்க்கலாம் |
| 6 | தொழிற்சாலை விபத்து | அணுமின், வேதியியல் கழிவுப்பொருட்கள் | பொருட்சேதம், உயிர்ச்சேதம் | (எ.கா) போபால் விஷவாயு கசிவு |
| 7 | தீ மற்றும் காட்டுத் தீ விபத்து | கவனக்குறைவு, குறுகிய மின்சுற்று, வேதிப்பொருட்கள், அதிகவெப்பம் | காடுகள் அழிவு, பொருட்சேதம், உயிரிழப்பு. | மார்ச் 11, 2018 குரங்கனி |

- ஒரு திடீர் நகர்வு அல்லது புவி மேலோட்டில் ஏற்படும் நடுக்கத்தை நிலநடுக்கம் என்கிறோம்.
- ஆற்றின் பாதையை மாற்றி அமைப்பது நிலநடுக்கம்.
- சுனாமி என்ற சொல் ஜப்பானிய சொல்லிலிருந்து பெறப்பட்டது.
- சு (su) - துறைமுகம். னாமி (nami) - அலைகள்.
- சுனாமிக்கு பிறகு மிக மோசமான புயல் கஜா.
- கஜா புயலின் வேகம் 120 கி.மீ.
- கஜா புயல் தமிழ்நாட்டில் தாக்கிய பகுதி வேதாரண்யம், நாகப்பட்டினம்.
- 2018 இல் வீசிய புழுதிப்புயல் தாக்கிய மாநிலங்கள் - உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான்.
- புவி அதிர்ச்சியின் போது ஏற்படும் நிலநடுக்கம், ஆழிப்பேரலை ஏற்பட காரணமாக அமைகிறது.
- நெடுங்காலத்திற்கு உதவக்கூடிய வகையில் அமைவது மறுவாழ்வு எனப்படும்.
- பேரிடரின் தாக்கம் என்பது பேரிடர் நிகழும் கால அளவு மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்பு.
- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) உள்துறை அமைச்சகத்தின் நிறுவனம்.
- பேரிடர் மேலாண்மை என்பது இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடரின் போது சொத்து மற்றும் உயிரைப் பாதுகாத்தலைக் குறிக்கிறது.
- பேரிடருக்கு முன் ஆபத்தை குறைத்தல் நிலை.
- தயார்நிலை, மட்டுப்படுத்துதல், கட்டுப்படுத்துதல்.
- பேரிடருக்குப் பின் மீட்டெடுத்தல் நிலை.
- துலங்குதல், மீட்டல், முன்னேற்றம்.

www.kalvinews.com

**பேரிடர் மேலாண்மை நிலைகள் ஆறு படிநிலைகளை கொண்டுள்ளது அவைகள்**

- தயார்நிலை, கட்டுப்படுத்துதல், மட்டுப்படுத்துதல், துலங்கல், மீட்டல், முன்னேற்றம்
- பேரிடருக்கு முந்தைய நிலைகள்
- மட்டுப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், தயார்நிலை, ஆரம்பகால எச்சரிக்கை, பேரிடரின் தாக்கம்.
- பேரிடரின் போது கட்டுப்பாட்டு அறைகளை அமைத்தல், தற்செயல் திட்டத்தை செயல்படுத்துதல், எச்சரிக்கை விடுத்தல், வெளியேற்றுவதற்கான நடவடிக்கை, மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச்செல்வது, தேவைப்படுபவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவது.
- மீட்பு நிலை என்பது அவசரகால நிவராணம் வழங்குதல், மறுவாழ்வு, மறுகட்டமைப்பு, என மூன்று நிலைகளை உடையது.
- அவசரகால மருத்துவ உதவிக்கு - 108, தீ விபத்திற்கு - 101 என்ற எண்களை அழைக்க வேண்டும்.
- NDMA - தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் - 2005 டிசம்பர் 25
- NDRF - தேசிய பேரிடர் மீட்பு படை - 2005 சட்டப்படி அமைப்பு
- NIDM - தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம்
- SDRF - தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை - 80 போலீஸ் தனிப்படையுடன் அமைப்பு
- DDMA - மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்
- மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டம் 2018 - 2030 முன்னோக்கத் திட்டமானது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை DST
- விண்வெளித்துறை DOS
- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் CSIR
- மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் SDMA
- தமிழகத்தை தாக்கிய புயல் மற்றும் ஆண்டு

✓ 2008 - நிஷா    2010 - ஜல்
✓ 2011 - தானே    2012 - நீலம்
✓ 2016 - வர்தா    2018 - கஜா
✓ 2020 - நிவர்

**உயிர் வாழ்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

**புவி அதிர்ச்சி:**

மேஜையின் கீழ், தரையில் மண்டியிடுதல், உறுதியான சுவற்றின் அருகில், டார்ச் விளக்கை மட்டும் பயன்படுத்துதல்.

**வெள்ளப்பெருக்கு**:

தேவையான பொருள்களை சேமித்தல், உள்ளூர் ரேடியோ TV அறிவிப்பைக் கவனித்தல். மின் இணைப்பைத் துண்டித்தல்.

**தீ விபத்து:**

தரையில் படுத்து உருளுதல்.

www.kalvinews.com

**சாலை விபத்து:**

ஓட்டுநர் உரிமம் பெற்றவர் மட்டுமே வாகனத்தை ஓட்டுதல். சாலை விதிகளை மதித்தல்.

**இரயில்:**

இரயில் மேடையின் மீது அமரக் கூடாது. தண்டவாளங்களை குறுக்கே கடந்து செல்லக் கூடாது.

**பயிற்சி வினாக்கள்:**

1. பொருட்சேதம், உயிரிழப்பு மற்றும் சுற்றுச்சூழலால் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும் ஒரு இயற்கை காரணி _______.
   (1) இடர் (2) பேரிடர் (3) மீட்பு (4) மட்டுப்படுத்தல்

2. பேரிடரின் விளைவைக் குறைக்கும் செயல்பாடுகள் _______.
   (1) தயார் நிலை (2) பதில் (3) மட்டுப்படுத்தல் (4) மீட்பு நிலை

3. ஒரு திடீர் நகர்வு அல்லது புவி மேலோட்டின் திடீர் நடுக்கம் _______ என அழைக்கப்படுகிறது.
   (1) சுனாமி (2) புவிஅதிர்ச்சி (3) நிலநடுக்கம் (4) சூறாவளி

4. கனமழையினால் திடீரென அதிக நீர் வெளியேறுதல் _______ என அழைக்கப்படுகிறது.
   (1) வெள்ளம் (2) சூறாவளி (3) வறட்சி (4) பருவ காலங்கள்

5. _______ வைத்துள்ளோரை வாகனம் ஒட்ட அனுமதித்தால் சாலை விபத்தினைத் தவிர்க்கலாம்.
   (1) ரேஷன் அட்டை (2) ஒட்டுநர் உரிமம் (3) அனுமதி (4) ஆவணங்கள்

6. பொருத்துக
   1) புவி அதிர்ச்சி - (1) கவனமின்மை
   2) சூறாவளி - (2) பிளவு
   3) சுனாமி - (3) புயலின்கண்
   4) தொழிற்சாலை விபத்து - (4) இராட்சத அலைகள்
   (1) 1 - a 2 - b 3 - c 4 - d (2) 1 - b 2 - c 3 - d 4 - a
   (3) 1 - d 2 - c 3 - b 4 - a (4) 1 - c 2 - d 3 - a 4 - b

7. அவசர கால மருத்துவ உதவிக்கு அழைக்க வேண்டிய எண் _______.
   (1) 100 (2) 101 (3) 108 (4) 1078

8. தீ விபத்திற்கு அழைக்க வேண்டிய எண் _______.
   (1) 101 (2) 100 (3) 1078 (4) 108

9. சுனாமி என்னும் சொல் _______ மொழிச் சொல்.
   (1) பானிய (2) ஜப்பானிய (3) ஆங்கில (4) கிரேக்க

10. நிலநடுக்கத்தை பதிவு செய்யும் கருவி _______.
    (1) சிஸ்மோகிராப் (2) வெர்னியர் அளவுகோல்
    (3) பாராமானி (4) வெப்பநிலைமானி

11. உலகிலேயே மிக அதிக அடர்த்தியான நிலநடுக்கப் பகுதி _______.
    (1) இந்தோனேசியா (2) இந்தியா (3) அமெரிக்கா (4) ஜப்பான்

www.kalvinews.com

12. உலகிலேயே மிக அதிக நிலநடுக்கங்கள் ஏற்படுவது _______.
(1) ஜப்பான் (2) இந்தியா (3) சீனா (4) இந்தோனேசியா

13. சுனாமிக்கு காரணமான செயல் இல்லாதது எது?
(1) நிலநடுக்கம் (2) நிலச்சரிவு
(3) எரிமலைவெடிப்பு (4) புயல்

14. போபால் விஷ வாயு கசிவு விபத்து _______ பேரிடர்.
(1) தீவிபத்து (2) தொழிற்சாலை விபத்து
(3) சுனாமி (4) நிலநடுக்கம்

15. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.
(1) நிலநடுக்கம் (2) சுனாமி (3) பனிச்சரிவு (4) போர்

16. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.
(1) கூட்ட நெரிசல் (2) தீவிரவாதம்
(3) தொழிற்சாலை விபத்து (4) சுனாமி

17. தமிழ்நாட்டை சுனாமி தாக்கிய ஆண்டு _______.
(1) 2008 (2) 2004 (3) 2018 (4) 2014

18. NDMA என்பது _______.
(1) தேசிய பேரிடர் மீட்பு படை (2) தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்
(3) தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் (4) தேசிய மீட்பு படை

19. தமிழ்நாட்டை கஜா புயல் தாக்கிய ஆண்டு _______.
(1) 2001 (2) 2011 (3) 2008 (4) 2018

20. 2004 சுனாமிக்கு பிறகு தமிழகத்தைத் தாக்கிய மிக மோசமாக புயல் _______.
(1) நிஷா (2) வர்தா (3) ஒக்கி (4) கஜா

21. கூற்று (A): நவீன உலகத்தில் அனுதினமும் மகிழ்ச்சியாக வாழ முடியாது
காரணம் (R): மாசடைதல் மற்றும் சுற்றுச்சுழல் சீரழிவின் காரணமாக இயற்கை இடர் மற்றும் பேரிடரை சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.
(1) கூற்று மற்றும் காரணம் சரி, கூற்று காரணத்தை விளக்குகிறது.
(2) கூற்று மற்றும் காரணம் சரி, கூற்று காரணத்தை விளக்கவில்லை.
(3) கூற்று தவறு காரணம் சரி.
(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

22. கூற்று (A): திடீர் நுகர்வு அல்லது பூமியின் மேலோட்டில் ஏற்படும் நடுக்கம் புவி அதிர்ச்சி ஆகும்.
காரணம் (R): டெக்டானிக் தட்டுகளின் நகர்வு, ஜனநெருக்கடி, பிளவு போன்றவை புவி அதிர்ச்சிக்கு காரணமாகின்றன.
(1) கூற்று, காரணம் சரி மற்றும் கூற்று காரணத்தை விளக்குகிறது.
(2) கூற்று, காரணம் சரி, கூற்று காரணத்தை விளக்கவில்லை.
(3) கூற்று தவறு காரணம் சரி.
(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

www.kalvinews.com

23. கீழ்க்காண்பனவற்றில் ஒன்று பேரிடரைப் பொருத்தமட்டில் முதன்மை மீட்பு குழு இல்லை.
(1) காவலர்கள் (2) தீயணைப்புப் படையினர்
(3) காப்பீட்டு முகவர்கள் (4) அவசர மருத்துவக்குழு

24. வெள்ளப்பெருக்கு காரணம் இல்லாத செயல் எது?
(1) கனமழை (2) புயல் (3) நிலச்சரிவு (4) சுனாமி

25. கீழ்க்காணும் சொற்றொடர்களில் எது நிலநடுக்கத்தை எதிர் கொள்வதோடு தொடர்புடையது?
(1) காவல் துறை மற்றும் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் பகுதிக்கு செல்லவேண்டாம்.
(2) கடல் மட்டத்திலிருந்து உங்கள் தெரு எவ்வளவு உயரத்தில் உள்ளது மற்றும் கடலோரத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது எனத் தெரிந்து கொள்ளவும்
(3) கண்ணாடிச் சன்னல், வெளிக்கதவுகள், சுவர், எளிதில் விழக்கூடிய தொங்கு மின்விளக்குகள் மற்றும் மரச்சாமான்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கவும்.
(4) கதவைத் திறப்பதற்கு முன்பு புறங்கையால் கதவைத் தொட்டு வெப்பமாக உணர்ந்தால் கதவைத் திறக்க வேண்டாம்.

26. நிலநடுக்கம், சுனாமி மற்றும் எரிமலை வெடிப்புகள் _______ இல் ஏற்படும் இயற்கை பேரிடராகும்.
(1) புவி உட்பகுதி (2) புவி மேற்பரப்பில்
(3) வானிலை ஆய்வு / நீர் வளம் (4) சுகாதாரம்

27. நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு _______ ஏற்படும் இயற்கை பேரிடராகும்.
(1) புவி உட்பகுதி (2) புவி மேற்பரப்பில்
(3) வானிலை ஆய்வு / நீர் வளம் (4) சுகாதாரம்

28. புயல் காற்று, சூறாவளி, பனிமழை மற்றும் வெள்ளம் ஆகியவை _______ல் ஏற்படும் இயற்கை பேரிடராகும்.
(1) புவி உட்பகுதி (2) புவி மேற்பரப்பில்
(3) வானிலை ஆய்வு / நீர் வளம் (4) சுகாதாரம்

29. கீழ்க்கண்டவற்றுள் எது மனிதனால் உருவாகும் பேரிடர்?
(1) சமூக தொழில்நுட்பம் (2) போர்
(3) இரண்டும் (4) எதுவுமில்லை

30. நிலநடுக்கத்திற்கு காரணம் _______.
(1) புவித்தட்டுகளின் நகர்வு (2) நிலச்சரிவு
(3) மேற்பரப்பில் பிளவு (4) அனைத்தும் சரி

31. நிலநடுக்கத்தால் ஏற்படுவது _______.
(1) வெள்ளம், சுனாமி, நிலச்சரிவு (2) தீ, மின்சாரம் துண்டிக்கப்படுதல்
(3) நீர்க்குழாய்கள் உடைதல் (4) அனைத்தும்

32. போபால் விஷவாயு கசிவு ஏற்பட்ட ஆண்டு _______.
(1) 1983 (2) 1985 (3) 1984 (4) 1986

www.kalvinews.com

33. பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) _______ அமைச்சகத்தின் கீழ் வரும்.

(1) பாதுகாப்பு (2) உள்துறை

(3) வெளியுறவுத் துறை (4) போக்குவரத்து

34. SDRF என்பது _______ போலீஸ் தனிப்படையுடன் அமைக்கப்பட்டது.

(1) 50 (2) 60 (3) 70 (4) 80

35. பொருத்துக.

i. நிஷா - (a) 2020

ii. வர்தா - (b) 2018

iii. நிவர் - (c) 2016

iv. கஜா - (d) 2008

(1) i - a ii - b iii - d iv - c (2) i - c ii - d iii - b iv - a

(3) i - d ii - a iii - c iv - b (4) i - d ii - c iii - a iv - b

36. ஆற்றின் பாதையை மாற்றி அமைப்பது _______.

(1) தீ விபத்து (2) வெள்ளம் (3) நிலநடுக்கம் (4) புயல்

37. தமிழகத்தில் தானே புயல் ஏற்பட்ட ஆண்டு _______.

(1) 2011 (2) 2006 (3) 2008 (4) 2016

38. கஜா புயல் ஏற்பட்ட மாதம் _______.

(1) அக்டோபர் (2) மார்ச் (3) நவம்பர் (4) டிசம்பர்

39. கஜா புயலின் வேகம் _______.

(1) 100 கி.மீ (2) 60 கி.மீ (3) 120 கி.மீ (4) 50 கி.மீ

40. மக்கள் கூட்டத்தில் திடீரென ஏற்படும் பாதிப்பு _______.

(1) வெள்ளம் (2) புயல்

(3) கூட்ட நெரிசல் (4) தீ விபத்து

41. பேரிடரின் தாக்கம் என்பது _______.

(1) மழையளவு (2) கால அளவு

(3) புயல் (4) தீ விபத்து

42. ஆபத்து நிலைமையை குறைப்பது _______.

(1) முன்னறிவிப்பு (2) பாதுகாப்பு

(3) மட்டுப்படுத்துதல் (4) தங்கும் இடம் அளித்தல்

43. தீ விபத்து ஏற்படும்போது நாம் செய்ய வேண்டியவை _______.

(1) மேஜையின் கீழ் தரையில் மண்டியிடுதல்

(2) வேகமாக ஓடுதல்

(3) தரையில் படுத்து உருளுதல்

(4) டார்ச் லைட் பயன்படுத்துதல்

www.kalvinews.com

44. சாலை விபத்து ஏற்படக் காரணம் ________.
   (1) வாகனங்களை சரியாகப் பராமரித்தல்
   (2) குறைவான வேகத்துடன் வாகனத்தை இயக்குதல்
   (3) ஓட்டுநர் உரிமமின்றி வாகனம் ஓட்டுதல்
   (4) தலைக் கவசம் இன்றி பயணித்தல்

45. அதிகம் மற்றும் குறைந்த அலைவரிசையில் கிடைப்பது ________.
   (1) TV அறிவிப்பு
   (2) ஒலி பெருக்கி
   (3) கம்பியில்லா வானிலை
   (4) டார்ச் லைட்

46. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS 2019-20)
   (1) குண்டுவெடிப்பு
   (2) எரிமலை வெடிப்பு
   (3) நில அதிர்வு
   (4) வறட்சி

47. புயலின் கண் ____________ ஆகும். (NMMS-2016)
   (1) கடலோரப் பகுதி
   (2) வெற்றிடம்
   (3) உயர் அழுத்த மண்டலம்
   (4) தாழ்வழுத்த மண்டலம்

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (1) | 11 | (3) | 21 | (1) | 31 | (4) | 41 | (2) |
| 2 | (3) | 12 | (1) | 22 | (3) | 32 | (3) | 42 | (3) |
| 3 | (3) | 13 | (3) | 23 | (3) | 33 | (2) | 43 | (3) |
| 4 | (1) | 14 | (2) | 24 | (3) | 34 | (4) | 44 | (3) |
| 5 | (2) | 15 | (3) | 25 | (3) | 35 | (4) | 45 | (3) |
| 6 | (2) | 16 | (2) | 26 | (1) | 36 | (3) | 46 | (1) |
| 7 | (3) | 17 | (2) | 27 | (2) | 37 | (1) | 47 | (2) |
| 8 | (1) | 18 | (2) | 28 | (3) | 38 | (3) | | |
| 9 | (2) | 19 | (4) | 29 | (3) | 39 | (3) | | |
| 10 | (1) | 20 | (4) | 30 | (4) | 40 | (3) | | |

www.kalvinews.com

வகுப்பு - 7 - பருவம்: 3 - குடிமையியல்

# 1. பெண்கள் மேம்பாடு

**தொகுப்பு:**

**திரு.வீ.மணிகண்டன், M.A., M.A., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, ஊருடையாப்பட்டி,**
**திருச்சி மாவட்டம்.**

**மேம்பாடு:**

**திரு.இரா.ராஜசேகரன்,**
**M.A., B.Ed., M.Com., B.Sc., M.Sc., D.Co-Op., PGDCA.,**
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி, கன்னியாம்பட்டி,**
**சேலம் மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

- பெண்ணியம் என்பது பெண்களை வலிமையாக்குவதோடு மட்டுமின்றி, அவர்களிடம் ஏற்கனவே உள்ள வலிமையை உலகம் உணரும் விதமாக மாற்றுவதே ஆகும்
- நாட்டின் நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கு சமூகத்தில் பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தலும் பாலினச் சமத்துவம் அடைதலும் அவசியமாகும்.
- ஒரு ஆணுக்கான கல்வி என்பது அவருக்கு மட்டுமே பயன்படும், ஆனால் ஒரு பெண்ணுக்கு வழங்கும் கல்வியானது ஒரு தலைமுறைக்கான கல்வியாகும்.

**பாலினம் பற்றிய சமூக அம்சங்கள்:**

- ஆண்பால், பெண்பால் குறித்த புரிதல்கள் மற்றும் வேறுபாடுகளில் சமூகத்தின் தாக்கம் எவ்விதம் என்பதை ஆராய்வதே சமூகவியலில் பாலினம் என்பதாகும்.
- பெண்களைப் பலவீனமான பாலினம் என்று சொல்வது ஒரு அவதூறு. அது பெண் இனத்திற்கு ஆணினம் இழைத்த அநீதியாகும் என்று **மகாத்மா காந்தியடிகள்** கூறியுள்ளார்.
- உலகெங்கிலும் கல்வியறிவற்ற இளையோரில் கிட்டதட்ட 63% பேர் பெண்கள்.
- 40 ஆண்டுகளுக்கு முன்பே பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் 'அனைவருக்கும் கல்வி' என்ற உரிமையை வலியுறுத்தி உள்ளது.
- UNESCO என்பது ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு, கல்வி ஒரு பெண்ணின் வருமானம் ஈட்டும் திறனை அதிகரிக்கும் என்று கூறுகிறது.
- நமது எதிர்காலம் பெண்களை உதாசீனப்படுத்துவோர் கையிலில்லை என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி **பராக் ஒபாமா** ஐக்கிய நாடுகளின் பொது சபையில் 2012 ஆம் ஆண்டு உரையாற்றும் போது கூறினார்.
- 10% பெண்கள் கூடுதலாக கல்வி கற்றால் மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாக 3% அதிகரிக்கின்றது.

www.kalvinews.com

**பெண் கல்வியின் இணையற்ற முக்கியத்துவங்கள்**

1. **அதிகரித்த கல்வியறிவு**
   - உலகெங்கிலும் கல்வியறிவற்ற இளையோரில் கிட்டத்தட்ட 63 சதவிகிதம் பேர் பெண்கள்.

2. **ஆள்கடத்தல்**
   - ஆள் கடத்தலில் அதிகம் பாதிக்கப்படுவது படிப்பறிவு இல்லாத பெண்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இளம் பெண்களுக்கு அடிப்படைத் திறன்கள் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதினால், ஆள் கடத்தல்கள் கணிசமாக குறைக்கப்படும் என்று ஐக்கிய நாடுகளின் இடை முகமைத் திட்டம் விளக்குகின்றது.

3. **அரசியல் பிரதிநிதித்துவம்**
   - பெண்கள் வாக்காளர்களாகவே உள்ளனர். அரசியலில் ஈடுபாடு, குடிமைக்கல்வி, குடிமைப் பயிற்சி மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கான தடைகளை உடைக்கின்றது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான தலைமை மற்றும் பங்கேற்பினைப் பற்றிய ஆய்வு பரிந்துரைக்கிறது.

4. **வளரும் குழந்தைகள்**
   - ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான கல்வி முனைப்பு நிறுவனம் கல்வியறிவு பெற்ற தாய்மார்களின் குழந்தைகளை விட, கல்வியறிவு பெறாத தாய்மார்களின் குழந்தைகளின் கல்வியறிவு இருமடங்கு அதிகமாக உள்ளது என பரிந்துரைத்துள்ளது.

5. **காலம் தாழ்த்திய திருமணம்**

   பின்தங்கிய நாடுகளில் மூன்றில் ஒரு பெண் குழந்தைக்கு பதினெட்டு வயதுக்குள் திருமணமாகிவிடுகிறது. பெண் குழந்தைகள் ஏழு அல்லது அதற்கு மேலான வருடங்கள் படிக்கிறார்களோ, அவர்களின் திருமணம் நான்கு ஆண்டுகள் வரை தள்ளிப்போகிறது என்று ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் பரிந்துரைக்கிறது.

6. **வருமான சாத்தியம்**
   - ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (UNESCO) கூற்றுப்படி, ஒரு பெண் ஆரம்பக்கல்வி பெற்றாள் கூட அந்த பெண்ணின் வருவாயில் 20% வரை அதிகரிக்க உதவுகின்றது.

7. **மொத்த உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துதல்**
   - 10% கூடுதலாக பெண்கள் கல்வி கற்றால் மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாக மூன்று சதவிகிதம் அதிகரிக்கின்றது.

8. **வறுமை குறைப்பு**
   - பெண்களுக்கு கல்வியில் உரிமைகள் சமவாய்ப்புகள் வழங்கப்பட்டால், அவர்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரித்து வறுமை அளவைக் குறைக்க வழி ஏற்படும்.

**பெண்களின் கல்வியறிவு விகிதம் குறைவுக்கான காரணங்கள்**

- பாலின அடிப்படையிலான சமத்துவமின்மை.
- சமூகப் பாகுபாடு மற்றும் பொருளாதார சீரழிவு.
- பெண் குழந்தைகளை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துவது.
- பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கை குறைவு.
- பள்ளிகளில் குறைந்த தக்கவைப்பு வீதம் மற்றும் அதிக இடைநிற்றல் விகிதம்.

www.kalvinews.com

**உலகின் முதன்மை பெண்மணிகள்**

| வ.எண் | முதல் பெண் | பெயர் | நாடு |
|---|---|---|---|
| 1 | பிரதம மந்திரி | சிறிமாவோ பண்டார நாயக் | இலங்கை |
| 2 | விண்வெளி வீரர் | வாலெண்டினா தெரேஷ் கோவா | சோவியத் ஒன்றியம் (ரஷ்யா) |
| 3 | எவரெஸ்ட் சிகரத்தை அளவிட்டவர் | ஜன்கோ தபே | ஜப்பான் |
| 4 | ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவர் | சார்லோட் கூப்பர் | இங்கிலாந்து |

**இந்தியாவின் முதன்மை பெண்மணிகள்**

- முதல் பெண் மத்திய அமைச்சர் - **விஜயலட்சுமி பண்டிட்.**
- சுதந்திர இந்தியாவில் முதல் அமைச்சர் - **ராஜ்குமாரி அம்ரிட் கவுர்** (சுகாதாரத்துறை).
- முதல் பெண் மத்திய வெளியுறவு அமைச்சர் - **சுஷ்மா ஸ்வராஜ்.**
- முதல் இளம்பெண் அமைச்சர் - **சுஷ்மா ஸ்வராஜ் (ஹரியானா). 25 வயதில் ஹரியானா அமைச்சரவையில் அமைச்சரானார்.**
- சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் - **சரோஜினி நாயுடு** ( ஒன்றிணைந்த மாகாணங்களின் பொறுப்பாளர்).
- ஐக்கிய நாடுகளின் பொதுசபையில் முதல் பெண் தலைவர் - **விஜயலட்சுமி பண்டிட்** (1953).
- இந்தியாவின் முதல்பெண் பிரதமர் - **இந்திராகாந்தி (1966).**
- முதல் பெண் காவல் துறை உயர் அதிகாரி (IPS) - **கிரண்பேடி** (1972).
- அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முதல்பெண் - **அன்னை தெரசா** (1979).
- எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த (ஏறிய) முதல் இந்திய பெண் - **பச்சேந்திரி பால் (1984).**
- புக்கர் பரிசு வென்ற முதல் இந்திய பெண் - **அருந்ததிராய்** (1997).
- முதல் பெண் குடியரசுத் தலைவர் - **பிரதிபா பாடீல்** (2007).
- மக்களவையின் முதல் பெண் சபாநாயகர் - **மீராகுமார்** (2009).
- உச்ச நீதிமன்ற முதல் பெண் நீதிபதி - **மீராசாகீப் பாத்திமாபிவி.**
- இந்திய தேசிய காங்கிரஸின் முதல் பெண் தலைவர் - **அன்னிபெசன்ட்** (அயர்லாந்து பெண்மணி).
- இந்தியாவின் முதல் பெண் மாநில முதலமைச்சர் - **சுச்சித கிருபாளினி** (உத்திர பிரதேசம்).
- இந்தியாவின் முதல் பெண் காவல் துறை இயக்குநர் (DGP) - **காஞ்சன் சௌத்ரி பட்டாச்சாரியா.**
- இந்தியாவின் முதல் பெண் பாதுகாப்புத் துறை அமைச்சர் - **திருமதி நிர்மலா சீத்தாராமன்.**
- இந்தியாவின் முதல் பெண் நிதியமைச்சர் - **திருமதி நிர்மலா சீத்தாராமன்.**
- இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் - **சாவித்ரிபாய் புலே.**
- இந்தியாவின் பெண் கல்வியை செயல்வடிவமாக்கியவர் - **ஜோதிராவ்புலே (பெண்கல்வி பற்றி பேசும் போது நினைவில் வருபவர் சாவித்ரிபாயின் கணவர்).**

www.kalvinews.com

- இந்தியாவில் பெண்களுக்கான முதல் பள்ளி தொடங்கப்பட்டது - **1848 (புனே).**
- இந்தியாவில் முதல் மகளிர் SNDT பல்கலைக்கழகம் **மகர்ஷிகார்வே** என்பவரால் 1916 ஆம் ஆண்டு ஐந்து மாணவிகளுடன் புனேவில் தொடங்கப்பட்டது.

**இந்தியாவில் ஆண் / பெண் கல்வியறிவு விகிதம் (1951 - 2011)**

| வ.எண் | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு | கல்வியறிவு | ஆண்கள் கல்வியறிவு | பெண்கள் கல்வியறிவு | ஆண் / பெண் கல்வியறிவு வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| 1 | 1951 | 18.33% | 27.16% | 8.86% | 18.30% |
| 2 | 1961 | 28.30% | 40.40% | 15.35% | 25.05% |
| 3 | 1971 | 34.45% | 45.96% | 21.97% | 23.98% |
| 4 | 1981 | 43.57% | 56.38% | 29.76% | 26.62% |
| 5 | 1991 | 52.21% | 64.13% | 39.29% | 24.84% |
| 6 | 2001 | 64.83% | 75.26% | 53.67% | 21.59% |
| 7 | 2011 | 74.04% | 82.14% | 65.46% | 16.68% |

**பயிற்சி வினாக்கள்**

1. இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் _______.
   (1) ஜோதிராவ் புலே (2) சாவித்ரி பாய் புலே
   (3) விஜய லட்சுமி பண்டிட் (4) அன்னை தெரசா

2. இந்தியாவின் பெண் கல்வியை செயல் வடிவமாக்கியவர் _______.
   (1) ஜோதிராவ் புலே (2) சாவித்ரிபாய் புலே
   (3) சுஷ்மா ஸ்வராஜ் (4) கிரண்பேடி

3. பெண்களுக்கான முதல் பள்ளி தொடங்கப்பட்ட ஆண்டு _______.
   (1) 1948 (2) 1849 (3) 1848 (4) 1748

4. "பெண்களைப் பலவீனமான பாலினம் என்று சொல்வது ஒரு அவதூறு" என்று கூறியவர் _______.
   (1) பராக் ஒபாமா (2) அன்னை தெரசா
   (3) பாத்திமா பீவி (4) மகாத்மா காந்தியடிகள்

5. "நமது எதிர்காலம் பெண்களை உதாசீனப்படுத்துவோர் கையிலில்லை" என்று கூறியவர் _______.
   (1) மகாத்மா காந்தி (2) தந்தை பெரியார்
   (3) பராக் ஒபாமா (4) இந்திரா காந்தி

6. உலகெங்கிலும் கல்வியறிவற்ற இளையோரில் எத்தனை சதவீதம் பேர் பெண்கள்?
   (1) 36% (2) 63% (3) 47% (4) 74%

7. கல்வி ஒரு பெண்ணின் வருமானம் ஈட்டும் திறனை அதிகரிக்கிறது எனக் கூறியது _______.
   (1) UNESCO (2) UNICEF
   (3) ஐ.நா சபை (4) இவற்றில் எதுவுமில்லை

www.kalvinews.com

8. சரியானவற்றைத் தேர்ந்தெடு

1) இந்தியாவின் முதல் பெண் பிரதமர் - பாத்திமா பீவி

2) முதல் பெண் காவல்துறை இயக்குநர் - கிரண்பேடி

3) முதல் பெண் குடியரசுத் தலைவர் - பிரதிபா பாட்டீல்

4) சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் - சரோஜினி நாயுடு

(1) 2, 3, 4 சரி (2) 1, 2, 3 சரி (3) 3, 4 சரி (4) 1, 4 சரி

9. பொருத்துக

i. உச்ச நீதிமன்ற முதல் பெண் நீதிபதி - a. அன்னை தெரசா

ii. முதல் பெண் சபாநாயகர் - b. மீரா குமார்

iii. இந்தியாவின் முதல் பெண் நிதியமைச்சர் - c. பாத்திமா பீவி

iv. நோபல் பரிசு பெற்ற முதல் பெண் - d நிர்மலா சீத்தாராமன்

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | a | c | d | b |
| (2) | d | a | b | c |
| (3) | b | c | d | a |
| (4) | c | b | d | a |

10. தவறான ஒன்றைத் தேர்ந்தெடு

(1) இந்தியாவின் முதல் பெண் மாநில முதலமைச்சர் சுச்சித கிருபாளினி.

(2) புக்கர் பரிசு பெற்ற முதல் இந்திய பெண் அருந்ததி ராய்.

(3) முதல் மகளிர் பல்கலைக்கழகம் புனேவில் தொடங்கப்பட்டது.

(4) இந்திய தேசிய காங்கிரசின் முதல்பெண் தலைவர் சோனியா காந்தி.

11. வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடு

(1) சுஷ்மா ஸ்வராஜ் (2) கிரண்பேடி (3) அருந்ததிராய் (4) ஜோதிராவ் புலே

12. ஹரியானா மாநில இளம் வயது அமைச்சர் _______.

(1) விஜயலட்சுமி பண்டிட் (2) சுஷ்மா ஸ்வராஜ்

(3) நிர்மலா சீத்தாராமன் (4) சுச்சித கிருபாளினி

13. வாலெண்டினா தெரோஷ்கோவா எந்நாட்டைச் சார்ந்தவர்?

(1) இலங்கை (2) ஜப்பான் (3) இங்கிலாந்து (4) சோவியத் ஒன்றியம்

14. எவரெஸ்ட் சிகரத்தை அளவிட்டவர் _______.

(1) சார்லோட் கூப்பர் (2) ஜன்கோ தபே

(3) சிறிமாவோ பண்டார நாயக் (4) வாலெண்டினா தெரேஷ்கோவா

15. 2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவில் பெண்களின் கல்வியறிவு சதவீதம்?

(1) 8.86% (2) 39.29% (3) 65.46% (4) 64.56%

www.kalvinews.com

16. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவில் ஆண் / பெண் கல்வியறிவு இடைவெளி வீதம் _______.

(1) 23.98% (2) 25.05% (3) 21.59% (4) 16.68%

17. எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இந்தியப் பெண் _______.

(1) ஜன்கோ தபே (2) பச்சேந்தரி பால்

(3) கிரண்பேடி (4) காஞ்சன் சௌத்ரி பட்டாச்சாரியா

18. புனேவில் SNDT பல்கலைக் கழகத்தை தொடங்கியவர் _______.

(1) மகர்ஷிகார்வே (2) ஜோதிராவ் புலே (3) சாவித்திரிபாய் புலே (4) எவருமில்லை

19. பின்வருவனவற்றுள் எது பெண்களின் கல்வியறிவு விகிதம் குறைவுக்கான காரணமில்லை?

(1) பாலின அடிப்படையிலான சமத்துவமின்மை.

(2) சமூகப் பாகுபாடு மற்றும் பொருளாதார சீரழிவு.

(3) பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கை குறைவு.

(4) பெண் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

20. ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் பெண் _______.

(1) கிரண் பேடி (2) ஜன்கோ தபே

(3) வாலெண்டினா தெரேஷ் கோவா (4) சார்லோட் கூப்பர்

21. பின்வருவனவற்றில் எது பாலின சமத்துவமின்மை அல்ல?

(1) மோசமான பேறுகால ஆரோக்கியம். (2) ஆண்களுக்கு அதிக பாதுகாப்பற்ற தன்மை.

(3) எச்.ஐ.வி / எய்ட்ஸ் பரவுதல். (4) பெண்களின் குறைந்த எழுத்தறிவு விகிதம்.

22. பாலின சமத்துவம் என்பது _______ தொடர்புடைய பிரச்சனை.

(1) பெண் குழந்தைகள், பெண்களின் பிரச்சனை.

(2) அனைத்து சமூகத்திலும் பெண்களும் ஆண்களும் சமம்.

(3) மூன்றாம் உலக நாடுகள் மட்டும்.

(4) வளர்ந்த நாடுகள் மட்டும்.

23. பெண்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மேம்பட பின்வரும் எந்த உத்திகள் உதவுகின்றது?

(1) பாதுகாப்பிற்கு எதிரான சவால்களுக்கு பெண்கள் இணைந்து பணியாற்றுகின்றனர்.

(2) பெண்களுக்கான அதிகமான வருமான ஆதாரங்கள்.

(3) மேம்பட்ட கல்விக்கான அணுகுமுறை.

(4) மேலே உள்ள அனைத்தும்.

24. வளரும் நாடுகளில் சிறுவர்களை விட பெண் குழந்தைகள் இடைநிலைக் கல்வியை தவற விடுவது ஏன்?

(1) பள்ளிக் கல்வி கட்டணம் உயர்வு காரணமாக, சிறுவர்கள் மட்டும் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள்.

(2) பெண் குழந்தைகள் வீட்டு வேலை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

www.kalvinews.com

(3) குழந்தைத் திருமணம் அவர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது.

(4) மேலே உள்ள அனைத்தும்.

25. ________ ஒருவருக்கு அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் திறன் மற்றும் தனித்தன்மை வாய்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.

(1) செல்வம் (2) சொத்து (3) கல்வி (4) வேலை

26. _______ ஆண்டுகளுக்கு முன்பே பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் அனைவருக்கும் கல்வி என்ற உரிமையை வலியுறுத்தி உள்ளது.

(1) 30 (2) 20 (3) 10 (4) 40

27. கீழ்கண்டவர்களில் யார் முதன்மையானவர் அல்ல?.

(1) கிரண் பேடி (2) ஜானகி

(3) ஜெயலலிதா (4) ஜன்கோ தபே

28. பின்தங்கிய நாடுகளில் மூன்றில் ஒரு பெண் குழந்தைகளுக்கு எத்தனை வயதிற்குள் திருமணம் ஆகிவிடுகிறது?

(1) 18 (2) 20 (3) 16 (4) 14

29. மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பதவி வகித்த முதல் பெண் _______.

(1) விஜயலட்சுமி பண்டிட் (2) சுஷ்மா ஸ்வராஜ்

(3) நிர்மலா சீத்தாராமன் (4) சுச்சித கிருபாளினி

30. முதல் பெண் காவல்துறை இயக்குநர் (DGP) _______ ஆவார்.

(1) காஞ்சன் சௌத்ரி பட்டாச்சாரியா (2) ஜன்கோ தபே

(3) வாலெண்டினா தெரேஷ் கோவா (4) நிர்மலா சீத்தாராமன்

31. புக்கர் பரிசை வென்ற முதல் இந்திய பெண் _______.

(1) சுஷ்மா ஸ்வராஜ் (2) கிரண்பேடி

(3) அருந்ததிராய் (4) ஜோதிராவ் புலே

32. பொருத்துக

| | |
|---|---|
| (i) சிறிமாவோ பண்டார நாயக் | - a. இங்கிலாந்து |
| (ii) வாலெண்டினா தெரோஷ்கோவா | - b. ஜப்பான் |
| (iii) ஜன்கோ தபே | - c. இலங்கை |
| (iv) சார்லோட் கூப்பர் | - d. சோவியத் ஒன்றியம் |

(1) (i) - c (ii) - a (iii) - d (iv) - b

(2) (i) - b (ii) - c (iii) - d (iv) - a

(3) (i) - b (ii) - c (iii) - a (iv) - d

(4) (i) - c (ii) - d (iii) - b (iv) - a

www.kalvinews.com

33. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

கூற்று: இப்போது அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகள் அனைத்திலும் பெண்கள் ஒருங்கிணைகிறார்கள்.

காரணம்: சமூகத்தின் அனைத்து மோதல்களிலும் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

(3) கூற்று சரி ஆனால், காரணம் தவறு

(4) கூற்று தவறானது ஆனால், காரணம் சரி

34. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

கூற்று : பெண்களுக்கு எதிரான வன்முறை சாதி, மதம், வர்க்கம், வயது மற்றும் கல்வியை கடந்து நடைபெறுகிறது.

காரணம் : வீட்டு வன்முறைகள், கருக்கலைப்பு, பெண்சிசுக் கொலை, வரதட்சணை கொலை, திருமணம் மூலம் கொடுமை, சிறுவருக்கு நிகழும் கொடுமைகள் என வெளிப்படுகிறது.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

(3) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

4) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

35. மக்களவை முதல் பெண் சபாநாயகர் _______.

(1) மீராகுமாரி (2) அருந்ததிராய் (3) இந்திராகாந்தி (4) சாவித்திரி பாய்

## விடைகள்:

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | (2) | **11** | (4) | **21** | (3) | **31** | (3) |
| **2** | (1) | **12** | (2) | **22** | (2) | **32** | (4) |
| **3** | (3) | **13** | (4) | **23** | (4) | **33** | (1) |
| **4** | (4) | **14** | (2) | **24** | (4) | **34** | (2) |
| **5** | (3) | **15** | (3) | **25** | (3) | **35** | (1) |
| **6** | (2) | **16** | (4) | **26** | (4) | | |
| **7** | (1) | **17** | (2) | **27** | (3) | | |
| **8** | (3) | **18** | (1) | **28** | (1) | | |
| **9** | (4) | **19** | (4) | **29** | (2) | | |
| **10** | (4) | **20** | (4) | **30** | (1) | | |

www.kalvinews.com



## 2. சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

**தொகுப்பு:**
**திரு.மு.ச.நபில் புகாரி,M.Sc.,B.Ed.,M.Phil.,M.A.,**
**ஆசிரியப் பயிற்றுனர் (புவியியல்),**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வட்டார வள மையம்,**
**கடலூர் ஒன்றியம்**
**கடலூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.இரா.சுரேஷ் குமார், M.A.,B.Ed.,**
**பட்டதாரி தலைமை ஆசிரியர்,**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி,**
**சித்தாண்டபுரம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

**சந்தை - நம் பார்வையில்**

- மளிகை பொருட்கள், ஆடைகள், மின்னணுப் பொருட்கள், பலவிதமான உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்ய ஊரில் அல்லது நகரில் அமைந்திருக்கும் கடைகளில் அவற்றை நுகர்வதற்கு மக்கள் கூட்டமாக வந்து செல்லும் நெரிசலான ஒரு புவியியல் இருப்பிடம்.

**சந்தை - பொருளியல் பார்வையில்**

- பொருட்கள், சேவைகள், தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை வாங்குவதற்கும் விற்பதற்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்களுக்கு இடையே பணப்பரிமாற்ற முறையில் நடைபெறும் அமைப்பு.

**சந்தை - புரிதல்**

- சந்தை என்பது புவியியல் இருப்பிடம் அன்று.
- சந்தை என்பது ஒரு அமைப்பு.
- பொருட்கள், சேவைகள், தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை விற்போர் விற்பனையாளர்.
- பொருட்கள், சேவைகள், தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை பெறுவோர் நுகர்வோர்.
- விற்போர் மற்றும் நுகர்வோருக்கிடையே பணப் பரிமாற்றம் நிகழ்கிறது.
- பொருட்கள், சேவைகள், தகவல் பரிமாற்றம் ஆகியவை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு இடையே பணப்பரிமாற்ற முறையில் நடைபெறும் அமைப்பு முறையே சந்தை எனப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்களைக் கொண்ட அமைப்பே போட்டித் தன்மை கொண்ட சந்தையை ஏற்படுத்தும்.

**சந்தை - இயல்புகள்**

- அரிசி சந்தை, துணி சந்தை, மின்னணு பொருள் சந்தை என விற்பனை பொருட்களுக்கான கடைகளையும் மற்றும் விற்பனை பொருட்களின் தொகுப்பையும் குறிக்கும் பொருளியல் சொல்லே சந்தை ஆகும்.
- சந்தை என்பது புவியியல் மற்றும் இயற்பியல் ரீதியான இருப்பிடம் சார்ந்தது அன்று.
- சந்தை என்பது பொதுவான பரந்து விரிந்த ஒரு பொருளாதார மண்டல பகுதி மக்களின் தேவையையும் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் அளிப்பையும் பணம் மூலம் பரிமாற்றம் செய்யும் சக்தி கொண்ட அமைப்பாகும்.
- நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்கள் அடங்கிய வணிக ரீதியிலான உறவுகளை கொண்ட குழுவே சந்தையை உருவாக்குகிறது.
- நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்களுக்கு சந்தையை பற்றிய போதிய அளவு புரிதல் தேவை.
- நுகர்வோரது தேவைகளை நிறைவேற்றும் வகையிலான பொருட்களின் உற்பத்தி, உற்பத்தி பொருட்களை அளிக்க உரிய நுகர்வோர் தேர்வு, நுகர்வோர்களது விருப்பங்களுள் சரியாக பெரும்பான்மை விருப்பத்தை தேர்வு செய்தல், உற்பத்தி பொருட்களுள் நுகர்விற்குரிய சரியான விருப்பத்தை தேர்வு செய்தல், நுகர்வோரது பல்வேறு தேவைகளுள் அதன் முக்கியத்துவத்திற்கு ஏற்ப முன்னுரிமை அளித்து உற்பத்தி செய்தல், உற்பத்தி பொருட்களுள் அத்தியாவசிய தேவைக்கேற்ப முன்னுரிமை அளித்து நுகர்தல், நவீன காலத்திற்கேற்ற தேவைகள் அறிந்து உற்பத்தி செய்தல், நவீன கால உற்பத்திக்கேற்ற நுகர்வை மேற்கொண்டு மாற்றங்கள் செய்தல் என உற்பத்தியாளர், விற்பனையாளர் மற்றும் நுகர்வோருக்கு போதிய சந்தையைப் பற்றிய அறிவு தேவை.

**சந்தைகளின் வகைப்பாடு**

- **தயாரிப்பு சந்தை** மற்றும் **காரணிச் சந்தை** என சந்தை இரு வகைப்படும்.
- காரணிச் சந்தை: நிலம், மூலதனம், உழைப்பு போன்ற உற்பத்தி காரணிகளை நுகர்வதற்கும் விற்பனை செய்தவற்குமான சந்தை.

**சந்தைகளின் மற்ற வகைகளாவன**

1. **புவியியல் இருப்பிடம் அடிப்படையிலான சந்தை வகைகள்**

1.1 உள்ளூர் **சந்தைகள்**

- விரைவில் பாழாகும் / அழுகும் தன்மை கொண்ட அன்றாட பயன்பாட்டிற்குரிய பொருட்களை உள்ளூரிலேயே உற்பத்தி செய்து, உள்ளூரிலேயே விற்பனை செய்து, உள்ளூரிலேயே நுகரும் அமைப்பு முறையே உள்ளூர் சந்தை ஆகும்.
- இச்சந்தையில் விற்பனையாளர்களும் நுகர்வோர்களும் உள்ளூர் பகுதியை சார்ந்தவர்களாகவே இருப்பர்.

www.kalvinews.com

**1.2 பிராந்திய சந்தைகள் / மண்டல சந்தைகள்**

- உள்ளூர் சந்தையின் புவியியல் பரப்பை விட பரந்த அளவில் உள்ள பகுதி அல்லது சில சிறிய மாநிலங்கள் / ஒன்றிய பகுதிகள் இணைந்த பகுதியில் விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு இடையே பணப்பரிமாற்றங்கள் வழியே நடைபெறும் வணிக உறவு அடிப்படையிலான அமைப்பு முறையே பிராந்திய / மண்டல சந்தை ஆகும்.

**1.3 தேசிய சந்தைகள்**

- ஒரு நாட்டின் / ஒன்றியத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பகுதிகளின் மக்களது தேவைகளை ஒட்டி உற்பத்தி செய்யும் பொருட்களை அதன் எல்லைக்குள் நடைபெறும் விற்பனை மற்றும் நுகர்விற்கான பணபரிமாற்ற அமைப்பு முறையே தேசிய சந்தை ஆகும்.
- தேசிய சந்தையில் நடைபெறும் வணிகச் செயல்பாடுகள் நாட்டிற்கு வெளியே நடைபெற அந்நாட்டின் அரசு அனுமதிப்பதில்லை.

**1.4 சர்வதேச சந்தை / பன்னாட்டு சந்தை**

- பன்னாட்டு அளவிலான நுகர்வோர்களின் தேவைகளுக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை பணபரிமாற்றங்கள் மூலம் மொத்த வணிக முறையில் விற்பனை செய்யப்படும் அமைப்பே பன்னாட்டு சந்தை அல்லது சர்வதேச சந்தை எனப்படும்.

**2. நேரத்தின் அடிப்படையிலான சந்தை வகைகள்**

**2.1 மிகக் குறுகிய கால சந்தை**

- பூக்கள், காய்கறிகள், பழங்கள் போன்ற பருவகால உற்பத்தி பொருட்களை மிகக்குறுகிய கால அளவில் உடனடியாக மாற்ற முடியாத நிலையான அளிப்பில் பணபரிமாற்றங்கள் வழியே நடைபெறும் விற்பனை மற்றும் நுகர்வு அமைப்பே மிகக் குறுகிய கால சந்தை ஆகும்.

**2.2 குறுகிய கால சந்தை**

- குறுகிய கால சந்தை என்பது மிகக் குறுகிய கால சந்தை அமைப்பை காட்டிலும் சற்று கூடுதலான கால அளவும் உற்பத்தி பொருட்களின் அளிப்பின் அளவை சற்று மாற்றி அமைக்க கூடிய தன்மையும் கொண்ட அமைப்பாகும்

**2.3 நீண்ட கால சந்தை**

- நீண்ட கால அளவில் உற்பத்தியைக் கணக்கிட்டு அளிப்பின் அளவை எளிதாக மாற்றி அமைத்து சமநிலைவிலையை சரியான நேரத்தில் தீர்மானித்து நடைபெறும் உற்பத்தி, அளிப்பு, நுகர்வு அமைப்பே நீண்ட கால சந்தை ஆகும்

**3. பரிவர்த்தனையின் / பரிமாற்றத்தின் அடிப்படையிலான சந்தை வகைகள்**

**3.1 உடனடி சந்தை**

- விற்பனையாளர் மற்றும் நுகர்வோரிடையே கடன் இல்லாமல் உடனடியாக பணப் பரிமாற்றம் நிகழும் அமைப்பு முறையே உடனடி சந்தை ஆகும்.

www.kalvinews.com

**3.2 எதிர்கால சந்தை**

- விற்பனையாளர் மற்றும் நுகர்வோரிடையே உடனடி பணப்பரிமாற்றம் நிகழாமல் ஒப்பந்த மற்றும் வாய்மொழி வாக்குறுதி கடன் அடிப்படையில நிகழும் அமைப்பே எதிர்கால சந்தை ஆகும்.

**4. ஒழுங்கு முறை அடிப்படையிலான சந்தை வகைகள்**

4.1 பங்குசந்தை போன்று பொருத்தமான அரசு அலுவலர்களின் கண்காணிப்பில் நியாயமான நடைமுறைகளை உறுதி செய்து முறைகேடுகளின்றி ஒழுங்கு படுத்தப்பட்ட உற்பத்தி அல்லது உற்பத்திகளின் குழு அமைப்பே ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை எனப்படுகிறது.

**4.2 கட்டுபாடற்ற சந்தை**

- அரசு அலுவலர்களின் கண்காணிப்பின்றி கட்டுபாட்டு முறைகளின்றி ஒழுங்குபடுத்தப்படாத உற்பத்தி, அளிப்பு, விலை, நுகர்வு ஆகிய முடிவுகளை தானே மேற்கொள்ளும் அமைப்பே கட்டுப்பாடற்ற சந்தை ஆகும்.

**5. போட்டியின் தன்மை அடிப்படையிலான சந்தை வகைகள்**

**5.1 முற்றுரிமை**

- நெருக்கமான பதிலி பொருட்கள் (மாற்று பொருட்கள்) இல்லாத பொருட்களை ஒரே ஒரு உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளர் சந்தை முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்து தானே விலை நிர்ணயம் செய்யும் கட்டமைப்பு முறையே முற்றுரிமை எனப்படும்.

**5.2 ஏகபோக போட்டி**

- 1933 ஆம் ஆண்டில் ஹார்வர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் சேம்பர்லின் எழுதிய 'ஏகபோக போட்டியின் கோட்பாடு' நூலின் படி தனித்தன்மையும் ஒன்றொடு ஒன்று வேறுபட்டு இருக்கும் வகையிலான பொருட்களுக்கான சந்தையில் ஏராளமான உற்பத்தியாளர்களையும் நுகர்வோர்களையும் கொண்டு இயங்கும் அமைப்பு முறையே ஏகபோக போட்டி சந்தை ஆகும்.

**5.3 ஒலிகோபோலி**

- ஒலிகோ (சில) + பாலி(கட்டுப்பாடு) - கிரேக்கச் சொல்
- ஒரே மாதிரியான அல்லது வேறுபட்ட உற்பத்திப் பொருட்களில் சில விற்பனையாளர்கள் உள்ளதைக் குறிக்கும் சந்தை வடிவ அமைப்பே ஒலிகோபோலி ஆகும்..

**நுகர்வோர் பாதுகாப்பு**

- நுகர்வோரின் உரிமைகள் பாதுகாத்தல்,
- நியாயமான வணிக போட்டி,
- உற்பத்தி பொருட்கள் பற்றிய துல்லியமான தகவல்களை அறியச்செய்தல்,
- நியாயமற்ற வணிக நடைமுறைகளை ஒழுங்குப்படுத்துதல்,

www.kalvinews.com

- மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கான கூடுதல் பாதுகாப்பு,
- பொதுசுகாதார உணவு பாதுகாப்பு,
- சந்தையின் சிறந்த உற்பத்தி மற்றும் சேவைகளை தேர்வு செய்தல்.

  ஆகியனவற்றை நோக்கமாகக் கொண்ட அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் ஒரு வடிவமாக நுகர்வோர் சங்கங்களின் ஆலோசனைகளுடன் அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், தன் ஒழுங்குபடுத்தும் வணிக நிறுவனங்களையும் அடக்கிய (TRAI - தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (ம) IRDAI - ஆயுள் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் இந்தியாவின் மேம்பாட்டு ஆணையம் போன்ற) அமைப்பே நுகர்வோர் பாதுகாப்பு ஆகும்.

**நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்**

- நுகர்வோர் நலன்களை பாதுகாக்க.
- நுகர்வோர் குறைகளைத் தீர்ப்பதற்காக.
- நியாயமற்ற வணிக நடைமுறைகள்
- வணிக பொருட்களின் குறைபாடுகள்.
- சேவைகளில் உள்ள குறைகளை சரிபார்க்க, **நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் உள்ளது.**
- இந்தியா முழுவதும் நுகர்வோர் மன்றங்கள் (ம) மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் பரவலான வலையமைப்பை நிறுவி, ஒன்றிய மற்றும் மாநில - மாவட்ட அளவில் நுகர்வோர் பாதுகாப்பு சபைகளை அமைத்து, வணிக அமைப்புகளின் நுகர்வோர் புகார்களின் மீதான அணுகுமுறை மற்றும் நுகர்வோருக்கான அதிகாரங்களை உரிமைகளை மேம்படுத்தி நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்ற ஈரவையிலும் அக்டோபர் 1986 ல் நிறைவேற்றப்பட்டு 24 டிசம்பர் 1986ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**நுகர்வோர்**

- நுகர்வோர் என்பவர் தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக ஒரு பொருளை அல்லது ஒரு சேவையைப் பெற தன் வேலைவாய்ப்பு மூலம் தனது வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்பவர் ஆவார்.
- நுகர்வோரின் ஒப்புதலுடன் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற வாக்குறுதி பெற்று, பணம் செலுத்திய, ஓரளவு பணம் செலுத்திய மற்றும் வாக்குறுதி பெற்ற பயனாளிகளும் நுகர்வோர் ஆவர்.

**நுகர்வோர் இல்லாதவர்**

- உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை விலையின்றி (கட்டணமின்றி) (இலவசமாக) அல்லது வணிக நோக்கத்திற்காகவும் அல்லது ஒப்பந்த அடிப்படையிலும் பெறுவோர் நுகர்வோர் இல்லாதவர் ஆவர்.

www.kalvinews.com

**நியாயமற்ற வணிக நடைமுறை**

- தவறான பிரதிநிதித்துவம்,
- தரமில்லாத பொருட்கள் மற்றும் சேவைகள்,
- பயன்படுத்தப்பட்டு பின் புதுப்பிக்கப்பட்ட பொருட்கள்,
- உரிமையற்ற / பயன்பாடற்ற பொருட்கள் மற்றும் சேவைகள்,
- உத்திரவாதமற்ற / பொறுப்புறுதியற்ற உற்பத்தி பொருட்கள் (ம) சேவைகள்,
- தவறான விலைகுறிக்கப்பட்ட உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகள்,
- ஏமாற்று தள்ளுபடி விலை விளம்பரம்,
- நோக்கமற்று வழங்கப்படும் பரிசுப் பொருட்கள் (ம) சேவைகள்,
- பாதுகாப்பு தரமற்ற தகுதி வாய்ந்த அதிகாரத்தால் அமைக்கப்பட்ட விற்பனை பொருட்கள்,
- விலையேற்ற நோக்கத்துடன் அதிக எண்ணிக்கையிலான உற்பத்தி
- ஒரே வித பொருட்களின் விலையேற்றம் - பதுக்கல், அழித்தல்,
- மோசமான பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை,
- ஏமாற்று நடைமுறையிலான சேவை ஆகியனயாவும் நியாயமற்ற வணிக நடைமுறைகள் ஆகும்.

**நுகர்வோரின் அடிப்படை உரிமைகள்**

- அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை,
- பாதுகாப்பிற்கான உரிமை,
- தகவல் அறியும் உரிமை,
- தேர்ந்தெடுக்கும் உரிமை,
- பிரதிநிதித்துவ உரிமை,
- குறைதீர்க்கும் உரிமை,
- நுகர்வோர் கல்வி மற்றும் உரிமை,
- தூய்மையான சுற்றுப்புறச் சூழலை பெறுவதற்கான உரிமைகளாகும்

**நுகர்வோர் குறை தீர்க்கும் முகமை**

- ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புமிக்க உற்பத்தி பொருட்கள் / சேவைகளின் நுகர்வோர் குறைகளை தீர்க்க தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையமும்
- ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவான மதிப்புமிக்க உற்பத்தி பொருட்களின் / சேவைகளின் நுகர்வோர் குறைகளை தீர்க்க மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையமும்
- 20 இலட்ச வரையிலான மதிப்புமிக்க உற்பத்தி பொருட்களின் / சேவைகளின் நுகர்வோர் குறைகளை தீர்க்க மாவட்ட குறைதீர் ஆணையமும் (ஒரு மாவட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட குறைதீர் ஆணையங்களை அமைக்கலாம்) நுகர்வோரின் குறைதீர் முகமைகளாகும்.

www.kalvinews.com

**நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் - 2019**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் - 2019 ஆனது

- நவீன தொழிநுட்பங்களுக்கு ஏற்ப நுகர்வோர் குறைகளை குறித்த நேரத்தில் நீக்கவும் பயனுள்ள நிர்வாகத்தையும் நியாயமான தீர்வையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, 1986ல் இயற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு 2019ல் பாராளுமன்ற ஈரவையிலும் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

**நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் - 2019 சிறப்பியல்புகள்**

1. **இ - வணிக பரிமாற்றங்கள்**

- இணையத்தின் நேர்முகக் கட்டுப்பாட்டில் இல்லாத அல்லது இணையத்தின் இயக்க கட்டுப்பாட்டில் உள்ள பணப்பரிமாற்றங்கள், மின்னணு வழிமுறைகள், தொலைநோக்கி, நேரடி விற்பனை, பல நிலை சந்தைபடுத்துதல் மூலம் எந்தவொரு பொருளையும் வாங்கும் அல்லது சேவையைப் பெறும் நபரும் நுகர்வோர் என்று விரிவுபடுத்தப்பட்டு அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன..

2. **பணவியல் அதிகார வரம்பை மேம்படுத்துதல்**

- மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், நுகர்வோர் புகார்களை ஏற்றுக்கொள்ளவும், 1 கோடி ரூபாய் மதிப்பிற்கு மிகாமல் இருக்கும் உற்பத்தி பொருட்கள்/ சேவையின் மீதான புகார்களை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் விசாரிக்கவும், 1 கோடி ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட உற்பத்தி பொருட்கள் / சேவையின் மீதான புகார்களை தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் விசாரிக்கும் வகையிலும் பணவியல் அதிகார வரம்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

3. **புகார்களை இ - தாக்கல் செய்தல்**

- புகார்களை மின்னணு முறையில் இணையவழியில் தாக்கல் செய்வதற்கும், காணொளி கலந்தாய்வு முறையில் வாதிகளை விசாரிக்கவும் அல்லது ஆய்வு செய்வதற்கும் இச்சட்டத்திருத்தம் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. **மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம்**

- ஒழுங்குமுறை அதிகாரத்தை நிறுவுவதற்கு முன்மொழிந்து, நுகர்வோர் சட்ட மீறல் குறித்த விசாரணையை நடத்த, தலைமை இயக்குநர் தலைமையிலான விசாரணை பிரிவானது மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தால் நிறுவப்பட்டு உள்ளது.

5. **நியாயமற்ற வணிக நடைமுறைகள்**

- நியாயமற்ற வணிக நடைமுறைகளுக்கு வேறு எந்த சட்டத்தின் விதிகளின் படியும் வெளிப்படுத்தப்படாவிட்டால் நுகர்வோர் நம்பிக்கையுடன் வழங்கிய தனிப்பட்ட தகவல்களை பகிர்வதும் அடங்கும்.

www.kalvinews.com

6. **தவறான விளம்பரத்திற்கான அபராதம்**

- மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையமானது தவறான விளம்பரத்திற்காக உற்பத்தியாளர் / ஒப்புதல் அளிப்பவருக்கு 10 இலட்சம் ரூபாய் அபராதமும் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் பொருட்கள் மற்றும் சேவைக்கு ஓராண்டு தடையும் விதிக்கலாம்.
- அடுத்தடுத்த குற்றங்களுக்கு 50 இலட்சம் ரூபாயும், 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், மூன்று ஆண்டுகள் பொருட்கள்/ சேவைக்கான தடையும் விதிக்கலாம்.

**இந்தியாவில் நுகர்வோர் நீதிமன்றங்கள்**

1. **தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் (NCDRC)**

- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ன் படி 1988 ஆம் ஆண்டு பணிநிறைவு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியின் தலைமையில் புதுடெல்லியில் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் (NCDRC) அமைக்கப்பட்டது
- நுகர்வோர் நீதிமன்றங்களின் உச்ச அமைப்பாக மிக உயர்ந்த நுகர்வோர் மேல்முறையீட்டு நீதிமன்றமாக, 1 கோடி ரூபாய்க்கு மேலான இழப்பீட்டிற்காக இந்தியா முழுமைக்குமான நுகர்வோர் குறைதீர் ஆணையமாக தேசிய அளவிலான நுகர்வோர் நீதிமன்றம் இயங்குகிறது.

2. **மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் (SCDRC)**

- இருபது இலட்சத்திற்கு மேலான ஒரு கோடிக்கு குறைவான இழப்பீடு கோரப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மேல்முறையீட்டு அதிகார வரம்பையும் கொண்டது மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் (SCDRC) ஆகும்.

3. **மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் (DCDRC)**

- 20 இலட்சம் வரையிலான இழப்பீடு குறித்த புகார்களை விசாரிக்க மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் (DCDRC) அனுமதிக்கிறது.

**நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான முக்கியமான பிற சட்டங்கள்**

- நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் - 1986
- நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்திருத்தம் - 2019
- சட்ட அளவீட்டு சட்டம் - 2009
- இந்திய தர நிர்ணய பணியகம் - 1986
- அத்தியாவசிய பொருட்கள் சட்டம் - 1955.
- கறுப்பு சந்தைப்படுத்துதல் தடுப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பராமரிப்பு சட்டம் - 1980.

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்**

1. மிகச் சரியான கூற்று எது?

கூற்று 1: சந்தை எனப்படுவது வாங்குபவர்களும் விற்பவர்களும் தங்கள் பொருள்களை மற்றும் சேவைகளை பரிமாறிக் கொள்ளும் இடம்

கூற்று 2: சந்தை எனப்படுவது பொருள்கள், சேவைகள், தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை வாங்குவதற்கும் விற்பதற்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்களுக்கு இடையே பணப்பரிமாற்று முறையில் நடைபெறும் அமைப்பு.

கூற்று 3: சந்தை எனப்படுவது கடைகள் மற்றும் நுகர்வோர் நெரிசலாக வந்து செல்லும் புவியியல் மற்றும் இயற்பியல் ரீதியான இருப்பிடம்.

கூற்று 4: சந்தை எனப்படுவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்புகள் வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடுகின்ற இடம்

(1) கூற்று 1 மற்றும் 2 சரி (2) கூற்று 2 மற்றும் 3 சரி

(3) கூற்று 3 மற்றும் 4 சரி (4) கூற்று 1 மற்றும் 4 சரி

2. பொருளியல் அடிப்படையில் எவை தவறான கூற்றுகள்?

கூற்று 1: பொருள்கள் சேவைகள் மற்றும் தகவல்களை பரிமாறிக்கொள்ளும் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட அமைப்பு சந்தை என அழைக்கப்படும்

கூற்று 2: ஒரு சந்தை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்புகள் வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடுகின்ற இடமாக அமைகின்றது

கூற்று 3: சந்தை என்பது கடைகள் மற்றும் நுகர்வோர் நெரிசலாக வந்து செல்லும் புவியியல் இருப்பிடத்தைக் குறிப்பதாகும்

கூற்று 4: சந்தை என்பது வாங்குபவர்களும் விற்பவர்களும் தங்கள் பொருள்கள் மற்றும் சேவைகளை பரிமாறிக்கொள்ளும் இயற்கை அல்லது இயற்பியல் சார்ந்த இடமாகும்

(1) கூற்று 1 மற்றும் 2 சரி (2) கூற்று 2 மற்றும் 3 சரி

(3) கூற்று 3 மற்றும் 4 சரி (4) கூற்று 1 மற்றும் 4 சரி

3. சந்தை என்பது பொருட்கள் சேவைகள், தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை வாங்குவதற்கும் விற்பதற்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்கள் ஒன்றாக நேரடி அல்லது மறைமுக தொடர்பிலும் பணப்பரிமாற்ற முறையில் ஈடுபடும் அமைப்பு ஆகும்

(1) பழங்கால முறை (2) புவியியல் முறை

(3) இயற்பியல் முறை (4) பொருளியல் முறை

4. போட்டித் தன்மையுடன் கூடிய சந்தையானது _______ கொண்ட அமைப்பாகும்.

(1) ஒரு நுகர்வோர் மற்றும் ஒரு விற்பனையாளர்

(2) ஒன்றுக்கும் மேற்பட்ட நுகர்வோர்கள் மற்றும் விற்பனையாளர்கள்

(3) ஒன்றுக்கும் மேற்பட்ட நுகர்வோர்கள்

(4) ஒன்றுக்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள்

www.kalvinews.com

5. சந்தை அமைப்பில் _______ மற்றும் _______ இடையே பணப்பரிமாற்றம் நடைபெறுகிறது

(1) உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள்

(2) உற்பத்தியாளர்கள் மற்றும் முகவர்கள்

(3) விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்

(4) உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்

6. சந்தையில் _______ மற்றும் _______ ஒன்றாக வருகின்றனர்

(1) உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள்

(2) உற்பத்தியாளர்கள் மற்றும் முகவர்கள்

(3) உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்

(4) விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்

7. கூற்றையும், எடுத்துக்காட்டையும் ஆராய்க.

கூற்று: பொருளியலில் சந்தை என்ற சொல் பண்டத்திற்கான கடைகளையும் அல்லது பொருள்களின் தொகுப்பையும் குறிக்கிறது.

எடுத்துக்காட்டு: அரிசி சந்தை, துணிகளுக்கான சந்தை மின்னணு பொருள்களுக்கான சந்தை.

(1) கூற்று சரி, எடுத்துக்காட்டு தவறு (2) கூற்று தவறு, எடுத்துக்காட்டு சரி

(3) கூற்று மற்றும் எடுத்துக்காட்டு சரி (4) கூற்று மற்றும் எடுத்துக்காட்டு தவறு

8. சந்தை என்பது பொதுவாக பரந்து விரிந்த பொருளாதார மண்டலப் பகுதி மக்களின் _______ விநியோகிக்கும் சக்திகளை கொண்டது.

(1) தேவையையும் உற்பத்தியையும் (2) உற்பத்தியையும் அளிப்பையும்

(3) தேவையையும் அளிப்பையும் (4) தேவையையும் உழைப்பையும்

9. சந்தையை உருவாக்குவதற்கு _______ ஒரு குழுவாக இருக்க வேண்டும்.

(1) நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்கள்

(2) நுகர்வோர் மற்றும் முகவர்கள்

(3) விற்பனையாளர்கள் மற்றும் முகவர்கள்

(4) உற்பத்தியாளர்கள் மற்றும் முகவர்கள்

10. விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் இடையே _______ சார்ந்த உறவு இருக்க வேண்டும்.

(1) நட்பு (2) வணிகம் (3) நிர்வாகம் (4) பணி

11. உற்பத்தி காரணி அல்லாததை கண்டறிக.

(1) நிலம் (2) மூலதனம் (3) உழைப்பு (4) முகமை

www.kalvinews.com

12. கூற்று: விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் என இருவரும் சந்தையைப் பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும்

அறிவுகள்: தயாரிப்புகள் / உற்பத்தி, நுகர்வோர் தேர்வு, விருப்பத் தேர்வு, முன்னுரிமை, நவீன காலத்திற்கு ஏற்ப மாற்றங்கள்

(1) கூற்று மற்றும் அறிவுகள் சரி (2) கூற்று மற்றும் அறிவுகள் தவறு

(3) கூற்று சரி அறிவு தவறு (4) கூற்று தவறு அறிவு சரி

13. சந்தையின் முதன்மை வகைகள் _______ மற்றும் _______.

(1) தயாரிப்பு சந்தை மற்றும் காரணிச் சந்தை

(2) உள்ளூர் சந்தை மற்றும் மண்டல பகுதி சந்தை

(3) தேசிய சந்தை மற்றும் பன்னாட்டு சந்தை

(4) குறுகிய கால சந்தை மற்றும் நீண்ட கால சந்தை

14. பொருத்துக.

சந்தை வகைகள்

i. புவியியல் இருப்பிடம் - 1. முற்றுரிமை

ii. நேரம் - 2. கட்டுப்பாடற்ற சந்தை

iii. பரிமாற்றம் - 3. எதிர்கால சந்தை

iv. ஒழுங்கு முறை - 4. குறுகிய கால சந்தை

v. போட்டியின் தன்மை - 5. உள்ளூர் சந்தை

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (2) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (3) | 5 | 4 | 1 | 2 | 3 |
| (4) | 1 | 2 | 5 | 3 | 4 |

15. கூற்று: உள்ளூர் சந்தை என்பது புவியியல் இருப்பிடம் அடிப்படையிலான அமைப்பு

காரணம்: விரைவில் பாழாகும் / அழுகும் தன்மை கொண்ட அன்றாட பயன்பாட்டிற்குரிய பொருட்களை உள்ளூரிலேயே உற்பத்தி செய்து உள்ளூரிலேயே விற்பனை செய்து உள்ளூரிலேயே நுகரும் அமைப்பு முறை. (உள்ளூர் சந்தையில் விற்பனையாளர்களும் நுகர்வோர்களும் உள்ளூர் பகுதியை சார்ந்தவர்களாகவே இருப்பர்.)

(1) கூற்றும் காரணமும் சரியானது

(2) கூற்றும் காரணமும் பொருத்தமானது

(3) கூற்று சரியானது காரணம் தவறானது

(4) கூற்றும் காரணமும் தவறானது

16. உள்ளூர் சந்தையின் புவியியல் பரப்பை விட பரந்த அளவில் உள்ள மண்டல பகுதி அல்லது சில சிறிய மாநிலங்கள் / ஒன்றிய பகுதிகள் இணைந்த பகுதியில்

www.kalvinews.com

விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு இடையே பணப்பரிமாற்றங்கள் வழியே நடைபெறும் வணிக உறவு அடிப்படையிலான அமைப்பு _______.

(1) பிராந்திய சந்தை (2) தேசிய சந்தை

(3) பன்னாட்டு சந்தை (4) உள்ளூர் சந்தை

17. சரியான இணையைத் தேர்வு செய்க.

(1) இருப்பிடம் - பன்னாட்டு சந்தை

(2) பரிமாற்றம் - நீண்டகால சந்தை

(3) ஒழுங்குமுறை - ஏகபோக போட்டி

(4) போட்டியின் தன்மை - ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை

18. நீண்ட கால அளவில் உற்பத்தியை கணக்கிட்டு அளிப்பின் அளவை எளிதாக மாற்றி அமைத்து சமநிலை விலையை சரியான நேரத்தில் தீர்மானித்து நடைபெறும் உற்பத்தி நுகர்வு அளிப்பு அமைப்பு _______.

(1) உடனடி சந்தை (2) ஒலிகோபோலி

(3) நீண்டகால சந்தை (4) ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை

19. ஒரு நாட்டின் / ஒன்றியத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பகுதிகளின் மக்களது தேவைகளை ஒட்டி உற்பத்தி செய்யும் பொருட்களை அதன் எல்லைக்குள் நடைபெறும் விற்பனை மற்றும் நுகர்விற்கான பணப்பரிமாற்ற அமைப்பு _______.

(1) பன்னாட்டு சந்தை (2) தேசிய சந்தை

(3) ஏகபோக போட்டி சந்தை (4) எதிர்கால சந்தை

20. பன்னாட்டு அளவிலான நுகர்வோர்களின் தேவைகளுக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை பணப்பரிமாற்றங்கள் மூலம் மொத்த வணிக முறையில் விற்பனை செய்யப்படும் அமைப்பு _______.

(1) சர்வதேச சந்தை (2) பிராந்திய சந்தை

(3) கட்டுப்பாடற்ற சந்தை (4) முற்றுரிமை சந்தை

21. கூற்றிற்குரிய காரணத்தை தேர்வு செய்க

கூற்று: மிகக் குறுகிய கால சந்தை என்பது நேரத்தின் அடிப்படையிலான சந்தை வகையாகும்.

காரணம்:

1) பூக்கள், காய்கறிகள், பழங்கள் போன்ற பருவகால உற்பத்தி பொருட்களை மிகக்குறுகிய கால அளவில் உடனடியாக மாற்ற முடியாத நிலையான அளிப்பில் பணப்பரிமாற்றங்கள் வழியே நடைபெறும் விற்பனை மற்றும் நுகர்வு அமைப்பு.

www.kalvinews.com

2) விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோரிடையே உடனடி பணபரிமாற்றம் நிகழாமல் ஒப்பந்த மற்றும் வாய்மொழி வாக்குறுதி கடன் அடிப்படையில் நிகழும் அமைப்பு

3) சிறிது கூடுதலான கால அளவும் உற்பத்தி பொருட்களின் அளிப்பின் அளவை சற்று மாற்றி அமைக்க கூடிய தன்மையும் கொண்ட அமைப்பாகும்.

4) விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோரிடையே கடன் இல்லாமல் உடனடியாக பணபரிமாற்றம் நிகழும் அமைப்பு.

(1) காரணம் 1 (2) காரணம் 2 (3) காரணம் 3 (4) காரணம் 4

22. மிகக்குறுகிய கால சந்தை அமைப்பை காட்டிலும் சற்று கூடுதலான கால அளவும் உற்பத்தி பொருட்களின் அளிப்பின் அளவை சற்று மாற்றி அமைக்கக்கூடிய தன்மையும் கொண்ட அமைப்பு _______.

(1) நீண்ட கால சந்தை (2) குறுகிய கால சந்தை

(3) உடனடி சந்தை (4) எதிர்கால சந்தை

23. நீண்டகால அளவில் உற்பத்தியைக் கணக்கிட்டு அளிப்பின் அளவை எளிதாக மாற்றி அமைத்து சமநிலை விலையை சரியான நேரத்தில் தீர்மானித்து நடைபெறும் உற்பத்தி அளிப்பு, நுகர்வு சார் அமைப்பு _______.

(1) குறுகிய கால உற்பத்தி (2) நீண்டகால உற்பத்தி

(3) உடனடி உற்பத்தி (4) எதிர்கால உற்பத்தி

24. காரணத்திற்குரிய கூற்று:

காரணம்: பூக்கள், காய்கறிகள், பழங்கள் போன்ற உற்பத்தி பொருட்களின் அளிப்பின் அளவானது உடனடியாக மாற்ற இயலாத நிலையான தன்மை கொண்டது.

கூற்று 1: மிகக் குறுகிய கால சந்தையானது உடனடியாக மாற்ற இயலாத நிலையான அளிப்பை கொண்டதாகும்.

கூற்று 2: குறுகிய கால சந்தையானது சற்று மாற்றி அமைக்க கூடிய அளிப்பை கொண்டதாகும்.

கூற்று 3: நீண்டகால சந்தையானது எளிதாக மாற்றி அமைக்கும் சமநிலைவிலையை சரியான நேரத்தில் தீர்மானித்து விடும் அளிப்பை கொண்டதாகும்.

(1) காரணத்திற்குரிய கூற்று - 1 ஆகும் (2) காரணத்திற்குரிய கூற்று - 2 ஆகும்

(3) காரணத்திற்குரிய கூற்று - 3 ஆகும் (4) தவறான காரணம் ஆகும்

25. சமநிலை விலையை சரியான நேரத்தில் தீர்மானிக்க உதவுவது _______.

(1) நீண்ட கால அளவில் உற்பத்தியைக் கணக்கிடும் அளிப்பு

(2) குறுகிய கால அளவில் உற்பத்தியைக் கணக்கிடும் அளிப்பு

(3) மிக குறுகிய கால அளவில் உற்பத்தியைக் கணக்கிடும் அளிப்பு

(4) விற்பனையாளர் மற்றும் நுகர்வோரிடையே கடனில்லாது உடனடியாக நிகழும் பணப்பரிமாற்றம்.

www.kalvinews.com

26. தவறான இணையைத் தேர்வு செய்க.

(1) குறுகிய கால சந்தை - அளிப்பின் அளவை சற்று மாற்றி அமைக்கும் தன்மை

(2) நீண்ட கால சந்தை - அளிப்பின் அளவை எளிதாக மாற்றி அமைக்கும் தன்மை

(3) மிகக் குறுகியகால சந்தை - அளிப்பின் அளவை உடனடியாக மாற்றிமைக்க முடியாத நிலையான தன்மை

(4) எதிர்கால சந்தை - விற்பனையாளர் மற்றும் நுகர்வோர் இடையே கடன் இல்லாத உடனடி பணப்பரிமாற்றம் நிகழும் அமைப்பு தன்மை

27. விற்பனையாளர் மற்றும் நுகர்வோரிடையே கடன் இல்லாமல் உடனடியாக பணப்பரிமாற்றம் நிகழும் அமைப்பு _______.

(1) உடனடி சந்தை (2) எதிர்கால சந்தை

(3) ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை (4) கட்டுப்பாடற்ற சந்தை

28. விற்பனையாளர் மற்றும் நுகர்வோரிடையே உடனடி பணப்பரிமாற்றம் நிகழாமல் ஒப்பந்த மற்றும் வாய்மொழி வாக்குறுதி கடன் அடிப்படையில் நிகழும் அமைப்பு எது?

(1) கட்டுப்பாடற்ற சந்தை (2) ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை

(3) உடனடி சந்தை (4) எதிர்கால சந்தை

29. அரசு அலுவலர்களின் கண்காணிப்பின்றி ஒழுங்குபடுத்தப்படாத உற்பத்தி, அளிப்பு, விலை, நுகர்வு ஆகிய முடிவுகளை தானே மேற்கொள்ளும் அமைப்பு _______.

(1) ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை (2) ஏகபோக போட்டி

(3) கட்டுப்பாடற்ற சந்தை (4) எதிர்கால சந்தை

30. பங்குசந்தை போன்று பொருத்தமான அரசுஅலுவலர்களின் கண்காணிப்பில் நியாயமான நடைமுறைகளை பின்பற்ற உறுதி செய்யப்பட்ட உற்பத்தி அல்லது உற்பத்தி குழு அமைப்பு. _______.

(1) கட்டுப்பாடற்ற சந்தை (2) ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை

(3) ஒலிகோபோலி (4) முற்றுரிமை

31. நெருக்கமான பதிலி பொருட்கள் (மாற்று பொருட்கள்) இல்லாத பொருட்களை ஒரே ஒரு உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளர் சந்தை முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்து தானே விலை நிர்ணயம் செய்யும் கட்டமைப்பு முறை எது?

(1) ஏகபோக போட்டி (2) ஒலிகோபோலி

(3) முற்றுரிமை (4) கட்டுப்பாடற்ற சந்தை

32. தனித்தன்மையும் ஒன்றோடு ஒன்று வேறுபட்டு இருக்கும் வகையிலான பொருட்களுக்கான சந்தையில் ஏராளமான உற்பத்தியாளர்களையும் விற்பனையாளர்களையும் நுகர்வோர்களையும் கொண்டு இயங்கும் அமைப்பு. _______.

(1) முற்றுரிமை (2) ஏகபோக போட்டி

(3) ஒலிகோபோலி (4) உடனடி சந்தை

www.kalvinews.com

33. ஒரே மாதிரியான அல்லது வேறுபட்ட உற்பத்தி பொருட்கள் மற்றும் சில விற்பனையாளர்களைக் கொண்ட சந்தை வடிவமைப்பு. _______.

(1) ஒலிகோபோலி (2) ஏகபோக போட்டி

(3) முற்றுரிமை (4) ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை

34. பொருளியல் அடிப்படையில் சந்தை என்பது ஒரு _______.

(1) புவியியல் சார் இடம் (2) இயற்பியல் சார் இடம்

(3) இயற்கை சார் இடம் (4) பொருளியல் சார் அமைப்பு

35. உள்ளூர் சந்தையில் விற்பனையாளர்களும் நுகர்வோர்களும் _______ பகுதியைச் சேர்ந்தவர்கள்.

(1) வெளிநாடு (2) வெளிமாநிலம்

(3) வெளியூர் (4) உள்ளூர்

36. உள்ளூர் சந்தையில் விற்பனையும் நுகர்வும் நிகழும் இடம் _______.

(1) உள்ளூர் (2) வெளியூர்

(3) வெளி மாநிலம் (4) வெளிநாடு

37. தேசிய சந்தைகளின் புவியியல் பரப்பு _______.

(1) நாடு / ஒன்றியம் (2) மாநிலங்கள்

(3) ஒன்றிய பகுதிகள் (4) மண்டலப்பகுதி

38. மண்டல/ பிராந்திய சந்தைகளின் புவியியல் பரப்பு _______.

(1) நாடு / ஒன்றியம் (2) மாநிலங்கள்

(3) ஒன்றிய பகுதிகள் (4) மாநில / ஒன்றிய பகுதிகளின் தொகுப்பு

39. தேசிய சந்தைகளின் வணிகச் செயல்பாடுகள் _______ நடைபெறும்.

(1) நாடு / ஒன்றியத்திற்குள் (2) மாநிலத்திற்குள்

(3) பன்னாட்டு அளவில் (4) மண்டல அளவில்

40. சர்வதேச சந்தை அமைப்பில் _______ ஏற்ப உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மொத்த வணிகமுறையில் விற்பனை செய்யப்படும்.

(1) பன்னாட்டு அளவிலான நுகர்வு தேவை

(2) தேசிய/ ஒன்றிய அளவிலான நுகர்வு தேவை

(3) மாநில / ஒன்றிய பகுதிகள் அளவிலான நுகர்வு தேவை

(4) மண்டல பகுதிகள் அளவிலான நுகர்வு தேவை

41. பன்னாட்டு சந்தை _______ வணிகமுறை அமைப்பு.

(1) மொத்த (2) சில்லரை

(3) மொத்தம் மற்றும் சில்லரை (4) தவணை

www.kalvinews.com

42. உடனடி சந்தையானது _______ வழியே நிகழும் வணிகமுறை அமைப்பு.

(1) உடனடி பணப்பரிமாற்றம் (2) ஒப்பந்த கடன்

(3) வாக்குறுதி கடன் (4) தவணை முறை கடன்

43. எதிர்கால சந்தையானது _______ வழியே நிகழும் வணிகமுறை அமைப்பு.

(1) தவணைமுறை கடன் (2) ஒப்பந்த / வாக்குறுதிகடன்

(3) பண்ட மாற்றம் (4) உடனடி பணப்பரிமாற்றம்

44. சந்தையில் உடனடியாக மாற்றம் செய்ய முடியாத நிலையான அளவிற்கான அளிப்பிற்கான காரணம் _______.

(1) மிகக் குறுகிய கால அளவில் உற்பத்தி அளவை கணக்கிட இயலாமை

(2) குறுகிய கால அளவில் உற்பத்தி பொருட்களின் அளவை ஓரளவு கணக்கிடுதல்

(3) நீண்ட கால அளவில் உற்பத்தி பொருட்களின் அளவைக் கணக்கிடுதல்

(4) மிக நீண்டகால அளவில் உற்பத்தி பொருட்களின் அளவைக் கணக்கிடுதல்

45. சமநிலை விலையை சரியான நேரத்தில் தீர்மானித்து நடைபெறும் உற்பத்தி, அளிப்பு, நுகர்வு ஆகியவற்றிற்கான காரணம் _______.

(1) நீண்ட கால அளவில் உற்பத்தியைக் கணக்கிட்டு அளிப்பின் அளவை எளிதாக மாற்றுதல்

(2) குறுகிய கால அளவின் ஓரளவு உற்பத்தியைக் கணக்கிட்டு அளிப்பின் அளவை சற்று மாற்றுதல்

(3) மிகக் குறுகிய கால அளவில் உற்பத்தி பொருளின் அளவைக் கணக்கிட இயலாமை

(4) விற்பனையாளர் நுகர்வோரிடையே உடனடியாக பணப்பரிமாற்றம் செய்தல்

46. பொருத்துக.

i. ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை - 1. ஒப்பந்த / வாக்குறுதி கடன்

ii. எதிர்கால சந்தை - 2. கடனற்ற பணப்பரிமாற்றம்

iii. உடனடி சந்தை - 3. பதிலி இல்லா பொருட்கள்

iv. மிகக் குறுகிய கால சந்தை - 4. பங்கு சந்தை

v. முற்றுரிமை - 5. பூக்கள், காய்கறிகள், பழங்கள்

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 2 | 3 | 5 | 1 | 4 |
| (2) | 4 | 1 | 5 | 3 | 2 |
| (3) | 4 | 5 | 1 | 2 | 3 |
| (4) | 5 | 4 | 3 | 2 | 1 |

47. அரசு அலுவலர்களின் கண்காணிப்பில் நியாயமான நடைமுறைகளை உறுதிசெய்து முறைகேடுகளின்றி நடைபெறுவது _______.

(1) கட்டுப்பாடற்ற சந்தை (2) ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை

(3) முற்றுரிமை (4) ஒலிகோபோலி

www.kalvinews.com

48. உற்பத்தி, அளிப்பு, விலை, நுகர்வு ஆகியவற்றின் முடிவுகளை தானே மேற்கொள்வது _______.

(1) ஏகபோக போட்டி சந்தை
(2) முற்றுரிமை
(3) கட்டுப்பாடற்ற சந்தை
(4) குறுகிய கால சந்தை

49. கீழ்க்காணும் குறிப்புகள் குறிப்பிட்ட ஒரு சந்தையைக் குறிக்கிறது. அச்சந்தை _______.

a. நெருக்கமான பதிலி பொருட்கள் இல்லாத பொருட்களின் உற்பத்தி
b. ஒரே ஒரு உற்பத்தியாளர் / விற்பனையாளர்
c. சந்தை முழுமையையும் கட்டுப்பாட்டில் வைத்து இருத்தல்
d. தானே விலையை நிர்ணயம் செய்தல்

(1) ஏகபோக போட்டி
(2) முற்றுரிமை
(3) ஒலிகோபோலி
(4) எதிர்கால சந்தை

50. "ஏகபோக போட்டியின் கோட்பாடு" என்ற நூலின் நூலாசிரியர் _______.

(1) சேம்பர்லின்
(2) ஜெயரஞ்சன்
(3) ரகுராம் ராஜன்
(4) அமர்த்தியாசென்

51. ஒலிகோபோலியின் பொருள் _______.

(1) கட்டுப்பாடற்ற
(2) ஒழுங்குபடுத்தப்பட்ட
(3) சில கட்டுப்பாடு
(4) முழு கட்டுப்பாடு

52. நுகர்வோர் சங்கங்களின் ஆலோசனைகளுடனான அரசு பொதுத்துறை தன் ஒழுங்குபடுத்தும் வணிக நிறுவனங்களையும் அடக்கிய அமைப்பு _______.

(1) நுகர்வோர் குறைதீர்க்கும் முகமை
(2) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்
(3) நுகர்வோரது அடிப்படை உரிமைகள்
(4) நுகர்வோர் பாதுகாப்பு

53. தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் _______.

(1) IRDAI
(2) TRAI
(3) SCDRC
(4) DCDRC

54. ஆயுள் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் இந்தியாவின் மேம்பாட்டு ஆணையம் _______.

(1) IRDAI
(2) TRAI
(3) NCDRC
(4) SCDRC

55. தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக ஒரு பொருளை அல்லது ஒரு சேவையைப் பெற தன்வேலைவாய்ப்பு மூலம் தனது வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்பவர் _______.

(1) உற்பத்தியாளர்
(2) வணிகர்
(3) நுகர்வோர்
(4) முகவர்

www.kalvinews.com

56. நுகர்வோர் ஒப்புதலுடன் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற வாக்குறுதிபெற்ற பணம் செலுத்திய, ஓரளவு பணம் செலுத்திய மற்றும் வாக்குறுதி பெற்ற பயனாளிகள் ________.

(1) நுகர்வோர் அல்லாதோர் (2) நுகர்வோர்
(3) உற்பத்தியாளர் (4) முகவர்

57. தவறான கூற்றைக் கண்டறிக.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டமானது

(1) நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துதல்
(2) நுகர்வோர் குறைதீர் ஆணையம் மூலம் முறையீடு
(3) நியாயமற்ற வணிக நடைமுறைகளை கட்டுப்படுத்துதல்
(4) நுகர்வோருக்கு ஒப்பந்த வாக்குறுதி கடன் அளித்தல்

58. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் முதன்முதலில் இயற்றப்பட்டது ________.

(1) அக்டோபர் 1986 (2) ஆகஸ்ட் 2019 (3) டிசம்பர் 1986 (4) ஏப்ரல் 2010

59. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் எப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டது ________.

(1) 24.12.1986 (2) 24.08.2009 (3) 26.01.1950 (4) 15.08.1948

60. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் மேம்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஆண்டு ________.

(1) 1947 (2) 1950 (3) 1986 (4) 2009

61. உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை விலையின்றி கட்டணமின்றி இலவசமாகவும் அல்லது வணிக நோக்கத்திற்காகவும் அல்லது ஒப்பந்த அடிப்படையிலும் பெறுவோர்

(1) நுகர்வோர் அல்லாதோர் (2) நுகர்வோர்
(3) உற்பத்தியாளர் (4) விற்பனையாளர்

62. நுகர்வோர் என்பவர் ________.

(1) பணம் செலுத்தியவர்
(2) வாக்குறுதி பெற்றவர்
(3) ஓரளவு பணம் செலுத்தியவர் / ஓரளவு வாக்குறுதி பெற்றவர்
(4) விலை அல்லது கட்டண மின்றி இலவசமாக பெற்றவர்

63. நுகர்வோர் இல்லாதவர் பற்றிய கருத்துக்களில் தவறானதைக் கண்டறிக.

(1) கட்டணமின்றி பொருளைப் / சேவையைப் பெறுபவர்
(2) வணிக நோக்கத்திற்காக பொருளைப் / சேவையைப் பெறுபவர்
(3) ஒப்பந்த அடிப்படையிலான சேவையைப் பெறுபவர்
(4) பணம் செலுத்தியவர்

www.kalvinews.com

64. "நியாயமற்ற வர்த்தக நடைமுறை குறித்த கருத்துக்களில், தவறானதை நீக்குக

(1) தவறான பிரதிநிதித்துவம்

(2) பொருள் / சேவையின் விலையை தவறாகக் குறித்தல்

(3) தரமற்ற பொருள் மற்றும் சேவை

(4) பயன்பாடுள்ள பொருள் மற்றும் சேவை

65. நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கருத்துக்களில் தவறானதைக் கண்டறிக.

(1) நுகர்வோர் உரிமைகள்

(2) நியாயமான வணிகப்போட்டி

(3) சந்தையில் துல்லியமான தகவல்கள்

(4) பேரம் பேசும் விலையில் விற்பனை செய்தவற்கான விளம்பரம்

66. கீழ்க்கண்ட விளம்பர வாசகங்கள் இடம்பெறும் வணிகம் _______ எனப்படும்.

**"விற்பனை செய்யப்பட்ட பொருள் திரும்ப பெறப்பட மாட்டாது**

**(அல்லது)**

**பொருட்களை மாற்ற இயலாது**

**(அல்லது)**

**எந்த சூழலிலும் பணம் திருப்பித்தர மாட்டாது"**

(1) முறையற்ற வணிக நடவடிக்கை (2) நுகர்வோர் பாதுகாப்பு

(3) நுகர்வோர் உரிமை (4) வணிக உரிமை

67. நுகர்வோரின் உரிமைகள் நியாயமான வணிக போட்டி மற்றும் துல்லியமான தகவல்களை சந்தையில் இருக்கும் சூழலை ஏற்படுத்த இயற்றப்பட்ட சட்டங்களின் குழு _______.

(1) நுகர்வோர் உரிமை (2) நுகர்வோர் பாதுகாப்பு

(3) வணிக உரிமை (4) வணிக பாதுகாப்பு

68. நுகர்வோர் பாதுகாப்பு என்ற கருத்தாக்கத்திற்குத் தொடர்பில்லாத கூற்றைக் கண்டறிக.

(1) நுகர்வோர் அமைப்புகளின் ஆலோசனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது

(2) நுகர்வோர் சந்தையில் சிறந்த தேர்வுகளை அனைவரும் எடுக்க உதவுகிறது

(3) நுகர்வோர் புகார்களுக்கு நடவடிக்கை எடுக்க உதவுகிறது

(4) ஓரளவு பணம் செலுத்தியவர் மற்றும் ஓரளவு வாக்குறுதி பெற்றவர்

69. "நுகர்வோருக்கான மகாசாசனம்" என்றழைக்கப்படுவது _______.

(1) நுகர்வோர் பாதுகாப்பு

(2) அடிப்படை நுகர்வோர் உரிமைகள்

(3) நுகர்வோர் விழிப்புணர்வு இயக்கம்

(4) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986

www.kalvinews.com

70. அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை, தகவல் அறியும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, பிரதிநிதித்துவ உரிமை, குறைதீர்க்கும் உரிமை, நுகர்வோர் கல்வி உரிமை மற்றும் தூய்மையான சுற்றுச் சூழலைப் பெறுவதற்கான உரிமை _______.

(1) அடிப்படை நுகர்வோர் உரிமை
(2) அடிப்படை கல்வி உரிமை
(3) அடிப்படை பேச்சுரிமை
(4) அடிப்படை வாழ்வுரிமை

71. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986ல் உள்ளடங்காதது

(1) நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், பொருட்கள் சேவைகளின் குறைபாடுகளுக்கான குறைகளை சரிபார்த்தல்
(2) நாடு முழுவதும் நுகர்வோர் மன்றங்கள் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் பரவலான வலையமைப்பு
(3) நுகர்வோர் புகார் தொடர்பாக வணிக அமைப்புகளது அணுகுமுறையை மேம்படுத்துதல்
(4) பொருளை / சேவையை முறையே விலையின்றி, கட்டணமின்றி பெறுபவர்

72. கூற்று: அரசு நிறுவனங்கள் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தன் ஒழுங்குபடுத்தும் வணிக நிறுவனங்கள் நுகர்வோர் பாதுகாப்பை ஊக்குவிக்கின்றன

எடுத்துக்காட்டு:

1. TRAI - இந்திய தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்
2. IRDAI - ஆயுள் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் இந்தியாவின் மேம்பாட்டு ஆணையம்

(1) கூற்று, எடுத்துக்காட்டு 1 மற்றும் 2 சரி
(2) கூற்று, எடுத்துக்காட்டு 1 மற்றும் 2 தவறு
(3) கூற்று, எடுத்துக்காட்டு 1 சரி மற்றும் 2 தவறு
(4) கூற்று சரி, எடுத்துக்காட்டு 1 மற்றும் 2 தவறு

73. ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புமிக்க பொருட்கள் மற்றும் சேவைக்கான குறைகளை தீர்ப்பதற்காக மேல்முறையீடு செய்யப்படும் இடம் _______.

(1) தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்
(2) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்
(3) மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்
(4) நுகர்வோர் விழிப்புணர்வு இயக்கம்

74. 20 இலட்சத்திற்கு அதிகமாகவும் ஒரு கோடி ரூபாய்க்கு குறைவாகவும் மதிப்புடைய பொருட்கள் மற்றும் சேவைகளின் குறைகளைத் தீர்ப்பதற்கான மேல்முறையீட்டு இடம் _______.

(1) தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

www.kalvinews.com

(2) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

(3) மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்

(4) நுகர்வோர் விழிப்புணர்வு இயக்கம்

75. 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களின் மற்றும் சேவைகளின் குறைகளைத் தீர்க்கும் முறையீட்டு இடம் _______.

(1) தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

(2) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

(3) மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்

(4) நுகர்வோர் விழிப்புணர்வு இயக்கம்

76. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019 ஆனது _______ சட்டத்தின் திருத்தச் சட்டம்.

(1) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் - 1986

(2) குழந்தைகளுக்கான கட்டாய மற்றும் தடையற்ற கல்வி உரிமைச் சட்டம்- 2009

(3) சட்ட அளவீட்டுச் சட்டம் - 2009

(4) பொருட்களின் சட்டம் - 1980

77. ஒரு மாவட்டத்திற்குள் தேவைக்கு ஏற்ப _______ நுகர்வோர் நீதிமன்றங்களை அந்தந்த மாநில அரசுகள் நிறுவலாம்.

(1) ஒன்றுக்கு மேற்பட்ட (2) ஒரே ஒரு

(3) இரண்டு (4) மூன்று

78. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019ல் இல்லாத இயல்புகள்

(1) இ - வணிக பணப்பரிமாற்றம்

(2) பணவியல் அதிகார வரம்பு மேம்பாடு

(3) இ - புகார் தாக்கல் செய்தல்

(4) நுகர்வோர் விழிப்புணர்வு இயக்கம்

79. **கூற்று 1:** மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையமானது தவறான விளம்பரத்திற்காக உற்பத்தியாளர் / ஒப்புதல் அளிப்பவருக்கு 10 லட்சம் ரூபாய் அபராதமும் இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையும் பொருட்கள் / சேவைக்கு ஓராண்டு தடையும் விதிக்கலாம்.

**கூற்று 2:** அடுத்தடுத்த குற்றங்களுக்கு 50 இலட்சம் ரூபாயும் 5 ஆண்டுகள் சிறை தண்டனையும் மூன்று ஆண்டுகள் பொருட்கள் / சேவைக்கான தடையும் விதிக்கலாம்.

(1) கூற்று 1 மற்றும் 2 சரி

(2) கூற்று 1 மற்றும் 2 தவறு

(3) கூற்று 1 சரி மற்றும் கூற்று 2 தவறு

(4) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

www.kalvinews.com

80. நியாயமற்ற வணிக நடைமுறைகளுக்கு வேறு எந்த சட்டத்தின் விதிகளின் படியும், வெளிப்படுத்தப்படாவிட்டால், _______ நம்பிக்கையுடன் வழங்கிய தனிப்பட்ட தகவல்களை பகிர்வதும் அடங்கும்.

(1) நுகர்வோர் (2) உற்பத்தியாளர்

(3) விற்பனையாளர் (4) முகவர்

81. இணையத்தின் நேர்முக கட்டுப்பாட்டில் இல்லாத அல்லது இணையத்தின் இயக்கக் கட்டுப்பாட்டில் உள்ள பணப்பரிமாற்றங்கள் மின்னணு வழிமுறைகள், தொலைநோக்கி, நேரடி விற்பனை, பல நிலை சந்தைப்படுத்துதல் முறையிலான நுகர்வையும் பாதுகாப்பது _______.

(1) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் - 2009 (2) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் - 1986

(3) பொருட்களின் சட்டம் - 1980 (4) அத்தியாவசிய பொருட்கள் சட்டம் - 1955

82. நுகர்வோர் சட்ட மீறல்கள் குறித்த விசாரணை செய்யும் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் _______ தலைமையில் இயங்குகிறது.

(1) இயக்குநர் (2) தலைமை இயக்குநர்

(3) உயர் நீதிமன்ற நீதிபதி (4) உச்ச நீதிமன்ற நீதிபதி

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 21 | (1) | 41 | (1) | 61 | (1) | 81 | (1) |
| 2 | (3) | 22 | (2) | 42 | (1) | 62 | (4) | 82 | (2) |
| 3 | (4) | 23 | (2) | 43 | (2) | 63 | (4) | | |
| 4 | (2) | 24 | (1) | 44 | (1) | 64 | (4) | | |
| 5 | (3) | 25 | (1) | 45 | (1) | 65 | (4) | | |
| 6 | (1) | 26 | (4) | 46 | (1) | 66 | (1) | | |
| 7 | (3) | 27 | (1) | 47 | (2) | 67 | (2) | | |
| 8 | (3) | 28 | (4) | 48 | (3) | 68 | (4) | | |
| 9 | (1) | 29 | (3) | 49 | (2) | 69 | (1) | | |
| 10 | (2) | 30 | (2) | 50 | (1) | 70 | (4) | | |
| 11 | (1) | 31 | (3) | 51 | (3) | 71 | (4) | | |
| 12 | (4) | 32 | (2) | 52 | (4) | 72 | (3) | | |
| 13 | (1) | 33 | (1) | 53 | (4) | 73 | (1) | | |
| 14 | (2) | 34 | (4) | 54 | (1) | 74 | (2) | | |
| 15 | (2) | 35 | (4) | 55 | (3) | 75 | (3) | | |
| 16 | (1) | 36 | (1) | 56 | (2) | 76 | (1) | | |
| 17 | (4) | 37 | (1) | 57 | (4) | 77 | (1) | | |
| 18 | (3) | 38 | (4) | 58 | (1) | 78 | (4) | | |
| 19 | (2) | 39 | (1) | 59 | (1) | 79 | (1) | | |
| 20 | (1) | 40 | (1) | 60 | (4) | 80 | (1) | | |

www.kalvinews.com



## 3. சாலைப் பாதுகாப்பு

**தொகுப்பு:**
**திரு.இரா.லோகநாதன்,** M.Sc.,B.Ed.,M.Phil.,
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**நகராட்சி.உயர்நிலைப்பள்ளி,**
**அனந்தபுரம் (சைதை), ஆரணி,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.வீ.மணிகண்டன்,** M.A., M.A., B.Ed.,
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி,**
**ஊருடையாபட்டி,**
**திருச்சி மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- போக்குவரத்து முதல் இயந்திரம்வரை பல விதமான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தது **சக்கரம்.**
- பல அடிப்படைக் கண்டுபிடிப்புகளுக்கு மனிதனின் அறிவுத்திறமையை நிரூபித்தது சக்கரம்.
- சாலைப் பாதுகாப்பு என்பது, சாலையைப் பயன்படுத்துவோர் உயிரிழப்பு மற்றும் கடுமையாக காயப்படுவதைத் தடுக்கும் முறைகள் மற்றும் நடவடிக்கைகளைக் குறிக்கிறது.
- உலகத்திலேயே, அதிகமான சாலை விபத்துகள் இந்தியாவில்தான் ஏற்படுகிறது.
- உலக அளவில் ஏற்படும் சாலை விபத்துகளில் 10% இந்தியாவில் ஏற்படுகிறது.
- இந்திய மக்களின் வாழ்வு, வளர்ச்சி மற்றும் பொருளாதாரத்தைப் பெரிதும் அச்சுறுத்துவது சாலை விபத்து ஆகும்.

**சாலை விபத்திற்கான காரணங்கள்:**

**1. வாகனத்தை இயக்கும்போது ஏற்படும் கவனச்சிதறல்:**

வாகனத்தை இயக்கும்போது ஏற்படும் கவனச்சிதறலே சாலை விபத்துகள் ஏற்பட முதன்மையான காரணமாக விளங்குகிறது

**2. கட்டுப்பாடுகள் இல்லாமல் வாகனங்களை இயக்குதல்:**

கட்டுப்பாடு இல்லாமல் வாகனங்களை இயக்குதல் என்பது ஓட்டுநர் போக்குவரத்து விதிகளை மீறும் செயலாகும்.

**3. இரவில் வாகனங்களை இயக்குதல்**

கட்டுப்படுத்த முடியாத தூக்கம், தொடர்ந்து வாகனங்களை அதிக தூரம் இயக்குவதால் ஏற்படும் சோர்வு, சாலையில் குறைந்த வெளிச்சம் போன்றவைகள் கோரமான சாலை விபத்துகளுக்குக் காரணமாகின்றன.

**4. வாகனங்களுக்கிடையே இடைவெளி இல்லாமல் இருத்தல்**

**5. போக்குவரத்து நெரிசல்**

**6. சாலைகளின் மோசமான நிலை**

**7. பாதுகாப்பு கவசங்களைத் தவிர்த்தல்**

இருசக்கர வாகனங்கள் இயக்கும்போது தலைக்கவசம், நான்கு சக்கர வாகனங்கள் இயக்கும்போது, இருக்கைப் பட்டை அணியாமல் இருப்பதால் அதிக பாதிப்புகள் ஏற்படுகின்றன.

www.kalvinews.com

**8. பாதசாரிகளின் பொறுமையின்மை:**

சாலையில் நடந்து செல்லும் பாதசாரிகளின் பொறுமையின்மை, சாலைவிதிகளைப் புறக்கணித்தலுமே விபத்துகளை ஏற்படுத்துகின்றன.

**9. இதரக் காரணங்கள்:**

மது அருந்திவிட்டு வாகனம் இயக்குதல், போக்குவரத்துக் குறியீடுகளை மதிக்காமல் இருத்தல், அதிவேகமாக இயக்குதல், ஆளில்லா இருப்புப் பாதையை கவனமில்லாமல் கடப்பது போன்ற செயல்களால் உயிர்சேதம் அதிகரிக்கிறது.

| வ.எண் | குறியீடு | விளக்கம் | விதி |
|---|---|---|---|
| 1. |  | வரிக்குதிரை பாதை - பாதசாரிகள் (Zebra crossing) கடக்க அனுமதி | விதி-11 |
| 2. |  | இருக்கையின் வார்ப்பட்டையை (Seat belt) அணிதல் | பகுதி-138 |
| 3. |  | போக்குவரத்து விதிமுறைகளையும், சைகைகளையும் பின்பற்றுதல் | பகுதி-119 |
| 4. |   | வரையறுக்கப்பட்ட வேகக் கட்டுப்பாடுகளை மதித்தல் | பகுதி-112 |
| 5. |  | வாகனத்தை முறையாகப் பராமரித்தல் | பகுதி-190 |
| 6. |  | வாகனம் இயக்கும்போது கைப்பேசியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் | பகுதி-184 |
| 7. |  | தலைக்கவசம் அணிதல் | பகுதி-129 |
| 8. |   | அதிவேகம் மற்றும் ஆபத்தான முறையில் வாகனத்தை இயக்குவதைத் தவிர்த்தல் | பகுதி-184 |
| 9. |  | மற்றவர்மீது அக்கறை கொள்ளுதல் | பகுதி-185 |
| 10. |  | மது அருந்திவிட்டு வாகனம் இயக்குவதைத் தவிர்த்தல் | பகுதி-185 |

1. சாலைவிதிகளின் ஒழுங்கு முறைகள் - 1989
2. மத்திய மோட்டார் வாகன விதிமுறைகள் - 1989
3. மோட்டார் வாகன விதிமுறைகள் - 1968

- இந்தியச் சட்டப்படி வாகன ஓட்டுநர் உரிமம் பெறும் வயது 18 ஆகும்.
- மருத்துவமனை மற்றும் பள்ளிவளாகம் அருகில் வாகனங்கள் ஒலியெழுப்பத் தடை செய்யப்பட்டுள்ளது.

www.kalvinews.com

- இருசக்கர வாகனம் இயக்குபவர் தன் பின்னால் ஒருவரை மட்டுமே அமர்த்திச் செல்லவேண்டும். குடும்பம் முழுவதையும் ஏற்றக் கூடாது.
- சாலை போக்குவரத்துச் சட்டம் பாராளுமன்றத்தால் 1988 இல் ஏற்படுத்தப்பட்டு 1989 இல் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- ஓட்டுநர் உரிமம் பெற்ற ஒருவரே வாகனத்தை இயக்க வேண்டும்.
- ஓட்டுநர் உரிமம் பெற பயிற்சியும் அதற்கான தேர்வுகளில் தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.
- வாகனம் இயக்குபவர் எப்போதும் தம்முடைய ஓட்டுநர் உரிமம், வாகனத்தின் பதிவுச்சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ், வாகன வரி கட்டியதற்கான சான்றிதழ், அனுமதி மற்றும் தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும்.
- ஒவ்வொருவரும் ஒரு இடத்திற்கு மகிழுந்தில் செல்லும் போது அந்த இடத்திற்கு அதிகமான மகிழுந்து செலுத்தப்படுகிறது. இதை தவிர்க்க பயண பகிர்வு மேற்கொள்ளுதல் **கார்பூலிங்** ஆகும்.
- ஒரே பகுதியிலிருந்தோ அல்லது ஒரே வழித்தடத்தில் தினந்தோறும் மகிழுந்து அல்லது இரு சக்கர வாகனத்தில் செல்பவர்கள் அதே இடத்திற்கோ அல்லது அதே தடத்தில் செல்பவர்களை உடன் அழைத்து செல்வதே **கார்பூலிங் (Carpooling).**
- கார்பூலிங் செய்வதால் சாலைகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறையும், எரிபொருள், பணம் மற்றும் நேரம் சேமிக்கப்படுகிறது. போக்குவரத்து நெரிசல் குறைந்து, காற்று மாசுபாடு குறைகிறது.
- வாகனம் தற்பொழுது எங்கு உள்ளது என்பதையும், வாகனத்தின் செயல்பாட்டையும் கண்காணிக்கும் தானியங்கி கருவி **ரக்ஷா (Raksha).**
- ரக்ஷா பாதுகாப்புக் கருவி வாகனத்தில் பொருத்தப்படுவதால் சாலையில் உள்ள மேடுகள் பற்றிய முன்னெச்சரிக்கையும், மோசமான சாலைகள் பற்றியும், வேகத்தை மீறும்போதும் ஓட்டுநருக்கு எச்சரிக்கை செய்கிறது.
- குழந்தைகள் காணொலி மற்றும் கணினியில் வாகனங்களை வேகமாக இயக்குவது போன்ற படக்காட்சிகள் காண்பதையும், விளையாடுவதையும் அனுமதிக்கக்கூடாது. அவ்விளையாட்டுகள் பிற்காலத்தில் வாகனங்களை வேகமாக இயக்கும் பழக்கத்தை குழந்தைகளிடையே ஏற்படுத்திவிடும்.
- குழந்தை பருவத்திலிருந்தே போக்குவரத்துக் கல்வியைக் கற்றுத்தர வேண்டும்.
- சச்சின் டெண்டுல்கரின் 45 ஆவது பிறந்தநாளில் மும்பை காவல் துறை மோட்டார் வாகனம் ஓட்டுபவரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் காணொலியை வெளியிட்டது.
- சாலைகளில் போக்குவரத்தை நடத்தும் **சத்தமில்லா நடத்துநராகவே** போக்குவரத்துக் குறியீடுகள் செயல்படுகின்றன.

**குறியீடுகளின் வகைகள்**

**1. கட்டாயக் குறியீடுகள் மற்றும் எச்சரிக்கைக் குறியீடுகள்**

நில், வேகத்தடை, வலப்புறம் திரும்பு, இடப்புறம் திரும்பாதே

**2. தகவல் குறியீடுகள்**

மருத்துவமனை, பெட்ரோல் பங்க், இளைப்பாறும் இடம், வாகனம் நிறுத்துமிடம்

www.kalvinews.com

- பொதுமக்களிடையே போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சாலை விபத்துகளால் ஏற்படும் இறப்புகளைக் குறைக்கவும் **'சாலைப் பாதுகாப்பு வாரம்'** ஒவ்வொரு ஆண்டும் **ஜனவரி மாதத்தில்** கொண்டாடப்படுகிறது.

**பயிற்சி வினாக்கள்:**

1. சாலைப் பாதுகாப்பு என்பது இவர்களுக்கானது _______.
   (1) வழிப்போக்கர்கள் (2) ஓட்டுநர்கள்
   (3) சாலையைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும். (4) பொதுமக்கள்

2. இந்தியாவில் சாலைப்பாதுகாப்பு வாரம் முதன்முதலாக கொண்டாடப்பட்ட வருடம் _______.
   (1) 1947 (2) 1990 (3) 1989 (4) 2019

3. வாகன உற்பத்தியாளர்கள் இருசக்கர வாகனத்தை உற்பத்தி செய்யும்போதே அதிகபட்ச வேகமாக _______ மேல் செல்லாதபடி வடிவமைக்க வேண்டும்.
   (1) 30 கி.மீ/மணி (2) 45 கி.மீ/மணி (3) 50 கி.மீ/மணி (4) 60 கி.மீ/மணி

4. குறியீடுகள் ஓட்டுநருக்கு எச்சரிக்கை தருவதால் _______ குறியீடுகள் ஆகின்றன.
   (1) தகவல் குறியீடு (2) எச்சரிக்கை குறியீடு
   (3) சாலை குறியீடு (4) இவற்றில் ஏதுமில்லை

5. மருத்துவ உதவியின் அவசரத் தேவைக்கு _______ என்ற எண்ணை அழைக்க வேண்டும்.
   (1) 100 (2) 102 (3) 104 (4) 108

6. கார்பூலிங் என்பது _______.
   (அ) ஒரு பகுதியிலிருந்தோ அல்லது ஒரே வழித்தடத்தில் தினந்தோறும் மகிழுந்து அல்லது இரு சக்கர வாகனத்தில் செல்பவர்கள் அதே இடத்திற்கோ அல்லது அதே தடத்தில் செல்பவர்களை உடன் அழைத்து செல்வது.
   (ஆ) ஒவ்வொருவரும் ஒரு இடத்திற்கு மகிழுந்தில் செல்லும் போது அந்த இடத்திற்கு அதிக எண்ணிக்கையிலான மகிழுந்து செலுத்தப்படுகிறது. இதைத் தவிர்க்க பயணப் பகிர்வு மேற்கொள்ளுதல் ஆகும்.
   (1) (அ) சரி, (ஆ) தவறு (2) (அ) தவறு, (ஆ) சரி
   (3) இரண்டும் சரி (4) இரண்டும் தவறு

7. கூற்று: கார்பூலிங் என்பது ஒரே தடத்தில் பயணிக்கும் பலர் ஒன்று கூடி ஒரே வாகனத்தைப் பயன்படுத்துவது.
   காரணம்: அது எரிபொருள், நேரம், மற்றும் பணத்தை மிச்சப்படுத்துகிறது.
   (1) கூற்று சரி காரணம் தவறு (2) கூற்றும் சரி காரணமும் சரி
   (3) கூற்று தவறு காரணம் சரி (4) இரண்டுமே தவறு

8 சாலை பாதுகாப்பு சட்டம் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட ஆண்டு _______.
   (1) 1950 (2) 1947 (3) 1989 (4) 1988

9. சாலை பாதுகாப்பு சட்டம் நாடு முழுவதும் நடைமுறைபடுத்தப்பட்ட ஆண்டு _______.
   (1) 1950 (2) 1947 (3) 1989 (4) 1988

www.kalvinews.com

10. பொருத்துக.

(i) தகவல் குறியீடுகள் - (a) போக்குவரத்து விளக்குகள்.

(ii) வரிக்குதிரை கடப்பு - (b) குறுகிய வளைவு குறியீடு.

(iii) கட்டாயக் குறியீடுகள் - (c) பெட்ரோல் பங்க் குறியீடு.

(iv) எச்சரிக்கைக் குறியீடுகள் - (d) ஒட்டுநர் உரிமம்.

(v) வாகனம் ஓட்டும் உரிமம் - (e) பாதசாரிகள்

(1) i - c ii - a iii - e iv - d v - b (2) i - b ii - e iii - a iv - c v - d

(3) i - c ii - e iii - a iv - b v - d (4) i - b ii - a iii - e iv - d v - c

11. வாகன ஓட்டுநர் உரிமம் பெற தகுதியான வயது ________.

(1) 18 (2) 21 (3) 25 (4) 20

12. இரு சக்கர வாகனம் ஓட்டும் போது கட்டாயம் அணிய வேண்டியது ________.

(1) தலைக் கவசம் (2) கண்ணாடி (3) வார்ப் பட்டை (4) முகக்கவசம்

13. கார்பூலிங் செய்வதால் ________.

(1) சாலைகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறையும்

(2) பணம் சேமிக்கப்படுகிறது

(3) காற்று மாசுபாடு குறையும்

(4) இவை அனைத்தும்

14. கட்டாயக் குறியீடுகள் என்றழைக்கப்படுபவை ________.

(1) நில், வேகத்தடை (2) வலப்புறம் திரும்பு

(3) இடதுபுறம் திரும்பாதே (4) இவை அனைத்தும்

15. குடித்துவிட்டு வாகனம் ஓட்டக்கூடாது என்பதை வலியுறுத்தும் விதிமுறை மத்திய மோட்டார் வாகன விதிமுறைகளின் பகுதி __________ல் உள்ளது.

(1) 147 (2) 184 (3) 420 (4) 185

16. பொருத்துக.

i. வரிக்குதிரை கடப்பு - 1. பகுதி 112

ii. வாகனத்தை முறையாகப் பராமரித்தல் - 2. பகுதி 129

iii. வேகத் தடைகளை மதித்தல் - 3. விதிமுறை 11

iv. தலைக்கவசம் அணிதல் - 4. பகுதி 185

| | iii | iii | iv | |
|---|---|---|---|---|
| (1) | 4 | 2 | 1 | 3 |
| (2) | 3 | 4 | 2 | 1 |
| (3) | 3 | 4 | 1 | 2 |
| (4) | 2 | 3 | 4 | 1 |

18. மோட்டார் வாகன விதிமுறைகள் நடைமுறைக்கு வந்த ஆண்டு ________.

(1) 1968 (2) 1989 (3) 1986 (4) 1988

www.kalvinews.com

17.  இக்குறியீடு எதனைக் குறிக்கின்றது?

(1) வழிவிடு (Give way) (2) நில் (Stop)

(3) வலப்புறம் திரும்பு (Turn left) (4) ஒலி எழுப்பாதே (No Horn)

19. இருக்கையின் வார்ப்பட்டையை அணிதல் பற்றி கூறும் விதி_______.

(1) பகுதி 184 (2) பகுதி 129 (3) பகுதி 138 (4) பகுதி 185

20. பொருத்துக.

i  - 1. அனுமதியில்லை

ii  - 2. வாகனம் நிறுத்த அனுமதியில்லை

iii  - 3. குறுகிய பாலம்

iv 

- 4. வாகனம் நிறுத்தும் பகுதி

v  - 5. இரு வழிகளிலும் அனுமதி

| | I | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 2 | 1 | 4 | 5 | 3 |
| (2) | 3 | 2 | 4 | 5 | 1 |
| (3) | 2 | 3 | 1 | 4 | 5 |
| (4) | 3 | 1 | 2 | 4 | 5 |

21. தமிழ்நாட்டின் ஆம்புலன்ஸ் சேவையின் உதவி எண் ________. [NMMS-2016]

(1) 100 (2) 101 (3) 103 (4) 108

22. புதிய மோட்டார் வாகனச் சட்டம் இந்தியாவில் நடைமுறைக்கு வந்த ஆண்டு ________.

(1) 2000 (2) 2019 (3) 1989 (4) 1968

23. வாகன ஓட்டிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த மும்பை காவல் துறை வெளியிட்ட காணொலியில் இடம் பெற்ற விளையாட்டு வீரர் _______.

(1) விராட் கோலி (2) மகேந்திரசிங் தோனி

(3) சச்சின் டெண்டுல்கர் (4) ரோகித் சர்மா

24. _______ என்பது ஒருவர் குறிப்பிட்ட வேகத்தைக் கடந்து வாகனத்தை இயக்கும்போது எச்சரிக்கை கொடுக்கும்.

(1) கார்பூலிங் (2) கார்பரேட்டர்

(3) ஷாக்கப்சார்பர் (4) ரக்ஃஷா

www.kalvinews.com

25. பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி

(1) வாகனத்தை நிறுத்தாதே (No parking) (2) இடப்பக்கம் திரும்பாதே (Left turn prohibited)

(3) ஒரு வழிப் பாதை (One way) (4) வலப்பக்க வளைவு (Right hand Curve)

26. சாலை விபத்துகள் ஒரு நாட்டின் _______ பாதிக்கின்றன.

(1) முன்னேற்றத்தை (2) வாழ்வை

(3) பொருளாதாரத்தை (4) மேற்கூறிய அனைத்தையும்

27. அனுமதி என்பது _______.

(1) இயக்குவதற்கு அனுமதி (2) பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி

(3) ஓட்டுநருக்கு சான்றிதழ் (4) வாகனத்தை பதிவு செய்த சான்றிதழ்

28. போக்குவரத்து மேம்பாட்டில் மனிதனின் மிகப் பயனுள்ள கண்டுபிடிப்பு _______.

(1) சக்கரம் (2) விளக்கு (3) போக்குவரத்து விதிகள் (4) பிரேக்

29. ரக்ஷா என்பது _______.

(1) சகோதரத்துவத்தை வெளிப்படுத்துவது (2) ஒரு தானியங்கிக் கருவி

(3) போக்குவரத்துக் குறியீடு (4) ஒலியெழுப்பும் கருவி

30. உலகளவில் 10% க்கும் அதிகமான சாலை விபத்துகள் நடைபெறும் நாடு _______.


(1) இந்தியா (2) அமெரிக்கா (3) சீனா (4) இங்கிலாந்து


31. சாலை விபத்துகள் ஏற்படுவதற்கு முதன்மைக் காரணமாக இருப்பது _______.

(1) இரவில் வாகனங்களை இயக்குதல் (2) போக்குவரத்து நெரிசல்

(3) கவனச்சிதறல் (4) சாலையின் நிலை

32. பொருத்துக

அ) கட்டாயக் குறியீடுகள் -(i) 

ஆ) எச்சரிக்கைக் குறியீடுகள் -(ii) 

இ) தகவல் குறியீடுகள் -(iii) 

ஈ) நில் -(iv) 

(1) அ - iii , ஆ -i , இ - iv, ஈ -ii (2) அ - iv , ஆ -iii , இ -i , ஈ -ii

(3) அ - ii , ஆ -iv , இ - i, ஈ -iii (4) அ - iii , ஆ -iv , இ - i, ஈ - ii

33. கூற்று: சாலை பாதுகாப்பு வாரம் தேசிய நிகழ்வாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் இந்திய அரசால் கொண்டாடாப்படுகிறது.

காரணம்: பொதுமக்களிடையே போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்நிகழ்வு அனுசரிக்கப்படுகிறது.

(1) கூற்று சரி, காரணம் தவறு (2 கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(3) கூற்று தவறு, காரணம் சரி (4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

www.kalvinews.com

34. 10-09-2003 பிறந்த ஒருவர் ஓட்டுநர் உரிமம் பெற தகுதி பெறும் தேதி ________.

(1) 11-09-2021 (2) 10-09-2021 (3) 11-09-2020 (4) 10-09-2022

35. இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ________ மாதத்தில் சாலைப்பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படுகிறது.

(1) டிசம்பர் (2) மே (3) ஜனவரி (4) பிப்ரவரி

36. வாகனம் இயக்குபவர் எப்போதும் தன்னுடன் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள் ________.

(1) ஓட்டுநர் உரிமம் (2) வாகனத்தின் பதிவுச் சான்றிதழ்
(3) காப்பீட்டுச் சான்றிதழ் (3) இவை அனைத்தும்

37. கூற்று: கட்டுப்பாடு இல்லாமல் வாகனங்களை இயக்குதல் என்பது ஓட்டுநர் விதிகளை மீறும் செயலாகும்.

காரணம்: ஓட்டுநர் வேண்டுமென்றே போக்குவரத்து விதிகளை மதிக்காமல் வாகனங்களை இயக்கும் மன நிலையாகும்.

(1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்று மற்றும் காரணம் சரி
(3) கூற்று தவறு, காரணம் சரி (4) இரண்டுமே தவறு

38. சாலை பாதுகாப்பிற்கான விதியில் பகுதி _____ வாகனம் இயக்கும்போது கைப்பேசியை தவிர்த்தல் பற்றி கூறுகிறது.

(1) 184 (2) 185 (3) 129 (4) 190

39. கார்பூலிங் செய்வதால் உண்டாகும் நன்மை _____,

(1) போக்குவரத்து நெரிசல் குறைவு (2) காற்று மாசு குறைவு
(2) சகமனிதர்களிடம் இணக்கமான உறவு (4) இவையனைத்தும்

40. தற்போதைய மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் _____,

(1) நிர்மலா சீதாராமன் (2) நரேந்திர மோடி
(3) நிதின் கட்கரி (4) தர்மேந்திர பிரதான்

**விடைகள்:**

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | (3) | 11 | (3) | 21 | (4) | 31 | (3) |
| 2 | (2) | 12 | (1) | 22 | (2) | 32 | (4) |
| 3 | (3) | 13 | (1) | 23 | (3) | 33 | (2) |
| 4 | (2) | 14 | (4) | 24 | (4) | 34 | (1) |
| 5 | (4) | 15 | (4) | 25 | (4) | 35 | (3) |
| 6 | (3) | 16 | (3) | 26 | (4) | 36 | (4) |
| 7 | (2) | 17 | (1) | 27 | (1) | 37 | (2) |
| 8 | (4) | 18 | (1) | 28 | (1) | 38 | (1) |
| 9 | (4) | 19 | (3) | 29 | (2) | 39 | (4) |
| 10 | (3 | 20 | (3) | 30 | (1) | 40 | (3) |

www.kalvinews.com

வகுப்பு - 7 - பருவம் - 3 - பொருளியல்

## 1. வரி மற்றும் அதன் முக்கியத்துவம்

தொகுப்பு:
திரு.சு.எலிசா, M.Sc., B.Ed., M.Phil.,
பட்டதாரி தலைமை ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
ரெட்டிமாங்குப்பம்,
வேலூர் மாவட்டம்.

மேம்பாடு:
திரு.மோ.பிரபாகரன், M.A., B.Ed., M.Phil.,
பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),
அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
கொரடாச்சேரி,
திருவாரூர் மாவட்டம்.

### முக்கிய குறிப்புகள்

**அரசின் வருவாயைப் பெருக்கும் வளங்கள்:**

- வழக்கமாக அரசால் விதிக்கப்படும் வரியையே "வரிவிதிப்பு' எனக் குறிப்பிடுகின்றோம்.
- வரி விதிப்பு என்பது வருமானம், முதலீட்டால் பெறும் ஆதாயம், சொத்து போன்ற அனைத்து வகைக்கும் விதிக்கப்படும் வரியைக் குறிக்கும்.
- ஒரு செயலால் விளையும் வருவாய் - வரி.

**வரிகள்**

- வரி செலுத்துவோர், எவ்வித நேரடியான பலனையும் எதிர்பார்க்காமல் அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்துபவையே வரிகள் ஆகும்.
- வரிகள் என்பவை, ஒருவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டாயப் பங்களிப்பாகும். இதில், பெறப்பட்ட சிறப்புச் சலுகைகள் குறிப்பிடப்படுவதில்லை. இப்பங்களிப்பின்மூலம் பொது நலத்திற்காக அரசு மேற்கொள்ளும் செலவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன

  **- பேராசிரியர் சேலிக்மென்**

**வரிகள் விதிக்கப்படுவதற்கான காரணங்கள்:**

- ஒவ்வொருவரும் சட்டத்திற்கு உட்பட்டு, வரி செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள்.
- வரியாகச் செலுத்தப்படும் மொத்தத் தொகையும் இருப்பு வைக்கப்படும் இடம் - அரசுக் கருவூலம்
- வரி செலுத்துவது என்பது, ஒருவரின் தனிப்பட்ட விருப்பம் அன்று; மாறாக, ஒருவர் தாம் ஈட்டும் வருமானம், வருமான வரம்பிற்கு உட்பட்டதாயின் வரி செலுத்த வேண்டும்.
- வருமான வரி செலுத்துதல், ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

**ஆடம் ஸ்மித்தின் நான்கு வகையான வரி விதிப்புக் கோட்பாடுகள்:**

**வரிவிதிப்புக் கோட்பாடுகள், இன்றைய காலகட்டத்திலும் வரிக் கட்டமைப்புக்கான அடிப்படையை உருவாக்குகின்றன.**

- ✓ சமத்துவ விதி
- ✓ உறுதிப்பாட்டு விதி
- ✓ வசதி விதி
- ✓ சிக்கன விதி

www.kalvinews.com

- மக்கள் மீது சுமத்தப்படும் வரியானது எளிமையாகவும் நியாயமாகவும் இருக்க வேண்டும் - சமத்துவ விதி
- ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதி - உறுதிப்பாட்டு விதி
- வரி செலுத்துவோருக்கு அதிகபட்ச வசதிகளை வழங்கும் விதி - வசதி விதி
- வசூலிக்கப்படும் வரியிலிருந்து குறைந்த அளவிலேயே தொகை செலவழிக்கப்பட வேண்டும் - சிக்கன விதி

**வரி விதிப்பின் வகைகள்:**

- **விகிதாச்சார வரி** - வருமான அளவை பொருட்படுத்தாமல் அனைவருக்கும் ஒரே மாதிரியாக விதிக்கும் வரி. வரி செலுத்துபவரின் வருமான வரி விகிதத்தை மாற்றாமல் விட்டுவிடுகிறது.
- **வளர்வீத வரி** - ஒருவரின் வருமானம் அதிகரிக்கும் போது அதற்கேற்ப வரி விகிதமும் அதிகரிப்பது.
- **தேய்வுவீத வரி** - அதிகமாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும், குறைவாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் ஒரே மாதிரியாக விதிக்கப்படும் வரி. இதனால், அதிக அளவு வருமானம் ஈட்டுபவர்களைக் காட்டிலும், குறைந்த அளவு வருமானம் ஈட்டுபவர்கள் அதிக வரி வீதத்தால் பாதிக்கப்படுகின்றனர்.
- **வளர்வீத வரிக்கு எதிரான வரி - தேய்வுவீத வரி.**

**வரியின் முக்கியத்துவம்:**

- வரிகள் இல்லையெனில், சமுதாய நலத்திற்குத் தேவையானவற்றைச் செய்ய அரசால் இயலாது.
- வசூலிக்கப்பட்ட வரிப்பணம் பின்வரும் சமுதாய நலன்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**நலவாழ்வு:**

- சமூக நல வாழ்வு, மருத்துவ ஆய்வு, சமூக நலப் பாதுகாப்பு போன்றவற்றிற்காக வரிப்பணத்தில் நிதி ஒதுக்கப்படுகிறது.

**கல்வி:**

- அரசுக்கு செலுத்தப்படும் வரிப்பணத்தில் இருந்து அதிக அளவிலான தொகை செலவிடப்படும் துறை - கல்வித்துறை
- மனித வளங்களை மேம்படுத்துவதற்கும், கல்வியை மையப்படுத்துவதற்கும் அரசு அதிக முதன்மை அளிக்கிறது.

**ஆட்சி நிர்வாகம்:**

- அரசின் நிர்வாக அமைப்பிற்கு வரிப்பணம் செலவழிக்கப்படுகிறது.

**உள்கட்டமைப்பு மேம்பாடு, போக்குவரத்து, வீட்டு வசதி போன்ற பிரிவுகள்:**

- சமூக நலத் திட்டங்கள், பாதுகாப்பு, அறிவியல் ஆராய்ச்சி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற பிரிவுகளுக்கும் நிதி ஒதுக்குகிறது.
- ஓய்வூதியங்கள், வேலை வாய்ப்பு இல்லாதோருக்கான ஊக்கத்தொகை, குழந்தைப் பாதுகாப்பு போன்றவற்றிற்கும் நிதி ஒதுக்கப்படுகிறது.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையின்மீது வரிகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- பொதுவாக வரிகள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குத் (GDP) தம் பங்களிப்பை வழங்குகின்றன.

www.kalvinews.com

**வரியின் வகைகள்:**

**நேர்முக வரி** : தனியாளோ அல்லது நிறுவனமோ அரசுக்கு நேரடியாக வரி செலுத்துவதைக் குறிப்பது.

(எ - கா) சொத்து வரி, வருமான வரி, உறுதிமொழிப் பத்திரங்களின் மீதான வரி, நிறுவன வரி, அன்பளிப்பு வரி.


- நிறுவனங்கள் ஈட்டும் இலாபத்தின் மீது விதிக்கப்படும் வரி - நிறுவன வரி.
- ஒருவர் வைத்துள்ள சொத்துக்களின் மதிப்புக்கு ஏற்ப விதிக்கப்படும் வரி சொத்து வரி.
- ஒருவர் வெகுமதியாகப் பெரும் பொருள்களின் மதிப்புக்கேற்ப விதிக்கப்படும் வரி - அன்பளிப்பு வரி.

**மறைமுக வரி : ஒருவரின் வரிச்சுமையை மற்றொருவரின் மீது சுமத்தும் வரி.**


(எ - கா) சேவை வரி, விற்பனை வரி (VAT), கலால் வரி (ஆயத்தீர்வை வரி), பொழுதுபோக்கு வரி, சரக்கு மற்றும் சேவை வரி (GST).

- சேவை வழங்குவதன் அடிப்படையில் சேவையைப் பெறுபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரி - சேவை வரி.
- விற்பனை செய்யப்படும் பொருட்களின் மீது வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரி - விற்பனை வரி (VAT).
- **இந்தியாவில் VAT அறிமுகப்படுத்தப்பட்ட மாநிலம் - அரியானா.**
- மொத்த (அ) சில்லறை விற்பனையாளர்களிடமிருந்தும் பொருள்களை வாங்குபவர்கள் செலுத்த வேண்டிய வரி - கலால் வரி (ஆயத்தீர்வை வரி)
- மத்திய அரசால் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுமத்தப்படும் வரி - கலால் வரி (ஆயத்தீர்வை வரி).
- முதன் முதலில் கலால் வரி விதிக்கப்பட்ட பொருள்கள் - உப்பு, சர்க்கரை, வாகன எரிபொருள்கள்.
- பொழுதுபோக்கு படங்கள், கட்டணங்கள், மேடை அரங்கேற்ற நிகழ்ச்சிகள், பூங்காக்கள், விளையாட்டு தொடர்பான செயல்பாடுகள் போன்றவற்றிற்காக வசூலிக்கப்படும் வரி - பொழுதுபோக்கு வரி.
- மாநில அரசால் ஒவ்வொரு முறையும் வசூலிக்கப்படும் வரி - பொழுதுபோக்கு வரி.
- தேசிய அளவில் ஒட்டுமொத்த பொருளாதார அடிப்படையில் விதிக்கப்படும் வரி - சரக்கு மற்றும் சேவை வரி (GST).
- பொருள்களின் விற்பனை, உற்பத்தி, பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் விதிக்கப்படும் வரி - சரக்கு மற்றும் சேவை வரி.

www.kalvinews.com




- **சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகள்:**




**சரக்கு மற்றும் சேவை வரி - ஓர் அறிமுகம்..**

- சுதந்திரம் பெற்ற நேரத்தில், தேசிய அளவில் மத்திய கலால் வரி மற்றும் மாநில அளவில் விற்பனை வரி ஆகியவை நடைமுறையில் இருந்தன.

www.kalvinews.com

- நீண்டகால முயற்சிகள் மற்றும் திருத்தங்களுக்குப் பின் 2003 ஆம் ஆண்டு இந்திய மாநிலமான ஹரியானாவில் முத்ன்முதலில் மதிப்பு கூட்டு வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டது.
- பின்னர், பஞ்சாப், சண்டிகர், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் டெல்லி உள்ளிட்ட 24 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்ககளில் 2005 இல் மதிப்பு கூட்டு வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டது.
- மதிப்புக் கூட்டு வரி முன்பு இருந்த விற்பனை வரியைவிட பெரிய வளர்ச்சியாக இருந்தாலும், சரக்கு மற்றும் சேவை வரி உண்மையில் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாகும்.
- இந்தியாவில் முதல் முதலில் GST முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு 2017 ஜூலை 1
- சரக்கு மற்றும் சேவை வரியானது (GST) நாம் வாங்கும் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வரி ஆகும்.இது மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) மற்றும் மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) என இரு பகுதிகளைக் கொண்டது.
- இந்தியாவில் விதிக்கப்படும் GST சதவீதம் 0 % முதல் - 28 % வரை

  உதாரணமாக,
- இந்தியாவில் விதிக்கப்படும் 18 % GST வரியில்
- மத்திய அரசுக்கு செல்லும் பங்களிப்பு - 9 %
- மாநில அரசுக்கு செல்லும் பங்களிப்பு - 9 %

**GST வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் பொருட்கள்:**

- காய்கறிகள் உணவு தானியங்கள் அத்தியாவசிய பண்டங்கள்

**சுங்கம் மற்றும் சாலை வரி** :

- அரசால் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை நாம் பயன்படுத்தும் போது அதற்காக விதிக்கப்படும் வரி **சுங்கம் மற்றும் சாலை வரி ஆகும்.**
- **சாலை / பாலங்களின் பராமரிப்புப் பணிக்காகவும், குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகவும் இவ்வரிகள் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன.**

**தூய்மை பாரத வரி:**

- இந்தியாவில் தூய்மை பாரத வரி தொடங்கப்பட்ட ஆண்டு - 2015 நவம்பர் 15
- இது அனைத்து வகையான வரிச் சேவகைகளுக்கும் பொருந்தும்.
- தூய்மை பாரத வரி விகிதம் - 0.5 சதவீதம்
- தற்போது 14% க்கும் மேற்பட்ட சேவை வரி நடைமுறையில் உள்ளது.
- ஒரு அரசின் திறனுக்கேற்ப வரிகளை உயர்த்துவது அதன் நிதித்திறன் என்று அழைக்கப்படுகிறது.
- செலவுகள், வரி வருவாயைவிட அதிகமாகும்போது, அரசு கடன்களைத் திரட்டுகிறது.
- வாராக் கடன்களைத் திரட்டுவதற்கு, வரிகளிலிருந்து ஒரு பகுதியும் செலவழிக்கப்படலாம்.
- பண உருவாக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில், ஒப்பபுறுதிப் பணம் அளீப்பதற்கு அரசு கேள்வி கேட்கும்வரை, அரசின் வருவாய்க்கு வரிகள் தேவைப்படாது.
- நாணய மதிப்பைத் தக்கவைத்தல், சொத்துப் பங்கீடு தொடர்பான பொதுக் கொள்கை வெளியிடுதல், குறிப்பிட்ட சில தொழிற்சாலைகள் அல்லது குழுக்கள் அல்லது நெடுஞ்சாலைகள் அல்லது சமூகப் பாதுகாப்பு போன்ற தனிப்பட்ட வகையில் நன்மை தருவன ஆகியவற்றிற்கு மானியம் அளித்தல் போன்றவை வரி விதிப்பின் நோக்கங்களாகும்.

www.kalvinews.com

- மத்திய வருமான சட்டம் 1963 இல் நேர்முக வரிகளுக்காக நிறுவப்பட்ட தனி வாரியம் - மத்திய வருவாய் வாரியம் (CBDT)
- "பண்டைய காலத்தில் வரி விதிக்கப்பட்டு ரொக்கமாகும் வேறு வகையாகவும் சேகரிக்கப்பட்டது" என்பதை விளக்கும் நூல் - அர்த்த சாஸ்திரம் (கௌடில்யர்)

**நேர்முக வரி மற்றும் மறைமுக வரிகளுக்கு இடையிலான வேறுபாடுகள்:**

| நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|
| வரி செலுத்துவோர் தமக்கு விதிக்கப்பட்ட வரிச் சுமையைப் பிறருக்கு மாற்ற இயலாது. | ஒருவர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச் சுமையை மிக எளிதாக வேறொருவருக்கு மாற்ற இயலும் |
| தனியாள் மற்றும் நிறுவனங்கள் பெறும் வருமானங்களின்மீது வரி விதிக்கப்படுகிறது | பல்வேறு பொருள் மற்றும் சேவைகளின்மீது வரி விதிக்கப்படுகிறது. |
| பணவீக்க அழுத்தம் இல்லை | பணவீக்க அழுத்தம் உண்டு |
| வரித் தாக்கமும், வரி நிகழ்வும் சமமாக உள்ளன | வரித் தாக்கமும், வரி நிகழ்வும் வெவ்வேறாக உள்ளன |
| நெகிழ்வுத் தன்மை குறைவு | நெகிழ்வுத் தன்மை அதிகமாக கொண்டது |

**பயிற்சி வினாக்கள்:**

1. கீழ்க்காண்பவற்றுள் எது அரசின் வளங்களைப் பெருக்கும் வளங்களுள் ஒன்றாகும்?
   (1) விதிகள் (2) ரா்.பில் திட்டம் (3) வளங்கள் (4) சொத்துகள்
2. ஒரு பெயரால் அல்லது செயலால் விளையும் வருவாய் ______.
   (1) விலை (2) கட்டணம் (3) மதிப்பு (4) வரி
3. வரியாகச் செலுத்தப்படும் மொத்த தொகையும் இருப்பு வைக்கப்படும் இடம் ______.
   (1) வங்கி (2) நாசிக் (3) அரசுக் கருவூலம் (4) பாராளுமன்றம்
4. கீழ்க்காண்பவற்றுள் எது ஆடம் ஸ்மித்தின் நான்கு வகையான வரி விதிப்பு கோட்பாடுகளுள் ஒன்று அல்ல?
   (1) வருவாய் விதி (2) வசதி விதி (3) சிக்கன விதி (4) சமத்துவ விதி
5. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதி ______.
   (1) வருவாய் விதி (2) வசதி விதி (3) சிக்கன விதி (4) உறுதிப்பாட்டு விதி
6. வசூலிக்கப்படும் வரியிலிருந்து குறைந்த அளவிலேயே தொகை செலவழிக்க வேண்டும் என்பது ______.
   (1) சமத்துவ விதி (2) வசதி விதி (3) சிக்கன விதி (4) உறுதிப்பாட்டு விதி
7. அரசுக்கு செலுத்தப்படும் வரிப்பணத்தில் இருந்து அதிக அளவிலான தொகை செலவிடப்படும் துறை ______.
   (1) கல்வித்துறை (2) போக்குவரத்துத்துறை
   (3) மின்சாரத்துறை (4) மீன்வளத்துறை

www.kalvinews.com

8. பண்டைய காலத்தில் வரி விதிக்கப்பட்டு ரொக்கமாகும் வேறு வகையாகவும் சேகரிக்கப்பட்டது" என்பதை விளக்கும் நூல் _______.

(1) புறநானூறு (2) சிலப்பதிகாரம் (3) திருக்குறள் (4) அர்த்த சாஸ்திரம்

9. வரி செலுத்துவோரின் வசதிகளை அதிகப்படுத்தும் வரி _______.

(1) விகிதாச்சார வரி (2) வளர்வீத வரி (3) வசதி வரி (4) தேய்வுவீத வரி

10. வருமான அளவை பொருட்படுத்தாமல் அனைவருக்கும் ஒரே மாதிரியாக விதிக்கும் வரி _______.

(1) விகிதாச்சார வரி (2) வளர்வீத வரி (3) வசதி வரி (4) தேய்வுவீத வரி

11. ஒருவரின் வருமானம் அதிகரிக்கும் போது அதற்கேற்ப வரி விகிதமும் அதிகரிப்பது _______.

(1) விகிதாச்சார வரி (2) வளர்வீத வரி (3) வசதி வரி (4) தேய்வுவீத வரி

12. அதிகமாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் குறைவாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் ஒரே மாதிரியாக விதிக்கப்படும் வரி _______.

(1) விகிதாச்சார வரி (2) வளர்வீத வரி (3) வசதி வரி (4) தேய்வுவீத வரி

13. வளர்வீத வரிக்கு எதிரான வரி _______.

(1) விகிதாச்சார வரி (2) வளர்வீத வரி (3) வசதி வரி (4) தேய்வுவீத வரி

14. தனியாளோ அல்லது நிறுவனமோ அரசுக்கு நேரடியாக வரி செலுத்துவதை குறிப்பது _______.

(1) விற்பனை வரி (2) மறைமுக வரி (3) நிறுவன வரி (4) நேர்முக வரி

15. கீழ்க்காண்பவற்றுள் எது நேர்முக வரிகளுள் ஒன்று அல்ல?

(1) சொத்து வரி (2) வருமான வரி (3) அன்பளிப்பு வரி (4) விற்பனை வரி

16. ஒருவரின் வரிச்சுமையை மற்றொருவரின் மீது சுமத்தும் வரி _______.

(1) வருமான வரி (2) மறைமுக வரி (3) நிறுவன வரி (4) நேர்முக வரி

17. கீழ்காண்பவற்றுள் எது மறைமுக வரிகளுள் ஒன்று?

(1) சொத்து வரி (2) கலால் வரி (3) அன்பளிப்பு வரி (4) வருமான வரி

18. "ஆயத்தீர்வை வரி" - என்றழைக்கப்படும் வரி _______.

(1) சொத்து வரி (2) கலால் வரி (3) அன்பளிப்பு வரி (4) வருமான வரி

19. ஒருவர் வைத்துள்ள சொத்துகளின் மதிப்புக்கு ஏற்ப விதிக்கப்படும் வரி _______.

(1) சொத்து வரி (2) கலால் வரி (3) அன்பளிப்பு வரி (4) வருமான வரி

20. நிறுவனங்கள் ஈட்டும் _______ மீது விதிக்கப்படும் வரி நிறுவன வரி ஆகும்.

(1) மூலதனம் (2) இலாபம் (3) நட்டம் (4) மதிப்பு

21. ஒருவர் வெகுமதியாக பெரும் பொருள்களின் மதிப்பு கேற்ப விதிக்கப்படும் வரி _______.

(1) சொத்து வரி (2) கலால் வரி (3) அன்பளிப்பு வரி (4) வருமான வரி

www.kalvinews.com

22. சேவை வழங்குவதன் அடிப்படையில் சேவையை _______ களிடமிருந்து வசூலிக்கப்படும் வரி சேவை வரி எனப்படும்.

(1) அளிப்பவர் (2) பெறுபவர்
(3) 1 மற்றும் 2 (4) மேற்கண்ட எதுவுமில்லை

23. விற்பனை செய்யப்படும் பொருட்களின் மீது _______ களிடமிருந்து வசூலிக்கப்படும் வரி விற்பனை வரி எனப்படும்.

(1) விற்பவர் (2) வாங்குபவர்
(3) 1 மற்றும் 2 (4) மேற்கண்ட எதுவுமில்லை

24. இந்தியாவில் முதன்முதலில் VAT அறிமுகப்படுத்தப்பட்ட மாநிலம் _______.

(1) அரியானா (2) தமிழ்நாடு (3) புதுடெல்லி (4) பஞ்சாப்

25. மொத்த (அ) சில்லறை விற்பனையாளர்களிடமிருந்தும் பொருள்களை வாங்குபவர்கள் செலுத்த வேண்டிய வரி _______.

(1) சொத்து வரி (2) கலால் வரி (3) அன்பளிப்பு வரி (4) வருமான வரி

26. கீழ்காண்பவற்றுள் எது முதன்முதலில் கலால் வரி விதிக்கப்பட்ட பொருள்களுள் ஒன்று அல்ல?

(1) வாகன எரிபொருள்கள் (2) சர்க்கரை
(3) உப்பு (4) எண்ணெய்

27. பொழுதுபோக்கு படங்கள், கட்டணங்கள், மேடை அரங்கேற்ற நிகழ்ச்சிகள், பூங்காக்கள், விளையாட்டு தொடர்பான செயல்பாடுகள் போன்றவற்றிற்காக வசூலிக்கப்படும் வரி _______.

(1) சொத்து வரி (2) பொழுதுபோக்கு வரி
(3) அன்பளிப்பு வரி (4) வருமான வரி

28. தேசிய அளவில் ஒட்டுமொத்த பொருளாதார அடிப்படையில் விதிக்கப்படும் வரி_______.

(1) சொத்து வரி (2) கலால் வரி
(3) அன்பளிப்பு வரி (4) சரக்கு & சேவை வரி

29. பொருள்களின் விற்பனை, உற்பத்தி, பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் விதிக்கப்படும் வரி _______.

(1) சொத்து வரி (2) கலால் வரி
(3) அன்பளிப்பு வரி (4) சரக்கு & சேவை வரி

30. இந்தியாவில் விதிக்கப்படும் அதிகபட்ச GST சதவீதம் _______.

(1) 16% (2) 28% (3) 18% (4) 19%

31. இந்தியாவில் விதிக்கப்படும் 12 % GST வரியில் மத்திய அரசுக்கு செல்லும் பங்களிப்பு _______.

(1) 9% (2) 7% (3) 8% (4) 6%

32. இந்தியாவில் விதிக்கப்படும் 12 % GST வரியில் மாநில அரசுக்கு செல்லும் பங்களிப்பு _______.

(1) 9% (2) 7% (3) 8% (4) 6%

33. தூய்மை பாரத வரி விகிதம் _______.

(1) 0.5% (2) 0.6% (3) 0.7% (4) 0.8%

www.kalvinews.com

34. கீழ்க்காண்பவற்றுள் எது GST வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் பொருள்களுள் ஒன்று அல்ல?

(1) கணினி (2) காய்கறிகள்

(3) உணவு தானியங்கள் (4) அத்தியாவசிய பண்டங்கள்

35. அரசால் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை நாம் பயன்படுத்தும்போது அதற்காக விதிக்கப்படும் வரி ________.

(1) சொத்து வரி (2) கலால் வரி (3) சுங்க வரி (4) வருமான வரி

36. VAT ________.

(1) Vehicle Added Tax (2) Value Added Tax (3) Vitamin Added Tax (4) Vendor Added Tax

37. GST ________.

(1) Gross and Services Tax (2) Growth and Services Tax

(3) Goods and Services Tax (4) Google and Services Tax

38. CGST ________.

(1) Central Goods and Services Tax (2) Carbon Goods and Services Tax

(3) Computer Goods and Services Tax (4) Cellphone Goods and Services Tax

39. SGST ________.

(1) Slight Goods and Services Tax (2) Slate Goods and Services Tax

(3) State Goods and Services Tax (4) Straight Goods and Services Tax

40. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.

i) வரி செலுத்துவோர் அரசுக்கு கட்டாயமாக வரி செலுத்தவேண்டும்.

ii) வரி செலுத்துவது ஒருவரின் தனிப்பட்ட விருப்பம்.

(1) i) சரி ii) சரி (2) i) சரி ii) தவறு (3) i) தவறு ii) சரி (4) i) தவறு ii) தவறு

41. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.

i) மக்கள் அனைவரும் சமமாக வரி செலுத்தவேண்டும் - சமத்துவ விதி

ii) மக்கள் மீது சுமத்தப்படும் வரியானது எளிமையாகவும் நியாயமாகவும் இருக்க வேண்டும் - சமத்துவ விதி

(1) i) சரி ii) சரி (2) i) சரி ii) தவறு (3) i) தவறு ii) சரி (4) i) தவறு ii) தவறு

42. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.

i) நெகிழ்வுத் தன்மை குறைவாக கொண்ட வரி - நேர்முக வரி.

ii) நெகிழ்வுத் தன்மை அதிகமாக கொண்ட வரி - மறைமுக வரி.

(1) i) சரி ii) சரி (2) i) சரி ii) தவறு (3) i) தவறு ii) சரி (4) i) தவறு ii) தவறு

43. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க..

i) மத்திய அரசால் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுமத்தப்படும் வரி - பொழுதுபோக்கு வரி

ii) மாநில அரசால் ஒவ்வொரு முறையும் வசூலிக்கப்படும் வரி - கலால் வரி

(1) i) சரி ii) சரி (2) i) சரி ii) தவறு (3) i) தவறு ii) சரி (4) i) தவறு ii) தவறு

www.kalvinews.com

44. பொருத்துக

a. மத்திய வருமானச் சட்டம் - i. 2015 நவம்பர் 15

b. GST வரி முறை - ii. 2005

c. தூய்மை பாரத வரி - iii. 2017 ஜூலை 1

d. மதிப்பு கூட்டு வரி - iv. 1963

(1) a - i b - ii c - iii d - iv

(2) a - iv b - iii c - I d - ii

(3) a - iii b - ii c - I d - iv

(4) a - ii b - iii c - I d - iv

45. பின்வருவனவற்றுள் எது மறைமுக வரி அல்ல?

(1) சேவை வரி

(2) மதிப்புக் கூட்டு வரி

(3) சொத்து வரி

(4) சுங்க வரி

46. IGST ன் விரிவாக்கம் _______.

(1) International Goods and Service Tax

(2) Indian Goods and Service Tax

(3) Integrated Goods and Service Tax

(4) Important Goods and Service Tax

47. தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையைப் பிறருக்கு மாற்ற இயலாத வரி _______.

(1) மறைமுக வரி

(2) நேர்முக வரி

(3) சேவை வரி

(4) மதிப்பு கூட்டு வரி

48. கீழ்க்கண்டவற்றுள் எதற்கு நாம் சொத்துவரி செலுத்தத் தேவையில்லை?

(1) வீடு

(2) அணிகலன்

(3) கணினி

(4) மகிழுந்து

49. கீழ்க்கண்டவற்றுள் எது / எவை வரி விதிப்பின் நோக்கங்களாகும்?

(1) நாணய மதிப்பைத் தக்க வைத்தல்

(2) சொத்துப் பங்கீடு தொடர்பான பொதுக் கொள்கை வெளியிடுதல்

(3) நலத் திட்டங்கள் செயல்படுத்துதல்

(4) இவை அனைத்தும்

50. பரம்பரைச் சொத்தின்மீது விதிக்கப்படும் வரி_______.

(1) பண்ணை வரி

(2) கலால் வரி

(3) சேவை வரி

(4) வருமான வரி

51. GST வரிவிதிப்பிற்குள் வராத பொருளின் பெயரைக் கூறுக: (NMMS-2018)

(1) ஒப்பனைப் பொருட்கள்

(2) உணவுப் பொருட்கள்

(3) மருந்துகள்

(4) பெட்ரோல்

www.kalvinews.com

# விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 16 | (2) | 31 | (4) | 46 | (3) |
| 2 | (4) | 17 | (2) | 32 | (4) | 47 | (2) |
| 3 | (3) | 18 | (2) | 33 | (1) | 48 | (3) |
| 4 | (1) | 19 | (1) | 34 | (1) | 49 | (4) |
| 5 | (4) | 20 | (2) | 35 | (3) | 50 | (1) |
| 6 | (3) | 21 | (3) | 36 | (2) | 51 | (4) |
| 7 | (1) | 22 | (2) | 37 | (3) | | |
| 8 | (4) | 23 | (2) | 38 | (1) | | |
| 9 | (3) | 24 | (1) | 39 | (3) | | |
| 10 | (1) | 25 | (2) | 40 | (2) | | |
| 11 | (2) | 26 | (4) | 41 | (3) | | |
| 12 | (4) | 27 | (2) | 42 | (1) | | |
| 13 | (4) | 28 | (4) | 43 | (4) | | |
| 14 | (4) | 29 | (4) | 44 | (2) | | |
| 15 | (4) | 30 | (2) | 45 | (3) | | |

www.kalvinews.com

## வகுப்பு - 8 - வரலாறு

### 1. ஐரோப்பியர்கள் வருகை

**தொகுப்பு:**
**திரு.மு.ஆனந்து**, B.Sc., M.A., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),
ஊ.ஒ.ந.நி.பள்ளி, அத்தியூர்,
ஈரோடு மாவட்டம்.

**மேம்பாடு:**
**திருமதி.L.சிவசங்கரி**, M.A., B.Ed.,
பட்டதாரி ஆசிரியை (சமூக அறிவியல்),
அரசு மேல்நிலைப்பள்ளி, கருங்குழி,
கடலூர் மாவட்டம்.

**முக்கிய குறிப்புகள்**

- இந்தியாவிற்கு வருகை புரிந்த ஐரோப்பியர்கள் **போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டேனியர்கள், ஆங்கிலேயர்கள்.**
- வரலாற்றுத் தகவல்களின் பெட்டகம் **ஆவணக் காப்பகம்.**

**சான்றுகளின் வகைகள்:**

- நாம் வரலாற்றை எழுதுவதற்கு, எழுதப்பட்ட மற்றும் பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள் நமக்கு பெரிதும் உதவுகின்றன.

**எழுதப்பட்ட ஆதாரங்கள்:**

- இந்தியாவின் செல்வ வளத்தை ஐரோப்பியர்கள் **மார்க்கோபோலோவின்** குறிப்புகள் மூலம் அறிந்தனர்.
- பிரெஞ்சு - இந்திய உறவுமுறை பற்றியக் குறிப்புகளை எழுதியவர் **ஆனந்தரங்கம்.**
- ஆனந்தரங்கம் பாண்டிச்சேரி பிரெஞ்ச் வர்த்தகத்தில் **மொழிபெயர்ப்பாளராக** இருந்தார்.
- எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை **இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டுப் பிரசுரங்கள், அரசு ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள்.**

**ஆவணக் காப்பகங்கள்:**

- இந்திய தேசிய ஆவணக் காப்பகம் **புதுடெல்லியில்** உள்ளது. இது **ஆசியாவிலேயே மிகப் பெரிய** ஆவணக் காப்பகமாகும்.
- **ஜார்ஜ் வில்லியம் பார்ஸ்ட்** - இந்திய தேசிய ஆவணக் காப்பகத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

**தமிழ்நாடு ஆவணக் காப்பகம்:**

- தமிழ்நாடு ஆவணக் காப்பகம் **சென்னைப் பதிப்பாசனம்** எனவும் அழைக்கப்படுகிறது. இது சென்னையில் உள்ளது, **தென்னிந்தியாவின் மிகப்பழமையான** மற்றும் **மிகப்பெரிய** களஞ்சியங்களுள் ஒன்று.
- **டாட்வெல்** என்பவரின் முயற்சியால் 1917 **இல்** சென்னை நாட்குறிப்புப் பதிவுகள் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு ஆவணக் காப்பக வரலாற்றில் **டாட்வெல்** ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தார்.
- நமது கலாச்சாரத்தைப் பாதுகாத்து மேம்படுத்த உதவுபவை **அருங்காட்சியகங்கள்.**
- புனித பிரான்சிஸ் ஆலயம் - **கொச்சி**
- புனித லூயிஸ் கோட்டை - **பாண்டிச்சேரி**
- புனித ஜார்ஜ் கோட்டை - **சென்னை**

www.kalvinews.com

- புனித டேவிட் கோட்டை - **கடலூர் (1690 ஆண்டு)**
- **டெல்லி அருங்காட்சியகம்** இந்தியாவின் மிகப்பெரிய தேசிய அருங்காட்சியகம் **1949 இல்** நிறுவப்பட்டது.
- நிர்வாக வரலாற்றை அறிய உதவுபவை **நாணயங்கள்**.
- நவீன இந்தியாவின் **முதல் நாணயம் கி.பி 1862** ல் வெளியிடப்பட்டது. **ஏழாம் எட்வர்டு** தன் உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட்டார்.
- **1935 இல் ரிசர்வ் வங்கி** ரூபாய் நோட்டுகளை வெளியிடும் அதிகாரம் பெற்றது. **ஆறாம் ஜார்ஜ்** உருவம் தாங்கிய **5 ரூபாய்** நோட்டு, ரிசர்வ் வங்கி வெளியிட்ட முதல் ரூபாயாகும். **ஜனவரி 1938** இல் இது வெளியிடப்பட்டது.

**ஐரோப்பியர்கள் வருகை:**

**போர்ச்சுகல்:**

- **கி.பி 1453 இல்** துருக்கியர்களால் **கான்ஸ்டான்டிநோபிள்** கைப்பற்றப்பட்ட பிறகு, இந்திய - ஐரோப்பிய நிலவழி மூடப்பட்டது. இது புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.
- போர்ச்சுகல் இந்தியாவிற்குக் கடல் வழியைக் கண்டுபிடிக்க ஆர்வமாக இருந்தது. போர்ச்சுகீசிய இளவரசர் **ஹென்றி**, பொதுவாக **மாலுமி ஹென்றி** என அழைக்கப்பட்டார்.
- **1487 இல் பார்த்தலோமி யோடயஸ்** தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை வந்தடைந்தார், **பார்த்தலோமியோ டயஸை** ஆதரித்தவர் மன்னர் **இரண்டாம் ஜான்.**

**வாஸ்கோடகாமா:**

- வாஸ்கோடகாமா **1498 இல் கள்ளிக்கோட்டையை** அடைந்த போது மன்னர் **சாமரின்** வரவேற்றார். இரண்டாவது மாலுமியாகக் கள்ளிக்கோட்டையை அடைந்தவர் **(1500ல்) பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல்.**
- 1501 இல் வாஸ்கோடகாமா **கண்ணனூரில்** வர்த்தக மையத்தை நிறுவினார். **கொச்சின்** போர்ச்சுகீசியரின் முதல் தலைநகரம்.
- 1524 டிசம்பரில் வாஸ்கோடகாமா **கொச்சியில் இறந்தார்.**

**பிரான்சிஸ்கோ - டி - அல்மெய்டா:**

- **பிரான்சிஸ்கோ - டி - அல்மெய்டா** முதல் போர்ச்சுகீசிய ஆளுநர் ஆவார். இவரது நோக்கம் கப்பற்படையை பலப்படுத்துவது ஆகும். இதற்காக இவர் **நீலநீர்க் கொள்கையைப்** பின்பற்றினார்.

**அல்போன்சோ - டி - அல்புகர்க்:**

- இந்தியாவில் போர்ச்சுகீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் **அல்போன்சோ - டி - அல்புகர்க்.** இவர் விஜயநகரப் பேரரசுடன் நட்புறவு மேற்கொண்டார்.

**நினோ-டி-குன்கா:**

- போர்ச்சுகீசியத் தலைநகரைக் **கொச்சியிலிருந்து கோவாவிற்கு** மாற்றியவர் **நினோ-டி-குன்கா.**
- போர்ச்சுகீசியர் இந்தியாவில் **புகையிலையை** அறிமுகப்படுத்தினர்.
- 1556 இல் கோவாவில் **அச்சு இயந்திரம்** அமைக்கப்பட்டது.
- 1536 இல் இந்திய மருத்துவத் தாவரங்கள் நூல் அச்சிடப்பட்டது.

www.kalvinews.com

**டச்சுக்காரர்கள்:**

- போர்ச்சுகீசியரைத் தொடர்ந்து **டச்சுக்காரர்கள்** இந்தியா வந்தனர்.
- 1602 இல் **நெதர்லாந்து ஐக்கியக் கிழக்கிந்தியக் கம்பெனி** தொடங்கப்பட்டது. முதல் வர்த்தக மையம் **மசூலிப்பட்டினம்.**
- 1605 இல் போர்ச்சுகீசியரிடமிருந்து **அம்பாய்னாவைக்** கைப்பற்றினர்.
- டச்சுக்காரர்களின் ஆரம்ப காலத் தலைநகர் **பழவேற்காடு.**
- 1690 இல் தலைநகரை **நாகப்பட்டினத்திற்கு** மாற்றிக்கொண்டனர்.
- டச்சுக்காரர்களின் வர்த்தகப் பொருட்கள் **பட்டு, பருத்தி, இண்டிகோ, அரிசி, அபினி**, ஏகபோக உரிமை பெற்ற வர்த்தகப் பொருட்கள் **கருப்பு மிளகு, நறுமணப்பொருள்.**
- அம்பாய்னா படுகொலை - 1623
- பெடரா போர் - 1759
- டச்சு வீழ்ச்சியடைந்த ஆண்டு - 1795

**தமிழ்நாட்டில் டச்சுக்காரர்கள்:**

- டச்சு அதிகார மைய இருப்பிடம் - கெல்டிரியா கோட்டை..
- 1613 இல் பழவேற்காட்டில் கெல்டிரியா கோட்டை கட்டப்பட்டது.

**ஆங்கிலேயர்கள்:**

- இராணி எலிசபெத், லண்டன் வர்த்தக நிறுவனத்திற்கு **1600 டிசம்பர் 31 இல்** அனுமதி பட்டயம் வழங்கினார்.
- **1608 இல் வில்லியம் ஹாக்கின்ஸ், ஜஹாங்கீரிடம்** வர்த்தகம் செய்ய அனுமதி கோரினார். ஆனால் அனுமதி கிடைக்கவில்லை.
- ஆங்கிலத் தளபதி **தாமஸ் பெஸ்ட்**, சூரத் அருகே நடந்த கடற்போரில் போர்ச்சுகீசியரைத் தோற்கடித்தார்.
- ஆங்கிலேயரின் முதல் வர்த்தக மையம் - **மசூலிப்பட்டினம் - 1611**
- ஆங்கிலேயரின் ஆரம்ப காலத் தலைநகர் - **சூரத் - 1613**
- 1614 இல் போர்ச்சுகீசியரை வென்றவர் **நிக்கோலஸ் டவுண்டன்.**
- 1615 இல் ஜஹாங்கீரைச் சந்திக்க **சர் தாமஸ் ரோவை** அனுப்பியவர், இங்கிலாந்து மன்னர் **ஜேம்ஸ்.**
- 3 ஆண்டுகள் தங்கி, வணிக உரிமையைப் பெற்றவர் **சர் தாமஸ் ரோ.**
- சர் தாமஸ் ரோ வணிக மையங்களை நிறுவிய இடங்கள் **ஆக்ரா, அகமதாபாத், புரோச்.**
- ஆங்கிலேயரின் முதல் வணிக மையமான **மசூலிப்பட்டினம் நிறுவப்பட்ட ஆண்டு 1611.** இது கோல்கொண்டா அரசின் துறைமுகம் ஆகும்.
- 1639 இல் சந்திரகிரி மன்னரான **சென்னப்ப நாயக்கரிடமிருந்து** மெட்ராஸைக் குத்தகைக்குப் பெற்றவர் **பிரான்சிஸ் டே.**
- ஆங்கிலேயரின் முதல் கோட்டை **புனித ஜார்ஜ் கோட்டை (சென்னை).** இது கிழக்குப் பகுதியின் தலைமையிடம் ஆகும்.
- இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸுக்கும், போர்ச்சுகீசிய இளவரசி காதரினுக்கும் நடைபெற்ற திருமணத்தில் சீர்வரிசையாகக் கிடைத்தது **பம்பாய்.**
- 1668 இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி பம்பாயை ஆண்டுக்கு 10 பவுண்டுகளுக்குக் குத்தகையாகப் பெற்றது.

www.kalvinews.com

- **1690 இல் சுதாநுதி** என்ற இடத்தில் வர்த்தக மையத்தை நிறுவியவர் **ஜாப் சார்னாக்.**
- 1698 இல் ஜமீன்தாரி உரிமை பெறப்பட்ட 3 கிராமங்கள் **சுதாநுதி, காளிகட்டம், கோவிந்தபூர்.** இந்த 3 கிராமங்களே **கல்கத்தாவாக** வளர்ச்சி பெற்றது.
- 1696 இல் சுதாநுதியில் கட்டப்பட்ட கோட்டை, 1700 இல் **வில்லியம் கோட்டை** என பெயர் பெற்றது.
- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை அரசியல் சக்தியாக மாற்றிய போர்கள் **பிளாசிப் போர் (1757), பக்சார் போர் (1764).**
- இந்தியா 1858 வரை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் கீழ் இருந்தது. 1858 க்குப் பின் ஆங்கில அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**டேனியர்கள்:**

- டென்மார்க் அரசர் **நான்காம் கிறிஸ்டியன்,** 1616 மார்ச் 17 இல் **டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை** உருவாக்கினார்.
- டேனிஷ் குடியேற்றங்கள் **1620 இல் தரங்கம்பாடி (தமிழ்நாடு), 1676 - செராம்பூர் (வங்காளம்)**
- டேனியர்களின் தலைமையிடம் **செராம்பூர்.**
- டேனியர்கள் தங்கள் குடியேற்றங்களை 1845 இல் ஆங்கில அரசுக்கு விற்றனர்.
- டேனியர்கள் தரங்கம்பாடியை **டானஸ்பெர்க்** என அழைத்தனர், தரங்கம்பாடியில் **அச்சுக்கூடத்தை** நிறுவியவர் **சீகன்பால்கு.**

**பிரெஞ்சுக்காரர்கள்:**

- **பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனம்** (1664) **கால்பர்ட்** என்பவரால் உருவாக்கப்பட்டது. கால்பர்ட் **14 - ஆம் லூயியி**ன் அமைச்சர்.
- இந்தியாவிற்கு வந்த கடைசி ஐரோப்பிய நாடு **பிரான்ஸ்.**
- இந்தியாவில் முதல் பிரெஞ்ச் வணிக மையம் **சூரத்**. இதை நிறுவியவர் **பிரான்காய்ஸ் கரோன்.**
- இரண்டாவது பிரெஞ்சு வணிக மையம் **மசூலிப்பட்டினம் (1669)**. இதை நிறுவியவர் **மார்காரா.**
- 1673 இல் பாண்டிச்சேரியில் பிரெஞ்சு குடியேற்றத்தை நிறுவியவர் **மார்ட்டின்.** பிரெஞ்சின் முக்கியக் குடியேற்றம் **பாண்டிச்சேரி.**
- பாண்டிச்சேரியில் **செயிண்ட் லூயில் கோட்டையைக்** கட்டியவர் **பிரான்காய்ஸ் மாட்டின்.**
- வங்காளத்தின் முகலாய ஆளுநர் **செயிஸ்டகான்.**
- 1673 இல் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி **சந்திரநாகூர்** என்ற நகரைக் கல்கத்தாவிற்கு அருகில் நிறுவியது.
- 1742 இல் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநராக நியமிக்கப்பட்டவர் **ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே**. இவரின் ஆட்சியில் பிரெஞ்சு அதிகாரம் பலப்படுத்தப்பட்டது.
- 1731 இல் **சுவீடன் கிழக்கிந்தியக் கம்பெனியை** நிறுவியவர் **ஜோதன் பர்க்.**
- போர்ச்சுக்கீசியர்கள் டச்சுக்காரர்களால் முறியடிக்கப்பட்டனர். ஆங்கிலேயர்களால் வெளியேற்றப்பட்டனர்.
- ஆங்கிலேயருடன் நடைபெற்ற 3 கர்நாடகப் போர்கள் பிரான்சை நலிவடையச் செய்தன.

**போர்ச்சுகீசிய வணிக மையங்கள்.**

- கோவா, டையூ, டாமன், சால்செட், பசீன், சௌல், பம்பாய், ஹுக்ளி, சாந்தோம் (சென்னை).

**டச்சு வணிக மையங்கள்:**

- பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம்பஜார், பாட்னா, பாலசோர், நாகப்பட்டினம், கொச்சின்.

www.kalvinews.com

**டச்சுக்காரர்களின் கோட்டைகள்:**

- நாகப்பட்டினம், புன்னக்காயல், பரங்கிப்பேட்டை, கடலூர், தேவனாம்பட்டினம்.

**பிரெஞ்சு வணிக மையங்கள்:**

- சூரத், மசூலிப்பட்டினம், பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, பாலசோர், காசிம்பசார்.

**பயிற்சி வினாக்கள்:**

1. இந்தியாவின் செல்வ வளத்தை ஐரோப்பியர் _______ குறிப்புகள் மூலம் அறிந்தனர்.
   (1) யுவான்சுவாங் (2) மார்க்கோபோலோ
   (3) மெகஸ்தனிஸ் (4) பதுதா

2. ஆனந்தரங்கம் குறிப்புகள் மூலம் அறிவது _______.
   (1) இந்திய - அரேபியா உறவு முறை (2) இந்திய - சீனா உறவு முறை
   (3) இந்திய - பிரெஞ்சு உறவு முறை (4) இந்திய - ஐரோப்பிய உறவு முறை

3. பின்வருவனவற்றுள் எவை எழுதப்பட்ட ஆதாரங்கள் அல்ல?
   (1) சுயசரிதைகள் (2) இலக்கியங்கள் (3) நாட்குறிப்புகள் (4) சிற்பங்கள்

4. ஆசியாவிலேயே மிகப்பெரிய ஆவணக் காப்பகம் _______ ல் உள்ளது.
   (1) புதுடெல்லி (2) சென்னை (3) சீனா (4) ரஷ்யா

5. பொருத்துக.
   i. ஆனந்தரங்கம் - a. இந்திய ஆவணக் காப்பகத்தின் தந்தை
   ii. ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட் - b. சென்னை நாட்குறிப்புப் பதிவுகள்
   iii. டாட்வெல் - c. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
   iv. சென்னைப் பதிப்பாசனம் - d. மொழிபெயர்ப்பாளர்
   (1) i - d ii - c iii - b iv - a (2) i - d ii - a iii - b iv - c
   (3) i - d ii - a iii - c iv - b (4) i - d ii - c iii - a iv - b

6. கூற்று: நமது கலாச்சாரத்தைப் பாதுகாப்பவை அருங்காட்சியகங்கள்.
   காரணம்: சமய, கலாச்சார, வரலாற்று மதிப்புமிக்க பொருட்கள் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.
   (1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்று தவறு, காரணம் சரி
   (3) கூற்று காரணம் இரண்டுமே சரி (4) கூற்று காரணம் இரண்டுமே தவறு.

7. டெல்லி அருங்காட்சியகம் நிறுவப்பட்ட ஆண்டு _______.
   (1) 1948 (2) 1949 (3) 1950 (4) 1951

8. நிர்வாக வரலாற்றை அறிய உதவுபவை _______.
   (1) நாணயங்கள் (2) சிற்பங்கள் (3) கோவில்கள் (4) உடைகள்

9. 1938 இல் ரிசர்வ் வங்கி வெளியிட்ட 5 ரூபாய் நோட்டில் யாருடைய உருவம் இடம்பெற்றிருந்தது?
   (1) தேசியச் சின்னம் (2) ஏழாம் எட்வர்டு
   (3) மகாத்மா காந்தியடிகள் (4) ஆறாம் ஜார்ஜ்

www.kalvinews.com

10. கூற்று: போர்ச்சுக்கீசிய இளவரசர், மாலுமி ஹென்றி என அழைக்கப்பட்டார்.
காரணம்: ஏனெனில் அவர் மாலுமியாகப் பணியாற்றினார்.
(1) கூற்று, காரணம் இரண்டும் சரி (2) கூற்று, காரணம் இரண்டும் தவறு
(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

11. 1487 இல் தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை வந்தடைந்தவர் _______ ஆவார்.
(1) பார்த்தலோமியோ டயஸ் (2) வாஸ்கோடகாமா
(3) சாமரின் (4) காப்ரில்

12. போர்ச்சுக்கீசியரின் முதல் தலைநகரம் _______.
(1) கண்ணனூர் (2) கொச்சின் (3) கோவா (4) பழவேற்காடு

13. முதல் போர்ச்சுக்கீசிய ஆளுநர் _______.
(1) பிரான்சிஸ்கோ - டி - அல்மெய்டா (2) அல்போன்சோ - டி - அல்புகர்க்
(3) நினோ - டி - குன்கா (4) நிக்கோலஸ்

14. இந்திய மருத்துவத் தாவரங்கள் என்னும் நூல் வெளியிடப்பட்ட ஆண்டு _______.
(1) 1556 (2) 1563 (3) 1602 (4) 1560

15. நினோ - டி - குன்கா போர்ச்சுகீசியத் தலைநகரை _______ லிருந்து _______ க்கு மாற்றினார்.
(1) கொச்சி, கோவா (2) கோவா, கொச்சி (3) கோவா, டெல்லி (4) கொச்சி, டெல்லி

16. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளைக் கால வரிசைப்படி (ஏறுவரிசைப்படி) அமைத்தால், சரியான வரிசை எது?
(1) பெடரா போர்
(2) நெதர்லாந்து கிழக்கிந்தியக் கம்பெனி தொடக்கம்
(3) அம்பாய்னா படுகொலை
(4) வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்
(1) 1, 2, 3, 4 (2) 4, 3, 2, 1 (3) 4, 2, 3, 1 (4) 4, 2, 1, 3

17. டச்சுக்காரர்களால் வர்த்தகம் செய்யப்படாத பொருட்கள் எது?
(1) அபினி (2) பருத்தி (3) அரிசி (4) மிளகாய்

18. கெல்டிரியா கோட்டை _______ இன் அதிகார மையமாக இருந்தது.
(1) டச்சுக்காரர் (2) போர்ச்சுக்கீசியர் (3) ஆங்கிலேயர் (4) டேனியர்

19. சர் தாமஸ் ரோவை இந்தியாவிற்கு அனுப்பியவர் _______.
(1) இராணி எலிசபெத் (2) மன்னர் ஜேம்ஸ் (3) ஜார்ஜ் (4) வில்லியம்

20. பொருந்தாததைக் கண்டறிக.
(1) ஆக்ரா (2) அகமதாபாத் (3) புரோச் (4) பழவேற்காடு

21. பொருந்தாததைக் கண்டறிக.
(1) பம்பாய் (2) சௌல் (3) பசீன் (4) கடலூர்

22. பொருந்தாததைக் கண்டறிக.
(1) சூரத் (2) பரங்கிப்பேட்டை (3) பாண்டிச்சேரி (4) மாஹி

www.kalvinews.com

23. பொருந்தாததைக் கண்டறிக.

(1) கால்பர்ட் (2) சீகன் பால்கு

(3) பிரான்காய்ஸ் கோரன் (4) மார்காரா

24. தவறான இணையைக் கண்டறி

(1) புனித ஜார்ஜ் கோட்டை - சென்னை

(2) புனித பிரான்சிஸ் ஆலயம் - கொச்சி

(3) புனித வில்லியம் கோட்டை - சுதாநுதி

(4) டேனியர்களின் தலைநகர் - தரங்கம்பாடி

25. சரியான இணையைத் தேர்ந்தெடு.

(1) பிளாசிப் போர் - 1764

(2) பக்சார் போர் - 1757

(3) டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி - கால்பர்ட்

(4) சுதாநுதி வர்த்தக மையம் - ஜாப் சார்னாக்

26. கோல்கொண்டா அரசின் துறைமுகம் _______.

(1) சென்னை (2) விசாகப்பட்டினம்

(3) மசூலிப்பட்டினம் (4) கொச்சி

27. சென்னப்ப நாயக்கரிடமிருந்து மெட்ராஸைக் குத்தகையாகப் பெற்றவர் _______.

(1) பிரான்சிஸ் டே (2) ரிப்பன் (3) சார்லஸ் (4) ஜார்ஜ்

28. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுகீசிய மன்னரிடமிருந்து திருமணச் சீராகப் பெற்ற பகுதி _______.

(1) சென்னை (2) பம்பாய் (3) கொல்கத்தா (4) டெல்லி

29. வங்காளத்தின் முகலாய ஆளுநர் _______.

(1) ட்யூப்ளே (2) மார்ட்டின் (3) செயிஸ்டகான் (4) அப்சல் கான்

30. கூற்று 1: மூன்று கார்நாடகப் போர்கள் பிரெஞ்சுகாரர்களுக்கும், டச்சுக்காரர்களுக்கும் இடையே நடைபெற்றன.

கூற்று 2: கர்நாடகப் போர்கள் பிரான்ஸை நலிவடையச் செய்தன.

(1) கூற்று 1 சரி, 2 தவறு (2) கூற்று 1 தவறு, 2 சரி

(3) கூற்று 1 மற்றும் 2 சரி (4) கூற்று 1 மற்றும் 2 தவறு

31. _______ ல் _______ கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவியவர் ஜோதன்பர்க்.

(1) 1731, சுவீடன் (2) 1731, டச்சு (3) 1713, டச்சு (4) 1700, சுவீடன்

32. பொருத்துக.

1) அச்சுக் கூடம் - A. ட்யூப்ளே

2) பதினான்காம் லூயியின் அமைச்சர் - B. பிரான்காய்ஸ் மார்ட்டின்

3) செயின்ட் லூயிஸ் கோட்டை - C. சீகன் பால்கு

4) பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆளுநர் - D. கால்பர்ட்

www.kalvinews.com

(1) 1 - C 2 - D 3 - A 4 - B (2) 1 - C 2 - D 3 - B 4 - A

(3) 1 - C 2 - A 3 - D 4 - B (4) 1 - D 2 - C 3 - B 4 - A

33. இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?

(1) வாஸ்கோடகாமா (2) பார்த்தலோமியோ டயஸ்

(3) அல்போன்சோ-டி-அல்புகர்க் (4) அல்மெய்டா

34. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடித்ததில் முதன்மையாக இருந்த நாடு எது?

(1) நெதர்லாந்து (டச்சு) (2) போர்ச்சுகல் (3) பிரான்ஸ் (4) பிரிட்டன்

35. 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?

(1) பிரான்ஸ் (2) துருக்கி (3) நெதர்லாந்து (டச்சு) (4) பிரிட்டன்

36. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் _______ நாட்டைச் சேர்ந்தவர்.

(1) போர்ச்சுக்கல் (2) ஸ்பெயின் (3) இங்கிலாந்து (4) பிரான்ஸ்

37. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை _______.

(1) வில்லியம் கோட்டை (2) செயின்ட் ஜார்ஜ் கோட்டை

(3) ஆக்ரா கோட்டை (4) டேவிட் கோட்டை

38. பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர் _______.

(1) ஆங்கிலேயர்கள் (2) பிரெஞ்சுக்காரர்கள்

(3) டேனியர்கள் (4) போர்த்துக்கீசியர்கள்

39. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி _______ வர்த்தக மையமாக இருந்தது.

(1) போர்ச்சுக்கீசியர்கள் (2) ஆங்கிலேயர்கள்

(3) பிரெஞ்சுக்காரர்கள் (4) டேனியர்கள்

40. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) _______ல் அமைந்துள்ளது.

(1) புதுடெல்லி (2) கல்கத்தா (3) சென்னை (4) மும்பை

41. கூற்றுகளை ஆராய்க.

கூற்று: போர்ச்சுகீசிய மாலுமி பார்த்தலோமியோ டயஸ், இரண்டாம் ஜான் என்பவரால் ஆதரிக்கப்பட்டார்.

காரணம்: போர்ச்சுகீசியர்கள் இந்தியாவிற்குக் கடல் வழி காண்பதில் ஆர்வமுடையவர்கள்.

(1) கூற்றும், காரணமும் தவறு (2) கூற்றும், காரணமும் சரி

(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

42. இந்தியாவில் அச்சு இயந்திரம் _______ல் _______ அரசால் _______ எனும் இடத்தில் நிறுவப்பட்டது.

(1) 1556, போர்ச்சுக்கீசிய, கோவா (2) 1556, டேனிய, டெல்லி

(3) 1565, டச்சு, பழவேற்காடு (4) 1556, போர்ச்சுக்கீசிய, டையூ

www.kalvinews.com

43. கூற்றுகளை ஆராய்க.

கூற்று: 1608 ல் ஜஹாங்கீர் அவைக்கு, வர்த்தக அனுமதி கோரி வில்லியம் ஹாக்கின்ஸ் வந்தார். ஆனால், ஜஹாங்கீர் அதை நிராகரித்தார்.

காரணம்: _______.

(1) ஆங்கிலேயர் மீது வெறுப்பு (2) போர்ச்சுக்கீசிய தலையீடு
(3) ஆங்கிலேயர் மீது அச்சம் (4) பணிவற்ற அணுகுமுறையால்

44. பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் _______ ஆண்டு _______ கிழக்கிந்தியக் கம்பெனி உருவாக்கப்பட்டது.

(1) 1664, டச்சு (2) 1664, ஆங்கில (3) 1646, சுவீடன் (4) 1664, பிரெஞ்சு

45. டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியை உருவாக்கியவர் _______.

(1) நான்காம் கிரிஸ்டியன் (2) சீகன் பால்கு
(3) தாமஸ் (4) பெட்ரோ காப்ரல்

46. தவறான இணையைக் கண்டறிக.

(1) பிரான்சிஸ் டே - டென்மார்க்
(2) பெட்ரோ காப்ரல் - போர்ச்சுகல்
(3) ஹாக்கின்ஸ் - இங்கிலாந்து
(4) கால்பர்ட் - பிரான்ஸ்

47. பொருத்துக.

i. டச்சுக்காரர்கள் - 1. 1664
ii. ஆங்கிலேயர்கள் - 2. 1602
iii. டேனியர்கள் - 3. 1600
iv. பிரெஞ்சுக்காரர்கள் - 4. 1616

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | 1 | 2 | 4 | 3 |
| (2) | 2 | 3 | 1 | 4 |
| (3) | 2 | 3 | 4 | 1 |
| (4) | 2 | 1 | 4 | 3 |

48. ஐரோப்பியர்களின் வருகை இந்திய வரலாற்றில் _______ காலத்தைச் சார்ந்தது.

(1) பண்டைய காலம் (2) இடைக்காலம் (3) நவீன காலம் (4) சமகாலம்

49. இந்தியாவின் நவீன கால வரலாறு _______ ம் நூற்றாண்டில் தொடங்குகிறது.

(1) கி.பி. 14-ஆம் (2) கி.பி. 18-ஆம் (3) கி.பி. 20-ஆம் (4) கி.பி. 16ஆம்

50. வரலாறு _______ அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகிறது.

(1) காலத்தை (2) புத்தகத்தை (3) ஆதாரங்களை (4) வரலாற்றாசிரியரை

51. _______ இந்திய வரலாறு எழுதும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினர்.

(1) பாரசீகர்கள் (2) ஆங்கிலேயர்கள் (3) கிரேக்கர்கள் (4) டேனியர்கள்

www.kalvinews.com

52. இந்தியாவின் நிருவாகப் பதிவுகள் பாதுகாக்கப்படும் இடம் _______.
(1) அருங்காட்சியகம் (2) புனித ஜார்ஜ் கோட்டை
(3) ஆவணக் காப்பகம் (4) ஆட்சியர் அலுவலகம்

53. பொருந்தாததைக் கண்டுபிடி.
(1) இலக்கியம் (2) சுயசரிதை (3) அரசு ஆவணம் (4) நாணயம்

54. பொருந்தாததைக் கண்டுபிடி.
(1) ஓவியங்கள் (2) கோட்டைகள் (3) நாட்குறிப்பு (4) சிலைகள்

55. பொருந்தாததைக் கண்டுபிடி.
(1) டேனியர் (2) இத்தாலியர் (3) ஆங்கிலேயர் (4) பிரெஞ்சுக்காரர்

56. சென்னை நாட்குறிப்புப் பதிவை வெளியிட்டவர் _______.
(1) டாட்வெல் (2) ஜார்ஜ் (3) ஆனந்த ரங்கம் (4) சென்னப்ப நாயக்கர்

57. நிகழ்வுகளை வரிசைப்படுத்துக.
a) தாமஸ் பெஸ்ட் போர்ச்சுகீசியக் கடற்படையைத் தோற்கடித்தார்.
b) ராணி எலிசபெத் வணிக அனுமதி பட்டயம் வழங்கினார்.
c) ஜஹாங்கீர் கி. பி 1613 ல் சூரத்தில் வணிகம் செய்ய அனுமதி வழங்கினார்.
d) ஜஹாங்கீரிடம் மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் அனுமதி கோரினார். ஆனால், அனுமதி கிடைக்கவில்லை.

(1) a - c - b - d (2) b - d - a - c (3) b - d - c - a (4) b - a - c - d

58. தமிழ்நாடு ஆவணக் காப்பகம் _______ என்றும் அழைக்கப்படுகிறது.
(1) இந்திய ஆவணக் காப்பகம் (2) தமிழ்க் காப்பகம்
(3) சென்னை பதிவாளர் அலுவலகம் (4) தலைமைச் செயலகம்

59. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. ஆங்கிலேயரின் முதல் வணிக மையம் | - | 1. ஜமீன்தாரி உரிமை |
| ii. மெட்ராஸ் | - | 2. மசூலிப்பட்டினம் |
| iii. பம்பாய் | - | 3. குத்தகை |
| iv. கல்கத்தா | - | 4. திருமண சீர் |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | 2 | 3 | 4 | 1 |
| (2) | 2 | 4 | 3 | 1 |
| (3) | 2 | 3 | 1 | 4 |
| (4) | 2 | 1 | 3 | 4 |

60. நவீன இந்தியாவின் முதன்மை ஆதாரங்கள் _______ மற்றும் _______.
(1) ஓவியங்கள், கோட்டைகள் (2) ஓவியங்கள், சிலைகள்
(3) சிலைகள், கோட்டைகள் (4) சிலைகள், நாணயங்கள்

61. தமிழ் வரலாற்றுக் குறிப்பு ஆவணங்களில் முக்கியமாக இருக்க வேண்டிய பெயர் _______.
(1) ஆனந்த ரங்கம் (2) டாட்வெல் (3) ஜார்ஜ் (4) அல்புகர்க்

www.kalvinews.com

62. தமிழ்நாடு ஆவணக் காப்பத்தின் பெரும்பாலான ஆவணங்கள் _______ மொழியில் உள்ளன.

(1) தமிழ் (2) ஆங்கிலம் (3) இந்தி (4) உருது

63. கூற்றுகளை ஆராய்க.

கூற்று 1: தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 1642 ஆம் ஆண்டு டச்சுப் பதிவுகளின் தொகுப்புகள் உள்ளன.

கூற்று 2: இப்பதிவுகள் கொச்சி மற்றும் சோழமண்டலக் கடற்கரையிலுள்ள இடங்களுடன் தொடர்புடையன.

(1) கூற்று 1, 2 ம் சரி (2) கூற்று 1, 2 ம் தவறு

(3) கூற்று 1 சரி, 2 தவறு (4) கூற்று 1 தவறு, 2 சரி

64. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தோடு தொடர்புடைய கூற்றுகளில் எது தவறானது?

(1) தென்னிந்தியாவின் மிகப்பழமையான பெரிய ஆவணக் காப்பகம்.

(2) டச்சுப் பதிவுகளின் தொகுப்புகள் - 1642.

(3) டேனிஷ் பதிவுகள் - 1687 முதல் 1845 காலப்பகுதி வரை.

(4) கொச்சி மற்றும் சோழமண்டலப் பதிவுகள் - 1657 முதல் 1845 காலப்பகுதி.

65. பொருத்துக.

i. புனித டேவிட் கோட்டை - 1. பிரெஞ்சுக்காரர்கள்

ii. கெல்டிரியா கோட்டை - 2. டேனியர்கள்

iii. தரங்கம்பாடி - 3. டச்சுக்காரர்கள்

iv. செயின்ட் லூயிஸ் கோட்டை - 4. ஆங்கிலேயர்கள்

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | 4 | 3 | 2 | 1 |
| (2) | 4 | 3 | 1 | 2 |
| (3) | 4 | 2 | 3 | 1 |
| (4) | 4 | 1 | 2 | 3 |

66. 1500-ஆம் ஆண்டு கள்ளிக்கோட்டைக்கு வந்த இரண்டாவது போர்ச்சுக்கீசிய மாலுமி _______.

(1) வாஸ்கோடகாமா (2) பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல்

(3) சாமரின் (4) பார்த்தலோமியோ டயஸ்

67. போர்ச்சுகீசியரின் முதல் தலைநகர் _______.

(1) கோவா (2) டையூ (3) கொச்சின் (4) டாமன்

68. டச்சுக்காரர்களின் ஆரம்ப காலத் தலைநகர் _______.

(1) பழவேற்காடு (2) நாகப்பட்டினம் (3) சூரத் (4) பாட்னா

69. டச்சுக்காரர்கள் தங்கள் தலைநகரை 1690 இல் _______ லிருந்து _______ க்கு மாற்றினர்.

(1) பழவேற்காடு, சூரத் (2) பழவேற்காடு, நாகப்பட்டினம்

(3) நாகப்பட்டினம், பழவேற்காடு (4) சூரத், பாட்னா

70. கூற்றுகளை ஆராய்க.

கூற்று: அல்மெய்டா பின்பற்றிய கொள்கை நீலநீர்க் கொள்கை என அழைக்கப்பட்டது.

காரணம்: இந்தியாவில் அவர் போர்ச்சுகீசியக் கப்பற்படையைப் பலப்படுத்தினார்.

www.kalvinews.com

(1) கூற்றும், காரணமும் சரி (2) கூற்றும், காரணமும் தவறு
(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

71. அல்மெய்டாவின் மகன் கொல்லப்பட்ட போர் நடைபெற்ற இடம் _______.
(1) கண்ணனூர் (2) சாவல் (3) சூரத் (4) சின்சுரா

72. 1515 இல் பாரசீக வளைகுடாவிலுள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தியவர் _______.
(1) அல்மெய்டா (2) அல்புகர்க் (3) நினோ-டி-குன்கா (4) காப்ரல்

73. 1534 ல் குஜராத் பகதூர்ஷாவிடமிருந்து பசீன் பகுதியைக் கைப்பற்றியவர் _______.
(1) அல்மெய்டா (2) அல்புகர்க் (3) நினோ-டி-குன்கா (4) காப்ரல்

74. காரணம் காண்க.
கத்தோலிக்கக் கிறிஸ்தவம் இந்தியாவின் கிழக்கு, மேற்குக் கடற்கரையோரப் பகுதிகளில் பரவக் காரணம் _______.
(1) போர்ச்சுகீசியரின் செல்வாக்கு (2) ஆங்கிலேயச் செல்வாக்கு
(3) டச்சுக்காரரின் செல்வாக்கு (4) டேனியர் செல்வாக்கு

75. தவறான இணையைக் காண்.
(1) அம்பாய்னா படுகொலை - 1623
(2) பெடரா போர் - 1795
(3) வாஸ்கோடகாமா இறப்பு - 1524
(4) போர்ச்சுகீசியக் கடற்படை மேலாண்மை - 1509

76. கீழ்க்கண்ட டச்சுக்காரர்கள் கைப்பற்றிய கோட்டைகளுள் பொருந்தாதது எது?
(1) கடலூர் (2) பரங்கிப்பேட்டை (3) நாகப்பட்டினம் (4) வேலூர்

77. கூற்றுகளை ஆராய்க.
கூற்று A: 1760 இல் பெடரா போர், டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயரிடையே நடைபெற்றது.
காரணம் R: 1623ல் டச்சுக்காரர்கள் அம்பாய்னாவில் ஆங்கிலேய வியாபாரிகளைக் கொன்றனர்.
(1) A, R சரி (2) A தவறு, R சரி (3) A, R தவறு (4) A சரி, R தவறு

78. பழவேற்காட்டிலிருந்து _______ மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதியானது.
(1) பழங்கள் (2) வைரங்கள் (3) துணிகள் (4) கருமிளகு

79. இலண்டன் வர்த்தக நிறுவனத்திற்கு இராணி எலிசபெத் அனுமதி பட்டயம் வழங்கி நாள் _______.
(1) 31.12.1600 (2) 1.1.1600 (3) 12.12.1600 (4) 16.12.1600

80. இலண்டன் வர்த்தக நிறுவனம் _______ கவர்னர், _______ இயக்குநர் கொண்டது.
(1) 1, 20 (2) 1, 24 (3) 1, 23 (4) 1, 30

81. கூற்றுகளை ஆராய்க.
கூற்று A: ஜஹாங்கீர் 1613 இல் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்திற்கு அனுமதியளித்தார்.
காரணம் R: ஆங்கிலத் தளபதி தாமஸ் பெஸ்ட், போர்ச்சுக்கீசிய கடற்படையைத் தோற்கடித்தார்.
(1) A, R சரி (2) A, R தவறு (3) A சரி, R தவறு (4) A தவறு, R சரி

www.kalvinews.com

82. 1614 இல் கேப்டன் நிக்கோலஸ் டவுண்டன் _______ ஐ வென்றார்.
(1) டேனியர் (2) பிரெஞ்சுக்காரர் (3) போர்ச்சுகீசியர் (4) டச்சுக்காரர்

83. ஆங்கிலேயரின் முதல் வர்த்தக மையம் _______.
(1) சூரத் (2) மசூலிப்பட்டினம் (3) அகமதாபாத் (4) சென்னை

84. ஆங்கிலேயரின் முதல் கோட்டை மற்றும் கிழக்குப் பகுதி தலைமையிடம் எது?
(1) புனித ஜார்ஜ் கோட்டை (2) வில்லியம் கோட்டை
(3) கெல்டிரியா கோட்டை (4) புனித டேவிட் கோட்டை

85. 1690 இல் ஜாப் சார்னாக் _______ என்னுமிடத்தில் வர்த்தக மையம் நிறுவினார்.
(1) கோவிந்தபூர் (2) சுதாநுதி
(3) காளிகட்டம் (4) புரோச்

86. _______ ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியா, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியிலிருந்து ஆங்கில அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.
(1) 1857 (2) 1858 (3) 1885 (4) 1947

87. _______ திருமணத்தில் பம்பாய், திருமணச் சீராகக் கிடைத்தது.
(1) இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் - போர்ச்சுகீசிய இளவரசி காதரின்
(2) போர்ச்சுகீசிய மன்னர் இரண்டாம் சார்லஸ் - இங்கிலாந்து இளவரசி காதரின்
(3) இங்கிலாந்து இளவரசி காதரின் - போர்ச்சுகீசிய மன்னர் எட்வர்டு
(4) இங்கிலாந்து மன்னர் எட்வர்டு - போர்ச்சுகீசிய இளவரசி காதரின்

88. டேனியர்களின் இந்தியத் தலைமையிடம் _______.
(1) தரங்கம்பாடி (2) செராம்பூர் (3) கோவா (4) மாஹி

89. வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகைபுரியாத ஐரோப்பிய நாடு _______.
(1) இங்கிலாந்து (2) டென்மார்க் (3) ஜெர்மனி (4) நெதர்லாந்து

90. முதல் பிரெஞ்சு வணிக மையத்தை _______ என்பவர் _______ நகரில் நிறுவினார்.
(1) கரோன், மாஹி (2) கரோன், சூரத்
(3) கால்பர்ட், மாஹி (4) கால்பர்ட், பாலசோர்

91. 1669 இல் இரண்டாவது பிரெஞ்சு வணிக மையத்தை _______ என்பவர் _______ நகரில் நிறுவினார்.
(1) மார்காரா, மசூலிப்பட்டினம் (2) மார்காரா, சூரத்
(3) டியூப்ளே, பாண்டிச்சேரி (4) டியூப்ளே, மசூலிப்பட்டினம்

92. பாண்டிச்சேரிக் குடியேற்றத்தை நிறுவியவர் _______.
(1) டியூப்ளே (2) கரோன்
(3) மார்ட்டின் (4) லூயிஸ்

93. பாண்டிச்சேரி செயின்ட் லூயிஸ் கோட்டையைக் கட்டியவர் _______.
(1) பிரான்காய்ஸ் மார்ட்டின் (2) பிரான்காய்ஸ் கரோன்
(3) மார்கரா (4) ஷெர்கான் லோடி

www.kalvinews.com

94. தவறான இணையைக் கண்டறிக.

(1) வங்காளத்தின் முகலாய ஆளுநர் - செயிஸ்டகான்

(2) சந்திரநாகூர் நகர் நிர்ணயம் - 1673

(3) ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே - 1742

(4) 1673 இல் பீஜப்பூர் ஆட்சியாளர் - இப்ராஹிம் லோடி

95. டியூப்ளேக்கு பிறகு பாண்டிச்சேரியின் பிரெஞ்சு ஆளுநர் _______.

(1) டூமாஸ் (2) ஷெர்கான் லோடி

(3) கரோன் (4) ஜோதன்பர்க்

96. கூற்றுகளை ஆராய்க.

கூற்று A: தூரக்கிழக்கு நாடுகளுடன் வணிகம் செய்ய, ஜோதன்பர்க் சுவீடன் கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவினார்.

காரணம் R: டச்சு, மற்றும் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் தோற்றத்திற்கு ஊக்குவிப்பாக இருந்தது.

(1) கூற்று A, R தவறு (2) கூற்று A, R ம் சரி

(3) கூற்று A சரி, R தவறு (4) கூற்று A தவறு, R சரி

97. போர்ச்சுக்கீசிய வணிக மையம் அல்லாதது எது?

(1) சால்செட் (2) பசீன் (3) சூரத் (4) சாந்தோம்

98. டச்சு வணிக மையம் அல்லாதது எது?

(1) சின்சுரா (2) சௌல் (3) காசிம்பஜார் (4) பாட்னா

99. பிரெஞ்சு வணிக மையம் அல்லாதது எது?

(1) சூரத் (2) மசூலிப்பட்டினம் (3) பாலசோர் (4) ஹூக்ளி

100. சூரத், காசிம்பஜார், பாலசோர் ஆகியவை _______ மற்றும் _______ ன் வணிக மையங்களாக இருந்தன.

(1) டச்சு, பிரெஞ்சு (2) டச்சு, டேனிஷ்

(3) டச்சு, ஆங்கிலேயர் (4) பிரெஞ்சு, ஆங்கிலேயர்

101. போர்ச்சுக்கீசிய அதிகாரம் வீழ்ந்தது _______ம் நூற்றாண்டு

(1) 16 (2) 17 (3) 18 (4) 19

102. விலைமதிப்பற்ற வரலாற்றுத் தகவல்களின் பெட்டகமாக விளங்கும் ஆவணக் காப்பகங்கள் _______.

(1) லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி, சென்னை

(2) சென்னை, கோவா, கடலூர், பசீன்

(3) கோவா, டையூ, டாமன், சென்னை

(4) பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, சென்னை

103. தரங்கம்பாடியை டானஸ்பெர்க் என அழைத்தவர் _______.

(1) ஆங்கிலேயர்கள் (2) டேனியர்கள்

(3) டச்சுக்காரர்கள் (4) பிரெஞ்சுக்காரர்கள்

www.kalvinews.com

104. சர் தாமஸ் ரோ வணிக மையம் நிறுவாத இடம் எது?

(1) ஆக்ரா (2) அகமதாபாத்

(3) புரோச் (4) கொச்சின்

105. விஜயநகரப் பேரரசுடன் நட்பு பாராட்டியவர் _______.

(1) அல்மெய்டா (2) அல்புகர்க்

(3) நினோ-டி-குன்கா (4) டியூப்ளே

106. நவீன இந்தியாவின் முதல் நாணயம் வெளியிடப்பட்ட ஆண்டு

(1) கி.பி. 1862 (2) கி.பி. 1768 (3) கி.பி. 1882 (4) கி.பி. 1885

107. கூற்றுகளை ஆராய்க

கூற்று A: பீஜப்பூர், குஜராத் சுல்தான்கள் எதிப்து மற்றும் துருக்கிச் சுல்தான்களுக்கு ஆதரவளித்தனர்.

காரணம் R: இந்தியப் பெருங்கடலில் அரேபிய வர்த்தகத்தைப் போர்ச்சுகீசியர் தகர்க்க முயன்றனர்.

(1) கூற்றும், காரணமும் சரி (2) கூற்றும், காரணமும் தவறு

(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

108. இந்திய ரிசர்வ் வங்கி நிறுவப்பட்ட ஆண்டு _______.

(1) 1935 (2) 1953 (3) 1947 (4) 1835

109. பின்வருவனவற்றுள் சரியான கூற்று / கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும் (NMMS-2020-21)

i. பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா முதல் போர்ச்சுகீசிய ஆளுநர் ஆவார்.

ii. அல்போன்சா-டி-அல்புகர்க், விஜயநகரப் பேரரசுடன் நட்புறவை மேற்கொண்டார்.

iii. கோவா முதலில் போர்த்துகீசியர்களின் தலைநகரமாயிருந்தது. பிறகு கொச்சிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

(1) iii மட்டும் (2) i மற்றும் iii மட்டும்

(3) i மற்றும் ii மட்டும் (4) அனைத்தும்

110. வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகைபுரிந்த கடைசி ஐரோப்பிய நாடு _______. (NMMS-2020-21)

(1) இங்கிலாந்து (2) பிரான்சு

(3) போர்ச்சுக்கல் (4) டென்மார்க்

111. போர்ச்சுகீசிய பயணி வாஸ்கோடகாமாவை வரவேற்று உபசரித்த இந்திய மன்னர் _______. (NMMS-2016)

(1) இராமச்சந்திர தேவா (2) சிங்கனா

(3) ஜஹாங்கீர் (4) சாமரின்

112. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் அமைந்துள்ள இடம் _______. (NMMS 2019-20)

(1) புது தில்லி (2) மும்பை

(3) கொல்கத்தா (4) சென்னை

www.kalvinews.com

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 26 | (3) | 51 | (2) | 76 | (4) | 101 | (2) |
| 2 | (3) | 27 | (1) | 52 | (3) | 77 | (2) | 102 | (1) |
| 3 | (4) | 28 | (2) | 53 | (4) | 78 | (2) | 103 | (2) |
| 4 | (1) | 29 | (3) | 54 | (3) | 79 | (1) | 104 | (4) |
| 5 | (2) | 30 | (2) | 55 | (2) | 80 | (2) | 105 | (2) |
| 6 | (3) | 31 | (!) | 56 | (1) | 81 | (1) | 106 | (1) |
| 7 | (2) | 32 | (2) | 57 | (2) | 82 | (3) | 107 | (1) |
| 8 | (1) | 33 | (3) | 58 | (3) | 83 | (2) | 108 | (1) |
| 9 | (4) | 34 | (2) | 59 | (1) | 84 | (1) | 109 | (3) |
| 10 | (3) | 34 | (2) | 60 | (1) | 85 | (2) | 110 | (2) |
| 11 | (1) | 36 | (3) | 61 | (1) | 86 | (2) | 111 | (4) |
| 12 | (2) | 37 | (2) | 62 | (2) | 87 | (1) | 112 | (1) |
| 13 | (1) | 38 | (2) | 63 | (1) | 88 | (2) | | |
| 14 | (2) | 39 | (4) | 64 | (3) | 89 | (3) | | |
| 15 | (1) | 40 | (1) | 65 | (1) | 90 | (2) | | |
| 16 | (3) | 41 | (2) | 66 | (2) | 91 | (1) | | |
| 17 | (4) | 42 | (1) | 67 | (3) | 92 | (3) | | |
| 18 | (1) | 43 | (2) | 68 | (1) | 93 | (1) | | |
| 19 | (2) | 44 | (4) | 69 | (2) | 94 | (4) | | |
| 20 | (4) | 45 | (1) | 70 | (1) | 95 | (1) | | |
| 21 | (4) | 46 | (1) | 71 | (2) | 96 | (2) | | |
| 22 | (2) | 47 | (3) | 72 | (2) | 97 | (3) | | |
| 23 | (2) | 48 | (2) | 73 | (3) | 98 | (2) | | |
| 24 | (4) | 49 | (2) | 74 | (1) | 99 | (4) | | |
| 25 | (4) | 50 | (1) | 75 | (2) | 100 | (1) | | |

www.kalvinews.com

## வகுப்பு - 8 - வரலாறு

### 2. வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

**தொகுப்பு:**
**திரு.சீ.மாதேஸ்வரன்,** M.Sc., B.Ed., B.L.I.Sc.,
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, கீழ்வாணி,**
**ஈரோடு மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.இரா.ராஜசேகரன்,**
M.A., B.Ed., M.Com., B.Sc., M.Sc., D.Co-Op., PGDCA.,
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி, கன்னியாம்பட்டி,**
**சேலம் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

**அறிமுகம்**

- 1498 ஆம் ஆண்டு போர்ச்சுகல் மாலுமி வாஸ்கோடகாமா, ஐரோப்பியர்கள் இந்தியா வருவதற்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடித்தார்.
- வங்காளத்தின் வெற்றிக்குப் பின் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி இந்தியாவில் வலுவடைந்தது.
- இதன் நோக்கம் வணிகத்தில் அதிக லாபம் ஈட்டுதல், அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்துதல்.

**ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி நிறுவப்படுதல்**

a) **பிளாசிப்போர்**

- வங்காள நவாப் அலிவர்திகான் 1756-ல் இறந்தார்.
- பேரன் சிராஜ்-உத்-தௌலா வங்காளத்தில் அரியணை ஏறினார்.
- சிராஜ் - உத் - தௌலா, வங்காளத்தின் காசிம் பஜாரில் அமைந்துள்ள வணிக மையத்தைக் கைப்பற்றினார்.
- 1756 ஜுன் 20-ல் ஆங்கிலேயரின் வில்லியம் கோட்டையைக் கைப்பற்றினார்.
- ஆங்கிலேயப் படைத்தளபதி இராபர்ட் கிளைவ் கல்கத்தாவை மீட்டார்.
- 1757 பிப்ரவரி 9-ல் அலிநகர் உடன்படிக்கை (சிராஜ்-உத்-தௌலா - இராபர்ட் கிளைவ்).
- 1757-ல் ஆங்கிலேயர் சந்திர நாகூரைக் கைப்பற்றினர்.
- பிளாசிப்போரின் வெற்றி, ஆங்கிலேயரது அரசியல் அதிகாரத்தை இந்தியாவில் தொடங்கி வைத்தது மட்டுமல்லாமல், அடுத்த 2 நூற்றாண்டுகளுக்கு ஆதிக்கத்தை நீட்டிக்கவும் செய்தது.

b) **இருட்டறைத் துயரச் சம்பவம் (1756)**

- சிராஜ்-உத்-தௌலாவின் படை வீரர்கள், ஆங்கிலேய வீரர்கள் 146 பேரைச் சிறைப்பிடித்துக் கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் காற்று புகாத ஒரு சிறிய இருட்டு அறையில் ஓர் இரவு முழுவதும் அடைத்து வைத்திருந்தனர். அவர்களுள் 123 பேர் மூச்சுத் திணறி இறந்தனர். இது இருட்டறைத் துயரச் சம்பவம் என்றழைக்கப்படுகிறது.

c) **பக்சார் போர் (1764)**

- பிளாசிப் போருக்குப் பின் ஆங்கிலேயர்கள் 'தடையில்லா வணிக உரிமை' பெற்ற பகுதிகள் - வங்காளம், பீகார், ஒரிசா.
- இப்போருக்குப் பின் - வங்காளத்தின் '24 பர்கானா' எனும் பகுதியை ஆங்கிலேயர் பெற்றனர்.

www.kalvinews.com

- பிளாசிப் போருக்குப் பின் வங்காளத்தில் நவாப்பாக அரியணை ஏறியவர் - மீர்ஜாபர் (1757 - 1760) - சிராஜ்-உத்-தௌலாவின் படைத்தளபதி.
- ஆங்கிலேயர்கள் மீர்ஜாபரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவரது மருமகன் மீர்காசிம் என்பவரை வங்காள நவாப் ஆக்கினர்.
- வங்காள நவாப் மீர்காசிம் ஆங்கிலேயருக்கு அளித்த பகுதிகள் - புர்த்வான், மிட்னாபூர், சிட்டகாங்
- மீர்காசிம், வங்காளத்தின் தலைநகரை மூர்ஷிதாபாத்திலிருந்து மாங்கீருக்கு மாற்றினார்.
- 'தஸ்தக்' எனப்படும் சுங்க வரி விலக்கு ஆணையைத் தவறாகப் பயன்படுத்தியதால், மீர்காசிம் ஆங்கிலேயர் மீது கோபமடைந்தார்.
- பக்சார் போரில் ஆங்கிலேயருக்கு எதிராக ஈடுபட்டவர்கள் - மீர்காசிம் (வங்காள நவாப்), சிரணிபாம்-ஷா-ஆலம் (முகலாய பேரரசர்), சுஜா-உத்-தௌலா(அயோத்தி நவாப்)
- பீகாரின் கங்கை நதிக்கரையில் அமைந்த பாதுகாக்கப்பட்ட சிறிய நகரம் பக்சார்.
- 1764 ஆம் ஆண்டு அக்டோபர் 22 இல் பக்சார் போரில் நவாப் படையைச் சேர்ந்த மூவர் கூட்டணி ஆங்கிலேயப் படைத்தளபதி ஹெக்டர் மன்றோவால் தோற்கடிக்கப்பட்டது.
- போரின் முடிவில் மீண்டும் மீர் ஜாபர் வங்காள அரியணையில் அமர்த்தப்பட்டார்.
- மீர் ஜாபரின் இறப்பிற்குப் பின்னர், அவரது மகன் நிஜாம் - உத் - தௌலா வங்காள நவாப் ஆனார்.
- 1765 பிப்ரவரி 20 அலகாபாத் உடன்படிக்கையின்படி, பக்சார் போர் முடிவுக்கு வந்தது.
- அலகாபாத் உடன்படிக்கையின்படி வங்காள நவாப் ராணுவத்தின் பெரும்பகுதி கலைக்கப்பட்டது.
- கம்பெனியால் நியமிக்கப்பட்ட துணை சுபேதார் மூலம் வங்காளம் நிர்வகிக்கப்பட்டது.
- இராபர்ட் கிளைவ், சுஜா-உத்-தௌலா(அயோத்தி நவாப்) மற்றும் முகலாயப் பேரரசர் இரண்டாம் - ஷா - ஆலத்துடனும் தனித்தனியாக ஒப்பந்தம் செய்து கொண்டார்.
- இராபர்ட் கிளைவ் இரட்டை ஆட்சி முறையை வங்காளத்தில் கொண்டு வந்தார்.

**கர்நாடகப் போர்கள் (1746-1763)**

- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியும், பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனியும் எதிர் எதிர் அணியில் இருந்தன.
- பாரம்பரியமாக, ஐரோப்பாவில் பிரிட்டனும், பிரான்சும் போட்டி நாடுகள் ஆகும்.
- இந்தநிலை இந்தியாவில் வணிகம் செய்வதிலும், ஆட்சி செய்வதிலும் தொடர்ந்தது.
- இதன் விளைவாக, தொடர் இராணுவப் போட்டியானது, தென்னிந்தியாவின் கர்நாடகப் பகுதிகளில் நடைபெற்றன. இவை கர்நாடகப் போர்கள் **(1746-1763)** என்று அழைக்கப்பட்டன.
- கர்நாடகப் போரின் விளைவாக, ஆங்கிலயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் அதிகாரம் வலுப்பெற்றது.

**a) முதல் கர்நாடகப் போர் (1746-1748)**

**முதல் கர்நாடகப் போருக்குக் காரணம்** - ஐரோப்பாவில் ஏற்பட்ட ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் (பிரிட்டன் - பிரான்ஸ்)

**அடையாறு போர் - 1746**

- சாந்தோம் என்ற பகுதி, சென்னையில் அடையாறு நதிக்கரையில் அமைந்துள்ளது.
- அடையாறு போர் 1746-ல் கர்நாடக நவாப் அன்வாருதீன் மற்றும் பிரெஞ்சுப் படைக்கும் இடையே நடைபெற்றது.

- பிரெஞ்சுப் படை தளபதி பாரடைஸ்.
- நவாப் படைக்குத் தலைமை வகித்தவர் மாபூஸ்கான்.
- நன்கு பயிற்சி பெற்ற ஐரோப்பியப் படை, இந்தியப் படையை வெற்றிகொண்டு, தங்கள் மேலாண்மையை நிலைநாட்டிய முதல் நிகழ்வு **அடையாறு போர்** ஆகும்.

**அய் - லா - சப்பேல் உடன்படிக்கை (1748)**

- இந்த உடன்படிக்கை ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் முடிவில் ஏற்பட்டது.
- இதன்படி, **முதல் கர்நாடகப் போர் முடிவுக்கு வந்தது.**
- **அய்-லா-சப்பேல் உடன்படிக்கையின்**படி ஆங்கிலேயரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்ட பகுதி மதராஸ் (சென்னை).
- வட அமெரிக்காவின் சில பகுதிகளை பிரான்சு பெற்றது.

b) **இரண்டாம் கர்நாடகப் போர் (1749-1754)**

காரணம் - கர்நாடகம் மற்றும் ஹைதராபாத் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட வாரிசுரிமைப் போர்.

- இப்போர் மூலம் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் எண்ணினர்.

**ஆம்பூர் போர் (1749)**

- 1749 ஆகஸ்ட் 3-ல் ஆம்பூர் போர் நடைபெற்றது.
- அன்வாருதீனின் மகன் முகமது அலி.
- ஆம்பூர் போர், பிரெஞ்சுக் கூட்டுப்படையான பிரெஞ்சுக் கவர்னர் டியூப்ளே, சந்தா சாகிப், முசாபர் ஜங் மற்றும் கர்நாடக நவாப் அன்வாருதீனின் மகன் முகமது அலி இடையே நடைபெற்றது.
- முகமது அலி தஞ்சம் அடைந்த ஊர் திருச்சிராப்பள்ளி.
- ஆம்பூர் போரில் கர்நாடக நவாப் அன்வாருதீன் கொல்லப்பட்டார்.
- பிறகு பிரெஞ்சுக்காரர்கள் சந்தாசாகிப்பைக் கர்நாடக நவாப் ஆக்கினர் (கைமாறாக - பாண்டிச்சேரி மற்றும் அதற்கு அருகில் இருந்த 80 கிராமங்களைப் பிரெஞ்சுக்காரர்கள் பெற்றனர்).
- நாசிர் ஜங் கொல்லப்பட்டு, முசாபர் ஜங்கை ஐதராபாத்தின் நிசாம் ஆக்கினார்கள் .(பிரெஞ்சுக்காரர்கள்).
- 1751 இல் முசாபர் ஜங் தன் மக்களால் படுகொலை செய்யப்பட்டார்.
- பிறகு சலபத் ஜங் ஹைதராபாத்தின் நிசாம் ஆனார்.

**ஆற்காட்டுப் போர் (1751)**

- 1751-ல் ஆற்காட்டுப் போர் நடைபெற்றது.
- 200 ஆங்கிலேயப் படை வீரர்கள், 300 இந்தியப் படை வீரர்களுடன் இராபர்ட் கிளைவ் ஆற்காட்டைக் கைப்பற்றினார்.
- இரண்டாம் கர்நாடகப் போரின்போது ஆங்கிலேய கவர்னர் - சாண்டர்ஸ்.
- ஆங்கிலேயப் படைத்தளபதி ஸ்டிரங்கர், லாரன்ஸ் உதவியுடன் கிளைவ் ஆரணி, காவேரிபாக்கம் ஆகிய இடங்களில் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தார்.
- சந்தாசாகிப் திருச்சியில் கொலை செய்யப்பட்டார்.
- அன்வாருதீனின் மகன் முகமது அலி, ஆங்கிலேயரின் உதவியுடன் ஆற்காட்டு நவாப் ஆனார்.
- இத்தோல்வியால், பிரான்சு நாட்டு அரசானது, டியூப்ளேவைப் பாரிசுக்கு திரும்ப அழைத்தது.

**பாண்டிச்சேரி உடன்படிக்கை** (1755)

- டியூப்ளேவைத் தொடர்ந்து, பிரெஞ்சு ஆளுநராகப் பதவியேற்றுக் கொண்டவர் கோதேயூ.
- 1755-ல் பாண்டிச்சேரி உடன்படிக்கையானது, பிரெஞ்சு ஆளுநர் கோதேயூ மற்றும் ஆங்கிலேயர்க்கு இடையே ஏற்பட்டது.
- இந்த உடன்படிக்கையின்படி இரு நாடுகளும் தங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது எனவும், போருக்கு முன்னர் இருந்த பகுதிகள் திரும்ப ஒப்படைக்கப்படும் எனவும் கூறப்பட்டது.
- இரண்டாம் கர்நாடகப் போர் ஒரு முடிவற்ற நிலையை ஏற்படுத்தியது.
- முகமது அலியைக் கர்நாடக நவாப்பாக நியமித்ததன் மூலம் ஆங்கிலேயர்கள், இந்தியாவில் தங்கள் மேலாண்மையை நிலைநாட்டினர்.

c) **மூன்றாம் கர்நாடகப் போர்** (1756-1763)

காரணம் - ஐரோப்பாவில் வெடித்த ஏழாண்டுப் போர்.

- ஆங்கிலேயப் படைத் தளபதி இராபர்ட் கிளைவ், பிளாசிப் போரின் மூலம் வங்காளத்தில் ஆதிக்கத்தை நிறுவியதுடன், மூன்றாம் கர்நாடகப் போருக்கான நிதியையும் வழங்கினார்.
- பிரெஞ்சுப் படைகளை வழி நடத்தியவர் கவுண்-டி-லாலி.
- இவர் கடலூரில் உள்ள செயிண்ட் டேவிட் கோட்டையைக் கைப்பற்றினார்.
- வடசர்க்கார் என்பது ஆந்திரப்பிரதேசம் மற்றும் ஒடிசா.
- மூன்றாம் கர்நாடகப் போரின் போது, பிரெஞ்சுப் படைத்தளபதி - கவுண்டிலாலி.
  ஆங்கிலேயப் படைத்தளபதி - ஜெனரல் அயர் கூட் ஆவார்.

**வந்தவாசிப் போர்** (1760)

- 1760 ஜனவரி 22-ல் வந்தவாசிப் போர், ஜெனரல் அயர் கூட்டின் ஆங்கிலேயப் படைக்கும், லாலி தலைமையிலான பிரெஞ்சு படைக்கும் இடையே நடைபெற்றது.
- இப்போரின் மூலம் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் இந்தியாவில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.
- கவுண் - டி - லாலி பிரான்சு நாட்டிற்குத் திரும்ப அழைக்கப்பட்டு, சிறையிலிடப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்.

**பாரிஸ் உடன்படிக்கை** (1763)

- 1763-ல் பாரிஸ் உடன்படிக்கை மூலம் ஏழாண்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- இதன்படி, பாண்டிச்சேரி உட்பட இந்தியாவில் இருந்த பிரெஞ்சுக் குடியேற்றங்கள் அனைத்தும் பிரெஞ்சுக்காரர்கள் வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டன.

**மைசூரும், ஆங்கிலேய ஆட்சி விரிவாக்கத்திற்கு எதிர்ப்பும்:**

- 1761-ல் மைசூர் சமஸ்தானத்தின் ஆட்சியாளர் ஹைதர் அலி ஆவார்.

d) **ஆங்கில - மைசூர் போர்**

**முதல் ஆங்கிலேய - மைசூர் போர்:** (1767 - 1769)

**காரணம்** : ஹைதர் அலியின் வளர்ச்சி, அவர் பிரெஞ்சுக்காரர்களிடம் கொண்டிருந்த நட்புறவு

- ஹைதர் அலிக்கு எதிராக மராத்தியர்கள், ஹைதராபாத் நிஜாம், ஆங்கிலேயர்கள் இணைந்து முக்கூட்டணியை ஏற்படுத்தினர்.

**போரின் போக்கு**:

www.kalvinews.com

- தளபதி ஜோசப் ஸ்மித் தலைமையிலான ஆங்கிலேயப்படை உதவியுடன் ஹைதராபாத் நிஜாம் 1767 இல் மைசூர் மீது படையெடுத்தார்.
- ஆங்கிலேயப்படையை ஹைதர் அலி தோற்கடித்து மங்களூரைக் கைப்பற்றினார்.
- 1769 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஹைதர் அலி மதராஸ் மீது படையெடுத்தார்.

**மதராஸ் உடன்படிக்கை (1769)**

- 1769-ல் மதராஸ் உடன்படிக்கை - ஆங்கிலேயப் படைக்கும் ஹைதர் அலிக்கும் இடையே ஏற்பட்டது.

**இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போர் (1780-1784).**

**காரணம்** - 1769 ன் உடன்படிக்கையை ஆங்கிலேயர்கள் நிறைவேற்றத் தவறினர்.

- 1771 ல் மராத்தியர்கள் ஹைதர் அலியைத் தாக்கும்போது ஆங்கிலேயர் உதவவில்லை.
- 1783 ல் திப்புவால் கைது செய்யப்பட்ட ஆங்கிலேயப் படைத்தளபதி - பிரிகேடியர் மேத்யூஸ்.
- 1781-ல் ஆங்கிலேயப் படைத்தளபதி சர் அயர்கூட், ஹைதர் அலியைப் பரங்கிப்பேட்டையில் தோற்கடித்தார்.
- 1782-ல் புற்றுநோயால் ஹைதர் அலி இறந்தார்.

**மங்களூர் உடன்படிக்கை** (1784)

- 1784-ல் மங்களூர் உடன்படிக்கை, ஆங்கிலேயருக்கும் திப்பு சுல்தானுக்கும் இடையே ஏற்பட்டது.

**மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர்** (1790 - 1792)

**காரணம் -** ஆங்கிலேயருக்கு எதிராகத் திப்பு சுல்தான் -பிரான்சு, துருக்கி ஆகிய நாடுகளுக்குத் தனது தூதுவர்களை அனுப்பினார்.

- 1789 இல் திப்பு சுல்தான் திருவிதாங்கூரைத் தாக்கினார்.
- ஆங்கிலேயர் - ஹைதராபாத் நிசாம் மற்றும் மராத்தியர்களுடன் இணைந்து மூவர் கூட்டணியை உருவாக்கினர்.
- இப்போர் 3 கட்டங்களாக நடைபெற்றது.
- தளபதி மேடோஸ் தலைமையிலான தாக்குதல் தோல்வியில் முடிந்தது.
- 1790 இல் தலைமை ஆளுநர் - காரன்வாலிஸ் படையை வழிநடத்தினார்.
- காரன்வாலிஸ் - மலைக்கோட்டையைக் கைப்பற்றினார்.
- இப்போரின் மூலம் ஆங்கிலேயர் பெற்ற பகுதிகள் - மலபார், குடகுமலை, திண்டுக்கல் மற்றும் பாரமஹால் (கோயம்புத்தூர், சேலம்)

**ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை** (1792)

- 1792 - ல் ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை (காரன்வாலிஸ் - திப்பு சுல்தான்)
- போரின் இழப்பீட்டுத் தொகை 3.6 கோடி திரும்பச் செலுத்துதல், இரு மகன்களையும் பிணைக் கைதிகளாக ஒப்படைத்தல்.

**நான்காம் ஆங்கிலேய - மைசூர் போர் (1799)**

1799-ல் நான்காம் ஆங்கிலேய - மைசூர் போர் (வெல்லெஸ்லி பிரபு - திப்புசுல்தான்).

**காரணம்** - திப்பு - அரேபியா, துருக்கி, ஆப்கானிஸ்தான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குத் தனது தூதுவர்களை அனுப்பினார்.

- அச்சமயத்தில் நெப்போலியன் எகிப்தின் மீது படையெடுத்திருந்தார்.
- பிரெஞ்சு அலுவலர்கள் - ஸ்ரீரங்கப்பட்டினத்தில், ஜாக்கோபியன் கழகத்தை நிறுவி, அங்குச் சுதந்திர மரம் ஒன்றை நட்டனர்.

www.kalvinews.com

- மைசூரின் மேற்கே பம்பாய் இராணுவம் தளபதி - ஸ்டுவர்ட் தலைமையில் படையெடுத்தது.
- மெட்ராஸ் இராணுவம் தலைமை ஆளுநரின் சகோதரர் ஆர்தர் வெல்லெஸ்லி தலைமையில் திப்பு சுல்தானைத் தாக்கியது.
- 1799 மே 4 ல் ஆங்கிலேயர்கள் - ஸ்ரீரங்கப்பட்டினத்தைப் கைப்பற்றினர்.
- போருக்கு பின் கனரா, வயநாடு, கோயமுத்தூர், தாராபுரம் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர்.
- இந்து உயர் குடும்பத்தைச் சார்ந்த மூன்றாம் கிருஷ்ண ராஜா உடையார், மைசூர் அரியணை ஏறினார்.
- இறுதியில் திப்புவின் குடும்பம் வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டது.

**ஆங்கிலேய - மராத்தியப் போர்கள்**

- மூன்றாம் பானிபட்ப் போர் தோல்வியால் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்க மராத்தியர்கள் முயற்சித்தனர்.
- அதன் விளைவாக 10 ஆண்டுகளுக்குப் பிறகு, டெல்லி முகலாயர்களின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்டனர்.
- பேஷ்வா கட்டுப்பாட்டிலிருந்த பழைய மராத்தியர்கள் கூட்டமைப்பு, 5 சுதந்திர மாநிலங்களாகப் பிரிந்தது.
    1. பூனா - பேஷ்வா
    2. பரோடா - கெய்க்வாட்
    3. நாக்பூர் - போன்ஸ்லே
    4. இந்தூர் - ஹோல்கர்
    5. குவாலியர் - சந்தியா

**முதல் ஆங்கிலேய மராத்திய போர்** (1775- 1782)

- பேஷ்வா உள்நாட்டுப் போட்டியாளர்களால் பலவீனம் அடைந்தார்.
- மராத்தியர்களின் பேஷ்வா - நாரயண ராவின் இறப்பை அடுத்து பேஷ்வா யார் என்ற உரிமை பிரச்சனையில் ஆங்கிலேயர்கள் முதன் முதலில் தலையிட வேண்டியிருந்தது.
- ரகுநாத ராவ் (ராகோபா) அடுத்த பேஷ்வா ஆனார்.
- இதற்கு நானா பட்னாவிஸ் தலைமையிலான குழு எதிர்ப்பு தெரிவித்தது.
- நாராயண ராவின் மனைவி கங்காபாய்க்குப் பிறந்த குழந்தை இரண்டாம் மாதவராவைப் பேஷ்வாவாக அங்கீகரித்தது. மேலும், அவருடைய பெயரில் ஆட்சிக் குழுவொன்றும் அமைத்தது.
- 1775-ல் சூரத் ஒப்பந்தம் ஆங்கிலேயருக்கும் - ரகுநாத ராவுக்கு இடையே ஏற்பட்டது.
- கல்கத்தா, பிரிட்டிஷ் கவுன்சில் சூரத் உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.
- 1782 மே 17 சால்பை ஒப்பந்தம் (வாரன் ஹேஸ்டிங்ஸ் - மகாதாஜி சிந்தியா)
- 1802 - பஸ்ஸின் உடன்படிக்கையின் படி, பேஷ்வா துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார்.
- 1776 - ல் புரந்தர் ஒப்பந்தம் (அப்டன் - பூனா பாதுகாப்பு). பம்பாயில் ஆங்கில அரசின் எதிர்ப்பு காரணமாக இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை.

www.kalvinews.com

- 1782 ஆம் ஆண்டு மே 17 ஆம் நாள், சால்பை ஒப்பந்தமானது, வாரன் ஹேஸ்டிங்ஸ் - மகாதாஜி சிந்தியா இடையே ஏற்பட்டது.

**விளைவுகள்:**

- போரின் முடிவில் இரண்டாம் மாதவராவ் பேஷ்வாவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ரகுநாத ராவுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.
- பிரிட்டிஷ் அரசுக்குச் சால்செட் பகுதி வழங்கப்பட்டது.
- இந்திய அரசியலில் சால்பை ஒப்பந்தம், பிரிட்டிஷாருக்குச் செல்வாக்கை ஏற்படுத்தியது.
- பிரிட்டிஷாருக்கும், மராத்தியர்களுக்கும் இடையே அடுத்த 20 ஆண்டுகளுக்குச் சமாதான உறவு நீடித்தது.
- 1802 இல் பஸ்ஸீன் உடன்படிக்கை (வெல்லெஸ்லி பிரபு - பேஷ்வா).
- பஸ்ஸீன் உடன்படிக்கையின்படி, துணைப்படைத்திட்டத்தைப் பேஷ்வா ஏற்றுக்கொண்டார்.

**இரண்டாம் ஆங்கிலேய - மராத்தியப் போர் (1803-1805)**

- 1803 இல் தியோசான் ஒப்பந்தம் (வெல்லெஸ்லி பிரபு - போன்ஸ்லே).
- 1803 இல் அர்ஜுகான் ஒப்பந்தம் (வெல்லெஸ்லி பிரபு - இந்தியா).
- ஜஸ்வந் ராவ், ஹோல்கர் என்று அழைக்கப்படுகிறார்.
- 1804 இல் ஜெய்ப்பூர் பிரதேசத்தை ஹோல்கர் சூறையாடும்போது, ஆங்கிலேயர்கள் அவருக்கு எதிராகப் போர் தொடுத்தனர்.
- இறுதியில் மராத்தியர்கள் தோற்கடிக்கப்பட்டு, ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் செலுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

**விளைவுகள்:**

- மராத்தியர்களின் வலிமை காலப்போக்கில் பலவீனமடைந்தது.
- இந்தியாவில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி தலையாய சக்தியாக மாறத் தொடங்கியது.

**மூன்றாவது ஆங்கிலேய - மராத்தியப் போர் (1817-1818)**

- தங்களது மேலாண்மையை மீண்டும் பெற முயன்ற மராத்தியர்களோடு, ஆங்கிலேயர்கள் மூன்றாவதாக ஒரு போரில் ஈடுபட்டனர்.
- இப்போர், இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி மற்றும் மராத்திய சாம்ராஜ்யத்திற்கு இடையே இறுதி மற்றும் தீர்க்கமான மோதலாக அமைந்தது.
- இப்போர் ஆங்கிலப் படைகள், மராத்தியப் பகுதிகளை ஆக்கிரமிக்கும்போது தொடங்கியது.
- இந்த ஆக்கிரமிப்பில், தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்கஸ் பிரபுவிற்கு, ஜெனரல் தாமஸ் ஹிஸ்ஸாப் தலைமையிலான படைப்பிரிவு உதவியது.
- இப்போரில், பேஷ்வா இரண்டாம் பாஜி ராவ், நாக்பூரின் இரண்டாம் மூதோஜி போன்ஸ்லே, மற்றும் இந்தூரின் மூன்றாம் மல்ஹர் ராவ் ஈடுபட்டனர்.
- குவாலியரின் தௌலத் ராவ் சிந்தியா மட்டும் நடுநிலை வகித்தார்.
- காட்கி, கோர்கான் ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களில் பேஷ்வா தோற்கடிக்கப்பட்டார்.
- சித்தாபால்டி போரில், போன்ஸ்லேயும், மகித்பூர் போரில் ஹோல்கரும் தோற்கடிக்கப்பட்டனர்.

**விளைவுகள்:**

- இப்போரின் முடிவில் மராத்தியக் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- பேஷ்வா பதவி ஒழிக்கப்பட்டது.

www.kalvinews.com

- பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் பெரும்பாலான பகுதிகள் பம்பாய் மாகாணத்தோடு இணைக்கப்பட்டன.
- தோற்கடிக்கப்பட்ட போன்ஸ்லே மற்றும் ஹோல்கரின் மராத்தியப் பகுதிகளான நாக்பூர், இந்தூர் ஆகியவை ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்பட்டன.
- மராத்தியரின் கடைசி பேஷ்வா இரண்டாம் பாஜிராவிற்கு, வருடாந்திர ஓய்வூதியம் ரூ. 8 லட்சம் வழங்கப்பட்டது.

**இந்தியாவில் ஆங்கிலேயரின் நிர்வாக அமைப்பு**

ஆங்கிலேயரின் நிர்வாக அமைப்பு 4 முதன்மை நிறுவனங்களாக இயங்கியது.

a) **குடிமைப் பணிகள்**

- சிவில் சர்வீஸ் (குடிமைப் பணிகள்), என்ற வார்த்தை முதன்முதலில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியால் பயன்படுத்தப்பட்டது.
- சட்டங்களைச் செயல்படுத்துதல், வரிவசூலித்தல் போன்றவை இவற்றின் முதன்மைப் பணி.
- ஆரம்பத்தில் வியாபாரரீதியாக இருந்த குடிமைப் பணிகள் பொதுப் பணியாக மாறியன.
- தலைமை ஆளுநராகக் காரன் வாலிஸ் 1786 இல் பதவியேற்றபோது, தனியார் வணிகத்திற்கு எதிராகச் சட்டங்களை இயற்றினார்.
- 1786-ல் காரன்வாலிஸ் பிரபு, கம்பெனி ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தி, உலகின் மிக உயர்ந்த ஊதியம் பெறும் அரசு ஊழியர்களாக மாற்றினார்.
- 1798 இல் வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றார்.
- 1800 இல் வெல்லெஸ்லி பிரபு, கல்கத்தாவில் மொழி, இலக்கியம், அறிவியலுக்காகக் கல்லூரியை நிறுவினார்.
- 1806 இல் வெல்லெஸ்லி பிரபு, இங்கிலாந்தில் உள்ள ஹெய்லிபரில் கிழக்கிந்தியக் கல்லூரியை நிறுவினார்.
- 1833 - ஆம் ஆண்டு பட்டயச் சட்டம், மூலம் முதன் முதலில் போட்டித் தேர்வின் வழியாக அரசு ஊழியர் நியமனம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஆனால், கம்பெனியின் இயக்குநர் அவையால் நியமனம் செய்யப்படாதவர்கள், போட்டித் தேர்வினை எழுத தகுதியற்றவர்கள் ஆகினர்.
- போட்டித் தேர்விற்கான அதிகபட்ச வயது 23 ஆக நிர்ணயிக்கப்பட்டது.
- இதனைத் தொடர்ந்து 1858 ஆம் ஆண்டு ஹெய்லிபரியில் இருந்த கிழக்கிந்தியக் கல்லூரி அகற்றப்பட்டது.
- மேலும், குடிமைப் பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, குடிமைப் பணியாளர் தேர்வாணையம் வசமானது.
- 1860 ஆம் ஆண்டு ஒரு ஒழுங்குமுறை ஆணையின் மூலம் தேர்வெழுத அதிகபட்ச வயது 22 ஆகக் குறைக்கப்பட்டது. மேலும், 1866 இல் 21 ஆகவும் 1876 இல் 19 ஆகவும் குறைக்கப்பட்டது.
- 1861 இல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்திய ஆட்சிப்பணிச் சட்டம் இயற்றப்பட்டது.
- இச்சட்டம், சில உயர் நிர்வாகப் பதவிகள் மற்றும் நீதித்துறைப் பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்திருந்தது.
- பின்னர் இப்பணிகள் ஆட்சிப் பணிகளாக மாற்றப்பட்டன.

www.kalvinews.com

- வயது வரம்பு குறைப்பு மற்றும் இலண்டனுக்குச் சென்று தேர்வு எழுதுதல் ஆகிய காரணங்களால், வசதி படைத்த இந்தியர்கள் மட்டுமே I.C.S தேர்வை எழுதக்கூடிய சூழ்நிலை நிலவியது.
- 1918 இல் இந்திய ஆட்சிப்பணியில் 33% பேர் இந்தியர்கள் தேர்வு.
- 1923 இல் ராயல் கமிஷன் - இதன் தலைவர் லீ பிரபு.
- 1863 இல் I.C.S தேர்வில் வெற்றி பெற்ற முதல் இந்தியர் சத்தியேந்திரநாத் தாகூர்.
- 1869 இல் சுரேந்திரநாத் பானர்ஜி, ரமேஷ் சந்திர தத் மற்றும் பிகாரி லால் குப்தா ஆகிய 3 இந்தியர்கள் I.C.S தேர்வில் வெற்றி பெற்றனர்.

b) **இராணுவம்**

- இராணுவமானது, இந்தியாவின் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் இரண்டாவது முக்கியத் தூணாக விளங்கியது.
- கிழக்கிந்தியக் கம்பெனி தன் இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்துச் சிப்பாய் ராணுவம் எனப் பெயரிட்டது.
- ஆங்கிலேயர்கள் ஆரம்ப காலத்தில் வங்காளம், பம்பாய், மதராஸ் ஆகிய 3 மாகாணங்களிலும் தனித்தனியாக 3 படைப்பிரிவை ஏற்படுத்தியிருந்தனர்.
- ஆங்கிலேயச் சிப்பாய்களைவிட இந்தியச் சிப்பாய்களுக்குக் குறைந்த சம்பளமும், தினப்படியும் வழங்கப்பட்டன.
- 1856 இல் இந்தியப் படை வீரர்களின் மாதச் சம்பளம் ரூ. 300.
- 1857 இல் ராணுவத்தில் 86% பேர் இந்தியர்கள்.
- இராணுவ உயர் பதவிகள் அனைத்தும் ஆங்கிலேயர் வசமே இருந்தன.
- இந்தியர்களுக்கான உயர் பதவி சுபேதார் மட்டுமே ஆகும்.

c) **காவல் துறை**

- 1765 - ல் வங்காளத்தில் திவானி (வரி வசூல்) உரிமையை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றபோது சர்க்கார் (கிராம மாவட்டங்கள்) என்ற ஆட்சிப் பொறுப்பு வகித்த பௌஜ்தார் ( முகலாய காவல்துறை) வசம் சென்றது.
- அப்போது, நகரங்களை நிர்வகிக்கும் அலுவலர்களாக கொத்வால் இருந்தார்.
- கிராமங்களைக் கிராம காவலாளிகள் பாதுகாத்தனர்.
- அவர்களுக்கு ஜமீன்தார்கள் சம்பளம் வழங்கித் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.
- காரன்வாலிஸ் பிரபு 1791 இல் முதன் முதலில் காவல் துறையை உருவாக்கினார்.
- அவர் தரோகா என்பவரைத் தலைவராகக் கொண்ட சரகங்கள் அல்லது தானாக்கள் என்ற காவல் பகுதிகளை ஏற்படுத்தினார்.
- ஜமீன்தார்களைக் காவல் பணியில் இருந்து விடுவித்தவர் காரன் வாலிஸ் பிரபு ஆவார்.
- கிராமத்தைப் பரம்பரையாக நிர்வகிப்பவர்கள் சௌகிதார்கள்.
- பெரு நகரங்களில் பழைய முறையான கொத்வால் காவல் பணியே தொடர்ந்தது.
- மேலும், ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு தரோகா நியமிக்கப்பட்டார்.
- இந்த தரோகா முறை, 1802 இல் மதராஸ் மாகாணத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- முதலில் மாவட்ட பொது நீதிபதியின் கீழ் அனைத்து தானாக்களும் இருந்தது.
- பின்னர், ஒவ்வொரு தானாவிற்கும் ஒரு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.

www.kalvinews.com

- பின்னர், காவல் துறையை நிர்வகிக்கும் பொறுப்பு, மாவட்ட ஆட்சித்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- காவல் துறையின் முக்கியப் பணியானது, ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகச் சதி செய்வதைத் தடுத்தலும், குற்றங்களைக் கையாள்வதும் ஆகும்.

d) **நீதித்துறை**

- 1772 இல் இரட்டை ஆட்சி முறை ஒழித்தல்.
- சிவில் நீதிமன்றம் - திவானி அதாலத்
- குற்றவியல் நீதிமன்றம் - பௌஜ்தாரி அதாலத்..
- 1773 இல் ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, கல்கத்தாவில் உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- 1801 இல் மதராஸிலும், 1823 இல் பம்பாயிலும் உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.
- வங்காளத்தின் வில்லியம் கோட்டையின் முதல் உச்சநீதிமன்ற நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்.
- மதராஸ் உயர் நீதிமன்றத்தின் முதல் இந்தியத் தலைமை நீதிபதி சர்.திருவாரூர் முத்துசாமி ஆவார்.

**துணைப்படைத்திட்டம் (1798)**

- துணைப்படைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் வெல்லெஸ்லி பிரபு.
- பாதுகாக்கப்பட்ட அரசுகள் சுதேச அரசுகள் ஆகும்.
- துணைப்படைத் திட்டத்தை ஏற்ற முதல் அரசு ஹைதராபாத்.
- **துணைப்படைத்திட்டத்தை ஏற்றுக் கொண்ட இந்திய அரசுகள்:** தஞ்சாவூர் (1799), அயோத்தி (1801), பேஷ்வா (1802), போன்ஸ்லே (1803), குவாலியர் (1804), இந்தூர் (1817), ஜெய்ப்பூர், உதய்பூர் மற்றும் ஜோத்பூர் (1818).

**துணைப்படைத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- இத்திட்டத்தில் இணையும் இந்திய அரசர், தன்னுடைய படையைக் கலைத்துவிட்டு ஆங்கிலேயரின் படையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- சுதேச அரசின் தலைமையகத்தில் ஆங்கிலேயரின் பிரதிநிதி ஒருவர் இருப்பார்.
- ஆங்கிலேயரின் படையைப் பராமரிக்கவும், படை வீரர்களின் ஆண்டுச் சம்பளம் வழங்குவதற்காகவும், நிரந்தரமாகச் சில பகுதிகளை அந்நாட்டு அரசர் ஆங்கிலேயருக்கு வழங்க வேண்டும்.
- ஆங்கிலேயரைத் தவிர மற்ற ஐரோப்பிய அலுவலர்கள் அனைவரும் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.
- சுதேச நாட்டு அரசர், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அனுமதி பெற்ற பின்னரே அயல் நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.
- அந்நிய அரசர்களின் தாக்குதல் மற்றும் உள்நாட்டு கலவரம் நடைபெறும்போது ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி அந்நாட்டைப் பாதுகாக்கும்.

**ஆங்கிலேயருக்குக் கிடைத்த நன்மைகள்:**

- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி, இந்திய சுதேச அரசர்களின் செலவிலேயே தன்னுடைய படையைப் பராமரித்தது.

www.kalvinews.com

- சுதேச அரசர்களிடம் பணியில் இருந்த அனைத்துப் பிரெஞ்சுக்காரர்களும் நீக்கப்பட்டனர். பிரெஞ்சுக்காரர்கள், இந்தியாவில் மீண்டும் எழுச்சி பெறும் அபாயம் முற்றிலும் நீங்கியது.
- கம்பெனி, சுதேச அரசுகளின் வெளியுறவுக் கொள்கையினைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.
- வெல்லெஸ்லி பிரபு, இந்தியாவில் ஆங்கிலேயப் பேரரசு என்பதை இந்தியாவின் ஆங்கில பேரரசு என்று மாற்றினார்.

**சுதேச அரசுகளுக்கு ஏற்பட்ட இழப்புகள்**

- துணைப்படைத்திட்டம் இந்திய சுதேச அரசர்களைப் பலவீனமானவர்களாகவும், பொறுப்பற்றவர்களாகவும் மாற்றியது.
- பிரிட்டிஷ் கம்பெனியால் பாதுகாக்கப்பட்ட அரசர்கள் தங்கள் குடிமக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மறந்து அவர்களைச் சுரண்டினர்.

**வாரிசு இழப்புக் கொள்கை (1848)**

- 1848 - ல் வாரிசு இழப்புக் கொள்கை (டல்ஹௌசி பிரபு)
- டல்ஹௌசி பிரபு ஓர் ஏகாதிபத்தியவாதி ஆவார்.
- ஆங்கிலேயப் பேரரசினை விரிவுபடுத்துவதற்காக, அவர் வாரிசு இழப்புக் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.
- இதன்படி, சுதேச மன்னர்கள் ஆங்கிலேயரின் அனுமதி இன்றி வாரிசுகளைத் தத்தெடுக்க நேரிடும்போது, மன்னரின் சொத்துக்கள் தத்தெடுத்த பிள்ளைக்கும், மன்னரின் ஆட்சிப்பகுதி ஆங்கிலேயரின் வசமும் செல்ல நேரிடும் எனப்பட்டது.
- வாரிசு இழப்புக் கொள்கை மூலம் இணைந்து கொண்ட பகுதிகள் சதாரா (1848), ஜெய்ப்பூர் (1849), சம்பல்பூர் (1850), பகத் (1850), உதய்பூர் (1852), ஜான்சி (1853), நாக்பூர் (1854).
- 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கு இக்கொள்கை முக்கியக் காரணமாக அமைந்தது.

**ஆங்கிலேயர் வெற்றி பெற்றதற்கான காரணங்கள்**

- மிகப்பெரிய கடல் வலிமை.
- நெசவுத் தொழில் வளர்ச்சி.
- அறிவியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள்.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆங்கிலேயரின் திறமைமிக்க இராஜதந்திரம்.
- இந்திய வணிகர்களிடையே நிலவிய பாதுகாப்பின்மை உணர்வுகள்.
- இந்திய அரசர்களின் சமத்துவமின்மை மற்றும் அறியாமை.

**பயிற்சி வினாக்கள்:**

1. 1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர் _______.

   (1) சுஜா-உத்-தௌலா (2) சிராஜ்-உத்-தௌலா

   (3) மீர்காசிம் (4) திப்பு சுல்தான்

2. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு _______.

   (1) 1757 (2) 1764 (3) 1765 (4) 1775

3. பக்சார் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை _______.

   (1) அலகாபாத் (2) கர்நாடக (3) அலிநகர் (4) பாரிசு

www.kalvinews.com

4. பாண்டிச்சேரி உடன்படிக்கையின் படி _______ கர்நாடகப்போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.
(1) முதல் (2) இரண்டாம் (3) மூன்றாம் (4) ஏதுமில்லை

5. ஹைதர் அலி மைசூர் அரியணை ஏறிய ஆண்டு _______.
(1) 1756 (2) 1761 (3) 1763 (4) 1764

6. மங்களூர் உடன்படிக்கை _______, _______ இடையே கையெழுத்தானது.
(1) பிரெஞ்சுகாரர் மற்றும் திப்பு சுல்தான் (2) ஹைதர் அலி மற்றும் மன்னர் சாமரின்
(3) ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான் (4) திப்பு சுல்தான் மற்றும் மராத்தியர்கள்

7. மூன்றாம் ஆங்கில - மைசூர் போரின் போது ஆங்கிலேயத் தலைமை ஆளுநர் _______.
(1) இராபர்ட் கிளைவ் (2) வாரன் ஹேஸ்டிங்ஸ்
(3) காரன்வாலிஸ் (4) வெல்லெஸ்லி

8. ஆங்கிலேயருடன் பசீன் உடன்படிக்கை செய்துகொண்டவர் _______.
(1) இரண்டாம் பாஜிராவ் (2) தௌலத்ராவ் சிந்தியா
(3) ஷாம்பாஜி போன்ஸ்லே (4) ஷாயாஜி ராவ் கெய்க்வார்

9. மராத்திய பேரரசின் கடைசி பேஷ்வா _______.
(1) பாலாஜி விஸ்வநாத் (2) இரண்டாம் பாஜிராவ்
(3) பாலாஜி பாஜிராவ் (4) பாஜிராவ்

10. துணைப்படைத் திட்டத்தில் இணைந்து கொண்ட முதல் இந்திய சுதேச அரசு எது?
(1) அயோத்தி (2) ஹைதராபாத் (3) உதய்பூர் (4) குவாலியர்

11. அலிநகர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு
(1) 1755 (2) 1763 (3) 1757 (4) 1803

12. சிராஜ்-உத்-தௌலாவின் தலைமைப் படைத் தளபதி _______.
(1) மீர்காசிம் (2) நவாப் (3) ஆலம்ஷா (4) பாஜிராவ்

13. இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம்
(1) நாட்டை கைப்பற்றுதல் (2) வாரிசுரிமைப் போர்
(3) வணிகம் செய்ய (4) வரி வசூலித்தல்

14. இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜியத்தை விரிவுபடுத்துவதற்காக, வாரிசு இழப்புக் கொள்கையைக் கொண்டு வந்தவர் _______.
(1) காரன்வாலிஸ் பிரபு (2) வெல்லெஸ்லி பிரபு
(3) டல்ஹௌசி பிரபு (4) வில்லியம் பிரபு

15. திப்பு சுல்தானை இறுதியாகத் தோற்கடித்தவர் _______.
(1) வெல்லெஸ்லி பிரபு (2) டல்ஹௌசி பிரபு
(3) காரன்வாலிஸ் பிரபு (4) வில்லியம் பிரபு

16. திப்பு சுல்தான் இறப்புக்குப் பின் _______ வசம் மைசூர் ஒப்படைக்கப்பட்டது.
(1) மராத்தியர் (2) டச்சுக்காரர் (3) ஆங்கிலேயர் (4) பிரெஞ்சுகாரர்

17. 1800 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஒரு கல்லூரியை நிறுவியவர் _______.
    (1) காரன்வாலிஸ் பிரபு (2) வெல்லெஸ்லி பிரபு
    (3) டல்ஹெளசி பிரபு (4) வில்லியம் பிரபு

18. அலிநகர் உடன்படிக்கை யார் யாருக்கு இடையே ஏற்பட்டது?
    (1) சிராஜ்-உத்-தௌலா - இராபர்ட் கிளைவ்
    (2) இராபர்ட் கிளைவ் - திப்பு சுல்தான்
    (3) டல்ஹெளசி பிரபு - திப்பு சுல்தான்
    (4) ஜோசப்ஸ்மித் - ஹைதர் அலி

19. இருட்டறைத் துயரச் சம்பவம் நடைபெற்ற இடம் _______.
    (1) வங்காளம் (2) டில்லி (3) மதராஸ் (4) கல்கத்தா

20. தஸ்தக் என்பது _______ வரி.
    (1) மகசூல்வரி (2) வீட்டுவரி (3) சுங்கவரி (4) குத்தகை

21. இரட்டை ஆட்சி முறையைக் கொண்டு வந்தவர் _______.
    (1) இராபர்ட் கிளைவ் (2) டல்ஹெளசி பிரபு
    (3) வெல்லெஸ்லி பிரபு (4) கவுண்டி-டி-லாலி

22. நவாப் படைக்குத் தலைமை வகித்தவர் _______.
    (1) பாரடைஸ் (2) மாபூஸ்கான்
    (3) கவுண்டி-டி-லாலி (4) நிஜாம்-உத்-தௌலா

23. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் முடிவில் எந்த உடன்படிக்கை ஏற்பட்டது?
    (1) அலகாபாத் (2) சால்பை (3) மதராஸ் (4) அய்லா-சப்பேல்

24. பிரெஞ்சு ஆளுநர் கோதேயூக்கும், ஆங்கிலேயருக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை
    (1) மதராஸ் (2) பாண்டிச்சேரி (3) அய்லா-சப்பேல் (4) அலகாபாத்

25. செயிண்ட் டேவிட் கோட்டை எங்குள்ளது?
    (1) வந்தவாசி (2) கல்கத்தா (3) கடலூர் (4) ஆக்ரா

26. மதராஸ் உடன்படிக்கை நடைபெற்ற ஆண்டு _______.
    (1) 1769 (2) 1755 (3) 1748 (4) 1765

27. ஆங்கிலேயப் படைத்தளபதி சர் அயர்கூட், ஹைதர் அலியைத் தோற்கடித்த இடம் _______.
    (1) வந்தவாசி (2) கடலூர் (3) பரங்கிபேட்டை (4) மைசூர்

28. புரந்தர் உடன்படிக்கை யார் யாருக்கு இடையே ஏற்பட்டது _______.
    (1) ஆங்கிலேயர் - ரகுநாதராவ் (2) வெல்லெஸ்லி - பேஷ்வா
    (3) ஹேஸ்டிங்ஸ் - சிந்தியா (4) அப்டன் - பூனா பாதுகாப்பு படை

29. மராத்தியரின் கடைசி பேஷ்வா _______.
    (1) இரண்டாம் பாஜிராவ் (2) முதலாம் பாஜிராவ்
    (3) சிவாஜி (4) மாதராவ் சிந்தியா

www.kalvinews.com

30. இங்கிலாந்தில் உள்ள கிழக்கிந்தியக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு _______.

(1) 1786 (2) 1800 (3) 1833 (4) 1806

31. _________ சட்டத்தின் படி முதன் முதலில் போட்டித் தேர்வின் மூலம் அரசு ஊழியர் நியமனம் செய்தனர்.

(1) வங்காள (2) காந்தி - இர்வின் (3) வாரிசுரிமை (4) பட்டய

32. ஐ.சி.எஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் _______.

(1) ரவீந்திரநாத் தாகூர் (2) ராமசாமி
(3) வல்லபாய் படேல் (4) சத்தியேந்திரநாத் தாகூர்

33. முதன் முதலில் காவல் துறை உருவாக்கப்பட்ட ஆண்டு _______.

(1) 1790 (2) 1857 (3) 1795 (4) 1791

34. மதராஸ் உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்ட ஆண்டு _______.

(1) 1801 (2) 1803 (3) 1773 (4) 1775

35. கீழே உள்ளவர்களில் யார் ஏகாதிபத்தியவாதி?

(1) வெல்லெஸ்லி (2) கர்சன் (3) டல்ஹௌசி (4) திப்பு சுல்தான்

36. பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| I. | அய் - லா - சப்பேல் உடன்படிக்கை | - | a. முதல் ஆங்கில - மைசூர் போர் |
| II. | சால்பை உடன்படிக்கை | - | b. முதல் கர்நாடகப் போர் |
| III. | பாரீஸ் உடன்படிக்கை | - | c. மூன்றாம் கர்நாடகப் போர் |
| IV. | ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை | - | d. முதல் மராத்திய போர் |
| V. | மதராஸ் உடன்படிக்கை | - | e. மூன்றாம் ஆங்கில - மைசூர் போர் |

(1) i - d, ii - e, iii - c, iv - b, v - a (2) i - b, ii - d, iii - c, iv - e, v - a
(3) i - b, ii - a, iii - c, iv - e, v - d (4) i - e, ii - a, iii - c, iv - b, v - d

37. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாகப் பொருந்தியுள்ளது?

(1) அடையாறு போர் - 1748 (2) ஆம்பூர் போர் - 1754
(3) வந்தவாசிப் போர் - 1760 (4) ஆற்காட்டுப் போர் - 1749

38. பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. அலிநகர் உடன்படிக்கை | - | a. 1763 |
| ii. அலகாபாத் உடன்படிக்கை | - | b. 1748 |
| iii. அய் - லா - சபேல் உடன்படிக்கை | - | c. 1765 |
| iv. பாரீஸ் உடன்படிக்கை | - | d. 1757 |

(1) i - d, ii - c, iii - a, iv - b (2) i - a, ii - c, iii - d, iv - b
(3) i - b, ii - a, iii - c, iv - d (4) i - d, ii - c, iii - b, iv - a

39. பின்வருவனவற்றில் பொருந்தாதது எது?

(1) புரந்தர் ஒப்பந்தம் - 1776 (2) அர்ஜுன் ஒப்பந்தம் - 1803
(3) சூரத் ஒப்பந்தம் - 1775 (4) திமோசான் ஒப்பந்தம் - 1802

www.kalvinews.com

40. கீழ் உள்ளவற்றைப் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| i. | ராயல் கமிஷன் | - | a. 1791 |
| ii. | இந்தியர் உயர் பதவி | - | b. லீ பிரபு |
| iii. | காவல் துறை | - | c. திவானி அதாலத் |
| iv. | சிவில் நீதிமன்றம் | - | d. சுபேதார் |

(1) i - b, ii - d, iii - a, iv - c
(2) i - a, ii - c, iii - d, iv - b
(3) i - a, ii - c, iii - b, iv - d
(4) i - d, ii - c, iii - b, iv - a

41. பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?

i. துணைப்படைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் டல்ஹௌசி பிரபு.
ii. வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தவர் வெல்லெஸ்லி பிரபு.
iii. காவல் துறையை நிர்வகிக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்தது.
iv. ராணுவத்தில் 86% பேர் இந்தியர்கள் இருந்தனர்.

(1) ii மட்டும்
(2) ii, iv மட்டும்
(3) i, ii மட்டும்
(4) iv மட்டும்

42. பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?

(1) வங்காள நவாப் அலிவர்த்திகான் 1750-ல் இறந்தார்.
(2) பீகாரின் கங்கை நதிக்கரையில் அமைந்த சிறிய நகரம் பக்சார்.
(3) பிரெஞ்சுப் படைத்தளபதி மாபூஸ்கான்.
(4) முகமது அலியின் மகன் அன்வாரூதின்.

43. பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?

(1) 1751ல் ஆற்காட்டுப் போர் நடைபெற்றது.
(2) மைசூர் சமஸ்தானத்தின் ஆட்சியாளர் ஹைதர் அலி.
(3) 1775ல் சூரத் ஒப்பந்தம்.
(4) 1770ல் புரந்தர் ஒப்பந்தம்.

44. பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?

(1) இரண்டாம் பாஜிராவ் வருடாந்திர ஓய்வூதியம் ரூ 8 லட்சம் பெற்றார்.
(2) இந்தியப்படை வீரர்களின் மாதச் சம்பளம் ரூ 350.
(3) இருட்டறைத் துயரச் சம்பவத்தில் 146 பேர் மூச்சுத் திணறி இறந்தனர்.
(4) இந்திய ஆட்சிப்பணியில் 35% பேர் தேர்வு.

45. பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| i. | போர்ச்சுகல் மாலுமி | - | a. சிராஜ்-உத்-தௌலா |
| ii. | இருட்டறைத் துயரச் சம்பவம் | - | b. லீ பிரபு |
| iii. | இரட்டை ஆட்சி முறை | - | c. வாஸ்கோடகாமா |
| iv. | ராயல் கமிஷன் | - | d. இராபர்ட் கிளைவ் |

(1) i - b, ii - d, iii - a, iv - c
(2) i - a, ii - c, iii - d, iv - b
(3) i - a, ii - c, iii - b, iv - d
(4) i - c, ii - a, iii - d, iv - b

46. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS-2020-21)

(1) சந்தா சாகிப்
(2) முகமது அலி
(3) நாசிர் ஜங்
(4) முசாபர் ஜங்

www.kalvinews.com

47. பொருத்துக. (NMMS 2019-20)

a) பிளாசிப் போர் - i. 1760

b) பக்சார் போர் - ii. 1757

c) வந்தவாசிப் போர் - iii. 1751

d) ஆற்காட்டுப் போர் - iv. 1764

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | iv | iii | i | ii | (2) | ii | iv | i | iii |
| (3) | ii | iv | iii | I | (4) | iii | ii | i | iv |

48. இந்திய ஆட்சிப்பணிச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ________. (NMMS 2019-20)

(1) 1862 (2) 1861 (3) 1859 (4) 1857

49. கூற்று-I: பிளாசிப் போர் கி.பி. 1757-ஆம் ஆண்டு நடைபெற்றது. (NMMS-2018)

கூற்று-II: இப்போர் வங்காள நவாப் மற்றும் ஆங்கிலேயர்களுக்கிடையே நடைபெற்றது.

(1) கூற்று I மற்றும் II சரியானவை (2) கூற்று I மற்றும் II தவறானவை

(3) கூற்று I சரி, கூற்று II தவறு (4) கூற்று I தவறு, கூற்று II சரி.

50. கீழ்க்கண்டவற்றைக் காலக்கிரமப்படி வரிசைப்படுத்துக. (NMMS-2018)

(a) ரோஹில்லாப் போர் (b) இரண்டாவது ஆங்கில மைசூர் போர்

(c) மங்களூர் உடன்படிக்கை (d) முதலாம் ஆங்கில மராத்தியப் போர்

(1) (a), (c), (b), (d) (2) (a), (d), (c), (b) (3) (a), (d), (b), (c) (4) (d), (b), (a), (c)

51. ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு ________. (NMMS-2015-16)

(1) 1775 (2) 1773 (3) 1778 (4) 1771

52. தவறான இணையைக் கண்டுபிடிக்கவும் (NMMS-2015-16)

(1) முதல் கர்நாடகப் போர் - கி.பி. 1746 - 1748

(2) பிளாசிப் போர் - கி.பி 1757

(3) பக்சார் போர் - கி.பி 1765

(4) முதலாவது ஆங்கில மைசூர் போர் - கி.பி. 1767 - 1769

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 11 | (3) | 21 | (1) | 31 | (4) | 41 | (3) | 51 | (2) |
| 2 | (1) | 12 | (2) | 22 | (2) | 32 | (4) | 42 | (2) | 52 | (3) |
| 3 | (1) | 13 | (2) | 23 | (4) | 33 | (4) | 43 | (4) | | |
| 4 | (2) | 14 | (3) | 24 | (2) | 34 | (1) | 44 | (1) | | |
| 5 | (2) | 15 | (1) | 25 | (3) | 35 | (3) | 45 | (4) | | |
| 6 | (3) | 16 | (3) | 26 | (1) | 36 | (2) | 46 | (2) | | |
| 7 | (3) | 17 | (2) | 27 | (3) | 37 | (3) | 47 | (3) | | |
| 8 | (1) | 18 | (1) | 28 | (4) | 38 | (4) | 48 | (2) | | |
| 9 | (2) | 19 | (4) | 29 | (1) | 39 | (4) | 49 | (1) | | |
| 10 | (2) | 20 | (3) | 30 | (4) | 40 | (1) | 50 | (3) | | |

www.kalvinews.com

வகுப்பு - 8 - வரலாறு

## 3. கிராம சமூக அமைப்பும் வாழ்க்கை முறையும்

**தொகுப்பு:**

**திரு.சீ.மாதேஸ்வரன், M.Sc., B.Ed., B.L.I.Sc.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, கீழ்வாணி,**
**ஈரோடு மாவட்டம்.**

**மேம்பாடு:**

**திரு.க.பிரகாஷ், M.Sc., M.Phil., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**அரசு மேல்நிலைப்பள்ளி, திணைக்குளம்,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

**ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ் நில வருவாய் கொள்கை:**

**1. நிலையான நிலவரித் திட்டம்:**

- 1765ல் **இராபர்ட் கிளைவ்** வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் வரி வசூலிக்கும் உரிமையைப் பெற்ற பின்பு, ஓராண்டு நிலையான நிலவரித் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.
- வாரன் ஹேஸ்டிங்ஸ் பதவியேற்ற பின்பு, ஐந்தாண்டு நிலவருவாய் திட்டமாக மாற்றி, பிறகு ஓராண்டுத் திட்டமாக மாற்றினார்.
- 1793-ல் காரன் வாலிஸ் பிரபு தலைமை ஆளுநரான பின்பு, **பத்தாண்டு நில வருவாய்த் திட்டமாக** மாற்றினார். இத்திட்டம் நிலையான நிலவருவாய் திட்டம் என அழைக்கப்படுகிறது.
- **இரயத்துவரி முறை - தாமஸ் மன்றோ**
- **மகல்வரி முறை - வில்லியம் பெண்டிங் பிரபு**
- நிலையான நிலவரித் திட்டம் 19% நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.
- நிலையான நிலவரித் திட்டம் வங்காளம், பீகார், ஒரிசா, உத்திரப் பிரதேசத்தில் வாரணாசி பகுதி மற்றும் வடக்கு கர்நாடகப் பகுதிகளில் கொண்டு வரப்பட்டது
- நிலையான நிலவரித்திட்டம் **ஜமீன்தாரி, ஜாகீர்தாரி, மல்குஜாரி** என்ற பெயர்களில் அழைக்கப்பட்டது.

**நிலையான நிலவரித் திட்டத்தின் சிறப்புக் கூறுகள்:**

- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முறையாக வரி செலுத்தும்வரை ஜமீன்தார்கள் நில உடைமையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.
- ஜமீன்தார்கள் வணிகக் குழுவிற்கு செலுத்தி வந்த வரி நிலையாக நிரணயிக்கப்பட்டு, எந்தச் சூழ்நிலையிலும் உயர்த்தப்படாது என உறுதியளிக்கப்பட்டது.
- ஜமீன்தார்கள் விவசாயிகளிடமிருந்து வரி வசூல் செய்யும் முகவர்களாக செயல்பட்டனர்.
- இதில் 10 / 11 பங்கு ஆங்கிலேய அரசுக்குச் செலுத்தினர்.
- ஜமீன்தார்கள், விவசாயிகளுக்கு பட்டா (எழுதப்பட்ட ஒப்பந்தம்) வழங்கினர். இதன் மூலம், விவசாயிகள் அந்நிலத்தை உழும் காலம்வரை குத்தகைதாரர்களாகக் கருதப்பட்டனர்.
- அனைத்து நீதித்துறை அதிகாரங்களும் ஜமீன்தார்களிடமிருந்து திரும்பப் பெறப்பட்டது.

www.kalvinews.com

**நிறைகள்**:

- தரிசு நிலங்கள் மற்றும் காடுகள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டன
- ஜமீன்தார்கள் நிலத்தின் உரிமையாளர்கள் ஆனார்கள்.
- ஜமீன்தார்கள் ஆங்கில அரசுக்கு நம்பிக்கைக்கு உரியவர்களாக மாறினர்.
- ஆங்கிலேய அரசுக்கு நிலையான வருவாயை உறுதி செய்தது.

**குறைகள்:**

- ஆங்கிலேய அரசு விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவில்லை.
- விவசாயிகளின் உரிமைகள் மறுக்கப்பட்டதோடு, ஜமீன்தார்களின் பொறுப்பில் விடப்பட்டனர்.
- இந்த திட்டத்தினால், ஜமீன்தார்கள் சோம்பேறிகளாகவும், ஆடம்பரப் பிரியர்களாகவும் மாறினர்.
- வங்காளத்தின் பல கிராமப்புறங்களில், ஜமீன்தார்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே பல மோதல்கள் ஏற்பட்டன.

**2. இரயத்துவரி முறை:**

- 1820ல் தாமஸ் மன்றோ, கேப்டன் ரீட் போன்றோரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மதராஸ், பம்பாய், அசாம், கூர்க் மாகாணங்களில் இம்முறை கொண்டு வரப்பட்டது.
- இம்முறையின்படி, நிலத்தின் உரிமை விவசாயிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது.
- விவசாயிகள் நிலத்தின் உரிமையாளர்களாயினர்.
- தாமஸ் மன்றோ அவர்களால் பாதியாக இருந்த வரி, மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கப்பட்டது.
- நில வருவாய் மண், பயிரின் தன்மையைப் பொறுத்து மாறியது.
- நிலத்தின் மீதான குத்தகை பொதுவாக 20 அல்லது 30 ஆண்டுகளுக்கொருமுறை மாற்றியமைக்கப்பட்டது..
- இத் திட்டத்தில் விவசாயிகளின் நிலைமை மிகவும் பாதுகாப்பானதாக இருந்தது.
- உண்மையில், அரசு விவசாயிகளிடமிருந்து நில வருவாயை வரியாக அல்லாமல் குத்தகையாகவே பெற்றுக் கொண்டது.

**இரயத்துவரி முறையின் சிறப்புக் கூறுகள்:**

- வருவாய் ஒப்பந்தம் நேரடியாக விவசாயிகளுடன் செய்து கொள்ளப்பட்டது.
- நில அளவு மற்றும் விளைச்சலின் மதிப்பீடு கணக்கிடப்பட்டது.
- அரசானது, விளைச்சலில் 45 லிருந்து 50 சதவீதம் வரை வரியாக நிர்ணயம் செய்தது

**இரயத்துவரி முறையால் ஏற்பட்ட விளைவுகள்:**

- பெரும்பாலான பகுதிகளில் நில வருவாய் மிக அதிகமாக நிர்ணயிக்கப்பட்டது. சிறப்பான பருவக் காலங்களில்கூட விவசாயிகள் நிலவரி செலுத்துவதற்கு மிகவும் சிரமப்பட்டனர்.
- அரசு, ஜமீன்தாரர்களுக்குப் பதிலாக விவசாயிகளை சுரண்டியது.

**3. மகல்வரி முறை:**

- **ஹோல்ட் மெகன்சி - மகல்வரி முறை**.
- 1822ல் கங்கைச் சமவெளி, வடமேற்கு மாகாணம், பஞ்சாப், மத்திய இந்தியாவின் சில பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டது.
- இராபர்ட் மெர்தின்ஸ் பர்ட் என்பவரின் வழிகாட்டுதலின்படி 1833-ல் வில்லியம் பெண்டிங் பிரபு சில மாற்றங்கள் கொண்டு வந்தார்.
- மகல் அல்லது கிராம விளைச்சல் அடிப்படையில் வருவாய் நிர்ணயம்.
- நிலவருவாய் 50 % என கொண்டு வந்தவர் வில்லியம் பெண்டிங் பிரபு.

www.kalvinews.com

- வரிவசூல் செய்ய கிராமத் தலைவர் நியமனம்.
- இம்முறை ஆக்ரா, அயோத்தியில் முதன் முதலில் அறிமுகம்.
- கிராமத் தலைவர் அரசுக்கும், மக்களுக்கும் இடையில் இடைத்தரகராகச் செயல்படுதல்.
- விவசாயிகளுக்கு இலாபகரமானதாக இம்முறை அமையவில்லை.
- ஆங்கில இறக்குமதிப் பொருள்களில் இந்தியக் குடிசைத் தொழில்கள் மறைந்தன.

**4. விவசாயிகளின் புரட்சிக்கான காரணம்:**

- புதிய வேளாண்மை யுக்திகளால் பழைய வேளாண்மை முறை மறைதல்.
- ஜமீன்தார்கள் நில உரிமையாளராக மாறினர். அவர்களால் விவசாயிகளின் உழைப்பு சுரண்டப்பட்டது.
- 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் ஜமீன்தார்கள், ஆங்கிலேயருக்கும் எதிராக புரட்சியில் ஈடுபட்டனர்

**5. சந்தால் கலகம் (1855-56):**

- 1855-56 ல் விவசாயிகள் எழுச்சியின் முதல் கலகம் சந்தால் கலகம்.
- பீகாரில் உள்ள ராஜ்மகால் குன்றுகளுக்கு அருகில் சந்தால் மக்கள் வேளாண்மை செய்தனர்.
- நிழக்கிழார், வட்டிக்குப் பணம் தருவோர் ஆகியோருக்கு எதிராக 1855-ல் ஆயுதம் ஏந்திய புரட்சி வெடித்தது.
- சித்து, கங்கு என்ற இரு சகோதர்கள் தலைமையில் 10,000 பேர் ஒன்று கூடினர்.
- புரட்சியாளர்களால் தாக்கப்பட்டவர்கள் - ஐரோப்பிய பண்ணையாளர்கள், ஆங்கில அலுவலர்கள், இரயில்வே பொறியாளர், ஜமீன்தார்கள், வட்டிக்குப் பணம் கொடுப்போர் போன்றவர்கள்.
- 1856-ல் புரட்சி முடிவுக்கு வருதல், தலைவர்கள் கைது, கலகம் கடுமையாக அடக்கப்பட்டது.
- சந்தால்கள் வசித்த பகுதி - சந்தால் பர்கானா.

**6. இண்டிகோ கலகம் (அவுரி புரட்சி) - 1859-60:**

- வங்காள அவுரி சாகுபடியாளர்களின் வேலை நிறுத்தம் தீவிரமடைதல்.
- ஐரோப்பிய இண்டிகோ தோட்டக்காரர்கள், விவசாயிகளுக்கு தீமை விளைவித்தல்.
- குத்தகை விவசாயிகளைக் குறைந்த விலைக்கு விற்க கட்டாயப்படுத்துதல்.
- ஆள் கடத்தல், கொள்ளையடித்தல், கசையடி கொடுத்தல், எரித்தல் சம்பவம் நடைபெறுதல்.
- 1859-ல் **திகம்பர் பிஸ்வாஸ், பிஸ்னு சரண் பிஸ்வாஸ்** ஆகியோரால் நடைபெற்ற கலகங்கள் ஐரோப்பிய பண்ணையாளர்களின் கடுமையான அடக்குமுறையால் கைவிடப்பட்டன.
- இந்த அடக்குமுறை நாதியா மாவட்டத்தில் நடைபெற்றது.
- **1860-ல் அரசு அவுரி ஆணையத்தை** அமைத்தல்.
- 1862-ல் சட்டம் பாகம்- 6 ஐ உருவாக்குதல்.
- **இந்து தேசபக்தன்** - நாளிதழ் இவர்களின் துயரங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.
- **தீனபந்து மித்ரா** என்பவர் **நீலதர்பன்** எனும் நாடகம் மூலம் வங்காள அவுரி சாகுபடியாளர்களின் துயரங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றார்.

**7. பாப்னா கலகம் (1873-76):**

- ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிராக விவசாயிகளால் நடத்தப்பட்டது பாப்னா கலகம்.
- வங்காளத்தின் பாப்னாவில் உள்ள யூசுப்சாகி பர்கானாவில் கேசப் சந்திரா ராய் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது.
- விவசாயிகளிடம் போராட்டத்திற்கு நிதி திரட்டுதல்.
- போராட்டம் பாப்னா முழுவதும் கிழக்கு வங்காளம் வரை பரவுதல்.

www.kalvinews.com

- போராட்டம் மூலம் சட்ட விழிப்புணர்வு, சட்ட உரிமைகளை மேம்படுத்தினர்.
- அமைதியான முறையில் எதிர்க்கும் ஆற்றல், வலிமை, விழிப்புணர்வை வளர்த்துக் கொண்டனர்.

**8. தக்காண கலகம் - 1875:**

- தக்காண கலகம் என்பது **1875-ல் பூனா மாவட்டத்தில் விவசாயிகளால் ஏற்பட்ட கலகம்**.
- உள்ளூர் வட்டிக்காரர்களை எதிர்த்துப் புரட்சி செய்தல்.
- வட்டிக்காரர்களின் சொத்தினைக் கைப்பற்றி அவர்களை கிராமத்திலிருந்து வெளியேற்றுதல்.
- இப்புரட்சி 33 கிராமங்களுக்குப் பரவுதல்.
- விவசாயிகள் மார்வரி சகுகாரர்களின் சொத்தினைக் கொள்ளையடித்தல்.
- இராணுவம் மூலம் புரட்சியைக் கட்டுப்படுத்துதல்.
- விவசாயிகளின் குறைகளை களைய "தக்காண விவசாயிகள் மீட்பு சட்டம்" நிறைவேற்றப்படுதல்

**9. பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் (1890-1900):**

- வட்டிக்கடைக்காரர்களின் ஒடுக்கு முறைக்கு எதிராக விவசாயிகள் புரட்சியில் ஈடுபடுதல்.
- இப்பகுதியில் இருந்து ஆங்கிலேயர்கள் இராணுவத்திற்கு ஆட்கள் சேர்ப்பு.
- விவசாயிகள் பாதுகாப்பிற்கு **1900-ல் பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்** நிறைவேற்றப்படுதல்.
- இச்சட்டம் இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் பரவியது.

**10. சம்பரான் சத்தியாகிரகம் - 1917-18:**

- பீகார் மாநிலத்தில் சம்பரான் என்ற இடத்தில் ஐரோப்பிய பண்ணையாளர்கள் அரசுக்கு எதிராக அவுரி சாகுபடி செய்தனர்.
- 20-ல் 3 பங்கு மட்டும் அவுரி சாகுபடி செய்தல்.
- சம்பரான் தீன்கதியா என்பது விலை நிர்ணய அமைப்பு.
- விவசாயிகள் ஐரோப்பிய பண்ணையாளர்களால் அடக்குமுறை, பணம் பறிப்பு போன்றவைகளில் ஈடுபடுதல்.
- மகாத்மா காந்தி விவசாயிகளுக்கு உதவ முன்வருதல்.
- அரசு விசாரணைக் குழுவை நியமித்து மகாத்மா காந்தி அதில் ஒரு உறுப்பினராகச் சேருதல்.
- 1918-மே- இல் விவசாயிகளின் குறைகள் களைய சம்பரான் விவசாய சட்டம் நிறைவேற்றப்படுதல்.

**11. கேடா (கைரா) சத்தியாகிரகம் - 1918:**

- 1918-ல் குஜராத்தின் கேடா மாவட்டத்தில் இடையராத பஞ்சம் காரணமாக விவசாயம் பொய்த்தல்.
- அரசு விவசாயிகளை வரி செலுத்த கட்டாயப்படுத்தியதன் விளைவாக கேடா மாவட்டத்தில் விவசாயிகள் வரிகொடா இயக்கம் தொடங்குதல்.
- வரிகொடா இயக்கத்தின் தலைவர் - காந்தியடிகள்.
- காந்தியடிகள் சத்தியாகிரக முறையில் விவசாயிகளை ஆயத்தப்படுத்துதல்.
- இக்காலக் கட்டத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் சுதந்திரப் போராட்டத்தின் முக்கியமான தலைவராக உருவானார்.

**12. மாப்ளா கிளர்ச்சி - 1921:**

- கேரளப் பகுதியில் வசிக்கும் முஸ்லீம் விவசாயிகளை மாப்ளா என அழைப்பர்.
- மாப்ளா இனத்தவர்களை, இந்து ஜமீன்தார்கள் (ஜென்மிஸ்) மற்றும் ஆங்கில அரசு அடக்கியதால் இப்புரட்சி ஏற்பட்டது.

- 1920- ஏப்ரலில் மலபார் மாவட்ட மாநாட்டின் மூலம் மாப்ளா விவசாயிகள் எழுச்சி பெறுதல்.
- 1921-ஆகஸ்டில் ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிராக மாப்ளா விவசாயிகள் கிளர்ச்சியில் ஈடுபடுதல்.
- காவல் நிலையம், பொது அலுவலகம், செய்தித் தொடர்பு சாதனம், நிலக்கிழார் வீடுகள், வட்டிக்கடைக்காரர் வீடுகள் ஆகியவற்றை மாப்ளா விவசாயிகள் தாக்குதல்.
- 1921-ல் அரசு மாப்ளா கிளர்ச்சியை அடக்குதல்.
- 2337 மாப்ளா கிளர்ச்சியாளர்கள் கொல்லப்படுதல்.
- 45000-க்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டனர்.

**13. பர்தோலி சத்தியாகிரகம் - 1929-30:**

- 1928-ல் அரசு நிலவருவாயை 30% உயர்த்துதல்.
- இதனால் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் பர்தோலி (குஜராத்) விவசாயிகள் எதிர்த்தனர்.
- 1928, பிப்ரவரி 12-ல் நிலவரியை செலுத்த மறுப்பு தெரிவித்து வரிகொடா இயக்கத்தைத் தொடங்குதல். இதில் பெண்களும் கலந்து கொள்ளுதல்.
- 1930-ல் அரசுக்கு நிலத்தை விற்காமல் குறைந்த விலைக்கு விற்க முடிவு செய்தல்.
- அரசு நிலத்தை ஏலம் மூலம் கையகப்படுத்துதல்.
- 1937-ல் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபிறகு விவசாயிகளுக்கு நிலம் திரும்ப கிடைத்தது.

**விவசாயிகளின் புரட்சிகள்:**

| கலகம் / புரட்சியின் பெயர் | நடைபெற்ற ஆண்டு |
|---|---|
| சந்தால் கலகம் | **1855 - 56** |
| இண்டிகோ புரட்சி (அவுரி புரட்சி) | **1859 - 60** |
| பாப்னா கலகம் | **1873 - 76** |
| தக்காண கலகம் | **1875** |
| பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் | **1890 - 1900** |
| சம்பரான் சத்தியாகிரகம் | **1917 - 18** |
| கேடா (கைரா) சத்தியாகிரகம் | **1918** |
| மாப்ளா கிளர்ச்சி | **1921** |
| பர்தோலி சத்தியாகிரகம் | **1929 - 30** |

**பயிற்சி வினாக்கள்**:

1. ஜாகீர்தாரி, மல்குஜாரி, பிஸ்வேதாரி போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் நிலவரி முறை எது?

(1) மகல்வரி முறை (2) இரயத்துவரி முறை
(3) ஜமீன்தாரி முறை (4) எதுவுமில்லை

2. எந்த கவர்னர் ஜெனரலின் காலத்தில், வங்காளத்தில் நிரந்தர நிலவரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது?

(1) ஹேஸ்டிங்ஸ் பிரபு (2) காரன்வாலிஸ் பிரபு
(3) வெல்லெஸ்லி பிரபு (4) மிண்டோ பிரபு

www.kalvinews.com

3. மகல்வரி முறையில் மகல் என்பதன் பொருள் ______.
   (1) வீடு (2) நிலம் (3) கிராமம் (4) அரண்மனை

4. மகல்வரி முறை எந்தப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது?
   (1) மகாராஷ்டிரா (2) மதராஸ் (3) வங்காளம் (4) பஞ்சாப்

5. கீழ்க்காணும் கவர்னர்களுள் மகல்வரி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?
   (1) ஹேஸ்டிங்ஸ் பிரபு (2) காரன்வாலிஸ் பிரபு
   (3) வெல்லெஸ்லி பிரபு (4) வில்லியம் பெண்டிங் பிரபு

6. ஆங்கிலேயர்களால் இரயத்துவரி முறை அறிமுகப்படுத்தப்படாத பகுதி எது?
   (1) பம்பாய் (2) மதராஸ் (3) வங்காளம் (4) எதுவுமில்லை

7. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி யாரால் தலைமையேற்று நடத்தப்பட்டது?
   (1) மகாத்மா காந்தி
   (2) கேசப் சந்திர ராய்
   (3) திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு பிஸ்வாஸ்
   (4) சர்தார் வல்லபாய் படேல்

8. பர்தோலி சத்தியாகிரகம், யார் தலைமையில் நடத்தப்பட்டது?
   (1) சர்தார் வல்லபாய் பட்டேல் (2) மகாத்மா காந்தி
   (3) திகம்பர் பிஸ்வாஸ் (4) கேசப் சந்திர ராய்

9. ஜமீன்தார் முறையின் திருத்தப்பட்ட முறை என்பது ______.
   (1) இரயத்துவரி முறை (2) மகல்வரி முறை
   (3) ஜமீன்தாரி முறை (4) எதுவுமில்லை

10. மகல்வரி முறை என்பது ______ என்பவரால் கொண்டுவரப்பட்ட சட்டம் ஆகும்.
    (1) வில்லியம் பெண்டிங் பிரபு (2) காரன்வாலிஸ் பிரபு
    (3) வெல்லெஸ்லி பிரபு (4) ஹேஸ்டிங்ஸ் பிரபு

11. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி எந்த ஆண்டு நடைபெற்றது?
    (1) 1829 (2) 1921 (3) 1917 (4) 1859

12. மாப்ளா கலகம் எந்த ஆண்டு நடைபெற்றது?
    (1) 1918 (2) 1859 (3) 1921 (4) 1920

13. சம்ரான் விவசாயச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ______.
    (1) 1921 (2) 1918 (3) 1859 (4) 1873

14. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (i) நிரந்தர நிலவரித் திட்டம் | - | அ. மதராஸ் |
| (ii) மகல்வரி முறை | - | ஆ. இண்டிகோ விவசாயிகளின் துயரம் |
| (iii) இரயத்துவரி முறை | - | இ. வடமேற்கு மாகாணம் |
| (iv) நீல் தர்பன் | - | ஈ. வங்காளம் |

    (1) (i) - இ (ii) - ஈ (iii) - ஆ (iv) - அ (2) (i) - ஈ (ii) - இ (iii) - அ (iv) - ஆ
    (3) (i) - இ (ii) - ஆ (iii) - ஈ (iv) - அ (4) (i) - ஈ (ii) - இ (iii) - அ (iv) - ஆ

www.kalvinews.com

15. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று ஜமீன்தாரி முறைப் பற்றிய தவறான கூற்றாகும்?
    (1) இந்த முறை 1793-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
    (2) ஜமீன்தார்கள் நிலத்தின் உரிமையாளர் ஆவர்.
    (3) விவசாயிகளுக்கு இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட வருவாய் நிலையாக கிடைத்தது
    (4) இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 19 % நிலப்பரப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.

16. கீழ்க்கண்டவற்றுள் விவசாயப் புரட்சி பற்றி சரியான கூற்று எது?
    (1) சந்தால் கலகம் வங்காளத்தில் நடைபெற்றது.
    (2) நீலதர்பன் என்ற நாடகம் தீனபந்து மித்ராவால் எழுதப்பட்டது.
    (3) தக்காண கலகம் 1873-ல் பூனாவில் கிராமம் ஒன்றில் துவங்கியது.
    (4) மாப்ளா கலகம் தமிழகத்தில் நடைபெற்றது.

17. நிலவருவாய் திட்டம் எந்த ஆண்டு நடைமுறைக்கு வந்தது?
    (1) 1820 (2) 1822 (3) 1830 (4) 1765

18. நிலையான நிலவருவாய்த் திட்டத்தை ஏற்படுத்தியவர் யார்?
    (1) இராபர்ட் கிளைவ் (2) காரன்வாலிஸ் பிரபு
    (3) வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு (4) வெல்லெஸ்லி பிரபு

19. இரயத்துவரி முறையை ஏற்படுத்தியவர் யார்?
    (1) தாமஸ் மன்றோ (2) மிண்டோ பிரபு
    (3) காரன்வாலிஸ் பிரபு (4) வெல்லெஸ்லி பிரபு

20. நிலையான நிலவரித் திட்டத்தில் விவசாயிகளிடம் வரிவசூல் செய்யும் உரிமை பெற்றவர் யார்?
    (1) கிராமத் தலைவர் (2) நிலக்கிழார்
    (3) வட்டிக்குப் பணம் கொடுப்பவர் (4) ஜமீன்தார்

21 விவசாயிகளின் எழுச்சியால் ஏற்பட்ட முதல் கலகம் எது?
    (1) இண்டிகோ கலகம் (2) பாப்னா கலகம் (3) தக்காண கலகம் (4) சந்தால் கலகம்

22. சந்தால் மக்கள் வேளாண்மை செய்த மாநிலம் எது?
    (1) வங்காளம் (2) பீகார் (3) ஒரிசா (4) மதராஸ்

23. பின்வருவனவற்றுள் எது தவறாகப் பொருந்தியுள்ளது?
    i. மகல்வரி முறை - வில்லியம் பெண்டிங் பிரபு
    ii. இரயத்துவரி முறை - வெல்லெஸ்லி பிரபு
    iii. நிலையான நிலவரி முறை - கேப்டன் ரீட்
    iv.. மாப்ளா கலகம் - 1921
    (1) I, iii (2) iii, iv (3) ii, iii (4) I, iv

24. நிலையான நிலவரித் திட்டத்தில் பின்வருவனவற்றில் எது தவறான கூற்று?
    (1) நீதித்துறை அதிகாரம் ஜமீன்தார்வசம் இருந்தது.
    (2) 1765-ல் காரன்வாலிஸ் பிரபு பத்தாண்டு நிலவருவாய் நிலவரித் திட்டமாக மாற்றினார்.
    (3) இத்திட்டம் 19% நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்படல்.
    (4) நிலத்தின் உரிமையாளர்கள் ஜமீன்தார்கள்.

www.kalvinews.com

25. இரயத்துவரி முறையுடன் தொடர்பற்ற பகுதி எது?

(1) டெல்லி (2) பம்பாய் (3) மதராஸ் (4) அஸ்ஸாம்

26. இரயத்துவரி முறையில் பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

(1) நிலத்தின் உரிமை விவசாயிகள் வசம் இருந்தது.

(2) தாமஸ் மன்றோ என்பவரால் வரி பாதியாக குறைக்கப்பட்டது.

(3) வங்காளம், பீகார், ஒரிசா மாகாணங்களில் இம்முறை கொண்டு வரப்பட்டது.

(4) அரசு விளைச்சலில் 45% அல்லது 50% வரை அரசு வரி நிர்ணயம் செய்தது.

27. இரயத்துவரி முறை எந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது?

(1) 1820 (2) 1765 (3) 1822 (4) 1764

28. மகல்வரி முறை யாரின் வழிகாட்டுதலின் படி நடைமுறைப்படுத்தப்பட்டது?

(1) தாமஸ் மன்றோ (2) ஹோல்ட் மெகன்சி

(3) வில்லியம் பெண்டிங் பிரபு (4) இராபர்ட் மெர்தின்ஸ் பர்ட்

29. மகல்வரி முறையில் நில வருவாய் வசூல் செய்தவர் யார்?

(1) ஜமீன்தார்கள் (2) அரசர் (3) கிராமத் தலைவர் (4) நிலக்கிழார்

30. மகல்வரி முறையில் பின்வரும் கூற்றுகளுள் எவை சரியானது?

i. கிராமத் தலைவர் இடைத்தரகராகச் செயல்படுதல்

ii. 1820-ல் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது

iii. ஆங்கில இறக்குமதி பொருட்களால் இந்தியக் குடிசைத் தொழில்கள் மறைந்தன

iv. இத்திட்டம் 19% நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது

(1) i மற்றும் ii (2) ii மற்றும் iii (3) i மற்றும் iv (4) iii மற்றும் i

31. பின்வருவனவற்றில் எவை விவசாயிகளின் புரட்சிக்குக் காரணமாக அமைந்தது?

i. கிராமத் தலைவர் இடைத்தரகராக செயல்படுதல்.

ii. புதிய வேளாண்மை யுக்திகளால் பழைய வேளாண்மை மறைதல்.

iii. கிராம விளைச்சல் அடிப்படையில் வருவாய் நிர்ணயம்.

iv. ஜமீன்தார்களால் விவசாயிகளின் உழைப்பு சுரண்டப்படுதல்.

(1) Ii மற்றும் iv (2) I மற்றும் iv (3) ii மற்றும் iv (4) ii மற்றும் iii

32. சந்தால்கள் வசிக்கும் பகுதியின் பெயர் _______.

(1) குன்று (2) குகைகள்

(3) சந்தால் பர்கானா (4) சமவெளி

33. சந்தால் கலகத்தில் பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

(1) குத்தகை விவசாயிகளை குறைந்த விலைக்கு விற்க கட்டாயப்படுத்துதல்.

(2) சித்து, கங்கு சகோதரர் தலைமையில் 10000 பேர் கூடுதல்.

(3) ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு வித்திட்டது.

(4) 1856-ல் புரட்சி முடிவுக்கு வந்தது.

34. இண்டிகோ கலகம் நடைபெற்ற ஆண்டு _______.

(1) 1855 (2) 1875 (3) 1873 (4) 1859

www.kalvinews.com

35. அவுரி ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு ______.

(1) 1873 (2) 1862 (3) 1860 (4)1859

36. அவுரி விவசாயிகளின் துயரங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த நாளிதழ் ______.

(1) நீல் தர்பன் (2) இந்து தேசபக்தன் (3) சுடர் ஒளி (4) மித்ரா

37. தீனபந்து மித்ரா எழுதிய நாடகத்தின் பெயர் ______.

(1) சுடர் ஒளி (2) தேசபக்தன் (3) நீல் தர்பன் (4) அவுரி ஒளி

38. ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிராக நடைபெற்ற கலகம் எது?

(1) பாப்னா கலகம் (2) மாப்ளா கலகம் (3) தக்காண கலகம் (4) இண்டிகோ கலகம்

39. பாப்னா கலகம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது?

(1) மகாத்மா காந்தி (2) சர்தார் வல்லபாய் பட்டேல்

(3) வெல்லெஸ்லி பிரபு (4) கேசப் சந்திர ராய்

40. பாப்னா கலகம் நடைபெற்ற ஆண்டு ______.

(1) 1873 (2) 1859 (3) 1855 (4)1850

41. தக்காண கலகம் நடைபெற்ற மாவட்டம் எது?

(1) நாதியா (2) கான்பூர் (3) அவுரி (4) பூனா

42. தக்காண கலகம் நடைபெற்ற ஆண்டு ______.

(1) 1873 (2) 1875 (3) 1855 (4)1859

43. பின்வருவனவற்றில் தக்காண கலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் தவறானது எது?

(1) இப்புரட்சி 33 கிராமங்களுக்கு பரவுதல்.

(2) உள்ளுர் வட்டிக்காரர்களை எதிர்த்து புரட்சி செய்தல்.

(3) ராணுவம் மூலம் புரட்சியைக் கட்டுப்படுத்துதல்.

(4) மகாத்மா காந்தி விவசாயிகளுக்கு உதவ முன்வருதல்.

44. பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் நடைபெற்ற ஆண்டு ______.

(1) 1917 (2) 1890 (3) 1873 (4) 1875

45. விவசாயிகளின் பாதுகாப்பிற்காக நிறைவேற்றப்பட்ட சட்டம் எது?

(1) பஞ்சாப் நிலஉரிமை மாற்று சட்டம் (2) தக்காண விவசாயி மீட்பு சட்டம்

(3) சம்பரான் விவசாய சட்டம் (4) அவுரி ஆணையம்

46. சம்பரான் விவசாயிகளுக்கு உதவ முன்வந்தவர் யார்?

(1) சர்தார் வல்லபாய் பட்டேல் (2) கேசப் சந்திர ராய்

(3) மிண்டோ பிரபு (4) மகாத்மா காந்தி

47. சம்பரான் விவசாயி சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ______.

(1) 1875 (2) 1873 (3) 1918 (4) 1920

48. கம்ரான் தீன்கதியா என்ற அமைப்பின் செயல்பாடு ______.

(1) வரிவசூல் செய்தல் (2) புரட்சி ஏற்படுத்துதல்

(3) பாதுகாப்பு (4) விலை நிர்ணயம் செய்தல்

www.kalvinews.com

49. வரிகொடா இயக்கத்தின் தலைவர் யார்?

(1) சர்தார் வல்லபாய் பட்டேல் (2) காந்தியடிகள்

(3) மிண்டோ பிரபு (4) நேதாஜி

50. கேடா சத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்ற ஆண்டு ______.

(1) 1918 (2) 1920 (3) 1873 (4) 1875

51. பின்வரும் கூற்றுகளில் எவை மாப்ளா கிளர்ச்சியில் நடைபெற்ற கூற்றுகளில் தவறானது?

(1) மாப்ளா என்பது முஸ்லீம் விவசாயிகளைக் குறிப்பது.

(2) போராட்டத்தின் முக்கியமான தலைவர் சர்தார் வல்லபாய் பட்டேல்.

(3) 1921-ல் மாப்ளா கிளர்ச்சியை அடக்குதல்.

(4) மலபார் மாவட்ட மாநாட்டின் மூலம் மாப்ளா விவசாயிகள் எழுச்சி பெறுதல்.

52. பின்வருவனவற்றைப் பொருந்துக

i. மாப்ளா கிளர்ச்சி - a. 1855

ii. தக்காண கலகம் - b. 1921

iii. சந்தால் கலகம் - c. 1859

iv. இண்டிகோ கலகம் - d. 1875

(1) i - b ii - a iii - d iv - c (2) i - d ii - c iii - b iv - a

**(3) i - b ii - d iii - a iv - c** (4) i - d ii - a iii - c iv - b

53. பர்தோலி சத்தியாகிரகத்தில் விவசாயிகளுக்கு ஆதரவாகப் போராடியவர் யார்?

(1) நேதாஜி (2) காந்தியடிகள்

(3) மிண்டோ பிரபு (4) சர்தார் வல்லபாய் பட்டேல்

54. 1928 - ஆம் ஆண்டு, பர்தோலி விவசாயிகள் ______ தலைமையில் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். (NMMS 2019-20)

(1) கேஷப் சந்திரராய் (2) வல்லபாய் பட்டேல்

(3) காந்திஜி (4) விஷ்ணு பிஸ்வாஸ்

**விடைகள்:**

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (4) | 11 | (4) | 21 | (4) | 31 | (1) | 41 | (4) | 51 | (2) |
| 2 | (2) | 12 | (3) | 22 | (2) | 32 | (3) | 42 | (2) | 52 | (3) |
| 3 | (3) | 13 | (2) | 23 | (3) | 33 | (1) | 43 | (4) | 53 | (4) |
| 4 | (4) | 14 | (1) | 24 | (2) | 34 | (4) | 44 | (2) | 54 | (2) |
| 5 | (4) | 15 | (3) | 25 | (1) | 35 | (3) | 45 | (1) | | |
| 6 | (3) | 16 | (2) | 26 | (3) | 36 | (2) | 46 | (4) | | |
| 7 | (3) | 17 | (4) | 27 | (1) | 37 | (3) | 47 | (3) | | |
| 8 | (1) | 18 | (2) | 28 | (4) | 38 | (1) | 48 | (4) | | |
| 9 | (2) | 19 | (1) | 29 | (3) | 39 | (4) | 49 | (2) | | |
| 10 | (1) | 20 | (4) | 30 | (4) | 40 | (1) | 50 | (1) | | |

www.kalvinews.com

வகுப்பு - 8 - வரலாறு

## 4. மக்களின் புரட்சி

தொகுப்பு:

திரு.ஜெ.மாரையன், M.A., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),
ஊ.ஒ.ந.நி.பள்ளி, மத்திப்பட்டி,
கரூர் மாவட்டம்.

மேம்பாடு:

திரு.மு.மாரியாப்பிள்ளை,M.A.,B.Ed.,M.Phil.,Ph.D
பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
கச்சிராயப்பாளையம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

### முக்கிய குறிப்புகள்

- 1857 ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின் நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நிலையைப் பாதிக்கும் வகையில் ஆங்கிலேயர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.

**பாளையங்களின் தோற்றம்:**

- 1929- ல் விஸ்வநாதர் மதுரை நாயக்கர் ஆனார்
- 1529 ஆம் ஆண்டு விஸ்வநாதர் தனது அமைச்சர் அரியநாதருடன் கலந்தாலோசித்து பாளைக்காரர் முறையை ஏற்படுத்தினார்.
- பாளையக்காரர்கள் தாங்கள் வசூலித்த வரிப்பணத்தில் மூன்றில் ஒரு பங்கு (1/3) - **மதுரை நாயக்கருக்கும்**, அடுத்த மூன்றில் ஒரு பங்கு (1/3) - **இராணுவச் செலவிற்கும்** கொடுத்து விட்டு மீதியைத் தங்கள் சொந்த செலவிற்கு வைத்துக்கொண்டனர்

**தென்னிந்தியாவில் தொடக்ககால புரட்சிகள்**:

**பாளையக்காரர்களின் புரட்சி:**

- பாளையக்காரர்களிடையே இரண்டு பாளையங்கள் (முகாம்கள்) இருந்தன
  1. மேற்கு பாளையம்
  2. கிழக்கு பாளையம்
- கிழக்குப் பாளையங்களில் இருந்த நாயக்கர்கள், கட்டபொம்மனின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர்
- மேற்கு பாளையம் - பூலித்தேவரின் கீழ் ஆட்சி செய்தனர்
- ஆங்கிலேய அதிகாரம் பாளையக்காரர்களின் மீது செலுத்தப்பட காரணமாக இருந்தது 1792 - **கர்நாடக உடன்படிக்கை**
- இந்த உடன்படிக்கையின்படி ஆங்கிலேயர்கள் வரி வசூல் செய்யும் உரிமையை பெற்றனர்.
- அதன் விளைவாக பாளையக்காரர்களின் புரட்சி வெடித்தது.

**பூலித் தேவர்:**

- ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாட்டின் முன்னோடியாக இருந்தவர் பூலித்தேவர் ஆவார்.
- இவர் திருநெல்வேலியின் அருகிலிருந்த **நெற்கட்டும் செவ்வல்** என்ற பாளையத்தின் பாளையக்காரர் ஆவார்.

www.kalvinews.com

- இந்தியாவில், ஆங்கிலேயருடன் போரிட்டு, அவர்களைத் தோற்கடித்த முதல் இந்திய மன்னர் பூலித் தேவரே ஆவார்.
- 1759 - ல் யூசுப்கான் தலைமையிலான ஆற்காடு நவாப் படைகள் நெற்கட்டும் செவ்வலைத் தாக்கின.
- 1767 **பூலித்தேவர் கேப்டன் கேம்பெல் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்**

**வீர பாண்டிய கட்டபொம்மன்:**

- கட்டபொம்மனின் முன்னோர்கள் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள்
- வீரபாண்டியபுரத்தை ஆட்சி செய்தவர் ஜெகவீர பாண்டிய கட்டபொம்மன்
- பாண்டியர்களின் கீழ் நில மனிய அடிப்படையில் பாஞ்சாலங்குறிச்சியை ஆட்சி செய்த வீரபாண்டிய கட்டபொம்மன் பின்னர் நாயக்கர்களின் ஆட்சியில் பாளையக்காரரானார்
- பாஞ்சாலங்குறிச்சியை தலைநகராக கொண்ட வீரபாண்டியபுரத்தை கட்டபொம்மன் ஆட்சி செய்தார்.
- வீரபாண்டிய கட்டபொம்மனின் சகோதரர்கள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா ஆவர்.
- **ஆற்காடு நவாப்:**
- விஜய நகர பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் முகலாயர்கள் தெற்கில் தங்கள் மேலாண்மையை நிறுவினர்.
- கர்நாடகாவில் நவாப் முகலாயர்களின் பிரதிநிதியாகச் செயல்பட்டார்.
- பாஞ்சாலக் குறிச்சி பாளையமும் நவாப்பின் ஆளுகைக்கு கொண்டுவரப்பட்டு கப்பம்(வரி) கட்டப் பணிக்கப்பட்டது.
- ஆனால், 1792இல் கர்நாடக உடன்படிக்கையின்படி ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி, வரி வசூல் செய்யும் உரிமையை பெற்றது.
- கப்பம் வசூலித்ததே கட்டபொம்மனுக்கும், ஆங்கிலேயருக்கும் இடையே மோதலுக்கான முதன்மைக் காரணமானது.
- சூழ்ச்சியால் கைது செய்யப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் அக்டோபர் 17, 1799 ஆம் ஆண்டு கயத்தாறு என்ற இடத்தில் தூக்கில் இடப்பட்டார்.
- **நாகலாபுரத்தில்** சிவசுப்பிரமணியம் தூக்கிலிடப்பட்டார்

**கட்டபொம்மன் - ஜாக்சன் சந்திப்பு:**

- 1798 இல் கட்டபொம்மன் தனது அமைச்சர் **சிவசுப்பிரமணியத்துடன்** இராமநாதபுரத்தில் கலெக்டர் ஜாக்சனை சந்தித்தார்.
- கட்டபொம்மனை சரணடைய ஆணையிட்ட சென்னை கவுன்சிலின் கவர்னர் **எட்வர்டு கிளைவ்.**
- கலெக்டர் ஜாக்சனுக்கு பிறகு கலெக்டராக S.R. **லூசிங்டன்** நியமிக்கப்பட்டார்

**வேலு நாச்சியார்:**

- சிவகங்கையின் ராணி வேலு நாச்சியார்
- வேலு நாச்சியாரின் கணவர் ராஜா முத்து வடுகநாதர்.
- 1772 இல் (காளையார் கோவில் போர்) ஆற்காடு நவாப் மற்றும் பிரிட்டிஷ் படைகள் சிவகங்கையின்மீது போர் தொடுத்து,முத்து வடுகநாதரை கொன்றனர்.
- வேலு நாச்சியாரின் மகள் வெள்ளச்சி.
- வேலுநாச்சியார் தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருடன் தப்பித்து கோபாலநாயக்கர் பாதுகாப்பில் திண்டுக்கல் அருகே விருப்பாச்சியில் வாழ்ந்தார்.

www.kalvinews.com

- தனது நம்பிக்கைக்குரிய படைத்தளபதி குயிலி என்பவர் மூலம் ஆங்கிலேயரின் ஆயுதக் கிடங்கின்மீது தற்கொலைப்படைத் தாக்குதலை நடத்தினார்.
- இந்த காலகட்டத்தில் ஒரு படையை அமைத்து, மருது சகோதரர்களின் உதவியுடன் சிவகங்கையைக் கைப்பற்றி மீண்டும் இராணியாக முடிசூட்டிக் கொண்டார்.
- இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் பெண் வேலுநாச்சியார் ஆவார்.
- **தமிழகத்தின் வீரமங்கை** எனவும், **தென்னிந்தியாவின் ஜான்சிராணி** எனவும் வேலுநாச்சியார் அழைக்கப்படுகிறார்.

**மருது சகோதரர்கள்:**

- பொன்னாத்தாள் மற்றும் மூக்கைய்யா பழனியப்பன் ஆகியோரின் மகன்கள் மருது சகோதரர்கள் ஆவார்கள்.
- மூத்த சகோதரர் பெரிய மருது எனவும் இளைய சகோதரர் சின்ன மருது எனவும் அழைக்கப்பட்டார்கள்.
- பெரிய மருது, **வெள்ளை மருது** எனவும் அழைக்கப்பட்டார்
- சிவகங்கையின் மன்னனாக பெரிய மருது அரியணையில் அமர்ந்தார், இவரின் ஆலோசகராக சின்ன மருது செயல்பட்டார்.
- ஆங்கிலேயருக்கு எதிரான தீவிர நடவடிக்கை காரணமாக "சிவகங்கைச் சிங்கம்" என சின்ன மருது அழைக்கப்பட்டார்.
- பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியாவில் மருது சகோதரர்களால் ஆங்கிலேயர்களுக்கெதிரான கிளர்ச்சி நடைபெற்றது.

**மோதலுக்கான காரணங்கள்:**

- கட்டபொம்மனின் இறப்பிற்குப்பின், அவருடைய சகோதரர் ஊமைத்துரையும் மற்றவர்களும் சிவகங்கைக்குத் தப்பினர். அங்கு அவர்களுக்கு மருது சகோதரர்கள் பாதுகாப்பளித்தனர்.
- மேலும், சிவகங்கை வியாபாரிகள், தங்களது உள்நாட்டு கொள்கையில் கம்பெனியின் தலையீட்டை விரும்பவில்லை.
- இந்த இரண்டு காரணங்களுக்காகவே, கம்பெனி, சிவகங்கைக்கு எதிராக போர் புரிந்தது.

**தென்னிந்தியக் கிளர்ச்சி (1800 - 1801):**

- கர்னல் அக்னியூ மற்றும் கர்னல் இன்ஸ் ஆகியோர் மருது சகோதரர்களுக்கு எதிராகப் படை நடத்திச் சென்றனர்.
- சிவகங்கையின் மருது சகோதரர்கள், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரளவர்மன், மைசூரின் கிருஷ்ணப்ப நாயக்கர் மற்றும் துண்டாஜி உள்ளிட்டோர் அடங்கிய கூட்டமைப்பால் போர் தொடங்கப்பட்டது.
- இக்கூட்டமைப்பிற்கு எதிராக ஆங்கிலேயர் போரை அறிவித்தனர்.

**திருச்சிராப்பள்ளி பிரகடனம் (1801):**

- 1801 ஆம் ஆண்டு மருது சகோதரர்கள் திருச்சிராப்பள்ளி பிரகடனம் என்றழைக்கப்பட்ட சுதந்திரப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர்.
- சின்னமருது ஆங்கிலேயப் படைக்கு எதிராக 22,000 வீரர்களை திரட்டினார்
- '**தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் கூட்டமைப்பு**' வெளியிட்ட பிரகடனம் '**திருச்சிராப்பள்ளி அறிக்கை**' என அழைக்கப்பட்டது

www.kalvinews.com

**ஆங்கிலேயர் சிவகங்கையை இணைத்தல்**

- கிளர்ச்சி தோல்வியுற்றதால், 1801 இல் சிவகங்கையை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர்.
- 1801 அக்டோபர் 24 இல் மருது சகோதரர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர்
- 1801 நவம்பர் 16 ஆம் நாள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா **பாஞ்சாலங்குறிச்சியில்** தூக்கிலிட்டப்பட்டனர்.
- மேலும் 73 கிளர்ச்சியாளர்கள் மலாயாவின் பினாங்கிற்கு (வேல்ஸ் இளவரசர் தீவு என பின்னாளில் அழைக்கப்பட்டது) நாடு கடத்தப்பட்டனர்.
- 1800 - 1801 ஆம் ஆணடு கிளர்ச்சி **'இரண்டாவது பாளையக்காரர் போர்'** என்று ஆங்கில ஆவணங்கள் கூறுகிறது.
- 1801 ஜூலை 31 இல் செய்துகொள்ளப்பட்ட கர்நாடக உடன்படிக்கையின்படி தமிழ்நாட்டின்மீது ஆங்கிலேயர் நேரடி கட்டுப்பாட்டைப் பெற்றனர். இதனால், பாளையக்காரர் முறை நீக்கப்பட்டது.

**தீரன் சின்னமலை:**

- ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே உள்ள மேலப்பாளையத்தில் பிறந்தார்
- இவரின் இயற்பெயர் தீர்த்தகிரி
- இவர் கொங்குநாட்டு பாளையக்காரர் எனவும் அழைக்கப்படுகிறார்
- கொங்கு நாடு என்பது சேலம், கோவை, கரூர், திண்டுக்கல் பகுதியை உள்ளடக்கியது
- தீரன் சின்னமலை பிரெஞ்சு இராணுவத்தின் நவீன போர்முறை பயிற்சிப் பெற்று இருந்தார்.
- இவர் காவேரி, ஊடாநிலை, அரச்சலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில், கொரில்லா போர் முறையில் ஆங்கிலப் படைகளை இவர் தோற்கடித்தார்.
- ஆங்கிலேயரைத் தொடர்ந்து எதித்து போராட ஓடாநிலையில் கோட்டை ஒன்றைக் கட்டினார்
- தீரன் சின்னமலையின் சமையற்காரர் நல்லப்பன் என்பவரால் காட்டிக் கொடுக்கப்பட்டதால்,1805 - ல் சங்ககிரி கோட்டையில் இவர் தூக்கிலிடப்பட்டார்
- 1801 ஜூலை 31 இல் செய்துகொள்ளப்பட்ட 'கர்நாடக உடன்படிக்கையின்படி தமிழ்நாட்டில் **'பாளையக்காரர் முறை'** நீக்கப்பட்டது
- மூன்றாம் மற்றும் நான்காம் மைசூர் போருக்குப் பிறகு **'கொங்குநாடு'** முழுவதும் ஆங்கிலேயரின் வசமானது

**வேலூர் கலகம்:**

- 1806 ஆம் ஆண்டு வேலூர் கலகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 1857- ஆம் ஆண்டு இந்தியாவில் பெரும் புரட்சி ஏற்பட்டது.
- தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் சந்திப்பு மையம் வேலூர் கோட்டை
- 1803 இல் சென்னை மாகாண கவர்னராக வில்லியம் காவெண்டிங் பெண்டிங் ஆனார்
- அவரது காலத்தில்(1805-06) சில கட்டுப்பாடுகள் இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைப் பின்பற்ற வேண்டுமென சென்னை மாகாண படைத் தளபதி சர் ஜான் கிரடாக் என்பவரால் இராணுவ வீரர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- வேலூர் புரட்சி நடைபெற்ற போது சென்னை மாகாண கவர்னராக இருந்தவர் **வில்லியம்**
-
-
-

www.kalvinews.com

- **பெண்டிங் பிரபு**

**கலகத்திற்கான காரணங்கள்:**

- கடுமையான கட்டுப்பாடுகள், புதிய ஆயுதங்கள், புதிய முறைகள் மற்றும் சீருடைகள் அனைத்தும் சிப்பாய்களுக்கு புதிதாக இருந்தன.
- தாடி மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக்கொள்ள சிப்பாய்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
- சமய அடையாளத்தை நெற்றியில் அணிதல், காதுகளில் வளையம்(கடுக்கண்) அணிதல் ஆகியன தடை செய்யப்பட்டன.
- ஆங்கிலேயர்கள், இந்திய சிப்பாய்களை தாழ்வாக நடத்தியதோடு மட்டுமல்லாமல் சிப்பாய்களிடையே இன பாரபட்சமும் காட்டினர்.

**உடனடிக் காரணம்:**

- தளபதி **அக்னியூ** ஜுன் 1806 இராணுவத்தில் சிலுவைச் சின்னத்துடன் கூடிய **'புதிய தலைப்பாகையை'** அறிமுகப்படுத்தினார்.
- இந்து மற்றும் முஸ்லீம் வீரர்கள், ஒன்றாக இதனை எதிர்த்தனர்.

**கலகத்தின் போக்கு:**

- ஜுலை 10, 1806 இல் முதலாவது மற்றும் 23 வது படைப்பிரிவுகளைச் சார்ந்த இந்திய சிப்பாய்களால் **வேலூர் கலகம்** தோன்றியது
- படையை வழிநடத்திய கர்னல் பாங்கோர்ட் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு முதல் பலியானார்.
- கிளர்ச்சியாளர்கள் பதே ஹைதரை தங்களின் புதிய ஆட்சியாளராக அறிவித்தனர்.

**கலகம் அடக்கப்படுதல்:**

- வேலூர் கலகத்தை அடக்கியவர் **கர்னல் கில்லெஸ்பி**
- கலகத்தில் சுமார் 113 ஐரோப்பியர்கள் மற்றும் 350 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.
- ஆனால் குறுகிய காலத்திற்குள் கலகம் அடக்கப்பட்டது.
- **வேலூர் கலகத்தின் விளைவுகள்:**
- புதிய முறைகள் மற்றும் சீருடை ஒழுங்கு முறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.
- முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திப்புவின் குடும்பத்தினர் வேலூரிலிருந்து கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.
- **வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் பணி நீக்கம் செய்யப்பட்டார்.**
- **கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்:**
- இந்தியப்படை வீரர்களை வழிநடத்த சரியான தலைமையில்லை.
- கலகம் மிகச் சரியாக வடிவமைக்கப்படவில்லை.
- ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்தியர்களின் ஒற்றுமையில் பிளவை ஏற்படுத்தியது.
- 1806 **ல் நடைபெற்ற வேலூர் கலகம்** 1857 ஆம் ஆண்டு நடைபெற்ற '**முதல் இந்திய சுதந்திர போரின் முன்னோடி**' என வரலாற்றாசிரியர் V.D.சாவர்க்கர் குறிப்பிடுகிறார்.

**பெரும் புரட்சி (1857)**

- 1857 ஆம் ஆண்டு புரட்சியானது காலனி ஆட்சியினுடைய பண்பு மற்றும் கொள்கையின் விளைவாக உருவானதாகும்.

www.kalvinews.com

**புரட்சிக்கான காரணங்கள்:**

- ஆங்கிலேயரின் பொருளாதார சுரண்டல் கொள்கை
- வாரிசு இழப்புக் கொள்கை
- துணைப்படை திட்டம்
- முறையற்ற முறையில் அயோத்தியை இணைத்தது.
- கிறிஸ்தவ சமய பரப்புக் குழுக்களின் மதமாற்ற நடவடிக்கைகள்
- இந்தியர்களின் கலாச்சாரத்தில் தலையிடல்
- இந்திய சிப்பாய்களை ஆங்கிலேய அதிகாரிகள் தாழ்வாகவும், அவமரியாதையாகவும் நடத்தியது.
- ஆங்கிலேய வீரர்களைக் காட்டிலும் இந்திய வீரர்கள் குறைவான ஊதியம் பெற்றது.
- இராணுவ பதவி உயர்வுகள் அனைத்தும் இந்திய வீரர்களுக்கு மறுக்கப்பட்டு ஆங்கிலேய வீரர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டன.

**உடனடிக் காரணம்:**

- இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டு ரக துப்பாக்கியே உடனடிக் காரணமாக அமைந்தது.
- (பசு மற்றும் பன்றியின்) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் புரட்சிக்கு அடிப்படை மற்றும் உடனடிக் காரணமாக அமைந்தது.

**கலகத்தின் தோற்றம்:**

- 1857 மார்ச் 29 ஆம் நாள் **பாரக்பூரில் மங்கள் பாண்டே** முதன் முதலாக கொழுப்பு தடவப்பட்ட தோட்டக்களை தொட மறுத்து தனது உயரதிகாரியைச் சுட்டுக் கொன்றார்.
- அதனால், அவர் கைது செய்யப்பட்டு, விசாரணைக்குப்பின் தூக்கிலிடப்பட்டார்.
- இச்செய்தி பரவியதால், பல சிப்பாய்கள் புரட்சியில் ஈடுபட்டனர்.

**புரட்சியின் போக்கு:**

- 1857 மே 10 ஆம் நாள் **மீரட்டில்** 3 ஆம் குதிரைப்படையைச் சேர்ந்த சிப்பாய்கள் புரட்சியை துவங்கினர்.
- ஆங்கிலேய அலுவலர்களைக் கொலை செய்ததுடன் டெல்லிக்கும் விரைந்தனர்.
- டெல்லிக்கு வந்த சிப்பாய்கள் மே 11 ஆம் நாள் இரண்டாம் பகதூர் ஷாவை இந்தியாவின் பேரரசராக அறிவித்தனர்.
- இதன்மூலம் டெல்லி பெரும் புரட்சியின் மையமாகவும், பகதூர்ஷா அதன் அடையாளமாகவும் விளங்கினார்.
- லக்னோ, கான்பூர், ஜான்சி, பரெய்லி, பீகார், பைசாபாத் மற்றும் வட இந்தியாவின் பல பகுதிகளில் புரட்சி நடைபெற்றது.

**கலகம் அடக்கப்படுதல்:**

- 1857 செப்டம்பர் 20 இல் படைத் தளபதி நிக்கல்சனால் டெல்லி மீண்டும் கைப்பற்றப்பட்டது.
- இரண்டாம் பகதூர்ஷா ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார்.
- 1859 ஆம் ஆண்டின் இறுதியில் பிரிட்டிஷ் அதிகாரம் மீண்டும் இந்தியா முழுவதும் நிறுவப்பட்டது.

www.kalvinews.com

| கலகம் நடைபெற்ற இடங்கள் | கலகத்தில் ஈடுபட்ட இந்திய தலைவர்கள் | கலகத்தை அடக்கிய ஆங்கிலேய அதிகாரிகள் |
|---|---|---|
| டெல்லி | இரண்டாம் பகதூர்ஷா | ஜான் நிக்கல்சன் |
| லக்னோ | பேகம் ஹஸ்ரத் மகால் | ஹென்றி லாரன்ஸ் |
| கான்பூர் | நானா சாகிப் | சர்.காலின் கேம்பெல் |
| ஜான்சி மற்றும் குவாலியர் | ராணி லட்சுபாய், தாந்தியா தோபே | ஜெனரல் ஹக்ரோஸ் |
| பரெய்லி | கான் பகதூர் கான் | சர்.காலின் கேம்பெல் |
| பீகார் | கன்வர் சிங் | வில்லியம் டைலர் |

**கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்:**

- சரியான ஒருங்கிணைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு, பொதுவான திட்டம், மையப்படுத்தப்பட்ட தலைமை, நவீன ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை புரட்சியாளர்களிடையே இல்லை
- கலகத்தில் ஈடுபட்டவர்கள், ஆங்கிலேய படைத் தளபதிகளுக்கு இணையானவர்களாக இல்லை.
- வங்காளம், பம்பாய், சென்னை, மேற்கு பஞ்சாப் மற்றும் இராஜபுதனம் ஆகிய பகுதிகள் புரட்சியில் கலந்து கொள்ளவில்லை.
- நவீனக் கல்வி கற்ற இந்தியர்கள் ஆங்கில ஆட்சி மட்டுமே இந்திய சமுதாயத்தை சீர்திருத்தி நவீனப்படுத்த முடியும் என நம்பினர். எனவே, அவர்கள் புரட்சியை ஆதரிக்கவில்லை.
- சீக்கியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் கூர்க்கா படைப்பிரிவினர் ஆகியோர்களின் விசுவாசத்தை ஆங்கிலேயர் பெற்றனர். புரட்சியை அடக்குவதில் கூர்க்கப் படையினர் ஆங்கிலேயருக்கு உதவினர்.

**கலகத்தின் விளைவுகள்:**

- நிர்வாக முறை மற்றும் அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட வழிகோலியது.
- 1858 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விக்டோரியா மாகாராணியின் பேரறிக்கையின் மூலம் இந்தியாவின் நிர்வாகம், கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து ஆங்கிலேய (பாராளுமன்றத்திற்கு) அரசுக்கு மாற்றப்பட்டது.
- கவர்னர் ஜெனரல், அதன் பிறகு வைசிராய் என அழைக்கப்பட்டார்.
- இயக்குநர் குழு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் நீக்கப்பட்டு, இந்திய விவகாரங்களை மேற்பார்வையிட செயலரின் தலைமையில் 15 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபை (கவுன்சில்) ஏற்படுத்தப்பட்டது.
- அதிகப்படியான ஆங்கிலேயர்கள் இராணுவத்தில் பணியமர்த்தப்பட்டனர்.
- பிரித்தல் மற்றும் எதிர் தாக்குதல் என்ற கொள்கை ஆங்கிலேய கொள்கையில் ஆதிக்கம் செலுத்தியது.
- **1857 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் புரட்சியை ஒரு திட்டமிடப்பட்ட தேசிய சுதந்திர போர் என்று சவார்க்கர்** கூறினார்.
- 1857 ஆம் ஆண்டு புரட்சியின் தலைவர்களில் இராணி லட்சுமிபாய் மிகச்சிறந்த மற்றும் மிகத்துணிச்சலான தலைவர் ஆவார்.

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்:**

1. பிளாசிப்போர் நடைபெற்ற ஆண்டு _______.
   (1) 1856 (2) 1857 (3) 1855 (4) 1858

2. ஆங்கிலேயரை எதிர்த்த முதல் இந்திய மன்னன் _______.
   (1) தீரன் சின்னமலை (2) மருது சகோதரர்கள்
   (3) கட்டபொம்மன் (4) பூலித்தேவன்

3. நாடு _______ பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது.
   (1) 72 (2) 73 (3) 71 (4) 70

4. தமிழ் நாட்டு அரசியலில் பாளையக்காரர்களின் நூற்றாண்டு _______.
   (1) 16 மற்றும் 17 (2) 15 மற்றும் 16
   (3) 17 மற்றும் 18 (4) 18 மற்றும் 19

5. கர்நாடக உடன்படிக்கை நடைப்பெற்ற ஆண்டு _______.
   (1) 1792 (2) 1793 (3) 1791 (4) 1794

6. வீரபாண்டிய கட்டபொம்மன் ஆட்சி செய்த பகுதி _______.
   (1) திருநெல்வேலி (2) அந்தநல்லூர்
   (3) பாஞ்சாலங்குறிச்சி (4) செவல்

7. கட்டபொம்மனுக்கும், ஆங்கிலேயருக்கும் மோதலுக்கான முதன்மைக் காரணம் _______.
   (1) பஞ்சம் (2) கப்பம் (3) ராணுவ செலவு (4) கிளர்ச்சி

8. பாளைக்காரர் முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு _______.
   (1) 1520 (2) 1525 (3) 1527 (4) 1529

9. காலின் ஜாக்சன் எந்த மாவட்டத்தின் ஆட்சியாளராக இருந்தார்?
   (1) சென்னை (2) மதுரை (3) திருச்சி (4) இராமநாதபுரம்

10. கட்டபொம்மனின் அமைச்சர் _______ ஆவார்.
    (1) யூசப்கான் (2) கிருஷ்ணப்ப நாயக்கர்
    (3) சிவசுப்பிரமணியம் (4) கோபால நாயக்கர்

11. கட்டபொம்மன் தப்பிக்க உதவி செய்த மன்னன் _______.
    (1) மருது சகோதரர்கள் (2) ஊமைத்துரை
    (3) தீரன் சின்னமலை (4) பூலித்தேவன்

12. _______ ஆங்கிலேய கம்பெனிக்கு கப்பம் கட்டுபவராக இருந்தனர்.
    (1) சிவகிரி பாளையக்காரர்கள் (2) கிழக்கு பாளையக்காரர்கள்
    (3) சிவகங்கை பாளையக்காரர்கள் (4) மேற்கு பாளையக்காரர்கள்

13. கட்டபொம்மனை கைது செய்த மன்னன் _______.
    (1) சிவசுப்பிரமணியம் (2) தொண்டைமான்
    (3) ஜாக்சன் (4) லூஹிங்டன்

www.kalvinews.com

14. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் _______.
(1) சிவகங்கை (2) கயத்தாரு
(3) பாஞ்சாலங்குறிச்சி (4) திருநெல்வேலி

15. கட்டபொம்மனின் முன்னோர்கள் _______ பகுதியை சார்ந்தவர்கள்.
(1) தமிழ்நாடு (2) கர்நாடகா (3) புதுச்சேரி (4) ஆந்திரா

16. வேலுநாச்சியார் ஆட்சி செய்த பகுதி எது?
(1) விருப்பாச்சி (2) சிவகிரி (3) திண்டுக்கல் (4) சிவகங்கை

17. வேலுநாச்சியாரின் படைத்தளபதி _______ ஆவார்.
(1) மங்கை (2) வெள்ளச்சி (3) குயிலி (4) ராணி

18. வேலுநாச்சியாருக்கு உதவி செய்த மன்னன் _______.
(1) பூலித்தேவன் (2) மருது சகோதரர்கள்
(3) தீரன் சின்னமலை (4) ஊமைத்துரை

19. தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்டவர் _______.
(1) குயிலி (2) மங்கை (3) வெள்ளச்சி (4) வேலு நாச்சியார்

20. _______ ஆம் வயதில் வேலு நாச்சியார் திருமணம் செய்து கொண்டார்.
(1) 16 (2) 15 (3) 17 (4) 18

21. சிவகங்கையின் சிங்கம் என்று அழைக்கப்பட்டவர் யார்?
(1) சின்ன மருது (2) பெரிய மருது
(3) வேலு நாச்சியார் (4) கோபால நாயக்கர்

22. _______ தலைமையில் ஆங்கிலேயப் படைகள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை கைப்பற்றியது.
(1) ஜாக்சன் (2) அக்னியூ (3) மெக்காலே (4) எட்வர்டு

23. செவத்தையாவின் சகோதரர் _______ ஆவார்.
(1) தீரன் சின்னமலை (2) கட்டபொம்மன் (3) பூலித்தேவன் (4) பெரியமருது

24. மருது சகோதர்களுக்கு எதிராக படை நடத்திச் சென்றவர் _______.
(1) இராபர்ட் (2) காலின் (3) மெக்காலே (4) கர்னல்

25. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தை வெளியிட்டவர் _______.
(1) புலித்தேவன் (2) மருது சகோதரர்கள்
(3) தீரன் சின்னமலை (4) கட்டபொம்மன்

26. சின்ன மருது ஆங்கில படைக்கு எதிராக _______ வீரர்களை திரட்டினார்.
(1) 23000 (2) 22000 (3) 25000 (4) 20000

27. மருது சகோதர்கள் தூக்கிலிடப்பட்ட இடம் _______.
(1) திருப்பத்தூர் (2) திருச்சி
(3) பாஞ்சாலங்குறிச்சி (4) திண்டுக்கல்

www.kalvinews.com

28. _______ என்பவரின் இயற்பெயர் தீர்த்தகிரி.
(1) சின்ன மருது (2) பெரியமருது (3) ஊமைத்துரை (4) தீரன் சின்னமலை

29. தீரன் சின்னமலை தங்கி இருந்த இடம் _______.
(1) செவ்வயல் (2) விருப்பாச்சி (3) ஓடாநிலை (4) அரச்சலூர்

30. கொரில்லா போர் முறையில் போரிட்ட மன்னன் _______.
(1) கட்டபொம்மன் (2) ஊமைத்துரை
(3) மருது சகோதரர்கள் (4) தீரன்சின்னமலை

31. தீரன் சின்னமலை தூக்கிலிடப்பட்ட இடம் _______.
(1) சங்ககிரி (2) திருப்பத்தூர்
(3) ஓடாநிலை (4) கோயம்புத்தூர்

32. தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் சந்திப்பு மையமாக திகழ்ந்தது _______.
(1) சங்ககிரி கோட்டை (2) வேலூர் கோட்டை
(3) திருச்சி மலைக்கோட்டை (4) சதுரகிரி கோட்டை

33. திப்புவின் மூத்த மகன் _______.
(1) பதே ஹைதர் (2) ஹைதர் அலி (3) கர்னல் (4) சவார்க்கர்

34. _______ சின்னம் திப்புவின் கொடியில் இருந்தது.
(1) மீன் (2) புலி (3) வில் (4) சேவல்

35. 1806 - ல் நடைபெற்ற வேலூர் கலகத்தை “முதல் இந்திய சுதந்திர போர்” என்று கூறியவர் _______.
(1) கில்லெஸ்பி (2) வில்லியம் (3) காவெண்டிஷ் (4) சவார்க்கர்

36. வேலூர் கலகம் நடைபெற்ற ஆண்டு _______.
(1) 1805 (2) 1804 (3) 1806 (4) 1807

37. முதல் இந்திய சுதந்திர போர் நடைபெற்ற ஆண்டு _______.
(1) 1855 (2) 1854 (3) 1856 (4) 1857

38. இராணி லட்சுமிபாய் _______ என்பவருடன் இணைந்து ஆங்கிலேயர்களை எதிர்த்தார்.
(1) நானா சாகிப் (2) தாந்தியா தோபே (3) பகதூர்ஷா (4) கன்வர் சிங்

39. பிரிட்டிஷ் அதிகாரம் மீண்டும் இந்தியாவில் நிறுவப்பட்ட ஆண்டு _______.
(1) 1857 (2) 1858 (3) 1859 (4) 1856

40. இரண்டாம் பகதூர்ஷா _______ நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டார்.
(1) பீகார் (2) லக்னோ (3) டெல்லி (4) ரங்கூன்

41. _______ போரில் இராணி லட்சுமிபாய் கொல்லப்பட்டார்.
(1) ஜான்சி (2) குவாலியர் (3) கான்பூர் (4) ரங்கூன்

42. இரண்டாம் பகதூர்ஷா இறந்த வருடம் _______.
(1) 1858 (2) 1860 (3) 1862 (4) 1864

www.kalvinews.com

43. வேலூர் கலகத்தின் விளைவாக பதவி நீக்கம் செய்யப்பட்டவர் _______.
(1) அக்னி யூ (2) காவெண்டிஷ் (3) கில்லெஸ்பி (4) இன்ஸ்

44. கானிங் பிரபு புரட்சியை அடக்க _______ ல் இருந்து படைகளை வரவழைத்தார்.
(1) கனடா (2) கல்கத்தா (3) பர்மா (4) பீகார்

45. நேபாளத்தில் மறைந்து வாழ்ந்த மன்னன் _______.
(1) சாகிப் (2) பகதூர் (3) பகதூர்ஷா (4) ஹஸரத்

46. பீகாரில் நடைபெற்ற கலகத்தை அடக்கிய ஆங்கிலேய அதிகாரி _______.
(1) டைலர் (2) கேம்பெல் (3) லாரன்ஸ் (4) நிக்கல்சன்

47. பகதூர் கான் தலைமையில் _______ இடத்தில் போர் நடைபெற்றது.
(1) கான்பூர் (2) டெல்லி (3) பரெய்லி (4) குவாலியர்

48. ஜெனரல் ஹக்ரோஸுக்கு எதிராக மிகவும் துணிச்சலுடன் போரிட்டவர் _______.
(1) பகதூர் கான் (2) கன்வர் சிங் (3) நானா சாகிப் (4) தாந்தியா தோபே

49. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட நாள் _______.
(1) அக்டோபர் 17 (2) அக்டோபர் 18 (3) நவம்பர் 17 (4) நவம்பர் 18

50. கட்டபொம்மன் சந்தித்த இராமநாதபுரம் கலெக்டரின் பெயர் _______.
(1) எட்வர்டு (2) காலின் ஜாக்சன் (3) சவார்க்கர் (4) லாரன்ஸ்

51. எப்படைப்பிரிவைச் சார்ந்த இந்திய சிப்பாய்கள் வேலூர் கலகத்தை தொடங்கினர்?
(1) 21வது (2) 22வது (3) 23வது (4) 24வது

52. நவீன போர்முறை பயிற்சி பெற்று இருந்த இந்திய மன்னன் _______.
(1) கட்டபொம்மன் (2) பெரிய மருது (3) பூலித்தேவன் (4) தீரன் சின்னமலை

53. வேல்ஸ் இளவரசர் தீவு _______ என அழைக்கப்பட்டது.
(1) அந்தமான் (2) மலாயா (3) இலங்கை (4) லட்சத்தீவு

54. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) பூலித்தேவன் (2) கட்டபொம்மன் (3) தீரன் சின்னமலை (4) வ. உ. சி

55. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) வேலுநாச்சியார் (2) குயிலி (3) வெள்ளச்சி (4) முத்து வடுக நாதர்

56. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) கட்டபொம்மன் (2) தீரன்சின்னமலை (3) ஊமைத்துரை (4) செவத்தையா

57. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) திண்டுக்கல் (2) தஞ்சாவூர் (3) புதுக்கோட்டை (4) எட்டயபுரம்

58. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) கரூர் (2) திண்டுக்கல் (3) சேலம் (4) திருச்சி

www.kalvinews.com

59. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) கர்னல் அக்னியூ
(2) கர்னல் இன்ஸ்
(3) கர்னல் பான்கோர்ட்
(4) கர்னல் கில்லெஸ்பி

60. பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) ஆற்காட்டு நவாப் மற்றும் ஆங்கிலேயரின் கூட்டுப்படைகள் பூலித்தேவரால் திருநெல்வேலியில் தோற்கடிக்கப்பட்டன.

(2) இந்தியாவில் ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாட்டில் முன்னோடியாக இருந்தவர் பூலித்தேவர்.

(3) யூசுப்கான் தலைமையிலான ஆற்காடு நவாபின் படைகளை, பூலித்தேவரால் அந்தநல்லூரில் தோற்கடிக்கப்பட்டன.

(4) கேப்டன் கேம்பெல் என்பவரால் 1767 ஆம் ஆண்டு பூலித்தேவர் தோற்கடிக்கப்பட்டார்.

61. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) 1800 - இல் கட்டபொம்மன் தனது அமைச்சருடன் காலின் ஜாக்சனை சந்தித்தார்

(2) கட்டபொம்மன் தனது அமைச்சருடன் தப்பிக்க உதவி செய்த மன்னன் பூலித்தேவன் ஆவார்.

(3) கட்டபொம்மன் சென்னை கவுன்சிலின் கவர்னர் இராபர்ட் கிளைவுக்கு கடிதம் எழுதினார்.

(4) கட்டபொம்மன் நாட்டில் நிலவும் பஞ்சத்தின் காரணமாக நிலுவைத் தொகையை செலுத்த முடியாது என்று ஜாக்சனிடம் கூறினார்.

62. பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) சிவகங்கையின் இராணி வேலுநாச்சியார்.

(2) வேலுநாச்சியார் தனது 15ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார்.

(3) தமிழர்களால் வேலுநாச்சியார் “வீரமங்கை” என அழைக்கப்பட்டார்.

(4) வேலுநாச்சியார் தனது மகள் வெள்ளச்சியுடன் கோபால நாயக்கர் பாதுகாப்பில் வாழ்ந்தார்.

63. பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) இந்திய சிப்பாய்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் புதிய சீருடைகள் வழங்கப்பட்டன.

(2) இந்திய சிப்பாய்கள் தாடி மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டனர்.

(3) இந்திய சிப்பாய்களின் சமய அடையாளமான நெற்றியில் அணிதல், காதுகளில் வளையம் அணிதல் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

(4) இந்திய சிப்பாய்களை ஆங்கிலேயர்கள் தாழ்வாக நடத்தி, இன பாரபட்சம் காட்டினர்.

64. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) சரியான ஒருங்கிணைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு, ஆகியவை புரட்சியாளர்களிடம் இருந்தது.

(2) ஆங்கில படைத்தளபதிகளுக்கு இணையானவர்களாக புரட்சியாளர்கள் இருந்தனர்.

(3) சீக்கியர், ஆப்கானியர்கள், கூர்க்கர் படைப்பிரிவினர்கள் புரட்சியாளர்களுக்கு உதவினர்.

(4) சிறந்த ஆயுதங்கள், சிறந்த தளபதிகள் புரட்சியாளர்களிடம் இல்லை.

www.kalvinews.com

65. பொருத்துக.

a) 1759 - i) பூலித்தேவர்

b) 1761 - ii) கேம்பெல்

c) 1764 - iii) யூசுப்கான்

d) 1767 - iv) ஆற்காடு நவாப்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (1) | iii | ii | iv | i |
| (2) | ii | i | iii | iv |
| (3) | iii | iv | i | ii |
| (4) | iv | iii | iv | ii |

66. பொருத்துக.

a) வேலுநாச்சியார் - i) மைசூர் புலி

b) தீரன் சின்னமலை - ii) சிவகங்கையின் சிங்கம்

c) சின்ன மருது - iii) கொரில்லா போர்

d) திப்பு சுல்தான் - iv) வீரமங்கை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (1) | iv | iii | ii | i |
| (2) | iv | iii | i | ii |
| (3) | iv | i | iii | ii |
| (4) | i | ii | iii | iv |

67. பொருத்துக.

a) கட்டபொம்மன் - i) சங்ககிரி

b) மருது சகோதரர்கள் - ii) கயத்தாரு

c) தீரன் சின்னமலை - iii) குவாலியர்

d) இலட்சுமிபாய் - iv) திருப்பத்தூர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (1) | ii | i | iii | iv |
| (2) | ii | iv | i | iii |
| (3) | ii | iii | iv | i |
| (4) | i | ii | iv | iii |

68. பொருத்துக.

a) பாளையக்காரர் முறை - i) 1801

b) சுதந்திர பிரகடனம் - ii) 1857

c) முதல் சுதந்திர போர் - iii) 1806

d) வேலூர் கலகம் - iv) 1529

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | iii | ii | i | iv | (2) | ii | i | iv | iii |
| (3) | i | iv | iii | ii | (4) | iv | i | ii | iii |

www.kalvinews.com

69. பொருத்துக.

a) டெல்லி - i) தாந்தியா தோபே

b) கான்பூர் - ii) கன்வர் சிங்

c) குவாலியர் - iii) பகதூர்ஷா

d) பீகார் - iv) நானா சாகிப்

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | iv | iii | ii | I | (2) | i | ii | iii | iv |
| (3) | iii | iv | i | ii | (4) | ii | i | iv | iii |

70. பொருத்துக.

a) லட்சுமிபாய் - i) நிக்கல்சன்

b) பகதூர் கான் - ii) லாரன்ஸ்

c) ஹஸ்ரத் மகால் - iii) கேம்பெல்

d) பகதூர்ஷா - iv) ஹக்ரோஸ்

| | a | b | c | d | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | iv | iii | ii | I | (2) | i | ii | iii | iv |
| (3) | i | iv | iii | ii | (4) | iv | ii | i | ii |

71. தவறான இணையைக் கண்டறி.

(1) கட்டபொம்மன் - வீரபாண்டியபுரம்

(2) தீரன் சின்னமலை - தஞ்சாவூர்

(3) பூலித்தேவன் - நெற்கட்டும் செவ்வல்

(4) பெரிய மருது - சிவகங்கை

72. சரியான இணையைக் கண்டுபிடிக்கவும்.

(1) சுதந்திர பிரகடனம் - 1901

(2) கர்நாடக உடன்படிக்கை - 1794

(3) பிளாசிப்போர் - 1957

(4) பாளையக்காரர் முறை - 1529

73. தவறான இணையைக் கண்டறி.

(1) மருது சகோதரர்கள் - நரிக்குடி

(2) தீரன் சின்னமலை - மேலப்பாளையம்

(3) பூலித்தேவன் - நாகலாபுரம்

(4) கட்டபொம்மன் - வீரபாண்டியபுரம்

74. சரியான இணையைக் கண்டறி.

(1) மைசூர் - கிருஷ்ணப்ப நாயக்கர்

(2) தஞ்சாவூர் - கோபால நாயக்கர்

(3) திண்டுக்கல் - துண்டாஜி

(4) தீரன் சின்னமலை - சிவகங்கை

www.kalvinews.com

75. தவறான இணையைக் கண்டறி.

(1) வேலுநாச்சியார் - வெள்ளச்சி

(2) பொன்னாத்தாள் - மருது சகோதரர்கள்

(3) ஜக்கம்மாள் - கட்டபொம்மன்

(4) நாச்சியார் - பூலித்தேவன்

76. பின்வருவனவற்றை வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

a) செவத்தையா
b) ஜெகவீரபாண்டியன்
c) ஊமைத்துரை
d) கட்டபொம்மன்

(1) d, c, b, a (2) c, a, d, b (3) b, d, c, a (4) a, b, c, d

77. பின்வருவனவற்றை வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

a) கர்நாடக உடன்படிக்கை
b) விக்டோரியா பேரறிக்கை
c) வேலூர் கலகம்
d) சுதந்திர பிரகடனம்

(1) a, b, c, d (2) a, d, c, b (3) a, c, d, b, (4) a, b, d, c

78. பின்வருவனவற்றை வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

a) பாண்டியன்
b) சித்திர புத்திர தேவன்
c) பூலித்தேவன்
d) கோமதி

(1) c, d, b, a (2) d, c, b, a (3) b, a, d, c (4) a, b, c, d

79. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை கண்டுபிடிக்கவும்.

**கூற்று** I: வேலூர் கலகத்தின் விளைவாக வில்லியம் காவெண்டிஸ் பெண்டிங் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

**கூற்று** II: கட்டப்பொம்மனுடன் ஏற்பட்ட மோதலின் விளைவாக கலெக்டர் காலின் ஜாக்சன் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

(1) கூற்று I சரி ஆனால் II தவறு
(2) கூற்று I தவறு ஆனால் II சரி
(3) கூற்று I மற்றும் II சரி
(4) கூற்று I மற்றும் II தவறு

80. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையைக் கண்டுபிடிக்கவும்

**கூற்று** I: கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் வேலூர் புரட்சிக்கு (1857) முக்கிய காரணமாக இருந்தது.

**கூற்று** II: இராணுவப்பதவி உயர்வுகள் ஆங்கிலேய வீரர்களுக்கு மறுக்கப்பட்டு இந்திய வீரர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது.

(1) கூற்று I சரி ஆனால் II தவறு
(2) கூற்று I தவறு ஆனால் II சரி
(3) கூற்று I மற்றும் II சரி
(4) கூற்று I மற்றும் II தவறு

81. 1857இல் இந்திய விடுதலைக்காக ஏற்பட்ட கலகத்தில் பங்குபெற்ற தலைவர் மற்றும் கலகத்தை அடக்கிய ஆங்கிலேய அதிகாரியையும் கண்டறிக. (NMMS-2020-21).

(1) நானா சாகிப், சர் காலின் கேம்பெல்

(2) கன்வர் சிங், ஜான் நிக்கல்சன்

(3) லட்சுமிபாய், ஹென்றி லாரன்ஸ்

(4) இரண்டாம் பகதூர் ஷா, வில்லியம் டைலர்

www.kalvinews.com

## விடைகள்:

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 21 | (1) | 41 | (2) | 61 | (4) | 81 | (1) |
| 2 | (4) | 22 | (3) | 42 | (3) | 62 | (2) | | |
| 3 | (1) | 23 | (2) | 43 | (2) | 63 | (3) | | |
| 4 | (3) | 24 | (4) | 44 | (3) | 64 | (4) | | |
| 5 | (1) | 25 | (2) | 45 | (4) | 65 | (3) | | |
| 6 | (3) | 26 | (3) | 46 | (1) | 66 | (1) | | |
| 7 | (2) | 27 | (1) | 47 | (3) | 67 | (2) | | |
| 8 | (4) | 28 | (4) | 48 | (4) | 68 | (4) | | |
| 9 | (4) | 29 | (3) | 49 | (1) | 69 | (3) | | |
| 10 | (3) | 30 | (4) | 50 | (2) | 70 | (1) | | |
| 11 | (2) | 31 | (1) | 51 | (3) | 71 | (2) | | |
| 12 | (1) | 32 | (2) | 52 | (4) | 72 | (4) | | |
| 13 | (2) | 33 | (1) | 53 | (2) | 73 | (3) | | |
| 14 | (2) | 34 | (2) | 54 | (4) | 74 | (1) | | |
| 15 | (4) | 35 | (4) | 55 | (2) | 75 | (3) | | |
| 16 | (4) | 36 | (3) | 56 | (2) | 76 | (3) | | |
| 17 | (3) | 37 | (4) | 57 | (1) | 77 | (2) | | |
| 18 | (2) | 38 | (2) | 58 | (4) | 78 | (1) | | |
| 19 | (4) | 39 | (3) | 59 | (3) | 79 | (3) | | |
| 20 | (1) | 40 | (4) | 60 | (3) | 80 | (1) | | |

www.kalvinews.com

## வகுப்பு - 8 - வரலாறு

### 5. இந்தியாவில் கல்வி வளர்ச்சி

**தொகுப்பு**
**திருமதி.சு.சுகுணா**, M.A., M.A., M.Ed., M.Phil.
பட்டதாரி ஆசிரியை (சமூக அறிவியல்),
அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
குறிஞ்சிப்பாடி,
கடலூர் மாவட்டம்.

**மேம்பாடு**
**திரு.ர.கண்ணன்** M.Sc., B.Ed..
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
தப்பக்குட்டை,
சேலம் மாவட்டம்.

### முக்கிய குறிப்புகள்

**பண்டைய கால இந்தியாவில் கல்வி**

- அறிவு என்பது மனிதனின் மூன்றாவது கண்.
- வேதம் என்ற சமஸ்கிருத சொல்லுக்கு அறிவு என்று பொருள்.
- கல்வி வழங்கப்பட்ட இடங்கள்: இல்லங்கள், கோவில்கள், பாடசாலைகள், குருகுலங்கள்.
- உயர் படிப்புக்காக - விகாரங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள்.
- பல குருகுலங்கள் முனிவர்கள் பெயரால் அழைக்கப்பட்டன.

**பௌத்த சமய காலத்தில் விகாரங்களும் பல்கலை கழகங்களும்:**

- பண்டைய இந்திய நகரம் - தட்சசீலம் - தற்போது வடமேற்கு பாகிஸ்தானில் உள்ளது. தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதி. 1980 - இல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாக அறிவித்தது. சாணக்கியர், அர்த்த சாஸ்திரத்தை இங்குத் தங்கித் தொகுத்ததாகக் கூறப்படுவது சிறப்பு.
- இடிபாடுகளைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அலெக்சாண்டர் கன்னிங்காம் கண்டுபிடித்தார்.
- இட்சிங் (சீன அறிஞர்)
- மடாலயங்கள் மற்றும் விகாரங்கள் மூலம் பௌத்த அறிஞர்கள் கல்விப் பணியை மேற்கொண்டனர்.
- தட்சசீலம், நாளந்தா, வல்லபி, விக்கிரமசீலா, ஓடண்டாபுரி, ஜகத்தாலா - பல்கலைக்கழகங்கள்.
- நாளந்தா பல்கலைக்கழகம், தற்போதைய பீகாரில் உள்ள **ராஜகிருகத்தில்** அமைந்துள்ளது.
- நாளந்தா மகா விகாராவின் இடிபாடுகளை ஐ.நா. சபையின் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் உலகப் பாரம்பரியத் தளமாக அறிவித்துள்ளது.

**இடைக்கால இந்தியாவில் கல்வி:**

- முஸ்லிம் ஆட்சியாளர்கள் நிறுவிய தொடக்கப்பள்ளிகள் - மக்தப் (Maktab), இடைநிலைப் பள்ளிகள் - மதரசா (Madrasa).
- டெல்லியில் ஒரு மதரசாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் - இல்துத்மிஷ்.
- ஜெய்ப்பூரைச் சேர்ந்த ராஜா ஜெய்சிங் அறிவியல் பாடங்களின் கற்றலை ஊக்குவித்தார்.

- டெல்லி - கியாசுதீன் மதரசா.
- ஷாஜகானாபாத் - மௌலானா சத்ருதீன் மதரஸா.
- ஸ்ரீரங்கம் - அஹோபில மடம்.

**நவீன கல்வி முறை**

- இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பியர் - போர்ச்சுகீசியர்கள்.
- இயேசு சங்கத்தின் உறுப்பினரான பிரான்சிஸ் சேவியர், கொச்சியில் ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார்.
- 1575 இல், கோவாவில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரியில் கிருத்துவம், தர்க்கம், இலக்கணம், இசை ஆகியன கற்பிக்கப்பட்டன.
- ஜான் கிர்னாண்டர் - இவாஞ்சிலிஸ்டிக் அமைப்பு - கிருத்தவர் அல்லாத குழந்தைகளுக்குக் கல்வியை அறிமுகப்படுத்திய முதல் சமயப் பரப்பு அமைப்பு ஆகும்.
- 1812 ஆம் ஆண்டு - டாக்டர் C.S.ஜான் தரங்கம்பாடியில், 20 இலவசப் பள்ளிகளை நிறுவினார்.
- ஜெர்மன் பிஷப்புகளான சீகன்பால்கு மற்றும் புளுட்சோ, திருவிதாங்கூரில் பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கல்லூரியைத் தொடங்கினார்கள்.
- கி.பி. 1600 - ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி வருகை.
- மதராஸ், பனாரஸ் ஆகிய இடங்களில் சமஸ்கிருதக் கல்லூரிகள் துவங்கப்பட்டன.
- கல்கத்தாவின் முதல் பேராயர் - டாக்டர் மிடில்டன். இவர் கல்கத்தாவில் மிஷினரி கல்லூரியைத் தொடங்கினார்.
- மவுண்ட்ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் - **வட்டார மொழிக் கல்வி**யினைத் தீவிரமாக முன்மொழிந்தார்.

**ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்பம் முதல் 1813 வரையிலான காலம்:**

- 1813-ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் - இந்தியாவில் கல்வியை மேம்படுத்துவதற்காக ஆண்டுதோறும் 1 லட்சம் வழங்க ஏற்பாடு செய்தது.

**1813 முதல் 1853 வரையிலான காலம்:**

- 1835 - மெக்காலேயின் கல்விக் குறிப்பு
- 1854 - **உட்ஸ் கல்வி அறிக்கை - இந்தியாவில் ஆங்கிலக் கல்வியின் மகாசாசனம்.**
- 1882 - **ஹண்டர் கல்விக் குழு தொடக்கக் கல்வி**க்கு முக்கியத்துவம் அளித்தது.

**1921 முதல் 1947 வரையிலான காலம்:**

- 1937 - வார்தா கல்வித் திட்டம் (காந்தியடிகள்).
- 1944 - சார்ஜண்ட் அறிக்கை.

**சுதந்திர இந்தியாவில் கல்வி வளர்ச்சி:**

- 1947 - இந்தியா சுதந்திரம் அடைதல்.
- 1948 - டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக் குழு - பல்கலைக்கழகக் கல்வி குறித்த அறிக்கை.
- 1952 - 53 - இடைநிலைக் கல்விக் குழு.
- 1964 - டாக்டர் D.S.கோத்தாரி கல்விக் குழு - (10+2+3)

www.kalvinews.com

**தேசியக் கல்விக் கொள்கை**

- 1986 - புதிய கல்விக் கொள்கை.
- 1992 - புதிய கல்விக் கொள்கை மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டது.
- 1976 (டிசம்பர்) வரை - கல்வித் துறை மாநிலப் பட்டியலில் இருந்தது. தற்போது கல்வித் துறை பொதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

**அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) & அனைவருக்கும் இடைநிலைக்கல்வி திட்டம் (RMSA)**

- அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) - அனைத்துக் குழந்தைகளும் தொடக்கக் கல்வியைப் பெறுவதற்காக 2000 - 01 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- குழந்தைகளின் உரிமையான இலவச மற்றும் கட்டாயக் கல்வி சட்ட விதிகளை அமல்படுத்துவதற்கான சட்ட அமைப்பு - RTE - 2009.
- **RTE - 2009 ஆனது 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி பெற வழிவகை செய்கிறது.**
- **SSA - SARVA SHIKSHA ABHIYAN**
- அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA) - 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டம்.
- **RMSA - RASHTRIYA MATHYAMIK SHIKSHA ABHIYAN**
- RMSA 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவங்கப்பட்டது.
- சமக்ர சிக்ஷா அமைப்பானது 2018-19 ல் ஆரம்பிக்கப்பட்டது, இது SSA மற்றும் RMSA ஆகிய திட்டங்களை உள்ளடக்கியது.

**தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி:**

- ஆசிரியர்கள் - கணக்காயர் என்று அழைக்கப்பட்டனர்.
- பல்லவர் காலத்தில் கல்வி நிறுவனங்கள் - கடிகை
- இராஜராஜன் சதுர்வேதி மங்கலம் - வேதக் கல்லூரி.
- திருவிடைக்காளைக் கல்வெட்டு - நூலகம்
- திருவாடுதுறைக் கல்வெட்டு - மருத்துவப் பள்ளி
- பாண்டிய மன்னர்கள் சமஸ்கிருதம் ஆதரித்தல் - செப்புத்தகடு
- பாண்டியர் கால கல்வி நிலையங்களின் பெயர்கள் - கடிகை, சாலை, வித்யாசாதனம்.
- ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் - சாலபோகம்.
- வல்லப பெருஞ்சாலை - கன்னியாகுமரி.
- காந்தளூர் சாலை - பாண்டியர்கள் ஆட்சிக் காலத்தில் புகழ்பெற்ற கல்லூரி.
- நாயக்கர்களின் ஆட்சிக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது.

**நவீன காலத்தில் கல்வி:**

- வீரப்ப நாயக்கர் காலம் - மதுரைக்கு வருகை புரிந்த பெர்னாண்டஸ், அங்கு ஒரு தொடக்கப் பள்ளியை நிறுவினார்.
- இரண்டாம் சரபோஜி - சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூரில் தேவநாகரி எழுத்து முறையிலான அச்சுக் கூடத்தை அமைத்தார்.
- மதராஸ் மாகாணம் - மேற்கத்தியக் கல்வி அறிமுகம் - சர் தாமஸ் மன்றோ

www.kalvinews.com

- 1835 ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு, மேற்கத்தியக் கல்வி முறையை அறிமுகப்படுத்தினார்.
- 1857ல் சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இதுவே தமிழகத்தில் அமைக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம்.
- 1882 - உள்ளூர் வாரியச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1929 - அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரத்தில் அமைக்கப்பட்டது.

**சுதந்திரத்திற்குப் பின் தமிழகத்தில் கல்வி:**

- 1975 - காந்தி கிராம கிராமியக் கல்லூரி உருவாக்கப்பட்டது.
- 1956 - பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1971 - தொலைதூரக் கல்வி அறிமுகம்
- 1982 - சத்துணவுத் திட்டம்
- 1964 - 65 இல் இடைநிலைக் கல்வி அளவில், இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2009 - கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு.
- நாளந்தா பல்கலைக்கழகம் கி.பி. 5- ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை கற்றலின் மையமாக இருந்தது.
- ஜாதகக் கதைகள், யுவான் சுவாங், இட்சிங் குறிப்புகள் - அரசர்களும், சமுதாயமும் கல்வியை மேம்படுத்துவதில் அதிக ஆர்வம் செலுத்தியதாக நமக்குக் கூறுகின்றன.

**பயிற்சி வினாக்கள்:**

1. SSA எனப்படுவது ________.

   (1) Samagra Siksha Abiyan (2) Samagra Siksha for All (3) Sarva Siksha Abiyan (4) Sarva Siksha for All

2. வேதம் என்ற சமஸ்கிருதச் சொல்லின் பொருள் ________.

   (1) கல்வி (2) அறிவு (3) கடிகை (4) கணக்காயர்

3. தட்சசீலத்தை யுனெஸ்கோ அமைப்பு, உலகப் பாரம்பரியத் தளமாக எப்போது அறிவித்தது?

   (1) 1970 (2) 1975 (3) 1980 (4) 1985

4. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

   (1) தட்சசீலம் (2) காஞ்சி (3) விக்ரமசீலா (4) இட்சிங்

5. கீழ்க்கண்டவற்றுள் எந்த இடத்தின் இடிபாடுகளை அலெக்சாண்டர் கன்னிங்காம் கண்டுபிடித்தார்?

   (1) நாளந்தா (2) தட்சசீலம் (3) விக்ரமசீலா (4) இட்சிங்

6. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டுபிடி.

   (1) ஆசிரியர்கள் - கடிகை
   (2) காந்தளூர் சாலை - புகழ் பெற்ற கல்லூரி
   (3) திருவிடைக்காளைக் கல்வெட்டு - நூலகம்
   (4) திருவாடுதுறைக் கல்வெட்டு - மருத்துவப் பள்ளி

7. நாளந்தா பல்கலைக்கழகம் எந்த இடத்தில் அமைந்துள்ளது?

   (1) காஞ்சி (2) வடமேற்குப் பாகிஸ்தான்
   (3) ஸ்ரீரங்கம் (4) ராஜகிருகம்

www.kalvinews.com

8. தவறான இணையைக் கண்டுபிடி.

(1) மக்தப் - தொடக்கப்பள்ளிகள்

(2) மதரசா - இடைநிலைப் பள்ளிகள்

(3) டெல்லி - மௌலானா சத்ருதீன் மதரசா

(4) முதல் மதரசா - இல்த்துமிஷ்

9. டெல்லியில் மதரசாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் யார்?

(1) இல்த்துமிஷ் (2) பிரான்சிஸ் சேவியர்

(3) சீகன்பால்கு (4) புளுட்ச்சோ

10. இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பிய நாடு எது?

(1) இங்கிலாந்து (2) டென்மார்க் (3) பிரான்சு (4) போர்ச்சுக்கல்

11. பிரான்சிஸ் சேவியர் கீழ்க்கண்ட எந்த இடத்தில் பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார்?

(1) கொச்சி (2) ஜெய்பூர் (3) பம்பாய் (4) பனாரஸ்

12. கோவாவில் முதல் கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டு ________.

(1) 1576 (2) 1575 (3) 1675 (4) 1676

13. C.S. ஜான் என்பவர் தரங்கம்பாடியில் 20 இலவசப் பள்ளிகளை எந்த ஆண்டு நிறுவினார்?

(1) 1812 (2) 1912 (3) 1817 (4) 1917

14. மதராஸ், பனாரஸ் ஆகிய இடங்களில் எந்த மொழி சார்ந்த கல்லூரிகள் துவங்கப்பட்டன?

(1) சமஸ்கிருதம் (2) ஆங்கிலம் (3) தமிழ் (4) பிரெஞ்சு

15. இந்தியாவில் கல்வி மேம்பாட்டிற்காக, ஆண்டுதோறும் மானியமாக 1 லட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்த பட்டயச் சட்டம் ________.

(1) 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் (2) 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

(3) 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் (4) 1858 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

16. பொருத்துக.

i. தஞ்சாவூர் - a) வட்டார மொழிக் கல்வி

ii. வார்தா - b) அச்சுக்கூடம்

iii. உட்ஸ் - c) காந்தியடிகள்

iv. மவுண்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் - d) ஆங்கிலக் கல்வியின் மகாசாசனம்

(1) i - a ii - b iii - c iv - d (2) i - b ii - c iii - a iv - b

(3) i - b ii - c iii - d iv - a (4) i - c ii - a iii - b iv - d

17. பொருத்துக.

i. 1882 - டாக்டர் ராதாகிருஷ்ணன் கல்விக் குழு

ii. 1944 - வார்தா கல்வித் திட்டம்

iii. 1937 - ஹண்டர் கல்விக் குழு

iv 1948 - சார்ஜண்ட் அறிக்கை

www.kalvinews.com

(1) i - d ii - c iii - a iv - b (2) i - b ii - c iii - a iv - d

(3) i - c ii - d iii - b iv - a (4) i - a ii - b iii - c iv - d

18. புதிய கல்விக் கொள்கை திருத்தி அமைக்கப்பட்ட ஆண்டு _______.

(1) 1992 (2) 1982 (3) 1972 (4) 1962

19. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், எந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும்?.

(1) 11-வது ஐந்தாண்டுத் திட்டம் (2) 10-வது ஐந்தாண்டுத் திட்டம்

(3) 9-வது ஐந்தாண்டுத் திட்டம் (4) 8-வது ஐந்தாண்டுத் திட்டம்

20. சரஸ்வதி மஹால் நூலகம் அமைந்துள்ள ஊர் எது?

(1) தஞ்சை (2) மதுரை (3) சென்னை (4) கொல்கத்தா

21. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எந்த ஆண்டு அமைக்கப்பட்டது?

(1) 1930 (2) 1940 (3) 1950 (4) 1929

22. பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு _______.

(1) 1966 (2) 1976 (3) 1956 (4) 1950

23. சத்துணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்ட ஆண்டு _______.

(1) 1992 (2) 1982 (3) 1972 (4) 1962

24. சாணக்கியர் அர்த்தசாஸ்திரத்தை எங்குத் தங்கித் தொகுத்ததாகக் கூறப்படுகிறது?

(1) காஞ்சி (2) தட்சசீலம் (3) நாளந்தா (4) விக்கிரமசீலா

25. தவறான கூற்றைக் கண்டுபிடி.

(1) சரகர் மற்றும் சுஸ்ருதர் ஆகியோரின் குறிப்புகள் மருத்துவத்தைக் கற்றுக்கொள்ள ஆதாரங்களாக இருந்தன.

(2) கல்வியானது மனிதனின் மூன்றாவது கண்ணாகக் கருதப்படுகிறது.

(3) கோவில்கள் கற்றல் மையங்களாகத் திகழ்ந்தன.

(4) இவற்றில் எதுவுமில்லை.

26 வேதம் என்ற சொல் எம்மொழியில் இருந்து வந்தது?

(1) இலத்தீன் (2) சமஸ்கிருதம் (3) பிராகிதம் (4) பாலி

27. பின்வருவனவற்றுள் எது பண்டையக் காலத்தில் கற்றலுக்கான முக்கிய மையமாக இருந்தது?

(1) விகாரங்கள் (2) குருகுலம் (3) பள்ளிகள் (4) இவையனைத்தும்

28. இந்தியாவின் மிகப் பழமையான நாளந்தா பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடம் _______.

(1) உத்திரப் பிரதேசம் (2) பீகார் (3) மகாராஷ்டிரம் (4) பஞ்சாப்

29. பின்வரும் குழுக்களில், எந்தக் குழு பல்கலைக்கழக மானியக் குழுவினை அமைக்கப் பரிந்துரை செய்தது?

(1) சார்ஜண்ட் அறிக்கை, 1944 (2) இராதாகிருஷ்ணன் கல்விக் குழு, 1948

(3) கோத்தாரி கல்விக் குழு, 1964 (4) தேசியக் கல்விக் கொள்கை, 1968

www.kalvinews.com

30. இந்தியாவில் புதிய கல்விக் கொள்கை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

(1) 1968 (2) 1992 (3) 2009 (4) 1986

31. 2009 ஆம் ஆண்டு இலவசக் கட்டாயக் கல்விச் சட்டத்தின் விதிகளை அமல்படுத்துகின்ற முதன்மையான அமைப்பு _______.

(1) SSA (2) RTE (3) RMSA (4) SMSA

32. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. பிரான்சிஸ் சேவியர் | - | a. சரஸ்வதி மஹால் |
| ii. உட்ஸ் கல்வி அறிக்கை | - | b. கொச்சி பல்கலைக் கழகம் |
| iii. இரண்டாம் சரபோஜி | - | c. மதராஸில் மேற்கத்தியக் கல்வி |
| iv சர்.தாமஸ் மன்றோ | - | d. இந்தியக் கல்வியின் மகா சாசனம் |

(1) i - d ii - c iii - a iv - b (2) i - b ii - c iii - a iv - d

(3) i - b ii - d iii - a iv - c (4) i - a ii - b iii - c iv - d

33. பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு.

அ. நாளந்தா பல்கலைக் கழகம் கி.பி.(பொ.ஆ) ஐந்தாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

ஆ. பண்டைய இந்தியாவில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது முதல் அவர்களின் பாடத்திட்டத்தினை வடிவமைப்பது வரை அனைத்து அம்சங்களிலும் ஆசிரியர்கள் முழுமையான சுயாட்சி கொண்டிருந்தனர்.

இ. பண்டைய காலத்தில் ஆசிரியர்கள் கணக்காயர் என்று அழைக்கப்பட்டனர்.

ஈ. சோழர்கள் காலத்தில் புகழ்பெற்ற கல்லூரியாக காந்தளூர் சாலை இருந்தது.

(1) அ மற்றும் ஆ சரி (2) ஆ மற்றும் ஈ சரி

(3) இ மற்றும் ஈ சரி (4) அ, ஆ மற்றும் இ சரி

34. சரியான இணையைத் தேர்ந்தெடு.

| | | |
|---|---|---|
| (1) மக்தப்கள் | - | இடைநிலைப்பள்ளி |
| (2) ஆங்கிலக் கல்வி | - | மெக்காலேயின் கல்விக் குறிப்பு |
| (3) கரும்பலகைத் திட்டம் | - | இடைநிலைக் கல்வி குழு |
| (4) சால போகம் | - | கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் |

35. வல்லபை பெருஞ்சாலை தமிழ்நாட்டில் எங்குள்ளது?

(1) சேலம் (2) இராமநாதபுரம் (3) திருச்சி (4) கன்னியாகுமரி

36. மெக்காலே கல்விக் குறிப்பு வெளிவந்த ஆண்டு?

(1) 1854 (2) 1853 (3) 1845 (4) 1835

37. காந்தி கிராம கிராமியக் கல்லூரி ஏற்படுத்தப்பட்ட ஆண்டு?

(1) 1845 (2) 1857 (3) 1855 (4) 1975

38. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்?

(1) ஈரோடு (2) திருவாரூர் (3) சென்னை (4) சிதம்பரம்

39. சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு?

(1) 1857 (2) 1835 (3) 1876 (4) 1887

www.kalvinews.com

40. உள்ளூர் வாரியச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ?

(1) 1882 (2) 1832 (3) 1852 (4) 1872

41. அறிவு என்ற சொல் எதில் இருந்து பெறப்பட்டது ______.

(1) வித் (2) பட்டு (3) சத்து (4) படிப்பு

42. வித் என்பதன் பொருள் ______.

(1) படித்தல் (2) அறிதல் (3) விதைத்தல் (4) விளக்குதல்

43. குருகுலங்களில் பெரும்பாலானவை, பின்வரும் யாரின் பெயரால் அழைக்கப்பட்டன?

(1) மன்னர்கள் (2) புலவர்கள் (3) முனிவர்கள் (4) தலைவர்கள்

44. பின்வருவனவற்றுள் எது தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதி?

(1) ஜாவா (2) நேபாளம் (3) தட்சசீலம் (4) பர்மா

45. ______ பல்கலைக்கழகங்கள் கோயில்களின் தொடர்புடன் மேம்பாடு அடைந்தன.

(அ). பனாரஸ் (ஆ). மதுரை (இ). காஞ்சி (ஈ). இலங்கை

(1) அ, ஈ (2) ஆ, இ (3) அ, இ (4) ஆ, ஈ

46. பின்வருவனவற்றில் கற்பித்தலின் அடிப்படை வழிமுறைகள் எவை?

(அ). படித்தல் (ஆ). விளையாடுதல்

(இ). கலந்தாலோசித்தல் (ஈ). விவாதங்கள்

(1) அ, ஈ (2) ஆ, இ (3) அ, இ (4) இ, ஈ

47. உலகின் பழமையான பல்கலைக்கழகம் ______.

(1) நாளந்தா (2) டெல்லி (3) சென்னை (4) அண்ணாமலை

48. ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பள்ளியைத் தொடங்கியவர்கள் ______.

(அ). சேவியர் (2) டேவிட் (3) சீகன்பால்கு (4) புளூட்சோ

(1) அ, ஈ (2) ஆ, இ (3) ஈ, இ (4) அ, இ

49. ஹண்டர் குழு எக்கல்விக்கு முக்கியத்துவம் தந்தது?

(1) ஆரம்பக் கல்வி (2) குருகுலக் கல்வி

(3) இடைநிலைக் கல்வி (4) வயதுவந்தோர் கல்வி

50. தட்சசீலப் பல்கலைக் கழகத்தின் இடிபாடுகள் எப்போது கண்டுபிடிக்கப்பட்டன?

(1) 20 ம் நூற்றாண்டு (2) 17 ம் நூற்றாண்டு (3) 18 ம் நூற்றாண்டு (4) 19 ம் நூற்றாண்டு

51. கூற்று :ஆங்கிலக் கல்வியின் மகாசாசனம் என அழைக்கப்படுவது உட்ஸ் கல்வி அறிக்கை.

காரணம் :எல்லாத் தரப்பினருக்கும் கல்வி வழங்கும் முதல் அறிக்கை இதுவாகும்.

(1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்று சரி, காரணம் சரி

(3) காரணம் கூற்றை விளக்கவில்லை. (4) கூற்று தவறு

52. சார்ஜண்ட் அறிக்கை தயாரிக்கப்பட்ட ஆண்டு ______.

(1) 1944 (2) 1942 (3) 1844 (4) 1947

www.kalvinews.com

53. நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்வி அமைப்பைப் பரிந்துரை செய்த குழு எது?

(1) வார்தா கல்விக்குழு (2) டி எஸ் கோத்தாரி கல்விக் குழு
(3) ஹண்டர் கல்விக் குழு (4) உட்ஸ் கல்வி அறிக்கை

54. ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) சாலபோகம் (2) பெருஞ்சாலை (3) குருகுலம் (4) பாடசாலை

55. இரண்டாம் சரபோஜி காலத்தில், தஞ்சாவூரில் அச்சுக்கூடத்தில் பயன்படுத்திய எழுத்துமுறை

(1) தேவநாகரி (2) உட்ஸ் (3) பளிங்கு (4) பிம்பம்

56. ________ ஆம் ஆண்டின் சர் சார்லஸ் உட்ஸ் கல்வி அறிக்கை, இந்தியாவில் ஆங்கிலக் கல்வியின் "மகாசாசனம்" என்று அழைக்கப்படுகிறது (NMMS 2019-20)

(1) 1854 (2) 1856 (3) 1864 (4) 1866

57. `எவ்வகைக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு RMSA வின் இடைநிலைக் கல்வி உருவாக்கப்பட்டது?

(1) எளிதில் கிடைக்கக் கூடிய கல்வி (2) எளிய அணுகுமுறையுடன் கூடிய கல்வி
(3) தரமான கல்வி (4) இவை அனைத்தும்

58. கல்வி உரிமைச் சட்டம் ____ வயது முதல் _____ வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வழி செய்கிறது.

(1) 4, 14 (2) 6, 14 (3) 5, 14 (4) 3, 14

59. தற்போது கல்வித்துறை ____________ பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

(1) மாநிலப் பட்டியல் (2) சிறப்புப் பட்டியல் (3) பொதுப் பட்டியல் (4) மத்தியப் பட்டியல்

60. ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனம் பொ.ஆ. ________ இல் தோற்றுவிக்கப் பட்டது.

(1) 1500 (2) 1675 (3) 1664 (4) 1600

61. இந்தியாவிற்கு ஐரோப்பியர்கள் எதற்காக வந்தனர்?

(1) நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக (2) ஆட்சி அமைப்பதற்காக
(3) வணிகம் செய்வதற்காக (4) தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக

62. தட்சசீலம் ______________ இல் அமைந்துள்ளது.

(1) பாகிஸ்தான் (2) நேபாளம் (3) ஆப்கானிஸ்தான் (4) இந்தியா

63. குருகுலக் கல்வி அமைப்பின் முக்கிய நோக்கங்கள்

(1) முழுமையான கற்றல் (2) ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்தல்.
(3) உள்ளார்ந்த திறமையை உணரவைத்தல் (4) இவை அனைத்தும்

64. பின்வருவனவற்றுள் குழுவில் பொருந்தாததைத் தேர்ந்தெடு.

(1) வல்லபி (2) விக்கிரமசீலா (3) அண்ணாமலை (4) ஓடண்டாபுரி

65. தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ள பழமையான பல்கலைக் கழகம் எது?

(1) தட்சசீலம் (2) நாளந்தா (3) வல்லபி (4) விக்கிரமசீலா

www.kalvinews.com

66. முஸ்லிம் ஆட்சியாளர்கள் பள்ளிகளை நிறுவ ஆரம்பித்த நூற்றாண்டு

(1) 11 (2) 16 (3) 19 (4) 18

67. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) மதரசாக்களின் முக்கிய நோக்கம் தகுதியான அறிஞர்களுக்குக் குடிமைப் பணிக்கான பயிற்சியை அளித்தல்.

(2) பண்டைய இந்தியாவில் குழுக்கற்றல் முறை நடைமுறையில் இருந்தது.

(3) தட்சசீலப் பல்கலைக் கழகம், நாகரிகங்களுக்கு இடையேயான தொடர்பு மையமாகக் கருதப்படுகிறது.

(4) ஆரம்பக் காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி, கல்வியில் அலட்சியம் மற்றும் குறுக்கீடு இன்மை கொள்கையைப் பின்பற்றியது.

68. இடைக்கால இந்தியாவில் கல்வி முறையானது, யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது?

(1) மிஷனரி (2) உலோமா (3) சுல்தான்கள் (4) பேராயர்கள்

69. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) இடைக்கால இந்தியாவில் பெண்கள் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை.

(2) இடைக்கால இந்தியாவில் கல்வியானது சமயம் சார்ந்ததாக இருந்தது.

(3) இஸ்லாமியர்களின் ஆட்சியில் மருத்துவம், வானியல் போன்ற துறைகள் மேம்பட்டன.

(4) இஸ்லாமியர்கள் வருகைக்கு முன்னரே இந்தியாவில் ஒரு மேம்பட்ட கல்விமுறை நடைமுறையில் இருந்தது.

70. அறிவியல் பாடங்களின் கற்றலை ஊக்குவித்த அரசர் _______.

(1) இல்துத்மிஷ் (2) ராஜா ஜெய்சிங் (3) இரண்டாம் சரபோஜி (4) அக்பர்

71. மௌலானா சத்ருதீன் மதரசா உள்ள இடம் _______.

(1) ஔரங்காபாத் (2) டெல்லி (3) ஷாஜஹானாபாத் (4) ஹைதராபாத்

72. கீழ்க்கண்டவற்றில் தவறான கூற்று எது?

(1) தாமஸ் மன்றோ கல்வியின் நிலை குறித்து அறிய ஒரு குழுவை அமைத்தார்.

(2) மன்றோவின் கல்விக்குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 முதன்மைப் பள்ளிகளை அமைக்கப் பரிந்துரைத்தது.

(3) உட்ஸ் கல்வி அறிக்கை சென்னை மாகாணத்தில் பொது வழிகாட்டும் துறையை ஏற்படுத்தியது.

(4) தேசியக் கல்விக் கொள்கை வரைவுக்குழு 2019 இல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

73. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. கியாசுதீன் மதரசா | - | a. ஸ்ரீரங்கம் |
| ii. அஹோபில மடம் | - | b. கல்கத்தா |
| iii. எல்பின்ஸ்டன் கல்லூரி | - | c. பம்பாய் |
| iv. பிஷப் கல்லூரி | - | d. டெல்லி |

(1) i - d ii - a iii - d iv - c (2) i - d ii - c iii - b iv - a

(3) i - c ii - a iii - b iv - a (4) i - d ii - a iii - c iv - b

www.kalvinews.com

71. மௌலானா சத்ருதீன் மதரசா உள்ள இடம் _______.

(1) ஔரங்காபாத் (2) டெல்லி (3) ஷாஜஹானாபாத் (4) ஹைதராபாத்

74. அஹோபில மடத்தில் தங்கித் தன் பங்களிப்பைக் கல்விக்காக வழங்கியவர்

(1) ஸ்ரீராமானுஜர் (2) பெரியாழ்வார் (3) ஸ்ரீராமதாசர் (4) கூரத்தாழ்வார்

75. பிரான்சிஸ் சேவியர் எந்த அமைப்பின் உறுப்பினர்?

(1) இவாஞ்சிலிஸ்டிக் (2) பிஷப் மிஷனரி

(3) கிழக்கிந்தியக் கம்பெனி (4) ஏசு சங்கம்

76. கிறித்தவர் அல்லாத குழந்தைகளுக்குக் கல்வியளித்த முதல் சமயப்பரப்பு அமைப்பு

(1) இவாஞ்சிலிஸ்டிக் (2) மதரசாக்கள்

(3) அஹோபில மடம் (4) ஏசு சங்கம்

77. இவர்களில் எவர் இவாஞ்சிலிஸ்டிக் அமைப்பைச் சார்ந்தவர்?

(1) பிரான்சிஸ் சேவியர் (2) ஜான் கிர்னாண்டர்(

3) டாக்டர் சி.எஸ்.ஜான் (4) சீகன்பால்கு

78. சீகன்பால்கு மற்றும் புளூட்சோ எந்நாட்டைச் சார்ந்தவர்கள்?

(1) இங்கிலாந்து (2) ஜெர்மனி (3) போர்ச்சுகல் (4) பிரான்ஸ்

79. சீகன்பால்கு மற்றும் புளூட்சோ ஆகியோர் எங்குக் கல்லூரியைத் துவங்கினர்?

(1) திருவாரூர் (2) திருவிதாங்கூர் (3) பம்பாய் (4) கல்கத்தா

80. கல்கத்தாவின் முதல் பேராயர் யார்?

(1) Dr.மிடில்டன் (2) Dr.சி.எஸ். ஜான் (3) புளூட்சோ (4) சேவியர்

81. கல்கத்தாவில் பிஷப் கல்லூரியைத் துவங்கியவர் யார்?

(1) Dr.மிடில்டன் (2) Dr.சி.எஸ். ஜான் (3) புளூட்சோ (4) சேவியர்

82. ஆங்கில ஆட்சியின் கல்வி வரலாற்றை எத்தனை கட்டங்களாகப் பிரிக்கலாம்?

(1) 3 (2) 5 (3) 4 (4) 2

83. மவுண்ட் எல்பின்ஸ்டன் ஓய்வு பெற்ற ஆண்டு

(1) 1854 (2) 1929 (3) 1827 (4) 1812

84. கல்விக்காகத் தங்கள் பங்களிப்பை வழங்கிய இக்குழுவினருள் பொருந்தாதவர் யார்?

(1) இராஜா ராம்மோகன்ராய் (2) பச்சையப்பர்

(3) பிரேசர் (4) பிரான்சிஸ் சேவியர்

85. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(1) இராஜா ராம்மோகன்ராய் - வங்காளம்

(2) பச்சையப்பர் - சென்னை

(3) பிரேசர் - பம்பாய்

(4) யுவான் சுவாங் - சீனா

www.kalvinews.com

86. கல்விக்கொள்கை, பயிற்றுமொழி ஆகியனவற்றில் கருத்து வேறுபாடுகள் அதிகம் கொண்ட ஆங்கில ஆட்சியின் காலகட்டம் எது?

(1) முதல் கட்டம் (2) இரண்டாம் கட்டம்

(3) மூன்றாம் கட்டம் (4) நான்காம் கட்டம்

87. பொருத்துக.

i. கீழ்திசைவாதிகள் - a. ஆங்கிலம்

ii. ஆங்கில சார்பு கோட்பாட்டுவாதிகள் - b. சமஸ்கிருதம், பாரசீகம்

iii. மூன்றாவது பிரிவினர் - c. இந்திய மொழி

(1) i - c ii - a iii - d (2) i - a ii - c iii - b

(3) i - c ii - a iii - b (4) i - b] ii - a iii - c

88. அகில இந்தியக் கல்விக் கொள்கையின் காலம் என்றழைக்கப்படும் ஆங்கில ஆட்சியின் காலகட்டம் எது?

(1) முதல் கட்டம் (2) இரண்டாம் கட்டம்

(3) மூன்றாம் கட்டம் (4) நான்காம் கட்டம்

89. ஆங்கிலேயக் கல்வி வரலாற்றில் செல்வாக்கு மிக்க மூன்றாம் கட்டம் எந்த ஆண்டில் தொடங்குகிறது?

(1) 1854 (2) 1929 (3) 1827 (4) 1812

90. உட்ஸ் கல்வி அறிக்கையின் குறைபாடு என்ன?

(1) இது அனைத்துத் தரப்பினருக்கும் கல்வியைப் பரிந்துரை செய்யவில்லை.

(2) இதன்படி உயர் வகுப்பினர் மட்டுமே ஆங்கிலம் பயில முடியும்.

(3) இந்தி மொழிப்பாடம் கட்டாயமாக்கப்பட்டது.

(4) இந்தியர்களின் பண்பாடு, கொள்கைகள் விலக்கி வைக்கப்பட்டது.

91. ஆங்கிலேயக் கல்வி வரலாற்றில், நான்காம் கட்டம் ____________ காலமாகும்.

(1) செல்வாக்கு மிக்க (2) அலட்சியமான

(3) கருத்து வேறுபாடுகள் கொண்ட (4) சுயாட்சி

92. பொருத்துக.

i. உலகப் பெருமந்தம் - a. 1968

ii. முதல் தேசியக்கல்விக் கொள்கை - b. 1971

iii. தொலைதூரக் கல்வி - c. 1929

iv. தேசியக் கல்விக் கொள்கை வரைவுக் குழு - d. 2017

(1) i - d ii - a iii - d iv - c (2) i - d ii - c iii - b iv - a

(3) i - c ii - a iii - b iv - d (4) i - b ii - a iii - c iv - d

93. மாகாண அமைச்சர்களின் நிலையை வலுப்படுத்தியது எது?

(1) 1935 ம் ஆண்டு அரசுச் சட்டம் (2) 1854 ம் ஆண்டு உட்ஸ் கல்வி அறிக்கை

(3) 1909 ம் ஆண்டு மாகாண சுயாட்சி (4) 1929 ம் ஆண்டு சார்ஜண்ட் அறிக்கை

www.kalvinews.com

94. வார்தா கல்வித் திட்டத்தின் அச்சாணியாக இருந்தது எது?

(1) இயற்கை வழிக் கற்றல் (2) அகிம்சை
(3) குழந்தை மையக் கற்றல் (4) சுதந்திர உணர்வு

95. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. அனைவருக்கும் கல்வி இயக்கம் | - | a) 1952 - 53 |
| ii. இடைநிலைக் கல்விக் குழு | - | b) 2000 - 01 |
| iii. இடைநிலைக் கல்வி அளவில் இலவசக்கல்வி | - | c) 2018 - 19 |
| iv. முன்பருவம் முதல் 12 வரை பாகுபாடின்றி முழுமையான கல்வி | - | d) 1964 - 65 |

(1) i - a ii - b iii - c iv - d (2) i - b ii - a iii - d iv - c
(3) i - b ii - c iii - d iv - a (4) i - b ii - a iii - c iv - d

96. கல்வியில் புதிய அமைப்பு முறைகளையும், பாடப்புத்தகங்களின் தரம், பாடத்திட்டம், கற்பித்தல் முறைகளில் முன்னேற்றங்களையும் பரிந்துரைத்த குழு எது?

(1) ராதாகிருஷ்ணன் கல்விக் குழு (2) இடைநிலைக் கல்விக் குழு
(3) கோத்தாரிக் கல்விக் குழு (4) பல்கலைக்கழக மானியக் குழு

97. 10+2+3 கல்வி அமைப்பைப் பரிந்துரைத்த குழு எது?

(1) ராதாகிருஷ்ணன் கல்விக் குழு (2) இடைநிலைக் கல்விக் குழு
(3) கோத்தாரிக் கல்விக் குழு (4) பல்கலைக்கழக மானியக் குழு

98. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

(அ) புதிய தேசியக் கல்விக் கொள்கை, கிராமப்புற இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதலை வலியுறுத்தியது.

(ஆ) புதிய தேசியக் கல்விக் கொள்கை, குழந்தை மைய அணுகுமுறையை வலியுறுத்தியது.

(இ) முதல் தேசியக் கல்விக் கொள்கை, கரும்பலகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

(ஈ) திருத்தப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை, பணியிடைப் பயிற்சியைப் பரிந்துரைத்தது.

(1) அ தவிர அனைத்தும் (2) ஆ தவிர அனைத்தும்
(3) இ தவிர அனைத்தும் (ஈ) அ தவிர அனைத்தும்

99. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறான கூற்று/கூற்றுகள் எது/எவை?

(1) முதல் தேசியக் கல்விக்கொள்கையின் நோக்கங்கள் தேச முன்னேற்றத்தை ஊக்குவித்தல், தேசிய ஒருமைப்பாட்டினை வலுப்படுத்துதல் ஆகியன ஆகும்.

(2) புதிய தேசியக் கல்விக் கொள்கையின் நோக்கம் ஒரு நிலையான, துடிப்பான சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

(3) இவை இரண்டும்.

(4) இவற்றில் எதுவுமில்லை.

100. எப்போது வரை கல்வி மாநிலப் பட்டியலில் இருந்தது?

(1) டிச. 1974 (2) நவ. 1976 (3) டிச. 1976 (4) அக். 1986

101. இந்திய அரசின் முதன்மைத் திட்டம் இவற்றுள் எது?

(1) SSA (2) RMSA (3) SAMAGRA SIKSHA (4) RTE

www.kalvinews.com

102. இவற்றுள் எது அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் செயல்பாடு இல்லை?

(1) பள்ளி மேலாண்மைக் குழு அமைத்தல். (2) மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கல்.

(3) மதிய உணவு வழங்குதல். (4) முன்பருவக்கல்வி வழங்குதல்.

103. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டம், எந்த வயது பிரிவினருக்குக் கல்வி அளிப்பதை நோக்கமாகக் கொண்டது?

(1) 6-14 (2) 15-16 (3) 3-17 (4) 11-14

104. சமமான வாய்ப்புகள் மற்றும் சமமான கற்றல் விளைவுகளை அளவிடுதல் ஆகிய பள்ளியின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான குறிக்கோளை அடைய ஏற்படுத்தப்பட்ட திட்டம் எது?

(1) SSA (2) RMSA (3) SAMAGRA SIKSHA (4) RTE

105. SSA, RMSA ஆகிய இரண்டு திட்டங்களை உள்ளடக்கிய திட்டம் எது?

(1) கரும்பலகைத் திட்டம் (2) RTE

(3) மேம்படுத்தப்பட்ட RMSA (4) SAMAGRA SIKSHA

106. யுவான் சுவாங் குறிப்புகளின்படி, கற்றலின் மையமாக விளங்கிய நகரம் எது?

(1) பனாரஸ் (2) மதுரை (3) காஞ்சிபுரம் (4) நாளந்தா

107. தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகவும் அறிவார்ந்த மற்றும் புதுமைகளைப் புகுத்திய காலம் எது?

(1) பாண்டியர் காலம் (2) சோழர் காலம் (3) பல்லவர் காலம் (4) சேரர் காலம்

108. பல்லவர் காலத்தில் கல்வி நிறுவனங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

(1) கடிகை (2) சாலை (3) வித்யாசாதனம் (4) பள்ளி

109. பாண்டியர் காலத்தில் கல்வி நிறுவனங்கள் எவ்வாறு அழைக்கப்படவில்லை?

(1) கடிகை (2) சாலை (3) வித்யாசாதனம் (4) பள்ளி

110. கீழ்க்கண்டவற்றில் வேதக் கல்லூரி அமைந்திருந்த இடம் எது?

(1) எண்ணாயிரம் (2) திருப்புவனை (3) 1 மற்றும் 2 (4) இவை எதுவுமில்லை

111. திருவாடுதுறைக் கல்வெட்டு எவர் காலத்திய கல்வெட்டு?

(1) ராஜராஜ சோழன் (2) வீரராஜேந்திர சோழன்

(3) வீரப்ப நாயக்கர் (4) இரண்டாம் சரபோஜி

112. வீரப்ப நாயக்கர் காலத்தில் மதுரையில் தொடக்கப் பள்ளியை நிறுவியவர்?

(1) பிரான்சிஸ் சேவியர் (2) சீகன் பால்கு

(3) பெர்னாண்டஸ் (4) புளூட்சோ

113. மதராஸ் மாகாணத்தில், எந்த ஆண்டுவாக்கில், ஆங்கிலப் பாடம் தவிர அனைத்துப் பாடங்களும் தமிழ் மொழியில் கற்பிக்கப்பட்டன?

(1) 1929 (2) 1971 (3) 1938 (4) 1954

114. சர்.தாமஸ் மன்றோ சென்னை ஆளுநராக இருந்த காலகட்டம் எது?

(1) 1905-09 (2) 1920-27 (3) 1921-47 (4) 1820-27

www.kalvinews.com

# விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (3) | 16 | (3) | 31 | (1) | 46 | (4) | 61 | (3) | 76 | (1) | 91 | (4) | 106 | (3) |
| 2 | (2) | 17 | (3) | 32 | (3) | 47 | (1) | 62 | (1) | 77 | (2) | 92 | (3) | 107 | (2) |
| 3 | (3) | 18 | (1) | 33 | (4) | 48 | (3) | 63 | (3) | 78 | (2) | 93 | (1) | 108 | (1) |
| 4 | (4) | 19 | (1) | 34 | (2) | 49 | (1) | 64 | (3) | 79 | (2) | 94 | (2) | 109 | (4) |
| 5 | (2) | 20 | (1) | 35 | (4) | 50 | (4) | 65 | (2) | 80 | (1) | 95 | (2) | 110 | (3) |
| 6 | (1) | 21 | (4) | 36 | (4) | 51 | (2) | 66 | (1) | 81 | (1) | 96 | (2) | 111 | (2) |
| 7 | (4) | 22 | (3) | 37 | (4) | 52 | (1) | 67 | (3) | 82 | (3) | 97 | (3) | 112 | (3) |
| 8 | (3) | 23 | (2) | 38 | (4) | 53 | (2) | 68 | (2) | 83 | (3) | 98 | (3) | 113 | (3) |
| 9 | (1) | 24 | (2) | 39 | (1) | 54 | (1) | 69 | (1) | 84 | (4) | 99 | (4) | 114 | (4) |
| 10 | (4) | 25 | (4) | 40 | (1) | 55 | (1) | 70 | (2) | 85 | (3) | 100 | (3) | | |
| 11 | (1) | 26 | (2) | 41 | (1) | 56 | (1) | 71 | (3) | 86 | (2) | 101 | (1) | | |
| 12 | (2) | 27 | (4) | 42 | (2) | 57 | (4) | 72 | (2) | 87 | (4) | 102 | (4) | | |
| 13 | (1) | 28 | (2) | 43 | (3) | 58 | (2) | 73 | (4) | 88 | (3) | 103 | (2) | | |
| 14 | (1) | 29 | (2) | 44 | (3) | 59 | (3) | 74 | (1) | 89 | (1) | 104 | (3) | | |
| 15 | (1) | 30 | (4) | 45 | (3) | 60 | (4) | 75 | (4) | 90 | (4) | 105 | (4) | | |

www.kalvinews.com



## 6. இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி

தொகுப்பு
திரு.ர.கண்ணன் M.Sc., B.Ed..
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
தப்பக்குட்டை,
சேலம் மாவட்டம்.

மேம்பாடு
திரு.க.பிரகாஷ், M.Sc., M.Phil., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),
அரசு மேல்நிலைப்பள்ளி,
தினைக்குளம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

### முக்கிய குறிப்புகள்

- தொழில்களின் வரலாறு மனித குல வரலாற்றிலிருந்தே தொடங்குகிறது எனக் கூறியவர் எட்வர்ட் பெயின்ஸ்.
- பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இந்தியா எனக் கூறியவர் **எட்வர்ட் பெயின்ஸ்** ஆவார்.
- முகலாயப் பேரரசர் ஷாஜஹான் ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தவர் பெர்னியர்.
- இந்தியாவில் உள்ள மயிலாசனம், பட்டு மற்றும் தங்கத்தினாலான தரை விரிப்புகள் , சிறிய அளவிலான சிற்ப வேலைப்பாடுகளையும் கண்டு வியப்படைந்தவர் பிரெஞ்ச் நாட்டு பயணி தவர்னியர்.

**இந்தியாவின் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் :**

- கைவினைப் பொருட்கள் இந்திய மக்களின் வாழ்க்கையில் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக இருந்தன.
- நெசவு, மரவேலை, தந்தவேலை, மதிப்புமிக்க கற்களை வெட்டுதல், தோல், வாசனை மரங்களில் வேலைப்பாடுகள் செய்தல், உலோக வேலை மற்றும் நகைகள் செய்தல் ஆகிய பாரம்பரியத் தொழில்களில் இந்தியா மிகவும் புகழ்பெற்று விளங்கியது.
- பருத்தி துணிகள், மஸ்லின் துணிகள், கம்பளி, பட்டு மற்றும் உலோக பொருட்கள் ஆகியன உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்காக உற்பத்தி செய்யப்பட்டன.
- மணி தயாரிக்கப் பயன்படும் உலோகமான வெண்கலத்திற்கு பெயர் பெற்றது சௌராஷ்டிரா.
- தகர தொழிற்சாலைக்கு புகழ்பெற்றது வங்காளம்.
- மஸ்லின் ஆடைகளுக்கு புகழ்பெற்றது டாக்கா.

**டாக்காவின் மஸ்லின் ஆடைகள்:**

- கி.மு. (பொ. ஆ .மு) 2000 ஆம் ஆண்டுகள் பழமையான எகிப்திய கல்லறைகளில் உள்ள மம்மிகள் இந்திய மஸ்லின் ஆடைகள் கொண்டு சுற்றப்பட்டு உள்ளது.
- ஒரு தீப்பெட்டிக்குள் 50 மீட்டர் அளவு கொண்ட மெல்லிய மஸ்லின் துணியை வைக்க முடியும்.

**இந்திய தொழிலகங்களின் வீழ்ச்சி**:

**அ) ஆட்சியாளர்களின் ஆதரவின்மை:**

- இந்தியாவில் பிரிட்டிஷாரின் வெற்றியானது சுய சார்புடன் இருந்த இந்திய பொருளாதாரத்தை காலனித்துவ பொருளாதாரமாக மாற்றியது

www.kalvinews.com

- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் செல்வாக்கு பரவியதால் உள்நாட்டு கைத்தொழில்களின் சிறப்பான காலம் முடிவுக்கு வந்தது.

**ஆ) உற்பத்தியாளர் மூலப் பொருள்களின் ஏற்றுமதியாளராக மாறுதல்:**

- பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டியே நாட்டை புகழ்பெற செய்த இந்திய கைவினைப் பொருள்கள் காலனித்துவ ஆட்சியின் கீழ் சரிவைச் சந்திக்க காரணாமாக அமைந்தது.
- பிரிட்டிஷாரால் அறிமுகப்படுத்தப்பட்ட ரயில்வே மற்றும் சாலைகளானது முடிவுற்ற பொருட்களை இந்தியாவில் தொலைதூர பகுதிகளுக்கு கொண்டு செல்லவும் பல்வேறு பகுதிகளில் இருந்து மூலப் பொருட்களை கொள்முதல் செய்யவும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

**இ) இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டி:**

- இந்தியாவின் பழமையான தொழில் நெசவுத் தொழில் ஆகும்.
- இந்திய நெசவாளர்களின் மிகவும் சிறப்பு வாய்ந்த திறன்கள் மற்றும் குறைந்த உற்பத்தி செலவு ஆகியவை ஐரோப்பிய உற்பத்தியாளர்களுக்கு கடுமையான போட்டியை அளித்தன. இப்போட்டி இங்கிலாந்தில் காட்டன்ஜின், பறக்கும் எரிநாடா, நூற்கும் ஜென்னி மற்றும் நீராவி இயந்திரம் ஆகியவை கண்டுபிடிப்பதற்கும் அவை நெசவு உற்பத்தியை பெரிய அளவில் உருவாக்கவும் உதவியது.
- பிரிட்டனில் உற்பத்தியான பொருட்களின் சந்தையாக இந்தியா மாறியது. இதன் விளைவாக நூற்பு மற்றும் நெசவு தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர்.

**தாதாபாய் நௌரோஜியின் செல்வச் சுரண்டல் கோட்பாடு**:

- ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வளங்களை சுரண்டுவதும், இந்தியாவின் செல்வங்களை பிரிட்டனுக்கு கொண்டு செல்வதுமே இந்திய மக்களின் வறுமைக்கு காரணம் என்பதை முதலில் ஏற்றுக் கொண்டவர் தாதாபாய் நௌரோஜி ஆவார்.

**ஈ) ஆங்கிலேயர்களின் வர்த்தகக் கொள்கை:**

- ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் நோக்கமானது மலிவான விலையில் இந்திய தயாரிப்பு பொருட்களை பெருமளவிற்கு வாங்கி மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் லாபத்திற்கு விற்க வேண்டும் என்பதாகும்.
- பிரிட்டனுக்கு கொண்டு செல்லப்பட்ட இந்திய பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கப்பட்டன. அதே நேரத்தில் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்ட ஆங்கிலேயே பொருட்களுக்குப் பெயரளவில் மட்டுமே வரி விதிக்கப்பட்டன.

**உ) தொழில்மயம் அழிதல்:**

- பாரம்பரிய இந்திய கைவினை தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயல்பாடு மற்றும் தேசிய வருமானத்தின் வீழ்ச்சி ஆகியன தொழில்மயம் அழிதல் எனக் குறிப்பிடப்படுகிறது.
- சூயஸ் கால்வாய் கட்டுமானத்திற்குப் பின்பு இந்திய தொழில்துறை மேலும் சிக்கலைச் சந்தித்தது

**நவீன தொழிலகங்களின் தொடக்கம்:**

- பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்தியாவில் தொழில் மயமாக்கலின் செயல்பாடு தொடங்கியது.
- நவீன தொழில் துறையின் தொடக்கமானது சணல், பருத்தி மற்றும் எஃகு தொழில்களின் வளர்ச்சியுடன் தொடர்புடையது.

**அ) தோட்டத் தொழில்கள்:**

- அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் 1839 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது
- அதே நேரத்தில் காபி தோட்டமும் தொடங்கப்பட்டது.
- மூன்றாவது முக்கியத்தோட்டத் தொழில் சணல்

**ஆ) இயந்திர அடிப்படையிலான தொழில்கள்:**

- இந்தியாவில் 1854 ஆம் ஆண்டு பம்பாயில் பருத்தி நூற்பு ஆலை நிறுவப்பட்டது.
- 1855 ஆம் ஆண்டு கல்கத்தாவிற்கு அருகில் ரிஷ்ரா என்ற இடத்தில் ஹூக்ளி ஆற்றங்கரையில் சணல் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.
- 1870 ஆம் ஆண்டு முதல் காகித ஆலை கல்கத்தாவுக்கு அருகில் பாலிகன்ஜ் என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.
- கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் காணப்படும் முக்கிய இடம் கான்பூர்.

**இ) கனரக தொழில்கள்:**

- கனரக தொழில்களில் இரும்பு மற்றும் எஃகு தொழில் அடங்கும்.
- 1874 ஆம் ஆண்டு குல்டி என்ற இடத்தில் முதன் முறையாக நவீன முறையில் எஃகு தயாரிக்கப்பட்டது.
- இந்தியாவில் மிகப் பெரிய அளவிலான எஃகு உற்பத்தியை மேம்படுத்திய பெருமைக்குரியவர் ஜாம்ஷெட்ஜி டாடா ஆவார்.
- 1907ஆம் ஆண்டு ஜாம்ஷெட்பூர் என்ற இடத்தில் டாட்டா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) அமைக்கப்பட்டது.
- இந்நிறுவனம் 1911 ஆம் ஆண்டு தேனிரும்பு மற்றும் 1912ஆம் ஆண்டு உலோக வார்ப்புக்கட்டிகளையும் உற்பத்தி செய்தது.

**நவீன தொழிலகங்களின் வளர்ச்சி:**

- 1861 ஆம் ஆண்டு 2,573 கிலோ மீட்டர்களாக இருந்த ரயில்வேயின் நீளம் 1914 ஆம் ஆண்டு 55,773 கிலோமீட்டர்களாக அதிகரித்தது.
- சூயஸ் கால்வாய் திறப்பு ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்குமான தூரத்தைச் சுமார் 4530 கிலோமீட்டர் தூரமாக குறைத்தது.
- சுதேசி இயக்கத்தின் விளைவாக பருத்தி ஆலைகள் 194 லிருந்து 273 ஆகவும் சணல் ஆலைகள் 36 லிருந்து 64 ஆகவும் அதிகரித்தன.

**இந்திய தொழில்துறை கூட்டமைப்பு:**

- CII ன் விரிவாக்கம் Confederation of Indian Industry ஆகும்
- இந்திய தொழில்துறை கூட்டமைப்பு என்பது இந்தியாவில் உள்ள ஒரு வணிகர் சங்கம் ஆகும்.
- இது 1985 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- தனியார் மற்றும் பொதுத் துறைகளை உள்ளடக்கிய சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் இருந்தும் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் இருந்தும் 9000 உறுப்பினர்களை கொண்டு உருவாக்கப்பட்டது ஆகும்.
- 1956 ஆம் ஆண்டு தொழிற்துறை கொள்கை தீர்மானத்தின்படி தொழில் துறையானது மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- அட்டவணை 1 - இவ்வகையான தொழிற்துறைகளில் அரசாங்கம் மட்டுமே நிர்வகிக்கும் அவற்றுள் சில அணுசக்தி, மின்னணு, இரும்பு மற்றும் எஃகு ஆகியவை அடங்கும்.

www.kalvinews.com

- அட்டவணை 2 - இவைகள் சாலைகள், கடல் போக்குவரத்து, இயந்திரக் கருவிகள், அலுமினியம், நெகிழி மற்றும் உரங்கள் உள்ளிட்ட இரசாயனங்கள், இரும்பு கலவை மற்றும் குறிப்பிட்ட வகையான சுரங்கங்கள் ஆகியவை அடங்கும்.
- அட்டவணை 3 - இந்த வகையின் கீழ் மீதமுள்ள தொழில்கள் மற்றும் தனியாருக்கு விடப்பட்ட துறைகள் ஆகியவை அடங்கும்.

**தொழிலக வகைப்பாடு:**

- மூலப் பொருட்களின் அடிப்படையில் தொழில்களை வேளாண் அடிப்படையிலானவை மற்றும் கனிம அடிப்படையிலானவை என வகைப்படுத்தலாம்.
- தொழிலகங்கள் அவர்களின் பங்களிப்பின்படி அடிப்படை தொழில்கள் மற்றும் முக்கிய தொழில்கள் எனவும் வகைப்படுத்தலாம்.
- தொழில் உரிமத்தின் அடிப்படையில் பொதுத்துறை தனியார் துறை மற்றும் கூட்டுறவுத்துறை என தொழிலகங்களை வகைப்படுத்தலாம்.

**இந்தியாவில் தொழிற்துறை வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள்:**

**அ) தொழில்துறை வளர்ச்சி (1950 - 1965)**

- இந்த காலகட்டத்தில் பெரும்பான்மையான நுகர்வோர் பொருட்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டன.
- மேலும் இக்காலகட்டத்தில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஒரு துரிதமான வளர்ச்சியைக் கண்டது.

**ஆ) தொழிற்துறை வளர்ச்சி (1965 - 1980)**

- முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் பெரும்பாலும் மூலதனப்பொருட்கள் துறையின் வளர்ச்சியில் கவனம் செலுத்தியதால் நுகர்வோர் பொருட்களின் துறை புறக்கணிக்கப்பட்டது.
- நுகர்வோர் பொருட்களின் துறையே கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும்.
- இதன் விளைவாக தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி விகிதம் வீழ்ச்சி அடைந்தது. எனவே இந்த காலகட்டம் பின்னடைவு காலமாக கருதப்படுகிறது..

**இ) தொழிற்துறை வளர்ச்சி (1980 - 1991)**

- 1980 களின் காலகட்டத்தை தொழில்துறையின் மீட்பு காலமாக கருதலாம்.ஏனெனில் இந்த காலத்தில் தொழிற்துறை மிகவும் வளமான வளர்ச்சியைக் கண்டது.

**ஈ) 1991 ஆம் ஆண்டு பொருளாதார சீர்திருத்தத்திற்கு பின்னர் தொழிற்துறை வளர்ச்சி**

- 1991 ஆம் ஆண்டு பொருளாதார தாராளமயமாக்கல் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது.
- பத்தாவது மற்றும் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் தொழில்துறை உற்பத்தியில் உயர் வளர்ச்சி விகிதத்தைக் கண்டன.
- தொழிற்துறை உரிமத்தை ஒழித்தல், விலை கட்டுப்பாடுகளை நீக்குதல், தொழில்களுக்கான கொள்கைகளை நீர்த்துப்போகச் செய்தல் மற்றும் ஏகபோக சட்டத்தின் மாயை ஒழித்தல் ஆகியவை இந்திய தொழிற்துறையை செழிக்க உதவியது.

**நவீனமயமாக்கல்:**

- தகவல் தொழில்நுட்பம் என்ற சொல் மென் பொருளுடன் கணினி மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தையும் உள்ளடக்கியது.

www.kalvinews.com

**தற்சார்புடைமை:**

- இயந்திரங்கள், ஆலைகள் மற்றும் இதர தளவாடங்கள் உற்பத்தியில் நாம் தற்சார்பினை அடைந்துள்ளோம்.
- 70 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா மின்சார உற்பத்தியில் ஆசிய நாடுகளில் மூன்றாவது மிகப்பெரிய நாடாக உருவாகியுள்ளது.

பயிற்சி வினாக்கள்:

1. பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இந்தியா என்று கூறியவர் _______.
   (1) தவர்னியர் (2) எட்வர்ட் பெயின்ஸ்
   (3) ஷாஜஹான் (4) பெர்னியர்
2. முகலாயப் பேரரசர் ஷாஜகான் ஆட்சியின்போது இந்தியாவிற்கு வருகை தந்த பிரெஞ்ச் நாட்டு பயணி _______.
   (1) பெர்னியர் (2) தவர்னியர்
   (3) எட்வர்ட் பெயின்ஸ் (4) மெக்காலே
3. _______ இந்திய மக்களின் வாழ்க்கையில் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது.
   (1) ஆடைகள் தயாரிப்பு (2) சணல் தயாரிப்பு
   (3) கைவினைப்பொருட்கள் (4) இரும்பு உருக்குதல்
4. பின்வருவனவற்றில் மக்களின் எந்தச் செயல்பாடுகள் கைகளில் சாராதவை?
   (1) கல்லில் இருந்து சிலையைச் செதுக்குதல்
   (2) கண்ணாடி வளையல் உருவாக்குதல்
   (3) பட்டு சேலை நெய்தல்
   (4) இரும்பை உருக்குதல்
5. _______ தொழில் இந்தியாவின் பழமையான தொழில் ஆகும்.
   (1) நெசவு (2) எஃகு (3) மின்சக்தி (4) உரங்கள்
6. பருத்தி மற்றும் பட்டு ஆடைகளில் சிறந்த தரத்திற்கு பிரபலமான நாடு _______.
   (1) அமெரிக்கா (2) இங்கிலாந்து (3) இந்தியா (4) ரஷ்யா
7. மணி தயாரிக்கப் பயன்படும் வெண்கல உலோகத்திற்கு புகழ்பெற்ற நகரம் _______.
   (1) டாக்கா (2) சௌராஷ்டிரா (3) வங்காளம் (4) சென்னை
8. தகர தொழிற்சாலைக்கு புகழ்பெற்ற நகரம் _______.
   (1) டாக்கா (2) சென்னை (3) பம்பாய் (4) வங்காளம்
9. மஸ்லின் ஆடைகளுக்கு புகழ்பெற்ற நகரம் _______.
   (1) டாக்கா (2) சென்னை (3) சௌராஷ்டிரா (4) வங்காளம்
10. ஒரு தீப்பெட்டிக்குள் எத்தனை மீட்டர் மஸ்லின் துணியை வைக்கலாம்?
    (1) 60 மீட்டர் (2) 40 மீட்டர் (3) 30 மீட்டர் (4) 50 மீட்டர்

www.kalvinews.com

11. எகிப்திய கல்லறைகளில் உள்ள மம்மிகள் மீது சுற்றப்பட்டிருக்கும் ஆடையின் வகை _______.
(1) நைலான் (2) மஸ்லீன் (பருத்தி)
(3) பட்டு (4) கம்பளி

12. கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் காணப்படும் முக்கிய இடம் _______.
(1) பம்பாய் (2) அகமதாபாத் (3) கான்பூர் (4) டாக்கா

13. செல்வச் சுரண்டல் கோட்பாட்டை முதலில் ஏற்றுக்கொண்டவர் _______.
(1) தாதாபாய் நௌரோஜி (2) பெர்னியர்
(3) தவர்னியர் (4) ஷாஜஹான்

14. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டு _______.
(1) 1840 (2) 1839 (3) 1849 (4) 1829

15. கிழக்கிந்திய பகுதிகளில் மிக முக்கியமான தொழில் _______.
(1) சணல் (2) இரும்பு உருக்குதல்
(3) தேயிலை (4) உரங்கள்

16. பம்பாயில் பருத்தி நூற்பு ஆலை நிறுவிய ஆண்டு _______.
(1) 1754 (2) 1954 (3) 1864 (4) 1854

17. 1854 ஆம் ஆண்டு பருத்தி நூற்பு ஆலை நிறுவிய இடம் _______.
(1) பம்பாய் (2) சென்னை (3) டெல்லி (4) கல்கத்தா

18. கொல்கத்தா அருகில் உள்ள ஹூக்ளி பள்ளத்தாக்கில் _______ என்ற இடத்தில் சணல் தொழிலகம் ஆரம்பிக்கப்பட்டது.
(1) ஜாம்ஷெட்பூர் (2) ரிஷ்ரா (3) சூரத் (4) பாலிகன்ஜ்

19. _______ ஆண்டு கல்கத்தாவுக்கு அருகில் பாலிகன்ஜ் என்ற இடத்தில் காகித ஆலை தொடங்கப்பட்டது.
(1) 1970 (2) 1670 (3) 1870 (4) 1570

20. பருத்தி ஆலைகள் அதிகமாக தொடங்கப்பட்ட மாநிலங்கள் _______.
(1) கான்பூர் மற்றும் சென்னை
(2) டெல்லி மற்றும் கல்கத்தா
(3) பம்பாய் மற்றும் அகமதாபாத்
(4) கான்பூர் மற்றும் டெல்லி

21. கீழ்க்கண்டவற்றில் கனரக தொழில்களில் எவை அடங்கும்?
(1) இரும்பு மற்றும் எஃகு (2) நெசவு
(3) தகரம் (4) தேயிலை

22. 1874 ஆம் ஆண்டு _______ என்ற இடத்தில் முதன்முறையாக நவீன முறையில் எஃகு தயாரிக்கப்பட்டது.
(1) ரிஷ்ரா (2) ஜாம்ஷெட்பூர் (3) குல்டி (4) பாலிகன்ஜ்

www.kalvinews.com

23. இந்தியாவில் மிகப்பெரிய அளவில் எஃகு உற்பத்தியை மேம்படுத்திய பெருமைக்குரியவர் _______ ஆவார்.
(1) ஜாம்ஷெட்ஜி டாடா (2) தவர்னிபர்
(3) பெர்னியர் (4) அம்பானி

24. 1907 ஆம் ஆண்டு என்ற _______ இடத்தில் டாட்டா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் அமைக்கப்பட்டது.
(1) ரிஷ்ரா (2) குல்டி (3) ஜாம்ஷெட்பூர் (4) கான்பூர்

25. TISCO நிறுவனம் 1911 ஆம் ஆண்டு _______ உற்பத்தி செய்தது.
(1) தகரம் (2) வார்பு கட்டி (3) சணல் (4) தேனிரும்பு

26. TISCO நிறுவனம் 1912 ஆம் ஆண்டு _______ உற்பத்தி செய்தது.
(1) உலோக வார்ப்புக் கட்டிகள் (2) தகரம்
(3) தேனிரும்பு (4) சணல்

27. _______ ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தூரத்தை குறைத்தது.
(1) ஹூக்ளி பள்ளத்தாக்கு (2) சூயஸ் கால்வாய்
3) ரிஷ்ரா (4) ஜாம்ஜெட்பூர்

28. _______ இயக்கத்தின் விளைவாக பருத்தி ஆலைகள் 194 இருந்து 273 ஆகவும் சணல் ஆலைகள் 36 லிருந்து 64 ஆகவும் அதிகரித்தன.
(1) தொழிற்புரட்சி (2) சுதேசி (3) மக்கள் (4) சோஷலிச

29. CII ன் ஆங்கில விரிவாக்கம் _______.
(1) CONFIDENTIAL OF INDIAN INSTITUTE (2) CONSUMER OF INDIAN INDUSTRY
3) CONFEDERATION OF INDIAN INSTITUTE (4) CONFEDERATION OF INDIAN INDUSTRY

30. இந்திய தொழில்துறை கூட்டமைப்பு _______ ஆண்டு நிறுவப்பட்டது.
(1) 1975 (2) 1985 (3) 1995 (4) 1885

31. இந்திய தொழிற்துறை கூட்டமைப்பில் உள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை _______.
(1) 70000 2) 8000 (3) 90000 (4) 9000

32. இந்தியாவின் முதல் மூன்று, ஐந்தாண்டு திட்டங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது என்ன?
(1) மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
(2) எழுத்தறிவின்மையைக் குறைத்தல்
(3) வலுவான தொழில்துறைத் தளத்தை உருவாக்குதல்
(4) பெண்களுக்கு அதிகாரமளித்தல்

33. இந்தியாவில் தொழில்மயம் அழிதலுக்கு காரணம் அல்லாதது எது?
(1) ஆட்சியாளர்கள் ஆதரவின்மை
(2) இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டி
(3) இந்தியாவின் தொழிற்துறைக் கொள்கை
(4) பிரிட்டிஷாரின் வர்த்தக கொள்கை

www.kalvinews.com

34. பொருத்துக

i. தவர்னியர் - a. செல்வச் சுரண்டல் கோட்பாடு

ii. டாக்கா - b. காகித ஆலை

iii. தாதாபாய் நௌரோஜி - c. பிரெஞ்சு பயணி

iv. பாலிகன்ஜ் - d. மஸ்லின் துணி

(1) i - c ii - d iii - a iv - b

(2) i - b ii - a iii - d iv - c

(3) i - d ii - b iii - c iv - a

(4) i - a ii - c iii - b iv - d

35. சரியான கூற்றை கண்டுபிடி

(i) எட்வர்டு பெயின்ஸ் கருத்துப்படி பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இங்கிலாந்து.

(ii) இயந்திர மயமாக்கப்பட்ட தொழிற்சாலைக்கு முன்னால் இந்தியாவில் கிராம கைவினை தொழில் இரண்டாவது பெரிய தொழிற்சாலையாக அமைந்தது.

(iii) சௌராஷ்டிரா தகர தொழிற்சாலைக்கு பெயர் பெற்றது.

(iv) சூயஸ் கால்வாய் கட்டப்பட்டதால் இந்தியாவில் பிரிட்டிஷாரின் பொருட்கள் மலிவாக கிடைக்க வழிவகை உருவானது.

1) (i) மற்றும் (ii) சரி (2) (ii) மற்றும் (iv) சரி

(3) (iii) மற்றும் (iv) சரி (4) (i), (ii) மற்றும் (iii) சரி

36. கூற்று: இந்திய கைவினைஞர்கள் பிரிட்டிஷாரின் காலனி ஆதிக்கத்தில் நலிவுற்றனர்.

காரணம்: பிரிட்டிஷார் இந்தியாவை தனது மூலப்பொருள் தயாரிப்பாளராகவும் முடிவுற்ற பொருட்களுக்கான சந்தையாகவும் கருதினர்.

(1) கூற்று சரி. காரணம் கூற்றுக்கான விளக்கம்

(2) கூற்று சரி. ஆனால் கூற்றுக்கான காரணம் சரியாக விளக்கவில்லை.

(3) கூற்றும் காரணமும் சரி

(4) கூற்றும் காரணமும் தவறானவை.

37. பின்வருவனவற்றுள் சரியாக பொருந்தாதது ஒன்று எது?

(1) பெர்னியர் - ஷாஜகான்

(2) பருத்தி ஆலை - அகமதாபாத்

(3) TISCO - ஜாம்ஷெட்பூர்

(4) பொருளாதார தாராளமயமாக்கல் - 1980

38. இந்தியா மின்சார உற்பத்தியில் ஆசிய நாடுகளில் _______ மிகப்பெரிய நாடாக உருவாகி உள்ளது.

(1) ஒன்றாவது (2) இரண்டாவது

(3) மூன்றாவது (4) நான்காவது

39. புகழ்பெற்ற _______ காலனித்துவ ஆட்சியில் சீர்குலைந்தன.

1) பட்டுத் தொழில் (2) கைவினைப்பொருட்கள்

(3) இரும்பு உருக்குதல் (4) சணல்

www.kalvinews.com

40. தொழிற்துறையின் மீட்பு காலம் எனக் கருதப்படும் ஆண்டு _______.

(1) 1990 (2) 1960 (3) 1970 (4) 1980

41. _______ ஆம் ஆண்டு பொருளாதார தாராளமயமாக்கல் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது.

(1) 1991 (2) 1981 (3) 1971 (4) 1961

42. _______ ஆம் ஆண்டு தொழில்துறை கொள்கை தீர்மானத்தினால் அரசாங்கம் தொழில்துறையில் நேரடியாக பங்களிப்பினை வெளிப்படுத்துகிறது.

(1) 1938 (2) 1958 (3) 1948 (4) 1968

43. 1956 ஆம் ஆண்டு தொழில்துறை கொள்கை தீர்மானத்தின்படி தொழில் துறையானது _______ வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(1) ஒன்று (2) இரண்டு (3) மூன்று (4) நான்கு

44. தொழிற்புரட்சி நடைபெற்ற இடம் _______.

(1) இந்தியா (2) ரஷ்யா (3) இங்கிலாந்து (4) ஈரான்

45. TISCO என்பதன் விரிவாக்கம் _______.

(1) Tata Iron and Sattellite Company Limited

(2) Tata Iron and Silver Company Limited

(3) Tata Iron and Steel Company Limited

(4) Tata Iron and Sand Company Limited

46. _______ ஆம் ஆண்டு ஜாம்ஷெட்பூரில் TISCO அமைக்கப்பட்டது. (NMMS 2019-20)

(1) 1907 (2) 1911 (3) 1912 (4) 1870

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 11 | (2) | 21 | (1) | 31 | (4) | 41 | (1) |
| 2 | (1) | 12 | (3) | 22 | (3) | 32 | (3) | 42 | (3) |
| 3 | (3) | 13 | (1) | 23 | (1) | 33 | (3) | 43 | (2) |
| 4 | (4) | 14 | (2) | 24 | (3) | 34 | (1) | 44 | (3) |
| 5 | (1) | 15 | (3) | 25 | (4) | 35 | (2) | 45 | (3) |
| 6 | (3) | 16 | (4) | 26 | (1) | 36 | (1) | 46 | (1) |
| 7 | (2) | 17 | (1) | 27 | (2) | 37 | (4) | | |
| 8 | (4) | 18 | (2) | 28 | (2) | 38 | (3) | | |
| 9 | (1) | 19 | (3) | 29 | (4) | 39 | (2) | | |
| 10 | (4) | 20 | (3) | 30 | (2) | 40 | (4) | | |

www.kalvinews.com



## 7. ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள்

தொகுப்பு:

**திரு.சு.எலிசா, M.Sc.,M.Phil.,B.Ed.,**
**பட்டதாரி தலைமை ஆசிரியர்,**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, ரெட்டிமாங்குப்பம்,**
**வேலூர் மாவட்டம்.**

மேம்பாடு:

**திரு.பா. முத்துப் பாண்டி, M.Sc.,B.Ed.,,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, சித்திரங்குடி,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- இந்தியாவில் உள்ள நகரங்களைப் **பண்டைய கால நகரங்கள்**, **இடைக்கால நகரங்கள்** மற்றும் **நவீன கால நகரங்கள்** என வகைப்படுத்தலாம்.

**பண்டைய கால நகரங்கள்:**

- பண்டைய காலங்களில், மன்னர்களின் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் நகரங்களாகத் தோன்றின.
- **ஹரப்பா, மொகஞ்சதாரோ, வாரணாசி, அலகாபாத்** மற்றும் **மதுரை** ஆகியவை புகழ்பெற்ற **பண்டைய கால நகரங்கள்** ஆகும்

**இடைக்கால நகரங்கள்**.

- இடைக்காலத்தில் பெரும்பாலான நகரங்கள், பிராந்திய மற்றும் மாகாணங்களின் தலைநகரங்களாக விளங்கின.
- பெரும்பாலான **இடைக்கால நகரங்கள்,** கோட்டை நகரமாக அல்லது துறைமுக நகரமாகச் செயல்பட்டன.
- **டெல்லி**, **ஹைதராபாத்**, **ஜெய்ப்பூர்**, **லக்னோ**, **ஆக்ரா** மற்றும் **நாக்பூர்** ஆகியவை இடைக்கால நகரங்கள் மற்றும் கோட்டை நகரங்கள் என அழைக்கப்படுகின்றன.

**நவீன கால நகரங்கள்:**

- ஐரோப்பியர்கள் உருவாக்கிய நகரங்கள் **சூரத்**, **டாமன்**, **கோவா** மற்றும் **பாண்டிச்சேரி** ஆகியவையாகும்.
- பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள, நிருவாகத் தலைநகரங்களாகவும் மற்றும் வாணிப மையங்களாகவும் உருவாக்கிய நகரங்கள் **மும்பை, சென்னை** மற்றும் **கொல்கத்தா** ஆகும்.

**ஆங்கிலேயரின் ஆட்சியில் நகரமயமாக்கலின் தனித்துவங்கள்**:

**தொழில் முடக்கப்படுதல்**:

- 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்களின் கொள்கைகள் நகரமயமாக்கலுக்கு எதிராக இருந்தன. பின்னர், ஆங்கிலேயர்கள் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகள், இந்தியாவின் பொருளாதாரத்தை விரைவாகக் காலனித்துவப் பொருளாதாரமாக மாற்றுவதற்கும், நகரங்களின் வளர்ச்சிக்கும் வழிவகுத்தன.

www.kalvinews.com

- ஆங்கிலேயர்களின் ஒரு வழியிலான, சுதந்திரமான வர்த்தகத்தின் விளைவாக இந்திய உற்பத்தித் தொழில்கள் அழிக்கப்பட்டன.
- நகர்ப்புற கைவினைத் தொழில்களில் திடீர் சரிவு ஏற்பட்டது.
- நீண்ட காலமாகச் சிறப்பான உற்பத்தி பொருளுக்காகப் புகழ் பெற்ற நகர்ப்புறச் சந்தைகள் தொடர்ந்து குறைந்தன.
- டாக்கா, மூர்ஷிதாபாத், சூரத் மற்றும் லக்னோ போன்ற உற்பத்தி நகரங்கள் முக்கியத்துவத்தை இழந்தன.
- இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் கடுமையான போட்டியால், ஒட்டுமொத்த தொழில்துறை கட்டமைப்பும் செயலிழந்து போனது..
- இந்தியக் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்த நகரங்கள், தொழிற்புரட்சியின் விளைவால் அழிந்தன.
- அதிகப்படியான இறக்குமதி வரி மற்றும் ஏற்றுமதி சார்ந்த பிற கட்டுப்பாடுகள் காரணமாக, இந்தியப் பொருள்கள், பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இறக்குமதி செய்யப்படுவது குறைந்தன.
- இந்தியா, பிரிட்டனின் வேளாண்மைக் குடியேற்றமாக மாறியது.

**நகரமயமாதல் குறைதல்:**

- மன்னர்களின் அதிகாரங்கள் படிப்படியாகச் சரியத் தொடங்கியதால், அவர்களது ஆட்சியுடன் தொடர்புடைய நகரங்கள் அழியத் தொடங்கின.
- 19 ஆம் நூற்றாண்டில் இருந்து பேரரசின் தலைநகரமாக இருந்த ஆக்ரா முற்றிலும் அழிக்கப்பட்டது.
- பிரிட்டிஷாரின் ஏகாதிபத்திய கொள்கைகளின் விளைவாக, இந்திய அரசர்கள் தங்களது ஆட்சியை இழந்தனர்.
- பிரிட்டிஷ் காலத்திற்கு முந்தைய நகர்ப்புற மையங்களின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணம், 1853 ஆம் ஆண்டு இந்தியாவில் இருப்புப் பாதைகளை (இரயில்வே) அறிமுகப்படுத்தியதாகும்.
- இரயில்வே அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, வர்த்தகப் பாதைகள் திசைதிருப்பப்பட்டு, ஒவ்வொரு இரயில் நிலையமும் மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் மையமாக மாறியது.
- பிரிட்டிஷ் உற்பத்தியாளர்கள், நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சென்றடைய இரயில்வே வழிவகுத்ததால், நாட்டின் கிராமங்களிலுள்ள பாரம்பரியத் தொழில்கள் அடியோடு நசிந்தன.

**புதிய நகர மையங்களின் வளர்ச்சி:**

- ஆங்கிலேயர்களால் புதிதாக வளர்ச்சி பெற்ற நகரங்களை மலை நகரங்கள், தொழில் நகரங்கள், நீதிமன்ற நகரங்கள், இருப்புப்பாதை நகரங்கள், இராணுவக் குடியிருப்புகள் மற்றும் நிர்வாக நகரங்கள் எனப் பிரித்து உருவாக்கினர்.
- 1853 ஆம் ஆண்டு இந்தியாவில் **இருப்புப் பாதைகள்** அறிமுகப்படுத்தப்பட்டன.
- கிழக்கு மற்றும் மேற்குக் கடலோரப் பகுதிகளில் உள்ள **கொல்கத்தா, மதராஸ்** மற்றும் **பம்பாய்** போன்ற இடங்களில் பிரிட்டிஷ் புதிய **வர்த்தக மையங்களை** உருவாக்கியது.
- **மதராஸ்** - 1639, **பம்பாய்** - 1661 மற்றும் **கல்கத்தா** - 1690 ஆகிய நகரங்கள் பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டன.

www.kalvinews.com

- 1757 ஆம் ஆண்டு **பிளாசிப்** போருக்குப் பின்னர், ஆங்கிலேயர்கள் படிப்படியாக அரசியல் ஆதிக்கம் பெற்றனர்.
- சூயஸ் கால்வாய் திறப்பு, நீராவிப் போக்குவரத்து அறிமுகம், ரயில்வே சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் அமைத்தல், துறைமுகங்கள், தொழிற்சாலைகளின் வளர்ச்சி, நிலக்கரிச் சுரங்கம், தேயிலைத் தோட்டம், வங்கிப் பணி, கப்பல் போக்குவரத்து மற்றும் காப்பீடு போன்றவற்றின் வளர்ச்சியினால், 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் **நகரமயமாக்கல் வளர்ச்சி** பெற்றது.

**அ) துறைமுக நகரங்கள்:**

- ஆங்கிலேயர்களின் வர்த்தகத்திற்காகத் துவங்கப்பட்ட துறைமுகங்கள்: **மெட்ராஸ், கொல்கத்தா** மற்றும் **பம்பாய்** ஆகும்.
- சென்னையில் **புனித ஜார்ஜ் கோட்டையும்**, கொல்கத்தாவில் **புனித வில்லியம் கோட்டையும்** ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட கோட்டைகள் ஆகும்.

**ஆ) இராணுவக் குடியிருப்பு நகரங்கள்:**

- இராணுவக் குடியிருப்புகள் முற்றிலும் புதிய நகர்ப்புற மையங்களாக இருந்தன. இராணுவக் குடியிருப்பு நகரங்களுக்கு எடுத்துக்காட்டு: **கான்பூர்** மற்றும் **லாகூர்.**
- முகலாயர்களின் பொழுதுபோக்கு மையமாக திகழ்ந்த நகரம் - **ஸ்ரீநகர்.**
- இந்து சமய மையங்களாக விளங்கிய நகரங்கள் - **கேதார்நாத்** மற்றும் **பத்ரிநாத்.**

**இ) மலை வாழிடங்கள்:**

- காலனித்துவ ஆட்சியாளர்கள், சுகாதாரம் மற்றும் பொழுதுபோக்குக்காக உருவாக்கிய இடங்களே மலை வாழிடங்கள் ஆகும்.
- ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட மலை வாழிடங்கள் - **சிம்லா, நைனிடால்**, **டார்ஜிலிங், உதகமண்டலம்** மற்றும் **கொடைக்கானல்.**
- 1814 - 1816 ஆம் ஆண்டு **கூர்க்கர்களுடன்** நடைபெற்ற போரின்போது, ஆங்கிலேயர்களால் **சிம்லா** நகரம் நிறுவப்பட்டது.
- 1835 ஆம் ஆண்டு சிக்கிம் ஆட்சியாளர்களிடம் இருந்து டார்ஜிலிங் பகுதியானது கைப்பற்றப்பட்டது.

**ஈ) இரயில்வே நகரங்கள்:**

- இரயில்வே நகரங்கள், படைகள் மற்றும் பல பொருள்களின் விரைவான போக்குவரத்திற்காக உருவாக்கப்பட்டன.
- சென்னை, மும்பை, கொல்கத்தா - இரயில்வே நகரங்கள்.

**நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தோற்றுவிக்கப்படுதல்:**

**அ) முதல் கட்டம் (1688 - 1882):**

- இந்தியாவில் நகராட்சி அரசாங்கம் 1688 இல் **சென்னை**யில் ஒரு மேயர் பதவியுடன் உருவானது.
- சென்னை மாநகராட்சி உருவாவதற்குக் காரணமாக இருந்தவர் **சர். ஜோசியா சைல்டு** ஆவார்.
- 1793 ஆம் ஆண்டின் **பட்டயச் சட்டம்**, நகராட்சி நிர்வாகத்தை நிறுவியது.
- வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களிலும், அயோத்தியிலும் நகராட்சிகள் 1805 ஆம் ஆண்டு சட்டப்படி அமைக்கப்பட்டன.
- **மேயோ பிரபுவினால்** 1870 ஆம் ஆண்டில் போடப்பட்ட தீர்மானம், உள்ளாட்சி அரசாங்கத்தின் வளர்ச்சியை நோக்கமாக கொண்டிருந்தது.

www.kalvinews.com

**ஆ) இரண்டாம் கட்டம்** **(1882 - 1920):**

- உள்ளாட்சி அமைப்பின் தந்தை என அழைக்கப்பட்டவர் **ரிப்பன் பிரபு** ஆவார்.
- உள்ளாட்சி அரசாங்கம் தொடர்பான ரிப்பன் பிரபுவின் தீர்மானம், **உள்ளாட்சி அரசாங்கத்தின் மகாசாசனம்** என கருதப்பட்டது.

**இ) மூன்றாம் கட்டம்** **(1920 - 1950):**

- **மாகாணங்களில் இரட்டை ஆட்சியை** 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் அறிமுகப்படுத்தியது.
- **மாகாணங்களின் சுய ஆட்சியை** 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் அறிமுகப்படுத்தியது.

**மாகாண நகரங்களின் நிர்வாகம்:**

- 18 ஆம் நூற்றாண்டின் முடிவில் நாடாளுமன்றத்தின் ஒரு சட்டம், தலைமை ஆளுநருக்கு மாகாண நகரங்களில் அமைதியை ஏற்படுத்த நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தை அளித்தது.

**மதராஸின் தோற்றம் மற்றும் வளர்ச்சி:**

- ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழு கி.பி(பொது ஆண்டு) 1600 இல் தொடங்கப்பட்டது.
- மசூலிப்பட்டின கழக உறுப்பினர் மற்றும் ஆர்மகான் தொழிற்சாலையின் தலைவரான பிரான்சிஸ் டே, 1637 ஆம் ஆண்டு ஒரு புதிய குடியேற்றத்திற்கான தளத்தைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில் ஒரு ஆய்வு பயணத்தை மேற்கொண்டார். இறுதியில் மதராசப்பட்டினத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. பிரான்சிஸ் டே அந்த இடத்தை ஆய்வு செய்து, அது தொழிற்சாலை அமைப்பிற்கு ஏற்ற இடம் என்பதைக் கண்டறிந்தார். சந்திரகிரி (திருப்பதிக்கு மேற்கே 12 கி.மீ) அரசரின் பிரதிநிதியான தமர்லா வெங்கடபதி அவர்களால் அதிகாரபூர்வமான மானியமாக நிலம் வழங்கப்பட்டது.
- கூவம் நதிக்கும், எழும்பூருக்கும் இடையில் ஒரு சிறுபகுதி நிலத்தைத் தமர்லா பிரிட்டிஷாருக்கு வழங்கினார். ஒப்பந்தப் பத்திரம் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியின் பிரான்சிஸ் டே அவர்களால் 1639 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டபோது, அவருடன் மொழிபெயர்ப்பாளரான பெரி திம்மப்பா மற்றும் உயர் அலுவலர் ஆண்ட்ரு கோகன் உடனிருந்தனர்.

**மதராசப்பட்டினம்:**

- வெங்கடபதியைத் தொடர்ந்து 1642 இல் ஸ்ரீரங்கராயலு பதவிக்கு வந்தார். அவர் ஆங்கிலேயருக்கு 1645 இல் ஸ்ரீரங்கராயப்பட்டினம் எனும் புதிய மானியத்தை வழங்கினார்.
- வெங்கடபதி, அவரது தந்தை சென்னப்ப நாயக்கர் பெயரால், ஆங்கிலேயர்களின் புதிய கோட்டை மற்றும் குடியேற்றங்கள், சென்னப்பட்டினம் என்று அழைக்கப்படவேண்டும் என விரும்பினார்.
- ஆனால், ஆங்கிலேயர்கள் 2 ஐக்கிய நகரங்களையும் மதராசப் பட்டினம் என்று அழைக்க விரும்பினார்கள்.

**சென்னை உருவாதல்:**

- புனித ஜார்ஜின் தினமான ஏப்ரல் 23, 1640 அன்று முதல் தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு அதற்குப் புனித ஜார்ஜ் கோட்டை என்று பெயரிடப்பட்டது.
- **சென்னை மாகாணம்** என்பது தமிழ்நாடு, லட்சத்தீவு, வடக்கு கேரளா, ராயல்சீமா, கடலோர ஆந்திரா, கர்நாடகா மாவட்டங்கள் மற்றும் தெற்கு ஒரிசாவின் பல்வேறு மாவட்டங்களைக் கொண்டிருந்தது.
- பிரிட்டிஷ் வகையிலான, ரோமானிய பாணியில் அமைந்த கட்டடங்கள், கொல்கத்தாவிலுள்ள டல்ஹௌசி **சதுக்கம்** மற்றும் சென்னையில் உள்ள **புனித ஜார்ஜ் கோட்டை** ஆகியவையாகும்.

www.kalvinews.com

- 1947 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு மதராஸ் மாகாணம் **மதராஸ் மாநிலம்** ஆக மாறியது.
- 1969 இல் மதராஸ் மாநிலம் **தமிழ்நாடு** எனப் பெயர் மாற்றப்பட்டது.
- **1996 ஜூலை 17** ஆம் தேதி மதராஸ் அதிகாரப்பூர்வமாகச் **சென்னை** எனப் பெயர் மாற்றப்பட்டது.

**பம்பாய்:**

- **ஏழு தீவுகளைக்** கொண்ட நகரம் பம்பாய் ஆகும்.
- இது 1534 லிருந்து போர்ச்சுகீசியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுகீசிய மன்னரின் சகோதரியைத் திருமணம் செய்து கொண்டதற்குப் பம்பாய் பகுதியை 1661 இல் சீதனமாகப் பெற்றார்.
- ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம், **1687** ஆம் ஆண்டு, அதன் தலைமையகத்தைச் சூரத்திலிருந்து **பம்பாய்க்கு** மாற்றியது.

**கல்கத்தா:**

- ஆங்கில வணிகர்கள் சுதாநுதியில் 1690ஆம் ஆண்டு ஒரு குடியேற்றத்தை நிறுவினர்.
- ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம், 1698 ஆம் ஆண்டு, கொல்கத்தாவில் **வில்லியம் கோட்டையை** நிறுவியது.

**பயிற்சி வினாக்கள்:**

1. கீழ்க்கண்டவற்றுள் பழங்கால நகரங்கள் _______.
   (1) ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ (2) டெல்லி மற்றும் ஹைதராபாத்
   (3) பம்பாய் மற்றும் கொல்கத்தா (4) மேற்கண்ட எதுவுமில்லை

2. "கோட்டை நகரங்கள்" என்று அழைக்கப்படுபவை _______.
   (1) சூரத் மற்றும் டாமன் (2) கொச்சின் மற்றும் திருவனந்தபுரம்
   (3) டெல்லி மற்றும் ஹைதராபாத் (4) கோவா மற்றும் பாண்டிச்சேரி

3. மும்பை, சென்னை மற்றும் கொல்கத்தா ஆகிய நகரங்களை மையமாகக் கொண்டிருந்த ஐரோப்பியர்கள் _______.
   (1) பிரெஞ்சுகாரர்கள் (2) போர்ச்சிகீசியர்கள்
   (3) டச்சுக்கார்கள் (4) ஆங்கிலேயர்கள்

4. புகழ்பெற்ற உற்பத்தி நகரங்களாக விளங்கியவை _______.
   (1) டாக்கா (2) முர்ஷிதாபாத்
   (3) சூரத் (4) மேற்கண்ட அனைத்தும்

5. இந்தியாவில் இருப்புப்பாதை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு _______.
   (1) 1854 (2) 1853 (3) 1852 (4) 1856

6. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய, நகரமயமாக்கலின் ஒரு புதிய நடைமுறை எது?
   (1) நீராவிப் போக்குவரத்து அறிமுகம் (2) ரயில்வே கட்டுமானம்
   (3) சூயஸ் கால்வாய் திறப்பு (4) மேற்கண்ட அனைத்தும்

7. புனித வில்லியம் கோட்டை கட்டப்பட்ட இடம் எது?
   (1) மும்பை (2) சென்னை (3) கல்கத்தா (4) கடலூர்

www.kalvinews.com

8. இராணுவக் குடியிருப்பு நகரங்களை ஆங்கிலேயர்கள் உருவாக்கிய பகுதி ______.
(1) சென்னை (2) கராச்சி (3) கான்பூர் (4) ஹைதராபாத்

9. முகலாயர்களின் பொழுதுபோக்கு மையமாக இருந்த இடம் ______.
(1) ஸ்ரீநகர் (2) சிம்லா (3) உதகமண்டலம் (4) கேதர்நாத்

10. ஐரோப்பியர்கள், யாருடன் நடைபெற்ற போரில் வெற்றி பெற்று, சிம்லா என்ற நகரத்தை உருவாக்கினர்?
(1) முகலாயர்களுடன் (2) கூர்க்கர்களுடன்
(3) சிக்கிம் ஆட்சியாளர்களுடன் (4) மேற்கண்டவற்றில் எவருமில்லை

11. சிக்கிம் ஆட்சியாளரிடம் இருந்து 1835 இல் கைப்பற்றப்பட்ட மலைப்பிரதேசம் ______.
(1) சிம்லா (2) நைனிடால் (3) டார்ஜிலிங் (4) ஸ்ரீநகர்

12. இந்தியாவில் நகராட்சி அரசாங்கம் முதன் முதலில் உருவான நகரம் ______.
(1) மும்பை (2) டில்லி (3) கல்கத்தா (4) சென்னை

13. மாநகராட்சி உருவாவதற்குக் காரணமாக இருந்தவர் யார்?
(1) டல்ஹௌசி பிரபு (2) மெக்காலே
(3) சர் ஜோசியா சைல்டு (4) மேற்கண்ட அனைவரும்

14. எந்த ஆண்டு பட்டயச் சட்டம் நகராட்சி நிர்வாகத்தை நிறுவியது?
(1) 1793 (2) 1850 (3) 1870 (4) 1688

15. உள்ளாட்சி அமைப்பின் தந்தை என அழைக்கப்பட்டவர் ______.
(1) கானிங் பிரபு (2) கர்சன் பிரபு (3) ரிப்பன் பிரபு (4) மேயோ பிரபு

16. மாகாணங்களில் இரட்டை ஆட்சிச் சட்டம், எந்த ஆண்டு இந்திய அரசு அறிவித்தது?
(1) 1947 (2) 1935 (3) 1925 (4) 1919

17. புனித ஜார்ஜ் குடியிருப்பு உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்கள் ______.
(1) பிரான்சிஸ் டே (2) ஆண்ட்ரூ கோகன்
(3) பெரி திம்மப்பா (4) மேற்கண்ட அனைவரும்

18. வெள்ளை நகரம் என்று அழைக்கப்பட்ட பகுதி ______.
(1) சர் வில்லியம் கோட்டைப் பகுதி (2) புனித ஜார்ஜ் கோட்டைப் பகுதி
(3) கோல்கொண்டா கோட்டை (4) வேலூர் கோட்டைப் பகுதி

19. கீழ்க்கண்ட நகரங்களில் எந்த நகரம் கருப்பு மற்றும் வெள்ளை நகரம் என்று அழைக்கப்படுகிறது?
(1) மும்பை (2) மதராஸ் (3) கல்கத்தா (4) டெல்லி

20. தமர்லா வெங்கடபதி எந்த பட்டணத்தை மானியமாக வழங்கினார்?
(1) மசூலிப்பட்டிணம் (2) காயல்பட்டினம்
(3) மதராசபட்டினம் (4) மேற்கண்ட அனைத்தும்

21. புனித ஜார்ஜ் தினம் ______.
(1) ஏப்ரல் 23, 1640 (2) ஏப்ரல் 24, 1640 (3) ஏப்ரல் 23, 1641 (4) ஏப்ரல் 24, 1641

www.kalvinews.com

22. தமிழக அரசின் தலைமையகமாக இருக்கும் இடம் _______.
(1) புனித வில்லியம் கோட்டை (2) புனித ஜார்ஜ் கோட்டை
(3) ரிப்பன் மாளிகை (4) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை

23. யாருடைய வருகை, நகரங்களின் வளர்ச்சியில் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தது?
(1) ஐரோப்பியர்கள் (2) சீனர்கள் (3) முகலாயர்கள் (4) அரேபியர்கள்

24. ஆங்கிலேயரின் நிருவாக தலைநகரங்களாகவும், வணிக மையங்களாகவும் இருந்த நகரங்கள் எவை?
(1) மும்பை (2) சென்னை (3) கொல்கத்தா (4) இவை அனைத்தும்

25. ஆங்கிலேயரின் ஆட்சியில் நகரமயமாக்கலின் தனித்துவங்கள் எவை?
(1) தொழில் முடக்கப்படுதல் (2) நகரமயமாதல்
(3) புதிய நகர மையங்களின் வளர்ச்சி (4) அனைத்தும்

26. கி.பி. _______ ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்களின் கொள்கைகள் நகரமயமாக்கலுக்கு எதிராக இருந்தது நிரூபணமானது.
(1) 19 (2) 18 (3) 17 (4) 16

27. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு _______.
(1) 1857 (2) 1757 (3) 1747 (4) 1758

28. பொருத்துக.

| நகரங்கள் | | உருவாக்கப்பட்ட ஆண்டுகள் | |
|---|---|---|---|
| a) மதராஸ் | - | i. | 1661 |
| b) பம்பாய் | - | ii. | 1690 |
| c) கொல்கத்தா | - | iii. | 1639 |

(1) a) - ii b) - iii c) - i (2) a) - ii b) - i c) - iii
(3) a) - iii b) - i c) - ii (4) a) - iii b) - ii c) - i

29. நிருவாக நோக்கத்திற்காகக் காலனித்துவ இந்தியா எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது?
(1) 1 (2) 2 (3) 3 (4) 4

30. இந்து சமய மையங்களாக இருந்த நகரம் / நகரங்கள் எது / எவை?
(1) கேதார்நாத் (2) பத்ரிநாத் (3) (1) மற்றும் (2) (4) எதுவுமில்லை

31. _______ உடன் நடைபெற்ற போரின் போது சிம்லா நிறுவப்பட்டது.
(1) கூர்க்கர்கள் (2) சீனர்கள் (3) அரேபியர்கள் (4) ஹீனர்கள்

32. கூர்க்கர்களுடன் நடைபெற்ற போரின் காலம் _______.
(1) கி.பி 1812 - 1818 (2) கி.பி 1816 - 1822 (3) கி.பி 1814 - 1816 (4) கி.பி 1822 - 1826

33. படைவீரர்கள் ஓய்வெடுக்கவும், நோய்களிலிருந்து மீள்வதற்கான இடமாகவும் இருந்தது எது?
(1) உதகமண்டலம் (2) நைனிடால் (3) சிம்லா (4) டார்ஜிலிங்

34. மதராஸ் மாநகராட்சி எப்போது உருவாக்கப்பட்டது?
(1) கி.பி. 1688 (2) கி.பி. 1676 (3) கி.பி. 1674 (4) கி.பி. 1671

www.kalvinews.com

35. அயோத்தி மற்றும் பம்பாய் நகராட்சிகள் எந்த ஆண்டுச் சட்டப்படி அமைக்கப்பட்டன?

(1) கி.பி. 1870 (2) கி.பி. 1798 (3) கி.பி. 1789 (4) கி.பி. 1850

36. மேயோ பிரபுவின் _______ ஆம் ஆண்டின் புகழ்பெற்ற தீர்மானம், உள்ளாட்சி அரசாங்கத்தின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

(1) கி.பி. 1870 (2) கி.பி. 1789 (3) கி.பி. 1850 (4) கி.பி. 1845

37. யாருடைய தீர்மானம் "உள்ளாட்சி அரசாங்கத்தின் மகாசாசனம்" என்று அழைக்கப்படுகிறது?

(1) வில்லியம் பெண்டிங் (2) திப்பு சுல்தான்

(3) கர்சன் பிரபு (4) ரிப்பன் பிரபு

38. மாகாண சுயாட்சியை இந்திய அரசுச் சட்டம் அறிமுகப்படுத்திய ஆண்டு _______.

(1) கி.பி. 1919 (2) கி.பி. 1935 (3) கி.பி. 1939 (4) கி.பி. 1941

39. ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழு தொடங்கப்பட்ட ஆண்டு _______.

(1) கி.பி. 1600 (2) கி.பி. 1670 (3) கி.பி. 1780 (4) கி.பி. 1678

40. சந்திரகிரி அரசரின் பிரதிநிதி _______.

(1) தமர்லா வெங்கடபதி (2) திர்மாரி வெங்கடபதி

(3) அருணாச்சல ரெட்டி (4) சாவித்ரி ரெட்டி

41. டல்ஹௌசி சதுக்கம் உள்ள இடம் _______.

(1) கொல்கத்தா (2) குஜராத் (3) பீகார் (4) டெல்லி

42. மாநில மறுசீரமைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு _______.

(1) கி.பி. 1957 (2) கி.பி. 1956 (3) கி.பி. 1961 (4) கி.பி. 1959

43. மதராஸ் மாநிலம், தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு _______.

(1) 1978 (2) 1971 (3) 1969 (4) 1967

44. மதராஸ், சென்னை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு _______.

(1) 1996 ஜூலை 17 (2) 1997 மார்ச் 22 (3) 1996 செப்டம்பர் 1 4) 1999 அக்டோபர் 3

45. பம்பாய் எத்தனை தீவுகளைக் கொண்டது?

(1) 5 (2) 6 (3) 7 (4) 8

46. ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம், அதன் தலைமையகத்தைச் சூரத்திலிருந்து பம்பாய்க்கு மாற்றிய ஆண்டு _______.

(1) கி.பி. 1687 (2) கி.பி. 1688 (3) கி.பி. 1676 (4) கி.பி. 1671

47. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

கூற்று: இந்தியா, பிரிட்டனின் வேளாண்மைக் குடியேற்றமாக மாறியது.

காரணம்: பிரிட்டனின் ஒரு வழியிலான சுதந்திரமான வர்த்தகக் கொள்கை மற்றும் தொழிற்துறை புரட்சி, இந்திய உள்நாட்டு தொழில்களை அழித்தன.

(1) கூற்று சரி மற்றும் காரணம் தவறு (2) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

(3) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது

(4) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

www.kalvinews.com

48. ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட கடலோர நகரம் / நகரங்கள்

(1) சூரத் (2) கோவா (3) பம்பாய் (4) மேற்கண்ட அனைத்தும்

49. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய நகரமயமாக்கலின் ஒரு புதிய நடைமுறை அல்லாதது எது?

(1) சூயஸ் கால்வாய் திறப்பு (2) நீராவிப் போக்குவரத்து அறிமுகம்

(3) ரயில்வே கட்டுமானம் (4) மேற்கண்ட எதுவுமில்லை

50. ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வருகை தந்தது _______.

(1) வர்த்தகத்திற்காக (2) தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காக

(3) பணி புரிவதற்காக (4) ஆட்சி செய்வதற்காக

51. புனிதஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இடம் _______.

(1) பம்பாய் (2) கடலூர் (3) மதராஸ் (4) கல்கத்தா

52. பொருத்துக

i. பம்பாய் - a) சமய மையம்

ii. இராணுவக் குடியிருப்புகள் - b) மலை வாழிடங்கள்

iii. டார்ஜிலிங் - c) ஏழு தீவு

iv. மதுரை - d) கான்பூர்

(1) i - a ii - c iii - d iv - b (2) i - c ii - d iii - b iv - a

(3) i - d ii - a iii - b iv - c (4) i - d ii - b iii - a iv - c

53. _______ இல் பிரான்சிஸ் டே மற்றும் ஆண்ட்ரூ கோகன் ஆகியோர் மதராசப்பட்டினத்தில் ஒரு தொழிற்சாலை மற்றும் வர்த்தக நிறுவனத்தை நிறுவுவதற்கு அனுமதி பெற்றனர்.

(1) கி.பி. 1657 (2) கி.பி. 1956 (3) கி.பி. 1637 (4) கி.பி. 1959

54. மாநகராட்சி உருவாவதற்குக் காரணமாக இருந்தவர் _______.

(1) பிரான்சிஸ் டே (2) ஆண்ட்ரூ கோகன்

(3) பெரி திம்மப்பா (4) சர் ஜோசியா சைல்டு

55. பின்வரும் எந்தஅறிக்கை / அறிக்கைகள் உண்மையற்றவை?

i) ஸ்ரீரங்கராயலு ஆங்கிலேயர்களுக்கு மதராசப்பட்டினத்தை மானியமாக வழங்கினார்.

ii) பிரான்சிஸ் டே மற்றும் கோகன் ஆகிய இருவரும் புனித ஜார்ஜ் கோட்டை கட்டியதற்குப் பொறுப்பானவர்கள்.

iii) 1969 ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநிலம் தமிழ்நாடு என பெயரிடப்பட்டது.

(1) i மட்டும் (2) i மற்றும் ii (3) ii மற்றும் iii (4) iii மட்டும்

56. கூற்று: ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்றுத் தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்.

காரணம்: அவர்கள் இந்தியாவில் கோடைக்காலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்.

(1) கூற்று சரி மற்றும் காரணம் தவறு. (2) கூற்று தவறு மற்றும் காரணம் சரி.

(3) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது.

(4) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை.

www.kalvinews.com

57. பின்வருவனவற்றில் எது இந்தியாவின் பண்டைய நகரம் அல்ல?

(1) வாரணாசி (2) அலகாபாத் (3) மதுரை (4) டெல்லி

58. இடைக்காலத்தில் எந்த நகரம், தலைமையகமாக உருவாக்கப்பட்டது?

(1) அலகாபாத் (2) மதுரை (3) டெல்லி (4) ஹரப்பா

59. பின்வருவனவற்றில் நவீன கடற்கரை நகரம் எது?

(1) மும்பை (2) சூரத் (3) மதுரை (4) லக்னோ

60. வர்த்தகத்தில் முக்கியப் பங்கு வகித்தவை ____________ .

(1) பெருநகரங்கள் (2) நகரங்கள்

(3) துறைமுகங்கள் (4) நகர்ப்புறங்கள்

61. டார்ஜிலிங்கின் மாற்றுத் தலைநகராக விளங்கியது எது?

(1) சிம்லா (2) டெல்லி (3) கல்கத்தா (4) டேராடூன்

62. டெல்லியின் மாற்றுத் தலைநகராக விளங்கியது எது?

(1) சிம்லா (2) டார்ஜிலிங் (3) கல்கத்தா (4) டேராடூன்

63. கீழ்க்கண்ட குழுவில், நவீன கால நகரம் எது?

(1) ஹைதராபாத் (2) நாக்பூர் (3) ஜெய்ப்பூர் (4) கல்கத்தா

64. 19 ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டில் அழிக்கப்பட்ட, பேரரசின் தலைநகரமாக இருந்த நகரம் எது?

(1) ஆக்ரா (2) டெல்லி (3) சென்னை (4) கல்கத்தா

65. ____________ போருக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் படிப்படியாக அரசியல் ஆதிக்கம் பெற்றனர்.

(1) பக்சார் (2) மைசூர் போர்-III

(3) கர்நாடகப் போர் (4) பிளாசி

66. இவற்றில் எவை உள்மாகாணங்களின் தலைநகராக விளங்கின?

(1) துறைமுக நகரங்கள் (2) இராணுவக் குடியிருப்புகள்

(3) மலை வாழிடங்கள் (4) இரயில்வே நகரங்கள்

67. மதராஸ், பம்பாய், கல்கத்தா போன்றவை ______________

(1) துறைமுக நகரங்கள் (2) இராணுவக் குடியிருப்புகள்

(3) 1 மற்றும் 4 (4) இரயில்வே நகரங்கள்

68. ஒரு நகர்ப்புறப் பகுதி என்பது.

i. அதிக மக்கள்தொகை அடர்த்தியைப் பெற்றிருக்கும்.

ii. நன்கு கட்டமைக்கப்பட்ட சூழலில் வாழ்வது.

iii. முதல் நிலைத் தொழிலில் ஈடுபடும் மக்களைக் கொண்டிருக்கும்.

iv. உணவு உற்பத்தியல்லாத தொழில்களில் ஈடுபடும் மக்களைக் கொண்டிருக்கும்.

(1) i தவிர அனைத்தும் (2) iii தவிர அனைத்தும்

(3) ii தவிர அனைத்தும் (4) iv தவிர அனைத்தும்

www.kalvinews.com

69. கிழக்குக் கடற்கரையில் தொழிற்சாலையைக் கட்டுவதற்கு, ஆங்கிலேயர்கள் அனுமதி பெற்ற முதல் இடம் ______________ .

(1) சென்னை (2) கல்கத்தா

(3) மசூலிப்பட்டினம் (4) தூத்துக்குடி

70. கிழக்கிந்தியக் கம்பெனி தொடங்கிய எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவில் தொழிற்சாலை அமைக்கப்பட்டது?

(1) 10 (2) 11 (3) 13 (4) 12

71. இவர்களில் சந்திரகிரியின் அரசராக இருந்தவர்/ இருந்தவர்கள்?

(1) தமர்லா வெங்கடபதி (2) வெங்கடபதி ராயலு

(3) இவ்விருவரும் (4) இவர்களில் யாரும் இல்லை

72. சென்னப்ப நாயக்கரின் மகன் பெயர் __________ .

(1) வெங்கடபதி (2) ஸ்ரீரங்கராயலு

(3) ராமசாமி நாயக்கர் (4) பிரான்சிஸ் டே

73. புனித ஜார்ஜ் கோட்டைக்குள் கடல் நுழைவாயில் வழியாக நுழைந்தால், முதலில் காணப்படும் கட்டடம் __________ .

(1) கிளைவ் மாளிகை (2) சட்டமன்றம்

(3) தமிழக அரசின் இருக்கை (4) சர்ச்

74. புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள, தமிழக அரசின் இருக்கைக் கட்டடம் கட்டப்பட்ட ஆண்டு.

(1) 1746-1763 (2) 1600-1857 (3) 1814-1816 (4) 1694-1732

75. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில், மதராஸ் மாகாணத்திற்குட்பட்ட பகுதிகள், கீழ்க்கண்டவற்றில் எவை?

i. தமிழ்நாடு ii. ராயலசீமா

iii. அந்தமான் நிக்கோபார் தீவுகள் iv. லட்சத்தீவுகள்

v. தெற்கு ஒரிசா vi. வடக்குக் கேரளா

(1) v, iii தவிர அனைத்தும் (2) iv, ii தவிர அனைத்தும்

(3) iii தவிர அனைத்தும் (4) iv தவிர அனைத்தும்

76. பம்பாய், 1534லிருந்து யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது?

(1) போர்ச்சுகீசியர்கள் (2) ஆங்கிலேயர்கள்

(3) பிரெஞ்சுக்காரர்கள் (4) முகலாயர்கள்

77. போர்ச்சுகீசிய இளவரசியைத் திருமணம் செய்து கொண்டவர்?

(1) ஏழாம் எட்வர்டு (2) முதலாம் சார்லஸ்

(3) இரண்டாம் சார்லஸ் (4) ஐந்தாம் ஜார்ஜ்

78. இந்தியாவில் மேயர் பதவி உருவாக்கப்பட்ட ஆண்டு எது?

(1) 1688 (2) 1690 (3) 1639 (4) 1661

www.kalvinews.com

# விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (1) | **16** | (4) | **31** | (1) | **46** | (1) | **61** | (3) | **76** | (1) |
| **2** | (3) | **17** | (4) | **32** | (3) | **47** | (3) | **62** | (4) | **77** | (3) |
| **3** | (4) | **18** | (2) | **33** | (4) | **48** | (4) | **63** | (4) | **78** | (1) |
| **4** | (4) | **19** | (2) | **34** | (1) | **49** | (4) | **64** | (1) | | |
| **5** | (2) | **20** | (3) | **35** | (4) | **50** | (3) | **65** | (4) | | |
| **6** | (4) | **21** | (1) | **36** | (1) | **51** | (3) | **66** | (2) | | |
| **7** | (3) | **22** | (2) | **37** | (4) | **52** | (2) | **67** | (3) | | |
| **8** | (3) | **23** | (1) | **38** | (2) | **53** | (3) | **68** | (2) | | |
| **9** | (1) | **24** | (4) | **39** | (1) | **54** | (4) | **69** | (3) | | |
| **10** | (2) | **25** | (4) | **40** | (1) | **55** | (3) | **70** | (4) | | |
| **11** | (3) | **26** | (2) | **41** | (1) | **56** | (3) | **71** | (2) | | |
| **12** | (4) | **27** | (2) | **42** | (2) | **57** | (4) | **72** | (1) | | |
| **13** | (3) | **28** | (3) | **43** | (3) | **58** | (3) | **73** | (3) | | |
| **14** | (1) | **29** | (3) | **44** | (1) | **59** | (1) | **74** | (4) | | |
| **15** | (3) | **30** | (3) | **45** | (3) | **60** | (3) | **75** | (3) | | |

www.kalvinews.com

**வகுப்பு - 8 - புவியியல்**

**1. பாறை மற்றும் மண்**

**தொகுப்பு:**

**திரு.ஜெ.மாரையன், M.A.,M.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, மத்திப்பட்டி,**
**கரூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**

**திரு.ப.சக்திவேல், M.Sc.,B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, மண்ணுார்,**
**சேலம் மாவட்டம்.**

**முக்கிய குறிப்புகள்**

- புவியின் நான்கு பகுதிகள் 1. நிலக் கோளம், 2. நீர்க் கோளம், 3. வளிக் கோளம் மற்றும் 4. உயிர்க் கோளம்.
- புவி மண்ணியலின் ஒரு பிரிவே 'பாறையியல்' ஆகும்.
- **பாறையியல் என்ற சொல் கிரேக்க மொழியில் இருந்து பெறப்பட்டது**.
- **பெட்ரஸ்** என்பது **பாறைகளையும்**, **லோகோஸ்** என்பது **பாறைகளைப் பற்றிய படிப்புகளை** குறிப்பிடுவது ஆகும்.
- புவியின் மேற்பரப்பில் 2000 வகையான கனிம வளங்கள் உள்ளன.
- புவி முழுவதும் 8 அடிப்படை கனிமங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- புவிப் பரப்பில் காணப்படும் பாறைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

✓ **தீப்பாறைகள் (Igneous Rocks)**
✓ **படிவுப் பறைகள் (Sedimentary Rocks)**
✓ **உருமாறியப் பாறைகள் (Metamorphic Rocks)**

| பாறைகளின் பண்புகள் | | |
|---|---|---|
| தீப்பாறைகள் | படிவுப் பாறைகள் | உருமாறிய பாறைகள் |
| புவியின் உட்பகுதியில் உள்ள மாக்மா என்ற பாறைக்குழம்பு இடம்பெயர்ந்து குளிர்ச்சி அடைவதால் உருவாகின்றன. | தீப்பாறைகளும், உருமாறியப் பாறைகளும் அரித்தல், கடத்தல், படியவைத்தல் செயல்கள் மூலம் படியவைக்கப்பட்டு வெப்பம் மற்றும் அழுத்தத்தால் உருவாகின்றன. | தீப்பாறைகளும், படிவுப்பாறைகளும் வெப்பம் மற்றும் அழுத்தத்தால் உருமாறுவதால் உருவாகின்றன. |
| கடினமானது, நீர் புகாது, படிகத்தன்மையுடையவை | மென்மையானவை, படிகத் தன்மை அற்றவை | பெரும்பாலும் படிகத் தன்மையுடையவை |
| எரிமலை செயல்பாடுகளோடு தொடர்புடையவை | அரித்தல், படியவைத்தல் செயலோடு தொடர்புடையவை | வெப்பம், அழுத்தம், இயக்கம் ஆகியவற்றோடு தொடர்புடையவை. |
| உயிரினப் படிமங்கள் இல்லை | உயிரினப் படிமங்கள் உள்ளன. | உயிரினப் படிமங்கள் இல்லை |
| வகை: 1. வெளிப்புறத் தீப்பாறைகள் 2. ஊடுருவிய தீப்பாறைகள் | வகை: 1. கரிமப் படிவு பாறைகள் 2. பௌதீகப் படிவு பாறைகள் 3. இரசாயன படிவு பாறைகள் | வகை: 1. வெப்ப உருமாற்றப் பறைகள் 2. இயக்க உருமாற்றப்பாறைகள் |

www.kalvinews.com

**தீப்பாறைகள்**

- புவியின் ஆழமான பகுதியிலிருந்து வெளியேறி குளிர்ந்து உருவானவை தீப்பாறைகள் ஆகும்.
- **தீப்பாறைகளை 'முதன்மைப் பாறைகள்', 'தாய்ப் பாறைகள்' என்றும் அழைக்கிறோம்.**
- **தீப்பாறைகள் ஆங்கிலத்தில் Igneous rocks என்று அழைக்கப்படுகின்றன**.
  - **இக்னியஸ் (Igneous) என்ற சொல் இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்டது**. **இக்னியஸ்** என்றால் '**தீ**' என்று பொருள்.
- ஆழமான பகுதியிலிருந்து பூமிக்கு வெளியே வந்து குளிர்ந்தால் அது "வெளிப்புறத் தீப்பாறைகள்" எனப்படுகின்றன. எடுத்துக்காட்டு இந்தியாவின் வடமேற்கு தீபகற்ப பகுதிகளில் காணப்படும் கருங்கல் பாறைகள் (Basalt).
- **புவியின் உட்புறத்தில்** காணப்படும் பாறைக் குழம்பு '**மாக்மா**' **(Magma)** என்றும் **புவியின் மேற்பரப்பை அடையும் பாறைக்குழம்பு 'லாவா (Lava)'** என்றும் அழைக்கப்படுகிறது.
- புவியின் ஆழமான பகுதியில் காணப்படும் பாறைக் குழம்பு பூமிக்கு வெளிப்புறம் வராமல் பூமியின் உட்பகுதியில் காணப்படும் இடுக்குகள் மற்றும் விரிசல்களில் நிரம்பி, குளிர்ச்சியடைந்து பாறைகளாக மாறினால் அது "ஊடுருவிய தீப்பாறைகள்" எனப்படுகின்றன.

**செயல்படும் எரிமலைகள்**:

இத்தாலி நாட்டின் மவுண்ட் வெசூவியஸ், மவுண்ட் ஸ்ட்ராம்போலி மற்றும் மவுண்ட் எட்னா மேலும், ஹவாய் தீவிலுள்ள மவுனாலோவா மற்றும் மௌனாகியா

**படிவுப்பாறைகள்**

- அரிப்பு காரணிகளால் அரிக்கப்பட்டு, படிய வைக்கப்பட்ட படிவுகள் நீண்ட காலமாக வெப்பம், அழுத்தத்தின் காரணமாக இறுகியதால் படிவு பாறைகள் உருவாயின.
- **'செடிமென்டரி (Sedimentary)' என்ற சொல் 'செடிமென்டம்' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது.**
- நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை வாயு போன்ற இயற்கை வளங்கள் உருவாக முக்கிய ஆதாரமாக இருப்பது படிவுப்பாறைகள்.
- படிவுப் பாறைகள் மூன்று வகைப்படும், அவை: 1. உயிரினப் படிவுப் பாறைகள், 2. கனிம அல்லது பௌதீக படிவுப் பாறைகள், 3. இரசாயன படிவுப் பாறைகள்.
- **இரசாயன படிவுப்பாறைகள் "உப்பு படர் பாறைகள்"** எனவும் அழைக்கப்படுகின்றன.

**உருமாறியப் பாறைகள்**

- அதிக வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும், படிவுப்பாறைகளும் மாற்றம் அடைந்து உருமாறிய பாறைகளை உருவாக்குகின்றன.
- **மெட்டாமார்பிக்** என்ற சொல் **மெட்டா (Meta), மார்பா (Marpha) என்ற இரண்டு கிரேக்கச் சொற்களிலிருந்து பெறப்பட்டவையாகும். மெட்டா - மாற்றம்**, **மார்பா - வடிவம்** என்று பொருள்படும்.
- உலகின் மிகப்பழமையான படிவுப்பாறைகள் கிரீன்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் வயது 3.9 மில்லியன் ஆண்டுகள் ஆகும்.
- **தாஜ்மஹால் உருமாறிய பாறைகளால் உருவான வெள்ளை பளிங்கு கற்களால் கட்டப்பட்டது**.


www.kalvinews.com

**தீப்பாறையிலிருந்து உருமாறிய பாறை உருவாதல்**

- அடியாழ தீப்பாறைகளில் ஒன்றான கிரானைட்(Granite) இயக்க உருமாற்றத்தினால் நைஸ் (Gneiss) என்ற உருமாறிய பாறையாக மாறுகிறது.
- வெளிப்புறத் தீப்பாறையான கருங்கல் பாறை (Basalt) வெப்ப உருமாற்றத்தினால் பலகைப்பாறை (Slate rock) என்ற உருமாறிய பாறையாக மாறுகிறது.


**படிவுப் பாறையிலிருந்து உருமாறியப் பாறை உருவாதல்.**

- வெப்ப உருமாற்றத்தினால் பௌதீக படிவுப் பாறையான மணற்பாறை (Sand stone), வெண்கற்பாறை (Quartz) என்ற உருமாறிய பாறையாக மாறுகின்றது.
- பௌதீக படிவு பாறையாகிய மாக்கல் (Shale), பலகைப் பாறை (Slate) என்ற உருமாறிய பாறையாக மாறுகின்றது.
- குவார்சைட் மற்றும் சலவைக்கற்கள் கட்டுமானப்பணி மற்றும் சிற்ப வேலைப்பாடுகளுக்குப் பயன்படுகின்றன.
- சலவைக்கற்களின் துகள்களிலிருந்து நெகிழி, காகிதம் போன்ற பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.
- தீப்பாறைகள், படிவுப் பாறைகள், உருமாறிய பாறைகள் ஆகிய மூன்று வகைப்பாறைகளும் பல்வேறு காரணங்களால், ஒரு வகையிலிருந்து மற்றொரு வகையாக மாறிக்கொண்டே இருக்கின்றன. இதற்கு **பாறை சுழற்சி** என்று பெயர்.




**மண்**

- மண் என்பது கனிமங்கள் (45%) கரிமப் பொருள்கள் (5%), நீர் (25%) காற்று (25%) கலந்த கூட்டுப்பொருள்கள் ஆகும்.
- உலக மண் நாள் டிசம்பர் 5ல் கொண்டாடப்படுகிறது.
- மிதவெப்ப மண்டல காலநிலைப் பகுதிகளில் 1செமீ மண் உருவாக 200 முதல் 400 ஆண்டுகள் ஆகின்றன.
- அயன மண்டல ஈரக்காலநிலையில் மண் விரைவாக உருவாகிறது. இங்கு மண் உருவாக சுமார் 200 ஆண்டுகள் ஆகின்றன.
- நன்கு வளமான மண் உருவாக ஏறத்தாழ 3000 ஆண்டுகள் ஆகின்றது.



மண்ணின் கூட்டுப் பொருள்கள்

www.kalvinews.com

- மண் அவற்றின் பண்புகளின் அடிப்படையில், ஆறு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

  1. வண்டல் மண், 2. கரிசல் மண், 3. செம்மண், 4. சரளை மண், 5. மலைமண், 6. பாலை மண்

**வண்டல் மண்**

- வண்டல் மண் ஆற்றுச் சமவெளிகள், வெள்ளச் சமவெளிகள் மற்றும் கடற்கரைச் சமவெளிகளில் காணப்படுகிறது,
- இவை ஓடும் நீரின் மூலம் கடத்தப்பட்ட நுண்ணிய துகள்களால் படிய வைக்கப்பட்டு உருவாகின்றன. அதிக வளமிக்க மண் வண்டல் மண் ஆகும்.
- நெல், கோதுமை, கரும்பு, சணல் போன்ற உணவுப் பயிர்கள் பயிரிட ஏற்ற மண்.

**கரிசல் மண்**

- கரிசல் மண் தீப்பாறைகள் சிதைவடைவதால் உருவாகின்றன.
- களிமண் தன்மையையும், ஈரப்பதத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் திறனையும் கொண்டது.

**செம்மண்**

- உருமாறியப்பாறைகள் மற்றும் படிகப்பாறைகள் சிதைவடைவதால் செம்மண் உருவாகிறது.
- அரை வறண்ட பிரதேசங்களில் செம்மண் காணப்படுகிறது.
- இம்மண்ணில் உள்ள இரும்பு ஆக்சைடின் அளவைப் பொருத்து மண்ணின் நிறம் பழுப்பு நிறத்திலிருந்து சிவப்பு நிறம் வரை வேறுபடுகின்றன.
- தினைப்பயிர்கள் பயிரிட ஏற்ற மண் செம்மண்.

**சரளை மண்**

- அதிக வெப்பநிலை மற்றும் அதிக மழைப்பொழிவு கொண்ட அயன மண்டல பிரதேச கால நிலையில் உருவாகும் மண் சரளை மண்.
- பாறையில் உள்ள உப்புகள் நீரினால் கரைக்கப்பட்டு நீக்கப்படும் செயல்பாட்டுக்கு சுவருதல் (Leaching) என்று பெயர். இச்செயல்பாட்டினால் சரளை மண் வளம் குறைந்து காணப்படுகிறது.
- தேயிலை, காப்பி போன்ற தோட்டப்பயிர்கள் பயிரிட ஏற்ற மண் சரளை மண்.

**மலை மண்**

- மலைச்சரிவுகளில் மலை மண் காணப்படுகிறது, இம்மண்ணின் பண்புகள் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.
- காரத்தன்மையுடைய மலைமண் குறைந்த பருமன் கொண்டதாக உள்ளது. இம்மண்ணின் பண்புகள் மலையின் உயரத்திற்கு ஏற்றவாறு வேறுபடுகிறது.

**பாலை மண்**

- அயன மண்டல பாலைவனப் பிரதேசங்களில் காணப்படும் மண் பாலை மண்.
- பாலை மண் உவர் தன்மை மற்றும் நுண் துளைகளைக் கொண்டது.
- வளம் குறைந்த இம்மண்ணில் வேளாண்மை மேற்கொள்ள இயலாது.

**மண்ணரிப்பு**

- இயற்கை காரணிகள் மற்றும் மனித செயல்பாடுகளினால் மண்ணின் மேலடுக்கு நீக்கப்படுதல் அல்லது அரிக்கப்படுதல் மண்ணரிப்பு எனப்படும்.
- **ஓடும் நீர் மற்றும் காற்று** ஆகியவை மண்ணரிப்பிற்கு முக்கிய காரணிகளாக உள்ளன.
- **அடுக்கு அரிப்பு** (Sheet erosion), **ஓடை அரிப்பு** (Rill erosion) **மற்றும் நீர்பள்ள அரிப்பு** (Gully erosion) ஆகியவை மண்ணரிப்பின் முக்கிய வகைகள் ஆகும்.

www.kalvinews.com

**மண்வளப் பாதுகாப்பிற்கான செயல்பாடுகள்**

1. காடுகள் வளர்த்தல் 2. மேய்ச்சலைக் கட்டுப்படுத்துதல், 3. அணைக்கட்டுகளைக் கட்டுதல், 4. பயிர் சுழற்சி முறை, 5. பட்டை முறை வேளாண்மை, 6. சமஉயர உழுதல் முறை, 7. படிக்கட்டு முறை வேளாண்மை, 8. இடம்பெயர்வு வேளாண்முறையைத் தடுத்தல் 9. மரங்களை வளர்த்து காற்றின் வேகத்தைத் தடுத்தல்.

- **பாறைகள் மற்றும் மண் புதுப்பிக்கத்தக்க இயற்கை வளங்களாகும்.**

**பயிற்சி வினாக்கள்:**

1. பாறைக்கோளம் என அழைக்கப்படுவது _______.
   (1) நீர்க்கோளம் (2) நிலக்கோளம் (3) வளிக்கோளம் (4) உயிர்க்கோளம்

2. பாறையியல் என்ற சொல் _______ மொழியில் இருந்து பெறப்பட்டது.
   (1) தமிழ் (2) ஆங்கிலம் (3) இலத்தீன் (4) கிரேக்கம்

3. _______ என்பது ஒரு குறிப்பிட்ட படிப்பை குறிப்பதாகும்.
   (1) பெட்ரஸ் (2) இக்னியஸ் (3) ஸ்ட்ராம் (4) லேகோஸ்.

4. பாறைகளை _______ வகைகளாக பிரிக்கலாம்.
   (1) இரண்டு (2) ஐந்து (3) மூன்று (4) ஏழு

5. புவியின் ஆழமானப் பகுதியில் காணப்படும் பாறைக் குழம்பு _______.
   (1) மாக்மா (2) பசால்ட் (3) லாவா (4) ஜிப்சம்

6. தாய்ப் பாறைகள் என அழைக்கப்படுவது _______.
   (1) படிவுப் பாறைகள் (2) தீப்பாறைகள்
   (3) உருமாறிய பாறைகள் (4) பாதாளப் பாறைகள்

7. இக்னியஸ் என்றால் _______ என்று பொருள்படும்
   (1) நீர் (2) காற்று (3) நெருப்பு (4) நிலம்

8. இயற்கை வளங்கள் உருவாக முக்கிய ஆதாரமாக இருக்கும் பாறை _______.
   (1) உருமாறியப்பாறைகள் (2) பாதாளப் பாறைகள்
   (3) தீப்பாறைகள் (4) படிவுப் பாறைகள்

9. _______ நாட்டில் முக்கியமான செயல்படும் எரிமலைகள் உள்ளன.
   (1) ஜப்பான் (2) கிரீன்லாந்து (3) இத்தாலி (4) இந்தியா

10. இயக்க உருமாற்றத்தினால் கிரானைட் பாறை _______ பாறையாக உருமாறுகிறது.
    (1) நைஸ் (2) பலகை (3) பசால்ட் (4) டோலாமைட்

11. வெப்ப உருமாற்றத்தினால் மணற்பாறைகள் _______ ஆக மாறுகின்றன.
    (1) களிப் பாறை (2) பலகைப் பாறை
    (3) சுண்ணாம்பு பாறை (4) கற்பாறை

12. உலகின் மிகப்பழமையான படிவுப்பாறைகள் _______ நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
    (1) இத்தாலி (2) இந்தியா (3) கிரீன்லாந்து (4) ஜப்பான்

www.kalvinews.com

13. அலங்கார பொருள்கள் செய்ய பயன்படுவது _______.
(1) வெண் பாறை (2) பளிங்கு கற்கள் (3) பலகைப் பாறை (4) சலவைக் கற்கள்

14. பாறைகள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவது _______.
(1) உருமாற்றம் (2) வடிவம் (3) பாறைச்சுழற்சி (4) இயக்க மாற்றம்

15. _______ சலவைக்கற்களின் துகள்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.
(1) சுண்ணாம்பு (2) நெகிழி (3) ஜிப்சம் (4) எறும்புக்கல்

16. புவியின் மேற்பரப்பில் _______ வகையிலான கனிம வகைகள் உள்ளன.
(1) 2000 (2) 3000 (3) 2500 (4) 3500

17. _______ இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்ட சொல்
(1) பாறையியல் (2) மார்பா (3) இக்னியஸ் (4) மெட்டா

18. உலக அதிசயமான தாஜ்மஹால் கட்டப் பயன்படுத்தப்பட்ட பாறை _______.
(1) தீப்பாறை (2) உருமாறிய பாறை (3) படிவுப்பாறை (4) பலகைப் பாறை

19. உப்புபடர் பாறைகள் என அழைக்கப்படுவது _______.
(1) இரசாயன படிவுப்பாறை (2) பௌதீக படிவுப்பாறை
(3) உயிரினப் படிவுப்பாறை (4) உருமாறிய படிவுப்பாறை

20. எரிமலையில் இருந்து வெடித்து வெளியேறும் பாறைக்குழம்பு _______.
(1) மாக்மா (2) ஜிப்சம் (3) பசால்ட் (4) லாவா

21. புவியின் தோல் என அழைக்கப்படுவது _______.
(1) பாறை (2) மண் (3) நிலம் (4) நீர்

22. மண் _______ பெரும் பிரிவுகளாக வகைப் படுத்தபடுகின்றன.
(1) 5 (2) 7 (3) 6 (4) 8

23. _______ ஆம் நாள் உலக மண் நாளாக கொண்டாடப்படுகிறது
(1) டிசம்பர் 4 (2) அக்டோபர் 5 (3) அக்டோபர் 4 (4) டிசம்பர் 5

24. ஆற்றுச் சமவெளிகளில் காணப்படும் மண் _______.
(1) வண்டல்மண் (2) கரிசல் மண் (3) செம்மண் (4) சரளை மண்

25. தீப்பாறைகள் சிதைவடைவதால் உருவாரும் மண் _______.
(1) வண்டல் மண் (2) சரளை மண் (3) கரிசல் மண் (4) மலை மண்

26. _______ மண்ணில் இரும்பு ஆக்ஸைடு உள்ளது.
(1) பாலை மண் (2) செம்மண் (3) சரளை மண் (4) கரிசல் மண்

27. அயனமண்டல பிரதேச காலநிலையில் உருவாகும் மண் _______.
(1) கரிசல் மண் (2) செம்மண் (3) வண்டல் மண் (4) சரளைமண்

28. _______ காரத்தன்மையை கொண்ட மண்
(1) மலை மண் (2) கரிசல் மண் (3) பாலை மண் (4) செம்மண்

www.kalvinews.com

29. _______ மண்ணில் வேளாண்மை செய்ய முடியாது.
(1) கரிசல் மண் (2) மலை மண் (3) வண்டல் மண் (4) பாலை மண்

30. வளமான மண் உருவாக _______ வருடங்கள் ஆகும்.
(1) 3000 (2) 4000 (3) 2000 (4) 1000

31. தேயிலை வளர ஏற்ற மண் _______.
(1) பாலை மண் (2) சரளை மண் (3) மலை மண் (4) கரிசல் மண்

32. பருத்தி வளர ஏற்ற மண் _______.
(1) செம்மண் (2) சரளைமண் (3) கரிசல் மண் (4) வண்டல் மண்

33. மண்வகையும் - பயிரிடப்படும் பயிர்களும் என்ற அடிப்படையில் பொருந்தாததைத் தேர்ந்தெடு
(1) பருத்தி (2) நெல் (3) கரும்பு (4) சணல்

34. தினை வளர ஏற்ற மண் _______.
(1) மலை மண் (2) செம்மண் (3) பாலை மண் (4) கரிசல் மண்

35. விவசாயம் மேற்கொள்ளப் பயன்படாத மண் _______.
(1) வண்டல் மண் (2) கரிசல் மண் (3) பாலை மண் (4) மலை மண்

36. _______ செவ்வாய் கோளிலும் இருப்பதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
(1) கரிசல் மண் (2) சரளை மண் (3) வண்டல் மண் (4) செம்மண்

37. துருக்கல் மண் என்பது _______ மண்.
(1) பாலை (2) மலை (3) சரளை (4) கரிசல்

38. உலகளவில் மண் _______ வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.
(1) 6 (2) 12 (3) 8 (4) 10

39. வண்டல் மண்ணுக்கு வழங்கப்படும் வேறு பெயர் _______
(1) குறு மண் (2) செம்புறை மண் (3) அடைமண் (4) அடி மண்

40. _______ மண்ணின் பண்புகள் இடத்தற்கு இடம் மாறுபடும்.
(1) மலை மண் (2) சரளை மண் (3) செம்மண் (4) பாலை மண்

41. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) உயிர்க்கோளம் (2) வளிக் கோளம் (3) பாறைக் கோளம் (4) நீர்க்கோளம்

42. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) தாய்ப் பாறைகள் (2) படிவுப் பாறைகள்
(3) முதன்மைப் பாறைகள் (4) தீப்பாறைகள்

43. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) கருங்கல் (2) கிரானைட் (3) டயரைட் (4) எறும்புக்கல்

44. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) அரித்தல் (2) கடத்துதல் (3) படியவைத்தல் (4) குளிரூட்டுதல்

www.kalvinews.com

45. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) வண்டல் மண் (2) செம்மண் (3) பாலை மண் (4) கரிசல் மண்

46. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) நெல் (2) கரும்பு (3) கோதுமை (4) தேயிலை

47. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) அடுக்கு அரிப்பு (2) மண் அரிப்பு (3) ஓடை அரிப்பு (4) நீர் பள்ள அரிப்பு

48. பொருத்துக.

a) படிவுப் பாறைகள் - i) முதன்மைப் பாறைகள்

b) ஊடுருவிய தீப்பாறைகள் - ii) அடுக்குப் பாறைகள்

c) தீப்பாறைகள் - iii) பாதாளப் பாறைகள்

d) அடியாழப் பாறைகள் - iv) படிகப் பாறைகள்

(1) (a) - (i) (b) - (iii) (c) - (iv) (d) - (ii)

(2) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii)

(3) (a) - (i) (b) - (iv) (c) - (iii) (d) - (iv)

(4) (a) - (iii) (b) - (iv) (c) - (ii) (d) - (i)

49. பொருத்துக.

a) பசால்ட் - i) அடியாழப் பாறைகள்

b) கிரானைட் - ii) வெளிப்புறத் தீப்பாறைகள்

c) ஜிப்சம் - iii) உயிரின படிவுப்பாறை

d) பட்டுக்கல் - iv) இரசாயன படிவுப்பாறை

(1) (a) - (ii) (b) - (i) (c) - (iv) (d) - (iii)

(2) (a) - (i) (b) - (iii) (c) - (ii) (d) - (iv)

(3) (a) - (iii) (b) - (iv) (c) - (ii) (d) - (i)

(4) (a) - (i) (b) - (ii) (c) - (iii) (d) - (iv)

50. பொருத்துக.

a) மெட்டா - i) படியவைத்தல்

b) இக்னியஸ் - ii) வடிவம்

c) மார்பா - iii) மாற்றம்

d) செடிமென்டம் - iv) தீ

(1) (a) - (iii), (b) - (ii), (c) - (iv), (d) - (i)

(2) (a) - (ii), (b) - (i) , (c) - (iii), (d) - (iv)

(3) (a) - (iv), (b) - (iii), (c) - (ii), (d) - (i)

(4) (a) - (iii), (b) - (iv), (c) - (ii), (d) - (i)

51. பொருத்துக.

a) தண்ணீர் - i) 5%

b) கனிமங்கள் - ii) 25%

c) காற்று - iii) 25%

d) கரிமப் பொருள்கள் - iv) 45%

(1) (a) - (i) (b) - (iii) (c) - (ii) (d) - (iv)

(2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (ii) (b) - (iv) (c) - (iii) (d) - (i)

(4) (a) - (i) (b) - (ii) (c) - (iv) (d) - (iii)

www.kalvinews.com

52. பொருத்துக.

a) சரளை மண் - i) தினைப்பயிர்
b) கரிசல் மண் - ii) உணவுப் பயிர்
c) செம்மண் - iii) தோட்டப் பயிர்
d) வண்டல் மண் - iv) பணப் பயிர்

(1) (a) - (iii) (b) - (iv) (c) - (i) (d) - (ii) (2) (a) - (ii) (b) - (i) (c) - (iii) (d) - (iv)
(3) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i) (4) (a) - (i) (b) - (ii) (c) - (iv) (d) - (iii)

53. பொருத்துக.

a) கருவாடு - i) சரளை மண்
b) காப்பி - ii) கரிசல் மண்
c) காரத்தன்மை - iii) பாலை மண்
d) களி மண் - iv) மலை மண்

(1) (a) - (i) (b) - (ii) (c) - (iii) (d) - (iv) (2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)
(3) (a) - (ii) (b) - (vi) (c) - (ii) (d) - (iii) (4) (a) - (iii) (b) - (i) (c) - (iv) (d) - (ii)

54. தவறான இணையைக் கண்டறி.

(1) ஹவாய் தீவு - i) செயல்படும் எரிமலை
(2) தாஜ்மஹால் - ii) பளிங்கு கற்கள்
(3) கிரீன்லாந்து - iii) படிவுப்பாறைகள்
(4) இத்தாலி - iv) உருமாறிய பாறைகள்

55. சரியான இணையைக் கண்டறி.

(1) டொலிரைட் - i) இடையாழப் பாறை
(2) டயரைட் - ii) வெளிப்புறத் தீப்பாறை
(3) டோலோமைட் - iii) இரசாயன படிவுபாறை
(4) நைஸ் - iv) பலகைப் பாறை

56. தவறான இணையைக் கண்டறி.

(1) உருமாறிய பாறை - i) 2 (2) படிவுப்பாறை - ii) 3
(3) அடுக்குப் பாறை - iii) 4 (4) தீப் பாறைகள் - iv) 2

57. தவறான இணையைக் கண்டறி.

(1) பருத்தி - பணப்பயிர் (2) தேயிலை - தோட்டப்பயிர்
(3) நெல் - தினைப்பயிர் (4) கோதுமை - உணவுப்பயிர்

58. சரியான இணையைக் கண்டறி.

(1) தீப்பாறைகள் - கரிசல் மண் (2) படிவுப்பாறைகள் - மலை மண்
(3) உருமாறிய பாறைகள் - பாலை மண் (4) பாதாளப் பாறைகள் - சரளை மண்

59. தவறான இணையைக் கண்டறி.

(1) கரிசல் மண் - ஈரத்தன்மை (2) வண்டல் மண் - கனிமத்தன்மை
(3) மலை மண் - காரத்தன்மை (4) பாலை மண் - உவர்ப்புத்தன்மை

www.kalvinews.com

60. பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   (1) தீப்பாறைகள் கடினத்தன்மை உடையவை.
   (2) தீப்பாறைகள் கட்டுமான வேலைகளுக்குப் பயன்படாது.
   (3) தீப்பாறைகள் நீர்புகாத் தன்மை கொண்டவை.
   (4) தீப்பாறைகள் இரண்டு வகைப்படும்.

61. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   (1) படிவுப்பாறைகள் பல அடுக்குகளை கொண்டது.
   (2) படிவுப்பாறைகள் கடின தன்மை கொண்டது.
   (3) படிவுப்பாறைகள் படிகங்கள் உள்ள பாறை ஆகும்.
   (4) படிவுப்பாறைகள் மூன்று வகைப்படும்.

62. பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   (1) உருமாறிய பாறைகள் படிகத் தன்மை கொண்டவை.
   (2) உருமாறிய பாறைகள் வெளிர், கருமை நிற கனிமங்கள் உள்ளது.
   (3) உருமாறிய பாறைகள், அடுக்குப் பாறைகள் என அழைக்கப்படுகிறது.
   (4) உருமாறிய பாறைகள் இரண்டு வகைப்படும்.

63. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   (1) சரளைமண் பணப்பயிர்கள் பயிரிட ஏற்ற மண்ணாகும்.
   (2) உருமாறிய பாறைகள் சிதைவடைவதால் உருவாகும் மண் சரளை மண்.
   (3) சரளை மண் இயற்கையாகவே ஈரத் தன்மையை தக்க வைத்துக் கொள்ளும் திறன் கொண்டது.
   (4) வளம் குறைந்து காணப்படும் மண் சரளை மண்.

64. பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   (1) மண் என்பது முக்கியமான இயற்கை வளங்களில் ஒன்று.
   (2) மண்ணரிப்பு மண்ணின் வளத்தை குறைத்து வேளாண்மை உற்பத்தியைக் குறைக்கிறது.
   (3) மண்ணரிப்பு என்பது மனித செயல்பாடுகளினால் ஏற்படுவது அல்ல.
   (4) அணைகள் கட்டுவதன் மூலமாக மண் வளத்தை பாதுகாக்கலாம்.

65. பின்வருவனவற்றை வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
   a) உருமாறியப் பாறைகள்
   b) தீப்பாறைகள்
   c) படிவுப்பாறைகள்

   (1) (c) (b) (a)   (2) (b) (a) (c)   (3) (b) (c) (a)   (4) (a) (b) (c)

66. பின்வருவனவற்றை வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
   a) மேல்மட்ட அடுக்கு
   b) உயர் மட்ட அடுக்கு
   c) தாய்ப்பாறை அடுக்கு
   d) படிவுப்பாறைகள்

   (1) (a) (b) (c) (d)   (2) (d) (a) (b) (c)   (3) (b) (c) (d) (c)   (4) (c) (d) (a) (b)

www.kalvinews.com

67. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை கண்டுபிடிக்கவும்.

கூற்று I: புவியின் ஆழமான பகுதியில் காணப்படும் பாறைக்குழம்பு "மாக்மா" ஆகும்.

கூற்று II: புவியின் உட்பகுதியில் இருந்து வெளியேறும் செந்நிற பாறைக்குழம்பு லாவா ஆகும்.

(1) கூற்று I சரி ஆனால் II தவறு (2) கூற்று I தவறு ஆனால் II சரி

(3) கூற்று I மற்றும் II சரி (4) கூற்று I மற்றும் II தவறு

68. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையைக் கண்டறி.

கூற்று I: வெப்ப உருமாற்றத்தினால் கருங்கல் பாறை பலகைப் பாறையாக உருமாறுகிறது.

கூற்று II: இயக்க உருமாற்றத்தினால் நைஸ் பாறை கிரானைட் பாறையாக உருமாறுகிறது.

(1) கூற்று I மற்றும் II சரி (2) கூற்று I தவறு ஆனால் II சரி

(3) கூற்று I மற்றும் II தவறு (4) கூற்று I சரி ஆனால் II தவறு

69. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையைக் கண்டறி.

கூற்று 1: மண் புவியில் உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையாக உள்ளது.

கூற்று 2: மண் சுற்றுச்சூழலுக்கும், நில மேலாண்மைக்கும் துணைபுரிகிறது.

(1) கூற்று 1 மற்றும் 2 சரி (2) கூற்று 1 மற்றும் 2 தவறு

(3) கூற்று 1 சரி ஆனால் 2 தவறு (4) கூற்று 1 தவறு ஆனால் 2 சரி

70. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை கண்டுபிடிக்கவும்

கூற்று 1: தோட்டப் பயிர்கள் பயிரிட ஏற்ற மண் செம்மண்.

கூற்று 2: அரை வறண்ட பிரதேசங்களில் காணப்படும் மண் செம்மண்.

(1) கூற்று 1 மற்றும் 2 சரி (2) கூற்று 1 மற்றும் 2 தவறு

(3) கூற்று 1 சரி ஆனால் 2 தவறு (4) கூற்று 1 தவறு ஆனால் 2 சரி

71. சரியான கூற்றுக்களைத் தேர்ந்தெடுக்கவும் (NMMS-2020-21)

i. அதிக வெப்ப அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும், படிவுப்பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகள் என பெயர் பெறுகிறது.

ii. இந்த பாறைகள் கடினத் தன்மை உடையவை.

iii. இப்பாறைகள் படிகங்களற்ற பாறைகளாக உள்ளன.

iv. இந்தியாவில் உள்ள உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் உருமாறிய பாறைகளிலிருந்து உருவான வெள்ளை பளிங்குக் கற்களால் கட்டப்பட்டது.

(1) i மற்றும் ii (2) ii மற்றும் iii (3) iii மற்றும் iv (4) i மற்றும் iv

72. பொருத்துக. (NMMS 2019-20)

a) படிவுப் பாறைகள் - i. அடியாழப் பாறைகள்

b) தீப்பாறைகள் - ii. அடுக்குப் பாறைகள்

c) புளூடானிக் பாறைகள் - iii. குறைந்த ஆழத்தில் உள்ள பாறைகள்

d) ஹைப்பாபைசல் பாறைகள் - iv. தாய்ப் பாறைகள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (1) | ii | iv | i | iii |
| (2) | iv | iii | ii | i |
| (3) | i | iii | iv | ii |
| (4) | iii | iv | i | ii |

www.kalvinews.com

73. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS 2019-20)

(1) சரளை மண் - சணல்

(2) கரிசல் மண் - பருத்தி

(3) வண்டல் மண் - நெல்

(4) செம்மண் - தினைப் பயிர்கள்

**விடைகள்:**

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 21 | (2) | 41 | (3) | 61 | (1) |
| 2 | (4) | 22 | (3) | 42 | (2) | 62 | (3) |
| 3 | (4) | 23 | (4) | 43 | (1) | 63 | (4) |
| 4 | (3) | 24 | (1) | 44 | (4) | 64 | (3) |
| 5 | (1) | 25 | (3) | 45 | (3) | 65 | (3) |
| 6 | (2) | 26 | (2) | 46 | (4) | 66 | (2) |
| 7 | (3) | 27 | (4) | 47 | (2) | 67 | (3) |
| 8 | (4) | 28 | (1) | 48 | (2) | 68 | (4) |
| 9 | (3) | 29 | (4) | 49 | (1) | 69 | (1) |
| 10 | (1) | 30 | (1) | 50 | (4) | 70 | (4) |
| 11 | (4) | 31 | (2) | 51 | (3) | 71 | (4) |
| 12 | (3) | 32 | (3) | 52 | (1) | 72 | (1) |
| 13 | (4) | 33 | (1) | 53 | (4) | 73 | (1) |
| 14 | (3) | 34 | (2) | 54 | (4) | | |
| 15 | (2) | 35 | (3) | 55 | (1) | | |
| 16 | (1) | 36 | (4) | 56 | (3) | | |
| 17 | (3) | 37 | (3) | 57 | (3) | | |
| 18 | (2) | 38 | (2) | 58 | (1) | | |
| 19 | (1) | 39 | (3) | 59 | (2) | | |
| 20 | (4) | 40 | (1) | 60 | (2) | | |

www.kalvinews.com

## வகுப்பு - 8 - புவியியல்

### 2. வானிலை மற்றும் காலநிலை

**தொகுப்பு:**
**திரு.பூ.கிருபாகரன், M.Sc., M.Phil., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி,**
**அப்பியாபாளையம்,**
**திருப்பூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.மு.ச.நபில் புகாரி,M.Sc.,B.Ed.,M.Phil.,M.A.,**
**ஆசிரியப் பயிற்றுனர் (புவியியல்),**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வட்டார வள மையம்,**
**கடலூர் ஒன்றியம், கடலூர் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- புவியின் வளிமண்டலமானது வாயுக்களால் ஆன பல அடுக்குகளைக் கொண்டதாகும்.
- புவியில் 78% நைட்ரஜனும், 21% ஆக்சிஜனும், 0.97% ஆர்கானும், 0.03% கார்பன் டை ஆக்சைடும், 0.04% மற்ற வாயுக்களும் மற்றும் நீராவியும் உள்ளன.
- "Climate" என்ற சொல், கிளைமா என்ற பண்டைய கிரேக்க மொழியில் இருந்து பெறப்பட்டதாகும்.
- கிளைமோ (Climo) என்றால் தமிழில் சாய்வுக்கோணம் (Inclination) என்று பொருள்.
- வானிலையும் காலநிலையும், மனிதனுடைய அனைத்துச் செயல்பாட்டின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

**வானிலை:**

- வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தின் வளிமண்டலத்தில் நிலவும் சூரிய வெளிச்சம், வெப்பம், மேகமூட்டம், காற்றின் திசை, காற்றழுத்தம், ஈரப்பதம், மழைப்பொழிவு மற்றும் பிற கூறுகளின் தன்மைகளைக் குறிப்பதாகும்.
- வானிலையானது குறுகிய காலமான ஒரு நாளோ, ஒரு வாரமோ அல்லது ஒரு மாதமோ நடக்கக்கூடிய நிகழ்வைக் குறிப்பதாகும்.
- வானிலையானது நேரத்திற்கு நேரம், காலத்திற்கு காலம் ஒரு வருடத்திற்குள்ளாகவே மாறக்கூடியது.
- வானிலையானது குளிர்காலத்தில் குளிராகவும், கோடைக் காலத்தில் வெப்பமாகவும் இருக்கும்.
- வானிலையானது அடிக்கடி மாறக்கூடியது.

**காலநிலை:**


- காலநிலை என்பது ஒரு பகுதியின் நீண்ட நாளைய வானிலையின் சராசரியைக் குறிக்கும்.
- வளிமண்டலத்தின் வானிலை கூறுகளின் சராசரித் தன்மையினை நீண்ட காலத்திற்குக் (35 ஆண்டுகளுக்கு) கணக்கிடுவது காலநிலை ஆகும்.
- வானிலையைப் போல காலநிலை அடிக்கடி மாறக் கூடியது அல்ல.
- வானிலையின் கூறுகளும் மற்றும் காலநிலையின் கூறுகளும் ஒன்றே ஆகும்.

**ஓரிடத்தின் / பகுதியின் / மண்டலத்தின் வானிலை மற்றும் காலநிலையைத் தீர்மானிக்கும் காரணிகள் (அ) கட்டுப்படுத்தும் காரணிகள்:**

- சூரியக் கதிர்களின் படுகோணம், சூரிய ஒளிபடும் நேரம், உயரம், நிலம் மற்றும் நீர்பரவல், அமைவிடம், மலைத் தொடர்களின் திசை அமைவு, காற்றழுத்தம், காற்று, கடல் நீரோட்டம் போன்றவைகள்.

www.kalvinews.com

- "வளியியல்" என்பது வானிலை பற்றிய அறிவியல் பிரிவு ஆகும்.
- "காலநிலையியல்" (Climatology) என்பது காலநிலை பற்றிய அறிவியல் பிரிவு ஆகும்.
- புவி, கோள வடிவம் (Spherical Shape) கொண்டிருப்பதால், புவியின் மேற்பரப்பில் சூரியக் கதிர்கள் ஒரே சீராக விழுவது இல்லை.
- புவியின் துருவப் பகுதியில் சூரியக் கதிர்கள் சாய்வாக விழுவதால், அங்கு சூரியனின் வெயிற் காய்வு கோடைக் காலத்தில் குறைவாகவும், குளிர் காலத்தில் முற்றிலும் இல்லாமலும் இருக்கிறது. எனவே, துருவப் பகுதிகளில் குளிர் காலத்தில் மிகக்கடும் குளிரும், பனி புயற் காற்றும் வீசும். உறைநிலைக் காலநிலை நிலவும் சூழலில் $-90^0$ செல்சியஸ் வெப்பநிலையும், கோடைக்காலத்தில் $0^0$ செல்சியஸ் வெப்பநிலையும் உள்ளது.
- புவியின் பூமத்திய ரேகையைச் சுற்றியுள்ள பகுதிகளில் சூரியக் கதிர்கள் செங்குத்தாக விழுவதால், அங்கு காலநிலை மிகவும் வெப்பமுடையதாகவும், குளிர்காலமே இல்லாமலும் உள்ளது.




- வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்கள் நீரோட்டத்திற்கும்,(நீரோட்டத்தின் வெப்பம், வேகம், திசை) காற்றோட்டத்திற்கும் (காற்றின் ஈரம், வேகம், திசை) காரணமாக உள்ளன.
- வெப்பக்காற்று வளிமண்டலத்தின் மேல் நோக்கிச் செல்வதால், அவ்விடத்தில் காற்றின் அழுத்தம் குறைவு. எனவே, குளிர் காற்று புவிக்கு அருகிலேயே தங்கிவிடும்.

**வானிலை மற்றும் காலநிலையின் முக்கியக் கூறுகள்:**

- வெப்பநிலை, மழைப்பொழிவு, காற்றழுத்தம், ஈரப்பதம் மற்றும் காற்று.

**வெப்பநிலை: (Temperature)**

- வெப்பநிலை என்பது காற்றில் உள்ள வெப்பத்தின் அளவைக் குறிப்பதாகும்.
- காற்றிலுள்ள வெப்பமானது, சூரியக் கதிர்வீச்சை மட்டுமின்றி, வளிமண்டல நிறையையும் சிறிதளவு சார்ந்துள்ளது.
- வெப்பமானது புவியை வந்தடையும் கதிர்வீச்சின் காலத்தைப் பொறுத்தும், புவி வெப்பக்கதிர் வீச்சலின் அளவைப் பொறுத்தும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.

**வெப்பம் இடத்திற்கு இடம் மாறுபடக் காரணங்கள்** :

புவியின் இயக்கங்கள், புவியின் தன்சுழற்சி, புவி சூரியனை வலம் வருதல் மற்றும் புவியின் சாய்வுத்தன்மை ஆகியன.

- வெப்பம் ஆனது வெப்பநிலை, ஈரப்பதத்தின் அளவு, ஆவியாதல், திரவமாதல், மழைப்பொழிவு ஆகியவற்றின் அளவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

www.kalvinews.com

- சூரியக் கதிர்வீச்சுகளிலிருந்து பெறப்படும் வெப்ப ஆற்றல் 3 வழிமுறைகளில் புவியை வந்தடைகிறது. அவை: 1. வெப்பக்கதிர்வீச்சு 2. வெப்பக்கடத்தல் 3. வெப்பச்சலனம்.
- புவியின் வளிமண்டலமானது, சூரியக் கதிர்வீசலை விட, புவிக் கதிர்வீசலால்தான் அதிக வெப்பம் அடைகிறது.
- வெப்பநிலை செங்குத்தாகவும், கிடைமட்டமாகவும் வேறுபடுகிறது.
- வெப்பம் மாறும் மண்டலத்தில், வெப்பநிலையானது, 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5 ℃ என்ற அளவில் குறைந்து கொண்டே செல்கிறது. இதனை வெப்ப வீழ்ச்சி விகிதம் (Normal Lapse Rate) என்று அழைப்பர்.

**வெப்பப் பரவலைத் தீர்மானிக்கும் காரணிகள் அல்லது பாதிக்கும் முக்கியக் காரணிகள்:**

- அட்சரேகை, நிலத்தின் கடல் மட்ட உயரம், நிலத்தின் தன்மை, கடல் நீரோட்டம், வீசும் காற்று, சரிவு, இருப்பிடம், கடலிலிருந்து தூரம், இயற்கைத் தாவரங்கள் மற்றும் மண் ஆகியவை **வெப்பப் பரவலைத் தீர்மானிக்கும் காரணிகள் ஆகும்**..
- நிலவரைபடங்களில் வானிலைக் கூறுகளின் பரவலைச் சம அளவுக் கோட்டு வரைபடம் மூலம் காண்பிக்கப்படுகிறது.
- சம அளவுக் கோடு என்பது சம அளவில் உள்ள வானிலைக் கூறுகளைக் கொண்ட இடங்களை இணைப்பதாகும்.

**வானிலைக் கூறுகளின் அடிப்படையில் சம அளவுக் கோடுகள் பின்வருமாறு அழைக்கப்படுகின்றன.**

| **வானிலைக் கூறுகள்** | **சம அளவுக் கோடு (தமிழில்)** | **சம அளவுக் கோடு (ஆங்கிலப் பெயர்)** |
|---|---|---|
| வெப்பம் | சம வெப்பக்கோடு | ஐசோதெர்ம் (Isotherm) |
| வெப்ப சராசரி | சராசரி சம வெப்பக்கோடு | ஐசோக்ரைம் (Isocryme) |
| சூரிய வெய்யிற் காய்வு | சம வெயிற்கோடு | ஐசோகெல் (Isohel) |
| காற்றழுத்தம் | சம காற்றழுத்தக் கோடு | ஐசோபார் (Isobar) |
| மாறுபட்ட காற்றழுத்தம் | சம காற்றழுத்த மாறுபாட்டுக்கோடு | ஐசெல்லோபார் (Isollobar) |
| மழையளவு | சம மழையளவுக் கோடு | ஐசோஹைட்ஸ் (Isohytes) |
| பனியளவு | சம பனிப் பொழிவுக் கோடு | ஐசோநிஃப் (Isonif) |

**வெப்பநிலையை அளவிடுதல்:**

- வெப்பநிலை என்பது ஒரு குறிப்பிட்ட கன அளவு காற்றில் குறிப்பிட்ட நேரத்தில் அளவிடப்படுகிறது.
- வெப்பநிலை அலகுகள் - செல்சியஸ், பாரன்ஹீட், கெல்வின்.
- வானிலை ஆய்வாளர்கள் வெப்பநிலையை அளக்க வெப்பமானி, ஸ்டீவன்சன் திரை வெப்பமானி, மற்றும் குறைந்தபட்ச - அதிகபட்ச வெப்பமானி மூலமும் கணக்கிடுகிறார்கள்.
- வளிமண்டலம், புவிக் கதிர்வீச்சால் வெளியேறும் வெப்பத்தால் நாள்தோறும் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணிக்குள் அதிக வெப்பமடைகிறது. எனவே, அதிகபட்ச வெப்பநிலை ஆனது பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணிக்குள் பதிவாகிறது. அதுபோல, குறைந்தபட்ச வெப்பநிலையானது, அதிகாலை 4.00 மணி முதல் சூரிய உதயத்திற்கு முன் பதிவாகிறது.


www.kalvinews.com

**வெப்பநிலை வீச்சு:**

- ஓர் இடத்தில் 24 மணி நேரத்திற்குள் நிலவும் அதிகபட்ச வெப்பநிலைக்கும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைக்கும் இடையேயுள்ள சராசரியே வெப்பநிலை வீச்சு ஆகும்.
- எ.கா: $\frac{87°F + 73°F}{2} = \frac{160°F}{2} = 80°F$ [87°F - ஒரு குறிப்பிட்ட நாளில் பதிவான அதிகபட்ச வெப்பநிலை, 73°F - ஒரு குறிப்பிட்ட நாளில் பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை]
- ஒரு நாளில் அமையும் உச்ச வெப்பநிலைக்கும் (அதிகபட்ச வெப்பநிலைக்கும்) மற்றும் நீச வெப்பநிலைக்கும் (குறைந்தபட்ச வெப்பநிலைக்கும்) இடையே உள்ள வேறுபாடு "தின வெப்ப வியாப்தி" (அ) தின வெப்பநிலை வீச்சு ஆகும்.
- ஒரு ஆண்டின் அதிகபட்ச வெப்பமான சராசரி மாதத்திற்கும் குறைந்தபட்ச வெப்பமான சராசரி மாதத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டிற்கு "ஆண்டு வெப்ப வியாப்தி" அல்லது "ஆண்டு வெப்பநிலை வீச்சு" என்று பெயர்.

**புவியின் வெப்ப மண்டலங்கள்:**

- புவியின் கோள வடிவமே, வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு வெப்பநிலையைப் பெறுவதற்குக் காரணமாக அமைகிறது.
- புவி 3 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.



www.kalvinews.com

**வெப்ப மண்டலம் (Torrid Zone):**


- இப்பகுதி கடக ரேகைக்கும் (23° 30′ வ) மகர ரேகைக்கும் (23° 30′ தெ) இடைப்பட்ட பகுதியாகும்.
- இது சூரியனிடமிருந்து செங்குத்தான கதிர்களைப் பெறுவதால் அதிகபட்சமான வெப்பத்தைப் பெறுகிறது. **இம்மண்டலம் "வெப்ப மண்டலம்"** அல்லது **"அயன மண்டலம்"** என்று அழைக்கப்படுகிறது.

**மித வெப்ப மண்டலம்: (Temperate Zone)**

- வட அரைக்கோளப் பகுதியில் கடக ரேகைக்கும் (23° 30′வ) ஆர்டிக் வட்டத்திற்கும் (66° 30′ வ) இடைப்பட்ட பகுதியாகவும், தென் அரைக்கோளப்பகுதியில் மகர ரேகைக்கும் (23° 30′ தெ) அண்டார்டிக் வட்டத்திற்கும் (66° 30′ தெ) இடைப்பட்ட பகுதியாகவும் அமைந்துள்ளது.
- இது சூரியனின் சாய்வான கதிர்களைப் பெறுவதால், சூரியக் கதிர்களின் படுகோணம் துருவத்தை நோக்கிச் செல்ல செல்ல குறைகிறது. எனவே, இம்மண்டலத்தை "மித வெப்ப மண்டலம்" என்பர்.

**துருவ மண்டலம் / குளிர் மண்டலம் / உறை நிலைப் பனி மண்டலம் (Frigid Zone):**

- உறைபனி மண்டலம் ஆர்டிக் வட்டத்திற்கும் ($66^1/_2{}^0$ வ) வடதுருவப் பகுதிக்கும்($90^0$வ) இடையேயும் அண்டார்டிக் வட்டத்திற்கும் ($66^1/_2{}^0$ தெ) தென் துருவப் பகுதிக்கும் ($90^0$ தெ) இடையேயும் அமைந்துள்ளது.
- இப்பகுதி ஆண்டு முழுவதும் குறைந்த வெப்பத்தைப் பெறுவதால், இப்பகுதி பனியால் சூழப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதி "துருவ மண்டலம்" என்றும் அழைக்கப்படுகிறது.



www.kalvinews.com

**மிக அதிகபட்ச மற்றும் மிக குறைந்தபட்ச வெப்பநிலை பதிவு:**

- புவியில் இதுவரை பதிவான மிக அதிகபட்ச வெப்பநிலை 56.7°C (134°F)
- இது 1913-ஆம் ஆண்டு ஜுலை 10-ஆம் நாள் அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள கிரின்லாந்து மலைத்தொடரில் உள்ள மரணப் பள்ளத்தாக்கு என்ற இடத்தில் பதிவாகி உள்ளது.
- புவியில் இதுவரை பதிவான மிகக் குறைந்தபட்ச வெப்பநிலை -89.2°C (-128.6°F (m) 184.0 K)
- இது 1983-ஆம் ஆண்டு ஜுலை 21-ஆம் நாள் அண்டார்டிகாவில் உள்ள சோவியத் வோஸ்டக் நிலையத்தில் பதிவாகி உள்ளது.

**மழைப்பொழிவு: (Rain Fall)**

- வளிமண்டல நீராவியானது, நீர் சுருங்குதல் மூலம் பூரித நிலையை அடைந்து புவிஈர்ப்பு விசையின் காரணமாக, கீழ்நோக்கி விழும் திரவ நீரே மழைப்பொழிவு எனப்படுகிறது.
- மழைமானியால் மழைப்பொழிவு அளவிடப்படுகிறது.
- பொதுவாக, மழைப்பொழிவு, நிலநடுக்கோட்டுப் பகுதிகளில் அதிகமாக உள்ளது, துருவப் பகுதிகளை நோக்கிச் செல்லச் செல்ல குறைகிறது.
- மழைப்பொழிவு புவியில் நன்னீரை உருவாக்குகிறது.

**காற்றின் அழுத்தம் (Air Pressure):**

- புவியின் மேற்பரப்பில், குறிப்பிட்ட பகுதியிலுள்ள காற்றின் எடையே “வளிமண்டல அழுத்தம்” அல்லது “காற்றழுத்தம்” எனப்படுகிறது.
- காற்றழுத்த மானியால் காற்றின் அழுத்தம் அளவிடப்படுகிறது.
- (0 மீட்டர்) கடல்மட்டத்திலுள்ள நிலையான காற்றழுத்தத்தின் அளவு 1013.25 மில்லிபார் ஆகும்.
- பூமியிலுள்ள எல்லாப் பகுதியிலும் காற்றழுத்தத்தின் அளவு 1.03 கிலோ/ச.செ.மீ ஆகும்.
- காற்றின் அழுத்தத்தைக் குறைந்த காற்றழுத்த மண்டலம் என்றும், அதிக காற்றழுத்த மண்டலம் என்றும் 2 வகைகளாக வகைப்படுத்துகின்றனர்.

| குறைவான காற்றழுத்த மண்டலம் | அதிக காற்றழுத்த மண்டலம் |
|---|---|
| வளிமண்டலப் பகுதிகளில் சுற்றியுள்ள பகுதிகளை விட அழுத்தம் குறைவாக இருக்கும். | வளிமண்டலப் பகுதிகளில் சுற்றியுள்ள பகுதிகளை விட அழுத்தம் அதிகமாக இருக்கும். |
| இப்பகுதியை நோக்கி அழுத்தம் அதிகமுள்ள பகுதியில் இருந்து காற்று வீசும். குறைவான காற்றழுத்த மண்டலம் (Low pressure Zone) “L” என்ற எழுத்தால் வானிலை நில வரைபடத்தில் குறிக்கப்படுகிறது. | காற்று இங்கிருந்து குறைந்த காற்றழுத்தப் பகுதியை நோக்கி வீசும். |
| குறைந்த காற்றழுத்த மண்டலம் “காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்” என்றும் “சூறாவளி” (Cyclone) என்றும் அழைக்கப்படுகிறது | அதிக காற்றழுத்த மண்டலம் (High Pressure Zone) “H” என்ற எழுத்தால் வானிலை நில வரைபடத்தில் குறிக்கப்படுகிறது. |
| மேகமூட்டத்தையும், காற்றையும், மழைப்பொழிவையும் உருவாக்குகிறது. | அதிக காற்று அழுத்த மண்டலம் “எதிர் சூறாவளி காற்றுகள்” (Anti Cyclone) என்று அழைக்கப்படுகிறது.அதிக அழுத்த மண்டலம் அமைதியான வானிலையைத் தருகிறது. |

www.kalvinews.com

- நில வரைபடத்தில் சம அளவுள்ள காற்றழுத்தத்தின் பரவலைச், சம அழுத்தக் கோடு (Isobar) மூலம் காட்டப்படுகிறது.
- உலகில் இதுவரை பதிவான மிக அதிகபட்ச காற்றழுத்தம் 1083 MB, 1968 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் ரஷ்யாவில் உள்ள "அகாட்" என்ற இடத்தில் 0 மீட்டர் கடல்மட்டத்தில் பதிவானது.
- உலகில் இதுவரை பதிவான மிகக் குறைந்தபட்ச காற்றழுத்தம் 870 MB, 1929 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் நாள் பசுபிக் பெருங்கடலில் உள்ள மரியானா தீவிற்கு அருகிலுள்ள "குவாம்" என்ற கடல் பகுதியில் உருவான டைபூனின் (சூறாவளி) கண்பகுதியில் பதிவானது.
- வானிலை ஆய்வாளர்கள் காற்றழுத்தத்தைக் காற்றழுத்தமானி அல்லது அனிராய்டு காற்றழுத்தமானி மூலம் அளக்கின்றனர்.
- வளிமண்டல அழுத்த வேறுபாட்டை தொடர்ச்சியாகப் பதிவு செய்ய, காற்றழுத்தப் பதிவுத்தாள் (Barograms) பயன்படுகிறது.

**ஈரப்பதம்: (Humidity)**

- ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில், காற்றில் உள்ள நீராவியின் அளவு ஈரப்பதம் என அழைக்கப்படுகிறது. இது வளிமண்டலத்தின் தொகுதியில் 0-5% வரை இருக்கும்.
- வளிமண்டலத்தில் ஈரப்பதத்தின் அளவு வெப்பநிலையின் அளவைப் பொறுத்து அமைகிறது.
- ஈரப்பதத்தின் அளவு நிலநடுக் கோட்டுப் பகுதியிலிருந்து துருவத்தை நோக்கி செல்லச் செல்ல குறைந்து கொண்டே செல்லும்.

**சுய ஈரப்பதம்: (Specific Humidity)**

- ஒரு குறிப்பிட்ட எடை கொண்ட காற்றில் உள்ள நீராவியின் எடை சுய ஈரப்பதம் என அழைக்கப்படுகிறது. பொதுவாக கிராம் நீராவியாகவும் / கிலோகிராம் காற்றாகவும் குறித்துக் காட்டப்படுகிறது.

**உண்மையான ஈரப்பதம்: (Absolute Humidity)**

- ஒரு குறிப்பிட்ட கன அளவுள்ள காற்றில் உள்ள நீராவியின் எடைக்கு, உண்மையான ஈரப்பதம் என்று பெயர். இது ஒரு கனமீட்டர் காற்றில் எவ்வளவு கிராம் நீராவி உள்ளது எனக் குறித்துக் காட்டப்படுகிறது.

ஒப்பு ஈரப்பதம்: **(Relative Humidity)**

- ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில், ஒரு குறிப்பிட்ட கனஅளவு உள்ள காற்றில் எவ்வளவு நீராவி இருக்க முடியுமோ அந்த அளவிற்கும், அதே சமயம் அக்காற்றில் தற்போது எவ்வளவு நீராவி உள்ளதோ அந்த அளவிற்கும் உள்ள விகிதம் ஒப்பு ஈரப்பதம் எனப்படும். இது சராசரி சதவிகித முறையில் காணப்படுகிறது.
- ஈரநிலைமானி (ஹைக்ரோமீட்டர்) கொண்டு காற்றின் ஈரப்பதத்தை அளக்கலாம்.
- ஸ்வன்சன் திரையில் வறண்ட மற்றும் ஈரக்குமிழ் கட்டுகள் ஒவ்வொன்றாக அடுக்கப்பட்டதாகும்.
- பொதுவாக, வெப்பக்காற்று குளிர்காற்றை விட அதிக நீராவியைத் தக்க வைத்துக் கொள்ளும்.
- காற்றில் ஒப்பு ஈரப்பதம் 100% அடையும் பொழுது, காற்று பூரித நிலையை அடையும். இந்த பூரித நிலையில், வெப்பநிலை பனிப்புள்ளி நிலைக்குச் சென்றுவிடும். இந்த நீராவி மேலும் குளிர்வடைந்து, நீர் சுருங்கி மேகங்கள் மற்றும் மழைக்கு வித்திடுகிறது.

www.kalvinews.com

- ஒப்பு ஈரப்பதம் மனிதனின் உடல் நலத்தையும், ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது. அதிக மற்றும் குறைந்த ஈரப்பதம் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும். இது பல்வேறு பொருட்கள், கட்டிடங்கள், மின்சாதனப் பொருட்களின் நிலைத்தன்மையைப் பாதிக்கும்.
- காற்றின் அழுத்தம் குறைவதனால், காற்றில் சுவாசிப்பதற்கான ஆக்சிஜன் அளவும் குறைகிறது. மிக உயரமான இடங்களில், காற்றில் ஆக்சிஜனின் அளவும் காற்றின் அழுத்தமும் மிகவும் குறைவாக உள்ளது. அதனால் மனிதர்கள் அங்கு இறக்கக்கூடும். ஆதலால் உயர்ந்த இடங்களில் ஏறும்போது ஆக்சிஜனை உருளையில் எடுத்துச் செல்வார்கள்.
- அழுத்தம் அதிகமான இடங்களிலிருந்து, அழுத்தம் குறைவான இடங்களுக்குச் செல்லும்போது மூச்சுத்திணறல் ஏற்படும்.
- விமானங்களில் செயற்கை அழுத்தத்தை உருவாக்கிப் பயணிகளை வசதியாக சுவாசிக்கும்படி அமைத்துள்ளனர்.

**காற்று: (Wind)**

- கிடைமட்டமாக நகரும் வாயுவிற்குக் காற்று என்று பெயர்.
- காற்று எப்பொழுதும் உயர் அழுத்தப் பகுதிகளிலிருந்து, குறைந்த அழுத்தப் பகுதியை நோக்கி வீசும்.
- காற்று எத்திசையில் இருந்து வீசுகிறதோ அதே பெயரில் அழைக்கப்படுகிறது.
- எ.கா: தென்மேற்கு பருவக்காற்று.
- காற்றின் அமைப்புகள் 3 பெரும் வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
  1. கோள் காற்றுகள் அல்லது நிரந்தரக் காற்றுகள் (Planetary Winds)
  2. பருவகாலக் காற்றுகள் (Seasonal Winds)
  3. தலக் காற்றுகள் அல்லது பிரதேசக் காற்றுகள் (Local Winds)

1. கோள் காற்றுகள்: (Planetary Winds)

- ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் "கோள் காற்றுகள்" அல்லது "நிலையான காற்றுகள்" என்று அழைக்கப்படும்.
- எ.கா: வியாபாரக் காற்று, மேலைக் காற்று., துருவக் காற்று

2. பருவகாலக் காற்று: (Seasonal Winds)

- பருவத்திற்கு ஏற்றவாறு அதன் திசையை மாற்றி வீசும் காற்றுகள் "பருவகாலக் காற்றுகள்" என்று அழைக்கப்படும்.
- இக்காற்றுகள் கோடைக் காலத்தில், கடலிருந்து நிலத்தை நோக்கி வீசும்.
- இக்காற்றுகள் குளிர் காலத்தில், நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசும்.

3. தலக் காற்று (அ) பிரதேசக் காற்று: (Local Winds)

- ஒரு நாள் அல்லது ஒரு ஆண்டின் குறுகிய காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சிறிய பகுதியில் வீசும் காற்றுகள் "தலக் காற்றுகள்" அல்லது "பிரதேசக் காற்றுகள்" என்று அழைக்கப்படும்.

  எ.கா: நிலக் காற்று, கடல் காற்று.
- உலகிலேயே முதன் முதலாக காலநிலை நில வரைபடங்களின் தொகுப்பை (Climatological Cartograph Atlas) "அல்-பலாஹி" என்ற அரேபிய நாட்டுப் புவியியல் வல்லுநர் (Geographer), அரேபியா நாட்டுப் பயணிகளிடமிருந்து காலநிலை பற்றிய விவரங்களைச் சேகரித்து வெளியிட்டார்.
- பிரேசிலின் பெரும்பகுதியில் காற்றின் வேகம் குறைவாக உள்ளது.

www.kalvinews.com

- ஆப்பிரிக்காவின் காபான், காங்கோ மற்றும் DR காங்கோ, சுமத்ரா, இந்தோனேஷியா, மலேசியா ஆகியவை பூமியில் குறைந்த காற்று வீசும் பகுதி ஆகும்.
- "பியாபோர்டு அளவை" என்ற கருவி காற்றின் வேகத்தை அளவிடப் பயன்படுகிறது. இது இப்பொழுது உலகம் முழுவதும் பயன்பாட்டில் உள்ளது. இக்கருவி 1805-ஆம் ஆண்டு இராயல் கப்பற்படை அதிகாரியான "பிரான்சிஸ் பியோபோர்டு" அவர்களால் உருவாக்கப்பட்டது.
- இக்கருவியானது முதன்முதலில் எச்.எம்.எஸ்.பீகால் அவர்களால் அதிகாரப் பூர்வமாக பயன்படுத்தப்பட்டது.
- வானிலையியல் வல்லுநர்கள் (Meterologists) காற்றின் திசையை அளவிட காற்றுமானி அல்லது காற்றுத் திசைக்காட்டி (Wind Vane) என்ற கருவிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- காற்றின் வேகத்தை அளக்க "அனிமாமீட்டர்" (Anemometer) என்ற காற்று விசைமானிக் கருவியைப் பயன்படுத்துகின்றனர்.
- "விண்ட்ரோஸ்" (Wind Rows) என்பது காற்றின் திசையையும், வீசும் காலத்தையும் நிலவரைபடத்தில் குறிக்கும் ஒரு வரைபடம்.
- "மிட்டிரோகிராப்" (Meterograph) அல்லது "டிரிபிள் ரிஜிஸ்டர்" என்ற வானிலைப் பதிவுமானி காற்றின் திசை, வேகம், சூரிய வெய்யிற்காய்வு, மழை ஆகிய பல்வேறு வானிலை கூறுகளின் அளவை வரைகோட்டுப்படத்தின் (Graph Sheet) மூலம் பதிவு செய்யும் கருவியாகும்.

**பயிற்சி வினாக்கள்:**

1. புவியின் வளிமண்டலம் ________ நைட்ரஜன் மற்றும் ________ ஆக்சிஜன் அளவைக் கொண்டுள்ளது.

   (1) 78% மற்றும் 21% (2) 22% மற்றும் 1%
   (3) 21% மற்றும் 0.97% (4) 10% மற்றும் 20%

2. ________ ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

   (1) புவி (2) வளிமண்டலம்
   (3) காலநிலை (4) சூரியன்

3. புவி பெறும் ஆற்றல் ________.

   (1) நீரோட்டம் (2) மின்காந்த அலைகள்
   (3) அலைகள் (4) வெப்பம்

4. கீழ்க்கண்டவற்றில் எவை சம அளவு மழை உள்ள இடங்களை இணைக்கும் கோடு ஆகும்.

   (1) சம வெப்பக்கோடு (2) சமசூரிய வெளிச்சக்கோடு
   (3) சம காற்றழுத்தக்கோடு (4) சம மழையளவுக்கோடு

5. ________ என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.

   (1) காற்றுமானி (2) அழுத்தமானி
   (3) ஈரநிலைமானி (4) வெப்பமானி

6. "Climate" என்ற சொல் கிளைமா என்ற பண்டைய ________ மொழியில் இருந்து பெறப்பட்டதாகும்.

   (1) கிரேக்க (2) ரஷ்ய (3) லத்தீன் (4) ஜெர்மனி

www.kalvinews.com

7. சூரியக் கதிர் வீச்சுகளிலிருந்து பெறப்படும் வெப்ப ஆற்றல் ______ வழிமுறைகளில் புவியை வந்தடைகிறது

(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

8. கீழ்க்கண்டவற்றுள் எது வானிலை மற்றும் காலநிலையைத் தீர்மானிக்கும் கூறு இல்லை?

(1) மழை (2) காற்று (3) மண் (4) வெப்பம்

9. அதிக காற்றழுத்த மண்டலம் _______ என்ற எழுத்தால் வானிலை வரைபடத்தில் குறிக்கப்படுகிறது.

(1) H (2) L (3) P (4) S

10. பொருத்துக.

1. நைட்ரஜன் - அ. காலநிலை பற்றிய அறிவியல்
2. வளியியல் - ஆ. வெப்ப மண்டலம்
3. காலநிலையியல் - இ. வானிலை பற்றிய அறிவியல்
4. அயன மண்டலம் - ஈ. சம மழையளவுக் கோடு
5. ஐசோஹைட்ஸ் - உ. 78%

(1) 1 - ஈ 2 - இ 3 - அ 4 - உ 5- ஆ
(2) 1 - உ 2 - இ 3 - அ 4 - ஆ 5 - ஈ
(3) 1 - ஈ 2 - உ 3 - அ 4 - இ 5 - ஆ
(4) 1 - உ 2 - இ 3 - ஆ 4 - அ 5 - ஈ

11. குறைந்த காற்றழுத்த மண்டலம் _______ என்ற எழுத்தால் வானிலை வரைபடத்தில் குறிக்கப்படுகிறது.

(1) R (2) L (3) S (4) P

12. கடக ரேகைக்கும், மகர ரேகைக்கும் இடைப்பட்ட பகுதி ______

(1) வெப்பமண்டலம் (2) மித வெப்பமண்டலம்
(3) வட துருவம் (4) தென் துருவம்

13. பொருத்துக.

1. காலநிலை - அ. புயலின் அமைவிடத்தையும், அது நகரும் திசையையும் அறிந்து கொள்வது
2. ஐசோநிஃப் - ஆ. சூறாவளி
3. ஈரநிலைமானி - இ. சம பனிஅளவுக் கோடு
4. ரேடார் - ஈ. நீண்ட கால மாற்றங்கள்
5. தாழ்வு அழுத்த மண்டலம் - உ. ஈரப்பதம்

(1) 1 - ஆ 2 - இ 3 - ஈ 4 - உ 5 - அ
(2) 1 - இ 2 - ஈ 3 - உ 4 - அ 5 - ஆ
(3) 1 - ஈ 2 - இ 3 - உ 4 - அ 5 - ஆ
(4) 1 - ஆ 2 - இ 3 - உ 4 - அ 5 - ஈ

14. காலநிலை என்பது வானிலை கூறுகளின் சராசரியை எத்தனை வருடத்திற்கு கணக்கிடுவது?

(1) 33 (2) 32 (3) 30 (4) 35

www.kalvinews.com

15 வெப்பநிலையானது 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து, ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் _______ என்ற அளவில் குறைந்து கொண்டே செல்கிறது.

(1) 7.5°C (2) 6.5°C (3) 73.3°C (4) 65.5°C

16. ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் _______ காற்றுகள் எனப்படும்.

(1) பருவக்காற்று (2) தலக்காற்று

(3) வெப்பக்காற்று (4) கோள்காற்று

17. ஒருநாள் அல்லது ஆண்டின் குறுகிய காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு பகுதியில் வீசும் காற்று _______.

(1) கோள்காற்று (2) தலக்காற்று

(3) பருவக்கால காற்று (4) குளிர்காற்று

18. உலகின் மிக அதிகபட்சக் காற்றழுத்தம் எந்த இடத்தில் பதிவானது?

(1) குவாம் (2) அகாட் (3) ஜப்பான் (4) சவுதி

19. புவியின் பூமத்திய ரேகையைச் சுற்றியுள்ள பகுதிகளில் சூரியக்கதிர்கள் எவ்வாறு விழுகிறது?

(1) செங்குத்தாக (2) சாய்வாக

(3) கிடைமட்டமாக (4) எதுவுமில்லை

20. பின்வருவனவற்றில் எது வெப்பநிலையின் அலகு அன்று?

(1) பாரன்ஹீட் (2) கிலோகிராம்

(3) செல்சியஸ் (4) கெல்வின்

21. ஓர் இடத்தில் 24 மணி நேரத்திற்குள் நிலவும் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைக்கு இடையேயுள்ள சராசரி _______.

(1) வெப்பநிலை வீச்சு (2) வெப்ப வியாப்தி

(3) தினசரி வெப்பநிலை (4) எதுவுமில்லை

22. தவறான இணையைக் கண்டறி.

(1) ஆர்டிக் வட்டம் - (66° 30′வ வடக்கு

(2) கடக ரேகை - 23° 30′ தெற்கு

(3) நிலநடுக்கோடு - 0°

(4) மகர ரேகை - 28° 40′ தெற்கு

23. கடக ரேகைக்கும் ஆர்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதி _______.

(1) அயன மண்டலம் (2) குளிர்மண்டலம்

(3) மித வெப்பமண்டலம் (4) வெப்பமண்டலம்

24. புவியில் இதுவரை பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை _______.

(1) -20 .5 ºF (2) 0 ºF (3) -128.6 ºF (4) 500 ºF0

25. புவியின் மேற்பரப்பில் குறிப்பிட்ட பகுதியிலுள்ள காற்றின் எடையே _______ எனப்படும்.

(1) வெப்பநிலை (2) வளிமண்டல அழுத்தம்

(3) வானிலை (4) காற்றின் சராசரி

www.kalvinews.com

26. கடல் மட்டத்திலுள்ள நிலையான காற்றழுத்தத்தின் அளவு _______ மில்லிபார்.

(1) 220.25 (2) 1013.25 (3) 3101 (4) 434.75

27. பூமியிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் காற்றழுத்தத்தின் அளவு _______ கிலோ / ச.செ.மீ ஆகும்.

(1) 1.04 (2) 1.03 (3) 1.01 (4) எதுவுமில்லை

28. காற்றின் வேகத்தை அளவிடப் பயன்படும் கருவி _______.

(1) ஹைக்ரோ மீட்டர் (2) கிளைமோ

(3) ஸ்டீவன்சன் திரை வெப்பமானி (4) பியோபோர்டு

29. பின்வரும் பகுதிகளுள் பூமியில் குறைந்த காற்று வீசும் பகுதி எது?

(1) அமெரிக்கா (2) மலேசியா (3) கேரளா (4) ஜப்பான்

30. புவியில் இதுவரை பதிவான மிக அதிகபட்ச வெப்பநிலை 56.7 ºC ஆகும். இது எந்த ஆண்டு? எந்த நாளில்? எங்குப் பதிவானது?

(1) 1983, ஜுலை 10, ரஷ்யா (2) 1913, ஜுலை 10, கலிபோர்னியா

(3) 1923, ஜுலை 25, சுமத்ரா (4) 1956, ஜுலை 21, வோஸ்டக்

31. வளிமண்டலம், புவிக் கதிர்வீச்சால் வெளியேறும் வெப்பத்தால், நாள்தோறும் எந்த நேரத்தில் அதிக வெப்பமடைகிறது?

(1) காலை 10 மணி முதல் பிற்பகல் 12 மணி வரை

(2) மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரை

(3) பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை

(4) முற்பகல் 8 மணி முதல் முற்பகல் 10 மணி வரை

32. இன்று திருப்பூரில் பதிவான அதிகபட்ச வெப்பநிலை 87 ºF மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 73 ºF எனில் வெப்பநிலை வீச்சு _______.

(1) 70 ºF (2) 80 ºF (3) 160 ºF (4) 14 ºF

33. துருவ மண்டலம் என்பது _______.

(1) நிலநடுக்கோட்டிற்கும் மகரரேகைக்கும் இடைப்பட்ட பகுதி.

(2) ஆர்டிக் வட்டத்திற்கும் கடகரேகைக்கும் இடைப்பட்ட பகுதி.

(3) தெற்கு அண்டார்டிக் வட்டத்திற்கும், வடக்கு ஆர்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதி.

(4) மகர ரேகைக்கும், அண்டார்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதி.

34. சரியான இணையைக் காண்க.

(1) நைட்ரஜன் - 50% (2) ஆக்சிஜன் - 10%

(3) ஆர்கான் - 0.97% (4) கார்பன் டை ஆக்சைடு - 20%

35. “கிளைமோ” என்பதன் தமிழாக்கம் _______.

(1) காலநிலை (2) நேர்க்கோணம்

(3) வானிலை (4) சாய்வுக் கோணம்

36. குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது _______.

(1) வளியியல் (2) காலநிலை

(3) ஈரப்பதம் (4) வானிலை

www.kalvinews.com

37. கூற்று 1: காற்றில் உள்ள நீராவியின் அளவு ஈரப்பதம் ஆகும்.
கூற்று 2: தென்மேற்குப் பகுதியிலிருந்து வீசும் காற்று, வடகிழக்குப் பருவக்காற்று ஆகும்.
கூற்று 3: கிடைமட்டமாக நகரும் வாயுவிற்குக் காற்று என்று பெயர்.
(1) கூற்று 1, 2 சரி கூற்று 3 தவறு
(2) கூற்று 1, 3 சரி கூற்று 2 தவறு
(3) கூற்று 1, 2, 3 ம் சரி
(4) கூற்று 2, 3 தவறு கூற்று 1 சரி

38. உலகில் இதுவரை பதிவான மிகக் குறைந்த காற்றழுத்தத்தின் அளவு _______ அடி.
(1) 870 (2) 780 (3) 100 (4) 530

39. குறைந்த காற்றழுத்த மண்டலத்தை, காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் என்றும் _______ என்றும் அழைக்கலாம்.
(1) புயல் (2) மழை வீழ்ச்சி
(3) சூறாவளி (4) இவற்றில் எதுவுமில்லை

40. புவியில் இதுவரை பதிவான மிக அதிகபட்ச வெப்பநிலை _______ (or) _______.
(1) 130º F (அ) 50ºC (2) 132ºF (அ) 57.6ºC
(3) 134ºF (அ) 56.7ºC (4) 100ºF (அ) 50º F

41. துருவப்பகுதிகளை நோக்கிச் செல்லச் செல்ல மழையின் அளவு _______.
(1) அதிகம் (2) குறைகிறது
(3) மிக அதிகமாகிறது (4) எதுவுமில்லை

42. காற்றின் வேகம், காற்றின் திசையை அளக்கவும், வரைபடத்தில் பதிவு செய்யவும் பின்வரும் கருவிகளுள் எது பயன்படுவதில்லை?
(1) அனிமாமீட்டர் (2) பியோபோர்டு
(3) டிரிபிள் ரிஜிஸ்டர் (4) ஐசோதெர்ம்

43. காற்றின் அழுத்தம் குறைந்தால் காற்றில் ஆக்சிஜனின் அளவு _______.
(1) குறைகிறது (2) அதிகமாகிறது
(3) சமமாகிறது (4) எதுவுமில்லை

44. காற்றில் உள்ள அதிகபட்ச நீராவிக் கொள்ளளவிற்கும், உண்மையான நீராவி அளவிற்கும் உள்ள விகிதாச்சாரம் _______.
(1) ஒப்பு ஈரப்பதம் (2) சமவெப்பக்கோடு
(3) உண்மையான ஈரப்பதம் (4) ஈரப்பதம்

45. புவியும், அதன் வளிமண்டலமும் சூரியனின் வெப்பக் கதிர்வீச்சால் வெப்பம் அடைவதை _______ எனலாம்.
(1) காலநிலை (2) வானிலை
(3) வெயிற்காய்வு (4) காற்றழுத்தம்

www.kalvinews.com

46. சம சூரிய வெய்யிற் காய்வு உள்ள இடங்கள் _____. (NMMS 2019-20)

(1) ஐசோஹைட்ஸ் (2) ஐசோக்ரைம்

(3) ஐசோகெல் (4) ஐசெல்லோபார்

47. கடக ரேகைக்கும், மகர ரேகைக்கும் இடைப்பட்ட பகுதி _____ எனப்படும். (NMMS 2019-20)

(1) உறைபனி மண்டலம் (2) மித வெப்ப மண்டலம்

(3) வறண்ட மண்டலம் (4) வெப்ப மண்டலம்

48. ______ என்ற கருவி காற்றின் வேகத்தை அளவிடப் பயன்படுகிறது. (NMMS 2019-20)

(1) காற்று மானி (2) பியோபோர்டு அளவை

(3) ஹைக்ரோ மீட்டர் (4) காற்றழுத்தமானி

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (1) | 11 | (2) | 21 | (1) | 31 | (3) | 41 | (2) |
| 2 | (3) | 12 | (1) | 22 | (4) | 32 | (2) | 42 | (4) |
| 3 | (4) | 13 | (3) | 23 | (3) | 33 | (3) | 43 | (1) |
| 4 | (4) | 14 | (4) | 24 | (3) | 34 | (3) | 44 | (1) |
| 5 | (3) | 15 | (2) | 25 | (2) | 35 | (4) | 45 | (3) |
| 6 | (1) | 16 | (4) | 26 | (2) | 36 | (4) | 46 | (3) |
| 7 | (2) | 17 | (2) | 27 | (2) | 37 | (2) | 47 | (4) |
| 8 | (3) | 18 | (2) | 28 | (4) | 38 | (1) | 48 | (2) |
| 9 | (1) | 19 | (1) | 29 | (2) | 39 | (3) | | |
| 10 | (2) | 20 | (2) | 30 | (2) | 40 | (3) | | |

www.kalvinews.com



## 3. நீரியல் சுழற்சி

**தொகுப்பு:**
**திரு.செ.பெரியசாமி, M.A.,B.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி, ஒட்டப்பட்டி,**
**கரூர் மாவட்டம்.**

**மேம்பாடு**
**திரு.ர.கண்ணன் M.Sc., B.Ed..**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்)**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, தப்பக்குட்டை,**
**சேலம் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- நீர் புவியில் காணப்படும் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். எல்லா தாவரங்களும், விலங்குகளும் உயிர்வாழ்வதற்கு நீர் அத்தியாவசியமானதாகும்.
- புவியின் மேற்பரப்பில் ஏறத்தாழ 71% நீரால் சூழப்பட்டுள்ளது. புவியில் உள்ள நீரின் அளவு 326 மில்லியன் கன மைல்கள் (million cubic miles).

| நீர் ஆதாரம் | நீரின் கன அளவு | மொத்த நீரில் சதவீதம் |
|---|---|---|
| **பேராழிகள், கடல்கள் மற்றும் குடாக்கள்** | 321,000,000 | 96.54 |
| **பனி மலைகள், பனியாறுகள், நிலையான உறைபனி** | 5,773,000 | 1.74 |
| **நிலத்தடி நீர்** | 5,614,000 | 1.69 |
| **மண்ணின் ஈரப்பதம்** | 3959 | 0.001 |
| **நிலப்பகுதியில் காணப்படும் நிரந்தர பனிக்கட்டி** | 71970 | 0.022 |
| **ஏரிகள்** | 42320 | 0.013 |
| **வளிமண்டலம்** | 3095 | 0.001 |
| **சதுப்புநில நீர்** | 2752 | 0.0008 |
| **ஆறுகள்** | 509 | 0.0002 |
| **உயிரியல் நீர்** | 269 | 0.0001 |

- புவியில் உள்ள மொத்த நீரில் 97.2% உவர்ப்பு நீராகவும் மற்றும் 2.8% நன்னீராகவும் உள்ளது. இந்நன்னீரில் 2.2% புவியின் மேற்பரப்பிலும், மீதமுள்ள 0.6% நிலத்தடி நீராகவும் கிடைக்கப்பெறுகிறது.
- புவியின் மேற்பரப்பில் காணப்படும் 2.2% நன்னீரில் 2.15% பனியாறுகளாகவும் மற்றும் பனிமலைகளாகவும், 0.01% ஏரிகளாகவும், ஆறுகளாகவும், 0.04% மற்ற நீர் வடிவங்களாகவும் உள்ளது.
- மொத்த நிலத்தடி நீரில் இப்பொழுது 0.6% பொருளாதாரரீதியில் நவீன தொழில்நுட்பத்தின் மூலம் துளையிட்டு எடுக்கப்படுகிறது.
- இந்தியாவில் நீர்வளம் மூன்று ஆதாரங்களிலிருந்து கிடைக்கிறது.

    1. மழைப் பொழிவு    2. புவியின் மேற்பரப்பு நீர்    3.நிலத்தடி நீர்

www.kalvinews.com

**நீரியல் சுழற்சி அல்லது நீர் சுழற்சி:**

- நீரியல் சுழற்சியானது சூரிய உந்துதல் செயலாக்கத்தால் நடைபெறும் உலகளாவிய நிகழ்வு.
- நீர் கடலிலிருந்து ஆவியாதல் மூலம் வளிமண்டலத்திற்குச் சென்று பின் வளிமண்டலத்திலிருந்து மழைப்பொழிவாக நிலத்திற்கும், நிலத்திலிருந்து நீராக கடலுக்கும் சென்றடைகிறது.
- **ஆவியாதல் புவியின் மேற்பரப்பில் காணப்படும்** நீரின் மூலமாகவும், தாவரங்களிலிருந்து நீர் உட்கசிந்து வெளியிடுதல் மூலமும் நடைபெறுகிறது.
- நீர்ச் சுழற்சியில் உள்ளாகும் நீரின் அளவு மாறாதது.
- புவித் தொடர்புடைய இயக்கங்களுள் நீர்ச்சுழற்சி மிக முக்கியமானதாகும்.
- நீர், ஆவியாதல் மூலம் வளிமண்டலத்தின் உயரமான பகுதிகளுக்குச் செல்லும் பொழுது திரவமாகச் சுருங்குதலின் மூலம் மேகங்களாக மாறுகிறது.
- மேகத்தில் உள்ள நீர்த்திவலைகள் உருகுதல் மற்றும் மேகம் உடைதல் காரணமாக பொழிவின் பல்வேறு வடிவங்களில் புவியை வந்தடைகிறது.
- நீரியல் சுழற்சி மூன்று முக்கிய நிலைகளில் நடைபெறுகிறது
    1. ஆவியீர்ப்பு
    2. பொழிவு
    3. நீர் வழிந்தோடல்

**நீரியல் சுழற்சியின் கூறுகள்:**

நீரியல் சுழற்சியில் 6 முக்கிய கூறுகள் காணப்படுகின்றன.

1. **Evapotranspiration** - ஆவியீர்ப்பு
2. **Condensation** - திரவமாய் சுருங்குதல்
3. **Precipitation** - பொழிவு
4. **Infiltration** - நீர் ஊடுருவல்
5. **Percolation** - உட்கசிதல்
6. **Run off** - நீர் வழிந்தோடல்

**ஆவியீர்ப்பு** (Evapotranspiration):

புவியின் மேற்பரப்பு நீர் நிலைகளில் இருந்து ஆவியாதல் வழியாகவும் மற்றும் தாவரங்களிலிருந்து நீர் உட்கசிந்து வெளியிடுதல் மூலமாகவும் நிகழும் புவியின் மொத்த நீர் இழப்பாகும்.

**நீர் ஆவியாதல்:**

- நீர், திரவ நிலையிலிருந்து வாயு நிலைக்கு மாறுவதற்கு ஆவியாதல் என்று பெயர்.
- நீர் $0^{0}C$ வெப்பநிலையிலேயே ஆவியாகத் தொடங்குகிறது.
- பேராழிகள், கடல்கள், ஏரிகள் மற்றும் ஆறுகள் போன்றவற்றிலிருந்து சுமார் 90% ஈரப்பதம் ஆவியாதல் மூலம் வளிமண்டலத்திற்குச் செல்கிறது. 10% ஈரப்பதம் தாவரங்களில், நீர் உட்கசிந்து வெளியிடுதல் மூலமாக செல்கிறது.
- காற்று அதிகமாக உள்ள காலங்களில் ஆவியாதல் அதிகம் நடைபெறுகிறது.
- காற்று குறைவாக உள்ள காலங்களில் நீராவி, நீர்நிலைகளுக்கு அருகிலேயே தங்கிவிடுகிறது.
-

www.kalvinews.com

- ஆவியாதல் விகிதம் ஆனது
  (1) காற்றின் வேகம் அதிகரிக்கும் பொழுதும்
  (2) வெப்பநிலை அதிகரிக்கும் பொழுதும்
  (3) ஈரப்பதம் குறையும் பொழுதும்
  (4) பூமியில் நீர்நிலைகள் அதிகரிக்கும் பொழுதும் அதிகரிக்கிறது.

**நீர் உட்கசிந்து வெளியிடுதல்** (Transpiration):

- தாவரங்களில் உள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்குச் செல்லும் செயலாக்கமே நீர் உட்கசிந்து வெளியிடுதல் ஆகும்.
- வெப்பநிலை, காற்று, ஈரப்பதம் ஆகியவை நீர் உட்கசிந்து வெளியாகும் விதத்தை நிர்ணயிக்கின்றன.
- விவசாயத்தில், பயிர்களின் தன்மை, பயிர்களின் பண்புகள், அதன் சூழல் மற்றும் பயிர் சாகுபடி முறைகள் நீர் உட்கசிந்து வெளியேறும் செயலைத் தீர்மானிக்கின்றன.

**நீர் சுருங்குதல்** (Condensation):

- வளிமண்டலத்தில் வெப்பக்காற்று மேலே எழுந்து, குளிர்வடைந்து, நீராவியைத் தக்கவைத்துக்கொள்ளும் திறனை இழக்கும் பொழுது நீர் சுருங்குதல் நிகழ்வு நடைபெறுகிறது.
- நீர் சுருங்குதல் ஆவியாதலின் எதிர்வினை செயலாகும்.
- வெப்பக் காற்று குளிர்ந்த காற்றை விட அதிக நீராவியை தக்க வைத்துக் கொள்ளும்.
- வெப்பநிலை குறையும்போது காற்று பூரித நிலையை (Saturated state) அடைகிறது.

**நீர் சுருங்குதலின் வகைகள்**:

பனி, உறைபனி, மூடுபனி, புகைபனி மற்றும் மேகங்கள் ஆகியவை நீர் சுருங்குதலின் உருவங்களாகும்.

- **பனித்துளி** (Dew): நீர்த்துளிகள் புவியின் மேற்பரப்பில் குளிர்ந்த பொருள்களின் மீது படும்பொழுது பனி உருவாகிறது.
- **உறைபனி** (Frost): குளிர்ந்த பொருட்களின் மேற்பரப்புகளின் மீது நீராவி படிந்து பனிப்படிகங்களாக மாறுவதையே உறைபனி என்கிறோம்.
- **அடர் மூடுபனி (Fog):** காற்றில் இருக்கும் நீர் சுருங்குதலால் செறிவூட்டப்பட்ட மிக நுண்ணிய நீர்த்துளிகளே அடர் மூடுபனி எனப்படும். புவியின் மேற்பரப்பில் இருந்து 1000 மீட்டர் அல்லது அதற்கும் குறைவான உயரம் உள்ள காற்றடுக்காகும்.
- அடர் மூடுபனியின் உயரம் 10 கிலோமீட்டர் அல்லது அதற்கு குறைவான உயரம் விமான போக்குவரத்திற்கு உகந்தது.
- **மூடுபனி (Mist):** காற்றில் தொங்கும் நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர்த் துளிகளையே மூடுபனி என்கிறோம். காற்றில் உள்ள நீராவி விரைவாகக் குளிர்வதால் பார்வைக்குத் தெரியாத வாயு நிலையிலிருந்து பார்வைக்குப் புலனாகும் நீர்த்துளிகளாக மாற்றமடைகிறது.
- மூடு பனியானது அடர் மூடுபனியை விட அடர்த்தி குறைவானதாகும்.
- **மேகங்கள்(Clouds):** மேகங்கள் என்பது வளிமண்டலத்தில் காணப்படும் குறைந்த எடை கொண்ட மிக நுண்ணிய நீர்த்துளிகள் மற்றும் பனிப்படிகங்களைக் கொண்டிருக்கும்.
- இந்த நீர்த் துளிகளின் அளவானது 2 மைரான் முதல் 100 மைக்ரான் கொண்டதாகும்.

www.kalvinews.com

**மழைப்பொழிவு (Precipitation):**

- மழைப்பொழிவு என்பது மேகங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் நீராக புவியின் மேற்பரப்பை வந்தடையும் நிகழ்வு ஆகும்.
- **மழைப்பொழிவின் வகைகள்:** மழை, கல்மழை, உறைபனி மழை, ஆலங்கட்டி மழை மற்றும் பனி என வகைப்படுத்தலாம்.
- **மழை (Rain fall):** நீர்த்துளிகள் 0.5 மி.மீ. விட்டத்திற்கு அதிகமாக இருந்தால் **மழைப்பொழிவு** எனவும் 0.5மி.மீ. விட்டத்திற்கு குறைவாக இருந்தால் அதைத் **தூறல்** எனவும் அழைக்கப்படுகிறது.
- **கல்மழை (Sleet):** நீர்த் துளிகளும், 5 மி.மீ. விட்டத்திற்கு மேல் உள்ள பனித்துளிகளும் கலந்து காணப்படும் பொழிவிற்கு கல்மழை என்றுபெயர்.
- வளிமண்டல வெப்பநிலை 0° C க்கும் குறைவாக இருக்கும் அடுக்குகளில் மழைத்துளி விழும் பொழுது நீர் உறைநிலைக்குச் சென்று விடுகிறது.
- **உறைபனி மழை (Freezing Rain):** மழைத்துளிகள் புவிப்பரப்பிற்கு அருகாமையில் குளிர்ந்த காற்று வழியாக விழும் பொழுது உறைவதில்லை. மாறாக குளிர்ந்த புவிப்பரப்பைத் தொடும் பொழுது அம்மழைத்துளிகள் உறைந்து விடுகின்றன. இவையே உறைபனி எனப்படும்.
- இம்மழைத்துளியின் விட்டத்தின் அளவு **0.5 மி.மீ. விட அதிகமாக** இருக்கும்.
- **ஆலங்கட்டி மழை (Hail):** மழைப்பொழிவானது 5 மி.மீ. விட்டத்தை விட பெரிய உருண்டையான பனிக்கட்டிகளைக் கொண்டிருந்தால் ஆலங்கட்டி மழை என்று பெயர்.
- கார்திரள் மேகங்களிலிருந்து (Cumulonimbus clouds) இடியுடன் கூடிய மழையாக உருவாகிறது.
- **பனிப்பொழிவு (Snow):** மேகத்திலுள்ள வெப்பம் குறைவதன் காரணமாக நீராவி அடிக்கடி நேரடியாக பனிக்கட்டிகளாக மாற்றப்படுகிறது. இது துகள் போன்று பனியின் நுண்துகள்களைத் திரளாகக் கொண்டு காணப்படுகிறது. இந்தப் பனித் திரள்கள் பொழிவதைப் பனிப்பொழிவு என்கிறோம்.

**நீர் ஊடுருவல் (Infiltration):**

- புவியின் மேற்பரப்பில் உள்ள மண்ணின் அடுக்கிற்குள் நீர் புகுவதற்கு நீர் ஊடுருவல் என்று பெயர்.
- **நீர் உட்கசிதல் (Percolation):** நீர் உட்கசிவு என்பது மண்ணடுக்கு மற்றும் பாறை அடுக்குகளின் வாயிலாக ஊடுருவிய நீர் கீழ்நோக்கி நிலத்திற்கு அடியில் செல்வதாகும்.
- **நீர் உட்கசிதல் என்பது செறிவூட்டப்பட்ட பகுதியிலிருந்து, செறிவூட்டப்படாத பகுதிக்குச் செல்லும் நீரோட்டம் ஆகும்.**
- **நீர் வழிந்தோடல் (Run off):** நீர் வழிந்தோடல் என்பது ஓடும் நீர், ஈர்ப்பு விசையினால் இழுக்கப்பட்டு நிலப்பகுதியின் மேற்பரப்பு முழுவதும் செல்வதாகும்.
- மழை நீரில் 35 சதவீதம் மட்டுமே கடல் மற்றும் பேராழிகளில் கலக்கிறது. மீதமுள்ள 65 சதவீதமானது மண்ணில் உறிஞ்சப்படுகிறது.

**நீர் வழிந்தோடலின் வகைகள்:**

- மேல்மட்ட மழைநீர் வழிந்தோடல்: மேல்மட்ட மழைநீர் வழிந்தோடல் என்பது மழைநீரின் ஒரு பகுதி நீரோடையோடு கலந்துவிடுகிறது. இது மழைப்பொழிவு அதிகமாகவும் நீண்ட காலத்திற்கும் ஊடுருவலை விட அதிகமாக இருக்கும் பொழுதும் ஏற்படுகிறது.

www.kalvinews.com

- **அடிப்பரப்பு நீர் வழிந்தோடல்:** நீரானது அடி மண் அடுக்கினுள் நுழைந்து நிலத்தடி நீரில் கலக்காமல் பக்கவாட்டுத் திசையில் நகர்ந்து ஓடைகள், ஆறுகள் மற்றும் கடலுடன் கலப்பதால் இதற்கு அடிப்பரப்பு நீர்வழிந்தோடல் என்று பெயர்.
- **அடிப்பரப்பு நீர் வழிந்தோடல், இடைநீர் ஊட்டம் எனவும் பொதுவாக அழைக்கப்படுகிறது.**
- **அடிமட்ட நீர் ஓட்டம்:** செறிவடைந்த நிலத்தடி நீர் மண்டலத்திலிருந்து நீர்ப்பாதை வழியாக நிலத்தடிநீராக ஓடுவதை அடிமட்ட நீரோட்டம் ஆகும்.

**நீரியலை அளக்க உதவும் அலகுகள்:**

1. **ஆவியாதல் - அங்குலம் அல்லது செ.மீ**
2. **மழை நீர் ஊடுருவல் - அங்குலம் அல்லது செ.மீ / மணி**
3. **மழைப் பொழிவு - அங்குலம் அல்லது மிமீ அல்லது செ.மீ**
4. **புவி மேற்பரப்பில் நீர் ஊடலின் கன அளவு - கன அடி / விநாடி**
5. **மழைப் பொழிவின் கன அளவு - கன அடி**
6. **மழைநீரின் கொள்ளளவு - கன அடி / ஏக்கர் அடி**

**பயிற்சி வினாக்கள்:**

1. நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திலிருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு_______ என்றுபெயர்.

   1. ஆற்றின் சுழற்சி 2. நீரின் சுழற்சி
   3. பாறைச் சுழற்சி 4. வாழ்க்கைச் சுழற்சி

2. தாவரங்களும், விலங்குகளும் உயிர்வாழ்வதற்கு_______ அத்தியாவசியமானதாகும்.

   1. நீர் 2. உறைபனி 3. பனிக்கட்டி 4. குடாக்கள்

3. புவியின் மேற்பரப்பில் உள்ள நீரின் மொத்த அளவு_______.

   1. 61% 2. 70% 3. 71% 4. 81%

4. பொருத்துக:

| நீர் ஆதாரம் | | மொத்த நீரின் சதவீதம் |
|---|---|---|
| i. பேராழிகள், கடல்கள் மற்றும் குடாக்கள் | - | a) 0.001% |
| ii. நிலத்தடி நீர் | - | b) 0.0002% |
| iii. வளிமண்டலம் | - | c) 96.54% |
| iv. ஆறுகள் | - | d) 1.69% |

   1. i - c ii - a iii - b iv - d
   2. i - c ii - d iii - b iv - a
   3. i - c ii - a iii - b iv - d
   4. i - c ii - d iii - a iv - b

5. புவியில் உள்ள மொத்த நீரில் உவர்ப்பு நீரின் சதவீதம்_______.

   1. 97.2% 2. 98.2% 3. 96.2 % 4. 95.2%

6. புவியில் உள்ள நன்னீரின் சதவீதம்_______.

   1. 71% 2. 97% 3. 2.8% 4. 0.6%

www.kalvinews.com

7. பொருளாதார ரீதியில் நவீன தொழில்நுட்பத்தின் மூலம் துளையிட்டு எடுக்கப்படும் மொத்த நிலத்தடி நீரின் சதவீதம்_______.
   1. 0.6%   2. 71%   3. 97%   4. 2.8%

8. கூற்று(i): நீர், ஆவியாதல் மூலம் வளிமண்டலத்தின் உயரமான பகுதிகளுக்குச் செல்லும் பொழுது, திரவமாகச் சுருங்குதலின் மூலம் மேகங்களாக மாறுகிறது.
   கூற்று(ii): மேகத்தில் உள்ள நீர்த்திவலைகள் உருகுதல் மற்றும் மேகம் உடைதல் காரணமாக பொழிவின் பல்வேறு வடிவங்களில் புவியை வந்தடைகிறது.
   1. கூற்று I சரி ii தவறு   2. கூற்று I மற்றும் ii சரி
   3. கூற்று I தவறு ii சரி   4. கூற்று I மற்றும் ii தவறு

9. நீரின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய அறிவியல் படிப்பிற்கு_______ என்றுபெயர்.
   1. பாறைக்கோளம்   2. வாயுக்கோளம்
   3. நீரியல்   4. இவற்றில் எதுவுமில்லை

10. நீரியல் சுழற்சிக்கு தேவையான ஆற்றல் எங்கிருந்து கிடைக்கிறது?
   1. சூரியன்   2. மின் மையங்கள்
   3. தாவரங்கள்   4. விலங்கினங்கள்

11. மேகத்திலிருந்து நிலத்தின் மீது விழும் நீர்த்துளிகளுக்கு_______ என்றுபெயர்.
   1. ஆவியீர்ப்பு   2. நீர் சுருங்குதல்   3. ஆவியாதல்   4. மழைப்பொழிவு

12. பனிப்பாறைகளில் இருந்து நேரடியாக நீர் ஆவியாவது_______ என்று அழைக்கப்படுகிறது.
   1. சுருங்குதல்   2. பதங்கமாதல்
   3. மழைப்பொழிவு   4.உட்கசிந்து வெளியேறுதல்

13. நீராவியின் நீர்சுருங்குதல் மூலம் உருவாகும் நீர்த்துளி_______ எனப்படுகிறது.
   1. மேகங்கள்   2. மழைப்பொழிவு   3. பனி   4. மூடுபனி

14. வளி மண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு ________ எனப்படும்.
   1. பனிப்பொழிவு   2. வெப்ப நீர்   3. ஆவியீர்ப்பு   4. ஈரப்பதம்

15. நீரியல் சுழற்சி_______ முக்கிய கூறுகள் உள்ளன.
   1. 2   2. 3   3. 4   4. 6

16. திட, திரவ, வாயுநிலையில் இயற்கையாக காணப்படும் ஒரே பொருள்_______.
   1. ஆக்ஸிஜன்   2. ஹைட்ரஜன்   3. நீர்   4. ஹீலியம்

17. வளிமண்டலத்தில் நீர் எந்த வடிவத்தில் காணப்படுகிறது.?
   1. பெருங்கடல்கள்   2. ஆறுகள்   3. மேகங்கள்   4. ஏரிகள்

18. கீழ்க்கண்டவற்றில் எவை பொழிவின் உருவங்கள் ஆகும்.?
   1. மழை   2. ஆலங்கட்டி மழை
   3. பனி   4. இவையனைத்தும்

www.kalvinews.com

19. புவியின் மேற்பரப்பு நீர்நிலைகளில் இருந்து ஆவியாதல் வழியாகவும் மற்றும் தாவரங்களிலிருந்து நீர் உட்கசிந்து வெளியிடுதல் மூலம் நிகழும் புவியின் மொத்த நீர் இழப்பு_______.

1. ஆவியீர்ப்பு
2. திரவமாய் சுருங்குதல்
3. பொழிவு
4. நீர் ஊடுருவல்

20. பேராழிகள், கடல்கள், ஏரிகள் மற்றும் ஆறுகள் போன்றவற்றிலிருந்து_______% ஈரப்பதம் ஆவியாகிறது.

1. 80%
2. 90%
3. 70%
4. 60%

21. கூற்று: உலக அளவில் நீர் எவ்வளவு ஆவியாகிறதோ, அதே அளவு பொழிவாக புவிக்கு மீண்டும் கிடைக்கிறது.

காரணம்: புவியியல் ரீதியாக ஆவியாதல் செயல்முறைகள் நடைபெறுவதில்லை. காற்று அதிகமாக உள்ள காலங்களில் ஆவியாதல் விகிதம் குறைவு. காற்று குறைவாக உள்ள காலங்களில் ஆவியாதல் விகிதம் அதிகம்.

1. கூற்று சரி, காரணம் தவறு.
2. கூற்று தவறு ,காரணம் சரி.
3. கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது
4. கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை

22. கீழ்க்கண்ட வாக்கியத்திற்கு பொருத்தமற்றதைத் தேர்ந்தெடு:

ஆவியாதல் விகிதம் அதிகரித்தலானது,

1. காற்றின் வேகம் அதிகரிக்கும் பொழுது
2. வெப்பநிலை அதிகரிக்கும் பொழுது
3. ஈரப்பதம் குறையும் பொழுது
4. பூமியில் நீர்நிலைகள் அதிகரிக்காத பொழுது

23. நீரியல் சுழற்சி ________ நிலைகளில் நடைபெறுகிறது?

1. நீர் வழிந்தோடல்
2. நீர் உட்கசிந்து வெளியிடுதல்
3. ஆவியீர்ப்பு
4. இவை மூன்றும்

24. கீழ்க்காணும் எந்த வளத்தின் மூலம் தாவரங்களின் வேர்களுக்கு நீரை செலுத்துகின்றன?

1. கனிம வளம்
2. நீர் வளம்
3. மண் வளம்
4. உயிர் வளம்

25. நீராவி, நீராக மாறும் செயல்முறைக்கு_______ என்று பெயர்.

1. நீர் சுருங்குதல்
2. நீர் விரிவடைதல்
3. நீர் ஊடுருவல்
4. நீர் உட்கசிதல்

26. நீர்த்துளிகள் புவியின் மேற்பரப்பில் குளிர்ந்த பொருள்களின் மீது படும்பொழுது_______ உருவாகிறது.

1. உறைபனி
2. பனித்துளி
3. அடர் மூடுபனி
4. மூடுபனி

www.kalvinews.com

27. சரியான இணையை தேர்ந்தெடுக்க.
    1. நீர் சுருங்குதல் - ஆவியாதலின் நேர்வினை
    2. நீர் சுருங்குதல் - ஆவியாதலின் எதிர்வினை
    3. நீர் உட்கசிந்து வெளியிடுதல் - நீர் சுருங்குதல்
    4. நீர்த்துளிகள் - ஆவியாதலின் நேர்வினை

28. குளிர்ந்த பொருட்களின் மேற்பரப்புகளின் மீது நீராவி படிந்து பனிப்படிகங்களாக மாறுவதையே_______ என்கிறோம்.
    1. உறைபனி 2. பனி 3. மூடுபனி 4. அடர் மூடுபனி

29. காற்றில் இருக்கும் நீர் சுருங்குதலால் செறிவூட்டப்பட்ட மிக நுண்ணிய நீர்த்துளிகளே_______ எனப்படும்.
    1. உறைபனி 2. பனி 3. மூடுபனி 4. அடர் மூடுபனி

30. காற்றடுக்கில் அடர் மூடுபனி எந்த வகையான போக்குவரத்துக்கு உகந்தது? அதன் உயரம் என்ன?
    1. ரயில் போக்குவரத்து (50 km) 2. விமான போக்குவரத்து (10 km)
    3. விமான போக்குவரத்து (15 km) 4. ரயில் போக்குவரத்து (40 km)

31. காற்றில் தொங்கும் நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர்த்துளிகளையே_______ என்கிறோம்.
    1. மூடுபனி 2. அடர் மூடுபனி 3. உறைபனி 4. பனி

32. காற்றில் உள்ள நீராவி விரைவாகக் குளிர்வதால் பார்வைக்குத் தெரியாத வாயுநிலையிலிருந்து பார்வைக்குப் புலனாகும் நீர்த்துளிகளாக மாறுவது_______.
    1. பனி 2. மூடுபனி 3. அடர் மூடுபனி 4. உறைபனி

33. வளிமண்டலத்தில் காணப்படும் குறைந்த எடை கொண்ட மிக நுண்ணிய நீர்த்துளிகள் மற்றும் பனிப்படிகங்களைக் கொண்டது_______.
    1. பனி 2. மூடுபனி 3. மேகங்கள் 4. உறைபனி

34. மேகங்களில் காணப்படும் நீர்த்துளிகளின் அளவானது_______ மைக்ரான் முதல்_______ மைக்ரான் கொண்டது.
    1. 2 முதல் 90 2. 2 முதல் 80
    3. 2 முதல் 100 4. 2 முதல் 110

35. வளிமண்டலத்தில் உள்ள மேகங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் நீராக புவியின் மேற்பரப்பை வந்தடைவது_______.
    1. மழைப்பொழிவு 2. மேகங்கள்
    3. கார்திரள் மேகம் 4. படைத்திரள் மேகங்கள்

36. நீர்த்துளிகளும் 5 மி.மீ. விட்டத்திற்கு மேல் உள்ள பனித்துளிகளும் கலந்து காணப்படும் பொழிவிற்கு _______ என்று பெயர்.
    1. மழை 2. கல்மழை
    3. உறைபனி மழை 4. ஆலங்கட்டி மழை

www.kalvinews.com

36. கூற்று (i): மழைப்பொழிவு நீர்த்துளிகளின் வடிவத்தில் உள்ளதால் மழை எனப்படுகிறது.

கூற்று (ii): நீர்த்துளிகள் 0.5 மி.மீ. விட்டத்திற்கு அதிகமாக இருந்தால் மழைபொழிவு எனவும் 0.5 மி.மீ. க்கு குறைவாக இருந்தால் அதை தூறல் எனவும் அழைக்கப்படுகிறது.

1. கூற்று I சரி ii தவறு
2. கூற்று I தவறு ii சரி
3. கூற்று I மற்றும் ii தவறு
4. கூற்று I மற்றும் ii சரி

38. ஆலங்கட்டி மழை கீழ்கண்ட எந்த மேகங்களுடன் தொடர்புடையது.

1. கார்திரள் மேகம்
2. திரள் மேகம்
3. படை மேகம்
4. கீற்று மேகம்

39. மேகத்திலுள்ள வெப்பம் குறைவதால் நீராவி அடிக்கடி நேரடியாக _______ஆக மாற்றப்படுகிறது.

1. உறைபனி
2. கல்மழை
3. பனிக்கட்டி
4. மழை

40. புவியின் மேற்பரப்பிலுள்ள மண்ணின் அடுக்கிற்குள் நீர்ப் புகுவதிற்கு _______ என்று பெயர்.

1. நீர் ஊடுருவல்
2. நீர் வழிதல்
3. நீர் தள்ளுதல்
4. நீர் கொள்ளல்

41. நீர், மண்ணின் இரண்டாவது அடுக்கிலிருந்து அல்லது புவியின் மேற்பரப்பு வழியாக ஆறுகளிலும், ஓடைகளிலும், ஏரிகளிலும் பெருங்கடலுக்குச் செல்லும் முறைக்கு _______ என்று பெயர்.

1. ஆவி சுருங்குதல்
2. ஆவியாதல்
3. நீர் உட்கசிந்து வெளியிடுதல்
4. நீர் வழிந்தோடல்

42. நீரானது தாவரங்களின் இலைகளிலிருந்து நீராவியாக மாறுவதற்கு _______ என்று பெயர்.

1. நீர் உட்கசிந்து வெளியிடுதல்
2. நீர் சுருங்குதல்
3. நீராவி சுருங்குதல்
4. பொழிவு

43. குடிப்பதற்கு உகந்த நீரை _______ என்று அழைப்பர்.

1. நிலத்தடி நீர்
2. மேற்பரப்பு நீர்
3. நன்னீர்
4. ஆர்ட்டீசியன் நீர்

44. பொருந்தாத இணையைக் கண்டறிக.

1. மழை வழிவின் கனஅளவு - ஏக்கர் அடி / கனஅடி
2. நீர் வழிந்தோடல் - கனஅடி / விநாடி
3. மழைபொழிவு - அங்குலம் / மி.மீ. / செ.மீ.
4. ஆவியாதல் - கனஅடி / விநாடி

45. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

நீராவியாதல் என்பது,

i நீராவி நீராக மாறும் செயலாக்கம்

iii. நீர் நீராவியாக மாறும் செயலாக்கம்

iii. நீர் 100°C வெப்பநிலையில் கொதிக்கிறது. ஆனால் 0°C வெப்பநிலையில்ஆவியாக ஆரம்பிக்கிறது.

iv. ஆவியாதல் மேகங்கள் உருவாக காரணமாக அமைவதில்லை.

1. i, iv சரி
2. ii சரி
3. ii, iii சரி
4. அனைத்தும் சரி

www.kalvinews.com

46. பொருத்துக.

i. தாவரங்கள் - a) மேகங்கள்

ii. நீர்சுருங்குதல் - b) கல்மழை

iii. பனித்துளி மற்றும் மழைத்துளி - c) புவியின் மேற்பரப்பு

iv. நீர் ஊடுருவுதல் - d) நீர் உட்கசிந்து வெளியிடுதல்

1. i - d ii - a iii - b iv - c
2. i - d ii - b iii - a iv - c
3. i - b ii - a iii - d iv - c
4. i - d ii - b iii - c iv - a

47. கூற்று: நீர்த் துளிகள் புவியின் மேற்பரப்பில் குளிர்ந்த பொருள்களின் மீது படும்பொழுது பனி உருவாகிறது

காரணம்: பொருட்களின் வெப்பநிலை பனிநிலையின் வெப்ப நிலையைவிட அதிகமாக இருக்கும் போது உருவாகிறது. (NMMS 2019-20)

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.
(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
(3) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
(4) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது

48. நீர்த்துளிகளும், 5 மி.மீ விட்டத்திற்கு மேல் உள்ள பனித்துளிகளும் கலந்து காணப்படும் பொழிவிற்கு _______ என்று பெயர். (NMMS 2019-20)

(1) ஆலங்கட்டி மழை (2) பனி
(3) மழை (4) கல் மழை

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (2) | 11 | (4) | 21 | (1) | 31 | (1) | 41 | (4) |
| 2 | (1) | 12 | (2) | 22 | (4) | 32 | (2) | 42 | (1) |
| 3 | (3) | 13 | (1) | 23 | (4) | 33 | (3) | 43 | (3) |
| 4 | (4) | 14 | (4) | 24 | (3) | 34 | (3) | 44 | (4) |
| 5 | (1) | 15 | (4) | 25 | (1) | 35 | (1) | 45 | (3) |
| 6 | (3) | 16 | (3) | 26 | (2) | 36 | (2) | 46 | (1) |
| 7 | (1) | 17 | (3) | 27 | (2) | 37 | (4) | 47 | (3) |
| 8 | (2) | 18 | (4) | 28 | (1) | 38 | (1) | 48 | (4) |
| 9 | (3) | 19 | (1) | 29 | (4) | 39 | (3) | | |
| 10 | (1) | 20 | (2) | 30 | (2) | 40 | (1) | | |

www.kalvinews.com



# 4. இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல்

**தொகுப்பு:**
**திருமதி.க.சாந்தி. M.Sc., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியை (கணிதம்),**
**ஸ்ரீசிவசைலநாதா நடுநிலைப்பள்ளி,**
**நெடுவயல், தென்காசி மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.ம.செல்வராஜ், M.Sc., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி,**
**அரசம்பாளையம்,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

- மக்கள் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வது இடம் பெயர்தல் எனப்படும்.

**ஐக்கிய நாடுகள் அமைப்பின் வரையறை::**

- இடம் பெயர்வு என்பது இரு புவியியல் பிரதேசங்களுக்கிடையே நடைபெறும் ஒரு வகையான மக்கள்தொகை நகர்வாகும்
- இது பொதுவாக இருப்பிடத்தில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்துகிறது.
- இடம் பெயர்தல் என்பது மனித குலத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே தொடந்து நடைபெறும் நிகழ்வாகும்
- இடம் பெயர்தலுக்கு இரண்டு வகையான காரணிகள் உள்ளன.

1. **சாதக காரணிகள் அல்லது இழு காரணிகள்:** ஓர் இடத்தை நோக்கி **மக்களை ஈர்க்கும் காரணிகள் சாதக காரணிகள் அல்லது இழு காரணிகள் (Pull Factors)** என அழைக்கப்படுகின்றன.
2. **பாதகமான காரணிகள் அல்லது உந்து காரணிகள்:** மக்களை தங்கள் வசிப்பிடங்களிலிருந்து **வெளியேறச் செய்யும் காரணிகள் உந்து காரணிகள் அல்லது பாதகக் காரணிகள் (Push Factors)** என அழைக்கப்படுகின்றன.
    - ஐரோப்பா, வட அமெரிக்கா , ஆஸ்திரேலியா , லத்தீன் அமெரிக்கா , கரீபியன் போன்ற நாடுகளில் புலம் பெயர்ந்தோரில் ஆண்களை விட பெண்களே அதிகம்.
    - ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்தோரில் பெண்களை விட ஆண்களே அதிகம்.
    - 2017 ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் புலம்பெயர்வில் இந்தியா மிகப்பெரிய நாடாகக் கருதப்பட்டது.
    - 2017 ஆம் ஆண்டு இந்தியாவிலிந்து புலம்பெயந்தோரின் எண்ணிக்கை 17 மில்லியன்
    - 2017 ஆம் ஆண்டு மெக்சிகோவிலிந்து புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 13 மில்லியன்

www.kalvinews.com

**இடப் பெயர்வுக்கான 5 காரணிகள்:**

| இடப் பெயர்வுக்கான காரணிகள் | விளக்கம் மற்றும் தகவல்கள் | சாதக காரணிகள் அல்லது இழு காரணிகள் | பாதகமான காரணிகள் அல்லது உந்து காரணிகள் |
|---|---|---|---|
| சூழியல் அல்லது இயற்கை காரணிகள் | இயற்கையான ஒன்று. | இயற்கை வளங்கள் மற்றும் கனிம வளங்கள் மிகுந்த பகுதி, நீர்வளம், பிரச்சனைகளற்ற நிலப்பகுதிகள், மாசற்ற நிலைகள் | எரிமலை வெடிப்பு, நில அதிர்வு, வெள்ளம், வறட்சி, உணவு பற்றாக் குறை |
| பொருளாதார காரணிகள் | இடம்பெயர்வின் அளவு மற்றும் திசைகளைப் பல்வேறு பொருளாதார காரணிகள் தீர்மானிக்கின்றன. | வளமான நிலம், வேலை வாய்ப்பு, தொழில் நுட்ப வளர்ச்சி | ஏழ்மை நிலை, வேலை வாய்ப்பின்மை |
| சமூக மற்றும் பண்பாட்டுக் காரணிகள் | 1. பெண்களின் திருமணத்திற்குப் பின் இடம்பெயர்வு<br>2. புனித யாத்திரை | சமூக ஒற்றுமை | சமூக முரண்பாடுகள் |
| மக்கள் தொகை சார்ந்த காரணிகள் | வயது, பாலினம், அதிக மற்றும் குறைந்த மக்கள் தொகை. இளைஞர்களின் இடம்பெயர்வு மற்ற பிரிவினரைவிட அதிகம். | குறைவான மக்கள் தொகை | அதிக மக்கள் தொகை |
| அரசியல் காரணிகள் | பழங்காலத்தில் இருந்தே போர்கள் இடப்பெயர்வுக்கு குறிப்பிடத்தக்க காரணங்களில் ஒன்றாக இருந்துள்ளது. | 1. தனித்துவம் மற்றும் சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு.<br>2. குறைந்த செலவு, எளிதில் கிடைக்கும் நகர்ப்புற சேவைகள் | 1. அதிகமான அல்லது பற்றாக்குறையான நகர்ப்புற சேவைகள்<br>2. காலனி ஆதிக்கம்<br>3. போர்கள் |

**இடம் பெயர்வின் வகைகள்:**

1. நிர்வாக எல்லையின் அடிப்படையில் இடம் பெயர்வுகள்
2. இடம் பெயர்பவரின் விருப்பத்தின் அடிப்படையில் இடம்பெயர்தல்
3. இடம் பெயர்ந்த இடத்தில் தங்கும் கால அளவின் அடிப்படையில் இடம் பெயர்தல்.

**1. நிர்வாக எல்லை அடிப்படையில் இடம் பெயர்வுகள்:**

- **அ) உள்நாட்டு இடம்பெயர்வு:** ஒரு நாட்டின் எல்லைக்குள் நிகழும் மக்களின் இடம்பெயர்வானது உள்நாட்டு இடம்பெயர்வு என அழைக்கப்படுகிறது.

www.kalvinews.com

- **உள்நாட்டு இடப்பெயர்வு ஆனது இடப்பெயர்வு தொடங்கும் இடம் மற்றும் சேருமிடம் ஆகியவற்றின் அடிப்படையில் 4 வகைப்படும்:**
    1. **ஊரகத்திலிருந்து நகர்ப்புறம் நோக்கி இடம் பெயர்தல்** - ஊரகத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு மக்கள் வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பொழுதுபோக்கிற்காக இடம் பெயர்கின்றனர்
    2. **நகரத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்தல்** - நகர்ப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு அதிக வருவாய் பெறும் பொருட்டு மக்கள் இடம் பெயர்கின்றனர்.
    3. **ஊரகத்தில் இருந்து ஊரகத்திற்கு இடம் பெயர்தல்**- ஊரகத்திலிருந்து ஊரகத்திற்கு மக்கள் சாகுபடிக்கு ஏற்ற வளமான நிலம் மற்றும் பிற சமூக காரணிகளான திருமணம் போன்றவைகளுக்காக இடம்பெயர்கின்றனர்
    4. **நகர்ப்புறத்திலிருந்து ஊரக பகுதிக்கு இடம் பெயர்தல்** - நகர்ப்புறங்களிலிருந்து ஊரக பகுதிக்கு மக்கள் நகர்ப்புற பிரச்சினைகளில் இருந்து விடுபடவும் பூர்வீக இடங்களுக்கு திரும்புவதற்குமே இடம் பெயர்கின்றனர்;
- மக்கள் ஊரகப் பகுதியிலிருந்து நகர்ப்புறத்தை நோக்கி அதிகமாக இடம்பெயர்கின்றனர்.
- **ஆ) சர்வதேச இடம்பெயர்தல்:** ஒரு நாட்டின் எல்லைகளைக் கடந்து நடக்கும் இடம்பெயர்தல் சர்வதேச இடம்பெயர்தல் என்று அழைக்கப்படுகிறது.

2. **இடம் பெயர்வரின் விருப்பத்தின் அடிப்படையில் இடம் பெயர்தல்:**

- **தன்னார்வ இடம்பெயர்வு:** தனிநபரின் விருப்பத்தின் பேரிலும் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் நடைபெறும் இடம்பெயர்தல் தன்னார்வ இடம்பெயர்வு எனப்படுகிறது.
- **தன்னார்வமில்லா (அ) கட்டாய இடம்பெயர்வு:** மக்களின் விருப்பத்திற்கு மாறாக இடம்பெயர்வு நடைபெறுமாயின் அது **அனிச்சையான இடம்பெயர்வு அல்லது தன்னார்வமில்லா இடம்பெயர்வு** என அழைக்கப்படுகிறது.
- **போர் போன்ற உந்து காரணியால்** மக்கள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் குடிபெயர்தல் **அனிச்சையான இடம்பெயர்வு** ஆகும்.

3. **இடம் பெயர்ந்த இடத்தில் தங்கும் கால அளவின் அடிப்படையில் இடம் பெயர்தல்:**

- **குறுகிய கால இடம் பெயர்வு** : இந்த வகையான இடப் பெயர்வுகளில் குடியேறுபவர்கள் பூர்விக இடத்திற்கு திரும்புவதற்கு முன் குறுகிய காலம் மட்டுமே குடி பெயர்ந்த இடத்தில் தங்குவர். இந்த இடப் பெயர்வு **சில நாட்கள் முதல் சில மாதங்கள் வரை** மட்டுமே இருக்கும்
- .**நீண்ட கால இடம் பெயர்வு:** இந்த வகையான இடம் பெயர்வுகளில் குடியேறுபவர்கள் குறைந்தபட்சம் சில வருடங்களாவது குடிபெயர்ந்த இடத்தில் தங்குவர். இந்ந இடப் பெயர்வு **சில நாட்கள் முதல் சில மாதங்கள் வரை** மட்டுமே இருக்கும்
- **பருவகால இடம்பெயர்வு:** மக்களில் ஒரு குழுவினர்; ஒரு பூர்வீக இடங்களிலிருந்து குடிபெயர்ந்து அப்பருவத்தின் முடிவில் மீண்டும் திரும்பி வருதல் பருவகால இடம்பெயர்வு என அழைக்கப்படுகிறது.
- மக்கள் கால்நடையுடன் இடம்பெயர்தல் மந்தை இடமாற்றம் **(Transhumance)** எனப்படும்.
- கோடைகாலத்தில் மலைவாழ் இடங்களுக்குக் குடியேறும் மக்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் பயிர் விதைக்கும் பருவங்களில் இடம்பெயர்வதும் பருவகால இடம்பெயர்வு ஆகும்.

www.kalvinews.com

**மண்டல வாரியான உலக மக்கட்தொகை பங்கு மற்றும் சர்வதேச இடம்பெயர்வு - 2017**

**அட்டவணை:**

| மண்டலத்தின் பெயர் | மொத்த மக்கள் தொகை | உலக மக்கள் தொகையில் சதவீதம் | சர்வதேச அளவில் புலம் பெயர்ந்தோர் | சர்வதேச புலம் பெயர்ந்தோர் சதவீதம் |
|---|---|---|---|---|
| ஆப்பிரிக்கா | 12,56,268 | 16.6% | 36,266 | 14.1% |
| ஆசியா | 45,04,428 | 59.7% | 1,05,684 | 41% |
| ஐரோப்பா | 7,42,074 | 9.8% | 61,191 | 23.7% |
| லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் | 6,45,593 | 8.6% | 37,720 | 14.6% |
| வட அமெரிக்கா | 3,61,208 | 4.8% | 4,413 | 1.7% |
| ஓசியானியா | 40,691 | 0.5% | 1,880 | 0.7% |
| அறியப்படாதவை | - | - | 10,560 | 4.1% |
| உலகம் | 75,50,262 | 100% | 2,57,715 | 100% |

- சமீப காலமாக சர்வதேச அளவில் புலம்பெயர்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
- 2000 இல் 173 மில்லியன்களாக இருந்த புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 2010 இல் 220 மில்லியன்களாகவும், 2017 இல் 258 மில்லியன்களாகவும் அதிகரித்துள்ளது.

**இடம் பெயர்தலின் விளைவுகள்:**

**அ) மக்கள் தொகை விளைவுகள்:**

- இடப் பெயர்வானது குடியேற்றம் மற்றும் குடியிறக்கம் ஆகிய இரு பகுதிகளையும் பாதிப்படையச் செய்கிறது.
- திருமணத்திற்குப் பிறகு நடைபெறும் பெண்களின் இடம்பெயர்வு அவர்களின் பூர்வீக பகுதியில் பாலின விகிதம் குறையவும், திருமணமாகிச் செல்லும் இடங்களில் பாலின விகிதம் அதிகரிக்கவும் வழிவகுக்கிறது.

**ஆ) சமூக விளைவுகள்:**

- பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் நகர்ப்புறத்தை நோக்கி இடம் பெயர்வதால் பன்முக சமுதாயம் உருவாக இடம்பெயர்வு வழிவகுக்கிறது.

**இ) பொருளாதார விளைவுகள்:**

- இடப்பெயர்வினால் அதிக மக்கள் தொகை நிறைந்த பகுதிகளிலிருந்து குறைந்த மக்கள் தொகை கொண்ட பகுதிகளுக்கு அதிக மக்கள் இடம்பெயர்வதால் மக்கள் வள விகிதம் சமநிலையற்றதாகிவிடுகிறது.
- இடம்பெயர்வு ஒரு பகுதியிலுள்ள மக்கள் தொகையின் தொழில் கட்டமைப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.
- பின்தங்கிய நாடுகளைச் சார்ந்த தொழிற்திறன் கொண்ட மக்கள் சிறந்த வேலை வாய்ப்புகளைத் தேடி வளர்ந்த நாடுகளுக்குச் செல்லுதல் அறிவார்ந்த மக்கள் வெளியேறுதல் **(Brain Drain)** எனப்படுகிறது.
- அறிவார்ந்த மக்கள் வெளியேறுதலால் பூர்வீக பகுதிகள் பின்தங்கிய நிலையை அடைகின்றன. இது **அறிவுசார் வெளியேற்ற விளைவு (Back Wash Effect)** என அழைக்கப்படுகிறது.

www.kalvinews.com

**ஈ) சுற்றுச் சூழல் விளைவுகள்:**

- ஊரகப் பகுதியில் இருந்து நகர்ப்புற பகுதிகளுக்குப் பெருமளவிலான மக்கள் இடம் பெயர்வதால் நகரங்களில் மக்கள் நெரிசலையும், வளங்கள் பற்றாக்குறையையும் ஏற்படுத்துகிறது.
- இவ்விடப்பெயர்வு நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- காற்று, நீர், நிலம் மாசடைகிறது.
- குடிநீர் பற்றாக்குறை, போதிய குடியிருப்பின்மை, போக்குவரத்து நெரிசல், மோசமான வடிகால் அமைப்பு, குடியிருப்பு இடப் பற்றாக்குறை மற்றும் நில மதிப்பு போன்றவை குடிசைகள் உருவாக வழி வகுக்கின்றன.

**நகரமயமாதல் :**

- நகரங்கள் மற்றும் மாநகரங்களில் வாழும் மக்கள் தொகையின் விகிதாச்சாரம் அதிகரிப்பதை நகரமயமாதல் எனப்படுகிறது.

**நகரமயமாதலுக்கான காரணிகள் 3 ஆகும்**

1. இயற்கையான மக்கள் தொகை வளர்ச்சி
2. ஊரகத்திலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்தல்
3. ஊரகப் பகுதிகளை நகர்ப்புறங்களாக மறுசீரமைப்பு செய்தல்

- தற்போதைய நகரமயமாக்கல் மக்கள் தொகையில் மாற்றங்கள், நிலப் பரப்பு, பொருளாதாரச் செயல்முறைகள் மற்றும் புவியியல் பகுதிகளின் பண்புகள் ஆகியவைகளும் நகரமயமாக்கலுக்கு காரணமாக உள்ளன.
- வரலாற்றில் முதல்முறையாக உலகளாவிய நகர்ப்புற மக்கள்தொகை ஊரக மக்கள் தொகையை விட அதிகமான ஆண்டு - 2017

**உலக நகரமயமாக்கலின் தோற்றம் மற்றும் வளர்ச்சி:**

**பண்டைய காலம்:**

- வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே நகர மையங்கள் உருவாகத் தொடங்கின.
- .உணவு தானிய மிகை உற்பத்தியே நகரமயமாக்கலுக்கு காரணமாக இருந்தது.
- **மெசபடோமியாவின் உர் மற்றும் பாபிலோன், எகிப்தில் உள்ள தீப்ஸ் மற்றும் அலெக்சாந்திரியா, கிரேக்கத்தின் ஏதென்ஸ், இந்தியாவின் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ ஆகியவை உலகின் வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் அமைந்த குறிப்பிடத்தக்க நகரங்கள்.**
- ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஏஜியன் கடலுக்கு அருகில் பல காணப்பட்டன.
- கிரேக்க காலனியாக்க காலங்களில் வர்த்தக விரிவாக்கம் பல நகரங்கள் மற்றும் மாநகரங்களை தோற்றுவித்தது.

**இடைக்காலம்**

- 11 ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தைய காலம் இடைக்காலம் ஆகும்.
- இடைக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளின் கடல் கடந்த வணிகம் அதிகரித்தது.13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் **பாரிஸ், இலண்டன், ஜெனிவா, மிலன் மற்றும் வெனிஸ்** ஆகிய முக்கிய நகரங்கள் ஐரோப்பாவில் காணப்பட்டன.

**நவீன காலம்**

- 17 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் கால கட்டம் நவீன காலம் ஆகும்.

www.kalvinews.com

- 19 ஆம் நூற்றாண்டில் உருவான தொழிற்புரட்சி, நகரங்கள் மற்றும் மாநகரங்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது.
- 1950 இல் உலகின் மக்கள் தொகையில் 30 சதவீதம் நகர மக்கள் தொகையாகும்.
- 2050 இல் 68 சதவீதம் உயரும் என கணக்கிடப்பட்டுள்ளது.
- இந்தியா, சீனா மற்றும் நைஜீரியா நாடுகளில் 2018 - 2050 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலத்தில் உலக நகர்ப்புற மக்கள் தொகை வளர்ச்சியில் 35 சதவீதத்தைப் பெற்றிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியா 416 மில்லியன் நகர்ப்புற மக்கள் தொகையையும், சீனா 255 மில்லியன் மக்கள் தொகையையும், நைஜீரியா 159 மில்லியன் மக்கள் தொகையையும் நகர்ப்புறவாசிகளாக அதிகரிக்கும் என கணக்கிடப்படுகிறது.

**உலக நகரமயமாக்கல்**

| வ. எண் | கண்டங்கள் | நகர மக்கள் தொகை (%) |
|---|---|---|
| 1 | வட அமெரிக்கா | 82 |
| 2 | இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகள் | 81 |
| 3 | ஐரோப்பா | 74 |
| 4 | ஓசியானியா | 68 |
| 5 | ஆசியா | 50 |
| 6 | ஆப்பிரிக்கா | 43 |
| | உலக சராசரி | 55 |

**நகரமயமாதலின் விளைவுகள்:**

- **குடியிருப்பும் மற்றும் குடிசைப் பகுதிகள்:**
- **மக்கள் நெரிசல்:**
  அதிக மக்கள் நெரிசல் சுகாதாரமற்ற சுற்றுப்புறச் சூழலுக்கு வழி வகுக்கிறது. இது பல நோய்கள் மற்றும் கலவரங்களுக்குக் காரணமாகிறது
- **தண்ணீர் விநியோகம், வடிகால் மற்றும் சுகாதாரம்:**
  உலகின் எந்த ஒரு நகரத்திலும் தேவையான அளவிற்கு முறையாக நீர் வினியோகம் செய்யப்படுவதில்லை.
- **போக்குவரத்து மற்றும் நெரிசல்:**
  வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, காற்று மாசடைதல்
- **மாசடைதல்:**
  அதிக மக்கள் நெருக்கம், உள் கட்டமைப்பு வசதி பற்றாக்குறை, தொழில் வளர்ச்சி மற்றும் போன்றவை நகரமயமாதலின் முக்கிய பிரச்சனைகளாகும்.

**அதிக மக்கள் தொகை கொண்ட உலகின் முதல் ஐந்து மாநகரங்கள் :**

| வ. எண் | மாநகரத்தின் பெயர் | மக்கள் தொகை (%) |
|---|---|---|
| 1 | டோக்கியோ (ஜப்பான்) | 37 |
| 2 | புது தில்லி (இந்தியா) | 29 |
| 3 | சாங்காய் (சீனா) | 26 |
| 4 | மெக்சிகோ நகரம் (மெக்சிகோ) | 22 |
| 5 | சா பாலோ (பிரேசில்) | 22 |

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்:**

1. இடம்பெயர்வுக்கான இழு காரணிகளாக அல்லாதவை எது?
   1. ஆரோக்கிய பராமரிப்பு　2. வேலைவாய்ப்பு
   3. கல்வி　4. ஏழ்மை

2. இடம்பெயர்வுக்கான உந்து காரணிகளாக அல்லாதவை வை?
   1. காலநிலை பேரிடர்கள்　2. விவசாயிகளின் வாழ்க்கை
   3. அமைதி　4. போர்

3. சர்வதேச இடம்பெயர்வு அறிக்கை 2017 ஆம் ஆண்டின் படி சர்வதேச அளவில் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை எங்கு அதிகம் உள்ளது?
   1. ஆப்பிரிக்கா　2. ஐரோப்பா　3. ஆசியா　4. ஆஸ்திரேலியா

4. ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை அதிகம் உள்ள நாடுகளில் தவறானது எது?
   1. ஐரோப்பிய நாடுகள்　2. இலத்தீன் அமெரிக்கா
   3. ஆஸ்திரேலியா　4. ஆப்பிரிக்கா

5. 2017 ஆம் ஆண்டில் சர்வதேச புலம்பெயர்வில் இந்தியாவின் எண்ணிக்கை என்ன?
   1. 13 மில்லியன்　2. 15 மில்லியன்　3. 17 மில்லியன்　4. 19 மில்லியன்

6. மந்தை இடமாற்றம் என்பது எந்த வகையைச் சார்ந்தது?
   1. நீண்டகால இடப்பெயர்வு　2. பருவகால இடப்பெயர்வு
   3. குறுகிய கால இடப்பெயர்வு　4. எதுவும் அல்ல

7. இடம் பெயர்தலின் முக்கிய விளைவுகள் அல்லாதவை எது?
   1. மக்கள் தொகை விளைவுகள்　2. பொருளாதார விளைவுகள்
   3. சமூக விளைவுகள்　4. சமய விளைவுகள்

8. _______ ஆம் ஆண்டு வரலாற்றில் முதன்முறையாக உலகளாவிய நகர்ப்புற மக்கள்தொகை ஊரக மக்கள் தொகையை விட அதிகரித்தது.
   1. 2003　2. 2005　3. 2007　4. 2009

9. பண்டைய காலத்தில் நகரமயமாக்கலுக்கு முக்கிய காரணமாக இருந்தது எது?
   1. உணவு தானிய மிகை　2. போக்குவரத்து வசதி
   3. உறைவிட வசதி　4. இவை அனைத்தும்

10. பண்டைய கால நகரமாக அல்லாதது எது?
    1. மொகஞ்சதாரோ　2. வெனிஸ்　3. ஏதென்ஸ்　4. தீப்ஸ்

11. 1950 இல் உலகின் மக்கள் தொகையில், நகர மக்கள் தொகையின் சதவீதம் _______.
    1. 20 %　2. 30 %　3. 40 %　4. 50 %

12. உலகில் மக்கள் தொகை அதிகம் உள்ள கண்டம் எது?
    1. ஆசியா　2. ஆப்பிரிக்கா
    3. ஐரோப்பா　4. வட அமெரிக்கா

www.kalvinews.com

13. உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட முதல் மாநகரம் எது?
    1. டோக்கியோ
    2. புதுடில்லி
    3. சாங்காய்
    4. மெக்சிகோ

14. நகரமயமாதலின் விளைவுகளில் தவறானது எது?
    1. போக்குவரத்து நெரிசல்
    2. தண்ணீர் விநியோகத்தில் பிரச்சினை
    3. மாசடைதல்
    4. சமய வழிபாட்டில் பிரச்சினை

15. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

    அ. குடியேறுபவர் - சர்வதேச எல்லைக்கு வெளியில் இருந்து ஒரு புதிய நாட்டில் குடிபுகுபவர்கள்

    ஆ. குடிபெயர்பவர் - தன்னுடைய நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கு குடியேறுபவர்

    1. அ மட்டும் தவறு
    2. ஆ மட்டும் தவறு
    3. இரண்டும் தவறு
    4. இரண்டும் சரி

16. மக்கள் இடம்பெயர்தலுக்கு வகைப்படுத்தப்பட்ட முக்கிய காரணிகள் எவை?
    1. சாதகமான காரணிகள் (இழு காரணிகள்)
    2. பாதகமான காரணிகள் (உந்து காரணிகள்)
    3. (1) மற்றும் (2)
    4. எதுவுமில்லை

17. இடம் பெயர்தலுக்கான சூழியல் அல்லது இயற்கை காரணங்கள் எவை?
    1. எரிமலை வெடிப்பு
    2. நில அதிர்வு
    3. வெள்ளம் மற்றும் வறட்சி
    4. அனைத்தும் சரி

18. இடம்பெயர்தலுக்கான பொருளாதார காரணியாக அல்லாதது எது?
    1. தொழில்நுட்ப வளர்ச்சி
    2. வேலைவாய்ப்பு
    3. வறட்சி
    4. வளமான வேளாண் நிலம்

19. இடம்பெயர்தலுக்கான சமூக மற்றும் பண்பாட்டுக் காரணங்கள் எவை?
    1. பெண்களின் திருமணத்திற்கு பின் இடம்பெயர்வு
    2. புனித யாத்திரைகளுடன் தொடர்புடைய இடம்பெயர்தல்
    3. (1) மற்றும் (2)
    4. இரண்டுமே தவறு

20. பின்வருவற்றுள் இடம்பெயர்தலுக்கான மக்கள் தொகை சார்ந்த காரணமாக அமையாதது எது?
    1. காலனி ஆதிக்கம்
    2. வயது
    3. பாலினம்
    4. குறைந்த மக்கள் தொகை

21. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச இடம்பெயர்வு அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு?
    1. 2017
    2. 2015
    3. 2016
    4. 2018

www.kalvinews.com

22. கூற்றுகளை ஆராய்க.:

கூற்று :1. ஐரோப்பா, வட அமெரிக்கா , ஆஸ்திரேலியா , லத்தீன் அமெரிக்கா கரீபியன் போன்ற நாடுகளில் புலம் பெயர்ந்தோரில் பெண்களை விட ஆண்களே அதிகம்.

கூற்று :2. ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா குறிப்பாக மேற்கு ஆசியாவிலும் பெண்களை விட ஆண்களே அதிகம்.

1. கூற்று 1 மற்றும் 2 சரி
2. கூற்று 1 மற்றும் 2 தவறு
3. கூற்று 1 மட்டும் 2 சரி
4. கூற்று 2 மட்டும் சரி

23. மக்களின் விருப்பத்திற்கு மாறாக இடம்பெயர்வு நடைபெறுமாயின் அது _______ இடம்பெயர்வு என அழைக்கப்படுகிறது.

1. அனிச்சையான
2. விருப்பமிகு
3. குறுகியகால
4. அத்தியாவசிய

24. மக்கள் கால்நடையுடன் இடம் பெயர்தல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1. தன்னார்வ இடம்பெயர்வு
2. நீண்ட கால இடம்பெயர்வு
3. மந்தை இடமாற்றம்
4. காலநிலை இடமாற்றம்

25. பின்வருவனவற்றுள் சரியான இணை எது?

| ஆண்டு | | புலம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. 2000 | - | 173 மில்லியன் |
| 2. 2010 | - | 258 மில்லியன் |
| 3. 2017 | - | 220 மில்லியன் |
| 4. 2018 | - | 180 மில்லியன் |

26. நகரங்கள் மற்றும் மாநகரங்களில் வாழும் மக்கள் தொகையின் விகிதாச்சாரம் அதிகரிப்பதை _______ என்கிறோம்.

1. நகர வளர்ச்சி
2. நகரமயமாதல்
3. மக்கள் தொகை வளர்ச்சி
4. மக்கள் அதிகமான இடம்பெயர்வு

27. நகரமயமாதலுக்கான காரணங்கள் கீழ்க்கண்டவற்றுள் எது சரி?

அ. இயற்கையான மக்கள் தொகை வளர்ச்சி.

ஆ. ஊரகத்திலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்தல்.

இ. நகர்ப்புறங்களை ஊரகப் பகுதிகளாக மறுசீரமைப்பு செய்தல்.

1. அ மற்றும் ஆ சரி
2. ஆ மற்றும் இ சரி
3. அ மற்றும் இ சரி
4. அனைத்தும் சரி

28. உலக நகரமயமாக்கல் விளக்கக் குறிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு எது?

1. 2014
2. 2012
3. 2017
4. 2015

29. பண்டைய காலத்தில் நகர்ப்புற மையங்களின் அளவு மற்றும் எண்ணிக்கை யாருடைய பெரும் காலனியாதிக்க காலங்களில் அதிகரிக்கத் தொடங்கியது?

1. கிரேக்கர்கள்
2. ரோமானியர்கள்
3. (1) மற்றும் (2)
4. எதுவுமில்லை

www.kalvinews.com

30. _______ ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஏஜியன் கடலுக்கு அருகில் பல நகரங்கள் காணப்பட்டன.

1. 6 2. 7 3. 5 4. 8

31. இந்தியா, சீனா மற்றும் நைஜீரியா நாடுகளில் 2018 - 2050 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் உலக நகர்ப்புற மக்கள் தொகை வளர்ச்சியில் எத்தனை சதவீதத்தைப் பெற்றிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது?

1. 20 2. 34 3. 35 4. 45

32. தவறானதைத் தேர்ந்தெடு: (2018 - 2050 இல் எதிர்பார்க்கப்படும் நகர்ப்புற மக்கள் தொகை)

1. இந்தியா - 416 மில்லியன்
2. சீனா - 255 மில்லியன்
3. டோக்கியோ - 188 மில்லியன்
4. நைஜீரியா - 159 மில்லியன்

33. இடைக்காலம் _______ ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தைய காலத்தைக் குறிக்கிறது.

1. 12 2. 10 3. 11 4. 13

34. 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் காணப்படாத நகரம் எது?

1. பாரிஸ் 2. இலண்டன் 3. ஜெனிவா 4. அமெரிக்கா

35. நகரமயமாக்கலின் மூன்றாம் கட்ட வளர்ச்சியைக் குறிப்பது எது?

1. இடைக்காலம் 2. நகரமயமாதல் காலம்
3. நவீன கால நகரம் 4. அனைத்தும் சரி

36. 1950 இல் உலகின் மக்கள் தொகையில் எத்தனை சதவீதம் நகர மக்கள் தொகையாகும்?

1. 45 2. 30 3. 35 4. 50

37. 2050 இல் நகர மக்கள் தொகை எத்தனை சதவீதம் உயரும் என கணக்கிடப்பட்டுள்ளது?

1. 68 2. 60 3. 80 4. 75

38. பொருத்துக:

உலக நகரமயமாக்கல் %

அ. வட அமெரிக்கா - a. 50
ஆ. ஓசியானியா - b. 82
இ. ஆசியா - c. 43
ஈ. ஆப்பிரிக்கா - d. 68
உ. ஐரோப்பா - e. 74

| | அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|---|
| 1. | d | b | a | c | e |
| 2. | b | e | a | c | d |
| 3. | b | d | a | c | e |
| 4. | d | c | b | e | b |

www.kalvinews.com

39. சரியான இணையைப் பொருத்துக: (அதிக மக்கள் தொகை கொண்ட உலகின் முதல் ஐந்து மாநகரங்கள்)

1. டோக்கியோ - 29 மில்லியன்
2. புது தில்லி - 22 மில்லியன்
3. சாங்காய் - 26 மில்லியன்
4. மெக்சிகோ - 37 மில்லியன்

40. தவறான இணையைக் கண்டறிக: (சர்வதேச புலம்பெயர்ந்தோர் சதவீதம்)

1. ஆப்பிரிக்கா - 41 %
2. ஐரோப்பா - 23.7 %
3. வட அமெரிக்கா - 1.7 %
4. ஓசியானியா - 0.7 %

41. மண்டல வாரியான உலக மக்கள் தொகையில் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனின் சதவீதம் என்ன?

1. 16.6 % 2. 59.7 % 3. 8.6 % 4. 9.8 %

42. பொருத்துக: (உலக மக்கள் தொகையில் சதவீதம்)

a. ஆப்பிரிக்கா - அ. 4.8 (%)
b. ஆசியா - ஆ. 9.8 (%)
c. ஐரோப்பா - இ. 0.5 (%)
d. வட அமெரிக்கா - ஈ. 16.6 (%)
e. ஓசியானியா - உ. 59.7 (%)

1. a - ஆ b - உ c - ஈ d - அ e - இ
2. a - ஈ b - உ c - ஆ d - அ e - இ
3. a - ஆ b - இ c - உ d - அ e - ஈ
4. a - ஈ b - அ c - ஆ d - அ e - உ

43. இடம்பெயர்தலின் விளைவுகளுள் கீழ்க்காண்பவற்றுள் எது சரி?

1. மக்கள் தொகை விளைவுகள் 2. சமூக விளைவுகள்
3. பொருளாதார விளைவுகள் 4. அனைத்தும் சரி

44. சொந்த நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு இடம்பெயரும் ஒரு நபர் ----- என அழைக்கப்படுகிறார்.

1. குடிபுகுபவர் 2. அகதி
3. குடியேறுபவர் 4. புகலிடம் தேடுபவர்

45. வளம் மிகுந்த வேளாண்மை நிலம் தேடி இடம்பெயர்தல் நடைபெறுவது _______.

1. கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு 2. கிராமத்தில் இருந்து நகரத்திற்கு
3. நகரத்தில் இருந்து கிராமத்திற்கு 4. நகரத்தில் இருந்து நகரத்திற்கு

46. போரின் காரணமாக நடைபெறும் குடிபெயர்வு _______ சார்ந்தது

1. மக்களியல் 2. சமூக மற்றும் கலாச்சாரம்
3. அரசியல் 4. பொருளாதாரம்

www.kalvinews.com

47. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் நகரமயமாக்கலுக்கு முக்கிய காரணம் ___
1. உணவு தானிய மிகை உற்பத்தி 2. கால்நடை வளர்ப்பு
3. மீன் பிடித்தல் 4. வேட்டையாடுதல்

48. நகரமயமாதல் _______ எண்ணிக்கையிலான காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன.
1. 3 2. 2 3. 5 4. 6

49. _______ என்பது கிராமப்புற பகுதிகளில் செயல்படும் முக்கிய உந்துக் காரணியாகும்.
1. வேலைவாய்ப்பின்மை 2. மக்கள் தொகை பெருக்கம்
3. விவசாயமின்மை 4. மழையின்மை

50. இந்தியாவின் _______ மாநகரம் உலகிலேயே இரண்டாவது அதிக நகர மக்கள் தொகையைக் கொண்டது.
1. மும்பை 2. சென்னை 3. கல்கத்தா 4. புது டெல்லி

51. ஒரு நபர் தன்னார்வத்துடனும் விருப்பத்துடனும் நல்ல வசிப்பிடம் தேடி இடம்பெயர்தல் _______ இடம்பெயர்வு எனப்படும்.
1. தன்னார்வ இடம்பெயர்வு 2. சர்வதேச இடம்பெயர்வு
3. உள்நாட்டு இடம்பெயர்வு 4. தன்னார்வமில்லா இடம்பெயர்வு

52. நவீன காலத்தில் நகர்ப்புற வளர்ச்சி _______ வளர்ச்சியால் அதிகரிக்கிறது.
1. குடியேற்றம் 2. வேலைவாய்ப்பு 3. தொழிற்புரட்சி 4. நகரமயமாதல்

53. தவறான இணையைக் கண்டறிக:
1. குடியேற்றம் - வெளியேறுதல்
2. குடியிறக்கம் - குடிபுகுபவர்
3. இழு காரணி - வேலைவாய்ப்பு
4. உந்து காரணி - சமூக மற்றும் பண்பாட்டு இடம்பெயர்வு

54. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றையும் காரணத்தையும் ஆராய்க:
கூற்று: நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள் நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்.
காரணம்: கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம் பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல.
1. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
3. கூற்று மற்றும் காரணம் ரண்டும் சரி
4. கூற்று தவறு ஆனால் காரணம் சரி

55. ஒரு நாட்டின் எல்லைகளை கடந்து நடக்கும் இடம் பெயர்தல் _______ ஆகும்.
1. உள்நாட்டு இடப்பெயர்வு
2. சர்வதேச இடப்பெயர்வு
3. ஊரகத்திலிருந்து நகர்ப்புறம் நோக்கி இடப்பெயர்வு
4. நகரத்திலிருந்து ஊரகம் நோக்கி இடப்பெயர்வு

www.kalvinews.com

56. _______ ஆம் நூற்றாண்டில் உருவான தொழிற்புரட்சி நகரங்கள் மற்றும் மாநகரங்களின் வளர்ச்சியை துரிதப்படுத்தியது.

1. 18　　2. 19　　3. 20　　4. 17

57. பின்வருவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு:

1. இடைக்காலம் என்பது 11 ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தைய காலத்தைக் குறிக்கிறது. இக்காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளின் கடல் கடந்து வணிகம் அதிகரித்தது.
2. நவீன காலம் என்பது 17 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. இது நகரமயமாதலின் மூன்றாம் கட்ட வளர்ச்சியைக் குறிக்கிறது.
3. (1) மற்றும் (2)
4. இரண்டுமே தவறு.

58. கூற்று: அறிவார்ந்த மக்கள் வெளியேறுதல் என்பது பின்தங்கிய நாடுகளை சார்ந்த தொழிற்திறன் கொண்ட மக்கள் சிறந்த வேலை வாய்ப்புகளை தேடி வளர்ந்த நாடுகளுக்கு செல்கின்றனர்

விளைவு: பூர்வீக பகுதிகள் பின்தங்கிய நிலையை அடைகின்றன.

1. கூற்று சரி ஆனால் விளைவு தவறு
2. கூற்று தவறு ஆனால் விளைவு சரி
3. கூற்று மற்றும் விளைவு இரண்டுமே சரி
4. கூற்று மற்றும் விளைவு இரண்டுமே தவறு

59. நகர மக்கள் தொகை சதவீதத்தில் உலக சராசரி _______.

1. 45 (%)　　2. 55 (%)　　3. 65 (%)　　4. 50 (%)

60. இடம்பெயர்தலுக்கான காரணிகளை எத்தனை பிரிவுகளாக வகைப்படுத்தலாம்?

1. 3　　2. 7　　3. 5　　4. 4

61. நகர்ப்புறம் சார்ந்த சமூகம் மற்றும் வேளாண் சார்ந்த சமூகங்கள் நகர மையங்களாக இந்தியாவில் உருவாகிய இடங்கள் எது அல்ல?

1. எகிப்து　　2. இந்திய ஆற்றுப் பள்ளதாக்குப் பகுதிகள்
3. கிரேக்கம்　　4. எதுவுமில்லை

62. _______ ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆப்பிரிக்காவில் உள்ள நகரங்கள் கடற்கரையை ஒட்டியே இருந்தன.

1. 1950　　2. 1951　　3. 1930　　4. 1932

63. தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS 2019 - 20)

நகரமயமாதலின் விளைவுகள்

1. விரைவாக நகரமயமாக்கலால் குடிசைப் பகுதிகள் அதிக அளவில் உருவாகின்றன.
2. அதிக மக்கள் நெரிசல், சுகாதாரமற்ற சுற்றுப்புற சூழலுக்கு வழிவகுக்கிறது
3. நகர்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குப்பைகளை அகற்றுவது ஒரு சவாலான பணியாக உள்ளது
4. இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் காற்று மாசடைவது தவிர்க்கப்படுகிறது

www.kalvinews.com

# விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (4) | 16 | (3) | 31 | (3) | 46 | (3) | 61 | (4) |
| 2 | (3) | 17 | (4) | 32 | (3) | 47 | (1) | 62 | (3) |
| 3 | (3) | 18 | (3) | 33 | (3) | 48 | (1) | 63 | (4) |
| 4 | (4) | 19 | (3) | 34 | (4) | 49 | (1) | | |
| 5 | (3) | 20 | (1) | 35 | (3) | 50 | (4) | | |
| 6 | (2) | 21 | (1) | 36 | (2) | 51 | (1) | | |
| 7 | (4) | 22 | (4) | 37 | (1) | 52 | (3) | | |
| 8 | (3) | 23 | (1) | 38 | (3) | 53 | (4) | | |
| 9 | (1) | 24 | (3) | 39 | (3) | 54 | (1) | | |
| 10 | (2) | 25 | (1) | 40 | (1) | 55 | (2) | | |
| 11 | (2) | 26 | (2) | 41 | (3) | 56 | (2) | | |
| 12 | (1) | 27 | (1) | 42 | (2) | 57 | (3) | | |
| 13 | (1) | 28 | (1) | 43 | (4) | 58 | (3) | | |
| 14 | (4) | 29 | (3) | 44 | (3) | 59 | (2) | | |
| 15 | (3) | 30 | (2) | 45 | (1) | 60 | (3) | | |

www.kalvinews.com



# 5. இடர்கள்

**தொகுப்பு:**
**திருமதி.க.சாந்தி. M.Sc., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியை (கணிதம்),**
**ஸ்ரீசிவசைலநாதா நடுநிலைப்பள்ளி,**
**நெடுவயல், தென்காசி மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு T.C.பூவேந்தன் M.Sc., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி. பள்ளி, கோடேபாளையம்,**
**ஈரோடு மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

**இடர்கள்:**

- ஒரு பொருளோ, நபரோ, நிகழ்வோ அல்லது காரணியோ மக்கள் அல்லது கட்டமைப்புகள் மற்றும் பொருளாதார வளங்களுக்கு அச்சுறுத்தலாகவும், இழப்பு ஏற்படுத்தும் வகையிலும் அமைந்தால் அது இடர் (Hazard) எனப்படும்.
- இடர் சுற்றுச்சூழலில் மனிதனால் உருவாக்கப்பட்டவையாகவோ அல்லது இயற்கையான நிகழ்வாகவோ இருக்கலாம்.
- **“ஹசார்டு” (Hazard) என்ற சொல் ஹாசர்ட் (Hasart)** என்ற பழமையான **பிரெஞ்சு** சொல்லிலிருந்து தோன்றியது.
- **ஹசார்டு என்றால் தமிழில் ‘ஒரு பகடை விளையாட்டு”** என்றும், **அரபு மொழியில் ‘அஸ் - சஹர்” என்றும், ஸ்பானிய மொழியில் “அசார்” என்றும் அழைக்கப்படுகிறது.**
- மனித உயிர்கள் மற்றும் உடைமைகளுக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் இயற்கையான நிகழ்வுகள் **இயற்கை இடர்கள்** எனப்படும்.
- இயற்கையான செயல்பாடுகள் அல்லது நிகழ்வுகள் மட்டுமே இயற்கை இடருக்கான காரணங்கள் அல்ல.
- **பேரிடர்;** என்பது வயைறுக்கப்பட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் ஒரு அபாயகரமான நிகழ்வாகும்.
- பேரழிவு என்பது மிகப்பெரிய இழப்பினையும் அதிக செலவினத்தையும் உண்டாக்குவதோடு அவற்றிலிருந்து மீள்வதற்கு நீண்ட காலமும் தேவைப்படுகிறது.
- **இடர்கள் இரண்டு வகைப்படும்.**
  1. நிகழ்விற்கான காரணிகளின் அடிப்படையிலான இடர்கள்
  2. உருவாகும் அடிப்படையிலான இடர்கள்
- **நிகழ்விற்கான காரணிகளின் அடிப்படையிலான இடர்கள் மூன்று வகைப்படும்**
  1. இயற்கையினால் ஏற்படும் இடர்கள்
  2. மனித செயல்களால் உருவாக்கப்படும் இடர்கள்
  3. சமூக - இயற்கைக் காரணிகளால் ஏற்படும் இடர்கள்

www.kalvinews.com

| இடர் வகை | வரையறை & தகவல் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| இயற்கையினால் ஏற்படும் இடர்கள் | சில இயற்கைக் காரணிகளால் ஏற்படும் இடர்கள்.<br><br>இவ்வகையான இடர்களில் மனிதனின் பங்கு இருப்பதில்லை | நில அதிர்வு, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, புயல்கள், வறட்சி, நிலச்சரிவு, சுனாமி மற்றும் எரிமலை வெடிப்பு |
| மனித செயல்களால் உருவாக்கப்படும் இடர்கள் | மனிதர்களின் விரும்பத்தகாத நடவடிக்கைகளின் மூலம் ஏற்படும் இடர்கள்<br><br>மனிதனால் ஏற்படும் இடர்கள் தொழிற்சாலைகளின் இராசாயனக் கழிவு அல்லது எண்ணெய் கசிவு அல்லது திட்டமிடப்பட்ட செயல்பாடுகளின் விளைவாக ஏற்படுகிறது | குண்டு வெடிப்புகள், அபாயகரமான கழிவுகள், காற்று, நீர், நிலம் மாசடைதல், அணைக்கட்டு உடைதல், போர், உள்நாட்டுக் கலவரங்கள், தீவிரவாத செயல்கள் |
| சமூக - இயற்கை காரணிகளால் ஏற்படும் இடர்கள் (பகுதி இயற்கை இடர்கள்) | இயற்கைச் சக்திகள் மற்றும் மனிதனின் தவறான செயல்பாடுகள் இணைவதன் மூலம் ஏற்படும் இடர்கள் | ஆறுகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மரங்களை அழிப்பதால் வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி ஏற்படுகின்றன<br><br>மலைப்பிரதேசங்களில் சாலைகள் அமைப்பது, வீடுகள் கட்டுவது, சுரங்கங்கள் தோண்டுவது, கனிமங்கள் மற்றும் கல் வெட்டியெடுத்தல் போன்றதன் மூலமாக நிலச்சரிவு ஏற்படுகிறது.<br><br>சதுப்பு நிலக்காடுகள் அழிக்கப்படுவதால் சூறாவளி அலைகள் கடற்கரைப் பகுதிகளில் இடரை உருவாக்குகின்றன |

.**உருவாகும் அடிப்படையில் ஏற்படும் இடர்கள் எட்டு வகைப்படும்** :

1. வளிமண்டலத்தால் ஏற்படும் இடர்கள்
2. நிலவியல் சார்ந்தஇடர்கள்
3. நீரியல் தொடர்பான இடர்கள்
4. எரிமலை சார்ந்த இடர்கள்
5. சுற்றுச்சூழல் சார்ந்த இடர்கள்
6. உயிரியல் சார்ந்த இடர்கள்
7. தொழில்நுட்பம் சார்ந்த இடர்கள்
8. மனித தூண்டுதலால் ஏற்படும் இடர்கள்

www.kalvinews.com

**வளிமண்டலத்தால் ஏற்படும் இடர்கள்:**

- வெப்ப மண்டல சூறாவளி, இடியுடன் கூடிய புயல், மின்னல், சுழல்காற்று, பனிச்சரிவு, வெப்ப அலைகள், மூடுபனி மற்றும் காட்டுத்தீ.

**நிலவியல் சார்ந்த இடர்கள்:**

- நில அதிர்வு, சுனாமி, நிலச்சரிவு, நிலம் அமிழ்தல்

**நீரியல் தொடர்பான இடர்கள்:**

- வெள்ளப்பெருக்கு,வறட்சி, கடற்கரை அரிப்பு, சூறாவளி அலைகள்

**எரிமலை சார்ந்த இடர்கள் :**

- எரிமலை வெடிப்பு மற்றும் லாவா வழிதல்

**சுற்றுச்சூழல் சார்ந்த இடர்கள்:**

- மண், காற்று, நீர் மாசடைதல், பாலைவனமாதல், புவி வெப்பமடைதல் மற்றும் காடழிப்பு

**உயிரியல் சார்ந்த இடர்கள்:**

- சின்னம்மை, பெரியம்மை, தட்டம்மை, பால்வினைத் தொற்று நோய்கள், எய்ட்ஸ், விஷ தேனீக்கள்

**தொழில்நுட்பம் சார்ந்த இடர்கள்:**

- அபாயகரமான கழிவுப் பொருட்களால் ஏற்படும் இடர்கள், தீவிபத்து மற்றும் கட்டமைப்பு குறைபாடுகளால் ஏற்படும் இடர்கள் (பாலங்கள், சுரங்கங்கள், அணைகள், அணுக்கதிர்கள் மற்றும் கதிரியக்க விபத்துகள்)

**மனித தூண்டுதலால் ஏற்படும் இடர்கள்:**

- தீவிரவாதம், குண்டுவெடிப்பு, போக்குவரத்து விபத்துகள், போர் மற்றும் உள்நாட்டுக் கலவரம்

**<u>இந்தியாவின் முக்கிய இடர்கள்:</u>**

**<u>நில அதிர்வு:</u>**

- நில அதிர்வு என்பது புவியின் மேலோட்டில் திடீரென ஏற்படும் கடும் அதிர்வாகும்.
- நிலஅதிர்வு தோன்றும் மையத்திலிருந்து அனைத்து திசைகளிலும் தொடர்ச்சியான அதிர்வு அலைகளை ஏற்படுத்துகிறது.
- ஒரு பகுதியினுடைய நிலவியல் அமைப்பு, கடந்த காலங்களில் ஏற்பட்ட நில அதிர்வு, அதிர்வலைகளின் தன்மைகள் ஆகியவற்றை அறிவியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, நில அதிர்வு மண்டலங்கள் கண்டறியப்படுகின்றன.
- இந்திய தர நிர்ணய நிறுவனம் இந்தியாவை 5 நிலஅதிர்வு மண்டலங்களாக வகைப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் எந்தப் பகுதியும் மண்டலம் - 1 இன் கீழ் வகைப்படுத்தப்படவில்லை.
- தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் அமைந்துள்ள இடம் - புது டெல்லி

www.kalvinews.com

**இந்தியாவின் நில அதிர்வு மண்டலங்கள்**:

| நில அதிர்வு மண்டலங்கள் | அபாயத்தன்மை | பகுதிகள் |
|---|---|---|
| மண்டலம் 5 | மிக அதிகம் | வடகிழக்கு இந்தியா முழுமையும், ஜம்மு காஷ்மீரின் சில பகுதிகள், இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், குஜராத்தின் ரான் ஆப் கட்ச், வட பீகார்; மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுக்கூட்டங்கள் |
| மண்டலம் 4 | அதிகம் | ஜம்மு - காஷ்மீரின் பிற பகுதிகள், இமாச்சலப்பிரதேசம் தேசிய தலைநகரமான புதுடெல்லி, வட உத்திரப் பிரதேசம், பீகார், சிக்கிம், மேற்கு வங்கம், குஜராத்தின் சில பகுதிகள், மேற்கு கடற்கரையை ஒட்டி உள்ள மகாராஷ்டிராவின் சில பகுதிகள் மற்றும் இராஜஸ்தான் |
| மண்டலம் 3 | மிதமானது | கேரளா, கோவா, இலட்சத்தீவுகள், உத்திரப் பிரதேசத்தின் சில பகுதிகள், குஜராத் மற்றும் மேற்கு வங்காளம், பஞ்சாபின் சில பகுதிகள், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட், சட்டீஸ்கர், மகாராஷ்டிரா, ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா |
| மண்டலம் 2 | குறைவு | நாட்டின் பிற பகுதிகள் |

**வெள்ளப்பெருக்குகள்:**

- கனமழை மற்றும் கடல்களில் உருவாகும் பேரலைகளால் புவியின் மேற்பரப்பின் ஒரு பகுதி மட்டும் நீரினால் மூழ்கடிக்கப்படுதல் வெள்ளப்பெருக்கு எனப்படுகிறது.
- வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள் 3 ஆகும்
- வானிலையியல் காரணிகள் - 3
- கனமழை
- அயன மண்டல சூறாவளிகள்
- மேக வெடிப்பு

**இயற்கைக் காரணிகள் - 2**

- பரந்த நீர்ப் பிடிப்பு பகுதிகள்
- போதிய வடிகால் அமைப்பு இல்லாமை

**மனிதக் காரணிகள் - 5**

- காடழிப்பு
- வண்டல் படிவுகள்
- முறையற்ற வேளாண் முறைகள்
- முறையற்ற நீர்ப்பாசன முறைகள்
- அணைகள் உடைதல் மற்றும் நகரமயமாக்கல்

www.kalvinews.com

**இந்தியாவில் வெள்ளப்பாதிப்பிற்கு உள்ளாகும் பகுதிகள்:**

- வடக்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம், வட பீகார், மேற்கு வங்காளத்தை உள்ளடக்கிய கங்கைச் சமவெளி மற்றும் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்குப் பகுதிகள் ஆகும்.
- இந்தியாவில் அடிக்கடி வெள்ளப்பாதிப்பிற்கு உள்ளாகும் பகுதிகள் கடலோர ஆந்திரம், ஒடிசா, குஜராத்தின் தென்பகுதி போன்றவை ஆகும்.
- தேசிய நீரியியல் நிறுவனம் அமைந்துள்ள இடம் - புது டெல்லி

**சூறாவளிப் புயல்கள்:**

- வளிமண்டலத்தில் குறைந்த காற்றழுத்தப் பகுதிகளில் சுழலும் வலிமையான காற்றே சூறாவளி புயல் காற்று எனப்படும்.
- சூறாவளிப் புயல் காற்று வட அரைகோளத்தில் கடிகார எதிர் திசையிலும், தென் அரைக் கோளத்தில் கடிகார திசையிலும் சுழல்கிறது
- அயன மண்டல சூறாவளிக் காற்றின் வேகம் மணிக்கு 200 கி.மீ. வரை வீசக்கூடும்.
- கனமழையில் மழைப்பொழிவானது நாளொன்றுக்குச் சுமார் 50 செ.மீ. வரை பெய்யக்கூடும்.
- வெப்ப மண்டல சூறாவளிகள் காரணமாக திடீரென்று ஏற்படும் கடல்நீர் எழுச்சியை 'புயல் அலை" என்கிறோம்.
- புயல் அலை ஆழமற்ற கடலோரப் பகுதிகளில் அதிகம் காணப்படுகிறது.

**புயல் அலைகளால் பாதிப்பிற்கு உள்ளாகும் கிழக்கு கடற்கரைப் பகுதிகள்**:

- ஒடிசாவின் வடபகுதி மற்றும் மேற்கு வங்காள கடற்கரை, ஓங்கோல் மற்றும் மசூலிப்பட்டினம் இடையே அமைந்துள்ள ஆந்திரக்கடற்கரை, தமிழகக் கடற்கரை

**புயல் அலைகளால் பாதிப்பிற்கு உள்ளாகும் மேற்கு கடற்கரைப் பகுதிகள்** :

- மகாராஷ்டிரா கடற்கரை, வட ஹரியானா, தென் குஜராத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதி மற்றும் காம்பே வளைகுடாவைச் சுற்றியுள்ள கடற்கரைப் பகுதிகள்
- கட்ச் வளைகுடாவை சுற்றியுள்ள கடலோர பகுதி

**வறட்சிகள்:**

- வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொழில்துறை மற்றும் மக்களின் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத நீர்ப் பற்றாக்குறையே வறட்சி என்று வரையறுக்கப்படுகிறது.

**வறட்சி 3 வகைப்படும்** :

- வானிலையியல் வறட்சி
- நீரியியல் வறட்சி
- வேளாண் வறட்சி

**வானிலையியல் வறட்சி:**

- ஒரு குறிப்பிட்ட காலத்தில் மழையின் அளவு ஒரு குறிப்பிட்ட அளவை விட குறைவாக பெய்திருக்கும் சூழலையே வானிலையியல் வறட்சி எனப்படும்.

**நீரியியல் வறட்சி:**

- நீரோடைகள், ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு குறைந்து காணப்படும் சூழல் நீரியியல் வறட்சி எனப்படுகிறது. இது, இரண்டு வகைப்படும்.

- ✓ புவி மேற்பரப்பு நீர் வறட்சி
- ✓ நிலத்தடி நீர் வறட்சி

**வேளாண் வறட்சி:**

- மழை பற்றாக்குறை காரணமாக வேளாண் பயிர்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் குறிப்பது வேளாண் வறட்சி ஆகும்.
- நாட்டின் மூன்றில் ஒரு பங்கு பகுதிகள் வறட்சியினால் பாதிக்கப்படுகின்றன.
- வறட்சி சுமார் 16 % நிலப்பரப்பையும், 12 % மக்கள் தொகையையும் கடுமையாக பாதிக்கிறது.
- இந்தியாவில் ஆண்டு மழைப்பொழிவு 60 செ.மீ க்கும் குறைவான மழை பெறும் பகுதிகள் வறட்சிக்கு உள்ளாகிறது.

**இந்தியாவில் அதிக வறட்சிக்கு உள்ளாகும் முக்கிய பகுதிகள்**:

- அகமதாபாத் முதல் கான்பூர் வரை உள்ள வறண்ட மற்றும் அரை - வறண்ட பகுதிகள், கான்பூர்; முதல் ஜலந்தர் வரை உள்ள பகுதிகள்

**நிலச் சரிவுகள்**

- மேற்கு தொடர்ச்சி மலையின் காற்று மறைவு பகுதிகளில் அமைந்துள்ள வறண்ட பகுதிகள்
- நிலச்சரிவு என்பது புவியீர்ப்பு விசையினால் பாறைகள், மண் மற்றும் தாவரங்கள் மலைச்சரிவுகளில் கீழ் நோக்கி வேகமாகச் செல்லும் நகர்வைக் குறிப்பதாகும்.
- நிலச்சரிவுகள் திடீரென்று ஏற்படும் அரிதான நிகழ்வாகும்.
- செங்குத்துச் சரிவு மற்றும் கனமழை நிலச்சரிவுகள் ஏற்பட முக்கியக் காரணங்களாகும்.
- இந்தியாவில் சுமார் 15% நிலப்பரப்பு நிலச்சரிவு அபாயத்திற்கு உள்ளாகும் பகுதிகளாகும்.
- இமயமலைச் சரிவுகள், மேற்கு தொடர்ச்சி மலைச்சரிவுகள் மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்குப் பகுதிகளில் நிலச்சரிவுகள் அதிகம் காணப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் கொடைக்கானல் (திண்டுக்கல் மாவட்டம்) மற்றும் உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) பகுதிகள் நிலச்சரிவால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

**சுனாமி அலைகள்:**

- கடலடி நில அதிர்வு, கடலடி நிலச்சரிவு மற்றும் எரிமலை வெடிப்பு ஆகியவற்றின் காரணமாக கடலில் ஏற்படும் பேரலைக்கு சுனாமி என்று பெயர்
- சுனாமி பேரலைகள் கடற்கரைப் பகுதிகளில் மணிக்கு சுமார், 640 கிலோமீட்டரிலிருந்து 960 கி.மீ. வேகம் வரை பயணிக்கிறது.
- **சுனாமி என்ற வார்த்தை ஜப்பானிய சொல்லான (சு - துறைமுகம் , நாமி - அலை) என்பதிலிருந்து பெறப்பட்டது**.
- **சுனாமி என்றால் துறைமுக அலை எனப் பொருள்படும்**.
- 2004 இல் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமி டிசம்பர் 26, 2004 ஆம் ஆண்டு நேரம் காலை 7.59 மணிக்கு ரிக்டர் அளவுகோலில் 9.1 ஆற்றல் கொண்ட நிலநடுக்கம் இந்தோனேஷியாவின் சுமத்ரா கடற்கரையைத் தாக்கியது.
- இந்த சுனாமி 2 நாடுகளைத் தாக்கி 2,25,000 உயிர்களை பலிவாங்கியது.
- இந்த சுனாமியானது இந்தோனேஷியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, சோமாலியா, மாலத்தீவுகள் போன்ற நாடுகளில் பெரும் பொருட்சேதத்தை ஏற்படுத்தியது.

www.kalvinews.com

**அபாயகரக் கழிவுகள்:**

- சுற்றுச்சூழல் மற்றும் மனிதர்களுக்கு பெருத்த சுகாதார தீங்குகளை ஏற்படுத்தக்கூடிய நச்சுக் கழிவுகள் அபாயகர கழிவுகள் எனப்படுகிறது.

**அபாயகர கழிவுகளின் 6 வகைகள் :**

| அபாயகர கழிவு | விளக்கம் |
|---|---|
| கதிரியக்கப் பொருள்கள் | அணுமின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் பயன்படுத்தப்படாத எரிபொருள் குழாய்கள் **கதிரியக்கப் பொருள்கள்** எனப்படும். |
| இரசாயனங்கள் | செயற்கை கனிமப் பொருட்கள், கரிம உலோகங்கள், உப்புகள், அமிலங்கள், வெடிஉப்பு, காரங்கள் , எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் வெடி மருந்துகள் ஆகியன **இரசாயனங்கள்** எனப்படும் |
| மருத்துவ கழிவுகள் | பயன்படுத்தப்பட்ட ஊசிகள், கட்டுத் துணிகள், காலாவதியான மருந்து பொருட்கள் ஆகியன மருத்துவ கழிவுகள் ஆகும். |
| எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவுகள் | கரிம கரைப்பான்கள், எண்ணெய்கள், குழைமையூட்டிகளாகிய உருக்குலைக்கும் பொருட்கள் மற்றும் கரிம சக்திகள் ஆகியன எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவுகள் ஆகும். |
| வெடிப்பொருட்கள் | படைக்கலன் உற்பத்தி கழிவு மற்றும் சில தொழிலக வாயுக் கழிவுகள் ஆகியன வெடிப்பொருட்கள் ஆகும். |
| குடிசார் அபாயகர கழிவுகள் | பூச்சிக்கொல்லிகள், எண்ணெய்க் கழிவுகள், வாகன மின்கலன்கள் மற்றும் குடிசார் மின்கலன்கள் ஆகியவை குடிசார் **அபாயகர கழிவுகள்** எனப்படும். |

- செர்னோபில் அணு பேரழிவு இடம் (பிரிப்யாட் அருகில்) அதிகாரப்பூர்வமான சுற்றுலாத் தலமாகும்.
- செர்னோபில் (அப்போதைய சோவியத் யூனியன்) அணு உலை விபத்து ஏப்ரல் 26, 1986 அன்று நிகழ்ந்தது.
- செர்னோபில் அணு உலையிலிருந்து 1945 இல் ஹிரோஷிமா (ஜப்பான்) மீது வீசப்பட்ட அணுகுண்டை விட 400 மடங்கு அதிகமான கதிர்வீச்சு இதிலிருந்து வெளிப்பட்டது.
- செர்னோபில் அணு உலை விபத்தே உலக வரலாற்றில் மிகப்பெரிய அணு விபத்தாக பதிவாகியுள்ளது.
- நிரந்தர மனித குடியேற்றத்திற்கு கடுமையான கட்டுப்பாடுகள் இன்றும் அந்த இடத்தில் பின்பற்றப்படுகிறது.

www.kalvinews.com

- செர்னோபில் அணு உலை விபத்து நடந்து 33 ஆண்டுகளுக்கு பிறகு தற்பொழுது உக்ரைன் மற்றும் பெலாரசைக் பகுதியில் ஏராளமான விலங்குகளும் இருநூற்றுக்கும் அதிகமான பறவை இனங்களும் வசிக்கின்றன.
- 2016 ஆம் ஆண்டு உக்ரைன் நாடு '**கதிர் இயக்கவியல் சார் மற்றும் சுற்றுச்சூழல் உயிர் கோளப் பெட்டகம்**" என அந்நாட்டு அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- காற்று பல வாயுக்களின் கலவையாகும்.
- நைட்ரஜன் (78.09 %) தாவரங்களுக்கு உரங்கள் தயாரிப்பதற்கும் காற்றை மந்தமாக்குவதற்கும் பயன்படுகிறது.
- ஆக்சிஜன் (20.95 %) சுவாசிக்கவும், கார்பன் - டை - ஆக்சைடு (0.03 %) ஒளிச்சேர்க்கைக்கும் பயன்படுகிறது.
- ஆர்கான், நியான், ஹீலியம், கிரிப்டான், ஹைட்ரஜன், ஓசோன், ஜினான் மற்றும் மீத்தேன் போன்ற வாயுக்களும் வளிமண்டலத்தில் காணப்படுகின்றன.
- நீராவி மற்றும் துகள்களும் வளிமண்டலத்தில் காணப்படுகின்றன.
- உட்புற அல்லது வெளிப்புறக் காற்றானது சில வாயுக்கள் மற்றும் திடப் பொருட்களின் சேர்க்கையால் அதன் இயற்கை பண்புகள் மற்றும் காற்றின் சதவீதங்கள் மாறுபடுவதை காற்று மாசுபடுதல் என்கிறோம்.

**காற்று மாசுபடுத்திகள் இரண்டு வகைப்படும்:**

- முதன்மை மாசுபடுத்திகள்
- இரண்டாம் நிலை மாசுபடுத்திகள்

**முதன்மை மாசுபடுத்திகள்:**

முதன்மை மாசுபடுத்திகள் என்பது ஒரு மூலத்தில் இருந்து நேரடியாக வெளியேற்றப்படும் மாசுவாகும்.

**இரண்டாம் நிலை மாசுபடுத்திகள்:**

- இரண்டாம் நிலை மாசுபடுத்திகள் என்பது நேரடியாக வெளியேற்றப்படுவதில்லை ஆனால் மற்ற முதன்மை மாசுக்கள் வளிமண்டலத்தில் வினைபுரிவதால் உருவாகுபவை ஆகும்.

**முதன்மை மாசுபடுத்திகள் ஐந்து வகைப்படும்:**

- சல்பர் டை ஆக்சைடு
- நைட்ரஜன் ஆக்சைடு
- கார்பன் டை ஆக்சைடு
- துகள்ம பொருட்கள்
- மற்ற முதன்மை மாசுபடுத்திகள்

**இரண்டாம் நிலை மாசுபடுத்திகள் இரண்டு வகைப்படும்:**

- தரைமட்ட ஓசோன்
- பனிப்புகை

**நீர்மாசு:**

- நீர்மாசு என்பது நீரின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளில் ஏற்படும் மாற்றம் ஆகும்.
- இந்தியாவில் நீர் மாசடைதல் நீண்ட காலமாகவே அதிகமாக நடைபெற்று வருகிறது.

www.kalvinews.com

- மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் நிலைகள் இரண்டுமே அதிக அளவில் மாசுபடுத்தப்பட்டு வருகிறது.

**இந்தியாவில் நீர் மாசடைதலுக்கான முக்கிய காரணங்கள்:**

- நகரமயமாக்கல்
- தொழிற்சாலை கழிவுகள்
- கழிவு நீர்
- வேளாண் நீர் வழிந்தோடல் மற்றும் முறையற்ற வேளாண் நடைமுறைகள்
- கடல் நீர் உட்புகுதல்
- திண்மக் கழிவுகள்

**தடுப்பு நடவடிக்கைகள்:**

- மனிதர்கள் மற்றும் பொருளாதார கட்டமைப்புகளுக்கு இயற்கை மற்றும் செயற்கை இடர்களால் ஏற்படும் தீய விளைவுகளிலிருந்து பாதுகாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தடுப்பு நடவடிக்கைகள் ஆகும்.

**தடுப்பு திட்டமிடல்:**

- இடரைக் கண்டறிதல்
- பாதிப்பை மதிப்பீடு செய்தல்
- இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு இடர் தடுப்பு நடவடிக்கைகள் மிகவும் சவாலானதாக உள்ளது.
- பெரும் சுற்றுச்சூழல் பேரழிவு காரணமாக இந்தியாவில் 2017 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில் சுமார் 22,000 பேர் இறந்துள்ளனர்.
- கடந்த 20 ஆண்டுகளில் (1998 - 2017) உலகில் சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மோசமான வானிலை நிகழ்வுகளால் இறந்துள்ளனர்
- சுற்றுச்சூழல் பேரழிவினை பற்றி ஜெர்மன் - வாட்ச் என்ற தனியார் அமைப்பு வெளியிட்டுள்ள உலகளாவிய காலநிலை இடர் குறியீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பயிற்சி வினாக்கள்:**

1. ஹசார்டு (Hazard) என்ற சொல் ஹாசர்ட் (Hazart) என்ற --------------- சொல்லிலிருந்து வந்தது.

   1. இலத்தீன்  2. பிரெஞ்சு  3. அரபு  4. கிரேக்கம்

2. தமிழகத்தில் உள்ள கடற்கரை மாவட்டங்கள் எத்தனை?

   1. 13  2. 12  3. 11  4. 10

3. பொருத்துக :

   i. சுற்றுச்சூழல் சார்ந்த இடர்கள் - a. மூடுபனி
   ii. உயிரியல் சார்ந்த இடர்கள் - b. புவி வெப்பமடைதல்
   iii. நிலவியல் சார்ந்த இடர்கள் - c. சின்னம்மை
   iv. வளிமண்டலத்தால் ஏற்படும் இடர்கள் - d. சுனாமி

   1. i - b  ii - c  iii - d  iv - a
   2. i - b  ii - a  iii - d  iv - c
   3. i - c  ii - a  iii - b  iv - d
   4. i - d  ii - a  iii - c  iv - b

www.kalvinews.com

4. இந்திய தரநிர்ணய நிறுவனம் இந்தியாவை _______ நில அதிர்வு மண்டலங்களாக வகைப்படுத்தியுள்ளது.

1. 5　　2. 4　　3. 3　　4. 2

5. தவறான இணையைக் கண்டறிக.

1. மண்டலம் 2 - நாட்டின் பிற பகுதிகள்
2. மண்டலம் 3 - தமிழ்நாடு
3. மண்டலம் 4 - புதுடெல்லி
4. மண்டலம் 5 - இராஜஸ்தான்

6. ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகியவை இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் அடிப்படையில் எந்த மண்டலத்தின் கீழ் அமைந்துள்ளது?

1. மண்டலம் 2　　2. மண்டலம் 3
3. மண்டலம் 4　　4. மண்டலம் 5

7. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு முக்கிய காரணிகளில் மனிதக் காரணிகள் அல்லாதவை எது?

1. முறையற்ற நீர்ப் பாசன முறைகள்
2. முறையற்ற வேளாண் முறைகள்
3. போதிய வடிகால் அமைப்பு இல்லாமை
4. காடு அழிப்பு

8. தேசிய நீரியியல் நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?

1. லக்னோ　　2. அலகாபாத்
3. புதுடெல்லி　　4. அகமதாபாத்

9. கீழ்க்காண்பவைகளில் எது சரி?

(i) இந்தியாவின் கிழக்கு கடற்கரையை விட மேற்கு கடற்கரை பகுதிகளில் புயல் அலைகளின் பாதிப்பு குறைவாகும்.

(ii) கிழக்குக் கடற்கரை பகுதிகளில் , நாகப்பட்டினம், மசூலிப்பட்டினம் போன்றவை புயலால் அதிக பாதிப்புக்கு உள்ளாகும் இடங்களாகும்.

1. i மட்டும் சரி　　2. ii மட்டும் சரி
3. இரண்டும் சரி　　4. இரண்டும் தவறு

10. சுழல் நீரியல் வறட்சி எத்தனை வகைப்படும்?

1. 2　　2. 4　　3. 3　　4. 5

11. அதிக வறட்சிக்கு உள்ளாகும் பகுதிகளில் அல்லாதது எது?

1. அகமதாபாத் முதல் கான்பூர் வரை உள்ள வறண்ட பகுதிகள்
2. கான்பூர் முதல் ஜலந்தர் வரை உள்ள பகுதிகள்
3. மேற்கு தொடர்ச்சி மலையின் காற்று மறைவு பகுதிகள்
4. கிழக்கு தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதிகள்

12. வறட்சியால் பாதிப்புக்கு உள்ளாகும் மக்கள் தொகையின் சதவீதம் என்ன?

1. 12 %　　2. 14 %　　3. 16 %　　4. 18 %

www.kalvinews.com

13. இந்தியாவில் எத்தனை சதவீத நிலப்பரப்பு நிலச்சரிவு அபாயத்திற்கு உள்ளாகும் பகுதியாக கண்டறியப்பட்டுள்ளது?

1. 15% 2. 20% 3. 25% 4. 30%

14. தமிழ்நாட்டில் நிலச்சரிவால் அதிகம் பாதிக்கப்படும் பகுதி எது?

1. ஏர்வாடி 2. ஊட்டி
3. ஒகேனக்கல் 4. ஆனைமலை

15. செர்னோபில் அணு உலை விபத்து எந்த ஆண்டு நிகழ்ந்தது?

1. ஏப்ரல் 26, 1986 2. மே 26, 1986
3. ஜூன் 26, 1986 4. ஜூலை 26, 1986

16. 2016 ஆம் ஆண்டு 'கதிர் இயக்கவியல் சார் மற்றும் சுற்றுச்சூழல் உயிர்க்கோளப் பெட்டகம்" என அறிவித்த நாடு எது?

1. உக்ரைன் 2. கியூபா
3. பிரேசில் 4. எத்தியோப்பியா

17. எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவு எது?

1. கரிம கரைப்பான்கள் 2. எண்ணெய்கள்
3. கரிமச் சக்திகள் 4. இவை அனைத்தும்

18. குடிசார் அபாயகர கழிவுகள் அல்லாதது எது?

1. பூச்சிக்கொல்லிகள் 2. படைக்கலன் உற்பத்தி கழிவு
3. எண்ணெய்க் கழிவுகள் 4. குடிசார் மின்கலன்கள்

19. முதன்மை மாசுபடுத்திகள் அல்லாதது எது?

1. சல்பர் டை ஆக்சைடு 2. துகள்ம பொருட்கள்
3. கார்பன் டை ஆக்சைடு 4. தரைமட்ட ஓசோன்

20. இந்தியாவில் நீர் மாசடைதலில் முக்கிய காரணங்கள் அல்லாதது எது?

1. தொழிற்சாலை கழிவுகள் 2. கடல் நீர் உட்புகுதல்
3. வேளாண்மை பயன்பாடு 4. திண்மக் கழிவுகள்

21. புவியிலுள்ள உயிர் மற்றும் உயிரற்ற பொருட்களைப் பாதிக்கக்கூடிய நிகழ்வை ________. என்கிறோம்.

1. இடர் 2. அழிவு 3. ஆதாயம் 4. சலனம்

22. தவறான இணையைக் கண்டறிக.

1. ஹசார்ட் - பிரெஞ்சு
2. ஹசார்டு - ஆங்கிலம்
3. அஸ் - சஹர் - உருது
4. அசார் - ஸ்பானியம்

23. ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் ஒரு அபாயகரமான நிகழ்வு எது?

1. பேரழிவு 2. பேரிடர்
3. இயற்கை இடர்கள் 4. சமூக சீரழிவு

www.kalvinews.com

24. மனித உயிர்கள் மற்றும் உடைமைகளுக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் இயற்கையான நிகழ்வுகள் _______ எனப்படும்.

1. இயற்கை இடர்கள்
2. சமூக சீரழிவு
3. பொருளாதார சீர்கேடு
4. மண் மாசுபடுதல்

25. இடர்களின் வகைகளில் சரியானது எது?

1. நிகழ்விற்கான காரணிகளின் அடிப்படையிலான இடர்கள்
2. தோற்றத்தின் அடிப்படையிலான இடர்கள்
3. இரண்டும் சரி
4. இரண்டுமே தவறு

26. நிகழ்விற்கான காரணிகளின் அடிப்படையிலான இடர்களில் அல்லாதது எது?

1. இயற்கையினால் ஏற்படும் இடர்கள்
2. உருவாகும் அடிப்படையிலான இடர்கள்
3. மனித செயல்களால் உருவாக்கப்படும் இடர்கள்
4. சமூக - இயற்கை காரணிகளால் ஏற்படும் இடர்கள்

27. சரியான இணையைக் கண்டறிக.

1. இயற்கை இடர்பாடுகள் - சூறாவளி
2. மனிதனால் உருவாக்கப்படும் இடர்கள் - நிலச்சரிவு
3. சமூக - இயற்கை இடர்கள் - அணைக்கட்டு உடைதல்
4. உருவாகும் அடிப்படையிலான இடர்கள் - உடல் நலம்

28. தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் எங்கு உள்ளது?

1. மும்பை
2. கர்நாடகம்
3. ஆந்திரா
4. புதுடெல்லி

29. பொருத்துக:

| நில அதிர்வு மண்டலங்கள் | | அபாயத்தன்மை |
|---|---|---|
| i. மண்டலம் 5 | - | a. மிதமானது |
| ii. மண்டலம் 4 | - | b. குறைவு |
| iii. மண்டலம் 3 | - | c. மிக அதிகம் |
| iv. மண்டலம் 2 | - | d. அதிகம் |

1. i - c ii - d iii - a iv - b
2. i - c ii - a iii - b iv - d
3. i - d ii - c iii - b iv - a
4. i - d ii - c iii - a iv - b

30. வளிமண்டலத்தில் குறைந்த காற்றழுத்த பகுதிகளில் சுழலும் வலிமையான காற்றே _______ எனப்படும்.

1. காற்று சுழற்சி
2. நீர் சுழற்சி
3. சுனாமி
4. சூறாவளிப் புயல்

www.kalvinews.com

31. சூறாவளிப் புயல் காற்றின் வேகம் மணிக்கு _______ கி.மீ. வரை வீசக்கூடும்.
    1. 200    2. 300    3. 350    4. 500

32. சூறாவளிப் புயல் காற்றின் மழைப்பொழிவு நாளொன்றுக்கு சுமார் _______ செ.மீ. வீதம் பல நாட்கள் பெய்யக்கூடும்.
    1. 30    2. 40    3. 45    4. 50

33. நாட்டின் _______ பங்கு பகுதிகள் வறட்சியினால் பாதிக்கப்படுகின்றன.
    1. 2/4    2. 1/3    3. 2/5    4. 1/5

34. ஆண்டு மழைப்பொழிவு _______ செ.மீ. க்கும் குறைவான மழை பெறும் பகுதிகள் இந்தியாவில் வறட்சிக்கு உள்ளாகும் பகுதிகளாகும்.
    1. 60    2. 70    3. 50    4. 40

35. கடலடி நில அதிர்வு, கடலடி நிலச்சரிவு மற்றும் எரிமலை வெடிப்பு ஆகியவற்றின் காரணமாக கடலில் ஏற்படும் பேரலைக்கு _______ என்று பெயர்.
    1. புயல்    2. நிலநடுக்கம்    3. சுனாமி    4. எரிமலை வெடிப்பு

36. சுனாமி என்ற வார்த்தை எந்த மொழியில் இருந்து பெறப்பட்டது?
    1. ஜப்பானிஷ்    2. ஸ்பானிஷ்    3. கிரேக்கம்    4. இலத்தீன்

37. ஹிரோஷிமா மீது வீசப்பட்ட அணுகுண்டை விட செர்னோபில் அணு உலை விபத்தில் _______ மடங்கு அதிகமான கதிர்வீச்சு வெளிப்பட்டது.
    1. 300    2. 400    3. 500    4. 600

38. ஹிரோஷிமா மீது எந்த ஆண்டு அணுகுண்டு வீசப்பட்டது?
    1. 1954    2. 1945    3. 1937    4. 1939

39. தவறான இணையைக் கண்டறிக
    1. நைட்ரஜன் - 78.09 %
    2. ஆக்சிஜன் - 20.95 %
    3. கார்பன் டை ஆக்சைடு - 0.03 %
    4. நியான் - 1 %

40. கடந்த 20 ஆண்டுகளில் உலகில் சுமார் _______ இலட்சத்திற்கும் மேலான மக்கள் மோசமான வானிலை நிகழ்வுகளால் இறந்துள்ளனர்.
    1. 4    2. 5    3. 6    4. 3

41. பருவமழை பொய்ப்பின் காரணமாக _______ ஏற்படுகிறது.
    1. ஆவி சுருங்குதல்    2. வறட்சி
    3 ஆவியாதல்    4. மழைப்பொழிவு

42. இடர்கள் உருவாகும் அடிப்படையில் இடர்களை _______ வகைகளாகப் பிரிக்கலாம்.
    1. 3    2. 6    3. 7    4. 8

43. நைட்ரஜன் ஆக்சைடுகள் மனிதர்களைப் பாதிக்கும் _______ நிலை மாசுபடுத்திகளாகும்.
    1. முதன்மை    2. இரண்டாம்    3. மூன்றாம்    4. நான்காம்

www.kalvinews.com

44. தவறான இணையைக் காண்க :

1. முதல்நிலை மாசுபடுத்திகள் - சல்பர் ஆக்சைடுகள்
2. அபாயகர கழிவுகள் - காலாவதியான மருந்துகள்
3. நில அதிர்வு - சுனாமி
4. வானிலையியல் வறட்சி - தீவிரவாதம்

45. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?

1. வெப்ப மண்டல சூறாவளிகள் காரணமாக திடீரென்று ஏற்படும் புயல் அலை ஆழமான கடலோரப் பகுதிகளில் காணப்படுகிறது.
2. சதுப்பு நிலக் காடுகள் அழிக்கப்படுவதால், சூறாவளி அலைகள் கடற்கரைப் பகுதிகளில் இடரை ஏற்படுத்துகின்றன.
3. நிலச் சரிவு ஏற்பட செங்குத்து சரிவு மற்றும் கன மழை ஆகியன முக்கியக் காரணங்களாகும்.
4. சூறாவளி புயல் காற்று, வட அரைக் கோளத்தில் கடிகார எதிர் திசையில் சுழல்கிறது.

46. ஹாசர்ட் என்பதன் பொருள் _______.

1. கபடி விளையாட்டு
2. கோகோ விளையாட்டு
3. பகடை விளையாட்டு
4. சதுரங்க விளையாட்டு

47. பெரும் சுற்றுச்சூழல் பேரழிவு காரணமாக இந்தியாவில் 2017 ம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில் சுமார் எத்தனை பேர் இறந்துள்ளனர்?

1. 22000
2. 23000
3. 20000
4. 25000

48. சுனாமி என்ற சொல்லுக்கு _______ என்று பொருள்.

1. கடல் அலை
2. கடற்கரையோரம்
3. துறைமுக அலை
4. எதுவுமில்லை

49. கீழ்க்காண்பவைகளுள் சரியானது எது?

கூற்று: பேரிடர் என்பது வரையறுக்கப்பட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் ஒரு அபாயகரமான நிகழ்வாகும்.

காரணம்: உயிர் மற்றும் உடைமைகளுக்கு பெரும் அழிவை விளைவிப்பதுடன் மற்றவர்களின் உதவியை நாட வேண்டியுள்ளது.

1. கூற்று மற்றும் காரணம் சரி
2. கூற்று மற்றும் காரணம் தவறு
3. கூற்று சரி காரணம் தவறு
4. கூற்று தவறு காரணம் சரி

50. உயிரியல் சார்ந்த இடர்களுக்கு எடுத்துக்காட்டு _______.

1. காடழிப்பு
2. லாவா வழிதல்
3. சின்னம்மை
4. தீவிபத்து

51. கீழ்க்கண்டவற்றுள் வானிலையியல் காரணிகளாக அல்லாதது எது?

1. காடழிப்பு
2. கனமழை
3. அயன மண்டல சூறாவளிகள்
4. மேகவெடிப்பு

52. வெப்ப மண்டல சூறாவளிகள் காரணமாக திடீரென்று ஏற்படும் கடல் நீர் எழுச்சியை ________ என்கிறோம்.

1. துறைமுக அலை
2. புயல் அலை
3. சுனாமி
4. கன மழை

53. செர்னோபில் அணு பேரழிவு இடம் எதனருகில் உள்ளது?

1. ஜெர்மன்
2. பிரிப்யாட்
3. இந்தியா
4. சீனா

54. குழைமையூட்டிகளாகிய உருக்குலைக்கும் பொருட்கள் எவ்வகையான கழிவுகள்?

1. மருத்துவ கழிவுகள்
2. வெடிப் பொருட்கள்
3. எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவுகள்
4. குடிசார் அபாயகர கழிவுகள்

55. உக்ரைன் மற்றும் பொலாரைக் ஆகிய பகுதிகளில் எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு விலங்குகளும் பறவைகளும் வசிக்க ஆரம்பித்தன?

1. 33
2. 35
3. 38
4. 32

56. எந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் புவியில் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையிலான மக்கள் தொகை பெருக்கம் காணப்பட்டது?

1. 20
2. 22
3. 21
4. 19

57. 2004ஆம் ஆண்டு இந்திய பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமியால் இறந்த மக்களின் எண்ணிக்கை ________.

1. 2,25,000
2. 2,25,400
3. 2,23,000
4. 2,25,500

58. 2004 ஆம் ஆண்டு இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமியால் அதிக உயிர்ப்பலியும், பெருத்த பொருட்சேதமும் ஏற்படாத நாடு எது?

1. சோமாலியா
2. இலங்கை
3. தாய்லாந்து
4. சீனா

59. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான மனிதக் காரணிகள் அல்லாதது எது?

1. முறையற்ற நீர்ப்பாசன முறைகள்
2. முறையற்ற வேளாண் முறைகள்
3. பரந்த நீர்ப் பிடிப்பு பகுதிகள்
4. வண்டல் படிவுகள்

60. நீர் மாசு என்பது நீரின் எந்தெந்த பண்புகளில் ஏற்படும் மாற்றம் ஆகும்?

1. இயற்பியல்
2. வேதியியல்
3. உயிரியல்
4. அனைத்தும்

61. இந்தியாவில் அதிக வெள்ள பாதிப்பிற்கு உள்ளாகாத மாநிலம்?

1. ஒடிசா
2. உத்திரப் பிரதேசம்
3. ஆந்திரா
4. தமிழ்நாடு

62. புயல் அலைகளால் பாதிப்பிற்கு உள்ளாகும் மேற்கு கடற்கரை மாநிலம் எது?

1. ஒடிசா
2. உத்திரப் பிரதேசம்
3. தமிழ்நாடு
4. மகாராஷ்டிரா

www.kalvinews.com

63. நில அதிர்வு மண்டம் 3-ல் இடம்பெறாத இந்திய மாநிலம் எது?

1. இமாச்சலப் பிரதேசம் 2. கேரளா
3. கர்நாடகா 4. தமிழ்நாடு

64. பொருத்துக :

i. செர்னோபில் - a. தாய்லாந்து
ii. சுனாமி - b. ஜப்பான்
iii. வெள்ளப் பெருக்கு - c. சோவியத் யூனியன்
iv. ஹிரோஷிமா - d. உத்தரகாண்ட்

1. i - c ii - b iii - a iv - d
2. i - c ii - a iii - b iv - d
3. i - c ii - a iii - d iv - b
4. i - d iii - c iii - a iv - b

65. உலகில் இதுவரை நிகழ்ந்த நில நடுக்கத்தில் மிக மோசமான நில நடுக்கத்தின்போது பதிவான ரிக்டர் அளவு _______.

1. 9.5 2. 9.1 3. 10.1 4. 7.8

66. நிலநடுக்கத்தின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த தவறான கூற்றுக்களைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS 2019-20)

a) மின் கம்பங்கள், மரம், கட்டடங்களிலிருந்து விலகி இருக்கவும்

b) தீ விபத்தை தவிர்க்க எரிவாயு அடுப்பு, மெழுகுவர்த்திகள் மற்றும் விளக்குகளை அணைக்க வேண்டும்.

c) படிக்கட்டுகளுக்கு பதிலாக மின் தூக்கியை பயன்படுத்த வேண்டும்.

d) மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகளில் தஞ்சம் அடைய வேண்டும்

(1) a, b மற்றும் c (2) b, c மற்றும் d
(3) a மற்றும் b (4) c மற்றும் d

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (2) | **16** | (1) | **31** | (1) | **46** | (3) | **61** | (4) |
| **2** | (1) | **17** | (4) | **32** | (4) | **47** | (1) | **62** | (4) |
| **3** | (1) | **18** | (2) | **33** | (2) | **48** | (3) | **63** | (1) |
| **4** | (1) | **19** | (4) | **34** | (1) | **49** | (1) | **64** | (3) |
| **5** | (4) | **20** | (3) | **35** | (3) | **50** | (3) | **65** | (1) |
| **6** | (2) | **21** | (1) | **36** | (1) | **51** | (1) | **66** | (2) |
| **7** | (3) | **22** | (3) | **37** | (2) | **52** | (2) | **67** | |
| **8** | (3) | **23** | (2) | **38** | (2) | **53** | (2) | **68** | |
| **9** | (3) | **24** | (1) | **39** | (4) | **54** | (3) | **69** | |
| **10** | (1) | **25** | (3) | **40** | (2) | **55** | (1) | **70** | |
| **11** | (4) | **26** | (2) | **41** | (2) | **56** | (3) | **71** | |
| **12** | (1) | **27** | (1) | **42** | (4) | **57** | (1) | **72** | |
| **13** | (1) | **28** | (4) | **43** | (3) | **58** | (4) | **73** | |
| **14** | (2) | **29** | (1) | **44** | (4) | **59** | (3) | **74** | |
| **15** | (1) | **30** | (4) | **45** | (1) | **60** | (4) | **75** | |

www.kalvinews.com

வகுப்பு - 8 - புவியியல்

# 6.தொழிலகங்கள்

**தொகுப்பு:**
**திரு.பெ.பிரபாத்,M.Sc.,B.Ed.,M.A.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, கோமாளியூர்,**
**சேலம் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு S. D. சசிகலா, M.A.,B.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியை (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி. பள்ளி, கோடேபாளையம்,**
**ஈரோடு மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

- மூலப்பொருட்களை முடிக்கப்பட்ட பொருட்களாக மாற்றும் இடமே தொழிலகம் ஆகும்.
- மூலப்பொருட்களை ஒரு வடிவத்திலிருந்து நுகரும் வகையில் மற்றொரு வடிவத்திற்கு மாற்றுவதே உற்பத்தி தொழிற்சாலையின் சாராம்சம் ஆகும்.
- தொழிற்சாலைகள் பொருளாதார நடவடிக்கையின் இரண்டாம் நிலை துறை ஆகும்.
- ஒரு நாட்டின் பொருளாதார வலிமை எப்பொழுதும் உற்பத்தி தொழிற்சாலைகளின் வளர்ச்சியால் அளவிடப்படுகிறது.
- உற்பத்தி, விநியோகம், நுகர்வு அல்லது பணிகளில் ஈடுபடும் எந்த ஒரு செயலுமே பொருளாதார நடவடிக்கை ஆகும்.
- பொருளாதார நடவடிக்கைகளை 5 நிலைகளாகப் பிரிக்கலாம்.

| நிலை | குறிப்புகள் | தொழில்கள் (உதாரணம்) |
|---|---|---|
| 1-ஆம் நிலை (அ) முதன்மை நிலை | பழங்காலத்தில் தோன்றிய பொருளாதார நடவடிக்கை | கால்நடை மேய்த்தல்,<br>வேட்டையாடுதல்,<br>உணவு சேகரித்தல்,<br>மீன்பிடித்தல்,<br>விவசாயம்(கச்சா பருத்தி உற்பத்தி),<br>சுரங்கத் தொழில்,<br>கல் உடைத்தல் |
| 2-ஆம் நிலை | மூலப்பொருட்களை முறைப் படுத்துதல்,<br>உற்பத்தி மூலம் பயன்படும் பொருட்களாக மாற்றம் செய்வது.<br>நடைபெறும் முறைகள்:<br>1. உள்ளீடுகள் (மூலப்பொருட்கள்)<br>2. முறைப்படுத்துதல்<br>3. வெளியீடு (முடிவுற்ற பொருட்கள்) | அடுமனைகளில் மாவுகளை ரொட்டியாக மாற்றுவது,<br>உலோகங்கள் மற்றும் நெகிழிகளை முறைப்படுத்தி வாகனங்களாக மாற்றுவது,<br>நூற்பாலைகள் |

www.kalvinews.com

| | | |
|---|---|---|
| 3-ஆம் நிலை (அ) சேவைகள் துறை (அ) சார்புத் துறை | அத்தியாவசிய சேவைகளை அளிக்கிறது. தொழிலகங்கள் இயங்குவதற்கு உதவி புரிகின்றது. இத்துறை இந்தியாவின் மிகப்பெரிய துறைகளுள் ஒன்று. இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 53% பங்களிப்பினை அளிக்கிறது. | போக்குவரத்து, நிதி பயன்பாடுகள், கல்வி(பள்ளி), சில்லறை வர்த்தகம், வீட்டுவசதி, மருத்துவம், மற்றும் பிறசேவைகள். |
| 4-ஆம் நிலை (அ) தகவல் நுட்பத் தொழிலகங்கள் | ஆராய்ச்சி மற்றும் பயிற்சி உள்ளிட்ட தகவல் உருவாக்கம் மற்றும் பரிமாற்றங்களுடன் தொடர்புடையது. தகவல் பரிமாற்றம் மற்றும் மின்னணு காட்சியானது தகவல் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக வியத்தகு நிலையை அடைந்துள்ளது | வங்கித்துறை, தொலைக்காட்சி நிலையங்கள் |
| 5-ஆம் நிலை | உயர்மட்ட அளவில் முடிவெடுக்கும் நிர்வாகிகள் மக்கள்நலன் பற்றிய முடிவுகள் | நீதித்துறை, தொழிற்சாலைகள், வணிகம், கல்வி மற்றும் அரசாங்கங்களின் உயர்மட்ட அளவில் முடிவெடுக்கும் நிர்வாகிகள், சுகாதாரம், பல்கலைக்கழகங்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் உள்ள உயர்மட்ட அதிகாரிகள், நிர்வாகிகள். மக்கள்நலன் குறித்து முடிவுகள் எடுக்கும் மாநில அமைச்சரவையினர். |

- சேவைகள் என்பன தொட்டுணர்ந்து கொள்ள முடியாதவை, சேமித்து வைக்க இயலாதவை.

**தொழிலக அமைவிட காரணிகள்**

- **தொழிலக அமைவிட காரணிகள் 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.**

| புவியியல் காரணிகள் | புவியியல் அல்லாத காரணிகள் |
|---|---|
| • மூலப்பொருட்கள்<br>• ஆற்றல் வளம்<br>• மனித சக்தி<br>• போக்குவரத்து<br>• சேமிப்பு மற்றும் கிடங்கு<br>• நிலத்தோற்றம்<br>• காலநிலை<br>• நீர்வளம் | • மூலதனம்<br>• கடன் வசதி<br>• அரசாங்கக் கொள்கைகள் / விதிமுறைகள் |

www.kalvinews.com

**புவியியல் காரணிகள்:**

**மூலப்பொருட்கள்**

- இரும்பு எஃகு தொழிற்சாலைகள் இரும்புத்தாது கிடைக்கும் இடங்களுக்கு அருகிலேயே அமைந்துள்ளன. காரணம் அவை அதிக அளவு உடைய மூலப்பொருட்கள். (உ-ம்) சேலம் இரும்பு எஃகு ஆலையானது இரும்புத்தாது கிடைக்கும் கஞ்சமலைக்கு அருகிலேயே அமைந்துள்ளது.
- சர்க்கரை தொழிலகங்கள் கரும்பு விளையும் இடங்களுக்கு அருகிலேயே அமைந்துள்ளன. காரணம் கரும்பானது விரைவிலேயே எடை இழக்கும் தன்மை கொண்டது.

**ஆற்றல் வளம்**

- பெரும்பாலான தொழிலகங்களுக்கு அடிப்படை மற்றும் அத்தியாவசியமானது எரிசக்தி ஆகும்.
- எரிசக்தி பெரும்பாலும் நிலக்கரி, தாது எண்ணெய் மற்றும் நீர் போன்ற மரபுசார் மூலங்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது.
- மின்தேவைக்காக மேற்கண்ட ஏதேனும் ஒருவளம் அமைந்துள்ள இடங்களுக்கு அருகிலேயே தொழிலகங்கள் அமைந்திருக்கும்.

**மனித சக்தி**

- மலிவான மற்றும் திறமையான தொழிலாளர்கள் தொழிலகங்களுக்குத் தேவைப்படுவர். உதாரணம் தேயிலை தொழிற்சாலை

**போக்குவரத்து**

- மூலப்பொருட்கள், முடிக்கப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்ல போக்குவரத்து அவசியம்.
- நீர்வழிகள், சாலைவழிகள் மற்றும் இருப்புப்பாதைகளின் வலைப்பின்னல் கொண்ட பகுதிகள் சிறந்த தொழில் மையங்களாகத் திகழ்கின்றன.

**சேமிப்பு மற்றும் கிடங்கு**

- முடிவுற்ற பொருட்களைச் சேமித்து வைக்க கிடங்குகள் அவசியம்.

**நிலத்தோற்றம்**

- தொழிற்சாலை நிறுவ, பல்வேறு போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இடம் சமமானதாக இருக்க வேண்டும்.

**காலநிலை**

- தொழிற்சாலை வளர்ச்சிக்குத் தீவிர காலநிலை பொருத்தமானது அல்ல.
- பருத்தி நெசவாலை தொழிலுக்குக் குளிர் - ஈரப்பத காலநிலை சிறந்தது
- திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டங்களில் குளிர் - ஈரப்பத காலநிலை நிலவுகிறது.

**நீர்வளம்**

- இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை, ஜவுளி தொழிற்சாலை, இரசாயன தொழிற்சாலைகளுக்கு நீர் தேவைப்படுகிறது.
- இதனால் ஆறுகள், கால்வாய்கள், ஏரிகளுக்கு அருகில் பல தொழிலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**புவியியல் அல்லாத காரணிகள்:**

**மூலதனம்**

- மூலதனம் இல்லாமல் எந்த ஒரு தொழிற்சாலையையும் நிறுவ முடியாது.

**கடன் வசதி** : தொழில் முதலீட்டாளர்களுக்குக் கடன் மற்றும் காப்பீடு வழங்கும் நிறுவனங்களின் சேவை தேவைப்படுகிறது.


www.kalvinews.com

**அரசாங்கக் கொள்கைகள் / விதிமுறைகள்**

- பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க, மாசுபாட்டைக் கட்டுப்படுத்த, பெருநகரங்களில் மிகுதியான தொழிலகங்களைத் தவிர்க்க அரசு சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

| | தொழிலகங்களின் வகைகள் | குறிப்புகள் | உதாரணம் |
|---|---|---|---|
| மூலப் பொருட்களின் அடிப்படையில் | வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | மூலப்பொருட்கள்: வேளாண் மற்றும் விலங்கு சார்ந்த பொருட்கள் | உணவு பதப்படுத்துதல், தாவர எண்ணெய் உற்பத்தி, பருத்தி நெசவாலைகள், பால் உற்பத்திப் பொருட்கள் |
| | கனிமவளம் சார்ந்த தொழிற்சாலைகள் | மூலப்பொருட்கள்: கனிமத் தாதுக்கள் | சிமெண்ட் தொழிற்சாலை, இயந்திரக் கருவி உற்பத்தி, இரும்பு உற்பத்தி |
| | கடல்வளம் சார்ந்த தொழிலகங்கள் | மூலப்பொருட்கள்: கடல் மற்றும் பெருங்கடலில் இருந்து பெறப்படும் பொருட்கள் | பதப்படுத்தப்பட்ட கடல்சார் உணவு, மீன் எண்ணெய் உற்பத்தி |
| | வனவளம் சார்ந்த தொழிலகங்கள் | மூலப்பொருட்கள்: வனப் பொருட்கள் | மரக்கூழ், காகித உற்பத்தி<br>மரத்தளவாடங்கள்<br>மருந்து உற்பத்தி தொழிலகங்கள் |
| அளவு மற்றும் மூலதனத்தின் அடிப்படையில் | பெரிய அளவிலான தொழிலகங்கள் | மூலதனம்:<br>1 கோடிக்கும் மேல் | இரும்பு எஃகு ஆலை<br>எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை<br>சிமெண்ட் தொழிற்சாலை<br>நெசவாலை தொழிலகங்கள் |
| | சிறிய அளவிலான தொழிலகங்கள் / இதர வகை தொழிற்சாலைகள் | மூலதனம்:<br>1 கோடிக்கும் கீழ்<br>தயாரிப்பாளர்கள்:<br>1. குடும்ப உறுப்பினர்கள்<br>2. கைவினைக் கலைஞர்கள் | பட்டு நெசவு<br>வீட்டு உபயோகப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள்<br>குடிசைத் தொழில்கள்,<br>கூடை முடைதல்<br>பானை தயாரித்தல், கைவினைப் பொருள் தயாரிப்பு |
| உடைமையாளர் அடிப்படையில் | தனியார் துறை | தனிநபர்கள், தனித்த குழுக்களால் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. | பஜாஜ் ஆட்டோ<br>ரிலையன்ஸ் |
| | பொதுத்துறை | அரசுக்குச் சொந்தமானவை, அரசால் இயக்கப்படுபவை | ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனம் (HAL)<br>பாரத மிகுமின் நிறுவனம் (BHEL)<br>இந்திய இரும்பு எஃகு ஆணையம் (SAIL) |
| | கூட்டுத்துறை | அரசுத்துறை மற்றும் தனிநபர்கள் / தனிகுழுவினர் கூட்டாக இணைந்து இயக்கப்படுகின்றன. | இந்தியன் ஆயில் ஸ்கை டேங்கிங் நிறுவனம்,<br>இந்தியன் சிந்தட்டிக் ரப்பர் நிறுவனம்,<br>மகாநகர் வாயு நிறுவனம்<br>மாருதி உத்யோக் |
| | கூட்டுறவுத் துறை | அ) மூலப்பொருட்களின் உற்பத்தியாளர்கள்/ விநியோகிப்பவர்கள் அல்லது தொழிலாளர்கள்<br>ஆ) இவ்விரண்டையும் அளிப்பவர்களால் நிறுவப்பட்டு இயக்கப்படுகிறது | ஆனந்த் பால் ஒன்றிய நிறுவனம் (அமுல்) |

www.kalvinews.com




- இந்தியாவின் டெட்ராய்ட் என்று சென்னை அழைக்கப்படுகிறது.
- சென்னையில் ஜி.எம்.போர்டு, மஹேந்திரா, ஹூண்டாய் போன்ற தொழிலகங்கள் உள்ளன.
- சென்னை நகரம் நாட்டின் வாகன தொழில் எற்றுமதியில் 60% பங்கினைக் கொண்டுள்ளது.
- அமெரிக்க ஐக்கிய நாட்டில் மிக்சிகன் மாநிலத்தில் டெட்ராய்ட் நகரம் உள்ளது.
- டெட்ராய்ட் நகரம் உலக பாரம்பரிய வாகன தொழில் மையமாக அறியப்படுகிறது.

**பயிற்சி வினாக்கள்:**

1. பட்டு நெசவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள் _______ பிரிவுகளின் கீழ் வருகின்றன.

   (1) சிறிய அளவிலான தொழிலகம் (2) பெரிய அளவிலான தொழிலகம்

   (3) கடல்வளம் சார்ந்த தொழிலகம் (4) மூலதனம் சார்ந்த தொழிலகம்

2. உடைமையாளர்கள் அடிப்படையிலான தொழிலகங்கள் _______ வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

   (1) 2 (2) 3 (3) 4 (4) 5

3. ஆனந்த் பால் பண்ணைத் தொழிலகம் (அமுல்) _______ துறைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

   (1) தனியார் துறை (2) பொதுத்துறை (3) கூட்டுறவுத் துறை (4) கூட்டுத்துறை

4. இரும்பு எஃகு மற்றும் சிமெண்ட் தொழிலகங்கள் _______ தொழிலகங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

   (1) வேளாண் சார்ந்த (2) கனிம வளம் சார்ந்த

   (3) வனப் பொருட்கள் சார்ந்த (4) கடல் வளம் சார்ந்த

5. சார்புத் துறை _______ வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

   (1) 4 (2) 3 (3) 2 (4) 5

www.kalvinews.com

6. வங்கித் துறை என்பது _______ பொருளாதார நடவடிக்கையாகும்

(1) முதல் நிலை (2) இரண்டாம் நிலை
(3) மூன்றாம் நிலை (4) நான்காம் நிலை

7. மூன்றாம் நிலை தொழில்கள் _______ மற்றும் _______ ஆக வகைப்படுத்தப்படுகிறது.

i) முதல் நிலை ii) இரண்டாம் நிலை
iii) நான்காம் நிலை iv) ஐந்தாம் நிலை

(1) i மற்றும் ii (2) iii மற்றும் ii
(3) iii மற்றும் iv (4) iv மற்றும் ii

8. அரசாங்க முடிவு எடுக்கும் செயல்முறைகள் _______ துறையின் கீழ்வரும் மூன்றாம் நிலை செயல்பாடாகும்.

(1) ஐந்தாம் நிலை (2) நான்காம் நிலை
(3) மேற்கண்ட இரண்டும் (4) இவை எதுவுமில்லை

9. மூலப்பொருட்கள் அடிப்படையில் பருத்தி நெசவாலை ஒரு _______ தொழிலாகும்.

(1) வேளாண் சார்ந்த (2) கனிம வளம் சார்ந்த
(3) வனப் பொருட்கள் சார்ந்த (4) கடல் வளம் சார்ந்த

10. பெரிய அளவிலான தொழிற்சாலையை நிறுவுவதற்குத் தேவையான மூலதனம் _______ ஆகும்.

(1) ≥10,000,000 (2) 1,000,000 (3) >1,000,000 (4) <10,000,000

11. ஆனந்த் பால் ஒன்றிய நிறுவனம் _______ துறைக்குச் சான்றாகும்

(1) கூட்டுறவுத் துறை (2) தனியார் துறை (3) கூட்டுத் துறை (4) அரசுத் துறை

12. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) நீதித்துறை | - | i) தனியார் துறை |
| ஆ) தொலைக்காட்சி ஒளிபரப்பு | - | ii) புவியியல் அல்லாத காரணிகள் |
| இ) புவியியல் காரணிகள் | - | iii) நான்காம் நிலை செயல்பாடு |
| ஈ) மூலதனம் | - | iv) மூலப்பொருட்கள் |
| உ) Bajaj Auto | - | v) ஐந்தாம் நிலை செயல்பாடுகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | அ - ii | ஆ - iii | இ - v | ஈ - iv | உ - i |
| (2) | அ - v | ஆ - ii | இ - iv | ஈ - i | உ - iii |
| (3) | அ - ii | ஆ - iii | இ - iv | ஈ - i | உ - v |
| (4) | அ - v | ஆ - iii | இ - iv | ஈ - ii | உ - i |

13. தொழிற்துறை ஒரு _______ பொருளாதார நடவடிக்கை சார்ந்தது.

(1) மூன்றாம் நிலை (2) நான்காம் நிலை
(3) ஐந்தாம் நிலை (4) இரண்டாம் நிலை

14. கடல் மற்றும் பெருங்கடல் சார்ந்த பொருட்களை மூலப்பொருட்களாகப் பயன்படுத்துவது _______.

(1) கடல்சார்ந்த தொழிலகங்கள் (2) வனவளம் சார்ந்த தொழிலகங்கள்
(3) வேளாண் சார்ந்த தொழிலகங்கள் (4) கனிமவளம் சார்ந்த தொழிலகங்கள்

www.kalvinews.com

15. கீழ்க்கண்ட 4 கூற்றுகளைப் படித்து விடையளிக்க.

A) இந்தியாவின் டெட்ராய்ட் சென்னை ஆகும்.

B) சென்னை நகரம் உலக பாரம்பரிய வாகன தொழில் மையமாக அறியப்படுகிறது.

C) சென்னை நாட்டின் வாகன தொழில் ஏற்றுமதியில் 60% பங்கினைக் கொண்டுள்ளது.

D) சென்னையில் உலக புகழ்பெற்ற நிறுவனங்களான பஜாஜ் ஆட்டோ, மாருதி உத்யோக் ஆகியவை அமைந்துள்ளன.

(1) B ஐத் தவிர அனைத்தும் சரி (2) C சரி ஆனால் B தவறு

(3) A சரி C அதற்கான காரணம் (4) A ஐத் தவிர அனைத்தும் தவறு

16. இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் _______ துறை 53% பங்கு வகிக்கிறது.

(1) சேவை (2) இரண்டாம் நிலை

(3) முதன்மை (4) வாகன உற்பத்தி

17 பருத்தி ஜவுளித் தொழிலுக்கு _______, _______ காலநிலை உகந்தது

A) குளிரான B) வெப்பமான C) ஈரப்பதமான D) வறண்ட

(1) A மற்றும் B (2) A மற்றும் C

(3) B மற்றும் D (4) C மற்றும் D

18. உலக பாரம்பரிய வாகன தொழில் மையம் என்று அழைக்கப்படுவது _______.

(1) சென்னை (2) டெட்ராய்ட்

(3) ஜப்பான் (4) மைசூர்

19. _______ தொழிலகங்கள் தனிநபர் மற்றும் தனிநபர் குழுக்களால் இயக்கப்படுகிறது.

(1) தனியார் துறை (2) பொதுத்துறை

(3) கூட்டுறவுத்துறை (4) கூட்டுத்துறை

20. ஒரு நாட்டின் பொருளாதார வலிமை _______ வளர்ச்சியால் அளவிடப்படுகிறது.

(1) விவசாயம் (2) தொழிலகங்கள்

(3) கல்வி (4) இவை அனைத்தும்

21. இரண்டாம் நிலை செயல்பாடுகளுள் சரியான வரிசை எது?

A. முறைப்படுத்துதல்

B. முடிவுற்ற பொருள்கள் வெளியீடு

C. உள்ளீடு

(1) A, B, C (2) C, B, A (3) B, A, C (4) C, A, B

22. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(1) AMUL (2) HAL (3) SAIL (4) BHEL

23. மூலப்பொருட்களை முடிவுற்ற பொருட்களாக மாற்றும் இடம் _______.

(1) கிடங்கு (2) தொழிற்சாலை

(3) அமைச்சரவை (4) சந்தை

24. மூலப்பொருட்களை _____ பொருட்களாக மாற்ற வேண்டும்.

(1) சேவை (2) கனிம (3) நுகர்வு (4) உற்பத்தி

www.kalvinews.com

25. கீழ்க்கண்டவற்றில் தவறான கூற்று எது?

(1) மூலப்பொருட்களை நுகர்வு பொருட்களாக மாற்றுவதே உற்பத்தித் தொழிற்சாலையின் சாராம்சம் ஆகும்.

(2) இயற்கையிலிருந்து நேரடியாக வளங்களைப் பெற்று மனிதர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் தொழிலை முதல்நிலைத் தொழில் என்கிறோம்.

(3) சுரங்கத்திலிருந்து இரும்புத்தாது வெட்டியெடுப்பது இரண்டாம் நிலைத் தொழில் ஆகும்.

(4) நான்காம் நிலைத் தொழில் அறிவார்ந்த நடவடிக்கைகளை உள்ளடக்கியது.

26. பின்வருவனவற்றில் எது பொருளாதார நடவடிக்கை?

(1) விநியோகம் (2) உற்பத்தி (3) நுகர்வு (4) இவை அனைத்தும்

27. தவறான இணையைத் தேர்ந்தெடு.

(1) முதன்மை நிலை பொருளாதார நடவடிக்கை - உழவுத் தொழில்

(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை - செங்கல் தயாரித்தல்

(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை - அறுவை சிகிச்சை நிபுணர்

(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை - கல்வி அமைச்சர்

28. ரவி தன் தொலைக்காட்சியில் '18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி இலவசம்' என்று பிரதமர் அறிவிப்பதைக் காண்கிறார். அடுத்த நாள் ஆரம்ப சுகாதார நிலையம் சென்று தடுப்பூசி செலுத்திக் கொள்கிறார். வரும் வழியில் கரும்பிலிருந்து கரும்புச்சாறு தயாரிப்பதைக் காண்கிறார். உடனே சென்று ஒரு குவளை கரும்புச்சாறு அருந்துகிறார். - மேற்கண்ட தொடரில் இடம்பெறாத பொருளாதார நடவடிக்கை எது?

(1) முதல்நிலை பொருளாதார நடவடிக்கை

(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை

29. பொருத்தமற்ற ஒன்றைத் தேர்ந்தெடு.

(1) கால்நடை மேய்த்தல் (2) கல் உடைத்தல்

(3) ரொட்டி தயாரித்தல் (4) தேன் எடுத்தல்

30. பழங்காலம் முதல் உள்ள பொருளாதார நடவடிக்கை _______.

(1) முதல்நிலை பொருளாதார நடவடிக்கை

(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை

31. மூலப்பொருட்களை முறைப்படுத்துதல் மற்றும் உற்பத்தி மூலம் பயன்படும் பொருட்களாக மாற்றம் செய்வது _______.

(1) முதல்நிலை பொருளாதார நடவடிக்கை

(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை

www.kalvinews.com

32. கேக் தயாரித்தல் என்பது _______.

(1) முதல்நிலை பொருளாதார நடவடிக்கை

(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை

33. அடுமனைகளில் கேக் விற்பனை செய்வது _______.

(1) முதல்நிலை பொருளாதார நடவடிக்கை

(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை

34. மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கையின் வேறு பெயர்கள் _______.

அ) முதன்மை நிலை

ஆ) சார்புத்துறை

இ) சேவைகள் துறை

ஈ) அறிவுசார் துறை

உ)தகவல் நுட்பத் தொழிலகங்கள்

(1) அ மற்றும் ஆ (2) ஆ மற்றும் இ (3) இ மற்றும் ஈ (4) ஈ மற்றும் உ

35. அத்தியாவசிய சேவைகளை அளிக்கும் துறை _______.

(1) முதல்நிலை பொருளாதார நடவடிக்கை

(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை

36. இவற்றுள் எது / எவை மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை இல்லை?

அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகம்

ஆ) பங்குச் சந்தை

இ) ஊ.ஒ.ந.நி.பள்ளி, கோமாளியூர்

ஈ) மளிகை கடை

உ) பொதிகை தொலைக்காட்சி

ஊ) அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

எ) இந்தியன் வங்கி

(1) உ மற்றும் ஆ (2) அ மற்றும் ஊ (3) இ மற்றும் ஈ (4) உ மட்டும்

37. 'என்னைத் தொட்டுணர முடியாது. சேமிக்கவும் முடியாது' நான் யார்?

(1) முதல்நிலை பொருளாதார நடவடிக்கை

(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை

(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை

www.kalvinews.com

38. ஆராய்ச்சி மற்றும் பயிற்சி உள்ளிட்ட தகவல் உருவாக்கம் மற்றும் பரிமாற்றங்களுடன் தொடர்புடையது எது?
(1) முதல்நிலை பொருளாதார நடவடிக்கை
(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை
(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை
(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை

39. நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கையின் வேறு பெயர் _______.
(1) தகவல் நுட்பத் தொழிலகங்கள் (2) சார்புத் துறை
(3) சேவைகள் துறை (4) முதன்மைத் துறை

40. இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ள துறை _______.
(1) தொழிலகங்கள் (2) சேவைகள் துறை
(3) உழவுத்துறை (4) முதல்நிலை பொருளாதார நடவடிக்கைகள்

41. தொழிற்சாலைகள், வணிகம், கல்வி மற்றும் அரசாங்கங்களின் உயர்மட்ட அளவில் முடிவெடுக்கும் நிர்வாகிகள் குறிப்பிடுவது _______.
(1) முதல்நிலை பொருளாதார நடவடிக்கை
(2) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை
(3) ஐந்தாம் நிலை பொருளாதார நடவடிக்கை
(4) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கை

42. கீழ்க்கண்டவற்றில் ஐந்தாம் நிலை பொருளாதார நடவடிக்கைகளில் வருபவர் யார்?
(1) கணித ஆசிரியர் (2) பல்கலைக்கழக துணைவேந்தர்
(3) வங்கி மேலாளர் (4) பண்பலை

43. ஒரு மாநிலத்தின் பல்வேறு மக்கள் நலன் பற்றிய முடிவுகளை எடுப்பவர்கள் யார்?
(1) பொருளாதார வல்லுநர்கள் (2) மாவட்ட ஆட்சியர்கள்
(3) அமைச்சரவை குழுவினர் (4) பிரதமர்

44. தொழிலக அமைவிட காரணிகளின் பிரிவுகளின் எண்ணிக்கை _______.
(1) 2 (2) 3 (3) 4 (4) 1

45. கீழ்க்கண்ட கூற்று மற்றும் காரணங்களைப் படித்து விடையளிக்க.
கூற்று: சேலம் இரும்பு எஃகு ஆலையானது கஞ்சமலைக்கு அருகில் அமைந்துள்ளது
காரணம் 1: இதன் மூலப்பொருள் விரைவில் எடை இழக்கும் தன்மை வாய்ந்தது.
காரணம் 2: இதன் மூலப்பொருள் எடை அதிகமுள்ளதால் அதிக தூரம் கொண்டு செல்வது கடினம்.
(1) கூற்று சரி, காரணம் 1 தவறு (2) கூற்று சரி, காரணங்கள் பொருத்தமில்லை
(3) கூற்று தவறு, காரணம் 2 சரி (4) கூற்று சரி, காரணம் 2 சரி

46. சேலம் இரும்பு எஃகு ஆலைக்கான மூலப்பொருள் எங்கிருந்து கிடைக்கிறது?
(1) சேர்வராயன் மலை (2) கஞ்ச மலை
(3) கல்ராயன் மலை (4) ஏற்காடு மலை

www.kalvinews.com

47. சர்க்கரைத் தொழிற்சாலை எதற்கு அருகில் அமையும்?

(1) சந்தை
(2) மூலப்பொருள் கிடைக்குமிடம்
(3) நல்ல காலநிலை உள்ள இடம்
(4) நீர்வளம் உள்ள இடம்

48. பெரும்பாலான தொழிலகங்களை இயக்குவதற்குத் தேவையான ஒன்று ______.

(1) எரிசக்தி
(2) பேருந்து வசதி
(3) இவ்விரண்டும்
(4) இவை எதுவும் இல்லை

49. மரபு சார் மூலங்கள் எனப்படுபவை ______.

அ) நிலக்கரி ஆ) அணுசக்தி இ) நீர் ஈ) தாது எண்ணெய்

(1) அ, ஆ மற்றும் இ
(2) அ, இ மற்றும் ஈ
(3) ஆ, இ மற்றும் ஈ
(4) அ, ஆ மற்றும் ஈ

50. சரியான கூற்று எது?

(1) காபி பொடி தயாரிக்கும் தொழிற்சாலை சேமிப்பு கிடங்கு இருக்கும் இடங்களுக்கு அருகில் அமையும்.
(2) தொழிற்சாலையை நிறுவுவதற்கு சமமான இடம் தேவையில்லை.
(3) தொழிற்சாலைக்குத் தீவிர காலநிலை அவசியமானதாகும்.
(4) பொதுவாக தொழிற்சாலைகளுக்கு மலிவான மற்றும் திறமையான தொழிலாளர்கள் அவசியம்.

51. தவறான கூற்று எது?

அ) எளிதான போக்குவரத்து தொழிலகங்களின் அமைவிடத்தைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
ஆ) சமமற்ற இடம் போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக இருக்கும்.
இ) முடிவுற்ற பொருள் சந்தைக்கு எடுத்துச் செல்லும் வரை சேமிக்கப்படல் வேண்டும்.
ஈ) தொழில் முதலீட்டாளர்கள் போதுமான மூலதனத்தை வைத்துக் கொண்டு தான் தொழில் தொடங்குவர்.

(1) அ மற்றும் ஆ
(2) இ மற்றும் ஈ
(3) அ மற்றும் இ
(4) ஆ மற்றும் ஈ

52. தவறான இணை எது?

(1) மூலப்பொருட்கள் - சர்க்கரை தொழிற்சாலை
(2) மனித சக்தி - தேயிலை தொழிற்சாலை
(3) கால நிலை - இரும்பு எஃகு ஆலை
(4) நீர்வளம் - இரசாயன தொழிற்சாலைகள்

53. கொடுக்கப்பட்ட தொழிலக அமைவிட காரணிகளுள், புவியியல் அல்லாத காரணிகளுடன் தொடர்பற்றது எது?

(1) நீர்வளம்
(2) மூலதனம்
(3) கடன்வசதி
(4) அரசாங்கக் கொள்கைகள்

www.kalvinews.com

54. தவறான கூற்று எது?

(1) நீர்வழிகள், சாலைவழிகள் மற்றும் இருப்புப்பாதைகளின் வலைப்பின்னல் கொண்ட பகுதிகள் சிறந்த தொழில் மையங்களாகத் திகழ்கின்றன.

(2) மூலதனம் இல்லாமல் எந்த தொழிற்சாலையையும் நிறுவ முடியாது.

(3) அரசாங்க கொள்கைகள் தொழிலக அமைவிடத்தைத் தீர்மானிக்கின்றன. அரசாங்க விதிமுறைகள் தீர்மானிப்பதில்லை

(4) கடன் மற்றும் காப்பீடு வழங்கும் நிறுவனங்களின் சேவை தொழில் முனைவோருக்குத் தேவைப்படுகிறது.

55. அரசாங்கக் கொள்கைகள் தொழிலக அமைவிடத்தைத் தீர்மானிக்கின்றன. ஏனெனில் ______.

அ) பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காக

ஆ) அதிகமான மாசுபாட்டைக் கட்டுபடுத்துவதற்காக

இ) முறையான வரி வசூல் இலக்கு நிர்ணயிப்பதற்காக

ஈ) பெருநகரங்களில் மிகுதியான தொழிலகங்களைத் தவிர்ப்பதற்காக

(1) அ மற்றும் ஆ (2) ஆ, இ மற்றும் ஈ

(3) அ, ஆ, இ, ஈ (4) அ, ஆ, ஈ

56. மூலப்பொருள் அடிப்படையில் தொழிலகங்கள் எத்தனை வகையாக வகைப்படுத்தப் படுகின்றன?

(1) 2 (2) 3 (3) 4 (4) 5

57. வேளாண் சார்ந்த தொழிலகங்களின் மூலப்பொருட்கள் ______.

(1) விவசாயம் சார்ந்த பொருட்கள் (2) கடல் சார்ந்த பொருட்கள்

(3) விலங்கு சார்ந்த பொருட்கள் (4) 1 மற்றும் 3

58. வேளாண் சார்ந்த தொழிலகங்களில் குழுவில் பொருந்தாதது எது?

(1) உணவுப் பதப்படுத்துதல் (2) மரத் தளவாடங்கள்

(3) பருத்தி நெசவாலைகள் (4) பால் உற்பத்திப் பொருட்கள்

59. கனிமத் தாதுக்களை மூலப்பொருட்களாகக் கொண்டது எது?

(1) சிமெண்ட் தொழிற்சாலை (2) கனிம வளம் சார்ந்த தொழிற்சாலைகள்

(3) சர்க்கரை ஆலை (4) வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள்

60. கனிம வளம் சார்ந்த தொழிலகங்களில் பொருந்தாதது எது?

(1) இரும்பு எஃகு தொழிற்சாலை (2) காகித தொழிற்சாலை

(3) தாவர எண்ணெய் உற்பத்தி (4) மீன் எண்ணெய் ஆலை

61. காடுகளில் இருந்து பெறப்படும் பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுவது ______.

(1) வனவளம் சார்ந்த தொழிலகங்கள் (2) வேளாண் சார்ந்த தொழிலகங்கள்

(3) கனிமவளம் சார்ந்த தொழிலகங்கள் (4) கடல்வளம் சார்ந்த தொழிலகங்கள்

62. படத்தில் காணப்படுவது எவ்வகை தொழிலகத்திற்கு உதாரணம்?



www.kalvinews.com

(1) இயந்திரத் தொழிலகம் (2) வேளாண் சார்ந்த தொழிலகம்
(3) காடுவளம் சார்ந்த தொழிலகம் (4) கனிம வளம் சார்ந்த தொழிலகம்

63. சிமெண்ட் தொழிற்சாலை எவ்வகை தொழிலகத்திற்கு உதாரணம்?
அ) கனிம வளம் சார்ந்த தொழிலகம்
ஆ) வேளாண் சார்ந்த தொழிலகம்
இ) சிறிய அளவிலான தொழிலகம்
ஈ)பெரிய அளவிலான தொழிலகம்
உ)அரசுத்துறை தொழிலகம்
(1) அ மட்டும் (2) ஈ மற்றும் ஆ (3) உ மற்றும் இ (4) ஈ மற்றும் அ

64. குழுவில் பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு
(1) இரும்பு எஃகு ஆலை (2) பட்டு நெசவு
(3) எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை (4) நெசவாலை தொழிலகங்கள்

65. குழுவில் பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு
(1) கூடை முடைதல் (2) பானை தயாரித்தல்
(3) கைவினைப் பொருட்கள் தயாரிப்பு (4) கப்பல் கட்டுதல்

66. சிறிய அளவிலான தொழிலகங்கள் எவ்வளவு மூலதனம் கொண்டு நிறுவப்படும்?
(1) 1,000,000க்கு மேல் (2) 10,000,000க்கு மேல்
(3) 50,000,000க்கு மேல் (4) 1 பில்லியனுக்கும் மேல்

67. ஹூண்டாய் தொழிலகம் எங்கு அமைந்துள்ளது?
(1) டெட்ராய்ட் (2) மைசூர் (3) மும்பை (4) சென்னை

68. குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் கைவினைப்பொருட்கள் தயாரிக்கும் தொழிலகங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?
அ) சீரான வகை தொழிலகங்கள் ஆ) சிறு தொழில்கள்
இ) இதரவகை தொழிலகங்கள் ஈ) வனவளம் சார்ந்த தொழிலகங்கள்
(1) அ தவிர அனைத்தும் (2) ஆ மற்றும் இ
(3) ஆ மட்டும் (4) ஆ மற்றும் ஈ

69. ரிலையன்ஸ் குழும தலைவர் யார்?
(1) ரத்தன் டாடா (2) லட்சுமி மிட்டல்
(3) முகேஷ் அம்பானி (4) அனில் பிர்லா

70. குழுவில் பொருந்தாததைத் தேர்ந்தெடு
(1) பஜாஜ் ஆட்டோ (2) ரிலையன்ஸ் (3) TVS (4) HAL

71. அரசால் இயக்கப்படும் அரசுக்குச் சொந்தமான தொழிலகங்கள் ________.
(1) பொதுத்துறை தொழிலகங்கள் (2) அரசுசாரா தொழிலகங்கள்
(3) கூட்டுறவுத்துறை தொழிலகங்கள் (4) கூட்டுத்துறை தொழிலகங்கள்

72. அரசுத்துறை மற்றும் தனியார் துறை இணைந்து இயக்கும் தொழிலகங்கள் ________.
(1) கூட்டுறவுத்துறை (2) பொதுத்துறை (3) கூட்டுத்துறை (4) தனியார் துறை

www.kalvinews.com

73. மூலப்பொருளை உற்பத்தி செய்பவர் அல்லது விநியோகிப்பவர் அல்லது தொழிலாளர்களை அளிப்பவர்களால் நிர்வகிக்கப்படும் தொழிலகங்கள் _______.

(1) கூட்டுறவுத்துறை (2) பொதுத்துறை (3) கூட்டுத்துறை (4) தனியார் துறை

74. பின்வருவனவற்றுள் தொழிலக அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக அல்லாதது எது?

(1) மூலதனம் (2) நிலம் (3) போக்குவரத்து (4) உள்ளீடு

75. பொருத்துக.

i) இந்தியாவின் டெட்ராய்ட் - a) சேலம்

ii) BHEL - b) பெங்களூரு

iii) SAIL - c) திருச்சி

iv) HAL - d) சென்னை

(1) i - d ii - c iii - b iv - a (2) i - d ii - a iii - b iv - c

(3) i - d ii - c iii - a iv - b (4) i - a ii - c iii - d iv - b

76. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்கவும். [NMMS-2016]

(1) BHEL - திருச்சி (2) SAIL - சேலம்

(3) TAMIN - திருவனந்தபுரம் (4) TISCO - ஜாம்ஷெட்பூர்

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | (1) | 21 | (4) | 41 | (3) | 61 | (1) |
| 2 | (3) | 22 | (1) | 42 | (2) | 62 | (3) |
| 3 | (3) | 23 | (2) | 43 | (3) | 63 | (4) |
| 4 | (2) | 24 | (3) | 44 | (1) | 64 | (2) |
| 5 | (3) | 25 | (3) | 45 | (4) | 65 | (4) |
| 6 | (4) | 26 | (4) | 46 | (2) | 66 | (1) |
| 7 | (3) | 27 | (4) | 47 | (2) | 67 | (4) |
| 8 | (1) | 28 | (1) | 48 | (1) | 68 | (2) |
| 9 | (1) | 29 | (3) | 49 | (2) | 69 | (3) |
| 10 | (1) | 30 | (1) | 50 | (4) | 70 | (4) |
| 11 | (4) | 31 | (2) | 51 | (4) | 71 | (1) |
| 12 | (4) | 32 | (2) | 52 | (3) | 72 | (3) |
| 13 | (3) | 33 | (3) | 53 | (1) | 73 | (1) |
| 14 | (1) | 34 | (2) | 54 | (3) | 74 | (4) |
| 15 | (1) | 35 | (3) | 55 | (4) | 75 | (3) |
| 16 | (1) | 36 | (4) | 56 | (3) | 76 | (3) |
| 17 | (2) | 37 | (3) | 57 | (4) | 77 | |
| 18 | (2) | 38 | (4) | 58 | (2) | 78 | |
| 19 | (1) | 39 | (1) | 59 | (1) | 79 | |
| 20 | (2) | 40 | (2) | 60 | (3) | 80 | |

www.kalvinews.com

வகுப்பு - 8 - புவியியல்

**7 - கண்டங்களை ஆராய்தல்**
**ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா**

**தொகுப்பு:**
**திரு.மு.ச.நபில் புகாரி,M.Sc., B.Ed. ,M.Phil.,**
**ஆசிரிய பயிற்றுனர், கடலூர்**
**வட்டார வள மையம்,**
**கடலூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.B.உஷா ஆனந்தி, M.Sc., B.Ed. ,M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியை, (சமூக அறிவியல்)**
**அரசு உயர்நிலைப்பள்ளி,**
**கீழ்க்குமாரமங்கலம், கடலூர் மாவட்டம்.**

**முக்கிய குறிப்புகள்:**

1. **ஆப்பிரிக்கா**

**அமைவிடம் மற்றும் பரப்பளவு:**

- நிலப்பரப்பளவு மற்றும் மக்கட் தொகை எண்ணிக்கை அடிப்படையில் உலகின் இரண்டாவது பெரிய கண்டமாக ஆப்பிரிக்கா விளங்குகிறது.
- ஆப்பிரிக்க கண்ட பரவலானது உலக நில வரை படத்தில் பின்வருமாறு அமைந்துள்ளது.
- $37^0$ 21' வட அட்சரேகை முதல் $34^0$ 51' தென் அட்ச ரேகை வரையிலும்
- $17^0$ 33' மேற்கு தீர்க்கம் முதல் $51^0$ 27' கிழக்கு தீர்க்கம் வரையிலும்
- 30.36 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது.
- உலகின் மொத்த நிலப்பரப்பில் 20.2% நிலப்பரப்பு ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ளது.
- $0^0$ புவிநடுக்கோடு (பூமத்திய ரேகை) பகுதியிலிருந்து வடக்கே $37^0$ 21' அட்சரேகை பகுதிவரையிலும், தெற்கே $34^0$ 51' அட்சரேகை பகுதிவரையிலும் சற்று ஏறக்குறைய இருபுறமும் சம அளவில் அமைந்து இருப்பதால் $0^0$ புவி நடுக்கோடு ஆப்பிரிக்க கண்டத்தை இரு சம பாகங்களாக பிரிப்பது போல தோற்றமளிக்கிறது.
- $0^0$ தீர்க்கரேகை பகுதியிலிருந்து மேற்கே $17^0$ 33' தீர்க்க ரேகை பகுதிவரையிலும், கிழக்கே $51^0$ 27' தீர்க்கரேகை பகுதி வரையிலும் அமைந்துள்ளது.
- $0^0$ அட்சரேகையை புவிநடுக்கோடு அல்லது பூமத்தியரேகை என்றும் $23^0$ 30' வட அட்சரேகையை கடக ரேகை என்றும் $3^0$ 30' தென்அட்சரேகையை மகரரேகை என்றும் அழைக்கப்படும் நிலையில் $37^0$ 21' வட அட்சத்திலிருந்து $34^0$ 51' தென் அட்சம் வரை அமைந்துள்ள ஆப்பிரிக்கா கண்டமானது கடகரேகை பூமத்தியரேகை, மகரரேகை ஆகிய மூன்று வெப்ப மண்டல கோடுகளையும் உள்ளடக்கி அதனையும் கடந்து பரவி அமைந்துள்ள உலகின் ஒரே கண்டம் இதுவே ஆகும். இத்தகைய சிறப்பு உலகின் (புவியில்) உள்ள பிற ஆறு கண்டங்களுக்கு இல்லை.
- $0^0$ புவிநடுக்கோட்டு பகுதியிலிருந்து $23^0$ 30' வட அட்ச ரேகை வரையுள்ள நிலப்பகுதி வரையிலும் மற்றும் $0^0$ புவி நடுக்கோட்டு பகுதியிலிருந்து $23^0$ 30' தென் அட்ச ரேகை வரையுள்ள நிலப்பகுதி வரையிலும் வெப்பமண்டலம் (அயன மண்டல) பகுதி என்று அழைக்கப்படுகிறது.
- $23^0$ 30' வட அட்சரேகை பகுதியிலிருந்து $66^0$ 30' வட அட்சரேகை வரையுள்ள நிலப்பகுதியானது மிதவெப்ப மண்டல (துணை அயணமண்டல) பகுதி என்று அழைக்கப்படுகிறது.

www.kalvinews.com

- $37^0$ 21' வட அட்சத்திலிருந்து $34^0$ 51' தென் அட்சம் வரை அமைந்துள்ள ஆப்பிரிக்க கண்டமானது வெப்பமண்டலம் மற்றும் மிதவெப்பமண்டலம் என இருவேறு வெப்ப மண்டலங்களை கொண்ட நிலப்பகுதிகளை கொண்டு அமைந்துள்ளது.
- வடக்கு தெற்காக ($37^0$ 21' வ - $34^0$ 51' தெ) 7623 கிலோ மீட்டர் நீளமும் கிழக்கு மேற்காக ($17^0$ 33' மே - $51^0$ 21' கி) 7260 கிலோ மீட்டர் நீளமும் கொண்டு பரவி அமைந்துள்ளது.
- $0^0$ முதன்மை தீர்க்க ரேகையானது (Prime Meridian) ஆப்பிரிக்கா கண்டத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள கானா நாட்டின் தலைநகரான அக்ராவின் அருகில் செல்கிறது.
- $37^0$ 21' வ முதல் $34^0$ 51' தெ அட்சரேகை வரையிலும் $17^0$ 33' மே முதல் $51^0$ 27' கி தீர்க்க ரேகை வரையிலும் பரவி அமைந்துள்ள ஆப்பிரிக்க கண்டமானது புவியின் வடகோளம் ($0^0$ வ - $37^0$ 21' வ அட்சம்), தென் கோளம் ($0^0$ தெ - $34^0$ 51' தெற்கு அட்சம் வரை)
- மேற்கு கோளம் ($0^0$ மேற்கு - $17^0$ 33' மேற்கு தீர்க்கம் வரை)
- கிழக்கு கோளம் ($0^0$ கி - $51^0$ 27' கி தீர்க்கம்) ஆகிய நான்கு கோளங்களில் பரவி அமைந்து காணப்படுகிறது.
- டேவிட் லிவிங்ஸ்டோன் மற்றும் எச்.எம். ஸ்டான்லி ஆகிய இரண்டு சிறந்த கடற்பயண ஆய்வாளர்கள் ஆப்பிரிக்கா கண்டத்தின் உட்பகுதிகளை முதன்முதலில் தொல்லியல் ஆய்வு செய்தனர்.
- ஆப்பிரிக்கா கண்டத்தில் 5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தொல்குடிமக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களின் அடிப்படையில் மனித இனங்கள் வாழ்ந்த பழமையான கண்டம் என்பதால் "தாய் கண்டம்" என புனைப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.
- ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள பல்வேறு புவியியல் இயற்கை அமைப்புகளும் சூழல்களும் பல்வேறுபட்ட மனித இனக்குழுக்களையும் பன்முகத் தன்மை கொண்ட கலாச்சார பண்பாடுகளையும் கொண்டு இருப்பதற்கு காரணமாக அமைகின்றன.
- ஆப்பிரிக்கா கண்டத்தின் உட்பகுதி ஆய்வை மேற்கொண்ட ஐரோப்பியக் கடற்பயண ஆய்வாளர் ஹென்றி எம்.ஸ்டான்லி என்பவர் 1878 ஆம் ஆண்டு "இருண்ட கண்டம்" என்னும் சொல்லை பயன்படுத்தி அழைக்கக்காரணம், உலகின் பெரும்பாலானோர் ஆப்பிரிக்க கண்டத்தின் உட்பகுதியை குறித்து அறிந்திருக்காமல் இருந்த நிலையே காரணம்.

**அரசியல் பிரிவுகள்:**

- ஆப்பிரிக்கா கண்டத்தில் 54 நாடுகள் உள்ளன.
- புவியியல் அமைவிட அடிப்படையில் ஆப்பிரிக்கா கண்டமானது,

1. மேற்கு ஆப்பிரிக்கா
2. வட ஆப்பிரிக்கா
3. மத்திய ஆப்பிரிக்கா
4. கிழக்கு ஆப்பிரிக்கா
5. தென் ஆப்பிரிக்கா என 5 வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- வட மேற்கு ஆப்பிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜீரியா, லிபியா, மோரிடானியா மற்றும் துணிபியா ஆகிய நாடுகளின் குழுமம் 'மேக்ரெப்' (Maghreb) என்று அழைக்கப்படுகிறது அரபிக் மொழியில் இதன் பொருள் 'மேற்கு' என்பதாகும்.

www.kalvinews.com

**இயற்கை அமைப்பு பிரிவுகள்:**

- மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகள் ஆகிய நிலத்தோற்றங்களை உள்ளடக்கிய ஆப்பிரிக்கா கண்டமானது 8 பெரும இயற்கை பிரிவுகளை கொண்டு விளங்குகிறது.

**சகாரா (SAHARA):**

- ஆப்பிரிக்கா கண்டத்தின் வட பகுதியில் உலக புகழ்மிக்க சகாரா பாலைவனம் அமைந்துள்ளது
- சகாரா 9.2 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்ட உலகின் மிகப்பெரிய வெப்பமண்டல பாலைவனமாகும்.
- சகாரா பாலைவனத்தின் மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலும், கிழக்கே செங்கடலும், வடக்கே மத்திய தரைகடலும், தெற்கே சாஹேல் எனும் அரை வறண்ட பகுதியும் உள்ளன. இவற்றுள் செங்கடலும் மத்திய தரை கடலும் நான்கு பக்கமும் நிலத்தால் சூழப்பட்ட உள்நாட்டு கடல்களாகும்.
- அட்லாண்டிக் பெருங்கடலும், செங்கடலும், மத்திய தரைக் கடலும், சாஹேலும், சகாராவின் எல்லைகளாகும்.
- அல்ஜீரியா, சாட், எகிப்து, லிபியா, மாலி மோரிடானியா, மொராக்கோ, நைஜர், மேற்கு சகாரா, சூடான் மற்றும் துனிசியா ஆகிய 11 நாடுகளில் சகாரா பாலைவனம் பரவி காணப்படுகிறது.
- மலைகள், பீடபூமிகள், எர்க்ஸ், பாலைவனச்சோலை, மணல் மற்றும் சரளை மூடிய சமவெளிகள், உப்பு ஏரி, ஆற்றுக் கொப்பரைகள் மற்றும் ஊதுபள்ளங்கள் போன்ற பல்வேறு வகை நிலத்தோற்றங்களை உள்ளடக்கியதாக உள்ளது சகாரா பாலைவனம்.
- 3445 மீட்டர் உயரம் கொண்ட செயலிழந்த எரிமலையான மௌண்ட் கௌசி சிகரம் சகாரா பாலைவனத்தின் மிக உயரமான இடமாகும்.
- 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து 133 மீட்டர் ஆழமான எகிப்தில் உள்ள கட்டாரா ஊதுபள்ளம் சகாரா பாலைவனத்தின் மிக ஆழமான பகுதியாகும்.
- நைல் மற்றும் நைஜர் எனும் ஆறுகள் சகாரா பாலைவனத்தின் வழியாக பாய்கின்றன.
- ஆப்பிரிக்காவின் வடமேற்கே அமைந்துள்ள அட்லஸ் எனும் இளம்மடிப்பு மலையானது மத்திய தரைக்கடல் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடலை சகாரா பாலைவனத்திலிருந்து பிரிக்கிறது.
- 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து 4167 மீட்டர் உயரம் கொண்ட டூபாக்கல், அட்லஸ் மலையின் உயர்ந்த சிகரமாகும்.

**சாஹேல் (SAHEL):**

- **சாஹேல் என்றால் எல்லை அல்லது விளிம்பு என்று பொருள்.**
- ஆப்பிரிக்காவின் வடக்கே அமைந்துள்ள சகாரா பாலைவனத்திற்கும் தெற்கே உள்ள சவானாபுல்வெளிக்கும் இடையே அமைந்துள்ள **ஒரு அரை வறண்ட, வெப்ப மண்டல சவானா பகுதியே சாஹேல்** எனப்படுகிறது.
- கிழக்கு மேற்காக 4000 கிலோ மீட்டர் தொலைவிற்கு நீண்டு 3 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ள தரிசு மற்றும் மணற்பாங்கான பாறைகளுடன் கூடிய அரை வறண்ட பிரதேசமே சாஹேல் ஆகும்.
- தெற்கே உள்ள வளம் மிகுந்த வெப்ப மண்டலப் பகுதி மற்றும் வடக்கேயுள்ள பாலைவனம் ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் இடையிலான இயற்கை மற்றும் கலாச்சார மாறுபாடுகள் கொண்ட பகுதியாக சாஹேல் உள்ளது.

www.kalvinews.com

**சவானா (SAVANA):**

- ஆப்பிரிக்காவின் பாதிக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் காணப்படும் பரவலான மரங்களை கொண்ட **வெப்ப மண்டல வறண்ட புல்வெளிகள் சவானா** என்று அழைக்கப்படுகிறது.
- சவானா புல்வெளி நிலநடுக்கோட்டிற்கு அருகில் அமைந்துள்ள மலைக்காடுகளுக்கு வடக்கு மற்றும் தெற்கு என இருபகுதிகளிலும் காணப்படுகின்றன.
- சவானாவின் ஒரு சில பகுதிகளில் மரங்களும் மற்ற பகுதிகளில் உயரமான புற்களும் காணப்படுகின்றன.
- சவானா புல்வெளி பகுதி பல்வேறு வனவிலங்குகளின் மேய்ச்சல் நிலங்களாக உள்ளன.
- திறந்தவெளி மிருகக் காட்சி சாலை என்று அழைக்கப்படும் செரன்கேட்டி சமவெளியானது சவானா பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய சமவெளிகளில் ஒன்றாகும்.

**பெரிய பிளவு பள்ளத்தாக்கு மற்றும் ஆப்பிரிக்காவின் பெரிய ஏரிகள் (GREAT RIFT VALLEY AND GREAT LAKES OF AFRICA):**

- புவியின் உட்பகுதியில், மேற்பரப்பிற்கு அருகில் நிலவியல் தட்டுகளின் நகர்வுகளால் உருவாகும் ஒரு பெரிய பிளவே பிளவு பள்ளத்தாக்கு எனப்படுகிறது.
- ஆப்பிரிக்காவின் ஒரு முக்கிய புவியியல் மற்றும் நிலவியல் அம்சங்களில் ஒன்று, பெரிய பிளவு பள்ளத்தாக்கு .
- ஆசியாவின் வடக்கு சிரியாவிலிருந்து ஆப்பிரிக்காவின் மத்திய மொசாம்பிக் வரை 6400 கிலோ மீட்டர் நீளத்தை கொண்டது, பெரிய பிளவு பள்ளத்தாக்கு.
- இந்த பெரிய பிளவு பள்ளத்தாக்கானது கிழக்கு ஆப்பிரிக்கா வழியாக நீண்டு பல ஏரிகளை கொண்டுள்ளது.
- ஆப்பிரிக்காவின் பெரிய ஏரிகள் பிளவு பள்ளத்தாக்குப் பகுதியில் தொடர்ச்சியாக காணப்படுகின்றன.
- ஆப்பிரிக்காவின் பெரிய பிளவு பள்ளத்தாக்கு பகுதியில் காணப்படும் 7 பெரிய ஏரிகளில் உள்ள தொடர்ச்சியான வற்றாத நீர் நிலைகள், புவியில் காணப்படும் உறையாத மேற்பரப்பு நன்னீரில் 25% ஆகும்.
- ஆப்பிரிக்காவின் பெரிய பிளவு பள்ளதாக்கு பகுதியில் அமைந்துள்ள விக்டோரியா ஏரி ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகவும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் சுப்பீரியர் ஏரிக்கு அடுத்து உலகின் இரண்டாவது பெரிய ஏரியாகவும் உள்ளது.
- ஆப்பிரிக்காவின் பெரிய பிளவு பள்ளதாக்கு பகுதியில் அமைந்துள்ள டாங்கானிக்கா ஏரியானது உலகின் ஆழமான மற்றும் அதிக நீளம் கொண்ட நன்னீர் ஏரி ஆகும்.
- **ஆல்பர்ட், எட்வர்ட், கிவ், மாலாவி மற்றும் துர்கானா ஏரிகள் ஆப்பிரிக்காவில் காணப்படும் பிற முக்கிய ஏரிகளாகும்.**

**கிழக்கு ஆப்பிரிக்க உயர் நிலங்கள் (East African Highlands):**

- ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள பெரும்பாலான மலைகள் கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலங்களில் காணப்படுகின்றன.
- கிழக்கு ஆப்பிரிக்க உயர் நிலங்கள் எத்தியோப்பியாவிலிருந்து நன்னம்பிக்கை முனைவரை நீண்டுள்ளது
- 5895 மீட்டர் உயரமுள்ள **கிளிமஞ்சாரோவானது கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலப்பகுதியில்** அமைந்துள்ள **மிக உயர்ந்த சிகரமாகும்.**

www.kalvinews.com

- இருபதாம் நூற்றாண்டிலிருந்து கிளிமஞ்சாரோவின் மலை உச்சியில் பனிப்படிவுகள் மறைந்து வரும் நிலை தொடர்ந்தால் 2025 ஆம் ஆண்டிற்குள் பனிப்படிவுகளே இல்லாத நிலை உருவாகும்.
- கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலப் பகுதியில் கென்ய மற்றும் ருவான்சோரி மலைத்தொடர்கள் முக்கியமானதாகும்.
- கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலப் பகுதியில் குறைவான மக்கட்தொகையுடன் வளமான புல்வெளிகள், காடுகள், நீரோடைகள் மற்றும் நீர்வீழ்ச்சிகள் போன்ற இயற்கை காட்சிகளைக் கொண்டுள்ளது.
- கிழக்கு ஆப்பிரிக்க உயர்நில பகுதியில் உள்ள மலைகளில் காணப்படும் பனி சூழ்ந்த காலைப்பொழுதும் மலைத்தென்றலும் உலகின் பிற பகுதிகளிலிருந்து சுற்றுலா பயணிகளை ஈர்க்கிறது.

**சுவாலி கடற்கரை (SWAHILI COAST):**

- சுவாலி கடற்கரையானது கிழக்கு ஆப்பிரிக்க கடற்கரை நெடுகிலும் சோமாலியா முதல் மொசாம்பிக் வரை இந்திய பெருங்கடலை ஒட்டி சுமார் 1610 கிலோ மீட்டர் நீளத்தை கொண்டுள்ளது.
- சுவாலி கடற்கரை ஆப்பிரிக்க மற்றும் அரேபிய மக்களின் இணைவால் உருவான தனித்துவமான சுவாலி கலாச்சாரத்தை கொண்டுள்ளது.
- **சுவாலி கடற்கரை வாழ் மக்கள் சுவாகைள் என்று அழைக்கப்படுகிறார்கள்**

**காங்கோ வடிநிலம் / ஜையர் வடிநிலம் (Gango Basin / Zaire Basin):**

- 3.4 மில்லியன் சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான பரப்பளவை கொண்டு அடர்ந்த பசுமை மாறா காடுகளால் சூழப்பட்டுள்ள காங்கோ வடிநிலப்பகுதியானது, மேற்கு மத்திய ஆப்பிரிக்காவில் புவி நடுக்கோட்டின் இருபுறங்களிலும் அமைந்துள்ளது.
- காங்கோ வடிநிலப்பகுதியும் பசுமை மாறா காடுகளும் 7.5 மில்லியன் மக்களுக்கு உணவு, மருந்துப் பொருட்கள், நீர், வனப்பொருட்கள் மற்றும் உறைவிடத்தை அளிக்கிறது.
- **உலகின் மிகப்பெரிய ஆற்று வடிநிலமான அமேசானை அடுத்து இரண்டாவது பெரிய ஆற்று நிலமாக காங்கோ வடிநிலம் விளங்குகிறது.**

**தென் ஆப்பிரிக்கா (Southern Africa):**

- தென் ஆப்பிரிக்காவின் பெரும் பகுதி பீடபூமிகளால் ஆனது.
- **வன்சரிவுடைய ட்ராகன்ஸ்பெர்க் மலைத்தொடரானது** தென் ஆப்பிரிக்காவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது.
- தென் ஆப்பிரிக்காவின் ட்ராகன்ஸ் பெர்க் மலைத்தொடரானது வடகிழக்கிலிருந்து தென் மேற்காக 1125 கிலோ மீட்டர் நீண்டுள்ளது. 3482 மீட்டர் உயரமான சிகரம் தபனாநிட் லியானா இம்மலைத்தொடரில் காணப்படுகிறது. இப்பகுதி 'வெல்டு' எனப்படும் புல்வெளிகளால் சூழப்பட்டுள்ளது.
- கலகாரி பாலைவனம் தென் ஆப்பிரிக்காவின் தென் பகுதியிலும் நமீப் பாலைவனம் ஆப்பிரிக்காவின் தென் மேற்கு கடற்கரைப் பகுதியிலும் அமைந்துள்ளன.
- **கலகாரி பாலைவனம்** ஆரஞ்சு மற்றும் ஜாம்பசி நதிகளுக்கு இடையே அமைந்துள்ள ஒரு வறண்ட முட்புதர் நிலமாகும்.

www.kalvinews.com

- தென் ஆப்பிரிக்காவின் அரை வறண்ட பகுதிளில் **"காரூஸ்"** என்று அழைக்கப்படும் செம்மறி ஆடு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆப்பிரிக்காவின் வடிகாலமைப்பு:**

1. நைல் நதி (River Nile)
2. காங்கோ ஆறு (River Gango) அல்லது ஜையர் ஆறு
3. நைஜர் ஆறு (River Niger)
4. சாம்பசி ஆறு (River Zamzezi)

**1. நைல் நதி (River Rile)**

- புருண்டியில் உற்பத்தியாகும் வெள்ளை நைல் மற்றும் எத்தியோப்பியாவில் உற்பத்தியாகும் நீல நைல் ஆகிய இரு முக்கிய துணை ஆறுகளைக் கொண்ட 6650 கிலோ மீட்டர் நீளம் கொண்ட **உலகின் மிக நீளமான நதி, நைல் நதி** ஆகும்.
- உலகின் மிக நீளமான (6650 கிலோ மீட்டர் நீளம் கொண்ட) நைல் நதியின் முக்கிய இரண்டு துணை ஆறுகளான வெள்ளை நைல் மற்றும் நீல நைல் நதிகள் இரண்டும் சூடானில் உள்ள கார்ட்டும் என்ற இடத்தில் இணைந்து நைல் நதியைத் தோற்றுவிக்கின்றன.
- துணை ஆறுகள் என்பது இணைந்து முதன்மை ஆற்றை உருவாக்கும்.
- முதன்மை ஆற்றிலிருந்து பிரிவது கிளை ஆறுகள் ஆகும்.
- **புருண்டியில் உற்பத்தியாகும் வெள்ளை நைல் நதியும் எத்தியோப்பியாவில் உற்பத்தியாகும் நீல நைல் நதியும்** சூடானில் உள்ள காட்டும் என்ற இடத்தில் இணைந்து நைல் நதியை தோற்றுவிப்பதால் நைல் நதியின் துணை ஆறுகளாக வெள்ளை மற்றும் நீல நைலும் அழைக்கப்படுகின்றன.
- நைல் நதி வடக்கு நோக்கி பாயந்து மத்தியத் தரைக் கடலில் கலக்கிறது.
- **நைல் நதியானது 'ஆப்பிரிக்க ஆறுகளின் தந்தை'** என அழைக்கப்படுகிறது.
- எகிப்தில் பாயும் **நைல் நதியானது**, அந்நாட்டின் வாழ்வாதாரமாக விளங்குவதால் **"எகிப்தின் நன்கொடை"** என அழைக்கப்படுகிறது.
- ஒருவேளை எகிப்தில் நைல் நதி பாயாமல் இருந்திருந்தால் இந்நாடு பாலைவனமாக இருந்திருக்கும்.

**2. காங்கோ ஆறு (River Gango) அல்லது ஜையர் ஆறு.**

- உலகின் மற்றும் ஆப்பிரிக்காவின் மிக நீளமான பெரிய ஆறாக விளங்குவது நைல் (6650 கிலோ மீட்டர் நீளம்) .
- ஆப்பிரிக்காவின் மிக நீளமான பெரிய ஆறாக உள்ள நைல் (6650 கிலோ மீட்டர் நீளம்) நதியை அடுத்த, ஆப்பிரிக்காவின் இரண்டாவது மிக நீளமான பெரிய ஆறாக உள்ளது காங்கோ (4,700 கிலோ மீட்டர் நீளம்) ஆகும்.
- ஜாம்பியாவின் வடகிழக்கு உயர்நிலங்களில் அமைந்துள்ள டாங்கானிகா மற்றும் நையாசா எரிகளுக்கு இடையே உற்பத்தியாகும் காங்கோ ஆறு மேற்கு மத்திய ஆப்பிரிக்காவின் வழியாக அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கிறது.
- காங்கோ ஆறு டாங்கானிகா மற்றும் நையாசா ஏரிகளுக்கு இடையே உற்பத்தியாகிறது.
- காங்கோ ஆறு அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கிறது.
- டாங்கானிகா மற்றும் நையாசா ஏரிகள் ஜாம்கியாவின் வடகிழக்கு உயர்நிலங்களில் அமைந்துள்ளது காங்கோ ஆறு மத்திய ஆப்பிரிக்கா வழியாக அட்லாண்டிக் கடலில் கலக்கிறது.

www.kalvinews.com

3. **நைஜர் ஆறு (River Niger):**

- 4184 கிலோ மீட்டர் நீளம் கொண்ட மேற்கு ஆப்பிரிக்காவின் முக்கிய நதிகளில் ஒன்றான நைஜர், கினியாவின் உயர்நிலங்களில் உற்பத்தியாகி அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள கினியா வளைகுடாவில் கலக்கிறது.
- நைஜர், மேற்கு ஆப்பிரிக்காவில் பாயும் முக்கிய நதிகளுள் ஒன்றாகும்.
- நைஜர் ஆறு கினியாவின் உயர்நிலங்களில் உற்பத்தியாகிறது.
- நைஜர் நதியின் நீளம் 4184 கிலோ மீட்டராகும்.
- நைஜர் நதி அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள கினியா வளைகுடாவில் கலக்கிறது.

4. **சாம்பசி ஆறு (River Zambezi):**

- 2574 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஜாம்பசி ஆறானது வடமேற்கு ஜாம்பியாவில் உற்பத்தியாகி இந்திய பெருங்கடலில் கலக்கும் ஆப்பிரிக்காவின் நான்காவது நீளமான ஆறாகும்.
- சாம்பசி ஆறு, உலகப்புகழ்பெற்ற 108 மீட்டர் உயரமுள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சியை உருவாக்க உள்ளது.
- வடமேற்கு ஜாம்பியா முதல் இந்திய பெருங்கடல் வரை 2574 கிலோ மீட்டர் நீளத்தில் பாயும் சாம்பசி ஆறானது தென் ஆப்பிரிக்காவின் வாழ்வாதார நதி என அழைக்கப்படுகிறது.
- லிம்போபோ மற்றும் ஆரஞ்சு ஆகியவை ஆப்பிரிக்காவின் இதர முக்கிய ஆறுகளாகும்.

**காலநிலை:**

- ஆப்பிரிக் கண்டமானது 6 முக்கிய காலநிலை மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

அவை,

1. வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலை
2. வெப்ப மண்டல சவானா காலநிலை
3. புவி நடுக்கோட்டு காலநிலை
4. மிதவெப்ப மண்டல காலநிலை
5. மத்திய தரைக்கடல் காலநிலை
6. வெப்ப மண்டல பருவக்காற்று காலநிலை

**வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலை:**

✓ குறைவான மழைப்பொழிவு காணப்படும் வட ஆப்பிரிக்கா மற்றும் தென் ஆப்பிரிக்கா பகுதிகளில் வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலை நிலவுகிறது.

**வெப்ப மண்டல சவானா காலநிலை:**

✓ வெப்ப மண்டல சவானா காலநிலை என்பது ஒரு வெப்ப மண்டல ஈர மற்றும் வறண்ட காலநிலை ஆகும்.

✓ $0^0$ புவிநடுகோட்டிலிருந்து $10^0$ - $20^0$ வட அட்சரேகை மற்றும் $10^0$ - $20^0$ தென் அட்சரேகை பகுதிகளில் வெப்ப மண்டல சவானா காலநிலை நிலவுகிறது.

✓ ஆப்பிரிக்க கண்டத்தில் $10^0$ - $20^0$ வட அட்சம் மற்றும் $10^0$ - $20^0$ தென் அட்சம் பகுதிகளைக் வெப்ப மண்ல ஈர மற்றும் வறண்ட காலநிலையான வெப்ப மண்டல சவானா காலநிலை நிலவுகிறது.

**புவி நடுக்கோட்டு காலநிலை:**

✓ காங்கோ வடிநிலம் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலங்களில் உள்ள $0^0$ புவிநடுக்கோட்டு மண்டலத்தில் நிலவும் காலநிலையே புவிநடுக்கோட்டு காலநிலை ஆகும்.

www.kalvinews.com

- ✓ புவி நடுக்கோட்டு காலநிலை பகுதிகளில் ஆண்டு முழுவதும் வெப்பம் மற்றும் மழைப்பொழிவு இரண்டும் மிகுந்து காணப்படும்.
- ✓ புவிநடுக்கோட்டு காலநிலை மண்டலமான காங்கோ வடிநிலம் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலங்களில் ஆண்டு முழுவதும் வெப்பம் மற்றும் மழைப்பொழிவு இரண்டும் மிகுந்து காணப்படுகிறது.

**மித வெப்ப மண்டல காலநிலை:**

- ✓ தென் ஆப்பிரிக்காவின் தென் பகுதிகளில் உள்ள கடலோர பகுதிகளில் அமைந்துள்ள காலநிலையானது மித வெப்ப மண்டல காலநிலையாகும்.
- ✓ மித வெப்ப மண்டல காலநிலை என்பது சமச்சீர் காலநிலையாகும்.
- ✓ தென் ஆப்பிரிக்காவின் தென் பகுதிகளில் கடலோர பகுதிகள் அமைந்துள்ளதால் சமச்சீர் காலநிலையான மிதவெப்ப மண்டல காலநிலை நிலவுகிறது.

**மத்திய தரைக் கடல் காலநிலை:**

- ✓ ஆப்பிரிக்காவின் வட மற்றும் தென் மேற்கு முனைப் பகுதிகள், குளிர்காலத்தில் மழைப்பொழிவை பெற்று கோடைக்காலத்தில் வெப்பம் மிகுந்து வறண்டு காணப்படும் மத்திய தரைக்கடல் காலநிலையை கொண்டுள்ளது.
- ✓ மத்திய தரைக்கடல் காலநிலையானது ஆப்பிரிக்காவின் வட மற்றும் தென் மேற்கு முனைப்பகுதிகளில் நிலவுகிறது.
- ✓ மத்திய தரைக்கடல் காலநிலை மண்டலத்தில் குளிர்காலத்தில் மழைப்பொழிவை பெற்றும் கோடைகாலத்தில் வெப்பம் மிகுந்தும் காணப்படுகிறது.

**வெப்ப மண்டல பருவக்காற்று காலநிலை:**

- ✓ கோடைக்காலத்தில் வெப்பமாகவும், பருவக்காற்றின் மூலம் அதிக மழைப்பொழிவும், குளிர்காலத்தில் வெப்பம் குறைந்தும் காணப்படும் வெப்ப மண்டல பருவக்காற்று காலநிலையானது ஆப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் நிலவுகிறது.
- ✓ ஆப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் வெப்பமண்டல பருவக்காற்று காலநிலை நிலவுகிறது.
- ✓ வெப்ப மண்டல பருவக்காற்று காலநிலையில் கோடைக்காலத்தில் வெப்பமாகவும், பருவக்காற்றின் மூலம் அதிக மழைப்பொழிவும், குளிர்காலத்தில் வெப்பம் குறைந்தும் காணப்படும்.

**வெப்ப பாலைவனங்கள்:**

- கண்டங்களில் மேற்கு பகுதிகள் பாலைவனங்களாக உள்ளன.
- வெப்ப பாலைவனங்கள் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் புவிநடுகோட்டின் வடக்கு மற்றும் தென் பகுதிகளில் ($20^0$ வ அட்சம் - $30^0$ வ அட்சம் மற்றும் $20^0$ தெ அட்சம் - $30^0$ தெ அட்சம்) அமைந்துள்ளன.
- இப்பாலைவனங்கள் வியாபார காற்று வீசும் மண்டலத்தில் அமைந்துள்ளது.
- வியாபாரக் காற்று வடகோளத்தில் வடக்கில் இருந்தும் தென்கோளத்தில் தெற்கிலிருந்தும் வீசுகின்றன.
- வியாபாரக் காற்று பொதுவாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீசுகிறது.
- வியாபாரக் காற்று கண்டங்களின் கிழக்கு விளிம்புகளில் அதிக மழைப்பொழிவை ஏற்படுத்தி மேற்கு பகுதியை அடையும் பொழுது ஈரப்பதத்தை இழந்து வறண்ட காற்றாகவும் வீசுகிறது.

www.kalvinews.com

**சகாரா பாலைவனம்:**

- சகாரா பாலைவனத்தில் இருந்து கினியா கடற்கரையை நோக்கி வீசும் வறண்ட வெப்ப புழுதி தலக்காற்று 'ஹார்மாட்டான்' என்று அழைக்கப்படுகிறது.
- சகாரா பாலைவனத்திலிருந்து மத்திய தரைக்கடல் நோக்கி வீசும் வெப்ப தலக் காற்று 'சிராக்கோ' என்று அழைக்கப்படுகிறது.
- வெப்பமண்டல மழைக்காடுகள் புவியின் அணிகலன் என்றும் உலகின் பெரும் மருந்தகம் என்றும் அழைக்கப்படுகிறது.

**தாவரங்கள் மற்றும் விலங்குகள் (Flora and Fauna):**

**தாவரங்கள்:**

- ஆப்பிரிக்காவின் தாவர வகைகள் ஓரிடத்திலுள்ள மழைப்பொழிவின் அளவு, வெப்பநிலை, நிலத்தோற்றம், மண்ணின் தன்மை போன்றவற்றிற்கேற்ப உருவாகியுள்ளன.
- ஆப்பிரிக்க கண்டத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 20% காடுகளால் சூழப்பட்டுள்ளது.
- தற்போது ஆப்பிரிக்காவில் காணப்படும் தாவர மற்றும் விலங்கினங்கள் கோண்டுவானா காலத்தில் கண்டங்கள் பிரிந்தபோது இருந்த தாவர மற்றும் விலங்கினங்களிலிருந்து தோன்றியவையாகும்.
- **பாபோ, பீவர் மரம் மற்றும் சவ்சேச் ஆகியன ஆப்பிரிக்காவின் முக்கிய மர வகைகளாகும்.**

**விலங்குகள்:**

- ஆப்பிரிக்காவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான விலங்கின வகைகள் காணப்படுகின்றன
- புவியின் மிகப்பெரிய யானைகள் மற்றும் உயரமான ஒட்டகச்சிவிங்கி நிலவாழ் விலங்கினங்களும் அடங்கும்.
- வெள்ளை காண்டாமிருகம், வெஸ்டர்ன் கிரீன் மாம் வரிக்குதிரை, ஆப்பிரிக்க யானை, மனித குரங்கு, காட்டெருமை, நீர் யானை மற்றும் ஒட்டகச் சிவிங்கி போன்றவை ஆப்பிரிக்காவின் முக்கிய விலங்கினங்களாகும்.
- போனபோ குரங்கு வகை, காட்டு நாய்கள், கழுதைப்புலி மற்றும் லெமூர் (நரி போன்ற முகத்தோற்றம்) ஆகிய விலங்குகள் ஆப்பிரிக்க கண்டத்திற்கு உரித்தான சில விலங்கினங்களாகும்.

**வேளாண்மை:**

- வேளாண்மை ஆப்பிரிக்க கண்டத்தின் முக்கிய பொருளாதார நடவடிக்கையாகும்.
- கோதுமையானது மிதவெப்ப மண்டல புல்வெளிகள், மத்திய தரைக்கடல் பகுதிகள் மற்றும் நைல் பள்ளத்தாக்குப் பகுதிகளில் பயிரிடப்படுகிறது.
- கினியா கடற்கரை, மொசாம்பிக், மடகாஸ்கர் மற்றும் நைல் பள்ளத்தாக்கு பகுதிகளில் நெல் பயிரிடப்படுகிறது.
- மக்காச்சோளம் மற்றும் தினை வகை பயிர்கள் அனைத்து பீடபூமி பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது.
- பருத்தி ஆப்பிரிக்காவின் முக்கிய பணப்பயிராகும்.
- எகிப்து மற்றும் சூடானில் உலகத்தரம் வாய்ந்த நீண்ட இழைப் பருத்தி பயிரிடப்படுகின்றது.
- காபி எத்தியோப்பியாவில் பயிரிடப்படுகின்றது.
- கானா நாடு கோக்கோவின் முதன்மை உற்பத்தியாளராக திகழ்கிறது.
- எண்ணெய் பனை மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் பயிரிடப்படுகிறது.

- கரும்பு, இரப்பர், சணல், புகையிலை ஆகியவை ஆப்பிரிக்காவின் மற்ற முக்கிய பயிர்களாகும். இவை பெரும்பாலும் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் பயிரிடப்படுகின்றன.

**கனிமங்கள்:**

- ஆப்பிரிக்கா, சில கனிம வளங்களை அதிகம் கொண்டுள்ளது.
- சகாராவின் தென்பகுதி மற்றும் பீடபூமி பகுதிகள் ஆகியன முக்கிய கனிம வளங்கள் நிறைந்த மண்டலங்களாகும்.
- தென் ஆப்பிரிக்கா, **காங்கோ, போஸ்ட்வானா, சியராலியோன் மற்றும் அங்கோலா** ஆகிய நாடுகளில் **வைர சுரங்கங்கள்** காணப்படுகின்றன.
- தென் ஆப்பிரிக்காவில் உள்ள **கிம்பர்லி** ஆப்பிரிக்காவின் **முக்கியமான வைர உற்பத்தி மையமாகும்.**
- அங்கோலா, நைஜீரியா, காபன் மற்றும் காங்கோ நாடுகள் அதிக எண்ணெய் வளத்தைக் கொண்டுள்ளன.
- தென் ஆப்பிரிக்கா, நமிபியா, மேற்கு ஆப்பிரிக்கா மற்றும் கானா நாடுகளில் தங்கம் காணப்படுகிறது.
- **குரோமியம், கோபால்ட், தாமிரம், இரும்பு தாது, மக்னீசியம், துத்தநாகம் மற்றும் நிக்கல் ஆகியவை ஆப்பிரிக்க கண்டத்தில் பரவலாக காணப்படுகின்றன.**

**போக்குவரத்து:**

- போக்குவரத்து ஒரு பகுதியின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கிறது.
- பாதகமான இயற்கை நிலத்தோற்ற அமைப்பும் மந்த பொருளாதார வளர்ச்சியும் ஆப்பிரிக்க நாடுகளின் போக்குவரத்து வளர்ச்சியைப் பாதிப்படையச் செய்கின்றன.

**நிலவழிப் போக்குவரத்து:**

- ஆப்பிரிக்காவின் சாலை மற்றும் இரயில் போக்குவரத்து அமைப்பானது பல்வேறு தடைகள் காரணமாக குறைவான வளர்ச்சியை பெற்றுள்ளது.
- பாலைவனம் மற்றும் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் சாலைகள் மற்றும் இருப்பு பாதைகள் அமைப்பது மிகவும் கடினமானதாகும்
- தென் ஆப்பிரிக்கா, கென்யா, எகிப்து, லிபியா, மொராக்கோ மற்றும் நைஜீரியா போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் ஓரளவிற்குச் சாலை மற்றும் இருப்புப் பாதை போக்குவரத்து வளர்ச்சி அடைந்துள்ளன.

**நீர்வழிப் போக்குவரத்து:**

- ஆப்பிரிக்காவின் கடல் வர்த்தக பாதைகள் ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவிற்கு கிழக்குப் பகுதியிலும் ஐரோப்பாவிற்கு வடக்கு பகுதியிலும், அமெரிக்காவிற்கு மேற்கு பகுதியிலும் அமைந்துள்ளன.
- இந்தியப் பெருங்கடலில் **டர்பன், தர்-இ-சலாம், மொஹாபு, மத்தியத்தரைகடலில் போர்ட்சைடு மற்றும் அலெக்சாந்திரியா, அட்லாண்டிக் பெருங்கடலில் கேப்டவுன், அல்ஜியஸ் மற்றும் அபிட்ஜன் ஆகியவை முக்கிய துறைமுகங்களாகும்.**

**வான்வழிப் போக்குவரத்து:**

- வான்வழிப் போக்குவரத்து ஆப்பிரிக்காவின் முக்கிய தலைநகரங்களையும் உலகின் பிற பகுதிகளையும் இணைக்கிறது.

www.kalvinews.com

- **கெய்ரோ, ஜோகன்னஸ்பர்க், நைரோபி, டாக்கா, அடிஸ்-அபாபா, காஸாபிளாங்கா, டர்பன், டௌலா மற்றும் லோகோஸ் இக்கண்டத்தில் அமைந்துள்ள முக்கிய பன்னாட்டு விமான நிலையங்களாகும்.**

**மக்கள்தொகை:**

- ஆப்பிரிக்கா, உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகையைக் கொண்ட கண்டமாகும்.
- ஐக்கிய நாட்டு சபை மதிப்பீட்டின்படி (2019) ஆப்பிரிக்காவின் மக்கள்தொகை 131 கோடிகளாகும்.
- இயற்கை நிலத்தோற்ற தடைகள் காரணமாக மக்கள்தொகை பரவல் சமச்சீரற்று காணப்படுகிறது.
- ஆப்பிரிக்காவின் சராசரி மக்களடர்த்தி ஒரு சதுர கிலோமீட்டருக்கு 45 நபர்களாகும்.
- கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் 41% நகர்புறத்திலும் 59% மக்கள் கிராமப்புறத்திலும் வசிக்கின்றனர்.
- நைல் டெல்டா பகுதி மற்றும் தென் ஆப்பிரிக்காவின் மக்களடர்த்தி மிகுந்த பகுதிகளாகும்.
- ஆப்பிரிக்காவின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக நைஜீரியாவும் அதனைத் தொடர்ந்து எத்தியோப்பியாவும் உள்ளன.

**தொல்குடிமக்கள் (பழங்குடி மக்கள்):**

- உலகில் காணப்படும் முக்கிய தொல்குடிமக்கள் (பழங்குடி மக்கள்) இப்பகுதியின் பூர்வீக குடிமக்கள் ஆவார்கள்.
- பூர்வீக குடிமக்கள் தங்களின் பூர்வீக நிலம், மொழிகள் மற்றும் கலாச்சாரங்களுடன் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டுள்ளனர்.
- **அபர், பாட்வா, புஷ்மன், டிங்கா, மசாய், பிக்மீஸ், ஜுலு, சுவான் மற்றும் எஃபி ஆகியோர் ஆப்பிரிக்காவின் முக்கிய பழங்குடி (தொல்குடி) இனங்களாகும்.**

2. **<u>ஆஸ்திரேலியா கண்டம்:</u>**

- உலகின் பிற கண்டங்களிலிருந்து தொலைதூரத்தில் தனித்து அமைந்திருப்பதால் **இறுதியாக கண்டறியப்பட்ட கண்டமாக ஆஸ்திரேலியா உள்ளது.**
- உலகின் மிகப் பெரிய தீவாகவும் மிகச்சிறிய கண்டமாகவும் ஆஸ்திரேலியா உள்ளது.
- கண்டப்பகுதி முழுவதும் ஒரே நாடாக கருதப்படும் ஒரே கண்டம் ஆஸ்திரேலியாவாகும்.
- ஆஸ்திரேலியா கண்டத்தில் பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் காணப்படுகின்றன.
- ஆஸ்திரேலியா கண்டத்தை 1770 இல் கேப்டன் ஜேம்ஸ்குக் என்ற ஆங்கில மாலுமி கண்டறிந்தார்.

**அமைவிடம் மற்றும் பரப்பளவு:**

- ஆஸ்திரேலியா கண்டம் $10^0$ 4' தென் அட்சரேகையிலிருந்து $39^0$ 8' தென் அட்சரேகை வரையிலும் $113^0$ 9' கிழக்கு தீர்க்கரேகையிலிருந்து $153^0$ 39' கிழக்குத் தீர்க்கரேகை வரையிலும் பரவி அமைந்து காணப்படுகின்றது.
- $10^0$ 4' தென் அட்சம் முதல் $39^0$ 8' தென் அட்சம் வரை அமைந்துள்ள ஆஸ்திரேலியா கண்டத்தின் நடுவே உள்ள $23^0$ 30' தென் அட்சமான மகரரேகையானது, ஆஸ்திரேலியா கண்டத்தை இரு சம பகுதிகளாக பிரிக்கிறது.
- ஆஸ்திரேலியா கண்டம் மற்றும் ஒன்றியம் அல்லது நாட்டின் பரப்பளவு ஏறத்தாழ 7.68 மில்லியன் சதுர கிலோ மீட்டர்களாகும்.

www.kalvinews.com

**அரசியல் பிரிவுகள்:**

- ஆஸ்திரேலியா கண்டம் மற்றும் ஒன்றியம் அல்லது நாடானது பின்வரும் 6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பகுதிகளை கொண்டுள்ளன.

அவையாவன,

✓ **மாநிலங்கள்:**

1. நியூ சவுத்வேஸ்ஸ்
2. குயின்லாந்து
3. தென்கு ஆஸ்திரேலியா
4. டாஸ்மேனியா
5. விக்டோரியா
6. மேற்கு ஆஸ்திரேலியா

✓ **யூனியன் பிரதேசங்கள் (ஒன்றிய பகுதிகள்):**

1. வடக்கு யூனியன் பிரதேசம்
2. கான்பெரா (ஆஸ்திரேலிய தலைநகர் பகுதி)

- ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியான அரசியல் அமைப்பு சட்டங்களை கொண்டுள்ளன.
- ஆஸ்திரேலியா ஒன்றியம் அல்லது நாட்டில் அதன் தலைநகரான கான்பெரா உள்ளிட்ட சிட்னி, பிரிஸ்பேன், பெர்த் மற்றும் டார்வின் ஆகியன ஆஸ்திரேலியாவின் பிற முக்கிய நகரங்களாகும்.
- ஆஸ்திரேலியா கண்டம் 8222 தீவுகளை தன்னகத்தே கொண்டுள்ளன.
- தீவுகளின் கூட்டமாகவும் ஒன்றியமாகவும் உள்ள ஆஸ்திரேலியா கண்டத்தின் முக்கிய தீவுகளாவன: ரோட்னெஸ்ட், மேக்னடிக், பிட்ஸ்ராய், ப்ரேசர், பிலிப், லார்ட்ஹோவ், கங்காரு மற்றும் ஒய்ட்சண்டே.

**இயற்கை அமைப்புப் பிரிவுகள்:**

- ஆஸ்திரேலியா அதிக வேறுபாடற்ற நில அமைப்புகளைக் கொண்ட ஒரு பகுதியாகும்.
- நிலதோற்ற அமைப்பின் அடிப்படையில் மூன்று இயற்கை பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவையாவன,

1. மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி
2. மத்திய தாழ் நிலங்கள்
3. கிழக்கு உயர் நிலங்கள்

**மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி (The Great Australian Plateau):**

- ஆஸ்திரேவியாவின் மேற்கில் அமைந்துள்ள பீடபூமி ஒரு மிகப்பெரிய இயற்கையமைப்பு பிரிவாகும்.
- ஆஸ்திரேலிய கண்டத்தின் மூன்றில் ஒரு பகுதியை உள்ளடக்கியது மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி ஆகும்.
- மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமியின் பரப்பளவு 2.7 பில்லியன் சதுர கிலோமீட்டர்களாகும்.
- மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமியானது மேற்கு ஆஸ்திரேலியா, தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் வட ஒன்றிய பகுதியின் பெரும்பகுதியை உள்ளடக்கிய ஒரு வறண்ட நிலமாக உள்ளது.
- மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமியானது மணல் மற்றும் பாறைகளாலான சமமான மேற்பரப்பை உடையது.

www.kalvinews.com

- உலகின் மிகப்பெரிய ஒற்றை சிற்ப பாறையானது அயாஸ் பாறை (Ayers Rock) அல்லது உலுரு பாறையானது (Ulluru Rock) மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமியின் வறண்ட பகுதியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது.
- அயர்ஸ் பாறை அல்லது உலுரு பாறையானது 0 மீட்டர் கடல்மட்டத்திலிருந்து 863 மீட்டர் உயரம் கொண்டது.
- 0 மீட்டர் கடல்மட்டத்திலிருந்து (Mean Sea Level) 863 மீட்டர் உயரம் கொண்டுள்ள உலகின் மிகப்பெரிய ஒற்றை சிற்ப பாறையான அயர்ஸ் பாறை அல்லது உலுரு பாறையானது (மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமியின் வறண்ட பகுதியின் மையத்தில் உள்ள இப்பாறையானது) ஆஸ்திரேலியாவின் இயற்கை அதிசயங்களில ஒன்றாகும்.
- **பின்னாக்கல் (Pinnacle) என்றழைக்கப்படும் சுண்ணாம்புப் பாறைத் தூண்கள்** மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி பகுதியில் அதிகம் காணப்படுகிறது.
- மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி பகுதியில் மெக்டோனல் மற்றும் மஸ்கிரேவ் மலைத்தொடர்கள் உள்ள மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி பகுதியின் தெற்கே மரங்களற்ற நல்லார்பார் சமவெளி (Nallarbor Plain) அமைந்துள்ளது.
- ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய பாலைவனமான பெரிய விக்டோரியா பாலைவனமானது மேற்கு மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா பகுதிகளில் அமைந்துள்ளது.

**மத்திய தாழ்நிலங்கள் (Central Low Land):**

- மத்திய தாழ்நிலங்கள், வடக்கில் கார்பெண்டாரியா வளைகுடாவிலிருந்து தெற்கே இந்திய பெருங்கடல் வரை நீண்டுள்ளது.
- மத்திய தாழ் நிலங்களின் மத்தியில் ஆஸ்திரேலியா பெரிய உள்நாட்டு வடிகால் படுகை அமைந்துள்ளது.
- மத்திய தாழ் நிலங்களின் மத்தியில் உள்ள வடிகால் பகுதியில் உள்ள ஐர் ஏரி (Lake Eyre) இப்பகுதியின் மிகப்பெரிய உவர் நீர் ஏரியாகும்.
- முர்ரே - டார்லிங் ஆற்று தொகுப்பு மத்திய தாழ்நிலங்களின் தென் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- பெரிய ஆர்ட்டீசியன் படுகைகள் மத்திய தாழ்நிலங்களின் தென்பகுதியில் காணப்படுகின்றன.

**கிழக்கு உயர்நிலங்கள் (Eastern Highlands):**

- கிழக்கு உயர்நிலங்கள் சுமார் 3860 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆஸ்திரேலியாவின் கிழக்கு எல்லை பகுதியில் காணப்படுகிறது.
- கிழக்கு உயர்நிலங்கள் வடக்கிலுள்ள யார்க் முனையிலிருந்து (Cape York) தெற்கில் டாஸ்மேனியா வரை நீண்டுள்ளது.
- கிழக்கு உயர்நிலங்கள், மேற்கு மற்றும் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பிரிப்பதால் இவை பெரும் பிரிப்பு மலைத்தொடர் (The Great Dividing Range) என்றும் அழைக்கப்படுகிறது.
- 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து 2230 மீட்டர் உயரம் கொண்ட ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் அமைந்துள்ள மிக உயரமான சிகரமான கோசியஸ்கோ (Mount Kosciuszko) வை தன்னகத்தே கொண்டு விளங்கும் ஆஸ்திரேலியாவின் மிக உயரமான மலைத்தொடரான ஆல்ப்ஸ் மலைத்தொடர் ஆஸ்திரேலியாவின் கிழக்கு உயர்நிலப் பகுதியில் அமைந்து காணப்படுகிறது.

www.kalvinews.com

- ஆஸ்திரேலியாவின் மிக உயரமான மலைத்தொடர் ஆல்ப்ஸ் மலைத்தொடர் கிழக்கு உயர்நிலப்பகுதியில் உள்ளது.
- ஆல்ப்ஸ் மலைத்தொடரில் ஆஸ்திரேலியாவின் மிக உயரமான சிகரமான கோசியஸ்கோ 2230 மீட்டர் உயரம் கொண்டு கிழக்கு உயர்நிலப்பகுதியில் உள்ளது.

**இயற்கை நிலத்தோற்றங்கள்:**

➢ ஆஸ்திரேலியாவை அதன் முக்கிய இயற்கை நிலத்தோற்றங்கள் சிறப்பு செய்கின்றன. அவை,

1. பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப் பகுதி
2. பெரிய பவளத்திட்டு தொடர்

**பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி (Great Artesian Basin):**

- புவியினுள் இருந்து வேகமாக வெளியேறும் நீரூற்றுகள் ஆர்டீசியன் நீரூற்றுகள் எனப்படுகின்றன. இவ்வகை நீரூற்றுகளைக் கொண்ட புவிப்பகுதி ஆர்டீசியன் வடிநிலம் ஆகும்
- ஆஸ்திரேலியாவில் உள்ள பெரிய ஆர்ட்டிசியன் படுகை உலகின் மிகப்பெரிய மற்றும் ஆழமான படுகையாகும்.
- பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி, பெரும்பிரிப்பு மலைத்தொடருக்கு மேற்கே அமைந்துள்ளது
- பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி குயின்ஸ்லாந்தின் சில பகுதிகள் மற்றும் நியூ சவுத்வேல்ஸ், தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் வடக்கு யூனியன் பிரதேசத்தின் வறண்ட மற்றும் அரை வறண்ட பகுதிகளில் காணப்படுகிறது.
- பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி 1.7 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது
- பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி இப்பகுதியின் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது.

**பெரிய பவளத்திட்டு தொடர் (The Great Barrier Rift):**

- ஆஸ்திரேலியாவின் பெரிய பவளத்திட்டு தொடர், பசிபிக் பெருங்கடல் பகுதியில் குயின்ஸ்லாந்தின் கிழக்கு கடற்கரையை ஒட்டிய வடகிழக்கு பகுதியில் அமைந்து காணப்படுகிறது.
- பெரிய பவளத்திட்டு தொடர், சிறிய பவள நுண்ணுயிர்களால் உருவான ஏறக்குறைய 2300 கிலோ மீட்டர் நீளம் கொண்ட உலகின் இயற்கை அதிசியங்களில் ஒன்றாகும்.

**வடிகாலமைப்பு:**

- ஆஸ்திரேலியா கண்டம் / ஒன்றியம்/ நாடு குறைந்தபட்ச சராசரி மழைப்பொழிவைப் பெறுகிறது
- ஆஸ்திரேலியா வெப்பம் மிகுந்து வறண்டு காணப்படுவதால் நீர் ஆவியாதல் அதிகமாக உள்ளது. இதனால் குறைந்த நீரே ஆறுகளின் வழியே கடலில் கலக்கிறது.
- முர்ரே மற்றும் அதனுடைய துணை ஆறுகள் ஆஸ்திரேலியாவின் முக்கிய ஆறுகளாவும் முக்கிய வடிகாலமைப்பாகவும் உள்ளன.
- முர்ரே மற்றும் அதனுடைய துணை ஆறுகளின் வடிகாலமைப்பு ஆஸ்திரேலியாவின் மத்திய தாழ் நிலங்களின் உட்பகுதியில் அமைந்துள்ளது.
- முர்ரே மற்றும் அதனுடைய துணை ஆறுகளின் வடிநிலப்பகுதி சுமார் ஒரு மில்லியன் சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான பரப்பளவையும், ஆஸ்திரேவியாவின் 14% பரப்பளவையும் உள்ளடக்கியுள்ளது.
- ஆஸ்திரேலியாவின் மிக நீளமான நதியான முர்ரே ஆல்ப்ஸ் மலைத்தொடரிலிருந்து இந்திய பெருங்கடல் வரை 2508 கிலோ மீட்டர் தொலைவிற்கு பாய்கிறது.

www.kalvinews.com

- டார்லிங், அலெக்சாண்டிரியா, முர்ரம் பிட்ஜ்(Murrum Bidgee), லாச்லன் மற்றும் ஸ்வான் ஆகியன இக்கண்டத்தின் பிற முக்கிய ஆறுகளாகும்.

**காலநிலை:**

- ஆஸ்திரேலியா உலகின் இரண்டாவது பெரிய மிக வறண்ட நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.
- $23^0$ 30' அட்சரேகையான மகர ரேகை ஆஸ்திரேலியா கண்டம் / ஒன்றியம் / நாட்டின் நடுப்பகுதியில் உள்ளது ஏறக்குறைய மகரரேகை ஆஸ்திரேலியாவை இரு சமபாகங்களாக பிரிக்கிறது.
- ஆஸ்திரேலியா $10^0$ 4' தென் அட்சம் முதல் $39^0$ 8' தென் அட்சம் வரையிலான, அட்சரேகையில் அமைந்துள்ளதில் $23^0$ 30' தென் அட்சமான மகரரேகையானது தென் கோளப் பகுதியின் அயன வெப்ப மண்டலத்தில் இறுதியாகவும் மிதவெப்ப மண்டலத்தின் தொடக்கமாகவும் உள்ள நிலையில் ஆஸ்திரேலியா கண்டத்தின் / ஒன்றியத்தின் / நாட்டின் நடுவே உள்ள $23^0$ 30' தென் அட்சமான மகர ரேகையின் வட பகுதி வெப்ப மண்டலப் பகுதியாகவும் தென் பகுதி குளிர்ந்த மிதவெப்ப மண்டலமாகவும் அமைந்துள்ளது.
- $0^0$ புவிநடுக்கோடு முதல் $23^0$ 30' வட அட்சம் வரையிலும் $0^0$ புவிநடுக்கோடு முதல் $23^0$ 30' தென் அட்சம் வரையிலுமான புவியில் உள்ள நிலப் பகுதிகள் அயன மண்டல அல்லது வெப்ப மண்டல பகுதிகளாகவும் $0^0$ புவிநடுக்கோடு முதல் $23^0$ 30' தென் அட்சம் வரையிலுமான புவியில் உள்ள நிலப்பகுதி மிதவெப்ப மண்டல பகுதிகளாக உள்ளது.
- $23^0$ 30' வட அட்சமான கடகரேகையிலிருந்தும் $66^0$ 30' வட அட்சம் வரையிலும் $23^0$ 30' தென் அட்சமான மகர ரேகையிலிருந்து $66^0$ 30' தென் அட்சம் வரையிலுமான புவியில் உள்ள நிலப்பகுதிகள் மிதவெப்ப மண்டல பகுதிகளாக உள்ளன.
- ஆஸ்திரேலிய கண்ட / ஒன்றிய / நாட்டின் இடையே உள்ள $23^0$ 30' தென் அட்சப் பகுதியான மகரரேகை பகுதியன் வடக்கே வெப்பம் மிகுதியாகவும் (வெப்ப மண்டலம்) தெற்கே குளிர்ந்த மிதவெப்பமாகவும் (மிதவெப்பமண்டலம்) உள்ளது.
- வடக்கு கடலோர பகுதி, பருவக்காற்று காலநிலையைக் கொண்டுள்ளதால் கோடையில் அதிக மழைப்பொழிவை பெறுகிறது.
- ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகள், தென் கிழக்கு வியாபார காற்றின் மூலம் அதிக மழையை பெறுகின்றன.
- வறண்ட வெப்ப பாலைவன காலநிலை மத்திய தாழ்நிலங்களிலிருந்து மேற்குக் கடற்கரை பகுதி வரை நிலவுகிறது இப்பகுதிகளின் ஆண்டு சராசரி மழையளவு 25 செ.மீ க்கும் குறைவாக உள்ளது.
- ஆஸ்திரேலியாவின் தெற்கு முனையில் அமைந்துள்ள பெர்த் மற்றும் அடிலை பகுதிகளை ஒட்டியுள்ள பிரதேசங்களில் மத்திய தரைக்கடல் காலநிலை நிலவுகிறது.
- மேலைக்காற்றுகளினால் ஆண்டு முழுவதும் டாஸ்மேனிய தீவு மழையை பெறுகிறது.

**தாவங்கள் மற்றும் விலங்கினங்கள் (Flora and Fauna):**

**தாவரங்கள்:**

- ஆஸ்திரேலியா ஒரு அரைவறண்ட காலநிலை பகுதியாக இருப்பதால், தாவர வகைகள் மரங்களற்ற, பரவலான புதர் மற்றும் சிறு செடிகளுடன் காணப்படுகிறது.
- ஒரு பறவை நிலைக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் பொழுது, ஆஸ்திரேலியா மிகவும் சாதாரண தாவர அமைப்பு பெற்றுள்ளதை புரிந்துக் கொள்ளலாம்.

www.kalvinews.com

- ஆஸ்திரேலியாவில் உள்ள தாவரங்களும், மரங்களும் வறண்ட நிலைக்கு ஏற்றவாறு நீரின்றி நீண்டகாலம் வாழக்கூடியவை. இவை வறண்ட நிலத்தாவரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை நீண்ட கால வறட்சியை தாங்கி வளரக் கூடியவை ஆகும்.
- ஆஸ்திரேலியாவின் மேற்கு பகுதியில் அதிகம் காணப்படக்கூடிய மரவகை வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய யூக்கலிப்ட்ஸ் ஆகும்.
- காடுகள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதிகளாக உள்ள ஆஸ்திரேலியா கண்டத்தின் மொத்த நிலப் பரப்பளவில் 16 சதவீதம், காடுகளைக் கொண்டுள்ளன.
- யூக்கலிப்ட்ஸ், அகேசியா மற்றும் மெல்லூக்கா(சதுப்ப நிலக்காடுகள்) ஆகியன ஆஸ்திரேலியாவின் முக்கிய மரவகைகளாகும்.
- ஆஸ்திரேலியாவில் உள்ள மிதவெப்ப மண்டல புல்வெளிகள் 'டவுன்ஸ்' என்று அழைக்கப்படுகிறது.

**விலங்கினங்கள்:**

- ஆஸ்திரேலியா கண்டத்தில் காணப்படும் 80% விலங்கினங்கள் உலகின் பிற பகுதிகளில் காணப்படுவதில்லை.
- ஆஸ்திரேலியாவில் சுமார் 400 வகை பாலூட்டி இனங்களும் சுமார் 140 வகையான வயிற்றில் பையுடைய பாலூட்டி இனங்களும் உள்ளன. இவ்வகையான விலங்கினங்கள் தங்களுடைய குட்டிகளைத் தங்கள் வயிற்றில் உள்ள பைகளில் சுமந்து செல்கின்றன.
- கங்காரு ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்காகும்.
- கோலா, பிலேட்டிபஸ் வாலபி மற்றும் டிங்கோ ஆஸ்திரேலியாவின் பிற முக்கிய விலங்கினங்களாகும்.
- சிரிக்கும் கூக்காபரா, ஈமு, ரெயின்போ லோரிஇட் ஆகியவை ஆஸ்திரேலியாவின் முக்கிய பறவை இனங்களாகும்.

**தொல்குடி மக்கள் (பூர்வகுடிமக்கள்):**

- ➢ ஆஸ்திரேலியாவில் உள்ள செம்மறி ஆட்டு பண்ணைகளில் பணிபுரியும் மக்கள் 'ஜாகருஸ்' என்று அழைக்கப்படுகிறார்கள்.
- ➢ ஆஸ்திரேலியாவின் தொல்குடிமக்கள் (பூர்வகுடிமக்கள்) அபாரிஜின்கள் ஆவர்.

**பொருளாதார நடவடிக்கைகள்:**

- வேளாண்மை, வளம் சார்ந்த தொழில்கள், மீன்பிடித்தல், உற்பத்தி தொழிலகங்கள், வணிகம் மற்றும் சேவைப்பிரிவு ஆஸ்திரேலியாவின் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளாகும்.
- கோதுமை ஆஸ்திரேலியாவின் முதன்மையான தானியப் பயிராகும்.
- நெல், கரும்பு, மத்திய தரைக்கடல் வகைப் பழங்களான திராட்சை, ஆரஞ்சு மற்றும் வாதாம் பழம், பெர்த், அடிலைட், மற்றும் மெல்பெர்னைச் சுற்றியுள்ள பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.
- டாஸ்மேனியா 'ஆப்பிள் தீவு' என்று அழைக்கப்படுகிறது.
- நெல், புகையிலை, பருத்தி போன்றவை டாஸ்மேனியாவின் வடக்கு பகுதியில் பயிரிடப்படுகிறது.
- வெப்பம் மிகுந்த பகுதிகளில் வேளாண்மையுடன் செம்மறியாடு வளர்ப்பும் மேற்கொள்ளப்படுகிறது.
- ஓட்ஸ், மக்காச்சோளம் மற்றும் பார்லி ஆகியவையும் ஓரளவிற்கு பயிரிடப்படுகின்றன.

www.kalvinews.com

- ஆஸ்திரேலியா திராட்சை மற்றும் பழத்தோட்டங்களுக்கு பெயர் பெற்றதாகும்.
- வெப்ப மண்டல சவானா புல்வெளிகளில் கால்நடை வளர்ப்பும், மிதவெப்ப மண்டல புல்வெளிகளில் ஆடுகள் வளர்ப்பும் மிகுதியாகக் காணப்படுகின்றன.
- மெரினோ வகை செம்மறி ஆடுகள் தெற்கு ஆஸ்திரேலியா, விக்டோரியா மற்றும் நியூ சவுத்வேலஸ் ஆகிய பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன.
- பால் உற்பத்திக்கான கால்நடை பண்ணைகள் கிழக்கு மற்றும் தெற்கு கடற்கரைக்கு அருகிலுள்ள நகரங்களுக்கு அருகில் வளர்க்கப்படுகின்றன.
- ஜெர்சி, இல்லவர்ரா மற்று அயர்ஷையர் மாட்டு வகைகள் ஆஸ்திரேலியாவில் மிகவும் புகழ் பெற்றவையாகும்.
- மீன்பிடித்தல் ஆஸ்திரேலியாவின் ஒரு முக்கிய பொருளாதார நடவடிக்கையாகும்.
- நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கடல்மீன் பிடிப்பு நன்கு நடைபெறுகிறது. இங்கு உள்நாட்டு மீன்பிடிப்பும் காடுகள் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளும் மிககுறைவு.
- ஆடு வளர்ப்புத் தொழில் ஆஸ்திரேலியாவில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது ஆட்டு உரோமம் ஆஸ்திரேலியாவின் பணப்பயிர் என அழைக்கப்படுகிறது.

**கனிம வளங்கள்:**

- கனிமங்கள் ஆஸ்திரேலியாவின் மிக முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும்.
- கனிமங்கள் ஆஸ்திரேலியா கண்டத்தின் / ஒன்றியத்தின் / நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 10% பங்களிப்பை அளிக்கின்றன.
- பாக்சைட், லிமோனைட், ரூட்டில் மற்றும் சிர்கான் உற்பத்தியில் ஆஸ்திரேலியா உலகின் முன்னணி உற்பத்தியாளரகவும், தங்கம், ஈயம், லித்தியம், மாங்கனீசு, தாது மற்றும் துத்தநாகம் உற்பத்தியில் இரண்டாவது முன்னணி உற்பத்தியாளராகவும், இரும்புத்தாது மற்றும் யுரேனியம் உற்பத்தியில் மூன்றாவது பெரிய உற்பத்தியாளராகவும், நிலக்கரி உற்பத்தியில் நான்காவது பெரிய உற்பத்தியாளராகவும் இந்நாடு திகழ்கிறது.

| கனிமங்கள் | உலகளவில் உற்பத்தியில் வகிக்கும் இடம் |
|---|---|
| பாக்சைட், லிமோனைட், ரூட்டில் மற்றும் சிர்கான் | முதலிடம் |
| தங்கம், ஈயம், லித்தியம், மாங்கனீசு தாது மற்றும் துத்தநாகம் | இரண்டாமிடம் |
| இரும்புத்தாது மற்றும் யுரேனியம் | மூன்றாமிடம் |
| நிலக்கரி | நான்காமிடம் |

- மேற்கு மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா பகுதிகளில் நிலக்கரி வயல்கள் தென்கிழக்கு கடற்கரை பிரதேசங்களில் நீயூகேஸ்டல் முதல் சிட்னி வரை நீண்டு காணப்படுகிறது.
- இரும்புத்தாது, மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தெற்கு ஆஸ்திரேலியாவில் காணப்படுகிறது.
- பாக்சைட் தாதுவானது கார்ப்பென்டீரியா வளைகுடா, பெர்த் மற்றும் டாஸ்மேனியாவை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து எடுக்கப்படுகிறது.
- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, பாஸ்நீர்சந்தி மற்றும் மேற்கு பிரிஸ்பேன் பகுதிகளில் கிடைக்கிறது.

www.kalvinews.com

- யுரேனியம் தாது வட யூனியன் பிரதேசத்தில் உள்ள ராம் காடுகள் மற்றும் குயின்ஸ்லாந்து பகுதிகளில் இருந்து பெறப்படுகிறது.
- மேற்கு பாலைவனப் பகுதியில் கால் கூர்லி மற்றும் கூல்கார்லி பகுதிகளில் தங்கம் கிடைக்கிறது.
- காரியம், துத்தநாகம், வெள்ளி, டங்ஸ்டன், நிக்கல் மற்றும் செம்பு போன்றவை ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளிலிருந்து பெறப்படுகின்றன.

**தொழிலகங்கள்:**

- உணவு மற்றும் பானவகை உற்பத்தித் தொழிலகங்கள் ஆஸ்திரேலியாவின் முதன்மையான தொழிற்சாலைகளாகும்
- நிதி, கப்பல் கட்டுதல், தகவல் மற்றும் தொழில்நுட்பம், காப்பீட்டுத்துறை, விமானம் மற்றும் தொலைத்தொடர்புத் தொழிலகங்கள் முக்கிய தொழிலகங்களாகும்.

**போக்குவரத்து:**

- ஆஸ்திரேலியாவில் பலவகையான போக்குவரத்து அமைப்புகள் காணப்படுகின்றன.
- ஆஸ்திரேலியா சாலை போக்குவரத்தைப் பெரிதும் நம்பி இயங்குகிறது.
- 30 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் நல்ல ஒடுதளங்களுடன் கூடிய விமான நிலையங்களை கொண்டுள்ளது.
- ஆஸ்திரேலியாவின் நகரங்களில தொடர் வண்டிகளின் இருப்புப் பாதை (இரயில்) போக்குவரத்து நன்கு வளர்ந்துள்ளன.
- ஆஸ்திரேலியாவின் நகரங்களுக்கு இடையிலும், மாநிலங்களுக்கு இடையிலுமான இரயில் போக்குவரத்துச் சற்றே வளர்ச்சி குறைந்து காணப்படுகிறது.

**மக்கள் தொகை:**

- ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகை 2019 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 25.2 மில்லியன்களாகும்.
- ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகை (2019 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படியான 25.2 மில்லியன்களானது, உலகின் 2019 ஆம் ஆண்டின் மக்கள் தொகையில் 0.33% மட்டுமே ஆகும்.
- ஆஸ்திரேலியாவின் மக்களடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு மூன்று நபர்களாகும்.
- ஆஸ்திரேலிய நாட்டின் நகர்புற மக்கட் தொகை 85.7% ஆகும்.
- தென் கிழக்குப் பகுதிகள் மக்களடர்த்தி மிகுந்த பகுதியாகும்.

3. **அண்டார்டிகா கண்டம்:**

**அமைவிடம் மற்றும் பரப்பளவு:**

- அண்டார்டிகா ஒரு தனித்துவம் வாய்ந்த கண்டமாகும். ஆனால், இக்கண்டம் தொல்குடி மக்களைக் (பூர்வக்குடி மக்களைக் கொண்டிருக்கவில்லை.
- அண்டார்டிகாவில் எந்த ஒரு நாடும் இல்லை.
- அண்டார்டிகாவின் தென்கோடியில் அமைந்துள்ள உலகின் ஐந்தாவது பெரிய கண்டமாகும்.
- அண்டார்டிகா கண்டம் துருவப் பகுதியில் அமைந்துள்ளதால், நிரந்தர உறை பனியுடன் மிகக் குளிர்ந்த பகுதியாக உள்ளது.
- அண்டார்டிகா கண்டமானது இந்திய, அட்லாண்டிக் மற்றும் பசிபிக் பெருங்கடல்களின் தென் பகுதிகளால் புவியின் மற்ற பகுதிகளிலிருந்து பிரிக்கப்படுகிறது.

www.kalvinews.com

- அண்டார்டிகா கண்டமானது 14 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்புடன், புவியின் மொத்த நிலப்பரப்பில் 9.3% கொண்டுள்ளது.
- அண்டார்டிகா கண்டத்தின் நிலத்தோற்றமானது, சில மலைத்தொடர்கள், சிகரங்கள், பள்ளத்தாக்குகள், பனியாறுகள், பீடபூமிகள் மற்றும் எரிமலைகளை உள்ளடக்கியதாகும்.
- 3200 கிலோ மீட்டர் நீளம் கொண்ட டிரான்ஸ் அண்டார்டிக் மலைத்தொடர் அண்டார்டிகா கண்டத்தை இரு பகுதிகளாக பிரிக்கின்றது.

1. **மேற்கு அண்டார்டிகா**
2. **கிழக்கு அண்டார்டிகா**

- மேற்கு அண்டார்டிகா பகுதி பசிபிக் பெருங்கடலை நோக்கி அமைந்துள்ளது.
- தென் அமெரிக்காவை நோக்கியுள்ள அண்டார்டிக் தீபகற்ப ஆண்டிஸ் மலைத்தொடரின் நீட்சி என்பதை உணர்த்துகிறது.
- கிழக்கு அண்டார்டிகா பகுதி, அட்லாண்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களை நோக்கி அமைந்துள்ளது.
- அண்டார்டிகா கண்டத்தில் உள்ள ரோஸ்தீவில் அமைந்துள்ள மவுண்ட் ஏரிபஸ் ஒரு செயல்படும் எரிமலை ஆகும்.
- "வெள்ளை கண்டம்" என அழைக்கப்படும் ஒரே கண்டம் அண்டார்டிகா கண்டம் ஆகும்.
- அண்டார்டிகா கண்டத்தின் சில இடங்களில் பனிக்கட்டிகள் 4000 மீட்டர் ஆழம் வரை காணப்படுகிறது.
- வெப்ப மண்டலத்தின் மைய பகுதியான $0^0$ புவிநடுக்கோட்டிற்கு வெகு தொலைவில் அமைந்துள்ளதால் அண்டார்டிகாவின் காலநிலையானது உறைநிலைக் காலநிலையாக காணப்படுகிறது.
- மே, ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் (அண்டார்டிகாவின் குளிர்காலம்) சூரியன் ஒரு போதும் இங்கு உதிப்பதில்லை ஆகையால், தென்துருவத்தில் வெப்பநிலை ஏறக்குறைய $90^0$ செல்சியஸ் ஆக இருக்கும்.
- அண்டார்டிகா கண்டத்தில் கோடை மாதங்களான டிசம்பர், ஜனவரி மற்றும் பிப்ரவரியில் சூரியன் ஒருபோதும் மறைவதில்லை என்பதால் தொடர்ந்து பகலாகவே இருக்கும்.
- அண்டார்டிகா கண்டத்தில் கோடைகால வெப்பநிலையானது $0^0$ செல்சியஸ் ஆக உள்ளது, இதனால் ஆண்டு முழுவதும் கடும் குளிரும் பனிபுயல் காற்றும் வீசுகிறது.
- அண்டார்டிகா, புவியின் மேற்பரப்பில் காணப்படும் மிகப்பெரிய பனித்தொகுப்பு ஆகும். புவியில் காணப்படும் நன்னீரில் 70% அண்டார்டிகா கண்டத்தில் பனிக் குமிழ்களாக உள்ளது.
- உலகின் எந்த ஒரு நாட்டின் அறிவியல் ஆராய்ச்சியாளர்களும் அண்டார்டிகாவில் ஆய்வுகள் மேற்கொள்ளவும், தரவுகள் சேகரிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே, இக்கண்டம் 'அறிவியல் கண்டம்' என அழைக்கப்படுகிறது.
- அண்டார்டிகாவிலுள்ள உயரமான சிகரம் வின்சன் மாஸிப் (5140 மீட்டர்).
- அண்டார்டிகாவின் செண்டினல் மலைத்தொடரின் தென் பகுதியில் 5140 மீட்டர் உயரமுள்ள சிகரம் வின்சன் மாஸிப் அமைந்துள்ளது.
- அண்டார்டிகா கண்டத்திலுள்ள லாம்பர்ட் பனியாறு உலகின் மிகப்பெரிய பனியாறாகும்.

www.kalvinews.com

**தாவங்கள் மற்றும் விலங்கினங்கள்:**

- அண்டார்டிகா கண்டத்தில் வெப்பநிலையானது ஆண்டு முழுவதும் உறைநிலைக்கு கீழே இருப்பதால் பெரிய தாவரங்கள் எதுவும் காணப்படவில்லை.
- சிறிய வகை தாவரங்களான பாசிகள், மரப்பாசிகள், நுண்ணிய பூஞ்சைகள் போன்றவை பனியை தாங்கி வளர்கின்றன.
- சில பாசி வகைகள் பனிகளற்ற கடலோர பாறை நிலங்களில் காணப்படுகின்றன.
- பிளாங்டன், பாசிகள் மற்றும் மரப்பாசிகள் அண்டார்டிகாவில் உள்ள நன்னீர் மற்றும் உவர் நீர் ஏரிகளில் காணப்படுகின்றன.
- சிறிய வகை செம்மீன்களான கிரில்கள் பெரிய திரள்களாகக் காணப்படுகின்றன.
- அண்டார்டிகவில் உள்ள சிறிய வகை செம்மீன்களான சிரில்கள் கடல்வாழ் உயிரினங்களுக்கு உணவாகப் பயன்படுகின்றன.
- நீலத்திமிங்கலம், கடற்பசுபோன்ற கடல் விலங்கினங்கள், கடல் பறவைகளான பென்குவின், அல்பட்ராஸ், போலார் ஸ்டுவா மற்றும் ஸ்டவுட் ஆகியன அண்டார்டிகா கண்டத்தில் காணப்படுகின்றது.
- அண்டார்டிகாவில் உள்ள மிகப்பெரிய கடல்வாழ் உயிரினமான நீலத்திமிங்கலம், பிளாங்க்டன்களை உணவாக உட்கொள்கிறது.
- அண்டார்டிகாவின் அனைத்து விலங்குகள் மற்றும் பறவைகளும் குளிர்கால நிலையை எதிர்கொள்ள தங்கள் உடலில் புளுபர் (Blubber) எனப்படும் அடர்த்தியான கொழுப்பு அடுக்கினை கொண்டுள்ளன.
- அண்டார்டிகாவிலுள்ள பென்குயின் பறவைகளால் பறக்க இயலாது. பென்குயின் பறவைகளுக்கு இறக்கைகளுக்கு பதிலாக நீந்துவதற்குப் பயன்படும் பிலிப்பர் (Flipper) மற்றும் தோலினைப் பொதியுடைய அகலமான பாதங்களும் கொண்டுள்ளன.
- சிறிய முதுகெலும்பற்ற உயிரினங்கள், அண்டார்டிகா கண்டத்தின் நிலவாழ் விலங்கினங்களாகும்.

**கனிமங்கள்:**

- அண்டார்டிகா கண்டத்தில், தங்கம், பிளாட்டினம், நிக்கல், தாமிரம் மற்றும் பெட்ரோலியம் நிறைந்து இருக்கலாம் என்று அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- குரோமியம், ஈயம், மாலிப்டினம், தகரம், யுரேனியம் மற்றும் துத்தநாகம் ஆகியவை இருப்பதற்கான தடயங்கள் காணப்படுகின்றன.
- மேலும் வெள்ளி, பிளாட்டினம், இரும்புத்தாது, கோபால்ட், மாங்கனீசு, டைட்டானியம் ஆகியவை இருப்பதற்கான சாத்திய கூறுகளும் உள்ளன.
- நிலக்கரி மற்றும் ஹைட்ரோகார்பன்கள் வாணிபத்திற்கு பயன்படாத அளவு மிகக் குறைவாக உள்ளது.
- பன்னாட்டு ஒப்பந்தத்தின் படி அண்டார்டிகா கண்டத்தில் காணப்படும் கனிமங்களை வெட்டி எடுக்க அனுமதி இல்லை என்பதால் கனிம வளங்களை வெட்டி எடுக்கும் பணி இக்கண்டத்தில் நடைபெறுவது இல்லை.

**அண்டார்டிகவிற்கான பயணம்:**

- 1912 ஆம் ஆண்டு ஆங்கில மற்றும் நார்வே நாட்டுக் குழுவினர் தென்துருவத்தை அடைந்தனர்

www.kalvinews.com

- இந்தியாவின் 21 உறுப்பினர்களைக் கொண்ட பயணக் குழு டாக்டர் எஸ்.இஸட். காசிம் அவர்களின் தலைமையில் அண்டார்டிகாவிற்குப் பயணம் மேற்கொண்டனர்.
- 21 உறுப்பினர்களை கொண்ட இந்திய குழு 1981 டிசம்பர் 6 ஆம் நாள் கோவாவில் இருந்து புறப்பட்டு 1982 ஜனவரி 9 ஆம் நாள் அண்டார்டிகாவைச் சென்றடைந்தது அங்கு இக்கண்டத்தின் முதல் இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிலையம் தட்சின் கங்கோத்ரி நிறுவப்பட்டது மைத்ரேயி மற்றும் பாரதி அண்டார்டிகாவில் உள்ள பிற இந்திய ஆராய்ச்சி நிலையங்களாகும்.
- அண்டார்டிகாவில் உள்ள மிகப்பெரிய ஆராய்ச்சி நிலையாமான 'மெக்முர்டோ' ஆகும். இது அமெரிக்க ஐக்கிய நாடுகளால் அமைக்கப்பட்டுள்ளது.
- அண்டார்டிகாவில் அமைக்கப் பெற்ற முதல் இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிலையம் தட்சின் கங்கோத்ரி ஆகும்.

**அரோரா (விண்ணொளி):**

- வட மற்றும் தென் காந்த துருவங்களுக்கு அருகில் இயற்கையில் தோன்றும் பிரகாசமான இளஞ்சிவப்பு, சிவப்பு நிற மற்றும் பச்சை நிற ஒளியின் கலவை அரோரா என்று அழைக்கப்படுகிறது. இவ்விளைவானது சூரியனிலிருந்து வரும் மின்னூட்ட துகள்கள் வளிமண்டல மேலடுக்கிலுள்ள அணுக்களுடன் வினைப்புரிவதால் உண்டாகிறது.
- அரோரா, தென்துருவத்தில் அரோரா ஆஸ்ட்ராலிஸ் அல்லது தென் துருவ ஜோதி எனவும், வட துருவத்தில் அரோரா பொரியாலிஸ் அல்லது வடதுருவ ஜோதி எனவும் அழைக்கப்படுகிறது
- அரோரா போன்று வண்ண ஒளிக்கீற்றுகள் குறிப்பாக உயர் அட்சங்களில் அமைந்துள்ள நியூசிலாந்தின் பாக்லாந்து தீவுப்பகுதிகளில் காணலாம்.

**கலைச்சொற்கள்:**

| கண்டம் | மிகப்பரந்த ஒரு நில பரப்பு | Continent |
|---|---|---|
| நீர் சந்தி | இரண்டு பெரிய நீர்ப்பரப்புகளை இணைக்கும் ஒரு குறுகிய நீர்பகுதி மற்றும் இரு நிலப்பரப்புகளை பிரிப்பது | Strait |
| நிலச்சந்தி | இரு பெரிய நிலப்பரப்புகளை இணைக்கும் ஒரு குறுகிய பகுதி மற்றும் இருநீர் பகுதியை பிரிப்பது | Isthmus |
| வளைகுடா | வளைகுடா என்பது நிலப்பரப்பை ஊடுருவி நீண்டு காணப்படும் கடல் நீர்பரப்பு | Gulf |
| பிளவு பள்ளத்தாக்கு | இரண்டு மலைகளுக்கு இடையே அமைந்த நீள் வடிவ தாழ்நிலம் | Rift Valley |
| பவளப்பாறை | கால்சியம் கார்பனேட்டைக் கொண்ட ஒரு மெல்லிய அடுக்கு | Reef |
| சிறு அருவி | குன்றுகளிலிருந்து வேகமாக விழும் நீர் வீழ்ச்சி | Cataract |
| சுண்ணாம்பு பாறைத்தூண் | ஆஸ்திரேலிய பாலைவனங்களில் காணப்படும் சுண்ணாம்பு பாறைதூண்கள் | Pinnacle |
| மணற்பாங்கான சமவெளி | வறண்ட நிலப்பகுதிகளில் மணல் மற்றும் கூழாங்கற்கள் நிறைந்த சமவெளி | REGS |
| ஹமாடா | பாறை மற்றும் கற்களால் உயர்த்தப்பட்ட பீடபூமி | HAMADA |
| பாலைவனச்சோலை | பாலைவனப் பிரதேசங்களில் காணப்படும் நீர்நிலைகள் | OASES |

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்:**

**கூடுதல் பயிற்சி வினாக்கள்**

**ஆப்பிரிக்கா கண்டம்:**

**அமைவிடம் மற்றும் பரப்பளவு:**

1. உலகின் ஏழு கண்டங்களுள் ________ அடிப்படையில் இரண்டாவது பெரிய கண்டமாக ஆப்பிரிக்கா விளங்குகிறது.
   (1) நிலப்பரப்பளவு (2) மக்கட் தொகை
   (3) வேளாண்மை (4) நிலப்பரப்பளவு மற்றும் மக்கட்தொகை

2. உலகின் ஏழு கண்டங்களுள் நிலப்பரப்பளவு மற்றும் மக்கட் தொகை அடிப்படையில் ________ கண்டம் முதலிடம் பெறுகிறது.
   (1) ஆசியா (2) ஆப்பிரிக்கா
   (3) ஆஸ்திரேலியா (4) அண்டார்டிகா

3. $37^0$ 21' வட அட்சம் முதல் $34^0$ 51' தென் அட்சம் வரையிலும் $17^0$ 33' மேற்கு தீர்க்கம் முதல் $51^0$ 27' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவி அமைந்துள்ள கண்டம் எது?
   (1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) ஆஸ்திரேலியா (4) அண்டார்டிகா

4. ஆப்பிரிக்கா கண்டமானது ________ மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்து காணப்படுகிறது.
   (1) 30.36 (2) 7.68 (3) 14 .4) 24.7

5. ஆப்பிரிக்கா கண்டத்தின் அமைவிடம் ________.
   (1) $7^0$ வடஅட்சம் முதல் $84^0$ வடஅட்சம் வரையிலும், $53^0$ மேற்கு தீர்க்கம் முதல் $180^0$ மேற்கு தீர்க்கம் வரையிலும்
   (2) $10^0$ 04' தென்அட்சம் முதல் $39^0$ 08' தென் அட்சம் வரையிலும், $109^0$ கிழக்கு தீர்க்கம் முதல் $153^0$ 39' கிழக்கு தீர்க்கம் வரையிலும்
   (3) $37^0$ 21' வட அட்சம் முதல் $34^0$ 51' தென் அட்சம் வரையிலும், $17^0$ 33' மேற்கு தீர்க்கம் முதல் $51^0$ 27' கிழக்கு தீர்க்கம் வரையிலும்
   (4) தென் துருவப் பகுதி

6. உலகின் மொத்த நிலப்பரப்பில் ________ நிலப்பரப்ப ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ளது.
   (1) 20.21% (2) 9.3% (3) 16.50% (4) 15%

7. புவிநடுக்கோடு / புவியிடைக்கோடு / பூமத்திய ரேகை என்பது ________ ஆகும்.
   (1) $0^0$ அட்சரேகை (2) $23^0$ 30' வடக்கு அட்சரேகை
   (3) $23^0$ 30' தெற்கு அட்ச ரேகை (4) $66^0$ 30' வடக்கு அட்ச ரேகை

8. $0^0$ அட்சம் முதல் $23^0$ 30' வட அட்சம் வரையிலும் $0^0$ அட்சம் முதல் $23^0$ 30' தென் அட்சம் வரையிலும் அமைந்துள்ள பகுதிகள்
   (1) அயன / வெப்ப மண்டல பகுதிகள்
   (2) மித வெப்பமண்டல பகுதிகள்
   (3) வட துருவ உறைநிலை குளிர் மண்டல பகுதி
   (4) தென் துருவ உறைநிலை குளிர் மண்டல பகுதி

www.kalvinews.com

9. முதன்மை தீர்க்க ரேகையான ($0^0$ PRIME MERIDIAN) ஆப்பிரிக்க கண்டத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள _______ அருகில் செல்கிறது.
(1) அல்ஜுரியா நாட்டின் தலைநகரான அல்ஜியர்ஸ்
(2) நைஜர் நாட்டின் தலைநகரான நியாமே
(3) கானா நாட்டின் தலைநகரான அக்ரா
(4) டோகோ நாட்டின் தலைநகரான லோம்

10. சிறந்த கடற்பயண ஆய்வாளர்களான _______ ஆப்பிரிக்க கண்டத்தின் உட் பகுதிகளை முதன்முதலில் ஆராய்ந்தவர்களாவர்.
(1) கிறிஸ்டோபர் கொலம்பஸ் மற்றும் வெஸ்புகி
(2) ஸ்பானியர்கள் மற்றும் போர்த்துகீசியர்கள்
(3) ஹென்றி எம் ஸ்டான்லி மற்றும் கேப்டன் கேம்ஸ்குக்
(4) டேவிட் லிவிங்ஸ்டோன் மற்றும் எச்.எம்.ஸ்டான்லி

11. ஆப்பிரிக்காவில் மனிதனின் மூதாதையர்கள் _______ ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்ததாக ஆதாரங்கள் உள்ளதாக தெரிய வருகிறது.
(1) 6 (2) 5 (3) 4 (4) 3

12. புவியில் மனித இனங்கள் வாழ்ந்த தொன்மையான (பழமையான) கண்டம் என்பதால் ஆப்பிரிக்காவானது _______ எனப் புனைப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.
(1) இருண்ட கண்டம் (2) எகிப்தின் நன்கொடை
(3) தாய் கண்டம் (4) புவியின் அணிகலன்

13. ஆப்பிரிக்க கண்டத்தில் நிலவும் பல்வகை _______ பல்வேறு மனித இனக்குழுக்களுக்கும் பன்முக கலாச்சாரத்திற்கும் முதன்மை காரணமாக உள்ளன.
(1) இயற்கை அமைப்புகள் (புவியில் சூழல்கள்)
(2) அரசியல் பிரிவுகள்
(3) போக்குவரத்துகள்
(4) கனிமங்கள்

14. ஆப்பிரிக்க கண்டத்தின் உட்பகுதிகள் குறித்து பெரும்பாலோனோர் அறிந்திருக்கவில்லை என்பதால் _______ என்று அழைக்கப்படுகிறது.
(1) தாய் கண்டம் (2) இருண்ட கண்டம்
(3) புவியின் அணிகலன் (4) எகிப்தின் நன்கொடை

15. 1878 ஆம் ஆண்டு ஆப்பிரிக்க கண்டத்தை இருண்ட கண்டம் என்று முதன்முதலில் அழைத்தவர் _______.
(1) ஹென்றி எம் ஸ்டான்லி (2) டேவிட் லிவிங்ஸ்டோன்
(3) கேப்டன் ஜேம்ஸ்குக் (4) வெஸ்புகி

**அரசியல் பிரிவுகள்:**

16. ஆப்பிரிக்கா கண்டமானது அரசியல் பிரிவுகளின் அடிப்படையில் _______ நாடுகளை உள்ளடக்கியது _______.
(1) 64 (2) 54 (3) 53 (4) 63

www.kalvinews.com

17. ஆப்பிரிக்கா கண்டமானது புவியியல் அமைவிட அடிப்படையில் _______ பிரிவுகளாக உள்ளன
(1) 8 (2) 7 (3) 6 (4) 5

18. பொருத்துதல்.

i. கென்யா - 1. காலநிலை
ii. கிழக்கு ஆப்பிரிக்கா - 2. வடிகாலமைப்பு
iii. சவானா - 3. இயற்கை அமைப்பு
iv. நைல் - 4. அமைவிடம்
v. மத்திய தரைக்கடல் - 5. அரசியல்

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (2) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (3) | 3 | 4 | 5 | 1 | 2 |
| (4) | 2 | 3 | 4 | 5 | 1 |

19. வட மேற்கு ஆப்பிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜுரியா, லிபியா, மோரிடானியா மற்றும் துனிசியா ஆகிய நாடுகளின் குழு _______ என்று அழைக்கப்படுகிறது.
(1) வட ஆப்பிரிக்கா (2) மத்திய ஆப்பிரிக்கா
(3) கிழக்கு ஆப்பிரிக்கா (4) மேக்ரெப்

20. 'மேக்ரெப்' என்பதற்கு _______ மொழியில் 'மேற்கு' என்று பொருள்.
(1) தமிழ் (2) ஆங்கிலம் (3) அரபிக் (4) ஜுலு

**<u>இயற்கை அமைப்பு பிரிவுகள்:</u>**

21. பொருந்தாத ஒன்றை வெளியேற்று.
(1) ஆப்பிரிக்கா கண்டம் 54 நாடுகளை உள்ளடக்கியது.
(2) ஆப்பிரிக்க நாடுகள் புவியியல் அமைவிட அடிப்படையில் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
(3) ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு 10 பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
(4) ஆப்பிரிக்க கண்டமானது 6 முக்கிய காலநிலை மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

22. ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு _______ பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
(1) 10 (2) 9 (3) 8 (4) 7

23. சகாரா, சாஹேல், சவானா, பெரியபிளவு பள்ளத்தாக்கு மற்றும் ஆப்பிரிக்காவின் பெரிய ஏரிகள், கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலங்கள், சுவாலி கடற்கரை, காங்கோ வடிநிலம் / ஜையர் வடிநிலம், தென் ஆப்பிரிக்க பீடபூமி ஆகியன ஆப்பிரிக்கா கண்டத்தின் _______ பிரிவுகளாகும்.
(1) அரசியல் (2) அமைவிடம்
(3) இயற்கை அமைப்பு (4) காலநிலை

24. உலகின் மிகப்பெரிய சகாரா வெப்பமண்டல பாலைவனம் _______.
(1) சகாரா (2) அட்டகாமா (3) தார் (4) பெரிய விக்டோரியா

25. ஆப்பிரிக்காவின் _______ பகுதியில் உலகப்புகழ்பெற்ற சகாரா பாலைவனம் அமைந்துள்ளது.
(1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு (4) மேற்கு

www.kalvinews.com

26. பொருத்துதல்.

**சகாரா பாலைவனத்தின் எல்லைகள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| i. | வடக்கு | - | 1. | அட்லாண்டிக் பெருங்கடல் |
| ii. | கிழக்கு | - | 2. | சாஹேல் |
| iii. | தெற்கு | - | 3. | செங்கடல் |
| iv. | மேற்கு | - | 4. | மத்திய தரைக்கடல் |

(1) i - 1 ii - 2 iii - 3 iv - 4

(2) i - 4 ii - 3 iii - 2 iv - 1

(3) i - 3 ii - 4 iii - 1 iv - 2

(4) i - 2 ii - 3 iii - 4 iv - 1

**வினா எண்கள் 41 முதல் 45 கீழ் காணும் கூற்றுகள் மற்றும் நிலவரைபடங்களை கொண்டு விடையளிக்க:**

**கூற்றுகளை ஆராய்க.**


**கூற்று 1:** ஆப்பிரிக்கா $37^0$ 21' வட அட்சம் முதல் $34^0$ 51' தென் அட்சம் வரையிலும் $17^0$ 33' மேற்கு தீர்க்கம் முதல் $51^0$ 27' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவி அமைந்துள்ளது.

**கூற்று 2:** ஆப்பிரிக்காவின் வட பகுதியில் அமைந்துள்ள சகாரா, உலகின் மிகப் பெரிய வெப்ப மண்டல பாலைவனமாகும்.

**கூற்று 3:** சகாரா பாலைவனம், ஆப்பிரிக்காவின் அல்ஜுரியா, சாட், எகிப்து, லிபியா, மாலி, மோரிடானியா, மொராக்கோ, நைஜர், மேற்கு சஹாரா, சூடான் மற்றும் துனிசியா ஆகிய 11 நாடுகளில் பரவியுள்ளது.

**கூற்று 4:** சகாராவின் வடக்கே மத்திய தரைக்கடலும், கிழக்கே செங்கடலும், தெற்கே சாஹேலும், மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன.

ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு







27.

(1) கூற்றுகள் 1, 2, 3 மற்றும் 4 தவறு

(2) கூற்று 1, 2, 3 மற்றும் 4 சரி

(3) கூற்று 1, 2, 3 சரி மேலும் கூற்று 4 தவறு

(4) கூற்று 1, 2, 3 தவறு மேலும் கூற்று 4 சரி

www.kalvinews.com

28.

(1) கூற்று 1, 2, 3, 4 களுக்கிடையே தொடர்பு ஏதும் இல்லை.

(2) கூற்று 1, 2, 3 களுக்கிடையே தொடர்பு உள்ளது மேலும் கூற்று 4 ற்கு தொடர்பு இல்லை.

(3) கூற்று 1, 2 களுக்கிடையேயும் மற்றும் கூற்று 3, 4 களுக்கிடையேயும் தொடர்பு உள்ளன.

(4) கூற்று 1, 2, 3, 4 களுக்கிடையே தொடர்பு உள்ளது.

29. நிலவரைபடம் - 1 னது எந்தெந்த கூற்றை சரிபார்த்து விவரணம் (Interpretation) செய்ய உதவுகிறது.

(1) கூற்று 1, 2, 4 (2) கூற்று 1, 2, 3, 4

(3) கூற்று 1, 2, 3 (4) கூற்று 3

30. நிலவரைபடம் - 2 னது எந்தெந்த கூற்றை சரிபார்த்து விவரணம் (Interpretation) செய்ய உதவுகிறது.

(1) கூற்று 1, 2, 4 (2) கூற்று 1, 2, 3, 4

(3) கூற்று 2, 3, 4 (4) கூற்று 1, 2, 3

31. நிலவரைபடம் - 1 (ஆப்பிரிக்க இயற்கை அமைப்பு) எந்தெந்த கூற்றிற்கு தனித்துவம் வாய்ந்த நிலவரைபடமாகும்?

(1) கூற்று 2 மற்றும் 4 (2) கூற்று 1 மற்றும் 3

(3) கூற்று 1 மற்றும் 2 (4) கூற்று 3 மற்றும் 4

32. நிலவரைபடம் - 2 (ஆப்பிரிக்க அரசியல் பிரிவுகள்) எந்தெந்த கூற்றிற்கு தனித்துவம் வாய்ந்த நிலவரைபடமாகும்?

(1) கூற்று 2 மற்றும் 4 (2) கூற்று 1 மற்றும் 3

(3) கூற்று 1 மற்றும் 2 (4) கூற்று 3 மற்றும் 4

33. நிலவரைபடங்கள் (ஆப்பிரிக்கா இயற்கை அமைப்பு மற்றும் அரசியல் பிரிவுகள்) 1 மற்றும் 2 ஆகிய இரண்டையும் ஒப்பிட்டு சரிபார்த்து விவரணம் செய்ய வேண்டிய கூற்று.

(1) கூற்று 1 (2) கூற்று 2 (3) கூற்று 3 (4) கூற்று 4

34. மலைகள், பீடபூமிகள், எர்க்ஸ், பாலைவனச் சோலை, மணல் மற்றும் சரளை மூடிய சமவெளிகள், உப்பு ஏரி, ஆற்றுக் கொப்பரைகள் மற்றும் ஊது பள்ளங்கள் போன்ற நிலத்தோற்றங்களை கொண்ட ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு பிரிவு எது?

(1) சாஹேல் (2) சவானா (3) சகாரா (4) சுவாலி

35. சகாரா பாலைவனத்தின் மிக உயரமான சிகரம் ________.

(1) கிளிமஞ்சாரோ (2) தபனாநிட் லியானா

(3) மௌண்ட் கௌசி (4) டோப்கல்

36. ஆப்பிரிக்காவின் சாட் நாட்டில் அமைந்துள்ள செயலிழந்த எரிமலையான மௌண்ட் கௌசி ________ உயர கொண்ட சகாரா பாலைவன பகுதியில் மிக உயரமான சிகரமாகும்.

(1) 0 மீட்டர் கடல்மட்டத்திலிருந்து 3445 மீட்டர் (மேலாக)

(2) 0 மீட்டர் கடல்மட்டத்திலிருந்து 3482 மீட்டர் (மேலாக)

(3) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து 5895 மீட்டர்(மேலாக)

(4) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து 4167 மீட்டர்(மேலாக)

www.kalvinews.com

37. ஆப்பிரிக்க கண்டத்தின் சகாரா பாலைவன பகுதியின் எகிப்து நாட்டில் அமைந்துள்ள _______ சகாராவின் மிக ஆழமான பகுதியாகும்.

(1) கட்டாரா ஊது பள்ளம் (2) மரியானா பேரகழி

(3) நைல் பள்ளத்தாக்கு (4) பெரிய பிளவு பள்ளத்தாக்கு

38. ஆப்பிரிக்க கண்டத்தின் சகாரா பாலைவனத்தின் மிக ஆழமான பகுதியான எகிப்து நாட்டில் அமைந்துள்ள கட்டாரா ஊதுபள்ளம் _______ ஆழம் கொண்டதாகும்.

(1) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து கீழாக 133 மீட்டர்

(2) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து கீழாக 10,984 மீட்டர்

(3) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து கீழாக 11 மீட்டர்

(4) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து கீழாக 300 மீட்டர்

39. ஆப்பிரிக்க கண்டத்தின் சகாரா பாலைவனத்தின் வழியே பாயும் ஆறுகள் _______.

(1) நைல் மற்றும் நைஜர் (2) சாம்பசி மற்றும் காங்கோ

(3) ஜையர் மற்றும் நைஜர் (4) நைல் மற்றும்ஜையர்

40. அட்லஸ் மலை, ஆப்பிரிக்காவின் _______ பகுதியில் அமைந்துள்ளது.

(1) வடகிழக்கு (2) தென்கிழக்கு (3) தென்மேற்கு (4) வட மேற்கு

41. ஆப்பிரிக்காவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள அட்லஸ் மலை ஒரு _______ ஆகும்.

(1) இளம் மடிப்பு மலை (2) உருமாறிய பாறை

(3) செயலிழந்த எரிமலை (4) படிவுப்பாறை

42. ஆப்பிரிக்காவின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள அட்லஸ் மலையின் உயர்ந்த சிகரம்

(1) கிளிமாஞ்சாரோ (2) தபனாநிட் லியோனா

(3) மௌன்ட் கௌசி (4) டோப்கல்

43. சாஹேல், கிழக்கு மேற்காக _______ பரப்பளவை கொண்டது.

(1) 4000 கி.மீ தொலைவிற்கு நீண்டு 3 மில்லியன் சதுர கிலோ மீட்டர்

(2) 3000 கி.மீ தொலைவிற்கு நீண்டு 3 மில்லியன் சதுர கிலோ மீட்டர்

(3) 4000 கி.மீ தொலைவிற்கு நீண்டு 4 மில்லியன் சதுர கிலோ மீட்டர்

(4) 3000 கி.மீ தொலைவிற்கு நீண்டு 4 மில்லியன் சதுர கிலோ மீட்டர்

44. ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு பிரிவுகளில் ஒன்றான சாஹேல் _______ இடையே அமைந்துள்ளது.

(1) சஹாரா மற்றும் சவானா

(2) சவானா மற்றும் தென்ஆப்பிரிக்கா

(3) காங்கோ வடிநிலம் மற்றும் சவானா

(4) பெரிய பிளவு பள்ளதாக்கு - பெரிய ஏரிகள் மற்றும் காங்கோ வடிநிலம்

45. சாஹேல் என்பது _______.

(1) பரவலான மரங்களை கொண்ட வெப்ப மண்டல வறண்ட புல்வெளிகள்

(2) அரை வறண்ட, வெப்ப மண்டல சவானா பகுதி

(3) வெப்ப மண்டல பாலைவனம்

www.kalvinews.com

(4) புவிநடுக்கோட்டின் இருபுறங்களிலும் அமைந்துள்ள வடிநிலப்பகுதி

46. சவானா என்பது _______.

(1) பரவலான மரங்களை கொண்ட வெப்பமண்டல வறண்ட புல்வெளிகள்

(2) அரை வறண்ட, வெப்ப மண்டல சவானா பகுதி

(3) வெப்ப மண்டல பாலைவனம்

(4) புவிநடுக்கோட்டின் இருபுறங்களிலும் அமைந்துள்ள வடிநிலப்பகுதி

47. சவானா புல்வெளிகள் எனும் ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு பிரிவுகளில் ஒன்றான நிலப்பரப்பானது, ஆப்பிரிக்காவின் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் _______ பங்கிற்கும் மேற்பட்டு காணப்படுகிறது.

(1) 1/4 (2) 3/4 (3) 1/2 (4) 1/3

48. **பொருத்துதல்.**

i. சவானா - 1. டோப்கல்

ii. செரன்கேட்டி - 2. வெப்பமண்டல பாலைவனம்

iii. சாஹேல் - 3. எல்லை / விளிம்பு

iv. சகாரா - 4. திறந்தவெளி மிருககாட்சி சாலை

v. அட்லஸ் - 5. பரவலான மரங்களை கொண்ட வெப்ப மண்டல வறண்ட புல்வெளி

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (2) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (3) | 3 | 4 | 5 | 1 | 2 |
| (4) | 5 | 1 | 2 | 3 | 4 |

49. பெரிய பிளவு பள்ளத்தாக்கு மற்றும் ஆப்பிரிக்காவின் பெரிய ஏரிகள்.

**தவறான இணையை கண்டறி.**

i. பெரிய பள்ளத்தாக்கு - புவியின் உட்பகுதியில், மேற்பரப்பிற்கு அருகில் நிலவியல் தட்டுகளின் நகர்வுகளால் உருவாகும் பெரிய பிளவு.

ii. ஆப்பிரிக்காவின் பெரிய ஏரிகள் - பெரிய பிளவு பள்ளத்தாக்கு பகுதியின் தொடர்ச்சியாக காணப்படும். புவியில் காணப்படும் உறையாத மேற்பரப்பு நன்னீரில் 25% இங்கு காணப்படுகிறது.

iii. விக்டோரியா ஏரி - ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய நன்னீர் ஏரி

iv. சுப்பீரியர் ஏரி - ஆப்பிரிக்காவில் உள்ள உலகின் மிகப்பெரிய ஏரி

(1) i (2) ii (3) iii (4) iv

50. ஆப்பிரிக்காவின் பெரிய பிளவு பள்ளதாக்கில், தொடர்ச்சியாக உள்ள 7 பெரிய நன்னீர் ஏரிகள், புவியில் காணப்படும் உறையாத மேற்பரப்பு நன்னீர் அளவில் _______ கொண்டுள்ளது.

(1) 90% (2) 75% (3) 50% (4) 25%

51. ஆப்பிரிக்காவின் பெரிய பிளவு பள்ளதாக்கில் தொடர்ச்சியாக _______ நன்னீர் ஏரிகள் உள்ளன.

(1) 9 (2) 8 (3) 7 (4) 6

www.kalvinews.com

52. புவியின் உட்பகுதியில், மேற்பரப்பிற்கு அருகில் நிலவியல் தட்டுகளின் நகர்வுகளால் ஆப்பிரிக்காவில் உருவாகிய பெரிய பிளவு பள்ளதாக்குப் பகுதியில் தொடர்ச்சியாக காணப்படும் நன்னீர் ஏரிகளில் _______ ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும்.
(1) விக்டோரியா (2) டாங்கானிக்கா (3) ஆல்பர்ட் (4) எட்வர்ட்

53. உலகின் மிகப் பெரிய நன்னீர் ஏரி _______.
(1) விக்டோரியா (2) டாங்கானிக்கா (3) சுப்பீரியர் (4) துர்கானா

54. உலகின் இரண்டாவது பெரிய நன்னீர் ஏரி _______.
(1) விக்டோரியா (2) டாங்கானிக்கா (3) சுப்பீரியர் (4) துர்கானா

55. உலகின் ஆழமான மற்றும் அதிக நீளம் கொண்ட நன்னீர் ஏரி _______.
(1) விக்டோரியா (2) டாங்கானிக்கா (3) சுப்பீரியர் (4) மாலாவி

56. ஆப்பிரிக்காவின் பெரிய பிளவு பள்ளதாக்குப் பகுதியில் அமைந்துள்ள 7 பெரிய ஏரிகளுள் ஒன்றான ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய உலகின் இரண்டாவது பெரிய ஏரியாக உள்ள விக்டோரியா ஏரியில் இருந்து உருவாகும் ஆறு _______ ஆகும்.
(1) காங்கோ ஆறு (2) நைஜர் ஆறு (3) சாம்பசி ஆறு (4) நைல் நதி

57. கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலப்பகுதியில் அமைந்துள்ள மிக உயர்ந்த சிகரம் _______.
(1) கிளிமஞ்சாரோ (2) தபனாநிட் லியானா
(3) மௌண்ட் கௌசி (4) டோப்கல்

58. கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலப் பகுதியில் அமைந்துள்ள மிக உயர்ந்த சிகரமான கிளிமஞ்சரோ, 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து _______ உயரத்தில் உள்ளது.
(1) 3445 மீட்டர் (2) 3482 மீட்டர் (3) 5895 மீட்டர் (4) 4167 மீட்டர்

59. கென்ய மற்றும் ருவான்சோரி மலைத்தொடர்களின் அமைவிடம் _______.
(1) தென் ஆப்பிரிக்கா (2) காங்கோ வடிநிலம்
(3) கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலங்கள் (4) சவானா

60. கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலப்பகுதியின் கென்ய மற்றும் ருவான்சோரி மலைத்தொடருக்கு பொருந்தாததை நீக்குக.
(1) அதிகமான மக்கட் தொகை (2) வளமான புல்வெளிகள்
(3) காடுகள் (4) நீரோடைகள் மற்றும் நீர்வீழ்ச்சிகள்

**<u>சுவாலி கடற்கரை:</u>**

61. சுவாலி கடற்கரையானது _______ கடற்கரை நெடுகிலும் அமைந்துள்ளது.
(1) கிழக்கு ஆப்பிரிக்கா (2) சுவாஹிலி
(3) இந்திய பெருங்கடல் (4) அட்லாண்டிக் பெருங்கடல்

62. சுவாலி கடற்கரையானது சோமாலியா முதல் மொசாம்பிக் வரை _______ ஒட்டி சுமார் 1610 கிலோ மீட்டர் நீளத்தை கொண்டுள்ளது.
(1) கிழக்கு ஆப்பிரிக்க கடற்கரை (2) சுவாஹிலி கடற்கரை
(3) இந்திய பெருங்கடல் (4) அட்லாண்டிக் பெருங்கடல்

www.kalvinews.com

63. சுவாலி கடற்கரையானது சோமாலியா முதல் மொசாம்பிக் வரை இந்திய பெருங்கடலை ஒட்டி ஏறக்குறைய _______ கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்டுள்ளது.

(1) 1610 (2) 1510 (3) 1710 (4) 1410

64. சுவாலி கடற்கரைப் பகுதி _______ மக்களின் இணைவால் உருவான தனித்துவமான சுவாலி கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது.

(1) ஆப்பிரிக்க மற்றும் அரேபிய (2) ஆப்பிரிக்க மற்றும் ஆஸ்திரேலிய
(3) ஆஸ்திரேலிய மற்றும் அரேபிய (4) ஆப்பிரிக்க மற்றும் இந்திய

65. சுவாலி கடற்கரையானது _______ இந்தியப் பெருங்கடலை ஒட்டி ஏறக்குறைய 1610 கிலோ மீட்டர் நீளத்தை கொண்டுள்ளது.

(1) சோமாலியா முதல் கென்யா வரை
(2) சோமாலியா முதல் மொசாம்பிக் வரை
(3) சோமாலியா முதல் தென் ஆப்பிரிக்கா வரை
(4) சோமாலியா முதல் டான்சானியா வரை

66. ஆப்பிரிக்க மற்றும் அரேபிய மக்களின் இணைவால் உருவானது, தனித்துவமான _______ கலாச்சாரம் ஆகும்.

(1) காங்கோ (2) நைல் (3) நைஜர் (4) சுவாலி

67. _______ மலை உச்சியிலுள்ள பனிப்படிவுகள் இருபதாம் நூற்றாண்டிலிருந்து மறைந்து வரும் நிலை தொடர்ந்தால் 2025 ஆம் ஆண்டிற்குள் அப்பகுதியில் பனிப்படிவுகள் இல்லாத நிலை உருவாகும்.

(1) கிளிமஞ்சாரோ (2) தபனாசிட் லியானா
(3) மௌண்ட்கௌசி (4) டோப்கல்

**<u>காங்கோ வடிநிலம் / ஜையர் வடிநிலம்:</u>**

68. காங்கோ வடிநிலம் மேற்கு மத்திய ஆப்பிரிக்காவில் _______ அமைந்துள்ளது.

(1) கடகரேகையின் ($23.30^0$ வட அட்சம்) இரு புறங்களிலும்
(2) மகர ரேகையின் ($23.30^0$ தென் அட்சம்) இருபுறங்களிலும்
(3) புவிநடுக்கோட்டின் ($0^0$ அட்சம்) இருபுறங்களிலும்
(4) கடக ரேகை மற்றும் புவிநடுக்கோட்டின் இடையில்

69. காங்கோ வடிநிலம் _______ பகுதியில் புவிநடுகோட்டின் இருபுறங்களிலும் அமைந்துள்ளது.

(1) கிழக்கு ஆப்பிரிக்க (2) தென் ஆப்பிரிக்க
(3) மேற்கு மத்திய ஆப்பிரிக்க (4) வட மேற்கு ஆப்பிரிக்க

70. காங்கோ வடிநிலம் 3.4 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டு _______ சூழப்பட்டுள்ளது.

(1) அடர்ந்த பசுமை மாறா மழைக்காடுகளால்
(2) அரைவறண்ட, வெப்பமண்டல சவானா பகுதிகளால்
(3) பரவலான மரங்களை கொண்ட வெப்ப மண்டல வறண்ட புல்வெளிகளால்
(4) வெப்ப மண்டல பாலைவனத்தில்

www.kalvinews.com

71. காங்கோ வடிநிலம் _______ சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டு அடர்ந்த பசுமை மாறா மழைக்காடுகளால் சூழப்பட்டுள்ளது.

(1) 5.4 (2) 4.4 (3) 3.4 (4) 2.4

72. காங்கோ வடிநிலம் / ஜையர் வடிநிலமானது _______ மில்லியன் மக்களுக்கு உணவு, மருந்துப்பொருட்கள், நீர், வனப்பொருட்கள் மற்றும் உறைவிடத்தை அளிக்கிறது.

(1) 10.5 (2) 9.5 (3) 8.5 (4) 7.5

73. உலகின் மிகப்பெரிய ஆற்று வடிநிலப்பகுதி _______.

(1) அமேசான் (2) காங்கோ (3) மிஸிஸிப்பி (4) ஃபாக்ஸ்

74. உலகின் இரண்டாவது பெரிய ஆற்று வடிநிலப்பகுதி _______.

(1) அமேசான் (2) காங்கோ (3) மிஸிஸிப்பி (4) ஃபாக்ஸ்

75. உலகின் மிகப்பெரிய ஆற்றுவடிநிலப்பகுதியான அமேசான் அமைந்துள்ள கண்டம் _______.

(1) வட அமெரிக்கா (2) தென் அமெரிக்கா

(3) ஆப்பிரிக்கா (4) ஆஸ்திரேலியா

76. உலகின் இரண்டாவது மிகப்பெரிய ஆற்று வடிநிலப்பகுதியான காங்கோ அமைந்துள்ள கண்டம் _______.

(1) வட அமெரிக்கா (2) தென் அமெரிக்கா

(3) ஆப்பிரிக்கா (4) ஆஸ்திரேலியா

77. தென் ஆப்பிரிக்காவின் பெரும்பகுதி நிலத்தோற்றம் _______.

(1) பீடபூமி (2) பாலைவனம் (3) ஆற்றுவடிநிலம் (4) கடற்கரை

78. தென் ஆப்பிரிக்க பீடபூமியின் _______ மலைத்தொடரானது வன் சரிவுடைய கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.

(1) ட்ராகன்ஸ்பெர்க் (2) கென்யா

(3) ருவான்சேரி (4) கிரேட் டிவைடிங் மலைத்தொடர்

79. தென் ஆப்பிரிக்காவின் ட்ராகன்ஸ்பெர்க் மலைத்தொடரானது வட கிழக்கிலிருந்து தென் மேற்காக _______ கிலோ மீட்டர், தூரம் நீண்டுள்ளது

(1) 1325 (2) 1225 (3) 1125 (4) 1025

80. தென் ஆப்பிரிக்காவின் ட்ராகன்ஸ்பெர்க் மலைத்தொடரின் மிக உயர்ந்த சிகரம் _______.

(1) கிளிமஞ்சாரோ (2) தபனாநிட்லியானா

(3) மௌன்ட் கௌசி (4) டோப்கல்

81. தென் ஆப்பிரிக்காவின் ட்ராகன்ஸ் பெர்க் மலைத்தொடரின் மிக உயர்ந்த சிகரமான தபனநிட் லியானா _______ மீட்டர் உயரம் கொண்டது.

(1) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து மேலாக 3482

(2) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து மேலாக 3445

(3) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து மேலாக 5895

(4) 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து மேலாக 4167

www.kalvinews.com

82. பொருத்துக.

i. வெல்டு - 1. சிகரம்

ii. நமீப் பாலைவனம் - 2. செம்மறி ஆடு வளர்ப்பு

iii. கலகாரி - 3. வறண்ட முட்புதர் (ஆரஞ்சு (ம) ஜாம்பசி நதிகளுக்கு இடையே)

iv. காருஸ் - 4. தென் ஆப்பிரிக்க தென் மேற்கு கடற்கரை

v. தபனாநிட் லியானா - 5. புல்வெளி

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (2) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (3) | 3 | 4 | 5 | 1 | 2 |
| (4) | 4 | 5 | 1 | 2 | 3 |

83. 'வெல்டு' எனப்படும் புல்வெளிகள் அமைந்துள்ள சிகரம் _______.

(1) கிளிமஞ்சாரோ (2) தபனாநிட்லியானா

(3) மௌன்ட்கௌசி (4) டோப்கல்

**ஆப்பிரிக்காவின் வடிகாலமைப்பு:**

**நைல் நதி:**

84. கூற்றை ஆராய்க.

**கூற்று:** நைல் நதி எகிப்தின் நன்கொடை என்று அழைக்கப்படுகிறது

**காரணம்:** நைல் நதி எகிப்தின் வாழ்வாதாரமாக விளங்குகிறது. நைல் நதி எகிப்தில் இல்லை என்றால், அந்நாடு பாலைவனமாக இருந்திருக்கும்

(1) கூற்று மற்றும் காரணம் சரி, கூற்றிற்கும் காரணத்திற்கும் தொடர்பு உண்டு

(2) கூற்று மற்றும் காரணம் தவறு, கூற்றிற்கும் காரணத்திற்கும் தொடர்பு இல்லை

(3) கூற்று மற்றும் காரணம் சரி கூற்றிற்கும் காரணத்திற்கும் தொடர்பு இல்லை

(4) கூற்று சரி, காரணம் தவறு, கூற்றிற்கும் காரணத்திற்கும் தொடர்பு உண்டு

85. பொருத்துக

i. புருண்டி - 1. நைல் நதி இறுதியாக கலக்குமிடம்

ii. எத்தியோப்பியா - 2. நைல் நதி தோற்றுவிக்கப்படும் இடம்

iii. வெள்ளை நைல் மற்றும் நீல நைல் - 3. நைல் நதியின் துணை ஆறுகள்

iv. கார்ட்டும் (சூடான்) - 4. நீலநைல்

v. மத்திய தரைக்கடல் - 5. வெள்ளை நைல்

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (2) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (3) | 4 | 5 | 1 | 2 | 3 |
| (4) | 5 | 1 | 2 | 3 | 4 |

86. உலகின் மிக நீளமான நதி _______.

(1) காங்கோ (2) நைல் (3) நைஜர் (4) சாம்பசி

www.kalvinews.com

87. உலகின் மிக நீளமான நதியான நைல் அமைந்திருக்கும் கண்டம் _______.
(1) வட அமெரிக்கா (2) தென் அமெரிக்கா (3) ஆப்பிரிக்கா (4) ஆஸ்திரேலியா

88. உலகின் மிக நீளமான நதியான நைல் நதி _______ மீட்டர் நீளம் கொண்டதாகும்.
(1) 4700 (2) 4184 (3) 2574 (4) 6650

89. ஆப்பிரிக்க ஆறுகளின் தந்தை என அழைக்கப்படுவது _______.
(1) காங்கோ (2) நைல் (3) நைஜர் (4) சாம்பசி

**காங்கோ அல்லது ஜையர் ஆறு:**

90. ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய ஆறு _______.
(1) காங்கோ (2) நைல் (3) நைஜர் (4) சாம்பசி

91. ஆப்பிரிக்காவின் இரண்டாவது மிகப்பெரிய ஆறு _______.
(1) காங்கோ (2) நைல் (3) நைஜர் (4) சாம்பசி

92. ஆப்பிரிக்காவின் இரண்டாவது பெரிய ஆறான காங்கோவின் நீளம் ஏறக்குறைய _______ கிலோ மீட்டர்.
(1) 6650 (2) 4700 (3) 4184 (4) 2574

93. காங்கோ ஆறு, ஜாம்பியாவின் வடகிழக்கு உயர் நிலங்களில் அமைந்துள்ள _______ ஏரிகளுக்கு இடையே உற்பத்தியாகிறது.
(1) டாங்கானிகா மற்றும் நையாசா (2) விக்டோரியா மற்றும் துர்கானா
(3) ஆல்பர்ட் மற்றும் எட்வர்ட் (4) கிவ் மற்றும் மாலாவி

94. காங்கோ ஆறு மேற்கு மத்திய ஆப்பிரிக்காவின் வழியாக _______ கலக்கிறது.
(1) இந்தியப்பெருங்கடலில் (2) மத்திய தரைக்கடலில்
(3) அட்லாண்டிக் பெருங்கடலில் (4) செங்கடலில்

95. காங்கோ ஆறு _______ வழியாக அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கிறது.
(1) மேற்கு மத்திய ஆப்பிரிக்கா (2) தென் அமெரிக்கா
(3) கிழக்கு ஆப்பிரிக்கா (4) வட மேற்கு ஆப்பிரிக்கா

**நைஜர் ஆறு:**

96. மேற்கு ஆப்பிரிக்காவின் முக்கிய நதிகளில் ஒன்றான _______ ஆறு கினியாவின் உயர்நிலங்களில் உற்பத்தியாகிறது.
(1) நைஜர் (2) காங்கோ (3) நைல் (4) சாம்பசி

97. _______ ஆப்பிரிக்காவின் முக்கிய நதிகளில் ஒன்றான நைஜர் ஆறு, கினியாவின் உயர்நிலங்களில் உற்பத்தியாகிறது.
(1) தென் (2) கிழக்கு (3) மேற்கு (4) மத்திய

98. மேற்கு ஆப்பிரிக்காவின் முக்கிய நதிகளில் ஒன்றான நைஜர், _______ உயர்நிலங்களில் உற்பத்தியாகிறது.
(1) மோர்டானியா (2) மொராக்கோ (3) கினியா (4) மாலி

www.kalvinews.com

99. மேற்கு ஆப்பிரிக்காவின் முக்கிய நதிகளில் ஒன்றான நைஜர், கினியாவின் உயர்நிலங்களில் உற்பத்தியாகி ஏறக்குறைய _______ கிலோ மீட்டர் நீளம் பாய்ந்து இறுதியாக அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள கினியா வளைகுடாவில் கலக்கிறது.

(1) 6650 (2) 4700 (3) 4184 (4) 2574

100. நைஜர் ஆறு, கினியாவின் உயர்நிலங்களில் உற்பத்தியாகி _______ கலக்கிறது.

(1) அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள கினியா வளைகுடாவில்

(2) செங்கடல் இந்திய பெருங்கடலில் உள்ள ஏடன் வளைகுடாவில்

(3) அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள ஜிப்ரால்டர் நீர் சந்தியில்

(4) மத்திய தரைக்கடலில்

**சாம்பசி ஆறு**

101. ஆப்பிரிக்காவின் நான்காவது நீளமான ஆறு _______.

(1) நைல் (2) காங்கோ (3) நைஜர் (4) சாம்பசி

102. சாம்பசி ஆறு _______ உற்பத்தியாகிறது.

(1) வடமேற்கு ஜாம்பியாவில் (2) ஜாம்பியாவின் வடகிழக்கு உயர்நிலங்களில்

(3) கினியாவில் உயர்நிலங்களில் (4) சூடானில் உள்ள கார்ட்டூம் எனும் இடத்தில்

103. சாம்பசி ஆறு _______ மீட்டர் நீளம் கொண்டது.

(1) 6650 (2) 4700 (3) 4184 (4) 2574

104. ஆப்பிரிக்காவின் நான்காவது நீளமான (4184 மீட்டர் நீளம் கொண்ட) ஆறான சாம்பசி, வடமேற்கு ஜாம்பியாவில் உற்பத்தியாகி _______ கலக்கிறது.

(1) இந்திய பெருங்கடலில் (2) மத்திய தரைக்கடலில்

(3) அட்லாண்டிக் பெருங்கடல் (4) செங்கடலில்

105. உலகப் புகழ் பெற்ற விக்டோரியா நீர்வீழ்ச்சியின் உயரம் _______.

(1) 109 மீட்டர் (2) 108 மீட்டர் (3) 107 மீட்டர் (4) 106 மீட்டர்

106. உலகப் புகழ்பெற்ற 108 மீட்டர் உயரம் கொண்ட நீர்வீழ்ச்சியை உருவாக்கும் ஆறு _______.

(1) நைல் (2) காங்கோ (3) நைஜர் (4) சாம்பசி

107. தென் ஆப்பிரிக்காவின் 'வாழ்வாதார நதி' என அழைக்கப்படுவது _______.

(1) நைல் (2) காங்கோ (3) நைஜர் (4) சாம்பசி

108. பின்வருவனவற்றுள் ஆப்பிரிக்க கண்டத்தில் பாயாத நதி எது?

(1) சாம்பசி (2) லிம்போபோ (3) ஆரஞ்சு (4) மிஸிஸிப்பி

109. ஆப்பிரிக்க கண்டமானது _______ முக்கிய காலநிலை மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது

(1) ஆறு (2) ஐந்து (3) நான்கு (4) மூன்று

**வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலை:**

110. வட மற்றும் தென் ஆப்பிரிக்க பகுதிகளில் நிலவும் காலநிலை

(1) வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலை (3) புவிநடுகோட்டு காலநிலை

(4) மிதவெப்பமண்டல காலநிலை (2) வெப்ப மண்டல சவானா காலநிலை

www.kalvinews.com

111. வறண்ட மற்றம் அரை வறண்ட காலநிலை பகுதிகளில் _______ குறைந்து காணப்படுகிறது.

(1) மழைப்பொழிவு (2) உறைப்பனி (3) வெப்பம் (4) குளிர்

**வெப்ப மண்டல சவானா காலநிலை:**

112. ஆப்பிரிக்காவில் புவிநடுக்கோட்டின் இருபுறமும் $10^0C$ முதல் $20^0C$ (வடக்கு மற்றும் தெற்கு) அட்சத்திற்கு இடைப்பட்ட பகுதிகளில் நிலவும் கால நிலை

(1) வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலை

(2) வெப்ப மண்டல சவானா காலநிலை

(3) புவிநடுக்கோட்டு காலநிலை

(4) மிதவெப்ப மண்டல காலநிலை

113. வெப்ப மண்டல சவானா காலநிலை _______.

(1) வெப்பமண்டல ஈர மற்றும் வறண்ட காலநிலை

(2) கடலோரப் பகுதியில் அமைந்துள்ள சமச்சீர் காலநிலை

(3) மழைப்பொழிவு குறைந்து காணப்படுகிறது

(4) குளிர்காலத்தில் மழைப்பொழிவும் கோடைகாலத்தில் வெப்ப மிகுந்தும் காணப்படுகிறது.

**புவிநடுக்கோட்டு காலநிலை:**

114. புவி நடுக்கோட்டு காலநிலை

(1) வெப்ப மண்டல ஈர மற்றும் வறண்ட காலநிலை

(2) ஆண்டு முழுவதும் வெப்பம் மற்றும் மழைப்பொழிவு மிகுந்து காணப்படும்.

(3) கடலோரப் பகுதியில் அமைந்துள்ள சமச்சீர் காலநிலை

(4) கோடைக்காலத்தில் வெப்பமாகவும் பருவக்காற்றின் மூலம் அதிகமழைப் பொழிவும் குளிர்காலம் வெப்பம் குறைந்தும் காணப்படும்.

115. காங்கோ வடிநிலம் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலங்களில் உள்ள புவிநடுக்கோட்டு மண்டலம் _______.

(1) வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலை

(2) வெப்பமண்டல சவானா காலநிலை

(3) புவிநடுக்கோட்டு காலநிலை

(4) வெப்பமண்டல பருவக்காற்று காலநிலை

**மித வெப்ப மண்டல காலநிலை:**

116. தென் ஆப்பிரிக்காவின் தென் பகுதிகளில் உள்ள கடலோரப் பகுதிகள் _______.

(1) புவிநடுக்கோட்டு காலநிலை (2) மிதவெப்ப மண்டல காலநிலை

(3) மத்திய தரைக்கடல் காலநிலை (4) வெப்பமண்டல பருவக்காற்று காலநிலை

117. மித வெப்ப மண்டல காலநிலை _______.

(1) சமச்சீர் வெப்ப காலநிலை

(2) வெப்பமண்டல ஈர மற்றும் வறண்ட காலநிலை

(3) குளிர்காலத்தில் மழைப்பொழிவை பெற்று கோடைக்காலத்தில் வெப்பம் மிகுந்து வறண்டு காணப்படும்.

(4) ஆண்டு முழுவதும் வெப்பம் மற்றும் மழைப்பொழிவு இரண்டு மிகுந்து காணப்படும்.

www.kalvinews.com

**மத்திய தரைக்கடல் காலநிலை:**

118. மத்திய தரைக்கடல் காலநிலை _______.

(1) சமச்சீர் வெப்ப காலநிலை

(2) குளிர்காலத்தில் மழைப்பொழிவை பெற்று கோடைக்காலத்தில் வெப்பம் மிகுந்து வறண்டு காணப்படும்.

(3) ஆண்டு முழுவதும் வெப்பம் மற்றும் மழைப்பொழிவு இரண்டும் மிகுந்து காணப்படும்.

(4) வெப்பமண்டல ஈர மற்றும் வறண்ட காலநிலை

119. ஆப்பிரிக்காவின் வட மற்றும் தென்மேற்கு முனைப்பகுதிகள் _______.

(1) புவிநடுக்கோட்டு காலநிலை (2) மிதவெப்ப மண்டல காலநிலை

(3) மத்திய தரைக்கடல் காலநிலை (4) வெப்பமண்டல பருவக்காற்று காலநிலை

**வெப்ப மண்டல பருவக்காற்று காலநிலை:**

120. ஆப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரைப் பகுதிகள் _______.

(1) புவிநடுக்கோட்டு காலநிலை (2) மிதவெப்ப மண்டல காலநிலை

(3) மத்திய தரைக்கடல் காலநிலை (4) வெப்ப மண்டல பருவக்காற்று காலநிலை

121. வெப்ப மண்டல பருவக்காற்று காலநிலை _______.

(1) கோடைக்காலத்தில் வெப்பமாகவும் பருவக்காற்றின் மூலம் அதிக மழைப்பொழிவும் குளிர்காலத்தில் வெப்பம் குறைந்தும் காணப்படும்.

(2) வெப்ப மண்டல ஈர மற்றும் வறண்ட காலநிலை

(3) ஆண்டு முழுவதும் வெப்பம் மற்றும் மழைப்பொழிவு இரண்டும் மிகுந்து காணப்படும்.

(4) குளிர்காலத்தில் மழைப்பொழிவை பெற்று கோடையில் வெப்பம் மிகுந்து வறண்டு காணப்படும்.

**வெப்ப பாலைவனங்கள்:**

122. வெப்ப பாலைவனங்கள் _______.

(1) வியாபாரக் காற்று வீசும் மண்டலம் (2) பருவக்காற்று வீசும் மண்டலம்

(3) சூறாவளி காற்று வீசும் மண்டலம் (4) தலக்காற்று வீசும் மண்டலம்

123. வடகோளத்தில் வடகிழக்கில் இருந்தும் தென்கோளத்தில் தென்கிழக்கில் இருந்தும் வீசும் காற்று _______.

(1) பருவக்காற்று (2) தலக்காற்று (3) வியாபாரக் காற்று (4) சூறாவளி காற்று

124. கண்டங்களின் கிழக்கு விளிம்புகளில் அதிக மழைப்பொழிவை ஏற்படுத்தி மேற்கு பகுதியை அடையும் பொழுது ஈரப்பதத்தை இழந்து வறண்ட காற்றாக வீசுவது _______.

(1) சூறாவளிக் காற்று (2) தலக்காற்று (3) பருவக்காற்று (4) வியாபாரக் காற்று

125. வியாபாரக் காற்று கண்டங்களின் கிழக்கு விளிம்புகளில் அதிக மழைப்பொழிவை ஏற்படுத்தி மேற்கு பகுதியை அடையும் பொழுது ஈரப்பதத்தை இழந்து வறண்ட காற்றாக வீசுவதன் விளைவாக கண்டங்களின் மேற்கு பகுதிகள் _______ ஆக உள்ளன.

(1) வெப்ப பாலைவனம் (2) ஆற்றுவடிநிலப்பகுதி

(3) சவானா புல்வெளி (4) உறைப்பனி பகுதி

www.kalvinews.com

126. சகாரா பலைவனத்தில் இருந்து கினியா கடற்கரையை நோக்கி வீசும் வறண்ட வெப்ப புழுதி தலக்காற்று _______ என்று அழைக்கப்படுகிறது.

(1) சிராக்கோ (2) ஹார்மாட்டான் (3) ஃபான் (4) சினூக்

127. சகாரா பாலைவனத்திலிருந்து மத்திய தரைக்கடல் நோக்கி வீசும் வெப்ப தலக்காற்று _______ என்று அழைக்கப்படுகிறது.

(1) காம்சின் (2) சிமூம் (3) பிளாக்ரோலர் (4) சிராக்கோ

**தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்:**

128. பொருந்தாததை நீக்கு.

தாவர வகைகள் ஓரிடத்திலுள்ள _______ போன்றவற்றிற்கு ஏற்ப உருவாகி உள்ளன.

(1) வெப்பநிலை (2) நிலத்தோற்றம் (3) மழைபொழிவு (4) கல்வியறிவு

129. ஆப்பிரிக்க கண்டத்தின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய _______ காடுகளால் சூழப்பட்டுள்ளது.

(1) 40% (2) 30% (3) 20% (4) 10%

130. தற்போது ஆப்பிரிக்காவில் காணப்படும் தாவர மற்றும் விலங்கினங்கள் _______ காலத்தில் கண்டங்கள் பிரிந்த போது இருந்த தாவர மற்றும் விலங்கினங்களிலிருந்து தோன்றியவையாகும்

(1) லாரேசியா (2) கோண்டுவானா (3) டெத்திஸ் (4) பந்தசாலா

131. பொருந்தாததை நீக்குக.

ஆப்பிரிக்காவின் முக்கிய மர வகைகள்

(1) பாபோ (2) பீவர் (3) சவ்சேச் (4) மெல்லுக்கா

132. வெப்ப மண்டல மழைக்காடுகள் _______ என்றும் உலகின் பெரும் மருந்தகம் என்றும் அழைக்கப்படுகிறது

(1) புவியின் அணிகலன் (2) புவியின் பெட்டகம்

(3) புவியின் அற்புதம் (4) புவியின் கொடை

133. ஆப்பிரிக்காவில் _______ அதிகமான விலங்கின வகைகள் காணப்படுகின்றன.

(1) 1 மில்லியன் (பத்துலட்சம்) (2) 1 பில்லியன் (நூறு கோடி)

(3) 1 லட்சம் (4) 1 கோடி

134. பொருந்தாததை நீக்குக.

ஆப்பிரிக்க கண்டத்திற்கு உரித்தான சில விலங்கினங்கள்

(1) போனபோ (2) லெமூர் (3) கழுதைபுலி (4) நீர்யானை

**வேளாண்மை:**

135. பின்வருவனவற்றுள் ஆப்பிரிக்காவில் கோதுமை பயிரிடப்படாத பகுதி _______.

(1) மிதவெப்ப மண்டல புல்வெளிகள் (2) மத்திய தரைக்கடல் பகுதிகள்

(3) நைல் பள்ளத்தாக்கு பகுதிகள் (4) குயின்ஸ்லாந்து பகுதிகள்

136. பின்வரும் பகுதிகளில், ஆப்பிரிக்காவில் நெல் பயிரிடப்படாத பகுதி _______.

(1) கினியா கடற்கரை (2) மொசாம்பிக்

(3) மடகாஸ்கர் (4) டாஸ்மேனியா

www.kalvinews.com

137. ஆப்பிரிக்காவின் முக்கிய பயிர் வகைகளான கரும்பு, இரப்பர், சணல், புகையிலை ஆகியவை பெரும்பாலும் _______ நாடுகளில் பயிரிடப்படுகின்றன.

(1) மேற்கு ஆப்பிரிக்கா (2) வட ஆப்பிரிக்கா

(3) தென் ஆப்பிரிக்கா (4) கிழக்கு ஆப்பிரிக்கா

**கனிமங்கள்:**

138. பொருத்துக.

i. ஆப்பிரிக்காவின் கனிம வளங்கள் நிறைந்த பகுதிகள் - 1. கிம்பர்லி

ii. ஆப்பிரிக்காவின் வைர சுரங்கங்கள் - 2. தென் ஆப்பிரிக்கா, நமீபியா, மேற்கு ஆப்பிரிக்கா மற்றும் கானா

iii. ஆப்பிரிக்காவின் அதிக எண்ணெய் வள நாடுகள் - 3. அங்கோலா, நைஜீரியா, காபன மற்றும் காங்கோ நாடுகள்

iv. ஆப்பிரிக்காவின் தங்க சுரங்கங்கள் - 4. தென் ஆப்பிரிக்கா, காங்கோ, போஸ்ட்னா சியராலியோன் மற்றும் அங்கோலா

v. ஆப்பிரிக்காவின் முக்கிய வைர உற்பத்தி மையம் - 5. சகாராவின் தென் பகுதி மற்றும் ஆப்பிரிக்கபீடபூமி பகுதிகள்

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (2) | 4 | 5 | 1 | 2 | 3 |
| (3) | 3 | 4 | 5 | 1 | 2 |
| (4) | 5 | 4 | 3 | 2 | 1 |

**போக்குவரத்து:**

139. தவறானதை நீக்குக.

நிலவழிப் போக்குவரத்தான சாலை மற்றும் இருப்புப் பாதை போக்குவரத்துகள் ஆப்பிரிக்க கண்டத்தில் ஓரளவு வளர்ச்சி பெற்றுள்ள நாடுகள்

(1) தென் ஆப்பிரிக்கா (2) எகிப்து (3) மொராக்கோ (4) மேற்கு சகாரா

140. தவறானதை நீக்குக.

ஆப்பிரிக்காவின் நீர்வழிப்போக்குவரத்தான கடல் வழி வணிக பாதைகள்

(1) ஆசியாவிற்கு கிழக்கு பகுதி (2) ஆஸ்திரேலியாவிற்கு தெற்கு பகுதி

(3) ஐரோப்பாவிற்கு வடக்கு பகுதி (4) அமெரிக்காவிற்கு மேற்கு பகுதி

141. தவறானதை நீக்குக.

ஆப்பிரிக்காவின் நீர்வழிப்போக்குவரத்துகளில் இந்திய பெருங்கடலில் உள்ள முக்கிய துறைமுகங்கள்

(1) டர்பன் (2) தர்-இ-சலாம் (3) மொஹாபு (4) போர்ட்சைடு

142. ஆப்பிரிக்காவின் நீர்வழிப் போக்குவரத்துகளில் மத்தியதரைக்கடலில் உள்ள முக்கிய துறைமுகங்கள்

(1) போர்ட்சைடு மற்றும் அலெக்சாந்திரியா (2) டர்பன் மற்றும் தர்-இ-சலாம்

(3) கேப்டவுடன் மற்றும் அல்ஜியஸ் (4) மொஹாபு மற்றும் அபிட்ஜன்

www.kalvinews.com

143. தவறானதை நீக்குக.

ஆப்பிரிக்காவின் நீர்வழிப் போக்குவரத்துகளில் அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள முக்கிய துறைமுகங்கள்

(1) கேப்டவுன் (2) அல்ஜியஸ் (3) அபிட்ஜன் (4) டர்பன்

144. ஆப்பிரிக்க கண்டத்தில் அமைந்துள்ள முக்கிய பன்னாட்டு விமான நிலையங்கள் உள்ள இடங்களையும் மற்றும் தலைநகரங்களையும் நாடுகளின் பெயர்களையும் பொருத்துக.

i. கெய்ரோ - 1. தென் ஆப்பிரிக்கா

ii. நைரோபி - 2. மொரோக்கா

iii. அடிஸ்அபாபா - 3. எத்தியோப்பியா

iv. காஸாபிளாங்கா - 4. கென்யா

v. ஜோகன்ஸ்பர்க் மற்றும் டர்பன் - 5. எகிப்து

| | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|
| (1) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (2) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (3) | 4 | 5 | 1 | 2 | 3 |
| (4) | 3 | 4 | 5 | 1 | 2 |

145. ஆப்பிரிக்க கண்டத்தில் அமைந்துள்ள பின்வரும் பன்னாட்டு விமான நிலையங்களுள் நாட்டின் தலைநகரில் அமையாத விமான நிலையம் _______.

(1) கெய்ரோ (எகிப்து) (2) நைரோபி (கென்யா)

(3) அடிஸ்அபாபா (எத்தியோப்பியா) (4) காஸாபிளாங்கா (மொராக்கோ)

146. ஆப்பிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள பன்னாட்டு விமான நிலையங்களுள் ஒன்றான ஜோகன்ஸ்பர்க் எந்த நாட்டின் முக்கிய நகரங்களாகும்?

(1) எகிப்து (2) கென்யா (3) எத்தியோப்பியா (4) தென் ஆப்பிரிக்கா

**மக்கள் தொகை:**

147. உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட கண்டம் _______.

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) ஆஸ்திரேலியா (4) வட அமெரிக்கா

148. உலகின் மிக அதிக மக்கள்தொகை கொண்ட கண்டம் _______.

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) ஐரோப்பா (4) வடஅமெரிக்கா

149. 2019 ஆம் ஆண்டின் ஐக்கிய நாட்டு சபையின் மதிப்பீட்டின்படி ஆப்பிரிக்க கண்டத்தின் மக்கள் தொகை _______.

(1) 431 கோடி (2) 331 கோடி (3) 231 கோடி (4) 131 கோடி

150. ஆப்பிரிக்க கண்டத்தின் சமச்சீரற்ற மக்கள்தொகை பரவலுக்கான காரணம்

(1) இயற்கை நிலத்தோற்ற தடைகள்

(2) ஆப்பிரிக்காவின் சராசரி மக்கள் அடர்த்தி = 45 நபர்கள் / 1 சதுர கிலோ மீட்டர்

(3) கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் 41% மக்கள் நகர்புறங்களிலும் 59% மக்கள் கிராமப்புறங்களிலும் வசிக்கின்றனர்

(4) நைல் டெல்டா மற்றும் தென் ஆப்பிரிக்க பகுதிகள் ஆப்ரிக்காவின் மக்களடர்த்தி மிகுந்த பகுதிகள்

www.kalvinews.com

151. ஆப்பிரிக்காவின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு ________.

(1) எத்தியோப்பியா (2) நைஜீரியா (3) தென் ஆப்பிரிக்கா (4) அல்ஜீரியா

152. ஆப்பிரிக்காவின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடு ________.

(1) நைஜீரியா (2) தென் ஆப்பிரிக்கா (3) லிபியா (4) எத்தியோப்பியா

153. ஆப்பிரிக்காவின் சராசரி மக்களடர்த்தி 1 சதுர கிலோ மீட்டருக்கு எத்தனை நபர்கள் வீதம்?

(1) 65 (2) 55 (3) 45 (4) 35

154. ஆப்பிரிக்க கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் (100%) ________ மக்கள் நகர்புறங்களில் வசிக்கின்றனர்.

(1) 41% (2) 59% (3) 51% (4) 49%

155. ஆப்பிரிக்க கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் (100%) ________ மக்கள் கிராமபுறங்களில் வசிக்கின்றனர்.

(1) 41% (2) 59% (3) 51% (4) 49%

156. ஆப்பிரிக்க கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் (100%) நகர்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் முறையே ________ மக்கள் வசிக்கின்றனர்.

(1) 41% மற்றும் 59% (2) 51% மற்றும் 49%

(3) 31% மற்றும் 69% (4) 61% மற்றும் 39%

157. ஆப்பிரிக்க கண்டத்தின் மக்களடர்த்தி மிகுந்த பகுதிகள் ________.

(1) சகாரா மற்றும் சாஹேல் பகுதிகள்

(2) சவானா மற்றும் பெரிய பிளவு பள்ளத்தாக்கு ஏரி பகுதிகள்

(3) கிழக்கு ஆப்பிரிக்க உயர் நிலங்கள் மற்றும் சுவாலி கடற்கரை பகுதிகள்

(4) நைல் வடிநிலப் பகுதி(டெல்டா) மற்றும் தென் ஆப்பிரிக்கா பகுதிகள்

158. தவறானதை நீக்குக.

நிலம், மொழி மற்றும் பண்பாட்டு சார் தனித்துவ அடையாளத்தை கொண்டு விளங்கும் உலகில் காணப்படும் தொல்குடிஇன மக்களுள், பின்வரும் ஆப்பிரிக்காவின் தொல்குடி இனங்கள் முக்கியமானவை.

(1) அபர் (2) பாட்வா (3) புஷ்மன் (4) அபாரிஜின்கள்

159. பின்வருவனவற்றுள் எது ஆப்பிரிக்க கண்டத்தின் தொல்குடி இனங்களுடன் தொடர்பற்றது

(1) டிங்கா (2) மசாய் (3) பிக்மீஸ் (4) எஸ்கிமோஸ்

160. ஜீலு, அபர், பாட்வா, புஷ்மன், டிங்கா, மசா, பிக்மீஸ் ஆகிய உலகின் முக்கிய தொல்குடி இனங்கள் (பூர்வக்குடி இனங்கள்) எந்த கண்டத்தை சார்ந்தவை?

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) ஐரோப்பா (4) அஸ்திரேலியா

**<u>ஆஸ்திரேலியா கண்டம்:</u>**

161. உலகின் பிற பகுதிகளிலிருந்து தொலைதூரத்தில் தனித்து அமைந்துள்ளதால் இறுதியாக கண்டறியப்பட்ட கண்டம் ________.

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) அண்டார்டிகா (4) ஆஸ்திரேலியா

www.kalvinews.com

162. ஆஸ்திரேலியா கண்டம் இறுதியாக கண்டறியப்பட்டதற்கான காரணம்

(1) உலகின் பிற பகுதிகளிலிருந்து தொலைதூரத்தில் தனித்து அமைந்துள்ளது.

(2) உலகின் மிகப்பெரிய தீவாக உள்ளது.

(3) உலகின் மிகச் சிறிய கண்டமாக உள்ளது.

(4) கண்டப்பகுதி முழுவதும் ஒரே நாடாக கருதப்படும் ஒரே கண்டமாக உள்ளது.

163. உலகின் மிகப்பெரிய தீவாக உள்ள கண்டம் _______.

(1) வடஅமெரிக்கா (2) தென் அமெரிக்கா (3) ஐரோப்பா (4) ஆஸ்திரேலியா

164. உலகின் மிகச் சிறிய கண்டம்

(1) அண்டார்டிகா (2) ஆஸ்திரேலியா (3) ஆசியா (4) ஐரோப்பா

165. கண்டப்பகுதி முழுவதும் ஒரே நாடாக கருதப்படும் அரசியல் எல்லை கொண்ட ஒரே கண்டம் _______.

(1) வட அமெரிக்கா (2) தென் அமெரிக்கா (3) ஆசியா (4) ஆஸ்திரேலியா

166. 1770 ல் கேப்டன் ஜேம்ஸ்குக் என்ற மாலுமியால் கண்டறியப்பட்ட கண்டம் _______.

(1) வடஅமெரிக்கா (2) தென் அமெரிக்கா (3) ஆஸ்திரேலியா (4) ஆசியா

167. ஆஸ்திரேலியா உலக நிலவரைபடத்தில் அமைந்துள்ள அமைவிடம் _______.

(1) $10^0\,4'$ தெ - $39^0\,08'$ தெ அட்சம் மற்றும் $113^0\,9'$ கி - $153^0\,39'$ கி தீர்க்கம்

(2) $7^0$ வ - $84^0$ வ அட்சம் மற்றும் $53^0$ மே - $180^0$தீர்க்கம்

(3) $37^0\,21'$ வ - $34^0\,51'$ தெ அட்சம் மற்றும் $17^0\,33'$ மே - $51^0\,27'$ மே தீர்க்கம்

(4) தென் துருவப்பகுதி

168. ஆஸ்திரேலியா கண்டத்தை ஏறத்தாழ இரண்டு சம பகுதிகளாக பிரிப்பது _______.

(1) கடகரேகை (2) மகரரேகை (3) நிலநடுக்கோடு (4) கிரீன்விச்கோடு

169. ஆஸ்திரேலியா கண்டம் / நாட்டின் பரப்பளவு _______ சதுரகிலோ மீட்டர்.

(1) 30.36 (2) 14 (3) 24.7 (4) 7.68

170. ஆஸ்திரேலியா _______ மாநிலங்களை கொண்டு உள்ளது.

(1) 8 (2) 7 (3) 6 (4) 5

171. ஆஸ்திரேலியா _______ ஒன்றிய பகுதிகளை (யூனியன் பிரதேசங்களை) கொண்டு உள்ளது.

(1) 5 (2) 4 (3) 3 (4) 2

172. ஆஸ்திரேலிய கண்டம் / ஒன்றியத்தின் தலைநகர் ஒன்றிய பகுதி (யூனியன் பிரதேசம்)

(1) குயின்ஸ்லாந்து (2) விக்டோரியா (3) நியூசவுத்வேல்ஸ் (4) கான்பெரா

173. பிழையை நீக்குக ஆஸ்திரேலிய கண்டம் / ஒன்றியத்தின் மாநிலங்கள் _______.

(1) குயின்ஸ்லாந்து (2) விக்டோரியா

(3) நியூசவுத்வேல்ஸ் (4) வடக்கு ஒன்றிய பகுதி (யூனியன் பிரதேசம்)

174. ஆஸ்திரேலிய கண்டம் / ஒன்றியத்தில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியான _______ சட்டங்களைக் கொண்டுள்ளன.

(1) குடியுரிமை (2) கல்வி உரிமை (3) சொத்துரிமை (4) அரசியல் அமைப்பு

www.kalvinews.com

175. ஆஸ்திரேலிய கண்டம் _______ தீவுகளை கொண்டுள்ளது.

(1) 9222 (2) 8222 (3) 7222 (4) 6222

176. பிழை நீக்குக. ஆஸ்திரேலிய கண்டத்தில் உள்ள முக்கிய தீவுகள் _______.

(1) ரோட்னெஸ்ட் (2) மேக்னடிக் (3) பிட்ஸ்ராய் (4) மடகாஸ்கர்

177. பிழை நீக்குக. ஆஸ்திரேலிய கண்டத்தில் உள்ள முக்கிய தீவுகள் _______.

(1) ப்ரேசர் (2) பிலிப் (3) லார்ட்ஹோவ் (4) ஃபாக்லாந்து

178. பிழை நீக்குக. ஆஸ்திரேலிய கண்டத்தில் உள்ள முக்கிய தீவுகள் _______.

(1) கங்காரு (2) ஒய்ட் சன்டே (3) ரோட்னெஸ்ட் (4) ஜமைக்கா

**இயற்கை அமைப்பு பிரிவுகள்:**

179. ஆஸ்திரேலிய கண்டமானது அதிக வேறுபாடற்ற நிலை அமைப்புகளை கொண்டுள்ளது. நிலத்தோற்ற அமைப்பின் அடிப்படையில் _______ இயற்கை பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

(1) நான்கு (2) மூன்று (3) ஐந்து (4) ஆறு

180. பிழை நீக்குக. ஆஸ்திரேலியாவின் இயற்கை பிரிவுகள் _______.

(1) மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி (2) மத்திய தாழ் நிலங்கள்

(3) கிழக்கு உயர் நிலங்கள் (4) சாஹேல்

**மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி:**

181. ஆஸ்திரேலியாவின் _______ அமைந்துள்ள பீடபூமி ஒரு மிகப்பெரிய இயற்கையமைப்பு பிரிவாகும்.

(1) கிழக்கில் (2) மேற்கில் (3) வடக்கில் (4) தெற்கில்

182. மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி ஆஸ்திரேலிய கண்டத்தின் _______ பகுதியை உள்ளடக்கியுள்ளது.

(1) 1/3 (2) 1/2 (3) 3/4 (4) 1/4

183. மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி _______ மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும்.

(1) 4.7 (2) 3.7 (3) 2.7 (4) 1.7

184. பிழையை நீக்குக.

மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி _______ ஆகியவற்றின் பெரும்பகுதியை உள்ளடக்கிய ஒரு வறண்ட நிலமாக உள்ளது.

(1) மேற்கு ஆஸ்திரேலியா (2) தெற்கு ஆஸ்திரேலியா

(3) வடக்கு ஒன்றிய பகுதி (4) குயின்ஸ்லாந்து

185. மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி _______ சமமான மேற்பரப்பை உடையது

(1) மணல் மற்றும் பாறைகளாலான (2) சதுப்பு நிலங்களாலான

(3) வண்டல் மண்ணாலான (4) செம்மண்ணாலான

186. உலகின் மிகப்பெரிய ஒற்றை சிற்ப பாறையான அயர்ஸ் பாறை அல்லது உலுரு பாறையானது _______ யின் வறண்ட பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

www.kalvinews.com

(1) மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி (2) மத்திய தாழ் நிலங்கள்
(3) கிழக்கு உயர் நிலங்கள் (4) சகாரா பாலைவனம்

187. உலகின் மிகப்பெரிய ஒற்றை சிற்ப பாறையான அயர்ஸ் பாறை அல்லது உலுரு பாறையானது 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து மேலாக _______ மீட்டர் உயரம் கொண்டது.
(1) 1063 (2) 963 (3) 863 (4) 763

188. உலகின் மிகப்பெரிய ஒற்றைசிற்ப பாறையான அயர்ஸ் பாறை அல்லது உலுரு பாறையானது _______ வின் இயற்கை அதிசயங்களுள் ஒன்றாகும்.
(1) ஆஸ்திரேலியா (2) ஆப்பிரிக்கா (3) அண்டார்டிகா (4) ஐரோப்பா

189. 'பின்னாக்கல்' என்று அழைக்கப்படும் சுண்ணாம்பு பாறைத் தூண்கள் _______ பகுதியில் அதிகம் காணப்படுகிறது.
(1) மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி (2) மத்திய தாழ்நிலங்கள்
(3) கிழக்கு உயர் நிலங்கள் (4) சவானா

190. மெக்டோனல் மற்றும் மஸ்கிரேவ் மலைத்தொடர்கள் _______ பகுதியில் அமைந்துள்ளன.
(1) மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி (2) மத்திய தாழ் நிலங்கள்
(3) கிழக்கு உயர்நிலங்கள் (4) பெரிய பிளவுபள்ளத்தாக்கு ஏரிகள்

191. மரங்களற்ற நல்லார்பார் சமவெளி மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமியின் _______ பகுதியில் அமைந்துள்ளது.
(1) வடக்கு (2) தெற்கு (3) கிழக்கு (4) மேற்கு

192. ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய பாலைவனமான பெரிய விக்டோரியா பாலைவனம் _______ பகுதிகளில் அமைந்துள்ளது
(1) மேற்கு மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா (2) வடக்கு மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா
(3) குயின்ஸ்லாந்து மற்று நியூசவுத்வேல்ஸ் (4) டாஸ்மேனியா மற்றும் கான்பெரா

**மத்திய தாழ் நிலங்கள்:**

193. ஆஸ்திரேலியாவின் வடக்கில் கார்பெண்டாரியா வளைகுடாவிலிருந்து தெற்கே இந்திய பெருங்கடல் வரை நீண்டுள்ள இயற்கை அமைப்பு
(1) மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி (2) ஆஸ்திரேலிய மத்திய தாழ் நிலங்கள்
(3) ஆஸ்திரேலிய கிழக்கு உயர் நிலங்கள் (4) சுவாலி கடற்கரை

194. _______ மத்தியில் ஆஸ்திரேலியாவின் பெரிய உள்நாட்டு வடிகால் படுகை அமைந்துள்ளது.
(1) மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி (2) ஆஸ்திரேலியா மத்திய தாழ் நிலங்கள்
(3) ஆஸ்திரேலிய கிழக்கு உயர்நிலங்கள் (4) காங்கோ வடிநிலம்

195. ஆஸ்திரேலிய மத்திய தாழ்நிலப்பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய உவர் நீர் ஏரி _______.
(1) ஐர் ஏரி (2) விக்டோரியா (3) சுப்பீரியர் (4) ஆல்பர்ட்

196. ஆஸ்திரேலிய மத்திய தாழ் நிலப் பகுதியின் தென்கிழக்கில் _______ அமைந்துள்ளது.
(1) ஐர் ஏரி (2) முர்ரே - டார்லிங் ஆற்று தொகுப்பு
(3) கார்பெண்டாரியா வளைகுடா (4) பெரிய ஆர்ட்டீசியன் படுகை

197. ஆஸ்திரேலிய மத்திய தாழ் நிலப் பகுதியின் தெற்கே _______ அமைந்துள்ளது.

(1) ஐர் ஏரி
(2) முர்ரே - டார்லிங் ஆற்று தொகுப்பு
(3) பெரிய ஆர்ட்டீசியன் படுகை
(4) பெரிய உள்நாட்டு வடிகால் படுகை

**<u>கிழக்கு உயர் நிலங்கள்:</u>**

198. ஆஸ்திரேலியாவின் கிழக்கு எல்லை பகுதியில் காணப்படுவது _______.

(1) மேற்கு ஆஸ்திரேலியே பெரிய பீடபூமி
(2) ஆஸ்திரேலிய மத்திய தாழ் நிலங்கள்
(3) ஆஸ்திரேலிய கிழக்கு உயர்நிலங்கள்
(4) நைல் நதி

199. ஆஸ்திரேலிய கிழக்கு உயர் நிலங்கள் ஏறக்குறைய _______ கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆஸ்திரேலியாவின் கிழக்கு எல்லை பகுதியில் காணப்படுகிறது.

(1) 5860 (2) 4860 (3) 3860 (4) 2860

200. ஆஸ்திரேலியாவின் வடக்கே உள்ள யார்க் முனையிலிருந்து தெற்கே உள்ள டாஸ்மேனியா வரை நீண்டுள்ள இயற்கை அமைப்பு _______.

(1) மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி
(2) ஆஸ்திரேலிய மத்திய தாழ் நிலங்கள்
(3) ஆஸ்திரேலிய கிழக்கு உயர் நிலங்கள்
(4) காங்கோ / ஜையர் ஆறு

201. ஆஸ்திரேலியாவின் மிக உயரமான மலைத்தொடர் _______.

(1) ஆல்பஸ் (2) அயர்ஸ் (3) பின்னாக்கல் (4) மெக்டோனல்

202. ஆல்ப்ஸ் மலைத்தொடரின் மிக உயரமான சிகரம் _______.

(1) கிளிமஞ்சாரோ (2) மௌன்ட் கௌசி (3) கோசியஸ்கோ (4) டோப்கல்

203. ஆஸ்திரேலியாவின் மிக உயரமான மலைத்தொடரான ஆல்ப்ஸ் மலைத்தொடரின் மிக உயரமான சிகரமான கோசியஸ்கோ 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து மேலே _______ மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

(1) 5230 (2) 4230 (3) 3230 (4) 2230

**<u>பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி:</u>**

204. புவியினுள் இருந்து வேகமாக வெளியேறும் நீரூற்றுகள் _______ எனப்படுகின்றன.

(1) ஆறுகள் (2) நீர்வீழ்ச்சிகள் (3) ஏரிகள் (4) ஆர்டீசியன் நீரூற்றுகள்

205. புவியினுள் இருந்து வேகமாக வெளியேறும் நீரூற்றுகளான ஆர்ட்டீசியன் நீரூற்றுகளை கொண்ட புவிப்பகுதி _______.

(1) வெந்நீர் ஊற்று பகுதி
(2) ஆர்டீசியன் வடிநிலம்
(3) ஆற்று வடிநிலம்
(4) தாழ்நிலப் பகுதி

206. உலகின் மிகப் பெரிய மற்றும் ஆழமான ஆர்டீசியன்படுகை _______.

(1) சஹாரா பாலைவனச்சோலை, ஆர்ட்டீசியன் நீர் ஊற்று
(2) அமெரிக்காவின் வடக்கு மற்றும் தெற்கு டகோடா ஆர்ட்டீசியன் ஊற்று
(3) அமெரிக்காவின் ராக்கி மலைத்தொடர் ஆர்ட்டீசியன் ஊற்று
(4) ஆஸ்திரேலியாவின் பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி

www.kalvinews.com

207. ஆஸ்திரேலியாவின் பெரும்பிரிப்பு மலைத்தொடருக்கு மேற்கே _______ அமைந்துள்ளது.
(1) பெரிய பவளத்திட்டு தொடர் (2) மத்திய தாழ்நிலங்கள்
(3) மேற்கு ஆஸ்திரேலிய பீடபூமி (4) பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி

208. பிழை நீக்குக.
ஆஸ்திரேலிய பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதிகள்
(1) குயின்ஸ்லாந்து மற்றும் நியூசவுத்வேல்ஸ் (2) தெற்கு ஆஸ்திரேலியா
(3) மேற்கு ஆஸ்திரேலியா (4) வடக்கு ஆஸ்திரேலிய ஒன்றிய பகுதி

209. ஆஸ்திரேலியாவின் பகுதியளவு முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதியான _______ மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பில் அமைந்துள்ளது
(1) 4.7 (2) 3.7 (3) 2.7 (4) 1.7

**<u>பெரிய பவளத்திட்டு தொடர்:</u>**

210. பசிபிக் பெருங்கடல் பகுதியில் குயின்ஸ்லாந்தின் கிழக்கு கடற்கரையை ஒட்டிய வடகிழக்கு பகுதியில் காணப்படுவது _______.
(1) சுவாலி கடற்கரை (2) ஆஸ்திரேலிய பெரிய பவளத்திட்டு தொடர்
(3) பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி (4) அண்டார்டிகா

211. சிறிய பவள நுண்ணுயிர்களால் உருவானது. _______.
(1) பெரிய பவளத்திட்டுதொடர் (2) பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி
(3) அயர்ஸ் பாறை (4) பின்னாக்கல்

212. சிறிய பவள நுண்ணுயிர்களால் உருவான ஆஸ்திரேலிய பெரிய பவளத்திட்டு தொடரானது ஏறக்குறைய _______ கிலோ மீட்டர் நீளம் கொண்டது.
(1) 4300 (2) 3300 (3) 2300 (4) 1300

**<u>வடிகாலமைப்பு:</u>**

213. ஆஸ்திரேலியாவின் முக்கிய ஆறுகளான, முக்கிய வடிகாலமைப்பான முர்ரே மற்றும் அதன் துணை ஆறுகள் _______ உட்பகுதியில் அமைந்துள்ளது.
(1) ஆஸ்திரேலியாவின் மத்திய தாழ்நிலங்கள்
(2) மேற்கு ஆஸ்திரேலியாவின் பெரிய பீடபூமி
(3) ஆஸ்திரேலிய கிழக்கு உயர்நிலங்கள்
(4) ஆஸ்திரேலிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி

214. முர்ரே மற்றும் அதனுடைய துணை ஆறுகளை கொண்ட ஆஸ்திரேலியாவின் வடிநிலப்பகுதி ஏறக்குறைய _______ மில்லியன் சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான பரப்பளவை கொண்டது.
(1) 4 (2) 3 (3) 2 (4) 1

215. முர்ரே மற்றும் அதனுடைய துணை ஆறுகளை கொண்ட ஆஸ்திரேலியாவின் வடிகாலமைப்பானது ஆஸ்திரேலியாவின் மொத்த நிலப்பரப்பில் _______ பரப்பளவை உள்ளடக்கியுள்ளது.
(1) 34% (2) 24% (3) 14% (4) 4%

www.kalvinews.com

216. ஆஸ்திரேலியாவின் மிக நீளமாக நதி _______.

(1) முர்ரே (2) டார்லிங்

(3) அலெக்சாண்டிரியா (4) லாச்லன்

217. முர்ரே நதியின் நீளம் _______ கிலோ மீட்டர்.

(1) 4508 (2) 3508 (3) 2508 (4) 1508

218. ஆஸ்திரேலியாவின் ஆல்ப்ஸ் மலைத்தொடரிலிருந்து இந்தியப் பெருங்கடல்வரை 2508 கிலோ மீட்டர் தொலைவிற்கு பாயும் ஆறு _______.

(1) முர்ரம் பிட்ஜ் (2) முர்ரே (3) டார்லிங் (4) லாச்லன்

**காலநிலை:**

219. உலகின் இரண்டாவது பெரிய மிக வறண்ட நிலப்பரப்பைக் கொண்ட கண்டம் _______.

(1) ஆப்பிரிக்கா (2) ஆஸ்திரேலியா

(3) ஐரோப்பா (4) வட அமெரிக்கா

220. **கூற்று:** ஆஸ்திரேலியாவின் வட பகுதி வெப்பமான அயண மண்டலத்தில் அமைந்துள்ளது. இதன் தென் பகுதி குளிர்ந்த மிதவெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளது.

**காரணம்:** ஆஸ்திரேலியாவை மகரரேகை இரு சம பாகங்களாக பிரிக்கிறது.

(1) கூற்று மற்றும் காரணம் சரி, இரண்டிற்கும் தொடர்பு உள்ளது.

(2) கூற்று மற்றும் காரணம் தவறு, இரண்டிற்கும் தொடர்பு இல்லை.

(3) கூற்று சரி, காரணம் தவறு இரண்டிற்கும் தொடர்பு இல்லை.

(4) கூற்று தவறு, காரணம் தவறு இரண்டிற்கும் தொடர்பு உள்ளது.

221. ஆஸ்திரேலியாவில் அதிகபட்ச வெப்ப நிலையாக $53^0$C பதிவான இடம் _______.

(1) பௌர்க்கி (மத்திய தாழ் நிலங்கள்) (2) கான்பெரா (தலைநகர் ஒன்றிய பகுதி)

(3) டார்வின் (வடக்கு ஒன்றிய பகுதி) (4) பெர்த் (மேற்கு ஆஸ்திரேலியா)

222. ஆஸ்திரேலியாவில் குறைந்தபட்ச வெப்பநிலையாக 22^0C பதிவான இடம் _______.

(1) பௌர்க்கி (மத்திய தாழ் நிலங்கள்) (2) கான்பெரா (தலைநகர் ஒன்றிய பகுதி)

(3) குயின்ஸ்லாந்து (ஆர்ட்டீசியன் ஊற்று) (4) மெல்பெர்ன் (விக்டோரியா)

223. மத்திய தாழ்நிலங்களில் அமைந்துள்ள பௌர்க்கி என்னும் இடத்தில் ஆஸ்திரேலிய கண்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையாக பதிவாகி உள்ள வெப்ப அளவு _______ செல்சியஸ்.

(1) $63^0$ (2) $53^0$ (3) $43^0$ (4) $33^0$

224. ஆஸ்திரேலியாவின் தலைநகரான கான்பெராவில் குறைந்தபட்ச வெப்பநிலையாக பதிவாகியுள்ள வெப்பஅளவு _______ செல்சியஸ்.

(1) $-42^0$ (2) $-32^0$ (3) $-22^0$ (4) $-12^0$

**தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்:**

225. ஆஸ்திரேலியா கண்டம் _______ காலநிலை பகுதியாகும்.

(1) சவானா (2) ஆற்று வடிநிலம்

(3) அரைவறண்ட (4) உறை நிலை

www.kalvinews.com

226. ஆஸ்திரேலியா ஒரு அரை வறண்ட காலநிலை பகுதி என்பதால், தாவர வகைகள் _______ ஆகியவற்றுடன் காணப்படுகிறது.

(1) மரங்களற்ற, பரவலான புதர் மற்றும் சிறு செடிகள்

(2) கொட்டை மரம், ஓக், நெட்டிலிங்கம்

(3) ரப்பர், சீமைத்தேக்கு, கருங்காலி, லாக்வுட்

(4) பாசிகள், மரப்பாசிகள் மற்றும் குள்ளமான வில்லோ மரங்கள்

227. ஆஸ்திரேலியாவின் மேற்கு பகுதியில் அதிகம் காணப்படக் கூடிய மரவகை வறட்சியை தாங்கி வளரக்கூடிய _______ ஆகும்.

(1) ஓக் (2) ரப்பர் (3) யூக்கலிப்ட்ஸ் (4) பாசிகள்

228. ஆஸ்திரேலிய கண்டத்தின் மொத்த பரப்பளவில் _______ காடுகளை கொண்டுள்ளன.

(1) 36 (2) 23 (3) 16 (4) 6

229. தவறானதை நீக்ககு.

ஆஸ்திரேலியாவின் முக்கிய மர வகைகள்

(1) யூக்கலிப்ட்ஸ் (2) அகேசியா

(3) மெல்லுக்கா (சதுப்புநிலக்காடுகள்) (4) ஓக்

230. _______ கண்டத்தில் காணப்படும் 80% விலங்கினங்கள் உலகின் பிற பகுதிகளில் காணப்படுவதில்லை.

(1) ஆப்பிரிக்கா (2) ஆஸ்திரேலியா

(3) வட அமெரிக்கா (4) தென் அமெரிக்கா

231. ஆஸ்திரேலிய கண்டத்தில் காணப்படும் _______ விலங்கினங்கள் உலகின் பிற பகுதிகளில் காணப்படுவதில்லை.

(1) 60% (2) 70% (3) 80% (4) 90%

232. ஆஸ்திரேலியாவில் ஏறக்குறைய _______ வகை பாலூட்டி இனங்கள் உள்ளன.

(1) 100 (2) 200 (3) 300 (4) 400

233. ஆஸ்திரேலியாவில் ஏறக்குறைய _______ வகை வயிற்றில் பையுடைய பாலூட்டி இனங்கள் உள்ளன.

(1) 440 (2) 340 (3) 240 (4) 140

234. குட்டிகளை தங்களுடைய வயிற்றில் உள்ள பைகளில் சுமந்து செல்லும் பாலூட்டி இன விலங்குகளுன் ஒன்றான _______ ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்காகும்.

(1) கோலா (2) கங்காரு (3) பிலேட்டிபஸ் (4) வாலபி

235. ஆஸ்திரேலியாவில் உள்ள பறவைகளுள் சிரிக்கும் பறவை _______.

(1) கூக்காபரா (2) ஈமு (3) ரெயின்போ (4) லோலிகிட்

236. ஆஸ்திரேலியாவில் உள்ள செம்மறி ஆட்டு பண்ணைகளில் பணிபுரியும் மக்கள் _______ என்று அழைக்கப்படுகின்றனர்.

(1) ஜாகருஸ் (2) பிக்மீஸ் (3) ஜீலு (4) டிங்கா

www.kalvinews.com

237. ஆஸ்திரேலியாவின் தொல்குடிஇன மக்கள் _______.

(1) மசாய் (2) அபர் (3) பாட்வா (4) அபாரிஜின்கள்

238. ஜாகருஸ் என்பவர்கள்_______. ஆவர்.

(1) செம்மறி ஆட்டு பண்ணைகளில் பணிபுரிவோர்

(2) ஜெர்சி மாட்டு பண்ணைகளில் பணிபுரிவோர்

(3) கோழி பண்ணைகளில் பணிபுரிவோர்

(4) வேளாண் காடுகளில் பணிபுரிவோர்

239. ஆஸ்திரேலியாவின் பணப்பயிர் _______.

(1) ஆட்டு உரோமம் (2) கங்காரு உரோமம்

(3) கோலா உரோமம் (4) பிலேட்டிபஸ் உரோமம்

240. ஆஸ்திரேலியாவின் முதன்மை தானியப் பயிர் _______.

(1) நெல் (2) கரும்பு (3) கோதுமை (4) மக்காச்சோளம்

241. பிழை நீக்குக.

மத்திய தரைக்கடல் வகைப் பழங்களான திராட்சை, ஆரஞ்சு மற்றும் வாதாம் பழம், ஆஸ்திரேலியாவின் _______ ஐ சுற்றியுள்ள பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

(1) பெர்த் (2) அடிலைட் (3) மெல்பெர்ன் (4) சிட்னி

242. ஆஸ்திரேலியாவில் 'ஆப்பிள் தீவு' என அழைக்கப்படுவது _______.

(1) மேற்கு ஆஸ்திரேலியா (2) குயின்ஸ்லாந்து

(3) நியூசவுத்வேல்ஸ் (4) டாஸ்மேனியா

243. ஆஸ்திரேலியாவில் _______ வடக்கு பகுதியில் நெல், பருத்தி, புகையிலை போன்றவை பயிரிடப்படுகின்றன.

(1) வடக்கு ஆஸ்திரேலியா (ஒன்றிய பகுதி) (2) விக்டோரியா

(3) தெற்கு ஆஸ்திரேலியா (4) டாஸ்மேனியா

244. ஆஸ்திரேலியாவின் வெப்பம் மிகுந்த பகுதிகளில் வேளாண்மையுடன் சேர்த்து _______ மேற்கொள்ளப்படுகிறது.

(1) மீன்பிடித்தல் (2) உற்பத்தி தொழிலகங்கள்

(3) வளம் சார்ந்த தொழில்கள் (4) செம்மறி ஆடு வளர்ப்பு

245. பிழை நீக்குக.

ஆஸ்திரேலியாவில் _______ ஆகியவை ஓரளவிற்கு பயிரிடப்படுகின்றன.

(1) ஓட்ஸ் (2) மக்காச்சோளம் (3) பார்லி (4) கம்பு

246. ஆஸ்திரேலிய _______ மற்றும் பழத்தோட்டங்களுக்கு பெயர் பெற்றதாகும்.

(1) திராட்சை (2) ஸ்ட்ராபெரி (3) லிச்சி (4) மங்குஸ்தான்

247. ஆஸ்திரேலியாவின் வெப்ப மண்டல சவானா புல்வெளிகளில் _______ வளர்ப்பு மிகுதியாக காணப்படுகின்றன.

(1) கால்நடை (2) ஈமு (3) ஆடு (4) மீன்

248. ஆஸ்திரேலியாவின் மிதவெப்ப மண்டல புல்வெளிகளில் _______ வளர்ப்பு மிகுதியாக காணப்படுகின்றன.

(1) கால்நடை (2) ஈமு (3) ஆடு (4) மீன்

249. _______ வகை செம்மறி ஆடுகள் தெற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா, விக்டோரியா மற்றும் நியூசவுத்வேல்ஸ் ஆகிய பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன.

(1) கீழக்கரிசல் (2) செவியட் (3) லீசெஸ்டர் (4) மெரினோ

250. பிழை நீக்குக.

ஆஸ்திரேலியாவில் _______ மாநிலங்களில் மெரினோ வகை செம்மறி ஆடுகள் வளர்க்கப்படுகின்றன.

(1) வடக்கு ஆஸ்திரேலிய ஒன்றிய பகுதி (2) டாஸ்மேனியா

(3) விக்டோரியா (4) நியூசவுத் வேல்ஸ்

251. _______ உற்பத்திக்கான கால்நடை பண்ணைகள் கிழக்கு மற்றும் தெற்கு கடற்கரைக்கு அருகிலுள்ள நகரங்களுக்கு அருகில் வளர்க்கப்படுகின்றன.

(1) பால் (2) பதனிடப்பட்ட தோல் அணிகள்

(3) வேளாண் காடுகள் (4) ஒருங்கிணைந்த பண்ணைகள்

252. பால் உற்பத்திக்கான கால்நடை பண்ணைகள் _______ கடற்கரைக்கு அருகிலுள்ள நகரங்களுக்கு அருகில் வளர்க்கப்படுகின்றன.

(1) கிழக்கு மற்றும் தெற்கு (2) வடக்கு மற்றும் தெற்கு

(3) கிழக்கு மற்றும் மேற்கு (4) வடக்கு மற்றும் மேற்கு

253. பிழையை நீக்குக.

ஆஸ்திரேலியாவில் புகழ்பெற்ற மாட்டு வகைகள்

(1) ஜெர்சி (2) இல்லவர்ரா (3) அயர்ஷையர் (4) காங்கேயம்

254. ஆஸ்திரேலிய ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பகுதிகளிலும் நன்கு நடைபெறும் தொழில்

(1) மீன்பிடிப்பு (2) மெரினோ செம்மறி ஆடுவளர்ப்பு

(3) பால்உற்பத்திக்கான மாடு வளர்ப்பு (4) பருத்தி பயிரிடுதல்

**கனிம வளங்கள்:**

255. ஆஸ்திரேலியாவின் முக்கிய ஏற்றுமதி பொருள்

(1) மீன் (2) பால் (3) பருத்தி (4) கனிமங்கள்

256. ஆஸ்திரேலியாவின் முக்கிய ஏற்றுமதி பொருளான கனிமங்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய _______ பங்களிப்பை அளிக்கின்றன.

(1) 40% (2) 30% (3) 20% (4) 10%

257. பிழை நீக்குக.

ஆஸ்திரேலியா உலகின் முன்னணி உற்பத்தியாளர்

(1) பாக்சைட் (2) லிமோனைட் (3) சிர்கான் (4) துத்தநாகம்

www.kalvinews.com

258. பிழை நீக்குக.

ஆஸ்திரேலியா உலகின் இரண்டாவது முன்னணி உற்பத்தியாளர்

(1) தங்கம் (2) ஈயம் (3) லித்தியம் (4) ரூட்டில்

259. பிழை நீக்குக.

ஆஸ்திரேலியா உலகின் இரண்டாவது முன்னணி உற்பத்தியாளர்

(1) மாங்கனீசு (2) தாது (3) துத்தநாகம் (4) சிர்கான்

260. ஆஸ்திரேலியா உலகின் மூன்றாவது முன்னணி உற்பத்தியாளர்

(1) இரும்புத்தாது மற்றும் யுரேனியம் (2) மாங்கனீசு மற்றும் தங்கம்

(3) லிமோனைட் மற்றும் பாக்சைட் (4) தங்கம் மற்றும் ஈயம்

261. ஆஸ்திரேலியா உலகின் நான்காவது முன்னணி உற்பத்தியாளர்

(1) நிலக்கரி (2) தாது (3) ரூட்டில் (4) யுரேனியம்

262. ரூட்டில் கனிம வள உற்பத்தியின் முன்னணியில் உள்ள நாடு

(1) ஆப்பிரிக்கா (2) ஆஸ்திரேலியா (3) ஐரோப்பா (4) ஆசியா

263. ஆஸ்திரேலியாவின் மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளின் தென்கிழக்கு கடற்கரை பகுதிகளில் நியூகேஸ்டல் முதல் சிட்னி வரை நீண்டு காணப்படும் கனிமவளம்

(1) தங்கம் (2) துத்தநாகம் (3) நிலக்கரி (4) இரும்புதாது

264. ஆஸ்திரேலியாவின் மேற்கு மற்றும் தெற்கு ஆஸ்திரேலிய பகுதிகளில் காணப்படும் கனிமவளம்

(1) இரும்புத்தாது (2) லிமோனைட் (3) யுரேனியம் (4) துத்தநாகம்

265. ஆஸ்திரேலியாவில் கார்ப்பென்டீரியா வளைகுடா, பெர்த், மற்றும் டாஸ்மேனியாவை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து எடுக்கப்படும் கனிம வளம்

(1) தங்கம் (2) ஈயம் (3) பாக்சைட் (4) லிமோனைட்

266. ஆஸ்திரேலியாவில் பாஸ்நீர்சந்தி மற்றும் மேற்கு பிரிஸ்பேன் பகுதிகளில் கிடைக்கும் கனிமவளம்

(1) பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு (2) பாக்சைட் மற்றும் லிமோனைட்

(3) ரூட்டில் மற்றும் சிர்கான் (4) லித்தியம் மற்றும் மாங்கனீசு

267. ஆஸ்திரேலியாவில் வட ஆஸ்திரேலியா ஒன்றிபகுதியில் உள்ள ராம் காடுகள் மற்றும் குயின்ஸ்லாந்து பகுதிகளில் இருந்து பெறப்படும் கனிமவளம்

(1) யுரேனியம் (2) பாக்சைட் (3) லிமோனைட் (4) மாங்கனீசு

268. ஆஸ்திரேலியாவின் மேற்கு பாலைவனப்பகுதியில் உள்ள கால்கூர்லி மற்றும் கூல்கார்லி பகுதிகளில் கிடைக்கும் கனிமவளம்

(1) தங்கம் (2) ஈயம் (3) லித்தியம் (4) மாங்கனீசு

269. பிழை நீக்குக ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளிலிருந்து பெறப்படும் கனிமவளம்

(1) காரியம் (2) வெள்ளி (3) டங்ஸ்டன் (4) வைரம்

www.kalvinews.com

**தொழிலகங்கள்:**

270. ஆஸ்திரேலியாவின் முதன்மையான தொழிற்சாலைகள்

(1) உணவு மற்றும் பானம் (2) கப்பல் கட்டுமானம்

(3) தகவல் மற்றும் தொழில்நுட்பம் (4) சுரங்கம்

271. பிழை நீக்குக.

ஆஸ்திரேலியாவின் முக்கிய தொழில்கள்

(1) நிதி (2) கப்பல் கட்டுமானம்

(3) சுரங்கம் (4) தோல் பதனிடும் தொழிற்சாலை

272. பிழை நீக்குக.

ஆஸ்திரேலியாவின் முக்கிய தொழில்கள்

(1) தகவல் மற்றும் தொழிற்நுட்பம் (2) காப்பீட்டுத்துறை

(3) விமானம் மற்றும் தொலைத்தொடர்பு (4) இரும்பு உருக்காலை

273. ஆஸ்திரேலியாவில் உள்ள மித வெப்பமண்டல புல்வெளிகள்

(1) டவுன்ஸ் (2) சவானா (3) ஸ்டெபி (4) வெல்டு

**போக்குவரத்து:**

274. ஆஸ்திரேலியா பெரிதும் நாடும் போக்குவரத்து

(1) சாலை வழி போக்குவரத்து (2) நீர் வழி போக்குவரத்து

(3) இருப்பு பாதை போக்குவரத்து (4) வான்வழி போக்குவரத்து

275. ஆஸ்திரேலியா _______ மேற்பட்ட நல்ல தரமான ஓடு தளங்களுடன் கூடிய விமான நிலையங்களை கொண்டுள்ளது.

(1) 50 (2) 40 (3) 30 (4) 20

276. ஆஸ்திரேலியாவில் வளர்ச்சி அடைந்துள்ள இருப்புப்பாதை தொடர் வண்டி போக்குவரத்து (இரயில் போக்குவரத்து) தடங்கள்

(1) உள் நகர போக்குவரத்து

(2) நகரங்களுக்கிடையிலான போக்குவரத்து

(3) மாநிலங்களுக்கிடையிலான போக்குவரத்து

(4) பன்னாட்டு போக்குவரத்து

**மக்கள் தொகை:**

277. 2019 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகை _______ மில்லியன்கள்.

(1) 45.2 (2) 35.2 (3) 25.2 (4) 15.2

278. 2019 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகையான 25.2 மில்லியன்கள் என்பது உலக மக்கள் தொகையில் _______ ஆகும்.

(1) 33% (2) 3.3% (3) 0.33% (4) 0.03%

279. ஆஸ்திரேலியாவின் மக்களடத்தி ஒரு சதுர கிலோமீட்டருக்கு _______ நபர்கள் ஆகும்.

(1) 3000 (2) 300 (3) 30 (4) 3

www.kalvinews.com

280. ஆஸ்திரேலிய கண்டம் / ஒன்றியத்தின் நகர்புற மக்கட்தொகை _______.

(1) 85.7% (2) 75.7% (3) 65.7% (4) 55.7%

**அமைவிடம் மற்றும் அண்டார்டிகா பரப்பளவு:**

281. பிழை நீக்குக அண்டார்டிகா கண்டம்

(1) தனித்துவம் வாய்ந்த கண்டம்

(2) தொல்குடி மக்கள் (பூர்வகுடி மக்கள்) கொண்டிருக்கவில்லை

(3) எந்த ஒரு நாடும் இல்லை

(4) உலகின் 4 வது பெரிய கண்டம்

282. உலகின் _______ வது பெரிய கண்டம்.

(1) 5 (2) 4 (3) 3 (4) 2

283. அண்டார்டிகா _______ பகுதியில் அமைந்துள்ள கண்டம்.

(1) புவிநடுக்கோட்டு (2) வெப்பமண்டல (3) மிதவெப்பமண்டல (4) தென் துருவ

284. அண்டார்டிகா, கண்டம் உறைநிலை காலநிலையுடன் நிரந்தர பனியுடன் மிக குளிர்ந்த பகுதியாக உள்ளதற்கான காரணம் _______ யில் அமைந்துள்ளது.

(1) புவிநடுக்கோட்டு பகுதி (2) வெப்பமண்டல பகுதி

(3) மிதவெப்பமண்டல பகுதி (4) துருவப்பகுதி

285. அண்டார்டிகா கண்டத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிப்பது _______.

(1) டிரான்ஸ் அண்டார்டிகா மலைத்தொடர் (2) இந்திய பெருங்கடல்

(3) ஆர்டிக் பெருங்கடல் (4) அட்லாண்டிக் பெருங்கடல்

286. அண்டார்டிக் கண்டத்தை இரண்டு பகுதிகளாக பிரிக்கும் டிரான்ஸ் அண்டார்டிகா மலைத்தொடர் _______ கிலோமீட்டர் நீளம் கொண்டது.

(1) 5200 (2) 4200 (3) 3200 (4) 2200

287. _______ பகுதி பசிபிக் பெருங்கடலை நோக்கி அமைந்துள்ளது.

(1) மேற்கு அண்டார்டிகா (2) கிழக்கு அண்டார்டிகா

(3) வடக்கு அண்டார்டிகா (4) தெற்கு அண்டார்டிகா

288. _______ பகுதி, அட்லாண்டிக் மற்றும் இந்திய பெருங்கடல்களை நோக்கி அமைந்துள்ளது

(1) மேற்கு அண்டார்டிகா (2) கிழக்கு அண்டார்டிகா

(3) வடக்கு அண்டார்டிகா (4) தெற்கு அண்டார்டிகா

289. தென் அமெரிக்காவை நோக்கியுள்ள அண்டார்டிக் தீபகற்பம் _______ மலைத்தொடரின் நீட்சி என்பதை உணர்த்துகிறது.

(1) ஆண்டிஸ் (2) அகான்காகுவா (3) அலாஸ்கா (4) ப்ருக்ஸ்

290. கிழக்கு அண்டார்டிகா பகுதியின் ரோஸ்தீவில் அமைந்துள்ள மவுண்ட் எரிபஸ் ஒரு _______ ஆகும்.

(1) செயல்படும் எரிமலை (2) செயலிழந்த எரிமலை

(3) உறங்கும் எரிமலை (4) உருமாறிய எரிமலை

www.kalvinews.com

291. அண்டார்டிகா கண்டம் _______ என்று அழைக்கப்படும் ஒரே கண்டமாகும்.

(1) இருண்ட கண்டம் (2) வெள்ளைக் கண்டம்
(3) தீவு கண்டம் (4) தென் கண்டம்

292. அண்டார்டிகா கண்டத்தின் சில இடங்களில் பனிக்கட்டிகள் _______ மீட்டர் ஆழம் வரை காணப்படுகிறது.

(1) 6000 (2) 5000 (3) 4000 (4) 3000

**காலநிலை:**

293. புவிநடுக்கோட்டிற்கு வெகு தொலைவில் அமைந்துள்ளதால் அண்டார்டிகாவின் காலநிலையானது _______ காலநிலையில் காணப்படுகிறது.

(1) உறை நிலைக் (2) வறண்ட மற்றும் அரை வறண்ட
(3) மிதவெப்ப மண்டல (4) புவிநடுக்கோட்டு

294. _______ மாதங்களில் அண்டார்டிகாவின் குளிர் காலத்தில் சூரியன் ஒரு போதும் அண்டார்டிகாவில் எங்கும் உதிப்பது இல்லை.

(1) பிப்ரவரி - ஏப்ரல் (2) மே - ஜுலை
(3) ஆகஸ்டு - நவம்பர் (4) டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி

295. தென்துருவமான அண்டார்டிகா கண்டத்தில் மே, ஜுன் மற்றும் ஜுலை மாதங்கள் குளிர் காலத்தில் சூரியன் ஒருபோதும் கண்டப்பகுதியில் எங்கும் உதிக்காத நிலையில் வெப்பநிலை _______ செல்சியஸ் ஆக உள்ளது.

(1) $-100^0$ (2) $-90^0$ (3) $-80^0$ (4) $-70^0$

296. அண்டார்டிக் கண்டத்தின் கோடை காலமான _______ மாதங்களில் சூரியன் ஒரு போதும் மறைவது இல்லை.

(1) டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி (2) பிப்ரவரி - ஏப்ரல்
(3) மே - ஜுலை (4) ஆகஸ்டு - நவம்பர்

297. டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அண்டார்டிகா கண்டத்தில் கோடை காலத்தில் சூரியன் ஒரு போது மறையாத நிலையில் உறை நிலை காலநிலை மண்டலத்தில் வெப்பநிலை _______ செல்சியஸ் ஆகும்.

(1) $3^0$ (2) $2^0$ (3) $1^0$ (4) $0^0$

298. அண்டார்டிகா கண்டத்தில் குளிர்காலத்தில் $-90^0$ செல்சியஸ் வெப்பநிலையும் (மே - ஜுலை மாதங்களில்), கோடை காலத்தில் $0^0$ செல்சியஸ் வெப்பநிலையும் (டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில்) இருப்பதால் ஆண்டு முழுவதும் _______ காலநிலை நிலவுகிறது.

(1) கடும் குளிரும் பனிபுயல் காற்றும் வீசும் உறைநிலை
(2) வெப்ப மண்டல சவானா
(3) வெப்ப மண்டல பருவக்காற்று
(4) மத்திய தரைக்கடல்

299. அண்டார்டிகா கண்டம் புவியின் மேற்பரப்பில் காணப்படும்

(1) பனித்தொகுப்பு (2) நிலத்தொகுப்பு (3) வனத்தொகுப்பு (4) உயிர்தொகுப்பு

www.kalvinews.com

300. அண்டார்டிகா கண்டம் புவியில் காணப்படும் நன்னீரில் _______ இக்கண்டத்தில் பனிக்குமிழ்களாக உள்ளது.

(1) 90% (2) 80% (3) 70% (4) 60%

301. **கூற்று:** அண்டார்டிகா கண்டம் அறிவியல் கண்டம் என அழைக்கப்படுகிறது.

**காரணம்:** உலகின் எந்த ஒரு நாட்டின் அறிவியல் ஆராய்ச்சியாளர்களும் அண்டார்டிகாவில் ஆய்வுகள் மேற்கொள்ளவும் தரவுகள் சேகரிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்

(1) கூற்று மற்றும் காரணம் சரி, இரண்டிற்குமிடையே தொடர்பு உள்ளது

(2) கூற்று மற்றும் காரணம் தவறு, இரண்டிற்குமிடையே தொடர்பு இல்லை

(3) கூற்று காரணம் தவறு, இரண்டிற்குமிடையே தொடர்பு உள்ளது

(4) கூற்று தவறு, காரணம் சரி, இரண்டிற்குமிடையே தொடர்பு இல்லை

**<u>தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்:</u>**

302. அண்டார்டிகாவின் உயரமான சிகரம் _______.

(1) வின்சன் மாஸிப் (2) மௌண்ட் கௌசி

(3) டோப்கல் (4) கிளிமஞ்சாரோ

303. அண்டார்டிகாவின் உயரமான சிகரமான வின்சன் மாஸிப் _______ மீட்டர் உயரம் கொண்டு சென்டினல் மலைத்தொடரின் தென்பகுதியில் அமைந்துள்ளது.

(1) 5140 (2) 3445 (3) 4167 (4) 5895

304. அண்டார்டிகாவின் உயரமான சிகரமான வின்சன்மாஸிப் 5140 மீட்டர் உயரம் கொண்டு _______ மலைத்தொடரின் தென் பகுதியில் அமைந்துள்ளது.

(1) ஆண்டிஸ் (2) அகான்காகுவா (3) அலாஸ்கா (4) சென்டினல்

305. _______ கண்டத்திலுள்ள லாம்பர்ட் பனியாறு உலகின் மிகப்பெரிய பனியாறாகும்.

(1) ஆப்பிரிக்கா (2) அண்டார்டிகா (3) ஆஸ்திரேலியா (4) வடஅமெரிக்கா

306. அண்டார்டிகா கண்டத்தின் கடல் வாழ் உயிரினங்களுக்கு உணவாக பயன்படுவது _______.

(1) சிறிய வகை செம்மீன்களான கிரில்கள் (2) பழங்கள்

(3) தினைகள் (4) காய்கள்

307. அண்டார்டிகா கண்டத்தில் கடல் வாழ் உயிரினமான நீலத்திமிங்கலம் _______ களை உணவாக உட்கொள்கிறது.

(1) கிரில்கள் (2) பழங்கள் (3) தினைகள் (4) பிளாங்டன்

308. நீலத்திமிங்கலம், கடற்பசு, பென்குவின், அல்பட்ராஸ், போலார் ஸ்குவா, ஸ்டவுட் போன்ற அண்டார்டிகா கண்டத்தின் விலங்குகள் மற்றும் பறவைகள் உறைநிலை குளிரை எதிர்கொள்ள தங்கள் உடலில் _______ எனப்படும் அடர்த்தியான கொழுப்பு அடுக்கினை கொண்டுள்ளன.

(1) புளுபர் (2) கொலஸ்டிரால்

(3) கிளிசரால் (4) கொழுமியம்

309. பறக்க இயலாத நிலையில் நீந்துவற்கு உதவும் மற்றும் தோலிலை பொதியுடைய அகலமான பாதங்களைக் கொண்ட அண்டார்டிகா கண்டத்தின் பறவை _______.

(1) பென்குயின் (2) அல்பர்ட்ரோஸ் (3) துருவப்பருந்து (4) ஸ்டவுட்

www.kalvinews.com

**கனிமங்கள்:**

**அண்டார்டிகாவிற்கான பயணம்:**

310. அண்டார்டிகாவில் உள்ள மிகப்பெரிய ஆராய்ச்சி நிலையமான மெக்முர்டோ _______ அமைக்கப்பட்டுள்ளது.

(1) ஆஸ்திரேலியாவால் (2) அமெரிக்க ஐக்கிய நாடுகளால்
(3) சீனாவால் (4) இந்தியாவால்

311. அண்டார்டிகாவில் உள்ள தட்சின் கங்கோத்ரி என்பது _______ நாட்டில் அமைக்கப்பட்ட அந்நாட்டின் முதல் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் ஆகும்.

(1) இந்திய (2) சீன (3) ரஷ்ய (4) ஜப்பான்

312. ஆங்கில மற்றும் நார்வே நாட்டுக் குழுவினர் தென்துருவமான அண்டார்டிகா கண்டத்தை ஆய்வு மேற்கொள்ள அடைந்த ஆண்டு _______.

(1) 1942 (2) 1932 (3) 1922 (4) 1912

313. 21 உறுப்பினர்களை கொண்ட _______ நாட்டின் பயனக்குழு டாக்டர் எஸ்.இஸட்.காசிம் அவர்களின் தலைமையில் அண்டார்டிகாவிற்கு பயணம் மேற்கொண்டு 06.12.1981 அன்று கோவாவிலிருந்து புறப்பட்டு, 09.01.1982 அன்று அண்டார்டிகாவை சென்றடைந்து அந்நாட்டின் முதல் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் தட்சின் கங்கோத்ரி நிறுவப்பட்டது.

(1) ஆஸ்திரேலிய (2) இந்திய (3) ரஷ்ய (4) சீன

**அரோரா (விண்ணொளி):**

314. வடதுருவத்திற்கு அருகில் இயற்கையில் தோன்றும் பிரகாசமான இளஞ்சிவப்பு, சிவப்பு நிற மற்றும் பச்சை நிற ஒளியின் கலவை _______ என்று அழைக்கப்படுகிறது.

(1) அரோரா (2) அரோரா பொரியாலிஸ்
(3) பெரியாலிஸ் (4) அரோரா அஸ்ட்ராலிஸ்

315. தென் துருவத்திற்கு அருகில் இயற்கையில் தோன்றும் பிரகாசமான இளஞ்சிவப்பு, சிவப்பு நிற மற்றும் பச்சை நிற ஒளியின் கலவை _______ என்று அழைக்கப்படுகிறது.

(1) அரோரா (2) அரோராபொரியாலிஸ்
(3) அஸ்ட்ராலிஸ் (4) அரோரா அஸ்ட்ராலிஸ்

316. அரோரா பெரியாலிஸ் எனப்படும் வட துருவ ஜோதி தோன்றும் இடம்

(1) அலாஸ்கா (2) பாக்லாந்து(நியூசிலாந்து)
(3) குயின்ஸ்லாந்து (4) மெல்பெர்ன்

317. அரோரா அஸ்ட்ராலீஸ் எனப்படும் தென் துருவ ஜோதி தோன்றும் இடம்

(1) அலாஸ்கா (2) பாக்லாந்து(நியூசிலாந்து)
(3) குயின்ஸ்லாந்து (4) மெல்பெர்ன்

318. பிழையை நீக்கு.

அண்டார்டிகாவில் இந்தியாவால் அமைக்கப்பட்ட இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிலையம்

(1) தட்சின் கங்கோத்ரி (2) மைத்ரேயி (3) பாரதி (4) டெராடூன்

www.kalvinews.com

## விடைகள் :

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 26 | 2 | 51 | 3 | 76 | 3 | 101 | 4 | 126 | 2 | 151 | 1 |
| 2 | 1 | 27 | 2 | 52 | 1 | 77 | 1 | 102 | 1 | 127 | 4 | 152 | 4 |
| 3 | 2 | 28 | 4 | 53 | 2 | 78 | 1 | 103 | 3 | 128 | 4 | 153 | 3 |
| 4 | 1 | 29 | 1 | 54 | 1 | 79 | 3 | 104 | 1 | 129 | 3 | 154 | 1 |
| 5 | 3 | 30 | 2 | 55 | 2 | 80 | 2 | 105 | 2 | 130 | 2 | 155 | 2 |
| 6 | 1 | 31 | 1 | 56 | 4 | 81 | 1 | 106 | 4 | 131 | 4 | 156 | 1 |
| 7 | 1 | 32 | 2 | 57 | 1 | 82 | 1 | 107 | 4 | 132 | 1 | 157 | 4 |
| 8 | 1 | 33 | 3 | 58 | 3 | 83 | 2 | 108 | 4 | 133 | 1 | 158 | 4 |
| 9 | 3 | 34 | 3 | 59 | 3 | 84 | 4 | 109 | 1 | 134 | 4 | 159 | 4 |
| 10 | 4 | 35 | 4 | 60 | 1 | 85 | 2 | 110 | 1 | 135 | 4 | 160 | 2 |
| 11 | 2 | 36 | 1 | 61 | 1 | 86 | 1 | 111 | 1 | 136 | 4 | 161 | 4 |
| 12 | 3 | 37 | 1 | 62 | 3 | 87 | 1 | 112 | 2 | 137 | 4 | 162 | 1 |
| 13 | 1 | 38 | 1 | 63 | 1 | 88 | 2 | 113 | 1 | 138 | 4 | 163 | 4 |
| 14 | 2 | 39 | 1 | 64 | 1 | 89 | 3 | 114 | 2 | 139 | 4 | 164 | 2 |
| 15 | 1 | 40 | 4 | 65 | 2 | 90 | 2 | 115 | 3 | 140 | 2 | 165 | 4 |
| 16 | 2 | 41 | 1 | 66 | 4 | 91 | 1 | 116 | 2 | 141 | 4 | 166 | 3 |
| 17 | 4 | 42 | 4 | 67 | 1 | 92 | 2 | 117 | 2 | 142 | 1 | 167 | 1 |
| 18 | 1 | 43 | 1 | 68 | 3 | 93 | 1 | 118 | 2 | 143 | 4 | 168 | 2 |
| 19 | 4 | 44 | 1 | 69 | 3 | 94 | 3 | 119 | 3 | 144 | 1 | 169 | 4 |
| 20 | 3 | 45 | 2 | 70 | 4 | 95 | 1 | 120 | 4 | 145 | 4 | 170 | 3 |
| 21 | 3 | 46 | 1 | 71 | 3 | 96 | 1 | 121 | 1 | 146 | 4 | 171 | 4 |
| 22 | 3 | 47 | 3 | 72 | 4 | 97 | 3 | 122 | 2 | 147 | 2 | 172 | 4 |
| 23 | 3 | 48 | 2 | 73 | 1 | 98 | 3 | 123 | 3 | 148 | 4 | 173 | 4 |
| 24 | 1 | 49 | 4 | 74 | 2 | 99 | 3 | 124 | 4 | 149 | 4 | 174 | 4 |
| 25 | 2 | 50 | 4 | 75 | 2 | 100 | 1 | 125 | 1 | 150 | 1 | 175 | 2 |

www.kalvinews.com

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 176 | 4 | 201 | 1 | 226 | 1 | 251 | 1 | 276 | 1 | 301 | 1 |
| 177 | 4 | 202 | 3 | 227 | 3 | 252 | 1 | 277 | 3 | 302 | 1 |
| 178 | 4 | 203 | 4 | 228 | 3 | 253 | 1 | 278 | 3 | 303 | 1 |
| 179 | 2 | 204 | 4 | 229 | 4 | 254 | 1 | 279 | 4 | 304 | 4 |
| 180 | 4 | 205 | 2 | 230 | 2 | 255 | 4 | 280 | 1 | 305 | 2 |
| 181 | 2 | 206 | 4 | 231 | 3 | 256 | 4 | 281 | 4 | 306 | 1 |
| 182 | 1 | 207 | 4 | 232 | 4 | 257 | 4 | 282 | 1 | 307 | 4 |
| 183 | 3 | 208 | 3 | 233 | 4 | 258 | 4 | 283 | 4 | 308 | 1 |
| 184 | 4 | 209 | 4 | 234 | 2 | 259 | 4 | 284 | 4 | 309 | 1 |
| 185 | 1 | 210 | 2 | 235 | 1 | 260 | 1 | 285 | 1 | 310 | 2 |
| 186 | 1 | 211 | 1 | 236 | 1 | 261 | 1 | 286 | 3 | 311 | 1 |
| 187 | 3 | 212 | 3 | 237 | 4 | 262 | 2 | 287 | 1 | 312 | 4 |
| 188 | 1 | 213 | 1 | 238 | 1 | 263 | 3 | 288 | 2 | 313 | 2 |
| 189 | 1 | 214 | 4 | 239 | 1 | 264 | 1 | 289 | 1 | 314 | 2 |
| 190 | 1 | 215 | 3 | 240 | 3 | 265 | 3 | 290 | 1 | 315 | 4 |
| 191 | 2 | 216 | 1 | 241 | 4 | 266 | 1 | 291 | 2 | 316 | 1 |
| 192 | 1 | 217 | 3 | 242 | 4 | 267 | 1 | 292 | 3 | 317 | 2 |
| 193 | 2 | 218 | 2 | 243 | 4 | 268 | 1 | 293 | 1 | | |
| 194 | 2 | 219 | 2 | 244 | 4 | 269 | 4 | 294 | 2 | | |
| 195 | 1 | 220 | 1 | 245 | 4 | 270 | 1 | 295 | 2 | | |
| 196 | 2 | 221 | 1 | 246 | 1 | 271 | 4 | 296 | 1 | | |
| 197 | 3 | 222 | 2 | 247 | 1 | 272 | 4 | 297 | 4 | | |
| 198 | 3 | 223 | 2 | 248 | 3 | 273 | 1 | 298 | 1 | | |
| 199 | 3 | 224 | 3 | 249 | 4 | 274 | 1 | 299 | 1 | | |
| 200 | 3 | 225 | 3 | 250 | 1 | 275 | 3 | 300 | 3 | | |

www.kalvinews.com

## வகுப்பு - 8 - குடிமையியல்

### 2. குடிமக்களும் குடியுரிமையும்

**தொகுப்பு:**

**திரு.சு.எலிசா, M.Sc.,M.Phil.,B.Ed.,**
**பட்டதாரி தலைமை ஆசிரியர்,**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, ரெட்டிமாங்குப்பம்,**
**வேலூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**

**திரு.மோ.பிரபாகர், M.A., M.Phil., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,**
**கொரடாச்சேரி, திருவாரூர் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- ஒரு நாட்டின் அரசாங்கத்தைப் பற்றியும் மக்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியும் படிக்கும் இயல் குடிமையியல் (Civics) ஆகும்.
- குடிமகன் (Citizen) என்ற சொல் 'சிவிஸ்' (Civis) என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.
- குடிமகன் என்னும் சொல்லின் பொருள் பண்டைய ரோமாபுரியில் இருந்த நகர நாடுகளில் 'குடியிருப்பாளர்' அல்லது 'நாடுகளின் உறுப்பினர்' ஆகும்.
- ஒரு அரசால் வழங்கப்பட்ட சட்ட உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிப்பவரும், அதே வேளையில் நாட்டின் சட்டங்களை மதித்து நடப்பவரும், அவருக்கான கடமைகளை நிறைவேற்றுபவருமே அந்நாட்டின் குடிமகன் ஆவார்.
- ஒரு குடிமகன் அவர் விரும்பும் காலம் வரையில் ஒரு நாட்டில் சட்டப்படியாக வசிக்கும் உரிமை குடியுரிமை எனப்படும்.ஒரு நாட்டில் உள்ள அரசாங்கம் அந்நாட்டின் குடிமக்கள் அவர்கள் விரும்பும் காலம் வரையில் வசிக்க வழங்கும் உரிமை **குடியுரிமை** எனப்படும்.
- **குடியுரிமை இரண்டு வகைப்படும்.**
  1. **இயற்கை குடியுரிமை** - **பிறப்பால்** பெறக்கூடிய குடியுரிமை
  2. **இயல்பு குடியுரிமை** - **விண்ணப்பித்து பெறும்** குடியுரிமை

**இந்தியக் குடியுரிமைச் சட்டம் (1955) நிர்ணயித்துள்ள இந்தியக்குடியுரிமை பெறுவதற்கான 5 வழிமுறைகள்**

**1. பிறப்பால் குடியுரிமை பெறுதல்**

| பிறந்தநாடு | காலம் | பெற்றோர் |
|---|---|---|
| இந்தியா | 1950 ஜனவரி 26 முதல் 1987 ஜூன் 30 வரை | எந்த நாட்டவராகவும் இருக்கலாம் |
| இந்தியா | 1987 ஜுலை 1 முதல் 2004 டிசம்பர் 2 வரை | பெற்றோரில் ஒருவர் அச்சமயத்தில் இந்தியக் குடிமகன் |
| இந்தியா | 2004 டிசம்பர் 3 முதல் ...... | பெற்றோரில் ஒருவர் இந்தியக்குடிமகன் மற்றொருவர் சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் இடம்பெயர்ந்தவராக இருத்தல் கூடாது |

www.kalvinews.com

2. **வம்சாவளி குடியுரிமை பெறுதல்**

| பிறந்தநாடு | காலம் | பெற்றோர் |
|---|---|---|
| வெளிநாடு | 1950 ஜனவரி 26 முதல் 1992 டிசம்பர் 9 வரை | தந்தை இந்தியக் குடிமகன் |
| வெளிநாடு | 1992 டிசம்பர் 10 முதல் 2004 டிசம்பர் 2 வரை | பெற்றோரில் ஒருவர் அச்சமயத்தில் இந்தியக் குடிமகன் |
| வெளிநாடு | 2004 டிசம்பர் 3 முதல் | பிறப்பினை 1 வருடத்திற்குள் இந்தியத் தூதரகத்தில் பதிவு செய்தல் |

3. **பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்**

- இந்திய வம்சாவளியைச் சார்ந்தவர் எந்த நாட்டில் வசித்தாலும் அல்லது பிரிக்கப்படாத இந்தியாவிற்கு வெளிப்பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறலாம்.
- இந்திய வம்சாவளியைச் சார்ந்தவர் எந்த நாட்டில் வசித்தாலும் இந்தியாவில் ஏழு ஆண்டுகள் வசித்த பிறகே பதிவு செய்யமுடியும்.
- இந்தியக் குடிமகனை திருமணம் செய்தவர் ஏழு ஆண்டுகள் இந்தியாவில் வசித்த பிறகே பதிவு செய்யமுடியும்.

4. **இயல்புக் குடியுரிமை**

- எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகனாவதை தடுக்கும் பொருட்டு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.
- வெளிநாட்டுக் குடியுரிமையை துறக்கும் ஒருவருக்கு இயல்புக் குடியுரிமை வழங்கப்படுகிறது.
- நல்ல பண்புகளையும் இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு மொழியில் (22 இந்திய மொழிகள்) போதிய அறிவினைப் பெற்ற ஒருவர் இயல்புக் குடியுரிமையைப் பெற தகுதியுடையவராவார்.

5. **பிரதேசங்களை இணைத்தல் மூலம் குடியுரிமை பெறுதல்**

- இந்தியாவுடன் இணைக்கப்படும் வெளிநாட்டுப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் அந்த குறிப்பிட்ட நாளிலிருந்து இந்தியக் குடிமக்களாகின்றனர்.
- எ.கா பாண்டிச்சேரி இந்தியாவுடன் இணைப்பு (1962).

**இந்தியக் குடியுரிமையை இழத்தல்**

✓ ஒரு இந்தியக் குடிமகன் தாமாக முன்வந்து வெளிநாட்டில் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரது இந்தியக் குடியுரிமை முடக்கப்படும்.

✓ ஒரு இந்திய குடிமகன் வெளி நாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரின் இந்திய குடியுரிமை அவரால் கைவிடப்படும்.

✓ ஒரு இந்தியக் குடிமகன் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடும்போது அவருடைய இந்திய குடியுரிமை இந்திய அரசால் முடக்கப்படும்.

- எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகன் ஆவதை தடுக்கும் பொருட்டு வழங்கப்படும் உரிமை **இயல்புக் குடியுரிமை** எனப்படும்.

www.kalvinews.com

- பூர்வீகம் பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு நாட்டினர் இயல்பாகப் பெறும் உரிமை **நாட்டுரிமை** எனப்படும்.
- ஒரு நாட்டின் அரசாங்கத்தால் தனி ஒருவருக்கு வழங்கப்படும் உரிமை **குடியுரிமை** எனப்படும்.
- ஒருவர் தனது **நாட்டு உரிமையை மாற்ற முடியாது**.
- ஒருவர் தனது **குடியுரிமையை மாற்ற முடியும்.**
- **இரட்டை குடியுரிமை** என்பது **தேசிய குடியுரிமை** மற்றும் **மாநில குடியுரிமையைக்** குறிக்கும்.
- ஒற்றைக் குடியுரிமை வழங்கும் நாடு - **இந்தியா**
- இரட்டைக் குடியுரிமை வழங்கும் நாடுகள் - **அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஸ்விட்சர்லாந்து.**
- வெளிநாட்டு குடியுரிமையை கொண்ட இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவர்களுக்கு இந்தியாவில் **வாக்களிக்கும் உரிமை இல்லை.**
- **முதல் குடிமகன் நாட்டின் குடியரசுத் தலைவர் ஆவார்.**

**வெளிநாடு வாழ் இந்தியர் NRI - (Non Resident Indian)**

- இந்தியக் கடவுச் சீட்டினைப் (Passport) பெற்று வெளிநாட்டில் வசிக்கும் இந்தியக் குடிமக்கள்.

**இந்திய பூர்வ குடியினர் PIO (Person of Indian Origin)**

- இந்தியக் குடியுரிமை உடைய மூதாதையர்களைக் கொண்ட வெளிநாட்டில் குடியுரிமை (பாகிஸ்தான், வங்காளதேசம், ஸ்ரீலங்கா, பூடான், ஆப்கானிஸ்தான், சீனா, நேபாளம் நீங்கலாக) பெற்றிருக்கும் ஒருவர் இந்திய பூர்வ குடியினர் ஆவார். 2015 ஜனவரி 9 முதல் PIO முறை OCI முறையுடன் இணைக்கப்பட்டது

**வெளிநாட்டுக் குடியுரிமையைக் கொண்ட இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவர் (OCI - Overseas Citizen of India)**

- இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டு குடிமகன் (பாகிஸ்தான், வங்காளதேசம், நீங்கலாக) காலவரையின்றி இந்தியாவில் வசிப்பதற்கும், பணி செய்வதற்கும் OCI அட்டை பெறுகிறார். இவர்களுக்கு இந்தியாவில் வாக்களிக்கும் உரிமை இல்லை.

**இந்தியக் குடிமக்களின் உரிமைகள்**

- அடிப்படை உரிமைகள்
- வாக்களிக்கும் உரிமை
- அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உரிமை
- பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் உறுப்பினராகவதற்கான உரிமை

**இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் (42 வது சட்டத்திருத்தம்)**

- நேர்மையாக வரி செலுத்துதல்
- மற்றவர்களின் கருத்துக்களுக்கும், நம்பிக்கைகளுக்கும், உரிமைகளுக்கும் மதிப்பளித்தல்.
- நாட்டின் பாதுகாப்பிற்கு செயலாற்றுதல்.
- சட்டங்களை மதித்தல் மற்றும் கீழ்படிதல்.

**குடிமக்கள் அல்லாதவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்**

1. **அந்நியர் (Alien):** ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் அந்நியர் எனப்படுவர்.
2. **குடியேறியவர் (Immigrant):** ஒரு நாட்டில் எவ்வித தடையும் இன்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணி புரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் குடியேறியவர் எனப்படுவர்.

www.kalvinews.com

**வெளிநாடு வாழ் இந்தியர் தினம் (பிரவாசி பாரதிய தினம்)**

- நாட்டின் வளர்ச்சிக்காக வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்களிப்பைப் பெறும் வகையில், இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரவாசி பாரதிய தினம் கொண்டாடப்படுகிறது
- மகாத்மா காந்தி தென்ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வருகைபுரிந்த தினமான ஜனவரி 9 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது

**உலகளாவிய குடியுரிமை**

- ஒரு குறிப்பிட்ட நாட்டின் குடிமகன் என்பதைவிட உலகளாவிய சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அங்கம் என்பதே உலகளாவிய குடியுரிமை ஆகும்
- புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் இன்றைய இளைஞர்களின் ஈடுபாட்டையும், பங்களிப்பையும் பெறுவதே இதன் நோக்கம் ஆகும்.

**பயிற்சி வினாக்கள்:**

1. “சிவிஸ்” என்னும் சொல் ________ மொழியில் இருந்து பெறப்பட்டது.

   (1) கிரேக்கம் (2) இலத்தீன் (3) பிரெஞ்சு (4) ஆங்கிலம்

2. “Civis” என்னும் இலத்தீன் சொல்லின் பொருள் ________.

   (1) குடியிருப்பாளர் (2) நாடுகளின் உறுப்பினர்
   (3) 1 மற்றும் 2 (4) இவற்றில் எதுவுமில்லை

3. கீழ்க்காணும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

   கூற்று 1: ஒருவர் பிறப்பால் பெறக்கூடிய உரிமை ஒற்றைக் குடியுரிமை எனப்படும்.
   கூற்று 2: ஒருவர் விண்ணப்பித்து பெறும் குடியுரிமை இயல்பு குடியுரிமை எனப்படும்.

   (1) கூற்று 1 சரி; கூற்று 2 சரி (2) கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
   (3) கூற்று 1 தவறு; கூற்று 2 சரி (4) கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு

4. பொருத்துக.

   | | | |
   |---|---|---|
   | i. இந்தியக் குடியுரிமைச் சட்டம் | - | a. 42-வது சட்டத்திருத்தம் |
   | ii. இந்தியாவுடன் பாண்டிச்சேரி இணைந்த ஆண்டு | - | b. ஜனவரி 9 |
   | iii. அடிப்படை கடமைகள் | - | c. 1955 |
   | iv. பிரவாசி பாரதிய தினம் | - | d. 1962 |

   (1) i - b ii - c iii - d iv - a (2) i - b ii - a iii - d iv - c
   (3) i - c ii - a iii - b iv - d **(4) i - c ii - d iii - a iv - b**

5. கீழ்காணும் கூற்றுகளில் தவறானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்:

   (i) ஒருவர் தனது பிறப்பால் இந்தியக் குடியுரிமையை பெறலாம்.
   (ii) ஒருவர் தனது வம்சாவளியில் இந்தியக் குடியுரிமையை பெற முடியாது.
   (iii) ஒருவர் விண்ணப்பித்து அதன் மூலம் இந்தியக் குடியுரிமையை பெறலாம்.
   (iv) பிரதேசங்களை இணைப்பதன் மூலம் ஒருவருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட மாட்டாது.

   (1) (i) மற்றும் (ii) (2) (ii) மற்றும் (iii) (3) (iii) மற்றும் (iv) (4) (ii) மற்றும் (iv)

www.kalvinews.com

6. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு நபர் எந்த நாட்டில் வசித்தாலும், இந்தியாவில் _______ ஆண்டுகள் வசித்த பிறகு இந்திய குடியுரிமையைப் பெற விண்ணப்பிக்க முடியும்.
(1) 7 ஆண்டுகள் (2) 8 ஆண்டுகள் (3) 9 ஆண்டுகள் (4) 10 ஆண்டுகள்

7. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?
(1) பிறப்பின் மூலம் (2) சொத்துரிமை பெறுவதன் மூலம்
(3) வம்சாவளியின் மூலம் (4) இயல்புக் குடியுரிமை மூலம்

8. கூற்று: 1962ஆம் ஆண்டு பாண்டிச்சேரி இந்திய யூனியனுடன் இணைந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் இந்திய குடிமக்களாயினர்.
காரணம்: 1955 இந்திய குடியுரிமை சட்டத்தின் படி பிரதேசங்களை இணைத்தல் என்பதன் அடிப்படையில் அவர்கள் இந்திய குடிமக்களாக மாறினர்.
(1) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்
(2) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
(3) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி
(4) காரணம் கூற்று இரண்டும் தவறு

9. ஒரு இந்திய குடிமகனின் குடியுரிமை கீழ்க்கண்ட எதனால் முடிவுக்கு வருகிறது?
(i) ஒருவர் வேறு நாட்டு குடியுரிமையை பெறும் போது
(ii) பதிவு செய்வதன் மூலம்
(iii) தவறான மோசடி வழிகளில் ஒருவர் குடியுரிமை பெற்றார் என்று அரசு கருதும்போது
(iv) போர் நடைபெறும்போது எதிரி நாட்டிடம் இந்தியக் குடிமகன் வணிகம் செய்யும்போது
(1) i மற்றும் ii சரி (2) i மற்றும் iii சரி
(3) i, ii, மற்றும் iv சரி (4) i, ii, மற்றும் iii சரி

10. பூர்வீகம், பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவர் பெரும் குடியுரிமை _______ எனப்படும்.
(1) சொத்துரிமை (2) இயல்புக் குடியுரிமை
(3) நாட்டுரிமை (4) குடியுரிமை

11. ஒரு நாட்டின் அரசாங்கத்தால் தனி ஒருவருக்கு வழங்கப்படும் உரிமை _______.
(1) நாட்டுரிமை (2) குடியுரிமை
(3) 1 மற்றும் 2 (4) ஏதுமில்லை

12. கீழ்காணும் கூற்றுகளில் சரியான கூற்று / கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்:
i) ஒருவர் தனது நாட்டு உரிமையை மாற்ற முடியும்.
ii) ஒருவர் தனது குடியுரிமையை மாற்ற முடியாது.
(1) i சரி; ii சரி (2) i சரி; ii தவறு
(3) i தவறு; ii சரி (4) i தவறு; ii தவறு

13. கீழ்க்கண்டவற்றுள் எவை இரட்டை குடியுரிமையின் கீழ் வருவன?
(1) தேசிய குடியுரிமை (2) மாநில குடியுரிமை
(3) இவை இரண்டும் (4) மேற்கூறிய எதுவும் இல்லை

www.kalvinews.com

14. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதி மற்றும் பிரிவுகள் குடியுரிமையைப் பற்றி குறிப்பிடுகின்றன?

(1) பகுதி I; பிரிவு 5 - 11
(2) பகுதி II; பிரிவு 5 - 11
(3) பகுதி III; பிரிவு 5 - 11
(4) பகுதி IV; பிரிவு 5 - 11

15. கீழ்கண்ட கூற்று / கூற்றுகளில் சரியான கூற்றைத் கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்:

i) இந்தியா தனது குடிமக்களுக்கு இரட்டைக் குடியுரிமையை வழங்குகிறது
ii) சுவிட்சர்லாந்து தனது குடிமக்களுக்கு ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.

(1) i சரி; ii சரி
(2) i சரி; ii தவறு
(3) i தவறு; ii சரி
(4) i தவறு; ii தவறு

16. இந்தியாவின் முதல் குடிமகன் யார்?

(1) பிரதமர்
(2) குடியரசுத் தலைவர்
(3) முதலமைச்சர்
(4) இந்திய தலைமை நீதிபதி

17. இந்தியக் கடவுச்சீட்டினை (Passport) பெற்று வெளிநாட்டில் வாழும் இந்தியர் _______ என அழைக்கப்படுகிறார்.

(1) உள்நாடு வாழ் இந்தியர்
(2) வெளிநாடு வாழ் இந்தியர்
(3) அந்நியர்கள்
(4) மேற்கூறிய எதுவும் இல்லை

18. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானவற்றை தேர்ந்தெடுக்கவும்:

a) அமெரிக்க ஐக்கிய நாடுகள் இரட்டைக் குடியுரிமையை வழங்குகிறது.
b) வெளிநாட்டு குடியுரிமை கொண்டு இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவர்களுக்கு இந்தியாவில் வாக்குரிமை உண்டு.

(1) i சரி; ii சரி
(2) i சரி; ii தவறு
(3) i தவறு; ii சரி
(4) i தவறு; ii தவறு

19. இந்திய அரசியலமைப்பு 42வது சட்ட திருத்தத்தின்படி இந்தியக் குடிமக்களுக்கான அடிப்படை _______ வரையறுக்கப்பட்டுள்ளன.

(1) உரிமைகள்
(2) கடமைகள்
(3) மேற்கூறிய இரண்டும்
(4) மேற்கூறிய எதுவும் இல்லை

20. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்

கூற்று 1: இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட இங்கிலாந்து நாட்டு குடிமகன் OCI அட்டையை பெற்றிருக்கும் பட்சத்தில் அவர் இந்தியாவில் வாக்களிக்கலாம்.

கூற்று 2: அமெரிக்காவில் வசிக்கும் வெளிநாடு வாழ் இந்தியர் (NRI) ஒருவர் இந்தியத் தேர்தலில், நேரில் வந்து இந்தியாவில் வாக்களிக்கலாம்.

(1) கூற்று 1 சரி; கூற்று 2 சரி
(2) கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
(3) கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
(4) கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு

21. கீழ்க்கண்டவற்றுள் எது ஒரு இந்திய குடிமகனின் அடிப்படை கடமைகளுள் ஒன்று அல்ல?

(1) நேர்மையாக வரி செலுத்தாமை
(2) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்
(3) சட்டங்களை மதித்தல்
(4) நாட்டின் பாதுகாப்பிற்கு செயலாற்றுதல்

www.kalvinews.com

22. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்:

கூற்று 1: ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் அந்நியர் எனப்படுவர்.

கூற்று 2: ஒரு நாட்டில் எவ்வித தடையுமின்றி நிரந்தரமாக வசிப்பதற்கும் பணி புரிவதற்கும் உரிமை பெறும் குடிமகன் குடியேறியவர் எனப்படுகிறார்.

(1) கூற்று 1 மட்டும் (2) கூற்று 2 மட்டும்

(3) மேற்கூறிய எதுவும் இல்லை (4) மேற்கூறிய இரண்டும்

23. இன்றைய இளைஞர்களை நவீன சமுதாயத்தை வடிவமைப்பதில் பங்கேற்க வைப்பது _______ நோக்கம் ஆகும்.

(1) இயற்கை குடியுரிமையின் (2) ஒற்றைக் குடியுரிமையின்

(3) உலகளாவிய குடியுரிமையின் (4) இரட்டைக் குடியுரிமையின்

24. கூற்று: ஒவ்வொரு வருடமும் ஜனவரி 9 ஆம் நாள் வெளிநாடு வாழ் இந்தியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

காரணம்: இது மகாத்மா காந்தி அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வருகை புரிந்த நாள்.

(1) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

(2) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல

(3) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

(4) காரணம் கூற்று இரண்டும் தவறு

25. ஒவ்வொருவரும் உலகளாவிய சமுதாயத்தின் அங்கம் என்பது _______ ஆகும்.

(1) இயற்கை குடியுரிமை (2) ஒற்றைக் குடியுரிமை

(3) உலகளாவிய குடியுரிமை (4) இரட்டைக்குடியுரிமை

26. "NRI" என்பதன் விரிவாக்கம் _______.

(1) Non - Resident Indian (2) Non - Rescue Indian

(3) Non - Region Indian (4) Non - Residential Indian

27. "PIO" என்பதன் விரிவாக்கம் _______.

(1) Person of Indian Ocean (2) Person of Indian Orbit

(3) Person of Indian Organization (4) Person of Indian Origin

28. "OCI" என்பதன் விரிவாக்கம் _______.

(1) Overseas Citizen of India (2) Overseas Citizen of Indonesia

(3) Overseas Citizen of Iraq (4) Overseas Citizen of Isrel

29. இந்தியக் குடியுரிமைச் சட்டம் குடியுரிமை பெறுவதற்கு எத்தனை வழிமுறைகளைப் பரிந்துரைக்கிறது?

(1) 5 (2) 3 (3) 7 (4) 10

30. இந்தியக் குடிமகனை திருமணம் செய்த ஒருவர் குடியுரிமை பெற விண்ணப்பிக்கும் முன் எத்தனை ஆண்டுகள் இந்தியாவில் வசித்தவராக இருக்க வேண்டும்?

(1) 5 (2) 6 (3) 7 (4) 4

www.kalvinews.com

31. இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் இடம்பெறாத மொழி ______.
(1) ஆங்கிலம் (2) தமிழ் (3) கன்னடம் (4) கொங்கணி

32. இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள மொழிகளின் எண்ணிக்கை ______.
(1) 22 (2) 23 (3) 24 (4) 25

33. _______ முதல் _______ வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருந்தாலும், அக்குழந்தை பிறப்பால் இந்தியக் குடியுரிமையைப் பெறுகின்றது.
(1) 1947 ஆகஸ்ட் 15, 1987 ஜூன் 30
(2) 1950 ஜனவரி 26, 1987 ஜூன் 30
(3) 1987 ஜூலை 1, 2004 டிசம்பர் 2
(4) 1950 ஜனவரி 26, 1978 ஜூன் 30

34. இந்திய அரசின் எந்த துறை அமைச்சகத்தால், பிரவாசி பாரதிய தினம் கொண்டாடப்படுகின்றது?
(1) நிதித்துறை (2) வெளியுறவுத் துறை
(3) நீதித்துறை (4) மனிதவள மேம்பாட்டுத் துறை

35. வெளிநாட்டு குடியுரிமையைக் கொண்டு இந்தியாவில் வசிப்பதற்கான அட்டையை வைத்திருப்பவர் ______.
(1) NRI (2) PIO (3) OCI (4) PCI

36. மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா வந்த தினம் ______.
(1) ஆகஸ்ட் 15 (2) ஜனவரி 9
(3) ஜனவரி 26 (4) அக்டோபர் 2

37. கூற்று: இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரவாசி பாரதிய தினம் கொண்டாடப்படுகிறது.
காரணம் : இந்தியாவின் வளர்ச்சிக்காக வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்களிப்பைப் பெறுவதற்காகக் கொண்டாடப்படுகின்றது.
(1) கூற்று சரி, காரணம் தவறு
(2) கூற்று மற்றும் காரணம் சரி
(3) கூற்று தவறு, காரணம் சரி
(4) கூற்று மற்றும் காரணம் தவறு

38. கூற்று : கனடாவில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதி பிறந்த குழந்தைக்கு விண்ணப்பிப்பதன் மூலம் இந்திய அரசு வம்சாவளி குடியுரிமையை வழங்குகிறது.
காரணம் : குழந்தையின் தாய் இந்தியக் குடிமகளாக இருப்பதன் மூலம் வம்சாவளி குடியுரிமை பெறுகிறார்.
(1) கூற்று சரி, காரணம் தவறு
(2) கூற்று தவறு, காரணம் சரி
(3) கூற்று மற்றும் காரணம் சரி
(4) கூற்று மற்றும் காரணம் தவறு

www.kalvinews.com

39. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?
    (1) ஒருவர் வெளிநாட்டுக் குடியுரிமையைத் துறப்பதன் மூலம் அவர் இயல்புக் குடியுரிமையைப் பெறுகின்றார்.
    (2) ஒரு அரசால் அளிக்கப்பட்ட சட்ட உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிக்கும் ஒருவர் அந்நியர் எனப்படுகிறார்.
    (3) பிறப்பால் பெறக்கூடிய குடியுரிமை இயற்கைக் குடியுரிமை.
    (4) விண்ணப்பித்துப் பெறும் குடியுரிமை இயல்புக் குடியுரிமை.

40. இந்திய அரசால் PIO முறை திரும்பப் பெறப்பட்டு OCI முறையுடன் இணைக்கப்பட்ட ஆண்டு ______.
    (1) 2004 டிசம்பர் 3
    (2) 2015 ஜனவரி 26
    (3) 2019 ஜனவரி 5
    (4) 2015 ஜனவரி 9

41. ஒரு நாட்டில் எந்தவித தடையுமின்றி நிரந்தரமாக வசிப்பதற்கும் பணிபுரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் ______ எனப்படுகிறார். (NMMS 2019-20)
    (1) குடிமகன்
    (2) அந்நியர்
    (3) குடியேறியவர்
    (4) இந்தியாவில் வசிக்கும் வெளிநாட்டுக் குடியுரிமைப் பெற்றவர்

**விடைகள்**

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (2) | **11** | (2) | **21** | (1) | **31** | (1) | **41** | (3) |
| **2** | (3) | **12** | (4) | **22** | (1) | **32** | (1) | | |
| **3** | (3) | **13** | (3 | **23** | (3) | **33** | (2) | | |
| **4** | (4) | **14** | (2) | **24** | (4) | **34** | (2) | | |
| **5** | (4) | **15** | (4) | **25** | (3) | **35** | (3) | | |
| **6** | (1) | **16** | (2) | **26** | (1) | **36** | (2) | | |
| **7** | (2) | **17** | (2) | **27** | (4) | **37** | (2) | | |
| **8** | (1) | **18** | (2) | **28** | (1) | **38** | (3) | | |
| **9** | (4) | **19** | (2) | **29** | (1) | **39** | (2) | | |
| **10** | (3) | **20** | (3) | **30** | (3) | **40** | (4) | | |

www.kalvinews.com

## வகுப்பு - 8 - குடிமையியல்

### 1. சமயச்சார்பின்மையைப் புரிந்து கொள்ளுதல்

**தொகுப்பு:**
**திரு.நா.சுரேஷ்,** M.Sc.,B.Ed.,
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, குருமந்தூர்,**
**ஈரோடு மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திருமதி.க.சாந்தி.** M.Sc., B.Ed.,
**பட்டதாரி ஆசிரியை (கணிதம்),**
**ஸ்ரீசிவசைலநாதா நடுநிலைப்பள்ளி,**
**நெடுவயல், தென்காசி மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- இந்தியா பல சமய மற்றும் **கலாச்சார, பண்பாட்டு** நம்பிக்கைகள் கொண்ட நாடு.
- இந்து, சமணம், புத்தம், சீக்கியம் என **நான்கு** பெரும் சமயங்களின் பிறப்பிடமாகும்.

**சமயச்சார்பின்மையின் நோக்கம்:**

- சமய நம்பிக்கை கொண்டவர்களும் மற்றும் எந்த சமயத்தையும் சாராதவர்களும் அமைதியுடன் இணக்கமாக வாழ்வதற்கான சமூகத்தை உருவாக்குவது என்பதாகும்.
- சமயச் சார்பின்மை என்ற சொல் லத்தீன் வார்த்தையான செகுலம் (Saeculam) என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.
- இதன் பொருள் காலம் (an age) அல்லது உள்ளுணர்வு காலம் (The sprit of an age).
- ஆங்கிலேய பத்திரிக்கை எழுத்தாளரான ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோக் என்பவர் Secularism என்ற பதத்தை உருவாக்கினார்.
- **இராஜாராம் மோகன் ராய்**, **சர் சையது அகமது கான்**, **இரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி** மற்றும் **டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்** போன்ற தனி நபர்கள் இந்திய சமூகத்தின் பல்வேறு நிலைகளில் சமயச் சார்பின்மையை நிலைநாட்ட பங்களித்துள்ளனர்.
- இந்தியா போன்ற பல்வேறு சமய பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்குச் சமயச் சார்பின்மை என்பது மதிப்பு மிக்க ஒன்றாகும்.

**சமயச்சார்பின்மை:**

- சமயச் சார்பின்மை என்பது பிற மதங்களின் மீது சகிப்புத்தன்மையான அணுகுமுறை மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்த குடிமக்களுடன் அமைதியாக இணங்கி வாழும் ஒரு மனப்பாங்கு ஆகும்.
- சமயச் சார்பின்மை அனைத்து சமய சமூகங்களுடனும் அரசு கொண்டுள்ள **நடுநிலைத்தன்மை** மற்றும் **சமத்துவக் கொள்கையாகும்.**
- சமயச்சார்பின்மை என்பது **அரசையும், மதத்தையும்** தனித்தனியாக பிரிக்கும் கோட்பாடாகும்.
- பரந்த அளவில் கூறுவதென்றால் அரசானது சமய விவகாரங்களிலோ, அல்லது சமயமானது அரசின் நடவடிக்கைகளிலோ தலையிடாது இருத்தலாகும்.
- இதன் பொருள் ஒவ்வொரு குடிமகனும் தனது மனசாட்சியின்படி **சுதந்திரமாக** அவரது **நம்பிக்கையை பரப்புதல்**, **பின்பற்றுதல்** மற்றும் **சமயத்தின் மீது இருக்கும் நம்பிக்கையை வெளியிடுதல், மாற்றிக்கொள்ளுதல்** அல்லது **இல்லாமல் இருத்தல்** என்பதாகும்.

www.kalvinews.com

- **நாத்திகம்** : கடவுள் அல்லது கடவுள்கள் மீது நம்பிக்கையற்றிருத்தல்.
- சமயச்சார்பின்மை: அரசோ, சமயமோ, ஒன்று மற்றொன்றின் விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.

**சமயச் சார்பின்மையின் நோக்கங்கள்:**

- ஒரு சமயம் சார்ந்த குழு மற்றொரு சமயக் குழுவின் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
- ஒரு சமயத்தைச் சார்ந்து சில உறுப்பினர்கள் அதே சமயத்தைச் சார்ந்த மற்ற உறுப்பினர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
- அரசானது எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் பின்பற்ற வலியுறுத்தாமல் இருப்பது.
- தனிநபர்களின் சமய சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பது.
- **"சமயம் நமக்குப் பகைமையைப் போதிக்கவில்லை, நாம் அனைவரும் இந்தியர்கள் மற்றும் இந்தியா நமது வீடு" என்று கூறியவர் கவிஞர் <u>இக்பால்.</u>**

**அசோகரின் 12 ஆவது பாறை அரசாணை:**

- அரசானது எந்த ஒரு மதத்தைச் சார்ந்த பிரிவினருக்கும் எதிராக குற்றம் சாட்டாது என்று அறிவித்த <u>முதல் பேரரசர் **அசோகர்**</u> **(கி.மு. 3 ஆம் நூற்றாண்டு).**

**சமயச்சார்பற்ற நாட்டின் பண்புகள்**

| சுதந்திர கோட்பாடு | சமத்துவ கோட்பாடு | நடுநிலைக் கோட்பாடு |
|---|---|---|
| எந்த சமயத்தையும் பின்பற்ற அரசு அனுமதித்தல். | எந்த ஒரு சமயத்திற்கும் மற்ற வற்றிற்கு மேலாக முன்னுரிமை அளிக்காதிருத்தல். | சமய விவகாரங்களில் அரசு நடுநிலைமை. |

- கல்விக் கூடங்களில் முற்றிலும் சமய போதனைகள் இருத்தல் கூடாது.
- எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கும் ஆதரவாக எந்த **வரிகளும் வசூலிப்பதில்லை.**
- மக்களிடையே **அமைதி** மற்றும் **நல்லிணக்கத்தை** பராமரிக்க நமக்குச் சமயச்சார்பற்ற நாடு அவசியமாகும்.
- சம உரிமைகளையும் வழங்கும் மக்களாட்சியின் ஒரு பகுதி **சமயச்சார்பின்மை** ஆகும்.
- அக்பரின் மத சகிப்புத்தன்மையினை எடுத்துக்காட்டுவது....

✓ **தீன் - இலாஹி**

✓ **சுல் - இ - குல்**

- **தீன் - இலாஹி** என்பதன் பொருள் **தெய்வீக நம்பிக்கை.**
- **சுல் - இ - குல்** என்பதன் பொருள் **அனைத்து சமயத்தினரிடையே அமைதி மற்றும் நல்லிணக்கம்.**

**அரசியலமைப்பும் சமயச் சார்பின்மையும்:**

- சமயச் சார்பின்மை என்பது அரசியலைமைப்பின் ஓர் அங்கமாகும்.
- **சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை.**
- **1976 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 42 வது சட்ட திருத்தத்தின் மூலம் முகவுரையில் சமயச் சார்பற்ற என்ற சொல் சேர்க்கப்பட்டது.**

www.kalvinews.com

- இந்தியா ஒரு இறையாண்மை வாய்ந்த, சமதர்ம, சமயச் சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு நாடாகும்.
- நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கமானது, தேசிய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், தனி மனித மாண்புடனும், கண்ணியத்துடனும் ஊக்குவிப்பதாகும்.
- நாட்டிற்கான தனி சமயம் ஏதும் இந்தியாவில் இல்லை.
- எந்த சமயத்திற்கும் அரசு முன்னுரிமை அளிப்பதில்லை.
- சமயச் சார்பற்ற நாடு என்பது ஒரு நாடு எந்தவொரு சமயத்தையும் அதிகாரப்பூர்வமாக ஊக்குவிக்காமல், ஒவ்வொரு சமயத்தையும் சமமாக நடத்துதல் என்பதாகும்.
- **இந்திய அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம்** நாட்டு குடிமக்கள் மட்டுமின்றி **இந்தியாவில் வாழும் வெளி நாட்டவருக்கும் பொருந்தும்** என்பதற்கு உதாரணமாக, 1954 ல் நடைபெற்ற பம்பாய் மாநிலம், ரத்திலால் பன்சந்த் வழக்கு ஆகும்.
- கஜூராஹோவில் காணப்படும் 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்து கோவிலில், வழக்கமான சிகரத்திற்குப் பதிலாக இந்து பாணியிலான கோபுரம், சமண விதானம், புத்த ஸ்தூபி மற்றும் இஸ்லாமிய பாணியிலான குவிமாடம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**இந்திய அரசியலமைப்பின் தனிச் சிறப்புக் கூறுகள்:**

- அரசானது எந்த ஒரு சமயத்தாலும் தன்னை அடையாளம் காணாது அல்லது சமயத்தால் கட்டுபடுத்தப்படாததாகவும் இருக்கும்.
- ஒவ்வொருவரும் அவரது விருப்பதிற்கேற்ப எந்த ஒரு சமயத்தையும் பின்பற்றும் உரிமையை அரசு உறுதி செய்கிறது.
- எந்த சமயத்திற்கும் அரசு முன்னுரிமை அளிப்பதில்லை.
- எந்த ஒரு நபருக்கும் அவரது சமய நம்பிக்கையின் காரணமாக அரசு எவ்வித பாகுபாடும் காட்டாது.
- இது இந்திய மக்களிடையே சகோதரத்துவத்தை உருவாக்குவதோடு தனி மனித மாண்பிற்கும், நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் உறுதியளிக்கிறது.
- சமயச்சார்பற்ற இந்திய நாடானது அனைத்து சமய விழாக்களுக்கும் பொது விடுமுறை அறிவிக்கிறது.

**அரசியலைப்புப் பிரிவுகளின் அடித்தளம்:**

- **பிரிவு** 15 : சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடை செய்கிறது.
- **பிரிவு** 16: பொது வேலை வாய்ப்பில் சமமான வாய்ப்பளித்தல்.
- **பிரிவு** 25 (1): எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை வழங்குகிறது.
- **பிரிவு** 26: சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம்.
- **பிரிவு** 27: எந்த ஒரு சமயத்தையும் ஆதரிக்க அரசானது எந்த ஒரு குடிமகனையும் வரி செலுத்துமாறு கட்டாயப்படுத்தக் கூடாது.
- **பிரிவு** 28: சில கல்வி நிறுவனங்களில் மதம் சார்ந்து நடைபெறும் சமய போதனைகள் அல்லது சமய வழிபாடு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருக்கும் உரிமை.
- **பிரிவு** 29 (2): அரசு உதவி பெறும் நிறுவனங்களில் பாகுபாடு காட்ட தடை.
- கல்வியில் சமயச்சார்பின்மை என்பது பொதுக்கல்வியை அனைத்து சமய ஆதிக்கங்களில் இருந்து விடுவிப்பதாகும்.

www.kalvinews.com

**சமயச்சார்பற்ற கல்வியின் நோக்கங்கள்:**

- குறுகிய மனப்பான்மையைப் போக்குவதற்கும், சக்தி வாய்ந்த ஆற்றல் மற்றும் அறிவான நோக்கத்தினை உருவாக்குதல்.
- தார்மீக மற்றும் மனிதநேய பார்வையை உருவாக்குதல்.
- இளைஞர்களை நல்ல குடிமக்களாக்க பயிற்சி அளித்தல்.
- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் கூட்டுறவு வாழ்க்கை போன்ற மக்களாட்சியின் மதிப்புகளை பலப்படுத்துதல்.
- வாழ்க்கை குறித்த பரந்த பார்வையை அளித்தல்.
- பிறரைப் பாராட்டுதல் மற்றும் மற்றவர் நிலையில் இருந்து புரிந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்த்தல்.
- அன்பு, சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு, சமத்துவம், மற்றும் இரக்க உணர்வை வளர்த்தல்.
- பொருள் முதல் வாதக் கொள்கை மற்றும் ஆன்மீக கொள்கையை ஒருங்கிணைத்தல்.
- **அக்பரின் கல்லறை - சிக்கந்தரா (ஆக்ரா அருகில்)**
- இஸ்லாம், இந்து சமயம் உள்ளிட்ட பல்வேறு சமயங்களைச் சார்ந்த கூறுகள் அவரது கல்லறையில் இடம்பெற வேண்டுமென அக்பர் வலியுறுத்தினார்.

**பயிற்சி வினாக்கள்**

1. அசோகரின் சமயச்சார்பின்மையை பற்றி அறிந்து கொள்ள உதவும் கல்வெட்டு ________ அரசாணை.
   1. 10 வது பாறை　　2. 32 வது பாறை
   3. 12 வது பாறை　　4. 356 வது பாறை

2. சமயச் சார்பற்ற நாட்டில் எவருக்கும் தனிப்பட்ட முறையில் ________ அளிப்பதில்லை.
   1. பணம்　　2. நட்பு　　3. சலுகை　　4. தண்டனை

3. சமய நடைமுறைகள் மற்றும் நம்பிக்கைகள் அடிப்படையில் அரசு ________ காட்டுவதில்லை.
   1. பாகுபாடு　　2. வேடிக்கை　　3. தனி உரிமை　　4. முரண்பாடு

4. சமயச்சார்பின்மை என்பது ________.
   1. அரசு அனைத்து சமயத்திற்கும் எதிரானது
   2. அரசு ஒரே ஒரு சமயத்தை மட்டும் ஏற்றுக்கொள்கிறது
   3. எந்த சமயத்தைச் சார்ந்த குடிமகனும் சகிப்புத்தன்மையுடன் அமைதியாக இணக்கமாக வாழ்தல்
   4. இவற்றுள் எதுவுமில்லை

5. முகலாய பேரரசர்களில் மதசகிப்புத் தன்மை கொள்கையைப் பின்பற்றியவர் ________.
   1. ஔரங்கசீப்　　2. ஷாஜகான்
   3. பாபர்　　4. அக்பர்

6. சமயச்சார்பின்மை என்பது ________.
   1. மதப்பற்று　　2. அரசியலமைப்பின் ஒரு அங்கம்
   3. மதவாதம்　　4. அரசியல் கொள்கை

www.kalvinews.com

7. சமயச்சார்பின்மை இந்தியாவில் _______ வளர்ச்சிக்கான அடிப்படை கொள்கைகளில் ஒன்றாகும்.

1. மதம் 2. மக்கள் 3. இனம் 4. மக்களாட்சி

8. சமயசார்பற்ற என்ற சொல்லானது _______ ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்பில் குறிப்பிடவில்லை.

1. 1947 2. 1919 3. 1951 4. 1950

9. _______ ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட _______ சட்டத்திருத்தத்தின் மூலம் முகவுரையில் சமயச்சார்பற்ற என்ற சொல் சேர்க்கப்பட்டது

1. 1975, 42 2. 1950, 35 3. 1976, 42 4. 1965, 35

10. இந்தியா ஒரு _________ கொண்ட நாடாகும்.

1. பல்வேறு சமய நம்பிக்கை 2. பல்வேறு பண்பாட்டு நம்பிக்கை
3. (1) மற்றும் (2) 4. இவற்றுள் எதுவுமில்லை

11. நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கம் _______.

1. ஒற்றுமையும் ஒருமைப்பாடும் 2. சகிப்புத் தன்மை
3. தனிமனித மாண்பு 4. இவை அனைத்தும்

12. எந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் இந்தியாவில் வாழும் வெளிநாட்டவரும் சமய சுதந்திரத்திற்கு உறுதி அளித்தது?

1. மோதிலால் - ரஹ்மான் 2. ரத்திலால் - பன்சந்த்
3. ராபர்ட் - கிளைமண்ட் 4. பம்பாய் மாநிலம் - ரத்திலால் பன்சந்த்

13. ரத்திலால் பன்சந்த் வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற ஆண்டு ________.

1. 1954 2. 1965 3. 1976 4. 1950

14. ரத்திலால் பன்சந்த் எந்த மாநிலத்திற்கு எதிராக வழக்கு தொடுத்தார்?

1. சென்னை 2. பம்பாய்
3. உத்திரபிரதேசம் 4. ஆந்திரபிரதேசம்

15. கஜுராஹோவில் உள்ள 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்து கோயிலின் அமைப்பு

1. இந்து - a. குவிமாடம்
2. சமணம் - b. கோபுரம்
3. புத்தம் - c. விதானம்
4. இஸ்லாம் - d. ஸ்தூபி

1. 1 - c 2 - d 3 - a 4 - b
2. 1 - b 2 - c 3 - d 4 - a
3. 1 - d 3 - c 4 - a 2 - b
4. 1 - a 2 - c 3 - b 4 - d

16. கஜுராஹோவில் உள்ள சமயச்சார்பின்மையைப் பிரதிபலிக்கும் இந்து கோவில் எந்த நூற்றாண்டைச் சார்ந்தது?

1. 8 2. 20 3. 18 4. 19

www.kalvinews.com

17. "சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடுகளை தடை செய்கிறது", இது குறிப்பிடும் அரசியலமைப்பின் பிரிவு எது?

    1. பிரிவு 16    2. பிரிவு 15    3. பிரிவு 20    4. பிரிவு 25

18. "பொது வேலைவாய்ப்பில் சமமான வாய்ப்பளித்தல்" பற்றி கூறும் இது அரசியலமைப்பின் எந்த பிரிவு?

    1. பிரிவு 15    2. பிரிவு 17    3. பிரிவு 16    4. பிரிவு 45

19. பொருத்துக

| விளக்கம் | | பிரிவு |
|---|---|---|
| a. எந்த சமயத்தையும் ஏற்றல் பின்பற்றுதல் | - | 1. 26 |
| b. சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம் | - | 2. 28 |
| c. சமயத்திற்கு வரி செலுத்த வற்புறுத்தக் கூடாது | - | 3. 25(1) |
| d. கல்வி நிறுவனங்களில் சமய போதனைக் கூடாது | - | 4. 29(2) |
| e. அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பாகுபாடுகாட்ட தடை | - | 5. 27 |

    1. a - 1  b - 3  c - 4  d - 2  e - 5
    2. a - 3  b - 1  c - 4  d - 5  e - 2
    3. a - 3  b - 1  c - 5  d - 2  e - 4
    4. a - 2  b - 3  c - 4  d - 1  e - 5

20. இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு ________.

    1. 1951    2.1976    3.1974    4.1967

21. அக்பரின் கல்லறை அமைவிடம் _______.

    1. பம்பாய்    2. சிக்கந்தரா
    3. புல்வாமா    4. பதேபூர் சிக்கிரி

22. பின்வருவனவற்றுள் எது இந்தியாவை சமயச்சார்பற்ற நாடாக விவரிக்கிறது?

    1. அடிப்படை உரிமைகள்    2. அடிப்படை கடமைகள்
    3. அரசு நெறிமுறைபடுத்தும் கொள்கைகள்    4. அரசியலமைப்பின் முகவுரை

23. சமயச் சுதந்திர உரிமை எதனுடன் தொடர்புடையது?

    1. நீதித்துறை    2. பாராளுமன்றம்
    3. அரசு நெறிமுறைபடுத்தும் கொள்கை    4. அடிப்படை உரிமைகள்

24. மக்களாட்சி நாடு சீராக செயல்படுவதற்கு _______ மிகவும் அவசியமாகும்

    1. படைகள்    2. சமயச்சார்பின்மை
    3. ஒற்றுமை    4. நிதி

25. அரசியலமைப்பின் பிரிவு 28 எந்த வகையான கல்வியை அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் தடை செய்துள்ளது?

    1. சமய போதனைகள்    2. நீதி நெறிக்கல்வி
    3. உடற்கல்வி    4. இவற்றுள் எதுவுமில்லை

www.kalvinews.com

26. தவறான இணை எது?

| | | |
|---|---|---|
| 1. நாத்திகம் | - | கடவுள் நம்பிக்கையற்றிருத்தல் |
| 2. செகுலம் | - | காலம் |
| 3. அக்பரின் கல்லறை | - | தீன் இலாஹி |
| 4. இந்தியா | - | மதச்சார்பற்ற நாடு |

27. ஒரு நாடு சமயச்சார்பற்ற நாடாக எப்போது கருதப்படும் ________.

(1) ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முக்கியத்துவம் அளித்தால்

(2) அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் சமய போதனைகளைத் தடை செய்தால்

(3) ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தால்

(4) எந்த சமய நம்பிக்கையையும் பரப்ப தடை விதித்தால்

28. பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ. நாத்திகம் | - | (i) செக்குலாரிசம் |
| ஆ. குழந்தைகள் | - | (ii) சமூக சீர்திருத்தவாதி |
| இ. தீன்-இலாஹி | - | (iii) கடவுள் நம்பிக்கையற்றிருப்பது |
| ஈ. அரசியலமைப்பு | - | (iv) வருங்கால குடிமக்கள் |
| உ. ஹோல்யோக் | - | (v) தெய்வீக நம்பிக்கை |
| ஊ. இராஜாராம் மோகன்ராய் | - | (vi) 1950 |

(1) அ-v, ஆ-iv, இ-vi, ஈ-ii, உ- i, ஊ-iii

(2) அ-iii, ஆ-iv, இ-v, ஈ-vi, உ- i, ஊ-ii

(3) அ-ii, ஆ-iv, இ-v, ஈ-vi, உ- ii, ஊ-i

(4) அ-v, ஆ-iv, இ-iii, ஈ-vi, உ- i, ஊ-ii

29. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க:

(i) இந்தியா போன்ற சமயப் பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்குச் சமயச்சார்பின்மை விலைமதிப்பற்ற ஒன்றாகும்.

(ii) சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை.

(iii) அரசியலமைப்பு பிரிவு 26 ஒரு குறிப்பிட்ட சமயத்திற்காக வரி செலுத்துவதற்கு ஊக்கமளிக்கிறது.

(iv) அக்பரின் கல்லறை ஆக்ராவிற்கு அருகிலுள்ள சிக்கந்தராவில் உள்ளது.

(1) (i), (ii)மட்டும் (2) (ii), (iii) மட்டும்

(3) (iv) மட்டும் (4) (i),(ii) ,(iv)மட்டும்

30. கூற்று: ஒரு வெளிநாட்டவர் இந்தியாவில் தனது சமயத்தைப் பின்பற்றலாம்.

காரணம்: அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம் இந்தியர்களுக்கு மட்டுமல்லாமல் வெளிநாட்டவருக்கும் உண்டு.

1. கூற்று சரி, காரணம் தவறு

2. கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

3. கூற்று தவறு, காரணம் சரி

4. கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.

www.kalvinews.com

31. தவறான இணையைத் தேர்வு செய்க.

| | | |
|---|---|---|
| 1. தீன் இலாஹி | - | ஒரு புத்தகம் |
| 2. கஜூராஹோ | - | இந்து கோவில் |
| 3. அசோகர் | - | பாறைக் கல்வெட்டு |
| 4. இக்பால் | - | கவிஞர் |

32. கூற்று: இந்தியாவில் சமயச்சார்பின்மை என்ற கொள்கை மிக்க மதிப்புள்ளதாகும்.
காரணம்: இந்தியா பல்வேறு சமயம் மற்றும் பன்முக கலாச்சாரம் கொண்ட நாடாகும்.
1. கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
2. கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.
3. கூற்று தவறு, காரணம் சரி.
4. இரண்டும் தவறு.

33. 'secularism' என்ற பதத்தை உருவாக்கியவர் _______.
1. கவிஞர் இக்பால் 2. ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோக்
3. கபீர் 4. சர் சையது அகமதுகான்

34. 'நாம் அனைவரும் இந்தியர்கள் மற்றும் இந்தியா நமது வீடு' என்று கூறியவர் _______.
1. கவிஞர் கண்ணதாசன் 2. பாரதியார்
3. கவிஞர் இக்பால் 4. மகாத்மா காந்தி

35. அனைத்து சமயத்தினரிடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை எடுத்தியம்பும் அக்பரின் கோட்பாடு _______.
1. சுல் - இ - குல் 2. குல் - இ - சுல்
3. தீன் - இலாஹி 4. சு - இ - ஷாகி

36. " இந்தியா பல்வேறு நம்பிக்கைகளைச் சமமாக போற்றி மதிக்கப்படும் இடமாக இருப்பதோடு ஒரே தேசியக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கும் " எனக் கூறியவர் _______.
1. மகாத்மா காந்தி 2. இரவீந்திரநாத் தாகூர்
3. ஜவகர்லால் நேரு 4. இராஜாராம் மோகன்ராய்

37. சமண சமயம் தோன்றிய நாடு _______.
1. சீனா 2. இலங்கை 3. இந்தியா 4. மலேசியா

38. பல்வேறு சமயங்களைச் சார்ந்த கூறுகள் தன்னுடைய கல்லறையில் இடம்பெற வேண்டுமென வலியுறுத்திய முகலாய அரசர் _______.
1. பாபர் 2. ஔரங்கசீப் 3. ஷாஜகான் 4. அக்பர்

39. சமயச்சார்பற்ற கல்வியின் நோக்கங்கள் _______.
1. குறுகிய மனப்பான்மையைப் போக்குதல்
2. வாழ்க்கை குறித்த பரந்த பார்வையை அளித்தல்
3. தார்மீக மற்றும் மனிதநேய பார்வையை உருவாக்குதல்
4. இவை அனைத்தும்.

www.kalvinews.com

40. அரசானது எந்த ஒரு மதத்தைச் சார்ந்த பிரிவினருக்கும் எதிராக குற்றம் சாட்டாது என்று அறிவித்த முதல் பேரரசர் _______.

1. ஹர்ஷர்
2. அசோகர்
3. சிவாஜி
4. அக்பர்

41. இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட முகவுரையில் "சமயச் சார்பற்ற" என்ற சொல் எந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டது? (NMMS-2020-21)

1. 42-வது
2. 44-வது
3. 61-வது
4. 103-வது

42. பிரிவு 26 குறிப்பது ________. (NMMS 2019-20)

1. பொது வேலைவாய்ப்பில் சமமான வாய்ப்பளித்தல்
2. சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம்
3. அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பாகுபாடு காட்டத் தடை.
4. சில கல்வி நிறுவனங்களில் சமய வழிபாடு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருக்கும் உரிமை.

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (3) | 11 | (4) | 21 | (2) | 31 | (1) | 41 | (1) |
| 2 | (3) | 12 | (4) | 22 | (4) | 32 | (1) | 42 | (2) |
| 3 | (1) | 13 | (1) | 23 | (4) | 33 | (2) | | |
| 4 | (3) | 14 | (2) | 24 | (1) | 34 | (3) | | |
| 5 | (4) | 15 | (2) | 25 | (2) | 35 | (1) | | |
| 6 | (2) | 16 | (4) | 26 | (3) | 36 | (3) | | |
| 7 | (4) | 17 | (2) | 27 | (3) | 37 | (3) | | |
| 8 | (4) | 18 | (3) | 28 | (2) | 38 | (4) | | |
| 9 | (3) | 19 | (3) | 29 | (4) | 39 | (4) | | |
| 10 | (3) | 20 | (2) | 30 | (2) | 40 | (2) | | |

www.kalvinews.com

**வகுப்பு - 8 - குடிமையியல்**

**4. மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்**

**தொகுப்பு:**
**திரு.இரா.சுரேஷ் குமார், M.Sc., M.Ed.,**
**பட்டதாரி தலைமை ஆசிரியர்,**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, சித்தாண்டபுரம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.கோ.கு.வரதராஜன் M.Sc. ,B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, பெருந்தலையூர்,**
**ஈரோடு மாவட்டம்.**

**முக்கிய குறிப்புகள்**

**மனித உரிமைகள்:**

- பிறந்த இனம், பேசும் மொழி, பாலினம், வாழும் பகுதி, பின்பற்றும் சமயம் போன்றவற்றின் அடிப்படையிலான பாகுபாடு ஏதுமின்றி அனைத்து மனிதர்களுக்கும் பிறப்பிலேயே அமைந்த இயல்பான உரிமைகளே மனித உரிமைகள் ஆகும்.
- கருத்துச் சுதந்திரம், வாழ்வதற்கான உரிமை, வேலை மற்றும் கல்விபெறும் உரிமை, அடிமைத்தனம், சித்திரவதை போன்றவற்றில் இருந்து விடுதலை ஆகியவை எல்லாம் மனித உரிமைகளில் அடங்கும்.
- மனிதர்களுக்குள் பாகுபாடு பார்க்கக்கூடாது, அனைவருக்கும் மனித உரிமைகள் உண்டு என்ற கருத்து **ஐரோப்பாவிலும், அமெரிக்க** நாடுகளிலும் பரவி வளர்ந்த கருத்தாகும்.

**மனித உரிமைகள் குறித்த ஆவணங்கள்:**

| ஆண்டு | உருவான நாடு | ஆவணங்கள் |
|---|---|---|
| 1215 | இங்கிலாந்து | **மகாசாசனம் (The Magna Carta)** - இது மக்களுக்குப் புதிய உரிமைகளை வழங்கியதுடன் அரசரையும் சட்டத்துக்கு உட்படுத்தியது. **மனித உரிமை ஆவணங்களின் முன்னோடியாக** இது கருதப்படுகிறது. |
| 1628 | இங்கிலாந்து | **"உரிமை மனு" (The Petition of Right)** - மக்கள் உரிமைகளின் தொகுப்பு. |
| 1679 | இங்கிலாந்து | **ஹேபியஸ் கார்பஸ் சட்டம்** - மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான சட்டம். |
| 1689 | இங்கிலாந்து | **ஆங்கில உரிமைகள் மசோதா** - சில அடிப்படை சமூக / குடிமக்கள் உரிமைகளை அமைத்தல். |
| 1789 | பிரான்சு | **மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பற்றிய அறிவிப்பு** - சட்டத்தின் கீழ் அனைத்து குடிமக்களும் சமம். |
| 1791 | அமெரிக்கா | **அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் மற்றும் உரிமைகள் மசோதா** - குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல். |

**ஐக்கிய நாடுகள் சபை**

- இரண்டாம் உலகப்போரின் போது மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், மனித உரிமை மீறல்கள் இனிமேல் நிகழக்கூடாது என்று கருதிய உலகநாடுகள் பலவும் ஒன்றிணைந்து முடிவுசெய்து **சான் பிரான்சிஸ்கோ மாநாட்டில் 1945 அக்டோபர் 24-ல் ஐக்கிய நாடுகள் சபை** உருவாக்கப்பட்டது.

www.kalvinews.com

**மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு** **(UDHR- Universal Declaration of Human Rights)**

- மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐ.நா சபை ஒரு மனித உரிமை ஆணையத்தை அமைத்தது. அதன் தலைவராகப் பொறுப்பேற்ற **எலினார் ரூஸ்வெல்ட் அம்மையார்** மனித உரிமைகள் குறித்த உலகளாவிய பிரகடனத்தை உருவாக்கினார்.
- ஐ.நா.சபையின் சாசனச் சட்டம் 1945 -ல் சான்பிரான்சிஸ்கோவில் உருவாக்கப்பட்டது.
- ஐ.நா.பொதுச்சபை இதனை ஏற்றுக்கொண்டு, **பொதுச்சபை தீர்மானம் 217A** மூலம் நிறைவேற்றி **1948 ஆம் ஆண்டு டிசம்பர்** 10 ஆம் நாள் பிரான்சில் வெளியிடப்பட்டது.
- இது மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும்.
- ஐ.நா.சபை மனித உரிமை பிரகடனத்தை வெளியிட்ட டிசம்பர் 10 **உலகளாவிய மனித உரிமைகள் நாளாகக்** கடைபிடிக்கப்படுகிறது. இது 1950 ஆம் ஆண்டில் இருந்து வழக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.
- இது **மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகா சாசனம்** என்று அழைக்கப்படுகிறது.
- **500 மொழிகளுக்கு** மேல் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த அறிக்கை உலகில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட ஆவணமாக உள்ளது.
- 185 நாடுகளுக்கும் மேல் இந்த அறிக்கையைத் தங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொண்டுள்ளன.
- இதில் 30 சட்டப் பிரிவுகள் உள்ளன. இதில் 5 முதன்மைப் பிரிவுகள் உள்ளன.

**மனித உரிமைகளின் அடிப்படை மதிப்புகள்:**

- **கண்ணியம்** : வாழ்வதற்கான உரிமை, ஒருமைப்பாட்டிற்கான உரிமை, கட்டாயத் தொழிலாளர் முறை, அடிமை முறை, இழிவான தண்டனை ஆகியவற்றிற்கான தண்டனை.
- **நீதி**: குற்றம் சாட்டப்பட்டவர் மேல் நேர்மையான விசாரணை, குற்றத்துக்கு ஏற்ற தண்டனை, ஒரே குற்றத்துக்காகப் பல முறை விசாரிக்க தடை.
- **சமத்துவம்**: சட்டத்தின் முன் அனைவரும் சமம். இனம், மதம், பாலினம், மொழி, இடம், வயது, திறமை மற்றும் இயலாமை அடிப்படையில் மனிதர்களுக்கிடையே பாகுபாடு இல்லாமை.

**மனித உரிமைகளின் அடிப்படைப் பண்புகள்:**

| | |
|---|---|
| **இயல்பானவை** | பிறப்பிலேயே உரியவை. பிறரால் வழங்கப்படுவதில்லை. |
| **அடிப்படையானவை** | கண்ணியமாகவும் சுய விருப்பப்படியும் வாழ உரிமை வழங்குபவை. |
| **மாற்ற முடியாதவை** | மனித உரிமைகள் தனிநபரிடமிருந்து பறிக்க முடியாதவை. |
| **பிரிக்க முடியாதவை** | வேறு உரிமைகளை அனுபவித்துக் கொண்டிருந்தாலும் இந்த அடிப்படை உரிமைகளை மறுக்க முடியாது. |
| **உலகளாவியவை** | இந்த உலகளாவிய உரிமைகள் ஒருவரின் தோற்றம் அல்லது நிலையைப் பொருட்படுத்தாமல், தேசிய எல்லைகளைக் கடந்து உலகின் அனைத்துப் பகுதிகளிலும் அமல்படுத்த வேண்டியவை. |
| **சார்புடையவை** | மனித உரிமைகள் ஒன்றுக்கொன்று சார்புடையவை, ஒன்றுடன் ஒன்று பிணைந்தவை. |

www.kalvinews.com

**மனித உரிமைப்பிரகடனத்தில் 30 சட்டப் பிரிவுகள் உள்ளன.**

**மனித உரிமைகளின் வகைகள்** (5 முதன்மைப் பிரிவுகள்):

| | |
|---|---|
| **வாழ்வியல் உரிமைகள்** | வாழ்வியல் அல்லது சிவில் உரிமைகள் அரசாங்கத்தின் சட்டங்களால் ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்படும் உரிமைகளைக் குறிக்கிறது. இந்த உரிமைகள் அனைவருக்கும் சமமாகக் கருதப்பட வேண்டும். இதில், வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம், அடிமைத் தளையிலிருந்து விடுபடுதல், நியாயமற்ற முறையில் கைது செய்யப்படாமை ஆகிய உரிமைகள் அடங்கும். |
| **அரசியல் உரிமைகள்** | மக்கள் தங்கள் நாட்டின் அரசியல் செயல்பாட்டில் பங்கேற்க இவ்வுரிமைகள் வழிவகுக்கின்றன. அரசியல் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து தடுக்கின்றன. கருத்துச் சுதந்திரம், அமைதியாகக் கூட்டம் நடத்துதல், தன் நாட்டின் அரசாங்கத்தில் பங்கு கொள்ளும் உரிமை, பேச்சுரிமை, வாக்கு அளிக்கும் உரிமை மற்றும் தகவல்களைப் பெறும் உரிமை போன்றவை இவற்றில் அடங்கும். |
| **சமூக உரிமைகள்** | மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்றவற்றைப் பெறும் உரிமைகள். |
| **பொருளாதார உரிமைகள்** | அனைவருக்கும் நியாயமான வேலைவாய்ப்பு, சரியான ஊதியம், நியாயமான வேலை நேரம், போதுமான வாழ்க்கைத் தரம், சொத்துரிமை போன்றவை இதில் அடங்கும் |
| **கலாச்சார உரிமைகள்** | விரும்பிய மதத்தைப் பின்பற்றும் உரிமை, மொழியைப் பேசும் உரிமை, சமூகக் கலாச்சார வாழ்க்கையை நடைமுறைப்படுத்தும் உரிமை, அறிவியல் முன்னேற்றத்திலும் பொருள் ஆர்வத்தைப் பாதுகாப்பதிலும் பங்கேற்கும் உரிமை. |

**மனித உரிமைகள் ஆணையம்:**

- மனித உரிமைகள் காக்கப்படுவதை உறுதி செய்ய ஒவ்வொரு நாடும் மனித உரிமை ஆணையத்தை அமைக்க வேண்டும் என்ற ஐ.நா.சபையின் முடிவுக்கேற்ப, நாடுகள் தேச அளவிலான மனித உரிமை ஆணையத்தை அமைத்துள்ளன.

**சைரஸ் சிலிண்டர்:**

- "மக்கள் அனைவருக்கும் தங்கள் சொந்த மதத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு" என்று கூறியவர் மகா சைரஸ்.
- சைரஸ் சிலிண்டரில் பயன்படுத்தப்பட்ட மொழி - **அக்கார்டியன்** மொழி, பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் - **கியூனிபார்ம்** எழுத்துக்கள்
- இது ஐக்கிய நாடுகள் சபையின் 6 அலுவல் மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் (அ சிவில் உரிமைகள் - வேறுபாடுகள்**

| **மனித உரிமைகள்** | **வாழ்வியல் (அ சிவில் உரிமைகள்** |
|---|---|
| அனைத்து நாடுகளுக்கும், மக்களுக்கும் உரியன. | நாட்டிற்கு நாடு (அ) அரசாங்கத்திற்கு அரசாங்கம் பெரிதும் வேறுபடுகின்றன. |
| எந்த ஒரு தேசமும் தனிநபருக்கான மனித உரிமைகளைப் பறிக்க முடியாது. | அந்தந்த நாடுகள் சுதந்திரங்களை வழங்கவோ (அ) மறுக்கவோ முடியும். |
| பிறப்பின் அடிப்படையில் அமையப் பெற்ற அடிப்படை உரிமைகள் ஆகும். | சமூகத்தினால் உருவாக்கப்படுகின்றன. |

www.kalvinews.com

**தேசிய மனித உரிமைகள் ஆணையம் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையம்**

| தலைப்பு | தேசிய மனித உரிமைகள் ஆணையம் | மாநில மனித உரிமைகள் ஆணையம் |
|---|---|---|
| | NHRC - National Human Rights Commission | SHRC - State Human Rights Commission |
| நிறுவப்பட்ட ஆண்டு | 1993 அக்டோபர் 12 | 1997 ஏப்ரல் 17 |
| தலைமையகம் | புதுடெல்லி | சென்னை |
| தலைவர் | ஓய்வு பெற்ற உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி | ஓய்வு பெற்ற உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி |
| உறுப்பினர்கள் | 4 உறுப்பினர்கள், 4 நேரிணை உறுப்பினர்கள் | 2 உறுப்பினர்கள் |
| நியமிப்பவர் | குடியரசுத் தலைவர் | ஆளுநர் |
| பதவிக்காலம் | 5 ஆண்டுகள் (அ) 70 வயதுவரை | |
| பிரிவுகள் | 5 - சட்டப்பிரிவு புலனாய்வுப் பிரிவு ஆராய்ச்சி மற்றும் திட்டப்பிரிவு பயிற்சி அளித்தல் பிரிவு | - |
| பொறுப்பு | இந்தியாவில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் தேசிய மனித உரிமை ஆணையம் பொறுப்பாகும். | அரசியலமைப்பின் 7 வது அட்டவணையில் உள்ள மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றின் கீழுள்ள துறைகள் தொடர்பான மனித உரிமை மீறல்களை விசாரிக்கும். (NHRC ஏற்கனவே விசாரிக்கும் வழக்குகளைத் தவிர) |

**மனித உரிமை நிறுவனங்கள்:**

- மனித உரிமைகளைக் காப்பதற்கும், அவை மீறப்படும் போது சமூகத்தின் பார்வைக்குக் கொண்டு வந்து அநீதிகளைக் களைவதற்கும் பல அரசு சாரா நிறுவனங்கள் உலகெங்கும் செயல்படுகின்றன.

**உலகில் காணப்படும் மனித உரிமைகள் நிறுவனங்கள்:**

- **ஆம்னஸ்டி இன்டர் நேஷனல், குழந்தைகள் பாதுகாப்பு நிதியம், மனித உரிமைகள் கண்காணிப்பகம்**

**குழந்தைகளுக்கான உரிமைகள்**

- 1989 ல் நடைபெற்ற குழந்தைகள் உரிமை மாநாட்டின் **பிரிவு** 1 ன் படி 18 **வயதுக்குட்பட்ட** அனைவரும் **குழந்தைகள்** எனக் கருதப்படுவர் என ஐ.நா.சபை அறிவித்தது.
- குழந்தைகள் உரிமை குறித்த அறிக்கை 1989 **நவம்பர்** 20 ல் வெளியிடப்பட்டது.
- குழந்தைகள் **தேசியச் சொத்தாகக்** கருதப்படுகிறார்கள். நாட்டின் எதிர்காலம் குழந்தைகள் எவ்வாறு வளர்ந்து முதிர்ச்சியடைந்து சிறப்பாக வாழ்கிறார்கள் என்பதைப் பொருத்தது என்பதால் இவ்வாறு கூறப்படுகிறது.

**1098 - சைல்டு லைன் குழந்தைகளுக்கான உதவி மைய எண்**

- குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர்கள், வன்கொடுமை போன்ற அநீதிகளிலிருந்து குழந்தைகளைக் காக்க அரசு அறிமுகப்படுத்தியுள்ள தொலைபேசிச் சேவை எண் 1098 ஆகும்..
- இது இந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணிநேர கட்டணமில்லாத் தொலைபேசிச் சேவை ஆகும்.

www.kalvinews.com

**இந்திய அரசியலமைப்பில் காணப்படும் குழந்தைகளுக்கான சில முக்கிய சட்டப் பிரிவுகள்**

| | |
|---|---|
| **சட்டப் பிரிவு 21 A** | கல்வி உரிமை சட்டம் |
| **சட்டப் பிரிவு 24** | குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடைசெய்கிறது. |
| **சட்டப் பிரிவு 39 (f)** | ஆரோக்கியமாகக் குழந்தைகள் வளர வகை செய்கிறது. |
| **சட்டப் பிரிவு 45** | 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கால கல்வி மற்றும் பராமரிப்பை வழங்குகிறது. |

**குழந்தைகள் பாதுகாப்புக்கான சட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1986 | **குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டம்** | 15 வயது பூர்த்தியடையாத எந்த ஒரு குழந்தையும் வேலைக்கு அமர்த்த தடை செய்யும் சட்டம். |
| 2000 | **சிறார் நீதிச் சட்டம்** | போதுமான கவனிப்பு இல்லாத குழந்தைகளைப் பராமரிக்கும், பேணிக்காக்கும் சட்டம். |
| 2009 | **கல்வி உரிமைச் சட்டம்** (RTE) | 6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி |
| 2012 | **போக்சோ சட்டம்** | பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம். |

**பெண்கள் உரிமைகள்:**

- பெண்களுக்கான சர்வதேச உரிமைகள் மசோதா 1979 -ல் ஐ.நா சபையால் நிறைவேற்றப்பட்டது.
- **4 வது உலக மகளிர் மாநாடு 1995-ல் பெய்ஜிங் நகரில் நடைபெற்றது. பெண்களுக்கான ஐ.நா.சபையின் மேம்பாட்டு நிதி (UNIFEM -** United Nations Development Fund for Women**) 1995 முதல் செயல்பட்டு வருகிறது.**

**பெண்கள் பாதுகாப்புக்கான இந்தியச் சட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1856 | **இந்து விதவை மறுமணச்சட்டம்** | |
| 1948 | **தொழிற்சாலைச்சட்டம்** | பெண் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்றன. |
| 1951 | **தோட்டத்தொழிலாளர் சட்டம்** | |
| 1952 | **சுரங்கச்சட்டம்** | |
| 1955 | **இந்து திருமணச்சட்டம்** | (பெண்கள் திருமண வயது 21 என சட்டப்பூர்வமாக்கியது.) |
| 1956 | **இந்து வாரிசுச்சுட்டம்** | (பெண்கள் சொத்துரிமை பெறுவதை உறுதிசெய்கிறது.) |
| 1961 | **மகப்பேறு நலச்சட்டம்** | (பெண் தொழிலாளர்களைப் பாதுகாக்கிறது.) |
| | **வரதட்சணைத் தடைச்சட்டம்** | |
| 1997 | **பெண்களைக் கேலி செய்வதற்கு எதிரான சட்டம்** | |
| 1999 | **அநாகரிகமாகச் சித்தரித்தலுக்கு எதிரான சட்டம்** . | |
| 2005 | **குடும்ப வன்கொடுமையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம்** | |

**மேலும் சில முக்கிய ஆண்டுகள்:**

- 1978 - சர்வதேசப் பெண்கள் ஆண்டு.
- 1979 - சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு.
- 1995 - உலக மகளிர் பீஜிங்கில் ஒன்று கூடிய ஆண்டு
- 2007 - பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலவாழ்வுச் சட்டம்

www.kalvinews.com

**பயிற்சி வினாக்கள்:**

1. மனித உரிமை என்ற கருத்து ஆரம்பித்த இடம் _______.
   (1) இந்தியா (2) தமிழ்நாடு (3) ஐரோப்பா (4) சீனா

2. மனித உரிமை ஆவணங்களின் முன்னோடியாகக் கருதப்படும் ஆவணம் _______.
   (1) அரசியல் சட்டங்கள் (2) மேக்ன கார்ட்டா
   (3) ஆங்கில உரிமைகள் மசோதா (4) ஐ.நா.மனித உரிமை ஆவணம்

3. மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பினை வெளியிட்ட அமைப்பு எது?
   (1) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (2) சார்க் நாடுகள்
   (3) ஐரோப்பிய ஒன்றியம் (4) ஐக்கிய நாடுகள் சபை

4. மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?
   (1) 1945 (2) 1936 (3) 1949 (4) 1948

5. உலக மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படும் நாள் _______.
   (1) மார்ச் 8 (2) டிசம்பர் 1 (3) மே 1 (4) டிசம்பர் 10

6. உலகிலேயே அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட ஆவணம் _______.
   (1) அமெரிக்க அரசியல் சட்டம்
   (2) மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு
   (3) அனைத்துலக வர்த்தக ஒப்பந்தம்
   (4) ஹமுராபியின் தண்டனைச் சட்டங்கள்

7. ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்ட ஆண்டு _______.
   (1) 1917 (2) 1939 (3) 1945 (4) 1950

8. மனித உரிமைப் பிரகடனத்திலுள்ள சட்டப்பிரிவுகளின் எண்ணிக்கை _______.
   (1) 20 (2) 36 (3) 40 (4) 30

9. மனித உரிமையின் அடிப்படை மதிப்புகளாகக் கூறப்படுபவை _______.
   (1) நீதி, நேர்மை, சட்டம் (2) சமூகநீதி, சகோதரத்துவம், சமதர்மம்
   (3) சமத்துவம், சமதர்மம், நேர்மை (4) கண்ணியம், நீதி, சமத்துவம்

10. பின்வருவனவற்றுள் மனித உரிமையின் அடிப்படைப் பண்புகளில் சேராதது எது?
    (1) இவை அரசால் வழங்கப்படுபவை (2) மாற்ற முடியாதவை
    (3) உலகளாவியவை (4) சார்புடையவை

11. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானது எது?
    (1) மனித உரிமைகள் எப்போதும் தனிநபரிடமிருந்து பறிக்க முடியாதவை.
    (2) ஒருவர் தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கு அரசின் அனுமதி வேண்டும்.
    (3) ஒருவர் பேசும் கருத்து மற்றொருவரின் நலனுக்குத் தீங்கு விளைவிப்பதாக இருந்தால், அதனை மறுத்துப்பேச நமக்கு உரிமை உண்டு.
    (4) குடும்பங்களில் ஆண் குழந்தைக்கு மட்டும் சிறப்புக் கவனம் செலுத்துவது மனித உரிமைக்கும் சமத்துவத்துக்கும் எதிரானது.

www.kalvinews.com

12. பின்வருவனவற்றுள் மனித உரிமைக்கு எதிரானது ______.
   (1) கண்ணியமாக வாழ்தல். (2) சாதியின் பெயரால் இழிவுபடுத்துதல்.
   (3) கருத்துச் சுதந்திரம் (4) பாகுபாடின்மை

13. நாடுகளுக்கும், அரசுகளின் கொள்கைகளுக்கும் ஏற்ப மனித உரிமைகள்
   (1) அவ்வப்போது மாறுபவை. (2) மாறாதவை.
   (3) நீக்கப்படுபவை. (4) நாட்டுக்கு நாடு வேறுபடுபவை.

14. The fullform of "UNIFEM" is
   1. United Nations Development Fund for Wild animals.
   2. United Nations Development Fund for Windmills.
   3. United Nations Development Fund for Women.
   4. United Nations Development Fund for Wolves.

15. மனித உரிமை என்ற கருத்துக்குள் பொருந்தாதது ______.
   (1) பேச்சுரிமை (2) வாழ்வதற்கான உரிமை
   (3) குற்றத்துக்கு ஏற்ற தண்டனை (4) கட்டாயத் தொழிலாளர் முறை

16. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
   (1) மனித உரிமைகளின் வரையறை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.
   (2) அதிகாரத்தில் உள்ளோர் தம் விருப்பத்துக்கேற்ப வழங்குவதே சாமானியர்களின் வாழ்வுரிமை ஆகும்.
   (3) குற்றம் சாட்டப்படும் ஒருவருக்குத் தன்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் மேல் நேர்மையான விசாரணை நடத்துமாறு கோர உரிமை உண்டு.
   (4) காவல்துறையால் கைது செய்யப்படுபவர்கள் அனைவரும் குற்றவாளிகளே.

17. தேர்தலில் வாக்களிக்கும் உரிமை என்பது ______.
   (1) கருத்துரிமை (2) வாழ்வதற்கான உரிமை
   (3) அரசியல் உரிமை (4) புரட்சிக்கான உரிமை

18. மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக இருந்த எலினார் அம்மையாரின் கணவர் யார்?
   (1) தியோடர் ரூஸ்வெல்ட் (2) பிராங்க்ளின் டி.ரூஸ்வெல்ட்
   (3) ரூதர்போர்டு (3) பராக் ஒபாமா

19. சிவில் அல்லது வாழ்வியல் உரிமைகள் ______.
   (1) நாட்டுக்கு நாடு வேறுபடும்.
   (2) நாடுகளுக்கிடையே ஒப்பந்தங்கள் மூலம் நிர்ணயிக்கப்படும்.
   (3) உலகம் முழுவதும் ஒரே மாதிரியானவை.
   (4) இயற்கையாக அமையப் பெற்றவை..

20. UDHR என்பது ______.
   (1). பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதி அமைப்பு
   (2). உலக மனித உரிமைகள் பிரகடனம்
   (3). மாநில மனித உரிமைகள் ஆணையம்
   (4). தேசிய மனித உரிமைகள் ஆணையம்

www.kalvinews.com

21. மனித உரிமையில் அடங்காதது _______.
    (1) வழிபடும் உரிமை
    (2) பொருளாதார உரிமை
    (3) அனுமதியின்றி நாடுகளுக்கிடையே பயணிப்பது
    (4) வாக்களிக்கும் உரிமை

22. இந்தியாவில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு _______.
    (1) 1991 (2) 1993 (3) 1965 (4) 1998

23. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் _______.
    (1) மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
    (2) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள்.
    (3) ஐ.நா.சபையால் நியமிக்கப்படுகிறார்கள்.
    (4) அரசு அதிகாரிகளால் நியமிக்கப்படுகிறார்கள்.

24. SHRC என்பது __________.
    (1). பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதி அமைப்பு
    (2). உலக மனித உரிமைகள் பிரகடனம்
    (3). மாநில மனித உரிமைகள் ஆணையம்
    (4). தேசிய மனித உரிமைகள் ஆணையம்

25. இந்தியாவில் மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக யார் தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
    (1) மனித உரிமை செயற்பாட்டாளர்
    (2) ஓய்வுபெற்ற உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி
    (3) குடியரசுத்தலைவர் விரும்பிய யாரேனும் ஒருவர்
    (4) ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி

26. குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்யும் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு
    (1) பிரிவு 246 (2) பிரிவு 356 (3) பிரிவு 24 (4) பிரிவு 45

27. மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரவும் முயற்சிக்கும் அரசு சாரா நிறுவனம் _______.
    (1) யுனெஸ்கோ (2) செஞ்சிலுவைச் சங்கம்
    (3) பீட்டா (4) ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்

28. பொருந்தாததைக் கண்டுபிடி.
    (1) குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் (2) உலக சுகாதார நிறுவனம்
    (3) மனித உரிமைகள் கண்காணிப்பகம் (4) ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்

29. குழந்தை என்ற வரையறைக்குள் வருபவர்கள் _______.
    (1) 0-18 வயதுடையோர் (2) 0-14 வயதுடையோர்
    (3) 0- 10 வயதுடையோர் (4) 0-21 வயதுடையோர்

30. ஐ.நா.சபையால் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டாக அறிவிக்கப்பட்ட ஆண்டு _______.
    (1) 1979 (2) 1989 (3) 2009 (4) 2019

www.kalvinews.com

31. கீழ்க்கண்டவற்றில் எந்த அமைப்பின் தலைவர் தேசிய மனித உரிமை ஆணையத்தில் நேரிணை உறுப்பினராக இல்லை?
(1) சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம்
(2) பட்டியல் சமூகத்திற்கான தேசிய ஆணையம்
(3) பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்
(4) மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய ஆணையம்

32. 6 முதல் 14 வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக்கல்வி வழங்க வகை செய்யும் சட்டம் ______.
(1) குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டம் (2) தொழிலாளர் நல உரிமைச் சட்டம்
(3) கல்வி உரிமைச் சட்டம் (4) சிறார் நீதிச்சட்டம்

33. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க இயற்றப்பட்ட சட்டம்
(1) இந்திய தண்டனைச் சட்டம் (2) சிறார் நலன் சட்டம்
(3) தொழிலாளர் மேம்பாட்டுச் சட்டம் (4) போக்சோ சட்டம்

34. எந்த வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளைப் பணிக்கு அமர்த்துவது சட்டப்படிக் குற்றம்?
(1) 10 (2) 18 (3) 15 (4) 16

35. குழந்தைகளுக்கு எதிரான அநீதிகளைப் புகாரளிக்க உருவாக்கப்பட்ட உதவி மையத்தின் தொலைபேசி எண் _______.
(1) 108 (2) 101 (3) 1008 (4) 1098

36. தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத் தலைமையகம் அமைந்துள்ள இடம்
(1) புதுடெல்லி (2) சென்னை (3) மும்பை (4) கொல்கத்தா

37. தவறான கூற்றைக் கண்டறியவும். தேசிய மனித உரிமைகள் ஆணையம் என்பது
(1) ஒரு சட்ட ரீதியான அமைப்பு. (2) ஓர் அரசியலமைப்பு சார்ந்த அமைப்பு
(3) ஒரு சுதந்திரமான அமைப்பு. (4) பலதரப்பு நிறுவனங்களைக் கொண்டது.

38. தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவரின் பதவிக்காலம் என்ன?
(1) 5 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை. (2) 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை
(2) 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை. (4) 5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை.

39. பெண்களின் திருமண வயது 21 என நிர்ணயித்த சட்டம் _______.
(1) பெண்கள் சொத்துரிமைச்சட்டம் (2) இந்து திருமணச்சட்டம்
(3) குழந்தைத் தொழிலாளர் சட்டம் (4) கல்வி உரிமைச் சட்டம்

40. பெண்களைப் பாதுகாக்கும் வகையில் குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
(1) 2002 (2) 2005 (3) 2015 (4) 1995

41. உலக மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10ல் கொண்டாடப்படுவதற்கான காரணம் _______.
(1) ஐ.நா.சபை உருவான நாள் (2) இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற நாள்
(3) எலினார் ரூஸ்வெல்ட் பிறந்த நாள்
(4) ஐ.நா.சபை மனித உரிமைப் பிரகடனத்தை வெளியிட்ட நாள்

www.kalvinews.com

42 பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

கூற்று (i): மனித உரிமைகள் என்பவை ஒவ்வொரு மனிதருக்குமான சமத்துவம் மற்றும் கண்ணியம் பற்றியதாகும்.

கூற்று (ii): பெற்றோரின் பூர்வீகச் சொத்துகளில் பெண் குழந்தைகளுக்கும் சம உரிமை உண்டு.

கூற்று (iii): தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் பொறுப்பினை இந்தியப் பிரதமரே ஏற்றுள்ளார்.

கூற்று (iv): வயதான பெற்றோரைப் பராமரித்துக் காப்பாற்றுவது அவர்களது பிள்ளைகளின் கடமையாகும்.

(1) i, ii சரி, iii, iv தவறு (2) i, ii, iii சரி, iv தவறு

(3) i, ii, iv சரி, iii தவறு (4) i, ii தவறு, iii, iv சரி

43. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறான கூற்றுகள் எவை?

i. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை.

ii. மனித உரிமைகள் - பிறப்பின் அடிப்படையில் இயற்கையாக அமையப் பெற்ற உரிமைகள்.

iii. மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகத் தேசிய, மாநில அளவிலான மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

iv. பாதிக்கப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்க, தேசிய மனித உரிமைகள் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது.

(1) i, iv (2) i, iii (3) ii, iv (4) i, ii

44. சிவில் அல்லது வாழ்வியல் உரிமைகள் _______ அடிப்படையில் அமையப் பெற்றவை ஆகும்.

(1) அதிகாரத்தின் (2) அரசியல் அமைப்புச் சட்டத்தின்

(3) இயற்கை நியாயத்தின் (4) ஆட்சி செய்வோர் விருப்பத்தின்

45. எது தவறான கூற்று? மனித உரிமை அமைப்புகள் என்பவை _______.

(1) அரசாங்கங்களின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்றன.

(2) மனித உரிமைகளை மதிக்கும்படி வலியுறுத்துகின்றன.

(3) மனித உரிமைகளுக்குச் சட்ட அங்கீகாரம் கிடைக்க முயற்சி செய்கின்றன.

(4) நாடுகளுக்கிடையே வர்த்தகம் செய்கின்றன.

46. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (i) ஐ.நா.சபை மனித உரிமைப் பிரகடனம் | - | A. 1997 |
| (ii) இந்திய மனித உரிமைகள் ஆணையம் | - | B. 2012 |
| (iii) போக்சோ சட்டம் | - | C. 1993 |
| (iv) தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம் | - | D. 1948 |

(1) i - A ii - C iii - D iv - B (2) i - A ii - B iii - D iv - C

(3) i - C ii - D iii - A iv - B (4) i - D ii - C iii - B iv - A

47. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியான கூற்று/ கூற்றுகள் எவை?

i சிவில் உரிமைகள் என்பன பிறப்புடன் உள்ளார்ந்த அடிப்படை உரிமைகளாகும்.

ii குழந்தை ஒரு முக்கியமான தேசியச் சொத்தாகக் கருதப்படுகிறார்கள்..

iii பிரிவு 39(f) குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்கிறது..

iv 15 வயது பூர்த்தியடையாத எந்த ஒரு குழந்தையையும் வேலைக்கு அமர்த்தலாம்..

(1) i, iv (2) i, iii, iv (3) ii மட்டும் (4) i தவிர அனைத்தும்

www.kalvinews.com

48. கூற்று: குழந்தைகள் தேசியச் சொத்தாகக் கருதப்படுகிறார்கள்.

காரணம்: பெற்றோரின் சொத்துகள் குழந்தைகளுக்குச் சென்று சேர்வதால் அவர்கள் தேசியச் சொத்தாக இருக்கிறார்கள்.

(1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்று காரணம் இரண்டும் சரி

(3) கூற்று தவறு, காரணம் சரி (4) கூற்று, காரணம் இரண்டும் தவறு

49. 18 வயதுக்குக் கீழுள்ள பெண் குழந்தைக்குத் திருமண ஏற்பாடு செய்யப்பட்டால் அது குறித்து ரகசியமாகப் புகாரளிக்க அழைக்க வேண்டிய தொலைபேசி எண் _______.

(1) 1088 (2) 1098 (3) 1089 (4) 1099

50. இரண்டாம் உலகப் போருக்குப் பின் மனித உரிமைகளைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ள அமைப்பு எது?

(1) ஐ.நா. சபை (2) உச்ச நீதிமன்றம்

(2) சர்வதேச நீதிமன்றம் (4) இவைகளில் எதுவும் இல்லை

51. 1995 ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் கூடிய இடம் _______.

(1) நியூடெல்லி (2) சென்னை (3) பெய்ஜிங் (4) டார்ஜிலிங்

52. மனித உரிமைகளின் "நவீன சர்வதேச மகாசாசனம்" என அழைக்கப்படுவது _______.

(1) மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு

(2) தேசிய மனித உரிமைகள் ஆணையம்

(3) மாநில மனித உரிமைகள் ஆணையம்

(4) சர்வதேசப் பெண்கள் ஆண்டு

53. பொருத்துக. [NMMS-2016]

(a) டிசம்பர் 10 - (i) ஐ.நா. தினம்

(b) அக்டோபர் 24 - (ii) உலக மக்கள் தொகை தினம்

(c) ஜூலை 11 - (iii) உலக எழுத்தறிவு தினம்

(d) செப்டம்பர் 8 - (iv) மனித உரிமைகள் தினம்

(1) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii) (2) (a) - (iv) (b) - (iii) (c) - (i) (d) - (ii)

(3) (a) - (iv) (b) - (i) (c) - (iii) (d) - (ii) (4) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii)

54. இனம், பாலினம், தேசிய இனம், மொழி மற்றும் சமய வேறுபாடுகளின்றி அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான உரிமைகள் _______ ஆகும்.

(1) வாழ்வியல் உரிமை (2) சமூக உரிமை

(3) மனித உரிமை (4) கலாச்சார உரிமைகள்

55. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் தொகுப்பானது,

(1) ஐரோப்பிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் வேரூன்றி இருந்தது.

(2) அமெரிக்க மற்றும் இந்திய நாடுகளில் வேரூன்றி இருந்தது.

(3) ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் வேரூன்றி இருந்தது.

(4) அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளில் வேரூன்றி இருந்தது.

www.kalvinews.com

56. உலகிலேயே முதன்முதலில் “ஒரு நாட்டை ஆளும் அரசரையும் சட்டத்திற்கு உட்படுத்திச் சாசனம்” எழுதிய நாடு ______.

(1) இங்கிலாந்து (2) அமெரிக்கா (3) இந்தியா (4) பிரான்ஸ்

57. உலகிலேயே முதன்முதலில் “சட்டத்தின் முன் அனைவரும் சமம்” என்று கூறிய சாசனம் இயற்றப்பட்ட நாடு ______.

(1) இங்கிலாந்து (2) அமெரிக்கா (3) இந்தியா (4) பிரான்ஸ்

58. சரியான கூற்றை / கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) மாநில மனித உரிமைகள் ஆணையம் அரசியலமைப்பின் 7 வது அட்டவணையின் கீழுள்ள சில துறைகளில் மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் .

(2) மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டது ஆகும்.

(3) 1 மற்றும் 2

(4) எதுவுமில்லை

59. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS-2018)

(1) ஐ.நா. தினம் - மார்ச் 8

(2) சர்வதேச பெண்கள் தினம் - நவம்பர் 19

(3) மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10

(4) தேசிய ஒருமைப்பாட்டு தினம் - அக்டோபர் 24

.60. தேசிய மனித உரிமைகள் ஆணையம் குறித்த பின்வரும் எந்தக் கூற்றுச் சரியானது அன்று?

(1) இது 1993 இல் நிறுவப்பட்டது.

(2) மனித உரிமை மீறல் வழக்குகளில் குற்றவாளியைத் தண்டிக்க எந்த உரிமையும் இல்லை

(3) இந்த ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

(4) இந்த ஆணையம் தனது ஆண்டு அறிக்கையை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்புகிறது.

61. சிறார் உதவித் தொடர்பு (Child helpline) எண் ______. (NMMS-2015-16)

(1) 4172 (2) 1091 (3) 139 (4) 1098

62. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனச் சட்டம் உருவாக்கப்பட்ட மாநாடு ______.

(1) வட்டமேசை மாநாடு (2) பிரான்ஸ் மாநாடு

(3) சான்பிரான்சிஸ்கோ மாநாடு (4) இங்கிலாந்து மாநாடு

63. “உலக மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல்” என்று அழைக்கப்படுவது ______.

(1) ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்

(2) உலக பொது நீதிமன்றம் உருவானது.

(3) உலக பொது சுகாதார நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது.

(4) உலக மனித உரிமைகள் அறிவிப்பு ஐ.நா.வால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

64. “உலக மனித உரிமைகள் பிரகடனம்” வெளியிடப்பட்ட இடம் ______.

(1) பாரிஸ் நகரம் (2) புதுடில்லி (3) டோக்கியோ (4) வாஷிங்டன்

www.kalvinews.com

65. பொருத்துக.

i. சட்டப்பிரிவு 24 - 1. ஆரோக்கியமாகக் குழந்தைகள் வளர வழி செய்தல்.

ii. சட்டப்பிரிவு 39 (F) - 2. இலவசக் கட்டாயக் கல்வி (6 - 14 வயது வரை).

iii. சட்டப்பிரிவு 45 - 3. குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்தல்..

iv. சட்டப்பிரிவு 21A - 4. 6 வயது வரை குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி.

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | 2 | 4 | 1 | 3 |
| (2) | 3 | 1 | 4 | 2 |
| (3) | 2 | 3 | 1 | 4 |
| (4) | 3 | 4 | 1 | 2 |

66. “மக்கள் அனைவருக்கும் தங்களின் சொந்த மதத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு” என்று கூறியவர் _______.

(1) அலெக்சாண்டர் (2) சாக்ரடீஸ் (3) மகா சைரஸ் (4) கன்பூசியஸ்

67. “மகா சைரஸ்” என்ற மன்னரால் செதுக்கப்பட்ட “சைரஸ் சிலிண்டரில்” பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் _______.

(1) சீன எழுத்துக்கள் (2) கியூனிபார்ம் எழுத்துக்கள்

(3) தமிழ் எழுத்துக்கள் (4) ஆங்கில எழுத்துக்கள்

68. பாரசீக மன்னர் “மகா சைரஸ்” ஆல் செதுக்கப்பட்ட சைரஸ் சிலிண்டரில் பயன்படுத்தப்பட்ட மொழி _______.

(1) தமிழ் (2) ஆங்கிலம் (3) பிரெஞ்சு மொழி (4) அக்காடியன் மொழி

69. ஐநா சபையின் 6 அலுவல் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒரே ஆவணம் _______.

(1) சைரஸ் சிலிண்டர்

(2) மனித உரிமைகளுக்கான பிரகடனம்

(3) உலக பொது சுகாதார நிறுவனத்தின் அறிக்கைகள்

(4) இவற்றில் எதுவும் இல்லை

70. கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு _______. (NMMS 2019-20)

(1) 2008 (2) 2009 (3) 2010 (4) 2011

71. 2018-ம் ஆண்டில் ஐ.நா. வின் மனித உரிமைகள் சபைக்கு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் நாடு எது? (NMMS-2018)

(1) வங்கதேசம் (2) நேபாளம் (3) சீனா (4) இந்தியா

72. கீழ்க்கண்டவற்றுள் எது மனித உரிமையின் அடிப்படைப் பண்புகளில் ஒன்று ஆகும்?

(1) இயல்பானவை (2) மாற்றக்கூடியவை

(3) பிரிக்க முடியும் (4) தேசியத்திற்கு சொந்தமானது

73. மனித உரிமைகளில் உள்ள முதன்மைப் பிரிவுகளின் எண்ணிக்கை _______.

(1) 30 (2) 5 (3) 21 (4) 18

www.kalvinews.com

74. கீழ்க்கண்டவற்றுள் எது வாழ்வியல் உரிமைகளில் ஒன்று அன்று?

(1) சுதந்திரம்
(2) நியாயமற்ற முறையில் கைது செய்யாமை
(3) கருத்துச் சுதந்திரம்
(4) அடிமைத் தளையில் இருந்து விடுபடுதல்

75. கீழ்கண்டவற்றுள் எது அரசியல் உரிமைகளில் ஒன்று அன்று?

(1) வாக்களிக்கும் உரிமை
(2) பேச்சுரிமை
(3) கருத்து சுதந்திரம்
(4) சொத்துரிமை

76. "கல்வி பெறும் உரிமை" எவ்வகையைச் சார்ந்தது?

(1) வாழ்வியல் உரிமை
(2) அரசியல் உரிமை
(3) சமூக உரிமைகள்
(4) பொருளாதார உரிமைகள்

77. தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்ட ஆண்டு ________.

(1) ஏப்ரல் 17, 1996 (2) ஏப்ரல் 17, 1997 (3) ஏப்ரல் 17, 1998 (4) ஏப்ரல் 17, 1999

78. "தகவல்களைப் பெறும் உரிமை" என்பது எவ்வகையைச் சார்ந்தது?

(1) மனித உரிமைகள்
(2) அரசியல் உரிமைகள்
(3) இவை இரண்டும்
(4) இவற்றில் எதுவுமில்லை

79. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தற்போதைய தலைவர் ________. [NMMS-2016]

(1) ஸ்ரீ சத்யேந்திர பால்
(2) அருண் குமார் மிஸ்ரா
(3) கே.ஜி.பாலகிருஷ்ணன்
(4) ஸ்ரீ எச்.எல்.தத்து

80. மனித உரிமைகள் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது தவறானது?

(1) இவை உலகில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் உரியதாகும்.
(2) எந்த ஒரு தேசமும் தனிநபருக்கான மனித உரிமைகளைப் பறிக்க முடியாது
(3) வாக்குரிமை அடிப்படையில் இயற்கையாக அமையப் பெற்ற அடிப்படை உரிமைகள் ஆகும்.
(4) இவை இனம், மதம், வயது, மொழி போன்றவற்றைப் பொருட்படுத்தாது.

81. சிவில் உரிமைகள் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

(1) இவை குடியுரிமை பெறுவதன் மூலம் ஒருவர் அனுபவிக்கும் உரிமைகள் ஆகும்.
(2) இவற்றின் மூலம் ஒரு நாடு சுதந்திரங்களை வழங்கவோ அல்லது மறுக்கவோ முடியாது.
(3) இவை பிறப்பின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன.
(4) இவை அரசியல் சட்டம் சாராதவை.

82. கீழ்க்காண்பவைகளில் எது தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் 5 பிரிவுகளில் ஒன்று அன்று?

(1) சுகாதாரப் பிரிவு
(2) சட்டப்பிரிவு
(3) புலனாய்வுப் பிரிவு
(4) பயிற்சி அளித்தல் பிரிவு

83. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. தொழிற்சாலைச் சட்டம் | - | 1. 1948 |
| ii. தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் | - | 2. 1961 |
| iii. சுரங்கச் சட்டம் | - | 3. 1951 |
| iv. மகப்பேறு நலச்சட்டம் | - | 4. 1952 |

www.kalvinews.com

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (1) | 4 | 2 | 1 | 3 |
| (2) | 1 | 3 | 4 | 2 |
| (3) | 1 | 4 | 2 | 3 |
| (4) | 4 | 1 | 2 | 3 |

84. தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை

(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

85. இந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணி நேர கட்டணமில்லா அவசரத் தொலைதொடர்புச் சேவை எண் _______.

(1) 100 (2) 108 (3) 1089 (4) 1098

86. ஐநா சபையின் தற்போதைய பொதுச் செயலாளர் _______.

(1) பான் கீ மூன்
(2) ஜோபைடன்
(3) அண்டோனியோ கட்டரஸ்
(4) அமர்த்தியா சென்

87. பொருந்தாத இணையைத் தெரிவு செய்க.

(1) இந்து விதவை மறுமணச் சட்டம் - 1856
(2) வரதட்சணைத் தடைச் சட்டம் - 1961
(3) இந்து வாரிசுச் சட்டம் - 1986
(4) இந்து திருமணச் சட்டம் - 1955

88. "UDHR" ன் விரிவாக்கம் _______.

(1) Universal Declaration of Hungry Rights
(2) Universal Declaration of Holy Rights
(3) Universal Declaration of Human Rights
(4) Universal Declaration of Health Rights

89. "NHRC" ன் விரிவாக்கம் _______.

(1) National Heart Rights Commission
(2) National Habitation Rights Commission
(3) National Habits Rights Commission
(4) National Human Rights Commission

90. "SHRC" ன் விரிவாக்கம் _______.

(1) State Heart Rights Commission
(2) State Habitation Rights Commission
(3) State Habits Rights Commission
(4) State Human Rights Commission

91. இந்தியாவின் தற்போதைய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி யார்?

(1) M. கோபால்
(2) N.V.இரமணா
(3) M.K குன்ஹா
(4) இவர்களில் எவருமில்லை.

92. யுனிபெம் (UNIFEM) என்பது _______.

(1) ஐரோப்பியப் பெண்களுக்கான நிதி அமைப்பு
(2) தேசியப் பெண்கள் மேம்பாட்டு நிதி அமைப்பு
(3) பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதி அமைப்பு
(4) ஐரோப்பா மற்றும் பிரான்சில் தொடங்கப்பட்ட பெண்களுக்கான நிதி முனையம்

www.kalvinews.com

93. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் முதல் தலைவர் _______.
(1) மகாசைரஸ் (2) ஜார்ஜ்புஷ் (3) ஜான் கென்னடி (4) எலினார் ரூஸ்வெல்ட்

94. அடிமைகளை விடுவித்த, முதல் பாரசீக மன்னன் _______ ஆவார்.
(1) எலினார் (2) ரூஸ்வெல்ட் (3) மகாசைரஸ் (4) அசோகர்

95.. சைரஸ் சிலிண்டரின் காலம் _______.
(1) கி.பி. 539 (2) கி.மு. 739 (3) கி.மு. 539 (4) கி.மு. 639

96. தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைமையகம் அமைந்துள்ள இடம் _______.
(1) புதுடெல்லி (2) சென்னை (3) மும்பை (4) கொல்கத்தா

97. NHRC என்பது _______.
(1) தேசிய மனித உரிமைகள் அமைப்பு
(2) தேசிய மனித உரிமைகள் ஆணையம்
(3) உலக சுகாதார நிறுவனம்
(4) மாநில மனித உரிமைகள் அமைப்பு

98. குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு நடைபெற்ற ஆண்டு _____
(1) 1989 (2) 1999 (3) 2010 (4) 2020

99. பெண்களைக் கேலி செய்வதற்கு எதிரான சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு _______.
(1) 1977 (2) 1967 (3) 1999 (4) 1997

100. பெண்களை அநாகரிகமாகச் சித்தரித்தலுக்கெதிரான சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு _______.
(1) 1999 (2) 2000 (3) 1950 (4) 1969

101. ஐ. நா. சபை எந்த ஆண்டைச் சர்வதேசப் பெண்கள் ஆண்டாக அறிவித்துள்ளது.
(1) 1969 (2) 1968 (3) 1978 (4) 1979

102. பிரான்சில் குடிமக்களின் உரிமைகள் பற்றிய மசோதா எந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது?
(1) 1989 (2) 1970 (3) 1789 (4) 1769

103. அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
(1) 1768 (2) 1769 (3) 1779 (4) 1791

104. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. மகாசாசனம் | - | 1. 1679 |
| ii. உரிமை மனு | - | 2. 1689 |
| iii. ஹேபியஸ் கார்பஸ் சட்டம் | - | 3. 1215 |
| iv. ஆங்கில உரிமை மசோதா | - | 4. 1628 |

(1) i - 1 ii - 3 iii - 4 iv - 2
(2) i - 2 ii - 4 iii - 3 iv - 1
(3) i - 3 ii - 4 iii - 1 iv - 2
(4) i - 3 ii - 2 iii - 4 iv - 1

www.kalvinews.com

105. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1) மகாசாசனம் மனு - இங்கிலாந்து
2) ஹேபியஸ் கார்பஸ் சட்டம் - இங்கிலாந்து
3) மனிதன் மற்றும் குடிமக்கள் உரிமைகள் பற்றிய அறிவிப்பு - பிரான்சு
4) அரசியலமைப்புச் சட்டம் மற்றும் உரிமைகள் மசோதா - அமெரிக்கா

(1) 1, 2, 3 சரி (2) 1, 2, 3, 4 அனைத்தும் சரி
(3) 1, 2 சரி மற்றும் 3, 4 தவறு (4) 3 மட்டும் சரி

106. உலக மனித உரிமைகள் அறிவிப்புப் பற்றிய தவறான ஒரு கூற்றைத் தெரிவு செய்க.

(1) ஐ.நா. பொதுச் சபையால் 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் அறிவிக்கப்பட்டது.
(2) பிரான்சு நாட்டின் பாரீஸ் நகரில் அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்பு மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும்.
(3) 1950 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
(4) இது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கான சில சிறப்பான மனித உரிமைகளை வரையறுத்துள்ளது.

107. உலக மனித உரிமைகள் அறிவிப்புப் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்:

(1) இது மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என்று அழைக்கப்படுகிறது.
(2) இதன் கொள்கைகள் 500 க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
(3) இதன் கொள்கைகள் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு மட்டும் பொருந்தும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.
(4) இது உலகில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட ஆவணம் ஆகும்.

(1) அனைத்தும் சரி (2) 1, 2, 3 - சரி மேலும் 4 - தவறு
(3) 1, 2, 4 - சரி மேலும் 3 - தவறு (4) 2, 3, 4 - சரி மேலும் 1 - தவறு

108. கூற்று: மனித உரிமைகள் ஒன்றுக்கொன்று சார்புடையவை.

காரணம்: ஒரு உரிமையைப் பயன்படுத்தும் போது மற்றொன்றை உணராமல் இருக்க முடியாது.

(1) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
(2) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.
(3) கூற்று, காரணம் இரண்டும் தவறு.
(4) கூற்றும், காரணமும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை.

110. பொருத்துக.

i. அரசியல் உரிமை - 1. சிவில் உரிமை
ii. சமூக உரிமை - 2. பேச்சுரிமை, தகவல்களைப் பெறும் உரிமை
iii. பொருளாதார உரிமை - 3. கல்வி, சுகாதாரம், உணவு, உடை
iv. கலாச்சார உரிமை - 4. சொத்துரிமை
v. வாழ்வியல் உரிமை - 5. சமயச்சுதந்திரம்,மொழியைப் பேசுவதற்கான உரிமை

(1) i - 5 ii - 3 iii - 1 iv - 2 v - 4 (2) I - 2 ii - 3 iii - 4 iv - 5 v - 1
(3) i - 5 ii - 1 iii - -2 iv - 3 v - 4 (4) i - 4 ii - 3 iii - 2 iv - 1 v - 5

www.kalvinews.com

111. கீழ்க்கண்டவற்றுள் எது அரசு சாரா மனித உரிமை நிறுவனம் அன்று?

(1) ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் (2) குழந்தைகள் பாதுகாப்பு நிதியம்

(3) யுனிசெஃப் (4) மனித உரிமைகள் கண்காணிப்பகம்

112. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.

(a) தேசிய மனித உரிமை ஆணையத்தில் மனித உரிமைகள் பற்றிய அறிவு, அனுபவம் கொண்டவர்கள் மூவர் இருத்தல் வேண்டும்.

(b) தேசிய மனித உரிமைகள் ஆணையம் விசாரிக்கும் வழக்குகளை மாநில மனித உரிமைகள் ஆணையம் விசாரிக்காது.

(c) அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில், மாநிலப் பட்டியலின் துறைகளில் உள்ள மனித உரிமை மீறல்களை மட்டும் SHRC விசாரிக்கும்.

(1) c தவிர மற்றவை தவறு (2) a தவிர மற்றவை தவறு

(3) b மட்டும் சரி (4) அனைத்தும் தவறு

113. பொருத்துக.

(a). ஐ.நா.சபை உருவான ஆண்டு - i. 2005

(b). வன்கொடுமை தடுப்புச் சட்டம் - ii. 1945

(c). குடிமக்களின் உரிமைகள் பற்றிய பிரான்சின் அறிவிப்பு - iii. 1791

(d). அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் மற்றும் உரிமைகள் மசோதா - iv. 1789

(1) a - ii b - I c - iv d - iii (2) a - iii b - ii c - iv d - i

(3) a - iv b - iii c - I d - ii (4) a - ii b - I c - iii d - iv

**விடைகள்**

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (3) | 21 | (3) | 41 | (4) | 61 | (4) | 81 | (1) | 101 | (3) |
| 2 | (2) | 22 | (2) | 42 | (3) | 62 | (3) | 82 | (1) | 102 | (3) |
| 3 | (4) | 23 | (2) | 43 | (1) | 63 | (4) | 83 | (2) | 103 | (4) |
| 4 | (4) | 24 | (3) | 44 | (2) | 64 | (1) | 84 | (2) | 104 | (3) |
| 5 | (4) | 25 | (2) | 45 | (4) | 65 | (2) | 85 | (4) | 105 | (2) |
| 6 | (2) | 26 | (3) | 46 | (4) | 66 | (3) | 86 | (3) | 106 | (4) |
| 7 | (3) | 27 | (4) | 47 | (3) | 67 | (2) | 87 | (3) | 107 | (3) |
| 8 | (4) | 28 | (2) | 48 | (1) | 68 | (4) | 88 | (3) | 108 | (1) |
| 9 | (4) | 29 | (1) | 49 | (2) | 69 | (1) | 89 | (4) | 109 | (3) |
| 10 | (1) | 30 | (1) | 50 | (1) | 70 | (2) | 90 | (4) | 110 | (2) |
| 11 | (2) | 31 | (4) | 51 | (3) | 71 | (4) | 91 | (2) | 111 | (3) |
| 12 | (2) | 32 | (3) | 52 | (1) | 72 | (1) | 92 | (3) | 112 | (3) |
| 13 | (2) | 33 | (4) | 53 | (4) | 73 | (2) | 93 | (4) | 113 | (1) |
| 14 | (3) | 34 | (3) | 54 | (3) | 74 | (3) | 94 | (3) | | |
| 15 | (4) | 35 | (4) | 55 | (3) | 75 | (4) | 95 | (3) | | |
| 16 | (3) | 36 | (2) | 56 | (1) | 76 | (3) | 96 | (1) | | |
| 17 | (3) | 37 | (2) | 57 | (4) | 77 | (2) | 97 | (2) | | |
| 18 | (2) | 38 | (4) | 58 | (1) | 78 | (2) | 98 | (1) | | |
| 19 | (1) | 39 | (2) | 59 | (3) | 79 | (2) | 99 | (4) | | |
| 20 | (2) | 40 | (2) | 60 | (3) | 80 | (3) | 100 | (1) | | |

www.kalvinews.com

## வகுப்பு - 8 - குடிமையியல்

### 5. சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள்

**தொகுப்பு:**
**திரு.செ.பெரியசாமி, M.Sc., B.Ed., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி, ஒட்டப்பட்டி,**
**கரூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.ஜெ.மாரையன், M.A., B.Ed.,**
**பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, மத்திப்பட்டி,**
**கரூர் மாவட்டம்.**

### முக்கிய குறிப்புகள்

- மனிதனின் முக்கியமான கண்டுபிடிப்புகளில் சாலையும் ஒன்று.

**சாலை பாதுகாப்பு**

- சாலை பாதுகாப்பு என்பது முதன்மையாக சாலையில் பயணிக்கும் அனைவரின் பாதுகாப்பையும், பாதுகாப்பு வழங்குவதையும் முதன்மையாகக் குறிக்கிறது.

**சாலை பாதுகாப்பின் முக்கியத்துவம்**

- சாலை விபத்துகள் படுகாயங்களுக்கும், இறப்பிற்கும் காரணமாக அமைகின்றன. இந்த படுகாயங்கள் மற்றும் இறப்புகள், சமூக மற்றும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகின்றன.

**விபத்துகளின் நேரடி விளைவுகள்**

- உயிரிழப்பு, படுகாயம், உடைமைகளுக்கு சேதம்

**சாலை விபத்துக்களுக்கான காரணங்கள்**

**அதிக வேகம்.**

- அதிக வேகம் அதிக ஆபத்து
- ஒரு வாகனத்தின் பின்னால் மிக நெருக்கமாகப் பின் தொடர்தல் (Tailgating) என்பது சட்டவிரோதம் மற்றும் ஆபத்தான பழக்கமும் ஆகும்.

**மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல்**

- மது அருந்துவது கவனத்தைக் குறைக்கும். அதன் காரணமாக வரும் மயக்கத்தினால் பார்வை தடைபடுகின்றது.
- மது அருந்தியதை கண்டறிய சீரற்ற சுவாச பரிசோதனை (Random breath test) செய்யப்படுகிறது.

**வாகன ஓட்டிகளின் கவனச் சிதறல்**

- கவனச் சிதறல் என்பது வாகனத்தின் வெளியிலிருந்தோ உள்ளிருந்தோ ஏற்படக்கூடும்.

**கவனச் சிதறலுக்கான காரணங்கள்**

- வாகனம் ஓட்டும் போது செல்லிடைப் பேசியில் பேசுவது பெரிய கவனச் சிதறலாக தற்போது உள்ளது.
- கவனக் குறைவு, பகற்கனவு, வாகனம் ஓட்டும்போது கண்ணாடியைச் சரிசெய்தல், வாகனத்தில் உள்ள ஒலி எழுப்பும் சாதனத்தைக் கொண்டு சத்தமாக ஒலியெழுப்புதல், சாலையில் நடமாடும் விலங்குகள், விளம்பர பதாகைகள்

www.kalvinews.com

**பாதுகாப்பு கருவிகளைத் தவிர்த்தல்**

- நான்கு சக்கர வாகனங்களில் இருக்கைப் பட்டை (Seat belt) அணிவதும் இரு சக்கர வாகனங்களில் தலைக்கவசம் (Helmets) அணிவதும் சட்டமாக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டும் விபத்துகளின்போது ஏற்படும் காயங்களின் தீவிரத்தைக் குறைக்கின்றன. ஆனால், வாகன ஓட்டிகள் இருக்கைப் பட்டை அணிதல், தலைக்கவசம் அணிதல் போன்றவற்றை சரிவர பின்பற்றுவதில்லை.

**பிற காரணிகள்**

விதிகளை மீறி வாகனங்களை இயக்கும் ஓட்டுநர்கள், விதிகளை மீறி சாலையைக் கடக்கும் பாதசாரிகள், ஓட்டுநருடன் பேசும், படிக்கட்டுகளில் பயணம் செய்யும் பயணிகள், பழுதடைந்த தடுத்து நிறுத்துக் கருவி மற்றும் வாகனத் திசை திருப்பி, பழுதடைந்த டயர்கள், போதுமான வெளிச்சம் தராத முகப்பு விளக்குகள் மற்றும் அதிகப்படியான சுமைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள், தரமற்ற குழிகளுடன் கூடிய சாலைகள், மூடு பனி, பனி, கன மழை, வேகமான காற்று, புயல் மற்றும் ஆலங்கட்டி மழை போன்ற மோசமான வானிலை.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்**

- வாகனங்களை எப்போதும் சாலையின் இடது பக்கமாகச் செலுத்த வேண்டும்.
- சாலையின் வளைவுகளிலும் திருப்பங்களிலும் கவனமாகவும், மெதுவாகவும் செலுத்த வேண்டும்.
- குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்ட வேகத்தில் வாகனங்களைச் செலுத்த வேண்டும்.
- ஒவ்வொரு வாகனத்திற்கும் இடையில் ஒரு மீட்டர் இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும்.
- இடது பக்கமாகவோ அல்லது வலது பக்கமாகவோ வாகனங்களைத் திருப்பும் பொழுது, மஞ்சள் நிற விளக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.
- நெடுஞ்சாலைகளில் சாலையின் ஓரமாக வாகனங்கள் நிறுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
- போக்குவரத்து சாலை குறியீடுகள் சரியாக பின்பற்ற வேண்டும்.
- மது அருந்திவிட்டு வாகனங்களை ஒருபோதும் ஓட்டக் கூடாது.
- பாதசாரிகள் கடக்கும் பாதையில் (வரிகோடு) மட்டுமே பாதசாரிகள் சாலையைக் கடக்க வேண்டும்.
- ஒருவழிச்சாலையில் ஓட்டுனர் தனது வலதுபுறம் வாகனங்களை முந்திச்செல்ல அனுமதிக்க வேண்டும்.
- தடை செய்யப்பட்ட இடங்களில் (மருத்துவமனை பள்ளிக்கூடம்) ஓட்டுநர்கள் ஒருபோதும் ஒலிப்பான்களைப் பயன்படுத்தக்கூடாது.
- மருத்துவ ஊர்தி, தீயணைப்பு வாகனங்கள், இராணுவப் பாதுகாப்பு வாகனங்கள் போன்றவைகளுக்கு கட்டாயம் வழிவிடுவது நமது பொறுப்பாகும்.
- ஓட்டுனர் வாகனத்தின் வேகத்தை குறைக்கும் போது தனது வலது கைகளை மேலே உயர்த்தி நிதானமாக மேலும் கீழுமாக அசைக்க வேண்டும்.
- ஓட்டுனர் வாகனத்தை நிறுத்தும் போது பின்னால் வரும் வாகனங்களுக்கு தெரியும் பொருட்டு தனது கையினை செங்குத்தாக மேல் உயர்த்த வேண்டும்.

www.kalvinews.com

- அவசர காலங்களில் ஓட்டுநர் இரண்டு குறிகாட்டிகளையும் ஒரே நேரத்தில் ஒளிரச் செய்ய வேண்டும்.
- இரு சக்கர வண்டியின் பின் இருக்கையில் ஒருவர் மட்டுமே அமர வேண்டும்.

**போக்குவரத்துக் குறியீடுகள்**

- போக்குவரத்து குறியீடுகள் போக்குவரத்தினை முறைப்படுத்தவும், ஆபத்துக்களை எச்சரிக்கவும் சாலையை உபயோகப்படுத்துவோருக்கு வழிகாட்டவும் பயன்படுகின்றன.
- கட்டாயக் குறியீடுகள் (வட்ட வடிவம்), எச்சரிக்கை குறியீடுகள் (முக்கோண வடிவம்) மற்றும் தகவல் குறியீடுகள் (செவ்வக வடிவம்) என மூன்று வகையான போக்குவரத்துக் குறியீடுகள் உள்ளன.


**கட்டாயக் குறியீடுகள்**

போக்குவரத்துக் குறியீடுகளின் முதல் வகை கட்டாயக் குயியீடுகள் ஆகும். கட்டாய குறியீடுகளை மீறுவது சாலை மற்றும் போக்குவரத்துத் துறையினால் சட்டப்படி தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும்.




**எச்சரிக்கை குறியீடுகள்**

சாலை வழி மற்றும் போக்குவரத்துத் துறையால் மொத்தம் 40 போக்குவரத்து எச்சரிக்கை குறியீடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. எச்சரிக்கை குறியீடுகளின் முக்கியச் செயல்பாடு சூழ்நிலைக்கேற்ப தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாகும்.




**தகவல் குறியீடுகள்**


இக்குறியீடுகள் தகவல் பலகைகள் வழியாக ஓட்டுநர்களுக்குத் தகவல் அளிக்கின்றன.




www.kalvinews.com

**இந்தியாவில் சாலை விதிகள்**


- வாகனம் ஓட்டும் போது சாலையின் இடப்பக்கமாக செல்வதுடன் எதிர் திசையில் வரும் வாகனங்களுக்கு வழிவிடுதல் வேண்டும்.
- முன் செல்லும் வாகனத்திலிருந்து போதுமான இடைவெளியை நாம் கடைபிடிக்காததால் மோதல்கள் ஏற்படுகின்றன.
- சாலை குறியீடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.
- சாலையில் பாதை தடத்தை (Lane) மாற்றுவதற்கு முன்பு கண்ணாடி வழியே பின்னால் ஏதேனும் வாகனங்கள் வருகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- பாதசாரிகள் கடக்கும் பாதையில் (வரிக்கோடு) மட்டுமே சாலையை கடக்க வேண்டும்.
- சிவப்பு மற்றும் மஞ்சள் விளக்கு ஒளிரும் போது சாலையைக் கடக்கக் கூடாது.




**சாலையின் மத்தியில் உள்ள இடைவிடப்பட்ட வெள்ளைக் கோடு**: வாகனங்கள் முந்திச் செல்லலாம். பாதுகாப்பாக இருக்கும்பட்சத்தில் U-திருப்பத்தில் திருப்பலாம்.




**தொடர்ச்சியான வெள்ளைக் கோடு:** வாகனங்களை முந்தவோ தடம் மாறவோ அனுமதியில்லை என்பதைக் குறிக்கின்றது. இடதுபுறம் மட்டுமே வாகனங்கள் தொடர்ந்து செல்ல வேண்டும்.





**தொடர்ச்சியான ஒரு மஞ்சள் கோடு:** வெளிச்சம் (Visibility) குறைவான பகுதிகளில் உள்ள சாலைகளில் பயன்படுகின்றது. வாகனங்களை முந்திச் செல்லலாம் மற்றும் இடதுபுறம் மட்டுமே வாகனம் செலுத்தப்படவேண்டும் என்பதை உணர்த்துகிறது.




**இரண்டு தொடச்சியான மஞ்சள் கோடு:** ஆபத்தான மற்றும் இருவழி போக்குவரத்து உள்ள சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது.




**நிறுத்தக் கோடு** : வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டிய பகுதிகளைக் குறிக்கின்றது.



**தொடர்ச்சியான மற்றும் இடைவிடப்பட்ட கோடுகள்:**: இடைவிடப்பட்ட கோட்டின் பக்கமாக ஓட்டும் போது பிற வாகனங்களை முந்திச் செல்லலாம்.

- தொடர்ச்சியான கோட்டின் பக்கமாக செல்லும் போது பிற வாகனங்களை முந்திச் செல்ல கூடாது.

**போக்குவரத்துச் சமிக்கைகள்**



www.kalvinews.com

**இந்திய தண்டனைச் சட்டம் 304 பிரிவு A**

- இந்தியா முழுமைக்கும் பொருந்தக்கூடிய **மோட்டார் வாகனச் சட்டம் 1988-ல்** பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 1989 **ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வந்தது.**
- கண்மூடித்தனமாக ஓட்டுவதாலும் ஓட்டுநரின் அலட்சியம் காரணமாகவும் ஏற்படும் இறப்பு தொடர்பான குற்றங்களுக்கு ஓட்டுநர் மீது காவல்துறை மேற்கூறிய பிரிவின் கீழ் கிரிமினல் குற்ற வழக்கு பதிவு செய்ய நேரிடும்.

**பல்வேறு வண்ண இலக்கத் தகடுகள் (Number Plates):**

- **சிவப்பு வண்ணத் தகடு** - குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர் அவர்களின் வாகனங்களுக்கு
- **நீல வண்ணத் தகடு** - அயல் நாட்டு பிரதிநிதிகள் / தூதர்களின் வாகனங்களுக்கு
- **வெள்ளை வண்ணத் தகடு** - சாதாரண குடிமகனுக்கு சொந்தமான வாகனம்
- **மஞ்சள் வண்ணத் தகடு** - வணிகரீதியான வாகனங்களுக்கு
- **கட்டாய ஆவணங்கள்:** ஓட்டுநர் வாகனம் ஓட்டும்போது ஓட்டுநர் உரிமம், வாகனத்தின் பதிவுச் சான்றிதழ், வரிச் சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ், வாகன உறுதித் தன்மை மற்றும் அனுமதிச் சான்றிதழ் போன்றவற்றைத் தன்னுடன் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும்.

**சாலை விபத்துக்களைத் தவிர்க்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள்:**

- சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் (The Ministry of Road Transport and Highways), சாலை விபத்துக்களையும் சாலை விபத்தினால் ஏற்படும் உயிர் இழப்புகளையும் தவிர்க்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**ஒரு பன்முக ஏற்புடைய வியூகம்:**

- **4 E :**
- **Engineering (பொறியியல்)**
- **Enforcement (செயலாக்கம்)**
- **Education (கல்வி)**
- **Emergency (அவசரம்)**
- மேம்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான சாலை பொறியியலையும், மேம்பட்ட வாகன பாதுகாப்புத் தரநிலைகளையும் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளித்தல், செம்மைப்படுத்தப்பட்ட அவசர சிகிச்சை பராமரிப்பு மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வை உருவாக்குதல்.

**வாகன பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் :**

- சரக்கு வாகனங்கள் வெளியே நீட்டிக் கொண்டு இருக்கும் கம்பிகளை ஏற்றிச் செல்ல தடை செய்யப்பட்டுள்ளது.
- கனரக வாகனங்களில் பூட்டுதலில்லா நிறுத்தும் அமைப்பும் (Anti - locking Brake System), இரு சக்கர வண்டிகளிலும் ABS / CBS நிறுத்தற் கருவியும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும், இரு சக்கர வண்டிகள் தெளிவாகத் தெரியும்பொருட்டு தானியங்கி முகப்பு விளக்கு ஒளிர்விப்பான் (Automatic Headlight On) கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**சாலை விபத்தில் சிக்கியவர்கள் பணமில்லா பரிவர்த்தனை மூலம் சிகிச்சை அளிக்கும் முன்னோடித் திட்டம்:**

- தேசிய நெடுஞ்சாலை எண் 8 **மற்றும்** 33 இல் இத்திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

www.kalvinews.com

- தற்போது தங்க நாற்கர சாலைகளிலும், வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு, மேற்கு இணைப்புச் சாலைகளிலும் நடைமுறைபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- **உடனடி விரைவு அவசர சிகிச்சை ஊர்திகள்:** தேசிய நெடுஞ்சாலைகளில் ஒவ்வொரு 50 km தொலைவிலும் ஒரு அவசர சிகிச்சை ஊர்தியை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) நிறுத்தப்பட்டிருக்கின்றது.

**சேதுபாரதம்:**

- தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாக மற்றும் தடையற்ற பயணம் செய்ய பாலங்களைக் கட்டுவதற்கான திட்டம் 2016 இல் தொடங்கப்பட்டது.

  **நோக்கம்:**

  2019 ஆம் ஆண்டிற்குள் அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளையும், இருப்புப்பாதை குறுக்கீடு இல்லாமல் உருவாக்குவது.

**வேகக் கட்டுப்பாட்டு கருவி:**

- ஒரு குறிப்பிட்ட வேகத்தினைத் தாண்டும் போது வாகனத்தின் உந்து பொறிக்கு செல்லும் காற்று மற்றும் எரிபொருளின் அளவினை கட்டுப்படுத்துகிறது. இது தானாகவே வாகனத்தின் வேகத்தைக் குறைப்பதோடு, முன்னரே தீர்மானிக்கப்பட்ட வேகத்தினை மீறி வாகனம் செல்வதையும் தடுக்கிறது.

**பல்வேறு செய்திக் குறியீடுகள்**:

இவை பயணிகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டிய தகவல்களைத் தெரிவிக்கும் ஒளி உமிழும் முனைய பலகைகள் (LED Boards) ஆகும். பெரிய போக்குவரத்து நெரிசல் மற்றும் நெருக்கடிகள் ஏதேனும் ஏற்பட்டால் அந்நிலைகளை உடனடியாக, அச்சாலையை உபயோகிப்பவர்களுக்குத் தெரிவிக்க இவை பயன்படுகின்றன.

**சாலை பாதுகாப்புக்கான பிரேசிலியா பிரகடனம்:**

- இது ஐ.நா. உலக சுகாதார அமைப்பு இணைந்து நடத்திய சாலை பாதுகாப்பிற்கான இரண்டாவது உலகளாவிய உயர்மட்ட மாநாடு ஆகும்.
- சாலை பாதுகாப்பினை மிக முக்கியமானதாகக் கருதி இந்தியா, பிரேசிலியா பிரகடனத்தில் 2015 ஆம் ஆண்டு கையெழுத்திட்டது.
- குழந்தைகளிடையே சாலை பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்தோடு **சுவச்ச சேஃபர் (Swachha Safer) மற்றும் சுவரஷித் யாத்ரா (Suvarshit Yatra)** என்ற இரு சித்திர புத்தகங்களை சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- **வாழ்வை காப்பாற்று நிறுவனம் (Save Life Foundation):** இது ஒரு சுதந்திரமான, இலாப நோக்கில்லாத, அரசு சாரா, பொதுத் தொண்டு அறக்கட்டளையாகும்.

**சாலை பாதுகாப்பு வாரம்**

- சாலை பாதுகாப்பு வாரம் என்பது சாலை விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதையும், சாலை விபத்துக்கள் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்ட தேசிய நிகழ்வு ஆகும்.
- இது சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் துவங்கப்பட்டது.
- இது இந்திய தேசிய பாதுகாப்பு கவுன்சிலால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

www.kalvinews.com

- இது பாதுகாப்பு , உடல்நலம் மற்றும் சுற்றுச் சூழல் பிரச்சனைகள் குறித்து பொதுமக்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- **ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் தேசிய சாலை பாதுகாப்பு வாரம்** அனுசரிக்கப் படுகின்றது.
- **சாலை பாதுகாப்பு நடவடிக்கைக்கான பதிற்றாண்டு (2011 - 2020)**
- **ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2011 - 2020 வரையிலான பத்தாண்டுகள் சாலை பாதுகாப்பு நடவடிக்கைக்கான பதிற்றாண்டாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் சர்வதேச கூட்டமைப்பு பரிந்துரைத்துள்ள 10 உறுதிமொழிகள்**

1. வாகனத்தை நல்ல நிலையில் பராமரித்தல்
2. வாகனத்திற்கு உரிமம் பெறுதல்
3. விபத்து நடந்தால் எவ்வாறு நடந்து கொள்ளுதல் என்பதை அறிதல்
4. இருக்கை வார்ப் பட்டையை பயன்படுத்துதல்
5. இரு சக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணிதல்
6. நிலைமைக்குத் தகுந்தாற்போல், பாதுகாப்பான வேகத்திலும், பாதுகாப்பான இடைவெளி விட்டும் வாகனம் ஓட்டுதல்
7. மது போதையில் வாகனத்தை இயக்காதிருத்தல்
8. வாகனம் ஓட்டும்போது செல்லிடைப் பேசியை பயன்படுத்தாமல் இருத்தல்
9. பாதசாரிகள் அல்லது மிதிவண்டி ஓட்டுபவர்போல் பார்க்கக்கூடிய அளவில் இருத்தல்
10. நெடுஞ்சாலை விதிகளை அறிந்து மதித்தல்.

**பயிற்சி வினாக்கள்:**

1. சாலை ஒழுங்குமுறை சம்பந்தமான விதிகள் _______ ஆண்டு நடைமுறைக்கு வந்தது.
   1. 1987 ஜூலை 1
   2. 1988 ஜூலை
   3. 1989 ஜூலை 1
   4. 1990 ஜூலை 1

2. கூற்று: சாலை விபத்துக்கள் படுகாயங்களுக்கும், இறப்பிற்கும் வழிவகுக்கும் வருந்தத்தக்க நிகழ்வுகளை ஏற்படுத்துகின்றன.
   காரணம்: பிரச்சனை சாலைகளால் அல்ல. அது நம் கவனக் குறைவால்தான்.
   1. கூற்று மற்றும் காரணம் சரி; கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.
   2. கூற்று மற்றும் காரணம் சரி; கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை
   3. கூற்று, காரணம் இரண்டும் தவறு
   4. கூற்று சரி, காரணம் தவறு

3. சாலையில் ஒரு வாகனம் பழுது நீக்கும் பொழுது ______.
   1. தடை வேலி பாதுகாப்பினைப் பயன்படுத்துதல்
   2. வாகன நிறுத்த விளக்குகளை உபயோகித்தல்
   3. எச்சரிக்கை முக்கோணத்தை உபயோகித்தல்
   4. இவையனைத்தும்

www.kalvinews.com

4. விபத்துகளின் நேரடி விளைவுகள் _______.

1. இறப்பு  2. காயம்  3. சொத்து சேதம்  4. இவையனைத்தும்

5. _______ வாகனங்களில் சிவப்பு வண்ணம் கொண்ட எண் தகடுகள் பயன்படுத்தப்படுகிறது.

1. குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர்  2. தூதுவர்கள்

3. சாதாரண குடிமகன்  4 வணிக வாகனங்கள்

6. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i. ஒரு வாகனத்தை பின் தொடர்தல் | - | a) செல்லிடைப் பேசி |
| ii. மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல் | - | b) நேரத்தை மிச்சப்படுத்த நினைப்பதே |
| iii. வாகன ஓட்டிகளின் கவனச் சிதறல் | - | c) சட்ட விரோதம் |
| iv. சிவப்பு விளக்கில் நில்லாமை | - | d) மயக்கத்தில் பார்வை தடை படுகிறது |

1. i - d  ii - c  iii - a  iv - b

2. i - a  ii - d  iii - c  iv - b

3. iii - b  ii - c  iii - a  iv - d

4. i - c  ii - d  iii - a  iv - b

7. கூற்று: நான்கு சக்கர வாகனங்களில் இருக்கைப் பட்டை (Seat belt) அணிவதும் இரு சக்கர வாகனங்களில் தலைக்கவசம் (Helmelts) அணிவது சட்டமாக்கப்பட்டுள்ளது.

காரணம்: பயணிகள் தாங்கள் சேர வேண்டிய இடத்தை பாதுகாப்புடன் உரிய நேரத்தில் சென்றடைவதற்கு,

1. கூற்று சரி, காரணம் தவறு.

2. கூற்று, காரணம் இரண்டும் சரி.

3. கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

4. கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றிற்கான விளக்கம் அல்ல.

8. கட்டாயக் குறியீடுகள் பொதுவாக _______ வடிவில் இருக்கும்.

1. முக்கோண  2. வட்ட  3. சதுர  4. செவ்வக

9. வாகனங்கள் ஓட்டும்போது _______ புறமாக செல்ல வேண்டும்.

1. இடது  2. வலது  3. நேர்திசை  4. எதிர்திசை

10. எதிர்திசையில் வரும் வாகனங்களுக்கு வழி விடுவதற்கு _______ புறமாக செல்ல வேண்டும்.

1. வலது  2. இடது  3. நேர்திசை  4. எதிர்திசை

11. சாலையை கடக்கும்போது, வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் போது _______ மற்றும் _______ யை பயன்படுத்த வேண்டும்.

1. சிவப்பு விளக்கு மற்றும் முக்கோண எச்சரிக்கைப் பலகை

2. மஞ்சள் விளக்கு மற்றும் எச்சரிக்கைப் பலகை

3. பச்சை விளக்கு மற்றும் எச்சரிக்கைப் பலகை

4. ஊதா விளக்கு மற்றும் முக்கோண எச்சரிக்கைப் பலகை

www.kalvinews.com

12. கூற்று 1: பாதசாரிகள் கடக்கும் பாதையில் (வரிக்கோடு) மட்டுமே சாலையை கடக்க வேண்டும்.

கூற்று 2: சிவப்பு மற்றும் மஞ்சள் விளக்கு ஒளிரும்போது சாலையைக் கடக்கக் கூடாது.

1. கூற்று 1 மற்றும் 2 தவறு.
2. கூற்று 1 மற்றும் 2 சரி.
3. கூற்று 1 தவறு 2 சரி.
4. கூற்று 1 சரி 2 தவறு.

13. சாலையின் மத்தியில் உள்ள இடைவிடப்பட்ட வெள்ளைக் கோடு குறிப்பது ______.

1. தடம் மாறக் கூடாது
2. தடம் மாறலாம்
3. பாதசாரிகள் கடக்கலாம்
3. வாகனம் வலது புறமாக நிறுத்தலாம்

14. 1. சாலைகளில் தொடர்ச்சியான வெள்ளைக்கோடானது வாகனங்கள் முந்தவோ, தடம் மாறவோ அனுமதி உண்டு என்பதைக் குறிக்கின்றது.

2. வெளிச்சம் குறைவாக உள்ள சாலைகளில் மஞ்சள் நிறக் கோடு பயன்படுத்தப்படுகிறது.

3. ஆபத்தான மற்றும் இருவழி போக்குவரத்து உள்ள சாலைகளில் இரண்டு தொடர்ச்சியான மஞ்சள் கோடுகள் பயன்படுத்தப்படுகிறது.

4. சாலையில் தொடர்ச்சியான மற்றும் இடைவிடப்பட்ட கோட்டின் பக்கமாக ஓட்டும் போது பிற வாகனங்கள் முந்திச் செல்லக் கூடாது.

1. 1 மற்றும் 2 சரி; 3 மற்றும் 4 தவறு.
2. 1 மற்றும் 3 சரி; 2 மற்றும் 4 தவறு.
3. 1 மற்றும் 4 தவறு; 2 மற்றும் 3 சரி.
4. 2 மற்றும் 4 சரி; 2 மற்றும் 3 தவறு

15. கீழ்க்காணும் குறியீடுகளில் எது வாகனத்தை முந்திச் செல்வதற்குத் தடை செய்யப்பட்டது?


1.


2.


3.


4.

16. திசைகள், இலக்குகள் பற்றிய தகவல்கள் (தகவல் குறியீடுகள்) ______ வடிவில் காணப்படும்.

1. செவ்வக
2. சதுர
3. வட்ட
4. கனசதுர

17. பாதைகள் தெளிவாக இருக்கும்பட்சத்தில் வாகனங்கள் செல்ல உதவும் விளக்கின் நிறம் ______.

1. சிவப்பு
2. மஞ்சள்
3. பச்சை
4. ஊதா

18. மோட்டார் வாகனச் சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ______.

1. 1988
2. 1989
3. 1990
4. 1991

19. மோட்டார் வாகனச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு ______.

1. 1988
2. 1989
3. 1990
4. 1991

20. ஓட்டுநர் வாகனத்தினை இடப்பக்கமாக திருப்ப விரும்பினால் தனது கையினை ______ சுழற்ற வேண்டும்.

1. வலஞ்சுழியாக
2. நேர் சுழியாக
3. எதிர் சுழியாக
4. இடஞ்சுழியாக

21. ஒருவழிச் சாலையில் ஓட்டுநர் தனது வாகனத்தை ______ புறமாக முந்திச் செல்ல அனுமதிக்க வேண்டும்.

1. இடது
2. வலது
3. நேர்
4. எதிர்

www.kalvinews.com

22. ஓட்டுநர்கள் ஒலிப்பான்களை எங்கு பயன்படுத்தக்கூடாது?

1. கோவில் 2. தேவாலயம் 3. பள்ளிக்கூடம் 4. பள்ளிவாசல்

23. சரியான இணையைத் தேர்ந்தெடு.

1. மருத்துவ ஊர்தி - 101 2. தீயணைப்பு நிலையம் - 102
3. காவலர் - 104 4. போக்குவரத்து காவலர் - 103

24. தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. சிவப்பு வண்ணத் தகடு - குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்
2. வெள்ளைத் தகடு - வணிகரீதியான / இந்தியப் பயணிகள்
3. நீல வண்ணத் தகடு - அயல் நாட்டுப் பிரதிநிதிகள் / தூதர்கள்
4. மஞ்சள் வண்ணத் தகடு - வணிகரீதியான வாகனங்கள்

25. ஓட்டுநரின் அலட்சியம் காரணமாக ஏற்படும் இறப்பு தொடர்பான குற்றங்களுக்கு ______ பிரிவின்கீழ் கிரிமினல் வழக்கு பதிவு செய்யலாம்.

1. இந்திய தண்டனைச் சட்டம் 304A பிரிவு
2. இந்திய தண்டனைச் சட்டம் 305A பிரிவு
3. இந்திய தண்டனைச் சட்டம் 306A பிரிவு
4. இந்திய தண்டனைச் சட்டம் 307A பிரிவு

26. ஓட்டுநர் வாகனம் ஓட்டும் போது பின்வரும் எந்த ஆவணங்களைக் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும்?

1. ஓட்டுநர் உரிமம் 2. வாகனத்தின் பதிவுச் சான்றிதழ்
3. காப்பீட்டுச் சான்றிதழ் 4. மேற்கண்ட அனைத்தும்

27. சாலை பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டு ஒரு பன்முக ஏற்புடைய வியூக ஆங்கில எழுத்து ______.

1. E 2. F 3. G 4. H

28. பொருத்துக.

i. ABS - a) Automatic Heading On
ii. CBS - b) National Highway Authority of India
iii. AHO - c) Anti-locking Brake System
iv. NHAI - d) Commercial Broadcasting System

1. i - c ii - a iii - b iv - d 2. i. - c ii - d iii - b iv - a
3. i. - c ii - d iii - a iv - b 4. i - d ii - a iii - c iv - b

29. சாலை விபத்தில் சிக்கியவர்கள் பணமில்லா பரிவர்த்தனை மூலம் சிகிச்சை அளிக்கும் முன்னோட்டத் திட்டம் ______ ல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. தேசிய நெடுஞ்சாலை எண் 7 மற்றும் 31
2. தேசிய நெடுஞ்சாலை எண் 8 மற்றும் 32
3. தேசிய நெடுஞ்சாலை எண் 7 மற்றும் 32
4. தேசிய நெடுஞ்சாலை எண் 8 மற்றும் 33

www.kalvinews.com

30. தேசிய நெடுஞ்சாலையில் அவசர சிகிச்சை ஊர்திகள் எத்தனை கிலோ மீட்டருக்கு ஒன்று நிறுத்தப்பட்டிருக்கும்?

1. 50 km  2. 60 km  3. 70 km  4. 80 km

31. சேது பாரத திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு ______.

1. 2000  2. 2002  3. 2010  4. 2016

32. கூற்று 1: வேகக் கட்டுப்பாட்டுக் கருவியானது, ஒரு வாகனத்தில் நிர்ணயிக்கப்பட்ட வேகத்தினை தாண்டும் போது அதன் உந்து பொறிக்கு (Engine) செல்லும் காற்று மற்றும் எரிபொருளின் அளவினை கட்டுப்படுத்துகிறது.

கூற்று 2: வேகக் கட்டுப்பாட்டுக் கருவியானது, வாகனத்தின் வேகத்தினை தானாகவே குறைக்கும். ஆனால், முன்னரே தீர்மானிக்கப்பட்ட வேகத்தினை மீறி வாகனம் செல்வதை தடுக்காது

1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
2. கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி
3. கூற்று 1 மற்றும் கூற்று 2 தவறு
4. கூற்று 1 தவறு மற்றும் கூற்று 2 சரி

33. ஐ.நா. உலக சுகாதார அமைப்பு இணைந்து நடத்திய சாலை பாதுகாப்பிற்கான இரண்டாவது உலகளாவிய உயர்மட்ட மாநாடு ______ ல் நடைபெற்றது.

1. பிரேசில்  2. பிரேசிலியா  3. இங்கிலாந்து  4. ரஷ்யா

34. இந்தியா, பிரேசிலியா பிரகடனத்தில் ______ ஆண்டு கையெழுத்திட்டது.

1. 2014  2. 2013  3. 2012  4. 2015

35. குழந்தைகளிடையே சாலை பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்தோடு வெளியிடப்பட்ட புத்தகங்கள் ______.

1. Swachha Safer and Suvarshit Yatra (சுவச்சே சே∴பர் மற்றும் சுவரஷித் யாத்ரா)
2. Swachha Save and Suvarshit Safer (சுவச்ச சேவ் மற்றும் சுவரஷித் சே∴பர்)
3. Suvarshit Save and Swachha Yatra (சுவரஷித் சேவ் மற்றும் சுவச்சா யாத்ரா)
4. Swachha and Suvarshit (சுவச்சா மற்றும் சுவரஷித்)

36. ஒவ்வொரு வருடமும் சாலைப் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படும் மாதம் ______.

1. ஜனவரி  2. பிப்ரவரி  3. மார்ச்  4. ஏப்ரல்

37. சிவப்பு விளக்கு ஒளிரும் போது ______.

1. உன் நண்பனின் குறுந்தகவலுக்கு விரைவாக பதில் அனுப்பலாம்.
2. செல்லிடைப் பேசியில் உரையாடலாம்
3. நீங்கள் வாகனத்தை நிறுத்தி பச்சை விளக்கு ஒளிரும் வரை காத்திருக்க வேண்டும்.
4. பாதை தெளிவாக இருக்கும் போது நீங்கள் தொடர்ந்து செல்லலாம்.

38. பாதசாரிகள் சாலையை கடக்குமிடம் ______.

1. எங்கு வேண்டுமானாலும்  2. சமிக்ஞைகளுக்கு அருகில்
3. வரிகோட்டுப் பாதையில்  4. இவற்றில் ஏதுமில்லை

www.kalvinews.com

39. பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி (சாலை பாதுகாப்பு விதிகள்)

1. வளைவுகளில் மெதுவாக செல்
2. வேகக் கட்டுப்பாட்டு அளவினைக் கடைப்பிடி
3. வாகனம் ஓட்டும் பொழுது செல்லிடைப் பேசியை பயன்படுத்து
4. சாலைகளில் நடப்பதை தவிர்க்கவும்

40. கூற்று: சாலைக் குறியீடுகள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்று.
காரணம்: அவைகள் பெரும்பாலும் படங்களாக இருக்கின்றன.

1. கூற்று சரி, காரணம் தவறு
2. கூற்றும் காரணமும் சரி; காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
3. கூற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
4. கூற்று தவறு, காரணம் சரி.

41. பொருத்துக:

i. மாசுக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் - a) 15 வருடங்கள்
ii. புதிய சிற்றுந்துகளுக்கான ஒரு முறை வரி - b) 1073
iii. சாலை விபத்து - c) 6 மாதம்
iv. மாநில சுகாதார உதவி எண் - d) 104

1. i - b ii - c iii - a iv - d
2. i - d ii - c iii - b iv - a
3. i - c ii - a iii - d iv - b
4. i - c ii - a iii - b iv - d

42. மோட்டார் வாகனச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு (NMMS-2020-21)

(1) 1978 (2) 1998 (3) 1988 (4) 1989

43.  என்ற குறியீடு எதைக் குறிக்கிறது? (NMMS-2020-21)

(1) பேருந்து நிறுத்தம் (2) வழி விடு
(3) ஒலிப்பான் (4) பாலம்

## விடைகள்:

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | (3) | **11** | (1) | **21** | (2) | **31** | (4) | **41** | (4) |
| **2** | (1) | **12** | (2) | **22** | (3) | **32** | (1) | **42** | (4) |
| **3** | (4) | **13** | (2) | **23** | (4) | **33** | (2) | **43** | (2) |
| **4** | (4) | **14** | (3) | **24** | (2) | **34** | (4) | | |
| **5** | (1) | **15** | (4) | **25** | (1) | **35** | (1) | | |
| **6** | (4) | **16** | (1) | **26** | (4) | **36** | (1) | | |
| **7** | (3) | **17** | (3) | **27** | (1) | **37** | (3) | | |
| **8** | (2) | **18** | (1) | **28** | (3) | **38** | (3) | | |
| **9** | (1) | **19** | (2) | **29** | (4) | **39** | (3) | | |
| **10** | (2) | **20** | (4) | **30** | (1) | **40** | (2) | | |

www.kalvinews.com

## வகுப்பு - 8 - பொருளியல்

### 1. பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்

**தொகுப்பு:**
**திரு.செ.பெரியசாமி, M.Sc., B.Ed., M.A., M.Phil.,**
**பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்),**
**அரசு உயர்நிலைப்பள்ளி,**
**கொ.ஒட்டப்பட்டி, கரூர் மாவட்டம்.**

**மேம்பாடு:**
**திரு.பெ.பிரபாத், M.Sc., B.Ed., M.A.,**
**பட்டதாரி ஆசிரியர் (கணிதம்),**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி, கோமாளியூர்,**
**சேலம் மாவட்டம்.**

## முக்கிய குறிப்புகள்

- பணம் ஒரு அடிப்படைக் கண்டுபிடிப்பு.
- பணம் என்ற வார்த்தை ரோம் வார்த்தையான "மொனேட்டா ஜூனோ" விலிருந்து பெறப்பட்டது.
- மொனேட்டா ஜூனோ என்பது ரோமானிய பெண் கடவுளின் பெயர் மற்றும் ரோம் பேரரசின் பணமாகும்.
- ரூபாய் என்பது சமஸ்கிருத சொல்லாகும்.
- ரூபியா என்றால் வெள்ளி நாணயம் என்று பொருள்.
- பண்டமாற்று முறை: பணத்தைப் பயன்படுத்தாமல் மனிதர்கள் பண்டங்களுக்கு - பண்டங்களை பரிமாற்றம் செய்வது. இது ஆரம்ப மற்றும் பழங்கால முறையாகும்.
- பண்டமாற்று செயலில் பணத்தின் ஈடுபாடு இல்லாமல் இருப்பது ஒரு நன்மையாகும்.
- இருமுகத் தேவை பொருத்தமின்மை, பொதுவான மதிப்பின் அளவுகோல், பொருட்களின் பகுபடாமை, செல்வத்தைச் சேமிப்பதற்கான சிரமங்கள் ஆகியவை பண்டமாற்று முறையில் உள்ள சில குறைகளாகும்.

**சில முக்கிய நிலைகள் மூலம் பணம் உருவானது. அவை**

- **பண்டப் பணம்** - ஆரம்ப காலத்தில் அனைவராலும் ஏற்கக் கூடிய பண்டங்களைப் பணமாகப் பயன்படுத்தினர். (உ-ம்) உரோமம், தோல், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள்
- **உலோகப் பணம்** - பதிவு செய்யப்பட்ட வரலாற்றில் இப்பணம் முக்கிய பங்கு வகித்தது. (உ-ம்) தங்கம், வெள்ளி, தாமிரம்
- **காகிதப் பணம்** - காகிதப் பணம் கண்டுபிடிப்பு பணத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நிலையாகக் கருதப் பட்டது. தங்கத்தின் சேமிப்புக்குப் பொற்கொல்லர்கள் வழங்கிய இரசீது நாளடைவில் பணமாக மாறியது.
- இந்திய ரிசர்வ் வங்கி காகிதப் பணத்தை அச்சிடுதல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்கிறது.
- **கடன் பணம்** - காகித பணமும் கடன் பணமும் ஒரே நேரத்தில் வளர்ந்தது. வங்கி வரைவோலை, காசோலை
- **நிகர் பணம் (அ)** அருகாமைப் பணம் - இது பண பரிணாம வளர்ச்சியின் இறுதிநிலையாகும். (உ-ம்) உண்டியல், கருவூலக பட்டியல், பத்திரம், கடன் பத்திரங்கள், சேமிப்பு பத்திரங்கள் ஆகியவற்றின் பயன்பாடுகள்

www.kalvinews.com

**சமீபத்திய பணத்தின் வடிவங்கள்**

- **நெகிழிப் பணம்** - பணமில்லாப் பரிவர்த்தனை இதன் நோக்கம். (உ-ம்) கடன் அட்டைகள், பற்று அட்டைகள்
- **மின்னணு பணம்** - வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னணு முறையின் மூலம் மேற்கொள்ளப்படுவது.
- **நிகழ்நிலை வங்கி (இணைய வங்கி)** - வாடிக்கையாளர் (அ) பிற நிதிநிறுவனங்கள் வலைதளத்தின் மூலம் ஒரு பரந்த நிதிப் பரிவர்த்தனைகள் நடத்தும் ஒரு மின்னணு முறையாகும்.
- **மின்வங்கி** - தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (NEFT). ஒரு கணக்கில் இருந்து மற்றொரு கணக்கிற்கு நிதியை மாற்ற பயன்படுகிறது.

காலக்கோடு:

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| பொ.ஆ.மு. 8 ம் நூற்றாண்டு | லிடியாவின் பேரரசர் மிடாஸ் உலோக நாணயத்தைக் கண்டுபிடித்தார். |
| பொ.ஆ.மு. 6 ம் நூற்றாண்டு | இந்தியாவில் முதன்முறையாக மஹாஜனபதங்கள் ஆட்சியில் பூரணாஸ், கர்ஷபணம், பனாஸ் போன்ற நாணயங்கள் அச்சடிக்கப் பட்டன. |
| பொ.ஆ.பி. 12 ம் நூற்றாண்டு | டெல்லி துருக்கி சுல்தான்கள் தங்கள் நாணயங்களில் இந்திய அரசர்களின் உருவத்தை நீக்கி இஸ்லாமிய எழுத்துகளைப் பொறித்து வெளியிட்டனர். |
| 1526 | முகலாய சாம்ராஜ்யம் முழு சாம்ராஜ்யத்திற்கான பணவியல் முறையை ஒருங்கிணைத்தது. |
| 1600 | ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி முகலாய நாணயத்தைப் பிரபலப் படுத்தியது. |
| 1717 | முகலாய பேரரசர் பாருக்ஷாயர், ஆங்கிலேயர்களுக்கு முகலாய பண நாணயத்தைப் பம்பாய் அச்சகத்தில் அச்சடிக்க அனுமதி அளித்தார். |
| 1935 | இந்திய ரிசர்வ் வங்கி நிறுவப்பட்டது |
| 1988 | ஊழல் தடுப்புச் சட்டம் |
| 1988 | பினாமி பரிவர்த்தனை தடுப்புச் சட்டம் |
| 2002 | பண மோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம் |
| ஜூலை 15, 2010 | தமிழ்நாட்டில் உள்ள விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த உதயகுமார் என்பவரால் வடிவமைக்கப்பட்ட இந்திய ரூபாய் குறியீடு இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது |
| 2015 | வெளிக்கொணரப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்து மசோதா (வரி விதித்தல்) |
| 2016 | 1988 ல் ஆண்டு பினாமி பரிவர்த்தனை தடுப்புச் சட்டம் திருத்தப் பட்டது |
| 2016 | ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம் |
| நவம்பர் 8, 2016 | ₹500, ₹1000 நோட்டுகள் பணமதிப்பு இழப்பு செய்யப்பட்டது. |

www.kalvinews.com

- பணத்தின் மதிப்பு என்பது ஒரு நாட்டில் உள்ள பண்ட மற்றும் பணிகளின் வாங்கும் சக்தி ஆகும்.
- பணத்தின் மதிப்பு இரு வகைப்படும். அவை

| அக மதிப்பு | புறமதிப்பு |
|---|---|
| உள் நாட்டில் உள்ள பண்ட மற்றும் பணிகளின் வாங்கும் சக்தி | வெளி நாட்டில் உள்ள பண்ட மற்றும் பணிகளின் வாங்கும் சக்தி |

- பணம் அனைவரிடமும் பொதுவான ஏற்புத் திறனைப் பெற்றுள்ளது.
- கருப்பு பணம் என்பது நாட்டின் ஒழுங்கு கட்டுப்படுத்துகையில் சட்டவிரோதமாக சம்பாதிக்கும் பணமாகும்.
- கருப்புப் பணம் என்பது கணக்கில் கொண்டு வராத பணத்தின் ஒரு வடிவமாகும்.
- வரி ஏய்ப்பு செய்வதற்காக வருமானத்தின் ஒரு பகுதியை மட்டுமே கணக்கில் காட்டுகின்றனர்.
- கருப்புப் பணத்தால் பொருளாதாரத்தில் ஒருபுறம் வளர்ச்சியும் மறுபுறம் வளர்ச்சியற்ற நிலையும் ஏற்பட்டு இரட்டைப் பொருளாதாரத்தை உருவாக்கும்.
- கருப்புப் பணத்திற்கு எதிராக லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் என்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.
- இந்தியா உள்ளிட்ட நாடுகளின் அழுத்தத்தால் சுவிட்சர்லாந்து தனது உள்ளூர் சட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி சுவிஸ் வங்கி மூலம் உதவுகிறது.
- உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் கருப்புப் பணத்தைக் கண்காணிக்க சிறப்பு விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பணத்தின் பணிகள் | முதன்மை (அ) முக்கிய பணிகள் | பரிமாற்ற கருவி (அ) பண செலுத்துகை | பண்டம், பணிகளை வாங்க பயன்படுத்தப் படுகிறது |
| | | மதிப்பின் அளவுகோல் | பலவகையான பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இடையில் பரிமாற்ற விகிதத்தைத் தீர்மானிப்பது எளிது. |
| | இரண்டாம் நிலை பணிகள் | எதிர்கால செலுத்துகைக்கான நிலை மதிப்பு | எதிர்கால செலுத்துகைக்குப் பணம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது. |
| | | மதிப்பின் நிலைகலன் (அ) வாங்கும் சக்தியின் நிலைகலன் | சில பண்டங்கள் அழிந்து போகக் கூடியதால் பண்டமாற்று முறையில் சேமிப்பை ஊக்குவிப்பதில்லை. பணம் அழியக் கூடியதில்லை |
| | | மாற்று மதிப்பு (அ) மாற்று வாங்கும் சக்தி | பணத்தால் தொலைதூர இடங்களுக்கும் வெளிநாட்டிற்கும் பண்டங்களைப் பரிமாற்றம் செய்ய முடியும். |
| | இதர பணிகள் | • கடன் அடிப்படையில் இயக்கப் படுகிறது.<br>• மூலதனத்தின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு<br>• நாட்டு வருவாயின் அளவீடு மற்றும் விநியோகம் | |

www.kalvinews.com

| அறிஞர்கள் | 'பணம்' பற்றிய கூற்று |
|---|---|
| இராபர்ட்சன் | பொது ஏற்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பண்டங்கள் வாங்கும்போது அதற்கான செலுத்துத் தொகையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய எதனையும் பணம் என்று கூறலாம். |
| ஸ்டோவ்ஸ்கி | பணம் என்பது கடினமான கருத்தாகும். பணத்தின் 3 பணிகள் : கணக்கீட்டின் அலகு, மதிப்பின் அளவுகோல், மதிப்பின் நிலைகலன்கள் |
| சர்ஜான் ஹிக்ஸ் | பணம் அதன் பணிகளால் வரையறுக்கப் படுகிறது. எதுவெல்லாம் பணமாகக் கருதப்படுகிறதோ அவை பணமாகப் பயன்படுத்தப் படுகிறது. |
| பேராசிரியர் வாக்கர் | எதையெல்லாம் செய்யவல்லதோ, அதுவே பணம் |

| பணவீக்கம் | பணவாட்டம் |
|---|---|
| விலைகள் உயர்ந்து, பணத்தின் மதிப்பு வீழ்ச்சி அடைவதைக் குறிக்கும். | விலைகள் குறைந்து, பணத்தின் மதிப்பு உயர்வதைக் குறிக்கும். |

| ஒப்பீட்டின் அடிப்படை | சேமிப்பு | முதலீடு |
|---|---|---|
| பொருள் | தனிநபர் வருமானத்தில் நுகர்விற்காகப் பயன்படுத்தப் படாத ஒரு பகுதி | மூலதன சொத்துக்களில் நிதி முதலீடு செய்யும் செயல்முறை |
| நோக்கம் | குறுகிய கால, அவசர கால தேவைகளை நிறைவேற்றும் | மூலதன உருவாக்கத்திற்கும் வருவாய்க்கும் உதவுகிறது. |
| இடர்பாடு | குறைந்த (அ) புறக்கணிக்கப்பட்ட அளவு | மிக அதிகம் |
| வருவாய் | இல்லை அல்லது குறைவு | ஒப்பீட்டளவில் அதிகம் |
| நீர்மைத் தன்மை | அதிக நீர்மை | குறைந்த நீர்மை |
| நன்மைகள் | பணி ஓய்வில் நிம்மதி, நிதி ரீதியாக தனித்து இருத்தல், எதிர்பாராத செலவுகளை எதிர்கொள்ளல் | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும். |
| வகைகள் | <u>மாணவர் சேமிப்புக் கணக்கு</u> -பூஜ்ய இருப்பு இதன் முக்கிய அம்சமாகும்.<br><u>சேமிப்பு வைப்பு</u> -பெயரளவு வட்டி உண்டு. தேவைப்படும் போது பணம் எடுத்துக் கொள்ளலாம்<br><u>நடப்பு கணக்கு வைப்பு</u> -வர்த்தக நிறுவனங்கள், வர்த்தகர்கள், பொது அதிகாரிகளால் ஆரம்பிக்கப் படுகிறது.<br><u>நிரந்தர வைப்பு</u> -பணத்திற்கு பாதுகாப்பும் நிலையான வருவாயும் உண்டு. கால வைப்பு என்றும் அழைக்கலாம். குறிப்பிட்ட காலத்திற்கு நிரந்தரமாக வங்கியில் இருக்கும். | பங்கு வர்த்தகம்<br>பத்திரங்கள்<br>பரஸ்பர நிதி<br>காப்பீடு<br>ஆண்டுத் தொகை<br>வைப்பு கணக்கு (அ) வேறு பல பத்திரங்கள் (அ) சொத்துக்கள் |

www.kalvinews.com

- மௌரியர்கள் தங்கம், வெள்ளி, தாமிரம் அல்லது ஈயம் போன்ற நாணயங்களைத் துளையிட்டு வெளியிட்டனர்.
- இந்திய கிரேக்க குஷாண அரசர்கள் சித்திரங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை அறிமுகப் படுத்தினர்.

**நாணயங்களின் பெயர்கள்**

| நாணயங்கள் | தங்கம் | வெள்ளி | செம்பு (அ) தாமிரம் | வெண்கலம் | மதிப்பு குறைவானவை |
|---|---|---|---|---|---|
| டெல்லி சுல்தான்கள் ஆட்சியில் | டாங்கா | டாங்கா | டாங்கா | - | ஜிட்டால் |
| ஆங்கிலேயர்கள் ஆட்சியில் | கரோலினா | ஏஞ்சலினா | கப்ரூன் | டின்னி | - |

- செர்ஷாவின் ஆட்சியில் 178 கிராம் எடையுள்ள வெள்ளி நாணயத்தை வெளியிட்டார். அதன் பெயர் 'ரூபியா'
- 40 தாமிர துண்டுகள் (அ) பைசா போன்றவற்றைப் பயன்படுத்தினர்.
- முகலாய ஆட்சி முழுவதும் வெள்ளி நாணயம் பயன்பாட்டில் இருந்தது.

**பயிற்சி வினாக்கள்:**

1. பண்டங்கள் வாங்கும் போது அதற்கான செலுத்துத் தொகையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய எதையும் பணம் என்று கூறியவர் _______.
   1. இராபர்ட்சன் 2. ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
   3. ஆடம் ஸ்மித் 4. அமித்யா சென்

2. இந்தியாவின் "ரூபாய்" என்ற சொல் _______ மொழியில் இருந்து பெறப்பட்டது.
   1. தமிழ் 2. தெலுங்கு 3. சமஸ்கிருதம் 4. மலையாளம்

3. கூற்று 1: பணம் என்ற வார்த்தை ரோம் வார்த்தையான " மொனேட்டா ஜூனோ" விலிருந்து பெறப்பட்டது.
   கூற்று 2: இது ரோமின் பெண் கடவுள் மற்றும் ரோம் பேரரசின் குடியரசு பணமாகும்.
   1. கூற்று 1 சரி, 2 தவறு 2. கூற்று 2 சரி, 1 தவறு
   3. கூற்று இரண்டும் தவறு 4. கூற்று இரண்டும் சரி

4. பண்டைய கால வரலாற்றின் தந்தை என அழைக்கப்படுபவர் _______.
   1. இராபர்ட் புரூஸ்ட் 2. ஹெரோடோடஸ்
   3. மிடாஸ் 4. அலெக்சாண்டர்

5. உலோக நாணயத்தை கண்டுபிடித்தவர் _______ எந்த நூற்றாண்டு _______.
   1. இராபர்ட் புரூஸ்ட், 6 2. ஹெரோடோடஸ், 12
   3. லிடியாவின் பேரரசர் மிடாஸ், 8 4. மாவீரர் நெப்போலியன், 8

www.kalvinews.com

6. இந்தியாவில் பூரணாஸ், கர்ஷபணம், பனாஸ் போன்ற நாணயங்கள் _______ ஆட்சியில் அச்சடிக்கப்பட்டன.
   1. மகாஜனபதங்கள் 2. அதிஷ்ட கஜங்கள்
   3. முகலாயர்கள் 4. டெல்லி சுல்தானியர்கள்

7. தங்கம், வெள்ளி, தாமிரம் அல்லது ஈயம் போன்ற நாணயங்களை துளையிட்டு வெளியிட்டவர்கள் _______.
   1. சேரர்கள் 2. சோழர்கள் 3. மௌரியர்கள் 4. பாண்டியர்கள்

8. இந்தியாவில் கிரேக்க மரபுப்படி சித்திரங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை அறிமுகப்படுத்தியவர்கள் _______.
   1. மௌரிய அரசர்கள் 2. குஷாண அரசர்கள் 3. சமண அரசர்கள் 4. புத்த வம்சத்தினர்கள்

9. 12வது நூற்றாண்டில் நாணயத்தில் இந்திய அரசர்களின் உருவத்தை நீக்கி இஸ்லாமிய எழுத்துக்களைப் பொறித்தவர்கள் யார்?
   1. அரேபியர்கள் 2. மௌரியர்கள்
   3. டெல்லி துருக்கி சுல்தான்கள் 4. மெசபடோமியர்கள்

10. 12ஆம் நூற்றாண்டில் தங்கம், வெள்ளி மற்றும் தாமிரத்தால் ஆன நாணயங்களை _______ என்று அழைத்தனர்.
    1. டாங்கா 2. ஜிட்டால் 3. ரூபியா 4. ரூபாய்

11. 12ஆம் நூற்றாண்டில் மதிப்பு குறைந்த நாணயங்களை _______ என்று அழைத்தனர்.
    1. டாங்கா 2. ஜிட்டால் 3. ரூபியா 4. ரூபாய்

12. முகலாயரின் ஆட்சிக்காலத்தில் ஹுமாயூனை தோற்கடித்தவர் _______.
    1. அக்பர் 2. ஔரங்கசீப் 3. பாபர் 4. ஷெர்ஷா சூரி

13. ஷெர்ஷா சூரி வெளியிட்ட வெள்ளி நாணயத்தின் பெயர் _______
    1. டாங்கா 2. ஜிட்டால் 3. ரூபியா 4. ரூபாய்

14. ஷெர்ஷா சூரி காலத்தில் பயன்படுத்தப் பட்ட நாணய முறை _______.
    அ) 178 கிராம் வெள்ளி நாணயம்
    ஆ) 187 கிராம் வெள்ளி நாணயம்
    இ) 40 தாமிர துண்டுகள்
    ஈ) பைசா
    1. ஆ தவிர அனைத்தும் 2. அ, இ மட்டும்
    3. அ, ஆ, இ மட்டும் 4. அ, ஈ மட்டும்

15. முகலாயர் ஆட்சி காலம் முழுவதும் பயன்பாட்டில் இருந்த நாணயம் _______.
    1. வெள்ளி 2. செம்பு 3. ஜிட்டால் 4. டாங்கா

16. ஆங்கிலேயர்களுக்கு முகலாய பண நாணயத்தை பம்பாய் அச்சகத்தில் அச்சடிக்க அனுமதி அளித்த முகலாயப் பேரரசர் _______
    1. செர்ஷா சூரி 2. ஹீமாயூன் 3. அக்பர் 4. பாருக் ஷாயர்

www.kalvinews.com

17. பொருத்துக.

i. தங்க நாணயங்கள் - a) டின்னி
ii. வெள்ளி நாணயங்கள் - b) கப்ரூன்
iii. செம்பு நாணயங்கள் - c) ஏஞ்ஜேலினா
iv. வெண்கல நாணயங்கள் - d) கரோலினா

1. i - d ii - c iii - b iv - a
2. i - d ii - b iii - c iv - a
3. i - d ii - c iii - a iv - b
4. i - b ii - c iii - a iv - d

18. உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள் போன்ற பண்டங்களை பொதுவாக பரிமாற்றிக்கொள்வது _______ ஆகும்.

1. பண்டமாற்று முறை
2. காகித மாற்றுமுறை
3. பணம் மாற்றுமுறை
4. நாணயங்கள் மாற்று முறை

19. மனித நாகரிக முன்னேற்றத்தின் அரிய கண்டுபிடிப்பு _______.

1. தங்கம் 2. வெள்ளி 3. பணம் 4. செம்பு

20. கூற்று: காகித பணம் கண்டுபிடிப்பு பணத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நிலையாக கருதப்பட்டது.

காரணம்: தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது சிரமமாகவும், ஆபத்தானதாகவும் உள்ளது.

1. கூற்று சரி, காரணம் தவறு
2. கூற்று தவறு, காரணம் சரி
3. கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
4. கூற்று மற்றும் காரணம் சரி; கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை

21. பண மதிப்பிழப்பு செய்வதாக அறிவித்த ஆண்டு _______.

1. 2016 நவம்பர் 8 2. 2017 ஜூலை 1 3. 2016 ஜூலை 1 4. 2017 நவம்பர் 8

22. பண மோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு _______.

1. 2002 2. 2001 3. 2003 4. 2004

23. பணம் என்ற வார்த்தை _______ மொழியிலிருந்து பெறப்பட்டது.

1. ரோமன் 2. இத்தாலி 3. இலத்தீன் 4. கிரேக்கம்

24. கீழ்க்கண்டவற்றுள் எது பண்டமாற்று முறையின் குறைபாடு அல்ல?

1. இருமுகத் தேவை பொருத்தமின்மை
2. பொதுவான மதிப்பின் அளவுகோல்
3. செல்வத்தைச் சேமிக்க எளிதானது
4. பொருள்களின் பகுபடாமை

25. எந்தப் பொருட்கள் பொதுவாகப் பணமாகப் பயன்படுத்தப்பட்டன?

1. உப்பு
2. அரிசி
3. கோதுமை
4. மேற்கண்ட அனைத்தும்

26. எந்த உலோகங்கள் உலோகப் பணமாகப் பயன்படுத்தப்பட்டன?

1. தங்கம் 2. வெள்ளி 3. தாமிரம் 4. மேற்கண்ட அனைத்தும்

www.kalvinews.com

27. எந்த நூற்றாண்டில் லிடியாவில் முதல் உலோக நாணயம் கண்டறியப்பட்டது?

1. பொ.ஆ.பி.8   2. கி.மு.8   3. பொ.ஆ.மு.6   4. கி.பி.12

28. பொ.ஆ.மு. 6 ஆம் நூற்றாண்டில் கீழ்க்கண்ட எந்த இந்திய நாணயம் மகாஜனபதங்களால் அச்சடிக்கப்படவில்லை?

1. பூரணாஸ்   2. ரூபியா   3. பனாஸ்   4. கர்ஷபணம்

29. காகிதப் பணத்தினை ஒழுங்குபடுத்துவதும் கட்டுப்படுத்துவதும் ஒரு நாட்டின் ________ வங்கியாகும்.

1. மைய வங்கி   2. பாரத ஸ்டேட் வங்கி

3. இந்தியன் வங்கி   4. கூட்டுறவு வங்கி

30. வங்கிக் காசோலை _______ எனவும் அழைக்கப்படுகிறது.

1. கடன் பணம்   2. வங்கிப் பணம்

3. 1 மற்றும் 2   4. எதுவுமில்லை

31. பணமில்லா நடவடிக்கையானது கீழ்க்கண்டவற்றுள் எதன் நோக்கமாகும்?

1. உலோகப் பணம்   2. காகிதப் பணம்

3. பண்டமாற்று முறை   4. நெகிழிப் பணம்

32. விலைகள் வீழ்ச்சி அடைந்து பணத்தின் மதிப்பு உயர்வது _______ ஆகும்.

1. பணவீக்கம்   2. பணவாட்டம்   3. தேவை   4. எதுவுமில்லை

33. தனிநபர் வருமானத்தின் ஒரு பகுதி _______ ஆகும்.

1. முதலீடு   2. சேமிப்பு   3. 1 மற்றும் 2   4. எதுவுமில்லை

34. கீழ்க்கண்டவற்றுள் எது/எவை தவறான கூற்று/கள்?

அ) ரூபியா என்றால் வெள்ளி நாணயம் என்று பொருள்.

ஆ) பண்டமாற்று செயலில் பணத்தின் ஈடுபாடு இல்லாமல் இருப்பது ஒரு தீமையாகும்.

இ) பண்டமாற்று முறை என்பது குறைகள் இல்லாத ஒரு முறையாகும்.

ஈ) பண்டமாற்று முறை என்பது பழங்கால முறையாகும்.

1. ஈ தவிர அனைத்தும்   2. அ மற்றும் ஈ

3. ஆ மற்றும் இ   4. இ மட்டும்

35. கீழ்க்கண்ட குழுவில் பொருந்தாதது எது?

1. நெகிழிப் பணம்   2. உலோகப் பணம்

3. மின்னணு பணம்   4. நிகழ்நிலை வங்கி

36. கால வரிசைப்படுத்து

அ) உலோக பணம்   ஆ) நிகர் பணம்   இ) பண்டப் பணம்

ஈ) காகித பணம்   உ) வங்கிப் பணம்

1. இ, ஆ, உ, அ, ஈ   2. அ, ஆ, இ, ஈ, உ

3. உ, ஆ, அ, இ, ஈ   4. இ, அ, ஈ, உ, ஆ

www.kalvinews.com

37. கூற்று: தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற உலோகங்கள் உலோக பணமாகப் பயன்படுத்தப்பட்டன.

காரணம்: அவைகள் வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிப்பதற்கும், எடுத்துச் செல்வதற்கும், செலுத்துவதற்கும் வசதியாக இருந்தன.

1. கூற்று சரி காரணம் தவறு
2. கூற்று தவறு காரணம் சரி
3. கூற்றுக்கு காரணம் சரியான பொருத்தமில்லை
4. கூற்று சரி காரணம் பொருத்தமே

38. இந்திய ரூபாய் (₹) குறியீட்டினை வடிவமைத்தவர் யார்?

1. உதயகுமார்
2. அமர்த்தியாசென்
3. அபிஜித் பானர்ஜி
4. இவர்களில் எவருமில்லை

39. பணத்தின் மதிப்பு _______.

1. அக மதிப்பு
2. புற மதிப்பு
3. 1 மற்றும் 2
4. எதுவும் இல்லை

40. வங்கிப் பணம் என்பது எது?

1. காசோலை
2. வரைவு
3. கடன் மற்றும் பற்று அட்டைகள்
4. மேற்கூறிய அனைத்தும்

41. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

முதலீட்டுக் கருவிகள் என்பவை

1. பங்கு வர்த்தகம்
2. பத்திரங்கள்
3. பரஸ்பர நிதி
4. வரி செலுத்துவது

42. பின்வருவனவற்றில் கருப்புப் பணம் குவிப்பதற்குக் காரணமானவர்கள் _______.

1. வரி ஏய்ப்பவர்கள்
2. பதுக்குபவர்கள்
3. கடத்தல்காரர்கள்
4. இவர்கள் அனைவரும்

43. நிகழ்நிலை வங்கியை ________ என்று அழைக்கலாம்.

1. மின்னணு வங்கி
2. இணைய வங்கி
3. இவ்விரண்டும்
4. எதுவுமில்லை

44. மின்னணு வங்கியை _______ என்று அழைக்கலாம்.

1. தேசிய மின்னணு நிதி பரிமாற்றம்
2. நிகழ்நிலை வங்கி
3. RTGS
4. IMPS

45. கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் ________ பணமாகும்.

1. உலோகப் பணம்
2. நெகிழிப் பணம்
3. மின் பணம்
4. காகிதப் பணம்

46. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு _______.

1. கி.பி.1717
2. கி.பி.1600
3. கி.பி.1935
4. கி.பி.2016

47. தவறான ஒன்றைக் கண்டுபிடிக்க

பரிமாற்றத்திற்கு பணத்தின் சமிபத்திய வடிவங்கள்

1. பற்று அட்டை
2. பண்டமாற்று முறை
3. கடன் அட்டை
4. நிகழ்நிலை வங்கி

www.kalvinews.com

48. பொருத்துக.

அ) பண்டமாற்று முறை - i).வரி ஏமாற்றுபவர்கள்

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் - ii) மின்னணு பணம்

இ) மின் பணம் - iii) நுகர்வு தவிர்த்த வருமானம்

ஈ) சேமிப்பு - iv) பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம்

உ) கருப்புப் பணம் - v) 1935

1. அ - i ஆ - ii இ - iii ஈ - iv உ - v
2. அ - iv ஆ - ii இ - i ஈ - v உ - iii
3. அ - iv ஆ - iii இ - ii ஈ - v உ - i
4. அ - iv ஆ - v இ - ii ஈ - iii உ - i

49. இந்தியாவில் ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவது யார்?

1. நிதி அமைச்சகம்
2. ரிசர்வ் வங்கி
3. அரசு அனுமதி பெற்ற அச்சகம்
4. மத்திய கூட்டுறவு வங்கி

50. தவறான ஒன்றினைக் கண்டுபிடி

பொருளாதாரத்தில் கருப்புப் பணத்தின் விளைவுகள்

1. இரட்டை பொருளாதாரம்
2. சமத்துவம் வலுவிழத்தல்
3. உற்பத்தியில் விளைவுகள் இல்லை
4. ஆடம்பர நுகர்வுச் செலவு

51. தவறான இணையைக் கண்டறிக.

1. பண்டப் பணம் - ஆயுதங்கள்
2. உலோகப் பணம் - தாமிரம்
3. காகிதப் பணம் - பொற்கொல்லர் ரசீது
4. நிகர் பணம் - பரஸ்பர நிதி

52. பதிவு செய்யப்பட்ட வரலாற்றில் எவ்வகையான பணம் முக்கிய பங்கு வகித்தது?

1. உலோகப் பணம்
2. பண்டப் பணம்
3. நிகர் பணம்
4. காகிதப் பணம்

53. அமெரிக்க நாட்டின் நாணயத்தின் பெயர் ________.

1. ரூபாய்
2. யென்
3. டாலர்
4. பவுண்ட்

54. குழுவில் பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.

1. கருவூல பட்டியல்
2. கடன் பத்திரங்கள்
3. காப்பீடு
4. உண்டியல்

55. பங்கு வர்த்தகம், பத்திரங்கள், பரஸ்பர நிதி, காப்பீடு அடங்கிய குழுவிற்குப் பெயரிடுக.

1. சேமிப்பு
2. முதலீடு
3. நிகர் பணம்
4. பணத்தின் சமீபத்திய வடிவங்கள்

56. நாணயங்கள் அடிப்படையில் குழுவில் பொருந்தாததைத் தேர்ந்தெடு.

1. இந்தியா
2. சிங்கப்பூர்
3. பாகிஸ்தான்
4. ஸ்ரீலங்கா

57. வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னணு முறையின் மூலம் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளப் படுவது

1. மின்னணு பணம்
2. இணைய வங்கி
3. நிகழ்நிலை வங்கி
4. மின் வங்கி

www.kalvinews.com

58. பணப் பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலை _______.

1. காகிதப் பணம்
2. பண்டப் பணம்
3. நிகர் பணம்
4. வங்கிப் பணம்

59. NEFT என்பது _______.

1. National Education Fundamental Training
2. National Eco Forest Type
3. National Empowerment of Foreign Treaty
4. National Electronic Fund Transfer

60. பின்வருவனவற்றில் தவறான கூற்று எது?

1. காகித பணமும் கடன் பணமும் ஒரே நேரத்தில் வளர்ந்தன.
2. பணத்தின் புற மதிப்பு என்பது வெளி மாநிலத்தில் உள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியைக் குறிக்கும்.
3. பணத்தின் மதிப்பும் விலையின் அளவும் எதிர்விகிதத் தொடர்புடையது.
4. 'பணமாகப் பிரகடனம் செய்யப் படும் எவையும் பணமாகும்' என சில வல்லுநர்கள் பணத்தைச் சட்டபூர்வமான சொற்களால் வரையறுத்துள்ளனர்.

61. பணத்தின் மதிப்பு என்பது _______.

1. பொருட்களை விற்கும் போது கிடைக்கும் லாபத்தைக் குறிக்கும்.
2. பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியைக் குறிக்கும்.
3. மேற்கண்ட இரண்டும்.
4. இவை எதுவுமில்லை.

62. உள்நாட்டில் உள்ள பண்ட மற்றும் பணிகளின் வாங்கும் சக்தியைக் குறிப்பது _______.

1. பணத்தின் புற மதிப்பு
2. பணத்தின் அக மதிப்பு
3. கடன் பணம் (அ) வங்கிப் பணம்
4. இவற்றில் எதுவும் இல்லை

63. 'எதையெல்லாம் செய்யவல்லதோ அதுவே பணம்' எனக் கூறியவர் யார்?

1. பேராசிரியர் வாக்கர்
2. ஸ்டோவ்ஸ்கி
3. சர் ஜான் ஹிக்ஸ்
4. ராபர்ட்சன்

64. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) மாணவர் சேமிப்புக் கணக்கு | - | i). வியாபாரிகள் |
| ஆ) சேமிப்பு வைப்பு | - | ii). பூஜ்ய இருப்பு |
| இ) நடப்பு கணக்கு வைப்பு | - | iii). நிலையான வருவாய் |
| ஈ) நிரந்தர வைப்பு | - | iv). பெயரளவு வட்டி |

1. அ - iv ஆ - iii இ - i ஈ - ii
2. அ - ii ஆ - iv இ - iii ஈ - i
3. அ - ii ஆ - iv இ - i ஈ - iii
4. அ - iv ஆ - i இ - ii ஈ - iii

65. கூற்று: ஸ்டோவ்ஸ்கியின் கருத்துப்படி "பணம் என்பது ஒரு கடினமான கருத்தாகும்.

காரணம் 1: ஏனெனில் பணத்தின் வரையறைகள் அதனுடைய செயல்பாட்டைப் பொறுத்தே வரையறுக்கப்பட்டுள்ளது.

www.kalvinews.com

காரணம் 2: ஏனெனில் அது வேறுபட்ட துறைகளில் மூன்று பணிகளைக் குறிப்பிடுகிறது.

1. கூற்று மற்றும் காரணங்கள் சரி
2. கூற்றுக்கு காரணம்1 மட்டுமே பொருத்தமானது காரணம் 2 பொருத்தமில்லை
3. கூற்றுக்கு காரணம் 2 மட்டுமே சரியாக விளக்குகிறது.
4. கூற்று தவறு

66. கீழ்க்கண்டவற்றுள் ஒரே குழுவில் அடங்குவன எவை?

அ) மதிப்பின் நிலைகலன் அல்லது வாங்கும் சக்தியின் நிலைகலன்

ஆ) மதிப்பின் அளவுகோல்

இ) மாற்று மதிப்பு அல்லது மாற்று வாங்கும் சக்தி

ஈ) எதிர்கால செலுத்துகைக்கான நிலைமதிப்பு

உ) பரிமாற்ற கருவி அல்லது பண செலுத்துகை

1. அ, இ, ஈ 2. ஆ, உ, இ 3. அ, ஆ, உ 4. ஆ, ஈ

67. ஸ்டோவ்ஸ்கியின் கருத்துப்படி பணத்தின் பணிகள் _______.

அ) மாற்று மதிப்பு ஆ) கணக்கீட்டின் அலகு

இ) மதிப்பின் அளவுகோல் ஈ) மதிப்பின் நிலைகலன்

1. அ, ஆ, இ 2. அ, இ, ஈ
3. ஆ, இ, ஈ 4. அ, ஆ, ஈ

68. சர்.ஜான் என்பாரின் பணம் பற்றிய கூற்று கீழ்க்கண்டவற்றுள் எது?

1. எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவே பணம்
2. பணம் அதன் பணிகளால் வரையறுக்கப் படுகிறது. எவையெல்லாம் பணமாகக் கருதப்படுகிறதோ அவை பணமாகப் பயன்படுத்தப்படுகிறது.
3. பணமாகப் பிரகடனம் செய்யப்படும் எவையும் பணமாகும்.
4. பொது ஏற்புத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு பண்டங்கள் வாங்கும் போது அதற்கான செலுத்துத் தொகையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய எதையும் பணமாகக் கருதலாம்.

69. பணத்தின் பணிகள் எத்தனை பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன?

1. 2 2. 3 3. 4 4. 10

70. கீழ்க்கண்டவற்றுள் பணத்தின் பணிகள் அல்லாதவை எது?

அ) பண்டம் மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்தப்படுகிறது.

ஆ) அனைத்து வகையான பண்டங்கள் மற்றும் பணிகள் மதிப்பையும் பணத்தால் அளவிடலாம்.

இ) எதிர்கால செலுத்துகைக்கு பணம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

ஈ) எதிர்காலத்திற்காகச் சேமிக்க முடியும்.

உ) தொலைதூர இடங்களுக்கும் பண்டங்களைப் பரிமாற்றம் செய்ய முடியும்.

1. ஈ மட்டும் 2. ஈ மற்றும் உ
3. ஆ மட்டும் 4. இவற்றில் எதுவுமில்லை

www.kalvinews.com

71. தவறான கூற்று எது?
    1. பணத்தைக் கொண்டு நாட்டின் வருவாயை அளவிடலாம்.
    2. பணம் அனைவரிடமும் பொதுவான ஏற்புத் திறனைக் கொண்டுள்ளது.
    3. பணவீக்கம் என்பது பணத்தின் மதிப்பு உயர்ந்து விலைகள் குறைவதைக் குறிக்கும்.
    4. பணம் சுதந்திரமாகப் பரவக்கூடியது.

72. வர்த்தகர்கள், வர்த்தக நிறுவனங்கள், பொது அதிகாரிகள் கீழ்க்கண்ட எந்த கணக்கைத் துவக்க வேண்டும்?
    1. மாணவர் சேமிப்புக் கணக்கு
    2. சேமிப்பு வைப்பு
    3. நடப்பு கணக்கு வைப்பு
    4. நிரந்தர வைப்பு

73. மாணவர்கள் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க கீழ்க்கண்ட எந்த திட்டம் பயன்படுகிறது?
    1. சஞ்சாயிகா
    2. கிஸான் விகாஸ் பத்திரம்
    3. சஞ்சீவினி
    4. செல்வமகள்/ செல்வமகன்

74. குழுவில் பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.
    1. ஆண்டுத்தொகை
    2. பரஸ்பர நிதி
    3. சொத்துக்கள்
    4. நிரந்தர வைப்பு

75. மூலதன உருவாக்கத்திற்கும் வருவாய்க்கும் உதவுவது
    1. சேமிப்பு
    2. முதலீடு
    3. நீர்மை தன்மை
    4. இவை எதுவுமில்லை

76. முதலீடு சம்பந்தப்பட்ட கீழ்க்கண்ட கருதுகோள்களில் அடைப்புக் குறிக்குள் உள்ள தவறானதைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| இடர்பாடு | - | [அ) புறக்கணிக்கப்பட்ட அளவு, ஆ) மிக அதிகம்] |
| வருவாய் | - | [இ) ஒப்பீட்டளவில் அதிகம், ஈ) குறைவு] |
| நீர்மை தன்மை | - | [உ) குறைந்த நீர்மை, ஊ) அதிக நீர்மை] |

    1. அ, ஊ, இ
    2. ஆ, இ, உ
    3. ஆ, ஈ, உ
    4. அ, ஈ, ஊ

77. கீழ்க்காணும் கூற்றுகளில் எது தவறு?
    1. கருப்புப் பணம் என்பது கணக்கில் கொண்டுவராத பணத்தின் ஒரு வடிவமாகும்.
    2. வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் கருப்புப் பணத்தைப் பதுக்கி வைத்துள்ளனர்.
    3. கருப்புப் பணத்தினால் சமுதாயத்தில் பணக்காரர், ஏழைகளிடையே இடைவெளி அதிகமாகிறது.
    4. கருப்புப் பணத்திற்கு மிகக்குறைந்த அளவே வரி செலுத்துகின்றனர்.

78. கீழ்க்காண்பவைகளில் எது பொருளாதாரத்தில் கருப்புப் பணத்தின் விளைவுகள் இல்லை?
    1. சமுதாயத்தில் பொது ஒழுக்க நிலைகளில் வீழ்ச்சி ஏற்படுகிறது.
    2. சமத்துவம் வலுவிழக்கிறது.
    3. உற்பத்தி மீதான விளைவுகள் ஏற்படுவதில்லை.
    4. வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

www.kalvinews.com

79. பொருத்துக.

அ) ரியல் எஸ்டேட் சட்டம் - i) 1988

ஆ) ஊழல் தடுப்புச் சட்டம் - ii) 2016

இ) இந்திய ரூபாய் குறியீடு அங்கீகரிப்பு - iii) 2002

ஈ) பண மோசடி தடுப்புச் சட்டம் - iv) 2010

1. அ - i ஆ - ii இ - iii ஈ - iv
2. அ - ii ஆ - iv இ - iii ஈ - i
3. அ - ii ஆ - i இ - iv ஈ - iii
4. அ - iv ஆ - iii இ - i ஈ - ii

80 கருப்புப் பணத்திற்கு எதிராக எந்த நாடு தன் நாட்டுச் சட்டத்தில் திருத்தங்கள் ஏற்படுத்தி பிற நாடுகளுக்கு உதவியுள்ளது?

1. லிடியா 2. சுவிட்சர்லாந்து 3. இந்தியா 4. சீனா

81. வெளிக்கொணரப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்து மசோதா(வரி விதித்தல்) கொண்டுவரப்பட்ட ஆண்டு ______.

1. 2002 2. 1988 3. 2016 4. 2015

82. 'எதுவெல்லாம் பணமாகக் கருதப்படுகிறதோ அவை பணமாக பயன்படுத்தப்படுகிறது' என்பது யாருடைய கூற்று? (NMMS-2020-21)

1. ஸ்டோவ்ஸ்கி 2. இராபர்ட்சன் 3. சர் ஜான் ஹிக்ஸ் 4. ஆடம் ஸ்மித்

83. எந்த மதிப்பிலான ரூபாய் நோட்டினை முதன்முதலாக இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டது? (NMMS 2019-20)

1. ஒரு ரூபாய் நோட்டு
2. இரண்டு ரூபாய் நோட்டு
3. ஐந்து ரூபாய் நோட்டு
4. பத்து ரூபாய் நோட்டு

84. நெகிழிப் பணம் என்பது ______. (NMMS 2019-20)

1. இணைய வங்கி 2. மின்னணு பணம் 3. பற்று அட்டை 4. மின் வங்கி

## விடைகள்

| வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் | வினா எண் | விடை எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (1) | 16 | (4) | 31 | (4) | 46 | (3) | 61 | (2) | 76 | (4) |
| 2 | (3) | 17 | (1) | 32 | (2) | 47 | (2) | 62 | (2) | 77 | (4) |
| 3 | (4) | 18 | (1) | 33 | (2) | 48 | (4) | 63 | (1) | 78 | (3) |
| 4 | (2) | 19 | (3) | 34 | (3) | 49 | (2) | 64 | (3) | 79 | (3) |
| 5 | (3) | 20 | (3) | 35 | (2) | 50 | (3) | 65 | (3) | 80 | (2) |
| 6 | (1) | 21 | (1) | 36 | (4) | 51 | (4) | 66 | (1) | 81 | (4) |
| 7 | (3) | 22 | (1) | 37 | (4) | 52 | (1) | 67 | (3) | 82 | (3) |
| 8 | (2) | 23 | (1) | 38 | (1) | 53 | (3) | 68 | (2) | 83 | (3) |
| 9 | (3) | 24 | (3) | 39 | (3) | 54 | (3) | 69 | (1) | 84 | (3) |
| 10 | (1) | 25 | (4) | 40 | (4) | 55 | (2) | 70 | (4) | | |
| 11 | (2) | 26 | (4) | 41 | (4) | 56 | (2) | 71 | (3) | | |
| 12 | (4) | 27 | (2) | 42 | (4) | 57 | (1) | 72 | (3) | | |
| 13 | (3) | 28 | (2) | 43 | (2) | 58 | (3) | 73 | (1) | | |
| 14 | (1) | 29 | (1) | 44 | (1) | 59 | (4) | 74 | (4) | | |
| 15 | (1) | 30 | (3) | 45 | (2) | 60 | (2) | 75 | (2) | | |